ப்ரதான ப்ரதிதந்த்ராதிகாரம்

6, ஆதேயத்வம், விதேயத்வம், சேஷத்வம் இவை சரீர லக்ஷணம்.

7. ஆதாரத்வம், நியந்த்ருத்வம், சேஷித்வம் இவை ஆத்ம லக்ஷணம்.

அர்த்த பஞ்சகாதிகாரம்

8. (1) ப்ராப்யம், (2) ப்ராப்தா, (3) ப்ராப்தி விரோதி, இவை.

[ப்ராப்த்யுபாயமும் பல ஸ்வரூபமும் மேலே ப்ராப்த ஸ்தலங்களிலே சொல்லக் கடவோம் என்றார் தேசிகன்.]

தத்வத்ரயாதிகாரம்

9. (1) சித்து, (2) அசித்து, (3) ஈச்வரன்.

10. பத்தர்—முக்தர்—நித்யர் ஆக சித்து மூன்று.

11. ப்ரக்ருதி-காலம் சுத்த ஸத்வம் என்று அசித்து மூன்று.

பரதேவதா பாரமார்த்யாதிகாரம்

12. ப்ரம்ஹருத்ரர்களுக்கு அந்தர்யாமியும், ஸாக்ஷாத் விஷ்ணுவும்.

முமுக்ஷுத்வாதிகாரம்

13. (1) பஹிர் விஷயங்களின் பஹிஷ்காரம், (2) கைவல்யாலபத்வ புத்தி (3) ப்ரம்ஹாநுபவ கௌதூஹலம்.

அதிகாரி விபாகாதிகாரம்

14. ஸ்வநிஷ்ட்டை, உக்தி நிஷ்ட்டை, ஆசார்ய நிஷ்ட்டை.

உபாய விபாகாதிகாரம்

15. (1) ஸத்வாரகமேயான உபாயம், (2) அத்வாரகமேயான உபாயம், (3) ஸத்வாரகமும் அத்வாரகமுமான உபாயம்.

ப்ரபத்தியோக்யாதிகாரம்

16. ஸாமர்த்யம் மூன்று விதம்.—(1) அறிகை, (2) சக்தி, (3) யோக்யதை என்று.

ஸாங்கப்ரபதநாதிகாரம்

17. (1) ஸ்வரூப (2) பர, (3) பல ஸமர்ப்பணங்கள்.

ஸ்வநிஷ்ட்டாபிக்ஞாநாதிகாரம்

18. (1) ஸ்வரூப (2) உபாய (3) புருஷார்த்த நிஷ்ட்டைகள்.

சாஸ்த்ரீய நியமநாதிகாரம்

19. (1) நித்யம், (2) நைமித்திகம், (3) காம்யம் என்று மூன்று கர்மாக்கள்.

ஸ்த்தாந விசேஷாதிகாரம்

(1) கோயில், (2) திருமலை, (3) பெருமாள் கோயில்.

ஸித்தோபாய சோதநாதிகாரம்

இவ் வுபாய ப்ரபாவ விஷயமாக தெளிவு பிறப்பதற்கு காரணம் மூன்று. (1) "அஸ்துதே" என்கிற திருமுகப் பாசுரமும் (2) ஸதாசார்யாநுக்ரஹமும், (3) ஸத்ஸம்ப்ரதாய ஸித்தியும்.

"எழுநூறு"

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
வேதாந்த வாவதூக·ந்யாய
வேதாந்தாசார்ய, அஹோபிலமடம்
ஆஸ்தாந வித்வான் – வில்லிவலம்
ப. நாராயணாசாரியர் ஸ்வாமி
காசி

**கதிமந்யாம் ந ஜாநாமி யம் முக்த்வா தேசிகோத்தமம்
ஸோஸ்மாஸ் வாவிசதாந் நித்யம் அகிலார்த்த ப்ரஸித்தயே.**

துரகவதநனை எம்பெருமானின் தேஜஸ்ஸினுல் உபப்ரும் ஹிதமான ஆச்சரிய சக்தியுடைய ஆசார்யோத்தமனின் ஆயிரத்ததான திரு நக்ஷத்திரத்தையும் அகிலலோகமும் சீக்கிரமே கொண்டாடப் போகிறது. இப்போது ஸ்வாமி இந்நிலவுலகில் கால் தோய அவதரித்து ஏழு நூற்ருண்டுகள் கழிந்தன.

இங்கு எழுநூறு ஆண்டுகள் என்றதும் ஆயிரமாண்டுகள் பற்றி நினைவு வந்தது போல்—ஸ்ரீராகவ பாதுகையிலே—சாண் நீளமுள்ள ஒரு சிறியவடிவம்பெற்ற பொருளிலே-ஆயிரம் கருத்துத்துளைகளிட்ட ஸ்ரீஸ்வாமியினுடைய அத்புதஸ்தோத்திரம் நினைவுக்கு வந்தது. அதிலே எழுநூருவது ச்லோகத்தை எடுத்து நாம் ஸேவித்தோம். என்ன ஆச்சரியம்? நமது தேசிகோத்தமனுடையதான—நாமிங்கு கொண்டாடும் மஹோத்வத்தைப் பற்றிய குறிப்புகள் அங்கு உதிரிகளாக பதங்களால் ஸூசிப்பிக்கப் பட்டுள்ளதைக் கண்டோம். நீங்களும் இதோ காணுங்கள்!

அங்கு நடப்பது இந்த்ர நீல பத்ததி என்னும் ஓர் ஸர்க்கம் அதில் இருபதாவதும் முதலிலிருந்து எழுநூருவதுமான ச்லோகம் வருமாறு அமைந்துள்ளது.

பதகிஸலயஸங்காத் பாதுகே!
 பத்ரளஸ்ரீ:
நகமணிபிருதாரை: நித்ய நிஷ்பந்ந
 புஷ்பா |
சதமக மணிநீலா சௌரிலாவண்ய
 ஸிந்தோ:
நிபிடதமதமாலா காபிவேலாவநீ
 த்வம்: ||

இங்கு தொடர் நிலைப்பொருளில் இதன் கருத்து வேருனது. இந்த்ரநீல பத்ததியல்லவா? நீ இந்திர நீலக்கற்களால் இழைக்கப்பட்ட மேனியுடையவள். ஆதலால் ஒ பாதுகையே! சுயமாகவே கருநிறம் கொண்டவள். அதற்கு பரபாகமாகத் திருவடிகளின் காந்தி, நகங்களின் ஒளி, எம்பெருமானின் திருமேனி சோபை இவை எல்லாம் கலந்து முறையே சிவந்த துளிர் மலர்ந்த வெண்ணிறப் பூக்கள்-பச்சென்ற மரம் இவைகள் கூடிய ஓர் அழகிய நீலநிற கடற்கரையை நினைவூட்டுகின்றன, என்று அதன் பொருள். ஆயினும் "பத்ரள ஸ்ரீ :- நிஷ்பந்ந புஷ்பா"—என்ற பதங்களால்-அழகிய கருத்துடைய ஏடுகள் நிறைந்த மலர் ஒன்று நாமிங்கு வெளியிடுவதையும்—"ஸிந்து" என்று கடலைச் சொல்லி அவைகள் ஏழாகையால் "சதம்" என்று நூறு கூறி எழுநூறு என்பதையும் "மகம்" என்ருல் யாகம்-உத்ஸவம்-கொண்

டாட்டம் என்பதையும்–வேலா(ளா) என்று இந்த ஸந்தர்ப்பத்தையும் இங்கு வ்யஜ்ஞனை யால் உணர்த்தியுள்ள பொருத்தம் அநுபவிக்கத்தக்கது.

ஸ்ரீ ஸ்வாமியினுடைய கருட பஞ்சாசத்தில் இவ்விதமே போகும் போக்கில் வேறு பொருளையும் ஸூசிப்பிக்கும்படி பதங்களின் ஸந்நிவேசம் ஓரிடத்தில் அமைந்துள்ளது.

ஏகோ விஷ்ணோர்த்விதீய: த்ரிசதுர விதிதம் பஞ்சவர்ணீ ரஹஸ்யம் இத்யாதி.

இங்கு ச்லோக தாத்பர்யம் வேறாயினும்— ஒன்று இரண்டு மூன்று என்று பத்துவரைக் கூறிச் சென்று பிறகு நூறு–ஆயிரம்–லக்ஷம்–கோடி என்று மேன்மேலும் எண்ணிக்கைகளை அழகாக தனித்தனி பதங்களால் த்யானிக்கச் செய்துள்ள சாதுரீ போன்றதிதுவும்.

குறிப்பாக வடநாட்டில் இங்கு விசிஷ்டாத்வைதம் என்பது எப்படிப்பட்டது என்று அறிவதற்கு "தர்மிக்ராஹகப்ரமாண" பூதராய்–நாம் கண்ட ஒரு உயர்ந்த க்ரந்தத்தில் கூறியபடி–மிக மிக பயங்கரமான வாதங்களைப் பிற மதங்களிலுள்ள குற்றங்களைக் கண்டிக்க உபயோகித்த கவிதார்க்கிக கேஸரியால்-பரச்சதமான ப்ரபந்தங்களை பல பாஷைகளிலே (ஸம்ஸ்க்ருதம்-தமிழ் இரண்டும் கலந்த மணிப்ரவாளம்–ப்ராக்ருதம் முதலியன) சுருக்கியும், விவரித்தும்; மூல நூலாகவும், உரை நடையாகவும், பொழிப்புரையாகவும் அருளிச்செய்த அத்புதாவதார மஹா புருஷராய் உள்ள இவருக்காக எழுதும் இந்த கட்டுரையிலே அவருளிச் செயலிலிருந்து ஓர் சாஸ்த்ரார்த்தம் வெளியிடாது போனால் பெரும் பிழையாகுமெனக் கருதி— நாம் தலைப்பில் கொடுத்தபடியே நூறு முதலிய எண்களின் உண்மை ஸ்வரூபத்தை "நியாய ஸித்தாஞ்ஜன" க்ரந்தத்திலிருந்து சுருக்கித் தருகிறோம். இந்த ஒரு நிர்ணயம் எண்களின் விஷயத்தில் ஸ்வாமி செய்ததர்க்கே உலகம் முழுவதும் அவருக்குக் கடமைப்பட்டது.

எண்ணை ஸங்கியை என்பார்கள் வடமொழியில். அது ஒருமை என்றும் பன்மை என்வும் இருவகையாகும். முதலில், அப்பன்மையும்–இருமை மும்மை என்று கோடிக்கணக்காகி பரார்த்தம் என்று முடியும் என்பர். அதில் பிற மதத்தினர் பன்மையைப் பற்றிக் கூறுவதாவது :-பன்மை என்பது ஓர் உண்மையான தனிப் பொருள் ஆயினும் இது ஒன்று அது ஒன்று ஆக இரண்டு. மற்றுமொன்று ஆக மூன்று என்று மனதின் கணக்கீடால் (அபேக்ஷாபுத்தியால்) பிறக்கிறது. என்று ஸ்வாமி-அம்மாதிரி கணக்கிடுவதால் பன்மை தோன்றி, அது அழிவதால் இது அழிவடைகிறது என்பதினும்-அந்த கணக்கிடும் புத்திக்கு விஷயமாதலே இருமை முதலிய பன்மை எண்களாகும். உண்மையில் வேறுபட்ட தனிப்பொருள் அல்ல என்று ஸாதிக்கிறார். ஆம் இதுவே அநுபவத்திற்கு ஒத்தது. பத்து பழங்கள் இருபது பழங்கள் என்பது எல்லாம் நமது எண்ணமே யொழிய பழத்தில் அவ்வித எண்ணிக்கைகள் கிடையா. அதனாற்றான் அவற்றையே வேறு கண்ணோட்டத்தில் வேறு விதமாகவும் எண்ணிக்கை இடுகின்றனர் வேறு சிலர். அது உண்மையா? இது உண்மையா? ஆக பன்மை என்பது ஒரு தனிப் பொருளல்ல என்று தீர்ந்தது.

இனி ஒருமை என்னும் எண்ணும் (ஸங்கியை) உண்மையில் நமது மனதின் எண்ணத்தைத் தவிர்த்து வேறில்லை என்கிறார் ஸ்வாமி. பல அவயவங்களால் அவயவி ஒன்று பிறக்கிறது என்பது நமக்கு உடன்பாடல்ல. ஆகையால் அம்மாதிரி ஒருமை கிடையவே கிடையாது. ஒரு குழு என்பது பொருள்களைப் பற்றிய வரை உண்டு ஆனால் அங்கும் ஒருமை என்பது வெரும் பரிபாஷையே. ஆகையால் நிரவயமான ப்ருக்ருதி ஜீவன் முதலிய பொருள்களில் ஒருமை என்பது என்ன என்றுதான் விசாரிக்கவேணும். அங்கும் அது-மற்றொரு பொருளை இத்துடன் ஸமமாகப் பாராமல் இதைப் பார்ப்பது-எண்ணுவதுதான் ஒருமை என்று தேரும். ஆக அதுவும் நமது ஓர் எண்ணமே ஒழிய வேறு தனிப் பொருள் அல்ல என்பது தான் தீர்மானமாகும்.

இவ்விஷயத்தில் எம்பெருமானார் தொடங்கி பட்டர் ஈருக பல ஆசாரியார்களின் க்ரந்தங்கள் வேறு வேறு விதமாகக் கூறியிருப்பினும்-அதற்கெல்லாம் கருத்து கூறி இதுதான் உண்மை என்று ஸ்வாமி ஸாதித்தது—எத்தனையோ அற்புதங்களில் ஆயிரத்திலொன்று.



ஸ்ரீமத்பரம...அபிநவரங்கநாத ப்ரம்ஹதந்த்ரபரகால மஹாதேசிகன்

(மைசூர்)

பெற்ற தாயும் வளர்த்த தாயும்

ஸ்ரீமதுபயவே, ந்யாயவேதாந்த வித்வான்
காரப்பங்காடு
வெங்கடாச்சாரியார் ஸ்வாமி,
சென்னை.

ஒன்றை உள்ளபடி உணருவதற்குக் காரணம் எதுவோ அதைப் பிரமாணம் என்றும், உள்ளபடி உணரப் பெறுவது எதுவோ அதைப் பிரமேயம் என்றும் கூறுவர். பிரமேயங்களுள், திருமகள் கொழுநனை நாராயணன், மிகவும் சிறப்புடையவன்; ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவன். அப்பரம புருஷன் நம் நன்மையைத் திருவுள்ளம் பற்றி, வட மதுரையில் தேவகியாருக்குத் திருக்குமாரனுய்த் திரு அவதாரம் செய்தருளினுன். இங்ஙனம் திரு அவதாரம் செய்தருளின வரலாற்றை, தேவகி பெற்ற உருவு கரிய ஒளி மணி வண்ணன் என்று புகழ்ந்து பேசுவர். அப்பரமன், திரு அவதாரம் செய்தருளின காலத்திலேயே, திருவாய்ப்பாடியில், அசோதையார் திருமாளிகைக்கு எழுந்தருள, அவ் அசோதையாரும் அப்பரமனை கோவிந்தன் மேல் குற்றம் சொல்லுவாரைத் தன் சொல்லாலே வாய்மாளப் பண்ணி, தன் வசமாக்கி, கஞ்சன் கருத்தைக் குலைத்து, நிறம் பெற வளர்த்து அவனை வ்ருத்தி யடையும் படி செய்தார். இவ்வாறு வ்ருத்தி யடையும்படி செய்த சரிதத்தை, "ஏதேனும் சொல்லி அசலகத்தார் ஏதேனும் பேச நான் கேட்கமாட்டேன்" "தூசனம் சொல்லும் தொழுத்தைமாரும் தொண்டரும் நின்ற இடத்தில் நின்று" "அசோதை வளர்க்கின்ற செய்த்தலை நீல நிறத்துச் சிறுப்பிள்ளை" என்று கொண்டாடிக் கூறுவர். இங்கு, "கோவிந்தன் திரு அவதாரம் செய்தருளின இடம் தேவகியார்; வளர்ந்தருளின இடம் அசோதையார்" என்பது, தெளிவு.

பிரமாணங்களுள், மிகவும் சிறந்ததான திருவாய் மொழி, திரு அவதாரம் செய்தருளின இடம் நம்மாழ்வார்; வளர்ந்தருளின இடம் எம்பெருமானுர், திரு அரங்கம் என்னும் திருப்பதியில் திருக்கண் வளர்ந்தருளும் பெரிய பெருமாளுக்கு, ஏனைய எம்பெருமான்களிலும் தனிப் பெருமை உண்டு. இப் பெருமையை, "தென்னுடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கம்" என்றும், "பதின்மர் பாடும் பெருமாள்" என்றும் பல இடங்களில் போற்றிப் பேசி யிருப்பதை நாம் நன்கு அனுபவிக்கலாம். நம்மாழ்வாருக்கும் ஏனைய ஆழ்வார்களிலும் மிகவும் சிறப்பு உண்டு. இச்சிறப்பையும், "உண்டோ சடகோபற்கு ஒப்பொருவர்" என்னுமிடத்தில் நாம் நன்கு அறியலாகும். இப்படி ஒப்பற்றவராய்ப் புகழப்பெறும் நம்மாழ்வார், பெரிய பெருமானையே விஷயமாகக் கொண்டுள்ள திருவாய் மொழியைப் பெற்றெடுத்த தாயாவர். வருந்திப் பெற்ற பிள்ளையை வளர்த்தெடுக்கும் தாயைப் போன்று, திருவாய் மொழியை வளரும்படி செய்த தாயாவர், எம்பெருமானுர். நம்மாழ்வார் திரு அவதாரம் செய்தருளி, திருவாய்மொழி பாடி, அவாவற்று வீடு பெற்று எழுந்தருளின பின்பு, வேதத்தைப் பிரமாணமாக ஒப்புக் கொள்ளாத புறச்சமயத்தாரும், வேதத்தைப் பிரமாணமாக ஒப்புக் கொண்டே அவ் வேதத்திற்கு விபரீதமாய்ப் பொருள் கூறும் அகச் சமயத்தாரும் திருவாய் மொழியை மறையச் செய்து வருகிற படியைக் கண்டு, அதை ஸ்ரீ பாஷ்ய ஸூக்திகளாலே ஒருவாறு தடுத்து, ஸ்ரீ பாஷ்யம்

முதலான திவ்விய சாஸ்திரங்களை அத் திருவாய் மொழிக்குக் காவலான வேலியாக வைத்து, தன் வசமாக்கி, திருக்குருகைப் பிரான் பிள்ளானைக் கொண்டு அத்திருவாய் மொழிப்பொருளை வெளியிடுவித்து-இவ்வாறு திருவாய்மொழியை வளரச் செய்து போந்த வரன்றோ, எம்பெருமானுர்.

இக் கருத்தை. பட்டர் அருளிச் செய்த

"வான்திகழும் சோலைமதி
ளரங்கர் வண்புகழ் மேல்
ஆன்ற தமிழ் மறைக
ளாயிரமும்—ஈன்ற
முதல் தாய் சடகோபன்
மொய்ம்பால் வளர்த்த
இதத் தாய் இராமானுசன்"

என்னும் தனியனில் நாம் அனுபவிக் கலாகும்.

திருவாய் மொழிக்கு நம்மாழ்வாரும் எம் பெருமானுரும் பெற்ற தாயாயும் வளர்த்த தாயாயும் இருப்பது போன்று, ஸ்ரீ பாஷ்யம் முதலான திவ்விய சாஸ்திரங்களுக்கு எம் கெருமானுரும் தேசிகனும் பெற்ற தாயாயும் வளர்ந்த தாயாயும் இருப்பவர்கள்.

நாதமுனி முதலான நம் தேசிகருள், எம் பெருமானுருக்குத் தனிப் பெருமை உண்டு. "திருமகள் கொழுநனுன நாராயணனே மிக மிக உயர்ந்த தெய்வம்" என்னும் தத்துவத் தையும், "அப்பரமன் பால் செய்யும் பக்தி ப்ரபத்திகளே உபாயம்" என்னும் ஹிதத்தை யும், அப்பரமனை அனுபவித்து அடிமை செய்து உகப்பிப்பதே மிக மேலான ச்ரேயஸ்" என்னும் புருஷார்த்தத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது விசிஷ்டாத் வைதமதம். இம்மதம் மிகச் சிறந்த ப்ரமாண மான வேதஸித்தம்; **ஆதலின், வைதிகம்** அநாதி என்று புகழப் பெறுகிறது. ஆயினும், அந்த அந்தக் காலத்திற்கு இம் மதத்திற்கு புறச் சமயத்தாராலும் அகச் சமயத்தாராலும், மறைவு ஏற்பட்டது உண்டு. அந்த ஸமயம் எம்பெருமானுர் திரு அவதாரம் செய்தருளி, ஸ்ரீ பாஷ்யம் முதலிய திவ்விய சாஸ்திரங்களி னுலும் உபதேசங்களினுலும் மிகவும் பிரகாசம் அடையச் செய்தவர். அதனுல், **எம்பெருமானுர் தர்சனம்** என்று எம்பெரு மானுர் ஸம்பந்தத்தை யிட்டே இதற்கு நம் பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார். இத் னுலும், **ஆமுதல்வன் இவன்** என்று ஆள வந்தாரால் கடாக்ஷிக்கப் பெற்றவர் எம்பெரு மானுர் என்று இருப்பதாலும் இவர் பெருமை நன்கு விளங்கும். பூர்வாசாரியர்களாகிற இரத்தினங்களாலே சமைக்கப் பெற்றுள்ள ஹாரத்தில் நாயகக் கல் ஸ்த்தாநத்தில் எழுந் தருளியிருக்கிறவர் எம்பெருமானுர் யதிரா ஜேந நிபத்த நாயகஸ்ரீ : என்று தேசிகன் அருளிச் செய்திருப்பதாலும் எம்பெருமானுர் பெருமை மிகவும் ஸ்பஷ்டம். இவ்வாறு பெருமை பெற்றுள்ள எம்பெருமானுரிட மிருந்து அவதரித்துள்ள ஸ்ரீ பாஷ்யம் முத லான திவ்விய சாஸ்திரங்களுக்கு, தம் உப தேசங்களாலும், தத்வடீகை, அதிகரண ஸாராவளி, சததூஷணீ, முதலிய அத்யாச் சரியங்களான திவ்விய சாஸ்திரங்களினுலும், மிக மிக ப்ரகாசத்தை உண்டாக்கி, எம்பெரு மானுர் தர்சனத்தை ஓங்கித் தழைக்கச் செய் தவர், தேசிகன். இங்ஙனம் பெற்ற தாயும் வளர்த்த தாயுமான எம்பெருமானுர் தேசிகன் என்னும் இரு ஆசார்யரத்னங்களைப் பெற் றிருக்கும் ஸ்ரீ. வைஷ்ணவர்களான நமக்கு ஒரு குறையுமில்லை. நாம் நம் ஸ்வரூபத்துக்கு ஏற்ப இரண்டு திரு நாமங்களையும் அடி பணிந்து உய்வோம்.

மதுரகவி தோன்றக் காட்டும் தேசிகனர்

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
S. S. ராகவ தாத்தாசார்யார்
வ்யாகரண சிரோமணி
"The Hindu" Madras.

மிடியனுக்கு அகத்துக்குள்ளே மஹாநிதியைக் காட்டிக் கொடுக்குமாப்போல் ஸர்வ சாஸ்த்திரார்த்தங்களைக் காட்டிக் கொடுக்கையாலே ஆசார்யன் திறத்தில் கிருதக்ஞனயிருக்க வேண்டும் என்று 'ஆசார்ய தேவோபவ' 'தேவமிவ ஆசார்யமுபாஸீத' 'குரோர் நாம ஸதாஜபேத்' 'தேவு மற்றறியேன்' இத்யாதி வசனங்கள் விதியா நிற்கின்றன. நம்முடைய ஆசார்யர்களில் ப்ரதானதமரானவர் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன். அவர் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்குச் செய்திருக்கும் உபகார விசேஷங்களைப் பார்த்தால் அவர்தான் ஆசார்யர்களில் ப்ரதானதமர் என்ற பேச்சு அதிசயோக்தி ஆகாது. புருஷ: என்ற பதம் ஸ்ரீய: பதியைக் குறிக்குமாப்போல் வேதாந்தாசார்ய சப்தமும் ப்ரதானமாக நம் ஸ்வாமி தேசிகனையே குறிக்கும். இதைத்தான் 'யஸ்மின்னனன்ய ஸாமான்யா வேதாந்தாசார்யதா குரௌ யதா புருஷதா விஷ்ணௌ...' என்று ப்ரதிவாதி பயங்கரம் அண்ணனும் ஸாதிக்கிருர்.

இவ்வாசார்யன் வேதபாஹ்ய குத்ருஷ்டி மதங்களால் மறை குலைந்து, ஸாது ஜனங்கள் அடங்க நடுங்கி, பகவானின் ஸ்வரூப குண விபூதிகளை அறியாமல் விபூதியையும், விபூதிமானையும் அபஹரித்து நரகம் புகும் பாபம் செய்யும் சேதனர்களை உஜ்ஜீவிப்பிக்க திருவுள்ளம் கொண்ட அன்று இவ்வுலகினை ஆக்கி அரும்பொருள் நூல் விரித்து நின்று தன் நீள் புகழ் திருவேங்கட விண்ணோர் வேட்பனுமாகிய ஸ்ரீநிவாஸனின் அவதாரமென்றும்,

'உத்ப்ரேக்ஷ்யதே புதஜனை : உபபத்தி பூம்னு கண்டாஹரே : ஸமஜனிஷ்ட யதாத்ம னேதி...'

என்றும் 'கண்டாவதாரோ அநந்தார்ய தனயு :' என்றும் சொல்லுகிறபடியே கண்டாவதாரராகவும் போற்றப்படுவர்.

'பாம்ஸு க்ரீடாஸ்வபிஹரே: லீலயா கதயா பிச' என்று பரீக்ஷித் மஹாராஜனைப் போலவும், 'பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த: லக்ஷ்மணோ லக்ஷ்மி வர்த்தன:' என்று லக்ஷ்மணனைப் போலவும் பால்யத்திலிருந்து பகவத் பக்தி மேம்பட்டவராய் விளங்கா நின்ருர். பிறகு கௌமார பருவத்தில் 'பூயா: த்ரைவித்யமான்யஸ்த்வம் பூரிகல்யாண பாஜனம்' என்று ஸ்ரீ அம்மாளின் அனுக்ரகத்துக்குப் பாத்திரமாகி கிடாம்பிக் குலபதி அப்புள்ளாருக்கு அந்தேவாசியாகி 'ஸக்ருத் நிகதமாத்ரேண தௌ ஸம்ஜக்ருஹதுர் ந்ருப' என்று இராம கிருஷ்ணர்கள் போல ஒரு படி கேட்டு ஸர்வ வித்யா க்ரஹணம் பண்ணி விம்சத்யப்தே விச்ருத நாஞவித வித்யராய் விளங்கிஞர்.

ஸம்ப்ரதாய விருத்தியை அபேக்ஷித்த இவர் கவாம் வ்ருத்தியை அபேக்ஷித்த கண்ணன் போன்றவர் என்றும், பகவானை அனுபவிக்கும் விஷயத்தில் அகலகில்லேன் என்றிருக்கும் பிராட்டியைப்போல் ஸர்வத்தையும் மறந்திருப்பாராயும், புலஸ்த்ய வசிஷ்ட வரப்ரசாத லப்த பரதேவதா பாரமார்த்ய வேதியான ஸ்ரீ பராசரரைப்போல் 'ஸ்ரீமத்ப்யாம் ஸ்யாதஸாவித்யனுபதி வரதாசார்ய ராமானுஜாப்யாம்' என்றபடி ஸ்ரீ அம்மாள், அப்புள்ளார் இவர்களின் கடாக்ஷ விசேஷத்திற்குப் பாத்திரமானவர் என்றும் மிதக்ஞரான ப்ரம்மாவால் அடையப்பட்ட ஞானத்

த்தை உடைய வால்மீகி போலல்லாமல், ''முன்பரிமுகமாய் இசைகொள் வேதநூல் என்றிவை பயிர்த்தவர்'' என்றபடி ப்ரம்மாவுக்கே வேதம் உரைத்த பரிமுகனால் அனுக்ரஹிக்கப்பட்டவர் என்றும், விரக்தாக்ரேசரரான சுகமகரிஷியைப் போல் பரம வைராக்ய யுக்தராய் 'அஸ்தி மே ஹஸ்தி சைலாக்ரே வஸ்து பைதாமஹம் தனம்' என்று இருந்தவர் என்றும், திருமாலால் மயர்வற மதிநலம் அருளப்பட்ட சடகோபனைப் போல் ''தெருள் தர நின்ற தெய்வநாயகா'' என்று தேவநாதனால் மதிநலம் அருளப்பட்டவர் என்றும், அர்ச்சாவதாரத்தில் ஈடுபட்டு ''வைகுண்டவாஸேபி நமே பிலாஷ:'' என்று பாடி, ''ஏரார் முயல்விட்டு காக்கை பின்போவதேன்'' என்று சொன்ன கலியன் போன்றவர் என்றும், இளையபெருமாளைப் போல் திவ்ய தம்பதிகளுக்கு ''ஆமறிவால் ஆர்ந்தடிமை யாகின்றோம்'' என்று ப்ரார்த்தித்து அடிமையானார் என்றும், ஸ்ரீய: பதியின் பாதுகையையே பரதேவதையாய் பரிக்ரஹித்த பரதாழ்வாரைப் போல 'த்வாமேவ ஸாக்ஷாத் பரதாதி தேவதாம்' என்று உத்கோஷித்தவர் என்றும்,

> 'ஸித்திர் பவதிவா நேதி ஸம்சயோ அச்சுத
> ஸேவினும்
> நஸம்சயோத்ர தத்பக்த பரிசர்யாரதாத்
> மனாம்'

என்றபடி 'சுத்தாந்த ஸித்தாந்திநாம் முக்தைச்வர்யதின ப்ரபாதசமயாஸக்திம் ப்ரஸத்திம் முஹு:' என்று பாடி பாகவத கைங்கர்யமே உத்தேச்யமாகக் கொண்டு சத்ருக்னாழ்வானைப் போன்றவர் என்றும் 'ஸர்வே பத்ரா குணாஸ்யு: ஸமுதிதவிபவா: ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரே' என்றபடி எழுந்தருளியிருந்தார்.

இதையெல்லாம் கணிசித்து அன்பர்க்கே அவதரிக்கும் ஆயன் நிற்க அருமறைகள் தமிழ் செய்தான் தாளே கொண்ட மதுரகவிகள் 'பகவந்த மிவானந்த கல்யாண குண ஸாகரராய் இவர் அவதரிக்கப்போவதை, ஸ்ரீமந் நாதமுனி மூலம் திவ்யப்ரபந்தாவதாரத்திற்குக் காரணமான கண்ணிநுண் சிறுதாம்பில்,

> அருள் கொண்டாடும் அடியவர் இன்புற
> அருளினான் அவ்வருமறையின் பொருள்
> அருள் கொண்டாயிரம் இன்தமிழ்
> பாடினான்
> அருள் கண்டீர் இவ்வுலகில் மிக்கதே

என்ற பாசுரத்தில் சூசிப்பிக்கிறார்.

ரிஷிகளும் ஆழ்வார்களும் பகவானின் அருளை ஆங்காங்கு புகழ்கிறார்கள். பகவானாவது ஞானசக்தி பல ஐச்வர்ய வீர்ய தேஜஸ்ஸுகளான குணங்கள் உடையவன்தானே! அருளுடன் கூடா இந்த குணங்களும் தோஷங்களே. 'தோஷாபவேயு ரேதே யதி நாம தயே த்வயா விநாபூதா:' என்கிறார் தேசிகனும்.

அருள்தான் குணங்களின் ஸார்வபௌமி. மற்ற குணங்கள் ஏவல் தேவை செய்பவைகளே அருளுக்கு. பகவானையும் தன் இஷ்டப்படி ஆட்டிவைப்பாள் கருணை. பாபம் படைத்தோன் பாபத்தைக் கொண்டு பகவானை அணுக தவறு செய்யாதவன் யார் என்று விண்ணப்பித்து அவனை மன்னித்து ஆட்கொள்ளச்செய்து, அவன் தண்டனைப் பட்டான் என்று எதிர்பார்த்தவர்களை வியக்கச் செய்வாள் க்ருபை.

அருளைக் கொண்டாடாதவர் யார்? இருப்பினும் அருளுக்கு ஓர் உருக் கொடுத்து அவளை பகவன் மஹிஷியாக்கி பாபிஷ்ட சக்ரவர்த்திகளுக்கு ஈடு கொடுத்து ஆட்கொள்ளும் சக்ரவர்த்தினியாக்கி அதற்கென்றே தனி ஒரு நூலை 'தயாசதகம்' என்று பெயரிட்டு வெளியிட்ட பெருமை நம் தூப்புல் தோன்றிய தனி விளக்குக்கே உரியது. ஆகையால்தான் ஸர்வக்ஞரான மதுரகவிகளும் தனக்கு வெகுநாள் கழித்து அவதரிப்பவரும் தயாசதகம் பாடுபவரும் கண்ணனைப் போல், பிராட்டியைப் போல், பராசரரைப் போல், வால்மீகியைப் போல், ஆழ்வாரைப் போல், கலியனைப் போல், லக்ஷ்மணனைப் போல், பரதனைப் போல், சத்ருக்னனைப் போல் எல்லா குணங்களுடன் விளங்குபவரான நம் ஸ்வாமியை முன்கூட்டியே சொல்லாது விட மனமின்றி அருள் கொண்டாடும் அடியவர் என்று முன்னமேயே குறித்துள்ளார். (அருள் கொண்டாடியவர் (தயாசதகம்) நம் தேசிகன்தானே!) முக்காலும் உணர்ந்தவர்கள் அறியாதது எது? 'ரிஷீணாம் புனராத்யானாம் வாசமர்த்தானுதாவதி' அல்லவா!

க் ஞா னி

ஸ்ரீ உ.வே. குமாரவாடி,
எஸ். அனந்தாச்சாரியார்
புதுடில்லி

கீதையின் நான்காவது அத்யாயத்தில் பகவான் கண்ணன் தன் அவதார ரஹஸ்யத்தை வெளியிடுகிறான்.

"யதா யதாஹி...யுகே யுகே"

'அர்ஜுநா! எந்தெந்தக் காலத்தில் தர்மத்திற்கு வாட்ட மேற்படுகிறதோ, அதர்மத்திற்கு வளர்ச்சி உண்டாகின்றதோ, அப்பொழுது நான் என்னை ஸ்ருஷ்டித்துக் கொள்கிறேன் (அதாவது என் ஸங்கல்பத்தால் நானே பிறக்கிறேன்). மேலும், ஸாதுக்களைக் காப்பாற்றுவதற்கும், அவர்களுக்கு இடையூற்றைச் செய்பவர்களை அழிப்பதற்கும், வாட்டமடைந்து குறைந்துபோன தர்மங்களை நிலைநாட்டவும் யுகந்தோறும் நான் பிறக்கிறேன்' என்று தன் அவதார காலத்தையும் பிரயோஜனத்தையும் அறிவிக்கிறான் பகவான்.

இவ்விடத்தில் 'ஆத்மானம் ஸ்ருஜாமி' என்ற சொற்களுக்கு 'என்னை ஸ்ருஷ்டிக்கிறேன்' என்ற பொருள் வெளிப்படையாகவே கிடைக்கின்றது. ஆயினும், இச்சொற்களுக்கு 'ஞானியைப் படைக்கிறேன்' என்ற வேறு பொருளும் கொள்ளலாமென கீதையிலிருந்தே நாம் அறிகின்றோம். இதையனுஸரித்தே 'இறைவன் தர்மத்தை நிலைநாட்டத் தானே பிறப்பது மட்டுமல்லாமல், ஞானிகளையும் பிறப்பித்து அவர்கள் மூலமாக அக்காரியத்தை நிறைவேற்றிக் கொள்கிறான்' எனப் பெரியோர் கூறுகின்றனர். அப்படிப்பட்ட ஞானிகளே அந்தந்தக் காலத்தில் தோன்றி ஆசார்ய மஹா புருஷர்களாகத் திகழ்கின்றனர்.

'பகவானின் ஆத்மா' என்ற பதத்திற்கு **'ஞானி'** என்ற பொருள் எவ்வாறு கிடைக்கின்றதென்பதைச் சற்று ஆராய்வோம்.

ஏழாவது அத்யாயத்தில் கண்ணன் தன் பக்தர்களை மிகவும் பாராட்டுகின்றான்.

"சதுர்விதா பஜந்தே...பரதர்ஷப"

அர்ஜுநா! என்னைச் சரணடைந்து உபாஸிக்கின்றவர்கள் நான்கு வகைப்பட்டவர்கள்—ஆர்த்தன், அர்த்தார்த்தீ, ஜிஜ்ஞாஸு, ஞானி நால்வரும் புண்யம் செய்தவர்களே. ஆயினும் அவர்கள் கோரும் பலன்களின் வித்யாஸத்தாலும், செய்த புண்யங்களின் தாரதம்யத்தாலும், அவ்வாறாக நான் வகுக்கின்றேன். முதலில் செல்வத்தை அளவற்றதாகப் பெற்று, பிறகு அதை இழந்து, மனம் நொந்து, மறுபடியும் அதைப் பெறவேண்டுமென்று விரும்புபவன் 'ஆர்த்தன்'; ஏழையாயிருந்து புதிதாகப் பணத்தைக் கோருபவன் 'அர்த்தார்த்தீ'; 'ஜிஜ்ஞாஸு' முதலில் ஜீவாத்மா ஸ்வரூப ஞானம் பெற ஆசைப்பட்டு, அந்த ஆத்மானுபவ ஸுகத்திலேயே சில காலம் ஈடுபட்டு, பிறகு இறைவனை அடைபவன்; 'ஞானியோ பகவானைத் தவிர வேறொன்றையும் விரும்பாமல், தனக்கு உயர்ந்த பிரயோஜனம் அவ்விறைவனே' என்று திண்ணம் கொண்டு அவனை நாடுபவன். இந்நால்வரில் முதல் இருவரும் ஒரு வகுப்பினர். ஏனெனில் அவர்கள் செல்வத்தையே நாடுகின்றனர், அவர்களைக் காட்டிலும் 'ஜிஜ்ஞாஸு' உயர்ந்தவன். ஆனால், எல்லோரையும் விட 'ஞானி'யே மேம்பட்டவன் என்று கண்ணன் உரைக்கின்றான்.

"தேஷாம் க்ஞாநீ...மம ப்ரிய:"

அர்ஜுநா! ஞானி என்னைப் பற்றிய அறிவு பிறந்ததும் எக்காலத்திலும் என்னை விடாமல் தியானம் செய்து பக்தி செய்கின்றபடியால் அவனே உயர்ந்தவனாவான். மற்ற வகுப்பினரோ தங்கள் விரும்பிய பலன்

கிடைக்கிற வரையில் என்னுடைய ஸம்பந்தம் வைக்கின்றார்கள்; அவர்களுக்குப் பணம் முதலியவைகளிலும், அதை நான் கொடுப்பதால் என்னிடத்திலும் அன்பு இருக்கின்றது. ஆனால் ஞானிக்கோ அன்பு முழுமையும் என்னிடத்தில் தானிருக்கிறது. அவனுக்கு என்னைத் தவிர வேறு பலனில் ஆசையில்லை. எவ்வாறு அவனுக்கு நான் மிகவும் பிரியனோ, அப்படியே எனக்கும் அவன் பிரியனாகிறான். அவனுக்கு என்னிடத்திலுள்ள ப்ரீதிக்கு அளவே இல்லை.

நீண்ட யோகத்தில் நிலைத்திருந்து பகவானைத் தியானம் செய்யும்பொழுது ஞானி தன் சரீரத்திற்கு ஏற்படும் வேதனைகளையும் அறியான். அப்படிப்பட்ட மஹர்ஷிகளை நாம் கேட்டிருக்கிறோம். சிலர் கண்டுமிருக்கிறார்கள். உதாஹரணமாக பிரஹ்லாதனை எடுத்துக்கொள்வோம். தன் தந்தை இரணியன் கூறின மொழிகள் அவன் செவியிலிறங்கவில்லை. 'பகவான் நாராயணனே பரமன்' என்ற உயர்ந்த ஞானத்தைப் பெற்று அவன் விளங்கினான். துக்கத்தைத் தரும் மாபெரும் வேதனைகளைத் தன் தந்தை விளைவித்தாலும், அந்த துக்கானுபவம் சிறிதும் அவனுக்கு ஏற்படவில்லை. அவன் மனம் பகவானிடத்திலேயே நிலைத்திருந்தது.

"ஸத்வாஸக்தமதி:—ஸம்ஸ்தித:"

தக்ஷகன் முதலிய மிகக் கொடிய விஷப் பாம்புகளால் ஸகல அவையவங்களிலும் கடிக்கப்பட்டிருந்தும் பிரஹலாதன் தன் மனத்தைப் பகவானிடத்தில் நிறுத்தினபடியால் ஆனந்த பரவசனாய்த் தன் தேகத்தையே அறியாமலிருந்தான். அதுதான் ஞானியின் யோக நிலை. அப்படிப்பட்ட ஞானி 'தனக்கு ஆத்மா' என்கிறான் கண்ணன்.

"உதாராஸ்ஸர்வ ஏவைதே—கதிம்"

தன்னைச் சரணமடைந்து பலனைப் பெறுகிற இந்த நான்கு வித பக்தர்களை 'உதாரர்கள்' எனப் பகவான் கொண்டாடுகிறான். எவன் பொருளைக் கொடுக்கின்றானோ, அவனே 'உதாரன்' எனப்படுவான். ஆனால் யாசிப்பவனை அவ்வாறு கூறுவது பொருந்தாது. கண்ணனோ தன்னிடம் கேட்டுப் பலனை அடைபவர்களை 'உதாரர்கள்' என அழைக்கின்றான். ஆலோசிக்குமளவில், அவ்வாறு பாராட்டலாமெனவே விளங்குகிறது.

முன்பு கூறப்பட்ட நான்கு வித பக்தர் பகவானுடைய ஸ்வரூப, ரூப, குண, விபவங்களை நன்கு அறிந்து அனுபவித்து, அவனுடைய 'உதார' குணத்தை ஆங்காங்கு போற்றுகிறார்கள். அவ்வாறு செய்வதால் தான் இறைவனின் மகிமை எங்கும் பரவுகிறது. பகவத் குணங்களையும் பாடும் அவர்களன்றோ எம்பெருமானுக்குப் புகழையும் நிலையையும் அளிக்கின்றனர்! அப்பெருமை பெற்ற இறைவன் மகிழ்ந்து தன் நன்றியைக் காட்ட, பக்தர்களை 'உதாரர்கள்' எனச் சொல்வதில் என்ன தடையுள்ளது?

ஆயினும், பகவான் ஞானியைத் தனக்கு ஆத்மாவாகவே நினைக்கிறான். ஆத்மாவினாலன்றோ 'உடல்' நிலைத்திருக்கிறது. தன்னை விட்டு ஒரு க்ஷணமும் பிரிந்திருக்க முடியாதவனாய், தன்னையே மிக உயர்த்த பலனாகக் கருதி, தன்னை எக்காலத்திலும் தியானம் செய்து போற்றும் ஞானி தன்னை எங்கும் நிலைநாட்டுகிறான் என்ற மனப்பாங்குடன் அவனைத் தன் ஆத்மாவாகவே எண்ணுகிறான் பகவான். இதனால் 'ஆத்மாநம் ஸ்ருஜாமி' என்ற தொடருக்கு 'ஞானியைப் படைக்கிறேன்' என்ற பொருளை நாம் கொள்ளலாமல்லவா?

'க்ஞாநிந:தத்வதர்சிந:' என்று கண்ணன் காட்டிய வழியைப் பின்பற்றி உண்மையை அறிந்த வேதாந்த தேசிகன் போன்ற ஞானிகளை ஆசார்யர்களாகப் பெற்று அவர்களின் உபதேசத்தால் நாம் நற்கதியைப் பெறுவோமாக.

ஸ்ரீ தூப்புல் குலமணி - "தெய்வம், ஆசாரியன்"

ஸ்ரீமதுபயவே, அவதாரம் ஸந்தான கோபால தாதாச்சாரியர்.

1. (a) கலியில் தோன்றிய திருவேங்கட வனின் திருமணி (அம்சமாய்) திருவவதரித்த மஹாபுருஷர்.

(b) ஸ்ரீ விளக்கொளி மரதகத்தின் திருவடி வாரத்திலே தூப்புலிலே தோன்றியவர்.

2. விபவ புரட்டாசி திருவோண நன்னு ளிலே, தோதாரம்மையின் திருவயிற்றிலே, அனந்தசூரிவின் திருக்குமாரராய் ஆபவிர்ப வித்தவர்.

3. திருவேங்கடநாதன் என்னும் திரு நாமம் பூண்டவர்.

4. மஹாதேவி நாயகனை பேரருளாள னிடம் பேரன்பு பெற்றவர்.

5. எல்லா ஜீவன்களுக்கும் அஞ்சல், அஞ்சல் என்ற அபய ப்ரதானம் பண்ணும் அபயஹஸ்தத்துடன் இருக்கும் பேரருளாள னின் திருவடிகளிலே அடைக்கலம் புகுந்த வர்.

6. தேவர்களும், முநிவர்களும் அவ னுடைய வடிவழகிலே மயங்கினவர்களைப் போல். இவர் வைகுந்த மாநகரின் வாழ்ச் சியை விரும்பாதவர். தேவாதிராஜனிடம் அன்பு வைத்தவர்.

7. உபயகாவேரி மத்யங்கதரான அரங்க னுலே "வேதாந்தவாசிரியன்" என்ற பிருது பெற்றவர்.

8. பெரியபிராட்டியாராலே (ரங்கநாயகி) "ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்" என்றழைக்கப் பட்டவர்.

9. வடமொழி தென்மொழி ப்ராக்ருதத் திலும் அனேக நூல்களை இயற்றியவர்.

10. (a) மாறன் துணையடிக் கீழ் வாழ்க் கையை விரும்பியவர்.

(b) கலியனுரை குடிகொண்ட கருத்துடை யவர்.

11. வினையுடம் பொன்று விழுந்துழலாது நம்மை ஆளவந்த மஹாவீரபுருஷர்.

12. தினமும் நாதமுனி கழலை ஸேவிப் பவர்.

13. இராமானுஜ முநியின் வண்மையை யேற்றும் சீர்மையாளர்.

14. எம்பெருமானாரின் தரிசனத்தைத் தழைத்தோங்கச் செய்தவர்.

15. நடாதூரம்மாளின் காலக்ஷேப கோஷ் டியிலே (விட்ட இடத்தைச் சொன்ன) அம் மஹானின் கிருபைக்குப் பாத்ரமானவர். (இதை இன்றும் பேரருளாளன் ஸன்னிதி ப்ரா காரத்தில் காணலாம்.)

16. காவலனெங்கள் கிடாம்பிக் குலபதி அப்புளார் தம் தேமலர் சேவடி சேர்ந்து பணிந்தவர்.

17. நம் அக இருளை மாற்றவந்த திவாகரன்.

18. (a) ஆம்பலோடையை அலர வைக்க வந்த சந்த்ரன் போன்ற திருமுக மண்டலத்தை உடையவர்.

(b) அனேக திவ்ய தேசத் தெம்பெருமான்களை மங்களாசாஸனம் பண்ணினவர்.

19. மன்மதனைக் காட்டிலும் விஞ்சிய வடிவழகார்ந்தவர்.

20. (a) தென்மொழியிலும், வடமொழியிலும் அனேக திருநாமங்களைப் பூண்டவர்.

(b) "காஞ்சீபுரி யஸ்ய ஜன்ம பூமி:" என்பதற்கிணங்க ஜனன பூமியதிபதி தேவாதிராஜனும் தனத்துக்கு அதிபதியான (ஜீவனம்) ஸ்ரீநிவாஸனும், வாசஸ்தலமும் நிர்யாணமும் அடைந்த அரங்கனையும்" எப்போதும் தன் திருமார்பிலே நிலையாய்ப் பெற்றவர். அர்ச்சையில் இப்போது ப்ரயத்க்ஷத்தில் கண்டு ஸேவிப்போமாக.

வாழ்க தூப்புல் வள்ளல்! வாழ்க அருள் தரும் ஆரண தேசிகன்!

ஸ்ரீமத் பரம...பரி. ரங்க ராமாநுஜ மஹா தேசிகன்

(கோதண்டபட்டி ஸ்வாமி)

ஸ்ரீரங்க லக்ஷ்மண முநி : ஸ்வக்ருத ப்ரபந்த
கூடார்த்த போதந க்ருதே ஸமபூத் யதாத்மா
வேதாந்த லக்ஷ்மண முநீந்த்ர பதாப்ஜ ப்ருங்கம்
ஸ்ரீரங்க லக்ஷ்மண முநிம் தமஹம் ப்ரபத்யே

ஐப்பசி மூலம்

சதுச்லோக்யர்த்தஸாரக்ஞ :

ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்த்தானவித்வான்
ஸாரஸாரக்ஞ, ந்யாய வேதாந்த வித்வான்,
திருக்கள்ளம், நரஸிம்ஹராகவாச்சாரியார் ஸ்வாமி.

முன்னுரை

ஆசார்யகுணங்களெல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற ஓர் உத்தம ஆசார்யன் நம் ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன். இம் மஹானுடைய அஷ்டோத்தர சத நாமத்தில் **"சதுச்லோக்யர்த்தஸாரஜ்ஞ :"** என்பதும் ஒரு திரு நாமமாக அமைந்துள்ளது. ஸ்ரீ ஆளவந்தார் அருளிச்செய்த சதுச்லோகியின் ஸாரார்த்தங்களை நன்கு அறிந்தவர் என்பது இதன் பொருள். ஸ்ரீ ஆளவந்தார் மஹாலக்ஷ்மிவிஷயமாக அருளிச் செய்த **'காந்தஸ்தே'** முதலான நான்கு ச்லோகங்கள் கொண்ட ஸ்தோத்ரத்திற்கு 'சதுச்லோகி' என்று திருநாமம். இதற்கு ஸ்வாமி மிக கம்பீரமாகவும் மதுரமாகவும் தெளிவாகவும் ஒரு பாஷ்யம் இயற்றியுள்ளார்.

சதுச்லோகியின் ஸாரம் :

ஸ்வசேஷாசேஷார்த்த:
நிரவதி நிர்பாத மஹிமா
பலாநாம் தாதா ய :
பலமபி ச சாரீரகமித :
ச்ரியம் தத்ஸத்ரீசீம்
ததுபஸதந த்ராஸ சமநீம்
அபிஷ்டௌதி ஸ்துத்யாம்
அவிததமதி : யாமுநமுனி :

என்கிற ச்லோகத்தினுல் சது ச்லோகியின் ஸாரார்த்தங்களை மிகத் தெளிவாக அருளியுள்ளார். சாரீரக சாஸ்த்ரமானது (ப்ரஹ்ம ஸூத்திரம்) நான்கு அத்யாயங்கள் கொண்டது. ஸமந்வயாத்யாயம், அவிரோதாத்யாயம், ஸாதநாத்யாயம், பலாத்யாயம் என்பன அவை. அந்த நாலு அத்யாயங்களில் பரமாத்மாவிற்கு அருளிச் செய்யப்பட்டிருக்கும் நான்கு குணங்களும் சது ச்லோகியில் நான்கு ச்லோகங்களால் பிராட்டிக்கு அருளிச் செய்யப்படுகின்றன.

நான்கு அத்யாயங்களும் - நான்கு ச்லோகங்களும்:

முதல் அத்யாயத்தில் பரமாத்மா ஸகல ஜகத் காரணமென்றும் ஸர்வ சரீரியென்றும், யாவற்றுக்கும் சேஷி என்றும் நிரூபிக்கப் பட்டிருக்கிருன். காந்தஸ்தே என்கிற முதல் ச்லோகத்தில் பிராட்டி உபய விபூதிக்கும் சேஷியாக நிரூபிக்கப்பட்டிருக்கிருள்.

பணிபதி : சய்யா ஆஸநம் வாஹநம்
வேதாத்மா விஹகேச்வர :

என்பதால் நித்ய விபூதிக்கு சேஷி என்றும், ப்ரஹ்மேசாதி... **த்வத்தாஸ தாஸீகண :** என்பதினுல் லீலா விபூதிக்கு சேஷி என்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிருள்.

இரண்டாவது அத்யாயத்தில், யுக்திகளாலும் மற்ற ஸ்ம்ருதிகளாலும் பாதிக்க முடியாத நிரவதிக மஹிமையுள்ளவன் என்று கூறப்பட்டுள்ளது. சதுச்லோகியிலும் இரண்டாவது ச்லோகத்தில் பிராட்டியின் பெருமை அவளாலும் ப்ரபுவான அவள்

பர்த்தாவினுலும் அளவிட்டு அறிய முடியாத தென்று கூறப்பட்டுள்ளது.

(யஸ்யாஸ்தே மஹிமாநமாத்மந இவ
த்வத்வல்லபோபி ப்ரபு:
நாலம் மாதுமியத்தயா,

என்கிறது அநுஸந்தேயம்.)

மூன்றும் அத்தியாயத்தில் பகவான் ஸகல பல ப்ரதன் (உபாயம்) என்கிற அம்சம் **காட்டப்பட்டிருக்கிறது.** மூன்ருவது ச்லோகமும் பிராட்டியின் அனுக்ரஹத்தினுல்தான் ஐச்வர்யம், கைவல்யம், மோக்ஷம் முதலிய புருஷார்த்தங்கள் கிடைக்கின்றன. ஆதலால் எல்லாவற்றிற்கும் அவள் உபாயம் என்று கூறுகிறது.

ச்ரேயோ நஹ்யரவிந்தலோசநமந :-
காந்தா ப்ரஸாதா த்ருதே
ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்வஸு
ந்ருணும் ஸம்பாவ்யதே கர்ஹிசித்

என்பதை நோக்கவும்.

நான்காவது அத்யாயம் பகவானே ப்ரயோஜநம் (பலம்) என்று கூறுகிறது. நான்காவது ச்லோகமும் பகவான் எல்லா நிலையிலும் லக்ஷ்மியுடன் கூடியிருக்கிருனுகையால் அவனைப் போல் அவரும் அனுபாவ்யையாய் பலமாகிருள் என்று லக்ஷ்மியின் உபேயத்வத்தை விவரித்திருக்கிறது. **(யாந்யந்யாநி... காடோபகூடாநி தே** என்பதால் இது ஸித்தம்). ஸ்வாமி **ஸ்வசேஷாசேஷார்த்த:** என்பதால் முதல் அத்யாயத்தின் அர்த்தத்தையும், **'நிரவதி நிர்பாதமஹிமா'** என்பதால் இரண்டாமத்யாயத்தின் பொருளையும், **'பலாநாம் தாதா'** என்பதால் மூன்ருவது அத்யாயத்தின் அர்த்தத்தையும், **'பலமபி'** என்பதால் நான்காவது அத்யாயத்தின் பொருளையும், **'ச்ரியம் தத்ஸத்ரீசீம்'** என்பதால் மஹாலக்ஷ்மி, பகவானைப் போல் அந்நான்கு குணங்களுமுள்ளவளாய் எல்லா விதத்திலும் அவனுக்கு நிகராக இருக்கிருள் என்பதையும், **'ததுபஸதந த்ராஸ சமநீம்'** என்பதால் பிராட்டிக்கு அஸாதாரணமான (பகவானுக்கில்லாத) புருஷகாரத்வத்தையும் அருளிச்செய்தார்.

புருஷகாரத்வம் :

''இவ்விடத்தில் தண்டதரத்வமும், புருஷகாரத்வாதிகளும் எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் கூருக விபஜித்த வ்யாபாரங்கள்'' என்று தத்வத்ரய சிந்தநாதிகாரத்தில் ஸ்வாமி பிராட்டிக்கு அஸாதாரணமானது புருஷகாரத்வம் என்பதை நிரூபித்திருக்கிருர். காருண்ய ரூபையாய் அஜ்ஞாத நிக்ரஹையான பிராட்டிக்கில்லாமல் பகவானுக்கு மாத்திரம் உள்ள அம்சம் தண்டதரத்வம். இவ்விபாகம் ஆண்மைக்கும் பெண்மைக்கும் சேரபோகார்த்தம் அவ்விருவர் ஸகல்பத்தினுலேயே பரிகல்பிதம். ஆகையால் அபராதிகளான நாம் அபராதத்திற்குத் தக்கவாறு தண்டிக்கக்கூடிய பகவானிடத்தில் முதலில் செல்ல முடியாது. **'கிமேதந்நிர்தோஷ : க இஹ'** என்கிற அழகான பேச்சினுலும், தன் அழகாலும் அவள் சீற்றத்தை விலக்கி ஸ்வ ஜநமாக்கக்கூடிய பிராட்டியைப் பற்றித்தான் பகவானை ஆச்ரயிக்க முடியும். ''இருவரையும் அன்பு தன்னுல் எம்மை இன்னடி சேர்த்தருளும் திரு'' என்று த்வயச் சுருக்கில் பிராட்டியின் புருஷகாரத் தன்மை ஸ்பஷ்டமாக அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இங்கு **ததுபஸதநத்ராஸ சமநீம்** — அவனை ஆச்ரயிப்பதில் உள்ள பயத்தைப் போக்குபவள், என்பதால் பிராட்டிக்கு அஸாதாரணமான புருஷகாரத்வம் அருளிச் செய்யப்பட்டதாகிறது. பாஷ்யத்தில் பிராட்டி விஷயமான ஐந்து பக்ஷங்களை அருளிச் செய்து,

''பஞ்சஸ்வேதஷு பக்ஷேஷு
கஸ்சிதேக: ப்ரமாணவாந் |
ஸலக்ஷ்மீ கஸ்ய ஸாம்ராஜ்யம்
ஸர்வதா ஸுப்ரதிஷ்டிதம்''

என்று நிகமித்திருக்கிருர் ஸ்வாமி தேசிகன். அந்த ஐந்து பக்ஷங்களையும், அவைகளில் ஸ்வாமிக்கு அபிமதமான பக்ஷம் இன்னதென்பதையும் ஸ்வாமி திருவாக்கைக் கொண்டே சுருக்கமாக விஜ்ஞாபிக்கின்றேன்.

ஐந்து பக்ஷங்கள்.

1. பிராட்டி ஸ்வரூபம் அணுவானது. அவள் ஜீவகோடியில் சேர்ந்தவள். பகவத் ஸங்கல்பத்தினுல் எல்லா வஸ்துக்களுக்கும் சேஷியாக இருக்கை முதலிய பெருமைகளைப் பெற்றிருக்கிருள். விபு என்கிற வசநங்கள் அவளுடைய ஸ்வரூபவ்யாப்தியைச் சொல்ல வில்லை. நித்யர்களையும் முக்தர்களையும் போல் தர்மபூதஜ்ஞாநத்தினுல் எங்கும் வ்யாபித்திருக்கிருள் என்று ஜ்ஞாநவ்யாப்தியையே சொல்லுகின்றன.

2. பிராட்டி ஜீவர்களில் ஒருவளே. ஆனுல் விபு. [எங்கும் ஸ்வரூபத்தால் வ்யாபித்திருக்கிருள்] ஜீவர்களை அணு என்று சொல்கிற வசநங்கள் பிராட்டியைத் தவிர மற்ற ஜீவாத்மவிஷயங்கள்.

3. பிராட்டி ஜீவகோடியிலும் ஈச்வர கோடியிலும் சேராத தனித் தத்வம் [விபுவாய் சித், அசித், ஈச்வரர்களைக் காட்டிலும் வேறுபட்டவள்.

4. பிராட்டி விபுவாய் ஈச்வர கோடியில் சேர்ந்தவள். பகவான், தன்னைத் தவிர மற்ற பதார்த்தங்களுக்கு சேஷி. இவள் பகவானையும் தன்னையும் தவிர மற்ற பதார்த்தங்களுக்கு சேஷி. ஜகத் காரணத்வம் முதலியன பகவானுக்கே. இவளுக்குள்ள மேன்மைகளெல்லாம் பகவத் ஸங்கல்ப மாத்திரத்தினுலேயே.

5. பிராட்டி பகவானைப்போல் தானும் ஸாக்ஷாத் ஈச்வரீ, விபுவானவள். ஜகத் காரணத்வம் மோக்ஷப்ரதத்வம் முதலிய பகவானுக்குள்ள அம்சங்கள் இவளுக்கும் உள்ளன.

கீழே குறிப்பிட்ட ஐந்து பக்ஷங்களில் ஸ்வாமிக்கு அபிமதமான பக்ஷம் ஐந்தாவது பக்ஷமே.

ஈச்வரகோடியில் சேர்ந்தவள்:

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் சேதநா சேதநங்களை நிரூபித்துப் பிறகு ஈச்வரதத்வத்தை நிரூபிக்கும்பொழுது பிராட்டி ஸ்வரூபத்தை நிரூபித்திருக்கிற படியினுல் அவள் ஜீவகோடியில் சேர்ந்தவளல்ல என்பது ஸ்வாமி திருவுள்ளம் என்பது ஸ்பஷ்டம். ந்யாயஸித்தாஞ்ஜநத்திலும் ஈச்வரபரிச்சேதத்திலேயே பகவானை நிரூபித்த பிறகு பிராட்டியை நிரூபித்திருக்கிறபடியினுல் இவ்வர்த்தம் த்ருடீக்ருதமாகிறது.

ஜகத்காரணத்வம்:

ந்யாய ஸித்தாஞ்ஜநத்திலேயே,
ஜ்ஞாநாநந்தா த்யந்த ஸாம்யாத்
ஜகஜ்ஜநகத்வ, சேஷித்வ,
சரண்யத்வ,
ப்ராப்யத்வாதி ஸாம்யாச்ச,
ஸாம்யகிராம் நிர்வாஹோ
வ்யக்த:

என்று அருளிச் செய்திருப்பதால் ஜகத் காரணத்வம், முதலியவைகள் பிராட்டிக்கும் உள்ளன என்பதே ஸ்வாமி திருவுள்ளமென்பதில் யாருக்கும் எவ்வித ஸந்தேஹமுமிருக்க ப்ரஸக்தியில்லை.

சரணுகத்யுத்தேச்யத்வம்:

சிலர் த்வயத்தில் பூர்வகண்டத்தில் ஸ்ரீமச்சப்தம் உபலக்ஷணபரமென்றும், உத்தர கண்டத்தில் ஸ்ரீமச் சப்தம் விசேஷண பரமென்றும் பிரியச் சொன்னுர்கள். இவ்விடத்தில் சப்தம் ஏக ரூபமாயிருக்க ஸ்வாரஸ்யத்திற்கு பாதகமன்றிக்கே இருக்க "ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் பகவத இதம்" இத்யாதிகளிலே பிரஸித்தமான கூடஸ்தஸம்ப்ரதாய விருத்தமாகப் பண்ணுகிற இவ்விபாகம் அநுபபந்நம், என்று அருளிச் செய்திருப்பதால் பகவானைப் போல் பிராட்டிக்கும் சரணுகத்யுத்தேச்யத்வம் உண்டென்பது தெளிவாகிறது.

விசேஷ்யாந்வயிக்ரியாந்வயித்வே ஸதி
விசேஷ்யவ்யாவர்தகத்வம்
விசேஷணத்வ

மென்றும்,

விசேஷ்யாந்வயிக்ரியாநந்வயித்வே ஸதி விசேஷ்யவ்யாவர்த்தகத்வம்
உபலக்ஷணத்வ

மென்றும் லக்ஷணம் பேசப்படுகிறது.

லம்பகர்ணமாநய — நீண்ட காதுள்ளவனை அழைத்து வா என்கிறோம். இங்கு **லம்ப கர்ணம்** — நீண்ட காது என்பது இவன்தான் அந்த வ்யக்தி என்பதையும் ப்ரகாசப்படுத்துகிறது. அவனுடைய வ்யாபாரத்திலும் [வருவது] ஸம்பந்தப்படுகிறது. காதை விட்டுவிட்டு அவன் மாத்திரம் வரமுடியாதிறே. ஆகையால் லம்ப கர்ணமென்பது விசேஷணம் மாடிவீட்டுக்காரனை அழைத்துக் கொண்டு வா என்கிறோம். இந்த இடத்தில் மாடி வீடு இவன்தான் அவன் என்றறிவதற்குக் காரணமாகுமே தவிர அவன் வரும் போது தானும் கூட வராது. ஆகையால் மாடி வீடு என்பது உபலக்ஷணம். அவ்விதமே பிராட்டி நாம் சரணுகதி செய்யும் போது இவள்தான் பகவான் என்று நமக்கறிவிக்கிருளே யொழிய நமது சரணுகதியாகிற வ்யாபாரத்தில் அவள்உத்தேச்யமாவதில்லை. இது மாடி வீடு போன்றது. நாம் பண்ணக் கூடிய கைங்கர்யத்தில் மாத்திரம் பகவானைப் போல் அவளுக்கும் உத்தேச்யத்வம் உண்டு. இது நீண்ட காதுபோல் என்பது சிலரது வாதம்.

ஸ்வாமி தேசிகனது திருவுள்ளம் இரண்டிடத்திலும் சப்தம் ஒரே மாதிரி இருக்கிற படியினுல் பிராட்டியை லம்ப கர்ணம் மாதிரி இரண்டிடத்திலும் விசேஷணமாகவே கொண்டு கைங்கர்யத்தில் போல் சரணுகதியிலும் உத்தேச்யத்வம்கொள்ள வேணுமென்பதே. இதுவேகூடஸ்த ஸம்ப்ரதாயானுகுணம்.

> ''உத்தேச்யத்வம் ஜநநி......
> ப்ரத்யக்ரூபே ஹவிஷி யுவயோ :
> ஏகசேஷித்வயோகாத்''

என்கிற ச்லோகத்தினுல் இவ் வர்த்தமே மிக ஸ்பஷ்டமாக விளக்கப்பட்டிருக்கிறது.

ஸ்வரூபத்தால் வ்யாப்தி :

பகவானைப்போல் பிராட்டியும் விபுவானவள் ஸ்வரூபத்தினுலும் எங்கும் நிறைந்தவள் என்பதை,

> ''யதா ஸர்வகதோ விஷ்ணு :
> ததைவேயம் த்விஜோத்தம
> ''ததா லக்ஷ்ம்யா : ஸ்வரூபம் ச
> வக்ஷ்யே ச்ருணு ஸமாஹித: |
> குணத ஸ்ச ஸ்வரூபேண
> வ்யாப்தி : ஸாதாரணீ மதா''
> மயா யதா ஜகத் வ்யாப்தம்
> ஸ்வரூபேண ஸ்வபாவத : |
> தயா வ்யாப்தமிதம் ஸர்வம்
> நியந்த்ரீ ச ததேச்வரீ ||
> அஸ்யா மம ச சேஷம் ஹி
> விபூதிருபயாத்மிகா |
> இதி ச்ருதிசிரஸ் ஸித்தம்
> மச்சாஸ்த்ரேஷ்வபி மாநத ||
> யதா பூமிஸ்ச நீலா ச
> சேஷபூதே மதே மம |
> ததாத்மநாம் ச ஸர்வேஷாம்
> ஜ்ஞாநதோ வ்யாப்திரிஷ்யதே ''
> ஸ்வரூபதஸ்து ந தயோ :
> வ்யாப்தி : வேதாந்தபாரக |

என்கிற பல ப்ரமாணங்களை திருவுள்ளத்தில் கொண்டு மிகவும் விரிவாக உபபாதித்திருக்கிருர்.

யதா ஸர்வகதோ விஷ்ணு: என்கிற வாக்கியத்திற்கு எங்களாழ்வான் - **யதேதி - ஸர்வகதோ விஷ்ணு ; யதா-யத் ஸ்வபாவ : இயமபி ததா - தத்ஸ்வபாவேதி விஷ்ணோ : ஸர்வகதத்வ ஸத்யஜ்ஞாநாதி ஸ்வரூப கல்யாண குணுதீநாம் அதிதேச :** என்று வ்யாக்யானம் அருளிச் செய்திருக்கிறபடியினுல் பகவானைப் போல் பிராட்டிக்கும் ஸர்வகதத்வம் — ஸ்வரூபத்தினுல் எங்கும் வ்யாபித்திருக்கை அங்கீகரிக்கப்பட்டதாகிறது. பூமியும் நீளையும் மற்ற ஜீவர்களைப்போல் அணுவானவர்கள் நித்ய ஸூரிகளைப் போல் ஜ்ஞாநத்தினுல் எங்கும் வ்யாபித்திருக்கிருர்கள். பெரிய பிராட்டி

யான மஹாலக்ஷ்மியோ என்னைப்போல் ஸ்வரூபத்தாலும் ஸ்வபாவத்தாலும் எங்கும் வ்யாபித்திருக்கிருள் என்கிற பகவத் வசநத் திலும் பிராட்டியின் விபுத்வம் ஸித்தம்.

முடிவுரை

ஆகையால் ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகளை நன்கு ஸேவித்தால் 'கஸ்சிதேக: ப்ரமாண வாந்' என்று சொல்லப்பட்ட பக்ஷம் ஐந்தா வது பக்ஷமே என்பது மிகத் தெளிவு. ஆழ்வார் 'நான்முகனே முக்கண்ணப்பா' என்றும், சிவனுய் அயனுய் என்றும் அருளிச் செய்கிருர். இங்கு ஸ்வரூபைக்யம் சொல்லப்படுகிறதா, சரீராத்ம பாவம் சொல் லப்படுகிறதா என்கிற விஷயங்கள் அவ ருடைய மற்ற வாக்யங்களைக் கொண் டல்லவா நிர்த்தாரணம் செய்யப்படுகின்றன. அம்மாதிரியே தேசிக ஸ்ரீஸூக்தியைக் கொண்டே 'கஸ்சிதேக : ப்ரமாணவாந்' என்கிற வாக்யத்தின் தாத்பர்யத்தை ஆராய்ந்தால் பிராட்டிக்கும் பகவானைப் போல் ஈச்வரத்வம், விபுத்வம், மோக்ஷ ப்ரதத்வம் முதலிய வம்சங்கள் உண்டு என்கிற பக்ஷமே ப்ராமாணிகம் என்பதுதான் தேசிகன் திருவுள்ளமென்பது ஸ்பஷ்டம். கஞ்சத்திருமங்கை உகக்க வந்தோன் வாழியே — பங்கஜவாஸிநியான பெரிய பிராட்டியார் உகக்க அவதரித்தவன் வாழியே.

ப்ரார்த்தனை :

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராய், கவிதார்க்கிக ஸிம்ஹமாய், ஸ்ரீபகவத் ராமானுஜஸித் தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமராய் எழுந் தருளியிருந்த நம் ஸ்ரீ தேசிகனுடைய திரு வுள்ளப்படி நாம் நடப்போம். பிறரை நாம் தூஷிக்க வேண்டாம். மற்ற ஆசார்யர்களை நிந்திக்க வேண்டாம். அது நம் ஸ்வரூபத் திற்குத் தகாது. தேசிகன் திருவுள்ளத் திற்கும் அது உகப்பாயிருது. பிறரும் இம் மாதிரியே தங்கள் ஆசார்யன் காட்டிய வழியைக் கடைப்பிடித்து நமது ஆசார்யர் களை தூஷிக்காமல் இருக்க வேண்டும். இம்மாதிரி இருந்தோமாகுல் எம்பெருமானுர் திருவுள்ளத்திற்கு மிகவும் உகப்பாக இருக் கும். நமது ஸம்ப்ரதாயமும் வளரும்.

அதிகரண ஸாராவளியும் ஸ்ரீ தேசிகனும்

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்,
சாஸ்த்ரரத்நாகர, ந்யாயவேதாந்த வித்வான்,
அத்தி, கிருஷ்ணமாச்சாரியார் ஸ்வாமி.
திருப்பதி.

ஜீவநம் ஜகதாம் ஜீயாத்
கிமப்யபகத ஸ்ப்ருஹம்
ஸ்வதந்த்ரம் ஸர்வதந்த்ரேஷு
வேங்கடேசாஹ்வயம் மஹ:

இன்புறும் இவ் விளையாட்டுடையானாகிய சீரிய: பதியின் ஸங்கல்பத்தினால் நிகழ்கின்ற இந்நில வுலகத்தில் "மதி விகற்பால் சமயங்கள் பல பலவாக்கி" என்று ஆழ்வார் அருளிச் செய்தபடி எண்ணிறந்த தர்சனங்கள் கிளர்ந்து கிடந்தாலும்" ஆரண வழிச் செவ்வை அழித்திடும் ஐதுகர்க்களுக்கு ஓர் வாரணமாய் வாதக் காதலிகள் மாய்த்த பிரான் ஏரணி கீர்த்தியிராமாநுச முனி" என்று புகழப் பெற்ற நம்மி ராமாநுசன் கை பிடித்துக் கொடுத்து நிலைநிறுத்திய ஸ்ரீவிசிஷ்டாத்வைத மதமொன்றே உலகனைத்தும் விளக்கு மணிவிளக்காய் விளங்குகிறதென்பதை இன்று நாம் விரித்துரைக்கத் தேவையில்லை.

ஆபாதசூடமநபாயியான இந்த தர்சனத்தில் எம்பெருமானாருக்குப் பிறகு தீபாத் உத்பந்ந ப்ரதீபம் போல மிக்க ஞான வெள்ளச் சுடர் விளக்காய் இவ்விருள் தருமா ஞாலத்திலே திருமலைமால் திருமணியாய் சிறக்கவந்த தூப்புல் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் "முன்னம் நோற்ற விதிகொலோ" முகில்வண்ணன் மாயங் கொலோ, என்று சங்கிக்க வேண்டாமே அகில ஸ்ரீ வைஷ்ணவ பாகதேயமாய் பல்லாண்டு பல்லாண்டு இவ் விபூதியில் எழுந்தருளியிருந்து அமுதப் பெருக்கான ஸ்ரீஸூக்தி நிகரங்களாலே அக் காலத்திய ஸாதுக்களை வாழ்வித்தருளியவளவிலே பர்யாப்தி பெறமாட்டாத பரமகிருபையாலே நிரவக்ரஹாநுக்ரஹ பரீவாஹ ரூபமான ஆயிரக் கணக்கான ப்ரபந்த ரத்னங்களை அருளிச் செய்திருப்பதைக் காண்கிறோம். அதில் ஓரொன்று தானே யமையாதோ வானேறப் போமளவும்.

அப்படிப்பட்ட க்ரந்த ரத்னங்களுக்குள் அதிகரண ஸாராவளி என்பது அற்புதமான மஹாக்ரந்த ரத்னமாகும். இதை ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் ஸ்ரீ ரங்கநாதன் நியமனத்தின் பேரில் அருளிச் செய்தபடி.

ஸ்ரீ பாஷ்யப்ரவசனத்தையே முக்கிய கைங்கர்யமாக சரீரபாதபர்யந்தம் அனுஷ்டிக்கும்படி ஸ்ரீ பாஷ்யகாரர் நியமித்ததாக ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயத்திலே தாமே ஸாதித்தபடி. "சரீர பாதாவதி சாரீரக சாஸ்த்ரார்த்த ப்ரவசநம் ஆத்ரியேதா:" என்று ஸங்கல்ப ஸூர்யோதய ஸ்ரீஸூக்தி. ஸ்ரீ பாஷ்யகாரர் நியமன ப்ரகாரம் ஸ்ரீ பாஷ்ய ப்ரவசனத்தைச் செய்து போருகையில் பரிசிதகஹநா ந: ப்ரஸ்நுவீத ப்ரஸாதம் என்கிறபடி ரஸபரீவாஹமாக அப்பொழுதப் பொழுது சில க்ரந்த ரத்னங்களையும் அருளிச் செய்யும் ரீதியில் பெருமாளரங்கநாதன் நியமனத்தினால் அருளிச் செய்தபடி.

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் திருவவதார எழுநூறுவது ஆண்டு விழாவை யனுஸரித்து அத்திரு நன்னாளில் வாசக மஹநீயர்களுக்கும் நமக்கும் நாகிஞ்சித் குர்வத: சேஷத்வம்

என்ற ரீதியின்படி சிறிது அனுபவிப்போமாக.

ஸாதாரணமாக காளிதாஸன் போன்ற மகா கவிகளின் காவியங்களிலே பரிசயம் பண்ண பண்ண ரஸவத்தான அனேக அம்சங்கள் தோன்றுகின்றன. சில பெரியோர்கள் ஸ்வாமி அருளிச் செய்த க்ரந்தங்களில் சில காலம் காடபரிசயம் பண்ணி சிலவர்த்த விசேஷங்களை வெளியிட்டுள்ளார்கள். ஆயினும் அன்னவர்களுக்கு ஸ்ரீ ஸ்வாமியின் திருவுள்ளம் தெரிந்தபாடில்லை. ஸர்வக்ஞர்களாயும் ஸ்ரீ ஸ்வாமியின் க்ரந்தங்களில் அநவரத பரிசயம் பண்ணின பெரியோர்களின் கதி இம்மாதிரியானால் அடியேன் போன்ற சிறிய ஞானத்தவர்களுக்கு என்ன சொல்லவோ எழுதவோ முடியும்! ஆயினும் ஸ்வாமியின் அனுக்ரஹத்தை பூரணமாக அவலம்பித்து கிஞ்சித் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ பாஷ்யகாரர் நியமந ப்ரகாரம் ஸ்ரீபாஷ்ய ப்ரவசனத்தையே நித்ய கைங்கர்யமாகக் கொண்ட ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்திற்கு உசாத் துணையாக அனேக க்ரந்தங்களை அருளியுள்ளார். ஆயினும் ஸ்ரீ பாஷ்யத்தோடு ஸாக்ஷாத் ஸம்பந்தப்பட்ட க்ரந்தங்கள் மூன்று. முதலாவது தத்வடீகை என்கிற மஹா க்ரந்தம். இது பூர்ணமாகக் கிடைக்கவில்லை. ஸ்ரீ பாஷ்யத்திற்கு வ்யாக்யானமாக அமைந்த ப்ரௌட க்ரந்தம். இது ஸ்ரீ பாஷ்ய ப்ரவசனத்தின் 28-வது ஆவ்ருத்தியின்போது அவதரித்தது. **அஷ்டா விம்சே ஜயத்வஜபட்டிகா** என்று ஸ்வாமியின் வாக்கே ப்ரமாணம்.

மற்றொன்று சததூஷணி. இது வாதக்ரந்தம். இதில் ஒவ்வொரு வாதக்ரந்தங்களின் கடைசியில் ஸ்ரீ பாஷ்ய ஸ்ரீ ஸூக்திகளை எடுத்து ஸமந்வ்யப் படுத்தியுள்ளார். இம் மஹாக்ரந்தம் தத்வடீகைக்கு ஸமீபகாலத்தில் அவதரித்தது. அதிகரண ஸாராவளிக்கு முந்தினது.

மூன்றாவது அதிகரண ஸாராவளி. இத்கிரந்தம் ஸ்ரக்த்தரா வ்ருத்தத்தினால் பத்ய ரூபமாக இயற்றப்பட்டது. இதுவும் ஸ்ரீபாஷ்ய ப்ரவசனத்தின் போதே அவதரித்து, எத்தனையாவ்ருத்தியான பிறகு என்பது மாத்திரம் சொல்ல முடியவில்லை. ஸங்கல்ப ஸூர்யோதயம் என்கிற நாடகம் ஸ்ரீ பாஷ்ய ப்ரவசனம் 30-வது தடவையின்போது அவதரித்தது என்று **த்ரிம்சத்வாரம் ச்ராவித சாரீரக சாஸ்த்ரார்த்த:** என்கிற ஸூக்தி வாயிலாக அறிகிறோம். ஸாரவாளி க்ரந்தமோ வென்னில் ஸ்ரீ பாஷ்யத்தில் உள்ள ஒவ்வொரு அதிகரணங்களின் ஸாரார்த்தங்களையும் ஊடே அறிய பெரிய சாஸ்த்ரார்த்தங்களைக் கொண்டு செய்யப்பட்டது என்று மாத்திரம் தெரிகிறது. அவதரித்த காலம் ஸ்பஷ்டமாகத் தெரியவில்லை. ஆயினும் அதிகரண ஸாராவளி முதல் ச்லோகத்தினால் ஒருவாறு அறிகிறோம்.

ஸ்வஸ்தி ஸ்ரீ ரங்கபர்த்து: கிமபி தததஹம்
சாஸநம் தத்ப்ரஸத்யை
ஸ்த்யைகாலம்பி பாஷ்யம் யதிபதி
கதிதம் சச்வதத்யாப்ய யுக்தாந்
விச்வஸ்மிந் நாமரூபாண்யநு
விஹிதவதா தேந தேவேந தததாம
வேதாந்தாசார்ய ஸம்க்ஞாம் அவஹித
பஹூவித் ஸார்த்தமந்வர்த்தயாமி

என்பது முதல் ச்லோகம்.

ஸ்வாமி தேசிகன் காஞ்சியில் ஸ்ரீ பாஷ்ய ப்ரவசனம் ஸச்சிஷ்யர்களுக்கு ஸாதிக்கும் அழகையும் ஆஸ்சர்யத்தையும் ஆனந்தித்து ஸ்ரீ ரங்கநாதன் ஸ்ரீரங்கத்தில் தன்னடியார்களுடன் அனுபவிக்கத் திருவுள்ளங்கொண்டு ஸ்வாமிக்கு விலக்ஷணமானதொரு சாஸநத்தை (நியமனத்தை) அனுப்பினான். ஸ்ரீநியமனம் என்னவென்றால் — ஸ்ரீபாஷ்ய ப்ரவசனத்தை இங்குள்ள ஸச்சிஷ்யர்களுக்கு தன் திருவோலக்கத்திலே சாதிக்கும்படி. இந்த நியமனத்தைதான் முதல் பாதம் கூறுகிறது. ஸ்வாமியும் அந்த பகவந்நியமனத்தை சிரஸா வஹித்து ஸத்யத்தையே அவலம்பித்ததான ஸ்ரீ பாஷ்யகாரர் பணித்த பாஷ்யத்தை சிஷ்யகுணபூர்த்தியுள்ள அனேக சிஷ்யர்களுக்கு அனேக ஆவ்ருத்தி சாதித்து பிறகு பகவந் நியமனத்தின்பேரில் இந்த அதிகரண ஸாராவளி க்ரந்தத்தை

அருளிச் செய்தார். சச்வத் அத்யாப்ய யுக்தாந் என்று சாதித்தபடியால் கணக்கு குறிப்பிடப்படவில்லை. இப்படி ஸ்ரீரங்க நாதன் தனது நியமனத்தின் பேரில் அனேக ஆவ்ருத்தி ஸ்ரீபாஷ்ய ப்ரவசனம் ஆச்சாரிய மாக நடந்து வருவதைக்கண்டு ஸந்தோஷம் மேலிட்டு ஸ்வாமிக்கு வேதாந்தாசார்யர் என்கிற பிருதத்தை அருளப் பாடிட்டு சேஷாபட புரஸ்ஸரம் அனுக்ரஹித்தருளினார். இந்த அம்சத்தைதான் கூறுகிறது. ''தத்ப்ரஸத்யை......... வேதாந்தாசார்ய ஸம்க்ஞாம் என்பது,

ஸ்ரீரங்கநாதன் அளித்த இந்த பிருதத்தை ஸஹிக்கமாட்டாத சில அஸூயாளுக்கள் ஸ்வாமியை வாதத்திற்கு அழைக்க, ஸ்வாமி யும் அவர்களைத் தினவடங்க வாதித்து ஜெயித்து இம்மஹாக்ரந்தத்தை அருளிச் செய்தார்.

இதை ஸ்வாமியே **அவஹித பஹுவித் ஸார்த்தம் அந்வர்த்தயாமி** என்று அருளிச் செய்தார். இங்கு வேதாந்தாசார்யஸம்க் ஞாம், அவ்ஹித பஹுவித் அந்வர்த்தயாமி என்பன உற்று நோக்கினுல் இவ்வர்த்தம் நன்கு தெரியவரும். ஸ்ரீ ஸ்வாமியோ ஸங்கேத பீதியற்றவர். ப்ரமாண சரணர். அப்படிப்பட்ட ஸ்வாமியின் வாக்கு என் பதையும் வாசக மஹநீயர்கள் திருவுள்ளத் தில் கொள்ளவேணும். **ஸத்யைகாலம்பி பாஷ்யம் யதிபதி கதிதம்** என்பதற்குப் பொருள் :—உலகத் தோற்றம் பொய் என்பர் சிலர். அதுவல்ல உலகத் தோற்றம் ஸத்யமே, என்று ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்தாபித் தருளினார். அப்படி ஸத்யத்தையே பேசுகிற பாஷ்யத்தை அத்யாபநம் செய்து வேதாந்தா சார்யகத்தை அந்வர்த்தமாக்குகிறேன் என்று மற்றொரு பொருள் த்வனிக்கிறது. நாலாம் பாதத்தில் உள்ள அந்வர்த்த பதத்தையும் **ஸத்யை காலம்பி பாஷ்யம்** என்கிறதையும் கூட்டி ஸேவித்தால் எம்பெருமான் **ஸத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்** என்கிறபடி ஒரு காலத்தில் (நரஸிம்ஹாவதாரத்தில்) ஹிரண்யகசிபுவுக்கு ப்ரஹ்லாதனிடம் நடந்த வாதத்தில் எம்பெருமான் எங்கு இருக்கிருன்! என்று ஹிரண்ய கசிபு கேட்ட கேள்விக்கு... ப்ரஹ்லாதன் ''எங்கும் உளன்'' தூணிலும் இருப்பர் துரும்பிலும் இருப்பார் என்று சொன்ன வார்த்தையையும் ஸத்யமாக்கு வதற்கு நரஸிம்ஹாவதாரம் எடுத்தார்.

ப்ருத்யன் சொன்ன வார்த்தையை ஸத்ய மாக்கினார். அப்பொழுது. இப்பொழுதோ வெனில் ஸத்ய சப்தவாச்யனை ஸ்ரீரங்க நாதன் சொன்ன வார்த்தையை ப்ருத்யனை ஸ்வாமி தேசிகன் ஸத்யமாக்கினார். (அந் வர்த்தயாமி) அங்கு ப்ருத்யன் வார்த்தையை பெருமாள் மெய்ப்பித்தருளினார், இங்கு பெருமாள் வார்த்தையை ப்ருத்யன் மெய்ப் பித்து அருளினன் என்று ரஸம் தோற்று கிறது.

இம்மாதிரியே **தத்ப்ரஸத்யை** என்கிற விடத்திலும் தத்பதம், தத் பாஷ்யம், ஸச யாஷ்க்ருத், ஸச ஹரி: என்கிற வர்த்தத்தை காட்டுகிறது என்பதும் ஒரு ரஸானுபவம்.

மற்றொரு விசேஷமும் இங்கு உற்று நோக் கத் தக்கது:—**ஸ்ரக்த்தரா வ்ருத்த** கடிதமான இந்த க்ரந்தம் பால் ஸமுத்திரம் போன்றது என்று தாமே **ஸ்ரக்தரா துக்த ராசி** ; என்று அருளிச் செய்தபடி. பித்தம் தலை தூக்கின வர்களுக்கு பித்தோபசமனத்திற்காக, பால் அருந்துவது வழக்கம். அதுபோல, மாயா வாதங்களால் கலங்கினர்வர்களுக்கு இந்த அதிகரண ஸாராவளி பித்த சாந்தியைப் போல் கலக்கத்தை சமிக்கும் என்று ரஸம். சாந்தபித்தை: சாந்தசித்தை: என்றும் பாடம் உண்டு. இது சாதாரணமாக எல்லா வித்வான் களும் சொல்லக் கூடியதே. ஸ்வாமியின் திரு வுள்ளம் இப்படி இருக்குமோ என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. **ஸ்ரக்** என்ருல் மாலை. **தரா:** என்ருல் தரிப்பவர்கள். மாலை தரிப்ப வர்கள் என்று பொருள் படுகிறது. ஆதி வாஹிக கணங்கள் நடுவில் **சதம் மாலா ஹஸ்தா : அப்ஸரஸ :** என்று உபநிஷத் கூறுகிறது. வேதம் தமிழ் செய்த மாறனும் ''மதிமுக மடந்தையர் ஏந்தினர்'' என்று தமிழ் செய்தார். அதை திருவுள்ளத்தில் கொண்டு ஸ்வாமி தேசிகனும் அதிகரண ஸாராவளி ப்ரம்ஹானுபவத்திற்கு இந்த ஸ்ரக் தரா வ்ருத்தருபமான ச்லோகங்களும் அப் ஸ்ரஸ்ஸுக்கள் போல் அனுபோக்தாக்களை (ச்லோகங்களைக் கண்ட பாடம் செய்யும் வித்வான்களை) எதிர் கொண்டழைக்கின்றன என்று. இப்படியே ஸூத்திரக் கணக்கு களையும், அதிகரண கணக்குகளையும் ஸாதிக்கும்போதும் **சுபாசீ:** என்றும், **சிந்மயீ** என்றும் அர்த்தபுஷ்டியுள்ள பதப்ர யோகங்களை வாசக மஹநீயர்கள் அனு பவிக்கும்படி ப்ரார்த்தித்து விஸ்தார பயத்தி னல் இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

———

ஸ்ரீமத் பரம-பரி: வேதாந்த ராமானுஜ ஸ்வாமி

(வழுத்தூர் ஸ்வாமி)

கோபால தேசிக பதாப்ஜ மதுவ்ரதஸ்ய
ப்ரக்ஞா விரக்தி கருணாம்ருத ஸத்குணப்தே :
வேதாந்த லக்ஷ்மண முநே : ச்ரித பாகதேயம்
பாதாரவிந்த யுகளம் சரணம் ப்ரபத்யே.

தேசிகனும் அவர் ஸ்ரீ ஸூக்திகளும்

ஸ்ரீ உபயவேதாந்தவித்வான்
கூத்தப்பாக்கம் கிருஷ்ணமாச்சாரியர் ஸ்வாமி,
ந்யாய சிரோமணி, வேதாந்த வித்வான். காஞ்சி

'யதிராஜேந நிபந்த நாயகச்ரீ :
மஹதீகுருபங்க்தி ஹாரயஷ்டி :'

என்று யதிராஜ ஸப்ததி. யதிராஜன் குரு பங்க்தியாகிற முக்தாஹாரத்திற்கு நடுநாயகக் கல்லாய்த் திகழ்வதாக அங்குள்ள ஸ்ரீ தேசிகனினனுஸந்தானம். ந்யாய பரிசுத்தியினு ரம்பத்தில்,

'பத்யுஸ்ஸம்யமிநாம் ப்ரணம்ய சரணௌ
தத்பாத கோடீரயோ ஸ்ஸம்பந்தேன
ஸமித்யமான விபவான்'

என்று எம்பெருமானுருடைய திருவடி ஸம்பந்தத்தால் (சிஷ்ய பரம்பரையி லடங்கின படியால்) பிற்பட்ட வாசார்யர்களும், திருமுடி ஸம்பந்தத்தால் (உபதேசகருடைய பரம்பரையிடலங்கின படியால்) முற்பட்ட வாசார்யர்களும் மேன்மை யடைந்துள்ள தாக எம்பெருமானுரைப் பற்றிய அங்குள்ள ஸ்ரீ தேசிகனினநுஸந்தானம். இதை அடியொற்றி இவ்வண்ணமே ஸ்ரீ தேசிகன் விஷயத்தில் நாமனுஸந்தித்தால் மிகையாகாது. 1. பூர்வர்களின் கிரந்தங்களில் வருங் கலக்கங்களை சமனஞ் செய்தும், நம்போலுள்ளார்க்கு உபஜீவ்யங்களான ஸாரதமார்த்தங்களைப் பொழிந்தும் பல கிரந்தங்களை அருளிச் செய்திருப்பதும், 2. பூர்வாசார்யாபிப்ரேதமான அர்த்த விசேஷங்களை தானனுஷ்டித்து உலகிற்கு ப்ரகாசப் படுத்தியிருப்பதுமே இதற்கு ஹேது. இப்படி மிகப் பெருமை வாய்ந்த ஸ்வாமி நமதாசார்யன். ஆசார்யர்களுள் நான்குதரத்தினருண்டு— 1. ப்ரவசனத்தாலேயே சிலர். 2. பிரபந்த முகத்தாலேயே சிலர். 3. அனுஷ்டான முகத்தாலேயே சிலர். 4. மேற் சொன்ன மூன்று வகைகளாலுஞ் சிலர் ஆசார்யர்களாகிருரென்று. இவைகளுள் நான்காம் பிரிவிலடங்கினவர் நமதாசார்யன்.

தேசிகன்

இவரையே 'தேசிக'னென்று ஏனையோரனைவரும் போற்றி வருகிரோம். காரணம்— இவருடைய தேசிகத்வம் விலக்ஷணமாயிருப்பதே. தேசிகனென்ற சொல்லுக்கு 'உபதேசிக்கிறவனென்று பொருள். லௌகிக கர்மங்களாக நம்மால் கருதப்படும் சௌசம், ஸ்நானம், திருமண்காப்பணித்தல், பொருள் ஸம்பாதனம், உண்ணுதல், உறங்குதல் முதலான க்ருத்யங்களையும், வைதிகங்களான பகவதாராதனம், வைச்வதேவம், பூணூல் நூற்பது முறுக்குவது ப்ரதிஷ்டை செய்வது போன்ற கர்மங்களையும் முறையோடு செய்வதற்காக ஸச்சரித்ர ரக்ஷை பாஞ்சராத்ரரக்ஷை, ஆஹார நியமம், பகவதாராதன ப்ரயோக காரிகை, வைச்வதேவ காரிகை, யஜ்ஞோப வீதப்ரதிஷ்டைபோன்ற பலக்ரந்தங்களை இயற்றி நமக்குபதேசம் செய்தருளுகிருர் ஸ்வாமி. மேலும் — **'ஸுபாஷித நீவி'** என்ற கிரந்தமியற்றி நமக்கழகாகப் பேசவும் கற்பிக்கிருர். இவ்வண்ணம் லௌகிகம் வைதிகமெல்லாவற்றிலும் 'உபதேசகரா' யிருப்பதால் நம் வேங்கடநாதன் 'தேசிக'னென்று போற்றப்படுகிருரென்று தேறுகிறது.

பிரபந்தங்களின் சிறப்பு

இவரியற்றிய நூல்கள் பல பல. அதன் பெருமைகளும் பல பல. பிரபந்தங்களுக்

கேற்றம் 1. இயற்றினவர், 2. நூல், 3. விஷயம், 4. ஸம்ப்ரதாயமிவைகளினேற்றத்தினுலென்று சான்ரேருரைப்பர். இந் நான்கின் சீர்மையை முறையே. 1. வக்த்ரு வைலக்ஷண்யம், 2. வசன வைலக்ஷண்யம், 3. விஷய வைலக்ஷண்யம், 4. ஸம்ப்ரதாய வைலக்ஷண்யமென்று சாத்திரஞர் கூறுவர். இந்நான்கும் ஸ்வாமியின் கிரந்தங்களுக்குண்டு. இதை அடைவே விளக்குகிரேும்.

வக்த்ருவைலக்ஷண்யம்

ஸ்வாமி திருவேங்கடமுடையானினவதாரம். இவ்வம்சம்—

'ரஹஸ்யத்ரயஸாரோயம்
வேங்கடேச விபஸ்சிதா'

என்ற ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தினிறுதி சுலோகத்தில் **'வேங்கடேச விபஸ்சிதா'** என்ற விடத்தில் ஸூசிதம்.

'ஸோச்நுதே.........
ப்ருஹ்ஹ்ணு விபஸ்சிதா'

என்ற சுருதியில் பரப்ரும்ஹத்தைச் சொல்லுமிடமான **'ப்ரும்ஹணு விபஸ்சிதா'** என்ற ப்ரயோகத்தை யனுசரித்து **'வேங்கடேச விபஸ்சிதா'** என்று பதப்ரயோகம் பண்ணியிருப்பதே காரணமென்று பெரியோர் பணிப்பர். மேல் தோற்றத்திற்கு 'வேங்கடநாதனென்கிற அபிஜ்ஞுனல் ரஹஸ்யத்ரயஸார க்ரந்தம்செய்யப்பட்டுள்ளதென்றுபொருளேற்படினும் உதாஹரித்த ஸ்ரீஸூக்தியினும் பொருள் — தன்னவதார ரஹஸ்யத்தை யுணர்த்துவதே.

இவ்வம்சம் ஸ்வாமியின் மற்ரேர் கிரந்தத்தாலும் சிலாலிகிதமாய்த் தேறும். விளக்குகிரேும் கேண்மின் — தத்வமுக்தாகலாப மென்ரெரு கிரந்தமுண்டு. அது ஸ்வாமியின் கிருதிகளிலொன்று. அதில்—

'இத்தம் ஸ்ரீவேங்கடேச: ச்ருதமமத
ஜகந்மூலநந்தம் முகுந்தம்'

என்று தொடக்கமுள்ள சுலோக மொன்றுண்டு. அதற்கு தாமே வ்யாக்யானமிடுகிருர் ஸ்வாமி. அவ்வ்யாக்யாநத்திற்கு 'ஸர்வார்த்த ஸித்தி' என்று நாமகரணம். அதில் ப்ரகிருத சுலோகத்திற்கு வ்யாக்யானமிடுகையில் 'இவ்வாருக செய்யப்பட்ட தத்வமுக்தாகலாப க்ரந்தத்திற்கு, வக்த்ரு வைலக்ஷண்யத்தையும், ஸம்ப்ரதாய வைலக்ஷண்யத்தையும், விஷய வைலக்ஷண்யத்தையும் **'இத்தம் ஸ்ரீவேங்கடேச:'** என்கிற சுலோகத்தில் சொல்கிரேும், என்றவதாரிகையிட்டு, மேல் **'ஸ்ரீவேங்கடேச இதி வக்த்ரு வைலக்ஷண்யம்'** என்ரேர் பங்க்தி படிதமாயுள்ளது. இச்சுலோகத்தில் ஸ்ரீ வேங்கடேச: என்ற பதத்தால் கிரந்தகர்த்தாவின் வைலக்ஷண்யம் அதாவது தனிச் சிறப்பு பேசப்பட்டதென்று இதன் பொருள். தேசிகன் திருவேங்கட முடையானினவதாரம் என்றிசைந்தால்தான் இப்பங்க்தி சாலப் பொருந்தும். அதாவது கிரந்தகர்த்தாவான தேசிகனுக்கேற்றம் சொன்னதாகும். வேங்கடேசன் என்ற நான் செய்தது என்று கூறிக் கொள்வதாக பொருளுரைப்பதில் பலனில்லை. சுவையில்லை. விவக்ஷித சித்தியில்லை என்பது வசன சைலியறிந்தோர்க்கு கண்கூடு.

இவ்வர்த்தத்தையே திருடீகரணம் செய்கிறது — 'அன்றிவ் வுலகினையாக்கியரும் பொருள் நூல்விரித்து, நின்று தன்னீள் புகழ் வேங்கட மாமலை மேவிப் பின்னும், வென்றிப் புகழ் திருவேங்கடநாதனெனுங் குருவாய், நின்று நிகழ்ந்து மண்மேனின்ற நோய்கள் தவிர்த்தனனே.' என்ற பிள்ளையந்தாதிப் பாசுரம்.

வசன வைலக்ஷண்யம்

ஸங்கல்ப ஸூர்யோதயத்தில்

மனுவ்யாஸ ப்ராசேதஸ
பரிஷதர்ஹா க்வசிதியம்
ஸுதா ஸிக்தா ஸூக்திஸ் ஸ்வய
முதய மன்விச்சதி ஜனே |
நிருந்த்யு : கே?'

என்று ஒரு பத்யமுள்ளது. அதில் தம் ஸூக்தியை **'ஸுதாஸிக்தா'** (அமிருதத்தில் ஊறினது) என தாமே சாதித்திருப்பதால் சொல்

மாதுர்யம் வ்யக்தம். மேலும்—ஆசார்ய கிருத்யாதிகாரத்தி னிறுதியில், அப்புள்ளாரடியேனைக் கிளியைப் பழக்குவிக்குமாப் போலே பழக்குவிக்க... பேசுவித்தபாசுரங்கள்' என்ற ஸூக்தியில் கிளி திருஷ்டாந்தத்தாலும், 'பாசுரங்கள்' என்று தம்பாஷணங்களைப் பேசியிருப்பதாலும், தம்பாஷணம் சுக(கிளி) பாஷணம் போல் போக்யமென சித்திப்பதால் வசன வைலக்ஷண்யம் நிரூபிதமாயிற்று.

விஷய வைலக்ஷண்யம்

'தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்ததெல்லாம் ஸாதிக்கலாயிருக்கச் செய்தேயிறே நாம் ப்ரமாண சரணராய்ப் போருவது' என்று இவரால் பெரிய ரஹஸ்யத்தில் தத்வத்ரய சிந்தநாதிகாரத்தில் வசனிக்கப்பட்டுள்ளதால், இவரால் பரிக்ருஹீதார்த்தங்கள் ப்ரமாண சித்தங்கள். தாந்தோனின படி லபித்தன வன்று எனத் தேறுவதால் விஷய வைலக்ஷண்யமும் நிர்விவாதம்.

ஸம்ப்ரதாய வைலக்ஷண்யம்

ஆசார்யக்ருத்யத்தில் — 'வேதாந்தோதயன ஸம்ப்ரதாயமான மடப்பள்ளி வார்த்தையை ஆசார்யன் பக்கலிலே தாங்கேட்டருளினபடியே கிடாம்பி அப்புள்ளார் அடியேனை கிளியைப் பழக்குவிக்குமாப் போலே பழக்குவிக்க அவர் திருவுள்ளத்திலிரக்கமடியாக பெருமாள் தெளியப் பிரகாசிப்பித்து மறவாமல் காத்துப் பிழையறப் பேசுவித்த பாசுரங்கள்' என்று ஸ்வாமியின் பணிப்பு. இங்கு 'வேதாந்தோதயன' ரெனப்பட்டவர் கிடாம்பி ஆச்சான். அவருக்கே மாறு பெயர் 'மடப் பள்ளியாச்சா'னென்பது. இம் முழுப் பெயரே 'மடப்பள்ளி' என்ற ஏகதேசத்தாலிங்கு உணர்த்தப் படுகிறது. கிடாம்பியாச்சானுக்கு, ஸ்ரீபாஷ்யகாரர் திருமேனியிலிருக்கும் பரிவைக் கண்டருளி, திருக்கோட்டியூர் நம்பி, பெரிய நம்பியிவர்களால் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு மாதுகரம் சமர்ப்பிக்கும் கைங்கர்யத்தில் நியமிக்கப்பட்டிருந்த படியால் 'மடப்பள்ளியாச்சா'னென்ற திருநாமமேற்பட்டதிவருக்கு. இதனாலிவருக்கிருக்கும் ஆசார்ய பக்தியும், ஆசார்ய கைங்கர்ய நிஷ்டையும், அந்தரங்கரா யிருந்தமையினால் ஸாம்ப்ரதாயிக ரஹஸ்யார்த்தோபதேசங்களுக்கு தகுந்த பாத்ரமானமையும் த்யோதிதம். ஆகையால் மடப்பள்ளி ஸம்ப்ரதாயம் ஸ்ரீபாஷ்யகாரருக்கு மிகவும் திருவுள்ளமுகந்த ஸம்ப்ரதாயமெனத் தேறும். அச்சம்ப்ரதாயமே தமக்குப் ப்ராப்தமானபடி பேசப்பட்டிருப்பதால் ஸம்ப்ரதாய வைலக்ஷண்யமும் ப்ரதிஷ்டிதம்.

இப்படியாக ஸ்வாமி ப்ரபந்தங்களுக்கு வைலக்ஷண்ய சதுஷ்டயமும் சித்தமாயிற்று.

ப்ரபந்தாவதாரப்ரயோஜனம்

'உபகாரஸங்க்ரஹ'மென்ற ப்ரபந்தத்தின் உபாந்த்யத்தில்

'அயமப்யபரோ மஹோபகார:
கலிதோஷாவிலசேதஸாம் நராணாம்
கருணாஜலதிர் யதேஷ தேவ:
ப்ரதயாமாஸமயா நிஜோபகாரான் ||'

என்று ஒரு சுலோகமுள்ளது. 'மோஹனார்த்தமாகயிராமல், லோகோஜ்ஜீவநார்த்தமாகவே தம்மைக் கொண்டு, ஈச்வரன் தான் செய்யுமுபகாரங்களை ப்ரபந்த முகமாக வெளியிட்டிருக்கிறான். உலகத்திற்கு ஈச்வரன் செய்யும் மஹோபகாரங்களில் இதுவும் (தம்மைக் கொண்டு ப்ரபந்த முகமாக வெளியிட்டிருப்பதும்) ஒன்று என்றிச்சுலோகத்தின் தாத்பர்யம். இதனாலிவருடைய ப்ரபந்தாவதார ப்ரயோஜனம் லோகோஜ்ஜீவனமே என்று ஊர்ஜிதமாயிற்று.

ஓரொன்றே யமையும்

'ஏகம் தத் ஸர்வஸித்யை
கலயத ஹ்ருதயே
தத்வ முக்தாகலாபம்'

என்று ஸ்வாமியின் தத்வமுக்தாகலாபத்திலுள்ளதோர் ஸூக்தி. தத்வமுக்தாகலாபம் = தத்வமுக்தாகலாபமென்ற, ஏகம் = ஒரு கிரந்தத்தை, ஹ்ருதயே கலயத = ஹ்ருதயத்தில் நிறுத்திக் கொள்ளுங்கள். தத் = அவ்வோர் கிரந்தமே ஸர்வஸித்யை = ஸகலத்தையும் சாதித்துத்தரவல்லது. அதாவது வாதிகளை வெல்லவும் பயன்படும், புருஷார்த்தத்தைப் பெறவும் பயன்படுமென்றிதன் பதவுரை. இதனால் ஸ்வாமியின் பிரபந்தங்களில்

ஓரொன்றேயமையும் வாழ்ச்சிக்கென சித்தாந்திதம்.

இங்கில்லாததெங்குமில்லை

'யந்நாஸ்மின் க்வாபி நைதத்'

என்று முன் சொன்ன தத்வமுக்தாகலாபத்தின் ஓர் கண்டம். அஸ்மின் = இந்த ப்ரபந்தத்தில் யத் = எந்த அம்சம். ந = விசாரிக்கப்படவில்லையோ. ஏதத் = இவ்வம்சம், க்வாபி = பிற சமயக்கிரந்தங்களிலெதிலும், ந = விசாரிக்கப்படவில்லை என்றிதன் பதார்த்தம். இதனால் இங்கில்லாததெங்குமில்லை என தெளிவாகும்.

தெளியாதாரென்றுந் தெளியார்

'ஏவமபி யெ முஹ்யந்தி
தேமுஹ்யந்த்யேவ |
நகலு ஸஹஸ்ரைரபி
ஸலிலகும்பைர் பலிபுஜ :
ப்ரக்ஷால்யமாநா
வலர்க்ஷதாம் ப்ரதிபத்யந்தே'.

என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்திலோர் வாக்யம். இதன் கருத்து — ப்ரமாணங்களுக்கு பாதம் வாராமற்படி நாம் தத்வ நிரூபணம் பண்ணியிருக்கச் செய்தேயும் தத்வ நிஷ்கர்ஷங்கொள்ளாமல் [மோஹித் தானே யாகில் அவ்வதிகாரி என்றென்றைக்கும் மோஹித்திருக்க வேண்டியவனே. குடங்குடமாய் நீர் வார்த்து, தேய்த்து குளிக்கச் செய்திட்டாலும் கருமை நீங்கி வெண்மையடையுமோ வாயஸம்? (காக்கை).

அதன் நிஜஸ்வபாவம் போகாதல்லவா? என்பதே. இதனால் தெளியாதாரென்றுந் தெளியார் என்று நிராபாதசித்தம்.

பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே

'நிச்சேஷாம் வஸ்துவ்ருத்திம் நிபுணமிஹ
மயா ந்யஸ்யதா க்வாபி கோணே
யத்ரோதாஸி த்விதாவா ஸமகணி
கஹநே ஸம்மதே ஸன்மதீநாம்
நிஷ்க்ரஷ்டும் கஸ்சிதன்ய : ப்ரபுரிஹ
பகவல்லக்ஷ்மணாசார்ய முத்ரா
மக்ஷுத்ராசார்யசிக்ஷா சதகுணித
மதேரப்ரமத்தாந் ந மத்த :॥

என்று தத்வ முக்தாகலாபத்தில் கர்ஜனம் செய்கிறார் நம் தார்க்கிக சிங்கம். இதன்—பொருள் — இக்கிரந்தத்தில் வஸ்துக்களின் தாத்விக ஸ்திதியை மிகவும் அவதானத்துடன் ஸ்தாபித்துள்ளேன். தேவையில்லாத விஷயத்தில் நிர்த்தாரணம் செய்யாமலும் விட்டிருக்கிறேன். ப்ராஜ்ஞர்களுக்கும் அபிப்ராய பேதமுள்ள ஸூக்ஷ்மமான விஷயத்தில் இப்படி சில ப்ராஜ்ஞருரைப்பர். வேறுவிதமாக சில அபிஜ்ஞரறுதியிடுவ'ரென்று மத பேதங்களை மட்டுங் காண்பித்து அத்துடன் நின்றுவிட்டு மிருக்கிறேன். இந்த இடங்களில் என்னால் நிரூபிக்கப்பட்டவண்ணமே வஸ்துக்களைக் கொள்ளவேணும். வேறு வழியில் செல்லலாகாது. ஏனெனில்— ஸ்ரீபாஷ்யகாரரமைத்துள்ள சித்தாந்த தளங்களினடையாளங்களைப் புரிந்து கொள்ள என்னதளவு திறமை யாருக்குண்டு? ஸதாசார்யசிக்ஷையால் ஞானத்தை நூறு மடங்காக பெருக்கிக் கொண்டவனல்லவோ யான்? என்பதே. இதனால் பேசியிருப்பனகள் போர்க்கவும் பேராவே என்று தீரும்.

மாத்ஸர்யமுள்ளோரும் விஸ்மிதராவர்

மௌனம் பிப்ரது மத்ஸரேண நமிதாஸ்
தூர்ணம் த ஏவ த்ருவம்
காலோத்நித்ர கதம்பகோலவபுஷ :
கம்பஸ்புரன் மௌலய :
கிஞ்சித் வ்ரீடித குஞ்சிதாக்ஷமவசாத்
உத்தாந தத்தாநநா :
ப்ரஸ்தோஷ்யந்த்யவதிம் ப்ரயோக
பதவீ ஸாரஸ்ய ஸாரஸ்ய ந :॥

என்று ஸங்கல்பசூர்யோதய சுலோகம். இதனர்த்தமிதோ — நம் விஷயத்தில் அஸூயை நிறம்பினவர்கள் இந்நாடகத்தை ரஸிக்க விரும்பார்கள். கண்ணெடுத்துப் பார்க்கவுமிசையார்கள். வாய்திறந்து ஓர் சொல் உதிர்க்கவும் மாட்டனர். இவ்வதிகாரிகளே சில விநாடிகளில் இந்நாடகத்தின் அற்புத ப்ரயோக விசேஷத்தால் புளகாங்கிதராகி சிர:கம்பனம் பண்ணி இந்நாடகத்தையே ரஸிக்கத் தொடங்குவார்.

மேலுமிதிலிழிய இழிய இந்நாடக ப்ரயோகத்தின் போக்யதையால் தன் வசமற்று இதையும் நம் தீய குணத்தால் உதாசீனம் செய்தோமே! என்ற அனுதாபத்துடன் லஜ்ஜிதர்களாய் ஓரக் கண்ணால் தலையை நிமிர்ந்து பார்க்கவும் செய்வர்கள். பின்னும் சிறிது க்ஷணத்தில் நம்நாடக ப்ரயோகத்தின் ஸரளமான ஸரணியினுடைய ரஸத்தை மிகவும் சிலாக்கிக்கவும் தொடங்குவார்கள். இது ஸத்யம். பாம்புக் குடத்தில் கையிட்டுஞ் சொல்லுவோம் என்பது. இதனால் மாத்ஸர்யமுள்ளோரும் விஸ்மிதராவர் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

இப்படி மிகப் பெருமை வாய்ந்த நமதாசார்ய மணியான தூப்புல் மணி விஷயத்தில் 'போற்றியுகப்பது' என்ற முறையில் கிஞ்சித்கரித்து நாம் கிருதார்த்தர்களாவோமாக.

தொண்டுப் பெயர் - (ஸேவாஹ்வாநம்)

ஸ்ரீமதுபயவே, அஹோபிலமடம்,
ஆஸ்த்தான வித்வான்
வில்லிவலம் கிருஷ்ணமாச்சாரியர் ஸ்வாமி,
வித்வந்மணி, ந்யாயவேதாந்த தமிழ் வித்வான்

உலகில் பலருக்குப் பற்பல காரணங்களால் பல பல பெயர்கள் வழங்கப்படுகின்றன. க்ராமம், குலம், ஜாதி, செல்வம், கல்வி இவைகளையிட்டு அப்பெயர்கள் பிறக்கின்றன. இப்படிப்பட்ட பெயர்கள் யாவற்றையும் விட, ஸேவை (தொண்டு) காரணமாக வழங்கப்படும் பெயரே மிகச் சிறந்ததாகும். நாட்டுக்கும், பொது மக்களுக்கும் செய்யும் ஸேவையினால் சிலர் சிறப்புப் பெயர் பெறுவதும், அதைப் பலர் கொண்டாடுவதும் இன்றைய உலகில் கண்கூடு.

இதைவிட மிகச் சிறந்தது எம்பெருமான் திறத்தில் ஸேவை செய்து பெறும் பெயரே யாகும். பகவத் விஷயத்தில் தொண்டாற்றி, அதையே தனக்கு நிரூபகமாகப் பெயராகக் கொள்வதே மிகுந்த ச்ரேயஸ்ஸைத் தருவதாகும். அழகைத் தரும் ஆபரணமும்கூட இதுவேயாகும். எம்பெருமானுக்கு ஸேவை செய்யாது இருக்குமவர்களை நிந்திக்குமிடத்தில், தொண்டரடிப் பொடியாழ்வார் "...தண்துழாய் மாலைமார்பன் தமர்களாய்ப் பாடியாடி தொண்டு பூண்டு அமுதமுண்ணாத் தொழும்பர் சோறுகக்கு மாறே" (எம்பெருமானுக்கு பக்தராய் அவன் திருக்கல்யாண குணங்களைப் பாடி ஆடி, அவனுக்கு அடிமை பூண்டு ஆராதவமுதமான அவனை அனுபவியாத பாமரர்கள் சோறுகப்பது என்னே!) என்று வியந்து அருளிச் செய்கிறார் திருமாலையில்.

இதில் "ஆபரணம் போல் தொண்டும் பூணத்தக்கது என்ற அர்த்த விசேஷத்தை "தொண்டு பூண்டு" என்ற சொற்களால் அருளிச் செய்கிறார் ஆழ்வார். இந்த அர்த்த விசேஷத்தை இவ்விடத்து உரையாசிரியர்களான நம்பூர்வர்கள் மேலும் சிறப்பித்து விவரிக்கின்றனர்.

நமக்கு ஆபரணங்களுள் சிறந்த ஆபரணம் இது என்கின்றன. 'நம்பெருமாள் (ஸ்ரீரங்கநாதன்' உகக்கும் உத்தமாபரணம் போன்றது' இது என்கின்றனர். "அவன் நெஞ்சில் (மார்பில்) கிடந்து விளங்கும் விலையிலா ஆபரணம் போல, இவன் நெஞ்சில் (உள்ளத்தில்) நின்று பொலியும் பேராபரணம் இது" என்கின்றனர்; "நம்பெருமாளுக்குச் சேர சுந்தர பாண்டியன் தம்பிரான் பதக்கம் போல இவனுக்கு தாஸ்யமாகிற ஆபரணம். அவனுக்கும் அது நெஞ்சிலே கிடப்பதொன்று; இவனுக்கும் இது நெஞ்சிலே கிடப்பதொன்றிறே" இதுதான் பூர்வர்களின் அருளுரை. "பல ஆபரணங்கள் இருக்கச் செய்தேயும் சேரசுந்தர பாண்டியன் தம்பிரான் ஸமர்ப்பித்த பதக்கத்தையே, நம்பெருமாள் விரும்பி நாள்தோறும் சாற்றிக்கொண்டு நிற்பர். அதுபோல் ஜீவனுக்குக் கர்மம் அடியாகப் பல பெயர்களிருப்பினும் ஸேவை (தொண்டு) காரணமாக வரும் பெயரே கொள்ளத் தக்கது" என்ற சாஸ்த்ரார்த்தத்தை வலியுறுத்தினராகிறார் ஆழ்வார். இவ்வாழ்வாரை அடியொற்றியே ஸ்வாமி ஸ்ரீ தேசிகனும் "தோளாத மாமணிக்குத் தொண்டு பூண்டு" என்று அடிமையைப் பூணத்தக்கதாகவே அருளிச் செய்கிறார்.

துளையிட்ட மணி பூணத் தக்கது. தோளாத—துளையிடப்படாத (மணிவண்ணனின்) மாமணியின் தொண்டே பூணத் தக்கது" என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

ஸேவை காரணமாக வரும் பெயரே சிறந்தது—கொள்ளத் தக்கது என்ற விஷயத்தை ஆதிசேஷன் விஷயத்தைக் கொண்டு விவரித்துக் காட்டுகிறார் கூரத்தாழ்வான். ஆதிசேஷனுக்கு "அனந்தன், நாகராஜன்"

என்றிப்படிப் பல பெயர்கள் உள்ளன. ஆனால் அவையனைத்தையும் அவன் விரும்ப வில்லையாம். பின்னை அவன் விரும்பிய பெயர் யாது? "சேஷன்" என்பதே அவன் விரும்பிய பெயராகும். காரணம்? இந்தப் பெயர் ஒன்றே (பகவத் விஷயத்தில்; செய்யும்) அடிமை காரணமாக உண்டான மைதான்.

(சேஷ ஏஷ இதி சேஷதாக்ருதே: ப்ரீதிமாந் அஹிபதி: ஸ்வநாமதி) என்று ஸுந்தர பாஹுஸ்தவத்தில் அருளிச் செய்துள்ளார் ஆழ்வான்.

இவ்வாறே ஸ்வாமி ஸ்ரீதேசிகனும் ஸேவை காரணமாக வரும் பெயரை விரும்புகிறார். ஆனால் எம்பெருமான் திறத்திலன்று; அந்த எம்பெருமான் திருவடிகளை இறையும் பிரிய கில்லாத ஸ்ரீபாதுகைகளின் திறத்தில்தான் தொண்டு செய்து அதன் காரணமாக வரும் பெரும் பெயரை விரும்புகிறார். ஸ்வாமி ஸ்ரீ தேசிகனுடைய இந்த விருப்பம் ஸ்வாமி ஸ்ரீஸூக்தியினாலேயே அறியக் கிடக்கிறது; ஸ்ரீபாதுகாஸஹஸ்ரத்தில் தம் திருவுள்ளத்தில் ஓடும் மனோரதத்தை வெளியிடுகிறார் ஸ்வாமி. பெரும்பாலும் மக்கள் மரிக்கும்போது கடுஞ்சொலார், கடியார், காலனார்தமர்கள் பெருங் கூச்சலிட்டுக் கொண்டு நலியவருவர். அத்தகைய கோரமான கோஷத்தை (கூச்சலை) நான் கேளாதொழிய வேண்டும். (ப்ரபந்நாக்ரேஸரரான ஸ்வாமி விஷயத்தில் இவ்வாறு ஒருபோதும் நேராது. ஆகையால் எடுத்துக் கழிக்க வேண்டிய தேவையே இல்லை; ஆயினும் உலகில் பெரும்பான்மை பற்றி இங்ஙனம் ஸாதித்தபடி.) இதற்கு மாறாக அச்சமயத்தில் ஸர்வேந்த்ரியங்களை யும் மகிழ்விக்க வல்லதொரு வார்த்தையை ஒரு தரமாயினும் கேட்கப் பெறுவேனாக. இப்பொழுதே கேட்கப் பெறுதொழியினும் இறக்கும் பொழுதே கேட்கப் பெறினும் அமையும். தொண்டரல்லாத கண்டார் வாயிலாக அவ்வார்த்தையை நான் கேட்க விரும்பவில்லை. ஸ்ரீரங்கநாதரின் திருத் தொண்டர்கள் வாயிலாகவே கேட்கப் பெற வேண்டும். தொண்டர்களுள்ளும் வெளியே நின்று ஏவல் செய்யும் தொண்டர்கள் வாயி லாகவன்று நான் கேட்க விரும்புவது. உன் திருவடிகளை மலர்களின் கீழே நீக்கமின்றி நின்றுகொண்டு அணுக்கராய்—அந்தரங்க ராய் இருக்கும் அடியவர்கள் வாயிலாகவே கேட்க விரும்புகிறேன். அப்பப்ப! எத்தனை நிபந்தனைகள். தான் கேட்க விரும்புவது எது? என்பதையும் சுட்டியருளுகிறார். "பாதுகாஸேவகேதி" "பாதுகாஸேவகன்" (பாதுகையின் தொண்டன்) என்ற பிருதத் தையே கேட்கவேண்டும் என்று அவாவுறு கிறார். அவாவற்ற நிகமாந்த குரு. ஸ்வாமி ஸ்ரீ தேசிகனுக்கு திவ்யதம்பதிகள் அருளிய பிருதங்களோ பல உள. அவையெல்லாம் ஒருபுறமிருக்க ஸ்வாமி விரும்பிய பிருதம் இதுவே.

பகவச்சேஷத்வத்தை (பகவான்திறத்தில் செய்யும் அடிமைத் தொழிலைவிட, பாகவத சேஷத்வமே (அவனடியார் திறத்தில் செய் யும் அடிமைத் தொழிலே) சிறந்தது என் பதைத்தான் இப்படித் திறம்பட அருளிச் செய்தார் ஸ்வாமி தேசிகன். பாகவதர்கள் ஸ்தாநத்தில் பாதுகைகளைக் கொள்ள வேண்டும்.

அன்று — காணிக்கைப் பொருள்களின் தொகை கொண்டு ஸ்ரீ பாதுகைகளுக்குத் தொண்டு செய்தான் பரதன். இன்று சொல்லின் தொகை கொண்டு ஸ்ரீ பாதுகை யின் விஷயத்தில் தொண்டாற்றினர் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன்.

ஒன்றையும் விரும்பாத வேதாந்த வாசிரி யர் விரும்பிய இந்த பிருதத்தையே இவ் வழித் தோன்றிய ஸ்ரீவைஷ்ணவாசார்ய ச்ரேஷ்டர்களும் பூண்டு பாதுகாஸேவகர் களாகத் திகழ்கின்றனர்.

ஆயிரம் இன் கவிகள் பாடி ஸ்ரீ பாதுகை களுக்குத் தொண்டு செய்த ஸ்வாமி ஸ்ரீ தேசி கன் அவதரித்து எழுநூறு ஆண்டுகள் நிறைவுபெறும் இந்நாளில் ஸ்வாமியின் திருவுள்ளம் உள் குளிர

(பாதுகாஸேவகோ விஜயதாம்) என்று ஜய கோஷமிட்டு நாமும் நிறம் பெறுவோமாக.

ஸ்ரீபாதுகாஸஹஸ்ரத்தில் கீழே விவரித்த ஸ்வாமியின் திருவுள்ளத்தைத் தெள்ளெனக் காட்டும் ச்லோகரத்னமிதுவே!

காலே ஜந்தூந் கலுஷகரணே க்ஷிப்ரமாகர்ஷயந்த்யா:
கோரம் நாஹம் யமபரிஷதோ கோஷமாகர்ணயேயம் |
ஸ்ரீமத்ரங்கேச்வரசரணயோ: அந்தரங்கை: ப்ரயுக்தம்
ஸேவாஹ்வாநம் ஸக்ருதபி ச்ருணுயாம் பாதுகாஸேவகேதி.

மீமாம்ஸாமாம்ஸலாத்மா

ஸ்ரீ மதுபயவேதாந்த வித்வான்
கிடாம்பி ரங்கராஜாசாரியர் ஸ்வாமி,
மீமாம்ஸாசிரோமணி, விசாரத -
வேதாந்த வித்வான்.

ஸ்வாமி தேசிகன் ஸங்கல்ப சூரியோதய மென்கிற நாடக க்ரந்தத்தின் குரு சிஷ்ய ஸம்வாதப்ரகணத்தில் பர்யாப்தம் பர்யசைஷம், குரு சரணகதாமாக்ஷபாதம் சிசிக்ஷே, மீமாம்ஸா மாம்ஸலாத்மா ஸமஜநிஷி, முஹுஸ் ஸாங்க்ய யோகௌ சிசிக்ஷம், என்று சிஷ்ய வேஷம் பூண்ட தன்னை மீமாம்ஸையால் பரிபூர்ணமான சரீரமுடையவ ரென்று நிர்த்தேசிக்கிருர். அதிகரண ஸாராவளியில் மீமாம்ஸாயா: கபந்தமென்று ஆரம்பித்து இரண்டு விதமான மீமாம்ஸகர் களைக் காட்டினுர். அவர்களில் பூர்வ மீமாம்ஸகர்கள் கர்ம காண்டத்தை ப்ரதானமாக வைத்து கர்மங்களே பலனைக் கொடுக்கக் கூடியவைகள், ப்ரும்ஹபாகம் கர்மம் செய்கிற வனை துதிக்கிறது. தனியே ஒரு புருஷனைச் சொல்வதில் அதற்கு நோக்கமில்லையாகை யால் வாச்யார்த்தத்தில் தாத்பர்யமிழந்த உபநிஷத் பாகம் ஏகதேசமும் எடுத்துக் கொள்ளத் தக்கதல்ல வென்கிருர்கள். அப்பொழுது சிரோபாகமற்ற பூர்வ பாகம் கபந்தமாக நின்றதாகையால் அவர்களை கபந்த மீமாம்ஸகர்களென்றும், அத்வைதிகள் உத்தரபாகமான உபநிஷத்து நிர்குண ப்ரும்மத்தைச் சொல்கிறது. ஸகுணப்ரதிபாதகமான பூர்வபாகம் அதற்கு ஒருவிதமான பூர்வபாகம் அதற்கு ஒரு விதத்திலும் உபகாரகமாகாது. பின்னையோ நேர்விரோதமானபடியால் ப்ரயோஜநமற்ற பூர்வபாகம் ஏகதேசமும் எடுத்துக்கொள்ளத் தக்கதல்ல வென்கிருர்கள். அப்பொழுது கபந்தத்தைத் தள்ளி சிரஸை மாத்திரம் பரிக்ரஹித்தபடியால் அவர்களை ராகு மீமாம்ஸகர்களென்றும் வ்யவஹரித்திருக்கிருர். ஸ்ரீ பாஷ்யகாரர் இரண்டு பக்ஷத்தையும் நிராகரித்து வேதார்த்த ஸங்கிரஹம் என்கிற க்ரந்தத்தில் பூர்வோத்தர பாகமிரண்டும் ஸர்வகர்ம ராத்யனும் ஸர்வசரீரகனுமானபகவானைத் தான் ப்ரதிபாதிக்கிறது. அதில் பூர்வ பாகம் பகவதாராதனமான யாகங்களையும், உத்தர பாகம் ஆராத்ய தேவதையான நாராயணனையும் ப்ரதிபாதிக்கிறபடியால் இரண்டிற்கும் முரண்பாடில்லாமல் ஒரே அர்த்தத்தைச் சொல்வதில்தான் நோக்கம் என்பதை பல ப்ரமாணங்களைக் கொண்டு விசதமாக நிரூபித்திருக்கிருர். வேதார்த்த ஸங்கிரஹமென்ற பெயரே இரண்டின் ஒற்றுமையை காட்டுகிறது.

கபந்தமும் சிரஸும் சேர்ந்தே ஒரு உடலாகிறதுபோல் இரண்டு பாகமும் ஒன்று சேர்ந்தே ஸர்வசரீரியான பரப்ரும்மத்தை ப்ரதி பாதிக்கிறதென்று தனதுஸித்தாந்தத்தை ஸ்த்தாபித்தார். அதை யனுஸரித்தே ஸ்வாமி தேசிகன் மீமாம்ஸாமஹ்யநந்தம் வ்யவஹிதவபுஷம் கஞ்சுகை ருஜ்ஜிதஞ்ச, என்று உபய மீமாம்ஸைகளும் ஒன்றுக் கொன்று முரண்படாமல் உபகரித்துக் கொண்டிருப்பதையும், வ்யாக்யாதாக்களின் கொள்கை ஸூத்ரகாரஹ்ருதய விருத்த மென்றும் ஸாண்பித்து மீமாம்ஸாபாதுகை, ஸேச்வர மீமாம்ஸை யென்று இரண்டு க்ரந்தங்கள் அனுக்ரஹித்திருக்கிருர், ஸேச்வர மீமாம்ஸாக்ரந்தம் மந்த்ராதிகரணம் வரையில்தான் உபலப்த்த மாயிருக்கிறது. இட்ட படை கற்படை யென்கிறபடியே கிடைத்திருப்பதைக் கொண்டே மற்ற வெல்லா மீமாம்ஸாஸூத்திரங்களையும் வேதாந்தானு குணமாக நயநம் பண்ணிக் கொள்ளலாமென்று உபய மீமாம்ஸா வல்ல

வர்களறிவார்கள், ஸ்ரீ பாஷ்யகாரஹ்ருத யானு ஸாரியாயும் ஜைமிநிபாவப்ரகாசமாக வும் ஸூத்திரங்களுக்கு வ்யாக்யானமியற்றிய தனிப் பெருமை நம் ஆசார்ய பரம்பரையில் ஸ்வாமி தேசிகனுக்கேயுள்ளது, ந்யாய பரிசுத்தி யென்கிற க்ரந்தத்தில் ஸ்வதந்தர மாகவே 49 ஸூத்ரங்களை ஸாதித்து

ஏதாத்ருசாதி வாக்யாநி கிம் ந ஸூத்ராணி ஸ்யு:

என்று தனக்குள்ள ஸூத்ர கரண ஸாமர்த் யத்தை ப்ரகாசிப்பித்தார், ஸேச்வர மீமாம் ஸையில் வ்யாக்யான கரண வைசத்யத்தை யும் நிரூபித்தார். ஸர்வதந்த்ரஸ்வ தந்த்ர ரான நம் தேசிகன் பெருமையை ஒரொன்று தானே யமையாதோவென்று அபியுக்தர் மனமாரப் பேசினரன்றே !

இவ்வளவால் வேதம் இரண்டு பாகத்தா லும் ஸர்வ கர்ம ஸமாராத்யனுக பகவானை ப்ரதிபாதித்ததால் தான் பரிபூர்ணமாயிற்று.

வேதப்ரதிபாத்யன். ஜகத்ஸர்வம் சரீரம் தே யென்கிறபடியே ஜகச்சரீரகனுக ப்ரதி பாதிக்கப்பட்ட படியால் ஸர்வ பரிபூர்ணனு கிருன்.

இவ் விஷயங்களை உட்கொண்டிருக்கும் உபய மீமாம்ஸாக்ரந்தங்களுக்கு விசதமாக வ்யாக்யானங்களைச் செய்து உலகத்தாருக்கு உபயோகப்படும்படி அனுக்ரஹித்திருப்ப தால் தனக்குள்ள பரிபூர்ணதையையே

ஸ்ரீமாம்ஸா மாம்ஸலாத்மா ஸமஜநி

என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் நிர்த்தேசித் திருக்கிருர்.

அத்ய ராமஸ்ய ராமத்வம் என்கிற ராகவன் வாக்கியம்போல் லோகோத்தரமான குண முடையவர்கள் தன்னை புகழ்வது இகழ்வா காது. அவர்கள் பெருமையை அவர்கள் போல் மற்றவர்களால் சொல்லவும் முடியாது. மாலுகந்தவாசிரியர் தானேயவர், அவர் வார்த்தைக்கு ஒப்பு உண்டோ. இப்படி ஸ்வாமி தேசிகனின் பெருமைகளில் ஏக தேசத்தைக்கூட பேச சக்தியற்ற நம் போன்ற வர்களுக்கு ஏதோ ஒரு வழியில் பேசும்படி நமக்கோர் விதி வாய்க்கின்றதே யென்று இதற்கும் காரணமான தேசிக வள்ளலின் அருள்களுக்கு அஞ்சலிகளை செலுத்து வோமாக.



ஸ்ரீமத் பரம-பரி : ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்
(தேரழுந்தூர் ஆண்டவன்)

ஆவணி பூரட்டாதி

ஸ்ரீமச் ச்ரீவாஸ யோகீச்வர பதவிநதம் லப்த வேதாந்த யுக்மம்.
ஸ்ரீபாதூ ஸேவி ராமாநுஜ முனிதிலகாத் தத்பதந்யஸ்த பாரம்.
ஸ்ரீமச் ச்ரீவாஸ ராமாவரஜ முநிமணேர் லப்த மோக்ஷாச்ரமம் தம்
ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜயதிந்ருபதிம் ஸம்ச்ரயே க்ஞானவார்த்திம்

தேசிகோ மே தயாளு:

ஸ்ரீ உவே. பக்திபூஷணம்,
தேசிகதர்சநரத்நம்
ஸ்ரீ D. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி,
அட்வேகேட், சென்னை.

நிஷத்யா வித்யாநாம் நிகிலகுமதிவ்யாளகருட :
ஸபா ஸௌபாக்யாநாம் ஸரஸகவிதா பத்மஸவிதா
ப்ரமாணம் பாஷ்யஸ்ய ப்ரபதநகலாஜந்மஜலதி ;
கரோது க்ஷேமம் ந : கவிகதககண்டீரவகுரு :॥
(ஆசார்ய பஞ்சாசத்)

ஸ்ரீமந் நிகமாந்த மஹோதேசிகன் அருளிச் செய்த ஸ்ரீந்யாஸ திலகம் என்னும் ஸ்தோத்ரத்தில் 21வது சுலோகத்தின் இறுதியில் "தேசிகோ மே தயாளு :" என்ற இந்தச் சொற்கள் திகழ்கின்றன. இவற்றின் பொருள் 'தேசிகன் எனக்கு, அதாவது என் விஷயத்தில் மிகுந்த அருள் உள்ளவர் என்பது. 'தேசிகன்' என்றால் ஆசார்யன் என்று பொருள் இருப்பினும் சுமார் 600 ஆண்டுகளாக 'தேசிகன்' என்னும் சொல் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனையே குறிக்கும் சொல்லாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. 'ராமன்' என்ற சொல் பரசுராமனையும் பலராமனையும் கூடக் குறிக்கவல்லதாயினும் ராமன் என்று தனிப்படச் சொன்னால் சக்ரவர்த்தித் திருமகனை ப்ரபு மட்டும் தான் நினைவுக்கு வருவது காண்கிறோம். இந்தப் பெருமையை "இப்படி மானுஷ பாவத்திலே நின்று ராம சப்தம் ஈரரசு படாதபடி பண்ணின மஹா வீரன்" என்று ஸ்வாமி தேசிகன் அபயப்ரதான ஸாரத்திலே காட்டியிருக்கிறார். அதே மாதிரி ஆசார்ய லக்ஷணங்கள் அனைத்தும் தனிப்பட்ட முறையில் திகழ்கிறபடியால் தேசிகன் என்னும் சொல் நம் ஸ்வாமி தேசிகனை மட்டுமே நிர்த்தேசித்து நிற்கும்.

மேலே தலைப்பில் காணும் "தேசிகோ மே தயாளு:" என்ற வாக்யம் ஸ்வாமி தேசிகன் சாதித்தருளிய தொன்றாகையால், தமது ஆசார்யனைக் குறித்து 'என் விஷயத்தில் என் ஆசார்யாள் மிகுந்த தயாளு' என்று பொருள்படப் பாடியிருப்பது தெரிகிறது. இருப்பினும் இன்று நாம் ஒவ்வொருவரும் அச்சொற்களைச் சொல்லும்போது 'ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் என் விஷயத்தில் மிகுந்த தயாளுவாக விளங்குகிறார்' என்று பொருள் தருவது இயல்புதானே. "அந்தோ நந்த்த" என்று தொடங்கும் ந்யாஸதிலக சுலோகத்தில் அச்சொற்கள் ஒருவிதமான பொருளைத் தருகின்றன. சுலோகத்தை விட்டு எடுத்து, "தேசிகோ மே தயாளு:" என்று நாம் அன்போடு அநுஸந்திக்கும் போது பொருள் வேறாகவே காண்கிறது.

ஸ்வாமி தேசிகன் நம் விஷயத்தில் எப்படி தயாளுவாக விளங்குகிறார் என்று ஆலோசிக்கப் புக்கு அவ்வாசார்யோத்தமன் செய்தருளிய உபகார பரம்பரைகளை அநுஸந்தித்து இன்புறப் பிராப்தம். "அருளாளப் பெருமாள் செய்யும் அந்தமிலா உதவியெல்லாம் அளப்பார் யாரே" என்று பேரருளாளப் பெருமாள் திறத்துத் தம் நன்றியை விண்ணப்பித்துக்கொண்டார் தேசிகன். தேசிகன் செய்துள்ள அந்த மிலா உதவியெல்லாம் அளப்பார் யாரே என்று நாம் அதே மாதிரி கைவாங்கி நிற்க வேண்டியது தேசிகன் விஷயத்தில்

அப்பேருதவிகளுள் சிலவற்றை இங்கே எடுத்துரைப்போம். அவையும்கூட ஸ்வாமி தேசிகன் அவரது ஆசார்யர்கள் விஷயத்தில் அநுஸந்தித்துப் போந்த அவரது சொற்களை கொண்டே காட்டுவோம்.

''கரக்கும் கருத்துடைத் தேசிகர்
கன்றென நம்மை எண்ணி
சுரக்கும் சுரபிகள் போல்
சொரிகின்றனர் சொல்லமுதே''

இது அம்ருதாஸ்வாதிநியில் திகழும் பாசுரம் ஒன்றின் ஒருபகுதி, [ஸாரஸாரம் சரம சுலோகாதிகாரம் என்னும் சில்லரை ரஹஸ்யத்திலிருந்து எடுக்கப்பட்ட பாசுரம் இது]. இதன் பொருள் ; ''மந்த்ரம் யத்நேந கோபயேத்'' என்ற கணக்கில் உயர்ந்த அர்த்த விசேஷங்களைக் கண்ட பேருக்குக் கண்டபடி சொல்லமாட்டார்கள் ஸதாசார்யர் கள். ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் சிஷ்ய க்ருத்யாதிகாரத்தில் சொல்லியிருக்கிறபடி ''கணிகாலங்காரமாக்குதல், விலைச்சாந்தாக் குதல், அம்பலத்தில் அவல் பொதியாக்குதல் குரங்கின் கையில் பூமாலையாக்குதல்'' செய்யாதொழிவர்.

அப்படிக் கரக்கும் [ஒளிக்கும்] கருத்தை யுடையர்களேனும் தம் திருவடிகளில் ''சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்'' என்று பணிந்தவர்கள் விஷயத் தில், பசு கன்றுக் கிரங்கிப் பாலைச் சுரப்பது போல, விசேஷ அர்த்தகளைச் சொரிவர்.'' ''ஏற்றகலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்'' என்று ஆண்டாள் அழகாகக் காட்டிய வள்ளன்மை இது. எவ்வளவு வள்ளலாயிருப்பினும் ஒரு பசு இடையனுக் கென்று பால் தராது. கன்றுக் கிரங்கி தான் முலைவழியே பால் சோரும். இந்த ரஹஸ்ய மும் ஆண்டாள் காட்டிக்கொடுக்கக் காண் கிறோம். அது தோல்கன்றாயினுமாம். அது போல நம் தேசிகர் பெருமான்.

''பரக்கும் புகழ்வரும் பைம்பொருள்
வாய்த்திடும் பத்தர்களாய்
இருக்கின்றவர்க்கு
இதை ஈந்தால் அறம் உளது''

என்ற காரணங்களால் இயம்பாமல், நம் மிடத்தில் அதிமாத்ரம் வாத்ஸல்யத்தால் வாடாமொழியான வடமொழியிலும் தேன் மொழியான தென்மொழியிலும் இருமொழி யும் கலந்த மணிமொழியிலும் கணக்கற்ற பத்ய கத்ய நூல்களை அருளிச் செய்து பின் புள்ள மக்களெல்லாம் படித்து இன்புற்று நல் வாழ்வு வாழச் செய்து போந்த பேருதவியை என்னென்று எடுத்துரைப்பது ! எத்தனை நூற் கள்! ''பரஸ் சதம் வாபி பரஸ்ஸஹஸ்ரம்'' என்று கூறலாமே யன்றி இவ்வளவு என்று கணக்கிட்டுச் சொல்லவல்லோமோ ? க்ரந் தங்களின் தொகை நிற்க, அவற்றுள் பொதிந்து கிடக்கும் அருமையான அர்த்த விசேஷங்களைத் தக்கபடி புகழ யாரால் முடியும்? யாதவாப்யுதயத்தின் 9-வது சுலோக வியாக்யானத்தில்,

''இத்தம் விசிந்த்யா : ஸர்வத்ர
பாவா : ஸந்தி பதே பதே''

என்று அப்பய்ய தீக்ஷிதர் மகிழ்ந்து பேசி யிருப்பது காண்க. லலிதமானதொரு காவ்ய மாயிருந்தாலும்கூட அதில் ஒவ்வொரு பதத் திலும் அநேக ரஸமான அபிப்பிராயங்கள் நிறைந்திருக்கும். ஆலோசிக்கவும் ஆராய வும் நமக்குத் திறமையிருக்க வேண்டும்.

கவித் திறமையின் பெருமை ஒரு புற மிருக்க, அந்நூல்களின் மூலம் நமக்குச் செய் தருளும் ஸத் உபதேசங்களையும் அவற்றால் நமக்குச் செய்திருக்கும் உபகாரத்தையும் எப்படி அளவிடுவது ! அதிகாரிகளுக்குத் தகுந்தபடி லலிதமாயும் கடினமாயும் சுருக்க மாயும் விஸ்தாரமாயும் விஷயங்களை எடுத்து விவரணம் செய்வதில் தேசிகனுக்கு நிகர் தேசிகன் தான். சிசுவான தசை, பாலனான தசை, யுவாவாயிருக்கும் தசை, வயது முதிர்ந்த தசை என்று சரீரத்துக்குப் பல தசைகள் இருப்பது போல மக்களுடைய புத்தியிலும் பல தசைகளுண்டு. அவ்வோர் தசையிலுள்ள அதிகாரிகளுக்கு உபயோகப் படும்படி பலவிதமான நூல்கள். பெயர்களைப் பார்த்தாலே இந்த தாரதம்யம் விளங்கும். சில்லரை ரஹஸயங்கள் என்பவை சில,

பெரிய ரஹஸ்யங்கள் வேறு. அதிகப் படிப்பில்லாதவர்களுக்கு அர்த்த விசேஷங்கள் நன்கு மனதில் படியும்படி லலிதமாக எழுதப் பட்ட நூல்கள் பல. ஸம்ஸ்க்ருதப் பயிற்சியில்லாதவர்களுக்குத் தமிழ்ச் சொற்களைக் கொண்டே கடினமான அர்த்தங்களை விளக்கி வைத்தமை பல நூல்களில் காண்கிறோம். ஸம்ஸ்க்ருதம் அறிந்தவர்களுக்கும் கூட ஒரே அர்த்தத்தைச் சிறிய அளவிலும் பெரிய அளவிலும் மிகப் பெரிய அளவிலும் ஸ்வாமி வெளியிடுவதைக் காண்கிறோம். உதாரணமாக ஸ்தோத்ரங்களில் சரணாகதி விஷயமாக ந்யாஸதசகம், ந்யாஸவிம்சதி, ந்யாஸ திலகம், சரணாகதி தீபிகை என்று நான்கு ஸ்தோரங்கள் காண்கின்றன. மிகச் சிறிய பத்து சுலோகங்களில் தொடங்கி மேலே மேலே விஸ்தாரமாகச் செல்கிறது உபபாதநம். இதுதான் தேசிகன் க்ருபைக்குச் சான்று. அவைகளில் ஒன்றையும் அதிகரிக்க சக்தியில்லையாகில் அடைக்கலப்பத்து என்னும் தமிழ் உள்ளது. தேசிகன் தயாளு என்பதற்கு என்ன சந்தேகம்?

ப்ரபத்திவித்யையை உலகில் நிலைநாட்டினது நம் தேசிகர் பெருமான்தான் என்பதை எவரும் மறுக்க முடியாது, மறைக்கவும் முடியாது. "ப்ரபதநகலாஜன்மஜலதி:" என்றார் ஸ்ரீ வேங்கடாத்வரி. "தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே" என்று தினமும் அநுஸந்தித்து இன்புறுகிறார்கள் தேசிக பக்தர்கள்.

ஆழ்வார்களும் தேசிகனுக்கு முற்பட்ட ஆசார்யர்களும் ப்ரபத்தியை அநுஷ்டித்தார்களே யன்றி ப்ரமாணங்களையும் யுக்திகளையும் கொண்டு அதை ஒரு சாஸ்த்ரமாக ஸ்தாபிக்கவில்லை. அந்தக்குறை நீங்கினது தேசிகனால் தான். ப்ரபத்தி சாஸ்த்ரப்ரதிஷ்டாபநத்துக்காகவே திருவேங்கமுடையான் தூப்புல் திருவேங்கடமுடையானாகத் திருவவதரித்தருளினான் என்பது பெரியோர் கொள்கை. [பிள்ளையந்தாதிப் பாசுரம் 5 காண்க.]

"ஊன் வாட உண்ணாது உயிர்காவலிட்டு உடலில் பிரியாப் புலனைந்தும் நொந்து வாடவாடத் தவம் செய்து பகவானை அடைய வேண்டும் என்று உபதேசித்தால், அந்த உபதேசம் இக்காலத்தில் எத்தனை மக்களுக்குப் பயன்படும்? அப்படிச் செய்ய வேண்டிய அவசியமில்லை என்று தம் உபதேசத்தாலும் அநுஷ்டானத்தாலும் காட்டியருளி, திருமாலுக்கு அன்பு பூண்டு நின்றால் அவனருளைப் பெறலாம் என்ற இன்ப வழியை நமக்குத் தந்தவர்கள் ஆழ்வார்கள். எம்பெருமானுக்கு அன்புமிக்க உள்ளத்தோடு அவன் திருவடிகளில் சரணம் புகுந்தால் அவன் அப்படிச் செய்தவர்களுக்குத் தன்னையே தந்துவிடுகிறான் என்ற ஆழ்வார்கள் அனுபவத்தோடு வேத, வேதாந்த, இதிஹாஸ புராண, ப்ரஹ்மஸூத்ராதிகளில் கிடைக்கும் சாஸ்த்ரார்த்தங்களை இணைத்துப் ப்ரபத்தி என்ற உபாயத்தை உலகிலே ப்ரதிஷ்டாபநம் செய்து வைத்தவர் தேசிகனே. தேசிகாவதாரம் ப்ரபத்தியை ஒரு ஸாக்ஷாந்மோக்ஷோபாயமாக நிலைநாட்ட எடுத்த அவதாரம். அவரது கணக்கிறந்த கிரந்தங்களிலெல்லாம் ஊடுருவி நிற்கும் அர்த்த விசேஷமும் பிரபத்தியின் பெருமைதான். சிலருக்கு மட்டுமே பயன்படக்கூடிய கர்மயோக ஜ்ஞானயோக பக்தியோகங்கள் போலன்றிக்கே இப்பிரபத்தியோகம் சகலரும் கைக்கொள்ளக்கூடிய உபாயம்.

"அந்தணர் அந்தியர் எல்லையில்
நின்ற அனைத்துலகும்
நொந்தவரே முதலாக நுடங்கி
அனன்னியராய்
வந்தடையும் வகை வண்தகவேந்தி
வருந்திய நம்
அந்தமிலாதியை அன்பர்
அறிந்தறிவித்தனரே."

(அதிகாரஸங்க்ரகம்-17)

இந்தப் பேருண்மையை அறிந்து நமக்கு அறிவித்த அன்பர் தேசிகனேயன்றி யாவர்? இப்படி உலக மக்கள் அனைவருக்கும் பயன்படவல்ல உபாயத்தை நிலைநாட்டின தேசிகன் தயாளு வென்பதில் ஐயமென்ன?

இந்தப் பெருமையைத் தக்கபடி புகழவேண்டு மென்றால் பின்வரும் ஸ்வாமி ஸ்ரீஸூக்தி கொண்டுதான் புகழலாம்: "மருளற்ற தேசிகர் வானுகப் பால் இந்த வையமெல் லாம் இருளற்று இறையவன் அடிபூண்டுய்ய எண்ணுதலால்" [அதிகார ஸங். 37] தான் நமக்கு இன்று உய்யும் வகையுள்ளது.

ஆசார்ய லக்ஷணங்களையெல்லாம் வெகு அழகாக ந்யாஸ விம்சதி முதல் சுலோகத்தில் ஸங்க்ரஹத்தருளியிருக்கிறார் ஸ்வாமி தேசிகன்.

ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே ஸ்திரதியம்
அநகம் ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்
ஸத்வஸ்த்தம் ஸத்யவாசம் ஸமய
நியதயா ஸாதுவ்ருத்யா ஸமேதம்
டம்பாஸூயாதிமுக்தம் ஜிதவிஷயகணம்
தீர்க்கபந்தும் தயாளும்
ஸ்காலித்யே சாஸிதாரம் ஸ்வபர - ஹித
பரம் தேசிகம் பூஷ்ணு: ஈப்ஸேத்॥

இங்கேயுள்ள தேசிக பதமும் நம் தேசி கனிடத்திலே தான் நன்கு அந்வயிக்கும் என்று சொல்லவேண்டுமா? இங்கே சொல் லப்பட்ட 14 விசேஷணங்களும் [குணங் களும்] நிகமாந்த மஹாதேசிகனிடத்து மிகுந்த சோபையோடு விளங்குமவை. ஒவ் வொரு விசேஷணமாக எடுத்துப் பார்த்துப் பொருத்தம் கண்டு இன்புற வேண்டும்.

சிற்சில இடங்களில் ஸ்வாமி தாமே தேசிக சப்தத்துக்குப் பொருள் காட்டும் முறையில் அருளியிருப்பது நோக்கத் தக்கது. 'திசி திசி கதிவித்பி: தேசிகை:' என்று தயாசதகத் தில் ஒரு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. ஆசார்யனுவான் பல்வேறு மார்க்கங்களையும் அறிந்து எந்தெந்த மார்க்கங்களைப் பின்பற்ற வேண்டும், எதெதில் பிரவேசிக்கக் கூடாது என்று நன்கு அறிந்து நம்மை அந்த ஸன் மார்க்கங்களில் நடத்த முற்படவேண்டும்.

"தக்கவையன்றித்
தகாதவை யொன்றும்
தமக்கிசையார்..."
(அதிகார ஸங். 21).

இதுவும் ஒரு ஆசார்ய லக்ஷணம்.

"இதுவழி யின்னமுதென்றவரின்
புலன் வேறிடுவார்
இதுவழியாமலவென்று
அறிவார் எங்கள் தேசிகரே"
(அதிகார ஸங். 53).

இது மேற்சொன்ன தயாசதக சுலோகத்தின் தமிழாக்கம் போல் காண்கின்றதன்றோ? இங்கே திகழும் 'எங்கள் தேசிகரே' என்ற சொற்கள் நம் தேசிகர் திறத்தே நன்கு பொருந்தும்.

ஜ்ஞானத்தினுடையவும் உபதேசத்தினு டையவும் பெருமை இப்படியிருக்க, நம் ஸ்வாமியின் அநுஷ்டானமும் வைராக்ய மும் எத்தன்மையன என்பதுவும் அவர் கையாண்ட சொற்களைக் கொண்டுதான் நன்கு அறியலாம்.

ஸ்பர்த்தா விப்லவவிப்ரலம்ப
பதவீவைதேசிகா தேசிகா:
(குருபரம்பராஸாரம்).

என்ற தேசிகலக்ஷணம் நம் தேசிகனிடத்தில் பொருந்தியிருந்தமை ஸ்வாமி சரித்ரத்தால் தெரிகிறது. "குலிங்க சகுனி வ்ருத்தாந்த வைதேசிரான தேசிகர்" என்ற பரமபத ஸோபாநபங்க்தியும் ஸ்வாமியிடத்தே பொருந்தி விளங்கியது காண்கிறோம். இப் பெருமையைக் கண்டுதான் ப்ரதிவாதி பயங் கரம் அண்ணன் ஸப்ததிரத்ந மாலிகையில்,

"யதீய சரிதம் ஸதாம்
ஸுசரிதவ்யவஸ்தாபகம்"

என்று பாடிப் போந்தார். 'ஸத்துக்களுக்கு நன்னடத்தையை நிர்ணயித்துக் கொடுப்பது ஸ்வாமி தேசிகனுடைய திவ்ய சரித்திரம்தான் என்று இதற்குப் பொருள். இந்தப் பெரு மையை "சீலங்கவர்ந்திடும் தேசிகர்" என்கிற அம்ருதரஞ்சனீ பாசுரம் [15] தெரி விக்கிறது. பலவிதங்களிலும் தமது அருளிச் செயல்களாலும் அனுஷ்டானத்தாலும் நம்மை நல்வழிப்படுத்திய ஸ்வாமி விஷயத்தில்

"சீரார் பெருந்தகைத் தேசிகர்
எம்மைத் திருத்துதலால்
தீரா மயலகற்றும் திறம்பாத்
தெளிவு உற்றனமே"
(அம்ருத ரஞ்சனீ-17.)

என்று அவரையே போற்றுதல் பொருத்தம்.

ஸ்வாமி தேசிகன் நமக்குச் செய்துள்ள பேருபகாரங்களை நமக்குச் சரியானபடி அநுஸந்திக்கத் தெரியாது. அவரது ஸ்ரீ ஸூக்திகளில் விளங்கும் பல சொற்களையும் சொற்றொடர்களையும் கொண்டுதான் ஒருபடி நாம் அவரது அருமை பெருமைகளைப் பாராட்ட முற்படலாம். இதிலொன்றும் தவறில்லை. வேதம் ஸர்வேச்வரனது மூச்சுக் காற்று, அவனிடமிருந்து உண்டானது. அந்த வேதத்தைக்கொண்டு தானே நாம் எம்பெருமானுடைய ஸ்வரூபாதிகளை உணரவோ அவனை ஸ்தோத்ரம் செய்யவோ முயலுகிறோம். அப்படியே ஸ்வாமி தேசிகன் திருவாக்கில் அவதரித்த அருளிச் செயல்களைக் கொண்டு ஒருபடி அவரது பெருமையை உணர்வதிலும் அவரது சிறப்பைச் சிந்தித்துத் தோத்தரிப்பதிலும் என்ன தவறு?

"திருமாலடிகாட்டிய நம் தேசிகர்"
(அம்ருதரஞ்சனி-2)

"சீலம் கவர்ந்திடும் தேசிகர்"
(அம்ருதரஞ்சனி-15)

"சீரார் பெருந்தகைத் தேசிகர்"
(அம்ருதரஞ்சனி-17)

"சிட்டரான தேசுயர்ந்த தேசிகர்"
(அம்ருதரஞ்சனி-39)

"மருளற்ற தேசிகர்"
(அதிகாரஸங்க்ரகம்-37)

"ஞாலம் புகழும் நம் தேசிகர்"
(அம்ருதாசுவாதினீ-1)

"தகவால் மிக்க தேசிகர்"
(அம்ருதாசுவாதினீ-26)

"மாலைப் பெற வழிகாட்டிய தேசிகர்"
(பரமதபங்கம்-8)

இவையெல்லாம் தேசிகப் பிரபந்தப் பாசுரங்களில் காணப்படும் சொற்றொடர்கள், தமது ஆசார்யர்கள் திறத்தில் ஸ்வாமி அநுஸந்தித்து இன்புற்ற அடைமொழிகள். ஆனால் அவை ஒவ்வொன்றும் நம் தேசிகர் பெருமானிடத்தில் பொருந்தி ஒருபடி அதிகமாக நிறம்பெறுவது கண்டு நாம் அவைகளைச் சொல்லி நம் தேசிகனை வாயாரச் சொல்லார மனமார வாழ்த்துவதற்கு நமக்கு ஒரு பாக்கியம் இருக்கிறது.

உற்று நோக்குங்கால் இந்த அடைமொழிகளெல்லாம் நிகமாந்த மஹாதேசிகனுக்குத் தான் பொருந்தும் என்று எண்ண இடமிருக்கிறது. 'ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே' என்று தொடங்கும் சுலோகத்தில் காணும் பதினான்கு லக்ஷணங்களும் தேசிகனிடத்தில் பொருந்தியிருப்பதை நாம் நன்றாக உணருமளவுக்கு ஸ்வாமியினுடைய சரித்திரமும் அருளிச் செயல்களும் காட்டிக்கொடுக்கின்றன. அந்த அளவில் ஸ்வாமிக்கு முற்பட்ட ஆசார்யர்கள் விஷயத்தில் நாம் அறிய மார்க்கமில்லை. "காரேய் கருணை இராமானுச!" என்று, அன்பர்கள் அழைக்கும் பகவத் ராமானுஜன் கருணை கூடப் பிற்பட்டுப் போகும்படியன்றோ தேசிகன் நம்மிடத்தில் காட்டியருளிய கருணை விளங்குகிறது.

யதீயகருணா கதி:
ஸகலதர்மசூந்யாத்மநாம்

என்றும் "அருள் தரும் ஆரண தேசிகனே" என்றும் கொண்டாடப்பட்ட தேசிகன் கருணைக்கு ஈடாக எதைச் சொல்ல முடியும்? எம்பெருமான் அருளாளன்; ஆழ்வார்கள் அருள் மிகுந்ததொரு வடிவாய் உலகில் தோன்றியவர்கள். இருப்பினும் நம்பால் அவர்கள் அருளை ஈயவில்லை. "ஈந்தனன் ஈயாத இன்னருள்" என்பது தேசிகனுக்கே பொருந்தும் என்று காட்ட "அருள்தரும் ஆரண தேசிகனே!" என்று இவரே அன்போடு அழைக்கப்படுகிறார்.

"ஆரணதேசிகன்", என்று சொல்லவும் பின்வரும் அதிகார சங்கிரகப் பாசுரம் நினைவிற்கு வருகிறது:

''வாதியர் மன்னும் தருக்கச்
செருக்கின் மறைகுலையச்
சாதுசனங்கள் அடங்க
நடுங்கத் தனித்தனியே
ஆதியெனுவகை ஆரணதேசிகர்
சாற்றினர் நம்
போதமரும் திருமாதுடன்
நின்ற புராணனையே''
(அதிகார. 13)

இப்பாசுரத்தின் பொருளைக் கூர்ந்து கவனித்தால் இதில் நம் வேதாந்த தேசிகன் வெகு தெளிவாக உலகுக்கு எடுத்துக் காட்டிய ஒரு உயர் பொருள் தொனிக்கும். பூவளரும் திருமாது பெரிய பிராட்டி; பெரிய பிராட்டியுடன் நின்ற புராணன் திருநாரணன். இவர்கள் தனித்தனி ஆதியல்ல வென்றும், இவருடைய சேர்த்தியில்தான் பரதத்துவம் காண இயலுமென்றும் ஸ்ரீஸ்துதி 9-வது சுலோகம் ஸித்தாந்திக்கிறது.

த்வாம் ஏவாஹு: கதிசித் அபரே
த்வத்ப்ரியய் லோகநாதம்
கிம் தை: அந்த கலஹமலினை:
கிஞ்சித் உத்தீர்ய மக்னை:|
த்வத்ஸம் ப்ரீத்யை விஹரதி ஹரௌ
ஸம்முகீநாம் ச்ருதீநாம்
பாவாருடௌ பகவதி! யுவாம்
தம்பதீ தைவதம் ந:||

ஆக இப்பேருண்மையைச் சாற்றின ஆரண தேசிகர் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனேயன்றி வேறு யார்? பாசுரத்தைப் பாடியவர் நினைத்துப் பாடியது முன்புள்ள ஆசார்யர்களின் பெருமையைத்தான். ஆனால் பாசுரம் தன்னிடத்தேயுள்ள சொற்களால் தெளிவாகக் காட்டுவது நம் ஆரணதேசிகனைத்தான். அப்படியே

அத்யாஸீந துரங்கவக்த்ர விலஸத்
ஜிஹ்வாக் ரஸிம்ஹாஸநாத்
ஆசார்யாத் இஹ தே வதாம்
ஸமதிகாம்
அந்யாம் ந மந்யாமஹே.

எந்த ஆசார்யர் நாவில் தமக்கு ஹயக்ரீவன் ஸிம்ஹாஸநம் அமைத்துக் கொண்டார்?

ஜிஹ்வாக்ரஸிம்ஹாஸநம்
அப்யுபேயா:
(ஹயக்ரீவஸ்தோத்ரம்)

என்று நம் தேசிகன் ப்ரார்த்தித்தது தெரிகிறது.

இதுகாறும் ஸ்வாமி ஸூக்திகள் பலவற்றைக் கொண்டு ''தேசிகோ மே தயாளு:'' என்று நம் திறத்து அருள் நிரம்பியவர் ஸ்வாமி தேசிகன் என்று காட்ட முற்பட்டோம். இனி 'தேசிகோ மே தயாளு:' என்று ஸர்வேச்வரன் கூட அநுஸந்திக்கலாம் என்பதைக் காட்டுவோம். உலகை ஸ்ருஷ்டித்து, சாஸ்த்ரத்தைக் கைவிளக்காகக் கொடுத்துப் பின்பு தானும் அவதரித்து, ஆழ்வார் ஆசார்யர்களையும் அவதரிப்பித்து உபகரித்தருளினுன் எம்பெருமான். அதனுல் பூர்ணபயன் காணவில்லை. தேசிகன் அவதரித்த பிறகே விச்வத்தை ஸ்ருஷ்டித்த விஷ்ணுவின் மநோரதம் பூர்த்தியாகிறது. உபாயத்தை [பிரபத்தியை] நல்லமுறையில் உலகில் நிலைநாட்டியபடியால் அதை அவலம்பித்துக் கணக்கற்ற ஆத்மாக்கள் மோக்ஷத்தையடைய வழி ஏற்படுத்தப்பட்டது. பரமபதமான உப்பரிகையை அடைய குறுகிய படிக்கட்டுகளை, வெகு சிலரே பிரவேசிக்கக்கூடிய இடத்தில் அமைத்தார்கள் பூர்வர்கள். விசாலமான படிக்கட்டை—அந்தணர் அந்தியர் எல்லையில் நின்ற அனைத்துலகும் உபயோகிக்கும் படி ராஜமார்க்கத்தில் நிர்மாணம் செய்து வைத்த பெருமை தேசிகனுடையது.

'' முக்தி ஸௌத விசிகா
ஸோபாநபங்க்தி.

முக்தியாகிய ஸௌதத்தின் மேல்மாடிக்கு, விசிகாஸோபாந பங்க்தி—அதாவது நடுவீதியிலிருந்து படிகளின் வரிசை. ப்ரபந்நர்கள் கூட்டங் கூட்டமாக அப்படிகளில் ஏறிச் சென்று மோக்ஷலோகத்தை அடைகிறார்கள். அவர்கள் ஏறுவதைக் கண்டு மனம் பூரித்து

நிற்கிருர்கள் திவ்யதம்பதிகள் விண்ணின் தலை நின்று. இதெல்லாம் தேசிகன் நமக்குச் செய்த பேருதவியென்று பெருமாளும் பிராட்டியும் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வார்கள் போலும். அவர்கள் ஆநந்தத்துக்கு உதாஹரணம்

சரணுகதஸஸ்யமாலிநீயம்
வ்ருஷசைலேச
க்ருஷீவலம் திநோதி
(தயாசதகம்-21).

ஒரு குடியானவன் செழிப்பாக வளர்ந்த ஓங்கு பெருஞ் செந்நெல் பயிர்கள் நிறைந்த தன் நிலங்களைக் காணும்போது அடையும் மகிழ்ச்சி.

இந்த மகிழ்ச்சி தயாதேவியை அனுப்பி பிரபந்நர்களை எதிர்கொண்டு அழைக்கும்படி எம்பெருமானைச் செய்து விடுகிறது.

ப்ரதிப்ரஸ்தானம் சுருதிநகரச்ருங்காடகத்தை யடைந்து, "வந்து அவர் எதிர் கொள்ள" என்ற ஆழ்வார் வாக்கை மெய்ப்பித்தபடி, இந்தப் பெருமையைத் தமக்கு நல்கியது, தேசிகனே யாதலால் பெருமாளும் "தேசிகோ மே தயாளு:" என்று அநுஸந்திக்கக் குறையில்லை.

மேலும் சாஸ்த்ரங்களெல்லாம் எம்பெருமானை எல்லையில்லாத உயர்வற உயர்நலமுடையவனுகக் காட்டிப் போந்தன. அவன் தயாவான் என்று ஸித்தாந்தித்தது தேசிகன் தான். தயாசதகம் பாடியவர் வேறெருவரும் இல்லையே. "என்னைத் தயாளுவாக உலகத்தோருக்குக் காட்டிக்கொடுத்த 'தேசிகன் தான் என் விஷயத்தில் தயாளு' என்று எம்பெருமான் திருவுள்ளமாவதில் வியப்பென்ன!

எந்த அளவில் ஸர்வேச்வரன் தேசிகனிடத்தில் ஈடுபட்டு நிற்கிருன் என்பதை

தேசிகாதேசகாங்க்ஷீ (ந்யாஸதிலகம்)

என்ற சொற்கள் காட்டிக்கொடுக்கின்றன.

தேசிகன் ஆஜ்ஞையையே எதிர்பார்த்த வண்ணம் இருக்கிருன். அடியார் சொன்ன வண்ணம் செய்த பெருமாள் 'யதோக்த காரீ' என்ற பெயர் படைத்த வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தன். தேசிகன் சொன்ன வண்ணம் செய்யும் பெருமாள் திருவரங்கத் தரவணையில் பள்ளிகொள்ளும் ஸ்ரீரங்கராஜன்.

பெரிய பிராட்டியாரின் உகப்பும் ஸ்ரீஸ்துதியில் நன்கு வெளியாகிறது.

தத்த : தேசிகை :,
கிம் தே பூய : ப்ரியம்-23.

தேசிகன் போன்றவர்களால் (நீ எங்களிடம்) கொடுக்கப்பட்டவன். இதற்கு மேலும் ஏதாகிலும் உனக்குப் பிரியம் இருக்கிறதா?" என்றல்லவோ கேட்டருளுகிருள்.

உபாயம் புஷ்கலமாக இருந்தால் அங்கே பலன் வெகு புஷ்கலமாக (பரிபூர்ணமாக) இருக்கும். இது வேகாஸேது ஸ்தோத்ரத்தில் வெகுரஸமாக ஸ்வாமி தேசிகனுல் காட்டப்படுகிறது, முதல் சுலோகத்தில் உபாய வடிவில் வேகவதீ மத்யத்திலும் புருஷார்த்த வடிவில் ஹஸ்திகிரியின் உச்சியிலும் பரதத்துவம் பிரகாசிக்கிறது என்று பாடிவிட்டு, எட்டாவது சுலோகத்தில்,

சதகுணபரிணும :
ஸந்நிதௌ யஸ்ய நித்யம்
வரவிதரணபூமா
வாரணுத்ரீச்வரஸ்ய

என்று அருளிச் செய்கிருர். [எவருடைய (யதோக்தகாரியின்) ஸாந்நித்யத்தால் வாரணசைல நாதனுடைய வரம் தரும் பெருமை நூறுமடங்காக வ்ருத்தியாகி விளங்குகிறதோ] உபாயம் மலிந்தால் புருஷார்த்தம் மலிகிறது அதுபோல பிரபத்தியைப் பிரதிஷ்டாபநம் செய்தருளின தேசிகனுல் உபாயம் புஷ்கலமாகியபடியால் புருஷார்த்தம்

பெருமை பெற்று விளங்குகிறது. இதனால் பிரீதியடைந்த எம்பெருமான் தேசிகனிடத்தில் க்ருதஜ்ஞதை பாராட்டுவது சாலப் பொருந்தும். அதனால் தானே தனக்கே அஸாதாரணமான வேதாந்தாசார்ய பதத்தை ஸ்வாமி தேசிகனுக்குப் பிரஸாதித்தருளினான்.

"ஸ்வகம் இதி ஹரிதத்தம்"

என்று தேசிகனும் இதைப் பாராட்டியுள்ளார்.

இப்படி ஸகல மசதனாகளுககும பரமசே தனனாகிய ஸர்வேசுவரனுக்கும் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் பரம தயாளுவாக விளங்குவதை எனது இளையபுன் சொற்களைக் கொண்டு எடுத்துரைக்கத் துணிந்தேன். அடியேன் சிறிய ஞானத்தன். அறிதல் யார்க்கும் அறிய ஆசார்ய ச்ரேஷ்டரது அருமை பெருமைகளை அவரது திவ்ய ஸூக்திகளுள் திகழும் சொற்கள் காட்டச் சிறிதளவு அறிந்து, அச் சொற்களையே பிரதானங்களாக்கி இப்புகழ்மாலை சூட்டினேன் வடிவழகார்ந்த அவ்வண் தூப்புல்வள்ளல் மென்மலரடிகளுக்கு. இப்படி ஸ்வாமி ஸ்ரீஸூக்திகளில் ஸ்வாமியின் வைபவங்களை யான் கண்டதும் "தேசிகதத்தேந சக்ஷுஷா" தேசிகன் அருளிய கண் கொண்டுதான். இது தேசிக ஸாக்ஷிகம் அஸ்மத் தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த மஹநீயர்களுக்கு இதை ஸவிநயம் ஸமர்ப்பித்துக் கொள்ளுகிறேன்.

"வாழியணி தூப்புல் வரு
நிகமாந்தாசிரியன்
வாழியவன் பாதாரவிந்தமலர்
—வாழியவன்
கோதிலாத் தாண்மலரைக்
கொண்டாடிக் கொண்டிருக்கும்
தீதிலா நல்லோர் திரள்."

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமத் பரம...பரி, ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன்
ஆக்கூர் ஆண்டவன்

ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜயதிந்ருபதேர் லப்த வேதாந்த யுக்மம்
ஸ்ரீமத் தேவாதி நேது : சரண ஸரஸிஜே தேந தத்தாத்மபாரம்
ஸ்ரீமத் ஸ்ரீவாஸ யோகீச்வர மஹித மஹாஸம்ப்ரதாயைக நிஷ்ட்டம்
வந்தே ஸ்ரீவாஸ யோகீச்வர குருமநகம் வத்ஸலம் பவ்யசீலம்.

புரட்டாசி-உத்தரட்டாதி

ஸ்ரீ தேசிகன் தமிழ்க் கவிதை

ஸ்ரீமான் தார்மிக ரத்ன ப்ரதீப
என். ஆர். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி,
மதுரை.

1. பெரிய திருமொழி ஏழாம் பத்து 8-ம் பதிகம் 7-வது பாடலில் திரு அழுந்தூர் அக்ரஹாரங்களிலுள்ள ஸ்ரீ வைஷ்ண வோத்தமர்களைத் திருமங்கையாழ்வார்,

"செந்தமிழும் வடகலையுந்திகழ்ந்த நாவர்
திசைமுகனேயனையவர்கள் செம்மை மிக்க
அந்தணர் தமாகுதியின் புகையார் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த வமரர் கோவே."

என்றருளிச் செய்கிருர். இந்த அந்தணர்கள் உபயவேதாந்த ஸேவையாலும் அர்த்த க்ரஹணத்தாலும் உபய வேதாந்த ஞான விசிஷ்டர்களாக விளங்கிக் கொண்டு ஔபா ஸந அக்நி ஹோத்ராதிகளையும், அநுஸ்யூத மாய் அனுஷ்டித்து வந்தார்களென்றும், அந்த ஞானுநுஷ்டானங்களால் திருவுள்ள முகந்து தேவாதி தேவனுகிய ஆமருவிப் பெருமாள், இவ்விதம் ஞானுநுஷ்டானங்க ளால் அலங்கரிக்கப் பெற்ற அழுந்தூரில் நித்யவாஸம் செய்கிருனென்றும் அருளிச் செய்கிருர். இங்கே செந்தமிழ் என்றது சங்க இலக்கண இலக்கியங்கள் எல்லாவற்றை யும், திவ்யப் பிரபந்தார்த்தங்கள் நன்கு விளங்குவதற்காகக் கற்றவர்கள் என்றும், அதேபோல், வடகலையும் என்றது வேதங் களின் அத்யயனத்துடன் அவைகளின் ஆறு அங்கங்களையும், பாஷ்யங்களையும் கற்று, 14 வித்யாஸ்தானங்களிலும் தேர்ச்சி பெற்ற வர்கள் என்றது. திகழ்ந்தபிரகாசித்த; இவர்கள் நாக்கிலே ஸரஸ்வதி விலாஸம் பிரகாசிக்கிறது ஆனதால் ஒவ்வொருவரும் ஒரு ப்ரஹ்மாவைப் போல் விளங்குகிருர்கள் என்றபடி இங்கே திசைமுகன் என்றது. பிரமனுக்கு 4 வேதத்துக்கு 4 முகங்களும், 4 நாக்குகளும் உள்ளன, இவர்கள் ஒரு முகத்திலும், ஒரு நாக்கிலும், உபயபாஷா ஸம்பூர்ண ஸரஸ்வதி விலாஸமுள்ளவர்கள் என்னும் ஏற்றம் த்வனியில் கிடைக்கும் ரஸமாகும்.

2. ஸ்ரீ தேசிகன் தன் ப்ரபந்தஸாரத்தின் முத்திரைப் பாசுரத்தில் சந்தமிகு தமிழ்மறை யோன் தூப்புல் தோன்றும் வேதாந்த குரு என்று மிகப் பெருமையாகச் சொல்லிக் கொள்ளுகிருர். இதை உற்று நோக்கில், இவர் தமிழ் மறையாகிய திவ்யப் பிரபந்தங் களில் விசேஷ ஈடுபாடுடையவராய் அவை களின் சொற் பொருள்களும், உள்ளுறை கருத்துக்களும் நன்கு புலனுகுமாறு சங்க இலக்கண இலக்கியங்களை யெல்லாம் முறையே நன்கு கற்றுத் தேர்ந்து பெரும் புலமை யடைந்திருந்தாரென்பதும் தெளிவா கும். தேசிகப் பிரபந்தம் 400 செய்யுட் களையும் ஊன்றிக் கற்கும் யாவரும் இவ ருடைய தமிழ்ப் புலமையை உணராதிருக்க முடியாது. ஆழ்வார்கள் அருளிச் செய்துள்ள திவ்யப் பிரபந்தங்கள் 4000த்திலும் உள்ள உயரிய பொருள்களையும், வேதசாஸ்திர விதிகளில் விளங்கும் உத்தம ரத்னங்களை யும், காலக்ஷேப க்ரந்த சதுஷ்டயங்களிற் கற்கும் உறுதிப் பொருள்களையும், ரஹஸ்ய த்ரயத்தின் எல்லாத் தத்துவங்களையும், ஒரு புராணமும், சேர்த்து 400 பாசுரங்களில் சுருக்கியமைத்திருக்கும் திறன், அமானுஷ்ய மும், அதிமானுஷ்யமும் ஆனதே. தமிழ்ப்

பாவகை நான்கில், வஞ்சியொழிந்த மற்றவையான வெண்பா, ஆசிரியம், கலி, ஆகிய இம்மூவகைப் பாக்களையும், அவைகளின் பல பேதங்களுடனும், சந்த பேதங்களுடனும் ஸ்வாமி மிகத் திறமையுடன் கையாண்டிருக்கும் பெருமை போற்றத் தக்கது.

3. மஹா கவிகள் என்று பெயர் பெற்ற கம்பன், காளிதாஸன் முதலானோர் கதைகளைக் காவ்யங்களாகவும், நாடகங்களாகவும் எழுதி அவைகளில் உவமை, உருவகம், உத்பிரேக்ஷை, உல்லேகம் முதலியவைகளை யமைத்துக் கற்போர் மனம் களிக்க நூல்களியற்றிப் பெயரெடுத்து விளங்குகிறார்கள். அவர்கள் நூல்களில் ஒவ்வோரிடத்தில் ஆத்யாத்மசாஸ்த்ர விஷயம் விரவிவரும். அதைப் பிழையில்லாமலும் வேத சாஸ்த்ர ஸம்மதமான நல்ல பாஷையிலும் அவரவர் அமைத்துத்தரும் திறனையும், உரைகாரர்களும் புலவர் பெருமான்களும் மிகவும் போற்றி மெச்சுவர். தேசிகப் பிரபந்தத்தில் முதலிலிருந்து கடைசிவரை ஸ்வாமி நிர்வஹிக்கும் விஷயங்கள் எல்லாமே அத்யாத்ம சாஸ்த்ர விஷயங்கள். இவைகளில் ஒவ்வொன்றும், வேதங்களிலும் உபநிஷத்துக்களிலும் தோன்றி தர்ம சாஸ்த்ராதிகளால் வலியுறுத்தப் பெற்று, இதிஹாஸ புராணங்களை உபப்ரும்ஹணங்களாய்க் கொண்டு ஸ்ரீ பகவத் கீதை ப்ரும்ஹ ஸூத்திரங்கள் இவைகளிற் பொதிந்து ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களால் ஸமஸ்கரிக்கப் பெற்று, பராசரர், சடகோபன், பரகாலன் இவர்களிடம் பரீக்ஷை கொடுத்துத் தேறி, ஸ்ரீமந் நாதமுனிகள், ஆளவந்தார் இவர்களால் ஸாதுவென்று அங்கீக்ருதமாய் ஸ்ரீ இராமானுஜனுடைய சொத்தாகி அவருடைய அருண் மிகுதியால் நமக்களிக்கப்பெற்று மறுபடியும் ஸ்ரீ தேசிகனால் ஸம்சோதனமாகி நமக்குத் தாரக போஷகமாய் விளங்குவன. இந்த முடிந்த பொருள்களைக் குறித்து கீதாசார்யன் பேசும்போது "ரிஷிபிர் பஹுதா கீதம், சந்தோபிர் விவிதை: ப்ருதக், ப்ரஹ்ம ஸூத்ரபதைஸ்சைவ, ஹேது மத் பிர்விநிஸ்சிதை :" என்று இவைகளின் ஏற்றத்தை மெச்சுகிறான். அத்தகைய கௌரவம் வாய்ந்த அரும்பெரும் அத்-யாத்மப் பொருள்களையும், முடிவுகளையும் ஒரு சிறிதும் ஸந்தேஹ விபரீதார்த்தங்களுக்கு இடமின்றித் தக்க தமிழ்ப் பதங்களைப் பொறுக்கியும், யாப்பிலக்கணம் ஒரு சிறிதும் வழுவாமலும் எளிதான உயர்ந்த தமிழில் பாக்களாக ஆக்கித் தந்திருக்கிறார்.

4. மேலே கூறியவற்றைச் சில உதாரணங்களால் நிரூபிக்கலாம். தமிழ்மொழியிற் சில சொற்கள் பெயர்ச் சொற்களாக ஒரு படியிலும், வினைச் சொற்களாக இன்னொரு படியிலும், பொருள் கொள்ளத் தக்கவையாயிருக்கும். அதிகார ஸங்க்ரஹத்தின் 46வது பாட்டும், அம்ருதாஸ்வாதினியின் 10வது பாட்டுமான "ஒண்டொடியாள்" என்று தொடங்கும் பாடலையெடுத்துக் கொள்வோம். அதன் 3வது பதம் 'தண்டுளவ மலர் மார்பன்' என்று தொடங்குகிறது. இந்தத் தொடர் மொழிக்கு "குளர்ந்த திருத்துழாயுடன் பூவைத் திருமார்பிலணிந்தவனுமான கண்ணபிரான்" என்று அழகான ஸம்ப்ரதாய வ்யாக்யானம் உண்டு. இதில் துளவம், துளசி மலர்ப்பூ, இவையிரண்டும் பெயர்ச் சொற்கள். துளவம் மலர் இவையிரண்டும் சேரும்போது மவ்வீறொற்றழிந்து 'துளவ மலர்' என்றே சேர்ந்து நிற்கும். அதனால் அந்தப் பொருள் சரியானது. ஆனால் 'துளவுதல்' என்னும் வினைச் சொல்லுக்கு 'ஆராய்தல் விசாரித்தல், தேடுதல்' என்னும் பொருள்களும் 'மலர்தல்' என்னும் சொல்லுக்குத் 'தோன்றுதல், விரிதல், காணப்படுதல் ஸாக்ஷரத்காரமாதல், என்னும் பொருள்களும் உண்டு. இவை வினைச் சொற்கள். இவ்விதம் பொருள் கொண்டால் 'துளவ'மென்பதற்கு வினையெச்சமாக வேத சாஸ்த்ர ப்ரமாணங்களால் விசாரிக்கவும், வேதவிஹிதமான அஷ்டாங்க யோகாதி மார்க்கங்களால் தேடவும், 'மலர்' தோன்றுகிற, ஸாக்ஷாத்காரமாகிற, 'தண்மார்பன்' ஸ்ரீ தேவி நித்யவாஸம் செய்வதால் தானும் குளிர்ந்து உலகனைத்துக்குமுள்ள எல்லாத் தாபங்களையும் போக்கடித்துக் குளிரச் செய்யும் மார்பையுடையவன், என்பது

பொருளாகும். மார்பென்பது ஹ்ருதயத்தைக் குறிப்பதாதலின் ஜீவன்களிடத்தில் பகவானுக்குள்ள ஸௌஹார்த்தம் சொல்லப் படும் விஷயமென்று பொருளாகி, முன்னே மன்னவர்க்குத் தேர்ப் பாகனுகி நின்ற ஸௌலப்யமும், பின்னே உபதேசித்த தனித் தருமமாகிய சரணுகதியும் இந்த ச்லோகார்த் தத்தின் விளைவுகளே என்று மத்திய மாணிக்க மாய் நின்று முன்பின் பொருள்களிரண்டை யும் தோற்றுவித்து அலங்காரம் செய்து தானும் அலங்கரிக்கப் பெறுகிறது. இதில் ஸ்ரீஹளீசன் பெருமையும் உள்ளுறைப் பொருளாக அமைந்திருத்தல் கருதத் தக்கது. பொய்கைமுனி, பூதத்தார், பேயாழ்வார் மூவரும் திருக்கோவலூர் இடைகழியில் சேர்ந்தார்கள். இவர்களெல்லாரையும் நெருக்கும் 4-வது மஹா புருஷனை "வையம் தகளியா, வார்கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காக"ப் புற உலகமாகிய விச்வத்தில் (விச்வம் என்பது ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் முதல் நாமம்.) பொய்கை முனி துளவினுர். "அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக, இன்புமேகு சிந்தை இடு திரியா" பூதத்தாழ்வார் விஷ்ணுவாக அக வுல்கத்தில் துளவினுர். மூவரும் மனங் களிக்கவும், பெருமான் திருமார்பம் ஸேவை யாய் மலர்ந்தது. அதை ஸேவித்துப் பேயாழ்வார் 'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்' என்று மகிழ்ச்சியடைகிருர். இவ் விதம் இவன் தண் மார்பு துளவ மலர் மார்பென்க. பக்தனுக்குத் தேரோட்டின ஸௌலப்யமும் திருவடியில் அடைந்தவர் களை எல்லாப் பாபங்களினின்று விடுவிக்கும் ஸௌசீல்யமும், துளவ மலர் தண்மார்பின் ஸௌஹார்த்தத்திற் ப்ரதிஷ்டித மென்பது ஸ்வாமியின் திருவுள்ளமாதல் சாஸ்த்ரார்த்த ஸித்தம்.

5. அதே பாடலில் 'அடிசூட விலக்காய் நின்ற' என்றும் ப்ரயோகித்திருப்பது ரொம்ப ஸ்வாரஸ்யம். அதற்கு 'வ்யாக்யாதாக்கள்', 'விலக்காய் நின்ற' என்ற மட்டில் பதம் பிரித்துத் 'தடையாயிருந்த' என்று மட்டில் பொருள் செய்திருக்கிருர்கள். அது போதாது. சூட என்னும் சொல்லோடு இலக்காய் என்னும் சொல் சேரும்போது வ் எனும் உடம்படு மெய் தோன்றி 'சூட விலக்காய்' என்று ஆகும். சரம ச்லோகத்தின் ஸ்வா ரஸ்யத்தை யுணர்ந்து, சரணுகதியை யனுஷ்டித்து உஜ்ஜீவிப்பவனை இலக்காய் நின்ற என்றும், இதை யநுஷ்டிக்காதவரை விலக்காய் நின்ற என்றும் அந்தத் தொடர் மொழி பேசுகிறது. கண் புதையல் விளை யாட்டில் கண்ணைப் பொத்திவிடப்பட்டவன் மாயை. இந்த மாயையின் கையில் அகப் பட்டவன் விலக்காய் நின்று, தான் பொத்திக் கொள்பவன், மாயை இடத்தில் அகப்படா மல், தப்பியோடித் தாய்ச்சியைத் தொட்ட வன், தனித்தருமத்துக்கு இலக்காய் நின்று, சரணுகதியை யனுஷ்டித்துத் தாய் (திரு மகள்) மூலம் பகவானையடைபவன். தமிழ் இலக்கணம் புணரியல் விதியால், சரணுகத னுக்கும் அதை அனுஷ்டியாதவனுக்கும் ஏற்படும் பலன்களை ஒரே சொற்றெடரில் அமைத்து இந்த லீலா விபூதியை ஒரு கண் புதையல் விளையாட்டாக ரூபகப்படுத்திப் பாட்டமைத்திருப்பது எந்தப் புலவரும் மெச்சத் தக்கதாகும்.

6. இனி, அம்ருதாஸ்வாதினி 27-வது பாடலில், 3-வ்து பாசுரம், ஸ்ரீ வைஷ்ண வர்கள் சாதாரணமாகப் பேசும் பேச்சைக் குறித்து, 'மாசில் மனம் தெளி முனிவர் வகுத்தவெல்லாம் மாலுகந்த வாசிரியர் வார்த்தைக் கொவ்வா' என்கிருர். இதற்கு 'மனத் தெளிவுடைய மஹர்ஷிகள் விளக்கி வெளியிட்ட (ஸ்ம்ருதி புராணமாகிய) வெல்லாம், எம்பெருமானுடைய க்ருபைக்கு உரியரான (நம்மாழ்வார் முதலிய) ஆழ்வார் ஆசார்யர்களின் ஒரு வார்த்தைக்குச் சமமாகா.' இந்தப் பொருளின் முதல் பாதியை ஒருவாறு அங்கீகரிக்கக்கூடுமாறு லும் பிற்பாதி, பகவத்க்ருபைக்குப் பாத்திர மான ஸாதாரண ஸ்ரீ வைஷ்ணவனையே குறிக் கிறது. தமிழிலக்கணம் நூல்களை வகைப் படுத்தும்போது முதல்நூல், வழிநூல், சார்பு நூல் என்று மூன்று பாகுபாடு செய்து 'வினை யின் நீங்கி, விளங்கிய அறிவின் முனைவன்

கண்டது முதனூலாகும்' என்று முதனூலுக்கு இலக்கணம் வகுக்கிறது. இந்த ஸூத்ரத்தின் முதற் பாகமாகிய 'வினையின் நீங்கி விளங் கிய அறிவின் முனைவ'னை ஸ்வாமி தன் சொந்தத் தமிழில் 'மாசில் மனந் தெளி முனிவர்' என்று ஆக்கியிருப்பது நோக்கத் தக்கது. எம்பெருமான் க்ருபைக்குப் பாத்ர மான ஆசிரியர் எல்லாரும் 'மாலுகந்த வாசிரியர்'. இங்கே மாலுகந்த வென்பது வேற்றுமைத் தொகை. மால் உகந்த என்று முதல் வேற்றுமை தொடங்கி, மாலை, மாலால், மாலுக்கு என்று வரிசையாக 2 முதல் 7 வேற்றுமையுருபுகளையும் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டியது. ஸ்வாமி, வார்த்தைக் கொவ்வா என்று செய்திருக்கும் ப்ரயோகம் திருக்குறள் 415-ன் கருத்தைத் தழுவியெழுந்தது. 'இழுக்கலுடை யூழியூற் றுக் கோலற்றே, ஒழுக்கமுடையார் வாய்ச் சொல்' என்னும் குறளில் வாய்ச் சொல் என்பதை வார்த்தையென்றுப் ப்ரதிபதத்தால் ஸ்வாமி வ்யவகரிக்கிறார். ஒழுக்கமுடையார் எல்லாரும் பகவத் ப்ரீதிக்குப் பாத்ரமானவர் கள் என்பது ஸ்வாமி திருவுள்ளம்.

7. இனி 'காகம் பிழைத்திடக் கண் ணழிவே செய்தகாகுத்தனே' யென்று காகாஸுர வ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறார். இங்கே காகம் அபசாரப் பட்டதும், அனுக் ரஹிக்கப் பெற்றதும், 'பிழைத்திட' என்னும் ஒரு சொல்லால் நிர்வாஹம். 'பிழைத்தல்' என்னும் சொல்லுக்குக் 'குற்றம் செய்த'லென் பது பொருள். பிராட்டியிடத்தில் மஹத்தான குற்றத்தை அந்தக் காகம் செய்ததைப் 'பிழைத்திட' என்னும் சொல் குறிப்பிடு கிறது. அதற்குத் தண்டனை, கண்ணழிவைச் செய்து, தான் ஏவிய ப்ரஹ்மாஸ்த்ரத்தின் மூலம் அதனுயிரை வாங்காமல் அதைப் 'பிழைத்திட' (உயிரோடிருக்க) அனுக்ரஹித் தான். சாகும் தறுவாயில் இருப்பவர் மறுபடி உயிர் பெற்று எழுதலுக்கும் பிழைத் தல் என்னும் சொல் பிரயோகிக்கப்படுகிறது. ப்ரஹ்மாஸ்தரத்தால் சாக இருந்த காகம் பிழைத்திட, மறுபடி உயிருடையதாக, என்று சொல்லுக்கு இரட்டுற மொழிதல் என்னும் இலக்கணப் பிரயோகத்தால் அதன் குற்றத்தையும் பகவான் அனுக்ரஹத்தையும் ஒரே சொல்லால் விளக்கும் திறன் அஸாதா ரணமானது.

8. இனி, ஸ்ரீ தேசிகனுடைய கவியமைக் கும் பெருந்திறன், மெய்விரதமான்மியத்தில் விசேஷமாகக் காணப்படுகிறது. அந்த நூலில் 12-வது பாடல் ப்ரஹ்மாவை விட்டு ஊடலிற் பிரிந்திருந்த ஸரஸ்வதி இவர் அழைப்பிற்கிணங்கி வரும்போது மிகக் கோபமுடையவளாக வருதலை 13 சீர்கள லான ஆசிரியச் சந்த விருத்தத்தால் வருணிக்கிறார். அதில் ஸரஸ்வதி வருகையை நேரில் மனக் கண்ணால் காண்கிறோம். அவள் ஆறாக வரும் ஆறு, அந்தப் பாடலின் கதியிலே ஒலிக்கிறது. ஸ்ரீ ஹஸ்திகிரி வரதன் ஆவிர்ப்பவித்தவுடன் தேவதைகள் திருச் சின்னம் ஊதி அனுபவித்த படியைத் தன்மை நவிற்சியென்னும் லக்ஷணயுக்தமாக 18-வது பாடலில் கூறுகிறார். அது பன்னிரு சீராசிரிய விருத்தம். ஒவ்வொரு அங்கத் தையும் உவமையோடு விளக்குகிறது. இது மகுடத்தில் தொடங்கித் திருவடியில் முடியும் மர்மம் ஸ்ரீ தேசிகனுக்குத்தான் தெரியும். பாட்டு மிகப் பிரஸாத குணமுடையதாய் மனதைக் கவர்கிறது. அதனடுத்த 19-வது பாடல் இந்த நூலுக்குள்ளே நீண்ட பாடலா கிய 28-சீரலான ஆசிரிய விருத்தம். இந்தப் பாடலை விஷ்ணு புராணத்திலும், ஸ்ரீ பாகவதத்திலும் பல இடங்களில் வரும் பகவத் ஸ்தோத்ரங்களை மனதிற்கொண்டு, இந்த மெய் விரத மான்மியமாகிய புராணத் துக்கு அவ்விதமான ஸ்தோத்ரம் ஒன்று வேண்டுமென்று, அதை 16 அடிகளாலாக்கி, அதில் ப்ரஹ்மஸூத்திரங்களில் 16 பாதங் களால் பேசப்படும் பகவத் குணங்களை யெல்லாம் ஸ்ரீ பகவத் ராமானுஜ ஸித்தாந்தத் திற்கு ஏற்பப் பாடியுள்ளார். இதன் ஒவ் வொரு பாதத்திலும் ஒவ்வொரு குணம் கூறப் பெற்று அதனதன் கடைசியில் இறைவனார் என்று தொடங்கித் தலைவனார் என்றும் வரை 15 'ஆர்'களால் பகவான் குணங்களைக் கூறி 16வது பாதத்தில், ''என்றும் என்னை

இகழ்விலன் காண்மினே'' என்று நம்மாழ்வாருக்கு மதுர கவிகள் குறிப்பிட்ட குணமும் பேரருளாளனுடையதுதான் என்று தலைக் கட்டுதல் மிகவும் ஆச்சர்யமான ஸம்ப்ரதாய ப்ரகடன வெற்றியாகும். இனி 21-வது பாடலில் 14-சீர் சந்த விருத்தத்தால் உபய நாச்சியாருடன் பெருமாள் ஸேவை தருதலை எவ்விதமாயெல்லாம் பேசலாம், பயிலலாம், ஓதலாம், பரவலாம், குலாவலாம், எண்ணலாம் என்று சொல்லும் வகையை 6 சொற்களாலும் அனுபவிக்கும் விதங்களை இரண்டு முதல் ஐந்தினுலும் கூறுகிருர். இதிலுள்ள சந்த விருத்தங்களெல்லாமே நாட்டியக் கலையின் இலக்கணங்களை யொட்டி அமைந்திருப்பன. ஆனதால் அபிநயம் பிடித்து மேடையில் நடிக்கவென்றே பாடப்பெற்றுள்ளன. 22-வது பாடலில் உயிர்வர்க்கத்துக்கு இன்றியமையாத 6 பொருள்களைத் தேர்ந்தெடுத்து அவைகளெல்லாம் பேரருளாளர்தானென்று லக்ஷணையால் கூறுகிருர்.

இனி 28-வது பாட்டில் இந்தப் புராண ஸாரத்தைப் புகன்று 29வது பாடலில் இந்தப் புராணம் தான்தோன்றியாக, ஸ்வாமி செய்ததல்ல வென்றும், அருளாளர் திருவடிகளைப் பரிவோடு ஸேவித்ததால் ஸாக்ஷாத்கரித்ததென்றும் கூறித் தலைக் கட்டுகிருர். கடைசியடியாகிய ''கையிற் கனி போலக் கண்டு'' என்று முடித்திருப்பது ஸ்ரீமத் இராமாயணத்தை வால்மீகி பகவான் ஸாக்ஷாத்கரித்ததைச் சொல்லும். ''கரபதரஸமாநம் வீக்ஷ்ய த்ருஷ்ட் யாப்ரதீச்யா'' என்னும் ப்ரஸித்தியான வாக்கியத்தை அனுகரிப்பதைக் காண்க.

9. ''கடல் கண்டேன் என்பார் யாவரே முடியக் கண்டார்'' என்பது ஆன்ருேர் மொழி. ஸ்ரீ பகவானுடைய கண்டாவதாரமான ஸ்ரீ தேசிகன், சப்தப்ரஹ்மத்தின் உருவன், இந்த சப்தக் கடல்தான் சேதனனுக்கு ப்ரமாணம். அந்த ப்ரமாணங்களையெல்லாம் தென் மொழியிலும் வெளியிட்டருளவேண்டுமென்று ஸங்கல்பித்து ஸ்வாமி அதை ஸர்வவிதத்திலும் தலைக்கட்டி, ஆழ்வார்கள் திருவுள்ளத்தை யனுகரித்துத் தமிழ் மொழியை வளம்பெறச் செய்திருப்பது தமிழர்களின் பரம பாக்கியம் என்று ஸவிநயம் கூறுகிறேன். உதாரணங்களாக மேலே காட்டியிருக்கும் நயங்களும் ரஸங்களும் ஸ்ரீ தேசிகனுடைய ஒவ்வொரு பாடலிலும் காணக் கிடக்கின்றன. ஓசை நயம் இவருடைய தனித்த தனம். இவர் பாடல்கள் மணி யோசைகளே யாவன. ப்ராக்ஞர்கள் பதே பதே யிதை யுணர்ந்தனுபவிக்க ஏதோ சில எடுத்துக் காட்டுமாறு அடியேனை நியமித்தவர்களுக்கு, அடியேன் க்ருதக்ஞதையைச் செலுத்துகிறேன்.

[ஸ்வாமியினுடைய திருக்குமாரர்
அன்புடன் அனுப்பிய கட்டுரை]

"தருமம் இரு மூன்று"

ஈ. தே. ஸ்ரீனிவாஸாசாரியார்.
திருவஹிந்திரபுரம்

இருமூன்று என்பது ஆறு என்ற தொகையையும் ஐந்து என்ற தொகைய்யையும் குறிக்கும். 2×3=6 என்ற பெருக்கல் வாய்ப்பாட்டின்படி 6 என்று தோன்றும். கம்ப ராமாயணத்தில் பால காண்டம் வேள்விப் படலத்தில் இரண்டு மூன்று நாள் என்ற (எண்ணுதற்காக்கரிது பாட்டின்) அடி 6 என்ற தொகையையும் 5 என்ற தொகையையும் குறிப்பிடுவது பிரசித்தம். அவ்வுடைய வேள்வி 6 நாள் நடந்தது. ஆனால் அவ்விசுவாமித்திரர் வானில் நட்சத்திரங்களைத் திசை மாற்றிச் சஞ்சரிக்கச் செய்தவர் என்ற விடத்தில் அனுஷம் கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் என்ற 5 நாட்களே குறிப்பிடப்படுவன. அதனால் இருமூன்று என்ற சொல் 5 என்றும் குறிப்புப்பெறும்.

எம்பெருமானைக் கூறுமிடங்களில் ஸத்யத்வம், ஞானத்வம், ஆனந்தத்வம், அனந்தத்வம், அமலத்வம் என்ற ஐந்தையும் ஸ்வரூப நிரூபக தர்மமாக ஆசார்யர்கள் கூறியருளுவர். அதுவே மறை காட்டிய வழி. மறைப் பொருளை உலகில் விளக்கவந்த மறைமுடித் தேசிகனாகிய ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன், தமது நூல்களில் ஆங்காங்கே சாத்திரநுட் பொருளையும் மறையில் பொலியும் தத்துவங்களையும் விளங்கக் கூறிப் போகும்போது பரமனுடைய ஸ்வரூப நிரூபக தருமமாகிய ஷை ஐந்தையும் விளங்க வைத்துப் பாடிப் போவது அவருக்கே யுரிய பெரும் பண்பு. திருவஹீந்திரபுரத்தில் அடியவர்க்குமெய்யனாகிய தெய்வநாயகனைப் பாடி யனுபவிக்கும் மும்மணிக் கோவையில் ஷை ஸத்யத்வம், ஞானத்வம், ஆனந்தத்வம், அநந்தத்வம் அமலத்வம் ஆகிய ஸ்வரூபநிருபக தர்மங்களை எளிய தமிழ்சொற்களில்அவர் அமைத்துப் பாடியருளும் அழகே அழகு. மும்மணிக் கோவை, "மழையில் எழுந்த" என்ற 4-ம் பாட்டைப் பார்ப்போம். அது மிகவும் பெரிய பாட்டாகையால் ஷை தர்மங்களை விளக்கும் அடிகளை மட்டும் இங்கே கவனிப்போம்.

—"வையம் அழிய வொன்றழியா
அடியவர் மெய்ய"

என்று பாடுகிறார். பரமனுடைய நித்யத்வம் கூறப்படும் இவ்வடியால் 'ஸத்யத்வம்' பேசப்படுகிறது.

"இந்துதன் நிலவுடன் இலங்கு
தன்மையினை,
நந்துதல் இல்லா நல் விளக்காகி"

என்று பாடுகிறார். தானும் கெடாமல் கேட்டோன்றையும் விளைவியாமல் இருக்கும் நல்விளக்கு என்பதனால் "ஞானத்வம்" பேசப்படுகிறது.

"அந்தமில் அமுத வழியாய் நிற்றி" என்று பாடுகிறார். அந்தமில் என்பதனால் முடிவற்ற தன்மை பேசப்படுவதனால் பரமனுடைய அநந்தத்வம் பேசப்படுவதுடன், "அமுத வாழி" என்பதனால் அநந்தத்வமும் பேசப்படுகிறது.

"சீர்கணம் சேர்ந்த சீலம் எல்லையிலை" என்றும் "அடியவர்கள் பிழைகள் நின்கருத்தடையாது அடைய வாண்டருளுமரசனும் நீயே" என்றும் "உயர்ந்த நீ யுன்னை எம்முடன் கலந்தனை" என்றும் பாடுகிறார்.

"எல்லையற்ற திருக்கலியாணகுணங்களுக்கு இருப்பிடமானவன்" என்பதும், தம் அடியவர்களுடைய பாபங்களைக் கருத்தினாலும் எண்ணிப் பாராமல் எல்லாரையும் அருள் செய்து ஆளுபவன் என்பதும், ஞானனந்த மயனாகிய அப்பிராக்ருத தேஜோராசியான வன் திரிகுணாத்மகமான பிரகிருதியில் பிராகிருத சரீரம் பெற்ற மனிதர்களோடு கலந்து உறவாடுகிறான் என்பதும் ஷை அடிகளின் கருத்து. ஆகையால் ஷை அடிகளால் "அமலத்வம்" என்றமையும் விளக்கப் பட்டது என்பர் பெரியோர்.

அடிக்கு அடி, பதத்திற்குப் பதம், ஏன்... எழுத்துக்கு எழுத்து இப்படி வேதாந்தார்த் தங்கள் பொலியப் பாடியருளும் வன்மை அத்தூப்புல் வள்ளலுக்கன்றி மற்றையோர்க்கு வருமா!!

ஸ்தோத்திரங்களின் மஹிமை

ஸ்ரீ உபயவேதாந்த வித்வான்,
ராமாயண பூஷணம், உபந்யாஸ கேஸரீ,
பௌராணிக ஜீவரத்னம்,
கோமல். டி. சேஷாத்ரியாசாரியார் ஸ்வாமி,
சைதாப்பேட்டை.

இந்த மஹநீயர் அவதரித்து, தன் அநுஷ்டானத்திலும், உபதேசத்திலும், ஸம்ஸ்கிருதத்திலும், தமிழிலும், ப்ராகிருதத்திலும், மணிப்ரவாளத்திலும், பல விஷயங்களை அருளிச் செய்தும், உலகத்திற்கும் மஹோபகாரம் செய்யாமலிருந்தால், ஔபநிஷதமதம் என்ற விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமே ஒழிந்திருக்கும். இவர் அருளிச் செய்த ஸ்தோத்திரங்களின் மஹிமையை சிறிது விவரிக்கிறேன்.

ஹயக்ரீவஸ்தோத்திரத்தை, பாராயணம் செய்பவர்களுக்கு கல்வி மிக அபிவிருத்தியடையும். அபிதிஸ்தவமோ அதன் பெயருக்கிணங்க ஸகலவிதமான பயத்தையும் தீர்க்கும். ஸ்ரீஸ்துதியோ தரித்திரத்தை நீக்கி, ஸர்வஸம்பத்தையும் அளிக்கும் ஸுதர்சனஷ்டகமோ, எல்லாவிதமான கவலைகளையும் கஷ்டங்களையும் நீக்கி, ஞாபக சக்தியைக் கொடுக்கவல்லது. நீதிமன்றங்களில் வெற்றி, நோய்களைத் தீர்ப்பது, முதலிய இஹலோக பலன்களையும் தரவல்லது என்பது பல பெரியோர்கள் கண்ட உண்மை. கருட தண்டகம், கருட பஞ்சாசத் இவை விஷ ஜந்துக்களை விரட்டுவதுடன், உடம்பில் விஷ ஸம்பந்தமான எல்லா நோய்களையும் போக்குவதுடன் துர்நீர் ஸம்பந்தமான ரோகங்களையும் நீக்கி விடும்.

ஒரு ஆஸ்திகர் அடியேனுக்கு மிகவும் ஆப்தர். அவர் எப்பொழுதும் இம் மந்திரத்தை ஜபம் செய்து சரீரத்திலுள்ள துர்நீர்கள் நீங்கி ஸ்வஸ்தராக இப்பொழுதும் வாழ்ந்து வருகிறார். நிகமாந்த மஹாதேசிகனிடம் உள்ள ஓர் ஆஸ்சரிய சக்தி என்னவென்றால், வேதாந்த விஷயமாகவே பல க்ரந்தங்கள் அளிச் செய்திருந்தும், ஸ்தோத்திரங்களிலும் வேதாந்த விஷயங்களை புகுர விடுவது உலக மக்கள் உண்மையறிந்து எம்பெருமான் திருவடிகளில் ஈடுபட்டு உய்ந்து போக வேண்டும் என்ற நோக்கமேயாம்.

உதாஹரணமாக, கருட தண்டகத்தில் வேதங்களாகிற பாற் கடலிலிருந்து அமுதம் போன்ற வித்யைகளை எடுத்து உலகத்திற்கு உபகரிப்பதில் (முன் பாற் கடலைக் கடைந்து அமுதமெடுக்க உபயோகிக்கப்பட்ட மந்தரமென்னும் மலையை ஒத்தவர் என்கிறார். முன் காலத்தில் மலைகளுக்கும் இறக்கைகள் உண்டு. கருடனுக்கும் இறக்கைகள் இருப்பதை நினைத்து அருளியது. இதை ஸ்ரீ பாஷ்யத்தில் ஸ்ரீ உடையவர் இரண்டாவது மங்கள ச்லோகத்தில் கருடன் வேதமாகிற ஸ்ரீ பாஷ்யத்திற்குரிய அக்ஷரங்களை கொண்டுவந்ததை அருளிச்செய்கிறார்.

இந்த கருட தண்டகத்தில், இந்த கருடனுடைய மூலமந்திரம் மறைத்து சொல்லப்பட்டிருக்கிறது. இம் மந்திரம் ஐந்து எழுத்துக் கொண்டது. இதை ஜபித்தால் மழையை வரவழைக்கவும் அதிக மழையானால் அதை நிறுத்தவும் முடியும். பட்டுப்போன மரங்கள் துளிர்க்கும். ஓர் மஹான் இம் மந்திரத்தை அடியேனுக்கு உபதேசித்தார். அடியேனுக்கும் சில ஸித்திகள் இதனால் ஏற்பட்டிருக்கிறது. அடியேனுக்கு உபதேசித்த மஹான்

மழையில் சென்றால் அவர்மேல் ஒரு துளிகூட மழை ஜலம் விழாமல் கருடன் காப்பார்.

அவர் அரசாங்க உத்தியோகத்திலிருந்த பொழுது இம் மந்திர ஜபத்தால் பல நன்மைகளை அடைந்ததாக அம்மஹான் ஸாதிக்கக் கேட்டிருக்கை. இம் மஹா மந்திரத்தை நடுவில் வைத்து ஸ்தோத்திரம் அருளிச் செய்ய தேசிகனை அவதரித்த திருவேங்கடமுடையானைத் தவிற, யாரே வல்லார்!! எல்லா இதிஹாஸங்களும் புராணங்களும் முகஸ்தமாயுள்ள இந்த நிகமாந்த மஹா தேசிகன் மிக ரஹஸ்யமாயும், ஏதோ ஒரு புராணத்திலுள்ள வாலகில்ய சரித்திரத்தை இதில் சுட்டிக் காட்டுகிறார். அதாவது, கச்யப முனிவரின் வேள்விக்கு உபகாரம் செய்யவந்த மிகச் சிறிய உருவமும், மிகப் பெரிய தவத்தினருமான வாலகில்யர்கள் மாட்டின் குளப்படியாக உள்ள ஜலத்தில் மூழ்கியதைக் கண்டு, தேவேந்திரன் பரிஹாஸம் செய்ய, அதனால் கோபங்கொண்ட ரிஷிகள் இந்திரனின் செருக்கை அடக்க ஒரு மஹா புருஷன் அவதரிப்பார் என்று சபிக்க, அதனால்தான் கருடன் அவதரித்து அமிருதம் கொண்டுவரும் ஸமயத்தில் தேவேந்திரனுடைய செருக்கை அடக்கியதையும் ஸாதிக்கிறார். இப்படி எல்லா ப்ரகாரத்திலும் நமக்கு மஹோபகாரம் செய்த ஆசாரிய வள்ளலுடைய புகழைப் போற்றி நல் வாழ்வு வாழ்வோமாக.

ஸ்ரீமத்பரம...பரி...வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்
(திருப்பதி ஸ்வாமி)

ஸ்ரீமத் ஸ்ரீரங்க ராமாநுஜ முநி கருணா சீதலாபாங்கதாரா
ஸம்பாதோல்லாஸ ஸம்பாதித நிகம சிகாயுக்ம தத்வாவபோதம்
ப்ரக்ஞா வைராக்ய சாந்தி ப்ரப்ருதி சுபகுண ச்ரேணி ரத்நாம்புராசிம்
ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ முநிம் அனகம் ஸம்ச்ரயே பக்தி பூம்நா-

வைகாசி உத்தரம்

ஸ்ரீ தேசிகனே ஒப்பற்ற ஆசார்யன்

ஸ்ரீ மதுபயவேதாந்த வித்வான்
வங்கீபுரம், நவநீதம்,
ஸ்ரீராமதேசிகாசார்யார் ஸ்வாமி,
வித்யா விசாரத, சிரோமணி, வித்வான்.
ஒப்பிலியப்பன் ஸந்நிதி.

ஆசார்ய லக்ஷணமும் தேசிகனும்

உலகுக்குச் செய்த மஹோபகாரத்தால் ஆசார்ய பரம்பரையில் மற்ற எவரும் பெற முடியாத பெருமையைப் பெற்று நிகரற்று விளங்கியவர் நம் தேசிகன் ஒருவரே. ஆசார் யனுக்கு உள்ள லக்ஷணங்களைப் பல்வேறு சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஸ்ரீ தேசிகன் தாமே பதினான்கு அம்சங்களை ஆசார்ய லக்ஷணங்களாக விளக்கியுள்ளார். அவை யாவன-(1) ஆழ்வார்-நாதமுனிகள்-மடைப் பள்ளியாச்சான் முதலிய ஆசார்யர்கள் வழி யாக வந்த தூய்மையான ஸம்ப்ரதாயத்தில் உறுதியுடன் நிலைபெற்றிருத்தல் (2) பிறரால் கலக்கமுடியாத மனவுறுதி பெற்றிருத்தல் (3) எவ்வகைக் குற்றமுமற்றிருத்தல் (4) வேத வேதாந்தங்களை நன்கு கற்றிருத்தல் (5) எம் பெருமானிடம் உறுதியான பக்தியுட னிருத்தல் (6) ஸத்துவ குணம் நிரம்பப் பெற்றிருத்தல் (7) வஞ்சகம் கலக்காத உண்மை பேசுதல் (8) அந்த அந்தச் சூழ் நிலைக்கு ஏற்றவாறு பெரியோர்கள் வரை யறுத்த சிறந்த அநுஷ்டாநமுடைமை (9) டம்பம் பொறாமை முதலிய இழிகுணங்களற் றிருத்தல் (10) இந்திரியங்களை அடக்கும் சக்தியுடைமை (11) சீடனுக்கு இம்மையில் நல்வழி காட்டி மறுமையிலும் உயர்கதியைப் பெற உதவும் தன்மை (12) அருளைச் சுரத்தல் (13) சிஷ்யன் தவறி நடந்தால் தாக்ஷிண்ய மின்றித் திருத்துதல் (14) தனக்கும் பிறருக் கும் நன்மையானதை நாடல் என்பன. இந்தச் சிறந்த தன்மைகளையுடைய ஸதா சார்யனையே அடைய வேண்டுமென்று ஸ்வாமி தாமே அருளிச் செய்துள்ளார். இவ் வாறு சாஸ்த்ரங்களும் தாமும் குறித்த இத்துணை லக்ஷணங்கள் ஒருங்கே பொருந்திய ஆசார்யன் தேசிகன் ஒருவரே யென்பது பழம்பெரியோர்கள் கண்டு அநுபவித்துப் பேசிய உண்மை.

தத்துவ ஞானத்தின் அவசியம்

உலகில் சேதநன் தான் உய்வதற்கு அறியவேண்டிய அம்சங்கள் மூன்று. அவை யாவன—தத்துவம், ஹிதம், புருஷார்த்தம் என்பன. சேதநம்—அசேதநம்—ஈச்வரன் என்னும் மூன்று தத்துவங்களை விரிவாய் அறிந்து பக்தி-ப்ரபத்தி என்னும் உபாயங் களுள் ஒன்றை அநுஷ்டித்து, மோக்ஷமாகிய பரம புருஷார்த்தத்தைப் பெறவேண்டும். இதற்கு இம் மூன்று அம்சங்களையும் அறிவது அவசியமானதன்றோ! ஸ்வாமி தேசிகன் இந்த மூன்றையும் முக்கியமாகப் பற்றிப் பாசுரங்களாலும் சுலோகங்களாலும் ரஹஸ் யக்ரந்தங்களாலும் சாஸ்த்ரக்ரந்தங்களாலும் பெரிய விளக்கம் தந்தருளியுள்ளார்.

வேதாந்தாசார்ய - ஸாம்ராஜ்யம்

ஸ்ரீ தேசிகனுக்கு முன் பல ஆசார்யர்கள் வேதாந்த சாஸ்த்ரத்தை உபதேசித்துப்

ப்ரவர்த்தகர்களாயிருந்துள்ளார்கள். அவர்களில் எவருக்காவது வேதாந்தாசார்ய விருது உண்டா? இந்த விருதைப் பெரிய பெருமாள் தேசிகனுக்கு மட்டுமன்றோ அளித்து ஆசார்ய ஸாம்ராஜ்யத்துக்குச் சக்கரவர்த்தியாகப் பட்டாபிஷேகம் செய்து மகிழ்ச்சியுற்றான். ஸ்ரீ தேசிகன் திருக்குமாரர் திருவடிகளில் ஆச்ரயித்துப் பெருமை பெற்ற ஸ்ரீ அண்ணன் தம் ப்ராசார்யரான ஸ்ரீ தேசிகன் பெருமையை நன்கு கண்டு இயற்றிய ஸ்தோத்ரத்தில் புருஷோத்தமன் என்ற சொல் எம்பெருமானை யன்றி வேறொருவரையும் குறிக்காதது போல் வேதாந்தாசார்யன் என்ற சொல் தேசிகனை யன்றி மற்ற எவரையும் கூறமாட்டாதென்கின்றார். ஸ்ரீ தொட்டயாசார்யரும் ஸ்ரீ ஹயக்ரீவன் திருவருளால் ஆச்சர்யமான சக்தியைப் பெற்றுக் கவிதார்க்கிக ஸிம்ஹமாய் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரராய் விளங்கும் ஸ்ரீ தேசிகன் வேறு யாருக்கும் கிட்டாத வேதாந்தாசார்யன் என்னும் விருதைத் திருவரங்கனால் அளிக்கப் பெற்று விளங்குவதாகவும் ஸ்வாமியின் இந்த விருதை எவரும் ஆக்ஷேபிக்க முடியாதென்றும் சுலோகமிட்டுள்ளார். இங்ஙனம் வேதாந்தாசார்யனென்னும் சொல் ஈரரசு படாதபடி ஸ்வாமியையே குறிப்பதாய்த் திகழ்கின்றது.

அவதார ரஹஸ்யம்

ஸ்ரீ தேசிகன் ஸகல சாஸ்த்ரங்களிலும் இஷ்டப்படி ஸஞ்சரிக்க வல்லமையைப் பெற்றதாலும் வேதாந்த சாஸ்த்ரமாகிய நல் விளக்கை உலகுக்கு அருளியபடியாலும் திருவேங்கடமுடையானே நேரில் தேசிக வடிவு கொண்டு அவதரித்ததாக ஸ்ரீ அண்ணன் அருளிச் செய்துள்ளார். அவனுடைய திருமணியாழ்வாரின் அம்சமாக அவதரித்த தேசிகன் புரிந்த உதவியால் ஸ்ரீ பாஷ்யம் எதிர்ப்பின்றிப் பிரகாசிப்பதாயும் விளக்குகின்றார். ஸ்ரீ நயினாராசார்யர் அருளிய தேசிக மங்களத்தில் ஸ்வாமி தேசிகன் திருவேங்கடமுடையானது அவதாரமோ? அவனது திருமணியின் அவதாரமோ? எம்பெருமானாரின் அவதாரமோ? என்றெல்லாம் கருதப்படுபவர். என்று அருளிச் செய்துள்ளார். உண்மையில் யாருடைய அவதாரம் என்ற ஆராய்ச்சியில் புகவேண்டிய அவசியமில்லை. திருவேங்கடமுடையானே திருமணியாழ்வாரினுட் புகுந்து தர்சந ஸ்தாபகரான எம்பெருமானாரின் அம்சத்தையும் கலந்து ஆக மூவரின் ஸமுதாயாவதாரமாகச் செய்வித்த ஓர் அதிசய நிகழ்ச்சி இது என்று முடிவு கண்டனர் பெரியோர். ப்ரஹ்மாண்ட புராணத்தில் திருவயிந்திரபுர மான்மியம் கூறு மிடத்தில் கலியுகத்தில் எம்பெருமானது திருமணியின் அவதாரமாய் ஒரு மஹாபுருஷர் தோன்றி அவ்வூரின் மலையில் தவம் புரிந்து ஸித்தி பெறப் போகின்றார் என்று கூறப்பட்டுள்ளது. முன்னோர்கள் பலர் திருமணியின் அவதாரமென்றே கொண்டு சுலோகங்களை இயற்றியுள்ளனர். ஸ்ரீ தேசிகன் தாமே அருளிய சுலோகத்தில் ''பொருத்தங்கள் மிகுதியாயிருப்பதைக் கொண்டு பெரியோர்கள் தம்மை எம்பெருமான் திருமணியின் அவதாரமென்று உத்ப்ரேக்ஷிப்பதாக அருளியுள்ளார்'' இங்குத் திருமணியின் அவதாரமென்று உறுதியாய்க் கூறாமல் பெரியோர்கள் உத்ப்ரேக்ஷிப்பதாகக் கூறுவானேன்? என்ற கேள்வி எழலாம். இதற்கு ஒரு ப்ராசீந மஹாபுருஷர் மிகப் பொருத்தமான ஒரு ஸமாதாநத்தைக் கூறியுள்ளார். ஸ்ரீ தேசிகனது 600 ஆண்டு பூர்த்தி மஹோத்ஸவத்தைக் கண்கூடாகக் கண்டு அநுபவித்து ஜ்ஞாநவைராக்யாதிகளால் அபரதேசிகனாய் விளங்கிய திருவயிந்திரபுரம் ஸ்ரீ தேவநாதாசார்ய ஸ்வாமி தேசிகன் திருவுள்ளத்தை உள்ளவாறு கண்டு வித்வான்கள் மனமுருகும்படி தயாசதகத்துக்கு ஓர் அற்புதமான வியாக்கியானத்தை இயற்றியருளியுள்ளார். அது ஏறக்குறைய 75 ஆண்டுகட்கு முன் அச்சிடப்பெற்று இப்பொழுது கிடைக்காத நிலையில் உள்ளது. அதன் முன்னுரையில் அந்த மஹான் கூறிய ஸமாதாநம் வருமாறு—உலகத்தை வாழ்விப்பதற்காக எம்பெருமான் ஸங்கல்பித்துச் செய்வித்தது தேசிகனுடைய அவதாரம். திருமணியாழ்வாரின் அவதாரமென்பது ஒரு ரஹஸ்யம். அவதார ரஹஸ்யத்தை வெளிப்

படையாய்க் கூறக் கூடாதென்பது முன்னோர்களின் கொள்கை. இராமபிரானை அக்காலத்திலுள்ள பல அறிஞர் நாராயணனென்றே அறிந்திருந்த போதிலும் அந்த ரஹஸ்யத்தை வெளியிடக் கூடாதென்று திருவுள்ளம் கொண்ட அவன் தன்னைத் தசரத புத்திரனாய்ப் பிறந்த ஒரு சாதாரண மனிதனாகவே கூறிக் கொள்கின்றான். அம்முறையையே பின்பற்றி ஸ்வாமி தாமும் கண்டாவதார ரஹஸ்யத்தை வெளிப்படையாகக் கூறாமல் பிறர் அவ்வாறு உத்ப்ரேக்ஷிப்பதாகக் கூறியருளியதாகத் தெரிகின்றது என்பது. ஆயினும் முற்கூறிய மூவரின் ஸமுதாயாவதாரமாகக் கொள்வதில் இடர் ஏதுமில்லையென அந்த மஹாநுபாவரும் விளக்கியுள்ளார்.

எம்பெருமானார் தர்சநம்

உபநிடதத்தையே மூலமாகக் கொண்டு எம்பெருமானைப் போல் அநாதியாகத் தோன்றிய நம் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் பிற்காலத்தில் நம்மாழ்வாரால் புத்துயிர் அளிக்கப் பெற்று ஸ்ரீ நாதமுனிகளால் உலகில் நன்கு பிரவர்த்திக்கப் பெற்றது. பின் அவர் திருப்பேரனாரான ஆளவந்தாரால் அந்த ஸித்தாந்தம் பல கிரந்தங்களை இயற்றி நன்கு வளர்க்கப் பெற்றது. அந் நிலையில் பிற மதத்தினரின் உபத்ரவத்தால் நலிவுறத் தொடங்கிய நம் ஸித்தாந்தத்திற்கு ஒரு பாதுகாப்பு அவசியமாயிற்று. அப்பொழுது தான் எம்பெருமானார் அவதரித்துப் பிற மதத்தினருடன் வாதம் புரிந்து அவர்களை வென்றதுடன் ஸ்ரீ பாஷ்யம் முதலிய கிரந்தங்களையும் இயற்றி நம் ஸித்தாந்தத்தைப் பிறர் அசைக்க முடியாதவாறு பாதுகாத்தருளினார். இங்ஙனம் அவர் செய்தருளிய உபகார விசேஷத்தாலேயே அநாதியான ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் எம்பெருமானார் தர்சநமெனப் புதிய திருநாமம் பூண்டது.

ஸ்ரீ தேசிக தர்சநம்

இங்ஙனம் ஸ்ரீ பாஷ்யகாரருடைய அணைப்பில் மிக்க செழிப்புற்று விளங்கிய நம்ஸித்தாந்தத்திற்கும் அவருக்குப் பிற்காலத்தில் பிறரால் இன்னல் விளையலாயிற்று. அந்தச் சூழ்நிலையில் தான் ஸ்ரீதேசிகன் அவதரித்துப் பிறர் கூறும் வாதங்களையெல்லாம் கண்டித்தொழித்துப் பற்பல கிரந்தங்களால் ஸ்ரீபாஷ்யகாரருடைய தர்சநத்தை ஸ்தாபித்தருளினார். இவ்வாறு ஸ்ரீ தேசிகனால் மஹோபகாரத்தைப் பெற்ற இத்தர்சநம் பின் ஸ்ரீ தேசிகதர்சநமென்றே வழங்கலாயிற்று. இத் தர்சநம் இப்படி ஸ்ரீ தேசிகனால் ஸ்தாபிக்கப்பட்ட பின்பே பிறர் ஏற்றும் குற்றங்களையெல்லாம் ஒழித்து உலகின் அஜ்ஞானவிருளைப் போக்க வல்லதாயிற்றென்னும் உண்மையை ஸ்ரீ தேசிகன் தாமே ஸூசிப்பித்தருளியுள்ளார்.

மேலும் ஸித்தாந்த விஷயத்தில் ஸ்ரீ பகவத் ராமாநுஜாசார்யர் வைத்த முத்திரையை இன்னதென்று நிர்ணயிக்கத் தம்மையன்றி வேறொருவருக்கும் வல்லமை இல்லை என்று ஸாத்துவிகமான பெருமிதம் கொண்டு தேசிகன் தாமே வெளிப்படையாய்க் கூறியுள்ளார். இதற்குக் காரணம் யாதெனில் பெரிய ஆசார்யனாய் விளங்கிய அப்புள்ளாருக்குச் சிஷ்யராய் நின்று நன்கு பயிற்சி பெற்றதால் தமது அறிவு நூறு மடங்கு பெருகிவிட்டதே யென்கின்றார். அதனால் ஸித்தாந்த விஷயங்களில் கவனக்குறைவு சிறிதும் இன்றி ஸாவதாநமாய் முடிவு காண்பராம். இதனாலேயே தாம் கூறியதைத் தழுவியே தம் சிஷ்யர்களும் மற்ற விஷயங்களை நிர்ணயிக்கவேண்டுமேயன்றி அதற்கு முரண்பாடாக முடிவு காணக் கூடாதென்று கட்டளையையும் பிறப்பித்துள்ளார். இவ்வளவு பாடுபட்டுத் தேசிகன் ஸ்தாபித்த ஸித்தாந்தம் 'ஸ்ரீ தேசிக தர்சநம்' என்று பெயர் பூண்டதில் வியப்பென்ன? நம்மாழ்வார் வழியாக வந்து எம்பெருமானாரால் நன்கு காக்கப் பெற்ற இந்தத் தர்சநம் அவர் திருமுடி ஸம்பந்தம் பெற்ற இரண்டு ஆசார்யர்களால் பிரவர்த்திக்கப்பட்டும் வளர்க்கப்பட்டும் அவர் திருவடி ஸம்பந்தம் பெற்ற நம் தேசிகனால் விசேஷ ஒளியூட்டப் பெற்றும் இன்று நாட்டில் ஒப்பற்ற பெருமையுடன் விளங்கி வருகின்றது.

ஸ்ரீ தேசிக தர்சநத்தின் சாச்வதத் தன்மை

ஆனுல் ஸ்ரீ தேசிகன் காலத்துக்குப் பின் தோன்றும் புற மதத்தினரான ப்ரதிவாதி களால் எதாவது கலக்கம் வருமோ என்று அஞ்சுவதற்கும் இடமில்லை. ஸ்ரீ தேசிகனையே பரதேவதையாகக் கொண்டு வாழ்ந்து சததூஷணிக்கு அதியற்புதமான வியாக்கி யானத்தை இயற்றிய ஸர்வஜ்ஞரான ஸ்ரீ தொட்டயாசார்யர் இவ்விஷயத்தை ஓர் உவமானம் கொடுத்து விளக்கியுள்ளார். உலகில் இருள் போவதற்கென்றே தீபம் ஏற்றப் படுகின்றதாம். ஏற்றிய பின் ஜந்துக் கள் தாமாகவே அத்தீபத்தில் வந்து வீழ்ந்து மடிகின்றனவாம். அவ்வாறே ஸ்ரீ தேசிகன் தம் காலத்திலுள்ள புலவர்களின் வாதங் களைக் கண்டித்து ஒழிக்கவே வாதக் கிரந்தங் களை இயற்றினுராம். ஆனுல் அவை பின்னுல் வரப்போகும் வாதங்களை ஒழிக்கவும் வல்ல மையுடையனவாம். ஏனெனில்—பின்னுல் தோன்றும் பிற மதத்தினரின் அறிவுக்குப் புலப்படாத வாதங்களைக் கூட ஸ்வாமி தாமே எழுப்பி அவற்றுக் கெல்லாம் உரிய விடை களைத் தம் கிரந்தங்களில் பொதிந்து விட்டா ராம். இத்தத்துவத்தை அந்த மஹான் கண் கூடாகக் கண்டு வெளியிட்டுள்ளார். இந்தப் பெருமைகளை யெல்லாம் அவர் உள்ளத்துக் கொண்டே ''பிரதிவாதிகளை வெல்லும் ஆற்றலில்லாதவர்களாய் ஸ்ரீ பாஷ்யகாரரின் ஸ்ரீ ஸூக்திகளின் உட்கருத்தை அறியாதவர் களாய் ஸம்ப்ரதாயத்தில் பழக்கமில்லாதவர் களான மானிடப் பிறவிகள் இவ்வுலகத்தில் இருப்பதில் என்ன பயன்'' என்று கேட் கின்ருர். மேலும் இந்த மஹான் தேசிகனைக் காட்டிலும் சிறந்த ஆசார்யன் உலகில் இல்லையென்றும் அவர் ஸூக்தியினும் சிறந்தது எதுவும் இல்லையென்றும் முழக்கு கின்ருர். இது மட்டுமோ? ஒருவர் கண்ணுக் கும் புலப்படாத ஸர்வேச்வரனைத் தம் ஸூக்திகளால் நம் கண்முன் கொண்டுவந்து காட்டுபவர் நம் தேசிகன் என்கின்ருர்.

முடிவுரை

இங்ஙனம் ஒப்பற்ற ஆசார்யனென அஸூ யை யற்ற மேதாவிகளான பல மஹான் களால் ஒரு முகமாய் நெடுங்காலமாகப் போற்றப்பட்டு ஆசார்ய பரம்பரையில் தனிச் சிறப்புடன் விளங்கும் நம் தூப்புல் வள்ளல் இந் நிலவுலகில் அவதரித்து இவ்வாண்டின் புரட்டாசித் திருவோணத்தில் எழுநூருண்டு கள் பூர்த்தியடைகின்றன. இந்த மஹோத் ஸவத்தை நிகரற்ற விபவத்துடன் நடத்தி மகிழ்வது நம் கடமையாகிய கைங்கர்ய மாகின்றது. ஸ்வாமியால் நாம் அடைந்த பரமலாபத்தைச் சிந்திக்கும் போது நாம் எத்துணைச் சிறப்புடன் இம்மஹோத் ஸவத்தை நடத்தினுலும் மிகமிகச் சிறிய அளவுக்கேயாம் என்பதைக் கூறவேண்டிய அவசியமில்லை. விபவதசையில் வைராக்ய நிதியாய் இல்லறத்திலிருந்து கொண்டே துறவற மனப்பான்மை கொண்டு ஏகாந்த சீல ராய் எழுந்தருளியிருந்த நம் தேசிகன் தமக் காக இத்தகைய மஹோத்ஸவத்தை அதிக விபவத்துடன் நடத்த அநுமதிக்க மாட்டா ரெனினும் இப்பொழுது அர்ச்சைத் திருமேனி களுடன் பிரகாசிக்கும் ஆசார்ய ஸார்வபௌ மருக்கு விரிவான முறையில் இந்த வைபவத் தை நன்கு நடத்தி மகிழ்வதினும் பெரிய தோர் இன்பமில்லை. பல இடங்களிலும் இதற்காக ஸமிதிகள் ஏற்பட்டு இக்கைங் கர்யத்தைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு ஆலோசனை கூறி வழிகாட்டச் சென்னையில் ஒரு தலைமைக் கமிட்டி பல பெரியோர்களால் அமைக்கப்பட்டு அருமையான செயல் புரிகின்றது. இந்த ஸமிதி இம்மஹோத்ஸவத் தின் சின்னமாகப் பல விசேஷ கைங்கர்யங் களை நாட்டுக்குப் பக்தியையும் அறிவையும் வளர்ப்பதற்குப் பாங்காகச் செய்ய அல்லும் பகலும் பாடுபடுகின்றது. இத்துடன் ஒத் துழைத்து இது காட்டும் வழியில் பக்தர்கள் நடக்க முன் வந்தால் பல அரிய தொண்டு களை உலகுக்கு ஆற்ற முடியும். இந்த மஹா ஸமிதியின் பரமபாவனமான இந்த மநோரதத் தைத் தலைக்கட்டிவைத்து ஸ்ரீ தேசிகதர்ச நத்தை மேன்மேலும் தழைத் தோங்குமாறு செய்தருளித் தானும் உகந்து பிறரையும் உகக்கச் செய்யுமாறு திரு விண்ணகரப்பன் திருவடிகளில் பிரார்த்தித்து ஸ்ரீ தேசிகன் திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டே இச் சிற்றுரையைப் பூர்த்தி செய்கின்றேன்.

ஸ்ரீமத் பரம...பரி...ஸ்ரீரங்கநாத மஹா தேசிகன்

மன்னார்குடி ஸ்வாமி

ஆத்ய ஸ்ரீநிதி யோகிலப்த மநுமத் ஸ்ரீ வாத்ஸ்ய ராமாநுஜாத்
ஸம்ப்ராப்தாங்கந மந்த்ரஜாதமபரஸ்ரீவாஸயோகீச்வராத்,
ப்ராப்தாந்த்யாச்ரம வேத மௌளி யுகளம் தேநார்பிதம் ஸ்ரீபதௌ
ஜ்ஞாநாப்திம் ஸுகுணாகரம் முனிவரம் ஸ்ரீரங்கநாதம் பஜே.

தேசிகனும் - நான்கு துறைகளும்

ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான்
அக்நிஹோத்ரம் —
வரதாச்சாரியார் ஸ்வாமி
நியாய வேதாந்த சிரோமணி
நாவல்பாக்கம்,

பக்தி, நல்லொழுக்கம், வைதிக கர்மங்கள், தத்வஜ்ஞானம் ஆகிய நான்கு பொருட்கள் சேதனர்களை உய்விக்க அமைந்தவை. நிகமாந்த மஹாதேசிகனின் ஸ்ரீ ஸூக்திகளே இவற்றை ஐயம் திரிபு அற உபதேசிக்கின்றன. ஆகவே ஸ்வாமியின் அவதாரம் ஏற்படவில்லையானல் அப் பொருட்களைப் பெருது உலகம் நல்வாழ்வை யிழந்து விடும். இக்கருத்தினை மஹாகவி ஸ்ரீவேங்கடாத்வரி

ஸ்ரீ வேங்கடேச குருணு கருணகரேண
நாவாதரிஷ்யத யதீஹ பவாப்திநாவா
அக்ஞாதபக்தி ஜகதச்ருதஸச்சரித்ரம்
அக்ஞாதசாஸ்த்ரமப விஷ்யத்
அவைதிகம் ச.

என்ற சுலோகத்தினல் வெளியிட்டருளினர். இதனல் ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகளை (1) பக்திப் பகுதி (2) ஸதாசாரசீலப் பகுதி (3) வைதிககர்மானுஷ்டானப் பகுதி (4) தத்வோபதேசப் பகுதி, என்று நால் வகையாகப் பிரித்தோதலாம் என்பது பெறப்படுகிறது. இப்படிபட்ட ஸ்ரீ ஸூக்திகளில் ஒவ்வொன்றுமே அநுஸந்திப்பவர்க்கு **பித்யதே ஹ்ருதயக்ரந்தி:** என்றபடி ஸம்சய, விபர்யயங்களைப் போக்கித் தரும் நிருபண சாதுர்யம் பெற்று இவ்வுலக வாழ்வினையும் வானுலக வாழ்வினையும் அமைக்கவல்லது. இவ்வர்த்தத்தை லோகாசார்யர் சீரொன்று தூப்புல் தனியனில் **''ஓரொன்று தானே யமையாதோ** தாரணியில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வு'' என்று விளக்கியுள்ளார்.

ஆக ஸ்ரீஸூக்திகளின் நான்கு பகுதிகளில் விஷய நிருபண சாதுர்யமும் இவ்வுலக வானுலக வாழ்வினை யமைக்கும்படியும் இவ் வ்யாஸத்தில் அநுஸந்திக்கப்படுகிறது.

(1) **பக்தி** :-இது பகவானை அடைவதற்கு உபாயம்

உபாயபக்தி, ஸாத்யபக்தியென இது இரு வகைப்படும்.

உபாயபக்தி :-இது பரமபதத்திற்குப் பிரயாணம் பண்ணும் திவஸம் அறுதியாக நாள் தோறு மனுஷ்டிக்க வளர்ந்து வருவதாய் தைல தாரை போல் நிரந்தரமான பகவத் தியான ரூபமாயிருக்கும்.

இங்கு ஸ்ரீஸூக்தி நிருபண சாதுர்யம்:- நாயமாத்மா என்ற ச்ருதிக்கு யதாச்ருதத்தில் தியானம் உபாயமில்லை என்று அர்த்தம் தோன்றும். இந்த ச்ருதிக்குப் பாஷ்யகாரர் ''பக்தியில் பர்யவஸான மடையாத த்யானம் உபாயமன்று, பக்திரூபமான த்யானமே உபாயம்'' என்று பொருள் கண்டார். இவ் வர்த்தமே நியாயத்திற்குப் பொருந்தும்படியையும், யதாச்ருதார்த்தம் பொருந்தாதபடியையும் தேசிகனின் ஸ்ரீஸூக்தி அழகாகத் தெளிவிக்கின்றது.

வேதம் அபூர்வமான ஒன்றை விதித்து அதனையே பாதிக்காது. ஆகவே நிஷேத வாக்யம், விஹிதத்தைப் பாதிக்கும் தகுதியில்லாததாலும் விஹிதத்திற்கே பக்தியாகிய வேறொரு விசேஷத்தை விதிப்பதாலும், அப்ரஸக்த ப்ரதிஷேத வாக்யத்துடன் கூடியிருப்பதாலும் விஹிதமான ஸாமன்யவிதி பக்தியாகிய விசேஷத்தையே குறிக்கும் ஆகையால் பக்தியல்லாத தியானம் உபாயமாகாது என்று சொல்ல வந்தது.

இந்த அர்த்தத்தை **ந ப்ருதிவ்யாம் ந அந்தரிக்ஷே ந திவ்யக்நிஸ் சேதவ்ய இதி** என்ற மீமாம்ஸா நியாயத்தால் நிரூபிக்கிறார்: அதாவது அக்னிசயனம் பூமியிலும் ஆகாசத்திலும், திவியிலும் இவ்வாக்கியத்தினால் நிஷேதிக்கப்படுகிறது. பூமியில் அக்னிசயன விதி வேறு உள்ளது. ஆகாசம் முதலியவற்றில் சயனம் செய்ய முடியாததால் அதனை நிஷேதிப்பது அப்ரஸக்த ப்ரதிஷேதமாகிறது. மேலும் சயனாதாரமான பூமி ஹிரண்ய முடையதாயிருக்க வேண்டும் என்ற விசேஷ விதியும் உள்ளது. ஆகையால் இந்த நிஷேத வாக்யம் ஹிரண்யமில்லாத பூமியில் சயனம் கூடாதென்று சொல்லி அந்த பூமியில் ஹிரண்யத்தை வைத்து அங்கு சயனம் செய்யவேண்டும் என்ற விதானத்தில் விச்ரமித்தது. அது போலே அந்த நியாயம் எல்லா விதத்திலும் மேற்கூறியபடி பொருந்தியிருப்பதால் பக்தியாகிய விசேஷத்தை இந்த நிஷேதவாக்யம் விதிக்க வந்தது என்று நிரூபித்தபடி. இப்படிப்பட்ட அர்த்த விசேஷானுஸந்தானம் **முக்தாநுபூதிமிஹதாஸ்யதி மே முகுந்த** என்றபடி முக்ததுல்யமான பகவதனுபவத்தைத் தந்தும் பின்பு முக்தியையும் தந்தும் வானேறப் போமளவும் வாழ்வை அமைத்தது.

ஸாத்ய பக்தி: இது ப்ரபத்தி யென்று பேர் பெற்றிருக்கும்.

இதன் ஸ்வரூபமாவது:- நான் எனக்கு உரியேனல்லேன். எனது என்று ஒரு பொருளுமில்லாதவன். இவற்றின் ரக்ஷண பரமும் அதனால் வரும் பயனும் ஸர்வரக்ஷகனான ஸர்வேச்வரனுடையதே என்று பாவிக்கை.

(2) ஸதாசாரசீலம்: ஒருவன் ப்ரபன்னனானால் அவனுடைய ஆத்மயாத்ரை பகவததீனையாகையாலே அதில் அவனுக்கு அன்வயமில்லை. உண்டு என்று இருந்தானாகில் ஆத்ம ஸமர்பணம் பொய்யாமித்தனை.

தேஹயாத்ரை கர்மாதீனையாகையாலே அதற்குக் கரைய வேண்டா, கரைந்தானாகில் நாஸ்திகனுமித்தனை. ஆகையால் உபய யாத்ரையும் கொண்டு இவனுக்குக் காரியமில்லை. ஆனால் வேண்டிற்றுச் செய்து திரிய அமையுமோ வெனில் அது இவனுக்கு ஸ்வரூபமன்று என்று எம்பெருமானார் அந்திம தசையில் தன் சிஷ்யர்களுக்கு அருளிச் செய்தபடியால் **அசாஸ்த்ரம் ஆஸுரம் க்ருத்ஸ்னம்** என்று ஆளவந்தார் அருளிச் செய்தபடி சாஸ்திர விருத்தங்கள் தைவப்ரகிருதியான இவன் ஸ்வரூபத்திற்கு விருத்தமாகையாலும்,

ச்ருதிஸ்ம்ருதீ மமைவாக்ஞா-ந வைஷ்ணவ:

என்று அடிமை கொள்பவன் அருளிச் செய்தபடியாலும், சாஸ்திர வச்யனாய் அடிமை செய்ய வேண்டும். ஸுமங்கலிக்கு மாங்கல்ய ஸூத்ரம் போலே ப்ரபன்னனுக்கு சாஸ்திர விஹிதமான பகவதாராதந கர்மங்கள் ஆகையால் இந்த கர்மங்களைச் சுமங்கலி மாங்கல்ய சூத்ரத்தைப் பேணி அணிவது போலே மாங்கல்ய ஸூத்ரமாகப் பாவித்து ரக்ஷிக்க வேண்டும். இதுவே ஸதாசாரசீலம் என்பது. இதுவே எம்பெருமானாரது திருவுள்ளம் என்று தேசிகன் நிரூபித்தருளுகிறார்.

(3) கர்மானுஷ்டானம்:-ஸம்ஹிதாவிசேஷங்களில் சொல்லப்படும் அவ்யவஹிதார்சனமான மந்திர விசேஷங்களைக் கொண்டு க்ரியா விசேஷங்களைச் செய்வது பரமைகாந்திக்கு அந்தரங்கமன்றோ? அது இருக்க வ்யவஹிதார்சனமான வைதிக கர்மங்கள் பகிரங்கமன்றோ! அதனால் பரமைகாந்திக்கு த்யாஜ்யமன்றோ? என்ற சோத்யத்தை பூர்வர்களின் அனுஷ்டான முறையைக் கொண்டு தேசிகன் பரிஹரிக்கிறார்: "ஸ்ரீ பாஷ்யகார ஸம்பிரதாயத்திலுள்ள குலங்களெல்லாம் ஸ்வஸூத்ரோக்தமான விதிகளின்படியே தத்தத் தேவதா மந்திரங்களைக் கொண்டு விவாஹ உபநயனாதிகள் அனுஷ்டிக்கக் காணா நின்றோம். அவ்யவஹிதார்சனம் வ்யவஸ்திதாதிகார விஷயமானபடியாலே பாஷ்யகாரர் முதலியவர்களின் உபதேசானுஷ்டானங்களில் நிஷ்டையுடையார்க்கு அனுஷ்டிக்க வொண்ணாது. பெரிய நம்பி முதலான பரமாசார்யர்கள் ஸ்வஸூத்ரோக்த விதிகளின் படியே யஜ்ஞாதிகள் அனுஷ்டித்தார்கள்

என்பது ஸர்வருக்கும் பிரஸித்தம். இந்த அருளிச் செயலால் பாஷ்யகாரர் சிஷ்யப்ர சிஷ்யர்களுக்கு யாகத்தில் பிஷ்டபச்வாதி கல்பத்தை மறுத்து ப்ரத்யக்ஷ பசு கல்பத்தையே பரிக்ரஹித் தருளினர் ஸ்வாமி தேசிகன் என்பது வ்யக்தம்.

சுமங்கலி மாங்கள்ய ஸூத்ரத்தைத் தவிர்த்தால் பதி தண்டிப்பது போலே கர்மங்களைத் தவிர்த்தால் ஸர்வேச்ரன் ப்ரத்யவாயம், அப்ரீதியாகிய தண்டனைகளைச் செய்வன். ஆகவே முக்தனுடைய கைங்கர்யம் போலவும், அரோகனுடைய பால்வார்த்து உண்கை போலவும் அனுஷ்டிக்கை ஸாத்விக த்யாகத்தின் எல்லை நிலமாகக்கடவது என்று அருளினர். இப்படி ப்ரத்யவாயம், ஸாத்விகர்களுக்கு நரகதுல்யமாக எண்ணப்படும் பகவதப்ரீதி ஆகிய அனர்த்தங்களைப் பரிஹரித்தும், பகவதனுக்ரஹமாகிய புருஷார்த்தத்திற்கு உறுப்பாகவும் கொண்டு இப்பகுதி வானேறப் போமளவும் வாழ்வாயிற்று.

(4) தத்வோபதேசப்பகுதி :-வேதாந்திகளான நம்முடைய தர்சனத்தில் ப்ரதானமான அர்த்தம். சேதனுசேதனங்கள் ஈச்வரனுக்குச் சரீரங்கள், ஈச்வரன் ஸர்வசரீரி என்பது.

ஈச்வரன் ஸர்வசரீரியாயிருத்தலாவது :- சேதனு சேதனங்களைப் பற்ற உள்ளவளவும் தாரகனுமாய், நியந்தாவுமாய், சேஷியுமாயிருக்கை. இங்கு ஆதாராதேய பாவரூபமான சரீர லக்ஷணத்தால் இவனை விட்டுப் பிரியாதது (அப்ருதக்ஸித்தி) என்ற ஸ்வரூப லாபமும், அதனுல் வேறொரு தெய்வத்துடன் சம்பந்தமின்மை தெரிவதால் சேதனனுக்கு ஸர்வேச்வரனோடு ஐகாந்தியலாபமும் பெறப்படும். சேதனன் அனன்யாதாரன் என்ற ஸ்வரூபலாபமும் ஸித்திக்கும்.

சேஷசேஷிபாவ சரீரலக்ஷணத்தால் **அந்நம் போஜ்யம் மநுஷ்யாணும் அம்ருதந்து திவௌகஸாம், ஸந்தோ தாஸ்யைக ஜீவி ந** : என்றபடி ஒரு சேதனன் தன்னிடத்தில் மனுஷ்யாபிமானமும், தேவாபிமானமும் செய்யும் போது அன்னம், அம்ருதம் முதலியவற்றில் ருசி பிறப்பது போலே தன்னைப் பகவச் சேஷபூதனுகப் பார்க்கும் போது பகவத் விஷயத்திலும் கைங்கர்யத்திலும் ருசி பிறக்கும். என்னுடைய ரக்ஷணபரமும் அவனுடையதே என்ற ப்ரபத்தியின் அம்சமும் ஸித்திக்கும். அநந்ய ப்ரயோஜனன் என்ற ஸ்ரூபலாபமும், அதனுல் ப்ரயோஜநாந்தர வைமுக்ய ரூபமான பாரமைகாந்தியமும் ஸித்திக்கும்.

நியந்த்ரு நியாம்ய பாவசரீர லக்ஷணத்தால் அனன்யசரணன் என்ற ஸ்வரூபலாபமும், இதனுல் நான் எனக்கு உரியேனல்லேன், என்னிது என்று ஒரு பொருளுமில்லாதவன் எல்லாம் உன்னுடையதே என்ற ப்ரபத்யம்சம் ஸித்திக்கிறது. இந்த மூன்று ஸம்பந்தங்களால் சேதனன் அநந்யாதாரன், அநன்ய ப்ரயோஜனன் அநன்யசரணன் என்ற ஸ்வரூப நிரூபகஜ்ஞானம் பிறந்தவனுக்கே மேலே கூறியபடி உபாயநிஷ்பத்தி ஏற்படுமாகையால் இப்பகுதி உபாயபூர்த்தியைச் செய்து வைத்தும், ரஹஸ்யத்ரயங்களைத் தாரக போஷக போக்யங்களாக்கியும் தாரணியில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வை அமைக்கிறது.

அவதார ரஹஸ்யம்

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
என் எஸ். ராமாநுஜாச்சாரியார் ஸ்வாமி
ந்யாய வ்யாகரண மீமாம்ஸா வேதாந்த
சிரோமணி, சாஸ்த்ரரத்னுகர.
நாவல்பாக்கம். (திருப்பதி)

ஸ்வாமி தேசிகனின் அவதார உண்மையைப்பற்றி பலர் பலவிதமாக எழுதியுள்ளனர். இவ்விஷயத்தில் ஸ்வாமியின் திருவாக்கையே மேற்கோளாகப் பற்றினுவின்றி உண்மையை உணர விரகில்லை. கண்டாவதாரம் என்பது உத்ப்ரேக்ஷையாகையால் வாஸ்தவமென்று கொள்ளப் பலர் துணியவில்லை. ஸ்வாமி குமாரரும் திருவேங்கடமுடையான், அவன் கண்டை, பாஷ்யகாரர் என மூன்றுவிதமாக ஊகிக்கப்படுமவர் என்றிவ்வளவே பணித்தார். இவ் விஷயத்தில் ஸ்வாமியின் திருவாக்கிலிருந்து அடியேன் அறிந்த உண்மையை இங்கு வெளியிடுகின்றேன்.

தத்வ முக்தாக லாபத்தின் முடிவில்—

இத்தம் ஸ்ரீ வேங்கடேச: ச்ருதமமத
ஜகந் மூலகந்தம் முகுந்தம்
விஸ்தாரோ யஸ்ய விச்வம் சருதிபி
ரபிததே விஸ்தரோ வாங்மயஞ்ச
யந்நாஸ்மிந் க்வாபிநைதத் க்ஷமமிஹ
குஹகைரிந்த்ரஜாலம் ந தைஸ்தை:
ஏகம் தத் ஸர்வஸித்யை கலயத
ஹ்ருதயே தத்வமுக்தாகலாபம்.

என்கிற சுலோகத்தின் உரையில் ஸ்வாமி தாமே **"ஸ்ரீ, வேங்கடேச இதி வக்த்ரு வைலக்ஷண்யம்"** என்று அருளிச்செய்தார். ஸ்ரீ வேங்கடேசன் என்கிற சொல்லை ஸ்வாமியின் திருநாமமாகக் கொண்டால் அந்த திருநாமத்துக்கு உலகில் ப்ரஸித்தி உள்ளபடியால் அத்திரு நாமத்துடன் உலகப்ரஸித்தராய் விளங்கும் ஸ்வாமி அருளிச் செய்தபடியால் இந்த க்ரந்தம் உயர்ந்தது என்று கொள்ளலாம். அல்லது ஸ்ரீ வேங்கடேசன் என்ற சொல்லுக்குத் திருவேங்கடமுடையான் என்று பொருள் கொண்டால் திருவேங்கடமுடையான் இந்த நூலை அருளிச்செய்தமையால் இந்நூல் மிகச் சிறந்தது என்று ஏற்படும். இங்கு ஸ்வாமி திருவுள்ளம் திருவேங்கட முடையான் என்ற பொருளிலேயே. மூன்ருவது அடியில் இந்த தத்வமுக்தாகலாபத்தில் விளக்கப்படாத விஷயம் எந்த நூலிலும் இல்லை என்றும் இந் நூலிலுள்ள விஷயங்களே மற்ற நூல்களிலும் உள்ளன என்றும் ஸாதித்தார். இதற்கு உரையிடும் பொழுது **'ஏதேந யதிஹாஸ்தி ததந்யத்ர யந்நேஹாஸ்தி ந தத்க்வசித் இதி வசநம் ஸ்மாரிதம்'** என்று அருளிச்செய்தார். பராசர முனிவர் மைத்ரேயரிடம் தன் குமாரரான வியாச பகவானைப் புகழ்ந்து பேசும் பொழுது வியாசர் சாதாரணமான மனிதரல்லர், ஸ்ரீமந் நாராயணனுடைய அவதாரபூதர், மகாபாரதம் என்கிற நூலை நாராயணன் தவிர வேறு யாராலும் அருளிச் செய்ய இயலாதன்றே! மகாபாரதத்திற்கு என்ன அவ்வளவு ஏற்றமெனில், மகாபாரதத்திலுள்ள விஷயமே மற்ற நூல்களில் உள்ளன. மஹாபாரதத்தில் இல்லாத விஷயம் மற்ற நூல்களிலும் கிடைக்காது. ஆகவே இப் பெருமை வாய்ந்த நூலை இயற்றினமையால் வியாஸர் ஸ்ரீமானுன நாராயணனே என்று அறுதியிடுகின்ருர் பராசரர். அதே பெருமை ஸ்வாமி அருளிச்செய்த தத்துவமுக்தாகலாபத்துக்கும் உள்ளதாக பராசரருடைய அறுதிமொழியை மேற்கோளாகக் காட்டி ஸ்வாமி தாமே வெளியிட்டார். இதனுல் தத்துவமுக்தாகலாபத்தை இயற்றியவரும் நாராயணனே என்று ஸ்வாமியின் திருவுள்ளம். இதை வெளியிடுவதற்காகவே வேங்கடேசன் என்று சொன்னமையில் இயற்றியவரின் பெருமையில் நூலுக்கு ஏற்றம் ஏற்படுகின்றது என்று அருளிச் செய்தார். ஆக ஸ்வாமி ஸாக்ஷாத் திருவேங்கடமுடையானின் அவதாரம் என்பதற்கு தத்வமுக்தாகலாபம் என்கிற நூலே சான்று என்பதாக ஸ்வாமியின் திருவுள்ளமாயின் நூற்றுக்கணக்கான நூல்களையும் அமானுஷமான அநேகச் செயல்களையும் புரிந்த ஸ்வாமி திருவேங்கடமுடையானின் அவதாரம் என்பதில் ஐயம் கொள்ள இடமுண்டோ! என்று ஆன்ருேர் ஆராயவேண்டுமென அடியேன் வேண்டுகோள்.

இராமாநுசன் அருள்மேவி வாழும் தூப்புல் புனிதன்

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
ந்யாய சிரோமணி
ஸ்ரீதரதாதாச்சாரியார் ஸ்வாமி
காஞ்சீ.

ஸ்ரீ பாஷ்யகாரரிடம் பரையான பக்தி கொண்ட ஆசாரிய சிகாமணி நம் தூப்புல் புனிதன் வித்தகன் வேதியன் வேதாந்த தேசிகன். ப்ரபந்நர்களுக்கு இங்கிருந்த நாள் பண்ணலாம் கைங்கர்யங்களில் 'ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப் பித்தல்' என்பது முதன்மையானது. இதை வாழ்நாள் முழுவதும் அநுஷ்டித்த பெருமை நம் இராமாநுச முனி இன் உரை சேரும் தூப்புல் மாபுருடனுக்கே உண்டு.

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸ்வாமி தாமே 'த்ரிம்சத்வாரம் ச்ராவித சாரீரக பாஷ்ய:' என்றும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தின் முடிவில் 'நிர்விஷ்டம் யதி ஸார்வபௌம வசஸாமாவ்ருத்திபி: யௌவநம்' என்றும் ஸாதித்திருப்பதால் இது ஸுஸ்பஷ்டம். தத்வ டீகை, அதிகரண ஸாராவளி முதலிய க்ரந்தங்களை ஸாதித்து மன்னு புகழ்ப் பூதூரான்மன முகக்கச் செய்தார் நம் ஸ்வாமி.

யதிராஜ ஸப்ததியை ஸேவித்தால் இராமாநுஜ முனி வண்மை போற்றுஞ் சீர்மையன் எங்கள் வேதாந்த குரு என்பதில் ஸந்தேகமுண்டாகுமோ.

'ஜயதி ஸகலவித்யா வாஹிநீ ஜன்ம சைல:' என்னும் ச்லோகத்தில் ஸ்ரீபாஷ்யகாரரை பல வித்யைகளாகிற நதிகளுக்கு உத்பத்தி ஸ்தானமாக ஸாதித்து தசாவதார ஸ்தோத்திரத்தின் முடிவில் 'வித்யோதந்வதி வேங்கடேச்வரகவௌ' என்று தன்னை வித்யைகளாகிற பல நதிகள் வந்து சேரும் ஸமுத்திரமாக ஸாதித்திருப்பது அனுபவிக்கத் தக்கது. 'அருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்' என்றும் 'யதிராஜேந நிபத்த நாயக ஸ்ரீ:' என்றும் ஸ்ரீ பாஷ்யகாரருடைய பெருமையையும் ஆசார்ய கோஷ்டியிலே நடு நாயகமாக ஸ்வாமி எம்பெருமனார் விளங்குகிறரென்றும் ஸாதித்திருக்கிறார். பல சொல்லியென்! எதிராஜரிடம் ஸ்வாமி தேசிகனுக்குள்ள ஆசார்ய பக்திக்கு 'அலர்ந்த வம்புயத்து' என்கிற அமிருதா சுவாதினிலுள்ள பாசுரம் ஒரோன்று தானே யமையாதோ.

ஆகவே இராமாநுசன் அருள் மேவி வாழும் நம் தூப்புல் புனிதன் தூமலர்தாள் மன்னிய நாள்களுமாகுங்கொல் மாநிலத்தீர் நமக்கே என்று ப்ரார்த்தித்து நிற்கின்றனம்.

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனும் ஆளவந்தாரும்

ஸ்ரீமத் உபயவேதாந்த வித்வான்
வங்கீபுரம் பீடாதிபதி
ரங்கநாதாச்சாரியர் ஸ்வாமி,
மதுராந்தகம்

ஜ்ஞானம் வைராக்யம் அநுஷ்டானம் இவற்றால் சிறப்புற்று விளங்கும் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் இற்றைக்குச் சுமார் 700 ஆண்டுகட்கு முன் புரட்டாசி மாதம் திருவோண நக்ஷத்திரத்தில் காஞ்சீமாநகரில் தூப்புல் என்று வழங்கும் திவ்ய க்ஷேத்திரத்தில் விசுவாமித்ரகோத்ர வம்சத்தில் அனந்தஸூரி என்பவருக்கும் தோதாரம்பா என்கிற தேவிகளுக்கும் திருக்குமாரராய் திருவவதரித்தருளினார். திருவேங்கட முடையானின் திருமணியின் அவதாரமென்றும் ஸ்ரீபாஷ்யகாரருடைய அவதாரமென்றும் அனுபவிப்பார்கள். மாதுலரான அப்புள்ளாரிடம் வித்யாப்யாஸத்தை துடங்கி, தென் மொழி—வட நற்கலைகள் அனைத்தையும் நம் தேசிகப் பெருமான் அதிகரித்துவிட்டார். இதை

விம்சத்யப்தே விச்ருத நாநாவித வித்ய:

என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்துள்ளார். பற்பல கலைவல்ல பாவலனே என்றும் வித்தகன் வேதியன், வேதாந்த தேசிகன் என்றும் கொண்டாடும்படியான நம் தேசிகப் பெருமானிடம் ஸகல வித்யைகளும் ஸ்ரீ வைநதேயனுடையவும் ஸ்ரீ ஹயக்ரீவனுடையவும் விசேஷ கடாக்ஷ விசேஷத்தால் வந்தடைந்தனவாதலால் வித்யைகளுக்கு கடல் போன்றவன் என்று அனுபவிப்பது மிகையாகாது. இதை ஸ்வாமி தேசிகன்

**வித்யோதந்வதி வேங்கடேச்வரகவௌ
ஜாதம் ஜகந்மங்களம்**

என்றிறே ஸாதித்துள்ளார்! "வெள்ளைப்பரிமுகர் தேசிகராய் விரகாலடியோம் உள்ளத்தெழுதிய தோலை யிலிட்டனம் யாமிதற்கென்" என்பதாலும் அறியவருகின்றன. எப்படியானால் ஸமுத்திரத்தில் ரத்னங்கள் பல பிறக்கின்றனவோ அதுபோல் கல்விக் கடலாகிய ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனிடமிருந்து அபூர்வமான பல அற்புதமான ஸ்ரீஸூக்தி ரத்னங்கள் ஆவிர்ப்பவித்தன. அவைகள் ஸ்தோத்திர க்ரந்தங்கள் காவ்ய க்ரந்தங்கள், வேதாந்த க்ரந்தங்கள், நாடக க்ரந்தம் வ்யாக்யான க்ரந்தங்கள், அநுஷ்டான க்ரந்தங்கள், ரஹஸ்ய க்ரந்தங்கள் என்பன. நம் ஸ்வாமி தேசிகனுக்கு பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்தி ரஸத்தை அநுபவிப்பதில்தான் எவ்வளவு வ்யாமோஹம்!

"யதிப்ரவர பாரதீ
ரஸபரேண நீதம் வய:"

என்று ஸ்ரீ பாஷ்யகாரருடைய திவ்ய ஸூக்திகளை அநுபவித்தே தமது யௌவனத்தை போக்கி யருளினதாக தெரிகிறது. "கூரணி சீர் மதியுடைய குருக்கள் காட்ட குறிப்புடன் நாம் கண்டவகை கூறினோமே" என்கிறபடி யதிகட்கிறைவன் யமுனைத்துறைவன் இணையடியாம் கதிபற்றுடைய விராமாநுசனின் திருஉள்ளத்தை அநுஸரித்து ஸ்ரீ ஆளவந்தாராலே ப்ரஸாதிக்கப்பட்ட "சதுச்லோகீ" "ஸ்தோத்ர ரத்னம்" என்கிற இந்த இரண்டு க்ரந்தங்களுக்கும் ஸ்வாமி தேசிகன் பாஷ்யம் செய்தருளினார். நம் விசிஷ்டாத்வைத ஸம்பிரதாயத்தில் ஸ்ரீமந்நாத முனிகள் முக்ய பிரவர்த்தகரானபடியாலே ஸ்ரீ பாஷ்யகாரர் துடங்கி பெரியநம்பி யாளவந்தார் மணக்கால்நம்பி உய்யக் கொண்டார் நாதமுனிகள்

என்கிற கணக்கில் ஓரான் வழியாக வந்து கொண்டிருக்கும் நம் ராமாநுஜ தர்சனம் வானளவும் ஓங்கி வளர்ந்து நிற்பதென்றல் வாதியர் வாழ்வறுத்த கவிதார்க்கிகசிங்க குருவின் க்ரந்தங்களின் ப்ரபாவத்தினு லன்றே! ஆகையால்தான்,

நாதோபக்ஞம் ப்ரவ்ருத்தம்....
இதமகிலதம : கர்சநம் தர்சநம் ந:

என்று கொண்டாடப்பட்டது.

ஸ்வாமி தேசிகன் ஸ்தோத்ரத்ன பாஷ்யத்தில் அநுபவிக்குமிடத்தில்,

ஸ்ரீமத்யாமுந முநிநா
நாதஸஹாயேந நாதவாநஸ்மி

ஸ்ரீமந் நாதமுனிகளோடு சேர்ந்தவராகிய ஸ்ரீ ஆளவந்தாரினுல் நாதனை உடையவனுக ஆகிறேன் என்றும்,

விமலம் அம்ருதோல்பண ரஸமி விகாஹ்ய நிர்விசதி வேங்கடேச கவி:
யதுபதி சரணார்ஹமிதம் யமுநாதீர்த்தமிவ யாமுநம் ஸ்தோத்ரம்.

என்கிற ச்லோகத்தாலே ஸ்ரீமந்நிகமாதத ம்ஹா தேசிகனுகிய கவி,யமுனையின் தீர்த்தத்தைப்போல் அழுக்கற்றதாயும், ஸ்ரீ கிருஷ்ண னுடைய திருவடிகளுக்கு தகுந்ததாயும் இருக்கிற ஸ்ரீ ஆளவந்தாருடைய ஸ்தோத்திரத்தின் உள்ளே முழுகி சுகானுபவம் செய்கிறர்.

அதாவது யமுனையாற்றின்கண் ப்ரவஹிக்கும் ஜலம் ''வல்லவீ வதநோச்சிஷ்ட பவித்ரம்'' என்றும், 'தூய பெருநீர் யமுனைத் துறைவன்' என்கிறபடியே கண்ணனும் கோபிகைகளுமாக ஜலக்ரீடா காலங்களில் கொப்பளித்து உமிழ்ந்த நீர்களோடே கலந்து வருவதால் விசேஷமான பரிசுத்தியையும் பகவானுடைய ''கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ'' என்று சொல்லுகிறபடி திருப்பவளத்தின் ருசியை உடையதாகையினுலும் அமிருதத்தைவிட மேலானது. அப்படியே இந்த ஸ்தோத்திரம் ''தயாஸஹாஸீநம் அநந்த போகிநி'' என்று இருவருமான சேர்த்தியின் அழகை நிரூபிக்கிறபடியினுல் பாபங்களை போக்கக் கூடியதும் அமிருதத்தைவிட ருசியுள்ளதாயும் இருக்கிறது. அன்றிக்கே ''அம்ருதோல்பணரஸம்'' என்கிற இடத்தில் அமிர்தம் என்பதால் மோக்ஷத்தை சொல்லி அதைவிட மேற்பட்ட ஆனந்தத்தை கொடுக்கக் கூடியது என்றும் அர்த்தமாகவுமாம். அப்பொழுது,

''இழிபட்டோடு முட்டினில் பிறந்து
தன் சீரையான் கற்று
மொழிபட்டோடும் கவியமுத
நுகர்ச்சியுறுமோ''

—என்றும்,

''நின் புகழில் வைகும்தம்
சிந்தையிலும் மற்றினிதோ
நீயவர்க்கு வைகுந்த
மென்றருளும்வான்''

என்று சொல்கிறபடி இந்த ஸ்தோத்திரத்தைக் கொண்டு பகவானுடைய குணங்களை அநுபவிப்பதனுல் உண்டாகிய ஆனந்தத்தைவிட மேலானது என்று ஸ்வாமியின் திரு உள்ளம். ''**யதுபதி சரணார்ஹம்**'' என்கிற இடத்தில் யமுனு தீர்த்தம் ஸ்ரீ கிருஷ்ணனுடைய திருவடி சம்பந்தத்தை எப்பொழுதும் அடைந்திருக்கிறது என்றர்த்தமாகவும். அன்றிக்கே ஸ்ரீ கிருஷ்ணனுடைய எல்லா நடவடிக்கைகளுக்கும் தக்கது. ''**யமுநா ஸாக்ஷிக யௌவனம்**'' என்கிறபடியே ''யமுனையாற்றில் வார் மணற் குன்றில் புல்ர நின்றேன் வாசுதேவா உன் வரவு பார்த்தே'' என்று கோபிமார்களை துடிக்கச் செய்ததும், ''குரவை ஆய்ச்சியரோடு கோத்ததும்'' என்கிறபடியே அவர்களோடு ராஸ க்ரீடை முதலியவைகளை செய்தது முதலாகிய யௌவன வ்யாபாரங்கள் எல்லாவற்றையும் முற்றிலும் அநுபவித்து யமுனையொன்றே என்றுகவுமாம். அதிக விசாலமானதும் மணற் குன்றுகளும் மரத் தோப்புகளும் கொடி மண்டபங்களும் நிறைந்த இடமான படியால் இவ்வளவு லீலைகளையும் பகவான் அநுபவிக்கத்தக்கதாயிற்று என்பது கருத்து. ஸ்தோத்திரத்தின் பக்ஷத்தில் உத்தமமான ரத்னமாகையினுல் பகவானுடைய திருவடிகளில் ஸமர்பிக்கத் தகுந்தது என்று தாத்பர்யம் ''**விகாஹ்ய நிர்விசதி**'' என்பதினுல் இதனுடைய தாத்பர்யங்களை எல்லாம் உள்ளபடி அநுபவிக்கிருர். என்பதேற்படுகிறது.

கம்பீர பூர்ணமதுரம் மமதீர் பவந்தம்
க்ரீஷ்மே தடாகமிவ சீதமநுப்ரவிஷ்டா.

என்கிறபடியே யமுனு தீர்த்தத்தில் **ஸ்நானம்** செய்வதினுல் ஸர்வதாப பாபங்களும் எப்படி நிவ்ருத்திக்குமோ அப்படி இந்த ஸ்தோத்திர ரூபமான பகவத் குணங்களை அனுபவிப்பதும் என்று திருவுள்ளம். இதுபோன்ற பல அபூர்வ ரத்னங்களை நமக்கு உபகரித்தருளின நம் தேசிகனை போற்றி உகப்பதும் சிந்தையில் கொள்வதும் நமது கடமை ஆகும்.

ஓரொன்று தானே யமையாதோ!

ஸ்ரீ உபயவேதாந்த வித்வான்
திருமலை சதுர்வேத சதக்ரது
நாவல்பாக்கம்
தேவநாதாச்சாரியார் ஸ்வாமி,
மீமாம்ஸா சிரோமணி,
ஸரஸ்வதி மஹால், தஞ்சாவூர்.

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் க்யாதி லாப பூஜைகளில் விருப்பமில்லாத, வைராக்யமே உருவெடுத்த மஹான். வைராக்ய பஞ்சகம் என்னும் சிறு நூலினின்றும், அற்புதமான அவரது வாழ்க்கை வரலாற்றிலிருந்தும் இதை நன்குணரலாம். ஆனாலும் க்யாதி லாப பூஜைகளையே விரும்பி ஏங்கித் தவிக்கும் மானிடர்கட்கு, அவர் வழி காட்டும் வகை,

''பச்ய, வநௌகஸோபி ஸந்த:
லோக்ஞா வயம்''

என்னும் மகா கவியின் பொன் மொழியை நமக்கு நினைவூட்டுகின்றது.

பாதுகா ஸஹஸ்ரத்தில் ஸுபாஷிதபத்ததியின் கடைசி ச்லோகம்:

அதரீக்ருதோபி மஹதா தமேவ
ஸேவேத ஸாதரம் பூஷ்ணு:
அலபத ஸமயே ராமாத்
பாதாக்ராந்தாபி பாதுகா ராஜ்யம்

—என்பது

தாழ்ந்தவன் பெரிய அதிகாரியை அண்டி, அனுஸரித்து, குறிப்பறிந்து, பணிவிடைகள் செய்து, தனது எஜமானனிடம் மிக்க பணிவுடனும் மரியாதையுடனும் நடந்துகொள்ளும் ''பிராணி'' போல் நடந்துகொண்டு, அவருடைய நல்ல அபிப்ராயத்தை ஸம்பாதித்து முன்னுக்கு வரவேண்டும். மேல் அதிகாரியானவன், பலகாலும் பலவாறாக இவனை ஏசுவான்—இகழ்வான், அவமானப்படுத்துவான், பழி சொல்வான், அலக்ஷ்யமாகத் தாழ்த்திக் கூறுவான். இதை யெல்லாம் பொருட்படுத்தாமல், அவனையே வணங்கி வழிபட்டு வாழ்த்தி அனுஸரிக்கவேண்டும். இப்படிச் செய்பவன்தான் உத்யோகத்தில் உயர் பதவி அடைவான்.

தன்னைப் பெருமையாக நினைத்து, அவ்வப்போது அதிகாரியின் குற்றச்சாட்டுக்களுக்கெல்லாம் எதிர் வழக்காடுகிறவன் ஒருகாலும் முன்னுக்கு வர முடியாது.'' என்று, தலைமுறை தலைமுறையாக உத்யோகம் செய்தே பிழைத்து அதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை நன்குணர்ந்தவர்களுக்கே விளங்கக் கூடிய தத்துவத்தை, கனவிலும் அம்முறையைக் கண்டறியாத நம் தூப்புல் குலமணி இனிய சப்தத்தால் வெளியிடும் அழகுதான் என்னே!

ஸ்ரீராமனுடைய திவ்ய பாதுகைகள் திருவடிகளின் கீழ்ப்புறத்திலேயே ஸர்வகாலமும் இருந்ததனால், ஒரு ஸமய விசேஷத்தில் அரசனாகவே உயர்ந்துவிட்ட நிகழ்ச்சியை இதற்குச் சான்றாகக் காட்டிய பெருமைக்கு நிகருண்டோ? ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரருடைய அருள் மொழிகளில் ''ஓரொன்று தானேயமையாதோ'' என்று ரஸித்தமஹான் தனது ஈடுபாட்டை எவ்வளவு அழகாய் வெளியிடுகிறார் பாருங்கள்.

இப்படிப்பட்ட நம் தூப்புல் குல விளக்கு உலக க்ஷேமார்த்தமாய் மேன்மேலும் சுடர் விட்டுப் பிரகாசிக்குமாக.

ஸ்ரீமத்பரம...பரி...ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்.
(கருடபுரம் ஸ்வாமி) - ஆடி - ரேவதி

ஸ்ரீமத் ஸ்ரீவாஸ ராமாநுஜ முனிக்ருபயா லப்தவேதாந்தஸாரம்
ப்ரேமோத்கர்ஷாத் ப்ரபந்நம் ப்ரதித குண நிதே : க்ஞானபுத்ரத்வமஸ்ய
சாந்தி ப்ரக்ஞா விரக்தி ப்ரப்ருதி குணகணை : தத்ஸமம் தேஜஸாச
ஸ்ரீமத் ஸ்ரீவாஸயோகி ப்ரவரம் அநுகலம் பாவயே பக்திநம்ர :

ஸந்தேசரத்நஸாரம்

உபயவேதாந்த வித்வான்,
மேல்பாக்கம், நரஸிம்ஹாசாரியார் ஸ்வாமி,
வ்யாகரணசிரோமணி
ரிஸர்ச். ப்ரெஞ்சு இன்ஸ்டிட்யூட்.
பாண்டிச்சேரி,

திருவேங்கடமுடையானின் கண்டாம் சமாய்த் தூப்புலில் அவதரித்த ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் இம்மையிலும் மறுமையிலும் உலகை வாழ்விப்பதற்காக இயற்றிய பலவகைப்பட்ட க்ரந்தங்களுள் உள்ள விசேஷங்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம். எவ்வகைப் பட்ட க்ரந்தமாயினும் அவற்றில் பகவானை யும் வேதாந்தார்த்தங்களையுமே விஷயமாக்கி இயற்றிய மஹாபுருஷர் ஸ்வாமி தேசிகன். இவருடைய க்ரந்தங்களுள் மிகச் சிறிய தாயும் காவ்ய லக்ஷணங்கள் எல்லாம் பொருந்தினதாயும் அமைக்கப்பட்ட ''ஹம்ஸ ஸந்தேசம்'' என்கிற காவ்யரத்நத்தின் ஸாரத்தைக் கொஞ்சம் ஆராய்வோம்.

''ஸந்தேசம்'' என்றால் வேறு இடத்திலிருக் குமவர்களுக்கு ஒரு தூதர் மூலம் ஸமாசாரம் சொல்லியனுப்புதல் என்று பொருள். இம் மாதிரி ஸந்தேச காவ்யத்தை முதலில் இயற்றி யவர் 'மேகஸந்தேசம்' என்கிற காவ்யத்தைச் செய்த மஹாகவி காளிதாஸர். அம்மாதிரியே அநேக கவிகள் ஸந்தேச காவ்யத்தை இயற்றியுள்ளார்கள். இவற்றுள் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த ஸந்தேச காவ் யமே மற்றவைகளைவிட விலக்ஷணமாய் அமைந்துள்ளது.

ஸந்தேசகாவ்யம் என்பது கவியின் கல்பனையாகவே பெரும்பாலும் காணப் படுகிறது. காளிதாஸனின் மேகஸந்தேசத் தில் கதையும் கதாநாயகனும் கல்பனையினால் உண்டானதே. யாரோ ஒரு யக்ஷன் தன் யஜமானனான குபேரனுடைய சாபத்தி னால் ஒரு வருஷம் தேவலோகத்தைவிட்டுத் தனது மனைவியைப் பிரிந்து பூமியில் கஷ்டப் பட்டு ஒரு மேகத்தின் மூலம் தன் மனைவிக்கு செய்தி சொல்லி அனுப்புவதாக அதில் கதை உள்ளது. ஹம்ஸஸந்தேசத்திலோவெனில்; ஹனுமான் லங்கையில் ஸீதையைக் கண்டு வந்து அவளுடைய தசையை ஸ்ரீராம பிரானிடம் அறிவித்த பின்பு, மிகவும் வருத்த முற்ற ஸ்ரீ ராமன் ஸ்ரீ ஸீதைப் பிராட்டிக்கு ஒரு ஹம்ஸத்தின் மூலமாக ஆறுதல் சொல்லி யனுப்புவதாக அமைக்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த ஸூர்யவம்சத்தில் அவதரித்த ஸ்ரீராமன் கதாநாயகன் இதில். தூதனும் மேகம் முதலியவை போல் அசேதனமின்றி சேதன மாயும் அஸாரத்தை நீக்கி ஸாரத்தை க்ரஹிக் கும் ஸ்வபாவம் வாய்ந்ததாக ப்ரஸித்தி பெற்றதும், ஏற்கனவே நளனால் தமயந்திக் குத் தூது அனுப்பப்பட்டு வெகு ஸாமர்த்திய மாக காரியத்தை முடித்து வந்ததுமாய் (நைஷத காவ்யத்தில்) ப்ரஸித்தி பெற்றது மான ஹம்ஸமாகும்.

சரத்ருதுவில் ஒரு தடாகத்தில் அமர்ந் திருந்த ஒரு ராஜஹம்ஸத்தைப் பார்த்து ஸ்ரீராமன் அதின் மூலம் ஸீதைக்கு செய்தி சொல்லியனுப்பத் திருவுள்ளம் கொண்ட வராய் அதற்கு தாமரை புஷ்பம் முதலியவை களால் தகுந்த பூஜையைச் செய்து பின் வருமாறு கூறுகிறார்.:''ஓ ஹம்ஸச்ரேஷ்டமே! வேதமாகிற கடலை பிரிப்பதற்காக ஹம்ஸாவ தாரம் எடுத்த பகவானான விஷ்ணுவினுடைய அந்த வம்சத்தில் பிறந்திருக்கிறாய். சதுர் முகனுக்கு வாஹநமுமாகி அவருடைய பத்நியான ஸ்ரீஸரஸ்வதியிடமிருந்து இனிமை யாகப் பேசுவதற்குத் தகுந்த அம்ருத்

வாக்கை பெற்றிருக்கிறாய். ஆகையினால் என் பிரார்த்தனைக்கிணங்கி என் செய்தியை ஸீதைக்கு அறிவிக்க லங்கைக்குச் செல்ல வேண்டும். அதற்கு இரண்டு வழி உள்ள தாக ஹனுமானால் எனக்கு கூறப்பட்டுள்ளது. அவற்றில் இங்கிருந்து (மால்யவான் என்கிற பர்வதத்திலிருந்து) மேற்கு வழி, குறுக்காக இருந்த போதிலும் எப்போதும் மழை பேய்ந்து கொண்டே இருக்குமாதலால் கஷ்டமதிகமாயிருக்கும். கிழக்காகச் செல்லக் கூடிய வழி கொஞ்சம் அதிக தூரமாயிருந்த போதிலும், ஸுககரமாய் இருப்பதோடு அநேகம் அழகான தேசங்களின் அத்புதங் களைக் காண வாய்ப்பு ஏற்படும். அதின் மூலம் நீ செல்ல வேண்டும். ஆகிலும் அந்த அத்புதங்களில் எனக்காக உன் கண்களை அதிகமாக ஈடுபடுத்தாமல் செல்ல வேண் டும்'' என்கிறார். இதிலிருந்து ஒரு உள் அர்த்தமும் த்வனிக்கிறது.

அதாவது :— பகவானை அடைவதற்கு பக்தி, ப்ரபத்தி, என்கிற இரு மார்க் கங்கள் உண்டென்று ஆசார்யர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதும், அதில் ப்ரபத்தி மார்க்கம் மிகவும் லகுவாயிருந்த போதிலும் 'பரிமிதரஸா ஜீவித தசா' என்கிற படி பகவதநுபவம் கொஞ்சமாயும் ஸாம் ஸாரிகதுக்கங்கள் அதிகமாக இருக்குமென்ப தும், ப்ராசீனமான பக்தி மார்க்கத்திலே பக்தியை அநுஷ்டிக்கும் போது பகவதனு பவம் அதிகமாயும் பலத்திலும் ப்ரஹ்மாநுப வத்திற்கு இடையூராக வஸு முதலிய பதப்ராப்தி, அஷ்டைச்வர்யஸித்தி முதலிய வைகள் உண்டு என்பதும் ஸூசிக்கப்படு கிறது.

மேலும் ஹம்ஸத்தைப் பார்த்துச் சொல்லுகிறார்—நீ இவ்விடத்தை விட்டுச் சிறிது தூரம் சென்றபோது கர்ணாட ஆந்திர தேசங்களின் ஸ்த்ரீகள் இரண்டு பாஷையும் கலந்த நடையில் பாடும் கானத்தை விநோத மாக அநுபவித்துக் கொண்டு செல்வாய். (இப்படி ஸ்வாமி வர்ணித்திருப்பதனால் 'ஹம்பி' என்று வழங்கப்படுமிடம் தான் கிஷ்கிந்தையாக இருக்கக்கூடும்' என்று கூறு கிறார்கள்.) ஏ ஹம்ஸமே! மேல் செல்லும் போது உனக்கு எதிரில் திருவேங்கட மாமலை தென்படும். ''எந்நாளும் நின்று இமையோர்களேத்தி இறைஞ்சி இனமின மாய் மெய்நா மனத்தால் வழிபாடு செய்யும்'' படியான அத்திருவேங்கடத்திலுள்ள எம் பெருமானுக்கு நீயும் உசிதமான கைங்கர்யத் தைச் செய்துவிட்டு ஸமீபத்திலிருக்கும் ஸ்வர்ணமுகி நதியில் சிரம பரிஹாரம் செய்து கொண்டு அங்கிருக்கும் வேடர்களுக்கு அகப் படாமல் மிகவும் ஜாக்கிரதையாக அதை யடுத்த'' துண்டீரமண்டலத்தை அடைவா யாக. அதில் 'ஸத்யவ்ரதம்'என்கிற ப்ரஸித்தி பெற்ற க்ஷேத்திரம் எல்லா பாபத்தையும் போக்க வல்லது. அங்கு தன் பர்த்தாவான பிரஹ்மாவினிடம் கோபாவேசத்தினால் உக்ர மாக 'வேகவதீ' என்கிற நதிரூபமாக வந்த ஸ்ரஸ்வதிக்கு உலகத்திற்கு கலசலில்லாமலி ருப்பதற்கு ஒரே ஸேதுவாக உள்ள பக வானே ஸேது (அணை)வாக அமைந்துள் ளார். பூமி தேவிக்கு காஞ்சீ (ஒட்டியாணம் என்கிற பூஷணம்) போல அழகான காஞ்சீ நகரத்தை அடைந்து அதை வணங்கு வாயாக. அதிலுள்ள ஹஸ்திகிரியில் ஸர்வேச் வரனை ஸ்ரீமந் நாராயணன் க்ருதயுகத்தில் ப்ரஹ்மாவின் யாகத்தின் ஸாரத்தைப் புஜித்து நித்யம் ஸந்நிதாநத்தைச் செய்து கொண்டு விளங்குகிறார். அவருடைய (உத்ஸவத்தின் போது (கருடன் முதலிய வாஹனத்தின் வேகத்தினால் உண்டான தூளிகளை தேவர் களும் சிரஸ்ஸில் தரித்துக்கொள்ளுகிறார்கள். அவரை நீ ஸேவி. கருணைக் கடலாகிய ஸ்ரீதேவாதிராஜன் எல்லா இஷ்டங்களையும் கொடுக்கக் கூடியதான குளிர்ந்த தன் கடா க்ஷங்களினால் உன்னை நோக்குவார். அவர் பிராட்டியுடன் உல்லாஸமாக உத்யான வனத்தில் எழுந்தருளும்போது உன்னுடைய சாமரம் போன்ற இரக்கைகளால் விசிறி உப சரிப்பாயாக. பின்பு அங்கிருந்து மத்தியி லுள்ள தேசத்தை தாண்டி, காவேரி நதியின் பலவித பிரிவுகளுள்ள இனிய சோள தேசத் திற்குச் செல்வாயாக. அதில் 'ச்வேதாத்ரி' என்று பிரஸித்த பெற்ற 'திருவெள்ளறை' என்கிற திவ்விய தேசத்தை அடைந்து

பிராட்டியுடன் நித்யஸம்பந்தம் பெற்ற புண்டரீகாக்ஷன் என்கிற அவ்வெம்பெருமானைப் பிரணமம் செய்தால் உனக்கு ஸமஸ்த ச்ரேயஸ்ஸுக்களும் உண்டாகும். காவேரியின் தீரத்திலுள்ள பாக்கு மரங்கள் நிறைந்த ப்ரதேசத்தைக் கடந்து நீ சென்றால் அநேகம் புண்ய தீர்த்தங்கள் நிறைந்த சந்திர புஷ்கரணியைப் பார்த்து இன்புறுவாய். அந்த சந்திர புஷ்கரணியின் புகழ் உலகில் ப்ரஸித்தி பெற்றது. அதாவது :

தக்ஷப்ரஜாபதி தன் இருபத்தேழு பெண்களையும் சந்திரனுக்கு விவாஹம் செய்து கொடுத்தார். அவர்களில் ரோஹிணியினிடம் மாத்திரம் அதிக ப்ரீதியுடனிருந்து சந்திரன் மற்றவர்களை கண்ணெடுத்தும் பாராமலிருந்தான். அவர்கள் தங்கள் பிதாவிடம் இவ்விஷயத்தைத் தெரிவிக்க அந்த தக்ஷப்ரஜாபதி, சந்திரனை க்ஷயரோகமுள்ளவனாக ஆக வேண்டும்' என்று சபித்தார். க்ஷயரோகத்தினால் மிகவும் கஷ்டமடைந்த சந்திரன் இந்த புஷ்கரணியில் தினமும் ஸ்நாநம் செய்து அநேக காலம் தபஸ் செய்து வந்ததின் பலனாக அவனுக்கு அந்த ரோகம் நீங்கி ஸுகமடைந்தான். ஆதலாலேயே ''சந்திரபுஷ்கரணீ'' என்று பெயர் விளங்குகிறது என்பது.

அதின் கரையில் ''சேஷபீடம்'' உள்ளது. அதில் எங்களுடைய (இக்ஷ்வாகுவம்சத்தினுடைய) குலதனமாக ஸ்ரீரங்கநாதன் எழுந்தருளப் போவதாக அறிந்து மஹர்ஷிகள் ஸேவித்து வருகிறார்கள். அதை அடைவாய் என்று சொன்னவுடன் அவ்வெம்பெருமானின் நினைவு வந்து சிறிது நேரம் அவரை த்யானித்துவிட்டு மறுபடியும் கூறுகிறார்.

ஓ ஹம்ஸமே! அதற்குப் பின்பு சோள தேசத்திற்கும் பாண்டிய தேசத்திற்கும் இடையிலுள்ள காடுகள். சுவர்க்கோழிகள் முதலியவைகளின் கடோர சப்தம் நிறைந்து பயங்கரமாயிருக்கும். அதைக் கடந்து 'வ்ருஷபாசலம்' என்று பிரஸித்தி பெற்ற திருமாலிருஞ்சோலையை அடைந்து அதில் நித்யவாஸம் செய்யும் அழகர் என்கிற எம்பெருமானை ஸேவிக்கும்படியான பாக்யம் உனக்கு கிடைக்கும். மஹாபலி சக்ரவர்த்தியை வென்று உலகளந்த அவ்வெம்பெருமானுடைய நூபுரத்தி (தண்டையி)லிருந்து உண்டான 'நூபுரகங்கை'யானது, திருவடியிலிருந்து உண்டான கங்கையைக் காட்டிலும் மேலாக விளங்குகிறது இங்கு.

பிறகு அடுத்த பாண்டிய தேசத்தை குறித்துச் செல்வாய். அந்த தேசத்தரசகர்கள் மஹா ப்ரபாவசாலிகள். முன்னொரு காலத்தில் அத்தேசத்தில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது வேட்டையாடச் சென்ற பாண்டிய தேசத்தரசன் மலயபர்வதத்திலிருந்த புஷ்கலன் முதலிய மேக நாயகர்களைச் சிறையிலடைத்துவிடவே, இதையறிந்த இந்திரன் கோபித்து பாண்டிய தேசத்து அரசனிடம் யுத்தத்திற்கு வந்தான். பாண்டியன் ஈச்வரனைக் குறித்து தவம்புரிந்து அநேக அஸ்திரங்களை ஸம்பாதித்து தேவேந்திரனை ஜெயித்து விட்டான். பின்பு தேவேந்திரன் ஈசவரனிடம் சரணடைந்து காலத்தில் மழைபொழியும்படி செய்கிறேனென்று உறுதிகூறி ஈச்வரனையே ஜாமீனாக வைத்து மேகாதிபதிகளை விடுவித்தான். அதுமுதல் மேகங்கள் அவ்வரசர்களிடம் பயந்து தவறாமல் காலத்தில் வர்ஷித்து பயிர்களை வ்ருத்தி செய்து வருகின்றன. இப்படி தானியம் தனம், புண்யம் இவைகளால் நிறைந்த பாண்டிய தேசங்களைப் பார்த்துக் கொண்டு செல்வாயாக.

அங்கு தாம்பிர பர்ணி நதியின் நிர்மலமான தீர்த்தத்தைப் பருகி கொஞ்சம் இளைப்பாறிவிட்டு ஸமுத்திரத்தைத் தாண்டுவதற்கு வேகமாகச் செல்லக் கடவாய். ஸமுத்திரத்தை தாண்டும் போது ஸாகரமானது எங்களுடைய முன்னோர்களால் வருத்தி செய்யப்பட்டதாகையால் என் தூதனை உன்னை கௌரவிப்பதற்காக மைநாகம் முதலிய மலைகளை அனுப்பினால் நீ அவற்றை அலக்ஷ்யம் செய்யாமல் சிறிது இளைப்பாறி உடனே புறப்பட்டு ஸமுத்திரத்தை தாண்டிச் சென்றால் த்ரிகூட மலையில் உயர்ந்த மாளிகைகளுடன் கூடிய ராக்ஷஸ ராஜதானியான இலங்கையைக் காணலாம். அங்கு

ர்ாவணனுல் சிறையிலடைக்கப்பட்ட தேவதா ஸ்த்ரீகள் உன்னை ஆதரவுடன் நோக்குவார்கள். அந்த லங்கை ஹனுமானுல் தன் வாலில் வைத்த அக்நியினுல் எரிக்கப் பட்டது. ராவணனிடம் பயந்து தங்கள் சக்திகளையுமிழந்த தேவதைகளுள் ஒருவ ஞன அக்நிக்கு ராவணனுடைய நகரத்தை எரிக்கும்படியான சக்தி கிடையாதாகையால் ஜானகியன் சோகாக்நியின் மஹிமையினுல் அந்த அக்நிக்கும் ராவண நகரத்தை எரிக்கும் சக்தி யுண்டாயிற்று. அப்படி எரித்து பஸ்மமாக ஆக்கப்பட்ட அந்த நகரத்தை ராவணனிடம் பயத்தினுல் விச்வகர்மா முதலிய தேவ சிற்பிகள் முன்பைவிட அதிக அழகுள்ளதாக ஸ்ருஷ்டித்துக் கொண்டிருப் பதை நீ காண்பாய். அங்கு அசோக வனத்தை அடைந்து ஒரு சிம்சுபா வ்ருக்ஷத் தின் அடியில் சோகித்துக் கொண்டிருக்கும் ஸீதையைக் காணலாம். ஜனகமஹாராஜ ருடைய பரிசுத்தமான யாக க்ஷேத்திரத்தில் உதித்து எங்கிருந்தாலும் தன் மஹிமையினுல் ஒருவித தோஷமுமின்றி இருக்கக் கூடிய ரகு குலத்தை விளங்கச் செய்த திவ்ய ரத்ந மல்லவா அவள்! விரஹவேதனையினுல் அவள் ஆபரணங்களை அணியாமல் சிம்சுபா வ்ருக்ஷத்தின் கிளைகளில் மாட்டி வைத் திருப்பாள். அவளை அறியத் தகுந்த அடை யாளங்களைக் கேள். அவள், பிரிந்தவ்ய-ஸநத்தினுல் மோஹமடைந்து உன்போன்ற பக்ஷிகளிடம் எனக்கு செய்தியை சொல்லி அனுப்புகிறவளகவோ, சில சுப சகுனங் களைக் கண்டு ''மந்த பாக்யையான எனக்கு ஸ்ரீ ராமசந்திரனுடைய செய்தியைக் கேட் கும்படியான பாக்கியமும் கிட்டுமோ'' என்று நான்கு பக்கங்களையும் நோக்குகிறவளா கவோ, கண்ணீரைப் பெருக்கிக் கொண்டு தன் பூஷணங்களைப் பார்த்து முன் ராமனு டைய சேர்க்கையின் வ்ருத்தாந்தத்தைப் பற்றிப் பிதற்றுகிறவளாகவோ இருப்பாள். இது அவளுக்கு என்னையடையும் வரை தைவத்தினுல் உண்டுபண்ணப்பட்ட நிலை யாயிருக்கும். மேலும், நந்தனவனத்தி லிருந்து விஷமரங்கள் அடர்ந்த காட்டிற்கு கொண்டு வரப்பட்ட பாரிஜாத மரத்தின் கிளை போலவும், ரஸமறியாத துர்ஜனர் களிடம் சொல்லப்படுகிற உயர்ந்த காவ்யம் போலவும், பனியினுல் வாட்டப்பட்டப் தாமரை போலவும், தப்பர்த்தம் செய்யப் பட்ட வார்த்தை போலவும், சேற்றினுல் மூடப்பட்ட தாமரைக் கொடி போலவும், மேகத்தினுல் மறைக்கப்பட்ட நிலவுபோல வும், விக்னங்களால் தடுக்கப்பட்ட ஆசை போலவும், புலியிடம் பயந்திருக்கும் பெண் மான் போலவும், பாணத்தினுல் யுத்தத்தில் அறுத்துத் தள்ளப்பட்ட நாண்கயிறு போல வும், ராவணனுடைய வீட்டிலிருக்கும் ஸீதையைக் காண்பாய். மேலும் என் பிரிவி னுல் கஷ்டமடைந்து துக்கம் தாளாமல் பூமி யில் புரளுபவளாகவும், ஹனுமானுல் நான் கொடுப்பித்த அங்குளீய (மோதிர)த்தை ஆதரவினுல் சூடாமணி (எனக்கு ஹனுமான் மூலமாக அனுப்பி விட்டபடியால்) இல்லாம லிருக்கிற சிரஸ்ஸிலும், மார்பிலும் வைத்துக் கொண்டு என் ஸ்பர்சத்தை நினைந்து உருகு கிறவளாயும், ருச்யமூகபர்வதத்தில் வானரர் களால் கொடுக்கப்பட்ட இந்த வஸ்திரத்திற்கு ஒப்பானதும் ஸுவர்ணமயமான நூல்களால் உன் ப்ரியையான ராஜஹம்ஸீ போல் நெய் யப்பட்ட ஹம்ஸத்தை நான்கு தலைப்பு களிலும் அடையாளமாகவுடையதாய் ஸூர் யன் போல் பிரகாசிக்கிற உயர்ந்த பீதாம் பரத்தைத் திரு வரையில் சாற்றிக் கொண்ட வளாயும் காண்பாய்.

இப்படிப்பட்ட துரவஸ்தையை அடைந்த என் ப்ரியையை அடையாளம் கண்டு அவளைத் தேத்தரவு செய்வதற்காக சிம்சுபா மரக்கிளையிலமர்ந்து, ராக்ஷஸஸ்த்ரீகள் உறங்கும் ஸமயமாக பார்த்து பின் மாலையில், மெதுவான குரலில், ரகுவம்ச, ஜனகவம்சங்களின் மஹிமையைச் சொல்லி 'என்னுல் அனுப்பப்பட்ட தூதன்' என்று அவள் உன்னை நம்பும்படி செய்து, ''ஜநகராஜ புத்ரி! ஸ்ரீ ராமன் உன் பாக்ய வசத்தினுல் பிராணனை தரித்துக் கொண்டு உன்னை குசலப்ரச்நம் செய்கிருர், உன்னைப் பிரிந்து வியஸநப்படும் அவருக்கு இரவு ஒவ் வொரு க்ஷணமும் யுகமாக வளர்கிறது.

அடிக்கடி மோஹத்தை அடைந்த அவர் லக்ஷ்மணனால் ஸமாதானம் செய்யப்படுகிறார். சீக்கிரம் ஸமுத்திரத்தில் ஸேதுவைக் கட்டி வானரர்களுடன் வந்து லங்கையை முற்று கையிட்டு ராக்ஷஸர்களுடன் யுத்தம் செய்யும் ஸ்ரீ லக்ஷ்மணனுடைய காதுக்கினிய வில்லின் சப்தத்தைக் கேட்பாய். ராவணனை வதம் செய்து புஷ்பக விமானத்தில் உன்னை ஏற்றிக் கொண்டு அயோத்தியை அடைவேன். அங்கு வஸிஷ்டர் முதலியவர்களால் அபி ஷேகம் பண்ணப்பட்டு நாமிருவரும் கஷ்டம் நீங்கி இன்புறுவோம்.'' இந்திராணிக்கும், பார்வதிக்கும்கூட தன் பர்த்தாக்களைவிட்டுப் பிரிந்து சிறிது காலம் வ்யஸநப்படும்படியான நிலை ஏற்பட்டதை நினைத்து நீயும் மனதைத் தேற்றிக் கொண்டு உன் சரீரத்தைப் பாது காத்துக் கொள்வாயாக.'' என்று.

இவ்வாறு ஹம்ஸத்தின் மூலம் ஸமாசாரத் தைச் சொல்லி அனுப்பி விட்டு ஸேதுவின் மூலம் கடலைக் கடந்து ராவணாதிகளை வதம் செய்து ஸீதையையடைந்து மறுபடியும் அயோத்தியில் ராஜ பட்டாபிஷேகம் பெற்று பாதுகைகளால் ஆளப் பெற்ற அரசைத்தான் ஏற்றுக் கொண்டார்.

இதில் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன்; ராமனு டைய அந்த காலத்தின் ஸ்திதியை அப்படியே வர்ணத்திருக்கிறபடியால் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தின் ப்ரஸ்தாவத்தில் சேஷ பீடத்தை மாத்திரம் குறிப்பிட்டார். (ராமன் தன்னுடைய கடைசி காலத்தி லன்றோ விபிஷணனிடம் குலதனமான ஸ்ரீ ரங்கநாதனை எழுந்தருளப் பண்ணி பின்பு ஷ சேஷ பீடத்திற்கு ஸ்ரீ ரங்கநாதன் எழுந் தருளப் போகின்றார்.) அதே காலத்தில், திருவேங்கடம் ஹஸ்திகிரி, திருவெள்ளரை, அழகர் கோயில், இவைகளை வர்ணித்திருக் கிறபடியால், ஸ்ரீரங்க க்ஷேத்திரத்திற்கு ஸ்ரீ ரங்கநாதன் எழுந்தருளுவதற்கு முன்பே, ஸ்ரீ ராமன் காலத்திலேயே இந்த திவ்ய தேசங்கள் ப்ரஸித்தி யடைந்திருந்தன' என்று இதிலிருந்து ஏற்படுகிறது. மேலும் இந்த காவ்யத்தில் அநேகம் வர்ணனைகள் வாசாமகோசரமாய் சிலாக்கியமாய் அமைந் துள்ளன. அவற்றை முற்று முரைக்கில் விரி வாகும் ஆகையால் இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறோம். இப்படி கௌஸலை தன் குலமணியான ஸ்ரீ ராமசந்திரன் ரகுகுல த்யோதக திவ்ய ரத்நமான ஸீதைபிராட்டிக்கு ராஜஹம்ஸத்தின் மூலமாய் அனுப்பிய வர லாற்றைத் தெரிவிக்கிறதாய் 'ஸந்தேசரத்நம்' என்று கொண்டாடப்பட்டது இந்த ஹம்ஸ ஸந்தேச காவ்யம். இப்படி உயர்ந்த அநேக திவ்ய க்ரந்தங்களை அநுக்ரஹித்த ஸ்ரீதேசி கன் திருவடிகளில் மனோவாக்காயங்களால் ப்ரணாமத்தை ஸமர்ப்பித்துக் கொள்வோமாக.

திருமணியும் குருமணியும்

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்,
ப்ரவசனபூஷணம், பக்தமணி
சிரோமணி என்.எஸ். தாதாசாரியார் ஸ்வாமி.
தஞ்சாவூர்.

''கொண்டிருக்கலாமே குரைகடல்சூழ் வையத்தை
விண்டலத்தில் வீற்றிருக்கலாமே தான்—தொண்டுபட்டுத்
தொல் புகழ் சேர் தூப்புல் வந்த தூய்மறையோன் செய்தகலை
அல்லும் பகலும் அறிந்து''

திருமணி

திருமணிக்கு ஸம்ஸ்க்ருத பாஷையில் ''கண்டா'' எனப் பெயர். ''மணி ஓசையே மங்கல ஓசை'' என்பது பழமொழி. கருடத்வனியும், திருமணி ஓசையும், வேத ஒலி போல் எல்லாவிதமான அரிஷ்டங்களையும் போக்கடிப்பன. 'கண்டா' என்ற பதத்துக்கு 'மங்கள நாதத்தால் விளங்குவது' எனப் பொருள்.

''ஸர்வ வாத்யமயீ கண்டா
கேசவஸ்ய ஸதா ப்ரியா''

—என்று கூறும் ஒரு புராணம் 'கண்டையானது ஸர்வ வாத்யங்களின் வடிவாய்க் கேசவனுக்கு மிகப் ப்ரியமானது' எனப் புகழ்ந்தது. ஆராதன வேளையில், பகவானுக்குத் திருமஞ்சனம் முதலியன கண்டருளப் பண்ணும் பொழுது, திருமணி ஸேவிப்பதால் ஏற்படும் நலங்களை எல்லாம், ப்ரும்மா, நாரதருக்கு விஸ்தாரமாகச் சொன்னதாகவும் அதே புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பாத்மமும், பாதாள கண்டத்தில்,

''சப்தோ யஸ்ய க்ருஹே நாஸ்தி
கண்டா வா கருடாந்விதா |
புரதோ வாஸுதேவஸ்ய
ந ஸ பாகவத: கலௌ''

(பெருமானின் திருமுன் திருமணி ஸேவையும், கருடனைத் தலையில் கொண்ட திருமணியின் இன்பநாதமும் எவர் வீட்டில் இல்லையோ அவர் பாகவதரல்ல) என்றது. பெருமாள் ஸந்நிதியில் திருமணி ஸேவிப்பது 16 வாத்யங்கள் வாசிப்பதற் கொப்பாகும் எனத் தர்ம சாஸ்திரமும் உரைத்தது. விஷ்ணு தர்மோத்தரத்தில், பகவானுக்கும் ப்ர்ஹ்லாதனுக்கும் நடந்த ஸம்வாதத்தில், பெருமாளே திருமணியின் சிறப்பைப் பல படியில் பேசியுள்ளார் என உரைக்கப்பட்டுள்ளது. கருடன் அல்லது ஸுதர்சனம் இவர்களின் உருவத்தை முடியில் கொண்ட திருமணியை எவர் என் முன்பு வைத்திருக்கிருரோ அவர் உடலில் நான் வஸிக்கிறேன் என்ற கருத்தில்,

''வைநதேயாந்விதாம் கண்டாம்
ஸுதர்சனயுதாம் யதி |
மமாக்ரே ஸ்தாபயேத் யஸ்து
தேஹே தஸ்ய வஸாம்யஹம்''

—என்று திருவாக் கிட்டதாகவும் அங்கேயே சொல்லப்பட்டுள்ளது. ஆராதன முறையில் குறை இருந்தாலும், பெருமாள், திருமணி ஆராதனத்தால் மிகவும் உகக்கிருர். பகவதாராதனம் செய்கிறவர்கள் திருமணியைத் தம் கையாலேயே அடிக்க வேண்டும்.

''ஸ்வகரேண ப்ரகுர்வந்தி
கண்டாநாதம் ஸுபக்தித:''

எனவும் விஷ்ணு தர்மோத்தரம் கூறிற்று. ஹரிபக்திவிலாசம் என்ற க்ரந்தத்தில் 6-வது விலாசத்தில் மரண காலத்தில் திருமணி

ஓசையைக் கேட்டவனுக்கு யமபயம், யம பீடை கிடையாது என்றும் மணி ஓசையால் பித்ருக்களும், தேவர்களும், பெருமாளும், பிராட்டியாரும் மகிழ்கிருர்கள் என்றும் திருமணி நாதம் பரவும் வீட்டில் பாம்பு பயம் இல்லை, இடி பயம் இல்லை, நெருப்பு பயம் இல்லை, வறுமை கிடையாது எனவும் சொல் லப்பட்டுள்ளது. த்ராகிணி முதலிய துர் தேவதைகளை விலக்கவும், தேவர்களை அழைக்கவும் திருமணி ஸேவிக்க வேண்டும் என்றும் சாஸ்திரங்கள் பேசுகின்றன.

''ஆகமார்த்தம் து தேவாநம்
கமனார்த்தந்து ரக்ஷஸாம்''

என்பது சாஸ்திர நியமனம்.

குருமணி

இவ்வாறு சாஸ்திரங்களில்புகழப்பட்ட திரு மணியே நம் தூப்புல் குலமணியான தேசிக ஞய் அவதரித்தது என்பது ஒருதலை. ஸ்ரீதேசி கன் ஸ்ரீ ஸூக்திகளை பக்தி சிரத்தையுடன் கம் பீரமாக அனுஸந்தித்தால் கண்டா நாதத்தின் அனுரணனம் அலைபாயும் என்பது அனுபவ ரஸிகர்கள் கண்ட உண்மை. அனுரணனத் தின் சாயையான அனுப்ராஸம் ஸ்ரீ ஸூக்தி களில் மிளிர்வதையும் காணலாம். ப்ரபன்ன ஜனகூடஸ்தரான நம்மாழ்வார், திருவிருத் தத்தில் ''அம்பூந்தேனிளம் சோலை அப்பா லது எப்பாலைக்கும் சேமத்ததே'' எனச் சோதிவாய் திறந்து, நம் ஆசார்ய வள்ளலின் பவிஷ்யதவதாரத்தை ஸூசகமாகப் பணித் தார். இந்த அருளிச் செயலைப் பரிஷ்கரிக்கும் வகையில் ஆறங்கம் கூறவந்த கலியனும் திருவேங்கடமுடையான் விஷயமான திருப் பாசுரங்கள் ஒன்றில் ''பொன்னை மாமணியை'' என அருளிச் செய்து திருமா மணி மண்டபத்தில் திருமணித் தேசிகன் விளங்கி நின்றபடியைக் காட்டி அருளினர். ''யாம் சென்று காண்டும் தண்காவிலே'' என்பது அப்பாசுரத்தின் ஈற்றடி. (பெரிய திருமொழி 10-1-2) தண்கா என்பது ஹிமோபவனம் என்ற க்ஷேத்திரத்தைக் குறிப்பது.

நம் ஸ்வாமியும் தாமே ''திருவேங்கட முடையான் திருவாராதனத்திலே பிரமன் கையில் ஏந்தி நின்ற திருமணி எனவே வித்வான்கள் தம்மை உத்ப்ரேக்ஷிக்கிருர் கள்'' எனத் திருவாக்கிட்டு முன்னவர் கருத்துக்கு முத்தாய்ப்பிட்டார். சிற்பகலா நிபுணர்கள் சாஸ்திர முறைப்படி வார்க்கப் பட்ட மணியில் எட்டு தேவகான ஸ்வரங்கள் ஒலிக்கும் என்பார்கள். அவ்வண்ணமே நம் மாமணியின் ஸ்ரீ கண்டாரவமான ஸ்ரீஸூக்திகள் அனைத்திலும் திருவஷ்டாக்ஷர மகிமைத் த்வனியன்றே ஜ்வலிப்பது! ஸ்வாமியின் கருடதண்டகம், கருடபஞ்சாசத், ஸுதர்சனஷ்டகம் முலிய க்ரந்தரத்னங்கள், கருட, ஸுதர்சன அடையாளமிட்ட திரு மணியாழ்வாரை நினைவு படுத்துகின்றன என ரஸிகர்களின் ரஸோக்தி. தேசிகன் என்ற திருநாமத்துக்குத் தேசத்தை அறிந் தவர் என்றும், வழிபடுத்துபவர் எனப் பொருளாகும். அந்த திவ்விய நாமம், அரும் குண நிதியான நம் ஆசார்ய வள்ள லிடமே ஈரரசுபடாமல் பொருந்தித் திகழ்ந் தது. விளக்கும் வழி காட்டும், ஒலியும் வழிப்படுத்தும். இம்மணியின் திருவவதாரம் சந்தஸ்ஸுக்களுக் கெல்லாம் மாதாவான காயத்ரியின் மரபில். மேலும் இக் கண்டாவ தாரர், ஆழ்வார் பரம்பரையில் முதல்வரான திருவேங்கடவன் திருநக்ஷத்திரத்தில் அவ தரித்து, கடைக்குட்டியான கலியன் திரு நக்ஷத்திரத்தில் விபவ சமாதியைக் கலைத் தார். இதனல் ஸ்ரீ ஆண்டாளைப் போல் ஆழ்வார் பரம்பரையில் வந்த அனைவரின் பெருமையையும் தம்மகத்தே கொண்டு விட்டாரோ எனவும் அறியக் கிடக்கிறது. யதிராஜ ஸப்ததி ஸ்தோத்திரத்தையும், பாது காஸஹஸ்ரநாதபத்ததியையும் நம் ஸ்வாமி பரமாக ஆக்கி அநுபவித்தால் இம் மணியின் மஹிமையை அறியலாம். நற் குணங்கள் எல்லாம் இவ்வாசாரிய ச்ரேஷ்டரை அடைந்து பெருமை பெற்றன என்றல்லவோ மகான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணனின் அருள் வாக்கு. தாமே பணித்த பாதுகா ஸஹஸ்ரத்தில், **''நாதாவஸான நிலயம் வதஸீவ நாதம்''** என்று திருவாக்கிடும்

முகத்தால், தம் ஸ்ரீஸூக்திகளில் கண்டா நாதம் ஒலிப்பதை மறைமுகமாகக் காட்டிக் கொடுத்தார். இதுவன்றோ ஸ்வாமியின் தனிப்பெருமை! ஸப்தபுரிகளுள் ஒன்றான கச்சிப்பதியில் பேரருளாளன் அருட்கண்ணொளி வட்டத்திலே இருளிலே தீபப்ரகாசம் போல் அவதரித்து, ஏழுமலைக்குள் ஒன்றான திருவேங்கட மலையில் துலங்கும் திருவேங்கடநாதனுக்கு உலகில் உலாவி, மொழிவார் மொழிவன மும் மறையாகும் அயிந்தை அனங்கர் அணைப்பிலே தங்கி ஸப்தப்ராகாராந்தர்கதமான ப்ரணவாக்ருதி விமானத்தின் நடுவிலே ஜ்வலிக்கும் பெரிய பெருமாள் திருவடி பரிஸரத்தில் விச்ரமித்த நம்ஆசாரிய வள்ளலுக்கு திவ்ய ஸ்தலங்களிலும், திவ்ய ஸூரிகளிடத்திலும், திவ்ய மங்கள விக்கிரகங்களிலும் ஈடுபாடு கரைகட்டாக் காவிரி என வெள்ளமிட்டது என்பதையும் அறியலாம்.

இந்த நம் தூப்புல் கோமானுடைய பெருமையோ மகான்களுக்கும் நிலைக்காத தொரு ஆழ்கடலாகும். இருப்பினும் "அத்ருஷ்யஸ் சாபிகம்யஸச" என்ற கணக்கிலே இச் சிறியோனுக்கும் ஸ்வரூபம் சிறிதளவு நிறம் பெற அக்கடல் திவ்யாமுதத்தில் ஒரு துளி சுவைக்க ப்ராப்தமாயிற்று. தன்யன்.

அவிவேக மஹாஸர்ப ஸந்தஷ்டா குலசேதஸாம்

நிகமாந்த குரோர் நாம காருடோ மந்த்ர உச்யதே

ஸ்ரீமத்...பரம...பரி. ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகன்
(கோழியாலம் ஸ்வாமி)

பங்குனி அனுஷம்.

ஸ்ரீமத் ஸ்ரீரங்க ராமாநுஜமுநிசரணாம்போஜ ப்ருங்காயமாண
ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜமுநி கருணாவாப்த வேதாந்த யுக்மம்
தத்விந்யஸ்தாத்மரக்ஷாபரமநககுணம் ப்ரம்ஹணி ஸ்ரீநிவாஸே
ஸ்ரீமத் ஸ்ரீரங்க ராமாநுஜமுநிமபம் ஸம்ச்ரயே க்ஞானவார்த்திம்

காகத்தைக் காத்த காகுத்தன்

ஸ்ரீ மதுபயவேதாந்த வித்வான் வில்லூர், நடாதூர்,
ஆசுகவி ஸார்வபௌம சிரோமணி,
ஸ்ரீநிதி ஸ்வாமி,
மதுரை

கவிதை என்பது ஒரு நுண்ணிய பூதக் கண்ணுடி. பூதக் கண்ணுடியைச் சரியான தொலைவில் வைத்துப் பார்த்தால் மிகச்சிறிய பொருளையும் மிகப் பெரிதாக்கிக் காண்பிக்கும். அப்படியே உயர்ந்த கவியுடைய கவிதையும். தன்இணையற்ற கவியாக விளங்கிய தூப்புற் குலமணியின் கவிதை அப்படிப்பட்ட தன்மை வாய்ந்தது. ''கவி தார்கிக ஸிம்ஹஸ்ய பாவாஸ்ஸந்தி பதே பதே.'' கவிதார்க்கிக ஸிம்ஹத்தினுடைய சொல்தோறும் பொருளாழமும் அழகும் தவழ்கின்றன என்று ரசிகர்கள் போற்றியுள்ளனர். இப்படிப் பதந்தோறும் பாவம் பரந்து நிற்பதை ஸ்ரீ ஸ்வாமியின் ஒரு கவிதையிலே விளக்கிக் காட்டுகின்றேன்.

ஸ்வாமி எழுதிய தசாவதாரஸ்தோத்திரத்தில் இராமாவதாரத்தைக் குறிப்பிடும் போழ்து 'கருணு காகுத்ஸ்த' என்று போற்றியருளினுர். அருள் நிறைந்த இராமனே! என்று கூறுவதற்கு வந்த கவி, இராமன் என்ற சொல்லிற்கு ஏராளமான பர்யாயபதங்கள் இருக்க, 'காகுத்ஸ்த' என்ற சொல்லை ஏன் போட வேண்டும் என்று சிந்தித்தால் பல பொருள்கள் கிடைக்கும். 'கருணை' என்றவுடன் இராமபிரானுடைய நினைவே தோன்றுகிறது. அவன் ''கருணையும்'' நன்கு வெளிப்பட்ட இடம் காக்கையைக் காத்த இடம் தான். கையும் களவுமாகப் பிடிபட்ட காக்கையைக் காத்த கருணையே நமக்கு அவனை அண்டுவதற்கு துணிச்சலைத் தருகின்றது.

காகத்தின் கதையைக் காத்தவனின் காதலியே காற்றின் திருமகனுக்கு 'இதுவும் ஓர் அடையாளம்' என்று கூறுகிருள்.... 'இராமனுடைய புல்லினின்று வந்த - அந்த அயனத்திரத்துக்கு அஞ்சி ஓடியது அந்தக் காக்கை. தன்னுடைய தந்தை (இந்திரனுலும்)யாலும், மாமுனிவர்களோடு கூடிய தேவதைகளாலும், கைவிடப்பட்ட அக் காகம், எத்திசையும் சுற்றி இளைத்து விழுந்து அவன் அடியே சரணென்று வந்தது. கொலை செய்யப்பட வேண்டிய அந்தக் காக்கையைக் கூடக் காகுத்தன் கருணையால் காத்தருளினுன்.'' வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத்'' என்று இங்கு பூமியின் ச்ரவணேந்த்ரியத்தில் உண்டான ஆதிகவி க்ருபயா காகுத்ஸ்த என்று இரண்டு பதங்களையும் இணைத்தருளினுர். சுருக்கமாகவே எழுதிப் பழகியவர் அவர். பிராட்டி திருவாக்கிலே காகுத்ஸ்தனையும் கருணையையும் இணைத்தருளியதில் ஏதோ இரகசியம் மறைந்துள்ளது. இது நபஸ்ய (ஆகாயத்தின்) மாஸத்தின் ச்ரவணத்தில் உண்டான நம் குருமணியைக் கவர்ந்து இருக்கிறது. ஆதி கவியின் பாவத்தை நாமும் உணர்ந்து உய்ய வேண்டும் என்ற கருணையுடனேயே கருணு காகுத்ஸ்த என்று கூறியருளினுர். இப்பொழுதும் நமக்கு இதில் ஏதோ இருக்கிறது? என்ற அளவில் தான் தெரிந்ததே ஒழிய என்ன என்பது இன்னும் புரியவில்லை. ஸ்ரீ ஸ்வாமிக்கே உரிய தனித் தன்மை தன்னுடைய ஸ்ரீஸூக்திகளில் எங்கேனும் தொக்கி நிற்கும் ஆழ் பொருளை வேறு இடத்தில் விவரிப்பது தான். அப்படியே தான் இந்தக் கருணு காகுத்ஸ்த்தனுக்குப் பொருள் அறிய நாம் அபயப்ரதாநஸாரத்துக்குச் செல்லவேண்டும். அங்கு வயாக்யானம் கிடைக்கும்,

"ஆகண்டலன் மகனாகிய
ஆவலிப்பு ஏறிய ஓர்
காகம் பிழைத்திடக்
கண்ணழிவே செய்த காகுத்தனே".

என்று அருளிச் செய்கிறார். காகம் காத்தவன் என்று கூற வேண்டி வந்தவுடன்—காகுத்ஸ்தன் என்ற பெயரால் தான் மங்களாசாஸனம். ஏன் இப்படி என்பதை விளக்க முன்பாதம். "ஆகண்டலன் மகன் ஆகிய" என்பதில் பதில். ஆகண்டலன்—இந்திரன்.

காகுத்ஸ்தன் என்பது இக்ஷ்வாகு வம்சத்தவர்களுக்குப் பொதுப் பெயர். தேவாசுரயுத்தத்தில் தேவர்களுக்கு உதவி செய்யப் போன ரகுமஹாராஜனுக்கு, காளை வடிவம் எடுத்துக் கொண்டு வாகனமாக ஆகண்டலன்—இந்தக் காக்கையின் அப்பன் வந்தான். அந்தக் காளையின் ககுத்தில் (திமிரில்) அமர்ந்து போரிட்டு வென்றதால் அவருக்கு ககுத்ஸ்தர் என்று புகழ்ப் பெயர் வந்தது. அதனால் அவர் வழி வருகின்ற மன்னர்கள் காகுத்ஸ்தர்கள் ஆயினர்.

மஹேந்த்ர மாஸ்த்தாய மஹோக்ஷரூபம்
யஸ் ஸம்யதி ப்ராப்த பிநாகிலீல :
சகார பாணை ரஸுராங்கநாநாம்
கண்டஸ்த்தலீ : ப்ரோஷித பத்ரலேகா :
இக்ஷ்வாகுவம்ச்ய : ககுதம் ந்ருபாணாம்
காகுத்ஸ்த்த இத்யாஹித லக்ஷணோபூத்
காகுத்ஸ்த்தசப்தம் யத உந்நதேச்சா :
ச்லாக்யம் ததத்யுத்தர கோஸலேந்த்ரா :

என்று இவ்வரலாற்றை மற்றொரு மஹாகவி துய்க்கிறான். உந்நதேச்சர்கள் உயர்ந்த கருத்தையுடையவர்கள் — காகுத்ஸ்தன் என்ற உயர்ந்த பெயரை வகிக்கிறார்கள் என்று அவனும் கூறுகிறான். உயர்ந்த கருத்து என்ன? — எளியவர்க்கிரங்கிக் காக்கும் எண்ணம்—அதாவது கருணை. அதையுடையவர்கள் காகுத்ஸ்தர்கள்" என்று அவன் எண்ணம் போலும்.] இவ்வரலாற்றினை நினைவில் கொண்டுதான் வால்மீகி க்ருபயா காகுத்ஸ்த : என்று இணைத்தார்.

ஒரு சார்த்தூலத்தின் கதை உலகம் அறிந்தது. எளிய ஆட்டுக் குட்டியைக் கொல்ல அச்சார்த்தூலம் "நீ தவறு செய்யவில்லையாகிலும் உன் அப்பன் பாட்டன்—யாராவது எனக்குத் தீங்கு செய்திருப்பார்கள் என்று காரணம் காட்டியது. இந்த ராகவ சார்த்தூலம் தன் மனைவியைத் துன்புறுத்திக் கையும் களவுமாக அகப்பட்ட காக்கையைக் காக்க நினைத்தது. கருணை கொள்ளக் காரணம் ஏதானும் வேண்டாமா? என்ன காரணம் சொல்லலாம்? என்று எண்ணியது. இதுவோ மன்னிக்க முடியாத குற்றம் செய்து விட்டது. ஏதாவது ஒரு சிறிய உபகாரமாவது செய்திருக்கிறதோ? இது செய்யா விட்டாலும் போகட்டும். இதன் அப்பன் செய்திருக்கிறானே. நமக்குச் செய்யவில்லையாயினும் நம் முன்னோர் எவருக்காவது செய்துள்ளனனோ? என்று எண்ணிய போது மூதாதையான ரகுவிற்கு வாகனமாக ஆகண்டலன் வந்த வரலாறு மனத்தில் தோன்றியது. உண்மையில் அவன் ரகுவிற்கு உபகாரமா செய்தான்! தன்னலம் காரணமாகத் தானே—தான் செருச் செய்து வெல்ல வேண்டும் என்று தானே அத்தொண்டு புரிந்தான்—என்று எண்ணவில்லை இச்சார்தூலம். ககுத்ஸ்த்ரான நம் முன்னோர்க்கு தொண்டு புரிந்த ஆகண்டலனின் மகன் என்று காரணம் காட்டிக் கருணை காட்டிக் காத்தருளிற்று.

ந ஸ்மரத்யபகாராணும்
சதமப்யாத்மவத்தயா
கதஞ்சிதுபகாரேண
க்ருதேநைகேந துஷ்யதி

என்று பல்லாயிரம் பொல்லாங்குகளை மறந்து எங்கேனும் ஒரு தொண்டு தேடும் கருணைக் கடல் அல்லவா காகுத்ஸ்தன்.

இதை விளக்கவே ஆளவந்தாரும், காகத்தைக் காத்த ரகுவரனே! (ரகுவர யதபூஸ் த்வம்) என்று விளித்து, ஆகண்டலன் மகன்—நம் முன்னோரான ரகுவின் வாகனமான—இந்திரனின் சிறுவன்—என்று அக் காக்கையைக் காத்தது போல — என்

பாட்டனாரான நாதமுனிகளை எண்ணி என்னையும் புரந்திடு (பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய) என்று தலைக்கட்டியருளினார்.

இத்தனையும் கருத்தில் வைத்தே வால்மீகி 'ஸ பித்ரா' என்று தொடங்கி 'காகுத்ஸ்த': என்று கூறிக் 'காத்தருளினான்' என்று பிராட்டி மூலம் விளக்கியருளினார்.

கருணைக் கடலான கவிதார்க்கிகசிம்மமும் இதை நாம் அறிய வேண்டும் என்று தான் கருணா காகுத்ஸ்த என்று விளித்து, "ஆகண்டலன் மகனைக் காத்த காகுத்தனே அரண்" என்றார்.

இதற்காகவே எம்பெருமானாரும் "காகுத்ஸ்த": என்று கண்ணநீர் கைகளா லிறைத்துக் கதறுகிறார்.

தூப்புல் வள்ளலைப் போலவே தூயதென் மொழியிலும், தொன்மை வடமொழியிலும் கவியாகி நின்ற குலசேகரப் பெருமாள் 'கண புரத்தென் காகுத்தன்' என்று கண்ணபுரப் பதிகத்தை முடித்தார். கருணை என்றால் காகுத்தன் நினைவிற்கு வருவது போல "கண்—புரத்தல்" என்பது போன்ற ஒலிகள் இணைந்தாலும் வான்மீகியின் கவிதையிலே மூழ்கின கொல்லி காவலர்க்கு "காகுத்தன்" கண்முன் நின்றனன்.

"காகுத்தன்" என்பதற்குப் பொருளைத் தமிழ்ப் பாட்டிலே தூப்புலப்பன் விளக்குவதிலும் ரசமுண்டு. "காகு" என்பது வடமொழியில் ப்ரசித்தியானது. "காக்வா கதா வர்ண்யதே" என்று ஆழ்வான் திருமகனார் அருளியது போல காக்கையையே காத்த பகவானின் கருணைக்கு எந்த காகு போடுவது? என்றபடித் தோன்ற, காகுவில் நின்றான்—காகுஸ்த்தன் என்று ஒரு புதுப் பெயர் வந்தது. காக்கையைக் காக்குமுன் காகுத்ஸ்த்தன் காக்கையைக் காத்தபின் காகுஸ்த்தனாகவும் ஆனான். இரண்டையும் குறிப்பிட்டுக் காட்டத் தமிழில் 'காகுத்தன்' என்றோர் சொல்லே போதுமல்லவா?

இவைகள் எல்லாவற்றையும் மனத்திற் கொண்டு இப்பாசுரத்தை அநுஸந்தித்தால் பேரின்பமே பிறக்கின்றது.

"சோகம் தவிர்க்கும் சுருதிப் பொருளொன்று சொல்லுகின்றோம்
நாகந் தனக்கும் இராக்கதற்கும் நமக்கும் சரணாம் :
ஆகண்டலன் மகனாகிய ஆவலிப்பேறிய ஓர்
காகம் பிழைத்திடக் கண்ணழிவே செய்த காகுத்தனே."

இப்படி

நிர்: ச்ரவஸ்யா: ச்ரவணோதிதஸ்ய!

மறைமுடித் தேசிகனும்-மாறனும்

ஸ்ரீ மதுபய வேதாந்த வீத்வான்
தேசிகதர்சன உத்தாரக: கோமடம்
எஸ். ஸ்ரீநிவாஸாச்சாரியார் ஸ்வாமி,
சென்னை-5.

நம்முடைய இந்த ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் நம்மை உபய வேதாந்திகள் என்று வ்யவஹரித்துக்கொள்ளுகிறோம். அதாவது நாம் ஸம்ஸ்க்ருத வேதங்களையும் த்ரமிட வேதங்களையும் அத்யயனம் செய்வது மாத்திரமன்றிக்கே அவற்றை எம்பெருமான் திரு முன்பே ஸந்நிதிகளிலும் நம்முடைய திரு மாளிகைகளிலும் ப்ரதி தினமும் அநுஸந்தித்து வருகிறோம்.

இவற்றில் ஸம்ஸ்க்ருத வேதத்தில் அவரவர்கள் எந்த வேதத்தைச் சேர்ந்தவர்களோ அதையும், எல்லாரும் த்ரமிட வேதங்களை அத்யயனம் செய்து வருகிறோம். அநாதியாகப் போந்துவரும் இந்த உபய வேதாந்தங்களில் ஸம்ஸ்கிருத வேதங்களை வகுத்தவர் வ்யாஸமஹர்ஷி. யோகத்தின் பலத்தினால் நம்மாழ்வாரை ப்ரத்யக்ஷீகரித்து அவரால் உபதேசிக்கப்பெற்ற நாலாயிர ப்ரபந்தங்களை வகுத்தவர் ஸ்ரீமந் நாதமுனிகள்.

பெரிய முதலியார் என்று கொண்டாடப்பட்ட ஸ்ரீ ஆளவந்தார் தம்முடைய ஸ்தோத்ரதில் நம்வாழ்வாரை,

ஆத்யஸ்ய ந: குலபதே:
வகுளாபிராமம்.

என்று நம்முடைய குலத்திற்கு குலபதி என்று உத்கோஷித்தார். த்ரமிட வேதங்கள் என்னப்படும் 24 ப்ரபந்தங்களை வெளியிட்ட ஆழ்வார்கள் பன்னிருவர்களே யாகிலும் அவைகள் கால ஸ்வபாவத்தினால் லோபித்து விடவே, மீண்டும் அவற்றை லோகத்தில் ப்ரவர்த்தனம் செய்தவர் நம்மாழ்வார். ஆகையினால்தான் இவரைக் குலபதி என்றார்.

இவர் எப்படிக் குலபதி என்னும் ஆகாரத்தை உலகத்தில் நன்கு வெளியிட்ட பெருமை மறைமுடித் தேசிகனைச் சார்ந்தது. அந்த அம்சம் இங்கு கொஞ்சம் விவரிக்கப் படுகிறது.

1. ஸ்ரீ ஸம்ப்ரதாய பரிசுத்தியில் ''யதாதிகாரம் ப்ரவ்ருத்தமான வேதாந்த ஸம்பரதாயத்திற்கு இந்த யுகாரம்பத்திலே ப்ரஹ்ம நந்த்யாதிகளுக்குப் பின்பு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார்'' என்று அருளிச் செய்திருக்கிறார்.

2. ஸ்ரீரஹஸ்யரக்ஷையில் (ஸ்தோத்ரபாஷ்யத்தில்) 5-ம் சுலோக வ்யாக்யானத்தில் ஒரு ஸமயத்தில் யோகதசையில் ஆவிர்ப்பாவம் செய்து எல்லா உபநிஷத்துக்களுக்கும் ஸாரமான அர்த்தத்தை உபதேசம் செய்தவருமான நம்மாழ்வார் என்று நிரூபித்தருளியிருக்கிறார்.

3. 6-ம் சுலோக வ்யாக்யானத்தில், 'நேராகவும் பரம்பரையாகவும் எல்லாவித உபகாரமும் செய்த பகவானுடைய நல்ல ஸம்ப்ரதாயத்தைத் தனக்குக் காட்டிக் கொடுத்ததாகிய மஹோபகாரத்தை அறிந்தவராயிருக்கிறபடியினாலும், அவர்களின் ப்ரபந்தங்களை அநுஸந்தாநம் செய்வதினால் உண்டாக்கப்பட்டதுமான ஜ்ஞாநம் பக்தி இவைகளின் கடைப்போக்காகிய இந்த ஸ்தோத்திரத்தில்' என்று நிரூபித்துள்ளார்.

4. ஸ்ரீ உபகார ஸங்க்ரஹத்தில், 'தந்தை யென நின்ற தனித் திருமால் தாளில் தலை வைத்தோம் சடகோபன் அருளினுலே' என்று பகவானை அடைவதற்கு ஆழ்வாருடைய அநுக்ரஹம் அவச்யம் வேண்டும் என்று சுட்டிக் காட்டியுள்ளார்.

5. இதை மேலே விவரித்து ஆழ்வாருடைய முதல் ப்ரபந்தமான திருவிருத்தத்தின் முதல் பாட்டிற்கு விசேஷித்து வ்யாக்யான மிட்டருளும்பொழுது 'அயர்வறும் அமரர்கள் அதிபதியான திருமாலாலே மயர்வறமதி நலம் பெறும்படி அருளப்பட்ட நம்மாழ்வார்' என்றும்,

நின்று கேட்டருளாய் — 'அவாவறச் சூழ்ந்தாய்' என்னும்படி நான் அவாவற்று வீடு பெருமளவும் அந்யபரனுகாதே அபிமுகனுகக் கொண்டு கேட்டருளாய் மெய் நின்று என்னவுமாம்.

கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே நீ மயர்வறமதி நலம் அருளுகையாலே நிருபாதிகதாஸ்யத்திலே நித்ய ப்ரதிஷ்டித புத்தியான நான் என்னுலே உன்னை இன்கவி பாட ஒருப்பட்ட நிரபேக்ஷ ஸ்வதந்த்ரனை உன்னுலே ப்ரேரிதனுய்க் கொண்டு பண்ணுகிற விஜ்ஞாபநன கங்கர்யங்களான நாலு ப்ரபந்தங்களையும்' என்று அருளிச் செய்திருப்பதினுல் இப்ரபந்தங்களுக்கு மூலகர்த்தா எம்பெருமான் என்று கூறப்பட்டதாயிற்று.

6. இப்ரபந்தங்கள் த்வாபர யுகத்தின் இறுதியிலும் கலியுகத்தின் ஆரம்பத்திலும் ப்ரவர்த்திக்கப்பட்டதே யாகிலும் இவை நித்யங்கள் என்னும் அம்சத்தை ஸ்ரீபரமபத ஸோபாநத்தில் ப்ரளயத்தில் நசிக்காதவர்களும், ஸ்ருஷ்டியில் ஸ்ருஷ்டிக்கப்படாதவர்களுமான நித்யமுக்தர்களினுல் இவை பாடப்படுகின்றன என்று,

தனித்திவம் சேர்ந்து தமருடனே
பாவளரும் தமிழ்ப் பல்லாண்டு
இசையுடன் பாடுவமே
'பல்லாண்டே பல்லாண்டும்
பாடுவோமே'

என்றும் அநுஸந்தித்துள்ளார்.

7. ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரத்தில் இரண்டாவது பத்ததியில் ஆழ்வாரையும் பாதுகைகளையும் ஒன்ருக்கி நிரூபித்திருப்பதினுல் அந்த ஸ்ரீஸூக்தி முழுவதும் ஆழ்வாருடைய ப்ரபாவத்தையே கூறுகிறதாகும். அதில் 14வது பத்ததியில் – அதாவது நாத பத்ததியில் 100 ச்லோகங்களிலும் திருவாய் மொழியின் ப்ரபாவம் கூறப்பட்டிருக்கிறது.

91-ம்சுலோகத்தில் தம்முடைய வாக்குக்கு ஏற்பட்ட உத்கர்ஷம் ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளை அநுஸந்தித்ததினுல் என்று கூறியிருக்கிருர்.

திருவாய்மொழியில் 8ம் பத்தில் 10ம் திருவாய்மொழியில் ஆழ்வார் அநுஸந்தித்த பாகவதப்ரபாவத்தை ஸங்கரஹித்து புருஷார்த்த காஷ்டாதிகாரத்தில் ஒரு சுலோகத்தில் அருளிச் செய்திருக்கிருர்.

திருவாய்மொழியின் அர்த்தங்களை ஸங்க்ரஹித்து ஸ்ரீத்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்னுவளியில் நிரூபித்திருக்கிருர். அதில் உபோத்காத ரூபமான 10 சுலோகங்களிலும் நிகமன ரூபமான ஆறு சுலோகங்களிலிலும் திருவாய்மொழியினுடைய பெருமை பரக்க நிரூபிக்கப் பட்டிருக்கிறது.

ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்திகள் நித்யமானவை என்பதைப் பல இடங்களில் அருளிச் செய்திருக்கிருர். அதை ஆழ்வார் ப்ரதியக்ஷீகரித்து வெளியிட்டார் என்று ஸ்பஷ்டமாக நிரூபித்திருக்கிருர்.

'நித்யம் ஜாதா சடரிபுத நோ:
நிஷ்பதந்தீ முகாத்தே
ப்ராசீநாநாம் ச்ருதி-
பரிஷதாம் பாதுகே.'

'தத்தாத்ருக் தாம்ரபர்ணீதடகத
சடஜித் த்ருஷ்ட ஸர்வீய சாகா,'
'அகில த்ராமிடப்ரஹ்மதர்சீ'.
'வகுளதரமஹர்ஷே :
த்ருஷ்டத்ரமிடநிகமே,'

'ஆம்நாயாநாம் ப்ரக்ருதிமபராம்
ஸம்ஹிதாம் த்ருஷ்டவந்தம் :
வகுளதரதநு ஸ்த்வம் ஸம்ஹிதாம்
யாமபச்ய:'

'வேதா நாகஸ்த்ய பாஷாவபுஷ
உததரச்ச்ரேயஸே தேஹிநாம் ய:'

'வகுள்தர மஹர்ஷி த்ருஷ்ட
விச்வஜநீநோபநிஷத்'

இத்யாதிகள் இங்கு அநுஸந்தேயம்.

8. வேங்கடேசன் என்று அவதார ப்ரபாவத்தைக் கூறும் திருநாமம் இருக்க, பிறந்து படைத்த குணக்ருதங்களான வேதாந்தாசார்யர், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர், கவிதார்க்கிகஸிம்ஹம் என்கிற திருநாமங்களும் இருக்க அவற்றை அநாதரித்து தாம் உகந்த திருநாமத்தை பாதுகாஸேவகன் என்பதையே ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரத்தில் 31ம் பத்ததியில்

'ஸேவாஹ்வாநம் ஸபதி
ச்ருணுயாம் பாதுகாஸேவகேதி'

என்று அநுஸந்தித்திருக்கிறார்.

ஆழ்வார் எம்பெருமானுடைய பக்தர்களில் ஏழு தலைமுறைக்கு அடிமை செய்ய பாரித்தார். அது போதாது, பாதுகைகளுக்கு அதாவது ஆழ்வாருக்குத் தாஸன் என்பதை

'புநரஹமாஸம் பாதுகே தந்யஜந்மா'

என்று அருளிச் செய்திருக்கிறார்.

9. த்ரமிடோப நிஷந்நிவேச சூந்யாநபி
லக்ஷ்மீரமணாய ரோசயிஷ்யந் |
த்ருவமாவிசதி ஸ்ம பாதுகாத்மா
சடகோப: ஸ்வயமேவ மாநநீய:

என்று ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் அந்வயமில்லாதவர்களை மோக்ஷத்திற்குள் விட வேண்டாம் என்று எம்பெருமான் நியமித்து விட்டதை அறிந்து அப்படிப்பட்டவர்கள் விஷயத்தில் க்ருபையினால் பாதுகைகளாக அவதரித்துத் தம்முடைய ஸம்பந்தத்தை உண்டாக்குகிறார் என்கிற ஏற்றம் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

10. பாஷாகீதி : ப்ரசஸ்தா பகவதி வசநாத்
ராஜவச்சோபசாராத்

என்று பகவான் திருமுன்பே கானத்துடன் இவைகளை அனுஸந்திக்கலாம் என்று நிரூபித்துள்ளார்.

இப்படிப் பற்பல இடங்களில் ஸ்வாமி தேசிகன் ஆழ்வாருடைய ப்ரபாவதிசயத்தை நிரூபித்திருக்கிறார். கீழ்க்கூறியது ஸங்க்ரஹமான நிரூபணம். இதே ரீதியில் மற்றவைகளையும் அநுஸந்தித்து நாம் க்ருதார்த்தர்களாவோமாக.

ஸ்ரீதேசிகனும் - திருச்சின்னமாலையும்

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான், மஹாகவி
திருமலை நல்லான் சக்ரவர்த்தி
வ. ராமாநுஜாச்சாரியார் ஸ்வாமி
பைத்தாம் பாடி

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அநேக கிரந்தங்கள் அருளிச் செய்ததாக குரு பரம்பரையிலும் அதையனுஸரித்த வைபவ ப்ரகாசிகையிலும் உள்ளன. அவைகளில் வெகுவாக பல கிரந் தங்களில் வேதாந்த ரஹஸ்யார்த்தங்கள் அடங்கியுள்ளன.

சில கிரந்தங்களே அதிராதவை. பூகோள நிர்ணயம் முதலிய சிலவும், இந்த மலரில் வரும் காணக் கிடைக்காத **தசதீபகநிகண்டு** என்னும் கிரந்தமும்.

[மேலுள்ள விஷயங்கள் அடியேன் தகப்ப ஞரிடம் (வராஹாசாரியார்), அடியேன் காலக்ஷேபம் செய்யும்போது கர்ணகர்ணிகை யென்று அவரருளிச் செய்தவைகள்.]

ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸர்வதந்த்ர ஸ்வ தந்த்ர விருதுக்கேற்ப ஸர்வசாஸ்த்ரங்களும் அறிந்து காந்தர்வ வேதத்திலும் வல்லுனரா யிருந்தார். அவரைக் கேவல சாஸ்த்ரஜ்ஞர், வைராக்யநிதி என்றெண்ணி ஒரு நாட்யஜ் ஞர் ஸ்ரீஸ்வாமியிடம்வந்து தன் திறமையைக் காட்ட சிஷ்யர்களின் வேண்டுகோளின் பேரில் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர விருதை ஸ்தா பிக்க **அத்திகிரிமாகாத்ம்யம்** என்னும் நாட் யத்துக்கமைந்த கிரந்தம் அருளிச் செய்தா யிற்றும்.

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ காஞ்சீ தூப்புலில் தன் திருமாளிகையில் சிஷ்யர்களுக்குக் கால க்ஷேபம் ஸாதித்தாயிற்றும். அப்போது வைசாகோத்ஸவம் ப்ராப்தமாக இரண்டு மூன்று நாட்கள், ஸ்ரீஸ்வாமி, திருச்சின்னத் வனி கேட்டதும் காலக்ஷேபத்தை அப்ப டியே நிறுத்திவிட்டு சிஷ்யர்களுடன் பெரு மாள் எங்கு எழுந்தருளுகிருரோ அங்கு எழுந்தருளி உத்ஸவாநு யாத்ரையில் அன் வயித்தாயிற்றும். பிறகு நான்காவது நாள் திருச்சின்னத்வனி கேட்டதும் ஸ்ரீ ஸ்வாமி கிளம்ப சிஷ்யர்கள் தண்டம் ஸமர்ப்பித்து பெருமாள் ஸமீபத்தில் எழுந்தருளினதும் அநுயாத்ரையில் அன்வயிக்கலாமே, இந்த த்வனியில் என்ன அவ்வளவு விசேஷமிருக் கிறது? என்ன, ஸ்ரீ ஸ்வாமி தேசிகன், மற்ற திருச்சின்னத்வனியைக் காட்டிலும் இவ் விடத்திய த்வனியில் ரஹஸ்யார்த்தங்களெல் லாம் பொதிந்து கிடக்கின்றன. தத்ப்ரதி பாத்யன் எழுந்தருளும்போது அது தெரிந்து நாம் காலக்ஷேபம் சொல்வது ஸரியில்லை. இன்று மூலமந்த்ரத்யானப்படி ஸேவை ஸாதிப்பதால் அநுயாத்ரையானதும் பரக்கச் சொல்லுகிறேன்'' என்று எழுந்தருளி அநு யாத்ரையாய், அநுயாகாநந்தரம் இந்தத் திருச்சின்னமாலையருளிச் செய்தாயிற்றும்.

மறுநாள் பெருமாள் மோஹினீ ரூபத்துடன் தம் வாசலில் எழுந்தருள, திருவோலக்கத் தில் இந்தத் திருச்சின்னமாலையை அருளிச் செய்ய, உடனே அங்கு வந்த ஒரு மதாந்தர ப்ரதிவாதி, சிலருடன் சேர்ந்துகொண்டு, ''இந்தத் தமிழ் அபபாஷை, ம்லேச்சபாஷை, பெருமாள் முன் இதைச் சொல்லக் கூடாது'' என்று ஆக்ஷேபிக்க, ஸ்ரீ ஸ்வாமி, விந்த்ய ஸ்தம்பாத், பாஷா கீதி: ப்ரசஸ்தா, வர்ண ஸ்தோமைர்வகுள இத்யாதி தம் சுலோகங் களையும், அதற்கு மூலமான ''யதைவ ஸாம்ஸ்க்ருதீபாஷா'' ''நாபப்ரம் சத்வ தோஷோஸ்தி'' இத்யாதி புராண வசநங் களையும் எடுத்துச் சொல்லி ப்ரதிவாதிகளை ஜயிக்க, பெருமாள் அர்ச்சகரிடம் ஆவே சித்து ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர், என்ற விருது இவருக்குத் தகும். இதற்கு ஸ்மாரகமாக நம் திருச்சின்னங்கள் இரண்டில் ஒன்றை இவ ருக்கு முன் த்வனிக்கும்படிக் கொடுத்துவிட வேண்டும்'' என்று நியமிக்க, நியமனப்படி ஒரு திருச்சின்னம் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனுக்குக் கொடுத்துவிட்டதால் அன்றுமுதல் நாளது வரை பெருமாளுக்கு ஒரே திருச்சின்னம் ஊதப்படுகிறது.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

தூப்புல் மாபுருடன்

**ஸ்ரீ உபயவே. சதுர்புஜராமம்
பொன்பதர் கூட்டம்
ஏ. பி. பாஷ்யமய்யங்கார் ஸ்வாமி,
திருவல்லிக்கேணி.**

பகவத் ராமானுஜனை "பெரும்பூதூர் வந்த வள்ளல்" என்று ஸ்ரீ தேசிகன் புகழ்கிறார். ஆனால் இந்த "வள்ளல்" சப்தம் ஸ்வாமி தேசிகனிடம்தான் நன்றாகப் பொருந்தும். தமது வள்ளல் தன்மையினால் (உதாரஸ்வா பாவத்தினால்), அந்தணர் அந்தியர் எல்லை யில் நின்ற அனைத்துலகும் வாழவேண்டு மென்று மிகுந்த கருணை கொண்டு, ப்ரபத்தி சாஸ்த்ரத்தை பரக்கப் பேசினவர் ஸ்ரீதேசி கன் ஒருவரே. "பரஸ் சதம் வாபி பரஸ் ஸஹஸ்ரம் ஸ்ரீவேங்கடாசார்ய க்ருதா: ப்ர பந்தா:" என்றபடி, நூற்றுக் கணக்கான தமது ப்ரபந்தங்கள் அனைத்திலும், ஒவ் வொரு ச்லோகத்திலும் ஒவ்வொரு பாசுரத்தி லும் ப்ரபத்தியை வைத்தே பேசி இருக்கிறார் தேசிகன். சிறிது ஜ்ஞானம் படைத்தவரும் எளிதில் உணரலாம்படியான அமுதமென் மொழிகளைத் தந்தருளிய "வள்ளல்" தூப்புல் மாபுருடன். அந்தந்த அதிகாரி களுக்குத் தகுந்தபடி விஷயங்களை ஸார மாகவும், மிகச் சுருக்கமாகவும், கொஞ்சம் பெரிதாகவும், மிகப் பெரிதாகவும் எடுத்துக் கூறுவதில், ஸ்ரீ தேசிகருக்குநிகர் தேசிகரே. உதாஹரணமாக, ப்ரபத்தியைப் பற்றி, (1) அடைக்கலப்பத்து, (2) ந்யாஸதசகம், (3) ந்யாஸ விம்சதி, (4) ந்யாஸதிலகம்-32 ச்லோகங்கள், (5) சரணாகதி தீபிகை - 59 ச்லோகங்கள், (6) ப்ரபத்தியையே ஒரு பெரிய சாஸ்த்ரமாக வைத்துப் பேசி இருக்கும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம். இப்படி தேசிகனைத் தவிர வேறு யாரால் இயற்ற முடியும்!! ஆழ்வார்களும், தேசிகனுக்கு முன் இருந்த ஆசார்யர் களும் ப்ரபத்தியை அனுஷ்டித்துப் போந் தார்களேயன்றி, அதை ஒரு சாஸ்த்ரமாக எழுதி வைக்கவில்லை. ஸ்வாமி தேசிகன் தான், ப்ரபத்தியை திர்யக்குகள் உள்பட எல்லோரும் அனுஷ்டிக்கலாம் என்று அதை ஒரு சாஸ்த்ரமாக விளக்கிக் காட்டினார். ஆகையினால்தான், பின்புள்ள மஹநீயர்கள் "ப்ரபதனகலா ஜன்மஜலதி:", "தஞ்சப் பரகதியை தந்தருள்வோன் வாழியே"என்று ஸ்ரீதேசிகனை புகழ்ந்து வருகிறார்கள்.

திவ்ய தம்பதிகளான பெரிய பெருமாளும், பெரிய பிராட்டியாரும் போட்டி போட்டுக் கொண்டு, உகந்து, "வேதாந்தா சார்யர், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர், கவி தார்க்கிக ஸிம்ஹம்" என்ற பிருதங்களை யெல்லாம் கொடுத்தது ஸ்ரீ தேசிகனுக்குத் தான். ஆகையால் "மாலுகந்த ஆசிரியர்" (திருமாலால் உகக்கப்பட்ட ஆசிரியர்) என்பது தேசிகன் விஷயத்தில் சாலப் பொருந்தும். அர்ச்சையில் அளவு கடந்த உகப்பு (பக்தி) ஸ்ரீ தேசிகனுக்கு இருந்தது. "அச்சுவை பெறினும் வேண்டேன்" என்று தொண்டர் அடிப்பொடி ஆழ்வார், ஸ்ரீரங்க நாதனிடத்திலுள்ள ஈடுபாட்டினால் பரமபதம் வேண்டாம் என்று ஸாதாரணமாகக் கூறி னார். ஸ்ரீ தேசிகனோவெனில், "ஸத்யம் சபே வாரண சைலநாத வைகுண்டவாஸேபி நமேபிலாஷ:" என்று ஸத்யம் பண்ணியும், சபதம் செய்தும், தமக்கு அர்ச்சையிலுள்ள ஈடுபாட்டை எடுத்துக் காட்டுகிறார். ஆழ் வார்களைவிட அதிகமான அர்ச்சானுபவம் ஸ்ரீ தேசிகனிடத்தில் இருந்தபடியால் "மாலு கந்த ஆசிரியர்" (மாலை-பகவானை) உகந்த ஆசிரியர்) என்பதும் ஸ்ரீ தேசிகனிடம்தான் மிகவும் பொருந்தும்.

ரகுவீரகத்யத்தில் "நிரவதிக மாஹாத்ம் யன்" என்று ராகவஸிம்ஹத்தை ஸ்ரீ தேசி கன் போற்றி இருக்கிறார். அந்த ராகவஸிம் ஹத்தைப்போலே இந்த கவிவாதிஸிம்ஹமும் நிரவதிக மாஹாத்ம்யரே. எல்லையில்லாத மஹிமை உடையவரே. காலதத்வம் உள்ளளவும் சொன்னாலும் தூப்புல் மாபுருட னுடைய மஹிமைகளையும், பெருமைகளையும் பூர்ணமாகச் சொல்லி முடியாது. ஆகையி னால் "மதிக்ஷயாத் நிவர்தந்தே, ந கோவிந்த குணக்ஷயாத்"என்கிற கணக்கில் இத்துடன் விரமிக்கிறேன்.

தூப்புல் வேதாந்த தேசிகரே - இன்னும் ஒரு நூற்றாண்டிரும்,



ஸ்ரீபரம...பரி...ஸ்ரீரங்கநாத மஹாதேசிகன்

(தென்பரை ஆண்டவன்)

ஸ்ரீமத் வேத வதம்ஸ லக்ஷ்மண முநே: ப்ராப்தாகமாந்தத்வயம்
தேந ஸ்ரீரகு புங்கவாங்க்ரியுகளே ந்யஸ்தாத்ம ரக்ஷாபரம்,
ஸ்ரீமத் ஸ்ரீநிதி யோகிவர்ய கருணா லப்தாப்ஜ சக்ராங்கனம்
வந்தே சாந்தி விரக்தி பூர்ணம் அனகம் ஸ்ரீரங்கநாதம் குரும்,

ஆவணி—ரேவதி

ஆசார்யனின் பெருமை

ஸ்ரீமதுபயவே, ந்யாய வேதாந்த வித்வான்
சதுர்வேத சதக்ரது
கிருஷ்ணமாச்சாரியர் ஸ்வாமி,
நாவல்பாக்கம்.

எம்பெருமானுடைய பெருமை போல், ஆசார்ய ச்ரேஷ்டரான தூப்புல் குலமணியின் பெருமையும் மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாதவையே. ஆகிலும் பெரிய தடாகத்தில் அவரவர் விடாய் தீர்ப்பதற்குரிய தண்ணீரை எடுக்குமதுபோல், அடியேன் சிற்றறிவிற்கெட்டினவளவில் ஆசார்ய குண ஸாகரத்தில் இழிந்து, வாக்கு பெற்ற பலம் பெற விரும்புகிறேன்.

அதில் தற்சமயம் ஸ்வாமியின் ஏழாவது நூற்றுண்டு பூர்த்தியடைவதையநுசரித்து கணக்கிடமுடியாத அம்மஹானுடைய விசேஷங்களில் சுருக்கமாக ஏழு விஷயங்களை விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

1. ஆசார்யனின் அவதாரச் சிறப்பு

ஸ்வாமியின் திருத் தகப்பனாரான அநந்த ஸோமயாஜிக்கும், அவர் தர்மபத்நியான தோதாரம்மாளுக்கும் திருமலையில் திருவேங்கடமுடையான், ஸ்வப்னத்தில் தன் ஆராதநத்திற்கு உபகரணமான திருமணியை, புத்ரராக அவதரிப்பிப்பதாகச் சொல்லி அதை தோதாரம்மாளிடம் விழுங்கச் சொல்ல, அவளும் அதை அப்படியே விழுங்கினதும், அர்ச்சகர் முதலியவர்களுக்கும் அன்று ராத்ரியிலேயே ஸ்வப்னத்தில் அதை பகவான் தெரிவித்தும், மறுநாள் பகவத் ஸன்னிதியில் திருமணியிராததும், அன்றுமுதல் கர்ப்பவதியாகி 12 வருஷம் கழித்து ஸ்வாமி அவதரித்ததும் அமானுஷமான விஷயமென்பது உலகமறிந்த அத்புதம். இதை ஸ்வாமியும் ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தில் தாம் அருளிச் செய்கிறார்.

2. அம்மாள் அனுக்ரஹம்

பின்பொருநாள் 5-வது வயதில் தனது மாதுலரான அப்புள்ளாருடன் பேரருளாளன் ஸன்னதிக்கு தூப்புல் பிள்ளை எழுந்தருளி திருமலையில் அம்மாள் காலக்ஷேப கோஷ்டியை ஸேவிக்கும் ஸமயத்தில் ஸ்வாமியின் திருமுக மலர்ச்சியைக் கண்டு அம்மாள் அதிதேஜிஷ்டரான இவராரென்று கேழ்க்க வடக்குத் திருவீதிப்பிள்ளை இவர் ஜந்ம வ்ருத்தாந்தத்தை பரக்க விண்ணப்பம் செய்ய அதைக் கேட்டு எல்லாரும் ஆச்சர்யப்பட்டு, காலக்ஷேபத்தில் விட்ட இடம் தெரியாமலிருக்க ஸ்வாமி அவ்விடத்தை எடுத்து உபந்யஸிக்க அதைக் கேட்டதும், அம்மாள் இவரை வாரி அணைத்து,

''ப்ரதிஷ்டாபித வேதாந்த:
ப்ரதிக்ஷிப்த பஹிர்மத: |
பூயாஸ்த்ரைவித்யமான்யஸ் த்வம்
பூரிகல்யாணபாஜநம் ||

என்று அனுக்ரஹித்ததும் ஸுப்ரஸித்தமான சிலாலிகிதமான விஷயம்.

பிறகு ஸாந்தீபினியிடத்தில் கண்ணன் போல் தமது மாதுலரான அப்புள்ளாரிடத்தில் 20 வயதிற்குள் எல்லா வித்யையையும் கற்று அவருடைய பரிபூர்ண கடாக்ஷத்தால் ஜ்ஞான நிதியானதும் ஒன்று.

3. ஹயக்ரீவஸாக்ஷாத்காரம்

பிறகு ஸர்வேச்வரன் இவரைக் கொண்டு நம்மிராமானுஜஸித்தாந்தத்தை நிலை நாட்டக் கோரி, வைநதேயரை (கருத்மானை)

இட்டு ஸ்வப்னத்தில் ஹயக்ரீவமந்த்ரோபா தேசம் செய்விக்க, திருவயிந்தையில் தைவ நாயகன் திருவடிவாரத்தில் ஔஷதாத்ரியில் அம்மந்த்ரஸித்தியைப் பெற்றதும் அதடியாக வந்த ஸாத்விக ஜ்ஞாநஸமிருத்தியும், ஓரதி சயம்.

அவையாவன, காவ்ய சாஸ்திரங்களில் மட்டுமன்றி ஸர்வதந்திரங்களிலும் சிறந்தவ ரென்று திவ்ய தம்பதிகளால் ஆசீர்வதிக்கப் பட்டதும், தாமும் இதை பலவிடங்களில் அநுஸந்திப்பதும் குறிப்பிடத் தக்கது.

சாஸ்திரங்களில் தனியான மேதாவிசேஷ மும் காவ்ய நாடங்களில் அத்யாச்சர்யமான சைலியும், உபய வேதாந்தங்களில் அபார மான புத்தி விசேஷமும் கல்பனு சக்தியும், வாத தோரணியும், எண்குணமுள்ள நுண் ணறிவும் ஸ்வாமியிடத்தில் குடி கொண்டது போல் எங்கு காணமுடியும்! முக்கியமாக ஸம்ப்ரதாயங்களிலோ, மற்றவைகளிலோ ஸாரத்தைக் குறிக்கும் தன்மை ஆசார்ய னுக்குத் தனிமையான சிறப்பு.

4. ஆசார்யக்ருத்யம்

இப்படிப்பட்ட விசேஷ ஜ்ஞாநங்கள் ஒரு வர்க்கேற்படுவதே அரிது. அதோடு அதற் கேற்ப அனுஷ்டாந விசேஷமேற்படுவது மிகவும் அரிது. இது நம் வேதாந்தவாசிரிய ரிடம் எப்படி நிறம் பெற்றனவென்பதில், நாளது அறுதியாக அவர் வழியாக ஸ்ரீ வைஷ் ணவ உலகம் பின்பற்றிவரும் வடிக்கட்டின ஆசார விசேஷங்களே போதுமான சான்று.

ஸ்ரீ வைஷ்ணவர்கள் செய்யவேண்டிய பஞ்சகாலப்ரக்ரியை மற்றுமுள்ள ஆசாரங் களை நிஷ்கர்ஷிக்கும் ஸ்ரீ பாஞ்சராத்ரரக்ஷை, ஸச்சரித்ரரக்ஷை முதலிய க்ரந்தங்களால் தெளிந்து அதன்படி சிஷ்யர்கள் நடந்து வரும்படி செய்வித்ததும் ஆசார்ய க்ருத்யம்.

ஸத்ஸம்ப்ரதாய க்ரமமாக தான் கற்ற அத்யாத்ம வித்யையை ''த்ரிம்சத் வாரம் ச்ராவித சாரீரக பாஷ்ய:'' என்று தாமே ஸாதித்தபடி பல ஸச்சிஷ்யர்களுக்கு உபதே சம் செய்து அவர்களிடம் அழியா ஞான விளக்கை ஏற்றி இருளனைத்தும் மாற்றினதும் ஒன்று. க்ரந்தங்கள் செய்து எல்லாவற்றை யும் நிலைநாட்டினதும் ஆசார்யன் செய்த மஹோபகாரம்.

இப்படி மிகுதியற ஒவ்வொரு விசேஷங் களும் ஜ்ஞாநாநுஷ்டான வைராக்யமும் ஆசார்யரிடத்தில் நிறைந்திருப்பதை நன்று ஆலோசித்து எப்படிப்பட்ட சேர்த்தி யென் பதை பலரும் நன்கு உணர வேண்டுமென்ப தற்காகவே எல்லாரும் அறிந்த விஷயங் களையே இங்கு ஞாபகப்படுத்துகிறேன்.

5. ஸ்ரீஸூக்திகளின் சிறப்பு

காவ்ய நாடகாதிகளில் காளிதாஸன், பவபூதி, முதலிய சிறந்த கவிகளின் கவிதை களிலும் மேன்பட்ட ரஸிகஜன ஹ்ருதய போக்யமான பல அத்புத வர்ணநம் முதலி யவைகளும், ஆசு கவிதையும், ஸமஸ்யா பூர்த்தியும், சித்ரபத்ததி மற்றுமுள்ள ப்ராஸ விசேஷங்களும், பாதுகாஸஹஸ்ரம், யாத வாப்யுதயம் போன்ற க்ரந்தங்களில் விளங்கு கின்றன.

சாஸ்திரங்களில் ப்ராசீன ந்யாயசாஸ்திர க்ரந்தங்களை வேதத்திற்குப் பொருந்தினவை யாக சிக்ஷித்து பரிஷ்கரித்து ஸத்தர்க்கங் களாக ந்யாய பரிசுத்தி, ந்யாயஸித்தாஞ்ஜ னம் ஆகிய க்ரந்தங்களால் அழகு செய் தவகையும் ஸேச்வர மீமாம்ஸை மீமாம்ஸா பாதுகை, இவைகளால் பூர்வமீமாம்ஸா சாஸ் திரத்தை சாரீரக சாஸ்திரத்தோடு இணையச் செய்வித்த பரிபாடியும் அற்புதமானது.

6. ஸித்தாந்த ஸ்தாபனம்

அபூர்வமானது. அத்யாத்ம சாஸ்திரத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச் செய்த ஸ்ரீ பாஷ் யாதிகளின் பெருமையை சீர்குலையாதபடி கம்பீரமான கருத்துக்களை தத்வடீகை அதி கரணஸாராவளிகளில் வெளியிட்டமைக்காக சததூஷணி முதலான வாதக்ரந்தங்களால் ஸித்தாந்த ஸ்தாபனம் செய்ததும்.

7. தர்மஸ்தாபனம்

சில்லரை ரஹஸ்யம். ரஹஸ்ய ஸாரங்களில், ஓரொன்றே அமையுமென்னும்படி சுருங்கவும் விரிவாகவும் ஸம்ப்ரதாயார்த்தங்களை தெளிவித்ததும்.

மறைந்துகிடந்த சரணுகதி தர்மத்தை பல நூல்களால் ஸந்தேஹமற விளக்கி நற்கதியை எல்லாரும் எளிதில் பெறும்படி செய்த மகோபகாரமும்.

இவை தவிற ஆங்காங்கு விஷ்ண்வாலயங்களில் பிறர்களால் ஏற்பட்ட பல தொந்தரவுகளை அகற்றி ஆகம முறைப்படி திருவாராதந மஹோத்ஸவாதிகளை சாச்வதமாக நடக்கச் செய்வித்ததும் எல்லாருடைய உள்ளமும் பூரிக்கச் செய்கிறது என்பதில் அவரவர்கள் அந்தராத்மாவே ப்ரமாணம்.

இப்படி தம் ஆயுள் காலத்தில் ஸாதித்த ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்க்கும்போது, இப்படியும் ஒரு வ்யக்தியா! என்று ப்ரம்மாதி தேவர்களும் ஆச்சர்யப்படும்படி செய்யுமென்பதில் ஐயமேயில்லை.

இவைகளையெல்லாம் உற்று நோக்குங்கால் ஸாக்ஷாத் பகவதவதாரங்களிலும் ஏற்படாத பலவிதமான லோகோஜ்ஜீவனமும், பரிபூர்ணமான ஆசார்ய க்ருத்யமும் குணங்களும், ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிக ரூபமான பகவதவதாரத்தில் நன்கு விளங்குவதால் அம்மகானிடத்தில் மிகுந்த பக்தியை வைத்து எல்லாரும் இகபர வாழ்க்கையைப் பெறவேண்டுமென்றும் அடியேனும் நாவிற்குத் தூய்மை பெறவேண்டுமென்றும் கிடைத்த சிறிய இடத்தில் இச்சிறிய கட்டுரையை வெளியிடுகிறேன்.

அபூர்வமான பல பெரியோர்களுடைய கட்டுரையில் பலரும் அறிந்த விஷயங்களையே ஒரு வ்யாஸமாகத் தொகுத்து, ஓரிடத்தில் இவைகளை சீர்தூக்கி அனுஸந்தித்து தூப்புல் வள்ளலின் பெருமை வாசாமகோசரம் என்று எளிதில் அறியலாகுமென்றும் இப்படி எழுதுகிறேன். தேசிகன் திருவடி மலர்களில் ''யதாததாவாபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி:'' என்கிற கணக்கில் ஈடுபடுகிறுனென்பதை கருத்தில் கொண்டு அடியேனை அனுக்ரஹிக்கும்படி ப்ரார்த்தித்துக்கொண்டு இதோடு முடித்துக்கொள்கிறேன்.

தேசிகன் விளக்கிய தயாவைபவம்

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
கோழியாலம்
ரங்கநாதாச்சாரியர் ஸ்வாமி,
ந்யாயவேதாந்த வித்வான்,
திருச்சி.

பரமபுருஷனுன ச்ரிய:பதி, தானுன தன்மையில் ஸம்ஸாரி சேதனர்களை உய்விக்க முடியாமையாலே பல அவதாரங்களை எடுத்து அவர்களை உஜ்ஜீவிப்பிக்கப் பார்த்தும்,

"அவஜாநந்தி மாம் மூடா:
மனுஷீம் தநுமாச்ரிதம்!"

என்கிறபடியே அவர்கள் இவனை அவமதிக்க

"ஸாக்ஷாந் நாராயணோ தேவ:
க்ருத்வா மர்த்யமயீம் தநும் |
மக்நாந் உத்தரதே லோகாந்
காருண்யாத் சாஸ்த்ரபாணிநா ||"

என்கிறபடியே ஆசார்யர்களாக அவதரிக்கும் ரீதியில், திருவேங்கடமுடையானுன தானே தன் திருநக்ஷத்திரத்திலேயே, தன் திருநாமத்துடனேயே ஆசார்யோத்தமரான ஸ்ரீ தேசிகனுகத் திருவவதாரம் செய்தருளினுர் என்பது பிரசித்தம்.

ஆசார்ய பரம்பரையில் நாயகரத்னமாக விளங்கும் ஸ்ரீ தேசிகனுடைய சிறப்பைக் கர்ண பரம்பரையாக வரும் சரித்திரங்களைக் கொண்டு அறுதியிடுவதைக் காட்டிலும், அவர் தம்முடைய ஸ்ரீ ஸூக்திகளைக் கொண்டே நிச்சயிப்பது சாலச்சிறந்ததாகும்.

"பரச்சதம் வாபி பரஸ்ஸஹஸ்ரம்
ஸ்ரீவேங்கடாசார்யக்ருதா:
ப்ரபந்தா: |
தத்ராலமேக: கலு புக்திமுக்த்யோ:
கார்த்ஸ்ந்யேந கஸ்தாந் கணயேத்
ஸமஸ்தாந் ||"

"சீரொன்று தூப்புல்
திருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன
பழமொழியுள்—ஓரொன்று
தானேயமையாதோ
தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப்போமளவும்
வாழ்வு"

என்கிறபடியே, ஸ்வாமி தேசிகனுடைய ஸ்ரீ ஸூக்திக்குள்ள பெருமை வாசாமகோசரம். பரமத நிரஸந ஸ்வமத ஸ்தாபந பரமான வாதக்ரந்தங்களையும், மிகச் சுருக்கமாகவும், மிக விரிவாகவும் அமைந்துள்ள ரஹஸ்ய க்ரந்தங்களையும் காட்டிலும், ஸ்தோத்ர க்ரந்தங்களில் ஒவ்வொரு ச்லோகமும் தத்வஹித புருஷார்த்தங்களைத் தெளிவாகவும் லளிதமாகவும் விளக்குகின்றனவாகையாலே ஸ்தோத்ரங்கள் சிறப்புற்றவை. பகவத்பரமான மற்ற ஸ்தோத்ரங்களைக் காட்டிலும், பகவானுடைய மற்ற குணங்களை தோஷங்களாகாமல் குணங்களாக்கும் குண ச்ரேஷ்டமான தயாகுண விஷயமாக அமைந்த தயாசதகம் மிகப் பெருமை பெற்றது.

"குணுயத்தம் லோகே" என்று ஆழ்வான் அருளியபடியே உலகில் குணத்தைக் கொண்டு குணிக்கு ஏற்றமாகும். பகவத் விஷயத்தில் குணியான அவனுலே குணங்களுக்கு ஏற்றமாகும். இவ்விருபடியுமல்லாமல், மற்ற குணங்களையும் குணமாக்குவதன் மூலம் குணியான அவனுக்கே நிறங்கொடுக்கும் தயாகுணத்தின் சிறப்பை தயாசதகத்தி

ஓுள்ள குணவைபவபரமான முதல் ச்லோகத்திலேயே தெளிவுபடுத்துகிருர் ஸ்வாமி தேசிகன். ச்லோகம் பின்வருமாறு:—

அநுசர சக்த்யாதிகுணாம்
அக்ரேஸரபோத விரசிதாலோகாம் |
ஸ்வாதீந வ்ருஷகிரீசாம்
ஸ்வயம் ப்ரபூதாம் ப்ரமாணயாமி தயாம் ||

இதன் கருத்து வருமாறு :— ஜ்ஞாநம், சக்தி முதலான குணங்கள் இயல்பாகவே சேதனனின் தோஷங்களை ஸர்வேச்வரனுக்குக் காட்டிக் கொடுத்து, அவற்றுக்குரிய தண்டனையை அளிப்பதற்கே காரணமாகக் கூடியவையாகையாலே, அவை மாத்திரமிருந்தால் சேதனர்கள் உய்ய முடியாது. அதற்காகவே, அந்த குணங்களையும் சேதனர்களை உய்விப்பவையாக ஆக்கும் கருணை குணம் எம்பெருமானுடைய குணங்களில் ஒரு ராணியாக உருவகப்படுத்தப்படுகிறது. ஒரு ராணியானவள் புறப்பட்டு வரும்போது, அவளுடைய சேடிகளில் ஒருத்தி கைவிளக்குக் காட்டிக்கொண்டு முன்னே செல்வதும், மற்றவர்கள் அவளுக்குப் பரிசர்யை செய்து கொண்டு பின்னே செல்வதும் இயல்பு. இந்த ரீதியில் இங்கு ஜ்ஞானமாகிற குணம் ஸம்ஸாரி சேதனர்களைக் காட்டிச் செல்கின்றது. அடுத்தபடி சக்தியாகிற குணம் செயல்பட்டதானல், தோஷபூயிஷ்டரான சேதனர்க்குக் கடும் தண்டனை கிடைக்குமேயல்லாமல் உஜ்ஜீவனத்திற்கு இடமேயில்லை. இப்படியாக வொட்டாமல் தயாதேவியாகிற மஹிஷி ஜ்ஞான சக்திகளுக்கு நடுவிலே ஆணை செலுத்தி நின்றுகொண்டு, சேதனர்களிடம் தேடிக் காணவேண்டிய குணங்களைக் காட்டும்படியும், தோஷங்களை மறைக்கும்படியும் ஜ்ஞானத்தை நியமிப்பதன் மூலமும், சேதனர்களுக்கு நிக்ரஹத்தைச் செய்யாமல், அநுக்ரஹத்தையே செய்யும்படி சக்தியை நியமிப்பதன் மூலமும், அவ்விரண்டு குணங்களையும் குணங்களாக்கி, எம்பெருமானுக்கும் நிறங்கொடுத்துச் சேதனர்களை உய்விக்கிறது. இவ்விஷயமே மிக அழகாக இந்த ச்லோகத்தில் விளக்கப்பட்டுள்ளது.

இப்படி ஸ்வாமி தேசிகனுடைய காவ்யங்களிலுள்ள ஒவ்வொரு ச்லோகத்திலும் பற்பல ஆழ்ந்த கருத்துக்கள் இருப்பதைக் கண்டே பரமதஸ்தரான அப்பைய தீக்ஷிதரும் யாதவாப்யுதய வ்யாக்யானத்தில்,

''இத்தம் விசிந்த்யா: ஸர்வத்ர பாவா:
ஸந்தி பதே பதே |
கவிதார்க்கிக ஸிம்ஹஸ்ய
காவ்யேஷு லலிதேஷ்வபி ||

என்று ஆச்சர்ய வசப்பட்டார்.

ஆசார்ய ஸார்வபௌமன்

ஸ்ரீமதுபயவே,
கி. ர. அப்புள்ளாச்சாரியார் ஸ்வாமி,
Prof. Philosophy (Retd.)

ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் எனும் ஆசார்யோத்தமனை, ஆசார்ய ஸார்வபௌமனைப் பிரபல கவியும் திறனுய்வாளருமான அரசாணிப்பாலை ஸ்ரீ வேங்கடாத்வரீ தம் கிரந்தத்தில் எங்ஙனம் அனுபவித்தாரென்பதைக் கேட்டு மகிழ்வோம். மஹா கவியினுடைய "விசுவகுணுதர்ச சம்பு" என்ற சிறந்த நூலில் விசுவாவசு, கிருசானு என்ற இருவர்களின் ஸம்வாதமாக அமைந்த 21-ஆவது பிரகரணமான "ஸ்ரீ காஞ்சீ" வர்ணனத்தின் இறுதியில் தீபப்ரகாசர் எம்பெருமானின் வர்ணனை சொல்லப்படுகிறது. தூப்புல் அக்ரஹாரத்தில் அவதரித்த மஹா புருஷரான ஸ்ரீ வேதாந்தாசாரியரின் வர்ணனம் என்று மகுடமிட்ட 22-ஆவது பிரகரணம் கூறப்படுகிறது. தீபப்ரகாச க்ஷேத்ரத்தைச் சுட்டிக் காட்டி, விசுவாசு சொல்கிருன் :— "இந்த க்ஷேத்ரத்தில் தான் ஸ்ரீ ரங்கனுதனுடைய ஆஜ்ஞையால் "வேதாந்தாசாரியர்" என்ற பிருதை அடைந்தவரும், இந்த மாநிலத்திலுள்ள ஆசார்யவர்யர்களால் பண்டிதர்கள் என்ன, வாதம் செய்கிறவர்கள் என்ன, இவர்களாகிற யானைகளுக்கு "ஸிம்ஹம்" என்று கூறப்பட்டவரும், எல்லாவித சாஸ்திரங்களிலும் கரைகண்ட பண்டிதர்களின் நடுவில் 'இந்திரன்'போல் விளங்குபவருமான, பிரபுவான ஸ்ரீ வேங்கடேச கவி பிறந்தார்."

மேலும் சொல்கிருன், விசுவாவசு:—

"ஏ, ஜனங்களே ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் உள்ள சம்பந்தம் எப்படிப்பட்டது? 'பேதமா'? 'அபேதமா'? என்ற விஷயத்தில் 'பேதமே தான்', 'அபேதமே தான்' என்று மட்டும் வறட்டுச் சர்ச்சை செய்யும் மதாந்தரஸ்தர்களின் கர்வத்தை அடக்கி, கங்காப்ரவாஹத்தின் ஜலம்போல் தெளிந்த தன் சொற்களால் விசிஷ்டாத்வைதத்தின் உண்மையை விளக்கிக் காட்டி, தன்னைச் சரணம் என்று அடைந்த அனைவர்களின் கஷ்டத்தைப் போக்குகிறவனை ஸ்ரீ மாதவனின் குணுனுபவத்திலேயே திருப்தி அடைந்தவரான, ஸ்ரீ வேதாந்த தேசிகமணி, உங்களுக்குப் பரமானந்தம் உண்டு பண்ணட்டும்."

மேலும் விசுவாவசு பகருவது என்னவென்ருல்—

"வேதங்களனைத்தையும் அத்யயனம் பண்ணினவர்களுக்கு, சாஸ்திர ஞானம் ஏற்படுவதில்லை. சாஸ்திரங்களின் அறிவு இருந்தாலும் காவ்ய பரிசயம், அழகிய கவி பாடும் திறன் இவை ஏற்படுகிறதில்லை. இவைகள் ஏற்பட்டாலும் புலனடக்கம் ஸதாசாரம், பகவத் பக்தி, பொறுமை, கிருத்யாகிருத்ய விவேகம் போன்ற ஆத்ம குணங்கள் ஏற்படுவதில்லை. ஆனுல் மேற்கூறிய அனைத்தும் வேதாந்தாசாரியரிடத்தில் ஒருங்கே திகழ்ந்து பொலிந்து விளையாடுகின்றன."

அதிகம் சொல்வது எதற்கு?

"குதிரைமுகத்தோனை உபாஸனை செய்து குதிருஷ்டிகளின் கர்வமும் அட்டஹாஸமும் இருந்தவிடம் தெரியாமல் அடங்கிப் போகச் செய்கிற வேங்கட குருவைத் தவிர வேறு எவரை "குரு" என்று அறிவாளியானவன் ஒப்புக் கொள்வான்."

கிருசானு கேட்கிருன் :—

''நண்பனே, அப்படிச் சொல்லாதே, ஏனென்ருல், ''சங்கராசாரியரின் சுத்த அத்வைதத்தில் கஷ்டமான யஜ்ஞாதி கர்மங்களை விட்டு விட்டும், சுலபமான தர்ப்பணம் முதலான கர்மங்களை விட்டுவிட்டும், சமதமாதி சாதன சதுஷ்டயத்திஞலேயே மோக்ஷம் அடையலாமென்ற இலகுவான ஞான மார்க்கத்தை அனுஷ்டிப்பதை விட்டுவிட்டும், கர்மானுஷ்டானங்கள் செய்தால் மோக்ஷம் கிடைக்கும் என்ற, நீ சொல்கிற கடினமார்க்கத்தை எவன்தான் ஒப்புக்கொண்டு, நடக்க ஆரம்பிப்பான்''!

விசுவாவசு பதிலளிக்கிருன் :—

''கிருசானுவே, அறிவாளியாகிய நீ இப்படிச் சொல்லலாமோ? வேதாந்தங்களைப் பரிசீலனை செய்து, முடிவாக சாதுக்களால் சொல்லப்பட்ட வழிதான், வேதாந்தாசாரியனை வைத்தியரால் சொல்லப்பட்டிருக்கும் வழி. இஃதே சம்சாரிகளுக்குப் பத்யமான வழியுமாகும். இவ்வழியைக் குருடர்களான மனிதர்கள் தான் சபலத்திஞல் பின்பற்ற மறுக்கிருர்கள். ''இஷ்டம்போல் சாப்பிடு, ஸ்திரீகளிடம் மனம்போல் விளையாடு,'' என்று சொல்கிற பாமரர்களைச் சபலமுள்ள நோயாளி புகழ்வான். ''பத்யமாக இரு'' என்று சொல்லும் வைத்தியனைப் புகழமாட்டான். இது உலக இயல்பு''.

''மேலும், இந்த ஸம்ஸாரமாகிற சமுத்திரத்தில் வேதாந்தாசாரியர் என்ற ஓடம் அவதரிக்காமல் இருந்திருந்தால், இந்த உலகமானது பக்தி என்ன, நல்லோர்கள் கடைப்பிடிக்கும் வழி என்ன, நல்ல சாஸ்திரஞானம் என்ன, வைதிக மார்க்கம் என்ன, இவைகளை நாம் அடையும் வழி இல்லாமலே போயிருக்கும்.''

விசுவாவசு பின்னரும் யோசித்துச் சொல்கிருன் :—

''ஞானம் என்ற சமுத்திரத்தில் மூழ்கி, அடிமணலைக் கொண்டுவரும் திறனுள்ள வேங்கட குருவோடு இக்காலத்தில் சமீபத்தில் உதித்திருக்கும் பண்டிதர்களின் பெயர்களைச் சேர்த்துச் சொல்வது அனுசிதம்.

''கட்செவியன் என்ற (பாம்பான) வியாஸ மஹரிஷி (பதஞ்சலி)(1), காலின் அடியினுல் பார்க்கும் சக்தி வாய்ந்த (தர்க்க சாஸ்திரியான அக்ஷபாதர் என்ற கௌதமர்)(2), யானைமுகத்தோனுன (பாரதம் எழுதிய விநாயகர்)(3), குதிரை முகத்தோனுன (வேதத்தைக் கொடுக்கும் ஞானக் கடவுளான (ஹயக்ரீவர்)(4), இந்த நால்வர்களோடு வேதாந்த தேசிகன் எண்ணத் தகுந்தவர்.''

''மேலும், ஹரியான வேங்கடநாதனின் உருவான மணியானது, மஹாமோஹமாகிற பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கக்கூடிய, சக்தி வாய்ந்த தன்பெருத்த நாதத்திஞல் (ஒலியினுல்) (ச்ருதி)வேதங்களுக்கும் (நமது காதுகளுக்கும்) மங்களத்தை(ஆனந்தத்தை) உண்டுபண்ணுகிறது.''

மீண்டும் வேடிக்கையாகப் பேசுகிருன் :—

'' வேதாந்தாசாரியர் என்ற பெயரே வேதாந்தங்களின் உண்மைப் பொருளை விளக்குகிறவன் என்று எல்லோருக்கும் எடுத்துக்காட்டப் போதுமானது. அதில் 'வே' என்ற அக்ஷரத்தை விட்டு, பாக்கியுள்ள 'தாந்தாசார்யர்' என்ற பதம் உள், வெளி இந்திரியங்களை அடக்கும் சக்தி வாய்ந்தவர்களுக்கெல்லாம் 'குரு' என்று 'பொருள்'படும்.''

கிருசானு கேட்கிருன் :—

''பிரும்மாவின் பத்னியான சரஸ்வதி தேவியின் சூர்ணகுந்தலங்களை முகர்ந்து கொண்டிருக்கும் மிருதுவான புஷ்பங்கள் போல் அதி மிருதுவான (சுகுமாரமான) கவிதார்க்கிக ஸிம்ஹத்தின் சப்தமானது (வாக்கானது) பாருங்கற்களைப்போல் கடினமான குதர்க்க வாதிகளின் ஹிருதயத்தைப் பிளக்கும் சக்தியுடையதாக எப்படி ஆகிறது?''

விசுவாவசு சொல்கிருன் :—

“ஸகே! கொஞ்சம் கேள். வேதாந்தாசார்யரின் புஷ்பம்போல் மிருதுவான வாக்கானது, ஸத்துக்களுக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணிக்கொண்டு, பருத்த பாருங்கற்களுக்கு சமமான வாதத்தில் சத்ருக்களானவர்களின் மனதைப் பிளக்கும் சக்தி வாய்ந்தது. (எதுபோல் என்ருல்,) தன் பெற்ரேர்களான நந்தன், உபநந்தன் முதலானேர்க்குக் கொண்டாடி (கூசிப் பிடிக்கும்படியான) பாலனை ஸ்ரீகிருஷ்ணனின் பாதம் (அதே சமயத்தில்) கடினமான சகடாசுரனைப் பொடியாக்கும் சக்தி வாய்ந்த ‘இடி’ யாக ஆகிவிட்டதல்லவா?”

பிறகு, விசுவாவசு கைகளைக் கூப்பிப் பிரார்த்திக்கிருன். கர்வங் கொண்ட குதிருஷ்டி, பாஷண்டாதி முதலான மதங்களைக் களைபோல் பிடுங்கி எறியவும், உண்மையான யதார்த்த ஞானத்தை முளைக்கச் செய்யவும், மிகவும் பலம் வாய்ந்த கலியுகத்தில் வேதமார்க்கத்துக்கு ஜயத்தை உண்டுபண்ணவும், ஸ்ரீ ராமானுஜ மதத்தைக் காப்பாற்றுகிற அறிவாளிகளுக்கு ஆனந்தத்தை உண்டுபண்ணவும், பாபமாகிற காட்டுக்கு அழிவுசெய்யவும் வேண்டினவற்றை வேண்டியவர்க்கெல்லாம் கொடுக்கும் கல்பக விருக்ஷமான வேதாந்த வித்யா குருவானவர் மேன்மேலும் ஜயம் அடையட்டும்.”

சுபம்:

ஸ்ரீவண்-ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்
(42-ம் பட்டம்)

தை — உத்தராடம்

ஸ்ரீரங்கேச யதீந்துநா கருணயா ஸௌஸ்யாதிதி ப்ரேக்ஷிதம்
க்யாத: ஸ்ரீசடகோப காரிஜமுகநீட்பாதாம் புஜேந்திந்திரம்.
தாந்தி க்ஷாந்திதயாதிபி : சுபகுண : பாந்தம் புதாக்ரேஸரம்
ஸ்ரீமத் ரங்க சடாரியோகிநமஹம் ச்ரேயோ நிதிம் ஸம்ச்ரயே.

பகவதம்சம் ஸ்ரீ தேசிகன்

ப்ரம்ஹஸ்ரீ, அனந்தபிருதாலங்க்ருத
சேங்காலிபுரம்
அனந்தராம தீக்ஷிதர் அவர்கள்
சேலம் - 7.

வைதிக தர்மத்தைப் பாதுகாத்த மஹாபுருஷ ரான ஸ்ரீ தேசிகனின் எழுநூறுவது ஆண்டு விழா நடத்துவது நமது பாக்யமே யாகும். 105 வயது ஸதாசாரத்துடனும், திடகாத்திரத் துடனும் ஜீவித்திருந்த மஹான். காருட மந்திரம் ஹயக்ரீவ மந்திரம் இவைகளை சித்தி செய்து அந்த தெய்வங்களின் அருளைப் பெற்றவர். சாஸ்திரங்களின் கருத்தை மிக எளிய நடையில் காவியத்தில் கூறுவது போல் கூறும் திறமை வாய்ந்தவர். அவர்கள் ஸ்ரீ கிருஷ்ண சரிதத்தை கூறும் யாதவாப் யுதயம் என்னும் ஓர் சிறந்த அநுக்ரஹ க்ரந்தத்தை இயற்றியுள்ளார். அதற்கு ஸ்ரீபரமேச்வ ராம்சமான ஸ்ரீ அப்பய்ய தீக்ஷதர் வியாக்யானம் எழுதி இருக்கிருர். அந்த காவியத்தைப் படிப்பவர்களுக்கெல்லாம் ஸகல க்ஷேமங்களும் உடன் கைகூடுவதை இக்கலியிலும் கண்கூடாகக் காணலாம். ஸ்ரீ தேசிகன் யாதவாப்யுதயத்தில், ஸ்ரீ கோபாலனை, யசோதை உரலில் கட்டி யதை இடச்சேரியிலுள்ள பக்தர்கள் வந்து கண்டுகளித்ததைக் கூறுகிருர். அதாவது :

பத்தம் ததா பாவயதாம் முகுந்தம்
அயத்நவிச்சேதிநி கர்மபந்தே |
தபஸ்விநீ தத்க்ரது நீதிராத்யா,
ஸவ்ரீடமாரண்ய கதாஸு தஸ்தௌ ||

உரலில் கட்டப்பட்ட முகுந்தனைக் கண்டு களித்து தியானம் செய்கின்றவர்களுடைய கர்மபந்தமானது, ஸன்யாஸம் முதலிய ஒரு வித முயற்சியுமில்லாமல் நீங்குவதைக் கண்டதும் (ஸ்ரீ பகவானை எவ்வாறு உபாஸிக்கிருனே, அவ்வாறே ஆகிருன் என்கிற தத்க்ரது நியாயமானது) தவம் செய்வதற்காக காடுகளுக்குச் சென்று விட்டது. அதாவது பிரஹதாரண்யகம் என்ற உப நிஷத்தில் இந்த தத்க்ரது நியாயமிருப்ப தால் அவ்வாறு கூறப்பட்டது. ஸ்ரீ கோபாலனை தியானம் செய்த அவர்கள் ஸ்ரீ கோபாலனுகவே (தன்மயர்களாக) ஆகி விட்டார்கள், என்பதை வெகு அழகாய் கூறியுள்ளார். ஸ்ரீ தேசிகன் போன்ற மஹான்களெல்லாம் ஸ்ரீபகவானுடைய ஸ்வரூபமே ஆவார்கள். அதனுல் தான் இன்றும் அவர்களைப் பற்றி பேசுகிரேம். அவர்களுக்காக விழாக் கொண்டாடுகிரேம். மேலும் ஸ்ரீ தேசிகன் பாதுகாஸஹஸ்ரமென்னும் ஸ்ரீராம பாதுகைகளைப்பற்றி ஆயிரம் சுலோங்கள் எழுதியுள்ளார். இந்த ஸ்தோத்திரத்தை ஒரே இரவில் அவர் எழுதியதாக பெரியோர்கள் கூறுவது வழக்கம். ஒரு ச்லோகத்தில் சொன்ன விஷயத்தை மற்றொரு ச்லோகத்தில் கூருமல் வர்ணித்திருப்பது மிக ஆச்சரியமாகும். அதில் ஒரு சுலோகத்தில் ''ராமனுக்கு பட்டாபிஷேகம் செய்ய வேண்டுமென பிதா நினைத்தார். அவ்வாறே பிரஜைகளும் நினைத்தனர். அந்த ராஜ்யத்தைத் தாயான கைகேயி பரதனுக்குக் கொடுக்க வேண்டுமென முன்பு தசரதர் தனக்கு அளித்த வரன் மூலம் வேண்டினுள். அவ்வாறே ஸத்யவாதீ கொடுத்தார். (இங்கு தசரதர் கொடுத்தார் என்று சொல்லாமல் ஸத்யவாதீ கொடுத்தார் எனக் கூறியுள்ளார் ஸ்ரீ தேசிகன். இதிலிருந்து தசரதன் ஹரிஸ் சந்திரன் பிறந்த வம்சத்தில் பிறந்தவர் என் பதை உணர்த்துவதற்காகவே கூறியுள்ளார்

என்பது வெளிப்படுகிறது. மேலும் தசரதர் வரன் கொடுத்தது எனக்கு நினைவில்லையென பொய்யாகக் கூறியிருக்கலாம். அல்லது ஸ்த்ரீகளிடத்தில் கொடுத்த வரன் செல்லா தென ஒரு சட்டம் செய்திருக்கலாம். அப்படி யெல்லாம் செய்யாமல் பரதனுக்கு ராஜ்யத் தைக் கொடுத்தார். இதனுல் எல்லாவற்றிற் கும் மேலாக ஸத்யமே பெரிது என உலகத் திற்குக் காட்டியுள்ளார். இங்கு ராஜ்யம் பரதனுக்குமில்லாமல் ராமனுக்குமில்லாமல் ஒருவராலும் ஊஹிக்க முடியாத நிலையில் பாதுகைக்குப் பட்டாபிஷேகம் நடந்தது. இதற்குக் காரணம் ஒருவராலும் அறிய முடி யாத எண்ணமுடைய தெய்வமே காரணம்.

ராமே ராஜ்யம் பிதுரபிமதம்
ஸம்மதஞ் ச ப்ரஜாநாம்
மாதா வவ்ரே ததபி பரதே
ஸத்யவாதீ ததௌ ச |
சிந்தாதீதஸ் ஸமஜநி ததா
பாதுகாக்ரீயாபிஷேக :
துர்விக்ஞேயஸ்வஹ்ருதய மஹோ
தைவமத்ர ப்ரமாணம் ||

இப்படி பல சிறந்த நூல்களையும் ஸ்தோத் ரங்களையும், சாஸ்திரங்களையும் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். இப்படிப்பட்ட மஹான்களுடைய விழாவை நடத்தி யாவரும் அவர்களுடைய அனுக்ரகத்துக்குப் பாத்திரர்களாகும்படி கோருகிறேன்.

கண்கொடுத்த தெய்வம்

ஸ்ரீ மதுபய வேதாந்த வித்வான்
ஆழ்வார் திருநகரி திருமலை நல்லான்
ராமகிருஷ்ண அய்யங்கார்.

முப்பது வருடங்களுக்கு முற்பட்ட அநுபவம். அப்பொழுது ஆழ்வார் திருநகரியில் அடியேன் இருந்தேன். இளமையில் அங்கே வளர்ந்தும் சிறிது கல்வி கற்றும் திவ்யப்ரபந்தம் ஓதியுமிருந்தாலும் பின்னர் மதுரையம்பதியில் மற்றவர்களுடன் பயின்று கல்வி கற்றதாலும் அவர்களது வேதாந்த நூல்களைத் தனியே பாடம் கேட்டு அவற்றில் ஈடுபட்டிருந்ததாலும் ஸ்ரீராமாநுஜ தர்சனத்தின் அருமை பெருமைகளை அடியேன் உணரகிலாது மதி மயங்கியிருந்த காலமது.

ஆழ்வார் திருநகரிக்கு அருகிலுள்ள 'விட்டலபுரம்' என்னும் கிராமத்திலிருந்து நம்மாழ்வாரை ஸேவிக்க இரு பெரியோர்கள் அடிக்கடி, எழுந்தருளுவதுண்டு. ஒருவர் அழகரைய்யங்கார் ஸ்வாமி. மற்றொருவர் வகுளாபரணைய்யங்கார் ஸ்வாமி. அவர்களுடன் பழகும் பேறு ஆழ்வார் இன்னருளால் அடியேனுக்கும் கிடைத்தது.

இளைஞனாகிய அடியேனது புல்லறிவும் அந்நல்லோர்க்கு அவர்களது தகைமைக்கேற்ப இன்பந்தருவதாகவே அமைந்தது. ஆயின் மற்றை வேதாந்தத்தில் அடியேனுக்கு ஏற்பட்டுள்ள மதிமயக்கமும், ஸ்ரீராமாநுஜ தர்சனத்தில் ஈடுபாடு இல்லாமையும் அந்த ஸ்வாமிகளின் திருவுள்ளத்தை உறுத்திக் கொண்டேயிருந்தன. அவர்களுடைய புலமையும் குணப் பெருக்கும் அடியேனுடைய தருக்கைப் போக்க இயலாதவைகளாயின.

அழகர் ஐயங்கார் ஸ்வாமி சிறந்த ரஸிகர். இனிய உள்ளத்தவர். அடியேனைத் திருத்தி பணி கொள்வதற்காகத்தானோ என்னவோ! ஆழ்வார் திருநகரிலேயே சில வருடங்கள் நித்ய வாஸம் செய்யும் நோக்கத்துடன் குடி புகுந்தார். நெருங்கிப் பழகலானோம்.

மதி மயக்கம் தீர அடியேனுக்கு அந்த ஸ்வாமி அமுத மருந்து வழங்கலானார்.

விதிவாய்க்கின்று காப்பாரார்!''
''ந்யாய ஸித்தாஞ்ஜநம்.''

என்றும் தீஞ்சுவையாமிழ்தமே அடியேனுக்கு மருந்தாயமைந்தது. மயக்கம் தீர்ந்தது. கண் திறந்தது. நான் கண்டு கொண்டேன் நமது ராமாநுஜ தர்சனத்தை! அவ்வற்புத நூலில் நற் பொருள்கள் பல கண்டேன்.

அந் நற்பொருள்களைக் காணக் கண் வழங்கிய தூப்புல் வள்ளலை வாயார வாழ்த்தினேன்! இந்நற்பொருள்களைத் தெரிந்துணர் வொன்றின்மையால் தீவினையேன் இது காறும் காணுது வாளாவிருந் தொழிந்தேனே என்று கழிந்த நாட்களுக்கிரங்கினேன். இன்றேனும் காணப் பெற்றேனே என்று மகிழ்ந்தேன். கண் கொடுத்த அந்தத் தெய்வத்திடம் பக்தி மீதூர்ந்தது. அதன் பயனாக ஐந்து சுலோகங்கள் எழுந்தன. அவற்றை ரஸிகர்களிடம் இதோ ஸமர்ப்பிக்கிறேன்.

ஜயதாந் நிகமாந்தார்யோ தயமாநோ
 குருஸ் சிராத்,
வியந் மணிரிவாச் ரித்யோதயமாநோ
 வியத் பதம்.

அருள் தரும் தூப்புல் ஐயனும் ஸ்ரீ வேதாந்தசார்ய ரென்னும் குரு ஆகாயத்தைச் சார்ந்து உதிக்கும் சூரியன் போல, கருடவாஹநன் திருவடியைச் சார்ந்து உதயம் வாய்ந்தவராய் நீடுழி மேம்பட்டு விளங்குக.

[உதயம் உதித்தல், மேலுறுதல், வியத்பதம் விஷ்ணுபதம். வியத்-கருடனிற் செல்பவன்.]

'செம் பொன் மேனி மாருத தூபபுல் மாலை' உதய சூரியன் போன்றவராக வருணித்த நயம் காண்க.]

வித்யோதந்வாந் வெங்கடேச: கவீந்த்ரோ
புத்தயோத்பந்நா: கல்பநோர்மீர் ததாந:,

ஸங்க்யாதீதைர் பாவரத்நைஸ்ச பூர்ணோ
ஜீயால்லோகேஸீம பூமாதிரேக: .

தூப்புல் திருவேங்கடவரென்னும் கவியரசர் கல்விக் கடல். அதில் புத்தியாகிய காற்றினு லெழும் கற்பனைகள் அலைகளாயமைந் துள்ளன. எண்ணற்ற பாவம் (கருத்து) என்னும் ரத்தினங்கள் நிறைந்துள்ளன. கரையற்ற பெருமையதிசயித்த அக்கடல் உலகில் மேம்பட்டு விளங்குக.

வேதாந்த காந்தார விசாரதஸ்ச
ப்ரதீபவாதீப விபேதநாச்ச,
அந்வர்த்த நாமா நம பாஸ்தமாநம்
நமாம்யஹம் தார்க்கிக கேஸரீந்த்ரம் |

வேதாந்தாசார்யர் சிறந்த தார்க்கிக ஸிம்ஹம் என்று பேர் பெற்றவர். அந்த ஸிம்ஹம் வேதாந்த சாஸ்திரம் என்னும் காட்டில் விசாரம் ஸஞ்சாரம் ஆராய்ச்சி செய்து கொண் டிருக்கிறது. எதிர்வாதம் புரிபவர்களாகிய யானைகளின் மத்தககத்தைப் பிளக்கிறது. இறுமாப்பைத் தொலைக்கிறது இக்காரணங் களால் ஸிம்ஹம் என்று பொருத்தமான பேர் படைத்த அப்பெருமானை வணங்குகின்றேன்.

வேதாந்தாநாம் ஸுபாக்யாதுத
ஸுரபணிதே: ஸாஹிதீ பாகதேயாத்
ஆஹோஸ்விச்ச்ரீசடாரேர் மதுமதுர
கிராம் புண்யராசேர் விபாகாத்,
யத்வா வித்வத்வராணும் ஸுக்ருத
பலவசாத் வைஷ்ணவாநாஞ்
சதிஷ்டே:
வேதாந்தாசார்ய நாம்நாऽக்ருதஜநி
மவநௌவேங்கடாதீச கண்டா

வேதாந்தத்தின் நற் பாக்கியத்தாலோ, வட மொழி இலக்கியங்களின் பாக்கியத்தாலோ நம்மாழ்வருடைய தேன்போல் செவிக்கினிய செஞ்சொற்களின் புண்ணியத்தினுலோ, அறிஞர்களின் நல்வினையினுலோ வைணவர் களின் அதிருஷ்டத்தினுலோ திருவேங்கட முடையான் திருமணி, வேதாந்தசார்யர் என்ற பேரில் உலகில் அவதாரம் செய் துள்ளது.

பாராசர்யவசஸ்ஸுதாம் ஸுமநஸோ
பௌமாந் திநம் பாயயந்,
பிந்நாந் வாதரணுங்கணேச கலயந்
சாஸ்த்ரை: சிதை: பத்ரிபி :,
துர்மாநாத் விகதாம் ச்ரியம் ப்ரகடயந்
ஸ்ரீ வைஷ்ணவாநாம் புந:
ராராஜீத்வஜிதக்ரியா மநுஸரந்
த்ரய்யந் தஸுரிர்குரு :

அஜிதன் என்னும் பெயர் கொண்ட பகவான், கடைந்த கடலினின்றும் எழுந்த அமிழ்தை அமரர்க்கு ஊட்டினுன். மாறு கொண்ட அசுரரை போர்க்களத்தில் அம்பு களால் சிதறவடித்தான். துரஹங்காரத்தால் தூர்வாஸர் சாபத்துக்கு இலக்கானதேவர்களை விட்டு நீங்கின திருமகளை மீண்டும் வெளிப் படும்படி செய்தான். அவ்வாறே வேதாந்தா சார்யரும் உபநிஷத்துக் கடலில் உண்டான சாரீரகமீமாம்ஸை என்றும் அமுதத்தைப் பூதேவருக்கு ஊட்டுகிருர். மாறுபட்ட பிறவாதியரை வாதப் போரில் சாஸ்திரங் களென்னும் கூரிய கணைகளால் சிதறவடிக் கிருர். துரஹங்காரத்தால் வைணவர்களிழந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயை மீண்டும் வெளிப் படுத்துகிருர். அத்தகைய வேதாந்தாசாரியர் விளங்குக!

வ்யரீரசதிதம் பக்த்யா வேதாந்தாசார்ய
பஞ்சகம்,
குருகாபுரவாஸ்தவ்யோ ராமகிருஷ்ண:
சிரோமணி:

இந்த வேதாந்தாசார்ய பஞ்சகத்தை ஆழ் வார் திருநகரியில் வஸிக்கும் இராம கிருஷ்ணன் பக்தியினுல் இயற்றினுன்.

இவ்வெழு நூற்ருண்டு விழாவில் பண் டைய அநுபவத்தை நினைந்து அடியேன் ஜந்மத்தை மீண்டும் புதுப்பித்துக் கொண்டு கண் கொடுத்த தெய்வத்தை வாழ்த்து கிறேன்.

தூப்புற்பிள்ளை தூமலர்த்தாள்கள் வாழ்க!

புருஷோத்தமன்

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்,
ப. ராஜகோபாலாச்சாரியார் ஸ்வாமி,
சாஸ்த்ரரத்நாகர, வ்யாகரண
சிரோமணி. திருவயிந்தை

இற்றைக்கு 700 ஆண்டுகளுக்கு முன் எற்றைக்கும் அனைவரும் தன்னேடுற்றுரேயாகி தனக்கேயாட் செய்ய மனிசர் பிறவியில் கண் காணத் தோன்றிய புருஷோத்தமனின் புருஷோத்தமத்வத்தை எழுநூற்ருண்டு விழா வமயம் அனுபவித்து இன்புறுவதும் பேரின் பத்தின்துளியாகுமோ அல்லது முடவனுக்கு கொம்புத் தேன்போல் பேரின்பமேயாகுமோ அடியேனுக்கும் அடியேன் போன்றவர்க்கும் என என்னுல் சொல்லவியலவில்லை. திருவோணத்தான் புருஷோத்தமனே என்பதில் யாருக்கும் ஐயமில்லை. அண்ணிக்குமமுதூறும் என்நாவுக்கே என்ற கணக்கில் ஆதியம் புருடனென்கோ என்ன இவருடைய பூர்வோபலக்ஷிதமான ரூபத்தில் ஆழ்வார் உரைத்தது போலவே யாமும் புருஷோத்தமன் புருஷோத்தமன் என உரைத்தே இன்புறவமையும். ஆயினும் அவனது புருஷோத்தமத்வத்தை அறிந்த அளவு முடிந்த அளவு விவரித்து இன்புறுவதும் பாங்கே என எண்ணி சிறிது விவரிக்கப்படுகிறது. புருஷோத்தமசப்தநிஷ்பத்தியே தனிச் சிறப்புற்றது. பஞ்சமீதி யோகவிபாகத்தினுல் நர்கோத்தமாதிவத் ஸித்தம் பவதி என்று மாபாஷ்யம். புருஷாணாம் உத்தம என்ரே புருஷஸ்சாஸௌ உத்தமஸ்ச என்ற அர்த்த விவரணத்தில் புருஷோத்மத்வம் ரூபாந்தர சாதாரணமாயினும் அந்த புருஷோத்தமத்வத்தின் காஷ்டை இந்த வேதாந்தாசாரியரூபத்ர திலே என்று கூறுதலால் ஒருவாறு அவதாராந்தரவைலக்ஷண்யம் சித்தமாயினும் அனிதரஸாதாரண புருஷோத்தமத்வம் கூறும் புருஷாத் உத்தம என்றே கொண்டு ரூபாந்தரங்களைக் காட்டிலும் சிறந்தது இவ்வவதாரம் என்று கூறுவது மிகப்பொருத்தம். யதா புருஷதா விஷ்ணௌ என்ற விடத்து புருஷத்வம் ஸர்வேச்ரனுக்கு கூறுமுகத்தால் தஸ்மாதுத்தமத்வம் வேதாந்தவாசிரியனுக்கே எனக் காட்டுகிருர். இவ்வர்த்தம் வென்றி புகழ் திருவேங்கடநாதனென்றும் குருவாய் நின்று'' என்பதினுலும் சொல்லப்பட்டது. எனவே வேதாந்தவாசிரியரை உத்தமபுருஷத்வேன ஆசார்யரேஷ்டத்வேன பரமபுருஷத்வேன உபாஸிப்பதேயல்லாமல் பரமபுருஷாத் ப்ராப்யபரமபலரூபமாயும் அதையடைவிக்கும் சிறந்த உபாயரூபமாயும் உபாசிக்க வேணுமென்று ஸித்தமாயிற்று. உத்தமபதம் மூன்றில் ஒன்றை நிர்ணயிக்கும் போதே பிரயோகிக்கப்படும் என்று நியதியிருப்பினும் புருஷாத் உத்தரன் ஸ்ரீ பாஷ்யகாரர், அவரையும் அவர்கிரந்தத்தையும் கூட பாஹ்யகுத்ருஷ்டிகளால் அபஹரிக்க முடியாதபடி காப்பாற்ற விசக்ஷணனை இவரே அவரைவிட உயர்ந்தவரென்பதில் ஐயமில்லை. நாகோத்தம சப்தத்தை உதாஹரிக்கும் மாபாஷ்யகாரர் சேஷனை பாஷ்யகாரரைக் காட்டிலும் சேஷியான புருஷோத்தமன் தேசிகன் என்ற அர்த்தத்தையும் மறைமுகமாகக் காட்டுகிருர். சரணமடைந்தவர்களைக் காக்கும் பரம புருஷனைக் காட்டிலும் அந்த சரணுகதியை நிலைப்பித்து உபதேசித்து அனுஷ்டிப்பிக்கும் பிரபதனகலாஜன்மஜலதியான இந்த தேசிகன் புருஷோத்தமனே என்பதில் எந்த விதசம்சயலேசமுமில்லை. கொங்குபிராட்டி விருத்தாந்தினுல் பின்வரும் தேசிகாவதாரத்தை முன்பே உணர்த்திய ராமானுஜனும் இவற்றை எல்லாவற்றையும் நினைத்து ''கல்யாணகுண: புருஷோத்தமோபிதீயதே''

என்றார். அவனது புருஷோத்தமத்வம் சாஸ்த்ரைகஸமதிகம்யம். இவனது புருஷோத்தமத்வமோ அக்காலத்திலே மட்டுமின்றி இக்காலத்திலும் கூட அஸாதாரண கிரந்த பிரணயனம் முதலியவற்றால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல பாமரர்களுக்கும் விளங்குகிறது. பாஷ்யார்த்தம் பாஷ்யத்திற்கு பிரமாணமான தேசிகன் ஒருவராலேயே முற்றிலும் உபதேசிக்கபடுவதாலும் ஸ்ரீ பாஷ்யத்தில் சிரபரிசயம் பண்ணின மஹாப்ராக்ஞர்க்கே எல்லை நிலமான சிறந்த அர்த்தங்களை தமது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் உபதேசித்து பாஷ்ய ப்ராமாண்யத்தின் எல்லை நிலமாக தம்மைத் தாமே அந்தரங்கர்க்கு உபதேசிப்பதாலும் பாஷ்யார்த்தம் யதிபதியாலும் விவரிக்க ஒண்ணாமையால் ஸர்வேச்வரன் ஒருவனே விவரிக்க சமர்த்தன் எனவும் அவன் தமக்கு ஸாக்ஷாதாசிரியாரானமையும் ஆயினும் தத்வடீகா முதலிய கிரந்தங்களால் பாக்கியசாலியான பின்னுள்ளோர்க்கு விவரிப்பரெனவும் பாஷ்யம் சேத் என்ற சுலோகத்தில் ச்ருதப்ரகாசிகாசார்யர் காட்டுதலாலும் புருஷோத்தமத்வம் நன்கு புலனும். தத்பக்தாத் ஸாத்விகோ ஜன எனப் பெரியோர் பணிப்பதும்கூட ஸாத்விகத்தின் எல்லை நிலத்தை பஜிப்பவர் பிறந்து வைத்தே பரமசாத்விகராகிறார் என்ற அர்த்தத்தைக் காட்டிக் கொண்டு ஸர்வேச்ரனைக் காட்டிலும் பரமஸாத்விகத்வம் இவரிடமே உண்டு என அறிவித்துக் கொண்டு இவனே புருஷோத்தமன் எனக் காட்டுகிறது.

ஸ்ரீ வேதாந்த தேசிகரின் தமிழ்ப் புலமை

திருவளர்
ரா. தேசிகப்பிள்ளை,
புதுவை.

நமது சமய வளர்ச்சிக்கு உறு துணையா யிருப்பவை இருமொழிகள். ஒன்று வட மொழி; மற்றொன்று தென்மொழி. வடமொழி எனப்படுவது ஸம்ஸ்கிருதம். தென்மொழி என்று சொல்லப்படுவது தமிழ். தென்னிந் தியாவில் சமயக் கருத்துகளை மக்களிடையே பரவச் செய்து அதன் வழி அவர்கள் உய்வு பெற உறுதுணையாயிருந்தவை ஸம்ஸ்கிருதம் தமிழ் ஆகிய இவ்விரண்டு மொழிகளேயாம்.

சுவாமி தேசிகன் வடமொழியின் கரை கண்டவர். இம்மொழியில் அவர் படைத் திருந்த ஞானம் அளவிடற்கரியது. உலகுக்குத்தாம் இயற்றியருளிய பனுவல்கள் பல இம்மொழியிலேயே அமைந்துள்ளன. சமயத்துறையில் காணக்கிடக்கின்ற பல் வகைப்பட்ட கருத்து நுணுக்கங்களை யெல் லாம் அவர் எளிதில் விளக்கியருளி யிருப்பது பெரிதும் போற்றத்தக்கது.

வடமொழியில் எந்த அளவுக்கு அவர் ஞானமும் பற்றும் கொண்டிருந்தாரோ அந்த அளவுக்குத் தென்மொழியாகிற தமிழிலும் அவர் தெளிந்த அறிவும் அடங்கா அன்பும் கொண்டிருந்தார் என்று சொல்லவேண்டும்.

சடகோபர் அருளிய தமிழ்ப் பிரபந்தங்களை ஓதியுணர்ந்ததன் காரணமாகத் திருமாலின் திருவடிகளிலே தலை தாழ்த்தும் நிலைபெற் றோம் என்று அவர் பெருமிதங்கொண்டு பாடுகிறார்.

தந்தையென நின்ற
தனித் திருமால் தாளில்
தலை வைத்தோம்
சடகோப னருளினாலே

என்பது அவர் திருவாக்கு.

ஆழ்வார்கள் இயற்றியருளிய தமிழ்ப் பனு வல்களாகிற நாலாயிரப் பிரபந்தம் ஸ்ரீ தேசி கரின் மனத்தைப் பெரிதும் கவர்ந்து கொண் டது. தமிழ் மறையாகிற அப்பிரபந்தம் அவருடைய சமய அறிவினை வளம்படுத்தி வளர்ந்தோங்கச் செய்தது. ஆழ்வார்களை அவர் மனமாரப் போற்றுகிறார். அவர்களைப் புகழ்ந்து பாடுகிறார். அவர்கள் இயற்றி யருளிய தமிழ் மாலைகளை ஓதினதன் காரண மாகத் தாம் முன்னர்த் தெரிந்து கொள்ளாத சில நுண் பொருள்களை யெல்லாம் தெரிந்து கொண்டதாகக் கூறி மகிழ்கிறார்.

பொய்கைமுனி பூதத்தார்
பேயாழ்வார் தண்
பொருநல்வரும் குருகேசன்
விட்டு சித்தன்
துய்யகுல சேகரன் நம்
பாண நாதன்
தொண்டரடிப் பொடி மழிசை
வந்தசோதி
வையமெலாம் மறை விளங்க
வாள் வேலேந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள்
மகிழ்ந்துபாடும்
செய்ய தமிழ் மாலைகள்
நாம் தெளியவோதித்
தெளியாத மறை நிலங்கள்
தெளிகின்றோமே.

என்பது அவர் திருவாக்கு.

தமிழ்ப் பிரபந்தங்களை ஓதியுணர்ந்ததனால் தமக்கு ஏற்பட்ட ஆர்வத்தின் காரணமாகத் தமிழிலே பல நூல்கள் அவர் இயற்றியருளி னார். அவர் அருளிய தமிழ் நூல்கள் எல் லாம் பெரும்பாலும் அளவிற் சிறியனவா

யிருப்பினும் கருத்திலும் தத்துவத்திலும் மிக மேன்மையுற்று விளங்குகின்றன. வடமொழி வழி அவர் கண்ட சில நுண்ணிய கருத்துக் களைத் தம் தமிழ்ப் பிரபந்தங்களில் இடை யிடையே அமைத்துத் தமிழ் மரபுச்கேற்ற வகையில் அவர் பாடியருளியுள்ளது கண்டு மகிழத்தக்கது, போற்றி வணங்கத்தக்கது. மெய்ஞ்ஞானச் செல்வர்களாகிய பெரியோர் கள் தங்கள் அனுபவங்களையும் அவற்றினு லாய பயனையும் மக்கள் அறிந்து கொண்டு, அவற்றைப் பின்பற்றி அவர்களும் இன்ப நிலை எய்தவேண்டு மென்னும் பெருங்கருணையால் பெரும்பாலும் மன்பதைக்கு அறிவுறுத்தும் வகையில் தங்கள் பனுவல்களை அருளியுள் ளார்கள். சுவாமி தேசிகனும் இந்த முறையி னின்று மாறுபட்டவர் அல்லர். தாம் அருளிய சில பாக்கள் தம்மைக் குறித்தன வாகவே தோற்றந்தரினும் அவை அனைத்தும் மக்கள் கூட்டத்திற்குப் பொருந்துவனவே. இறைவனிடத்தில் அடைக்கலம் புகுவதாகக் கூறித் தம் நிலையை அவ் இறைவனுக்கு அறிவிக்கு முகத்தான் அவர் அருளிச் செய் துள்ள அடைக்கலப்பத்து என்னும் தமிழ்ப் பிரபந்தம் இதனைத் தெற்றெனத் தெரிவிக்கும். இப்பிரபந்தம் பற்றி இங்குக் குறித்தது ஓர் எடுத்துக் காட்டுக்காகவே யன்றி வேறன்று. சுவாமி தேசிகனின் தமிழ்ப் பிரபந்தங்கள் அனைத்துமே உயர்ந்தவை, புகழ்ந்து போற்றத்தக்கவை.

வடமொழிப் பனுவல்களை ஓதிப் பொருள் நன்கு தெரிந்து கொள்ள இயலாத நிலையி லிருக்கும் தமிழ்ச் சான்றோர், தமிழ் மொழி யில் அழகுற அமைந்துள்ள சுவாமி தேசி கனின் நூல்களைப் படித்து அவற்றின் சுவையை மாந்தி இன்ப வாரியில் தோய்ந்து இறைவன் அருளுக்குப் பாத்திரமாகச் செய்து கொள்ளத் தடையுமுண்டோ? இல்லவே இல்லை என்க.

நம் வேதாந்த குரு வடமொழியில் கொண் டிருந்த பரந்த ஞானத்தைப் போலவே தமிழ் மொழியிலும் பெருஞ் சிறப்புற்றவராய் அம் மொழியில் அரிய நூல்களை யாத்து மக்கள் உய்வுபெற வழி செய்த பெருங்கருணைக்கு நாம் மனம் மொழி மெய்களால் அவரை வழி படுவதன்றி வேறு என்ன கைம்மாறு செய்ய வல்லோம்?

ஸ்ரீமத் பரம...பரி வேதாந்தராமநுஜ மஹாதேசிகன்
(வலையப்பேட்டை ஸ்வாமி)

ஸ்ரீ சைல வம்ச திலகாண்ணய தேசிகேந்த்ர
லப்தாகமாந்தமவிதும் நிஜஸம்ப்ரதாயம்
ஸ்ரீ யாமுநார்ய மவதீர்ணமிவந்வயே ஸ்வே
வேதாந்த லக்ஷ்மணமுநிம் வரயே சமாட்யம்.

ஸ்ரீ தேசிக நாயகி

திரு. கி. வேங்கடசாமி ரெட்டியார்,
வி. பூதூர்,
தென் ஆர்க்காட்டு மாவட்டம்.

தூப்புற் பெருமானூர் தூமென்
மலர்ப்பதமே
காப்பிங் கெமக்கென்றும் காண்.

எம்பெருமானுக்கும் நமக்கும் உள்ள சம்பந்தத்தைத் தெரிவிப்பது ஞானம்; பின்னர் அவனை இடையருது நினையச் செய்வது பக்தி.

இப் பக்தி மிகுந்தபோது எம்பெருமானைத் தலைமகனாகவும் தன்னைத் தலைமகளாகவும் கொண்டு அப்பாவனையின் முதிர்ச்சியால் நாயகியாகவே ஆதல் உண்டு.

'பக்தி ச்ருங்கார வித்ருயா பரிணமதி' என்று முன்னையோர் மொழிவர்.

'ப்ரேமத்தில் பெண்பேச்சு' என்பதுவும் இதுவே.

நம்மாழ்வார், திருமங்கை மன்னன் முதலிய ஆழ்வார்கள் தம்மை நாயகி நிலையில் வைத்து அருளிய பாடல்கள் பல.

இதனுல், அவர் தம்மைப் 'பராங்குச நாயகி' 'பரகால நாயகி' எனப் பேசுவது உண்டு.

நாயகி நாயக முறையில் தலைவன் கூற்ருகவும், தலைவி கூற்ருகவும், தோழி, தாயர் கூற்றுக்களாகவும் வைத்துப் பாடுகின்ற மரபு தமிழ் இலக்கியங்களில் நிரம்ப உண்டு.

நம்மாழ்வார் அருளிய முதல் பிரபந்தம் திருவிருத்தம், இதனுள் இரண்டாம் பாசுரத்திலேயே தாம் நாயகியாகிவிட்டார்; இந் நிலையைத் தாமே சொல்லாது தோழி சொல்வதாக அமைந்துளது இப்பாசுரம்.

இப்பாசுரம் வருமாறு :

"செழுநீர்த் தடத்துக் கயல்
மிளிர்ந்தால் ஒப்பச் சேயரிக்கண்
அழுநீர் துளும்ப அலமருகின்றன
வாழியரோ :
முழுநீர் முகில்வண்ணன் கண்ணன்
விண்ணுட்டவர் மூதுவராம்
தொழுநீர் இணையடிக்கே அன்பு
சூட்டிய சூழ்குழற்கே."

இதில் எம்பெருமானுடைய திருவடிகளுக்கு அன்பு சூட்டிய இத் தலைமகளின் கண்கள் நீர் மிகுந்த குளத்தில் கயல் மிளிர்வது போன்று அழு நீர் துளும்ப அலமருகின்றன ; இந்நிலை எம்பெருமானை விரும்பியதால் வந்த நிலை ; அதனுல் இந்நிலைக்கு 'வாழியரோ' என்று வாழ்த்துக் கூறுகின்ருள் தோழி என்பது விளங்குகிறது.

உலகியலில் காணப்படும் காதலுக்கும், இப்பாவனை முதிர்ச்சியால் வரும் தெய்விகக் காதலுக்கும் ஒரு வேறுபாடு உண்டு ; அதாவது:— உலகியலில் தலைமகள் தலைமகனுடைய சுந்தரத் தோளினை விரும்புவதும் தெய்விகக் காதலில் தலைமகள், தலைமகனுடைய திருவடிகளையே விரும்புவதுமாம். இந்நுட்பம் கூர்ந்து நோக்கத் தகுந்தது.

'தொழுநீர் இணையடிக்கே அன்பு சூட்டிய சூழ்குழல்' என நம்மாழ்வாரும்,

'விழிவார் அருள் மெய்யர் மெல்லடி வேண்டிய மெல்லியல்' என சுவாமி தேசிகனும் அருளியதனுல் அறிகின்ரேம்.

தலைமகள் தலைமகனுக்கு அடங்கியிருத்தலும், பிறரை ஒரு பொருளாக நினையாதிருத்தலும், தலைமகன் நன்மை ஒன்றையே நாடுதலும் இருவகைக் காதலுக்கும் ஒத்ததாம்.

ஆழ்வார்களுக்குப் பின்னர் ஓராண்வழியில் வந்த ஆசாரியர்களுள் சுவாமி தேசிகனைத் தவிர ஒருவரும் தமிழில் நாயகி பாவனையில் பேசியதாகத் தெரியவில்லை.

நம்மாழ்வாரிடத்துச் சுவாமி தேசிகனுக்குள்ள ஈடுபாட்டை,

"......தந்தைஎன நின்ற தனித்
    திருமால் தாளில்
தலைவைத்தோம் சடகோபன்
    அருளினுலே"

என்பதனுலும், மேலும் அவர் பெருமையினையும் அடக்கத்தினையும்,

"......வேண்பெரிய விரிதிரை
    நீர் வையத்துள்ளே
வேதாந்த ஆரியனென்
    றியம்ப நின்ரேம்
நாண் பெரியோம் அல்லோம்
    நாம் நன்றும் தீதும்
நமக்குரைப்போர் உளர் என்று
    நாடுவோமே"

என்பதனுலும் அறிகின்ரேம்.

சடகோபன் அருளால் திருமால்தாளில் தலைவைத்தும், வேதாந்த ஆரியனென் றியம்ப நின்றும், நன்றும் தீதும் நமக்குரைப் பார் உளர்' என்று திருவுள்ளம் பற்றியும் நின்ற சுவாமி தேசிகன், தாமும் நாயகி பாவனையின் முதிர்ச்சியில் நின்று, நம்மாழ் வார் அருளிய அதே திருவிருத்தத்தில், நம் மாழ்வார் இரண்டாந் திருவிருத்தத்தில் அடைந்த நிலையைத் தாம் மூன்றும் திரு விருத்தத்தில் அடைந்ததாக அருள்கின்ருர். இதனுல் சுவாமிக்கு நம்மாழ்வாரிடத்துள்ள ஈடுபாட்டின் மிகுதி விளங்குகின்றது.

திருப்பாவை முப்பதும் அருளிய கோதை மீது 29 சுலோகங்கள் உள்ள கோதாஸ்துதியால் கோதைப் பிராட்டியின்பால் தமக்கு உள்ள ஈடுபாட்டைப் போன்றது இது.

சுவாமி தேசிகன் மூன்ருந் திருவிருத்தத்தில் நாயகி நிலையை அடைந்தார் எனில், எதில்? என்று தெரிந்து கொள்ள வேண்டு மல்லவா!

சுவாமி தேசிகன் அருளிய முதல் தமிழ்ப் பிரபந்தமாகிய 'மும்மணிக்கோவை' எனும் இனிய நூலில் இதனை அறிகின்ரேம்.

ஆசிரியர், வெண்பா, கலித்துறை என முறையே பாடப் பெறுவது மும்மணிக் கோவையாகும்.

நம்மாழ்வார் அருளிய முதல் பிரபந்தமாகிய திருவிருத்தத்தில், தாம் 2வது பாசுரத்திலேயே நாயகி நிலையடைந்தமையைத் தோழிகூற்றில் வைத்துப் பேசியதுபோலவே, சுவாமியும் அந்நிலையடைந்தமையை மூன்ருவது திருவிருத்தத்தில் தோழிகூற்றில் வைத்துப் பேசுதற் கேற்றவாறு 'மும்மணிக் கோவை' என்ற இப் பிரபந்தத்தை சுவாமி தேர்ந்தெடுத்திருக்கின்ருர் என்று தோன்றுகிறது.

மும்மணிக் கோவையுள், 3, 6, 9 எண்கள் உள்ள மூன்று திருவிருத்தங்களே நாயகி நிலையில் சுவாமி அருளியவை.

தம்மை எந்தத் தெய்வ நாயகன் ஆட்கொண்டாரோ அந்தத் தெய்வநாயகனுக்கேற்ற தெய்வநாயகியாகச் சுவாமி விளங்கியதில் வியப்பு இல்லையல்லவா?

இனி இம்மூன்று பாடல்களின் கருத்துகளை நோக்குவோம்.

முதல் பாடல்:

திவ்விய தேசங்கள் என்று சிறப்புற்றவை 108 திருப்பதிகள். அவை ஏழு வகுப்பில்

அடங்கும். அவற்றுள் நடுவில் உள்ளதும் (அதனாலும்) நடுநாடென்று பெயர் பெற்றது மான நடுநாட்டில் சிறந்து விளங்கும் திருவ யிந்திரபுரத்தின் பெருமையை முதலில் விளக்குகின்றார்.

இங்குள்ள பெருமானின் திருநாமம் தெய்வ நாயகன்.

ஒருவராற் செய்யப் பெறாததும் வேதம் எனப் பெயர் பெற்றதும் ஆன மறை மூன்று வகைப்படும். அவற்றைச் சொல்லுதற்குரி யார் சிலர், உரியரல்லாதார் பலர். சொல்லு தற்கு உரியாரோடு உரியரல்லாதாரோடு வாசியறப், பெண்களோடு ஆண்களோடு வாசியறப், பேதையரோடு அறிஞரோடு வாசியற அத்திவ்விய தேசத்தில் வாசம் செய்பவர்கள் பேசுகின்றன எவை? அவை எல்லாம் மும்மறையே; மூன்று மறைகளின் கருத்தேயாகும். அப்படிப்பட்ட பெரியோர் கள் 'சொல்லும் அவிடு சுருதியாம்' என்பதை மெய்ப்பித்தபடி. இவர்கள் நித்திய வாசம் செய்வது திருவயிந்தை.

மேன்மை (பரத்துவம்)மட்டும் விளங்கும் பரமபதத்திலிருந்து எளிமைக் (சௌலப்பிய) குணமும் சேர்ந்து இருட்டறையில் விளக்குப் போல ஒளி விடுவதற்காக இங்கே எழுந் தருளி யிருக்கின்றான் தெய்வநாயகன். எப் படி எழுந்தருளியிருக்கின்றான்? இன்அமுதக் கடலாக. எதற்காக எழுந்தருளியிருக்கின் றான்? இத்திவ்ய தேசத்தில் உள்ளோரே யன்றி மற்றையோரும் இவ்வின்னமுதக் கடலில் இழியட்டும்; இழிந்து அனுபவித்து இன்புறட்டும் என்பதற்காக.

இதனால் முற்குணத்து முதல்வனின் நற் குணக் கடலாடுதற்கு விரும்பி இழிவார் இழிக என்று பலரும் அறியச்சொல்லித் தான் அதற்கேற்றவாறு இன்னமுதக்கடலாகி நின் றான். இங்கு 'நீராடப் போதுவீர் போது மினோ' என்ற அடி நினைக்கத் தகும்.

அமிருதரஞ்சினியில் 'அலையற்ற ஆரமுதக் கடல்' என்பதும் இக் கருத்துப் பற்றியே எழுந்தது. உவரிக்கடலை நீக்குதற்கு இன் னமுதக் கடல் எனப்பட்டது. பரத்துவம் மட்டும் உறைக்கும்போது 'அமுதக்கடல்'; எளிமைக் குணமும் சேரும்போது 'இன் அமுதக்கடல்' ஆக விளங்குகிறது.

அடுத்து இவ் இன்அமுதக் கடலின் உருவம் பேசப்படுகிறது.

'ஆவார் ஆர் துணை' என்று அலமருகின் றவர்களைக் காப்பதற்கென்றே விளங்குவது அருள் என்பது. 'அருள் எனும் சீர் ஓர் அரிவையானது' எனப் பிராட்டியைச் சொல்வதுபோலத் தெய்வநாயகனும் அருள் மெய்யர்; அருளே திருமேனியாக உடைய வர். அருள் ததும்புவதை எங்குக் காண லாம்? விழியில்தான் காணமுடியும். அரு ளுக்கு எல்லையுண்டா? இல்லை. விழியி லிருந்து வார்கின்றது; வார்ந்துகொண்டே இருக்கிறது. அதனால் விழிவார் அருள்மெய் யர் என்று இங்குப் பேசப்படுகின்றது.

அவ் அருளுக்கு இலக்காக விளங்குபவர் கள் மெல்லியலார்கள்தாம்; வல்லியலார்கள் அல்லர். வன்மைக் குணம் உடைய யாவரும் அருளுக்கு இலக்காக முடியாது. அமுதக் கடலாகவும் அருளே வடிவாகவும் விளங்கு கின்ற தெய்வநாயகனும் மெல்லடியுடைய வன்; ஆழியான் என்னும் ஆழமோழையில் அடியிலே விழுகின்றவரும் மெல்லியலார். இருவரும் மெல்லியல் — அவர் அடியும் மெல்லடி. 'செம்பஞ்சுக் குழம்பு' என்னும் ஒருவகை மென்மைதரும் கலவைச் சாந்து மகளிர் சிற்றடியில் பூசப்பெறுவது உண்டு; சிற்றடிக்கு மேலும் மென்மையை அளிப்பது அக்கலவை. அக்கலவையின் பெயரைச் சொல்லும்போதே சிவக்கும் திருவடியுடைய வள் பிராட்டி. இதனைப் 'பஞ்சு எனச் சிவக்கும் மென்கால் தேவி' என்பதனால் அறியலாம். அப்படிப்பட்ட 'வடிவிணை இல்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி' என்பர். நம்மாழ்வார் இம் மெல்லடி கொண்டோ உலக முழு தளந்தது? சகடாசுரன் முதலியோரைக் காய்ந்தது? என ஐயுறுதல் வேண்டா.

'வேண்டுவார் மெல்லியர் ஆகையாலே மெல்லடி வேண்டுவார்; அத்தலைக்கு இரண்டடியுண்டு காணும்: கஞ்சனைக் காய்ந்தது வல்லடி, கன்றின் பின் போனது மெல்லடி; சகடிறச் சாய்ந்தது வல்லடி, வெண்ணெய் களவிடப் போனது மெல்லடி; உலகம் அளந்தது வல்லடி, தூதுநடந்தது மெல்லடி'

எனவரும் வியாக்கியானப் பகுதிகொண்டு இதனைத் தெளியலாம்.

அவரோ இன்னமுதக் கடலாகி நின்ற மெய்யர்; விழிவார் அருள் மெய்யர்; அதனால் 'இழிவார் இழிக' என்று நின்றார். இவரோ மெல்லியர்; 'நெடுங்காலமும் கண்ணன் நீண் மலர்ப்பாதம் பரவிப் பெற்ற - தொடுங்கால் ஒசியும் இடையினள். ஆதலின் மெல்லடி வேண்டினார். இவர்மீது மேலும் அநங்கர் (மன்மதன்) தமது கரும்பு வில்லிலிருந்து உந்திய பூமழை. பொழிவாராயினர். இஃதென்னேயோ!

இன்னமுதக் கடலாகி நின்ற அவரோ அருள் மெய்யர்; பூமழை பொழியும் இவரோ அருளோடு (அங்கமும்) மெய்யும் இல்லாதவர் என்பது தோன்ற அநங்கர் என்ற சொல் இங்கு அமைந்துள்ளது. இந்நயம் ஒரு புதுமையான விருந்தாகும். அநங்கர்க்கு என்றும் உள ஐந்து மலர்க் கணைகள் இங்கு இப்பொழுது அளவிலாதனவாக உள என என்பதும் ஒரு நயம். இதனால் மெல்லடி வேண்டிய மெல்லியல் மேல் வேட்கை மிகுதிக்குரிய பூமழையை மெய்யிலராகிய அநங்கர் மொழிகின்றார் என்பது கருத்து.

இக் கருத்துக்கள் அமைந்த முதற்பாடல் வருமாறு:

''மொழிவார் மொழிவன
 மும்மறையாகும் அயிந்தையில்
வந்திழிவார் இழிக என்றின்
 னமுதக்கட லாகிநின்ற
விழிவார் அருள்மெய்யர் மெல்லடி
 வேண்டிய மெல்லியல்மேல்
பொழிவார் அநங்கர்தம் பூங்கரும்
 புந்திய பூமழையே.''

விழி வார் அருள் = விழியிலிருந்து பொங்கி வழிகின்ற திரு அருள். மெல்லியல் = மெல் லியல்புடைய தலைமகள். அநங்கர் = மன் மதன்.

இதனுள் அநங்கர் என்று உயர்வு குறிக்குஞ் சொல்லால் 'சாக்ஷாத் மன்மத மன்மத:' என்று சொல்லப்பெற்ற தெய்வநாயகனே தன்மீது மெல்லியலுக்கு மேலும் மேலும் அன்புண்டாகுமாறு செய்துகொள்கின்றான் என உள்ளுறைப் பொருள் கொள்ளலாம். 'வாசித்தொழும் மன்மதனார்' என நவமணி மாலையிலும் இங்ஙனம் வருவதை அறியலாம். எம்பெருமானைக் 'கனியுதிர்த்த காளை' என ஒப்பில் போலியாகக் காளை என்பதுபோல அநங்கர் என்று சொல்லலாம். இப்பாடல், இத்தெய்வநாயகியின் தன்மையைக் கூறும் தோழி கூற்றுதல் அறிக.

இனி அடுத்தப் பாடலுக்கு வருவோம்.

பக்தி மூன்று வகைப்படும்; அவை பரபக்தி, பரஞானம், பரமபக்தி என்பன. எம்பெருமானைக் காணவேண்டுமென்னும் ஆசை பரபக்தி; அப்படிக் காணுகை பரஞானம்; கண்ட விஷயத்தை ஆசைப்படுகை பரம பக்தி என விளக்குவர். மேற் பாசுரத்தில் எம்பெருமானைக் காண வேண்டுமென்று ஆசைப்படுவதையும், அவ்வாசை மேல் மேல் மிகுவதற்கேற்ற பூமழை பொழியப் பெற்றதையும் காண்போம். இதனுள் அவ்வாசை மிகுந்து எம்பெருமானைக் கண்டமையும் அதனால் வரும் நிலையையும் காண்போம்.

இப்பாடல் முறையே பரஞானத்தைக் குறிப்பிடுவதாகும்.

இத்தெய்வ நாயகிக்குத் தெய்வநாயகன் காட்சி தந்தான். இக் காட்சியிலீடுபட்ட தலைமகளின் நிலை இங்குப் பேசப்படுகிறது. தெய்விகக் காட்சியில் மகிழ்ச்சி உண்டாவது இயல்பு. தெய்வநாயகன் தந்த காட்சி தெய்விகக் காட்சி. இக்காட்சியானது தன்னைக் கண்டாரை 'இன்னார் என்றறியேன்' 'அவரை நாம் தேவர் என்றஞ்சினோம்' என்று மயங்கும்படி பிச்சு ஏற்ற வல்லது.

இக்காட்சி என்றும் கண்ணெதிரே நிலை நிற்க வேண்டுமே! இது மாறிவிடுமோ என்ற ஐயத்தால் வருத்தமும் மகிழ்ச்சியின் பின்னே தோன்றுவது இயல்பு. இதனால் பிரிவில்லாத நிலையிலும் வருத்தமுண்டாவதற்கு ஏது விளங்குகின்றது.

"பெருஅமை அஞ்சும்
பெறிற் பிரிவஞ்சும்
அருஅ இடும்பைத்தென் நெஞ்சு"

என்பது இதனை வலியுறுத்தும்.

தலைவனோடிருத்தலைச் ஸம்ச்லேஷம் என்றும் பிரிந்திருத்தலை விஸ்லேஷம் என்றும் சொல்லுவர். இவ்விருவகை நிலைக்கும் பொதுவான செயல்களைப் பொதுமையில் இங்குக் காணலாம்.

பிரிவில் வருந்தும் நிலையின் செயல் :—

"விழுதல் விம்முதல் மெய்யுற
வெதும்புதல் வெருவல்
எழுதல் ஏங்குதல் இரங்குதல்
இராமனை எண்ணித்
தொழுதல் சோருதல் துளங்குதல்
துயர் உழந்துயிர்த்தல்
அழுத லன்றிமற்றய லொன்றும்
செய்குவ தறியாள்"
(கம்ப. சுந்தர. காட்சி-15)

எனும் இப்பாடலுள்வரும் பிராட்டியின் நிலையால் அறியலாம்.

கலவியின் மகிழ்ந்த நிலையின் செயல்:—

சூடாமணியைப் பெற்ற இராமபிரானது நிலையினைச் சொல்லுமிடத்து,

"பையப் பயந்த காமம்
பரிணமித்துயர்ந்து பொங்கி
மெய்யுற வெதும்பி உள்ளம்
மெலிவுறுநிலையை விட்டான்
ஐயனுக் கங்கி முன்னர்
அங்கியாற் பற்றுநங்கை
கையென லாயிற்றன்றே
கைபுக்க மணியின் காட்சி"
(சுந்தர - திருவடிதொழுத-47)

இதனுள், சூடாமணி பெற்ற பொழுதே மெலிவுறு நிலையை விட்டான்; அங்கி முன்னர் அங்கையாற் பற்றும் நங்கை கைஎனல் ஆயிற்று என்பதனால் நங்கையின் கைப் பிடித்த ஞான்றுற்ற (மகிழ்ச்சி) நிலையை அடைந்தான். அடைந்த பின் அவன் நிலையை,

'பொடித்தன உரோமம்; போந்து
பொழிந்தன கண்ணீர்; பொங்கித்
துடித்தன மார்பும் தோளும்; தோன்றின
வியர்வின் துள்ளி;
மடித்தது மணிவாய்; ஆவி
வருவது போவதாகித்
தடித்தது மேனி; என்னே
யாருளர் தன்மை தேர்வார்
(சுந்தர-திருவடிதொழுத-48)

என்பதனால் அறியலாம்.

இதனால் பிரிவு, உடனிருத்தல் (கலவி) எனும் இரண்டிடத்தும் செயல்கள் ஒரு தன்மையானவாக இருக்கும் என்பது தெளிவு. பிரிவு நிலையில்தான் மேற்கூறப்பட்ட செயல்கள் நிகழும் என்பதனை எல்லோரும் அறிவர்; தலைவன் உடன் இருக்கும் நிலையிலும் இச் செயல் உண்டாமென்பதனைச் சான்றோர் அறிவர். தொல்-மெய்ப்பாடு. 13ஆம் சூத்திரத்தில் 'புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்' என்னும் சூத்திரத்து அதன் உரையுள் 'பொறிநுதல் வியர்த்தல்' என்பது தலைமகன் தன்னை நோக்கிய வழி உட்கும் நாணும் ஒருங்கு வந்தடைதலின்' என்ற உரையும் இதனை உறுதி செய்யும். 'தலைமகன் தன்னை நோக்கிய வழி' என்ற இலேசானே தலைமகன் உடன் இருந்தபோதும் இச் செயல்கள் உண்டாகும் என்பது சான்றோர்க்கு உடன்பாடே.

தலைமகனோடு புணர்ந்துவந்த தலைமகள், உயிர்த் தோழியினிடத்தும் நாணத்தால் மறைத்தவழி, தோழி தலைவன் கூட்டம் உண்மையை (தொல். களவியல். 23) 'நாற்றமும் தோற்றமும்' என்ற சூத்திரத்தின் படி பலவகையாலும் ஆராய்வள். அப்படி

ஆராயும்பொழுது தலைவிக் குண்டாகிய நிலையைத் தோழி கூறுவதாக இலக்கியங்களுள் வரும் பாடல்களும் இதனை வலியுறுத்தும்.

அங்ஙனம் வரும் பாடல்களுள் கீழ்வருவதும் ஒன்றாகும்.

மாறன் கோவை — பாங்கிமதியுடன்பாடு.

"பார்க்கின்ற பார்வை மடந்தீர்ந்து
சேர்ந்தது; பாவைநுதல்
வேர்க்கின்றது; தனம் பொன்னாய்ப்
பரந்த; மெய் அன்பர்துன்பம்
தீர்க்கின்ற மாறன் குருகூர்ச்செந்
தேனைப் பைந்தேன் விரும்பிப்
போர்க்கின்ற கோதைக் கிருதோளும்
நீண்டு புளகித்தவே"

குருகூர்ச் செந்தேனாகிய தலைமகனைப் பைந்தேன் போன்ற தலைமகள் விரும்பியதனால் (கூட்டமுண்மையால்) உண்டாகிய நிலையைக் கூறும் இப்பாடலாலும் தலைமகன் உடன் இருக்கும்போது நிகழும் நிகழ்ச்சியை அறியலாம்.

தலைமகன் கூட்டத்திலும் பிரிவிலும் உண்டாகும் ஒரு படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் கொண்டு, இவைகள் நிகழ்வது கூட்டம் உண்மையினாலா? பிரிவினாலா என்று எல்லோரும் எளிதில் அறிய முடியாது.

வெவ்வேறு நிகழ்ச்சிகளினால் தலைமகள் இந்நிலையுடையள் என அறிதல் இயலாமையும் ஒரு வகை.

அதனை,

"அறியும் செந்தீயைத் தழுவி
அச்சுதன் என்னும் மெய்வேவாள்
எறியும் தண்காற்றைத் தழுவி
என்னுடைக் கோவிந்தன் என்னும்
வெறிகொள் துழாய்மலர் நாறும்
வினையுடையாட்டியேன் பெற்ற
செறிவளை முன்கைச் சிறுமான்
செய்கின்ற தென்கண்ணுக்
கொன்றே ?"

(திருவாய்மொழி 4-4-1)

என்னும் இதனுள் பராங்குச நாயகி எந்த நிலையில் உள்ளாள் என்பதனை அறிதற்கில்லை என்பதனை அறிகின்றோம்.

அஃது எங்ஙனம் என்னில்; இவள் செய்வது என் கண்ணுக்கு ஒன்றோ? ஒன்றல்ல; பல அவை நெருப்பை அணைத்துக்கொள்வது, காற்றைத் தழுவுவது, துழாய் நாறுவது என்பன. நெருப்புச் சுடாமையால் உலகியற்கை உள்ளவள் என எண்ண முடியவில்லை; குளிர்ந்த காற்றைத் தழுவுகையால் பிரிவுத் துன்பம் உற்றாள் என எண்ணுதற்கு இல்லை; திருத்துழாய் மணம் வீசப்பெற்றமையால் காதல் நோய் உள்ளவள் எனக் கருதுதற்கில்லை. ஆதலின் இவள் தன்மை ஒன்றிலே வைக்கப்பட்டிருக்கின்றதோ? இல்லையே எனும் கருத்துக்கள் 'செய்கின்ற தென்கண்ணுக்கொன்றே' என்பதனால் தோன்றுகின்றன என்பர் முன்னையோர்.

ஒன்றுக்கொன்று மாறுபட்ட நிகழ்ச்சிகளும் ஒரே காரணத்துக்காக ஒரே சமயத்து நிகழ்வதும் ஒருவகை.

இதனை, அசோகவனத்தில் பிராட்டியினிடத்தில் திருவாழியைக் கொடுத்தபோது உண்டான நிலையைச் சக்ரவர்த்தித் திருமகனிடத்தில் அனுமன் கூறுவதாக உள்ள கீழ்வரும் செய்யுளால் அறியலாம்.

'ஒரு கணத்திரண்டு கண்டேன்
ஒளிமணியாழி ஆன்ற
திருமுலைத் தடத்து வைத்தாள்
வைத்தலும் செல்வ நின்பால்
விரகம் என்பதனின் வந்த
வெங்கொடுந் தீயினால்வெந்
துருகிய துடனே ஆறிவலித்தது
குளிர்ப் புள்ளுற'

(கம்ப. சுந்த. திருவடிதொழுத 42)

இதில் சமயத்து இருவகை நிகழ்ச்சிகள் காண்கிறோம்.

இவைகளை எல்லாம் நெஞ்சில் தேக்கிக் கொண்டு இரண்டாவது பாடலை உன்னிப்புடன் பார்க்க வேண்டும்.

முதற் பாட்டிலே இன் அமுதக் கடலாகி நின்ற தெய்வ நாயகன் மேலும் ஒருபடி கீழிறங்கி 'இருந்தார் இருந்த இடத்தெல்லாம் செவிபடும்படி 'ஆர்க்கும் கார்க்கொண்டலாக விளங்குகின்ருன். 'மஞ்சதென அருள் பொழியும் வள்ளல் அல்லவா தெய்வநாயகன்; மேலும் 'அந்தமில் அமுத ஆழியாய், எமக்காய் அயிந்தைமாநகரில் அமர்ந்தவனுதலின் அருள் பொழியும் கார்க்கொண்டலாக ஓங்குகின்ருன். இன்னுர் இனியார் என்ற வேறுபாடின்றி 'ஆர்க்கும் கருணை பொழிவான் அயிந்தையில் வந்த மர்ந்த கார்க் கொண்டல் இவன். மயில், குயில், கிளி முதலியவற்றை மகளிர்க்கு ஒப்புமை கூறுவது மரபு. மயில் போன்ற இத் தெய்வநாயகி கார்க்கொண்டலான தெய்வநாயகனைக் கண்டாள். கார்க்கொண்டலைக் கண்டால் மயில் களிப்புடன் ஆடும். ஆதலின் இங்குக் காதல் புனமயில் என விசேடித்துச் சொல்லப்பட்டது.

கார்க்கொண்டலைக் கண்ட காதற்புன மயிலுக்குற்றவை :— கண்பனித்தல், வேர்த்தல், முகிழ்த்தல், விதிர்விதிர்த்தல், வெள்கி வெவ்வுயிர்த்தல் ஆகிய செயல்கள். இவற்ருல் கார்க்கொண்டலைக் காதற்புன மயில் கண்டமையால் உண்டான நிகழ்ச்சி என்றல் ஒருவகை.

கார்க்கொண்டலைக் கண்டும் அனுபவிக்கப் பெருமையாலோ, கண்டும் அனுபவிக்காது நெகிழவிட்டு விடுவோம் எனும் ஐயத்தாலோ உண்டான நிகழ்ச்சி என்றல் மற்ருெருவகை. இப்படிப் பொருள் கொள்ளும்போது, கொண்டலைக் கண்ட புனமயில் வருந்துவதாக உரைப்பது ஒருவகை நயம்.

இப்படி இவ் இருவகை நிலையும் ஒரே சமயத்தில் நம் தெய்வநாயகிக்கு நேர்ந்ததாக உணரும்படி அமைதலின் இந் நிலையைப் பார்ப்பவர்க்கு இஃது எவ்வகை நிலை என்று யாம் சொல்வோம்; சொல்ல இயலவில்லையே என்று தோழி கூறுவதாக அமைந்தது இப் பாடல்.

கலவியிலும் பிரிவில் உளவாகும் நிகழ்ச்சிகள் உண்டு என மம்மடன் என்ற வடமொழியாளரும் சொல்லியிருப்பதாக முன்னோர்கள் கூறுகின்றனர்.

இப்படி நாயகி நிலையில் கலவியிலும் பிரிவிலும் ஒருபடித்தான நிகழ்ச்சிகள் அமைந்தனவாக உள்ள பாடல்கள் தமிழில் காண்பது அரிதாகும்.

இப்படிக் கூறுவது சுவாமி தேசிகன் போன்ருர்க்கன்றிப் பிறரால் இயலாது என்பதனை இதன் மூலம் உணர்கின்ருேம்.

'சர்வதந்திர சுதந்திரர்' என்பது சுவாமிக்குரிய விருதன்ருே ?

இப்பாடல் வருமாறு :

ஆர்க்கும் கருணை பொழிவான்
அயிந்தையில் வந்தமர்ந்த
கார்க்கொண்டலைக் கண்ட காதற்
புனமயில் கண்பனியா
வேர்க்கும் முகிழ்க்கும் விதிர்விதிர்க்கும்
வெள்கி வெவ்வுயிர்க்கும்
பார்க்கின்றவர்க்கிது நாமென்
கொலென்று பயிலுவமே.

இனி இறுதியான மூன்ருவது பாடலைப் பார்ப்போம். இது பரம பக்தியைக் குறிக்கின்றதாகும்.

'இப்படி நிரதிசய போக்யமான பரிபூர்ண ஸ்வரூபத்தை சாட்சாத்கரித்தவாறே பெருவிடாய்ப்பட்டவன் தடாகத்தைக் கண்டாற் போலே பிறந்த ப்ரீத்யதிசயம் பரமபக்தி; இது 'முனியே நான்முகனிற்படியே ஸங்கோசமற அனுபவித்தல்லது தரிக்க ஒண்ணுத அபிநிவேசத்தை உண்டாக்கி மறுக்க ஒண்ணுத திருவாணையிட்டு வளைத்துக் கூப்பிடுகையாலே இவனுக்குக் கடுகப்ராப்தியைக் கொடுக்கும்படி ஸர்வேச்வரனுக்குத் த்வராதிசயத்தை உண்டாக்கி இவனை அவாவற்று வீடுபெறப்பண்ணும்.

(ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம் -
உபாய விபாகாதிகாரம்)

இந்நிலை வாய்ந்த இத்தெய்வநாயகியின் நிலையை அறிந்தவர்கள் மகிழ்ந்து கூறுவதாக இது அமைந்தது.

முதற் பாடலால் எம்பெருமானைக் காண வேண்டி, 2ஆவது பாடலால் கண்டமை யைக்கூறி இப்பாடலால் அவனைக் கண்டல்லது தரிக்கமாட்டாத நிலையில் 'அகல கில்லேன் இறையுமென்று' வாய் புலற்றும் படியான இத்தெய்வ நாயகியின் நிலையைத் தாய்மார் கூறுவதாக உள்ளது இது.

வெருவாதாள் வாய்வெருவி வேங்கடமே வேங்கடமே என்பது போன்ற நிலையுற்று, உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணனே என்றிருப்பாராயினமையால், இவர்தம் தெய்விக நிலையை உணர்ந்து கொள்ளாமல் 'நங்காய் நங்குடிக்கிதுவோ நன்மை' என்று வெறுக்கும் தாய்மாரைப் போன்றில்லாமலும், இஃது ஒரு நோய்; இதனைத் தீர்க்கும் வழியாதென்று தகாத வழியில் முயலும் தாய்மாரைப் போன்றில்லாமலும் இத்தலைமகளின் உண்மை நிலையுணர்ந்து, இந்நிலை தகுதியான நிலையே; நாம் இதற்கு உறுதுணையாயிருத்தல் வேண்டும் என்று முயல்கின்ற ஒரு, புதுமையான தாயின் நிலையை இது கூறுகின்றது.

நல்ல தாய் பெற்ற நல்ல நங்கை இவள்; உண்மை உணரும் உள்ளம் படைத்தவள் இத்தாய்:

இத்தெய்வ நாயகியின் நிலையுணர்ந்த பலரும்; இவள் நோய்வாய்ப்பட்டாள்; இந்நோய் நீங்குவதாகத் தெரியவில்லை; இது நீங்காதது என்று சொல்வதைக் கேட்ட தாய் 'வானோர் தலைமகனும்—சீராயின நன்னோய்' என்று நினைக்கின்றாள். வானோர் தலைமகனே இங்குச் சீராயின நன்னோயாகக் காணப்படுகின்றான்.

'பிணிக்கு மருந்து பிறமன்; அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து'

எனத் தலைமகளைப் பற்றித் தலைமகன் சொன்னது இங்கு இதற்கும் பொருந்தும்.

இங்குத் தலைமகள் தலைமகனைப் பற்றிச் சொல்வதாகக் கொள்ள வேண்டும்.

வானோர் தலைமகனும் சீராயின தெய்வ நன்னோய் ஈது ஆகையினால் பிறராலும் பிற வழியாலும் தீர்க்க முடியாத சீராயின தெய்வ நன்னோய். 'தீரா நோய் செய்தான் ஆக அவனை அன்றோ சொல்வது! தீர்ப்பாரை யாம் இனி எங்ஙனம் நாடுதும்' என்று அஞ்சுதற்கேற்ற நன்னோய். இந் நன்னோய் இவனாலும் இவன் சம்பந்தம் பெற்ற பொருள்களாலுமே தீர்க்கத் தகுந்தது என்ற உண்மை உணர்ந்த இத்தாய், வானோர் தலைமகனைய தெய்வ நாயகனுடைய அருளை வேண்டி நிற்கும்படியான இத்தலைமகளிடத்து அவ்வளவு உயர்ந்த பேரன்பு பூண்டதைக் காட்டுகிறது. இதனால்,

தன்மகள் தானே! சிறியவள்தானே என்றில்லாமல்,

'வளர்த்ததனாற் பயன்பெற்றேன்
வருக என்று
மடக்கிளியைக் கைகூப்பி
வணங்கினளே'
'......கணபுரம் கைதொழும்
பிள்ளையைப் பிள்ளை என்றெண்ணப்
பெறுவதே'

என்று பூரிக்கின்ற தாய்மாரைப் போன்றவள் இவள் — ஆதலின், இத் தெய்வநாயகியின் நோய் நீக்குதற்கேற்ற மருந்து—வெவ்வினை தீர்மருந்து—வெற்புடன் ஒன்றிய மருந்து—(மாமலையிலுள்ள மருந்தே பிணி தீர்க்கும் என்பர்) அயிந்தையில் மருந்து—அற்புத மான மருந்து என்று உணர்ந்து கொண்டாள் பின்,

'செடியார் வினைகள் தீர்மருந்தே'
'மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா'

என்றபடி சீராயின தேய்வ நன்னோய் ஆகிய 'தீரா நோய் செய்தவனே மருந்தாகவும்—மருத்துவனாகவும் உணர்ந்து 'அயிந்தைமா நகரிலமர்ந்தனை எமக்காய்' என்று தெளிந்து அத்தெய்வநாயகன் அருளையே வேண்டி நிற்கிறாள். இத் தாய்க்கு இப்படிப்பட்ட அன்பு வருவதற்குக் காரணம் இத் தெய்வநாயகியின்பால் உண்டான ஆராதகாதல்தான்,

ஸ்ரீமத் பரம்...பரி...வரதராமநுஜ மஹாதேசிகன்
(டெங்கணிகோட்டை நாராயண ஸ்வாமி)
சித்திரை பூரட்டாதி

ஸ்ரீரங்கலக்ஷ்மணமுநீத்ரபதாரவிந்த
ஸேவோபலப்த நிகமாந்த யுகாந்தரங்கம் ।
வைராக்ய பாக்ய நிரவத்ய குணப்ரகர்ஷம்
வந்தே ஸதா வரதலக்ஷ்மணயோகிவர்யம் ||

மேலும் தெய்வநாயகி 'பற்பில் மறந்த செய் யாள்படி' காட்டுகின்ருள். செய்யாளாகிய திருமாமகள் 'அகல கில்லேன் இறையும்' என்று இருப்பவள்; இவளும் அப்படியே இருப்பவள். அதனுல் வடிவிணையில்லா மலர் மகளோடு செயலிலும் இவள் ஒத்தவள்என்று நினைக்கிருள்.

'திருமாமகள் கொல் பிறந்திட்டாள்' என நம்மாழ்வாரும், 'காவியங்கண்ணி எண்ணில் கடிமாமலர்ப் பாவை ஒப்பாள்' எனத் திரு மங்கையாழ்வாரும் அருளியுள்ளமை நினைக் கத்தகும்.

இப்பெருமை வாய்ந்த இவள், இவளைப் பெற்ற வயிறுடையாள் என்ன நோன்பு நோற்ருள் கொலோ என்னும்படி இவள் நம் வயிற்றிற் பிறக்க நாம் என்ன பேறுபெற் ருேம் என்று பூரிக்கின்ருள்.

'இவளைப் பெறுகின்ற தாயார் மெய் நொந்து பெருர்கொல்' என்று இகழும்படி யல்ல இத்தாயின் சீர்மை.

இத்தாய் இத்தலைமகளாகிய தெய்வநாயகி இடத்து நீங்காத (விலங்காத) மயல் (பேரன்பு) பூண்டனள்.

இத்தலைமகளின் தெய்வ நன்னேய் நீங்க இந்நோய்க்குக் காரணமான அத்தெய்வ நாயகனின் அருளையே வேண்டும்படி ஆனதும் நீங்காததும்ஆகிய மயல் (பேரன்பு) பெற்ருேம் எனத் தாயார் மகிழ்ந்து கூறுவது போன்ற அமைதியுடையது இப்பாடல்.

இவற்றை உள்ளத்துக் கொண்டு இப் பாடலைப் பலமுறை பயின்று இன்புறுவோ மாக.

பாடல் :

வெற்புடன் ஒன்றி அயிந்தையில்
வெவ்வினை தீர்மருந்
தொன்றற்புதமாக அமர்ந்தமை
கேட்டருள் வேண்டி நிற்கப்
பற்பில் மறந்த செய்யாள்படி
காட்டிய பண்புடைநம்
விற்புருவக் கொடிக்கோர்
விலங்கா மயல் பெற்றனமே'

பற்பு—தாமரை, செய்யாள்—திருமாமகள், பண்பு—தன்மை, விற்புருவக்கொடி—வில் போன்ற வளைந்த புருவத்தை யுடையவளும் கொடியை ஒத்தவளும் ஆகிய தலைமகள்.

இதுவரை கூறியவாற்ருல் தாமான தன்மை மாறித் தெய்வ நாயகனுக்கேற்ற தெய்வ நாயகியாய் விளங்கிய இவரது இயல்பினை அன்பர்களும் பாகவதர்களும் சான்ருேர் களும் வியந்தும் புகழ்ந்தும் கூறியனவாக அமைந்தன இப்பாடல்கள் என்பது அறி கின்ருேம்.

இதனுல், இத்தெய்வ நாயகி பிறநாயகிகட் கெல்லாம் **தேசிக நாயகி** ஆக விளங்கு கின்ருள் என்பதிலும் வியப்பில்லையல்லவா!

இவ்வண்ணம் இத்தெய்வ நாயகியாகிய நம் தேசிக நாயகியின் இயல்புகளை இம்மும் மணிக் கோவையில் உள்ள மூன்று பாடல் களைக் கொண்டு என் சிற்றறிவுக் கெட்டிய வாறு ஒருவாறு விளக்கியுள்ளேன்.

'குற்றங் களைந்து குறை பெய்து
வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்'

தேடிக்காண வேண்டிய ஸ்ரீ ஸ்வாமியின் கிரந்தங்கள்

ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான்
ந்யாய வ்யாகரண வேதாந்த சிரோமணி
பையம்பாடி, சேட்டலூர்,
ஸ்ரீவத்ஸாங்காசாரியார் ஸ்வாமி,
ப்ரின்ஸ்பால், ஸம்ஸ்கிருத கலாசாலை
பூவிருந்தவல்லி,

அதிகரண சிந்தாமணியில் பராயத்தாதி கரணத்தில் (239 சுலோகம்) ஸ்ரீமத் குமார வரத தேசிகன்

''ததுக்தம் ஆசார்யைரேவ ஸ்துத்யாரம்பே—
''முகுந்தகருணும் வந்தே
முக்தேஷ்வதிக வத்ஸலாம் |
ஸ்வரூப ஸம்ஸ்தவௌ யஸ்யா :
நிர்ஹேதுக ஸஹேதுகௌ ||'' இதி''

என்று ஸாதித்துள்ளார். இதனல் ஸ்ரீமத் ஸ்வாமியின் ஏதோ ஒரு ஸ்தோத்ராரம்பத்தில் இவ்விதம் முதல் சுலோகமிருப்பதாய் அறியப்படுகிறது. ஷை சுலோகத்தை ஸ்ரீ குமாரவரதாசாரியரே தமது **ஸ்ரீரஹஸ்யத்ரய ஸாரார்த்த ஸங்க்ரஹத்திலும்** த்வயாதிகாரத்தில் எடுத்து உதாஹரித்திருக்கிருர். இது பற்றி பெரியோர்களிடம் விண்ணப்பித்துக் கொண்டதில் சிலர் ''இந்த சுலோகம் ஸம்வத : **தயாசதகத்தின்** ஆரம்பத்தில் இருந்திருக்கக்கூடும்'' என்று அருளிச் செய்தார்கள். ஸ்தோத்ரத்தில் விக்ஞாபித்துக் கொள்ளும் தயா (கருணு) விஷயமாகவே இந்த சுலோகத்திலும் அதன் ஸ்வரூபஸம்ஸ்தவங்களைப்பற்றி ஸாதிக்கிருராகவே இது பொருத்தமாயுள்ளது. மேலும் தயாசதகத்தில் ஆரம்பத்தில் அனுஷ்டுப் சுலோகங்களே. இதுவும் அனுஷ்டுப். இதனுலும் இது ஸரியே. வேறே சிலர் அருளிச் செய்ததாவது :—''ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ''பரச்சதம்வாபி பரஸ்ஸஹஸ்ரம் ஸ்ரீ வேங்கடாசார்ய க்ருதா : ப்ரபந்தா :'' என்கிறபடியே அளவற்ற ஸ்தோத்ரங்களை அந்தந்த திவ்ய தேசத்தம்பெருமான்கள் விஷயமாய் மங்களாசாஸனம் செய்துள்ளார். அதை அந்தந்த திவ்ய தேசத்திலுள்ளார் தம் அநுஸந்தானத்துக்காகப் பின்புபட்டோலை செய்தருளினுர்கள். அச்சேற்பட்டு முத்ரணம் செய்ய ஆரம்பித்தபோது கிடைத்தவை போக மீதமுள்ளவை இன்றும் ப்ராசீன வித்வத் திருமாளிகைகளிலும், சில கோசாகாரங்களிலும் கிடைக்கக்கூடும். பிராமாணிகர்கள் எடுத்தாண்டுள்ள இந்த சுலோகமும் வேறு ஏதாவது ஒரு ஸ்தோத்ரத்திருரம்பத்திலிருந்திருக்கலாம்'' என்று எப்படியும் இந்த சுலோகம் இன்று ஸ்ரீ தேசிக க்ரந்தங்களில் (அச்சிட்டவற்றில்) காணக்கிடைக்கவில்லையாகவே இதை ஸப்ரமாணம் விண்ணப்பித்தோம்.

மேலும், **ஸர்வார்த்தஸித்தியில்** (269 சுலோகம், புத்திஸரம்) ஸ்ரீ ஸ்வாமியே தமது காரிகையை வேருேர் கிரந்தத்திலிருந்து எடுத்து உதாஹரித்துள்ளார். அது வருமாறு—

''தத் உக்தம் அஸ்மாபி : ஏவ அன்யத்ர—

நோபாதி : பக்ஷதோன்யத்வம்
ஸாதனம் ந விபக்ஷத : |
பாதனம் ந ஸபக்ஷேப்ய :
ஸர்வானுமிதி பாதனுத் || இதி''

என்று இதுவும் உபாதி கண்டன ப்ரகரணங்களிலே ஸ்ரீ ஸ்வாமியின் (இது வரை முத்ரணமான) க்ரந்தங்களிலே காணக் கிடைக்கவில்லை. இதுவும் விமர்சிக்கத் தக்கதே. இதே **ஸர்வார்த்தஸித்தியில்** புத்தி ஸரத்திலேயே ஓரிடத்தில் ''விஸ்தரஸ்து **விடம்பனே''** என்றருளிச் செய்துள்ளார். இதனுல் **விடம்பனம்** அல்லது **உபாதி விடம்பனம்** என்கிறதோர் ஸ்ரீகோசம் ஸ்ரீ ஸ்வாமி அருளிச் செய்ததாய் பெரியோர் பணிப்பர். ஒருக்கால் அந்த கிரந்தத்தில் இந்த சுலோகமிருக்கக் கூடும்.

ஸ்ரீ சததூஷணியில் 53, 55 ஆகிய இரண்டு வாதங்களில் **''விஸ்தரஸ்து** ஸத் **வித்யா நிருபணே''** என்றருளிச் செய்த விடத்திலும் இதே போல் **ஸத்வித்யா நிரு பணம்** என்பது ஒரு க்ரந்தம் என்பதும், அதுவும் ஸ்ரீஸ்வாமி தாமே அருளிச் செய்தது என்பதும் பல பெர்யோர்களுடைய முடிவு. இங்கும் முன்பின் ஸந்தர்பங்களை பராமர்சிக்கு மிடத்தில் இவ்விதம் கொள்வதே பொருத்த மாயிருக்கிறது.

அதிகரண சிந்தாமணியில் அத்த்ரதி கரணத்தில் ''ஸத்த்வம் ஸ்வாத்வத்தி'' என்கிற (87 சுலோகம்) விடத்தில் ''விஸ் தரஸ்து **ஆசார்ய வ்யாக்யானே தரஷ் டவ்ய :''** என்று காணப்படுகிறது. கர்மானு ஸ்ம்ருதி சப்தவித்யதிகரணத்தில் சிந்தாமணி யில் ஷ அதிகரண ஸாராவளிக்கு ஸ்வாமியே செய்தருளிய வ்யாக்யானத்தி லிருந்து சில வாக்யங்களை எடுத்து கையாண் டுள்ளார். இங்கு தத்வமுக்தாகலாபத்திற்கு ஸர்வார்த்தஸித்தியைப் போல் அதிகரண ஸாராவளிக்கும் ஒரு வியாக்யானம் ஆசார் யரே இட்டருளினுர் என்று ஏற்படுகிறது. இதனுலும் அதிகரணஸாராவளிக்கு ஒரு வ்யாக்யானம் ஸ்வாமி செய்தருளியது ஸித்திக்கிறது. நிக்ஷேபரக்ஷையில் ஓர் அவ ஸரத்தில் தம்மால் அருளிச் செய்யப்பட்ட **அதிகரணதர்பணம்** என்னும் கிரந்தத்தைப் பற்றி ஸ்வாமியே ஸாதித்துள்ளார். க்ஞான வ்ருத்தர்கள் ''ஷ அதிகரண தர்பணமே அதிகரணஸாராவளியின் வியாக்யானமா யிருக்கலாம்'' என்றருளிச் செய்தார்கள்.

சததூஷணியில் பல விஷயங்களைப் பற்றி சுருக்கமாய் ஸாதித்து விட்டு ''விஸ்தரஸ்து **அன்யத்ர''** என்பதாய் ஏறத்தாழ 60 இடங் களில் ஸாதித்துள்ளார். இவையாவும் அந் தந்த விடங்களை பராமர்சித்தால் ஸ்ரீஸ்வாமி தாமே தமது வேறு க்ரந்தங்களை இங்கெல் லாம் ஸூசிப்பிப்பதாய் கொள்வதே ஸந்தர் பானு ஸாரேண பொருந்தும். அந்த விஷயங் களில் (எடுத்தாண்டு கோடி காட்டிவிட்டு விரதரான இடங்களில்) வேறு க்ரந்தங்களில் சிலவனவே காண்கின்றன. மற்றவை தேடிக்காண வேண்டியுள்ளது. இதனுல் நாம் அறிவது யாதெனில் பல விஷயங்களைப் பற்றி பல ஸந்தர்ப்பங்களில் பல கிரந்தங்கள் ஸ்ரீஸ்வாமி அருளிச் செய்துள்ளார் என்பதும், அச்சில் வெளிவராமல் **ப்ராக்ருத நிவேதிகா, தசார்த்தகோசம், சில்பார்த்த ஸாரம்** முதலியனவற்றைப் போல் மேலும் பல சாஸ் த்ரங்களில் பல வுள்ளன என்பதும், வித்யா வ்யஸனிகள் ஆர்வமுடன் தேடினுல் என்ருே இவையும் கிடைக்கும் என்பதுமாகும்.

இந்த ஸந்தர்பத்தில் மற்ருேர் விஷயம் நினைவுறுத்தக்கது. ஸ்ரீஸ்வாமி அருளிச் செய்த **ஹம்ஸஸந்தேசத்திற்கு** விரிவான ஸமக்ரவ்யாக்யான மிட்டருளிய பரமஹம் ஸேத்யாதி ஸ்ரீ க்ருஷ்ணப்ரம்ஹதந்த்ரபரகால மஹா தேசிகன் தமது **ரஸாஸ்வாதினீ** என்னும் ஷ உரையில் (இரண்டாம் ஆச் வாஸம் ''மத்யே தஸ்யா :—'' என்கிற ஆருவது சுலோகத்தில்) தமக்கு ஸ்வப்னத் தில் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனே ஒரு சுலோ கத்தை,

''ஸம்ராஜாம் உபஹாரார்த்தம்
யுக்மம் நேயா கஜாதய : |
இயம் ஹி ராஜ்ஞாம் மர்யாதா
நத்வேகைகம் கதாசன ||

என்பது அந்த சுலோகம்.) உபதேசித்ததாய் காண்கிறது. ''நிமித்த **ஸ்வப்னுத்யைரபி**

நிபுணம் அன்விச்சதி புத:'' என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் [illegible] ஸ்வாமியே ''ஸ்வப்னம் மூலம் சிலருக்கு சில விசேஷங்கள் நேரலாம்'' என்பதை அருளிச் செய்தபடிக்கும், நயப்ரகாசிகை என்னும் ஸ்ரீ பாஷ்யச்சாயா வ்யாக்யானத்தில் ஸோமயாஜியாண்டானைப் பற்றி கூறும்போது ''பாஷ்யார்த்தஸம்சயே யஸ்ய ஸ்வப்னே அர்த்தான் ப்ராஹ பாஷ்யக்ருத்'' என்று ஸ்ரீ மேகநாதாரிஸூரியருளிச் செய்தபடியும் இதுவும் கூடும் என்பதை ஸஹ்ருதயர் கொள்ளவேண்டும்.

நாதமுனிகள் ஆழ்வான், பட்டர் முதலியவர்களின் பல வாக்யங்களும், சுலோகங்களும் பின்புள்ளார் கிரந்தங்களில் பலவிடங்களில் எடுத்தாளப்பட்டவற்றில் இன்னும் பல அச்சிலுள்ள ஷெ ஆசார்யர்களின் கிரந்தங்களில் காணவில்லை. இதே போல் இங்கும் கொள்வது தகும். ப்ராமாணிகமானதும், ஸர்வஸம்ப்ரதி பன்னமுமான பின்புள்ளோர் கிரந்தங்களில் எடுத்திருந்தால் இவற்றையெல்லாம் ஆராய்ந்து வெளியிடவேண்டும். இது முக்யம். ஸ்ரீ குமாரநயனாராசாரியரின் பல க்ரந்தங்கள் இன்றும் செல்லுக் கிரையாகிக் கொண்டும் கேட்பாரற்று மிருப்பது போலவே ஸ்ரீ ஸ்வாமியினதும் சில ஸ்ரீகோசங்களும் தேடினால் வெளிவரக் கூடியவை உண்டு என்பதைக் காட்டவே இங்கு திங்மாத்ரம் விண்ணப்பித்தோம். இதே போல் அகச்சான்றும் புறச்சான்றும் (வெளிவராத ஸ்ரீ ஸ்வாமியின் ஸ்ரீ கோச வாக்யங்கள்) பலவுண்டு. ஆர்வமுடையோரும், ஆஸ்தியுள்ளோரும், வித்யாவ்யஸனிகளும் இது விஷயத்தில் கவனம் செலுத்தி மேற்கொண்டு ஆவன செய்வது ஸ்ரீ ஸ்வாமிக்குச் செய்யும் சாச்வதமான தொண்டாகும்.

பாதுகாஸஹஸ்ரானுபவம்

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
பண்டிதவர்ய, சாஸ்த்ர ரத்நாகர,
ஏ. ஆர். கிருஷ்ணமாச்சாரியர் ஸ்வாமி,
திருவல்லிக்கேணி.

ஸ்ரீ நிகமாந்த தேசிகனால் அருளிச் செய்யப் பட்ட தோத்திரக் கிரந்தங்களுள் பாதுகா ஸஹஸ்ரம் என்னும் நூல் ஒன்றே தலைசிறந்து விளங்குவதாகும். இதில் ஆயிரத்தெட்டு சுலோகங்கள் அடங்கியுள்ளன. இவை அனைத்தும் ஒரே இரவில் செய்து முடிக்கப் பெற்றவை என வரலாறு கூறுகின்றது. இக்கிரந்தத்தின் மங்கள சுலோகம் பின் வருமாறு:—

'ஸந்த: ஸ்ரீரங்கப்ருத்வீச சரணத்ராண சேகரா:
ஜயந்தி புவனத்ராண பதபங்கஜ ரேணவ:'

இதன் பொருள்:—ஸ்ரீரங்கத்தில் அர்ச்சா வதாரமாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீரங்க நாதனின் ஸ்ரீசடாரியை (பாதுகைகளை) தமது சிரஸ்ஸுகளில் அணியாகக் கொள்ளும் பகவத்பக்தர்கள், உலகத்தையே காத்தருளக் கூடிய திருவடித் தூசிகளைப் பெற்றவர் களாய் புகழுடன் பிரகாசிக்கின்றார்கள்-என் பதாம்.

இதுகாறும் இந்த சுலோகத்திற்கு இவ் விதமே கருத்து கொள்ளப்பட்டு வந்திருக் கிறது.

இது இப்படியாகில் இங்கு இரண்டு பிரச்னங்கள் எழுகின்றன. அதாவது இப் பொழுதுள்ள பல நூற்றுக் கணக்காகக் காணப்படும் ஆலயங்களில் அர்ச்சா ரூபி யாய் ஸேவை ஸாதிக்கும் எம்பெருமான்கள் ஸந்நிதிகளில் பக்தர்கள் வணங்கி நிற்கும் சமயம், அர்ச்சகர்கள் ஸ்ரீசடாரியை பக்தர் களது சிரங்களிலும், புஜங்களிலும் எழுந் தருளப் பண்ணுவதும், அதை பக்தர்கள் ஏற்று, தங்களைத் தன்யர்களாக எண்ணித் திருப்தி அடைவதும் ப்ரஸித்தமே. இப் படியிருக்க ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகளை சிரமேற்கொள்ளும் பக்தர்களுக்கும் மற்றைய ஆலயங்களில் வணங்கும் பக்தர்களுக்கும் என்ன விசேஷம்? எங்கும் பொதுவாக இருக்கும் விசேஷங்களையே இங்கு எடுத்துக் கூறுவதாயின் ஸ்ரீரங்கநாதனின் பாதுகா ஸஹஸ்ரம் என்று இக்கிரந்தத்தின் திருநாமம் ப்ரத்யேகமாக அமைந்திருப்பதை எங்ஙனம் விளக்கிக் கூறமுடியும்?

இரண்டாவது கேள்வி. இந்தப் பாதுகை களைச் மேற்கொள்ளும் பக்தர்களது திருவடித் தூள்கள் 'உலகத்தைக் காத்தருளும் பாக்யம் பெற்றவை' என்பது எப்படி? 'புவனத் ராணம்' என்பது என்ன? எப்பொழுது ஏற் பட்டுள்ளது? இது முதலிய விஷயங்கள் விளக்கமாய்க் கூறப்படவேண்டும். பாகவதர் களது பாததூசிகள் உலகத்தைக் காத்தருளக் கூடியவை என்பதை விளக்கினால் இன்றி இந்தப் பெருமையைச் சுலபமாக உணர்த்த முடியாது. எனவே இந்த விஷயங்களை இங்குச் சிறிது ஆராய்வோமாக. இது எங்ஙனம்? என்றால், கேண்மின்:—

ஸ்ரீமத் ராமாயணத்தில் ஜனகராஜனது சபையில் சூர்யகுலத்தின் பெருமை பேசப் பட்டிருக்கிறது. இது மற்ற புராணங்களிலும் காணமுடிகிறது. அதாவது **''மனுர்வைவஸ் வத: ஸுத: | இக்ஷ்வாகுஸ்து மனோ: ஸுத: | யோத்யந்த தபஸா லேபே**

ரங்கயானமனுத்தமம்'' || சூர்யனுடைய புதல்வன் மனுசக்ரவர்த்தி. மனுவின் குமாரர் இக்ஷ்வாகு மஹாராஜன். அவர்தான் ஸ்ரீரங்க விமானத்தை அருந்தவம் செய்து பெற்ருர். பிறகு இக்ஷ்வாகு முதற்கொண்டு இந்த குலத்தரசர்கள் ஸ்ரீரங்கநாதனே தர்சனம் செய்து அவரது ஸ்ரீபாதுகைகளைச் சிரமேற் கொண்டு தன்யர்களாய்க் காலம் கழித்து வந்தனர். பிறகு வரிசைக் கிரமமாக ஸ்ரீராமபிரான் அயோத்தியில் அவதரித்த ஸமயமும் இது நடந்து வந்திருக் கிறது. இதை வான்மீகி முதலில் வெளியிடா விடினும் யுத்த காண்டத்தில் ''லப்த்வா குலதனம் ராஜா லங்காம் ப்ராயாத் விபீஷண:'' என்ற சுலோகத்தினுல் வெளி யிட்டுள்ளார். அதாவது இக்ஷ்வாகுகுலத் தின் பரம்பரைதனமாய் இருக்கும் ஸ்ரீரங்க விமானத்தை (ஸ்ரீராம பிரானிடமிருந்து பராமரிக்கும் பொறுப்பை) ஏற்றுக் கொண்டு இலங்கை சென்ருன் விபீஷணன் என்றபடி. இதிலிருந்து ஸ்ரீரங்கநாதனின் பாதுகைகளைச் சிரமேற்கொண்ட பக்தர்களில் ஸ்ரீராம பிரானும் ஒருவர் என்று நிருபிக்கப்பட்டது. இதை ஸ்ரீநிகமாந்த மகாதேசிகனும் தேசிகப் பிரபந்தத்தில் ஸ்ரீ ரங்கத்தைப் பற்றி 'அம்பு யத்தோன யோத்தி மன்னர்க்களித்த கோயில்' என்று இக்ஷ்வாகுமஹா ராஜனைக் குறிப்பிட்டிருக்கிறது இங்கு நோக்கத் தகுந்தது.

பிறகு ஸ்ரீராமபிரான் தந்தையின் கட்டளை யை நிறைவேற்ற கானகம் புகுந்த சமயம் சித்திர கூட மலையில் தங்கி இருந்தது தெரிந் ததே. இந்தஸமயம் ஸ்ரீபரதாழ்வான் பட்டா பிஷேகம் தனக்குவேண்டாம் என்று நிரா கரித்து விட்டு ஸ்ரீராமபிரானைத் திரும்ப அயோதிக்கழைத்து வர எண்ணம் கொண்டு சித்திரகூடம் சென்றிருக்கிருர். இராம பிரானைத் திருப்பமுடியாது என்று தீர் மானித்துக் கொண்ட சமயம் புதிய பாதுகை களை ஸ்ரீராமனுக்கு எதிரில் எழுந்தருளப் பண்ணிவிட்டு இதில் சிறிது நேரம் ஏறி நின்று பாததூசிகள் படியச் செய்து அடியேனை அநுக்ரஹிக்கவேண்டும்.

''அதிரோஹார்ய பாதாப்யாம்
பாதுகே ஹேமபூஷிதே |
ஏதே ஹி ஸர்வலோகஸ்ய
யோக க்ஷேமம் விதாஸ்யத:'' ||

இந்தப் பாதுகைகள் உலகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு காத்தருளப் போகின்றன என்று கூறினர். இதிலிருந்து ஸ்ரீராமபிரானது பாதுகைள் உலகத்தினரைக் காத்து நிற்கும் பணியைப் பதினன்கு வருடங்கள் மேற்கொண்டன என்று உணர்த்தப் பட்டது.

இது வரையில் கூறப்பட்டபடி ஸ்ரீராம பிரான் இக்ஷ்வாகுவம் சத்தரச குலத்தில் தோன்றியதால் ஸ்ரீரங்கநாதனின் பாதுகை களைச் சிரமேற்கொண்டு வந்தவர் எனவே அவரது பாதுகைகளும் (பாததூசிகள் படிந் தவை) உலகத்தைக் காத்து நின்றிருக் கின்றன என்பது விளக்கப்பட்டது.

இங்கு எழுந்த இரண்டு விஷயங்களை விளக்கத்துடன் நிருபணம் செய்யவே, பாதுகாஸஹஸ்ரத்தில் இரண்டாவது சுலோக மாகக் கூறியுள்ளதைக் கவனிக்கவேண்டும்.

''பரதாய பரம் நமோஸ்து தஸ்மை
ப்ரதமோதாஹரணாய பக்திபாஜாம் |
யதுபஜ்ஞமசேஷத: ப்ருதிவ்யாம்
ப்ரதிதோ ராகவபாதுகாப்ரபாவ:'' ||

ஸ்ரீராமபிரானது பாதுகைகளைக் கொண்டு உலகத்தை உஜ்ஜீவிக்கச் செய்யமுடியும் என்ற விஷயத்தை உலகத்திற்கு முதன் முதலில் உணர்த்தியவர் ஸ்ரீபரதாழ்வான். அவருக்கு வணக்கம் செய்வது நமது கடமை என்றவாறு. எனவே,

''ஸந்த: ஸ்ரீரங்கப்ருத்வீச
சரணத்ராணசேகரா: |
ஜயந்தி புவனத்ராண பதபங்கஜ
ரேணவ:'' ||

இந்த் சுலோகத்தின் பொருள் வருமாறு:—
ஸ்ரீரங்கநாதனின் திருப் பாதுகைகளைச் சிரமேற்கொண்ட அயோத்தி மன்னர்கள்

தங்களது திருவடிச் தூசிகளால் உலகத்தை உஜ்ஜீவிக்கச் செய்யும் மஹிமை பெற்றவர் களாய் விளங்குகின்ருர்கள். இதை இரண்டாவது சுலோகத்கிஞல் தெரிந்து கொள்ள முடியும் என்றபடி. ஆகவே இந்த முதற் சுலோகம்,

''அர்த்தாந்தரந்யாஸத்வனி காவ்யம் |
விசேஷேண ஸாமான்ய
ஸமர்த்தனரூபம்'' ||

என்று கண்டுகொள்வது.

ஸ்ரீராமபிரானை பகவத்பக்தர்களுக்குள் ஒருவராகவும் அயோத்திகுலத்து க்ஷத்திரிய குமாரனுகவும் ஏற்று மனுஷ்யாவதாரமாக எண்ணி எழுதப்பட்டிருக்கிறது. விஷ்ணுவின் அவதாரமாகப் பேசத் தொடங்கும் சமயம் ஓரிடத்தில்,

''ராமாத்மனே முராரிபோரஸி
பாதுகே த்வம்''

என்றும் இதே கவி அங்கு மட்டும் குறிப்பிடுகின்ருர். அங்கு வேறுவிதமாகக் கருத்து.

நிற்க, இந்த முதற் சுலோகத்தில் 'ஜயந்தி' என்று கூறப்பட்டிருப்பதும் கிரந்தத்தின் ஆரம்பத்தில் ஸ்ரீராமஜெயம் என்று கூறப்பட்டிருப்பதற்குச் சமானம். இது இந்த மஹாகவியின் அபார சாமர்த்தியத்தைத் தெரிவிக்கின்றது. இதை அனைவரும் பராமர்சிக்கவேண்டும்,

''ஸத்ய: ஸத்யசஸே காவ்யஸம்பத்
ஸம்பத்யதே ஸதாம் |
யாதி யாதிதராம் ப்ராஜ்ஞஸங்க
ஸங்கர்ஷணர் ஹுதாம் ||

ப்ரஸாதாதேவ ஸேவ்யஸ்ய
ச்லாகநீயஸ்ய ஸூக்திபி: |
வதான்யஸ்யேவ காவ்யஸ்யா-
ப்யர்த்த புஷ்ட்யா ஹி சாருதா'' ||

ந பூதோ ந பவிஷ்யதி

ராமாயண ரஸாஸ்வாதீ வித்யா விசாரத,
உபந்யாஸ கேஸரி சொல்லின் செல்வன்
புராணம், பி. வி. ஸ்ரீநிவாஸ ராகவாச்சாரிய ஸ்வாமி,
காட்டம்பட்டி.

''தாரார் நறுமாலை சாத்தற்குதான் பின்னும்
நேராதனவொன்று நேர்ந்தான் ''

என, தன் தாய், மிக மிக சாமானிய தேவதையைக் குறித்து, மாலை சாத்தியதோடன்றி, மற்று மஞ்சலியுஞ் செய்த கூற்றைப் பேசவுங் கூசிய, மங்கையுரை குடிகொண்ட, ஆரணமா தேசிகனுக்கருள் சுரந்தது ''வாகீசாக்யா வாஸுதேவஸ்ய மூர்த்தி:'' என்றோதப்படும் அயக்ரீவர்தம் அருளேயன்றோ!

அதன் பயனுயவதரித்த வற்புதங்கள் பலவற்றிற் சில—

காளியின் அனுக்ரஹத்தால் வச்யமான வாக் விந்யாஸங்களைப் பெற்ற மகாகவியின் ''நாகேந்த்ர ஹஸ்தா: த்வயி கர்கசத்வாத்'' என்ற உபமான மற்ற குமார ஸம்பவ ச்லோகத்துக்கு, அதே பதங்களைக் கொண்டு ''கஜேந்த்ர ஹஸ்தாதிஷு தத்ஸமத்வே'' என யாதவாப்யுதயத்தில் மிகவழகிய உபமானமளித்து, வீறுடன் புகழ் பெற்று விளங்கும் வாக்குகள் ''இமே ஸ்ம கிங்கரா:'' என்பது போல ''கிம்குர்வதாம்'' என கைங்கர்யங்களை செய்வதையன்றோ! குலதனமாகக் கொண்டுள்ளது நம் ஸ்வாமி திறத்தில்; வச்யமாவதிற்காட்டில் '' யானும் தானுயொழிந்தானே'' என்பதுபோல பலவாயிரமடங்கு பெருமை குறையா எளிமையுடன்.

ஈடுமெடுப்புமற்ற ஸ்வாமியின் அவதாரத்தையும், வைராக்யத்தையும், கனவிலாவது, மாகவி கண்டிருந்தால், தனது உரையும் பொய்க்குமே! என்றெண்ணி, சாகுந்தலத்தில், ''லபேத வா ப்ரார்த்தயிதா ந வா ச்ரியம்'' என்ற சுலோகத்தையே இயற்றி இருக்க மாட்டாரோ என்னவோ?

பஞ்சகம், தசகம், விம்சதி, பஞ்சாசத், ஸப்ததி, சதகம், ஸஹஸ்ரம் இவைகளின் அடைவு, கேவலம் கணித முறையைக் காட்டவற்று! ஒரு விஷயத்திற்காட்டில், அனுபவத்திற்காட்டில், ரஸத்திற்காட்டில், ஒன்றைவிட ஒன்று, தேனும் பாலும், கன்னலும், அமுதுங் கலந்த, உயர்மட்டத் திறனுக்கு ஒரு எடுத்துக்காட்டு; என்பதன்றோ! மேலையார் கண்ட, தெவிட்டாத யதிராஜ மஹாநஸ பரிமள, பரீவாஹங்களின் தேக்கமான, ரஸகன விசேஷார்த்தங்கள்.

ஸ்வாமியின், அடக்கமும், அஹிம்ஸை கலந்த நேர்மையும், அமுதம் பரக்கும் வார்த்தைகளாகிய கவிதைகளின் அழகும்—பண்பும்—காம்பீர்யமும் வாதியை தொடாது வாதத்தை துலை(ளை)க்கு மாற்றலும், இம் மண்ணுலகில் நிலாத் தென்றல் தோன்றிய நாளிலிருந்து இற்றைவரை, மஹான்களால் ஒருமிடறுக, ஸ்வாமியைப்போல் ''ந பூதோ ந பவிஷ்யதி'' என்று கொண்டாடப்படும் சீர்மை, ஸ்வாமியின் திவ்யசூக்தி ரத்நாகரத்தில் மூழ்குதலையே தொழிலாகக் கொண்டவர்களுக்கன்றோ புரியக்கூடிய, புண்ணியமான, போது போக்கால் கிடைத்த பொக்கிஷமான சேமம் செய் முத்துக்களை யொத்ததென விளங்கும்.

''அசிராத் க்ரூதீவ லபஸே'' என்ற பக்தி ப்ரஹர்ஷமடியாக, ஸ்வாமி போற்றிய வகையிலே போற்றி நிற்பது ஒரொன்றுதானே யமையாதோ தாரணியில் வானேறப் போமளவும் வாழ்வளிக்க !

அருள் மிகுந்ததொரு வடிவின் திருவடிகளில்
பொருள் மிகுத்ததொரு வடிவினன் படிகளை
இருள் மிகுந்ததொரு வடிவினன் இடும்
மருள் மிகுத்ததொரு மறையுடைக் கையறவு.



ஸ்ரீவண்—லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்
—மார்கழி—பூரட்டாதி

ஸ்ரீமச்சடாரி சடகோப யதீந்த்ரரங்கி
கார்யாமஜாதஸ்ரீமுநிபிர்குரு ஸார்வபௌமை:
ஸம்ப்ரேக்ஷிதம் கருணயா பரிபூர்ரணபோதம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப முநிம்பஜாம:.

திக்கெட்டும் புகழ் ஸ்ரீபாஷியத்தைத் தெளிய உரைத் திடுநாள்:

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
வடுவூர். ரங்கநாதாச்சாரியார் ஸ்வாமி
சிரோமணி,

''வானுளமர்ந்தவர்க்கும் வருந்த வரும் இந்நிலைகள்
தானுளனுயுகக்கும் தரமிங்கு நமக்குளதே''

என்று அதிகார ஸங்கிரஹத்தில் நிகமாந்த மஹாதேசிகன் திருவாய் மலர்ந்தருளினுர். இந்தப் பாசுரத்தின் பொருள்: வைகுண்ட லோகத்திலுள்ள நித்யர்களுக்கும் முக்தர்களுக்கும் எட்டாத ஒரு உயர்ந்த நிலையை தான் எய்தியது என்பது.

உபநிஷத்தில் ஆனந்த வல்லியில் உயர்ந்த ஆனந்தத்தை எய்திய நிலே ஸ்ரீமந் நாராயணனுக்கும் முக்தர்களுக்கும் நித்யர்களுக்கும் கூறப்பட்டுள்ளது.

''ஸ ஏகோ ப்ரம்ஹண ஆனந்த:
ச்ரோத்ரியஸ்ய ச அகாமஹதஸ்ய''

என்று ஸ்ரீ ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் தான் அடைந்த நிலே இவர்களுக்கும் எட்டாத நிலே என்று கூறுகிருர்.

அந்நிலே யாதாக இருக்கக் கூடும்? என்ருல் ஸச்சிஷ்யர்களுக்கு ஸ்ரீ பாஷ்யம் முதலிய உயர்ந்த க்ரந்தங்களே காலக்ஷேபம் செய்வித்தல், எப்பொழுதும் யுக்தி பூர்வமாக சப்தப்ரம்ஹத்தை அனுபவித்தல் ஆம். இந்த நிலேதான் நித்ய ஸுரிகளாலும் அடையப்படாத நிலே என்று கூறப்படுகிறது. நித்ய ஸுரிகள் முக்தர்கள் வைகுண்டத்திலும் மற்ற ப்ரம்ஹாண்டங்களாகிற லீலா விபூதியிலும் வீற்றிருந்து தன் வீர்யத்திஞல் தனிச் செங்கோல் செலுத்தும் மேன்மையையும் அவதார விசேஷங்களேயும் கண்ணுரக் கண்டு ''பத்தாஞ்ஜலிபுடாஹ்ருஷ்டாநம இத்யேவ வாதிந:'' என்று கூப்பிய கையுடனும் நமோ நம: என்கிற சொல்லுடனும் விளங்குகிருர்களே தவிர ஸத் தர்க்கத்துடன் கூடிய வேதத்திஞல் பரமாத்மாவின் ஸ்வரூபத்தை விசாரிக்கவில்லே. ஸத்தர்க்கத்துடன் கூடிய வேதத்திஞல் பரமாத்மாவின் ஸ்ரூபத்தை ஆராய்ந்து கண்ணிஞல் கண்டு அனுபவிப்பது போல் உள்ள அனுபவத்தைக் காட்டிலும் மோக்ஷத்தில் உண்டாகும் ஆனந்தத்தை சிறந்ததாக நிகமாந்த மஹாதேசிகன் நினேக்கவில்லே. ஆதலால் ''நீதா: ஸுகம் வாஸரா:'' என்று ரஹஸ்ய த்ரய ஸாரத்தின் முடிவில் ஸ்ரீ பாஷ்யத்தைக் காலக்ஷேபம் செய்வித்தலாகிய பரமானந்தத்திஞல் காலங்கள் சென்றன என்று கூறுகிருர். ஸ்ரீ பாஷ்யத்தை ஸேவிப்பதே உயர்ந்த ஆனந்தம் என்று எண்ணியே அதிகரண ஸாராவளியிலும் களேத்தவனுக்குப் பாலின் பானம் களேப்பைவிலக்கி ஆனந்தத்தை அளிப்பது போல் ஆத்மாவின் நன்மையளிக்கும் ரஸ ஸ்வரூபியான ரஸாயனப் பொருளேப் பருகச் செய்யும் சங்கம் போல் தூய்மையுள்ள அதிகரண ஸாராவளியின் ச்லோகங்களால் பரமனுடைய ஸ்வரூப குணங்களே வாயார வாழ்த்துவது ஆன்மாவின் நன்மைக்கும் காரணம், ஆத்மாவின் ஆனந்தமும் அதுவே என்று ''ஸேவ்யோ ஸௌ சாந்த சித்தை: ச்ரவண ரஸ நயா சாந்தி லாபார்த்திபிர் வா ஸித்த: சாரீர கார்த்தே ஸஹஜபஹுகுண: ஸ்ரக்தராதுக்த ராசி:'' என்று அதிகரண ஸாராவளியில்

இரண்டாவது ச்லோகத்தினுல் கூறுகிருர். ஸ்ரீபாஷ்யகாரரும் ''ஆநீதாம் து நிஜாக்ஷரை: ஸுமநஸோ பௌமா: பிபந்த்வந்வஹம்'' என்று ஸ்ரீ பாஷ்யத்தை ஸேவித்தல் அதிக ஆனந்தத்தை உண்டுபண்ணும் அரிய பானம்—அமுதம் என்று கூறுகிருர்.

ஸத்தர்க்கத்துடன் வேதாந்த விசாரத்தினுல் பரமாத்மாவை அறிதல் என்கிற உயர்ந்த நிலே நித்ய ஸூரிகளுக்கும் கிடையாது என்பதை நிரூபிக்கிறேன்.

தைத்தரீய உபநிஷத்தில்—''யதோ வாசோ நிவர்தந்தே, அப்ராப்ய மநஸா ஸஹ'' என்று பகவானுடைய ஆனந்தத்தை மனதினுலும் வாக்கினுலும் அளக்க முடியாமல் வேதம் பகவானது பெருமையைப் பேசுவதிலிருந்து என்று கூறப்படுகிறது. அவ்வாறு பரமாத்மாவின் பெருமை வேதங்களால் அளக்க முடியவில்லே என்பதை தகுந்த யுக்தியுடன் யாதவாப்யுதயத்தில் ஸ்வாமி கூறுகிருர். யாதவாப்யுதயத்தில் உள்ள அந்த ச்லோகம் கீழே குறிக்கப்படுகிறது.

''பத்தம் ததா பாவயதாம் முகுந்தம்
அயத்ந விச்சேதிநி கர்மபந்தே
தபஸ்விநீ தத்க்ரதுநீதி ராத்யா
ஸவ்ரீடம் ஆரண்யகதாஸு
தஸ்த்தௌ.''

இதன் பொருள்: யசோதை கண்ணனே வெண்ணெய் களவுண்டதற்காக உரலில் கட்டினுள். அப்பொழுது உரலில் கட்டப்பட்ட கண்ணன் உரலில் கட்டுண்ட கரிய யானேக் குட்டியைப் போல் காட்சியளித்தான். அவ்வுரலில் கட்டுண்ட நிலேயிலேயே எல்லோருடைய மனமும் லயிக்கலாயின. அந்த லயம் த்யானமாகிய பக்தியாக மாறியது. வேதத்தில் தத்க்ரது ந்யாயம் என்கிற ஒருந்யாயம் உண்டு. அதன் பொருள்: க்ரது என்ருல் உபாஸனே என்று பொருள். இங்கு உபாஸகன் பகவானே எக்குணங்களுடன் என்னிலேயில் உபாஸிக்கிருனே அந்நிலேயை மோக்ஷத்தில் அடைகிருன் என்பது அந்த ந்யாயத்தின் பொருள்.

இங்கு உரலில் கட்டுண்டதாக த்யானம் செய்தால் மோக்ஷத்திலும் கர்மபந்தமாகிய கட்டுவிடா நிலே உண்டாக வேண்டும் என்பது அந்த ந்யாயத்தின் பொருள். ஆனுல் உரலில் கட்டுண்ட நிலேயை த்யானம் செய்பவர்களுக்கு ஸம்ஸார பந்தமாகிய கட்டு விடுதலேயடைகிறது. ஆதலால் தத்க்ரது ந்யாயம் உண்மை நிலேயைச் சொல்லாததால் அவ்வுபநிஷத்து கடவுளின் உண்மை நிலேயை அறியச் சக்தியற்றதாகியது. ஆதலால் வேதங்கள் கடவுளின் உண்மையைக் கண்டு பேசச் சக்தியற்றதால் வேதத்தின் ஒருபாகமாகிய தத்க்ரதுநீதி கடவுளின் உண்மை நிலேயைச் சரியாகக் கணுததால் வெட்கித்தது என்று ஸ்வாமி தேசிகன் கூறுகிருர். ஆதலால் ''யதோ வாசோ நிவர்த்தந்தே என்கிற உபநிஷத்தின் உண்மைப் பொருளே ஸ்வாமி தேசிகன் காரணத்துடன் விளக்கும் பொழுது பரமானந்தமாக இருக்கிறது.

அவ்வாறே அவதார ரஹஸ்யத்தையும் காரணத்துடன் ஸ்வாமி தேசிகன் தேவநாயக பஞ்சாசத்தில் வர்ணிக்கிருர்.

''பாஷாண நிர்மித தபோதந தர்மதாரம்

பஸ்மந்யுபாஹித நரேந்த்ர குமாரபாவம்:
இதன் பொருள்: ஆயிரக்கணக்கானவருடம் தவம் செய்த விச்வாமித்ரரும் கௌதமரும் இருக்க அவர்களால் போக்கடிக்க முடியாத அஹல்யையின் சாபம் பதினுறு வயது அரச குமாரனுகிய ஸ்ரீராமபிரானுல் எவ்வாறு போக்கடிக்கப்பட்டது என்கிற உண்மையை ஆராயுங்கால் விச்வாமித்ரர் கௌதமர் இவர்களின் சரீரம் பூர்வஜன்ம கர்மாவினுல் உண்டாகியது. அதனுல் கர்மாவினுல் உண்டாகிய சரீரம் தனக்குக் காரணமான கர்மாவை விலக்கச் சக்தியற்ற பொழுது அஹல்யையின் கர்மாவை எவ்வாறு விலக்கும்! ஸ்ரீராமபிரான் பர்மாத்மாவாதலால் அவன் சரீரம் சுத்தஸத்வத்தினுல் ஆகியதால் கர்ம ஸம்பந்தமின்றி பகவானுடைய இச்சையினுலுண்டாகியது. ரஜஸ்தமோ குண ஸம்பந்தமில்லாததால் காமம் கோபம் இவை

களின் ஸம்பந்தம் அற்றது. சுத்த ஸத்வ மயமானதால் கர்ம ஸம்பந்த மற்றது-கர்ம ஸம்பந்தமற்லதால் கர்ம ஸம்பந்தத்தினுலுண் டான காமத்தை அஹல்யையின் உடலி லிருந்து விலக்கிட உயர்ந்த தர்மதாரமாக அஹல்யையை ஆக்கியது. அவ்வாறே க்ருஷ்ணுவதாரத்திலும் பகவானது திருமேனி அப்ராக்ருதமாகியதாய் பதிஞருமாயிரம் தேவிமார்களுடன் கூடியிருந்த பொழுதும் காம ஸம்பந்தமற்றிருந்தது. என்றும், அநுதிப்ரம்ஹசர்யத்தை அடைந்திருந்தது என்றும் கிருஷ்ண பரமாத்மாவின் திருமேனி கூறப்படுகிறது.

ஆதலால் ராஸக்ரீடையை வ்யாசர் பாகவதத்தில் வர்ணிக்கும் பொழுது அளவு கடந்த ஆனந்த ஸ்வரூபமாகிய பரமாத்மா கோபிகைகளுடன் தயையினுல் அவர்கள் விருப்பத்திற் கிணங்கி ரமித்தனே, காமத் தினுல் இல்லை என்று அவதார ரஹஸ்யத் தை அருமையாகப் பேசினுர். ''ப்ரஸஹ்ய ஸதயம் கோபீராத்மாராமோப்யரீரமத்'' என்று.

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகனும் பகவானது திருமேனியின் அப்ராக்ருத நிலை யை உபநிஷத்து கீதை இவைகளால் நன்கு ஆராய்ந்து தேவநாயக பஞ்சாசத்தில்— ''பஸ்மந்யுபாஹித நரேந்த்ர குமாரபாவம்'' என்று கூறினுர். பரீக்ஷித் என்கிற அரச குமாரன் அச்வத்தாமாவின் ஆக்நேயா ஸ்திரத்திஞல் எரிக்கப்பட்டு கருகிய உடலுடன் பிறந்ததும், நித்யப்ரம்ஹசாரியின் கால்பட்டால் கருகிய உடல் நல்ல உட லாகும் என்று முனிவர்கள் கூறக்கேட்டு க்ருஷ்ண பரமாத்மாவின் கால் பட்டதும் அக்குழந்தை அழகிய உடலுடன் விளங் கியது. அப்பொழுது எல்லா முனிவர்களும் க்ருஷ்ண பரமாத்மாவின் திருமேனி ரஜஸ்தமோ குண ஸம்பந்தமில்லாததால் காம ஸம்பந்தமில்லை என்பதை அறிந்து எப் பொழுதும் அநாதி ப்ரம்ஹசாரி என்றும் அவனைப் போற்றினர்.

இவ்வாறு உபநிஷத்தின் பொருளைக் காரணத்துடன் அறிந்து விளக்குதல் ஸ்வாமி தேசிகனுக்கேயுரியது. ஆதலால் இவ்வவ தார ரஹஸ்யத்தைத் தானும் அனுபவித்து மாணவர்களையும் ஆனந்திக்கச் செய்வதால் நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளியபடி ''இங்கே திரிந்தேற்கிழுத்தென், இரு மானில முண்டுமிழ்ந்த செங்கோலொத்த பவள வாய் செந்தாமரைக் கண் என்னம்மான் பொங்கேழ் புகழ்கள் வாய வாய் புலங்கொள் வடிவெண் மனத்தாய் அங்கேழ் மலர்கள் கைய வாய் வழிப்பட்டோட வருளியே'' என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் யுக்தியுடன்கூட சப்த ப்ரும்ஹமாகிய உபநிஷதர்த்தத்தை அனுப வித்த நிலை நித்ய ஸூரிகளுக்கும் கிடைக் காதது என்று கூறுவதில் வியப்பும் இல்லை. தவறுமில்லை.

ஆராய்ச்சியாளர்க்கு கண்ணில் கண்ட பொருளையும் காரணத்தினுல் ஆராய்வதே விரும்பப்பட்டது. ஆதலால் ரகுநாத சிரோ மணியும் ப்ரத்யக்ஷ பரிகலிதமப்யர்த்தம் அநுமாநேந புபுத்ஸந்தே தர்க்க ரஸிகா: என்று பேசினுர். ஸ்வாமி தேசிகனும் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் தத்வத்ரய சிந்தனுதி காரத்தில் தர்க்க பாண்டித்யத்தாலே நினைத்த தெல்லாம் சாதிக்க வல்லராயிருக்கச் செய்தே யிறே என்றும், யதிராஜ ஸப்ததியில் ''சஸ்த் ராசஸ்த்ரி விஹார ஸம்ப்ருதரணுஸ்வாதேஷு வாதேஷு ந:'' என்றும் தனது தருக்கச் செருக்கைப் பேசுகிருர். இவ்வாறு ஸத் தர்க்கத்துடன் வேதாந்த விசாரம் செய்வதே உயர்ந்த ஆனந்தம் என்பதை ''யுவா ஸ்யாத் ஸாது யுவாத்யாயக:, ஸ ஏகோ மாநுஷ ஆனந்த: என்கிற உபநிஷத்து கூறியது, இதுவே தவம் என்பதை ''ஸ்வாத்ய ப்ரவசநே ஏவேதி நாகோ மௌத்கல்ய: தத்ஹி தபஸ் தத்ஹி தப: என்றே உபநிஷத்து கூறியது.

கீதையில் கர்தும் ஸுஸுகம் என்று பக்தியைக் கூறியது போல் இந்த வேதாந்த விசாரம் விசாரிக்க விசாரிக்க அளவு கடந்த ஆனந்தம் என்பதை ''யதிப்ரவரபாரதீ ரஸபரேண நீதம் வய:'' என்று ஸ்வாமி தேசிகன் திருவாய் மலர்ந்தருளினுர்.

ஆதலால் தேசிகன் சப்தப்ரம்ஹ விசாரத் தினுல் அடைந்த உயர்ந்த நிலை நித்ய ஸூரி களுக்கும் கிட்டா என்று—வானுளமர்ந்த வர்க்கும் வருந்தவரும் இன்நிலைகள் என்று பேசினுர்.

ஸ்ரீ தேசிகனின் கவிதை நயங்கள்

திருவாளர் S. K. இராமராசன் (கம்பராமன்)

ஸ்ரீய: பதியான பரந்தாமனின் உபய விபூதியும் புரிந்த நல்வினைப் பயன்கள் யாவும் ஆழ்வார்களாக அவதரித்தன. ஆழ்வார்களின் இதயத்தே ஒளிவிட்ட ஞான பக்தி வைராக்கியங்களே — முக்கோல் ஏந்தி - யதிராஜராக உருக்கொண்டன. நம் ஸ்ரீ பாஷ்யகாரரின் எல்லையில்லாத பெருங் கருணையே ஸ்ரீ வேதாந்த தேசிக வேடத்துடன்—காவியம், நாடகம், ஸ்தோத்திரம் முதலான நூற்றுக்கணக்கான ஸ்ரீ ஸூக்திகள் புனைந்து — நம்மை உய்யக்கொண்டது.

நம் ஸ்ரீமந் நிகமாந்த தேசிகன் திருவவதரித்த பின்னர் ஸ்ரீராமாநுஜ தர்சனம் புத்தொளி பெற்றது. கற்றவர்கட்கே அரிதில் விளங்கிய ஸ்ரீவைஷ்ணவ தத்துவம் சிற்றறிவினர்க்கும் எளிதாய்ப் புலப்படும்படி ஆக்கிய பெருமை நம் தேசிகனுக்கே உரித்தது. சிறு குழந்தையின் மெல்லிய குடல் பொருதென்று அன்னை கடுமையான மருந்தை உண்டு இனிமையான தீஞ்சுவைப் பாலைத் தன்னகத்தே தோற்றுவிக்கிருள். அதுபோல நம் ஸ்ரீ தேசிகனும் வேதங்களையும் உபநிடதங்களையும் பிரம சூத்திரத்தையும் ஸ்ரீ கீதையையும் பயின்று செரித்து, தெளிந்து, பின்னர் எளிதே புலனுகும் அரிய நூல்களைப் புனைந்துள்ளனர்.

நம் ஸ்ரீதேசிகன் ஸ்ரீ ராமாநுஜ தர்சனத்தை என்றும் மறந்ததில்லை. எங்கெங்கே சந்தர்ப்பம் நேருகிறதோ, அங்கெல்லாம் அதனைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பார். நம் ஸ்ரீ வைஷ்ணவ தத்துவத்திற்குப் 'ப்ரதான ப்ரதி தந்த்ரம்' ஒன்று உண்டு. அது யாது? சேதனங்களும் அசேதனங்களும் எம்பெருமானுக்குத் திருமேனி. எம்பெருமான் அவற்றிற்கு உள்ளுறை. நம் வாஸுதேவன் உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன். இந்த அரிய தத்துவத்தை'

—''உயிர்களுக்குள் நிறைந்து அவ்வுயிர்களை ஏவுபவனுய் எல்லா உயிர்கட்கும் ஆத்மாவாய், இவற்றிற்குத் தாரகனுய் நியாமகனுய், சேஷியாய், இருக்குமாறு போன்று என்றும் (**தைத்திரீயம்**) எவனுக்கு இவ்வுலகம் சரீரமாக இருக்கிறது என்றும், எவனுக்கு இந்த ஆத்மாக்கள் சரீரமாக இருக்கின்றன என்றும்'' — (பிருஹதாரணியம்) உபநிடதங்கள் முழங்குகின்றன.

இந்தப் **''ப்ரதான ப்ரதிதந்த்ரத்தைப்''** பற்றி ஸ்ரீதேசிகன் நிரம்பச் சிறப்பித்துள்ளார். ''இந்தப் ப்ரதிதந்த்ரம்'' ஸ்ரீ பாஷ்யகாரரால் அருளிச் செய்யப்பட்டது என்றும், இது அவித்தையாகிற இருட்டுக்கு விடியற்காலம் போன்றதென்றும் இதை உணர்ந்த ஞானிகளிடத்தில் ஹேதுவாதம் பண்ணுபவர்களின் அலைகளின் இரைச்சலானது சீக்கிரத்தில் நாசம் அடையும்'' என்றும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் விளக்கிக் கூறியுள்ளார்.

இப் ப்ரதி தந்த்ரம் தெரிந்த பிறகு திவ்யப் ப்ரபந்தம் பயின்ருல்தான் நுண்பொருள் காணமுடியும். இல்லையென்ருல் பலவித ஐயப்பாடுகளும் திரிபுகளும் அஞ்ஞானங்களும் சூறைக் காற்று போல வீசி நம்மைக் கெடுத்து விடும்.

நம் ஸ்ரீமந் நிகமாந்த தேசிகன் இப்'ப்ரதி தந்த்ரத்தை'

உயிரும் உடலும் உடலாக ஓங்கித்
தயிர் வெண்ணெய் தாரணியோடு
உண்டான்' என்றும்

நாராயணன் பரன்நாமவனுக்கு
நிலையடியோம், சோராதனைத்தும்
அவனுடம்பென்னும் சுருதிகளால்’

என்றும்,

நிலைதந்த தாரகனாய்
நியமிக்கும் இறைவனுமாய்
இலதொன்றெனுவகை எல்லாம்
தனதெனும் எந்தையுமாய்
துலையொன் றிலையென நின்ற
துழாய் முடியோன் உடம்பாய்
விலையின்றி நாம் அடியோம் எனும்
வேதியர் மெய்ப் பொருளே’

என்றும்

‘இடம் பெற்றார் எல்லாம்
என் உடலாய் நிற்ப
இடர் பிறப்பு என்ற
இவையில்லா என்னை’ என்றும்
‘சிறிய பெரிய
உருவுடைய உடலமென
நடலம் இலது
இலகு நிலையினர்’— என்றும்

தெளிவாகவும் சுருக்கமாகவும் தெரிவித்துள்ளார்.

‘அருளாளா! உன் பக்தனை பிரகலாதனைப் பாதுகாக்க [இரணியன் எப்பொருளைக் காட்டி அதில் நீ இருக்கின்றாயா என்று கேட்டாலும் உடனே தோன்றுவதற்காக] நீ சராசரங்கள் தோறும் உள்ளுறைப் பொருளாக நிறைந்து நின்றாய். இரணியன் ஒரே ஒரு தூணை மாத்திரம் தட்டினான். நீ உடனே அங்கு வெளிப்பட்டாய். மற்ற இடங்களில் நீ இன்னும் உள்ளுறையாக உள்ளாய். அதனால் இப்போது மூவுலகங்களும் நரசிங்க வடிவத்தைக் கர்ப்பத்தில் கொண்டுள்ளன. இது திண்ணம்.

இந்தச் சுலோகம் ஸ்ரீ வரதராஜ பஞ்சாசத்தில் இருக்கிறது. இதில் ஸ்ரீராமானுஜரின் ப்ரதான ப்ரதிதந்த்ரம் கற்பனை வளத்தொடு விளக்கப்படுகிறது.

நம் ஸ்ரீ தேசிகன் பூர்வாசாரியர்களையும் அவர்களுடைய ஸ்ரீ ஸூக்திகளையும் என்றும் எங்கும் வாயார மனமாரப் போற்றுகின்றார். ஆழ்வார்கள் பாலும், ஆசார்யர்கள் பாலும் ஸ்ரீ தேசிகன் கொண்ட பேரன்பு கற்பனை வளத்துடன் வெளிவரும் போது நம் ஆன்மா புளகம் எய்துகிறது.

அறிவிலிகள் ‘கசடதப’ என்று வியாகரணத்தில் உள்ள அக்ஷர வரிசைகளைப் படித்துக் கொண்டிருக்கட்டும். மற்றும் சிலர் பேசுவதில் திறமை பெற்றிருப்பதாக எண்ணிக் கொண்டு ‘கடம் படம்’ என்று உரக்கக் கத்திக் கொண்டிருக்கட்டும்.

நாம் மகிழம்பூ மாலையினின்றும் பெருகுகின்ற குறைவற்ற செந்தேன் பெருக்கின் சிறப்புடைய குணபூர்த்தியுள்ள வகுளாபரணனின் திவ்யப்ரபந்தங்களைக் கொண்டு ஆனந்திக்கிறோம். இது நம் ஸ்ரீ தேசிகன் நம்மாழ்வார்பால் கொண்ட எல்லையற்ற ஈடுபாட்டைத் தெரிவிக்கின்றது.

‘ப்ரபுவே! ஸ்ரீ பாஷ்யகாரரின் ஸ்ரீ ஸூக்திகளின் மிகுதியான சுவையைப் பருகியே என்னுடைய யௌவனப் பருவம் கழிக்கப் பெற்றது. தலை முற்றிலும் நரைத்து விட்டது’. (அபீதிஸ்தவம்) என்றும்

‘எம்பெருமானாருடைய ஸ்ரீ ஸூக்திகளில் எப்போதும் பேரானந்தம் காணும் பரம பாகவதர்கள் தவறுபட்ட பொருள் நிறைந்ததும் நூற்றுக்கணக்கான கந்தைகளின் முடிச்சுகள் நிரம்பியதும் கவலைகளையே முடிவாகக் கொண்டதுமான அற்ப சித்தாந்தங்களை ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள். முத்துச் சிப்பிகளால் தூய்மை பெற்ற பாகீரதியைச் சடையிலணிந்த சிவபெருமான் மண்டூகங்களுக்கு உறைவிடமான கால்வாயை மனத்தாலும் நினைப்பானோ? [ஸ்ரீயதிராஜ சப்ததி] என்றும் ஸ்ரீ தேசிகன் பகர்ந்தவை ரஸிகர்களுக்குப் பேரானந்தம் பயப்பதன்றோ.

கடல் பெரியது; அளவு கடந்தது; அலைப் பெருக்குகளுடன் கூடியது, ஆயினும் அஃது அகத்தியரின் சிறிய உள்ளங்கையில் அடங்கி விட்டது. அது போல் சகல வேதார்த்தங்களும் நம் ஆசார்யர்களின் இதயத்தே அடங்கி விட்டதாம். அகத்தியரின் கையும் ஆசார்யர்களின் இதயமும்

அளவாற் சிறியதாயினும் ஆற்றலாற் பெரியது. எத்தகைய அரிய கற்பனை!

அந்தமில் ஆதி தேவன்
அழிசெய் தடைத்த
அலை வேலை ஓதம் அடையச்
செந்தமிழ் நூல் வகுத்த
சிறுமா மனிச்சர்
சிறுகைச் சிறுங்கை யது போல்
சாந்தமெ லாம் உரைப்ப
இவையென்று தங்கள்
இதயத் தடக்கி அடியோம்
பந்தமெ லாம றுக்க
அருள்தந் துகந்து
பரவும் பொருள்க ளிவையே.

ஸ்ரீ தேசிகன் ஹயக்ரீவரிடம்— "மனிதர்களின் செவிகளில் அமுதத்தைப் பெருக்குவதாய், அடியார்களுக்குக் காமதேனு போன்றதாய், உள்ள வாக்கை அடியேனுக்கு எப்போதும் வழங்க வேண்டும் என்றும், வாதப் போர்க் களங்களில் கவிஞர்களிலும் வாதம் செய்பவர்களிலும் சிறந்தவர்களை வெல்ல விரும்பும் அடியேனுடைய நாவின் நுனியாகிய சிம்மாசனத்தில் நீ அமர்ந்தருள வேண்டும் என்றும் விண்ணப்பித்துக் கொண்டார். அப்பிரார்த்தனையை எம்பெருமான் தலைக் கட்டினன் என்பது உறுதி.

நம்முடைய ஸ்ரீ தேசிகனின் வாக்கு மாலைக் காலத்தில் மலர்ந்த மல்லிகை மலர்போல் மணம் வீசுவது. தானே மரத்திலிருந்து உதிர்ந்த மாங்கனி போன்று இனிமை மிக்கது. பின்வரும் பகுதிகள் அதனை நிரூபிக்கும்.

எம்பெருமான் பிரகலாதனைக் காக்கவும் இரணியனைக் கொல்லவும் கருதினன். உடனே அசுரனின் முற்றத்தே நின்ற தூணில் நரமடங்கலாய் அவதரித்தான். அதனால் அத்தம்பம் மலட்டுத் தன்மை நீங்கி [பல் கோடி] பிரமதேவர்களுக்குப் பிதாமஹி [பாட்டி] ஆகிவிட்டது என்று தசாவதார ஸ்தோத்திரத்தில் ஸ்ரீ தேசிகன் விவரித்த கற்பனைக்கு இணையுமுண்டோ!

ஸ்ரீ வாஸுதேவன் மஹாபலியிடம் யாசகம் வாங்கப் ப்ரம்மசாரியாகச் செல்கிறன். செய்யும் தொழிலுக்கும் ஏற்றுள்ள ஆஸ்ரமத்திற்கும் ஏலாதென்று கருதிய பிரான் 'அகலகில்லேன் இறையும்' என்று தன் திருமார்பில் தங்கிய பெரிய பிராட்டியை மான் தோலால் மூடிக் கொண்டான் [யாகம் பெற்றபின் த்ரிவிக்ரம அவதாரம் எடுத்த பொழுது] போர்த்தியிருந்த மான்தோல் மெல்ல மெல்ல நழுவி விழுந்து விட்டது. ஆங்கே திருமார்பில் வீற்றிருந்த திருமகள் மூன்று உலகத்தார்க்கும் காட்சி கொடுத்தாள். அப்போது உலக மக்கள் ஸ்ரீவாமன மூர்த்தியைப் பரம் பொருள் எனத் தெரிந்து கொண்டார்கள். என்று ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ தேஹளீச ஸ்துதியில் பகர்ந்த கற்பனையில் உள்ள நுண்பொருளை உணர்வது ஸ்ரீவைஷ்ணவர்களின் கடமையும் உரிமையுமாகும்.

கருடன் பாம்புக் கூட்டங்கள் பால் சீற்றம் கொண்டான். எல்லாப் பாம்புகளையும் அழித்துத் தொலைத்து விடுவது என்று சங்கற்பம் செய்தான். இதனையறிந்த சிவபெருமானுக்கும் செஞ்சுடரோனுக்கும் திருமகள் கொழுநனுக்கும் கவலையுண்டாயிற்றும். கருடன் தன்னுடைய குதிரைகளின் பூட்டாங் கயிறுகிய பாம்புகளை விழுங்கிவிடுவானே என்று கதிரவன் கலங்கினன். தன்னுடைய வில்லின் நாணைப் பறித்துவிடுவானே என்று சிவபெருமான் அஞ்சினன். நீர் உறுத்தாமைக்காக இனிமையாக விரிக்கப்பட்ட தன் பாம்புப் படுக்கையை எடுத்துக் கொள்வானே என்று பெருமான் திகைத்தான். இக் கற்பனையைச் சுவைக்கத் தெரிந்தவர்கள் மகா பாக்கியசாலிகள்.

பெண்ணை யாற்றங்கரையிலே வளர்ந்த கரும்பு போன்றவன் தேஹளீசன்; அவனை முதலாழ்வார் மூவரும் நெறுக்கினர். நெறுக்குண்ட பெருமானிடமிருந்து [ஆலையில் அரைக்கப்பட்ட கரும்பில் சாறு பெருகுவது போல] 'ஸௌசீல்யம்' என்ற ரஸம் வடிந்து சர்க்கரையாக மாறிற்று. அச்சர்க்கரையைத் திருவடித் தேனுடன் கலந்து பரம ஏகாந்தி

களான ஆழ்வார்கள் அனுபவித்தார்கள்—என்று ஸ்ரீ தேசிகன் 'ஸ்ரீ தேஹளீசன் ஸ்துதியில்' பாடியது ரஸிகர்களுக்குப் பேரின்பம் பயப்பதல்லவா?

எம்பெருமான் வைஜயந்தி என்னும் மாலையை அணிந்துள்ளான். அதில் எப்போதும் வண்டுகள் தங்கித் தேனை உண்டு மகிழும். அவ்வண்டுகள் ஒரு நாள் ஸ்ரீ வில்லிபுத்தூர் வந்த சுடர்க் கொடி சூடிக் கொடுத்த மாலை எம்பெருமான் முடியில் விளங்குவது கண்டன. உடனே அவைகள் வனமாலையை விட்டு விட்டு முடியைச் சுற்றிச் சூழ்ந்து வட்டமிட ஆரம்பித்தன. அச் சுரும்பினங்கள் மயில் தோகையாலான குடையாக எம்பெருமானுக்கு விளங்குகின்றன என்று [ஸ்ரீகோதா ஸ்துதி] விவரித்த கற்பனை கோதையாரின் பெருமையை மூன்றுலகிலும் மணக்கச் செய்து விட்டது.

சங்கற்ப சூர்யோதயம் என்ற நாடகத்தில் நவரஸம் ததும்புகிறது. முல்லையின் வாசனையும் தேனின் இனிமையும், அமுதின் தெளிவையும் யாண்டும் காண்கிறோம். அதில் மன்மதனின் வைதாளிகன் மாலைக் காலத்தை வருணிக்கின்றான்; பார்ப்போம்.

கங்குல் என்கின்ற அணங்கு அடிவைத்து நடப்பதற்காக விரிக்கப்பட்ட செந்துகிலாகவும், ராகம் [ஆசை] என்கின்ற கடல் நீரின் பெருக்காகவும், மதவேள் என்கின்ற கடப்ப மரத்தின் மகரந்தக் குவியலாகவும், சிருங்காரம் என்கின்ற தலைமகனின் சிரத்திலணிந்த செம்பருத்தி மலராகவும், மகா மோஹன் என்கிற யானையின் சிவந்த நிறமுள்ள புள்ளிகளின் தொகுப்பாகவும் மேற்குத் திசை என்கின்ற நங்கையின் கொங்கை சேர் குங்குமக் குழம்பாகவும் [சிவந்த நிறத்தோடு கூடிய] மாலைக்காலம் வளர்கின்றது' இவன் மன்மதனின் பாடகன். ஆகையால் இரவின் முதற் பாதமாகிய அந்தியைச் சிறப்பித்துப் பேசினன். இந்த மாலைக்காலத்தில் பரவும் இருள் நீங்கத்தான் சங்கற்ப சூர்யோதயம் பின்னே நிகழப் போகின்றது.

சுமதி விவேகனைக் கொண்டாடும் பகுதி சால இனியது. கற்பனை வளம் மிக்கது. ஊழிக்காலத்தே கூத்தாடும் பசுபதியின் சடையில் கரையைத் தாண்டிச் செல்லும் கங்கையின் அலைகளால் தூய்மையாக அலம்பப்பட்ட [களங்கம் நீங்கிய] சந்திரனுடைய ஒளியைப் போன்ற பொலிவைப் பெற்ற தங்களுடைய புகழைக் கடலைச் சார்ந்த மலைக் குகையில் வாழும் நாக கன்னிகைகள் திரும்பத் திரும்பப் பாடுகின்றார்கள். இத்தகைய நயம் மிக்க பகுதிகள் ஸ்ரீ தேசிகனின் தெய்வப்பனுவலில் யாண்டும் மலிந்துள்ளன.

ஆற்றல் மிக்க சிங்கம் வழங்கும் பாலின் சுவையை அதன் குருளைகளே உணர வல்லன. மற்றவைகள் உணரா. அது போல ஸ்ரீ தேசிகருடைய தீஞ்சுவைப் பனுவல்களை உபயவேதாந்திகளே உணர வல்லனர். நாம் கவி தார்க்கிக சிம்ஹத்தின் காவியங்களையும் ரஹஸ்யங்களையும், ஸ்தோத்திரங்களையும் பயின்று

மன்றேறி வாதிப்போர்
வாயடங்கவே கல்விக்
குன்றேறி நின்று குமுறும்
கோளரி யாவோம்'

ஸ்ரீவேதாந்த தேசிகன் திருவடிகளே சரணம்.

———

வேதாந்தாசார்யவர்ய:

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
வீராபுரம் கிருஷ்ணமாச்சாரியார் ஸ்வாமி
சிரோமணி—வில்லிவாக்கம்

"ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாமன்யாம் ந மன்யாமஹே" என்கிறபடி பீதக வாடைப்பிரானே, ஞானக்கை கொடுத்து, சேதனர்கள் உஜ்ஜீவிப்பதற்காக ஆசார்ய ரூபத்தில் வருகின்ருன் என்ற க்ரமத்தில், நம் ஸ்வாமி தேசிகனும் "வேங்கடேசாவதாரோயம்" என்று திருவேங்கடமுடையானின் அம்சமாக அவதரித்தார்.

நம் ஸ்வாமி சிறு பிராயத்திலேயே பேரருளாளனுலும், "ப்ரதிஷ்டாபித வேதாந்த:" என்று நடாதூர் அம்மாள் கோஷ்டியிலும் அனுக்ரஹிக்கப் பட்டவராய், "மாதுலாத் ஸகலா: கலா:" என்று ஸகல சாஸ்திரங்களையும் அப்யஸித்து, ஸர்வ சாஸ்திர பாரங்கதராக பிரகாசிக்குமளவில், அழகிய மணவாளனுடைய ஸேனுபதியாழ்வானின் சாஸனத்தை சிரஸா மேற்கொண்டு திருவரங்கம் எழுந்தருளினுர். ஸன்னிதிக்கு எழுந்தருளி எம்பெருமானை, அமலனுதிபிரானில் திருப்பாதம் தொடங்கி ஆழ்வார் அனுபவித்தாற் போல், நம் ஸ்வாமியும் அரங்கனின் திருப்பாதம் தொடங்கி திவ்ய ஸௌந்தர்யாதிகளை அனுபவித்து மங்களாசாஸனம் செய்தருளினுர்.

அங்கு வந்த ப்ரதித்வந்த்வியுடன் வாதம் செய்து, நிரஸனம் பண்ணி, அவனை ஜெயித்த வாதங்களை எல்லாம் எழுதுவிப்பித்து, அதை ஒரு பிரபந்தமாகத் தலைகட்டி, அதற்கு "சததூஷணீ" என்ற திருநாமம் சாத்தியருளினுர்.

லக்ஷ்மீகாந்தனை ஸர்வேச்வரன் 'பரதத்தவம்' என்று, நிலை நிறுத்தினதால், பெரிய பெருமாள் போரவுகந்து, "உபயவேதாந்தங்களையும் ப்ரசாரம் பண்ணிக்கொண்டு அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ" என்று நியமிக்க, ஸ்வாமி அங்கே எழுந்தருளியிருந்தார்.

ஒருநாள் இரவில் ஸ்வாமியின் ஸ்வப்னத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் எழுந்தருளி, தம் திருவடியை இவர் திருமுடியில் வைத்து "நீர் நம்முடைய ஸ்ரீ பாஷ்யத்தை உலகெங்கும் ப்ரவர்த்திப் பித்துக் கொண்டும், பரமத நிரஸனம் பண்ணி நம் தர்சனத்தை ஸ்தாபித்துக் கொண்டும், அதற்காக அநேக கிரந்தங்களைப் பண்ணி நம்முடைய விசிஷ்டாத்வைத தர்ஸனத்தை நிலை நிறுத்தும்" என்று ஆசீர்வதித்தார்.

ஸ்ரீ பாஷ்யகாரரின் நியமனப்படி ஸம்ப்ரதாயப்ரசாரம் பண்ணி வருங்காலத்தில், ஒரு நாள் அழகிய மணவாளன் ஸன்னிதியில் ஸ்ரீ பாஷ்யத்தை உபன்யஸித்த பொழுது, ஸ்வாமியின் வ்யாக்யான நைபுண்யத்தைக் கண்டு, திருவரங்கநாதன் போரவுகந்து இவருக்கு "வேதாந்தாசார்ய:" என்ற திருநாமத்தை பிரஸாதித்தருளினுர்.

தாமும் ஒரு பிருது இவருக்குக் கொடுக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றின நாச்சியாரும் "ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர" என்ற திருநாமத்தையிட்டு அனுக்ரஹித்தார் என்பது ஸுப்ரஸித்தம். இதை "ஸ்ரீரங்கராஜ திவ்யாக்ஞா லப்த வேதாந்தாசார்யபத:" என்று ஸ்வாமியே ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸாதித்திருக்கிருர்.

ஒரு சமயத்தில் பேரருளாளனின் பிரும்மோத்ஸவத்தில், விரோதிகளால் உத்ஸவத்திற்குத் தடை ஏற்பட்டதாகவும், திருவரங்கத்திலிருந்து ஸ்வாமி எழுந்தருளி, பரதத்வ நிர்ணயம் பண்ணி, மேலே உத்ஸவத்தை நடத்தி வைத்தமைக்காகப் பேரருளாளன் போரவுகந்து, கருட வாஹனனுய் எழுந்தருளி நம் ஸ்வாமிக்கு ஸகல மரியாதைகளையும் செய்வித்ததாகவும் கூறப்படுகிறது. இன்றும் அம்முறை நடந்து வருவது எல்லோருமறிந்ததே.

ஞான வைராக்யானுஷ்டான சேவதியான நம் ஸ்வாமியின் வியாக்யானத் திறமையையும், பெருமையும் கண்டு பலர் ஸ்வாமியின் திருவடியில் வந்து ஆச்ரயித்தார்கள். "ஸ்ரீமான் வேங்கட நாதார்ய: சிரம் விஜயதாம் புவி".

ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்
(கார்த்திகை பூராடம்)

ஸ்ரீமச்சீரங்கப்ருத்வீச்வரசடரிபுஞ்ஸம்யமீந்த்ரேண த்ருஷ்டம்
ந்யஸ்தாத்மானம் ந்ருஸிம்ஹே நரஹரிசடஜித் யோகினேது: ப்ரஸாதாத்
ப்ராஜ்ஞஸ்ரீரங்ககாரி ப்ரபவயதிபதே: ப்ராப்தலக்ஷ்மீ ந்ருஸிம்ஹா–
ஸ்தானம் ஸேவே யதீந்த்ரம் ஸகலகுண நிதிம் வீரரக்வீட்சடாரீம் ||

திருமலைமால் திருமணியாய் சிறக்க வந்தவன் சிறப்பு

[வாழ்த்து [

தொகுத்தவர் :
ஸ்ரீ உ.வே.புலவனூர் S. பார்த்தசாரதி அய்யங்கார் ஸ்வாமி சென்னை

ராமாநுஜ தயா பாத்திரமே வாழி !
ஞான வைராக்ய பூஷணமே வாழி !
ஸ்ரீமத் வேங்கட நாதனே வாழி !
வேதாந்த தேசிகனே வாழி !
சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையானே வாழி !
பாரோர்க்குப் பழமொழிகளை பணித்தவனே வாழி !
வானேறப் போமளவும் வாழ்வு தருமவனே வாழி !
ஞானப் பெருந்தகவே வாழி !
திருமால் அடிகாட்டியதேசிகனே வாழி !
மும்மூன்றும் சித்தம் உணரத் தெளிவித்தவனே வாழி !
இதம் ஏற்கும் திக்கை தெரிவித்தவனே வாழி !
உலகளந்தானையே உகந்தவனே வாழி !
கையில் வளைபோல் வாக்குடைய ஆசாரியனே வாழி !
அலை அற்ற ஆர் அமுதக் கடலே வாழி !
கடலுண்ட முகிலே வாழி !
விலையற்ற நல்மணியே வாழி !
வெயில் நிலவு ஓங்கு பகலே வாழி !
துலை அற்றவனே வாழி !
முத்தி தருவோனே வாழி !
சீலமறிவார் சீலனே வாழி !
தத்துவங்களெல்லாம் தகவால் அறிவித்தவனே வாழி !
முத்தி வழி தந்தவனே வாழி !
ஆரா அமுதமே வாழி !
சித்தும் அசித்தும் தெய்வமும் அறிவித்தவனே வாழி !

இருநாலு எழுத்தின் இதயங்கள் ஓதியவனே வாழி !
எண் குணத்தோனே வாழி !
உலகத்தவர் உகக்க உபதேசித்தவனே வாழி !
கருணைக் கடலே வாழி !
நல் அடிமைக்கு ஏற்குமாறு நவின்றவனே வாழி !
கூர் அணிசீர் மதியுடைய குருவே வாழி !
குறிப்புடன் யாம் காணும் வகை கூறியவனே வாழி !
அமலன் படியெல்லாம் உள்ளத்தே எழுதியவனே வாழி !
தொல் வழியே நல்வழி என்று அறிவித்தவனே வாழி !
தாராபதி அனையார் தாராபதியே வாழி !
திருவரங்கர் அன்பனே வாழி !
அடியவராய் அடிசூடிய அன்பனே வாழி !
இன்பந் தொகை உரைத்தவனே வாழி !
ஆர் உயிர் காக்கும் அமுதே வாழி !
அறியும் சுடராகி நின்றவனே வாழி !
மற்றும் ஓர் பற்று இல்லாது எமை ஆக்கியோனே வாழி !
அவன் தன் சரணே சரண் என எம்மை அடைவித்தவனே வாழி !
அடிமைப் பணிபூண்ட மனத்தோனே வாழி !
சீலங் கவர்ந்தவனே வாழி !
தேசிகர் தேசிகனே வாழி !
துரிதங்கள் மாய்த்தவனே வாழி !
துஞ்சல் தரும் கோலம் கழித்தவனே வாழி !
கோரிய காலம் குறித்திடுவோனே வாழி !
வேலை வண்ணனிடம் மேவுவோனே வாழி !
வண்மை உகந்த அருளே வாழி !
வரம் தரும் மாதவனே வாழி !
உண்மை உணர்த்துவனே வாழி !
உணர்ந்தவர் உரை வழியை உபதேசித்தவனே வாழி !
திணி இருள் நீக்கியவனே வாழி !
தண்மை கழித்திடுமவனே வாழி !
தத்துவம் தெரிவித்தவனே வாழி !
நாராயணன் பரன் நாம் அவனுக்கு நிலையடியோமென்றவனே வாழி !
சுருதிகளால் எம்மை திருத்தியோனே வாழி !
திறம்பாத் தெளிவு தந்தோனே வாழி !

திண்மை தரும் தெளிவே வாழி !
சீரார் பெருந்தகையோனே வாழி !
தீரார் மயல் அகற்றுவோனே வாழி !
ஒன்றே புகல் என்று உணர்த்தியவனே வாழி !
அத்திகிரித் திருமால் அருளுடைத்தோனே வாழி !
அருளால் அடைக்கலம் கொள்பவனே வாழி !
இன்றே இசையின் இணையடி சேர்ப்போனே வாழி !
இனிப் பிறவா வாய்ப்பு தர வல்லோனே வாழி !
நன்றே வருவது எல்லாம் என நவின்றவனே வாழி !
நமக்குப் பரம் ஒன்று இலதென தெரிவித்தவனே வாழி !
சிறு பயனில் படியாத தகவோனே வாழி !
எம்மை சேர்க்க அடைக்கலம் கொள்பவனே வாழி !
மறு பிறவி அறுத்து அழியாவானில் வைக்க வல்லோனே வாழி !
எமக்கு உறுவது உரைத்தோனே வாழி !
இங்கு இருக்கும் காலம் ஒரு பிழையும் புகுதாத உணர்த்தி உணர்த்தியோனே வாழி !
பெறுவது எல்லாம் இங்கே யாம் பெற்றுவாழ வழிகாட்டியோனே வாழி !
பேரடிமையால் ஏது என்று இகழாதிருக்க சொல்லித் தந்தோனே வாழி !
சாக்கியர் சைனர்கள் சார்வாகர் சாங்கியர் சைவர் தாக்கியர் நூல்கள் சிதைத்தோனே வாழி !
தனிமறையின் கருத்தை வாக்கியம் முப்பதினுல் வகைசெய்து வியாகரித்தோனே வாழி !
தாய்போல் இரங்கும் தனித் தகவுடையோய் வாழி !
உள்ளத்து உறைகின்ற உத்தமன் தண்மை உணர்ந்து உரைத்தோனே வாழி !
முள் ஒத்த வாதியரை வென்றோனே வாழி !
மறம் செய்யேல் என்றவனே வாழி !
தாதை உரைத்த மெய்யே அரும் பொருள் என்றோனே வாழி !
மெய் அரும் பொருள் சூடிய வெண்மதியே வாழி !
பொய்யே பகைவனுகுமென்று அறிவித்தோனே வாழி !
ஐ இரண்டு ஒன்று புலன் பெருங் கருவியெனக் கருதியவனே வாழி !
கைஏறு சக்கரக்காவலன் காவல் அடைந்தவர் அடைவே வாழி !
அடியோம் பந்தமெல்லாம் அறுத்தோனே வாழி !
அருள் தந்து உகந்து பரவும் பொருள்கள் மொழிந்தோனே வாழி !
பல்வினையில் உழல்கின்றவரை உய்விப்பவனே வாழி !

நாரணர் பதம் பெறச் செய்பவனே வாழி!
வானவரை ஒத்தவனே வாழி!
சுருதி சொல் வினை ஓர்ந்தவனே வாழி!
பத்தர் முக்தர் நித்ய சூரிகளும் சீவர் என விளக்கி காட்டியவனே வாழி!
வினை கடியும் நல் வழி நவின்றவனே வாழி!
பத்தி விலக்கிய பாசண்டர் பாசமிலாதவனே வாழி!
எத்திசையும் தொழுது ஏத்தும் கீர்த்தியுடையோனே வாழி!
அனைத்தும் அறிந்தவனே வாழி!
மாதவனர் மனத்துக்கு இனியோனே வாழி!
நீதி நெறி வழுவாது நின்றவனே வாழி!
பேராயிரமும் திருவும் பிரியாத பேரருளாளன் அருள் பெற்றவனே வாழி!
உயிர்தரும் மந்திரம் ஒருநாள் உரைத்தவனே வாழி!
வரும் நாள் பழுதற்று வாழும் வகை வகுத்தோனே வாழி!
மற்று ஒருபற்று இன்றி வந்தடைபவர் கதியே வாழி!
குற்றம் அறியாத கோவலனே வாழி!
ஒருகாலும் சோகியாத் துணிவு தந்தவனே வாழி!
சிட்டரான தேசுயர்ந்த தேசிகனே வாழி!
தெளியாத மறை நிலங்கள் தெளிவித்தவனே வாழி!
உத்தமமான புரட்டாசி திருவோணத்து வந்து உதித்தவனே வாழி!

தொண்டர் உகக்கும் நின் துணை அடிவாழி!
நின் தூ முறுவல் கொண்ட முகம் வாழி!
வியாக்கியா முத்திரைக் கை வாழி!
வண் திரு நாமமும் மணிவட முப்புரிநூல் வாழி!
சீரார்த் தூப்புற் குலமணியே வாழி நின்வடிவே.

ஆசார்ய ஸார்வபௌமர்

ஸ்ரீமதுபயவே, ந்யாயவேதாந்த வித்வான்
ஸ்ரீமுஷ்ணம், வங்கீபுரம்
ஸ்ரீ நிவாஸாச்சாரியார் ஸ்வாமி.—பம்பாய்.

ஸ்வாமி தேசிகன் யதிராஜ ஸப்ததியில் யதிராஜேந நிபத்த நாயகஸ்ரீ: என்று ஸ்ரீபாஷ்யகாரரை நம் ஆசார்ய பரம்பரையாகிற மாலைக்கு நடுநாயகமாகத் திருவுள்ளம் பற்றி அனுக்ரஹித்திருக்கிறார். ஆனால் ஸ்வாமி தேசிகனுக்குப்பின் இதுகாறும் வளர்ந்து வந்துள்ள பல பிரிவுகளினாலும் நம் ஆசாரிய பரம்பரைக்கு ஸ்ரீ தேசிகனே நடு நாயகமாக விளங்குகிறார் என்பது பல பெரியோர்களின் திருவுள்ளம். இக்கருத்தை அனுஸரித்து ''நிகமாந்தார்ய நிபத்த நாயகஸ்ரீ:'' என்று நாம் இனி அனுஸந்தித்தால் அதில் தவறு யாதுமிராது.

இந்த நாயகத்வம் ஆசார்ய ஸார்வ பௌமத்வத்திலேயே பர்யவஸிக்கும். இதற்குப் பல பல காரணங்கள் உண்டு. ஆசார்யர்கள் பலவகை. உபதேச மாத்திரத்தில் இருந்தவர் பலர்—அதாவது நேரிலோ க்ரந்த முகத்தாலோ உபதேசித்தவர்கள். நம்மாழ்வார் முதலியவர்கள் இவ்வகையில் சேருவர். நேரிலும் க்ரந்த முகத்தாலும் உபதேசித்தவர் மற்றும் சிலர். அவராவர்—நாதமுனிகள், ஆளவந்தார், உடையவர் முதலியவர்கள்.

வாத க்ரந்தங்களால் ஸித்தாந்தஸ்தாபனம் செய்த பெருமை மற்றும் சிலருக்கு உண்டு. இதில் தலையாயவர் ஸ்ரீபாஷ்யகாரரும் ஸ்வாமி தேசிகனும். ப்ரபன்னர்களுக்கு உத்தரக்ருத்யம் என்ன வென்று சிலர் கேட்டபோது ''ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்தித்தல்'' என்று உடையவர் மிகவும் உயர்ந்த கைங்கர்யமாக ஸாதித்தருளினார்.

அப்படிப்பட்ட ஸ்ரீ பாஷ்யத்தை முப்பது தடவை காலக்ஷேபம் ஸாதித்த பெருமை நம் ஸ்வாமிக்கே உண்டு. அதுவும் ஸங்கல்ப ஸூர்யோதயம் எழுதிய காலத்திற்குள். அதற்குப் பிந்திய காலத்தில் இன்னும் அதிகமாயிருக்கும் காலக்ஷேபம் ஸாதித்த எண்ணிக்கை.

கீழே சொன்ன க்ரந்த நிர்மாணம், ப்ரவசனம் என்கிற இரண்டு காரணம் மட்டுமின்றி நம் ஆசாரியர்கள் அனைவர்க்குமே அனுஷ்டானம் வைராக்யம் என்கிற இரண்டு அம்சங்கள் ஏற்றம் தருவன.

இத்தனையும் இருந்த போதிலும், ஆத்ம குண பூர்த்தியில்லாவிடில் மணிநா பூஷிதஸ் ஸர்ப என்கிற கணக்கில் அவர்கள் த்யாஜ்யர்களாகவே பேசப்படுகிறார்கள். க்ஞானானுஷ்ட்டானங்களைக் காட்டிலும் ஆத்மகுண பூர்த்தியின் பெருமையை மஹரிஷி கௌதமர் பேசுகிறார். ''யஸ்யைதே சத்வாரிம்சத் ஸம்ஸ்காரா: ந அஷ்டௌ ஆத்மகுணா:, ந ஸ ப்ரம்ஹண: ஸாயுஜ்யம் ஸாலோக்யம் ச கச்சதி'' என்று. ஆக ஆத்ம குண பூர்த்தியே ஆசார்யர்களுக்கு ஏற்றம் தருவதாகிறது. அவற்றுள் ஸத்வகுண பூர்த்தியே தலையாயது. இந்த ஸத்வபூர்த்தி நம் ஸ்வாமியிடம் கடலெனக் குடி கொண்டிருந்தது. எத்தனையோ நிகழ்ச்சிகளை உதாஹரணம் காட்டலாம்.

ஸ்வாமியின் பெருமையைப் பேசும் குமார நயினாராசாரியர் ஸாதித்த க்ரந்தத்தில், ஸபா புஜங்கீ என்று கூறப்பட்டுள்ளது. அதாவது ஸ்வாமி ஸபைகளைக் கண்டு ஸர்ப்பத்தைக் கண்டாற்போலே அஞ்சுவராம். ஏன்? ஸபைக் கோழையா! இல்லை. அத்யாஸீன துரங்கவக்த்ர விலஸத்ஜிஹ்வாக்ர ஸிம்ஹாஸனர் அப்படி ஒரு போதும் இரார். மற்றும் பாஷண்டிகளானாலும், விமதர்களானாலும் அவரை வாதத்தில் வென்றால் அவர்கள் வெட்கித்து குனிவர். அவர்கள் மனம் புண்படும். எல்லோரும் எம்பெருமானுடைய சொத்து என்கிற ஸ்வநிஷ்ட்டாபிக்ஞானம் உள்ளவர் யார் மனமும் நோகச் செய்யாரன்றோ! ''ஸ்வநிஷ்ட்டாபிக்ஞானம் ஸூபகமபவர்காதுபநதாத்'' என்றன்றோ அச் செம்மலின் திருவாக்கு. ஆதலால் அவர்கள் ஸித்தாந்தத்தை க்ரந்தமுகேந அடித்து அழித்து சிலாசாஸனம் செய்தார். இக்காரணம் பற்றியே இவருக்கு ஸபா ஸர்ப்பமாயிற்று.

இப்படியெல்லாம் எம்பெருமானின் விபூதி என்கிற எண்ணத்தில் ப்ரதிவாதிகளையும் ஜெயிக்க விரும்பாத நம் ஸ்வாமி தேசிகனே ஸாத்விகாக்ரேஸரர்-ஆசார்ய ஸார்வபௌமர்.

நமோ வேதவதம் ஸார்யகுரவே
குரஸிந்தவே.
யேந ஸா குருமாலா ந: நாயகேந
விராஜதே

வட இந்தியாவில் தேசிக ஸேவை

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
வி. எஸ். ரங்கநாதாச்சாரியார், M.A., M.OL.,
அலஹாபாத்

ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனின் புகழ் உலகம் முழுவதும் பரந்துள்ளது. நமது தேசமாகிய இந்தியாவைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. ஒருவர் மக்களுக்குச் செய்த உபகாரத்தை நினைத்து, அவர்பால் தம் நன்றியைத் தெரிவித்தலே 'புகழ் பாடுவதெ'ன்பதாம். இப் புகழ்பாடுவது பல வகைகளிற் செய்யப்பெறும். அப்பெரியாருக்குச் சிலையெடுத்து, அதனை ஒரு கோயிலிற் பிரதிட்டை செய்து, நாடோறும் முறையான பூசை செய்து வழிபட்டு வருதல் ஒரு வகை. அவ்வாசிரியப் பெருந்தகை அருளிய நூற்களை நன்கு கற்று, உண்மைப் பொருளைத் தெளிந்து, அஞ்ஞானம் நீங்கப்பெறுதல் மற்றொரு வகை. தாம் கற்றுத் தெளிந்த உண்மைகளை மிகுதியும் கல்லாத மாந்தர்க்கு எளிய முறையில் எடுத்துக்கூறி அவர்களை நன்னெறியுய்த்தல் பிறிதொரு வகையாம்.

நம் தேசிகப்பிரானின் புகழ் மேற்கூறிய மூன்று வகைகளிலும் பாடப்பெறுகிறது. நம் நாட்டில் திருமால் கோயில் கொண்டுள்ள இடங்களிலெல்லாம் பெரும்பாலும் வெங்கடநாதனுக்கொரு சந்நிதியையும், அங்கு நாடோறும் அவருக்குப் பூசனை நடப்பதையும் காணலாம். இது அதனைக் கண்ணுறும் மக்கள் மனதில் வேதாந்தவாசிரியரைப் பற்றிய நினைவை யுண்டாக்கி அதனை நிலைபெறுத்துகிறது. இரண்டாம் வகைப் புகழ் பாடுதல் சிலருக்கே இயல்வதாம். ஓரளவு மொழிப் பயிற்சியும் சாத்திர அறிவும் பெற்றோரே இதனைச் செய்தல் கூடும். மூன்றாம் வகைப் பணி புரிவோர் இவரினும் குறைந்த எண்ணிக்கையினரே. ஏனெனின் இப் பணிக்குச் சாத்திர அறிவு நன்கு பெற்றிருத்தலுடன், தாம் அறிந்த உண்மைகளைச் சாதாரண மக்கள் தெளிவாக அறியுமாறு எளிய இனிய நடையில் எடுத்துக் கூறும் தகுதியும் வேண்டும். இவ்விரு வகைப் பணிகளையும் செவ்வனே ஆற்றிவரும் அறிவினால் மூத்தோர் சிலரை நம் நாட்டில் காணலாம்.

நம் ஆசிரியப்பிரான் தம் பிறப்பினால் புனிதம் பெற்ற நாடு தென்னாடு. ஆசிரியப் பெருந்தகைகளின் அருள் நோக்குப் பெற்றுப் பல்வகையாயின சாத்திரங்களில் ஆழ்ந்த தேர்ச்சியடைந்து, 'நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பெரு நோக்குடன் வேதாந்த உண்மைகளைத் தகுதிபெற்ற பலருக்கும் நம் வள்ளல் வாரி வழங்கியது தமிழ் நாட்டில். திருமகள் கேள்வனின் திருவருள் பெற்றுத் தத்துவப் பொருட்களை நூலுருவத்தில் வடித்துக் கொடுத்தும் நம் தேன்றமிழ் நாட்டிலாம்.

ஆயினும் நம் ஆசிரிய வள்ளல் வழங்கிய உண்மைகள் தமிழ் நாட்டினருக்கு மட்டுமல்ல, இந்நிலவுலகில் வாழும் உயிர்களனைத்துக்கும் நலம் பயப்பனவாம்; அவற்றை நன்னெறியுய்ப்பனவாம். ஆதலின் ஆசிரியரின் காலத்தில் வாழும் பேறு பெறாத, அவர்தம் அமுத வாக்குகளைச் செவிமடுக்கும் புண்ணியமியற்றாத நம் போலியரையும், நற்கதி நண்ணுவிக்கக் கருதியே நம் அருள் வள்ளல் நூற்றுக்கும் மேற்பட்ட நூற்களை யருளிச் செய்தார். இந்நூற்கள் வட மொழியிலும் தமிழ் மொழியிலும் ஆக்கப்பட்டிருப்பது உலமறிந்தது.

நம் தேசிகன் வாழ்ந்தது தமிழ்நாடு என்ற காரணத்தாலோ, அவர்தம் நூற்களிற் சில,

சிலவாயினும் இன்றியமையாதுயிர்களாலறியப்பட வேண்டியவை தமிழ் மொழியிலெழுதப்பட்டுள்ள காரணத்தாலோ, தென்னுட்டிற் போல வட நாட்டில் அவற்றுக்கு மிகுதியும் பிரசாரமில்லை. இக்குறையை நீக்குவான் புகுந்தனர் சில பெரியோர்.

இத்துறையில் உத்தர அஹோபிலமடம் என்று புகழ்பெற்ற ஒரு மடம் தேசிகன் இயற்றிய தோத்திரங்களின் தொகுப்பை அச்சிட்டு வெளியிட்டுத் தன் புகழை வளர்த்துக் கொண்டது. அண்மையில் பரமபதமடைந்த கூத்தப்பாக்கம் நீலமேகாச்சாரிய ஸ்வாமி ஐந்து தேசிக க்ரந்தங்களுக்கு ஹிந்தி விரிவுரை எழுதி வெளியிட்டு ஆஸ்திகர்களுக்குப் பேருதவி புரிந்தார். இந்த ஸ்வாமி தேசிகரின் நூல்கள் பற்றிச் செய்துள்ள ஹிந்தி சொற்பொழிவுகள் கணக்கிலடங்கா. இவ்வாறே பரேலியில் ஆசார்ய பீடாதிபராக எழுந்தருளியிருந்த ஸ்ரீ ராகவாச்சாரிய ஸ்வாமியும் தம் ஹிந்திச் சொற்பொழிவுகளாலும், சிறு ஹிந்தி வெளியீடுகளாலும் செய்த தேசிக ஸேவை மிகச் சிறந்ததாம். இவற்றுக்கெல்லாம் வேண்டிய பொருளுதவியை கல்கத்தா சேட் மங்கனிராம் முதலியோர் செய்து வந்தனர். ஆஸ்திக உலகின் தவக் குறைவால் இவர்களனைவரும் இன்று இந்நிலவுலகிலில்லை.

தற்சமயம் வடநாட்டில் தேசிக ஸேவை செய்து வருவோருள் தலை சிறந்தவர் பதரிகாசிரமவாஸியான த்ரிதண்டி வேதாந்த ராமானுஜ ஸ்வாமி என்பாராவர். இவர் ஸ்ரீ கோழியாலம் ஸ்ரீஸ்வாமியிடம் சந்யாஸம் பெற்றவர். பற்றற்ற பரமபக்தர். மைஸூர் ஸ்ரீ பரகால மடாஸ்தானுதிபதியாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ அபிநவ ரங்கநாத மஹா தேசிகனின் திருவருளுக்குப் பாத்திரமானவர். இவருடைய முயற்சியால் 'ஸ்ரீ வேதாந்த தேசிக ஸேவா ஸங்கம்' என்ற பெயரில் ஒரு ஸங்கம் நிறுவப்பட்டது. சித்திரகூடத்தில் இச்சங்கத்தின் தலைமைக் காரியாலயம் அமைந்தது 1965ல் இச்சங்கம் உத்தரப் பிரதேச அரசினரால் பதிவு செய்யப்பெற்றது. பிறகு சில வசதிகளைக் கருதி இதன் காரியாலயம் பிரயாகையிள்ள த்ரிதண்டி மடத்துக்கு மாற்றப் பட்டது. இப்பொழுது அங்குதான் இது செயற்படுகிறது.

ஸ்ரீ தேசிகனின் எழுநூருவது ஆண்டு விழாவை முன்னிட்டு இச்சங்கம் ஸ்ரீ தேசிக ஸுதா என்ற ஹிந்தி மாதப் பத்திரிகையை நடத்துகிறது. மேலும் நிகமாந்த குருவின் நூற்களிற் சில பலவற்றை ஹிந்தி மொழி பெயர்ப்புடன் வெளியிடும் முயற்சியில் இறங்கியுள்ளது. இதுவரை இரண்டு மூன்று நூற்கள் வெளியிடப்பட்டுள்ளன. வட இந்தியாவில் முக்கியமான நகரங்கள் கிராமங்களனைத்திலும் கிளைகளை நிறுவி அவற்றின் மூலமாக ஸ்ரீ தேசிகனின் செய்தியைப் பரப்புவது இச் சங்கத்தின் குறிக்கோள்.

இச் சங்கத்தின் முயற்சியால் தேசிகனின் ரஹஸ்ய க்ரந்தங்கள் குறிப்புரையுடன் ஹிந்தியில் மொழி பெயர்க்கப்படுகின்றன. அண்மையில் வெளியாகும். அடுத்துப் பாதுகாஸஹஸ்ரத்தை ஹிந்தியில் மொழி பெயர்க்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

நம் ஆசிரிய வள்ளலின் திருவருளால் இப்பணிகளெல்லாம் நிறைவேறி மக்கள் நன்னெறி நடந்து நற்கதிபெற நாதன் கடைக்கணிப்பானுக.

ஸௌத்ரானுபத்த சகுனிக்ரமம்

ஸ்ரீ. உ. வே. சேட்லூர் க்ருஷ்ணமாச்சாரியார் ஸ்வாமி
ஆசிரியர் "புனர்வஸு"

இடம் வைனதேயவாரியின் கரை. வை கறை கூர்ந்த மந்தமாருதம். மொய்கொள் மாதவிச் செண்பகம் முல்லை முதலிய நாண் மலரின் நருமணம் கமழும் விலாசம். அளி குலத்தின் இன்னிசை முரலின் இதயக் களிப்பு. வேங்கு, கோங்கு, புன்னை முதலிய தருக்கள் நிறைந்த அமைதியளிக் கும் அத்புத தபோவனம். அநந்தன், பாரணங்கு, விஹகராஜன், விரிஞ்சன் முதலி யோர் தம் பாபமகற்றப் பெற்ற புண்ணிய தீர்த்தங்கள். நிமிர்ந்து நோக்கின் மதிதவழ் மால்வரை தேவர் தொழும் ஔஷதாத்ரி. கீழேயோ மலைவளத்து அகில் முதலியன கொண்டு சேல்கள் பறந்து பாயும் செழுநதி கருடவாரி. கண்கொள்ளாக் காக்ஷி. உடலுக்கு உகந்த நிலை. ஆன்மாவை அணுகும் அரும்பெரும் அமைதி. மையத்தில் நிற்கும் மாபெரும் வைத்த மாநிதி தேவாதி ராஜன், தாஸ ஸத்யன், அச்சுதன் உல குய்ய உயர்ந்து நின்று கம்பீரமாய் காக்ஷி யளிக்கிறுன். உய்பவர்க்கு உய்யும் இடம் இதினினும் வேறுண்டோ!

இங்கு தான், சிஷ்ய பரிவாரம் புடைசூழ நெடும் பயணம் கொண்டு புறப்படும் நல்லாசி ரியர் தோற்றமளிக்கிறுர். அவர் பெற்ற கல்விக்கும் கேள்விக்கும் விண்முழுதும் விலை யாகாது. நாற்றிசையும் புகழோங்கும் நல் லாசி பெற்ற நான்மறையாளன். ஆம் இவர் தான் வித்தகன். வேதியன், வேதாந்த தேசிகன். வயதிருபதிலேயே வேண்டிற் றெல்லாம் கற்ற வேங்கட நாதன். உபய வேதாந்த உயர்நிதி. புள் விஞ்ஜையின் புலமை பெற்ற புண்ணிய புருடன். துரக முகத்து இறையருள் பெற்ற தூயமாமுனி. தெய்வ நாயகனின் தெருள் அருள் பெற்ற திவ்யஞானம் கொண்ட திருமூர்த்தி.

இவ்வாசிரியருக்கு உலகை உன்னத மாக்க வேண்டுமென மிக்க அவா பிறந்தது. உலகுய்ய உத்தம உணர்வை உய்விக்க வேண்டுமென ஓர் பெரும் ஆற்றல் விண்ண வரையும், மண்ணவரையும் வைணவராக்க வீறு கொண்டெழுந்தார். தான் கற்ற கலை யின் நற்பயனை நாட்டார்க்கு நல்க நவில் கின்ற உள்ளத்துடன் அல்லக்ஷ்யத்தை செய லாக்க நாடு தோறும் செல்ல பயணமிட்டார். ஆழியான் ஒருவனே அழியாத் தெய்வம். அவனை அணுக ஆதிமறையின் அரும் பொருளைத் தெளிந்து தெரிவித்த மாமுனி இராமானுஜனிட்ட வழியே வழி - மற்றெல் லாம் அல்லல் வழி - அவன் இசைத்த ஒலியே மாக்களை மக்களாகச் செய்யும் மணி யோசை இருளகற்றி இட்ட அவன் ஒளியே ஆரணமளித்த தனி ஒளியாய் பெரு வீட ளிக்கும் பெருமை கொண்டது. பிறமதத்தை பின்னே தள்ளி, பேரவையில் பெருமானைப் பேசி கிழியறுத்த பெரும் பேரே அவன் அளிக்கும் பேர். இவையனைத்தையும் நாட்டாருக்கு நல்லுபதேசம் செய்து நற் பாலுக்கு உய்க்க வேண்டி வீடு துறந்து வெளிக் கிளம்புகிறுர். விட்டுப் பிரிய மன மில்லா, விண்ணிலும் சீரிய பணிபதிபுரியை பெயர்ந்து போக எண்ணி வெளிக் கிளம்பு கிறுர். பூசுரரும் தேவரும் போற்றி வணங் கும் பேரருளாளன் தேவர் நாதன், தேவாதி தேவன் அவன் தன்னையும், அவனிடம் தொண்டு பூண்டு வாழும் அவன் மகிமை யால் தேவரெனத் திகழும் அத்தொண்டர் குலத்தையும் தவிர்த்துச் செல்ல மனம் மறுக் கிறது. எனினும் மேதையின் மேன்மை, உலகத்துக்குணர்த்த தொண்டின் துரிதம், தகையற்று தலைவிரித்தாடும் பிறமதப் பெரு மையை ஒடுக்கத் துடிக்கும் உள்ளவா, இவைகளால் உந்தப்பட்டு வழி நடக்கிறுர்.

ஸ்ரீமத் பரமபரி ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் ஸ்வாமி (பௌண்டரீகபுரம்)
ஸ்ரீ நாராயண யோகீந்த்ர வரதார்யக்ருபாச்ரயம்
ரங்கேச பாதவிநதம் ஸ்ரீநிவாஸ முநிம் பஜே.
ஆடி-பூராடம்

தொண்டுக்கே கோலம் பூண்டு, நால்வர் ஐவர் சூழ, கைகூப்பி நிற்கும் கருடாழ்வாரை ஒரு புறத்தும், பரிமுகக் கடவுளை ஒருபுறத்தும் எடுத்து, தேவியர் எரிகுண்டம் ஏந்தி பின் தொடர, உகந்த சீடர் குருவின் கீர்த்தியை இயைக்க, அந்தி வேளையில் அணுகியது அக் கூட்டம் பெருகியோடும் பெண்ணையாற்றை.

சந்தி கடனைக் கழித்து இரைவனடி பணிய இசைந்தார் வேதவித்தாகிய வேங்கடநாதர். பரந்தோடும் உள்ளத்தை பலபடியாக ஒற்று மைபடுத்தப் பார்க்கிறார். கண்மூடி, புலன டங்கவும் இதய இருட்டில் ஓர் வெளிச்சம். அங்கு அகம் புகுந்து தித்தித்துத் திகழும் தெய்வம் தெய்வநாயகன். பசுபதி பூஜ்ய னை பணிபதிபுர தேவநாதன். தன்னிடத்தே கொண்ட அம்புருஹ்வவாஸினி ஆரணங்கின் மின்னொளி, இக்கோலம் கண்டு உள்ளெ லாமவிழ்ந்து உகப்பெய்தி உரையாடுகிறார். ''அஹீந்த்ர புராதி ராஜ! ப்ரஹ்மாசல மெனும் வேத வெற்பில் விளங்கும் விண்ண வர் பெருமானே! அடியேன் அவாக் கொண்டேன் உன்னை துதி செய்ய. அருள வேண்டும் அமராதிபதே!'' என்று கைகூப்பி மெய்சிலிர்த்து நிற்குமளவில் அச்சுதனை அருளாளப் பெருமாளும் ''உம்முடைய துதி பாடல்களை அனவரதமும் கேட்டு ஆநந்திப் பதே எமக்கும் தாமரையாளுக்கும் ஓர் தனிச் சிறப்பல்லவோ! ஏகும் வழில் நீரும் எவர் ஏவரையோ காணக்கூடும். அங்கங்கே ஈடுபட்டு அகன்று விடுவீர். எம்மையும் எம் மிலும் சீறிய பெரிய பிராட்டியார் ஹேமாப்ஜ நாயகியையும் மறுக்க நேர்ந்தாலும் நேரும்.'' என்று சொல்லுமளவிலேயே, புளகாங்கித ராய் கைகூப்பி விண்ணப்பிக்கிறார் நம் மறை முடி மகனீயர். ''ஸுரபதே! தேவேச்வர! நீரன்றோ கம்பீர பூர்ண மதுரமான கீர்ஷ்ம தடாகம். பற்றவை யெல்லாம் வ்யாமேஹித மரீசிகங்களன்றோ! ஸுபர்வநாத! வைமா நிகாதிபதே! என்னே இப்படி அடியேனை ஆட்கொள்வது! தேவாதி ராஜனே! உனக்கு உரைவிடமநேகமிருக்க பரஹ் மாசலமென புகழ்பெற்று வேங்கடம் கொள்ளும் வேத வெற்பையையே பஹுமான பதமாகக் கொண்டு எமக்காக பாம்பகத்தில மர்ந்தாயே! மற்றோர் தேவர்களும் தேவ தேவனென்றும், தேவாதி ராஜனென்றும் புகழுரையெல்லாம் பெருகின்றனர்! அஹி புரவாஸிகள் கொண்டொழுகும் அன்பின் அரும் பயத்தினுல் சிறப்பெய்தி, உன்னால், தேவராக்கப்பட்டவர்களன்றோ அவ்வூர்வாசி கள். அத்தேவருக்குத் தலைவனாய் நீ அமர்ந்த தாலன்றோ உன்னைத் தேவதேவனென சிறப் புற்றுக் கூறுகிறார்கள். தேவ பாவத்தை வெளிப்படுத்தும் அன்னார் வணங்கி அத் தேவரின் புகழ் கொண்டமையாலன்றோ நீயும் தேவனாதனாகிறாய். வெளியுலகே உன் மூர்த்தி பல பரப்பி ஆங்காங்கே ஆகாய தேவர் குழுமி வழிபடுவது அதிசயமன்று.

இங்கு உன் அருளால் மானிடர் தேவராய் திகழ்கின்றனர். அஹிபுரவாழ் அந்தண ரனைவரும் தேவாரகவல்லவோ திகழ்கின்ற னர். வைமானிகாதிப! அத்தேவர் வணங்கும் இரையாகிய நீயன்றோ தேவாதி தேவன், தேவப் பெருமாள்.

ஸ்வாதீன விச்வவிபவம்
பகவன் விசேஷாத்
த்வாம் தேவநாயகமுசந்தி
பராவக்ஞா: |
ப்ராய: ப்ரதர்சயிது மேதததிதி
ப்ரதீம:
த்வத்பக்தி பூஷிததியாமிஹ
தேவபாவம் ||

[''இத்தலத்தில் நின்று உன்னிடம் உள் ளத்தை ஈடுபடுத்தி மிக்க பக்தி கொண்டவர் கள் தேவர்களாகி விடுகின்றனர்'' — வங்கீ புரம் நவனீத ஸ்வாமியின் உரை]

ஸுரபதே! அத்தேவர்களை விட்டு விலகிக் செல்லவும் மனமில்லையே. நிர்ஜரபதே! புணிபுரத்திலமர்ந்து விளங்கும் பூசுரர்கள் போற்றும் புண்ணியம் பூத்து நிற்கும் ஸுபர்வ நாத! இனி நான் செல்லேன். அஹீந்த்ர புரத்தை விட்டு அகலேன். உன்னையனு பவித்த இக்கண்கள் வேறொன்றையும் காணா. உன்னைப் பூராவுமே காண திறமுடைமை பெறவில்லையே!

ப்ரத்யங்க பூர்ண
ஸூக்ஷமாஸூபகம் வபுஸ்தே
த்ருஷ்ட்வா த்ருசௌ
விபுதநாத ந த்ருப்யதோ மே

என்னை ஆட்கொண்ட உன்னை இனி விடேன். இறைப் பொழுதும் விடேன். இதோ திரும்புகிறேன். புறந்தொழா மாந்தர் போன்று பணிபுரபதி தேவதேவனே உனக்கே ஆட் செய்கிறேன். அதே அடியேன் முடிவு. என்னே உன் க்ருபை!'' என்று துவக்கிய பயணத்தை தேவன் உகக்கவில்லை என உணர்ந்து மேலே செல்லாது பூதேவர் வாழும் புனித புரிக்கே பின்னடி வைக்கிறார்.

''ஸ்வாமீ! ஸர்வக்ஞுனை தேவரீரும் ஊரெழுந்த பயணத்தை தொடக்கத்திலே மாற்றி ஊர் திரும்புகிறீரே! இதென்ன விந்தை! த்ருட சித்தமுள்ள தேவரீருக்கும் எடுத்த காரியத்தில் பிழையுண்டோ!'' என்று முதற் சீடன் வாய்பொத்தி தலைதாழ்ந்து விண்ணப்பிக்கவும் வீரகேசரியான வேந்தாவாரியரும் விளம்புகிறார். ''என்னே உரை செய்வது! விந்தையிலும் விந்தை! அடியேனை ஆட்கொண்ட அமரர் அதிபன், விபுதநாதன், விட்டு அகலாது, அடியேன் உள்ளத்தை உட்புகுந்து மாற்றிவிட்டான். அர்ச்சையிலும் ஓர் மாயம் கேளாய்! காட்டுக் கிளியை கையிலமர்த்தி பறக்க விடுகிறான் பறவையாளன். அது அவனுடைய கேளி விலாசம். கிளியும், ''கூடு துறந்தோம், ஆகாயமடைந்தோம், பறவி மனம் வந்தவாறு பறந்து செல்வோம்''என்று மனோரதித்து இரக்கை யடித்துக் கிளம்பியதும் அச்சிறு கிளிக்குச் சட்டெனத் தடை. பறந்து போகும் கிளியின் காலில் கட்டிய கயிறென்றால் அதை மறுபடியும் மெள்ள தன்னிடத்தே இழுத்துக் கொள்கிறான் தயாளனனை கிளியாளன். மறுபடியும் கைத்தலத்தே இழுக்கப் பட்டு பழமை நிலை எய்துகிறது அக்கிளி. அது போன்றே தேசொத்தாரில்லை எனத் திகழும் தன் வடிவழகைக் காட்டி அடியேனைத் திருப்பி அழைக்க வந்து தன் பிம்பா தரத்தையும், விகசமான பங்கச லோசனத்தையும், லலித குண்டலங்களையும் காட்டி மயல் செய்து என்னைத் திருப்பி அழைத்துக் கொள்கிறான். அடியேன் அவன் கை பொம்மையன்றோ!

ஸம்ரக்ஷணீய மமராதிபதே த்வயைவ
தூரம் ப்ரயாதமபி துஸ்த்யஜ
காடபந்தம் |
ஆக்ருஷ்டவானனு பவானனுகம்பமான:
ஸூத்ரானுபத்த சகுநிக்ரமத:
ஸ்வயம் மாம்||

'வாருங்கள். திரும்பிப் போகலாம். தேவாதி தேவன் திகழ்ந்திருக்கும் திருவஹீந்திரபுரமே தேவலோகம்! அங்குறையும் மானிடரும் தேவரே! அஹிபதிபுரமே அணிமா மண்டபம் கொண்ட அயோத்தி. அவன் வடிவழகு மறவாதார் பிறவாதாரே!'' என்று குதுாகலத்துடன் பணிபுரம் எய்தி தேவப் பெருமானையும் அடியவர்க்கு மெய்யனை வழி பட்டுயர்ந்த அஹிபுர தேவர்களையும் விடாது பலகாலம் வாழ்ந்து வந்தார் இப் பெரியார் என்பது சரித்திர வரலாறு.

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திரஸங்கள்

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
P. S. வேங்கடவரதாசார்யார் ஸ்வாமி,
ந்யாய சிரோமணி

''ஸம்ஸார மருகாந்தாரே'' ''ஸம்ஸார வாகுராந்தஸ்த : லூநபக்ஷ இவாண்டஜ: |

அபச்யன் நிர்கமோபாயம் ஆகாமிஷ்வபி ஜன்மஸு ||''

''வாஸநா ரேணு குண்டித :'' என்றும் மஹர்ஷிகள் நெஞ்சாரல் படும்படி ஆத்யாத்மிக-ஆதி பௌதிக-ஆதிதைவிக துக்கங்களை யனுபவித்துக் கொண்டிருக்கும் ஜீவர்களுக்கு ''ஈச்வரஸ்ய ச ஸௌஹார்தம்...... ஆசார்ய ப்ராப்தி ஹேதவ :'' என்றபடி ஆசார்ய ஸமாச்ரயணமே ப்ரதானமாகிறது. இப்படி ஆசார்ய பரம்பரையில் உத்தமோத்தமராயும், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரராயும் உபயவேதாந்தாசார்யராயும் உள்ள ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் ப்ரதானமாவார். ஸ்வாமி தேசிகனின் எழுநூருவது ஸம்வத்ஸரபூர்த்தி மஹோத்ஸவத்தை வெகுவிமர்சையாகக் கொண்டாடுவது மிகவும் ப்ராப்தமாகும். ஆசார்யோத்தமனின் ஸ்மரணம் ''ஸம்பாஷ்ய புண்ய க்ருதோ மனஸா த்யாயேத்'' என்னும்படி பாவனதமமாகவும், மறக்க வேண்டியதில் ப்ரதானமான ஆத்மோத்கர்ஷ பரநிகர்ஷம் போல் நினைக்க வேண்டியதில் ப்ரதானம் ஆசார்யக்ருத உபகாரம் என்றபடி க்ருதஜ்ஞதாவிஷ்கரண ரூபமாகவும் ''குரும் ப்ரகாசயேத் தீமான்'' என்றபடி பலப்ரதமாகவும் ஆகிறது. ''நிவாஸசய்யாஸந'' சென்ருல் குடையாம் இருந்தால் சிங்காசநமாம்'' என்கிறபடி ஸர்வகால ஸர்வதேச ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யங்களையும் செய்யும் ஸ்ரீ அநந்தாழ்வானுக்கு சேஷனென்று திருநாமம் ஸ்வரூப நிரூபகமாக திகழ்ந்தாப் போல் இவ்வேதாந்தாசார்யருக்கும் ஆசார்யோபயுக்தகுணபௌஷ்கல்யத்தால் ஸ்வரூப நிரூபகமாக தேசிகனென்றே திருநாமம் ப்ரசித்தமாயிற்று.

இவ்வாசார்யோத்தமன் இந்த ஸம்ப்ரதாயத்திற்கு ''பூயா : த்ரைவித்யமான்யஸ் த்வம்'' என்று ப்ராசார்யனிடம் அனுக்ரஹம் பெற்றபடி, உபயவேதாந்த க்ரந்த ப்ரவசன முகமாகவும், உபயவேதாந்த க்ரந்த நிர்மாண முகமாகவும் மிகவும் உபகரித்துள்ளார்.

ஒரு வஸ்துவை உண்டென்று ஸாதிக்கவோ பிறருக்கு ஒரு விஷயத்தை ஸுலபமாகத் தெரிவிக்கவோ சாஸ்த்ரஜ்ஞரும் லோகஜ்ஞரும் த்ருஷ்டாந்தத்தையே உபயோகப்படுத்துவார்கள். ச்ருதிகளும் கூட ''தேவமிவாசார்யம் உபாஸீத'' யதோர்ணநாபி : ஸ்ருஜதே க்ருண்ஹதே ச'' உர்வாருகமிவ பந்தநாத்'' இது முதலான இடங்களில் உபமானத்தையே கைக் கொண்டிருக்கின்றன. ஸூத்ரகாரரும் ''உபஸம்ஹார தர்சநாத் நேதிசேத் ந க்ஷீரவத்ஹி'' யதாச தக்ஷோபயதா'' என்றபடி த்ருஷ்டாந்தத்தையே முக்யமாக அவலம்பித்திருக்கிருர். ப்ரபதன ஸாரார்த்தமான ஸ்ரீமத் ராமாயணத்திலும் ''ரமணீயம் ப்ரஸன்னும்பு ஸன்மனுஷ்யமநோ யதா'' இது முதலான அனேக இடங்களில் த்ருஷ்டாந்தத்தையே ப்ரதானமாக அருளிச் செய்தார். ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனும் தத்வோபாய பலன்களை யதாவத்தாயும் ஸுலபமாயும் தெரிந்து கொள்ள தான் அருளிச் செய்த க்ரந்தங்களிலிருந்து ஸாரதமாம்சத்தை எடுத்து தொகுத்து

தான் அனுக்ரஹிக்த ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரம் என்னும் க்ரந்தத்தில் முக்யமான அம் சங்கஃள ப்ரதி பாதிக்க உபமானத்தையே ஸ்வீகரித்திருக்கிருர்.

ஸ்ரீமந் நாராயணஃனயே பரதேவதை யாகக் கொண்டு அவனிடத்திலேயே ஸமர் பிதரர்களான பழுதற்ற பரமைகாந்திகள் நித்ய நைமித்திக கர்மாநுஷ்டான காலத்தில் தேவதாந்தரபூத இந்த்ராக்னி சப்த கடிதமான மந்த்ரங்கஃள உச்சரிப்பதும் அந்த தேவதை கஃள யுத்தேசித்து செய்யும் ப்ரணமம் த்ரவ்யத்யாகம் முதலியவைகள் செய்வது பாரமைகாந்த்யவிருத்தமன்ருே? என் கிற ஸந்தேஹத்தை அக்ரம் நயதீதி அக்னி: என்றும், இதி பரமைச்வர்யே என்கிற தாதுவி லிருந்து இந்த்ர: என்றும் அந்தந்த பதத்தின் அவயவார்த்தபளஷ் கல்யத்தை இட்டு அவய வ சக்தியி ஞ லேயே ''ஸாக்ஷாதப்ய விரோதம் ஜைமினி:'' என்று அந்தந்த பதமே நேராக ஸ்ரீமந் நாராயணஃனச் சொல் லும் என்று ஜைமினி மஹர்ஷி பரிஹரித்தார் என்று ஸூத்ரகாரர் அருளிச் செய்தார்.

''சக்ரஸ் ச நாராயண:'' ''ததேவாக்நி: தத்வாயு:'' ''யோ வாயள திஷ்டன்'' இது முதலான ச்ருதிகஃள யனுஸரித்து சரீராத்ம பாவத்தை இட்டு அக்னி சரீரக பரமாத்மா, இந்த்ர சரீரக பரமாத்மா வென்று நிர்வஹித்து ஸந்தேஹ நிவ்ருத்தி செய்யப்பட்டது. இவ் வர்த்தத்தையே ஸுலபமாக எல்லோரும் தெரிந்துக் கொள்ளும்படி ''ராஜஸேவகர் ராஜாவுக்குச் சட்டைமேல் மாஃலயையும் ஆபரணத்தையும் இட்டாலும் சட்டையில் துவக்கற்று ராஜாவின் ப்ரீதியே ப்ரயோஜன மாகத் தெளிந்திருக்குமாப் போலவும்'' என்று த்ருஷ்டாந்தத்தை க்ருதக்ருத்யாதிகா ரத்தில் அனுக்ரஹித்திருக்கிருர். ராஜாவின் வேஃலக்காரன் ராஜா அலங்காரமாக தரித்துக் கொண்டிருக்கும் சட்டைக்கு மேல் பூமாஃல யையும் ரத்னங்கள் இழைத்த வைரமாஃலயை யும் அரசஃன ஸந்தோஷப்படுத்த அரசனின் கழுத்தில் இடுகிருன். அரசன் சட்டை யணிந்திருந்தாலும் வேஃலக்காரன் சட்டை மேல், பூமாஃலயை இட்டாலும் வேஃலக்காரன் ராஜாவுக்கு ப்ரீதி வரவேண்டு மென்றே செய் கிருன். அப்படியே ராஜாவும் ப்ரீதனுகிருன். இது போல் அக்னயே நம: அக்நயே ஸ்வாஹா என்ற இது முதலான இடங்களில் ப்ரணமம் த்ரவ்ய நிக்ஷேபம் முதலானது செய்தாலும் மாஃல ஆபரணம் சட்டை மேல் இட்டாலும் சட்டையணிந்திருக்கும் ராஜா வுக்கு ப்ரீதி ஏற்படுவது போல் அக்னி முதலிய தேவதைகஃள சரீரமாகவுடைய பரமாத்மாவுக்கே நமஸ்காராதிகள் சேருகிற படியால் பாரமைகாந்தியத்திற்கு சிறிதும் குறைவில்ஃல என்றருளிச் செய்தார். இப்படி அக்ந்யாதி சப்தங்களுக்கு பரமாத்மா தான் வாச்யன் என்று தெளிந்து செய்வதற்கு த்ருஷ்டாந்தம் அப்படி அக்ன்யாதி சப்தங் களுக்கு அக்ன்யாதி தேவதைதான் வாச்யர் கள் அவர்களுக்கு தான் நமஸ்காராதிகள் என்று இவன் நிஃனத்துச் செய்தாலும் பரமாத் மாவை தான் சேரும் என்பதற்கு ஒரு த்ருஷ் டாந்தம் ''சார்வாகனுயிருப்பான் ஒரு ஸேவ கன் ராஜாவினுடம்பிலே சந்தனுதிகஃளப் ப்ரயோகிக்க ராஜ சரீரத்தில் ஆத்மா ப்ரீதனு மாப் போலே'' என்று பரதேவதா பாரமார்த் யாதிகாரத்தில் அளிக்கப்பட்டிருக்கிறது. சரீரமே, ஆத்மா, பிரமத்தால் சரீரத்திற்குள் ஆத்மா ஒன்று இருக்கிறது என்பதில்ஃல என்று இசையும் சார்வாக மதத்தை அவலம் பித்த ஒரு அரசனின் வேஃலக்காரன் அரச னின் சரீரத்தில் (மார்பில்) சந்தனம் பூசினுல் சரீரத்தை விட வேறுபட்டதாயும் சரீரத்திற் குள்ளும் இருக்கிற ஆத்மாவே வஸ்துகத்யா ப்ரீதமாகிறது. அதுபோல் அக்ன்யாதி தேவதையே உத்தேசித்து நமஸ்காராதிகள் செய்தாலும் அக்ன்யாத்யந்தர்யாமியான பர மாத்மாவே ப்ரீதனுகிருன். இவ் வர்த்தத்தை ஸ்ரீ கீதாசார்யன் கீதையில் தானே அருளிச் செய்தான். இப்படி பல த்ருஷ்டாந்தங்கள் ஸ்ரீ நிகமாந்தமஹா தேசிகன் அருளிச் செய் திருக்கிருர். ஸ்ரீ கீதாசார்யனும் ஸ்ரீ கீதையில் காமத்தை சத்ருவென்றும். ''ந ஜாது காம: காமாநாம் உபபோகேந சாம்யதி'' என்கிற படி எப்பொழுதும் விஷயானுபவத்திற்கே புருஷஃன இழுக்கும் என்றும், மஹாபாபத்தை செய்யவும் துணிவு கொடுக்கும், ஆகையால்

அதை விடவேண்டும் என்றும் அர்ஜுன னுக்கு உபதேசித்து விட்டு உலகத்தில் உள்ள ஜந்துக்கள் காமத்தால் வசீகரிக்கப் பட்டிருக்கின்றனவென்று மூன்று த்ருஷ்டாந் தங்களால் நிரூபிக்கிறார்.

தூமேநாவ்ரியதே வன்ஹிர்யதா
ஆதர்சோ மலேந ச |
யதோல்பேனாவ்ருதோ கர்ப:
ததா தேநேத மாவ்ருதம் ||

நெருப்பானது புகையினால் எப்படி சூழப் பட்டிருக்கிறதோ, கண்ணாடியானது அழுக்கி னால் எப்படி மறைக்கப்பட்டிருக்கிறதோ, கர்ப்பமானது (சிசு) ஒருவித உறுப்பினால் எப்படி வேஷ்டிதமாக இருக்கிறதோ அதைப் போல் இவ்வுலகிலுள்ள ஜந்துக்கள் ஆசை யினால் சூழப்பட்டிருக்கின்றன என்று இந்த ச்லோகத்தின் பொருள். இவ்விடத்தில் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் மூன்று த்ருஷ்டாந்தம் ஸாதிப்பதற்கு காரணம் தாத் பர்ய சந்த்ரிகையில் அனுக்ரஹிக்கிறார். நெருப்பானது புகையினால் சூழப்பட்டிருப்பது போல் என்கிறதால் நெருப்புக்குப் புகை ஸஹஜமாக இருப்பது போல் காமமானது வாஸனா ரூபமாகவும் தானானதன்மையிலும் ஜந்துவை விடாமலிருப்பதால் ஸஹஜமாகும் என்பதை தெரிவிக்க.

இரண்டாவது "யதாதர்சோ மலேந ச" என்கிற த்ருஷ்டாந்தம் கண்ணாடியில் அழுக்கை அவ்வப்போது துடைத்தாலும் மறுபடியும் அழுக்குச் சேர்ந்து கொண்டே இருக்கும் அதுபோல் ஆசையை முயற்சி செய்து நிரஸித்தாலும் விஷயஸம்பந்தம் முதலான காரணத்தால் மறுபடியும் வந்து கொண்டுதானிருக்கும் என்பதை தெரி விக்க.

மூன்றாவது "யதோல்பேநாவ்ருதோ கர்ப்ப: என்ற த்ருஷ்டாந்தம் உறுப்பினுடையவும் கர்ப்பத்தினுடையவும் பிறிவு எப்படி ஜீவனுடைய இச்சைக்கு அதீனமில்லையோ அப்படி காமத்தை விடுவது இவனுடைய அதீ னமன்று, ஸுலபஸாத்யமன்று என்பதைத் தெரிவிக்க என்று மூன்றுத்ருஷ்டாந்தம் சாதித் ததற்கு காரணம் அனுக்ரஹித்திருக்கிறார்.

கவிதார்கிக சிங்கமான ஸ்ரீவேதாந்த தேசி கன் பாதுகாஸஹஸ்ர மென்னும் காவ்யத் தில் "காவ்யேஷு கோமலதியோ வயமேவ் நான்யே" என்றுதான் அருளிச் செய்தபடி கவிதாசாதுர்யத்தால் ஒரு அழகான ச்லோகம் ஸாதித்திருக்கிறார். ஸ்ரீபாரதத்தில்

"ருத்ரம் ஸமாச்ரிதா தேவா :
ருத்ரோ ப்ரம்ஹாணமாச்ரித: |
ப்ரம்ஹா மாமாச்ரிதோ ராஜன்
நாஹம் கஞ்சிதுபாச்ரித:" ||

என்று ஒரு ச்லோகம் ஸ்ரீக்ருஷ்ணன் ஸாதி த்தது. தேவதைகள் ருத்ரனை ஆச்ரயித்திருக் கின்றனர். ருத்ரன் ப்ரஹ்மாவை ஆச்ரயித் திருக்கிறான். ப்ரம்ஹா என்னை ஆச்ரயித்திருக் கிறார். நான் யாரையும் ஆச்ரயிக்கவில்லை. என்பது இதன் அர்த்தம். யாரையும் ஆச்ரயிக் காத ப்ரபாவம் பாதுகைக்குதான் உள்ள தென்று பாதுகாஸஹஸ்ரத்தில்.

"ருத்ரம் ச்ரிதோதேவகண: ஸ ருத்ர:
பத்மாஸனம் ஸோऽபிச பத்மநாபம்
ஸ த்வாம் அநந்த: ந புநஸ்த்வமந்யம்
க ஏஷபாதாவநி தே ப்ரபாவ:" ||

என்று ப்ரதிபாதிக்கிறார். தேவதைகள், ருத்ரனை ஆச்ரயிக்கிறார்கள். ருத்ரன் ப்ரம்ஹாவை ஆச்ரயித்திருக்கிறான். ப்ரஹ்மா பத்மநாப னென்றும் எம்பெருமானை ஆச்ரயித்திருக்கிறார். அவர் உன்னை ஆச்ர யித்திருக்கிறார் நீ யாரையும் ஆச்ரயிக்க வில்லை. யாரையும் ஆச்ரயித்திருக்காமலிருக் கும் ப்ரபாவம் உனக்கே தான் என்று இந்த ச்லோகத்தின் பொருள். உலகத்திலுள்ளவர் களுக்கு வஸ்த்ரம் ஆஸநம் முதலிவைகள் அவரவர்கள் அனுபவத்திற்கே உரியது. பிறர் அனுபவிக்க சாஸ்த்ரம் இசையாதிருக்க, ஸர்வேச்வரனின் பாதுகைக்கு பிறரை ஆச்ரயிக்குந் தன்மை ஏன் ஏற்படப் போகிறது! ஒரு காலும் ஏற்படாது—

இதுபோல் மற்ருெரு ச்லோகம்.

உலகத்தில் உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்திற்கு இருபுறமும் இடி என்று ஒரு பழமொழி சொல்வதுண்டு. அதாவது—தான் ஒரு ச்ரமம் அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுது மற்ருெரு ச்ரமம் வந்தால் அப் பொழுது இந்த பழமொழி ஞாபகத்திற்கு வரும். இதையே குஸுமாஞ்சலிகாரர் ஸ்ரீ உதயநாசார்யர் ''ஸேயம் உபய ஸ்பாசா ரஜ்ஜு:'' என்று ஸாதித்தார். மஹாகவிகாளி தாஸனும் ',கண்டஸ்யோபரி பிடகா ஸம்வ் ருத்தா'' என்று சொன்னுன். ஆனுல் ஸ்ரீதேசி கன் பாதுகைக்கு இருபுறமும் ஸங்கடனம் (நெருங்கி யஸம்பந்தம்) ஏற்படுவது ச்ரேயஸ் கரம் என்று அநுக்ரஹிக்கிருர். ''மூர்த்ன ஸதாமதஸ்தாத் உபரிச விஷ்ணோ: பதேந ஸங்கடிதாம் அதவீயஸீம் விமுக்தே: பதவீம வயந்தி பாதுகே பவதீம். கீழ்ப்புறத்தில் ஸத் புருஷர்களான பரமபாகவதர்களின் சிரஸா லும், மேல்புறத்தில் ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளாலும் இடைவிடாது தரிக்கபட்ட பாதுகையே உன்னை நல்ல கதி மோக்ஷத் திற்கு கிட்டியவழியாக பெரியோர்கள் அறி கிருர்கள் என்று ச்லோகத்தின் அர்த்தம். மேலே எம்பெருமானின் திருவடி ஸம்பந்தம் கீழே பாகவதோத்தமர்களின் திருமுடி ஸம்பந்தம். இப்படி இருபுறமும் ஸங்கடனம் ச்ரேயஸ்கர மன்ரோ. இப்படி ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஸூக்திகளின் அனேக அழகான அம்சங்கள் இருக்கின்றன. யதாமதிவிஜ்ஞாபித்துக் கொண்டேன்.

"மாசிக்கடலாடி"

ஸ்ரீ. உ. வே. D. S. ராகவாச்சாரியார் ஸ்வாமி,
சென்னை.

கடல் கொந்தளிக்கிறது, அலைகள் சீறி எழுந்து சாடின; புயலெடுக்கும் சின்னங்கள், எங்கும்; எனினும் ஓர் சிறு பகுதியில் பூரண அமைதி; ஓசையில்லை, சலனமில்லை, சிறிது நேரம். காரணம்,—

"அடியவர்க்கு மெய்யன்" தெய்வநாயகன் மாசிக் கடலாடும் மகோத்ஸவம்! இயற்கையும் இறைவனுக்கு இசைந்து இயங்குமே!

எழுநூறு வருடங்கள் முன் - சரித்திரம்!

நெறி வழி, தருமமுறை கலியிலும் எழுந்தது பரமனின் அர்ச்சாவதாரம்; பின்னர் ஆழ்வார்கள், ஆசார்யர்கள்; முடி அடையாமல் எப்பொழுதும் என்றும் இவ்வுயர் பாதையில் மக்களை உய்விக்க வைக்க ஒப்பற்ற ஓர் பரமாசார்யன் தோன்றி செயல் புரியும் சூழ்நிலை அமைந்தவாறு:-

திருவனந்தாழ்வான், பூமிப் பிராட்டி, பெரிய திருவடி, நான் மறையின் ஸாந்நித்யம் பரிமுகவடிவில் * ஒரு புரம் மலை, மறு புரம் நதி, நடுவில் க்ஷேத்ரம், இறைவன் இசைந்து இன்றும் இயங்கி இன்னருள் புரியும் திவ்யதேசம்! "தேசு ஒத்தார் இல்லை" எனும்படி மன்மதன் அழகில் தனக்கும் தெய்வ நாயகனுக்கும் உள்ள தாரதம்மியத்தைக் கண்டு தோற்று தொழப்பெற்ற அடியவர்க்கு மெய்யன் மாசிக்கடலாடி வரும் வைபவத்தைக் கண்டு மகிழாதார் மண்ணுவாரே என பாடல் படப்போகும் மாசிமகத் திருநாள் அன்று!

எழுநூறு வருடங்கள்முன், வாணுடுவல்லான் கொப்பேறு மலையில் (சேப்பர்மலை) பாசறை, சோழ மன்னன் உதவிக்காக மைசூரின்று ஹாய்சால படை விரைகின்றது * சோழப் படை அயிந்தைநகர் அருகில் குமரத் தோட்டத்தில் காத்து நிற்கிறது அயிந்தை நகர் அமலனுதிபிரான் கடலாடும் இடத்தைக் கைப்பற்றி துறைமுகம் நாட்ட தீர்மானம் விட்டமைசூர் படையினர் அத் தலத்தைத் தாமே கைப்பற்றி ஹாய்சாலா அரசுக்கு துறைமுகமமைக்க திட்டமிட்டிருந்தனர். இருபடையும் பேட்டை எனும் தளவாடத்தில் தீவிரமாகப் பொருதலாயினர்.

அற்று மாசிமகம்! பல்லக்கில் பறந்துவரும் பரமன் தெய்வநாயகன் முன் கால் நடையில் அணிவகுத்து முதல் வருகிருன் வாணுட்டு மன்னன்! என்ன இது ? கொப் பெருஞ்சிங்கன் இவனு ? போரைவிட்டு, பக்தனுய் பிரபந்தம் பாடி வருகிருன்! இரு படைத் தலைவர்களும் தெய்வநாயகனைப் பின்பற்றி வருகிருர்கள். உலா கருடநதி சங்கமத்தில் மிளிர்ந்த பரிமணத்தோப்பில், நிற்கின்றது.

"அறிவோம், உங்கள் எண்ணங்களை. இவ்விடம் துறைமுகத்துக்கல்ல. எனது சமஸ்தானத்திலடங்கியதென்ருலும் இது இதோ ஸேவை ஸாதிக்கும் தெய்வநாயகனது இடம், அவன் சொத்து அவனுக்கே உரியது"

"இதற்கு அத்தாட்சி உண்டா"?

"வேறு எந்த அத்தாட்சி வேண்டும்? இதோ பாருங்கள்! இத்திருமால் இன்று கடலாடி மகிழும் பொழுது அலை உயர்வதில்லை, வேகம் வீசுவதில்லை, கடலினுள் இழுத்துக் கொண்டு போவதில்லை. தீர்த்தவாரி பின்னர், இத்தேவப்பிரான் குதிரை வாகனம் கொண்டு இம்மணத் தோப்பில் பத்தி உலாவி ஊர் திரும்பும் பொழுது கடலைக் கவனியுங்கள்! இப்பொழுது காணும் சாந்தம் எங்கே? நீர்மை எங்கே? கன்னங்கறே லென்று மண்ணுடன் காணும் அலைக்கொந்தளிப்பை அன்ருே காண்பீர்கள், கால் நட்ட முடிய ஆழம் அமுக்கி இழுத்துச் செல்லுமே!"

"அப்படியா இத்தெய்வத்தின் பெருமை!

நானூறு வருடங்கள் பின்னர்!

அன்றும் மாசிமகம்! முதல் ஆங்கிலேய-பிரன்சு யுத்தம் முடிவு; இருவருக்கும் ஒப் பந்த சமயம். ஆங்கிலேயர் தேவனும்பட்டி னம் (Fort St David) என்னுமிடத்தில் கோட்டை கட்டிக் கொண்டு மாசிமகத்துறை யில் துறைமுகத்திற்காககண்ணோட்டம்.புதுச் சேரியில் பிரன்சுபடை அதைத் தடை செய்ய ஆயத்தம் இரு படையும். கைகலக்கும் நாள்! அடியார்க்கு மெய்யன் மாசிக் கடலாடி மகிழ்ந்து வரும் திருநாள்! கருட நதி சங்கமத் திடலில் இரு தளகர்த்தனர்க்கும் கடும் உத்த ரவு, ஒப்பந்த உத்தரவு, போர் நிருத்தல் வேண்டும், இரு படையும் தம்தம் கோட் டைக்குள் திரும்பிவிட வேண்டும். இரு தலை வர்களும் ஒருவரை யொருவர் உற்று நோக் கினர். தெய்வநாயகன் பல்லக்கில் உல்லாச மாக பிரசன்னம்!

ஆம், இத்தலத்தின் மகிமைதான் என்னே! என்று பேச்சு. வைனதேயன் ப்ரத்யக்ஷம் செய்ததலமன்றோ! உபதேசித்த ஹயக்ரீவ மந்த்ரத்தை ஆவ்ருத்தி செய்து அம் மெய் ஞான மூர்த்தியை ஸ்ரீதேசிகன் ஸாக்ஷாத் கரித்த தலமும் தானே! மிக மிகப் ப்ரீதி யோடு அயிந்தையில் அர்ச்சாவதாரத் திரு மேனி ஸாந்நித்யம் செய்திருப்பதனுன்றோ திருமலை பிரார்த்தனை கொண்ட பக்தர்கள்-அசக்தியால் போக முடியாதவர்கள்-ஸ்ரீ திருவேங்கடத்தானைப் போன்றே ஸேவை ஸாதித்து அடியவர்க்கு மெய்யனுக விளங் கும் தேவநாதன் ஸந்நிதியடைந்து பிரார்த் தனை நிறைவேற்றி இஷ்ட காம்யங்களை நாளது வரை அவர்கள் பெற்று களிக்கும் புனிததலமும் இதுதானே! ஸ்ரீ ஹயக்ரீவ அநுக்ரஹத்தால், முதல் முதல் மங்களா சாஸனம் பெற்ற எம்பெருமான் க்ஷேத்திரமு மன்றோ இது! ''அவனி மருவு திருவயிந்தை அடியவர்க்கு மெய்யனே என்றும்'' அருள் கொடுத்து வினை தீர்க்கும் அடியவர்க்கு மெய் யனே'' என்றல்லவோ சுடர் விடுகின்றது அம்மங்களாசாஸனம்! இத்தலத்தில் சித்தி பெற்ற பெரியார் மற்ற திவ்யதேசத் தெரு மான்கள் மங்களாசாஸனங்களில் பொது வான குணவிசேஷங்களை ப்ரசுரிக்க, இத் தலத்து எம்பெருமானிடத்தே ''ப்ரத்யங்க பூர்ண ஸுஷுமா ஸுபகம் வபுஸ்தே த்ருஷ்ட் வா த்ருசௌ விபுநாத நத்ருப்யதோ மே'' என்று அவன் அர்ச்சாவதார திருமேனியின் ஒவ்வொரு அவயவத்தின் அழகில் ஈடுபட்டுத் திகழ்ந்திருந்தார், உகந்து வசித்ததலம். அதிகப்பட்ட ஸ்தோத்ரங்கள், ரகஸ்யக்ரந் தம், தேவநாதன் தசாவதார சரித்திரம், அவனது திருவடி பெருமை, திவ்ய சேஷ்டி தங்கள் நிஷ்கர்ஷமான பெருமை, வடிவழகு வர்ணனை, செவிவி அறத்தொடு நிற்றல், தோழியிரங்கல், குணுநுபவம், சாக்ஷாத்க ரித்த உத்கோஷம், தேவநாதனிடமே அந் திம ஸ்ம்ருதியை வேண்டல், அவனிடம் பர ஸமர்ப்பணம், பரத்வ ஸௌலப்யங்களை வர் ணித்தல், அவனுடை சேஷத்வம், அவனி டமே யமபாதை யொழித்தல் வேண்டல், ஸூக்தி.ஸமர்ப்பணம் முதலிய அம்சங்களான பிரபந்தங்கள் இத்தலத்து நாயகனுக்கே உரித்தானதன்றோ!

பதினைந்து வருடங்கள் இத்தலத்தே வாசம், பின்னர்—வேரிடம் பிரயாணம், அங்கு பகைமை, எதிரிப்படையினரிட மிருந்து தப்பி கொங்குநாடு வழியே திரு நாராய்ணபுர யாத்திரை, நடுவே சத்திய மங்கலத்திற்கருகே, சுருதப்ரகாசிகையையும் பட்டர் குமாரர்களையும் விரோதிகளிடமிருந்து ரக்ஷித்தல்; பின்னர், வடதேச யாத்திரை அதன் பின்னர் இன்னமும் பதினைந்தாண்டு அயிந்தை நகர் வாசம், அவ் வருடங்கள் தோறும் மாசி மக உற்சவ ஸேவை! தம் கையாலேயே கிணறு கட்டுதல், தனது விக் ரகத்தை ஆமோதித்து அத்தலத்திலேயே ப்ர திஷ்டை செய்தல் முதலிய நிகழ்ச்சிகளைத் தாங்கி நிற்கும் தலமன்றோ மாசிக்கடலாடி மகிழ்ந்துவரும் ஸ்ரீஸ்துதி செய்வித்துக்கேட்ட ஸ்ரீஹேமாப்ஜவல்லித் தாயாருடன் தேவாதி தேவன், தெய்வநாயகன் உறைவிடம்-

அன்றும், இன்றும், என்றும்!

[இக்கட்டுரையில் சரித்திரத் தொகுப்புக கள் ஆதாரம், திருவகீந்திரபுரம் கல் வெட்டு. 1231-32 பசலி, பேராசிரியர் ஹுல்பட்ஸ் இயற்றிய ''சரித்திரக் கல் வெட்டுகளும் சாஸனங்களும்'' காலஞ் சென்ற பேராசிரியர், டி. ஆர். சுந்தர ராகவாசரி, ''ஹிந்து'' பத்திரிகையில் 1941-ஆம் வருஷம் நவம்பர் 2-ஆம் தேதி மலரில் பிரசுரித்த வியாசமு மாகும்.]

ஸ்ரீ உ வே. ஐயா கிருஷ்ணதாதாச்சாரியார் ஸ்வாமி, காஞ்சி.

உய்யும் வகை

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
ப்ரம்ஹதேசம் தூப்புல்
நரஸிம்மாச்சாரியார் ஸ்வாமி,
காஞ்சீ

வரதாச்சாரியார் : ஏள்ளணும்! ஏள்ளணும் கோவிந்தாசாரியரே! வெகு நாளாக ஸேவை ஸாதிக்கவில்லையே, எங்கு இவ்வளவு நாளாக ஏள்ளியிருந்தது, ஸௌக்யந்தானே?

கோவிந்தாச்சாரியார் : அடியேன்! அடியேன்! தேவரீரைத் தெண்டன் ஸமர்ப்பித்து ரொம்ப நாளாயிற்று. இன்றுதான் நல்ல நாள். ஸ்வாமியின் அநுக்ரஹத்தினுல் எல்லோரும் ஸௌக்யம்.

வரதாச்சாரியார் : ஆமாம், இப்போது எங்கிருந்து ஏள்ளுகிறது. ஏதாவது யாத்ரையாக வெளியில் ஏள்ளியிருந்ததா. என்ன, ஏதாவது விசேஷம் உண்டா?

கோவிந்தாச்சாரியார் : ஸ்வாமி! என்னமோ திடீரென்று தோன்றிற்று. திவ்ய தேச யாத்திரை போக வேண்டும் என்று நினைத்தேன். வடக்கே பதரி வரையில் போனேன். அப்படியே தெற்கே ஸேது ஸ்நானமும் பண்ணிவிட்டு நேரே இப்போது வருகிறேன்.

வரதாச்சாரியார் : ஓகோ! பரதகண்டம் பூராவும் சுற்றியாயிற்று! இப்போது நம் பரத கண்டத்தில் என்ன விசேஷம்?

கோவிந்தாச்சாரியார்: அதையேன் கேழ்க்கிறீர் ஸ்வாமி. எங்கு போனுலும் ஸ்ரீ தூப்புல் வேதாந்த தேசிகனைப் பற்றியே பேச்சு. இவருக்கு 7-வது நூற்றுண்டு விழாவாம். வருகிற புரட்டாசி ச்ரவணத்தன்று வெகு கோலாஹலமாக நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

வரதாச்சாரியார் : ஏய் கோவிந்தாச்சாரியரே! எல்லா நூற்றுண்டு விழாவைப் போலவா இது இருக்கிறது. விசேஷம் ஒன்றும் தெரியவில்லையா?

கோவிந்தாச்சாரியார் : அடியேனுக்கு என்ன தெரிகிறது. ஓரிடத்தில் போனுல் தேசிகன் பெயரைச் சொல்லி ஆகாசத்தை எட்டக்கூடிய கட்டிடம் எழுப்பியிருக்கிறுர்கள். மற்ருேரிடத்தில் போனுல் தேசிகன் புத்தகங்களை வைக்க லைப்ரரி கட்டுகிறுர்களாம். வேருேரிடத்தில் போனேன். அங்கு சிறு பிள்ளைகளெல்லாம் ஒன்றுகூடி நன்ருக சில ஸ்தோத்ரங்களையும் தமிழ் பாசுரங்களையும் சொல்லிக்கொண்டிருக்கிறுர்கள். அடியேனுக்கு ஒன்றும் புரியவில்லை. எனினும் கேழ்ப்பதற்கு ரொம்பவும் அழகாக இருந்தது. அங்கே அருகில் தூப்புல் தேசிகன் ஸன்னிதி என்ருர்கள். உள்ளே நுழைந்தேன். நுழையும்போது சில கல்வெட்டு சிலாசாஸனம் தென்பட்டது. படித்தேன். தேசிகன் பண்ணின க்ரந்தங்களாம் அவை. நூற்றுக்கு மேல் இருக்கிறது. அப்படி ப்ரதக்ஷிணத்தில் திரும்பினேன். தேசிகன் ஜீவிய சரித்திரத்தை சித்திரங்களாக வெகு அழகாக எழுதியிருந்தது. வெளியில் வந்தேன். ஆச்சர்யமான தேர் ஒன்று ஜோடிக்கப்பட்டிருந்தது. அப்போது ஒரு வைஷ்ணவர் வந்து தேசிகனுக்கு ரத்னங்கிக்காக ஏதாவது கொடுக்க வேண்டும் என்று கேட்டார். என் கையில் கிடைத்ததைக் கொடுத்தேன்,

இதையெல்லாம் பார்த்தால் தேசிகன் யாரோ ஒரு மஹானாக இருக்கலாமோ என்று தோன்றிற்று.

(வரதாச்சாரியர் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் பெருகிக் கொண்டிருக்கிறது. இதைப் பார்த்து கோவிந்தாசாரியர் : என்ன ஸ்வாமி, இவ்வளவு கஷ்டப்படுகிறது. நான் ஏதாவது தவறாகச் சொல்லிவிட்டேனா. அப்படி யிருந்தால் க்ஷமிக்கவேணும். (கீழே விழுந்து நமஸ்கரிக்கிறார்)

வரதாச்சாரியர் : எழுந்திரு, எழுந்திரு. நம்முடைய ஸம்ப்ரதாயத்தின் தௌர்ப்பாக்யத்தை நினைத்தேன். கண்களில் தண்ணீர் பெருகிவிட்டது. நம்முடைய தர்சனத்திற்காகவே தம்முடைய ஆயுள் பூராவையும் உழைத்த மஹான் ஸ்ரீ தேசிகன். அவர்தான் நமக்கு உய்யும் வகையை நன்றாக எடுத்துரைத்தவர். அப்படிப்பட்ட உத்தம வள்ளல் யாரோ ஒரு மஹான் என்று சொல்லிவிட்டீர், அந்த ஸம்ப்ரதாயத்தில் பிறந்து. என்ன காலம். என்ன ஈஸ்வரனின் மாயை ! இதை நினைத்தால் அழுகை வருவதில் என்ன ஆச்சர்யம்.

இதில் ஒன்றும் ஆச்சர்யமில்லை. ஒரு சிறு வ்ருத்தாந்தம் சொல்கிறேன் கேளும். ராமநாதபுரத்தில் ஒரு ராஜா இருந்தான். அவன் தமிழ்ப் பண்டிதன். அவனிடத்தில் ஆஸ்தான வித்வான்களாக அநேக பண்டிதர்கள் இருந்தார்கள். அவன் நம் ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களை 'உங்கள் ஆசார்யர்கள் தமிழில் ஒரு க்ரந்தம் கூடப் பண்ணவில்லையா' என்று கேட்டான். அவர்கள் ''ஏதோ பண்ணியிருப்பதாகக் கேள்வி. தேசிக ப்ரபந்தம் என்று பெயராம்'' என்றார்கள். பிறகு அந்த ராஜா அந்த புத்தகத்தை வரவழைத்துப் பிரித்தபோது, ''வேறொப்பார் விண்முதலாங்காவுக்கெல்லாம்'' என்கிற ஹஸ்திகிரி மாஹாத்ம்ய பாசுரம் வந்தது. 'அருளாளர் தாமெனினும் தமக்கொவ்வாரே' என்பதைத் திருப்பித் திருப்பி வாசித்து அப்படியே மெய்மறந்துவிட்டான் ராஜா. இதை அநுபவிக்கக் கொடுத்துவைக்காத அந்த ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களைப்பற்றி மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டானும். தேசிகன் யார், தேசிக ப்ரபந்தம் என்றால் என்ன என்றுகூடத் தெரியாமல் தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் இருந்தால் இதைவிட வெட்கக் கேடு என்ன வேண்டும் ?

கோவிந்தாச்சாரியர் : ஸ்ரீ தேசிகன் அப்படிப்பட்ட மஹானா? அவ்வளவு பெரிய பண்டிதரா? அடியேனுக்குத் தெரியாதே. தேசிகன் யாரோ ஸாமாந்யமானவர் என்றுதான் அடியேனுக்குத் தெரியும். தேசிகன் ஸம்ப்ரதாயஸ்தர்கள் என்று சொல்லிக்கொண்டு, தேசிகனைப்பற்றித் தெளிவாகவும் விரிவாகவும் தெரியாமலிருந்தால் அதைவிட என்ன அவமானம் வேண்டும். (விழுந்து ஸேவிக்கிறார்) தேவரீர்தான் ஸ்ரீ தேசிகனைப்பற்றி விரிவாகச் சொல்லவேண்டும் ஸ்வாமி.

வரதாச்சாரியர் : நான் மஹா பாக்யசாலிதான். தேசிகனைப்பற்றிச் சொல்ல எனக்கு அவகாசம் கிடைத்ததே. தேசிகன் மஹிமையை அளவிட முடியாது. அவர் மஹிமையைச் சொல்ல எண்ணும்போதே கொஞ்சம் என்னை நிலைப்படுத்திக்கொள்ள வேண்டும். அவர் மஹிமை ஒரு சமுத்திரத்திற் கொப்பானது. அதில் இறங்கும்போது வெகு ஜாக்ரதையாக இருக்க வேண்டும். என்னை நிலைக் கப்பண்ணிக்கொண்டு எனக்குத் தெரிந்த வரை சொல்லுகிறேன். தேசிகன் ஒரு பிரதான ஆசார்யன். அவரை அடைந்தால்தான் நமக்கு உய்யும் வகை ஏற்படும். அவர் ஸ்ரீ ஸூக்திகளே நமக்குத் தஞ்சம். ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் குமாரர் ஸ்ரீ நயனாசாரியர் ''பிள்ளையந்தாதி'' என்று 20 பாட்டுக்கள் கொண்ட ஒரு ப்ரபந்தத்தை தேசிகன் விஷயமாக அருளியுள்ளார். அதில் ஒரு பாசுரத்தை எடுத்துக் கொண்டாலே தேசிகன் மஹிமை நன்கு புலப்படும்.

உய்யும் வகையில்லை உத்தரவேதி
யுள்வந்துதித்த
செய்யவள் மேவிய சீரருளாளரைச்
சிந்தைசெய்யும்
மெய்யவ னெந்தை இராமாநுச னருள்மேவி
வாழும்
ஐயன் இலங்குதூப்புல் பிள்ளை
ஆய்ந்த பொருளன்றியே.

கோவிந்தாசாரியர் : பாட்டைக் கேழ்க்கும்போதே ஆனந்தம் மேலிடுகிறது. அதன் அர்த்தத்தை விவரிக்க வேண்டும் ஸ்வாமிந்.

வரதாச்சாரியர் : காஞ்சியில் உத்தரவேதியுள் வந்துதித்தவன் யார் தெரியுமா?

கோவிந்தாசாரியர் : ஓ! தெரியுமே. ப்ரம்ம யாகத்தில் உத்தரவேதியுள் அவதரித்தவன் அருளாளன். அதாவது வரதராஜன். ஆமாம் ஸ்வாமி, எதற்காக வந்தான் வரதராஜன்? வந்தான் என்ருல் போதாதா. உதித்த என்று போடுவானேன். ஏதோ சொன்னத்தையே திருப்பிச் சொல்வது போலிருக்கிறதே.

வரதாச்சாரியர் : நம்முடைய தேசிகன் ஸ்ரீஸூக்திகளிலோ அல்லது அவர் திருக்குமாரரான வரதாச்சாரியர் ஸ்ரீஸூக்திகளிலோ சொன்னத்தையே மறுபடியும் சொல்லுவதென்கிற தோஷம் கிடையாதுங்காணும். இதுதான் இந்த க்ரந்தங்களுக்குச் சிறந்த பெருமை. ஒவ்வொரு பதத்திற்கும் ஒவ்வொரு ப்ரயோஜனம் உண்டு. அனுவசியமாக ஒரு அதிக பதம்கூட தேசிகன் ஸ்ரீஸூக்திகளில் காணமுடியாது.

கோவிந்தாச்சாரியர் : அதற்காகத்தான் இந்த இரண்டு பதங்களின் ப்ரயோஜனங்களைக் கேழ்க்கிறேன். அதிகப்ரசங்கி என்று நினைக்கவேண்டாம்.

வரதாச்சாரியர் : பூலோகத்தில் ஸாதுக்கள் எம்பெருமானைக் கண்ணுல் கண்டு அவனைக் கட்டி அணைத்து அவனுடன் வாயாரப் பேசி அநுபவிக்க ஆசைப்படுகிருர்கள். எம்பெருமான் பரமபதத்தில் இருந்தால் இது எப்படி ஸாத்யப்படும். அதற்காக இறங்கி வருகிருன்.

கோவிந்தாச்சாரியர் : இறங்கினுன் என்ருல் போதுமே அப்போது. எதற்காக 'உதித்த' என்று அதிகப்படி பதம்.

வரதாச்சாரியர்: நாமெல்லோரும் ஸம்ஸாரத்தில் பிறக்கிருேம். எதனுல்? கர்மத்தினுல் பிறக்கிருேம். அவனும் அப்படித்தான் கர்மத்தினுல் பிறக்கிருனே என்கிற ஸந்தேஹம் வரக்கூடுமா இல்லையா?

கோவிந்தாச்சாரியர் : கண்டிப்பாக வரக்கூடும். பூலோகத்தில் வந்தால் நம்மைச் சேர்ந்தவன் என்று எண்ணலாமோல்லியோ.

வரதாச்சாரியர்: அவன் பிறவி கர்மத்தாலன்று. கேவலம் அவனுடைய இச்சையினுல் என்று தெரிவதற்காகத்தான் 'உதித்த' என்று தனிப்பத ப்ரயோகம். இதுதான் அவதார ரஹஸ்யம் தெரியுமா?

கோவிந்தாச்சாரியர் : இப்படி பதப்ரயோகம் பண்ண தேசிகனுக்குத் தான் தெரியும். மற்ருெரு சந்தேகம் ஸ்வாமிந், பெருமாள் பாபிகளை தண்டிக்கும் ஸ்வபாவத்தை உடையவனுயிற்றே. பெருமாள் மட்டும் அவதரித்தால் மஹாபாபிகளான நமக்கு உய்யும் வகை ஏது?

வரதாச்சாரியர் : அந்த பயம் நமக்குத் தேவையில்லை. நமக்குத் தாயாரான ஜகந்மாதா பெருமாளை ஒரு க்ஷணம் கூட விட்டுப் பிரியமாட்டாள். பெருமாள் ராமாவதாரம் எடுத்தால் ஸீதையாகவும் கிருஷ்ணனுகப் பிறந்தால் ருக்மணியாகவும் அர்ச்சையாக ஆனுல் கூடவே திருமார்பில் நாச்சியாராகவும் இப்படி பிறப்பாள் தாயார். ஏன்! பெருமாள் பிரும்மசாரியாக வாமனுவதாரம் எடுக்கும் போது கூட பெருமாள் திருமார்பை விட்டு அகல மறுத்து விட்டாளே தாயார். அதைத்தான் இங்கு செய்யவள் மேவிய அருளாளன் என்கிருர். நாச்சியார் அருளாளனுேடு அநவரதம் அருகிலேயே மிகவும் ஆதரத்தோடு இருக்கிருள். அவள் எப்போதும் நமக்கு புருஷகாரம் பண்ணுவாள். அந்த புருஷகாரம் மறுக்க முடியாதது. நாம் பயமில்லாமல் எப்போதும் ஆச்ரயிக்கலாம்.

கோவிந்தாச்சாரியர் : ஸ்வாமிந்! பெருமாளிடம் போன பிறகு தானே புருஷகாரம் எல்லாம், நாம் மஹா பாபிகளாயிற்றே! அவன் உயர்ந்தவனுயிற்றே, நமக்கு முகம் கொடுத்து பேசுவானு, அவன்!

வரதாச்சாரியார் : ஏய் கோவிந்தாச் சாரியரே ! இங்கு உதித்த பெருமாளின் பெயர் தெரியுமா? அருளாளன், அதுவும் பேரருளாளன், தேசிகன் இவருக்கு என்ன விருதுகூறியிருக்கிருர் தெரியுமா? அருள்ளாளப் பெருமாள் என்றும் அருளாழி அம்மான் என்றும் விருது கூறி பேரிகை அடிக்கிருர். அருள் என்பது அவன் இட்டபடி வேலை செய்யும் (அருளை ஆள்கிறவன்) அல்லது அருளால் ஆளப்படுகிறவன். அவன் நம்மைக் காக்க சற்று யோசித்தாலும் அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவனுடைய அருள் ப்ரவாஹமானது அவனுலும் அடக்க முடியாமல் வெளிக்கிளம்பி நம்மிடம் ப்ரவஹித்து நம்முடைய பாவங்கள் எல்லாவற்றையும் போக்கிவிடும் என்கிருர் வரதராஜ பஞ்சாசத்தில் ஆரண தேசிகன்.

கோவிந்தாச்சாரியர் : சீரருளாளன் என்கிருரோ. அருளுக்கு என்ன சீர்மை ! அதைச் சற்று விளக்கவேண்டும். ரொம்பவும் சிரமம் கொடுக்கிறேன் தேவரீருக்கு க்ஷமிக்க வேண்டும்.

வரதாச்சாரியர் : என்ன! இதுவா எனக்கு ச்ரமம், ஏதோ தாதா பாட்டி கதை சொல்லுகிருர் என்று நீர் எழுந்து போய் விடாமல் பகவத் விஷயத்தில் ஊன்றி மேலே மேலே உற்சாகமாகக் கேழ்க்கிறீர். இப்படி கேழ்ப்பது எனக்கு மேன் மேலும் உற்சாகத்தைக் கொடுக்கிறதுங்கணும். இந்த அருளுக்கு சீர்மை என்ன வென்ருல் நம் தர்சனத்தைக் காட்டி அதை ஸ்தாபித்தது தான். ஓய் இங்கே வாரும். நம் தர்சனத்தை ஸ்தாபித்தவர்கள் மூவர். உத்தரவேதியுள் வந்துதித்த அருளாளன் ஒன்று. அவ்வருளாளனைச் சிந்தை செய்யும் இராமாநுசன் இரண்டு. அவ் விராமாநுசனின் அருள் மேவி வாழும் தூப்புல் பிள்ளை மூன்று. இம் மூவரும் இல்லாவிடில் நம்தர்சனம் குத்ருஷ்டிகளால் பீடிக்கப்பட்டு இருந்தவிடம் தெரியாமல் சீர்குலைந்து போய் விட்டிருக்கும். நாம் உய்யும் வகையில்லாமல் தடுமாறிக் கொண்டிருப்போம். ஆகையால் அருளாளனும் இராமாநுசனும் தேசிகனும் தான் நமக்கு உய்யும் வகையைக் காட்டினுர்கள். இவர்களன்றி உய்யும் வகையில்லை நமக்கு.

கோவிந்தாச்சாரியர் : அது சரி ஸ்வாமிந். நம் தர்சனத்தை இவர்கள் எப்படி ஸ்தாபித்தார்கள்.

வரதாச்சாரியர் : இராமாநுசனுடைய உயிருக்கு ஆபத்து ஏற்பட்ட போது அருளாளன் அவரைக் காப்பாற்றினுன். இராமனுடைய அநுசன் தம்பி லக்ஷ்மணன். இவர் ராமனுக்கு சகல கைங்கர்யங்களையும் பண்ணினுரல்லவா அது போல் இராமாநுசனும் தம்முடைய பெயருக்கேற்ப அருளாளனுக்குத் தீர்த்த கைங்கர்யத்தைப் பண்ணினுர். அருளாளனும் உகந்து திருக்கச்சி நம்பிகள் மூலம் ஆறு வார்த்தை (1. நான் தான் பரதேவதை, 2. பேதம் தான் தர்சனம் 3. ப்ரபத்தி தான் உபாயம் 4. தேஹா வஸாநத்தில் மோக்ஷம் 5. அந்திம ஸ்ம்ருதி தேவையில்லை. 6. பெரிய நம்பிகளை ஆச்ரயிக்கவும்). சொல்லி ஸம்ப்ரதாயத்தைக் காட்டினுன்.

கோவிந்தாச்சாரியர் : ஓகோ! ஓகோ! அருளாளனின் க்ருபையினுல் பெரிய நம்பிகளை ஆச்ரயித்து ஸ்ரீ பாஷ்யத்தைச் செய்து இராமாநுசன் ஸ்ரீ பாஷ்யகாரராக ஆனுரா என்ன ?

வரதாச்சாரியர் : ஓய் உம்முடைய புத்தி சாதுர்யமே சாதுர்யம். ஸ்ரீ பாஷ்யகாரர் என்று பெயர் வந்ததை சரியானபடி கண்டு பிடித்து விட்டீரே, உடையவர் என்று இராமாநுசனுக்கு எப்படி பெயர் வந்தது தெரியுமா!

கோவிந்தாச்சாரியர் : தேவரீர் தான் ஸாதிக்கவேண்டும்.

வரதாச்சாரியர் : நம்முடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு அடித்தளம் (Foundation) என்ன தெரியுமா! ஈஸ்வரனுக்கும் நமக்கும் உள்ள சரீராத்ம பாவம் தான். எல்லா சேதனங்களும் அசேதனங்களும் ஈஸ்வரனுக்குச் சரீரம். அவன் எல்லாவற்றுக்கும் ஆத்மா என்பது தான். இதை ஸ்தாபித்து எல்லா ச்ருதிகளையும் சரிப்படுத்தினவர் ஸ்ரீ பாஷ்யகாரர். ஆகையால்

எல்லாவற்றுக்கும் உடையவனுன ஸர்வேச் வரனிடம் அவன் உடமைகளாகிய நம்மை பிரிக்க முடியாதபடி சேர்த்தபடியினுல் உடையவரானுர் தெரிகிறதா!

கோவிந்தாச்சாரியர் :-ஸ்ரீபாஷ்யகாரருக்கு ஐந்து பெயர் என்கிருர்கள். நான்கு பெயர் வந்த காரணத்தைக் தெரிந்து கொண்டேன். ஐந்தாவது பெயர் வந்த காரணத்தையும் சொல்லவேண்டும் ஸ்வாமிந்.

வரதாச்சாரியர் :—ஓகோ! இராமாநுசன் இதர புருஷார்த்தங்களை வெறுத்து அருளாளனை அநவரதம் சிந்தையில் கொண்டு வைராக்ய நிஷ்டராகி விட்டபடியால் நான்காவதான யதிராஜன் என்கிற பெயர் வந்தது என்று கூருமலே தெரிந்து கொண்டு விட்டீராக்கும். இனி ஐந்தாவது பெயர் வந்த காரணத்தைக் கேளும். நமக்கெல்லாம் சாஸ்த்ரார்த்தங்களை சாஸ்த்ரீய முறையில் உபதேசித்தபடியினுல் திருக்கோட்டியூர் நம்பி ''எம்பெருமானுரே'' என்று கூப்பிட்டார். ஆகையால் நம்மை உய்யும்படி பண்ணின படியால் நமக்கெல்லாம் எம்பெருமானுரானுர். எம்பெருமானுருக்கு எம்பெருமான் சகல ப்ரகாரத்தாலும் உபகரித்தபடியால் ஸ்ரீபேரருளாளன் அவருக்கு ஆராத்ய தேவதையானுன்.

கோவிந்தாச்சாரியர் :—ஆமாம்! இராமாநுசனுக்கும் தேசிகனுக்கும் என்ன ஸம்பந்தம்? தூப்புல் பிள்ளை நம்மை உய்விக்க என்ன செய்தார், அதை சற்று விரிவாகச் சொல்லவேணும்.

வரதாச்சாரியர் :—ஓய் நன்ருக கவனித்து கேளும். தூப்புல்பிள்ளை இல்லை என்ருல் நமக்கு உய்யும் வகை எதுங்கணும். இராமாநுசன் ஏது? பேரருளாளன் ஏது? இராமாநுசனின் அருளுக்குப் பாத்ரமானவர் தேசிகன். அதினுல்தான் ''ராமாநுஜதயாபாத்ரம்'' என்று தேசிகன் தனியன் ஆரம்பமாகிறது.

கோவிந்தாச்சாரியர் :—வாஸ்தவம். இராமாநுசன் அருளைப் பெற தேசிகன் என்ன செய்தார் ஸ்வாமி?

வரதாச்சாரியர் :—ஒருவர் அநுக்ரஹத்தைப் பெற அவர் சொன்ன காரியத்தை சரிவர நிறைவேற்றுவதுதான். ஸ்ரீபாஷ்யகாரரின் முதல் கட்டளை ஸ்ரீபாஷ்யத்தைப் ப்ரவசனம் செய்து மதஸ்தாபனம் செய்வதுதான்.

கோவிந்தாச்சாரியர் :—தேசிகன் அப்படி செய்தாரா?

வரதாச்சாரியார் நன்ருகச் செய்தார். ஒருவன் தன்னுடைய யௌவன காலத்தை தனக்கு அபிமதமான ஸ்த்ரீகளோடு கழிப்பதை லோகத்தில் காண்கின்ருேம். தேசிகனுடைய யௌவனம் எந்தஸ்திரீயின் அநுபவத்தில் கழிந்தது தெரியுமா? ஸ்ரீபாஷ்யகாரரின் திவ்ய ஸ்ரீஸூக்திகளாகிற ஸ்திரிகளின் அநுபவத்திலேயே கழிந்தது. என்னுடைய யௌவநம் யதிஸார்வபௌமனுடைய வாக்குகளை ஆவ்ருத்தி பண்ணுவதிலேயே கழிந்தது என்றும் அந்த ஸூக்திகளின் ரஸத்தை அநுபவித்தே என் வயதைக் கழித்தேன் என்றும் தேசிகனே ஸாதிக்கிருர்.

கோவிந்தாச்சாரியர் :—ஸ்வாமிந். இப்போது தெரிந்து கொண்டேன் ஸ்ரீதேசிகன் மஹாபண்டிதர் என்று. அப்போது அவர் நினைத்ததெல்லாம் ஸாதிக்கக் கூடிய வல்லமை உள்ளவர் என்று தோன்றுகிறது. அப்படியிருக்க அவர் ஸாதிக்கும் அர்த்தங்கள் ப்ரமாணங்களுக்கும் பூர்வாசார்யர்கள் திருவுள்ளங்களுக்கும் ஒத்து இருக்குமா, அல்லது தான்தோன்றியாக இருக்குமா. இந்த பெரிய ஸந்தேஹத்தை நிவ்ருத்தி செய்யவேணும் தேவரீர்.

வரதாச்சாரியர் :—தேசிகன் விச்வாமித்ர கோத்ரத்தில் பிறந்தவர். நினைத்தபடி செய்ய வல்லமை உள்ளவர்தான். ஆனுலும் ''நினைத்த தெல்லாம் தர்க்க பாண்டியத்தாலே ஸாதிக்க வல்லமை எனக்கு இருந்தாலும் நாம் ப்ரமாணங்கள் போகிறபடியே தான் போவோம்'' என்று ஸ்ரீஸ்வாமி தேசிகனே ஸாதிக்கிருர். ஓரிடத்தில். ''கீர்த்தி வாய்ந்த இராமநுச முனியின் உரையைத் தழுவினது என்னுடைய உக்திகள்'' என்

. மற்ருேரிடத்தில் ''ஸ்ரீபாஷ்யத்தில் வெகு காலம் பரிசயம் பண்ணினபடியால் இந்த அர்த்தங்கள் எனக்குத் தெளிவாயிற்று'' என்று முத்திரை போடுகிருர் ஸ்ரீஸ்வாமி. ''தமக்கு ஆசார்யரான ஸ்ரீஅப்புள்ளார் தம்மை கிளியைப் பழக்கி விக்குமாப்போலே பழக்கி வைத்து அவர் பிழையில்லாமல் பேசுவித்த பாசுரங்கள்'' என்று ஆசார்யாநுக்ரஹத்திஞல் பேசியவை இவையெல்லாம் என்கிருர். வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகால் அடியோம் உள்ளத்தெழுதியது ஓலையில் இட்டனம்'' என்று பீதகவாடைப்பிரான் ஹயக்ரீவனுக ஏள்ளி உபதேசித்த அர்த்தங்கள் இவை என்கிருர். ஆகையால் தேசிகன் ஒரு நாளும் பூர்வாசார்யர்கள் போட்ட பாதையை விட்டு அகல மாட்டார். அதனுல்தான் தேசிகன் சொன்ன அர்த்தங்கள் பேர்க்கவும் பேரா. இனி தூப்புல் பிள்ளையாய்ந்த பொருள்தான் நமக்கு உய்யும் வகை. என்பது உமக்கு நன்ருக ஏற்பட்ட தோல்வியோ ?

கோவிந்தாச்சாரியர் :—ஸ்வாமி நன்ருக பட்டது. ஆனுல் தேசிகன் ஸ்ரீஸூக்திகள் கணக்கிட முடியாதவை. லோகத்திலோ பண்டிதர்களும் அடியேனைப் போல் மந்தமதிகளும் இருக்கிருர்கள். பண்டிதர்கள் தேசிகன் க்ரந்தங்களை ஸேவித்து உய்யலாம். அடியேனைப்போல் உள்ள மந்தமதிகள் என்ன செய்வது ஸ்வாமி ? ஒன்றும் புரியாத ஜடமாயிற்றே அடியேன்.

வரதாச்சாரியர்:—அந்த பயம் உமக்கு வேண்டாம். அந்தந்த அதிகாரிகளுக்குத் தகுந்தவாறு விரிவாகவும், சுருக்கமாகவும், தமிழ் பாசுரமாகவும், வசனமாகவும் ஸம்ஸ்க்ருதத்திலும், மணிப்ரவாளத்திலும்,ப்ராக்ருத பாஷையிலும் இப்படி பலவிதமாக ஸாதித்துள்ளார் தேசிகன். ஆகையால் எல்லோரும் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

கோவிந்தாச்சாரியர்:—ஸ்வாமிந்! தேசிக க்ரந்தங்கள் பூராகவும் ஸேவித்து அர்த்த நிச்சயம் பண்ணிக் கொள்வ தென்பது நம்முடைய ஆயுளில் முடியாத காரியம் போலிருக்கிறதே. அனந்தமான வேதங்கள் போல் இவர் க்ரந்தங்களும் அனந்தமாக இருக்கிறதே, இதற்கு என்ன பண்ணுகிறது?

வரதாச்சாரியர்:—அந்த ஸந்தேஹத்திற்கே இடம் வைக்கவில்லை ஸ்வாமி. ''ஒரொன்று தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வு'' என்கிறபடி ஸ்ரீஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகளில் ஒரு சிறிய ஸ்ரீஸூக்தியே போரும் நாம் உஜ்ஜீவிக்க. ஆகையால் தேசிகன் ஆய்ந்து பூர்வாசார்யர்கள் திருவுள்ளத்திற்கு அநுகுணமாக உரைத்த பொருள் என்ன என்று ஏற்பட்டது தெரியுமா? தத்வமாவது பொருந்தேவித்தாயாரும் பேரருளாளனும் ஆகிய ஒரு திவ்ய தம்பதிகள்தான் (தம்பதீ ஜகதாம்பதீ) அந்த திவ்ய தம்பதிகளிடம் சரணுகதி பண்ணுவதுதான் உபாயம் (சரண்யதம்பதி) புருஷார்த்தமாவது அந்த திவ்ய தம்பதிகளை அடைந்து அவர்களைப் பரிபூர்ணமாக அநுபவித்து அவ்வநுபவ பரீவாஹமாக அவர்களுக்குக் கைங்கர்யங்களைச் செய்வதுதான். (சேஷிதம்பதி) இவ்வர்த்தங்களைச் சந்தேகம் போகும்படியாக நிஷ்கர்ஷித்துக் கொடுத்தவர் நம் தூப்புல் வேதாந்த தேசிகன். ஆகையால் அவர் அருளிய அர்த்தங்களை அறிந்தால் நமக்கு உய்யும் வகை உண்டு.

கோவிந்தாச்சாரியர்:—(எழுந்து அநேக தரம் ஸேவிக்கிருர்) தேவரீர்! பரமக்ருபையினுல் தேசிகன் பெருமையை அடியேன் மனதிலிருந்த ஸகல ஸந்தேஹங்களும் போகும்படி எடுத்துரைத்தீர். அடியேன் என்ன ப்ரத்யுபகாரம் செய்யப்போகிறேன். தேவரீருடைய திருவடிகளே அடியேனுக்குத் தஞ்சம். (விடை பெற முற்பட்டார்)

வரதாச்சாரியர் : — கோவிந்தாச்சாரே ! இங்கே வாரும் வாரும். ஒன்று சொல்ல மறந்து விட்டேன். நம் ஸம்ப்ரதாயம் பேரருளாளனுல் ப்ரவர்த்திக்கப்பட்டது. ஸ்ரீபாஷ்யகாரர் அதை தம்முடைய க்ரந்தங்களால் வ்ருத்தி பண்ணினுர். ஸ்ரீதூப்புல் வேதாந்த தேசிகன் தம் முடைய க்ரந்தங்

களினால் அதை நன்ருக ரக்ஷித்து சகல இருட்டையும் போக்கி தர்சனத்தை ஸ்தாபித்தார். இதை நிரூபிக்கும் வகையில் பேரருளாளனும், ஸ்ரீபாஷ்யகாரரும் ஸ்ரீமந் நிகாமந்த மஹாதேசிகனும் ஒன்று சேர்ந்து, ஒரு சேர்த்தியில் அநுஷ்டாநகுளம் என்கிற ஒரு உற்சவத்தில் காஞ்சியில் தூப்புல் தேசிகன் ஸன்னிதியில் ஸேவைஸாதிக்கிருர்கள். அந்த உற்சவத்தை தவருமல் ஸேவித்து வாரும்.

உமக்கு ஸமஸ்த மங்களமும் உண்டாகும். (இருவரும் சேர்ந்து உய்யும் வகையில்லை என்கிற பாட்டை சொல்கிருர்கள்)

கோவிந்தாச்சாரியர்:—அடியேன், அடியேன். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த தேசிகனுக்கு எத்தனை நூற்ருண்டு விழா கொண்டாடினாலும் போதாது. (இந்த சமயத்தில் ஒருவர் வருகிருர். தூப்புலில் அவதாரஸ்தலத்தில் உள்ள தேசிகனுக்கு ரத்ன கீரிடம் பண்ணுவதாக உத்தேசம், தேவரீர் அவசியம் ஏதாவது உபகரிக்கவேண்டும் என்று கேழ்க்கிருர்) ஓய் ஸ்வாமிந் சரியான சமயம். நம் தர்சனத்திற்கு மன்னராக விளங்கின ஸ்ரீதேசிகனுக்கு ரத்ன கீரீடம் ஸமர்ப்பித்து அவருக்குப் பட்டாபிஷேகம்வும் உசிதம். பொருத்தம் கூட இந்தாரும் என்ருல் ஆனது. (கொடுக்கிருர்)

வரதாச்சாரியரிடம் நியமனம் பெற்றுக் கொண்டு தூப்புல் அவதார ஸ்தலத்தில் நடக்கும் 7-வது நூற்ருண்டு விழாவில் கலந்து கொள்ள விரைந்து வருகிருர் கோவிந்தாச்சாரியர். என்ன சொல்லிக் கொண்டு வருகிருர். தூப்புல் அம்மான் ஆய்ந்தெடுத்த பொருளைக் கேட்டு உய்மின்! எல்லோரும் தூப்புல் பிள்ளைக்குத் தொண்டு பூண்மின்!! அவர் ஸ்ரீஸூக்திகளைப் பறை சாற்றுமின் !!! அவரை அடி பணிந்து பல்லாண்டு கூறுமின்!!!! தூப்புல் குலவிளக்கே வாழி வாழி!! என்று பலபடிபாடி தடுகுட்டமாய் பறந்து வருகிருர்.

தொண்டருகக்கும் துணையடி வாழி
நின் தூமுறுவல் கொண்டமுகம் வாழி,
வாழி வ்யாக்யாமுத்திரக்கை.
வண்திருநாமமும் வாழி,
மணிவட முப்புரிநூல் கொண்டசீர்
தூப்புல் குலமணியே வாழி நின் வடிவே.

தூப்புல் வேதாந்த தேசிகரே இன்னுமொரு நூற்ருண்டிரும்.

கவிதார்க்கிக சிங்கமும் ஹரிசந்தனமும்

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
சதுர்வேத, சதக்ரது,
ராஜகோபாலதாதாச்சாரியார் ஸ்வாமி,
ந்யாய வேதாந்த வித்வான்
திருப்பதி,

நாம் இப்பரந்த உலகத்தை நன்மை தீமைகளால் தீண்டப்பட்டதாகவே (முழுமையும்) காண்கிறோம். அன்றி (ஆனால்) அவை அதனதன் வல்லமை, எளிமையினாலேயே தான் வருவதாகவும் காண்கிறோம். சொல்கிறோம், எண்ணவும் எண்கிறோம். ஆனால் ஞானிகளான மஹாத்மாக்கள் அது அதனதன் வினைக்குத் தக்கபடியே பலன்களைப் பெற்று பெருவாரியாக துக்கத்தையே அடைவதாக கண்டு வருந்துகிறார்கள். வருந்தி கருணை மூர்த்திகளான அவர்கள் அந்த உலகம் தனது வினைப் பயனான ஸுக துக்கங்களை (வெகு துக்கத்துடன் கலந்தும் மின் மினிப் பூச்சி யளவான ஸுகத்தையும்) போக்கி துக்கத்துடன் கலப்பில்லாமல் உள்ளதான நித்யாநந்தத்தை யடைய அங்காங்கு அதனதற்குத் தக்கபடி வழிகளைப் பிரித்தும், அதைக் காணவும், கண்டு அந்த பலத்தையடையவும் செய்கிறார்கள்.

அதில் முதன்மையான இடம் பெற்றவள் க்ஷமாரூபியான பூமிப்பிராட்டி என்பதை ஸகலசேதனர்களையும் வாழ்விப்பதற்காகவே திருவேங்கட முடையான் கண்டாவதாரமான நம் ஆசார்யஸார்வபௌமனான வேதாந்தவாசிரியர் தனது ஸ்தோத்ரவாயிலுள்ள, பூஸ்துதியிலும் கோதா ஸ்துதிலும் வ்யங்க்யமாகவும், வாச்யமாகவும், ரூபகாலங்காரத்தால் அழகாக விளக்கியுள்ளார். அதை ஸம்க்ஷேபமாக இந்தவ்யாஸத்தில் விக்ஞாபிக்கிறேன்.

தாபாந் க்ஷிபந் ப்ரஸவிதா
ஸுமநோ கணாநாம்
ப்ரச்சாய சீதள தல :
ப்ரதிசன் பலாநி
த்வத்ஸங்கமாத் பவதி
மாதவி லப்தபோஷ :
சாகாசதை ரதிகதோ
ஹரிசந்தநோஸௌ

ஓ பிராட்டியே எமது ஸம்ஸாரதாபத்தைப் போக்கிக் கொள்ள வழி தெரியாமல் அதில் கஷ்டப்படும் இந்த சேதனர்களான இந்த குழந்தைகளை தாயான நீ தாய் பாசத்தால் உந்தப்பட்டவளாய் அவைகளின் எண்ணற்ற வினைகளையும் பொருத்து தாபத்தைப் போக்கி நல்ல தேவகாணங்களாக செய்து. (நல்ல வாஸனையுள்ள புஷ்பங்களைப் புஷ்பித்து) (நல்ல மனதுகளை அவர்களுக்கு உண்டுபண்ணி) ஸ்நிக்தமாயுள்ள நிழலைத் தந்து நல்ல உயர்ந்த பலன்களைத் தந்து ஆச்வாஸம் செய்து நித்யானந்தத்தை யனுபவிக்கச் செய்ய வேணும், என்று ஸகல ஜகத்ரக்ஷகனான உனது வல்லபனை வேண்ட உன்னையே இடமாகப் பெற்று (உயர்ந்தஹரிசந்தனமா) நூற்றுக்கணக்காக தன் கிளைகளைப் பரப்பி உன் வேண்டுகோளின்படியே பூர்த்தி செய்கிறான். இதையெல்லாம் உன்னுடைய சேர்க்கையாலல்லவோ தண்டதரனான பகவான் செய்கிறான் என்கிறார். இங்கு வ்யங்கயமாக பூமிஸம்பந்தம் பெற்று தான் நம் எண்ணற்ற வினைகளையும் நிர்மூலமாக போக்கிக் கொண்டு நித்யாநந்தத்தையடைய முடியும் என்றும் பூமியில் தான் எண்ணற்ற பகவதவதாரங்களும், கோயில்களும் அங்கு பகவந்மூர்த்தி எழுந்தருளியிருப்பதால் அந்த திவ்ய மங்கள விக்ரஹங்களைத் தர்சித்து இங்கேயே அவதரித்தும் உள்ள ஆசார்யாள் கடாக்ஷம் பெற்றும் மோக்ஷாநந்தத்தை யடைய முடியும் என்பதையிலும் அழகாக காட்டியுள்ளார். கோதாஸ்துதியிலும், 'ஸ்ரீரங்க ராஜ ஹரிசந்தந யோக த்ருச்யாம்'' என்று ஹரி சந்தன ஸம்பந்தத்தாலே நீ வெகு அழகாக காணப்படுகிறாய் என்றும் ஸூசிப்பித்திருக்கிறார்.

ஸ்ரீமதுபயவே· திருக்குடந்தை சித்தண்ணு ஸ்வாமி



மஹாமகோத்யாய சேட்லூர்
நரஸிம்மாச்சாரியர் ஸ்வாமி திருவயிந்தை

ஸ்ரீமதுபயவே...திருக்கோட்டியூர்
ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி
கார்த்திகை - ரோஹிணி

ஸ்ரீமதித்யாதி...மஹர்ஷி
வாஸுதேவாசாரியர் ஸ்வாமி
மாம்பலம்

JUL 1969

வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசி யறிந்திடு நாள்!

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
புரசை, நடாதூர்,
கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி சிரோமணி
ந்ருஸிம்ஹப்ரியா—ஸம்பாதகர்
திருவள்ளூர்,

ஸ்வாமியின் திருநாள் பாட்டில் இது இரண்டாவதாகப் படிக்கப்பட்டிருக்கிறது. வகுளாபரணப் பெருமாள் என்பதால் நம்மாழ்வாரைச் சொல்லுகிறது. அவருடைய தமிழ்-திருவாய்மொழி. அதன் வாசியை உட்கருத்தை அறிந்திடுநாள். அறிந்தவரான தூப்புலம்மான் அவதரித்த புரட்டாசித் திருவோணம் நாள் என்று இதன் பொருள்.

நம்மாழ்வார் எப்பொழுதும் மகுழம்பூ மாலையைச் சாற்றிக் கொண்டிருப்பார். அதனுல் அவருக்கு வகுளாபரணர் என்ற திருநாமம் உண்டாயிற்று. அப்பூவிலுள்ள வாஸனையெல்லாம் அவர் அருளிச் செய்த திருவாய்மொழியின் ஒவ்வொரு அக்ஷரத்திலும் வாஸிக்கின்றதாம். வேதங்களின் மாற்றுருக் கொண்டிருக்கிற திருவாய்மொழியை கண்டு உபதேசித்தவர் நம்மாழ்வார். **'வர்ணஸ்தோமைர் வகுளஸுமநோ வாஸநாம் உத்வஹந்தீம் ஆம்நாயாநாம் ப்ரக்ருதிமபராம்ஸம்ஹிதாம் த்ருஷ்டவந்தம்.'** என்கிருர் ஸ்வாமி தேசிகன். மேலும் வேதம் கற்றவர்கள் பகவானுக்கு ப்ரியராகிருர்கள். அதற்கு அநர்ஹர்களும் பகவத்ப்ரியர்களாக வேண்டி சடகோபன் திருவாய்மொழியை அருளிச் செய்தார். திருவாய் மொழியை ஸேவிக்கும் போதே அது பகவானிடத்தில் ஸத்யம் (உடனே) பக்தியை உண்டு பண்ணும். அதனுல் பகவான் ப்ரீதனுய் அநுக்ரஹம் செய்வான். பராசரப்ரபந்தத்தை விட (விஷ்ணுபுராணத்தைக் காட்டிலும்) வேதாந்தரஹஸ்யார்த்தங்களை விசதீகரிக்கிற திருவாய் மொழியை நம்மாழ்வார் அருளிச் செய்தார். திருவாய் மொழியில் பரிசயமில்லாதவர்களும் பகவானுக்கு ப்ரியர்களாக வேண்டி பரமக்ருபையுடன் நம்மாழ்வார் பாதுகையாக அவதரித்தார்.

த்ரமிடோபநிஷந் நிவேச சூந்யாநபி
லக்ஷ்மீரமணுய ரோசயிஷ்யந் |
த்ருவம் ஆவிசதிஸ்ம பாதுகாத்மா
சடகோபஸ்வமேவ மாநநீய: ||

இவ்விதம் வைபவமுடைய நம்மாழ்வார், திருவாய்மொழியால் பிறர்களுக்கு சிலவற்றை உபதேசிக்கின்ருர். அதன் வாசியறிந்து நடந்தவர் ஸ்வாமி ஒருவரேயாம். ஆழ்வார் திருவுள்ளத்தையநுஸரித்து அதன்படி நடத்திக் காட்டியதை இங்கு அருகிலிருந்து அநுபவித்தோம். வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசியறிந்திடும் நாள் என்று பாடினர். அதை நாமும் சற்று அனுபவிப்போம். நம்மாழ்வார் தமக்கு உசாத்துணையாக பகவதநுபவம் பண்ண வைஷ்ணவர்கள் யாரேனும் இருக்கிருர்களா என்று பார்த்தார். எல்லா வைஷ்ணவர்களும் அர்த்தபரர்களான மனிதர்களாய் மனிதர்களைக் கவிபாடிக் கொண்டிருப்பதைக் கண்டு கலங்கினர். அவர்களைப் பார்த்து **'சொன்னுல் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினே'** என்ருர். அதாவது:-மனிதர்களைப் பாடலாகா தென்று சொன்னுல், மனிதர்களை துதி

செய்து பணம் ஸம்பாதிப்பவர்கள் விரோத மாக எண்ணுவார்கள். ஆகிலும் சொல்லு கிறேன். அதன்படி அநுஷ்டிக்காவிடினும் நாம் சொல்வதை காதால் கேட்கவாவது வேணும் என்று வேண்டுகிருர். புலவர் காள்! நல்ல கவிகொண்டு ஒரு மானிடரை பாடுகையால் என்னுவது? நச்வரரானமனுஷ் யரைப்பாடி ஸம்பாதிக்கும் பெரும் பொருள் தான் எத்தனை நாளைக்குப்போதும்? மணி முடி வேங்கடவர் தாதையைப் பாடினுல் அவன் கொள்ளக் குறைவிலன் வேண்டிற் றெல்லாம் தரும் கோதிலன். ஆகையால் வள்ளலான மாமணி வண்ணன் தன்னைக் கவி சொல்லவாருங்கோள் என்று அழைக் கிருர்.

இவ்வரிய உபதேசத்தை தம் திருவுள்ளத் தில் பதியவைத்துக் கொண்டார் நம் ஸ்வாமி. ஒரு ஸமயம் விஜயநகரத்து அரசனிடம் மந்திரி பதவி வஹித்து வந்த வித்யாரண்யர் நம் தேசிகோத்தமருக்கு கடிதம் எழுதி யனுப்பினுர். 'மஹாக்யாதியுடைய ஸ்வாமிந்! அடியேன் மஹாராஜனிடம் தேவரீருடைய கவிதாசாதுர்யத்தையும், வாதத்தில் எதிரி களை எளிதில் வெல்லும் திறமையையும் விவரமாகச் சொன்னேன். அரசன் தேவரீ ருடைய கீர்த்தியை அறிந்த நாள் முதல் தேவரீரையே த்யாநித்துக் கொண்டிருக் கிருன். ஆகையால் சிஷ்யர்களுடன் தேவரீர் கள் இங்கு எழுந்தருளி தேவரீருடைய இன் சொற்களால் அரசனையும் அடியேனையும் ஆநந்திக்கும்படிச் செய்யவேண்டும்' என்று அக்கடிதத்தில் விஜ்ஞாபித்துக் கொண்டிருந் தார். இதைக் கண்ணுற்ற கவிஸிம்ஹம் ஆழ் வாரின் ஸ்ரீஸூக்தியை அடியொற்றி 'க்ஷோணீகோண' என்னும் ச்லோகத்தை எழுதியனுப்பினுர்.

''இப் பூமண்டலத்தில் ஏதோ ஒரு கண் டத்தின் ஒரு மூலையை ஆளும் அரசனை ஸ்தோத்ரம் செய்து அதனுல் அடையும் தன மானது என்னுவது? எத்தனை நாளைக்காவது? அதை நாம் ஒரு பொருட்டாக மதியோம். ஆகையால் ஸ்ரீமந் நாராயணனையே ஸ்தோத் ரம் செய்ய நிச்சயுத்துள்ளோம். ஸ்தவப்ரிய னை அவன் தன் வீடு தருவதுடன் ஆநு ஷங்கமாக இதர போகங்களையும் தரவல்ல வன். இதற்குச் சான்று—முன்பு ஒரு பிடி அவலாலே கண்ணன் குசேல முனியை குபேரனுக்கியதேயாம் ஆகையால் ஸகல பல ப்ரதனை சரண்யன் அநுக்ரஹமே நமக்கு வேண்டும்' என்று பொருள்பட பதில் ச்லோ கம் எழுதியனுப்பியாயிற்று. ஆழ்வார் நாம் சொல்படி நடக்கா விடினும் கேண்மினே! என்ருர். அவருடைய சோகத்தை நிவர்த்தி செய்வதற்காகவே ஸ்வாமி இவ்விதம் அநுஷ் டித்துக் காட்டினுர். ஆழ்வார் பாசுரத்தில் சொல்லியவைகளையே ச்லோகமாக அமைத் தார். ஆனுல் ஆழ்வார் 'கொள்ளக்குறை விலன் வேண்டிற்றெல்லாம் தரும் வள்ளல்' என்று பொதுவாகப் பாடியதை ஸ்வாமி தேசிகன் குசேல முனிக்கு குபேரஸம்பத் தைத் தந்தும் குறைவில்லாத கோவிந்த னை இருந்த வ்ருத்தாந்தத்தை த்ருஷ் டாந்த மாகக்காட்டிய ளினுர்.

அர்த்தபரர்களான சில கவிகள் 'ஆழ் வாரே! தேஹயாத்ரையை நடத்துவதற்காக ப்ரபுக்களான மனிதர்களை பாடுகின்றேம். அதனுல் என்ன குற்றம்? தேஹயாத்ரையை எப்படி நடத்துவது? என்று கேட்பதாக வைத்துப் பேசுகிருர். 'வம்மின் புலவீர் மெய்வருத்திக் கைசெய்துய்ம்மினே' என்று. அதாவது புத்திமான்களே! சரீர ப்ரயாஸைப் பட்டு ஜீவியுங்கோள் என்கிருர்: அதற்கு க்ருஷியாதி வ்யாபாரங்கள், உழைத்து சரீரச்ரமப்பட்டு செய்யக்கூடியதாகையால் அவை துஷ்கரமல்லவோ? அதைவிட ஸ்ரீமான் களான மானிடரைக் கவிபாடுவதுநன்றன்றே என்று கேட்க உங்களுடைய அபேக்ஷிதத் தைக் கொடுக்கக்கூடிய மனிதர் இங்கு ஒரு வருமில்லை. ஆகையால் எம்பெருமானைக் கவிபாடுங்கோள் என்கிருர். வைராக்ய நிதி யான நம் ஸ்வாமியை மறுபடியும் அழைக் கிருர் அரசனிடம் வரும்படி. அதற்கு ஶிலம் கிமநலம் பவேத் என்று ஆரம்பித்து ஐந்து ச்லோகங்களை அருளிச் செய்தார். அவை களும் ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை பின்பற்றி யவைகளே. ஆழ்வார் க்ருஷ்யாதிவ்யா

பாரங்களைச் செய்யுங்கோள். அதற்கு உழைக்க வேண்டுமே என்றெண்ணி மட்டா கக் கொடுக்கும் மானிடரைப் பாடுவதைவிட பகவானைப் பாடுங்கோள் என்றார். ஸ்வாமி தேசிகன் உண்ண, உணவு, குடிக்க நீர், உடுக்க கந்தை இவை மூன்றுதானே வேண் டும். இவைகளுக்காக மெய்வருத்துக்கை செய்துய்ய இசைய வேண்டாம். உங்கள் வயிற்றை நிறப்புவதற்கு வயலில் சிந்தி யுள்ள நெற்கதிர்கள் போதாதா? குளங்களி லுள்ள நீரைப்பருகக் கூடாதா? வீதிகளில் கிடக்கும் கந்தை உடுக்க உடையாகாதா? இவ்வளவு ஸுலபமாக கிடைக்கக்கூடியதற் காகவா அரசர்களைப் பாட வேண்டும்! அந்தோ! சாயங்காலத்தில் விகஸித மல் லிகை புஷ்பத்தின் வாஸனை வீசுகின்ற என் னுடைய வாக்கினால் அரசர்களிடம் ஒரு த்ருணம் கூட யாசிக்கமாட்டேன் என்றார்.

இவ்விதம் நம் ஸ்வாமி ஆழ்வார் திருவுள் ளத்தை அனுஸரித்து ஸாதித்து ஆழ்வாரின் சோகத்தைத் தவிர்த்தார். தாமும் சோகமற்ற வரானார்: வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசியறிந்து தமது அநுஷ்டாநத்தில் நடத்தி காட்டியதையும், பாசுரங்களுக்குத் தக்க ச்லோகமியற்றியதையும் ஸ்தாலீபுலாகந்யா யேந சிறிது விண்ணப்பித்துக் கொண்டேன்.

...வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசி
யறிந்திடுநாள்

...உத்தமமான புரட்டாசித் திருவோண
மெனுநாளே

வேத பரிமளம்

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
சதுர்வேத, சதக்ரது,
யக்ஞ வராஹதாதாசாரியார் ஸ்வாமி
நாவல்பாக்கம்.

ஸ்ரீஹயக்ரீவ ஸத்பக்தி ஸமுல்லஸித தீநிதிம் |
வந்தேமஹி ஜகத்வந்யம் வேதாந் தார்யமஹர்நிசம் ||

தற்காலத்தில் புதிய நூல்களை இயற்று பவர்களான சிலர் தங்கள் புலமையைப் புலப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு மிக பழமை வாய்ந்ததும் உலகத்தில் நன்மை தீமைகளை எடுத்துக் கூறுவதும் மறை என்று முன்னோர்களால் போற்றப் பட்டதுமான வேதத்தை மறந்தும், அல்லது வேதத்தில் கூறப் பட்ட யாகயஜ்ஞாதிகளை மறுத்தும் வேதத்திற்குச் சிறிதும் பொருந்தாத கருத்துக் களையே வெளியிட்டு வருகின்றனர். இது தவறு. சீரிய வேத மொழிகளையும் அதன் மேலான கருத்துக்களையும் பொன்னெனப் போற்றித் தங்கள் நூல்களில் தக்க இடங் களில் அமைத்தே நூல்களை இயற்றல் வேண்டுமென்பது ஆசார்ய ஸார்வபௌ மனை ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் திருவுள்ள மாகும்.

ஸ்வாமி தேசிகன் வடமொழி தென்மொழி களில் தன்னிகரில்லாப் புலமை பெற்றவர் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். ஸ்ரீ ஸ்வாமி ஒரு விஷயத்தில் ஓரிடத்தில் ஒரு விதமாகத் தீர்மானித்தால் அதை மாற்றி யமைக்க வல்லார் ஒருவரும் இல்லை. அத் தகைய பெருமை பெற்றிருந்தும் ஸ்ரீ தேசிகன் தன் அருளிச் செயல்களில் வேதங்களின் சீரிய கருத்துக்களையும்—ஏன் பல இடங் களில் வேதத்திலுள்ள சொற்றொடர்களையுமே அமைத்துள்ளமை சான்றோரறிந்ததாகும்.

ஆனால் இக்காலத்தில் பழமையான கருத்துக்களைப் கையாண்டால் இழிவாகக் கருதப்படுகிறது. முற்காலத்திலும் இத்தகைய கருத்து ஒரு சிலரிடம் இருந்திருக்கக் கூடும் என்று தெரிகிறது. ஆகவே தான் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் தர்க பாண்டியத்தாலே.........

.........என்று அருளியுள்ளார். ஸ்ரீஸ்வாமி வைதிக ஸம்ப்ரதாயார்த்தங்களை அனுசரிப் பதை ஏகதேசிகள் சிலர் இகழ்ந்திருக்கக் கூடும். அதனால் தான் வாக்கில் வீரம் ததும்ப இவ்வாறு கூறியுள்ளார். யுக்தி சாஸ்திரங்களில் உள்ள புலமை காரணமாக உள்ளதை இல்லதென்றும் இல்லாததை உள்ள தென்றும் நினைத்தவாறு ஸாதிக்க வல்ல ஜ்ஞானம் பெற்றிருக்கிறோமாயினும் பழமையின் பெருமை நோக்கியே வேத ப்ராமணங்களை ஆதாரமாகக் கொண்டு தத்வங்களை விளக்கிச் சொல்லுகிறோம் என்கிறார்.

இவ்வாறாக ஸ்ரீ தேசிகனுடைய க்ரந்தங்கள் பலவற்றிலும் வேதக் கருத்துக்களை வேத ரஸிகர்கள் அனுபவித்து வருகின்றனர். ஸ்வாமி தேசிகனின் வேதாந்த க்ரந்தங்கள் முதலாக ஸ்தோத்ர காவ்ய க்ரந்தங்கள் ஈறாக எல்லாவற்றிலும் வேத மணம் வீசுகிறது. அவற்றுள் இரண்டிடங்களை மட்டும் விஞ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்வாமி தேசிகன் வேதங்களிடத்துத் தமக்குள்ள ப்ரதிபத்தியால் வேதங்களைப் பல விதமாகக் கையாளுகிறார். அவற்றுள் வேதச்

சொற்றொடரைத் தன் கவிதையில் வைத்துக் காண்பிக்கும் இடம்:—

கருட பஞ்சாசத் என்னும் ஸ்தோத்ரத்தில் நேத்ரம் காயத்ரமூசே 2.—த்ருவிருதிதிச சிரோ (1)—நாமதேயம் யஜூம்ஷி (3)—சந்தாம்ஸ்யங்காநி (4)-திஷ்ண்யாத்மபிரஜநி (5)—சபைர்விக்ரஹோ வாமதேவ்யம் (6)—யஸ்யஸ் தோமாத்மநோஸௌ (7)—ப்ருஹ திதரகருத் (8)—தாத்ருகாம்நாதபுச்ச : (9)

வேதத்தில் 4-ம் காண்டம்

ஸுபர்ணோஸி கருத்மான் த்ருவிர்த்தே சிரோ காயத்ரம் சக்ஷு (1)-ஸ்தோம ஆத்மா (2)-ஸாமதே தனூர் வாமதேவ்யம் (3)—ப்ருஹத்ரதந்தரே பக்ஷௌஸி (4)-யஜ்ஞாயக் ஞியம் (5)-புச்சம் சந்தாம் (6)-அங்காநி (7) திஷ்ணியாச் (8)-சபா யஜூம்ஷி நாம (8):

இவ்விரண்டையும் ஒப்பிட்டு பார்த்தால் வேதத்திலுள்ள சொற்கள் அப்படியே கையாளப் பட்டிருப்பதை யறியலாம்.

(2) யாதவாப்யுதயத்தில் ருக்மிணி கல்யாணத்தில் க்ருஷ்ணன் பிராயச்சித்த ஹோமம் செய்ததைச் சொல்லுமிடத்திலுள்ள ச்லோகம்.

யதத்ர (1) கர்மண்யயதாக்ருதம் தத் (2)
ஸ்விஷ்டம் க்ரியாதக்னி ரிதி ப்ருவாண:
ஸ்வதேஜஸா பாவித விச்வதேஜா:
ஸ்வாஹாஸகம் தேவ முபாஸ்த தேவ:

யதஸ்ய (1) கர்மணோத்யரீரிசம் யத்வாந் யூந மிஹாகரம் அக்னிஷ்டத்ஸ்விஷ்டக்ருத் (2) வித்வான் ஸர்வம் ஸ்விஷ்டம் ஸுஹுதம் கரோது ஸ்வாஹா வேதப்ரமாணம் காட்டி நிர்ணயம் செய்தல்

(2) நாராயணன் ஸர்வோத்க்ருஷ்டன் : மற்ற தேவர்கள் அவனுக்கு அங்கமாக (சரீரமாக) உள்ளனர். இதற்கு பூர்வ காண்டத்திலுள்ள வேதவாக்யங்களைக் காட்டி ஆராதன காண்டமான பூர்வ காண்டத்தில் தனக்குள்ள ஈடுபாட்டை வெளியிடுகிறார்.

ஸ்தோத்ர ரத்னத்தில் 'ஸ்வாபாவிக' என்கிற ச்லோக வ்யாக்யானத்தில் 'அக்னிர் வை தேவநாமவமோ விஷ்ணு: பரம: இதி ஹோதாரோ அதீயதே (ஐதரேய பிராமணம் (தேவர்களில் அக்னி கீழ்பட்டவன் விஷ்ணு உயர்ந்தவன்) அக்னிரவமோ தேவதாநம் விஷ்ணு: பரம அத்வர்யவ: (யஜுர்வேதம் 5-ஆம் காண்டம்) தத்ப்ரம்ஹாஸ ஆத்மா-அங்காந்யந்யா தேவதா இதி (நிரவதிக ப்ருஹத்தான வஸ்து ப்ரம்ஹசப்தவாச்யம் இதர தேவதைகள் அவனுக்கு அங்கங்கள்)

(2) எம்பெருமான் நீல மேகத்தைப் போன்ற திருமேனி கொண்டவன் என்று நம்மாழ்வார் முதலானவர்கள் அருளியதற்கு வேதப்ர மாணம் காட்டி வாஜபேய யாகத்தில் ப்ரஜாபதி என்று சொல்லப்படுபவன் விஷ்ணு என்று காண்பிக்கிறார்:

க:ஸ்ரீ:ச்ரிய: என்ற ச்லோக வியாக்யானத் தில் ஸப்ததசப்ராஜபத்யான் பசூன் ஆல பேத ச்யாமா ஏகரூபா பவந்தி எவமிவ ஹி ப்ரஜாபதி: இதி.

வேதத்தில் வாஜபேயம் என்றதொரு ஸோம யாகம் சொல்லப்படுகிறது. அந்த யாகத்தில் முக்யமாய் ஆராதிக்கப்படுபவன் ப்ரஜாபதி, அந்தப்ரஜாபதியை 17 பசுக்களைக் கொண்டு ஆராதிக்கவேண்டும். அந்த 17 பசுக்களும் ஒரே நிறமாக அதாவது ச்யாமமாக (நீலமாக்) இருக்கவேண்டும். ப்ரஜாபதி என்பவன் ச்யாமமான திருமேனியுடையவனுகையால் பசுக்களும்அதே நிறத்துடனிருக்கவேண்டும். (தன்னைப் போல் இருப்பதால் இவற்றை அன்புடன் ஏற்பான் என்ற காரணம் இருக் கலாம்) இங்கு ச்யாம நிற முள்ளவனுகைச் சொல்லப்பட்ட ப்ரஜாபதி ஜீவகோடியிலுள்ள ப்ரஜாபதியல்லன். ப்ரதம ஸ்ருஷ்டி கர்த்தா வான நாராயணனே. ச்யாம வர்ணம் நாரா யணனுக்குத் தான் உலகத்தில் பிரஸித்த மானது என்று நிச்சயிக்கிறார். ஸ்வாமி தேசிகன் இதைத் திருவுள்ளத்தில் கொண்டு தான் வரதராஜ பஞ்சாசத்தில் ''ச்யாமளோ ஹவ்ய வாஹ:'' என்று ஸாதித்தார். ஆழ் வார்களும் கார் வண்ணன் கடல் வண்ணன் என்றெல்லாம் அருளிச் செய்தார்கள்.

பாதுகை புரோகிதராதல்
(வைதிக வர்ணனை)

ப்ராஸ்தாநிகேஷு ஸமயேஷு.........
புண்யாஹ கோஷ மிவ கர்ப்ப
மணிப்ரணுதை: ||

(ஓ பாதுகையே! ஸ்ரீரங்கநாதனின் யாத்ரா காலங்களில் ப்ராம்மண சிரேஷ்டரால் அடையப் பட்ட ஸ்தானத்தையடைந்ததான ரத்தினங்களின் நாதத்தால் ஸ்வஸ்திவாசன சப்தத்தை வளர்க்கிருய்.)

இதில் ஸ்ரீ தேசிகன் பகவானுடைய யாத்ரா காலங்களில் வைதிகமாகவும் விச்வ மங்கள மாகவுமுள்ள ஸ்வஸ்திவாசன மந்த்ரத்தை யனுஸந்திக்கவேண்டுமென்பதையும் அதற்கு வேதமந்த்ரம் தான் முக்கியமென்றும் வெளிப் படுத்துகின்ருர். சுப காரியங்கள் தொடங்கும் போது ஸ்வஸ்தி வாசனம் சொல்லியே தொடங்க வேண்டும் என்றும் ஸாதிக்கின்ருர். மேலும் எம்பெருமான் வீதியில் எழுந்தருளும் போது உண்டாகும் பாதுகா நாதம் ஸ்வஸ்தி வாசனம் போன்றது. பாதுகை புரோகிதர் ஸ்தானத்திலிருந்து மந்த்ரம் படிப்பது போலுள்ளது என்றும் அருளிச் செய்கிருர்.

வேதத்தைக் கொண்டு நன்மைகளை அறிவித்தல்:—

சரணகமல மேதத் ரங்கநாதஸ்ய
நித்யம்............

(ஓ பாதுகையே! ரங்கநாதனுடைய திருவடிகளே எக்காலத்தும் நமக்குச் சரண மாகும் என்று உணர்த்தும் வேதங்கள் மனோஹரமான உன் நாதத்தைக் கேவலம் அனு வாதம் செய்கின்றன.)

உலகத்தில் விதி நிஷேதங்களைத், தான் நேரே கூருமல் வேதங்களைக் கொண்டே தெரிவிக்க வேண்டும் என்றதொரு கருத்தை ஸ்வாமி இதன் மூலம் வெளியிடுகிருர். கர்தவ்யாகர்தவ்யங்களில் சாஸ்திரமே ப்ரமாணம் என்பதையும் உணர்த்துகிருர். உலகக்ஷேமத்திற்காகவே இருப்பது வேதம். இதை ஸ்வாமி உடையவரும் அசேஷ ஜகத்திதானுசாஸநச்ருதி சிரஸி ஸமதிகதோய மர்த்த:'' என்று வேதார்த்த ஸங்க்ரஹத்தில் அருளிச் செய்தார். ஆகவே ஹிதசாஸனம் நன்மை தெரிவிப்பது வேதமேயாதலால் அதைக் கொண்டே உலகக்ஷேமத்தை பாதுகாதேவி வெளியிடுகிருள்.

உலக இயல்பும் வேதமும்.

உலகத்தில் மகிழ்ச்சியடைபவன் (அல்லது செல்வம் பெற்றவன்) தன்னையும் மீறி மகிழ்ச்சிப் பெருக்கால் பாடத் தொடங்கு கிருன். இதை வேதமே ''யதா கலுவை புருஷ: ச்ரியமச்னுதே வீணாயை வாத்யதே'' என்று கூறுகிறது. ஸ்வாமி இதையே திருவுள்ளத்தில் கொண்டு பாதுகை விஷயத் தில் இணைத்துக் காட்டுகின்ருர்.

''முரபிச்சரணாரவிந்தரூபம்
ஸஹிதாநந்தமவாப்ய புருஷார்த்தம்
அனகைர் மணிபாதுகே நிநாதை:
அஹமந்நாத இதீவகாயஸி த்வம்.''

பகவானுடைய கடாக்ஷம் பெற்றவர் களுக்கு முக்தி ஸுலபமாகையால் அதை நினைத்து மகிழ்ந்து முக்தர் பாடும் பாட்டான 'நான் ப்ரம்ஹானந்தம் அனுபவிப்பன்' (நான் அன்னம் புசிப்பவன்) என்பதைப் பாடுகின்ருர்.

இவ்வாறு பல இடங்களிலும் ஸ்வாமி தேசிகன் தமக்கு வேதங்களிலுள்ள ப்ராவண் யத்தை வெளியிட்டுள்ளார்:

நிகமாந்த மஹாதேசிகனும் நம் கடமையும்

ஸ்ரீ. சீ. வி. சேஷாத்ரி,
தமிழாசிரியர், பூண்டி, வ. ஆ.

எப்பொழுதும் 'பொருள், பொருள் என்றும்' 'விஞ்ஞானம்' என்றும் தன் மனத்தையும், அறிவையும் இவ்வுலகப் பொருள்களிலேயே செலுத்தும் மேனுட்டார் கூட, "எமக்குச் சிந்தையில் கலக்கம் நேர்ந்தால் ஆறுதலும், அமைதியும் பெறுதற்குச் சில நிமிடங்கள் நோக்கும் பகுதி இந்தியாவாகும்" என்று கூறுவர். பொருளாதாரத்திலும், விஞ்ஞானத் திலும் சிறந்த அந்நாடுகளைக் கவரக் கூடிய ஒரு சக்தி இந்தியாவுக்கு உண்டு என்ருல் அச்சக்தி ஆன்மீக சக்தி தவிர வேறு ஒன்ருக இருக்க முடியாது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அத்தகைய சக்தியினை வளர்த்த சமயங்களும், சமயச் சான்ருேர்களும் நிரம் பியது நம் நாவலம் பெரிய தீவு. அச்சமயங் களில் தலையாயதும்' சமயச் சான்ருேர்களில் சிறந்தவர்களில் சிறந்தவரும், வைணவமும், வேதாந்த தேசிகனும் என்ருல் அது பொய் யுரையோ, புனைந்துரையோ அன்று; முற்றும் மெய்யுரையே.

'தொண்டை நன்ஞடு சான்ருேருடைத்து' என்னும் ஔவை வாக்கினை மெய்ப்பிக்கு மாறு பல சான்ருேர் தோன்றியருளிய நம் தொண்டை நாட்டில், இந்நாட்டின், தலை நகரமும் 'பெருமாள் கோவில்' என்றே சிறப் பிக்கப் பெறுவதும் ஆன காஞ்சி மாநகரில் தூப்புல் ஸ்தலத்தில் அவதரித்தருளிய ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் வைஷ்ணவ மதத்துக்குப் புரிந்தருளிய தொண்டினைச் சாதாரண மனிதப் பிறவியர் செய்தல் எக்காலும் முடியாத ஒன்று.

'வைணவவிநயம் என்பர் பிறர். அவ்விநயம் சரணுகதி தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டதே. நம் வைணவ மதத்தின் மிகப் பெருந்தத்துவம் அதுவே" எல்லாப் பற்றையும் விட்டு 'அவன்' திருவடியினைப் பற்றுவார்க்குப் பிறப்பு, இறப்பு, இல்லாத பேரின்ப நிலையினை 'அவன்' அருளுவான்' என்ற கருத்தைத் தம் அரும்பெரு நூல்களில் ஆங்காங்கு விளக்கி, "அடைக்கலப் பத்து" என்றே தனிப் பிரபந்தம் வகுத்த அவருக்குக் "கைம்மாறும் செய்வோம்" என்று நாம் முனைதல் ஊமன் கண்ட கனவினைப் போல் முடியுமேயன்றி வேறில்லை.

மதமும் மொழியும் கைபிணைந்தே சென்றிருப் பதைச் சரித்திரம் கூறும். அவ்வகையில் நம் வைணவ மதத்தை வளர்த்த ஆழ்வார்களும், அவர்களுக்கு பின் வந்த வேதாந்த தேசி கனும் வைணவத்துக்கேயன்றித் தமிழுக்கும் செய்துள்ள மிகப் பெரும் பணியை எண்ணி ஞல், அதை விளக்க அந்த ஆதிசேடனையே துணைக்கு அழைக்க வேண்டுமேயன்றி நம் ஒரு சிறு நாவல் ஒன்றும் இயலாது போம். தமிழ் யாப்பிலக் கணங்களில் கூறப்படும் நால்வகைப் பாக்களையும், பாவினங்களையும், முழுக்க முழுக்கக் காணலாம் இவர் பிரபந்தங் களில் ஆழ்வார்களில் 'நாலுகவிப் பெருமாள்' என்று விருது பெற்ற திருமங்கை மன்னனுக் குப் பிறகு நம் நிகமாந்த மஹாதேசிகன் அத்தகைய சிறப்பினைப் பெறமுடிகிறது. இருவர் பாசுரங்களிலும் மிகச் சிறந்த சொல்லழகு, பொருளழகு, தொடையழகு, நடையழகு, சந்த அழகு ஆகியவற்றைக் காணமுடியும். தமிழ் மொழியில் மட்டுமின்றி ஸம்ஸ்கிருதத்தில் அவர் இயற்றிய நூல்கள் மிகப் பலவாயிருக்கின்றன. அம்மொழியில் சிறிதும் பரிசயமில்லாத அடியேன் அது

பற்றி எங்ஙனம் எழுதுவது என்றே அது பற்றிக் கூறாது தமிழ் பற்றி மட்டும் கூறினேன்.

இத்தகைய மிகப் பெரிய சிறப்புக்களுக் குரிய நம் தூப்புலம்மானுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் எவ்வளவோ! 700-ஆவது ஆண்டு திரு நட்சத்திர விழா நடத்துவது அக்கடமைகளில் மிகச் சிறிய ஒன்றே. மிகப் பெரிய நன்மையை இறை வனிடம் பிரார்த்திக்கும் ஒருவன் அதற்குப் பிரதியாக ஐந்து காசு மதிப்புள்ள கர்ப்பூரம் ஏற்றுவதாய்க் கூறுவது போன்றதே இது. அவ்விறைவன் எவ்வாறு எதனையும் எதிர் பாராது நம் தேவைகளைத் தானே உணர்ந்து செய்து தருகின்றானோ அது போல் நம் கண்டாவதாரர் நமக்கு வேண்டிய எல்லா வற்றையும் செய்து தந்து எவ்விதப் பிரதி யுபகாரத்தையும் எதிர்நோக்கினாரில்லை. ஆயினும் நாம் செய்யும் இச்சிறு செயலையும் செய்யாது போவோமாயின் நன்றி கொன்ற பாவத்துக்கு ஆளாய்விடுவோம். ஆதலால் இபபெரு விழா தமிழகமெங்கும், இந்தியா வெங்கும் உலகெங்கும் சிறப்பாக நடக்க அப்பெருமான் அருளையே வேண்டுவோ மாக.

அக்நிஹோத்ரம் - நாவல்பாக்கம்
நாராயணாசார்யர் ஸ்வாமி
ஆடி ம்ருகசீர்ஷம்

ஸ்ரீமதித்யாதி...நாவல்பாக்கம்
ஐயா. தேவநாதாசார்ய ஸ்வாமி
ஆடி - திருவாதிரை

JUL 1969

வேதாந்த குருவின் விளங்கக் காட்டும் உவமைகள்

தொகுத்தளித்தவர் :
S. S. ராகவதாதாசாரிய ஸ்வாமி,
வியாகரண சிரோமணி,
"The Hindu" Madras.

தெரியாத மறை நிலங்களைத் தெளிய வைப்பது உவமைகளே. உவமைகளால் உயர்கிறுன் கவி. உபமாகாளிதாஸஸ்ய என்று காளிதாஸனும் கவி ஸார்வ பௌம ஞகிறுன் உவமையால். நம் சீரொன்று தூப்புல் திருவேங்கட முடையான் தத்வம் விளங்கச் சொன்ன உவமைகளில் ஓரொன்று தானே அமையாதோ ரசிகர்களின் மனம் மகிழ! பொருள் விளங்க! இருப்பினும் கவிதார்கிக சிம்மம் தம் ரஹஸ்ய கிரந்தங்களில் சொல்வளம், பொருள் வளம் சொரிய எடுத்தாண்ட உவமைகள் உவந்து அளிக்கப்படுகின்றன, பல்வினைவன் கயிற்ருல் பந்த முற்று உழல்கின்றவர் நல்வினை மூட்டிய நாரணன் பதம் தெளிந்து உணர :—

அபரிமிதமான அம்ருதசாகரத்தை அல்லித்தண்டாலே பரிமிதமாக அனுபவிக்குமா போலே...

அபிரூபன் ஆபரணம் பூண்டாப் போலே...

பதிக்கும் பத்னிக்கும் க்ருஹக்ஷேத்ராதிகள் எல்லாம் சேஷமாயிருக்கு மாப் போலே...

துலாத்ருதங்களான ஸ்வர்ண பாஷாணுதிகளுக்கு ஓர் ஆகாரத்தாலே பரமசாம்யம் சொல்லுமாப் போலே...

மல்லிகைப் பூவிற்கு சிவப்பும் வெளுப்பும் வாரா நின்ருல் ஒன்று சிம்சுகாதி உபாதிப்ராப்தமாய் ஒன்று ஸ்வபாவப்ராப்தமாய் இருக்கிறுப் போலே...

பெருங்காற்றில் மாங்காய் எடுப்பாரைப் போலே...

ஆசார்யர் சிஷ்யனைத் திருத்த விரகு பார்க்குமாப் போலே...

திருத்துழாய்க்கு நீர் இறைக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களைப் போலே...

நடனுக்கும் சாமாஜிகருக்கும் ரஸம் ஒத்திருக்கிறுப் போலே...

பதியை உகப்பித்து அதனாலே பதிவ்ரதை உகக்குமாப் போலே...

ராஜ குலம் என்று ராஜாவஷ்டம்பத்தைக் கவிகள் கூடச் சொல்லுமாப் போலே...

பசுக்களுக்காகப் புலிகளைத் தொடர்ந்து கொல்லும் கணக்கிலே பறப்பதன் குட்டி தவழாதிறே !

கிணற்றின் கரையில் பிள்ளையை வாங்காதாற் போலே...

கலத்திலே சோற்றையிட்டுக் கையைப் பிடித்தாற் போலே...

ராஜ சேவகருடைய ஸ்தநந்தயருக்கு புருஷார்த்த லாபம் போலே...

பெரு விடாய்ப் பட்டவன் தண்ணீரைக் கண்டால் ஒருகாலும் விட மாட்டாதாற் போலே...

ஆலங் கட்டியை விட்டெறிந்தாற் போலே...

கறந்த பாலுள் நெய்யே போலே...

பதிஸந்நிதியில் பதிவ்ரதாலங்காரம் போலே...

ச்ரௌதமே யாகிலும் ஸத்ய வசனாதிகள் போலே...

பாலன் சந்திரனைப் பிடிக்க கை நீட்டுமாப் போலே...

சேற்றில் விழுந்த சிறுபசலை எடுக்க விழுந்த பிதாவைப் போலே...

பாலனை உபச்சந்தநம்பண்ணி அபத்யத்தைப் பரிஹரிக்குமாப்போலே...

சேற்றில் விழுந்த சிறு மக்களைப் பிதா அழுக்குடனே எடுத்துக் கொண்டு கரை யேறுமாப் போலே...

சார்வபௌமன் தன் சாமந்தரானவர்கள் எல்லோரும் ஒருவனை சத்கரிக்கும்படி பண்ணுமாப் போலே...

ஆகரத்தினின்றும் எடுத்த ரத்தினத்தின் அழுக்ககற்றுமாப் போலே...

சிறைக் கூடத்தில் நின்றும் புறப்பட விட்ட ராஜ குமாரனுக்கு ஸ்திர மான யௌவ ராஜ்யம் கொடுக்குமாப் போலே...

இரும்புண்ட நீர் போலே...

காற்றத்திடைப்பட்ட கலவர் மனம் போலே...

இருபாடெரி கொள்ளியினுள் எறும்பு போலே...

பாம்பொடு ஒரு கூரையுட் பயின்றுற் போலே...

வெள்ளத்திடை பட்ட நரியினம் போலே...

சங்கிலித் துவக்குப் போலே...

ஆயிரம் கோடி பால சூர்யர்கள் உதித்தாற் போலே...

பாற்கடல்களை யெல்லாம் அடுக்கி விரித்தாற் போலே..

அடலுரகம் உண்டுமிழ்ந்த அருக்கன் போலே...

அழுக்கடைந்து கழுவிய நல் தரளம் போலே...

கடலொழுகிக் கரை சேர்ந்த கலமே போலே...

காட்டுத் தீ கலந் தொழிந்த களிறே போலே...

மடல் கவரும் மயல் கழிந்த மாதர் போல...

வன் சிறை போய் மன்னர் பதம் பெற்றுர் போல...

அமுதப் பிரவாகம் சுழியாறு பட்டாற் போல...

மேகங்கள் ஸமுத்ர ஜலத்தை வாங்கி ஸர்வோ பஜீவ்யமான தண்ணீராக உமிழுமாப் போல...

மஹா ரத்ன கர்ப்பமான மாணிக்கச் செப்பு போல...

வேடுவச் சேரியில் கிளி போல...

அன்று ஈன்ற கன்றுக்கு இரங்கிச் சுரக்கும் தேநுவைப் போல...

சிறிய கண்ணுடி பெரிய உருக்களைக் காட்டுமாப் போல...

அபிஷேகத்துக்கு நாளிட்ட ராஜ குமாரனுக்கு சிறையிலே எடுத்து கை நீட்டின சேட்டிமார் பக்கலிலே கண்ணோட்ட முண்டாமாப் போல...

முப்பத்தி ரண்டடியான துரவு தத்துவார் முன்னடியிலே விழுந்ததோடு முப்பதா மடியிலே விழுந்த தோடு வாசியில்லாதாப் போலே...

அபரிச் சேத்யமான கடலிலே படகோட்டுவார் வழி முதலாக வேண்டுவன தெளியுமாப் போலே...

க்ருஷி பண்ணுதே உண்ண விரகுடையவன் க்ருஷி சிந்தைவ்ய் விடுமாப் போலே...

விடாய் தீர கங்காஸ்நாநம் பண்ண பாவம் போமாப் போலே...

தாதிமார் சொன்ன பாசுரத்தைச் சொல்லி ஸார்வபௌமனைச் சரணம் புகும் முக்தரான ஸாமந்த குமாரர்களைப் போலே...

ஒரு மலையில் நின்றும் ஒரு மலையிலே தாவும் ஸிம்ஹ சரீரத்தில் ஜந்துக்களைப் போலே...

உள்ளிருக்கிற ரத்னம் காண்கைக்குக் கிழிச்சீரை கண்டாற் போலே...

தைல தாரைப் போலே...

பெருவிடாய்ப் பட்டவன் தடாகத்தைக் கண்டாற் போலே...

பித்தோபஹதனுக்குப் பால் கைக்குமாப் போலே...

அந்தப்புர பரிஜந விஷயத்திற் போலே...

அல்பவ்யாஜத்தாலே வசீகார்யனை ஸுஜந ஸார்வபௌமனைப் போலே...

குமாரனோடு ஒக்க திர்யக்கான கிளிக்குப் பாலூட்டுங் கணக்கிலே...

கலவெள்ளுக் கட்டுப் போய்க் கலவெண் ணெயாயிற்று -

தன்னுடைய த்ரவ்யத்தை ராஜாவுக்கு உபஹாரமாகக் கொடுப்பாரைப் போலே...

அநேக வ்யாபார ஸாத்யமான தாநுஷ்கனுடைய லக்ஷய பேதார்த்தமான பாண மோக்ஷம் க்ஷண க்ருத்யமாகிறாப் போலே...

அகிஞ்சநன் அயத்நமாக மஹா நிதியைப் பெறுமாப் போலே...

ஓரோரவஸரங்களிலே கைக் கூலிப் போலே...

ப்ரத்யக்ஷ விதித பரம புருஷாபிப்ராயரான முக்தரைப் போலே...

பழந் திருவிடையாட்டத்திலே சிறிதிடத்தை அடைத்துக் கொண்டிருப்பாரைப் போலே...

முக்தருடைய கைங்கர்யப் பரம்பரை போலே...

வருகிற நீருக்கு அணை கோலுங் கணக்கிலே...

அக்கரையில் அபிமத தேசத்துக்குப் போக ஓடம் பார்த்திருப்பார் நினைத்த போது விட வொண்ணாத பணபந்தத்யூதத்தில் இழியாதே வேண்டின மட்டிலே தலைக் கட்டுகைக்கு ஈடான விஹாரத்யூதத்திலே இழிந்தாலும் த்யூத சாஸ்த்திரத்தின் படியே அடிதப்பாதே கருவி வைக்குமாப் போலே...

பித்த பரிஹாரார்த்தமாக க்ஷீரஸேவை பண்ணுவாரைப் போலன்றிக்கே அயத்நலப்தமான ஔஷதத்தாலே அவிலம்பிதமாக ஆரோக்யம் பெற்றவர்கள் பால் வார்த்துண்ணுமாப் போலே...

அபிஷேகம் பண்ணப் போகிற ராஜ குமாரனுக்கு ராத்ரியில் விளக்கேற்றி வைக்குமாப் போலே...

ராஜாவுக்கு ராஜகுமாரோபலாலநம் போலே...

ஸ்வதந்த்ரனாய் ஸ்வச்சந்த லீலனான ராஜா தான் பூண்ட ஆபரணத்தையும் இட்ட மாலையையும் அடியார்களுடையவும், ஆனை, குதிரைகளுடையவும் கழுத்திலே இடுமாப் போல...

பதிவ்ரதா தர்மம் போலே...

சந்தன குஸுமாதிகள் போலவும் நிலவு தென்றல் போலவும் அபிமத விஷயங்கள் போலவும்...

ஸர்ப்பாக்நிகளைக் கண்டாற் போல...

காஷ்ட லோஷ்டாதிகளைக் கண்டாற் போலே...

ஸார்வபௌமனாயிருப்பானொரு ராஜாவினுடைய புத்திரனை ராஜஸந்நிதியிலே பரிபவித்தால் ராஜா வெறுக்குமாப் போலே...

ராஜா ஸார்வபௌமனாயிருக்க ராஜமகிஷி க்ஷுத்ர ஜந்துக்கள் பக்கலிலே மடிப்பிச்சை புக்கால் ராஜாவுக்கு அவத்யமாய் அத்தாலே அவளை அவன் வெறுக்குமாப் போலே...

ரத்னத்துக்கும் பாஷாணத்துக்கும் வாசியறியாதாப் போலே...

பாம்போடொரு கூரையிலே பயின்றாற் போலே...

வேலிட்டுப் பாய வேண்டுமது முன்னிட்டுப் பாய்ந்து கழியுமென்ற கணக்கிலே...

பெருங்காயம் வைத்த மரங்களுக்கு ஸ்தல்ாதி விசேஷங்களாலே வாட்டத்துக்குக் காலதாரதம்ய முள்ள மாத்ரம்...

வாளாலே ஓங்கிவிடுமாப் போலே...

ராஜ புத்திர - அபராதாதிகளிற் போலே...

ஸைரந்த்ரிகைக்கு ஸேவை தப்பின போது தாதாத்விகமான பரிமளாதி கஊயும் இழந்து பயானுபவமும் உண்டாமாப் போலே...

ராஜ தாராபராதம் போலே...

பகவத் பரிக்ரஹமான கோ கோபஜாதிகளுடையவும் துளஸீ சம் பகாதிகளுடையவும் கோமயம்ருகமதாதிகளுடையவும் வைஷம்யம் போலே...

ம்ருத்யுவின் கடைவாயிலே அகப்பட்டாற் போலே...

ஈர்த்தவாய் தெரியாமல் வஜ்ரலேப கடித மானுற் போல...

அபிஷிக்தையான மஹிஷியைப் போலே...

அவஹிதராய் நடப்பார் இடறுமாப் போலே...

ஸௌபரி குசேலாதி களுக்குப் போலே...

பொன்னும் இரும்புமான விலங்குகள் போலே...

சிறை கிடந்த ராஜ குமாரன் திறத்தில் ப்ரஸந்நனுன ராஜா விலங்கை வெட்டிச் சிறை கூடத்தினின்றும் கொண்டு புறப்படுமாப் போலே...

இது கற்பூரத்தையும், கண்ட சர்க்கரையையும் இட்ட மாத்ரம்...

வார்த்தை சொல்ல கற்கிற முகவச்யனுன ராஜ குமாரஊ ராஜா எடுத்துக் கொண்டு உலாவுமாப் போலே...

ஆறு கடக்கைக்குப் பற்றின தெப்பம் போக விடுமாப் போலே...

அந்யோந்யம் ஒரு வயஸில் தோழன்மாரைப் போலே...

வரப் போகிற கண்ணுலத்துக்கு நாள் எண்ணி யிருக்குமாப் போலே...

பித்தோபஹதனுக்குப் ப்ரதிகூலமான பால் பித்தம் சமித்தால் அனுகூலமாமாப் போலவும்...

ஸார்வபௌமனுன பிதாவினுடைய சிறைக் கூடம் சிறை கிடக்கிற ராஜ குமாரனுக்கு அப்போது ப்ரதிகூலமாய் ராஜா சிறைக் கூடத்தி னின்றும் புறப்படவிட்டு உகந்து துல்ய போகனுக வைத்த வளவில் சிறைக் கூடமான கோப்புக் குலையாதிருக்கச் செய்தே பிதாவின் விபூதி யென்று அனுகூலமாமாப் போலவும்...

ஸஹஸ்ரத்தில் சதாதிகளைப் போலே...

க்ருஷி பண்ணின பிதாவும் நிர்வ்யாபாரரான புத்ராதிகளும் க்ருஷி பலத்தைப் பூஜிக்குமாப் போலே...

சத்ர சாமராதிகளைப் போலே...

நம்மாழ்வார் நாத முனிகளுள் ளிட்டார்க்குப் போலே...

திருவடி நிலைகள் விஷயத்தில் ஸ்ரீ பரதாழ்வான் நடத்தின ராஜ ஸேவக வ்ருத்தியை போலே...

வாழ்க்கைப்பட்ட வதூவின் மாங்கல்ய ஸூத்ராதி ரக்ஷணம் போலே...

நமஸ்காரம், வாசிகம் - மாநஸம் - காயிகம் என்று பிரிந்தாற் போல...,

இவை மூன்றும் பொருந்தினபோது பூர்ண நமஸ்காரமானுற் போலே...

காக விபீஷணுதிகளுக்குப் போலே...

கோஸலஜநபதத்தில் ஜந்துக்களுக்குப் போலே...

இடைச்சிகளைப் போலே...

ஆபரணத்தை உடையவனுக்கு அவன் தானே ரக்ஷித்துக் கொண்டு பூணக் கொடுக்குமாப் போலே...

சத்ர சாமராதிகளைப் போலே...

களவு கொண்டு கொடுத்த த்ரவ்யத்தை மீளக்களவு கொண்டாற் போல்...

கூனர் குறளரைக் கொண்டாடி ரக்ஷிக்கை நிரபேக்ஷரான ராஜாக் களுக்கு லீலையுமாய் க்ருபாகார்யமுமாய்க் காணு நின்றோம்...

தாய் முலைப் பாலுக்கு ஆர்த்தனுய் அழுதால் செய்யுமள வன்றிக்கே கூலி கொடுப்பாரைப் போலே...

தாய் முலைப் பால் போலே; ஸ்தநந்தயனுடைய முலையுண்கிற வ்யாபாரம் போலே...

பாஸ்கரனுக்கும் பரபைக்கும் ஸ்வதஸ்ஸித்தமான தேஜஸ்த்வம் போலே...

ஆலம்ப சப்தம் யாக பர்யந்த மானாற் போலே...

லோகத்தில் தன்னை ரக்ஷித்துக் கொள்ள விரகில்லாதே அழுந்து வானொருவன் அப்போது ஸந்நிஹிதனான ரக்ஷண ஸமர்த்தனைப் பற்றுமாப் போலே...

லோகத்தில் ஒருவனை ஒருவன் ஆச்ரயிக்கும் போது இன்னபடியே ஆச்ரயித்தால் இவன் இரங்கும் என்னுமிடத்தை ஒரு ப்ரமாணத் தாலே அறிந்து ஆச்ரயிக்குமாப் போலே...

அவ்வோ பலங்களுக்காக ஸேவா விசேஷங்களை விதிக்கிறுப் போலே...

ராஜ ஸேவையைப் போலே...

ஸபரிகர ஸேவா விஷேங்கள் போலே...

மோக்ஷ ப்ரதிகூலங்களான ராகாத்யுபாதிகளாலே வந்த காம்ய நிஷித் தங்கள் போலே...

சரீர ஸம்பந்த மேயடியாக வருகிற க்ஷுத் பிபாஸாதிகளுக்குப் பரிஹாரம் பண்ணுகிற கணக்கிலே...

அபிசாராதிகளை விதித்த கட்டளையிலே...

அதிதி ஸத்காராதிகளிலே விஹிதங்களான கவாலம்பாதிகள் போலே...

யதா சாஸ்த்ரம் ஆதுராதிகளுக்கு அவகாஹநாதிகள் போலே...

க்ரத்வந்தரானுஷ்டாநம் பண்ணினவனுக்கு மேலுள்ள நித்யநைமித் திகங்கள் போலே...

விதைக்கிறவனுடைய அபிஸந்தி பேதத்தாலே ஒரு விதை வேறொரு பலத்தைக் கொடுக்கக் கண்டோமோ...

இது அரோகனுக்கும் ஆரோக்யார்த்திக்கும் க்ஷீரம் ஸேவ்ய மென்ற தோடு ஒக்கும்...

எட்டு கண்ணான கரும்பிலே வேர்ப்பற்றும் தலையாடையும் கழிந்தால் நடுவுள்ள அம்சம் ஸர்வோபஜீவ்யமாகிறுப் போலே...

கீணீர்குன்றம்
ஸ்ரீநிவாஸ வரதாச்சாரியார் ஸ்வாமி

மகாமகோபாத்யாய
கபிஸ்தலம் தேசிகாசார்யஸ்வாமி

திரு ஸுரபியானாலும் கோத்வம் கழியாதிறே...

தீர்த்த யாத்திரையிலே் வழி திகைத்தாரை வழியிலே சேர்த்த மாத்ரம்...

ஆதுர விஷயத்தில் ஸ்ப்ருஷ்ட்வா ஸ்நாநம் போலவும், தீக்ஷா காலத்தில் விஷ்ணு ஹஸ்தப்ரதாநாக்யஸ்பர்சம் போலவும், திருப் பிரதிஷ்டையில் மஹா பாகவத ஸ்பர்சம் போலவும்...

குடும்ப பரணாதிகளுக்கு அலைந்து ஸந்ந்யாஸாதிகளைப் பற்றுவாரைப் போலே...

முக்தனுடைய கைங்கர்யம் போலவும் அரோகனுடைய பால் வார்த்துண்கை போலவும்...

இது பசித்து உண்பார் மாத்ரம்; இங்ஙனல்லாத போது ஓட்டத்துக்கு அப்பம் தின்பார் மாத்திரம்...

ஸந்நிஹிதமான கசாதிகளைப் போலே....பித்ராதிகளைப் போலே...

உள்ளொரு பசையற்றுப் பசுத்தோல் போர்த்துப் புலிப் பாய்ச்சல் பாயுங் கணக்கிலே...

மரு பூமியில் தண்ணீர் பெற்றாற் போலே...

ஹவிருத்தேச்ய - தேவதாத்வந்த்வத்தில் ஹவிஸ்ஸு போலே...

த்ருஷ்டா ஸீதா என்னுமாப் போலே...

அர்ஜுந ரதம் போலே...

ராஸ மண்டலம் போலே்...

நரபதியைப் பற்ற கைங்கர்யத்தை அபேக்ஷித்தானென்றால் நரரைப் பற்றக் கைங்கர்யம் அபேக்ஷிதமாகாதாப் போலே...

மாணிக்கத்தில் ஒளியும்....நியதையான ஈச்வரேச்சையாலே பரம்புமாப் போலே...

ஆதித்யாதிகளுக்குப் ப்ரபாதிகள் போலே...

கபோதத்தைக் கபோதி கேட்பித்தாற் போலே...

ததிபாண்டாதிகளைப் போலே ஹடாத்காரம் பண்ணியும் அநுபந்தி பர்யந்தமாகப் பரம புருஷார்த்தத்தை அபேக்ஷிக்கைக்கு லௌகிகரானவர்கள் த்யூதாதிகள் பண்ணுமாப் போலே...

ஸுஹ்ருத் - புத்ராதி - உபலாலநங்களிற் போலே...

ஸந்ந்யாஸாச்ரமஸ்த்தர்க்குப் பண்டுள்ளவை சிலவற்றை நிஷேதித்துப் புதியனவாகச் சிலவற்றை விதிக்குமாப் போலே...

கேவல ஸுலபமான த்ருணாதிகளைப் போலன்றிக்கே...துர்லபமான மேருவைப் போலு மன்றிக்கே...

அசித்துக்கள் சப்தாதிகளை ஈசுவரன் உண்டாக்க சுமக்கிறுப் போலே...

தேவர்களுடைய அமரத்வ வ்யபதேசம் போலே...

அநிஷ்ட்ட நிவ்ருத்தியிலும் இஷ்ட ப்ராப்தியிலும் ஒன்றைச் சொல்ல இரண்டும் வருமாப் போலே...

யோகிகள் யோக விசேஷத்தாலே தேஹந்யாஸம் பண்ணுமாப் போலே...

கபால ஸ்த்ததோயாதிகளைப் போலே...

கணிகாலங்காரம் - விலைச் சாந்து - அம்பலத்திற் அவற்பொறி குரங்கின் கையில் பூமாலை...

களவு கொண்டு ஆபரணம் பூண்டாற் போலே...

காலன் கொண்டு ஆபரணம் பூண்டாற் போலே...

வேரில்லா கொன்றன் போலே...

விளக்கு பிடிக்குமவன், தன்னை ராஜா ஒரு கார்யத்துக்குப் போகச் சொன்னால் தன் கையில் விளக்கை அதுக்கு ப்ராப்தரானவர் கையிலே கொடுத்துப் போமாப் போலே...

பிதா யௌவராஜ்யத்திற்கு முடி சூட்ட அழைத்துவரவிட்ட ராஜ குமாரன் போமாப் போலே...

பருத்திப் பட்ட பன்னிரண்டும் பட்டுப் பூட்டைக் குண்டிகைப் போலே...... முதலியன.

[ஸம்ஸ்க்ருதத்தில் ஸ்வாமி அளித்திருக்கும் உபமானங்கள் எண்ணிலங்கா].

ஸ்ரீ

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த

ப்ரதாந சதகம்

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி

ய: ப்ரதான : ப்ரபந்நாநாம் ப்ரதாநசதகம் வ்யதாத் !
தம் நௌமி வேங்கடாசார்யம் துர்யம் மார்கே யதீசிது :

பரவிதுபதர்சிதம் ந : ப்ரதாந சதகம் ப்ரமாணஸித்தமிதம்
பஜதி சதகோடிபாவம் பரபக்ஷேச ப்ரயோஜநே ச ஸதாம்

பொங்குபுனலாறுகளிற் புவனமெல்லாம்
பொன்கழலாலளந்தவன் றன்ருளால்வந்த
கங்கையெனு நதிபோலக் கடல்களேழிற்
கமலைபிறந்தவனுகந்த கடலேபோலச்
சங்குகளில் அவனேந்தும் சங்கேபோலத்
தாரிலவன்றண்டுள வத்தாரேபோல
எங்கள் குலபதிகள் இவைமேலாமென்றே
எண்ணியநல்வார்த்தைகள் நாமிசைகின்ருேமே.

"வார்த்தையறிபவர் மாயவர்க்காளன்றி யாவரோ'' என்ருழ்வார் ஓர் அவதாரத்தில் ப்ரத்யக்ஷாதி வார்த்தையை உதாஹரித்தவிது மற்றும் ஆசார்யர்கள் முமுக்ஷுக்களுக்கும் அருளிச் செய்யும் ப்ரதான நிஷ்கர்ஷக வாக்யங்களுக்கும் உபலக்ஷணம். அவையெல்லாங்கூட இங்கே விவக்ஷிதங்களாகவுமாம்.

அவையெவை என்னில் :

1. ப்ரத்யக்ஷாதி ப்ரமாணங்களில் காட்டிலும் 'வேதாச் சாஸ்த்ரம் பரம் நாஸ்தி' இத்யாதிகளிற்படியே மற்றுமுள்ள சாஸ்திரங்களிற் காட்டிலும் பாரலௌகிக புருஷார்த்த ததுபாயங்களை யதாவஸ்திதமாகக் காட்டுகிற 'வேதம்' ப்ரதானம்.

2. அதில் பராவர தத்வஹித புருஷார்த்தங்களில் அந்யதாஸித்த ப்ரமாணங்களால் வரும் கலக்கங்களை யெல்லாம் தீர்க்கவல்ல 'வேதாந்தம் ப்ரதானம்.

3. அது தன்னில் 'இதம் புருஷ ஸூக்தம் ஹி ஸர்வ வேதேஷு பட்யதே' என்கிறபடியே ஸர்வ வேதபடிதமாய்க் கொண்டு ச்ரிய:பதி யான மஹாபுருஷனை மூலகாரணமாகவும் மோக்ஷோபாயமாகவும் காட்டுகிற புருஷ ஸூக்தம் ப்ரதானம்.

4. இம்மஹா புருஷனை ஆராதிப்பார்க்கு மந்த்ரங்களாகச் சொன்ன வற்றில் 'வ்யாபக வர்க்கம்' ப்ரதானம்.

5. அதிலும் ஸர்வாசார்ய பரிக்ரஹாதிசயத்தாலும் சேஷ சேஷி ஸர்வதத்வ கண்டோக்தியாலும் 'ந மந்த்ரோஷ்டாக்ஷராத் பர:' என்னும் படியான 'ஸ்ரீமதஷ்டாக்ஷரம்' ப்ரதானம்.

6. இம்மந்த்ரோக்தி மாதாவாக ஆசார்யன் பிதாவாகக் கற்பிக்கிற 'வித்யாஜன்மம்' ஜன்மங்கள் எல்லாத்திலும் ப்ரதானம்.

7. இம்மந்த்ரத்தில் பதங்கள் மூன்றில் 'கிராமஸ்மி ஏகமக்ஷரம், ப்ரணவோஹ்யக்ஷரம் பரம்' என்கிற மூலமாகிய 'வொற்றையெழுத்து' ப்ரதானம்.

8. த்ரியக்ஷர ப்ருஹ்மமான விதில் ச்ருதிகள் பிரித்துக்காட்டின அக்ஷரங்கள் மூன்றில் 'அக்ஷராணும் அகாரோஸ்மி' என்கிற ஸர்வ வாசகஜாத ப்ரக்ருதியான 'ப்ரதமாக்ஷரம்' ப்ரதானம்.

9. இதிலும் லுப்தவிபக்த்யம்சத்தில் காட்டில் ஸர்வவாச்ய ஜாத ப்ரக்ருதியான ஸர்வரக்ஷகனைச் சொல்லுகிற 'ப்ரக்ருத்யம்சம்' ப்ரதானம்.

10. இதில் தத்வார்த்தங்கள் பலவுண்டானாலும் உபயுக்ததமமாகை யாலே 'ரக்ஷணம்' ப்ரதானம்.

11. ரக்ஷகமாகவிங்கு ப்ரதமோபாத்த விசேஷ்யத்தினுடைய ரக்ஷகத்வோபயுக்த விசேஷணங்களில் மூலமந்த்ர விவரணமான த்வயத்தில் 'முற்பட்ட விசேஷணம்' ப்ரதானம்.

12. இப்படி ஸ்ரீமானாய் அகாரவாச்யனான விச்வபதியை ஸர்வ பர வித்யா வேத்யன் என்று நிர்ணயிக்கிற 'நாராயணாநுவாகம்' தத்வ நிர்ணயகவாக்யங்களில் ப்ரதானம்.

13. 'அஸ்யா மம ச சேஷம் ஹி விபூதிருபயாத்மிகா' இத்யாதிகளில் படியே விபூதியைப்பற்ற 'விஷ்ணுபத்தினியும் ச்ரியப்பதியும் ப்ரதானர்கள்.

14. ஏகமான இச்சேஷித்வம் உபயாதிஷ்டானமானாலும் தம்பதிகளில் பதிப்ராதான்யம் லௌகிகவைதிக மர்யாதையின்படியே நித்ய நியதமாகையாலே பதிகளுக்கும் பரமனான பதி என்னும்படி நின்ற 'நாராயணனே' ஸர்வ ப்ரதானனும்.

15. இவனை ப்ரம்ஹத்வ, ப்ரும்ஹணத்வங்களுடையவை எல்லாத்திலும் ப்ரக்ருஷ்டதத்வமாகையாலே 'பரப்ரும்ஹம்' என்றும் ப்ரகாசங்கள் தனக்கும் ப்ரகாசகன் ஆகையாலே 'பரஞ்ஜோதிஸ்ஸென்றும், ஸர்வாத்மாக்களுக்கும் அந்தராத்மாவாகையாலே 'பரமாத்மாவென்றும், தேவதைகள்' தங்களுக்கும் ஆராத்யனாகையாலே பரதேவதையென்றும் முக்தருக்கும் ப்ரதான ப்ராப்யனாகையாலே 'பராகதி' என்றும், முமுக்ஷுக்களுக்கு வசீகரணீய வர்கத்தில் ஸீமாவாகையாலே 'பராகாஷ்ட்டை' யென்றும், ஸர்வோபாய ப்ரஸாதநீய ஸித்தோபாயனாகையாலே பராயணமென்றும் ஸித்திஹேதுக்களில் ஸர்வ ஸித்திஹேதுவாகையாலே 'பரமதபஸ்ஸென்றும் பாவனங்கள் தனக்கும் பாவனத்வசக்திப்ரதனாகையாலே பவித்ராணாம் பவித்ரம் என்றும், 'குணயத்தம், இத்யாதிகள்படியே தன் குணங்கள் முதலான மங்களங்களுக்கெல்லாம் மங்களத்வாவஹனாகையாலே 'மங்களாநாஞ்ச மங்களம்' என்னும்படி ஸர்வ ப்ரகாரத்தாலும் வரும் ப்ராதான்யங்கள் எல்லாத்தையும்நினைத்து லோகப்ரதானன் என்று சொல்லுகிறது.

16. மற்றும் லோகத்துக்கும் ப்ரதானராய் தோற்றுமவர்கள் த்வார சேஷிகளாகையாலே அவர்களைப்பற்றி நித்யமாகவாதல் காதாசித்கமாகவாதல் சேஷமாமவற்றுக்கும், ஸர்வேச்வரனே 'நிருபாதிக ப்ரதான சேஷியாய்' நிற்கும்.

17. இப்படி விச்வசேஷியான நாராயணனையும் சேஷ பூதனான நரனையும் அர்ஜுனரதம்போலே முன்னும் பின்னுமாகக் காட்டுகிற ப்ரணவத்தில் சேஷமாகச் சொல்லப்பட்ட 'ஜீவன்' சப்தவ்ருத்தியாலே ப்ரதானனாய் தோற்றும்.

18. இஜ்ஜீவன் இங்கு நிருபகனாய் நின்றாலும் ராஜபுருஷ ராமாநுஜாதி சப்தங்களில்போலே அர்த்த ஸ்வபாவத்தாலே 'ஸர்வ சேஷியே' ப்ரதானனும்.

19. இச்சேஷ சேஷிகளை ஸமாநாதிகரண சப்தங்களாலே சொல்லுமிடம் அப்ருதக் ஸித்த விசேஷணவாசி சப்தங்கள் நிஷ்ர்கஷ பர்யவஸாயி அல்லாதபோது விசேஷ்யபர்யந்தங்களாகிற ந்யாயத்தாலே ஜீவனுடைய அத்யந்த 'பாரதந்த்ர்யாதிகளை அநுஸந்திக்கை' ப்ரதானம்.

20. இங்கு வ்யதிகரணமாகச் சொல்லுகிறவிது ரக்ஷ்யத்வ ரக்ஷகத்வ-அணுத்வ விபுத்வாதி வைதர்ம்யாநுஸந்தானத்தில் ப்ரதானம்.

21. இப் ப்ரணவத்தில் பிறந்த தத்வக்ஞானம் மோக்ஷோபாயாதிகா ராநுப்ரவிஷ்ட க்ஞானங்களில் ப்ரதானம்.

22. இப்படி ஸித்த ஸ்வரூபனான அதிகாரியினுடைய அனுஷ்டானங்களில் மத்யமபத ஸங்க்ருஹீதமான 'ஸாங்கப்ரபதனம்' ப்ரதானம்.

23. இதில் 'ந்யாஸ: பஞ்சாங்க ஸம்யுத:' என்கையாலே ஆநுகூல்ய ஸங்கல்பாதிகளைப்பற்ற ஸமர்ப்பணம் ப்ரதானம்.

24. ஸமர்ப்பணந்தன்னில் 'வபுராதிஷு, மம நாத பலே ஸ்வாம்ய வியுக்ததா' இத்யாதிகளிற்படியே தத்வக்ஞான ரூபமாய்க் கொண்டு அன்வயிக்கிற ஸ்வரூப ஸமர்பணாதி பாகத்தில் காட்டில், 'ஆத்மாத்மீய பரந்யாஸோ ஹ்யாத்மநிக்ஷேப உச்யதே என்கிற பரந்யாஸம் ப்ரதானம்.

25. இது விதிவாக்யத்தில் 'ஸாத்யமாக சோதிதமான' ரூபத்தாலே ப்ரதானம்.

26. இத்தாலே வசீகரணீயமான 'ஸித்தோபாயம்' ஸர்வ காரணத்வ ஸ்வதந்த்ரத்வ அவ்யவஹிதோபாயத்வாதிகளாலே ப்ரபத்தி தன்னையும் பற்ற ப்ரதானம்.

27. இந்த நமஸ்ஸில் ஸ்தூலயோஜனையில் 'ஸாத்யோபாயம்' ப்ரதானம்.

28. ஸூக்ஷ்ம யோஜனையில் 'நிரபேக்ஷ ஸ்வாதந்த்ர்யாதி நிஷேதம்' ப்ரதானம்.

29. 'பரயோஜனையில்' நமநநாமவான் என்கிறவிதின் ஸ்வாரஸ்யத்தைப் பார்த்தால் முன்புசொன்ன 'ஸாத்யோபாயம்' ப்ரதானம்.

30. 'தத் ப்ராப்தயே ப்ரதாநோயம் பந்தா நமந நாமவான்' என்று ஈச்வரன் தன்னையே விவக்ஷித்தால் ஸித்தோபாயமான அவன்தானே ப்ரதானம்.

31. இதில் ஸித்தோபாயத்தை ஸுப்ரஸித்த விசேஷ நாமமாய்க் கொண்டு விசதீகரிக்கிற த்ருதீய பதத்தில் ஸமாஸத்வயத்தில் உத்தர பதார்த்த ப்ரதானமாய் உபாய பாவத்தையும் கண்டோக்தி பண்ணுகிற 'தத்புருஷ ஸமாஸம்' ப்ரதானம்.

32. திருமந்த்ரத்தில் யோஜநாபேதங்களாலே ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களில் 'ஓரொன்றும் இவ்விரண்டும் மூன்றுஞ் சேரவும்' ப்ரதானம்.

33. இதில் சொன்ன ஸித்தஸாத்யோபாயங்களிரண்டையும் இதின் பல விசேஷத்தையும் விசிஷ்டமாக விசதீகரிக்கிற 'த்வயம்' சரணாகதி மந்திரங்களில் ப்ரதானம்.

34. இங்கு திருவடிகளை உபாயமாகச் சொன்னவிது ப்ரபத்திக் கிலக்கான ச்ரியப்பதியினுடைய ஸ்வரூபத்திற் காட்டில், சுபாச்ரய விக்ரஹத்துக்கு ப்ரதிபத்தி ஸௌகர்யத்தாலே 'ஸாலம்பநோ மஹா யோக:' என்னும்படியான ப்ராதான்யத்தையும் அதுதன்னில் 'அநதி க்ரமணீயம் ஹி சரணக்ரஹணம்' இத்யாதிகளிற்படியே திருவடிகளைப் பற்றுமதுக்கு 'க்ருபோத்தம்பகத்வாதிசயத்'தாலுண்டான ப்ரதான்யத் தையும் ப்ரகாசித்தபடி.

35. இப்படி சொன்னாலும் 'இத்தாலே விசிஷ்டனானவனே' பல ப்ரதான ஸங்கல்பாச்ரயமான ப்ரதானோபாயம்.

36. குணாதிகளால் வரும் வைசிஷ்ட்யம் ஸித்தோபாய ஐக்யத் துக்கும் ஸித்த ப்ராப்யைக்யத்துக்கும் விருத்தமல்லாமையாலே உப நிஷத்துக்களின்படியே யிங்கும் ஸித்த பல பாகத்தில் 'உபாயப்ராப் யைக்யம்' ப்ரதானமாகலாம்.

37. திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் ப்ரகாசித்த ப்ரபத்தி சாஸ்த் ரத்தை உபப்ரும்ஹிக்குமவற்றில் 'பகவச் சாஸ்த்ரம் ப்ரதானம்'.

38. இவ்வர்த்தத்தை சித்தரஞ்சனத்தோடே ஸர்வரையும் எளி தாகத் தெளிவிக்குமவற்றில் தொண்டர்க் கமுதுண்ணலாய்ப் பொய்யில் பாடலான 'ஆழ்வார் அருளிச்செயல் ப்ரதானம்'.

39. இதுக்கு இதிஹாஸங்களில் சரண்ய தம்பதி வாக்ய விசேஷ பூஷிதமான 'ஸ்ரீமத் ராமாயணம்' ப்ரதானம்.

40. ந்யாஸோபாஸநாதிரூப ஸர்வ சாஸ்த்ரார்த்தோபப்ரும்ஹணங்களில் 'சத்வார ஏகதோ வேதா: பாரதஞ்சைக மேகத:' என்னும்படி நிற்கிற 'மஹாபாரதம்' ப்ரதானம்.

41. 'தர்மே சார்த்தே ச காமேச மோக்ஷே ச பரதர்ஷப' இத்யாதிகளின்படியே, சதுர்வித புருஷார்த்த ஸ்தாபகமான விதில் 'அத்யாத்ம பாகம்' ப்ரதானம்.

42. அதிலும் 'அத்ரோபநிஷதம் புண்யாம் க்ருஷ்ண த்வைபாயநோப்ரவீத்' என்னும்படி ஸர்வோபநிஷத்ஸாரமான 'கீதாசாஸ்த்ரம்' ப்ரதானம்.

43. அது தன்னில், ஸர்வகுஹ்யதமமென்று ப்ரசம்ஸித்து அநந்தரம் சாஸ்த்ர ஸாரார்த்த ஸங்க்ரஹம் பண்ணுகிற 'விரண்டுச்லோகம்' ப்ரதானம்.

44. அவையிரண்டிலும் த்வயார்த்தமான ப்ரபதனத்தினுடைய அதிகாரி நைரபேக்ஷ்ய விஷய ஸ்வரூப பல விசேஷங்களைச் சுருங்கத் தெளிவிக்கையாலே 'சரம ச்லோகம்' ப்ரதானம்.

45. இதில் வாக்யங்கள் மூன்றில் உத்தரவாக்யங்கள் விதி விசேஷங்களால் அந்வயிக்கின்றன வாகையாலே 'பூர்வ வாக்யம்' ப்ரதானம்.

46. பல வாக்யத்தில் சொன்ன ப்ரதிபந்த நிவ்ருத்தியைப் பற்ற அர்த்த ஸ்வபாவத்தாலே 'மாமேவைஷ்யஸி' இத்யாதிகளில் சொன்ன 'ஸ்வத: ப்ராப்த ஸ்வாமிலாபம்' ப்ரதானம்.

47. அர்ஜுனனுடைய சோகநிவர்தக வாக்யங்களில் த்விதீயாத்யாயோக்தமான 'அஸ்தான ஸ்நேஹாதி நிபந்தன' சோக நிவர்தனத்திலும், ஷோடசாத்யாயத்தில் சொன்ன அநதிகாரித்வ சங்கா நிபந்தன சோக நிவர்த்தனத்திலும் காட்டில் இங்கு சொல்கிற சீக்ரகாரி ஸுகரோபாயோபதேசத்தாலே விலம்பிதபல க்ருச்ரஸாத்ய உபாயாபதேச ஜநித 'சோகநிவர்த்தனம்' ப்ரதானம்.

48. இப்படி ரஹஸ்யத்ரயார்த்தம் தெளிந்து, பரந்யாஸம் பண்ணுகிற அதிகாரிகளில் த்ருப்தரில் காட்டில் 'ஆர்த்தர்' ப்ரதானர்.

49. ஆர்த்தர் தங்களில் 'க்ஷுஞந்தராதி காலக்ஷேப க்ஷமதையில்' தாரதாம்யத்தாலே ப்ரதான தாரதம்யமுண்டாம்.

50. த்ருப்தனுக்கு ஸ்வயம் ப்ரயோஜனமான கதிசிந்தனுதிகளில் 'மாக வைகுந்தம் காண்பதற்கு என் மனமேகமெண்ணும் வாங்கெனே நீ மணிவண்ணு' வென்றிருக்குமது ப்ரதானம்.

51. இவனுக்கு அந்திம ப்ரத்யயம் 'மதீயயைவதயயா அதிப்ர புத்த' என்கிறபடியே ஸ்வயத்ன நிரபேக்ஷ பலமாக ஸித்திக்கும்படி அப்போதைக்கிப்போதே சொல்லிவைக்குமது ப்ரதானம்.

52. இவனுக்கு இங்கு இருந்த காலம் பராப்தமான ஆக்ஞாநுக்ஞா ஸித்தங்களான கைங்கர்யங்களில் 'ஆக்ஞாஸித்தமானவை' அகரணத்தில் அதிகாரோசிதப்ராயஸ்சித்தம் பண்ணவேண்டும்படி நிற்கையாலே ப்ரதானங்களாம்.

53. அவை தன்னில் 'ச்ரூயதாம் தர்மஸர்வஸ்வம், பரரந்த்ரேஷு ஜாத்யந்தா' இத்யாதிகளின்படியே விஹிதகரணங்களிற் காட்டில் 'நிஷித்த வர்ஜனம்' ப்ராசுர்யேண ப்ரதானம்.

54. அநுக்ஞாஸித்த கைங்கர்யங்களில் க்ரியாம்சத்தில் க்ஞாநாம்சம் ப்ரதானமானபடியாலே க்ஞாநோபயுக்த ப்ரபந்த பரிசீலனமும், க்ஞாதார்த்த ப்ரதிஸந்தாந ரஸஹேதுவான 'த்வயவசநாதிகளும்' ப்ரதானங்கள்.

55. பரோபதேச ரூபத்தாலே இவற்றை சீலிக்கும்போது கேழ்க்கிற சிஷ்யர்களில் 'நாஸ்திகோ பிந்நமர்யாத: வித்யாசோரோ குருத்ரோஹீ, ந ஸ்தாஸ்யந்த்யுபதேசே ச உபதிஷ்டேப்யவிச்வஸ்தா :' இத்யாதிகளில் சொன்ன தோஷமுடையவர்களிலும் காட்டில் அந்தர்யாமி பர்யந்த நித்யகர்ம பஹிர்பூத 'தேவதாந்தர ஸ்பர்சம் விடாதவன்' வர்ஜநீயரில் ப்ரதானன்.

56. யதோபதேசம் ப்ரதிஷ்டித புத்தியாய் யதாசாஸ்த்ரம் ஆசரித்து அடைந்தவர்களையும் ஆசரிப்பிக்கைக்கு ருசியும் சக்தியும் உடையவனுய் 'ப்ரம்ஹ வித்ப்ய : பரம் பூதம் ந கிஞ்சிதிஹ வித்யதே' என்னும் கொண்டாடும்படியானவன் 'உபாதேயரில்' ப்ரதானன்:

57. சத்வாரிம்சத் ஸம்ஸ்காரங்கள் எல்லாம் உடையவனே யாகிலும், 'தயாஸர்வேஷு பூதேஷு, அமாநித்வம் அதம்பித்வம்' இத்யாதிகளில் சொன்ன ஆத்ம குணபூர்த்தி யில்லாதவனில் காட்டில்

ஸம்ஸ்காரங்களில் ஏகதேசமுடையவனேயாகிலும் அதிகாரானுகுண கைங்கர்ய 'பர்யந்தாத்மகுண பூர்த்தியுடையவன்' ப்ரதானன்.

58. இக்கைங்கர்யம் ஸ்வநிதாந பூத சேஷத்வம்போல் பாகவத பர்யந்தங்களாய் நின்ருல் 'ஸ்வாராதனம் விஹாயாபி' இத்யாதிகளின் படியே 'பாகவத கைங்கர்யம்' ப்ரதானம்.

59. பாகவதரில் 'ஸம்யக்ஞாநாதிகர்' ஸத்கார யோக்யரில் ப்ரதானர்.

60. நிர்வேதாதிகர் 'ஸல்லாபயோக்யரில்' ப்ரதானர்.

61. வைராக்யாதிகர் 'ஸஹவாஸ யோக்யரில்' ப்ரதானர்.

62. அபராத பீருக்களாய் அவதாரங்கள் போலே ஸ்வமாஹாத்ம்யத்தை மறைத்து வர்த்திக்குமவர்கள் 'பீதியோக்யரில்' ப்ரதானர்.

63. ஆஹ்லாத சீத இத்யாதிகளின்படியே 'பக்தி பரவசர்' ப்ரீதி யோக்யரில் ப்ரதானர்.

64. இப்பாகவதருடைய கைங்கர்யங்களில் 'குரோர் குருதரம் நாஸ்தி' இத்யாதிகளிற் சொன்ன 'ஆசார்ய கைங்கர்யம்' ப்ரதானம்.

65. உத்தமமான விது 'மத்யமத்தோடே' கூடிஞல் ப்ரதானதரம்.

66. 'ப்ரதம மத்யமங்க' ளிரண்டோடுங் கூடிஞல் ப்ரதானதமம்.

67. இவர்களுடைய கைங்கர்யங்களில் தனக்குப் பலவும் அசக்யமாஞல் சாஸ்த்ராநுகுணமாக 'ப்ரதிஸம்பந்தி' புகுந்தது ப்ரதானம்.

68. இப்படி உகப்பிக்கு மவற்றில் 'பாவ விசேஷம்' ப்ரதானமென்னுமிடத்தை 'செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த மெய்ம்மை பெருவார்த்தை' முதலான ப்ரமாணங்களிலே கண்டு கொள்வது.

69. சேதன வ்யாபாரங்கள் எல்லாம் ஸ்வப்ரயோஜநார்த்தங்கள் என்கிற ந்யாயத்தாலே கைங்கர்யத்தில் தன்னுகப்பும் ப்ரயோஜனமாஞலும் இது தானும் பரசேஷமென்று தெளிகையாலே 'ப்ரஹர்ஷயிஷ்யாமி' என்கிற பரனுகப்பே ப்ரதானம்.

70. கைங்கர்ய லக்ஷ்யங்களான பகவத் விக்ரஹங்களில் 'பரவ்யூஹார்தி' க்ரமத்தாலே ப்ரதான்யக்ரமம்.

71. அவை யெல்லாத்திலும் பரத்வ ப்ரதிபத்தி தார்ட்யமுடையவ் னுக்கு 'தனக்கு ருசித்த பகவததவதார' மெல்லாம் ப்ரதானம்.

72. அச்சித்ரமாக இவனுக்கு ஸர்வ காலங்களும் யதா சாஸ்த்ரம் ஏதேனுமொரு ப்ரவ்ருத்தி நிவ்ருத்திரூப கைங்கர்ய யோக்யங்களானு லும் ஸத்வாதிகளாலுண்டான ஔசித்யாதிசயத்தாலே 'க்ருதயுகாதி' களுக்கு ப்ராதான்யம்.

73. 'த்யாயந் க்ருதே யஜந் யக்ஞைஸ்த்ரேதாயாம்' இத்யாதி களில் படியே லகுவான ஆநுகூல்ய வ்யாபாரம் குருவான பகவத் ப்ரீதியைப் பிறப்பிக்கையாலே கலிப்ரதான்யம் சொல்லப்பட்டது.

74. கைங்கர்யயோபகரணங்களில் 'விசித்ரா தேஹ ஸம்பத்தி.' இத்யாதிகளிற் சொன்ன உள்ளம் உரை செயல் உள்ள விம்மூன்றும் ப்ரதாநம்.

75. இவை அநுகுணங்களாகில் துலஸீதோயாதி பாஹ்யோ பகரணங்களில் 'சாஸ்த்ராவிருத்தமாகப் பெற்றது' ப்ரதானம்.

76. கைங்கர்ய தேசங்களில் அநாபத்தில் பாகவதோத்ரமான 'பகவத்க்ஷேத்திரம்' ப்ரதானம்.

77. அதில் ஸ்வயம்வயக்த ஸைத்தார்ஷ மாநுஷ வைஷ்ணவங் களில் 'பூர்வ பூர்வம்' ப்ரதானம்.

78. இவை கிட்டாத காலத்தில் கருந்தடமுகில் வண்ணனைக் கடைக் கொண்டு கைதொழும் 'பக்தர்கள் இருந்தவூர் தானேவைகுந்த மாகுந்தம் மூரெல்லாம்' என்னும்படி ப்ரதானம்.

79. கைங்கர்ய யோக்யதாபாதக தீர்த்தங்களில் யதாதிகாரம் அவகாஹநாதிகள் பண்ணுமவனுக்கு 'மானஸதீர்த்தமும்' தீர்த்தத்திலே 'அவகாஹித்தவர்களும்' ப்ரதானர்.

80. கைங்கர்ய தசைகளில் சாண்டில்யாதிகள் சொன்ன் கரணத்ரய 'சுத்தியுள்ள தசா விசேஷம்' ப்ரதானம்.

81. 'ராகாத்யபேதம்' ஹ்ருதயம் இத்யாதிகளாலே கரணத்ரய தோஷங்களில் ப்ரதானங்களும் காட்டப்பட்டன. ஆந்தர சத்ருக் களாய் ஜேதவ்யங்களான இத் தோஷங்கள் எல்லாத்திலும் 'க்ருத்த: பாபம் ந குர்யாத் க:' இத்யாதிகளில் படியே க்ரோதமாய் பரிணமிக்கும் படி அதிப்ரவ்ருத்தமான 'காமம்' ப்ரதானம்.

82. தோஷங்கள் புகுருதபடி பண்ணுமவற்றில் அநுசாஸனத்தாலும் அநுக்ரஹத்தாலும் சிக்ஷகரான ஸாத்விகரோடுண்டான 'ஸஹவாஸம்' ப்ரதானம்.

83. தோஷ மூலங்களாய் 'ந க்ஷமாமி' என்னப் பண்ணும் அபசாரங்களில் 'அஸஹ்யாபசாரம்' ப்ரதானம்.

84. அது தன்னில் க்ருதக்நதையடியாகவரும் 'ஆசார்ய த்ரோஹம்' ப்ரதானம்.

85. 'ந க்ஷமாமி' என்கிறவனே கடுக ப்ரஸாதிக்கு மவற்றில் 'அந்தரேண அஞ்சலிம் பத்வா, அஞ்சலி : பரமா முத்ரா' இத்யாதிகளிற்படியே அநுதாப க்ருதக்ஞுத்வாதி யுக்தமான 'அஞ்சலிபந்தம்' ப்ரதானம்.

86. பாகவதாபசார பரிஹாரங்களில் 'பாகவதரை முன்னிட்டே க்ஷமிப்பிவிக்குமது' ப்ரதானம்.

87. அநுதாபாதிகள் இல்லாதபோது முடிவில் அத:பாதியாகாதபடி பண்ணுமவற்றில் ஆசார்யனுடைய 'ஆந்ருசம்ஸ்யம்' ப்ரதானம்.

88. இது தனக்கு மூலமாய், தீர்ந்த வடியவர் தம்மை திருத்திப் பணிகொள்ள வல்ல ஸர்வ பரமாசார்யனுடைய 'வாநர ராக்ஷஸ வர்க ஸாக்ஷிகமான வ்ரதவிசேஷம்' அநுதப்தரை தேற்றுமவற்றில் ப்ரதானம்.

89. 'ஆசார்ய:ச்ரேஷ்டோ குரூணாம்' என் கையாலே குருவர்கத்தில் 'ஆசார்யன்' ப்ரதானன்.

90. அத்யாத்மோபதேஷ்டாக்கள் பலருண்டான போது மூல மந்த்ராதி முகத்தாலே அவ்யவஹித 'மோக்ஷோபாயத்தை உபதேசித்தவன்' ப்ரதானன்.

91. ஆசார்ய ப்ராசார்ய ஸமவாயத்தில் 'ப்ராசார்யாநுவர்த்தனம்' ப்ரதானம்.

92. 'தமிமம் ஸர்வஸம்பந்நம்' இத்யாதிகளிற்படியே ஸர்வபரமாசார்யனை ஸர்வேச்வரன் ஸந்நிதியில் ஆசார்யாநுசிஷ்டமான 'பகவதநுவர்தனம்' ப்ரதானம்.

93. பகவத் ஸந்நிதியில் ‘ ராஜாவா ராஜபுத்ரோவா ஏகாந்திநோ மஹாபாகா’ இத்யாதிகளிற்படியே ‘ஏகாந்தி வ்யதிரிக்தோபசாரம்’ அபசாரங்களில் ப்ரதானம்.

94. ஏகாந்திகளில் ‘மோக்ஷமாத்ர’ ப்ரயோஜனன் ப்ரதானன்.

95. க்ருத க்ருத்யனுன ‘அநந்ய ப்ரயோஜனனுடைய கைங்கர்யம்’ முக்த கைங்கர்ய ஸமமாகையாலே முமுக்ஷு கைங்கர்யங்களில் ப்ரதானம்.

96. பகவத் பாகவத ஸம்ருத்தியையும் பக்தி தத்வ ஞானங்களேயும் தத்விரோதி பாப நிவ்ருத்தியையும் பற்ற காம்ய கர்மம் ப்ராப்தமானுலும் ‘பகவான் தன்னேயேயாதல் அவனுக்கு அஸாதாரணரையே’யாதல் அபேக்ஷிக்கு மது ப்ரதானம்.

97. ஸம்யக்ஞாநாதி வர்த்தகங்களில் ஸர்வ காலத்திலும் ‘மாநம்த்யக்த்வா யோ நரோ வ்ருத்த ஸேவீ’ இத்யாதிகளில் சொன்ன ‘க்ஞாநவ்ருத்தோபாஸநம்’ ப்ரதானம்.

98. இஸ்ஸம்யக் ஞாநாபிவ்ருத்தியாலே வரும் ‘ஸத்வோன்மேஷம்’ பகவதநுபவரஸவிரோதி மானஸ வ்யாதி பரிஹாரங்களில் ப்ரதானம்.

99. குணுதீந ஸுகங்களில் சமதமாதிஸஹிதமான ‘ஸாத்விக ஸுகம்’ ப்ரதானம்.

100. இப்படி யிவன்பெறும் ப்ரயோஜன பரம்பரையில் முமுக்ஷுக்களுடைய பரோக்ஷாபரோக்ஷ விச்சிந்நாநுபவத்தில் ஸம்பாவிதமான ஸ்வாதந்த்ரயோந்மஜ்ஜன ப்ரஸங்கமில்லாத அவிச்சிந்ந ஸாக்ஷாத்கார பரீவாஹமாய் நாராயண சப்தத்தில் சதுர்த்தியிலே விவக்ஷிதமாய் நமஸ்ஸாலே சோதிதமான நித்ய நிர்தோஷ நிருபாதிக கைங்கர்யத்தாலே வரும் நிரதிசயானந்த ரூபமான ‘முக்த ஸுகம்’ ஸர்வஸுகங்களிலும் ப்ரதானம்.

101. இஸ்ஸுகம் ஈச்வர ஸுகத்திலும் காட்டில் ந்யூனமில்லாதபடியே தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தன்னேயே யொக்கவருளிச் செய்வார் என்கிறதாகையாலே முக்தனுக்கு வரும் ஸ்வாதந்த்ரியமும் இக்கைங்கர்யத்தளவிலேயேயாய் பராதீனமாய் நிற்கையாலே மோக்ஷப்ரதனை ஸர்வ சரீரிக்கு பூர்வோக்த நித்யஸித்த நிருபாதிக ப்ராதான்யம் ஸுப்ரதிஷ்டிதம்.

ஆக விஷயங்கள் 101

சீர்க்கடலின் றிரையென்னத் தகவால் மிக்கத்
தேசிகனும் திணியிருளாங் கடலை நீக்கிப்
பாற்கட லோன்றிருவ ணையாய் நின்றுபாரங்
காணுத பவக்கட லைக்கடத்து கின்ருன்
நீர்க்கு மரக்கல மென்ன விரைவரின்ப
மெழுந் தழியுங் குமிழியென விகந்தொழிந்தோம்
ஆர்க்கினி நாமென் கடவோ நமக்குமாரென்
கடவாரென் றடைந்தவர்கட் கறிவித்தோமே.

காசினியில் வரையனைத்துங் காயாவண்ணன்
கடைந்தெடுத்த 'கௌத்துவத்தின்' சீர்மைக்கொவ்வா
காசி முதலாகிய நன்னகரி யெல்லாங்
கார்மேனி யருளாளர் 'கச்சிக்' கொவ்வா
மாசின் மனந்தெளி முனிவர் வகுத்ததெல்லாம்
'மாலுகந்த வாசிரியர் வார்த்தைக்' கொவ்வா
வாசியறிந் திவையுரைத் தோம் வையத்துள்ளீர்
'வைப்பாக' விவை கொண்டு 'மகிழ்மினீரே'.

ஸ்ரீமத் வேங்கட நாத: ஸஹ்ருதய ஹ்ருத்ய ப்ரஸாதநம் ச்ரேஷ்டம்
வ்யக்தம் 'ப்ரதாநசதகம்' வ்யதநுத கவிகதக கரிகடாஸிம்ஹ:

ப்ரதாநே ஸர்வ சாஸ்த்ராணாம் 'ப்ரதாநசதகே' ஸ்த்திதே
அப்ரதாநேஷு சாஸ்த்ரேஷு கிம்மந்யோந்யேஷு தாவஸி

இதிகவிதார்க்கிக ஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத் வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ப்ரதாந சதகம் ஸம்பூர்ணம்.

நம் ஸம்பிரதாய ஸ்வாமிகளும் அவர்கள் அருளிய க்ரந்தங்களும்

1. **நைநாராசாரியார் ஸ்வாமி.** (குமார வரதாசாரியார்) ஸ்வாமி தேசிகனின் திருக்குமாரர். பாரததேசம் முழுவதும் திக்விஜயம் செய்து பெருமாள் கோவிலில் எழுந்தருளி இருந்து ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்துக் கொண்டு எழுந்தருளி இருந்தார். இவர் அருளிச் செய்த க்ரந்தங்கள்.

(1) அதிகரண சிந்தாமணி (அதிகரண ஸாராவளி வ்யாக்யா) (2) ந்யாஸவிம்சதி வ்யாக்யா (3) விரோதபரிஹாரவ்யாக்யா (4) மீமாம்ஸாபாதுகாவ்யாக்யா (5) தத்வத்ரயசுலகம் (ஸம்ஸ்க்ருதீகரணம்) (6) ந்யாஸ திலகவ்யாக்யா (7) பிள்ளையந்தாதி (8) தேசிக மங்களா சாஸநாதி: (9) ஆஹார நியமச்லோகா : (10) ரஹஸ்யத்ரயஸார ஸங்க்ரஹ : (11) ப்ரபஞ்ச மித்யாத்வ கண்டநம் (12) அபயப்ரதானஸாரம் (13) ரஹஸ்ய த்ரய சுலகம் (14) முக்தி விசார : (15) வ்யாவஹாரிக கண்டநம் (16) சிதசிதீச்வரதத்வ நிரூபணம் (17) கண்டநசதுஷ்டயம் (18) தத்வத்ரய நிரூபணம் (19) ரஹஸ்யத்ரய ஸாரார்த்தஸங்க்ரஹ :

2. **ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி.** வாதூல மஹாசார்யரின் குமாரர். சோளஸிம்மபுரம் தொட்டயாசார்ய ஸ்வாமியின் திருத்தகப்பனார். இவர் அருளிச்செய்த க்ரந்தம். (1) தூலிகா (ச்ருதப்ரகாசிகாவ்யாக்யா) அஸம்பூர்ணம். (2) அதிகரண ஸாரார்த்த தீபிகா (3) துருபதேசதிக்கார : (4) முக்த்தி விசார: (5) தர்ம க்ஞஸமயப்ரமாண ப்ரகாசிகா (6) ஸர்வார்த்த ஸித்திவ்யாக்யா (தாத்பர்ய ப்ரகாசிகா.)

3. **ராமாநுஜாசாரிய ஸ்வாமி.** (சோளஸிம்மபுரம் தொட்டயாசாரியார்.) இந்த ஸ்வாமி சோளஸிம்மபுரத்தில் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்துக் கொண்டு எழுந்தருளி இருந்தார். இவர் க்ரந்தங்கள்.

(1) சண்டமாருதம் (சததூஷணீவ்யாக்யா) (2) பாராசர்யவிஜய : (3) ஸத்வித்யாவிஜய: (4) பரிகரவிஜய: (5) அத்வைத வித்யா விஜய: (6) ப்ரஹ்மவித்யா விஜய: (7) வேதாந்த விஜய: (8) மங்களதீபிகா (9) அதிகரணார்த்த ஸங்க்ரஹ: (10) அதசப்தார்த்த விசார: 11. ஸதாம்லக்ஷணம்: 12. ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸங்கரஹ: 13. ஸ்ரீ பாஷ்யாதிகரணமாலா 14. ஸ்ரீ பாஷ்யோபந்யாஸ: 15. விஜயோல்லாஸ: 16. அலங்கார சிரோ பூஷணம். 17. சுருதி தாத்பர்ய நிர்ணய: 18. உத்தரத்விகார்த்த: 19. ஆசார்ய விம்சதி: (ஸ்ரீ தேசிகவிஷயா)

4. **உபநிஷத் பாஷ்யகாரர்.** (ரங்க ராமநுஜமுநி :) இவ்வாசார்யர் வேலாமூர் என்னும் அக்ரஹாரத்தில் ஸாமசாகையில் பாரத்வாஜ கோத்ரத்தில் அவதரித்து கீணீர் குன்றம் அநந்த தேசிகன் திருவடி வாரத்தில் வேதாந்த காலக்ஷேபம் செய்து பெருமாள் கோவிலில் தூப்புல் தேசிகன் ஸந்நதியின் ஸமீபத்தில் ஏகாந்த சீலராய் எழுந்தருளி இருந்து ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்துக் கொண்டு எழுந்தருளி இருந்தார். இவர் அருளிய க்ரந்தங்கள். 1. உபநிஷத் பாஷ்யம் 2. பாவப்ரகாசிகா (ச்ருத ப்ரகாசிகா வ்யாக்யா) 3. மூலபாவப்ரகாசிகா. (ஸ்ரீ பாஷ்ய வ்யாக்யா) 4. சாரீரக சாஸ்த்ரார்த்ததீபிகா. 5. ந்யாயஸித்தாஞ்ஜந டீகா 6. விஷய வாக்ய தீபிகா 7. திருவாய்மொழி 8. திருப்பாவை வ்யாக்யா (ஸம்ஸ்க்ருதீ கரணம்) 9. தத்வ நிஷ்கர்ஷ: 10. ப்ரதிதந்த்ர பரிஷ்க்ரியா. 11. ரஹஸ்யத்ரயஸார டீகா. 12. ஸாரதாத்பர்யநிர்ணய. 13. ராமாநுஜ ஸித்தாந்த ஸார: 14. பாஷ்யோபயுக்த்த உபநிஷத்பாஷ்ய விவரணம்.

5. **ந்ருஸிம்ம ராஜ:** (ந்ருஸிம்மதேவ :) ஸ்ரீவத்ஸ கோத்ரத்தில் அவதரித்தவர். இவர் க்ரத்தங்கள் 1. ஸர்வார்த்த ஸித்திவ்யாக்யா

ஆநந்ததாயிநீ 2. பேததிக்கார ந்யக்கார: 3. சததூஷணீவ்யாக்யா, 4. நிக்ஷேபரக்ஷா வ்யாக்யா,

6. **வேதாந்த ராமாநுஜ முனி:** (ஸாக்ஷாத் ஸ்வாமி), இவ்வாசாரியர் திரு நாராயணபுரத்தில் அவதரித்து பால்யத்தி லேயே ஸந்யஸித்து பரமவிரக்தாக்ரேஸரராய் ஸ்ரீரங்கத்தில் ஸம்ப்ரதாய ப்ரவசநம் பண்ணிக் கொண்டு எழுந்தருளி இருந்தார். இவர் அருளிச்செய்த க்ரந்தங்கள். 1. ஸ்ரீதத்வ ஸித்தாஞ்சனம் (ஸ்ரீ லக்ஷ்மிக்கு ஈஸ்வரத் வாதிப்ரதிபாதகம்) 2. ந்யாஸவித்யா தர் பணம். 3. பூர்வஸாராஸ்வாதிநீ (ரஹஸ்யத் ரயஸாரவ்யாக்யா) 4. இருபத்திநாலா யிரப்படி. (திருவாய் மொழிவ்யாக்யா ஆரு யிரப்படிக்கு வ்யாக்யாரூபம்) 5. இருபத்தி நாலாயிரப்படி சப்தார்த்தம்.

7. **திருக்குடந்தை தேசிகன்.** (கோபால தேசிகன்) ஆத்ரேய வம்சத்தில் அவதரித்து ஸ்ரீரங்கத்திலும் திருக்குடைந்தையிலும் எழுந்தருளி இருந்து ஸமப்ரதாய ப்ரவசனம் செய்து வந்தார். இவர் அருளிய கிரந்தங் கள். 1. நிக்ஷேப சிந்தாமணி 2. ரஹஸ்ய த்ரயஸார வ்யாக்யா (உத்தரஸாராஸ்வாதிநீ) 3. ஆந்ஹிகம் 4. ஜயந்தீ நிர்ணயம் 5. திருப் பல்லாண்டு வ்யாக்யா 6. கண்ணிநுண் சிறுத் தாம்புவ்யாக்யா. 7. ஸாராஸ்வாதிநீ ஸங்கரஹ :॥ அபர்யாப்தாம்ருதத்யான ஸோ பாநம்.

8. **ஸுரபுரம் வெங்கடாசார்ய :** பெரிய திருமலைநம்பி வம்சமான சடமர்ஷண குலத் தில் அவதரித்தவர். பலவிதமான யாகாதி களைப் பண்ணி பெரிய அநுஷ்டான சீலராய் எழுந்தருளி இருந்தார். இந்த ஸ்வாமி ஹயக்ரீவ ப்ரஸாதமும் ஸ்ரீ பாஷ்யகாரரின் அநுக்ரஹத்தையும் பெற்றவர் என்று மஹான் கள் சொல்லுவது வழக்கம். இவர் அருளிச் செய்த க்ரந்தங்கள். 1. ஆநந்த தாரதம்ய கண்டனம், 2. ஜகன்மித்யாத்வ கண்டனம். 3. வேதாந்த தேசிகதண்டகம். 4. வேதாந்த தேசிகாஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரம். 5. ஸித்தாந்த ரத்நாவளீ. 6. ஸித்தாந்த வைஜயந்தீ ॥

9. **ஸுரபுரம் அண்ணய தாதாசார்ய :** ஸுரபுரம் வெங்கடாசார்யரின் வம்சத்தை சேர்ந்தவர். இவர் க்ரந்தங்கள். 1. ஆசார்ய விம்சதி. (ஸ்ரீ தேசிகன் விஷயம்) 2: ஆநந்த தாரதம்ய கண்டனம். 3. தத்வகுணதர்ச: ஸவ்யாக்ய:. 4. வ்யாவஹாரிக ஸத்யத்வ கண்டன ஸார: 5. ரஸோதாரபாண. 6. ஸ்ரீநிவாஸ ஸ்துதி : 7. ந்ருஸிம்மஸ்துதி:

10. **ஸுரபுரம் ஸ்ரீநிவாஸதாதாசார்ய:** சடமர்ஷணகோத்ரத்தில் ஸுரபுரம் வெங்கடா சார்யரின் வம்சத்தில் அவதரித்தவர். இவர் க்ரந்தங்கள் (1) அருணாதிகரண ஸரணி விவரணீ—(2) ஆநந்ததாரதம்ய கண்டனம் (3) ஓங்காரவாதார்த்த: (நயமணிகலிகா) (4) ஜிக்ஞாஸாதர்பண: (5) க்ஞாநரத்ந ப்ரகாசிகா—(6) ணத்வதர்பண: (7) தத்வ மார்த்தாண்ட: (8) ப்ரணவதர்பண: (9) ப்ரதானப்ரதிதந்ரதர்பண: (10) நயத்யுமணி: (11) புச்சப்ரஹ்மவாதநிராஸ:— (12) நயத்யுமணிதீபிகா: (13) பேததர்பண: (14) விரோதநிரோத: (பாஷ்யபாதுகா) (15) விரோதவரூதிநீ ப்ரமாதிநீ (16) ஷஷ்டி யர்த்த நிர்ணய: (17) ஸித்தாந்த சிந்தாமணி: (உபாதாநத்வஸமர்த்தநம்) (18) தத்தரத்ந ப்ரதீபிகா: (19) நீதிசதகம்: (20) ஹரிகுண தர்பண:

11. **ஸுரபுரம் வெங்கடாசார்ய:** சடமர் ஷணகோத்ரத்தில் அண்ணயாசார்யரின் வம் சத்தில் அவதரித்தவர். இவர் க்ரந்தங்கள். (1) அலங்கார கௌஸ்துப: (2) க்ருஷ்ண பாவசதகம். (3) கஜஸூத்ரவாதார்த்த: (4) ப்ராமாண்யவாத கண்டனம். (5) ச்ருங் காரதரங்கிணீ.

12. **புச்சி வெங்கடாசார்ய:** ஸுரபுரம் ஸ்வாமிகளின் திருவம்சத்தைச் சேர்ந்தவர். இவர் க்ரந்தங்கள். (1) வேதாந்த காரிகா வளீ. (2) விஷ்ணு ஸப்தவிபக்தி ஸ்தோத்ரம். (3) இந்த்வஷ்டோத்தர சதநாமஸ்த்தோத்ரம்.

13. **ஸ்ரீநிவாஸாசார்ய:** கரூர் அக்ர ஹாரத்தில் ஆண்டான் திருவம்சத்தில் அவதரித்தவர். இவர் க்ரந்தங்கள் (1) ஸஹஸ்ரகிரணீ. (2) தத்வதத்வபரித்ராணம்.

14. **வேதாந்தாசார்ய:** ஸ்ரீவத்ஸபர வஸ்து வேங்கட தேசிகனின் திருக்குமாரர். இவர் க்ரந்தங்கள். (1) ஸித்தாந்த சந்திரிகா (2) ந்யாயரத்நாவளீ. (3) பாஞ்சகாலிக பத்ததி. (4) வேதாந்தகௌஸ்துபம் (ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயஸ்தர் எல்லோரும் அவச்யம் பாட்யக்ரந்தரத்நம்) 5. ராமாயணதாத்பர்ய நிர்ணயம். 6. மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் இந்த ஸ்வாமியின் க்ரந்தங்கள் அத்யத்புதமாயும் அபூர்வமான விஷய விசாரமும் மீமாம்ஸாந்யாய ஜடிலமாயும் அமைந்து இருக்கிறது. ஸ்ரீவைஷ்ணவ உலகம் இவருடைய க்ரந்தங்களை முத்ரணம் பண்ணினால் மதாந்தர கண்டனத்திற்காக யாரும் எழுதவேண்டிய ஆவச்யகமே இராது என்று தாஸனின் அபிப்ராயம்.

15. **ஸ்ரீநிவாஸாசார்ய:** பாரத்வாஜ கோத்ரத்தில் அவதரித்தவர். முதலில் தென்னாசார்ய ஸம்பிரதாயத்திலிருந்து பிறகு ஸ்ரீ தேசிக ஸம்பிரதாயத்தில் அந்வயித்து மஹான்களிடம் ஸம்பிரதாயார்த்தங்களைக் கேட்டவர். இவர் க்ரந்தங்கள். 1. ஸாரப்ரகாசிகா. (ரஹஸ்யத்ரயஸாரவ்யாக்யா) 2. பரீக்ஷா. (பாதுகாஸஹஸ்ரவ்யாக்யா). 3. ந்யாய ஸார: (ந்யாய பரிசுத்திவ்யாக்யா). 4. ரஹஸ்யத்ரயஸாரார்திகாரஸங்ரஹ: ஸ்ரீஸ்துதிவ்யாக்யா.

16. **ஸ்ரீநிவாஸபரகால முனி:** மைசூர் பரகால ஆஸ்தாநாதிபதி. இவர் க்ரந்தங்கள் 1. துரூஹசிக்ஷா (தென்னாசார்ய ஸம்பிரதாய கண்டனம்) 2. ந்யாஸவித்யாப்ரகாச: 3. ஸுதர்சநதாரண நிர்ணய:

17. **ஸ்ரீகிருஷ்ணதாதாசார்ய:** (திருப்புட்குழி ஸ்வாமி) பெருமாள் கோவிலில் ஸுப்ரஸித்தராய், கோடி கந்யகாதானம் ஸ்ரீலக்ஷ்மி குமாரதாத தேசிகன் திருவம்சத்தில் அவதரித்து பல மஹான்களுக்கு ஸம்பரதாய ப்ரவசனம் செய்துக் கொண்டு தேவாதிராஜன் ஸந்நிதி நிர்வாஹம் முதலான கைங்கரியங்களையும் செய்துக் கொண்டு எழுந்தருளி இருந்தார். இவர் அருளிய க்ரந்தங்கள். 1. ரத்நபேடிகா (ந்யாய ஸித்தாஞ்சந வ்யாக்யா. 2. ப்ரஹ்மசப்தார்த்த விசார: 3. தத்வசந்திரிகா. 4. பரமுகசபேடிகா. 5. துரர்த்ததூரீகரணம். 6. ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம். 7. குவலயோல்லாஸ: (தர்க ஸங்கரஹவ்யாக்யா.) 8. ஸந்ந்யாயதீபிகா (ந்யாய பரிசுத்திவ்யாக்யா) வேதாந்தபத்ரம்-விதவாவிவாஹ கண்டநம்.

18. **அநந்தாசார்ய:** இவர் க்ரந்தம் 1. தேசிக ஸித்தாந்த ரஹஸ்யம்.

19. **ஸ்ரீவில்லிபுத்தூர் ஸுந்தராசார்ய:** நடாதூர் அம்மாள் திருவம்சத்தில் அவதரித்து நாவல் பாக்கம் அண்ணயதாத தேசிகனிடம் வேதாந்தார்த்தங்களை ஸேவித்து. ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி இருந்தார். இவர் க்ரந்தங்கள். 1. அதிகரணஸாராவளீவ்யாக்யா. 2. தத்வஸாரவ்யாக்யா. 3. சில்லரை ரஹஸ்யம் ஸம்ஸ்கிருதீகரணம்.

20. **அப்பங் கொட்டாசார்ய:** கந்தாடை வம்சீயர். இவர் க்ரந்தங்கள்—1. ஸித்தாந்த ஸார: 2. மாநவோல்லாஸ. 3. தத்வ நிர்ணய: 4. குத்ருஷ்டிபங்க: 5. மாயிபங்க: 6. தத்வாமிருதம். 7. விசிஷ்டாத்வைத நிர்ணய: 8. தத்வநிஷ்கர்ஷ: 9. ஸஜ்ஜநாமிருதம். 10. ரஹஸ்ய த்ரய ஸாரார்த்த:

21. ஆத்ரேய அஹோபிலாசார்ய:-இவர் க்ரந்தம் ஸங்கல்ப ஸூர்யோதய வ்யாக்யா ப்ரபாவளீ.

22. **விக்ரஹம் தேசிகாசார்ய:**—வங்கீபுரம் பாரத்வாஜ கோத்திரத்தில் அவதரித்தவர். நாவல் பாக்கம் அண்ணயதாத தேசிகனின் ஜாமாதா. தன் மாமனாரான அண்ணயதாத தேசிகனிடமே ஸர்வசாஸ்த்ரங்களையும் வேதாந்த க்ரந்தங்களையும் அதிகரித்தவர். இவர் அருளிச் செய்த க்ரந்தங்கள்-1. நாதமுனி விஜயம். 2. ப்ரஹ்மஸூத்ரபாஷ்யடிப்

பணம். 3. அஸ்திப்ரம்மேதி ச்ருத்யர்த்த விசார: 4. வ்யுத்பத்திவாதக்ரோட பத்திரம். 5. ஜயந்தீ நிர்ணயம். 6. க்ருத்தி காதீபாராதன நிர்ணயம். 7. அண்ணய தாத தேசிகன் மங்களம். 8. ப்ரபத்தி. 9. அண்ணயதாத தேசிகன் தண்டகம். 10. தர்கஸங்கிரஹவ்யாக்யா.

23. **வாதூல நாராயணாசார்ய:** ஸங்கல்ப ஸூர்யோதயவ்யாக்யா.

24. **வீரராகவசடகோபயதீந்திர மஹா தேசிகன்:** பிள்ளை பாக்கம் ஸ்வாமி. ஸ்ரீ அஹோபில ஆஸ்தாநாதிபதி. இவர் அருளிச் செய்த க்ரந்தங்கள்—1. ஸ்தேமதர் பணம். 2. வாத தரங்கிணீ. 3. வைபவ சந்திரிகா. 4. சாரீரக ஸுப்ரபாதம். 5. மஹார்த்தரக்ஷா. 6. ஆதேசமணி. 7. தத்வ்யாக்யா.

25. **பாட்ராசார்ய:** (வெங்கடாசார்ய:) தஞ்சை மாநகரில் வாழ்ந்து வந்த ரகுநாத நாயக மஹா ராஜாவின் ஆசார்யனும் திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல் பாக்கம் அய்யா குமாரதாத தேசிகனின் திருக்குமாரர். தன் பிதாவிடம் ஸர்வசாஸ்தரார்த்ததையும் அதிகரித்த மஹான்-இவர் அருளிச் செய்த க்ரந்தங்கள்—1. சரணாகதி தோரணீ. 2. ஆசார்ய குணதர்ச: (தேசிகாஷ்டோத்ரசத நாமவ்யாக்யா). 3. கோகிலஸந்தேசம். 4. ரகுநந்தநவிலாஸ மஹாகாவ்யம். 5. மித்யாத்வாநுமாந கண்டனம். 6. ப்ராமாண்யவாத கண்டநம்.

26. **ப்ரதிவாதி பயங்கரம் வெங்கடாசார்யர்.** இவர் க்ரந்தங்கள். 1. சாரீரகப்ர தீபிகா-2. பக்தவைபவதீபிகா-3. பகவதா ராதனகாரிகா-4. ராமாநுஜ நக்ஷத்ரமாலா-5. வேதாந்த தேசிக சதகம்-6. துஷ்டசிக்ஷா. 7. த்ராவிடாம் நாய சதகம்.

27. **ஸ்ரீநிவாஸாசார்ய:** ஆண்டான் வம்சத்தில் அவதரித்தவர் கரூர் அக்ரஹாரத் தில் நித்ய வாஸமாய் இருந்த மஹான். இவர் அருளிச்செய்த க்ரந்தம். 1. வசநபூஷண மீமாம்ஸாவிசஸநம் (ந்யாஸவித்யாவிஜயம்)

28. **ஸ்ரீநிவாஸ சடகோபயதி:** ந்யாய பரிசுத்திவ்யாக்யா நிகஷா-

29. **சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகன்.** அஹோபில மடாஸ்தாநத்தில் 34 பட்டத்தில் எழுந்தருளி இருந்தவர் அத்திப்பட்டு ஸ்வாமி என்று வ்யாவஹாரம். இவர் அருளிச்செய்த க்ரந்தங்கள். 1. அதிகரண கல்பதரு - (அதிகரணஸாராவளி வ்யாக்யா) 2. ந்யாஸவிம்சதி வ்யாக்யா-3. ஸாமாந்ய விசேஷாதி ந்யாய ஸங்க்ரஹ: 4. கவி ஹ்ருதயரஞ்ஜிநீ- 5. ஐகசாஸ்த்ரீய ஸமர்த்தநம் 6. ஆநந்த்ய நிர்ணயம் 7. ப்ரஹ்ம ஸூத்ரார்த்த மஞ்சரீ. 8. மணி ப்ரவாளகீதா வ்யாக்யாநம் தேவராஜ ஸஹஸ்ரம்.

30. **பராங்குசயதி:** அஹோபில மடாஸ்தாநத்தில் எழுந்தருளி இருந்த ஸ்வாமி. இவர் அருளிச்செய்த க்ரந்தங்கள். 1. ஸித்தாந்த மணிதீபம் 2. பஞ்சகாலதீபிகை-ப்ரபத்தி ப்ரயோகம். முதலியன:

நாவல்பாக்கம்
தே. ஆ. யக்ஞவராஹ தாதாசாரியார் ஸ்வாமி.

ஸ்ரீ ஒப்பிலியப்பன் ஸந்நிதி-அண்ணுமலை யூனிவர்ஸிடி

கவிதார்க்கிக ஸிம்ஹம்

Dr. வ. ந.சேஷாத்யாரிசார்யர் M.A.Phd.

ஸ்ரீ தேசிகனின் பிருதங்களில் ஒன்ருன 'கவிதார்க்கிக ஸிம்ஹம்' என்னுமது ஸ்வாமிக்கே அஸாதாரணமாக அமைந்துள்ள திருநாமமாகிறது. ஸ்ரீ தேசிகனுக்கு முன்பு பல மஹாகவிகளும் தார்க்கிகாக்ரேஸரர்களும் இருந்திருக்கிருர்கள். அச்வகோஷன், காளிதாஸன், பவபூதி, மாகன் போன்ற மஹாகவிகள் சிறந்த மஹாகாவ்யங்களை இயற்றி ஸம்ஸ்க்ருத பாஷைக்கு மிகுந்த பெருமையைத் தந்திருக்கிருர்கள். அதுபோலவே குமாரிலர், வாசஸ்பதிமிச்ரர், உதயநர், பார்த்தஸாரதி மிச்ரர் போன்ற தார்க்கிக வரேண்யர்கள் சிறந்த நிபந்தநக்ரந்தங்களை யியற்றி உலகுக்கு ஞான விளக்கேற்றி வைத்துள்ளனர். இந்த சாஸ்த்ர க்ரந்தங்களின் தொடக்கத்தில் அழகிய மங்கள ச்லோகங்களையும் நடுவில் ஆங்காங்கு சாஸ்த்ரார்த்த நிஷ்கர்ஷ ரூபமான காரிகைகளையும் உபஸம்ஹாரத்தில் சுவையுள்ள சில ச்லோகங்களையு மெழுதுவதுடன் நின்றுவிட்டனர். கி. பி. 12-வது நூற்ருண்டின் இறுதியில் வாழ்ந்த ஸ்ரீ ஹர்ஷன் ஒருவனே தர்க்க கர்க்கசமான கண்டன கண்ட காத்யத்தையும் அத்புத கல்பனு வைகரீ பூர்ணமான நைஷத காவ்யத்தையும் எழுதித்தான் சிறந்த தார்க்கிகன் மட்டுமல்லன், பரமஸஹ்ருதயனுன கவிச்ரேஷ்டனும் கூட என்பதை உலகுக்கு வெளியிட்டான். ஸ்ரீ ஹர்ஷனின் காலத்துக்குச் சில பத்தாண்டுகளே பிற்பட்ட ஸ்ரீ தேசிகன், ஸ்ரீ ஹர்ஷனுடைய ரீதியிலேயே க்ரந்தங்கள் அருளிச் செய்திருப்பதை ஸ்ரீ ஹர்ஷனின் கண்டன கண்டகாத்யத்தையும், சததூஷணீ, ந்யாய பரிசுத்தி, ஸர்வார்த்த ஸித்தி முதலிய க்ரந்தங்களையும் பரிசீலிப்பவர் உணர்வர்.

காவ்ய ரசனையில் ஸ்ரீ ஹர்ஷனின் ரீதியும் ஸ்ரீ தேசிகனின் ரீதியும் முற்றிலும் வேறுபட்டவை. கஹனமான சாஸ்த்ரதத்வங்களை யப்படியே ச்லோகங்களில் அமைத்து வ்யாக்யான பராமர்சத்தாலும் தெளிவுபடாது புத்திக்லேசத்தால் உபாத்யாயருக்கும் வித்யார்த்திக்கும் மிகுந்த ச்ரமத்தைக் கொடுத்து இயற்றியது நைஷதம். இதை ஸ்ரீ ஹர்ஷனே 'க்ரந்தக்ரந்திரிஹ க்விசித் க்வசிதபி ந்யாஸி ப்ரயத்நாந் மயா' என்று கூறுகிருன்.

வ்யாக்யாநா பேக்ஷையின்றியே ச்லோகங்களை ஸேவிக்கும்போதே ஸ்வரஸமாகப் பொருள் விளங்கும்படி தூராந்வயமில்லாத வாக்யங்களால் அமைந்தவை, யாதவாப்யுதயம், பாதுகாஸஹஸ்ரம்போன்ற காவ்யங்கள். உபநிஷதர்த்தங்களைத் தம்முடைய தர்சனத்தின் கருத்துக்களுக்கிணங்க உபமைகளாக அமைப்பதை ஸ்ரீ தேசிக ஸூக்திகளில் மிகுதியாகக் காணலாம்.

இவ்வாறு உத்தம காவ்ய ரசனையிலும் நிபந்தன க்ரந்தங்களை நிருமிப்பதிலும் அத்புத ஸாமர்த்தியம் பெற்றவர்களின் அருமையை யுணர்ந்து ஸ்வாமிக்கு 'கவிதார்க்கிக ஸிம்ஹம்' என்ற பிருதம் அளிக்கப்பட்டது. நாளடைவில் இந்த பிருதம் பங்கஜாதி சப்தங்கள் போல் யோகரூடமாகி ஸ்வாமியின் திருநாமங்களில் ஒன்ருகிவிட்டதை கவி கதக ஸிம்ஹ கதிதம் என்ற ஸ்ரீ தேசிகன் ஸூக்தியாலும் கவிதார்கிக ஸிம்ஹஸ்ய காவ்யேஷு லலிதேஷ்வபி என்ற அப்பைய தீக்ஷிதரின் வ்யவஹாரத்தாலும் அறிகிருேம். இந்த பிருதத்திற்கு உரையெழுதுகையில் அப்பைய தீக்ஷிதர் 'கவய: காவ்யக்ருத: தர்கேன தீவ்யந்தீதி தார்கிகா: வாதிந: தேஷாம் ஸிம்ஹஸ்ய பரிபந்திபூதாநும் தேஷாம் ஸிம்ஹவத் பயங்கரஸ்ய தேஷு ச்ரேஷ்ட்டஸ்யேதி வா' என்று விளக்குகிருர்.

கவியென்ற சொல்லுக்கு க்ராந்ததர்சீ = மனிதர்களுடைய புத்தி சக்திக்கு அப்பாற்பட்ட,

எட்டாத விஷயங்களையும் தன்னுடைய மேதாவிலாஸத்தால் அறியும் சக்தி பெற்றவர் என்று பொருள். கவிகள் ஹிமாசலத்தி லிருந்து ஸஹ்யாசலம் வரையில் உள்ள நீர் வள நிலவளங்களைச் சிறிதும் பிழையின்றி வர்ணித்தார்களாகில் இது ஸாதாரண மனுஷ் யனுடைய புத்தி சக்திக்கு எப்படி ஸாத்ய மாகும்? அதுபோலவே விசித்திர கல்பனை களை யமைத்துக் காவ்யங்கள் இயற்றி ரஸிகர் களின் உள்ளத்தைப் பரவசமாக்குகிறார்கள், மஹாகவிகள். ஸ்ரீ தேசிக ஸூக்திகளில் முக் கியமாக யாதவாப்யுதயம் பாதுகாஸஹஸ்ரம் போன்ற காவ்யங்களில் காணும் கல்பனை களும் வர்ணனைகளும் ஸஹ்ருதயர்களின் மனத்தை மகிழ்விக்கின்றன. உதாரணமாக,

ப்ருசாதுர ஸஹோதர ப்ரணய கண்டன ஸ்வைரிணா
பதேத கிமநேன மே வநமிஹாவநா திச் சதா
இதீவ பரிஹாய தந்நிவவ்ருதே ஸ்வயம் யத்புரா
பதத்ர மித மாத்ரியே த்ருத ஜகத்த்ரயம் ரங்கிண:

மிக நொந்து பணிந்து வேண்டும் பரதாழ்வா னின் வேண்டுகோளுக்கு உள்ளம் நெகி ழாது அரசாட்சியை யேற்காது தன் இஷ்டப் படி காட்டுக்கே போகத் துணிந்த இத்திரு வடிகளின் உறவு நமக்கினி யெதற்கு என்று அத்திருவடிகளைத் துறந்து பரதாழ்வானுடன் திரும்பி மூவுலகையும் ஆண்ட பாதுகைகளை இறைஞ்சுகின்றேன்.

தலேஷ் வவேபந்த மஹீருஹாணும்
சாயாஸ்ததா மாருத கம் பிதாநாம்
சசாங்க ஸிம்ஹேந தமோ கஜாநாம்
லூநா க்ருதீநாமிவ காத்ர கண்டா:

பௌர்ணமீ நிலவில் செழித்து வளர்ந்துள்ள மரங்களின் கிளைகள் காற்றினல் அசைகை யில் அவற்றின் நிழல்களும் அசைய அவை சந்திரனுகிய ஸிம்ஹத்தால் துண்டிக்கப்பட்ட இருளாகிய யானைகளின் அவயவங்கள் துடிப்பதுபோல் காண்கின்றன.

வர்ணநீயமான பொருளுக்குச் சேர சொற் களை யமைப்பதும் மஹாகவிகளின் இயற்கை. யாதவாப்யுதயத்தில் காளியன் பணங்களில் நின்றுடிய கண்ணனின் கூத்தை ஸ்ரீ தேசி கன் வர்ணிக்கும் அழகைக் காணீர்.

லோலாபதத் சரண லீலாஹதி க்ஷரித
ஹாலாஹலே நிஜபணே
ந்ருத்யந்தமப்ரதிக க்ருத்யந்தம்
அப்ரதிம மத்யந்த சாருவபுஷம்
தேவாதிபிஸ்ஸமய ஸேவாதரத்வரித
ஹேவாக கோஷமுகரை:
த்ருஷ்டாவதாந மததுஷ்டாவ
சௌரிமஹிரிஷ்டாவரோ தஸஹித:

பதாநாம் ஸௌப்ராத்ரம் என்று சொல்லப் படும் சொற்செறிவு ஸ்ரீ தேசிக ஸூக்திகளில் எங்கும் காணக்கிடக்கும் சிறப்பு. கடினமான விஷயங்களை விளக்குமிடங்களில் அமையும் காம்பீர்யத்தையும், மதுரமான விஷயங்களைக் கூறுமிடங்களில் த்ரவீபூத த்ராக்ஷா மதுர மான வாக்விலசிதங்களையும் ஸ்ரீ தேசிக ஸூக்திகளில் அங்கங்கே கண்டு ஸஹ்ருதயர் கள் மனம் உருகுவர்.

தேசிக ஸஹஸ்ரநாமத்தில் சில விஷயங்கள்

ஸ்ரீஉவே, ஈகை, திருமலை சங்கபுரம்
வேதாந்த தேசிகதாதாச்சாரியார் ஸ்வாமி
திருவள்ளூர்

சருதிமௌளி குரோர் நாம
ஸஹஸ்ரம்யேந நிர்மிதம் |
தமஹம் சிரஸாவந்தே
ஸ்ரீமத் கோபால தேசிகம் ||

ஸ்ரீதேசிகரிடத்தில் பக்தி இருந்தால் எம்பெருமானுர் திருவுள்ளமுகக்கும். அதனடியாக பகவதநுக்ரஹம் பெறலாம். ஸ்ரீ தேசிகனுடைய வைபவம் தெரிந்தால் தான் அவரிடம் பக்தி உண்டாகும். என்பதை ''நிச்ரேயஸம் ஏ பிலஷந்தி-நயேத்ரஷ்டாரோ வைபவஸ்யாஸ்ய'' இத்யாதிகளால் ஸப்த திரத்நமாலிகையில் அருளிச் செய்தார். ஸ்ரீ தேசிகன் சரித்திரத்தைச் சொல்லுகிற க்ரந்தங்களில் தத்காலம் மூவாயிறப்படி வைபவப்ரகாசிகை, ஆசார்யசம்பு. ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரம் ஆக 4. க்ரந்தங்கள் தான் ப்ரசாரத்தில் உள்ளன. இவைகளில் ஸஹஸ்ரநாமம் அவருடைய சரித்திரத்தைச் சொல்லுவதோடு இல்லாமல் ஸித்தாந்தத்தையும் சொல்லுகிறபடியால் உபாதேயதமமாய் விளங்குகிறது.

1. நூலாசிரியர்

திருமலை நம்பிகளின் ஸ்யால (மைத்துன) புத்ரரும் உடையவருக்கு அந்தரங்க சிஷ்யரும் 74 ஸிம்ஹாஸநாதிகளில் ஸ்ரீஸூக்த்தி ஸிம்மாஸநாதிபதிகளான 4வரில் சேர்ந்தவரும் ''வேதாந்தோதயந ஸம்பிரதாய ஸூதாம்'' என்று கொண்டாடும்படி ஸம்பிரதாயத்திற்கே சிறப்பை தரக் கூடியவரான கிடாம்பி ஆச்சானின் நப்த்தாவான வாதிஹம் ஸாபுவாஹருக்கு வம்சக்ரமத்தில் பதினைந்தாவதாகவும் க்ருஷ்ண தேசிகனுக்கு திருக்குமாரராய் கலியுகாதி 4801 விக்ரம புரட்டாசி பூராடத்தில் திருவவதரித்தார். இவர் ஞானவைராக்யாநுஷ்டானங்களில் தேசிகனைப் போலவே எழுந்தருளி இருந்தபடியால் திருக்குடந்தை தேசிகனென்றே ப்ரஸித்தரானுர். இவர் ஸாக்ஷாத் ஸ்வாமியின் திருவடிகளில் ஆச்ரயித்தார். இவர் உத்தர ஸாராஸ்வாதிநீ முதலான பல க்ரந்தங்களை அருளிச் செய்தார். இவர் அருளிச் செய்த ஸஹஸ்ரநாமம் தேசிக ஸித்தாந்தத்தை உள்ளங்கைகனி போல் காட்டுகிறது.

இந்த ஸஹஸ்ர நாமத்தை சின்னுண்டவன் முதலானவர்கள் ஆந்ஹிகார்த்த ப்ரகாசிகை முதலானவைகளில் ப்ரமாணமாக கொண்டுள்ளார்கள். தாள பத்திரத்தில். இதை 80 வருஷங்களுக்கு முன்பு தெலுங்கில் அச்சிட்டார்கள். பிறகு க்ரந்தாக்ஷரத்தில் பல பதிப்புக்கள் வெளி வந்தன. இவைகளில் சில இடங்களில் அச்சுப்பிழைகள் காரணமாக சில தூஷணுபாஸங்கள் ஏற்பட்டுள்ளன. அவைகளுக்கு மறுப்பு எழுத வேண்டியது அவசியமில்லை. ஆயினும் சிலரின் ப்ரமங்களை அகற்றி தத்வஸ்தியை இவ்விடத்தில் விண்ணப் பித்துக் கொள்கிறேன்.

(1) வேங்கடேச க்ருபாலப்தாநந்தார்ய ஸ்வப்நசிந்தித: இது முதல் திருநாமம்.

இங்கு ஸ்வப்நசப்தத்தாலே ஸ்வப்நத்தில் கண்ட ஜ்ஞாநம் தான் விவக்ஷிதம். 'ஸ்வப்ந ஸ்வாப: ப்ரஸூப்திதஸ்ய விஞ்ஞாநே' என்று நிகண்டு. ஸ்ரீநிவாஸக்ருபயால் உண்டான ஸ்வப்நஜஞ்ஞாநத்தில் புத்ரராக அந்தாசாரியரால் சிந்திக்கப்பட்டவர். ஸ்வப்நோஹ்யத்ய

மயாத்ருஷ்ட: இத்யாதி ராமாயண வாக்கியத்திலும் ஜ்ஞாநம் தான் விவக்ஷிதம்.

(2) தோதாரம்பா கர்பஸூர்ய ஸங்க்யாப்தாவாஸபாஸுர:

இங்கு உத்தமையான தோதாரம்பையின் வயிற்றில் பன்னிரண்டு வருஷம் வஸித்ததால் விளங்குகிருர் என்று அர்த்தம். க்ஷிப்த இத்யாதி பதங்களால் இவ்வர்த்தம் கிடைக்காது. வநவாஸோ மஹோதய: சக்ரதீர்த்த வாஸீதீவர: இத்யாதிகளில் போல் ஸமாஸம். கடபயாதிகளைப் போல் சந்த்ரநேத்ர அக்னி வேதபாணுதிகளையும் ஸங்க்யையில் நிர்தேசிப்பதுண்டு. அதிகரண ஸாராவளியில் ''ஸௌத்ரீஸக்ங்யா சுபாசீ:.......அக்ஷோர்ம் யாசாஹி.'' இத்யாதி கண்டு கொள்வது. வ்ருஷ்ணீநாம் வாஸுதேவோஸ்மி என்கிற இடத்தில் ''வாஸுதேவஸூநுத்வம் அத்ர விபூதி:'' என்று பாஷ்யம். அதைப் போல் இங்கும் கண்டு கொள்வது.

(3) 20வது திருநாமம் ஆக்ஷபாதீய கௌதம: என்பது

ஆக்ஷபாதம் கௌதமஸூத்ரம் அதன் அர்த்தம் ஆக்ஷபாதீயம் அர்தம் கௌதமத் ஸூத்ராத்தம் சொல்லுவதில் கௌதமரே இவர் என்று சொல்லும்படி இருப்பர். ந்யாய பரிசுத்தியில் கண்டு கொள்வது.

4. சந்தோபங்கவிஷயம்

71 திருநாமம் ரகுபுங்கவகத்யஸ்ருக் என்பது 197. தத்வமுக்தாகலாபஸ்ருக். என்பது இவைகளில் 7வது எழுத்து குருவாக இருக்கவேணும். ஆனுல் இங்கு லகுவாக உள்ளது. இப்படி பல இடங்களில் உளது. இதற்கு ஸமாதானம் சந்தோபங்கதோஷத்தை மஹாகவிகள் முக்யமாக கருதவில்லை ரகுவம்சத்தில் த்விதீயம் ஹேமப்ராகாரம் என்று இருக்கிறது. பட்டரும் க்ரியாதீபத்தில் நமோதர்மாயக்ஞாநாய இங்கு 5வது அக்ஷரம் லகுவாக இல்லை. அடுத்த ச்லோகத்திலும் அப்படியே. இப்படி பல இடங்களில் க்ரியாதீபத்தில் காணலாம். ஸுந்தரஜாமாத்ருமுநே: உரைக் காரர்தனியனிலும் காணலாம். அண்ணன் செய்ததாக சொல்கிற நித்யாராதன-விதியில் ஸ்ரீமதே ராமாநுஜாய நம இத்யுச்சனகரே | புநர்தத்வாம் ஸ்ரீதுளஸீம் இத்யாத்யநேக இடங்களில் சந்தோபங்கங்களைகாணலாம்.

யதிபங்கவிஷயம்

இதில் தயாசதக வீணாகீ—திப்ரீத ஸ்ரீநிவாஸக: இத்யாதி அநேக இடங்களில் யதிபங்கதோஷம் இருக்கிறது. என்பதற்கு பரிஹாரம் சந்தோபங்கம் போல் எதிபங்கத்தையும் மஹாகவிகள் பொருட்படுத்தவில்லை. சங்கராசாரியர் சிவாநந்தலஹரியில் (86 ச்லோகத்தில்) ''நிஜசரீ—ராகாரம் சுத்திம் வஹன்'' என்றும் மத்வாசாரியர் கீதாபாஷ்யத்தில் ''பூர்ணபோதம் குரூம்ஸ்சாங்கீ-தார்த்தம் வக்ஷ்யாமி லேசத:'' என்ருர். பட்டரும் அஷ்டச் லோகியல் ''நேத்ருத்வம்..... கணஜா—தந்தநுக்யாபநம்ச'' |

ப்ரபல தரவிரோ—ப்ரஹாணம்'' என்ருர் பத்ருஹரி ''லபேத ஸிகதாஸுதை—லமபி என்ருர். பாரதசம்பூவுதல் ச்லோகத்தில் கேலல் லோலம்பகேலாஹலமுகரித என்று இருக்கிறது. இப்படியே ஆயிரக் கணக்கில் காண்பிக்க முடியும்.

190—191. திருநாமங்கள் ''புருஷோத்தம தேவாஸுர விபாகநிருக்த்திவித்'' என்பது 226-227 அந்த: கரண நாநாத்வ பாஹ்யாக்ஷ க்யநிராஸக: என்பது இங்குத்வந்த்வாத த்திலிருக்கிற நிருக்திவித்—நிராஸக: என்பதை முன்பதங்களோடு கூட்ட வேண்டும். அப்படி சேர்த்தால்தான் இரண்டு இரண்டு திருநாமங்களாக ஏற்படும். மணவாள மாமுனிகள் ஞாநஸாரவ்யாக்யாநாரம்பத்தில் ''ஜ்ஞாநப்ரமேயஸாரஸ்ய வக்தாரம் வரதம்முனிம்'' என்ருர். இங்கு முன் சொல்லியடி த்வந்த்வாந்தத்திலிருக்கிற ஸாரபதத்தை முன் பதத்தோடு கூட்டி ஞாநஸார ப்ரமேயஸார க்ரந்தங்களை செய்தவர் என்றுதான் அர்த்தம். தூஷிப்பவர் எண்ணப்படி ஜ்ஞாநப்ரமேயஸாரம் என்று

ஒரு ப்ரபந்தம் இவ்வுலகிலில்லை 183-வைத ஹிம்ஸாஹிம்ய தாஸ்தாபநநீதிஸுநீதிக: என்பது இங்கு ஹிம்ஸாதா என்று இருப்பதால் வரும் சந்தோபங்கபரிஹாரம் முன்பே சொல்லப்பட்டது. ஹிம்ஸதா என்று பாடமான போது ஹ்ரஸ்வமாக இருப்பதற்கு பதில்.

கோஷ்டிபூர்ணமஹம்பஜே என்று எல்லோரும் அநுஸந்திக்கிறோம். அநுபம கோஷ்டி பூர்ணஸூரே: என்றார் கருடவாகந பண்டிதர். கோஷ்டிபூர்ணம் நமாமி என்ற தனியன் ஆருயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில் உள்ளது.

ஸ்ரீமத் காஞ்சீ முனிம்வந்தே என்று எல்லோரும் அநுஸந்திக்கிறோம் திவ்யஸூரி சரித்திரத்தில் ''ஸபதிததேதி காஞ்சிபூர்ண: தத்க்ரமதூய காஞ்சிபூர்ணம் என்று பல இடங்களில் உள்ளது. இங்கு ஓர் விசேஷம். உடையவர் ஆஸூரி வம்சத்தில் அவதரித்தவரே தவிர ஆஸுரவம்சத்தில் அவதரித்தவரன்று. அப்படி இருக்க ஆஸுரிகுலேந்து என்றார் கருடவாஹன பண்டிதர். முன்பின் ஹ்ரஸ்வ தீர்க்கங்களை மாற்றினார் இது எப்படி ஸங்கதமாகும்!

அபசப்த விஷயம்

210 திருநாமம் ப்ருதிவ்யாதி சதுர்த்ரவ்ய மாத்ரபக்ஷவிபேதக: என்றே சேட்டலூர் ஸ்வாமி கையெழுத்துப் புஸ்தகத்தில் உள்ளது. விபேதிதா. என்பது அச்சுப்பிழை. 199வது திருநாமம் க்ருதாதிக்ருதி ஸாராவள்யாக்யக்ரந்தசிகாமணி: என்று ஓலை ஸ்ரீகோசத்தில் உள்ளது. கையெழுத்து புஸ்தகத்தில் க்ருதாதிகரண ஸாராவளி க்ரந்தசிகாமணி: என்றுள்ளது. ஆகையால் ஒரு தவறுமில்லை. அச்சிட்ட புஸ்தகத்தில் க்ருதாதிகரண ஸாராவளி யாக்யக்ரந்த சிகாமணி: என்றுள்ளது அதில் ஒரு எழுத்து அதிகம். ஜநமேஜயாதிராஜாந: என்கிற பாரத ச்லோகத்திலும்,—விநயோநய: ஸத்யஸந்த: என்கிற ஸஹஸ்ரநாம ச்லோகத்திலும், அமரஸிம்ஹோ ஹி பாபீயான் ஸர்வம் பாஷ்ய மசூசுரத்—பரீஷ்யலோகாந்கர்மசி தான் விப்ரோநிர் விண்ணமாநாஸ: இத்யாதிகளையும் பட்டர் க்ரியாதீபத்தில் ''முகசோதநம்சாசமனம் என்பதையும் கண்டு கொள்வது 692வது திருநாமம் விம்சத்வர்ஷாதீத ஸர்வ வித்யாஸந்ததிபாஸுர: இங்கு விம்சவர்ஷா என்று பாடமான போது உலகில் இவன் 20 வயதில் கநாந்தம் பூர்த்தி செய்தான் என்பதைப் போல் கண்டு கொள்வது. 20 வயதும் பூர்த்தி செய்யவில்லை—20 வருஷம் அத்யயநம் பண்ணினான் என்பது ஏற்படும். விம்சத் வருஷம் என்று பாடமான போது விம்சத்யோஜநமா யதம் என்று ஸுந்தர காண்டத்தில் இருப்பதை கண்டு கொள்வது சாந்தஸபதங்களும் லோகத்தில் ப்ரயோகிப்பதுண்டு..

919–த்வயபூர்வ ஸ்ரீபதோ பலக்ஷகத்வ விநாசக:—இங்கு பகவான்தான் மோக்ஷோபாயம் ஸ்ரீக்கு உபாயத்வமில்லை என்பது சிலர் மதம். அவளுக்கும் உபாயத்வம் உண்டு என்பது தேசிகஸித்தாந்தம். இங்கு உபலக்ஷணமா? விசேஷணமா? என்றால். உத்தரவாக்யத்தில் போல் பூர்வவாக்யத்தில் விசேஷணமே உபலக்ஷணமன்று என்பது. ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்திலே த்வயாதிகாரத்திலே ''இப்படி இருக்க சரணென என்கிற த்விவசநத்தை மாத்திரம் கொண்டு ஸ்ரீ ஸம்பந்தத்தை உபலக்ஷண மென்றால் குணதிஸம்பந்தத்தையும் இப்படிச் சொல்ல ப்ரஸங்கிக்கும். இங்கு பரம்பரயா சிகீத்வஸ்த: சிகீஸஞ்ஜாத: என்கிற இடத்தில் போல்தான் அன்வயம்.

974 திருநாமம் அவதார ரஹஸ்யஜ்ஞாநாதி மோக்ஷகரத்வஹா என்பது கீதையில் ஜந்மகர்மச.....த்யக்த்வாதேஹம் புனர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந என்பதனால் அவதாரரஹஸ்யஜ்ஞாநத்திற்கு மோக்ஷம் பலம் என்று இருக்கிறது. அதை தேசிகன் கண்டிக்கிறார் என்பது ஏற்படுகிறது-என்பது தூஷணம். இதற்கு பதில் உடையவர் கீதாபாஷ்யத்தில் மதீயதிவ்யஜந்ம சேஷ்டித யாதாத்ம்ய விஜ்ஞாநேந வித்வஸ்த ஸமஸ்த மத்ஸமாச்ரயண விரோதிபாப:

மாமேவாச்ரித்ய மாமேவாபப்நோதி என்று அருளிச் செய்தார்.

அவதார ரஹஸ்யஞாநத்திற்கு பாபநிவர்த கத்வம்தான் பலம் என்பது உடையவர் திருவுள்ளம் அதை அநுஸரித்து தேசிகன் ஸச்சரித்ரரக்ஷையில் அவதார ரஹயஸ்யதத்வ விஞ்ஜாரஸ்ய. சீக்ரஸமஸ்த ப்ரதிபந்தாந் நிவர்த்தகத்வேந என்று அருளிச் செய்தார். பிள்ளை லோகாசாரியாரும் தனிசரமத்தில் ''பரபக்தி......அவதார ரஹஸ்யம் இவை தான் அங்கஸாதநங்களாக இருக்கச் செய்தே என்றுர்.'' இம்மூவர்பக்ஷத்திலும் அவதார ரஹஸ்யஞாநத்திற்கு ஸாக்ஷாத் மோக்ஷபலத்வம் இல்லை என்று ஏற்பட்டது.

தாத்பர்ய விஷயம்

லோகாசார்யாதி ஸச்சிஷ்யார்பித சாரீர பாஷ்யக: என்பது ஒரு திருநாமம். இங்கு பாஷ்யக: என்பது அஸ்வரஸம் என்று சிலர் அபிப்ராயம்: அண்ணன் முதல் தனியனில் வந்தேஹஸ்த்யத்ரி நாதார்யம் வரதார்யாத்த பாஷ்யகம் என்று இருக்கிறது. பட்டரும் க்ரியாதீபத்தில் க்ருதம் ஸ்ரீ பட்டகார்யேண'' என்றுர். அதைப் போல் இங்கும் ஸங்கதமே. லோகாசார்யர் வயதில் பெரியவர் என் பதனுல் ஆச்ரயிக்கவில்லை என்பது ஏற் படாது. கூரத்தாழ்வான் உடையவரைக் காட்டிலும் வயதில் பெரியவர் இவர்களும் ஆச்ரயிக்கவில்லை என்பது ஏற்படும். வயதில் லோகாசார்யர் பெரியவராகையாலே லோகா சாரியாதி ஸச்சிஷ்ய என்று இவரை முதலில் நிர்தேசித்தது பாண்டித்யத்தில் தேசிகரின் குமாரர் முதலானவர்கள் இருந்தபடியால் வித்வத் சிஷ்யகோஷ்டியில் இவரை நிர்தேசிக்கவில்லை போலும்.

நிகமனம்

க்ருதாசீதீ ஸஹஸ்ரத்ரமிடாகம பரீமள: | என்பது ஒரு திருநாமம். திருவாருயிரப்படி வ்யாக்யாநமாக தேசிகன் அருளிச் செய்த நிகமபரிமளம் என்கிற க்ரந்தம் லுப்தமாகி விட்டது. ஜீயர் கீதா தாத்பர்யதீபம் லுப்தம் என்று சொல்லுகிருப் போல் இங்கும் அப்படியே கண்டு கொள்வது. ஆருயிரப் படிக்கு பின்புள்ள வ்யாக்யானங்களில் உள்ள அபார்த்தங்களுக்கு கண்டனமாக அவதரித்தது என்று அபியுக்த்தர் வாக்யத்திற்கு பாவத்தை, ஆழ்வார் அவதார புருஷர், தமிழ் ஆர்ஷமாகையாலே உத்க்ருஷ்டம், இத்யாதிகள் முன் வ்யாக்யானங்களில் மறுக்கப்பட்டு இருப்பவைகளுக்கு கண்டனங்களை நிகமபரிமளத்தின் ஸங்க்ரஹ மானத்ரமிடோபநிஷத்ஸாரம் தாத்பர்ய ரத்நாவளீ முதலிய நூல்கள் மூலம் இப்பவும் காணலாம் 32 ரஹஸ்யங்களிலும் பன் புள்ளார்களின் அபார்த்தங்கள் கண்டிக்கப் பட்டு இருப்பதை விசாதமாக காணலாம். இதுகளை தனியாக தொகுத்து ஸமயாந்தரத்திலே வெளியிட உத்தேசம். ஆகையால் இங்கு இவ்வளவே போதுமானது. ஆனல் பரிமளத்தை 74,000 படியாக தொட்டயா சாரியர் க்ரந்த்தை: சஹஸ்துப்ததிபி: ஸஹரை: இத்யாதியாஸ் அருளிச் செய்திருக்க; இந்த ஸஹஸ்ரநாமத்தில் அசீதிஸஹஸ்ரம் க்ரந்தம் என்பது எப்படி பொருந்தும் என்றுல் இதில் ப்ரதீக:மாக எடுக்கப்பட்ட ஆருயிரப் படியும் சேர்த்து அசீதிஸஹஸ்ரம் என்பது ஸங்கதமே. பாரதத்தை உபாக்யாநைர்விநா இத்யாதியால் ஒரு விதமான கணக்கும் செய்கிருப் போல் வ்யாக்யேயத்தை சேர்க் காமலும் சேர்த்தும் செய்ததை கண்டு கொள்வது என்று ஸர்வம் ஸமஞ்சஸம்.



நீர் என்னைத் தொழ வாரும் என்று திருவேங்கடவன்
ஆனந்த ஸூரியை ஸ்வப்னத்தில் நியமிப்பது.



அதிவிஸ்மிதராய் பின் பெருங் கூட்டத்துடனே தாமும் தேவிகளும் திருமலையே எழுந்தருளி, ...



அனந்தாசார்யருக்கும் அவர் தேவிகளுக்கும் திருவேங்கடமுடையான் சிறு பிள்ளையாய்த் தோற்றி

இத் திருமணியைக் கொள்ளும் என . . : . . . இதை விழுங்கும் என்று சிறு பிள்ளை சொல்ல . . . . .

திருமணி யாழ்வானைக் காணாமையாலே கோயில் அனந்த கொத்து பரிஜனங்களும் கூடி நம்பிமார்மேல் அதிசங்கை பண்ணி அவர்களை நிக்ரஹிப்பதாக இருந்த அளவிலே .....திருவேங்கடமுடையான் இச்செய்தியை முதல்நாள் ராத்ரியிலே அனைவருடைய ஸ்வப்னத்திலும் அறிவிக்க எல்லோர் சொன்னதும் ஒத்திருக்கையாலே எல்லாரும் விஸ்மிதராய் ......



பன்னிரண்டு வருஷம் கர்ப்பவாஸம் பண்ண, அனந்தஸூரிகளும் அவதார அவஸரத்தைரப்தீக்ஷித்து நிற்க . . . . , (விபவ ஸம்வத்ஸரத்தில் அவதரித்தார்,

அப்தபூர்த்தி உத்ஸவம் பண்ணுவித்து பெருந்தேவியார் புருஷகாரமாகப் பேரருளாளரை ஸேவிக்சப்பண்ண ....அன்றே அடைக்கலம் கொண்டவராய்....,



ஒரு நாள் தம்முடைய மாதுலரான அப்புள்ளாரோடே கூட நடாதூர் பெரியம்மாளுடைய வ்யாக்யான கோஷ்டிக்குச் சென்று . . . . . .

. . . . . அம்மாளும் இவரை எடுத்தணைத்து மடியிலே வைத்துக்கொண்டு

ப்ரதிஷ்டாபித வேதாந்த:
ப்ரதிக்ஷிப்த மஹிர் மத:
பூயாஸ்த்ரை வித்யமாந்யஸ்த்வம்
பூரி கல்யாண பாஜனம். என்று ஆசீர்வதிக்க ......,



கிடாம்பி அப்புள்ளார் ஸந்நிதியிலே தானே ஸ்ரீ பர்ஷ்யம் தொடங்கி ஸ்ரீ பாஷ்யகாரருடைய ப்ரபந்தங்களையெல்லாம் 20 திருநக்ஷத்திற்குள்ளே அதி கரித்தருளி . . . . .



திருமங்கையும் திருவேங்கடத்தவனும்,



வேதாத்மாவான விஹகேச்வரர் ஸ்ரீஸ்வாமிக்கு
ஸ்ரீஹயக்ரீவ மந்த்ரத்தை யருளிச்செய்ய.....



ஸ்ரீஸ்வாமி ஹயக்ரீவ மந்த்ரத்தை வேதமூர்த்தியான கருத்மான் மூலமாய் பெற்றுப் பரிமுகனைஸாக்ஷாத்கரிக்க பரிமுகரும் எழுந்தருளி ஜிஹ்வாக்ரஸிம்ஹாஸனத்தில் ஸ்வாமிக்கு தாம் எப்போதும் எழுந்தருளியிருப்பதாய் அனுக்ரஹித்தல்,



"..... திருவயிந்திரபுரத்திலே எழுந்தருளி கருடநதியிலே நீராடி தெய்வ நாயகனை மங்களாசாஸனம் செய்தருளி....."



" ..... ஒகு கொத்தன் ..... கிணறு கட்டி என்னை ஜயியும் என்ன ......
புறக்கடையில் அழைத்துப் போய் அவனை ஒரு கிணறு கட்டச்சொல்லி ......
அதற்குத் தாம் கிணறு வட்டமாய் நன்றாகக் கட்ட....."

"ஸத்யம் சபே வாரண சைல நாத !
வைகுண்டவாஸே zபி ந மே பிலாஷ:"

என்று பலவாருக ஸ்ரீஸ்வாமி கார்மேனி யருளாளரை மங்களாசாஸனம் செய்தது.



திருப்புட் குழியில் சீத ஜ்வரத்தால் எல்லோரும் நலிய—இது நீங்குவதற்கு **ஷோடசாயுத ஸ்தோத்ரம் அருளிச் செய்தது.**



ஒரு மாயி ஸன்னியாஸி அவன் க்ஷுத்ரியாகையாலே ஒரு குளத்தில் மூழ்கி ஜலத்தைக் குடிக்க, இது ஸ்வாமி திருவயிற்றில் வர, இதைக் கண்ட.... ஸ்வாமி இது க்ஷுத்ரமென்று அறிந்து வ்யாக்யான கூடத்தில் ஒரு ஸ்தம்பத்தைக் கீற அதனின்றும் அந்த ஜலம் .... பெருக.



'' ...... அதி விரக்தராய் உபாதான வ்ருத்தியாயிருக்கிற இவர்....''
(தேசிக வ்ருத்தி என்றே இன்றும் உபாதான வ்ருந்திக்குப் பெயர்.)



வைராக்ய நிதியான ஸ்வாமியின் மூலம் ஐஹிகநிதிகளை ஒருவடு பெறும்படி பெருந்தேவித் தாயார் அனுக்ரஹம் செய்ய....

''யோகாரம்பத்வரிதமனஸோ யுஷ்மதைகாந்த்யயுக்தம்
தர்மம் ப்ராப்தும் ப்ரதமம் இஹயே தாரயந்தே தனயாம்.
தேஷாம் பூமேர் தனபதி க்ருஹாத் அம்பராத் அம்புதே:ர்வா
தாரா நிர்யாந்த்யதிகம் அதிகம் வாஞ்சிதாநம் வஸூனும்.''
என்பதை அன்வர்த்தமாக்கியது.



ஸ்ரீ ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடி........

''ஊர்த்வ புண்ட்ரான் ததான:'' என்றனுஸந்திக்கும்படியான ஸன்னி வேசத்தில் நிதியகர்மானுஷ்டானங்களைச் செய்தருளி........



" கமப்யனவதிம் வந்தே கருணா வருணாலயம் !
வ்ருஷசைல தடஸ்தாநாம் ஸ்வயம் வ்யக்தமுபாகதம் || "

என்கிறபடி அவனே இவராய் அவதரித்துத் தன்னை மங்களாசாஸனம் செய்துகொண்டது,



வித்யாரண்யர் ராஜாஸ்தானத்திற்கு வரும்படி ஸ்வாமிக்கு அழைப்பு விட "அஸ்தி மே ஹஸ்திசைலாக்ரே வஸ்து பைதாமஹம் தனம்" என்று முடித்து **வைராக்ய பஞ்சகம்** அருளிச் செய்து........



ஒரு பாம்பாட்டி ஸ்வாமியினுடைய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர பிருதை ஸஹியாத சிலரால் ஏவப்பட்டு வந்து என்னோடு வாதம் செய்ய வாரும் என்று ஸ்வாமியை யழைக்க, அஸமானனோடு வாதம் செய்ய ஸ்வாமி திருவுள்ளமில்லாமல் வாளாவிருக்க, அவன் சில நாகங்களை ஸ்வாமியின் மேல் ஏவ, ஸ்வாமியும் 7 ரேகைகள் வரைந்து அவற்றைத் தடுத்து நிறுத்த, பிறகு இதில் ஒரு ஸர்பம் 7 கோட்டையும் தாண்டி வருவது கண்டு ஸ்வாமி கருட தண்டகம் சொல்ல, பெரிய திருவடியும் வந்து நாகங்களைத் தூக்கிச் சென்றார். பிறகு அவன் ப்ரார்த்திக்க இவற்றை திரும்பி யளிக்க ஸ்வாமி கருடனை வேண்ட அவரும் அளித்தார்.

திருவரங்கத்தில்: கௌடமிச்ரர்கள் அத்யயனோத்ஸவத்தைத் தடுப்பதும், அதற்கு ஸ்ரீச்ருத ப்ரகாசிகாசாரியர் முதலானோர் கூடி ஸ்ரீ ஸ்வாமி தேசிகனை காஞ்சியிலிருந்து எழுந்தருளப் பண்ண முடிவு செய்வது.....



திருவரங்கத்திநின்றும் ஸ்ரீச்ருதப்ரகாசிகார்யர் முதலானோர் கொடுத்தனுப்பிய ''ஸ்ரீமத் ஸ்ரீரங்கநாதஸ்ய விஷ்வக்ஸேனஸ்ய சாஸனம்'' என்கிற சாஸனத்தை ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் எடுத்து வந்து பெருமாள் கோயிலில் ஸ்ரீ ஸ்வாமி ஸன்னிதியில் தண்டனிட்டு ஸமர்ப்பித்தல்........,



ஸ்வாமி திருவரங்கம் எழுந்தருளும்போது இடையில் ஸ்ரீ முஷ்ணத்திற்கருகில் ஓரிரவு பெருமாள் திருவாராதனத்தில் ஏதும் நிவேதனம் செய்யக்கிடைக்காமல் ஒரு வைச்யர் வீட்டருகில் தங்கியிருக்க, பரிமுகரும் அந்த வைச்யனுக்கு அனுக்ரஹம் பண்ணத் திருவுள்ளப்பட்டு ஒரு குதிரை உருவில் வந்து அவன் கடையிலுள்ள கடலை கொள் முதலியவற்றை அமுது செய்ய, அவன் இதை ஸ்வாமியிடம் விண்ணப்பிக்க, ஸ்ரீ ஸ்வாமியும் சிறிது பால் கொணரச் செய்து புரிமுகருக்கு அமுதுபடி செய்துவைத்தது.



அக்ஷோப்ய முனிவரும் - வித்யாரண்யரும்



வித்யாரண்யருக்கும், அக்ஷோப்ய முனிக்கும் நடந்த வாத புஸ்தகங்களைப் பராமர்சித்து........

"அஸிநா தத்துவமஸிநா பரஜீவ ப்ரபேதிநா !
வித்யாரண்ய மஹாரண்யம் அக்ஷோப்யமுனிரச்சினத்ll"

என்றருளிச் செய்து அனுப்பியது.



தனக்கே உரிய வேதாந்த தேசிகன் என்கிற பிருதை பெரிய திருவோலக்கத்தில் ஸ்ரீரங்கநாதர் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனுக்கு அருளப்பாடிட்டது,

அரங்கன் திருவோலக்கத்தில் ஒரு யாமத்தில் பாதுகாஸஹஸ்ரத்தை விண்ணப்பித்து வீறு பெறுவது.



அரங்கத்தில் பிற மதத்தினருடன் வாதம் புரிந்து ஸ்ரீ பாஷ்யத்திற்கு வ்யாக்யா ரூபமாக ஸ்ரீ சததூஷணியை அருள்வது.



க்ருஷ்ணமிச்ரனை சாஸ்திரத்தில் வாதம் செய்து வென்றது மட்டுமின்றி லௌகிக ஸாமர்த்தியத்தாலும் அவனை வென்றது.



ஸ்ரீ ஸ்வாமிக்கு உபாதான காலத்தில் சிலர் அமுதுபடியுடன் ஸ்வர்ணதிகளையும் கலந்து சேர்க்க, ''தேவியார் இவை என்ன ?'' என்று அதைக்கண்டு வினவ, ஸ்வாமியும் ''ஏதாவது புழுவாயிருக்கும் என்று பராங்முகராய் ஸாதிக்க, தேவியாரும் ஒரு கோலால் அவற்றைத் தள்ளியது,



ஸ்ரீ:ஸ்வாமியிடம் வாதத்தில் தோற்ற அஸூயாளுக்கள் திருமாளிகை வாச லில் பாதரக்ஷையைக் கட்டிவைக்க, இதை ஸ்வாமியும் ''வயம் து ஹரிதாஸாநாம பாதரக்ஷாவலம்பகா:'' என்று உகந்தருளியது.



சிலர் ஸ்வாமியினிடத்தில் அஸூயையாலே ப்ரதியாப்தீகம் விக்னிதமாம்படி நிமந்த்ரித ஸ்ரீ வைஷ்ணவர்களை பஹுத்ரவ்யம் கொடுத்து கலைக்க, பித்ரு தேவ ஸ்வரூபருன வரதனும், ஹயக்ரீவரும் .....சுத்தயாஜியான இவருடைய சுத் தான்னனுத்தை தாமே புஜித்தருள ....



திருவரங்கத்தில் கலாப ஸமயத்தில் ‘‘ச்ருதப்ரகாசிகா பூமௌ யேநாதௌ பரிரக்ஷிதா’’ என்கிறபடியே ஸ்ரீ ஸுதர்சன ஸூரியின் இரு குமாரர்களையும், ஸ்ரீச்ருதப்ரகாசிகையையும் ஸம்ரக்ஷித்துக்கொண்டு மேல்நாடு எழுந்தருளல்.



திருவரங்கத்தில் துருஷ்ககலாபானந்தரம் திருவரங்கனை மறுபடி உத்ஸாதி வைபவத்துடன் ப்ரதிஷ்டை செய்த கோப்பணார்யனை ஸ்ரீஸ்வாமி அனுக்ரஹித்தல்.



சில்பிராஜனை ஜயித்து தமது அர்சா விக்ரஹத்தை
எழுந்தருளப் பண்ணியருள்வது

11-V/CI/68-69

Office of the Income-tax officer,
City Circle II (3), Madras 34,
Dated: 18th Sept. 1968.

To
The Trustee,
Vedantha Desika Seventh Centenary Trust,
41, Edward Elliots Road,
Madras-4.

Sir,

Sub: Exemption under Section 11 and 80 (G) – Vedantha Desika Seventh Centenary Trust-Regarding.

Donations made to 'Vedantha Desika Seventh Centenary Trust', Madras 4, would be entitled to the Benefit of Exemption under Section 11 and 80 (G) of the Incometax Act, 1961, in the hands of the Trustees subject to the limits specified.

(Sd.) (K. S. SIVARAMAN)
Incometax Officer,
City Circle II (3), Madras.

Copy submitted to the Commissioner of Income-tax, Madras II. Madras 34 (in duplicate)

TRUE COPY

ஸ்ரீ உவே. புத்தங்கோட்டகம்
ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி

வங்கீபுரம் நவநீதம்
கிருஷ்ணமாச்சாரியார் ஸ்வாமி
ஒப்பிலியப்பன் ஸந்நிதி

ஸ்ரீ:

குருபரம்பரை

1. ஸ்ரீமந் நாராயணன்

ப்ரதமாசார்யனான ஸ்ரீமந் நாராயணன் ஹயக்ரீவனாய் அவதரித்து சதுர்முகனுக்கு ஸகல வேதங்களையும் ஸார்த்தமாக உபதேசித்தும், பரவாஸு தேவனாகவே எழுந்தருளி யிருந்து பெரிய பிராட்டியாருக்கு ஸகல வேதாந்தார்த்தங்களை ஸ்ரீ பாஞ்சராத்ர சாஸ்த்ர ரூபமாக வுபதேசித்தும் விஷ்வக்ஸேநர் முதலான ஆசார்யர்களை அதிஷ்டித்து ரங்கநாதன், திருவேங்கடமுடையான், தேவப்பெருமாள், ஆராவமுதன், திருநாராயணன் முதலான அர்ச்சா ரூபியாக யெழுந்தருளி இருந்து நாதமுனிகள் முதலிய ஆசார்யர்களை ப்ரவர்த்திப் பித்தும் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்தருளினார். இவர் திருநக்ஷத்திரம் திருவோணம்.

கமப்யாத்யம் குரும் வந்தே கமலாக்ருஹமேதிநம் |

ப்ரவக்தா சந்தஸாம் வக்தா பஞ்சராத்ரஸ்ய யஸ்வயம் ||

2. ஸ்ரீ மஹாலக்ஷ்மி

இவர் ஸ்ரீவைகுண்டத்தில் விஷ்வக்ஸேநாதிகளுக்கு ஸ்ரீ பாஞ்சராத்திராதி ஸகல சாஸ்த்திரங்களையுமுபதேசித்தும் விபவாவதாரத்தில் ஸ்ரீந்ருஸிம்மாதிகளிடத்தில் ந்ருஸிம்ம புராணாதிகளைக் கேட்டு ப்ரவர்த்திப்பித்தும் சைதந்யஸ்தந்யதாயிநீமென்கிறபடியே ஆசார் யாதிகளை அதிஷ்டித்தும் ஸ்ரீ ரங்கநாயிகா ரூபேண அவதரித்து ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிக னுக்கு ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர ரென்கிற திருநாமத்தை அநுக்ரஹித்தும் ஸம்பிரதாய ப்ரவர்த் தனம் செய்தருளினார். திருநக்ஷத்திரம் பங்குனி உத்திரம்.

ஸஹதர்மசரீம் சௌரே: ஸம்மந்த்ரித ஜகத்திதாம் |

அநுக்ரஹமயீம் வந்தே நித்யமஜ்ஞாதநிக்ரஹாம் ||

3. சேனை முதலியார்

இவருக்கு வாஸஸ்த்தானம் ஸ்ரீவைகுண்டம். இவர் ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளி நம்மாழ்வாருக்கு யோகதசையில் ஸேவை ஸாதித்து மந்தர மந்திரார்த்தங்களை உபதேசித்

தார். இவர் அருளிய க்ரந்தம் விஷ்வக்ஸேநஸம்ஹிதை. இவர் திருநக்ஷத்திரம் ஐப்பசி பூராடம்.

வந்தே வைகுண்ட ஸேநாந்யம்
தேவம் ஸூத்ரவதீ ஸகம் |
யத்வேத்ரசிகரஸ்பந்தே
விச்வ மேதத் வ்யவஸ்த்திதம் || 3 ||

4. ப்ரபந்நஜந கூடஸ்த்தரான நம்மாழ்வார்.

இவர் திருக்குருகூரில் கலி பிறந்து 43 நாள் ப்ரமாதி வருஷம் வைகாசி மாதம் விசாக நக்ஷத்திரத்தில் காரியென்கிற பாகவதருக்கு குமாரராய் அவதரித்தார். இவர் அவதரித்தது முதல் யோகநிஷ்டராய் நிராஹாரராய் 35 வருஷம் திருப்புளியடியில் எழுந்தருளியிருந்து, மதுரகவிகளுக்கு திவ்யார்த்தங்களை உபதேசித்தும், நாதமுனிகளுக்கு யோகதசையில் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து எழுந்தருளி ஸார்த்தகமாய் மந்திரோபதேசாதிகளைச் செய்து அருளினர். இவர் அருளிய ப்ரபந்தங்கள் (1) திருவிருத்தம், (2) திருவாசிரியம், (3) பெரிய திருவந்தாதி, (4) திருவாய்மொழி.

யஸ்ய ஸாரஸ்வத ஸ்ரோதோ வகுளாமோதவாஸிதம் |
ச்ருதீநாம் விச்ரமாயாலம் சடாரிம் தமுபாஸ்மஹே ||

5. ஸ்ரீமந்நாதமுனிகள்

இவர் வீரநாராயணபுரமென்கிற அக்ரஹாரத்தில் சோபக்ருத் வருஷம் ஆனி மாதம் அநுஷ நக்ஷத்திரத்தில் சடமர்ஷண கோத்திரத்தில் ஈச்வர முனிக்கு குமாரராய் அவதரித்து ஆராவமுதன் நியமனத்தால் நம்மாழ்வாரை யோக தசையில் ஸாக்ஷாத்கரித்து ஸகல வேதாந்தார்த்தங்களையும் அதிகரித்து க்ருஹஸ்தாச்ரமத்தில் இருந்துகொண்டு ஸம்பிரதாய ப்ரவசநம் செய்துவந்தார். இவர் அருளிய க்ரந்தங்கள் : (1) ந்யாயதத்வம், (2) யோக ரஹஸ்யம்.

நாதேந முநிநா தேந பவேயம் நாதவாநஹம் |
யஸ்ய நைகமிகம் தத்வம் ஹஸ்தாமலகதாம் கதம் ||

6. உய்யக்கொண்டார் (புண்டரீகாக்ஷர்)

பராபவ வருஷம் சித்திரை மாதம் கிருத்திகை நக்ஷத்திரத்தில் திருவெள்ளறை திவ்ய தேசத்தில் அவதரித்தார். இவர் க்ருஹஸ்தாச்ரமத்தில் ஸம்பிரதாய ப்ரவசனம் செய்தருளி 75 திருநக்ஷத்திரம் எழுந்தருளி இருந்தார்.

நமஸ்யாம்யரவிந்தாக்ஷம் நாதபாவே வ்யவஸ்த்திதம் |
சுத்தஸத்வமயம் சௌரே: அவதார மிவாபரம் ||

7. மணக்கால் நம்பி (ராமமிச்ரர்)

இந்த ஸ்வாமி சோளதேசத்தில் காவேரீ தீரத்தில் மணக்கால் என்னும் அக்ர் ஹாரத்தில் விரோதி வருஷம் மாசி மாதம் மகநக்ஷத்திரத்தில் அவதரித்து ஸ்ரீரங்கத்தில் க்ருஹ ஸ்தாச்ரமத்தில் எழுந்தருளியிருந்து ஸம்பிரதாய ப்ரவசநம் செய்தருளினர்.

அநுஜ்ஜித க்ஷமாயோகம் அபுண்ய ஜநபாதகம் |
அஸ்ப்ருஷ்ட மதராகம் தம் ராமம் துர்ய முபாஸ்மஹே ||

8. ஆளவந்தார் (யாமுநாசார்யர் என்கிற பெரிய முதலியார்)

இந்த ஸ்வாமி வீரநாராயணபுரத்தில் தாதுவருஷம் ஆடி மாதம் உத்திராட நக்ஷத் திரத்தில் சடமர்ஷண கோத்திரத்தில் ஈச்வரபட்டாழ்வாருக்கு குமாரராய் அவதரித்து ஸ்ரீரங் கத்தில் துரீயாச்ரமத்தை க்ரஹித்து மணக்கால் நம்பி ஸ்ரீபாதத்திலே ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணி ஸம்பிரதாய ப்ரவசநம் செய்து வந்தார். இவர் அருளிய க்ரந்தங்கள்: (1) ஸ்த்தோத் திர ரத்திநம், (2) ஸித்தித்ரயம், (3) கீதார்த்த ஸங்கிரஹம், (4) ஆகமப்ராமாண்யம், (5) சதுச்லோகீ, (6) மஹாபுருஷ நிர்ணயம்.

விகாஹே யாமுநம் தீர்த்தம் ஸாதுப்ருந்தாவநே ஸ்த்திதம் |
நிரஸ்தஜிஹ்மகஸ்பர்சே யத்ர க்ருஷ்ண: க்ருதாதர: ||

9. பெரிய நம்பி (மஹாபூர்ணர்)

இந்த ஸ்வாமி ஸ்ரீரங்கத்தில் ஹேவிளம்பி வருஷம் மார்கழி மாதம் கேட்டை நக்ஷத் திரத்தில் பாரத்வாஜகோத்திரத்தில் அவதரித்து ஸ்ரீரங்காதிகளில் ஸம்பிரதாய ப்ரவசனம் செய்துகொண்டு யாக யக்ஞாத்யநுஷ்டாநத்துடன் எழுந்தருளி இருந்தார்.

தயாநிக்நம் யதீந்த்ரஸ்ய தேசிகம் பூர்ணமாச்ரயே |
யேந விச்வஸ்ருஜோ் விஷ்ணோ: அபூர்யத மநோரத: ||

10. எம்பெருமானர் (ராமாநுஜாசார்யர் ஸ்ரீபாஷ்யகாரர்)

இந்த ஸ்வாமி ஸ்ரீபெரும்பூதூரில் பிங்கள வருஷம் சித்திரை மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஹாரீத கோத்திரத்தில் ஆஸுரி கேசவஸோமயாஜிகளுக்குக் குமாரராய் அவதரித்து, மாதுலரான திருமலை நம்பிகளிடம் ராமாயணுதிகளையும், பெரிய நம்பியிடம் திருமந்திரார்த்தங்களையும், திருமாலையாண்டாள் ஸந்நிதியில் திருவாய்மொழியையும் கேட்டருளினர். இவர் காசி க்ஷேத்திரத்தில் ஸ்ரீ சரஸ்வதியினுல் கொடுக்கப்பட்ட ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனை ஆராதித்துக்கொண்டு துரீயாச்ரமத்தில் ஸ்ரீரங்காதி திவ்ய தேசிங்களில்

ஸம்பிரதாய ப்ரவசநம் செய்துவந்தார். இவர் அருளிச் செய்த க்ரந்தங்கள் : (1) வேதார்த்த ஸங்கிரஹம், (2) ஸ்ரீ பாஷ்யம், (3) ஸாரம், (4) தீபம், (5, 6, 7) கத்யத்ரயம், (8) கீதா பாஷ்யம், (9) நித்யம்.

ப்ரணமம் லக்ஷ்மணமுநி: ப்ரதிக்ருஹ்ணது மாமகம் |
ப்ரஸாதயதி யத் ஸூக்தி: ஸ்வாதீநபதிகாம் ச்ருதிம் ||

11. திருக்குருகைப்பிரான் பிள்ளான் (குருகேசர்)

இந்த ஸ்வாமி திருமலையில் (திருப்பதியில்) ஸ்ரீமுக வருஷம் ஐப்பசி மாதம் பூர்வாஷாடா நக்ஷத்திரத்தில் சடமர்ஷண கோத்திரத்தில் திருமலை நம்பிக் குமாரராய் அவதரித்து எம்பெருமானாருக்குப் பிறகு, ஞாநபுத்திரரான இந்த ஸ்வாமி தனக்குத் தாயபாகமாகக் கிடைத்த ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனை ஆராதித்துக்கொண்டு ஸம்பிரதாய ப்ரவசநம் செய்து வந்தார். பிள்ளானுக்குப் பிறகு சடமர்ஷண வம்சஸ்தர்களான (1) புண்டரீகாக்ஷ தேசிகர், (2) சடகோப தேசிகர், (3) பத்மாக்ஷ தேசிகர் இவர்கள் வரையில் புத்ரபௌத்ரக்ரமமாய் வந்த ஹயக்ரீவனை—பத்மாக்ஷ தேசிகர் தன் குமாரரான திருமலை ஸ்ரீநிவாஸாசாரியாரை (ப்ரபந்தநிர்வாஹ க்ரந்த கர்த்தா)யும் லக்ஷ்மீ ஹயக்ரீவனையும் ஸ்வாமி தேசிகனிடம் ஒப்படைத்து ரக்ஷணம் பண்ணும்படி நியமித்தார். இவர் அருளிய க்ரந்தம் : பகவத் விஷயம், ஆறுயிரப்படி.

விக்யாதோ யதிஸார்வ பௌம ஜலதே: சந்த்ரோப மத்வேந ய:
ஸ்ரீபாஷ்யேண யதந்வயா ஸ்ஸூவிதிதா: ஸ்ரீவிஷ்ணு சித்தாதய: |
வ்யாக்யாம் பாஷ்யக்ருதாஜ்ஞயோபநிஷதாம் யோ த்ராவிடீநாம் வ்யதாத்
பூர்ணம் தம் குருகேச்வரம் குருவரம் காருண்ய பூர்ணம் பஜே ||

12. எங்களாழ்வான் (ஸ்ரீ விஷ்ணு சித்தர்)

இந்த ஸ்வாமி ஸ்ரீரங்கத்திற்கு ஸமீபமான திருவெள்ளறை திவ்ய தேசத்தில் கீலக வருஷம் வைகாசி மாதம் சுவாதீ நக்ஷத்திரத்தில் அவதரித்து ஸம்பிரதாய ப்ரவசநம் செய்து வந்தார். இவர் அருளிச் செய்த க்ரந்தம் : விஷ்ணுபுராண வ்யாக்யா, ஸ்ரீ விஷ்ணு சித்தீயம்.

ஸ்ரீவிஷ்ணுசித்த பதபங்கஜ ஸங்கமாய
சேதோ மம ஸ்ப்ருஹயதே கிமத:பரேண |
நோசேந் மமாபி யதிசேகரபாரதீநாம்
பாவ: கதம் பவிதுமர்ஹதி வாக்விதேய: ||

13. நடாதூர் அம்மாள் (வரததேசிகர்)

இந்த ஸ்வாமி பெருமாள் கோவிலில் சித்திரை மாதம் சித்ரா நக்ஷத்திரத்தில் ஸ்ரீவத்ஸ கோத்திரம் நடாதூர் வம்சத்தில் தேவராஜாசார்யருக்குக் குமாரராய் அவதரித்து தேவாதி ராஜன் ஸந்நிதி கச்சிவாய்த்தான் மண்டபத்திற்கு முன்பு ஸம்பிரதாய ப்ரவசந கோஷ்டியை நடத்தியருளி ஸுதர்சநாசார்ய ரென்கிற சிஷ்யரை நியமித்தருளினர். அதன் பேரில் அந்த ஸ்வாமி ச்ருதப்ரகாசிகை என்கிற ஸ்ரீ பாஷ்யவ்யாக்யாநத்தைச் செய்தருளினர். அம்மாள் செய்தருளிய க்ரந்தங்கள் : தத்வஸாரம், ப்ரமேயமாலை முதலானவை.

வந்தேஹம் வரதார்யந்தம் வத்ஸாபிஜநபூஷணம் |
பாஷ்யாம்ருதப்ரதாநாத் ய: ஸஞ்ஜீவயதி மாமபி ||

14. அப்புள்ளார் (ராமாநுஜாசார்யர்)

இந்த ஸ்வாமி சித்திரை மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஆத்ரேய கோத்திரத்தில் ஸ்ரீ ரங்கராஜப்புள்ளாருக்கு குமாரராய் அவதரித்து, அம்மாள் ஸந்நிதியில் ஸ்ரீ பாஷ்ய, கீதா பாஷ்ய, பகவத் விஷயங்களாகிய இந்த மூன்று கிரந்தங்களையும் திருத்தகப்பனுராகிய ஸ்ரீரங்க ராஜரிடத்தில் ரஹஸ்யார்த்தமும் க்ரஹித்து ப்ரதிவாதிகளை ஜயித்ததனுல் வாதிஹம்ஸம்பு வாஹர் யென்கிற திருநாமம் பெற்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனுக்கு ஸகல சாஸ்த்திரார்த்தங் களையும் உபதேசித்து அநுக்ரஹித்தருளினர். இவர் அருளிய க்ரந்தங்கள் ந்யாயகுலிசம் முதலியது.

யஸ்மாதஸ்மாபி ரேதத் யதிபதிகதிதப்ராக்த்நப்ரக்ரியோத்யத்
கர்ம ப்ரஹ்மாவமர்சப்ரபவபஹுபலம் ஸார்த்தமக்ராஹி சாஸ்த்ரம் |
தம் விஷ்வக்பேதவித்யா ஸ்திதிபதவிஷயம் ஸ்தேயபூதம் ப்ரபூதம்
வந்தேயாத்ரேய ராமாநுஜ குருமநகம் வாதிஹம்ஸாம்புவாஹம் ||

15. ஸ்வாமி தேசிகன்

வேங்கடமுடையானின் திருமணியின் அம்சம் என்று கொண்டாடும்படி, கச்சியில் புனிதமான தூப்புல் எனும் திவ்ய தேசத்தில் விபவஸம்வத்ஸரத்தில் அனந்த ஸூரியின் திருக்குமாரராய் அவதரித்தார். அரங்கநகர் அப்பனுல் தனக்கே யுரியதான வேதாந்தா சார்ய பதத்தை அளிக்கப்பெற்றார். நூற்றுக்கணக்கான க்ரந்தங்களை அருளிச் செய்தார். தர்சனத்தையும், திராவிட உபநிஷத்துக்களையும் பல வகையில் காத்தளித்தார். ஸ்ரீ வைஷ் ணவ ஸாம்ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பட்டார். உலகம் உய்யும் வழிகளை வகுத்தளித்தார். ஆசார்யோத்தமனுயும், ஸாக்ஷாத் திருவேங்கட முடையானுகவும் திகழ்ந்து நின்றார். இவரது தனியன்கள்:

ஸ்ரீமான் வேங்கட நாதார்ய: கவிதார்கிக கேஸரீ
வேதாந்தாசார்ய வர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி
ராமாநுஜ தயாபாத்ரம் க்ஞான வைராக்ய பூஷணம்
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம் முதலியன.

இவர் வைபவத்தை விளக்குவது இம்மலர்.

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ |
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி ||

16. ஸ்ரீ நயினாராசார்யர்

ஸ்ரீமல் லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜராய் பால்யத்திலே ஆராதன காலத்திலே ஸ்ரீ ஹயக்ரீவர் ப்ரஸாதித்தருளின லாலாமயமான அம்ருத ஸ்வீகாரத்தாலே அதிசயித ஞானத்தை உடையவராய் பிதாவும் ஆசார்யனுமான ஸ்ரீமத் வேங்கடநாத தேசிகர் ஸந்நிதியில் நின்றும் அதிகரிக்கப்பட்ட ஸகல சாஸ்த்ரங்களையும் உபய வேதாந்தங்களையும் ரகஸ்யார்த்தங்களையுமுடைய ஸ்ரீ வரதாசார்யரான தூப்புல் நயினாரும் தர்சனப்ரவர்த்தனம் பண்ணிக்கொண்டு ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்களையும் பிள்ளையினுடைய க்ரந்தங்களையும் ப்ரவர்த்திப்பித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கிற நாளிலே, துண்டீர, பாண்ட்ய, சோள, நேபாள, கர்ணாட, லாட, கௌட, வங்க, களிங்கோத்தராதி தேசவாசிகளான மதாந்தரஸ்தர்களை ஜயிக்கத் திருஉள்ளமாய் ஸம்ப்ரமத்துடனே திருப்பல்லக்கிலேறி யருளி பஹுவித்வத் ஜநங்களோடு பஹுவித்வத் சின்னங்களோடுங்கூடப் புறப்பட்டருளி,

ஸ்ரீமத்ராமாநுஜார்ய ப்ரகடிதபதவீ தாவிமேதாவி வித்வத்
ஸேநாநாஸீர வீரோ வரதகுருரஹம் வாதிநோ வாரயந்து |
ஆலோகாலோக சைலாதகில நரபதி த்வாரி பத்நாமி பத்ரம்
மாயாஸித்தாந்த மாயாவிகடன கடநாயந்த்ர தந்த்ர: ஸ்வதந்த்ர: ||

என்று வந்திகள் முன்னே பிருது கூற தவள் சங்கம் முதலானவைகள் முழங்க ராஜஸ்தானங்களிலே எழுந்தருளி அந்தந்த பூபாலர்களாலே பகுமதி பெற்று அங்கங்குள்ள தர்சன விரோதிகளை எல்லாம் நிரஸித்து அழகர் திருமலையிலே எழுந்தருளி அழகரைத் தொழுது அங்குள்ள சிஷ்யர்களுக்கு கவிதார்கிக ஸிம்ஹம் என்கிற பிருதை ப்ரஸாதித்து அங்குள்ள மதாந்தரஸ்தரை யெல்லாம் ஜயித்து கேரள தேச மெழுந்தருளி அங்குள்ள பூபாலர்களாலே பகுமதி பெற்று அங்கே க்ஷுத்ரிகளாய் காளீமந்த்ர ஜபத்தாலே பாகவிரோதமாசரித்தவர்களை நாளிகேர த்வயத்தாலே கபோலதாடனம் செய்வித்து அவர்களிருந்து ஜபித்தவிடம்

அவர்கள் தலையிலே ஏறும்படி தம்முடைய திருமுடியிலே ஒரு த்ருணத்தை சொருகிக் கொள்ள அவ்விடம் அவர்கள் தலையிலே ஏற அந்த பாரத்தாலும் கபோலதாடனத்தாலும் நொந்து சரணம் பண்ணி அவர்களை ரக்ஷித்து திருநாராயணபுரத்துக் கெழுந்தருளி அங்குள்ள சிஷ்யர்களுக்கு ஜஞ்ஜாமாருதமென்கிற பிருதை ப்ரஸாதித்தருளி அங்கு நின்று சோள தேச மெழுந்தருளி அங்குள்ள மாயாவாதிகளை லீலையாய் ஜயித்து திருக்குடந்தை முதலான ஸ்தலங்களில் ஆராவமுதன் முதலான எம்பெருமான்களை மங்களாசாஸனம் செய்துகொண்டு அங்கு நின்றும் பெருமாள் கோயில் எழுந்தருளி அங்குள்ள மதாந்தரஸ்தரை ஜயித்து ஸ்ரீபாஷ்யாதி ப்ரவசனம் பண்ணிக்கொண்டிருந்து, பின்பு, திருமலையே எழுந்தருளி திருப் புரட்டாசித் திருநாளை மங்களாசாஸனம் செய்தருளி ஸ்ரீ பாஷ்யாதி ப்ரவசனம் பண்ணிக் கொண்டிருக்க திருவேங்கடமுடையான் திருக்கல்யாணம் ஸேவிக்க வந்த உத்தரதேசத்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் இவரைத் திருவடி தொழுது தேவரீர் வடக்கே எழுந்தருளி அங்குள்ளாருக்கு ஸ்ரீ பாஷ்யாதி ஸம்ப்ரதாயார்த்தங்களை எல்லாம் க்ருபை செய்தருளி அங்குள்ள தர்சன விரோதிகளையும் நிரஸித்தருள வேணுமென்று ப்ரார்த்திக்க இவரும் வடக்கே எழுந்தருளி ஸ்ரீ அஹோபிலேச்வரனையும் மங்களகிரி நாதனையும் ஸேவித்து அங்குள்ள ஸத்துக்களை அனுக்ரஹித்து அஸத்துக்களை நிக்ரஹித்து ஸ்ரீகாகுளம் எழுந்தருளி அவர் விஷயமாக ஒரு ஸ்தோத்ரம் விண்ணப்பம் செய்து அங்கு நின்றும் புறப்பட்டருளி பிள்ளையாலே திருத்தப்பட்ட ஸர்வக்ஞஸிம்ஹநாயகனாலே எதிர்கொள்ளப்பட்டு அவனுடைய பட்டணமே எழுந்தருளி அவனை க்ருதார்த்தனாக்கி அவனண்டையில் வித்வான்களை எல்லாம் ஜயித்து ஸ்வசமாக்கிக் கொள்ள அவர்களில் சாகல்யமல்லன் என்பான் ஒருவன் வாதத்துக்கு வர நயினாரும் அவனை ஜயிக்க அவன் இவரை ஜயிக்கமாட்டாமல் மானத்தாலே க்ருத்தனாய் தன் வசமாயிருக்கும் ஒரு ப்ரஹ்மரக்ஷஸ்ஸை இவரை பாதிக்கும்படி ஏவ அதுவும் நயினாரைக் கிட்டவொண்ணாமையால் கூசி தூரமே வந்து தோற்ற, நயினாரும் அதைக் கண்டு வசீகரித்துத் தம்முடைய திருப்பல்லக்கைத் தாங்கச் சொல்ல அதுவும் எல்லோரும் காண, முன்தண்டைத் தாங்கி நடக்க, இவரும் ஆஸ்தானத்திலே எழுந்தருள அங்குள்ளவர்கள் விஸ்மயிக்க, ராஜாவும் நயினார் வைபவத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு சாகல்யமல்லனை அடித்தோட்டிவிட்டு நயினாருக்கு விசேஷ பஹுமானம் பண்ணியனுப்ப நயினாரும் அங்கு நின்று புறப்பட்டு பத்ராசலம் எழுந்தருளி ஸ்ரீராமனைத் தொழுது தர்மபுரி நரஸிம்ஹனையும் ஸேவித்து புருஷோத்தம முடையானுடைய ஸேவாத்வரையாலே கோதாவரிக் கரையிலே ராஜமகேந்த்ரபுரம் எழுந்தருளி அந்த ராஜாவினுடைய மந்த்ரியான தாசராஜா வென்கிற ப்ராம்ஹணனை பஞ்ச ஸம்ஸ்காராதிகளாலே ஸ்ரீ வைஷ்ணவனாக்கி தாசரதி என்று தாசநாமமும் ப்ரஸாதித்து அவருக்குத் திருவாராதனத்திற்காக தமக்கு ஆசார்யன் ப்ரஸாதித்தருளின ஸ்ரீ வேதாந்த தேசிக விக்ரஹத்தை ப்ரஸாதித்தருளி ரஹஸ்யார்த்தங்களை யெல்லாம் அவரும் அத்தேச வாஸிகளும் அதிகரித்து உஜ்ஜீவிக்கும்படி ஸம்ஸ்க்ருத ரூபமான (1) தத்வத்ரய சுளகம்,

(2) ரஹஸ்யத்ரய சுளகம், (3) ஸாரஸங்க்ரஹம், (4) அபயப்ரதான ஸாரம் முதலான வற்றை அவர்களுக்காகச் செய்தருளி ப்ரஸாதித்து க்ருதார்த்தர்களாக்கி வஸிஷ்டஸிந்து ஸமாகமத்திலே அந்தர்வேதி ந்ருஸிம்ஹனை ஸேவித்து ஸிம்ஹாத்ரி அப்பனையும் ஸேவித்து, ஸ்ரீ கூர்மநாதனையும் ஸேவித்து கஜபதி ராஜதானியான கடங்கம் எழுந்தருளி அங்குள்ள வாதிகளை ஜயித்து ஸ்ரீ புருஷோத்தமம் எழுந்தருளி ஜகந்நாதனைத் திருவடி தொழுது மீண்டும் பெருமாள் கோயிலிலே எழுந்தருளி,

ஸ்ரீமாநாகமதர்சி தேசிக வரஸ்ரீ வேங்கடேசாத்மஜோ
வேதாந்தத்விதயார்த்தமன்வஹமஸௌ விக்யாபயன் பூதலே |
துர்வாரம் வரதோ குரு: ப்ரசமயன் துர்வாதி கர்வம் மஹான்
ஆகல்பம் கருணாநிதிர் விஜயதாமாசார்ய சூடாமணி: ||

என்றநுஸந்திக்கும்படி பரபக்ஷ நிரஸன பூர்வகமாக ஸ்வமத ஸ்தாபனம் பண்ணிக்கொண்டு உபயவேதாந்த ப்ரவர்த்தகராக எழுந்தருளியிருந்தார்.

இப்படி நூறு திருநக்ஷத்ரம் வ்ருத்தராய் வெள்ளிக்குந்தாணியிலே வீற்றிருந்து ஸ்ரீபாஷ்யாதிவியாக்யானம் ப்ரஸாதித்துக்கொண்டெழுந்தருளியிருந்தார். ஸ்ரீஜய ஸம்வத்ஸரம் பங்குனி மாஸம் க்ருஷ்ணபக்ஷம் ஸப்தமி நாள் ஸ்வாசார்யனை ஸ்ரீ வேங்கடநாதன் திருவடிகளை அடைந்தருளினர். அவர் சரம கைங்கர்யங்களை யெல்லாம் குமாரர் செய்தருளி க்ருதார்த்தரானர்.

தூப்புல் நயினர் தனியன் :

ஸ்ரீமல் லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம் |
விச்வாமித்ர குலோத்பூதம் வரதார்யமஹம் பஜே ||

17. ப்ரம்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி

இந்த ஸ்வாமி திருமலையில் கௌண்டிந்ய கோத்திரத்தில் புரட்டாசி திருவோணத்தில் அவதரித்து திருமலை பெருமாள் கோவில் முதலிய திவ்ய தேசங்களில் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்தருளினர். இந்த ஸ்வாமி சிஷ்யராகிய வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி யென்கிற த்விதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமியால் மைசூர் ஸம்ஸ்தாநத்தில் மடம் ஏற்பட்டு அதில் ஹயக்ரீவனை ப்ரதிஷ்டை பண்ணி இதுவரையில் ஸம்பிரதாய ப்ரவசநம் நடந்து வருகிறது.

பர்யாய பாஷ்யகாராய ப்ரணதார்த்திம் விதுந்வதே |
ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ராய த்விதீயப்ரஹ்மணே நம: ||

18. கடிகாசதம் அம்மாள் (வரதாசாரியர்)

இந்த ஸ்வாமி பெருமாள் கோவிலில் சித்திரை மாதம் ஹஸ்த நக்ஷத்திரத்தில் ஸ்ரீவத்ஸ கோத்திரத்தில் நடாதூர் அம்மாள் திருவம்சத்தில் தேவராஜாசார் ஸ்வாமிக்குத் திருக்குமாரராய் அவதரித்து பெருமாள் கோவிலில் க்ருஹஸ்தாச்ரமத்தில் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்து வந்தார். இவர் அருளிய க்ரந்தங்கள் யதிராஜ விஜயம் முதலானவை.

நமோ வரத விஷ்ண்வார்ய நயநாநந்ததாயிநே |
வாத்ஸ்யாய வரதார்யாய வாதிநீஹாரபாஸ்வதே |

19. ஆதிவண்சட காப ஸ்வாமி

திருநாராயணபுரம் திவ்ய தேசத்தில் புரட்டாசி மாதம் கேட்டை நக்ஷத்திரத்தில் கேசவாசாரியார் ஸ்வாமிக்கு திருக்குமாரராய் அவதரித்தருளி துரீயாச்ரமத்தில் ஸ்ரீ அஹோபிலம் ஸ்ரீ ந்ருஸிம்மனை ஆராதித்துக்கொண்டு பெருமாள் கோவில் முதலான திவ்யதேசங்களில் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்தருளினர். இந்த ஸ்வாமி வரதவிஷ்ண்வாசார்யர் முகமாக முநித்ரய ஸம்ப்ரதாயத்திற்கு ஆசார்யராக ஆனதுடன், தாம் அஹோபில மடமென்று ஒரு மடத்தை ஏற்படுத்தி அதில் லக்ஷ்மீந்ருஸிம்மனைப் பரம்பரையாக ஆராதிக்கும்படி தம்முடைய மற்றொரு சிஷ்யரான நாராயண ஸ்வாமி யென்கிற யதியை அந்த மடத்தில் தமக்குப் பிறகு ஆசாரியராக நியமித்து ஸம்பிரதாய ப்ரவசநம் செய்து இந்த அஹோபில மடத்துக்குக் கூடஸ்தராக விளயங்கியபடியால் அந்த ஸ்வாமிக்கு ஆதிவண் சடகோப ஸ்வாமி என்கிற திருநாமம் வழங்கிவருகிறது. வரதவிஷ்ண்வாசார்யர் இந்த ஸ்வாமிக்கு ஸதீர்த்தரும்கூட ஆகிரும். இந்த சடகோப ஸ்வாமி திருக்குடந்தை தேசிகன் ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கு 3 கிரந்தங்களுக்கு ஆசார்யராக எழுந்தருளுகிரும்.

ப்ரபத்யே நிரவத்யாநாம் நிஷத்யாம் குணஸம்பதாம் |
சரணம் பவபீதாநாம் சடகோப முநீச்வரம் ||

20. வரதவிஷ்ணுவாசார்யர் ஸ்வாமி

இந்த ஸ்வாமி பெருமாள் கோவிலில் நடாதூர் வத்ஸகோத்ரத்தில் கடிகாசதம் அம்மா ளுக்குக் குமாரராய் அவதரித்து பிதாவினிடம் ரஹஸ்யத்ரயஸாரத்தையும் ஆதிவண்சடகோப ஸ்வாமியிடம் ஸ்ரீபாஷ்ய-கீதாபாஷ்ய பகவத் விஷயங்களையும் காலக்ஷேபம் செய்து கிருஹஸ் தாச்ரமத்தில் காஞ்சீபுரத்தில் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்துவந்தார்.

மஹாதயாதீச குரோ:தநயம் தத்வவித்வரம் |
வந்தேவரதவிஷ்ண்வார்யம் வாத்ஸல்யாதி குணர்ணவம் ||

21. மஹாதயாதீசர்

காஞ்சீபுரத்திற்கு ஸமீபத்தில் உள்ள கீழ்ணீர்குன்றம் என்கிற ப்ரஸித்த அக்ரஹாரத் தில் ஸ்ரீவத்ஸ கோத்திரத்தில் வரதவிஷ்ணுவாசார்யருக்கு குமாரராய் அவதரித்து பிதாவி னிடம் க்ரந்த வேதாந்தார்த்தங்களை க்ரஹித்து காஞ்சீபுரத்தில் க்ரஹஸ்தாச்ரமத்திலேயே இருந்துகொண்டு ஸம்பிரதாய ப்ரவசநம் செய்துவந்தார்.

மஹாதயாதீசிது ரம்புஜாக்ஷ
நித்யாநநித்யாபி நிவிஷ்டபுத்தே: |
அஜ்ஞாந நிக்ராஹகமஞ்சஸாஹம்
அஸ்மத்குரோ ரங்க்ரியுகம் ப்ரபத்யே ||

22. அஹோபிலாசார்யர் (நரஸிம்மாசார்யர்)

பெருமாள் கோவிலில் அநந்தாசார்ய ஸ்வாமிக்கு குமாரராய் அவதரித்து பிதாமஹ ராகிய வரதவிஷ்ணுவாசார்யரிடத்தில் பஞ்சஸம்ஸ்காரமும் மஹாதயாதீசரிடத்தில் க்ரந்தாந்- வயமும் பெற்று க்ரஹஸ்தாச்ரமத்திலேயே இருந்துகொண்டு ஸம்பிரதாய ப்ரவசநம் செய் தருளினர்.

ஸ்ரீமத் வரதவிஷ்ண்வார்ய பதபங்கஜஷட்பதம் |
அஹோபில குரும் வந்தே வத்ஸவம்சைகமௌக்திகம் ||

23. ஷஷ்டபராங்குச ஸ்வாமி

பெருமாள் கோவிலில் வங்கீபுரம் பாரத்வாஜ கோத்ரத்தில் அவதரித்து ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யங்களை அஹோபிலாசார்யரிடத்திலும் அஹோபிலாசார்யருடைய திருத்தம்பி யாகிய வரதாசார்யரிடத்திலும் பகவத் விஷயத்தை த்ருதீய பராங்குச ஸ்வாமியிடத்திலும்

க்ரஹித்து ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்தருளி அஹோபில மடத்தில் ஆறுவது ஸ்வாமியாக் எழுந்தருளியிருந்து ந்ருஸிம்மாராதனம் செய்தருளினர்.

ஸ்ரீமச் சடாரிமுநிபாத ஸரோஜ ஹம்ஸம்
ஸ்ரீமத் பராங்குச தபோதந லப்தபோதம்
ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ வரதார்ய தயாவலம்பம்
ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ||

24. பஞ்சமத பஞ்சனம் தாததேசிகன் ஸ்வாமி.

திருக்குடந்தையில் சடமர்ஷண கோத்ரத்தில் ஸ்ரீநிவாஸதாதார்யருக்கு குமாரராய் அவதரித்து பிதாவினிடம் பஞ்சஸம்ஸ்காரமும், பராங்குச ஸ்வாமியிடம் க்ரந்தாந்வயமும் பெற்று க்ருஹஸ்தாச்ரமத்திலேயே இருந்துகொண்டு ஸம்பிரதாய ஸ்தாபனம் செய்தருளினர். இவர் அருளிய க்ரந்தம் பஞ்சமதபஞ்சநம். அதைக் கொண்டே அத்திருநாமம் வழங்கலாகி விட்டது.

ஸ்ரீசைலபூர்ணகுலவாரிதிபூர்ணசந்த்ரம்
ஸ்ரீஸ்ரீநிவாஸ குருவர்யபதாப்ஜப்ருங்கம் |
ச்ரேயோ குணம்புநிதிமாச்ரிதபாரிஜாதம்
ஸ்ரீதாதயார்யமநகம் சரணம் ப்ரபத்யே ||

25. கீணீர்குன்றம் அநந்ததேசிகர் ஸ்வாமி

கீணீர்குன்றம் என்கிற அக்ரஹாரத்தில் நடாதூர் அம்மாள் திருவம்சத்தில் அவதரித்து, தாதாசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் பாஷ்ய-கீதாபாஷ்ய ரஹஸ்யத்ரயஸாரத்தையும் திருமலை ஸ்ரீநிவாஸாசார்யரிடம் பகவத் விஷயத்தையும் அதிகரித்து க்ருஹஸ்தாச்ரமத்தில் அநேக சிஷ்யர்களுக்கு ஸம்பிரதாய ப்ரவசநம் செய்து, நடாதூர் அம்மாள் ஆராதித்த தேவப் பெருமாளை—தாயக்ரமமாய் எழுந்தருளிய திவ்ய மூர்த்தியை ஆராதித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீதாதகுருஸேவாத்த வேதாந்தயுகளாசய: |
வாத்ஸ்யாநந்தகுரு: ஸ்ரீமான் ச்ரேயஸே மேஸ்து பூயஸே ||

26. ரங்கராமாநுஜஸ்வாமி (உபநிஷத்பாஷ்யகாரர்)

இந்த ஸ்வாமி வேலாமூர் என்றும் அக்ரஹாரத்தில் பாரத்வாஜ கோத்ரத்தில் ஸாமசாகையில் ஆனிமீ மிருக் சீர்ஷ நக்ஷத்திரத்தில் அவதரித்து அநந்தாசார்யரிடத்தில் க்ரந்த-

சதுஷ்டயத்தையும் க்ரஹித்து பரகாலஸ்வாமியிடம் ஆச்ரமஸ்வீகாரம் பெற்று உபநிஷித் பாஷ்யாதி 60 க்ரந்தங்களை செய்து உபநிஷத் பாஷ்யகாரர் என்றும் ஷஷ்டி ப்ரபந்தநிர்மாதா என்றும் ப்ரஸித்தராய் எழுந்தருளி இருந்தார்.

யேநோபநிஷதாம் பாஷ்யம் ராமாநுஜமதாநுகம் |
ரம்யம் க்ருதம் ப்ரபத்யே தம் ரங்கராமாநுஜம் முநிம் ||

27. ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி

இந்த ஸ்வாமி ஸ்ரீரங்கத்தில் புரட்டாசி திருவோணத்தில் அவதரித்து ஸ்ரீ வீரராகவாசாரியார்—திவ்ய ப்ரபந்தம் 4000த்திற்கும் வ்யாக்யாநம் செய்த பெரிய பரகால ஸ்வாமி வேதாந்த ராமநுஜ ஸ்வாமி முதலானவர்களுக்கு ப்ரவசநம் பண்ணியும் ப்ரசிஷ்யரான மன்னுர் ஸ்வாமியைக் கொண்டு ஜயந்தீ நிர்ணயாதி க்ரந்தங்களைச் செய்வித்தும் லோகோஜ்ஜீவநம் செய்தருளினார்.

நம: ஸ்ரீரங்கநாதாய மதுஜ்ஜீவந ஹேதவே |
வேதாந்தாசார்யபாதாப்ஜ சஞ்சரீகாய ஸூரயே ||

28. ஸ்ரீ வீரராகவாசாரியார் ஸ்வாமி

ஸ்ரீரங்கத்தில் சித்திரைமீ சுவாதி நக்ஷத்திரத்தில் பாரத்வாஜ கோத்ரத்தில் ஸ்ரீரங்காசாரியருக்கு குமாரராய் அவதரித்து ரங்கநாத ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்ய-கீதா பாஷ்யங்களும் ஸ்ரீ வெங்கடேசார்யரிடத்தில் ரஹஸ்ய-பகவத் விஷயங்களையும் க்ரஹித்து கிருஹஸ்தாச்ரமத்தில் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்தருளினார்.

ஸ்ரீ வேங்கடேச குருணா கருணாகரேண
ஸ்ரீசே ஸமர்பிதபரம் ச்ரிதபாரிஜாதம் |
ஸ்ரீரங்கநாதகுருவீக்ஷணலப்தபோதம்
ஸ்ரீ வீரராகவகுரும் சரணம் ப்ரபத்யே ||

ஸ்ரீ ரங்கபதி தேசிகர்

ஸ்ரீ ரங்கத்தில் பார்த்வாஜ கோத்ரத்தில் ஸாமசாகையில் வீரராகவாசார்யருக்கு குமாரராய் அவதரித்து பிதாவினிடத்தில் க்ரந்த சதுஷ்டயத்தையும் க்ரஹித்து க்ரஹஸ்தாச்ரமத்திலே இருந்துக் கொண்டு ஸம்பிரதாய ப்ரவசநம் செய்து வந்தார்.

ஸ்ரீவீரராகவகுரோ : தநயம் ததஸ்ச
சாரீரகாதி ஸமதீத்ய ஸமஸ்தசாஸ்த்ரம் |
வித்யோதமானமநவத்யகுணைகதாநம்
ஸ்ரீரங்கநாதகுருவர்யமஹம் ப்ரபத்யே ||

30. ரங்கநாத ஸ்வாமி

திரு நாராயணபுரத்தில் பங்குனிமீ ரேவதி நக்ஷத்திரத்தில் அவதரித்து ஸ்ரீரங்கபதி தேசிகன் ஸன்னிதில் ஸ்ரீபாஷ்ய கீதா பாஷ்ய ரஹஸ்யங்களும் சந்த்ரகிரி வேங்கடேசாசாரியார் ஸ்வாமியிடம் பகவத் விஷயமும் ஸ்ரீ பரகால ஸ்வாமியிடம் ஸந்யாஸமும் பெற்ற மன்னர் ஸ்வாமியிடம் ஸந்யாஸம் பரிக்ரஹித்து எழுந்தருளி இருந்தார்.

கல்யாணவஹமஸ்மாகம்
காருண்யகலசாம்புதே:
பரபத்யே ரங்கநாதஸ்ய
பதபங்கஜதல்லஜம் ||

31. ஸாக்ஷாத் ஸ்வாமி (வேதாந்த் ராமாநுஜஸ்வாமி)

திருநாராயணபுரத்திற்கு ஸமீபம் கொண்டல் அக்ரஹாரத்தில் சித்திரை திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஸ்ரீநிவாஸாசார்யருக்கு குமாரராய் அவதரித்து ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி ஸந்நிதியில் க்ரந்த சதுஷ்டயத்தையும் துரீயாச்ரமத்தையும் க்ரஹித்து க்ஞாந வைராக்யாநுஷ்டாந சேவதியென்றும் விக்யாதராய் ஸ்ரீரங்கநாதன் நியமனத்தாலும் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் நியமத்தாலும் பகவத் விஷய (ஆருயிரப்படி)த்திற்கும் ரஹஸ்யத்ரயஸாரம் முதல் பாகத்திற்கு (12 அதிகாரம்) பூர்வஸாராஸ்வாதிநீவ்யாக்யானம் இது முதலான பல க்ரந்தங்களை அருளிச் செய்தார்—இம்மஹானின் அவதாரத்தைக் குறித்து ரஹஸ்யத்ரய ஸாரத்திலே—விஷமது என்கிற ச்லோகத்தில்—'பவிதா தைவாத் கஸ்சித் ஜிஹாஸித ஸம்ஸ்ருதி:' என்றும் கஸ்சித் விபஸ்சித்தம : என்றும் ஸ்வாமி தேசிகனே தாமே ஸூசிப்பித்தருளினர்.

ஸ்ரீரங்கநாத குருபாத ஸரோஜ ஹம்ஸம்
வேதாந்ததேசிக பதாம்புஜ ப்ருங்கராஜம் |
ஸ்ரீமத்யதீந்த்ரசடகோபதயாவலம்பம்
வேதாந்தலக்ஷ்மணமுநிம் சரணம் ப்ரபத்யே ||

32. திருக்குடந்தை தேசிகன் (முனித்ரயஸம்ப்ராதாயகூடஸ்தர்)

திருக்குடந்தை தேசிகனென்று ப்ரக்யாதரான ஸ்ரீ கோபால தேசிகன். இந்த ஸ்வாமி கண்டியூர் திவ்ய தேசத்திற்கு ஸமீபத்திலுள்ள ஏகாந்தமான திவ்ய ஸ்தலத்தில்—விக்ரம வருஷம் புரட்டாசி மாதம் சுக்லபக்ஷ நவமி திங்கள் கிழமை கூடின ஸேனை முதலியார் திரு நக்ஷத்ரமும் பகவத் விஷய ப்ரணேதாவான திருக்குருகைப்பிரான் பிள்ளான் திரு நக்ஷத்திர முமான பூரட்டாதி நக்ஷத்திரத்தில் அஸ்தோகாத்வரி கச்சி-கடாம்பு-கவிவித்வன்மணி—வாதிஹம்ஸாம்வாஹம் அரசாணி பாலை-நெல்லூர் ஆத்ரேய யஜ்வாக்களின் பரம்பரையில் அவதரித்த ஸ்ரீ கிருஷ்ணஸூரிக்கு திருக்குமாரராய் அவதரித்து தன் பிதாவிடம் பரம்மோப தேசம் பஞ்சஸம்ஸ்காராதிகளைப் பெற்று. ஸாக்ஷாத் ஸ்வாமி திருவடிவாரத்திலே ஸ்ரீ பாஷ்ய—கீதா பாஷ்ய ரஹஸ்யத்ரயஸாரம் முதலான ஸகல ஸம்பிரதாய க்ரந்தங்களையும் பாதுகா ஸேவக ராமாநுஜ ஸ்வாமியின் ஸந்நிதியில் பகவத் விஷயத்தையும் காலக்ஷேபம் செய்து திருக்குடந்தையில் கிருஹஸ்தாச்ரமத்தில் எழுந்தருளி இருந்து முனித்ரய ஸ்வாமிகளுக்கு காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டு விசேஷித்து ந்யாஸவித்யையை பலவிதமாக ப்ரவசநம் செய்து தேசிகனுடைய ஸித்தாந்தத்தை சாகோபசாமாக வளரச் செய்தார். இவர் அருளிய க்ரந்தங்கள் நிக்ஷேப சிந்தாமணி. உத்தரஸாராஸ்வாதிநீ, ஜயந்தீ நிர்ணயம் திருப் பல்லாண்டு—கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யானம் தேசிகஸஹஸ்ரநாமம் முதலானவைகள்.

ஸ்ரீக்ருஷ்ண தேசிக பதாம்புஜப்ருங்கராஜம்
வேதாந்தலக்ஷ்மணமுநீந்த்ரக்ருபாத்தபோதம் |
த்ரய்யந்ததேசிகயதீந்த்ரசடாரிமூர்த்திம்
கோபாலதேசிக சிகாமணிமாச்ரயாம : ||

33. (முனித்ரயம்) ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்

திருக்குடைந்தை தேசிகன் திருவடிகளில் ஆச்ரயித்த மூன்று யதிகளில் நாதமுனி அம்சமாகிய ஸ்ரீநிவாஸ ஸம்யமிஸார்வ பௌமன் திருமாலிருஞ் சோலை திவ்ய க்ஷேத்ரத்தில் அவதரித்து துர்யாச்ரமத்தை ஸ்வீகரித்து திருக்குடந்தை தேசிகன் ஸந்நிதியில் உபய வேதாந்த க்ரஹணம் செய்து பரமவிரக்தராய் ஏகாந்தசீலராய் கேவலம் த்யாந பரராய் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி இருந்து சிஷ்யர்களுக்கு ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்துகொண்டு எழுந்தருளி இருந்தார்.

(முனித்ரயம்) ரங்கநாதமஹாதேசிகன்

யாமுனமுனி அம்சமாக போற்றபடும் ஸ்ரீரங்கநாத ஸ்வாமி தென்னாட்டில் செய்யாலம் என்கிற ஸ்ரீகிராமத்தில் அவதரித்து துரீயாச்ரமத்தை ஸ்வீகரித்து திருக்குடைந்தை தேசிகன்

ஸந்நிதியில் ஸர்வார்த்த க்ரஹணம் செய்து கேவலம் பாஷ்ய பகவத் ஷயாதிகளின் அர்த்தாநுபவபரராய் தாம்ரபர்ணீ நதீ தீர திவ்ய தேசங்களில் ஏகாந்த ஸ்தலத்தில் எழுந் தருளி இருந்து சிஷ்யர்களுக்கு மட்டும் ஸம்ப்ரதாயப்ரவசநம் செய்து வந்தார்.

(முனித்ரயம்) வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்

திருக்குடந்தை திவ்யக்ஷேத்ரத்திற்கு ஸமீபத்தில் வழுத்தூர் என்னும் அக்ரஹாரத்தில் ருதிரோத்காரி வருஷம் ஆவணி மாதம் பூரட்டாதி நக்ஷத்திரத்தில் நைத்துருவ காச்யப கோத்திரத்தில் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமிக்கு ஸ்ரீபாஷ்யகாரரின் அம்சமாய் அவதரித்து திருக் குடந்தை தேசிகன் ஸந்நிதியில் ஸந்யாஸாச்ரமத்துடன் ஸகலார்த்தங்களையும் காலக்ஷேபம் செய்து அநேகம் சிஷ்யர்களுக்கு ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி இருந்து ப்ரவசநம் செய்தபடியால் ஸ்ரீரங்கம் ஸ்வாமி யென்று பரமப்ரஸித்தராய் விளங்கி வந்தார்.

கோபாலதேசிகபதாப்ஜமதுவ்ரதஸ்ய
ப்ரஜ்ஞாவிரக்த்தி கருணாமுக ஸத்குணப்தே: |
வேதாந்தலக்ஷ்மணமுநே:ச்ரிதபாகதேயம்
பாதாரவிந்தயுகளம் சரணம் ப்ரபத்யே ||

ஸ்ரீரங்கம் ஸ்வாமியென்று ப்ரஸித்தரான வேதாந்தராமாநுஜ மஹாதேசிகன் திருவடி களில் ஆச்ரயித்த ஸ்வாமிகளில் ப்ரதாநர்களான (1) ஸ்ரீ **அண்ணயார்ய மஹாதேசிகன்,** **(2) ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகன்,** (3) **வங்கீபுர ம்வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகன்** இம்மூவர்கள் மூலமாய் திருக்குடந்தை தேசிகன் ஸம்ப்ரதாயம் கங்காப்ரவாஹம் போல் மூன்றாக பிரிந்து லோகோஜ்ஜீவநமாக இருக்கின்றது.

(இந்த மூன்று பிரிவுகளில் எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளின் வைபவங்கள் தனித் தனியே வேறு இடத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அங்கே கண்டுகொள்வது.)

நாவல்பாக்கம் அண்ணயாசார்ய ஸ்வாமி

ஸ்ரீசைலவம்ச கலசோததி பூர்ணசந்த்ரம்
ஸ்ரீவாஜி வக்த்ரகருணாபரிபூர்ணபோதம்
வேதாந்த லக்ஷ்மண முநீந்த்ரக்ருபைகபாத்ரம்
நௌம்யண்ண யார்ய குருமாச்ரிதபாரிஜாதம் |

ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகன் (திருத்துரைப்பூண்டி)

ஸ்ரீமத் கோபாலஸூரேர் நிரவதிகருணாவாப்த ஸத்ஸம்ப்ரதாயம்
ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ யதிந்ருபதிமதம்ஸர்வத: ஸ்தாபயித்வா |
யஸ்மிந் ஸத்ஸம்ப்ரதாயம்ஸகலமுபதிசன் அம்சதோநுப்ரவிஷ்ட:
ஸ்ரீமத் ச்ரீவாஸ ராமாநுஜ முநிமநகம் தம்பஜே தேசிகேந்த்ரம் ||

வங்கீபுரம் வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி

த்ரய்யந்த தேசிக யதீந்த்ர சடாரிமூர்த்திம்
வேதாந்த லக்ஷ்மண முநீந்த்ர க்ருபாத்தபோதம் |
ப்ரஜ்ஞா விரக்தி கருணாமுகஸத் குணாப்திம்
வேதாந்த லக்ஷ்மண முநிம் சரணம் ப்ரபத்யே ||

(ரஹஸ்ய) குருபரம்பரை

1. எம்பெருமான் முதல் 10. பாஷ்யகாரர் வரையில்

பாஷ்ய பரம்பரைபோல் அநுஸந்திப்பது.

11. ப்ரணதார்த்திஹராசாரியர் ஸ்வாமி

மடப்பள்ளி ஆச்சான் என்றும், யதீந்த்ர மஹாநஸிகர் என்றும் சொல்லப்படும் ப்ரணதார்த்திஹராசார் ஸ்வாமி ஆத்ரேய கோத்திரத்திலே காஞ்சீபுரத்தில் அவதரித்து எம்பெருமானருக்கு மாதுகரமான அந்தரங்க கைங்கரியத்தை செய்துகொண்டு ஸ்வாமிக்கு அந்தரங்க சிஷ்யராய் எழுந்தருளி இருந்தபடியால் இந்த ஸ்வாமிக்கு தன் ஆசார்ய நியமனத்தினல் ஸர்வ ரஹஸ்யார்த்தங்களையும் எம்பெருமானர் உபதேசித்தார்: ஸ்வாமியும் தன் ஆசார்ய நியமனப்படி ரஹஸ்ய ஸம்பிரதாயத்தை ப்ரவசநம் செய்து வந்தார்.

தனியன்

ஆத்ரேயகோத்ரஸம்பூதம் ஆச்ரயே ச்ரிதவத்ஸலம் |
யதீந்த்ரமாஹாநஸிகம் ப்ரணதார்த்திஹரம் குரும் ||

12. ஆத்ரேய ராமாநுஜாசாரியர் ஸ்வாமி

பெருமாள் கோவிலில் சித்திரை மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் ப்ரணதார்த்திஹராசாரியார் ஸ்வாமிக்கு குமாரனய் அவதரித்து தன்னுடைய பிதாவின் ஸன்னிதியில் ஸம்பிரதாயார்த்தத்தை க்ரஹித்து தம்முடைய குமாரர் ஸ்ரீரங்கராஜப்பிள்ளான் முதலானவர்களுக்கு உபதேசித்து அருளினர்.

தனியன்

ஆத்ரேயகோத்ராம்புதிபூர்ணசந்த்ரம்
ஆசாரயுக்தாத்மகுணேபபந்நம் |
நதார்த்திஹ்ருத்தேசிகரத்நஸூநும்
ராமாநுஜார்யம் குருமாச்ரயாம: ||

13. ஸ்ரீரங்கராஜாசார்ய ஸ்வாமி

பெருமாள் கோவிலில் பங்குனி மாதம் ரோகிணீ நக்ஷத்திரத்தில் ஆத்ரேய கோத்திரத்தில் அவதரித்து பிதாவான ராமாநுஜாசார்யரிடம் ஸம்பிரதாயத்தை கிரஹித்து குமாரராகிய வாதி ஹம்ஸாம்புவாஹாசார்யர் முதலானவர்களுக்கு ரஹஸ்யார்த்தங்களை உபதேசித்தார்.

தனியன்

ராமாநுஜார்யதநயம் ரமணீய வேஷம்
ஆத்ரேய மாத்ம குணபூர்ண மநர்க்க சீலம் |
ஸ்ரீரங்கராஜ மிவ தத்தயயா வதீர்ணம்
ஸ்ரீரங்கராஜ குருவர்ய மஹம் ப்ரபத்யே ||

[14. அப்புள்ளார், 15. ஸ்வாமி தேசிகன், 16. ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி, 17. கடிகாசதம் அம்மாள், 18. வரதவிஷ்ணுவாசாரியர், 19. மஹாதயா தீசர், 20. அஹோபிலாசாரியர் பாஷ்யம் போல்,]

21. வாத்ஸ்யவரதாசார்யர் ஸ்வாமி

பெருமாள் கோவிலில் ஐப்பிசி மூலத்தில் வாத்ஸ்யாநந்தாசாரியருக்கு குமாரராய் அவதரித்து அஹோபிலாசார்யரிடத்தில் ஸம்பிரதாயத்தை கிரஹித்து பராங்குச ஸ்வாமி முதலானவர்களுக்கு உபதேசித்து ரஹஸ்ய பரம்பரையில் மட்டும் நாவல்பாக்கம் ஸ்வாமி ஸம்பிரதாயத்திலும், வங்கீபுரம் ஸ்வாமி ஸம்ப்ரதாயத்திலும் அனுஸந்திக்கப்படும் இவர், பெருமாள் கோவில் பகல் தீவட்டி ஸ்வாமி (ஆண்டவன்) ஸம்பிரதாயத்தில் பாஷ்ய பரம்பரையில் அநுஸந்திக்கப்பட்டு வருகிறார்.

தனியன்

அஹோபில தயேசார்ய தயாபாத்ரம் குணாந்விதம் |
வாத்ஸ்யாநந்தார்யத நயம் வரதார்ய மஹம் பஜே ||

22. ஷஷ்ட்டபராங்குச ஸ்வாமி, 23. தாததேசிகன், 24. வாத்ஸ்யாநந்தாசாரியர் பாஷ்யம்போல்,

25. ராமாநுஜார்சாரியார் ஸ்வாமி

பெருமாள் கோவிலில் அனந்தாசாரியர் ஸ்வாமியின் குமார்ராய் அவதரித்து அநந்தாசார்யரிடத்தில் ரஹஸ்யார்த்தங்களை க்ரஹித்து வந்தார்.

தனியன்

ஸ்ரீமதோ ரங்கநாதஸ்ய குணார்த்தாஸ்ய முபாகதம் |
ராமாநுஜம் த்விதீயம் தம் அத்விதீயமுபாஸ்மஹே ||

27 முதல் மேல் முழுவதும் ஸ்ரீபாஷ்ய பரம்பரைபோல் அநுஸந்திப்பது. ரஹஸ்ய பரம்பரையில் கடைசியில் ஸ்ரீபாஷ்யகாரருக்கு ரஹஸ்யசிந்தநாசார்யரும், திருக்கோட்டியூரில் காச்யபகோத்திரத்தில் வைகாசி ரோகிணீ நக்ஷத்திரத்தில் அவதரித்தவரும் ஆளவந்தார் சிஷ்யருமாகிய திருக்கோட்டியூர் நம்பியை அநுஸந்திப்பது.

தனியன்

வைசாகே ரோஹிணீஜாதம் காச்யபாந்வய வாரிதே: |
இந்தும் ஸ்ரீபுண்டரீகாம்சம் கோஷ்டீ பூர்ணமஹம் பஜே ||

ஸ்ரீ:

பகவத் விஷய குரு பரம்பரை

1 எம்பெருமான் முதல் 8. ஆளவந்தார் வரையில்

பாஷ்ய பரம்பரை போல் அநுஸந்திப்பது.

9. திருமாலையாண்டான்

இந்த ஸ்வாமி திருமாலிருஞ் சோலையில் மாசி மகத்தில் வநமாலாம்சராய் அவதரித்து, பெரிய முதலியார் ஸந்நிதியில் ஸம்பிரதாயார்த்தங்களைக் கேட்டு பாஷ்யகாரருக்கு பகவத் விஷய ஆசார்யரானார்.

தனியன்

ஸ்ரீமத்யாமுந யோகீந்தர பதாம்போஜைதாரகம் |
மாலாதரகுரும் வந்தே த்ராமிடாம்நாயதேசிகம் ||

10. பாஷ்யகாரர் முதல் 15. ஸ்வாமி தேசிகன் வரையில் பாஷ்யம் போல்.

16. நயினாராசாரியார்ய ஸ்வாமி

நயினாராசார்யர் என்கிற குமாரவரதாசாரியர் ஸ்வாமி பெருமாள் கோவிலில் ஸ்ரீ வரதனுடைய அம்சமாக ஆவணி ரோஹிணீ நக்ஷத்திரத்தில் ஸ்வாமி தேசிகனுக்கு குமாரராக

அவதரித்து தனக்கு பிதாவான ஸ்வாமி தேசிகனிடத்தில் ஸர்வார்த்தத்தையும் க்ரஹித்து அதிகரண சிந்தாமணி முதலான பல க்ரந்தங்களை அருளிச்செய்து பரமத நிராகரண பூர்வகமாக ஸ்வமதஸ்தாபநம் செய்தருளி ஸ்ரீ ப்ரஹ்மதந்தர ஸ்வாமிக்கு பகவத் விஷயமும் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணனுக்கு வ்யாபகமந்த்ரம் முதல் எல்லா க்ரந்தங்களையும் உபதேசித்து அக்னிஹோத்ராதி யக்ஞாநுஷ்டாநத்துடன் ஸம்பிரதாய ப்ரவசனம் செய்து வந்தார்.

தனியன்

ச்ராவணெ மாஸி ரோஹிண்யாம் ஜாதம் வேங்கடதேசிகாத் |
விச்வாமித்ராந்வயாப்தீந்தும் வரதார்ய மஹம் பஜே ||

17. ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்ர ஸ்வாமி, 18. கடிகாசதம் அம்மாள் ஸ்வாமி, 19. ஆதி வண்சடகோப ஸ்வாமி.

20. மூன்றுவநு பராங்குச ஸ்வாமி

பெருமாள் கோவிலில் தை மாதம் ச்ரவண நக்ஷத்திரத்தில் வாதூல கோத்ரத்தில் அவதரித்து துர்யாச்ரமத்தில் ப்ரவசநம் செய்துவந்தார்.

தனியன்

ஸ்ரீசடாரியதீசாந பதபங்கஜஷட்பதம் |
பரார்த்ய குணஸம்பந்நம் பராங்குச முனிம் பஜே ||

21. ஷஷ்ட்ட பராங்குச ஸ்வாமி—பாஷ்யம் போல்.

22. வங்கீபுரம் ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி

இவர் திருவள்ளூரில் ஐப்பசி மாதம் மூலத்தில் அவதரித்து துர்யாச்ரமத்தில் ப்ரவசனம் செய்து வந்தார்.

தனியன்

பராங்குச சடாராதி பதாம் போஜைக தாரகம் |
ஸ்ரீநிவாஸ முனிம் வந்தே மாத்ருசாமபி தாரகம் ||

23. ஸ்ரீசைல ஸ்ரீநிவாஸாசார்யர்

இவர் பெருமாள் கோவிலில் ஆவணி மாதம் ரோஹிணியில் சடமர்ஷண கோத்திரத்தில் அவதரித்து க்ருஹஸ்தாச்ரமத்தில் ப்ரவசநம் செய்துவந்தார். இவர் க்ரந்தம் த்,மிடோபநிஷத் ஸாராதி வ்யாக்யா.

தனியன்

ஸ்ரீநிவாஸ முநேர்லப்த்த வேதாந்தத்வய ஸம்பதம் |
ஸ்ரீசைல ஸ்ரீநிவாஸார்யம் வந்தே வாத்ஸல்ய வாரிதிம் ||

24. வாத்ஸ்யாநந்தாசாரியர்—பாஷ்யம் போல்

25: முனிவாஹந ஸ்வாமி

பெருமாள் கோவிலில் ஸ்ரீவத்ஸ கோத்திரத்தில் ஆடிப்புநர்வஸுவில் அவதரித்து ஸந்யாஸாச்ரமத்தில் இருந்து ப்ரவசநம் செய்து வந்தார்.

தனியன்

பிதாமஹகுரோ: ப்ராப்த த்ராவிடா ம்நாயஸாகரம் |
முநிவாஹ மஹம்வந்தே முநீந்த்ரம் கருணாநிதிம் ||

26. சந்திரகிரி வேங்கடேசன்

திருக்குடந்தையில் புரட்டாசி ரேவதி நக்ஷத்திரத்தில் சடமர்ஷண கோத்திரத்தில் அவதரித்து க்ரஹஸ்தாச்ரமத்தில் ப்ரவசநம் செய்துவந்தார்.

தனியன்

ஸ்ரீமத்வநாசலகுரோ: ப்ராப்த வேதாந்த ஸம்பதம் |
ஸ்ரீந்ருஸிம்ஹதயாபாத்ரம் ஸ்ரீவேங்கட குரும் பஜே ||

27. ரங்கநாத ஸ்வாமி, 28. ஸாக்ஷாத் ஸ்வாமி

29. பாதுகாஸேவக ராமாநுஜ ஸ்வாமி

பெருமாள் கோவிலில் புரட்டாசி மாதம் ச்ரவணத்தில் அவதரித்து துர்யாச்ரமத்தில் ஸ்ரீரங்காதிகளில் ப்ரவசநம் செய்துவந்தார்.

தனியன்

ஸ்ரீதாதார்ய பதாப்ஜ ப்ருங்க மநஸம் வேதாந்த ராமாநுஜ —
ஸ்ரீவீக்ஷாதி கதா கமாந்த ஹ்ருதயம் ஸ்ரீரங்கநாதாத் குரோ: |
ஸம்ப்ராப்த்த த்ரமிடாகமாந்த மநகம் ஸ்ரீபாதுகாஸேவக
ஸ்ரீராமாநுஜ யோகிநம் குருமஹம் வந்தே க்ருபாசேவதிம் ||

30. திருக்குடந்தை தேசிகன், வேதாந்தராமாநுஜ ஸ்வாமி

31. ரகுநாதாசாரியர் ஸ்வாமி

ஸ்ரீபெரும்பூதூரில் கௌண்டிந்ய கோத்ரத்தில் அவதரித்து க்ருஹஸ்தாச்ரமத்தில் ப்ரவசநம் செய்துவந்தார்.

கௌண்டிந்ய வம்ச கலசோததி பூர்ணசந்த்ரம்
ஸ்ரீசைல தேசிக ஸுதம் ரகுநா தஸூரிம் |
வேதாந்த லக்ஷ்மண முநீந்த்ர க்ருபாத்தபோதம்
காருண்ய பூர்ணமநகம் சரணம் ப்ரபத்யே ||

30. திருக்குடந்தை தேசிகன் முதல் பாஷ்யம் போல்.

நாவல்பாக்கம் ஸ்வாமி ஸம்பிரதாயத்தில் மட்டும் ஸ்ரீரங்கம் வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகனுக்கும் அண்ணயார்ய மஹாதேசிகனுக்கும் நடுவில் ரகுநாதாசார்யர்.

31. ஸ்ரீசைல ஸ்ரீநிவாஸாசாரியர்

ஸ்ரீநிவாஸ தாதாசாரியர் நாவல்பாக்கத்தில் சடமர்ஷண கோத்திரத்தில் அவதரித்து கிரஹஸ்தாச்ரமத்தில் ப்ரவசனம் செய்துவந்தார்.

தனியன்

கௌண்டிந்ய வம்சரகுநாத குருபதிஷ்டம்
வேதாந்தயுக்ம ரஸபூரித தீகடாக்ஷம் |
ஸ்ரீசைல பூர்ணகுல வாரிதி பால ஸூர்யம்
ஸ்ரீஸ்ரீநிவாஸ குருமந்வஹ_மாநதோஸ்மி ||

தனக்கு ஜ்ஞாதியான இந்த ஸ்வாமியிடம்தான் அண்ணயார்யமஹா தேசிகனுக்கு பகவத் விஷயம். பிதாமஹரான யக்ஞ ந்ருஸிம்மதாத தேசிகனிடம் பஞ்சஸம்ஸ்காரம் மட்டும்.

ஸ்ரீபிரம்மதந்த்ர பரகாலமட குருபரம்பரை

கி.பி. பதினைன்காம் நூற்றுண்டு ஆரம்பகாலத்தில் தென்னிந்தியாவின் மதங்கள் கலாசாரம் முதலியவை முகலாய சிற்றரசர்கள் படையெடுப்பால் வெகுவாக பாதிக்கபடுமோ என்று அச்சமுற்ற நிலைமையில் ஹொய்ஸால மன்னன் ஸம்ஸ்தானம் அவ்வளவாகப் பீடிக்கப் படாமையால் ஸ்ரீமந் நிகமாந்த தேசிகரும் தன் சிஷ்யர்களுடனும், கிரந்த காவ்யச் செல்வங்

களுடன், திரு நாராயணபுரம் என்ற மேல் கோட்டையில் வந்து 12 வருஷகாலம் தங்கி உடையவர் துவக்கிய வைஷ்ணவ விசிஷ்டாத்வைத சித்தாந்த ஸம்பிரதாயார்த்தங்களை வழங்கியருளிக் கொண்டிருந்தார். அந்த மஹானின் நியமனப்படி அவருக்குப் பிற்காலம் முதலாக பிரம்ஹதந்திர பரகால ஸ்வாமியால் திருப்பதியிலும் காஞ்சீபுரத்திலும் மடங்கள் நிறுவப்பெற்றன.

ஆதி ஸ்ரீ ப்ரம்ஹதந்திர பரகால ஸ்வாமி ''திவ்யஸூரி ஸ்தோத்ரம்'' என்னும் ஆசார்ய பரம்பரையின் புகழைப் பாடிய நூலை இயற்றினார். அதில் ப்ரீதியுற்ற பகவான் ஸ்ரீ வெங்கடேசனை திருப்பதியின் தன் திருக்கோவிலுள் ஆராதனையை வைஷ்ணவ முறைப்படி நடத்தும்படி அவரை ஸ்வப்னத்தில் ஆக்ஞாபித்ததார்.

தன் காலத்திற்குப் பிறகு வைணவ மறை வழியைத் தொடர்ந்து காப்பதற்கு பேரருளாளையன் என்னும் அத்வைதியை வாதத்தில் வென்று விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு மாற்றி அவரை ஸ்ரீவத்ஸ வேதாந்த ராமானுஜ ஸ்வாமி அல்லது இரண்டாவது பிரம்மதந்திர ஸ்வதந்திர ஜீயர் எனப் பட்டமளித்தார்.

ஆதி முதல் ஜீயருக்குப் பிற்காலம் ஸுமார் 250 வருடங்கள் வரை (1360 to 1600) ஸ்ரீஞானுப்தி பிரும்மதந்திர ஸ்வாமி வரையிலும் 15 பீடாதிபதிகள் இருந்ததாகத் தெரிகிறது. ஸ்ரீஞானுப்தி பிரம்ம தந்திர ஸ்வாமி தன் சிஷ்யரான ஸ்ரீரங்கராமானுஜ ஸ்வாமியின் மூலம் கீழ்வரும் கிரந்தங்களை இயற்றி வைஷ்ணவச் சமய நூல்களை விரிவாக்கினர்,

(1) பாவப்ரகாசிகை (2) தசோபநிஷத் பாஷ்யம் (3) விஷயவாக்யதீபிகை (4) ராமாநுஜஸித்தாந்த ஸார ஸங்க்ரஹம்.

ஸ்ரீ ஞானுப்தி ஸ்வாமியும் அவருக்குப்பின் எழுந்தருளிய ஆசார்யர்களால் அனேக மைசூர் மகாராஜாக்கள் வைஷ்ணவதீக்ஷை பெற்றுப் பெருமையடைந்தார்கள்.

ஸ்ரீ பெரிய பரகால ஸ்வாமி

21-வது பட்டத்திற்கெழுந்தருளி ஸ்ரீபெரிய பரகால ஸ்வாமியின் காலத்தில் மடத்தின் கார்யஸ்தலம் திருப்பதியிலிருந்து மைசூர் அரசின் தலைநகராயிருந்த ஸ்ரீரங்கப் பட்டணத்திற்கு மாறுவதற்குண்டான ஏற்பாட்டை மைசூர் மன்னர் செய்து வைத்தார். இந்த ஸ்வாமி கி.பி. 1677ல் தன் 22 வயதில் ஆஸ்தானத்திற்கெழுந்தருளிய பிறகு மடத்தில் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவன் ஸன்னிதியில் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் விக்ரஹத்தையும் பிரதிஷ்டை செய்து வைத்தார். ஸ்ரீ பெரிய பரகால ஸ்வாமி அருளிய கிரந்தங்கள்.

(1) திவ்யப் பிரபந்தங்களின் வியாக்யானம்.
(2) தேசிகப்ரபந்தம்.
(3) யதிப்ரதிவந்தனகண்டனம்.
(4) ஆசார்யாவதார கட்டம்.
(5) பரகாலாஸ்தான பத்ததி.
(6) மிதப்பிரகாசிகை, இன்னும் பல.

பிறகு கி.பி. 1738ல் பட்டத்திற்கு எழுந்தருளிய **ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரகால ஸ்வாமி** லக்ஷ்ம்யுபாய தத்வதீபம், நியாஸப்ரகாசிகை, பரகால மங்களம் இத்யாதி க்ரந்தங்களைச் செய்தருளினர். கி.பி. 1759ல் பட்டத்திற்கு வந்த **ஸ்ரீ வேதாந்த ப்ரும்மதந்திர பரகால ஸ்வாமி I** ஞான வைராக்ய சாந்தி சமதமாதிகளால் நிறைந்தவராய் 20 வருடகாலம் ஆஸ்தானத்தை அலங்கரித்தார்.

கி.பி. 1780ல் ஆஸ்தானத்திற்கெழுந்தருளிய **ஸ்ரீ ராமானுஜ பிரம்மதந்திர பரகால ஸ்வாமி** தன் சிறுவயதில் ஒரு தடவை திருவேங்கட முடையானைச் ஸேவிக்கச் சென்றபொழுது உயிருக்கே ஆபத்து நேருமோ என்ற மஹாஜ்வரத்தினுல் பீடிக்கப்பட்டு பிரம்மசாரியாகவே ஸன்யாஸம் பெற்று தன் 69ம் வயதில் ஆஸ்தான நிர்வாகத்தை ஏற்ருர். அவர் உபதேசப்படி மைசூர் திவான் ஸ்ரீ பூர்ணயா ஸ்ரீச்வேத வராஹ ஸ்வாமியைப் பிரதிஷ்டை செய்தார்.

ஸ்ரீ பிரம்மதந்திர கண்டாவதார பரகால ஸ்வாமி

பூர்வாசிரமத்தில் நல்லூர் ஸ்ரீ கிருஷ்ணமாசார்யர் என்ற, அபரிமிதமான ஞான வைராக்யானுஷ்டானுதிகள் நிரம்பப் பெற்ற பிரம்மதந்திர கண்டாவதார பரகால ஸ்வாமிகள், மைசூர் ஸம்ஸ்தான மன்னரான ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையாருக்கு உபதேசங்கள் முதலிய செய்வித்து தன் திக்விஜய ப்ரசாரங்களினுல் ராஜ்யம் முழுவதும் வைஷ்ணவ மதஸ்தர்களைப் பெரிதாக்கினுர். கி. பி. 1829 வரை பட்டத்தில் எழுந்தருளிய ஸ்வாமி திருக்குருகைப் பிரான் பிள்ளானின் வம்சோத்பவரான ஸ்ரீ நல்லூர் ராகவாச்சாரியர் ஸ்வாமி என்பவரைப் பீடாதிபதியாக நியமித்து விட்டு வைராக்ய ஸன்யாஸமேற்ருர்.

ஸ்ரீ வேதாந்த பிரம்மதந்திர பரகால ஸ்வாமிகள்

மேல் கோட்டையில் எழுந்தருளிய இந்த ஸ்வாமி தன் குணவிசேஷங்களினுல் தென் தேசத்திலிருந்து பல வித்வான்களை ஆகர்ஷித்து அனுக்ரஹித்து வந்தார், ஆனுல் தன் ஆசாரியனுன ஸ்ரீ கண்டாவதார ஸ்வாமிகள் ஜீவியகாலத்திலேயே 1836ல் திருநாட்டுக் கெழுந்தருளியாயிற்று.

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ப்ரம்மதந்த்ர பரகால ஸ்வாமி

கி.பி. 1790ல் அவதரித்த இந்த ஸ்வாமி, வேதாந்த தேசிகன் போல் வெகு பால்யத்தில் சாஸ்திர ஞானுதிகளில் மஹாப்ராக்ஞராக விளங்கினுர், இவரும் திருக்குருகைப்பிரான்

வழியிலுதித்தவர். ஸுமார் 10 வருடங்கள் வடதேசம் பூராவும் தாம் திக்விஜயம் செய்து ஸனுதன தர்மத்தைத் தழைக்கச் செய்தார்.

இந்த ஸ்வாமியின் யாத்ராவிசேஷத்தை அவருக்குப்பின் எழுந்தருளிய ஸ்ரீகிருஷ்ண பிரம்ஹ தந்த்ரபரகால ஸ்வாமி ''ஸ்ரீ பரகால குருவிஜயம்'' என்னும் சம்பு காவ்யமாக இயற்றி னுர். மேற்குதிசையில் மத்வமத மடாதிபதியின் ஸ்ரீ வாமனதீர்த்த ஸ்வாமிகளுடன் வைஷ்ணவ மதத்தைப்பற்றிபி ரசாரம் செய்து விட்டு வடதேசத்தில் மஹாராஷ்டிர தேசத்திலுள்ளமஹா வித்வான்களான மோஹன் சாஸ்திரி முதலியவர்களுடன் ஸித்தாந்த விவாதங்கள் செய்து வெற்றியுடன் மற்ற தீர்த்த ஸ்தலங்களுக்குச் சென்று வந்த கார்யங்கள் பரகால மடத்து வரலாற்றில் மறக்க முடியாத அத்யாயமாகும்.

மைஸுர் ஸமஸ்தான ராஜாவிற்கு கீதாபாஷ்யம் பகவத் விஷயம் முதலியவற்றை ஸாதித்துக் கொண்டிருந்துவிட்டு 1866ல் திருநாட்டிற்குகெழுந்தருளினுர்.

ஸ்ரீநிவாஸ தேசிகேந்த்ர பிரம்மதந்த்ர பரகால ஸ்வாமி

வேத வேதாந்த பூர்வோத்ர மீமாம்ஸா சாஸ்த்ராதிகளில் வ்யுத்பன்னராய் விளங்கிய இந்த ஸ்வாமியும் தர்மதிக்விஜயம் செய்து வடதிருப்பதி, காஞ்சி, ஸ்ரீரங்க க்ஷேத்திராதிகளை கண்டருளி மைஸுர் மஹாராஜாவிற்கு பிரபத்தி பண்ணியருளினுர்.

ஸ்ரீரங்கநாத பிரும்மதந்திர பரகால ஸ்வாமி

ஸ்ரீநிவாஸ தேசிகேந்திர ஸ்வாமி 1873ல் தேஹாவஸானம் ஆனபிறகு, ஸ்வாமி தேசிகன் மாதிரி ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்ற பிருதுடன் ஸ்ரீரங்கநாத பரகால ஸ்வாமி சிறு பிராயத் வடதேச யாத்திரை, பிரசாரானுபவம் பெற்று பிரஸித்தராய் எழுந்தருளினுர்.

ஸ்ரீ கிருஷ்ண பிரும்மதந்த்ர பரகால ஸ்வாமி

1839ல் தாதாசார்ய வம்சத்தில் அவதரித்து 16 ஸம்வத்ஸரங்களுக்குள்ளேயே ஸர்வ சாஸ்திர பாரங்கதராய் விளக்கி அச்சிறு பிராயத்திலேயே ஆசார்யனுல் ஹயக்ரீவ மந்திரம் உபதேசிக்கப் பெற்று ''ஸ்ரீ ரங்கராஜ விலாசம்'' ''பரகால குரு விஜயம்'' இத்யாதி காவ்யங் களைச் செய்து ''கவிஸார்வ பௌமன்;' என்ற பிருதையும் பெற்று விளங்கிய இந்த ஸ்வாமி ''கார்த்திகோத்ஸவதீபிகா'' ''ஸ்ரீ ஸ்ரீநிவாஸ விலாஸம்'' பரகால குருவிஜயம், சபேடாஹதி ஸ்துதி, உத்திர ரங்க மஹாத்மியம் 'ஸ்ரீ ராமேச்வர விஜயம்' முதலிய காவியங்களை இயற்றி மஹாதுர்லபமாயிருந்த ''முனி பாவப்ரகாசிகை'' என்னும் க்ரந்தத்தை சிரமப்பட்டு உலகோர் அடையும்படிச் செய்து பிரகாசப்படுத்தினுர். இவரின் கவிதா ஸாமர்த்திய விசேஷங்களால் பரமப்ரீதியடைந்த ஸ்ரீரங்கநாத பரகால ஸ்வாமி 1886ல் அவரைப் பீடாதிபதியாக்கினுர்.

மைஸூர் ராஜ்யத்தில் பஞ்சம் ஏற்பட்டு சிரமமுற்ற காலத்தில், மடத்தின் நிதி நிலைமையைத் திவான் சேஷாத்ரி ஐயரின் ஸஹாயத்தினால் சீர்படுத்தி வைத்தார்.

இந்த ஸ்வாமி இயற்றிய 67 க்ரந்தங்கள், 'சம்புக்கள் நாடகங்கள் ஸ்தோத்ர பாடங்கள் தர்ம சாஸ்திரங்கள் வியாக்யானங்கள் பல பொதிந்துகிடக்கின்றன. ஸுமார் 27 வருட காலம் பீடாதிபதியாக வைபவம் நடத்தினர்.

ஸ்ரீ வாகீச ப்ரம்மதந்திர பரகால ஸ்வாமி

வியாகரண, தர்சன சாஸ்த்ர விற்பன்னராய் விளங்கிய இந்த ஸ்வாமி யோக ஸித்தியடைந்த ஒரு மஹான். இந்த ஸ்வாமியினிடம் அத்வைதிகள் கூட பரன்யாஸம் பெற்றனர் என்றால் பெருமையை இன்னும் கூறவோ! இவர் பரமபதித்து 20 வருடகாலத்திற்குப் பிறகு பிருந்தாவனத்தைத் தோண்டிய பொழுது அந்த ஸ்வாமியின் பூத உடல் இன்னும் மற்ற ஸாமக்கிரியைகள் காலவசத்தினால் கேடடையாமல் புதியதாய்த் தோற்றமளித்தது அவரது யோக ஸித்தியின் மகிமைக்குச் சான்றாகும்.

ஸ்ரீமத் அபிநவ ஸ்ரீரங்கனாத பிரம்மதந்திர பரகால ஸ்வாமி

1884ல் ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மன் அருளால் உதித்த ஸ்ரீரங்காச்சாரியார் ஸ்வாமி சிறு பிராயத்திலேயே ஜிக்ஞாஸுவாய் விளங்கினர். இவர், மஹாவித்வான்களிடம் சாஸ்திராப்யாஸம் பெற்றார். அபாரமான சாஸ்திர ஞானத்தை தவிர ஸ்வாமியின் துணிகரமான கிருகஸ்த தர்ம அனுஷ்டானாதிகள், அவரை 'ஆஹிதாக்கினி' 'ஷட்கர்ம நிரதர்' என்றெல்லாம் உலகோர் போற்றும்படி இருந்தன.

இந்த ஸ்வாமி ஆந்த்ரதேசத்தில் ஆத்மகூரில் ஹாரீத வம்சத்தில் அவதரித்து தமது மாதுலரும், ஸுரபுரம் வம்சஸ்தருமான ஸ்ரீராகவாச்சாரியரிடம் காவ்யநாடகாதிகளை அதிகரித்து தர்கஸிம்ஹம் பண்டிதரத்னம் கஸ்தூரி. ரங்காசாரிய ஸ்வாமி ஸன்னிதியில் ஸாமாந்ய சாஸ்த்ரங்களை அதிகரித்து, ஸ்ரீக்ருஷ்ணப்ரம்ஹதந்த்ரபரகால மஹாதேசிகனிடம் ஸகல கிரந்தகால க்ஷேபமும் செய்து ஸகலாந்வயமும் பெற்று மைஸூர் ஸம்ஸ்கிருதகலா சாலையில் வெகுகாலம் தர்கபாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டெழுந்தருளியிருந்து விட்டு பிறகு ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவாஸ்தானத்தில் 33 வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்து ஸச்சிஷ்யர்களுக்கு வேதாந்த ப்ரவசனம் செய்துக் கொண்டெழுந்தருளியாயிற்று, பரம விரக்தரும், அனுஷ்டான சீலரும் ஆதி பரதனைப்போன்று எழுந்தருளியிருந்த வருமான தேன்கனிக்கோட்டை வரதராமானுஜ மஹாதேசிகனிடம் (நாராயண ஸ்வாமி) பரஸமர்பணம் செய்த மஹான் இவர். இந்த ஸ்வாமி பரச்சதக்ரந்தங்களை யருளிச் செய்துள்ளார். அத்வைத

வேதாந்தத்தில் இந்த ஸ்வாமிக்கு உள்ள பரிசயம் இந்த நாளில் அத்வைதிகளில் ஒருவருக்கு மில்லை என்பதை ஸசபதம் சொல்வேன். இவர் கடாக்ஷித்தருளாத வேதாந்த ஸ்ரீகோசம் உலகில் எந்த புஸ்தகாலயத்திலுமில்லை. இது அத்யுக்தியல்ல.

இந்த ஸ்வாமி அருளிச் செய்துள்ள **கூடார்த்தஸங்க்ரஹம்** என்கிற ஸ்ரீ பாஷ்யவ்யாக்யானமான **பஞ்சபாதிகையில்** ஸ்ரீபாஷ்யத்தை அக்ஷரச: வ்யாகியான மிட்டருளியதுடன் ஸம்ஸ்கிருத பாஷையில் வேதாந்த க்ரந்தங்களும், உபநிஷித்துகளுக்கு உரை எழுதத் தொடங்கிய நாட்களிலுமிருந்து ஸ்ரீ விஷ்டாத்வைதஸித்தாந்த முண்டு என்பதையும், சங்கரருக்கு முந்திய நாட்களிலும், சங்கரருடைய சிஷ்யர்களின் கிரந்தங்களிலும் ஸ்ரீபாஷ்ய ஸித்தாந்தமே மண்டிக்கிடப்பதாய் ஒரு ஒரு விஷயத்திலும் ஆயிரக்கணக்கான ப்ரமாணங்களைக் காண்பித்து பரக்க நிரூபித்தருளியிருக்கிறார். இந்த ஸ்வாமியின் ஸ்ரீபாரதத்தில் ஹயசிரோபாக்யானத்திற்கு வியாக்யானமாக **ஹயசிரோரத்னநிதி:** என்கிற ஸ்ரீகோசம் ஒரு நிதி **த்ரயந்தமணிஹாரம் த்ரயந்தரஸாம்ருதம்** ஸர்வார்த்தஸித்திவியாக்யானமான **பாவப்ரகாசம்** முதலியன இந்த ஸ்வாமியின் மற்ற கிரந்தங்கள். இந்த **கூடார்த்தஸங்க்ரஹம்** ஒரு ஸர்வ நிதி. இதை ஸேவித்த பிறகு ஸ்ரீபாஷ்யத்தின் பொருளை உள்ளபடி யறிந்தவர்கள் ஒரு சிலரே என்பது வித்வத் கோஷ்டியில் ப்ரஸித்தமான முடிவு. ஸ்ரீதேசிகனிடம் அசஞ்சலமான பக்தியையுடைய இந்த ஸ்வாமி ஸ்ரீதேசிகனின் ஸகல க்ரந்தங்களையும் **வேதாந்த தேசிக க்ரந்தமாலா** என்கிற வரிசையில் வெளியிட்டருளினார். லக்ஷ்மீஹயவதனனின் பூர்ணகடாக்ஷத்தை ஸ்ரீஸ்வாமி தேசிகனுக்குப் பிறகு பெற்ற மஹான் இவர் ஒருவரே.

ஸ்ரீ:

ஸ்ரீமத் அஹோபிலமடம் திவ்யாஸ்தான பரம்பரை

1. ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

திருநாராயணபுரம் கடாம்பு ஸ்ரீநிவாஸாசார்யருக்கு ஆத்ரேய கோத்திரத்தில் ஸித்தார்த்தி வருஷம் புரட்டாசி மாதம் திருக்கேட்டை நக்ஷத்திரத்தில் தனுர் லக்னத்தில் வியாழக்கிழமை (கி. பி. 1379 செப்டம்பர் மாதம்) சுபதினத்தில் அவதரித்தார்.

பஹுதான்ய வருஷம் புரட்டாசி சுக்லபஞ்சமி (கி. பி. 1398 செப்டம்பர் மாதம்) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளினார்.

இவ்வழகிய சிங்கர்தான் இம்மடத்தை ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்மன் நியமனப்படி முதல் முதல் ஸ்தாபித்தவர்.

இவ்வழகியசிங்கர் 20 திருநக்ஷத்திரத்தில் இவ்வாஸ்தானத்திற்கு எழுந்தருளினுர். ஸ்ரீ அழகிய சிங்கர் ஸாக்ஷாத் ந்ருஸிம்மனிடமே ப்ரேஷமந்த்ரத்தையும் காஷாயாதிக்ரஹணங் களையும் பெற்ருர் என்பது விசேஷம்.

தென்னுசார்ய ஸம்பிரதாயஸ்தரான ஸ்ரீ மணவாள மாமுனிகள் ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமியிடம் ப்ரேஷமந்த்ரோபதேசம் பெற்று ஸந்யாஸாச்ரமத்தையும் ஸ்வீகரித்தார். இம் மஹான் காலம் 1370—1443.

இவ்வழகியசிங்கர் திவ்யமங்கள பிம்பத்தை நம்மாழ்வார் அத்யயனுேத்ஸவ மண்ட பத்தில் அக்காலத்து அரசன் ப்ரதிமாரூபமாய் எழுந்தருளப் பண்ணி இருப்பதை இன்றைக் கும் ஸேவிக்கலாம். இவ்வழகியசிங்கர் திருவடிகளில் 74 ஸிம்மாசனுதிபதிகளும் ஆச்ரயித் தார்கள். இம்மஹான் ப்ரம்மசர்யாச்ரமத்திலிருந்து ஸந்யாஸாச்ரமம் பெற்றவர்.

இம்மஹான் (1) திருமலைக்கு திருப்படி கட்டிவைத்தார். (2) பெருமாள் கோவிலில் நூற்று கால் மண்டபம் கட்டிவைத்தார். அந்த மண்டபத்தில் ந்ருஸிம்மனுடன் ஸ்வாமி ஸேவை ஸாதிப்பதே இதற்கு ப்ரமாணம். (3) திருநாராயணபுரத்தில் கோபுர கைங்கரியம், ஆழ்வார் திருநகரியில் ஸ்ரீ நம்மாழ்வாரை மறுபடியும் ப்ரதிஷ்டை செய்து வைத்து, ஆழ்வார் அநுக்ரஹமாக ஆழ்வாரின் ஹம்ஸ முத்திரையைப் பெற்ருர். சில திவ்ய தேசங்களில் மடத் தைக் கட்டிவைத்தார். இவர் கடிகாசதம் அம்மாள் திருவடி. இவர் திருநாட்டுக்கு எழுந் தருளியது பஹுதான்ய வருஷம் சித்திரை மாதம் கிருஷ்ண பக்ஷ ஏகாதசி (கி. பி. 1458) ஏப்ரல் மாதம். இவருடைய ப்ருந்தாவனம் திருநாராயணபுரத்தில் திருக்கல்யாணிக் கரையில் உள்ளது. ஆஸ்தான நிர்வாஹ காலம் 59 வருஷம் 7 மாதம். இவர் சிஷ்யர் வைதிக ஸார்வபௌமர் (தர்ம சாஸ்திர நிபந்தன க்ரந்த கர்த்தா) என்றும் சொல்லப்படும் தோழப்பர்.

கேசவார்ய க்ருபாபத்ரம் தீசமாதி குணுர்ணவம் |
ஸ்ரீசடாரி யதீசாநம் தேசிகேந்த்ர மஹம் பஜே ||

ப்ரபத்யே நிரவத்யாநாம் நிஷத்யாம் குணஸம்பதாம் |
சரணம் பவபீதாநாம் சடகோப முனீச்வரம் ||

2. ஸ்ரீவண் சடகோப ஸ்ரீமந் நாராயண யதீந்த்ர மஹாதேசிகன்

சடமர்ஷண கோத்திரத்தில் நம்பாக்கம் வம்சத்தில் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி என்கிற நாமத்துடன் அவதரித்தார். ஆஸ்தானத்திற்கு எழுந்தருளிய காலம் பஹுதான்ய வருஷம் (கி. பி. 1458 ஏப்ரல் மாதம்). இவர் செய்தருளிய க்ரந்தங்கள் : (1) திருவாராதனக்ரமம்,

(2) ந்யாஸதசக வ்யாக்யா, (3) ஸந்தியா பாஷ்யம் முதலியன. திருநாட்டிற்கு எழுந் தருளிய காலம் நந்தன வருஷம் பங்குனி மாதம் க்ருஷ்ண பக்ஷம் த்விதீயை (கி. பி. 1473 மார்ச் மாதம்). ஆஸ்தான நிர்வாஹ காலம் 14 வருஷம் 11 மாதம்.

ஸ்ரீசடாரி யதீசாந பதபங்கஜ ஷட்பதம் |
ஸ்ரீமந் நாராயண முநிம் ச்ரயே ஸ்ரீபாஷ்யதேசிகம் ||

3. ஸ்ரீவண்...ஸ்ரீபராங்குச யதீந்த்ர மஹாதேசிகன்

மலையாங்கொளத்தூர் கந்தாடை வம்சத்தில் க்ருஷ்ணஸூரி என்கிற திருநாமத்துடன் அவதரித்தார். இவர் யாகங்கள் அநுஷ்டித்தவர். இவர் திருநக்ஷத்திரம் தை மாதம் திரு வோணம். ஆஸ்தானத்திற்கு எழுந்தருளின காலம் (கி. பி. 1473) க்ரோதி வருஷம் தை மாதம் கிருஷ்ண சதுர்த்தியில் (கி. பி. 1485 ஜனவரி மாதம்) திருநாட்டிற்கு எழுந்தருளி னார். இவர் பிருந்தாவனம் ஸ்ரீமுஷ்ணத்தில். இவர் ஆஸ்தான காலம் 11 வருஷம் 10 மாதம் இவர் ப்ரதிஷ்டை செய்த அக்ரஹாரம் (1) நீரளூர், (2) உரகடம், (3) கடங்கரை, (4) பிலாப் புத்தூர், (5) களத்தூர்.

ஸ்ரீமந்நாராயணமுநே: பதபங்கஜ ஷட்பதம் |
பரார்த்ய குணஸம்பந்நம் பராங்குசமுனிம் பஜே ||

4. ஸ்ரீநிவாச யதீந்தர மஹாதேசிகன்

மார்கழி மாதம் சித்திரையில் அவதாரம். க்ரோதி வருஷம் தை மாதம் (கி. பி. 1485 ஜனவரி) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி 8 வருஷம் 3 மாதம் ஆஸ்தான நிர்வாஹம் செய்து ப்ரமாதீச வருஷம் சித்திரை மாதம் க்ருஷ்ண பக்ஷம் சதுர்த்தி சிங்கர் கோயிலில் திருநாட் டுக்கு எழுந்தருளினார்.

ஸ்ரீபராங்குச யோகீந்த்ர சரணாம்புஜ ஷட்பதம் |
ஸ்ரீநிவாஸ முநிம் வந்தே ஸ்ரீபாஷ்யாம்ருதஸாகரம் ||

5. ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்ரீ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி கண்டலூரில் ஆத்ரேய கோத்ரத்தில் கார்த்திகை மாதத்தில் க்ருத்திகா நக்ஷத்திரத்தில் அவதரித்து ப்ரமாதீச வருஷம் சித்திரை மாதம் (கி. பி. 1493) ஆஸ்தானத் திற்கு எழுந்தருளி ஆஸ்தானத்தில் 5 வருஷம் 9 மாதங்கள் ஸம்பிரதாய ப்ரவசனம் செய்து வடதேசத்தில் க்ருஷ்ணா தீரத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினார்.

ஸ்ரீந்ருஸிம்ஹதயாபாத்ரம் பரவாதிகஜாங்குசம் |
ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரார்யம் சடகோபமுநிம் பஜே ||

6. ஸ்ரீஷஷ்ட்டபராங்குச யதீந்த்ர மஹாதேசிகன்

வங்கீபுரம் பாரத்வாஜ கோத்திரத்தில் ஸ்ரீ வெங்கடாசார்யர் என்கிற திருநாமத்துடன் தை மாதம் பூரட்டாதி நக்ஷத்திரத்தில் அவதரித்து காளயுக்தி வருஷம் தை மாதம் (கி. பி. 1499 ஜனவரி மாதம்) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி (1) ஸித்தாந்த சிந்தாமணி தீபம், (2) பஞ்சகால தீபிகை, (3) ப்ரபத்தி ப்ரயோகம், (4) ஸ்ரீ ந்ருஸிம்ஹஸ்தவம் முதலான க்ரந்தங்களைச் செய்தருளி அஹோபிலகுஹைக்கு ஆங்கீரஸ வருஷம் மாசி மாதம் க்ருஷ்ண பக்ஷம் பஞ்சமி (கி. பி. 1513 பிப்ரவரி மாதம்) அன்று எழுந்தருளினர்.

இவர் ப்ரதிஷ்டை செய்த அக்ரஹாரங்கள் : ஸ்ரீ பாஷ்யபுரம், இஞ்சிமேடு, தையாறு, களத்தூர், புரிசை. இவ்வழகியசிங்கர் காஞ்சீபுரத்தில் அவதரித்தவர் என்று சில பெரியோர் சொல்லுகிறார்கள். இவ்வழகியசிங்கர் திருவடிகளில் விஜயநகரத்து அரசனை முகுந்த தேவராயன் கர்னடக தேசத்து அரசனும் ஸ்ரீஅழகியசிங்கருக்குத் தங்கப் பல்லக்கு ஸமர்ப் பித்தான். அவர் திருவடியிலே ஆச்ரயித்து ஸ்வாசார்யன் திருநக்ஷத்திரத்தை முக்கியமாகக் கொண்டு திருவள்ளூர் திவ்ய தேசத்தில் வீரராகவனுக்கு ப்ரம்மோத்ஸவத்தைத் தொடங்கி தை மாதம் பூரட்டாதியில் அவப்ருதம் கண்டருளும்படி ஒரு வார்ஷிக மஹோத்ஸவத்தைச் செய்யத் தொடங்கி அன்றுமுதல் இன்றுவரையில் இவ்வுத்ஸவம் நடந்து வருகிறது. ஆஸ் தான நிர்வாஹ காலம் 14 வருஷம் 9 மாதம்.

ஸ்ரீமச் சடாரி முனிபாதஸரோஜஹம்ஸம்
ஸ்ரீமத் பராங்குச தபோதநலப்த்தபோதம் |
ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ வரதார்ய தயாவலம்பம்
ஸ்ரீமத் பராங்குச முனிம் ப்ரணதோஸ்மி நித்யம் ||

7. ஸ்ரீசடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி இளங்காடு வங்கீபுரம் திருவம்சத்தில் வைகாசி விசாக நக்ஷத்திரத்தில் அவதரித்து ஆங்கிரஸ வருஷம் மாசி மாதம் (கி. பி. 1513 பிப்ரவரி) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி வாஸந்திகாபரிணயம் முதலான க்ரந்தங்களைச் செய்து விஷு வருஷம் பங்குனி மாதம் பூர்ணிமை (கி. பி. 1522 ஏப்ரல்) அன்று ஸ்ரீரங்கத்தில் அவதாரஸமாபனம் பண்ணி னர். ஆஸ்தான நிர்வாஹ காலம் 9 வருஷம் 2 மாதம்.

ஸ்ரீபராங்குச யோகீந்த்ர சரணாம்புஜ சேகரம் |
ஸமஸ்த சாஸ்த்ர பாரீணம் சடகோப முநிம் பஜே ||

8. ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி மார்கழி மாதம் அஸ்விநி நக்ஷத்திரத்தில் அவதரித்து விஷு வருஷம் பங்குனி மாதம் (கி. பி. 1522 ஏப்ரல்) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி 15 வருஷம் 9 மாதம்

ஆஸ்தான நிர்வாஹம் செய்து ஹேவிளம்பி வருஷம் மார்கழி மாதம் கிருஷ்ணபக்ஷம் பஞ்சமி (கி. பி. 1538 ஜனவரி) திருநாட்டிற்கு எழுந்தருளினர். இவர் பிருந்தாவனம் ஸ்ரீரங்கம். நிர்வாஹ காலம் 15 வருஷம் 9 மாதம்.

சடகோப யதிச்ரேஷ்ட பதபங்கஜ ஷட்பதம் |
ஸர்வ சாஸ்த்ரார்த்த தத்வஜ்ஞம் பராங்குசமுநிம்பஜே ||

9. ஸ்ரீமந் நாராயண யதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி ஆனி மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் அவதரித்து ஹேவிளம்பி வருஷம் மார்கழி மாதம் (கி. பி. 1538 ஜனவரி) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி 4 வருஷம் 6 மாதம் ஆஸ்தான நிர்வாஹம் செய்து சுபகிருது வருஷம் ஆனி மாதம் கிருஷ்ண சதுர்த்தியில் (கி. பி. 1542 ஜூலை) திருநாட்டிற்கு எழுந்தருளினர். இவர் ப்ருந்தாவனம் ஸ்ரீ அஹோபிலம்.

ஸ்ரீமந் ந்ருஸிம்ஹ வரதபராங்குச க்ருபாச்ரயம் |
ஸ்ரீமந் நாராயண முநிம் ச்ரயே ஸ்ரீபாஷ்ய தேசிகம் ||

10. ஸ்ரீ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி வைகாசி விசாகத்தில் அவதரித்து சுபக்ருது வருஷம் ஆனி மாதம் (கி. பி. 1542 ஜூலை மாதம்) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி 17 வருஷ காலம் ஆஸ்தான நிர்வாஹம் செய்து சித்தார்த்தி வருஷம் ஆனி க்ருஷ்ண த்வாதசி (கி.பி. 1559 ஜூலை மாதம்) திருநாராயணபுரத்தில் திருநாட்டுக் கெழுந்தருளினர்.

வரதார்ய குரூத்தம்ஸ சரணாம்புஜ ஷட்பதம் |
சடகோப முநிம் வந்தே சடாரி ப்ரவணம் ஸதா ||

11. ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி திருவள்ளூரில் வங்கீபுரம் வம்சத்தில் ஐப்பசி திருமூல நக்ஷத்திரத்தில் அவதரித்து ஸித்தார்த்தி வருஷம் ஆனி மாதம் (கி. பி. 1558 ஜூலை மாதம்) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி 38 வருஷம் ஆஸ்தான நிர்வாஹம் செய்து ஸ்ரீரங்கத்தில் திருநாடு அலங்கரித்தார்.

பராங்குச சடாராதி பதாம்போஜைகதாரகம் |
ஸ்ரீநிவாஸ முநிம் வந்தே மாத்ருசாமபி தாரகம் ||

12. ஸ்ரீமந் நாராயண யதீந்த்ர மஹாதேசிகன்

திருவள்ளூரில் வங்கீபுராதீசர் வம்சத்தில் புரட்டாசி பூர்வ பங்குனியில் அவதரித்து விளம்பி வருஷம் சித்திரை மாதம் (கி. பி. 1598 ஏப்ரல் மாதம்) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி 34 வருஷம் 5 மாதம் ஆஸ்தான நிர்வாஹம் செய்து ஆங்கீரஸ வருஷம் புரட்டாசி மாதம் கிருஷ்ணபக்ஷம் ஷஷ்ட்டி அன்று திருநாராயணபுரத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினர்.

ஸ்ரீபராங்குச யோகீந்த்ர ஸ்ரீநிவாஸபதாச்ரயம் |
ஸ்ரீமந் நாராயண முநிம் வந்தே வேதாந்த தேசிகம் ||

13. வீரராகவ யதீந்த்ர மஹாதேசிகன்

இவர் திருவள்ளூரில் வங்கி வம்சத்தில் ஆனி மாதம் உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் அவதரித்து ஆங்கீரஸ வருஷம் புரட்டாசி (கி. பி. 1632 ஸெப்டம்பர் மாதம்) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி 44 வருஷம் 1 மாதம் நிர்வாஹம் செய்து நள வருஷம் ஐப்பசி மாதம் கிருஷ்ண ஷஷ்ட்டி திதியில் ஸ்ரீரங்கத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினர்.

ஸ்ரீமந்நாராயணமுநே: பதபங்கஜ ஹம்ஸகம் |
வீரராகவ யோகீந்த்ரம் வந்தே வரகுணகரம் ||

14. ஸ்ரீமந் நாராயண யதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி புள்ளபூதங்குடி திவ்ய தேசத்தில் ஸ்ரீவத்ஸாங்க வம்சத்தில் ஆடி மாதம் உத்திராட நக்ஷத்திரத்தில் அவதரித்துள்ள வருஷம் (கி. பி. 1676–ம் வருஷம் அக்டோபர் மாதம்) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி (1) ஆசார்ய குணதர்சம், (2) குருபரம்பரா ப்ரபாவம், (3) ஈசாவாஸ்ய பாஷ்யம், (4) மாண்டூக்ய பாஷ்யம் என்கிற க்ரந்தங்களையும் செய்து அக்ஷய வருஷம் ஆடி மாதம் அமாவாஸ்யை தினம் திருநாட்டிற்கு எழுந்தருளினர். இவர் ஆஸ்தான காலம் 9 வருஷம் 10 மாதம். கண்டியூரில் ப்ருந்தாவனம்.

ஸ்ரீவீரராகவமுநேர் வரிவஸ்யைகஜீவிதம் |
ஸமாச்ரயேமஹி ஸ்ரீமந் நாராயண முநீச்வரம் ||

15. கல்யாண வீரராகவ யதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி எசனூர் தட்டை வம்சத்தில் தை மாதம் சித்திரை நக்ஷத்திரத்தில் அவதாரம் செய்து அக்ஷய வருஷம் ஆடி மாஸம் (கி. பி. 1686) ஆஸ்நானத்திற்கு எழுந்தருளி 8 வருஷம் 2 மாதம் ஆஸ்தான நிர்வாஹம் செய்து பவ வருஷம் புரட்டாசி மாதம் க்ருஷ்ண ஏகாதசி பெருமாள் கோவிலில் திருநாடு அலங்கரித்தார்.

ஸ்ரீநாராயண யோகீந்த்ரபதாம்போஜைகஜீவநம் |
பஜேஸ்ரீரங்க கல்யாண வீரராகவயோகிநம் ||

16. ஸ்ரீ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி சோகத்தூரில் மார்கழி மாதம் மிருகசீர்ஷம் நக்ஷத்திரத்தில் அவதரித்து பவ வருஷம் புரட்டாசி மாதம் (கி. பி. 1694 அக்டோபர் மாதம்) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி திருநாராயணபுரம் தேவராஜாசாரியா ஸ்வாமி என்ற மஹாவித்வானுக்கும், காலக்ஷேபாதிகளை ஸாதித்து தேவராஜாசாரியார் ஸ்வாமிக்கு ஸந்யாஸமும் ஸாதித்து அவருக்கு கேசவ சடகோப ஸ்வாமி என்கிற திருநாமத்தை ப்ரஸாதித்து 3 வருஷம் 8 மாதம் ஆஸ்தான நிர்வாஹம் செய்து பஹுதான்ய வருஷம் வைகாசி மாதம் சுக்லாஷ்டமி திருக்குடந்தையில் திருநாட்டிற்கு எழுந்தருளினார்.

இந்த ஸ்வாமி திருவடியில் ஆச்ரயித்த தேவராஜாசார் ஸ்வாமி என்பவர் அழிசூர் சண்டமாருதம் ஸ்வாமி என்று ப்ரஸித்தவித்வானாய் எழுந்தருளி இருந்த ஸ்ரீநிவாஸவரதாசார் ஸ்வாமியின் ஜ்யேஷ்ட ப்ராதா என்றும் அரசாணி பாலை வெங்கடாத்வரியின் ஸமீபபந்து என்றும் கேசவ சடகோப ஸ்வாமியின் பிருந்தாவனம் அழகுசெய்யூர் செய்யாத்தங்கரையில் உள்ளது என்றும் பெரியோர்கள் அருளிச் செய்வர்கள்.

கல்யாணராகவமுநே: க்ருபாபாத்ரம்தயாநிதிம் |
ஸர்வ சாஸ்த்ரார்த்த தத்வஜ்ஞும் சடகோப முநிம்பஜே ||

17. ஸ்ரீ வீரராகவ வேதாந்தயதீந்தர மஹாதேசிகன்:

இந்த ஸ்வாமி திருவெள்ளியங்குடியில் புரட்டாசி சதய நக்ஷத்திரத்தில் அவதரித்து பஹுதான்ய வருஷம் வைகாசி மாதம் (கி.பி. 1698) ஜுன் மாதம் ஆஸ்த்தானத்திறகு எழுந்தருளி 35 வருஷம் 7 மாதம் ஆஸ்த்தான நிர்வாஹம் செய்து ப்ரமாதி வருஷம் தைமீ கிருஷ்ணப்ரதமை திருப்புட்குழி திவ்ய தேசத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினார்.

ஸ்ரீமந்நாராயணமுநிம் ஸ்ரீ சடாரிபதாச்ரயம் |
ஸ்ரீ வீரராகவமுநிம் வந்தே வேதாந்ததேசிகம் ||

18. நாராயண யதீந்த்ர மஹாதேசிகன்:

இந்த ஸ்வாமி திருவள்ளூரில் வீரவல்லி வம்சத்தில் புரட்டாசி ஆயில்யநக்ஷத்திரத்தில் அவதரித்து ப்ரமாதீச வருஷம் தை மாதம் (கி.பி. 1734 ஜனவரி) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி ராக்ஷஸ வருஷம் ஆடி மாதம் க்ருஷ்ண ஏகாதசி அன்று ஸ்ரீ ரங்கத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினார்—இந்த ஸ்வாமி திருவடியில் கோயில் கந்தாடை அண்ணன் பூர்வீகர்கள் தசாவதாரஸந்நிதி தர்மபரிபாலநாதிகளை அழகிய சிங்கரிடம் ஒப்புவித்து விட்டார்.

வீரராகவ வேதாந்த முநிவர்யபதாச்ரயம் |
ஸ்ரீமந்நாராயணமுநிம் ச்ரயே ஸ்ரீ பாஷ்யதேசிகம்: ||

19. ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ர மஹாதேசிகன்:

இந்த ஸ்வாமி திருவல்லிக்கேணி நடாதூர் ஸ்ரீவத்ஸாங்கம் வம்சத்தில் மாசி மாதம் மகநக்ஷத்திரத்தில் அவதரித்து ராக்ஷஸ வருஷம் ஆடி மாதம் (கி. பி. 1735 ஜூலை மாதம்) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி 10 வருஷம் 7 மாதம் ஆஸ்தான நிர்வாஹம் செய்து புள்ளம் பூதங்குடியில் திருநாட்டிற்கு எழுந்தருளினர்.

ஸ்ரீமந் நாராயணமுநே: பதபத்மஸமாச்ரயம் |
ஸ்ரீநிவாஸமுநிம் வந்தே வேதாந்த த்வயதேசிகம்: ||

20. வீரராகவ யதீந்திர மஹாதேசிகன்:

இந்த ஸ்வாமி பிள்ளைப் பாக்கம் தட்டை வம்சத்தில் புரட்டாசி மாதம் மூல நக்ஷத்திரத்தில் அவதரித்து க்ரோதன வருஷம் மாசி மாதம் (கி.பி. 1748 மார்ச்சு) மாதம் திருநாட்டிற்கு எழுந்தருளினர். இவருடைய ஆஸ்தானபீடாரோஹணம் (கி.பி. 1746).

ஸ்ரீநிவாஸ முநிச்ரேஷ்டாத்லப்த்த வேதாந்தஸம்பதம் |
ஸ்ரீவீரராகவமுநிம் கல்யாணகுணமாச்ரயே ||

21. ஸ்ரீபராங்குசயதீந்திர மஹாதேசிகன்:

தையார் அக்ரஹாரத்தில் பாரத்வாஜ கோத்திரத்தில் வங்கீபுர வம்சத்தில் பங்குனி ஹஸ்தத்தில் அவதரித்து பராபவ பங்குனிமீ (கி.பி. 1748 மார்ச் மாதம்) ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளி 1. ஆதிவண் சடகோப ஸ்வாமி விஷயமான அடைக்கலப்பத்து. 2. ஸத்ஸம்பிரதாய ஸாரம் (குருபரம்பரை) 3. ஸ்ரீகண்ணன் டோலோத்ஸவக்ருதி. 4. நரஸிம்மன் மங்களம் 5. ஸ்ரீ க்ருஷ்ணன் மங்களம்—முதலான க்ரந்தங்களை செய்து ஈச்வர வருஷம் கார்த்திகை மாதம் க்ருஷ்ண சதுர்த்தி திதியில் பாலமேடில் திருநாட்டிற்கு எழுந்தருளினர்— நிர்வாஹகாலம் 9வரு 8மீ.

இந்த ஸ்வாமி ஆஸ்த்தான நிர்வாஹ காலம் 5வரு 6மீ.

வேதாந்தோத்தர வீரராகவமுநே: நாரயணஸ்ரீநிதிம்
ஸ்ரீமத் வீரரகூத்வஹாக்ய யமிநம் காருண்ய வீக்ஷாஸ்பதம் |
விக்ஞாதோபயவேத மௌளிஹ்ருதயம் வித்வச்சிரோபூஷணம்
வந்தேயாநுதிநம் பராங்குசமுநிம் வைராக்யபக்த்யந்விதம் ||

22. ஸ்ரீமந் நாராயண யதீந்த்ர மஹாதேசிகன்:

கதாதரபுரம். இளநகர் ஸ்ரீவத்ஸாங்கம் வம்சத்தில் ஆடி மாதம் ரோஹிணி நக்ஷத்திரத்தில் அவதரித்து ஈச்வர வருஷம் மார்கழி மாதம் (கி.பி. 1758 ஜனவரி மாதம்) ஆஸ்தாநத்

திற்கு எழுந்தருளி 7 மாதகாலம் ஆஸ்த்தாந நிர்வாஹம் செய்தருளி பஹுதான்ய வருஷம் ஆடி மாதம் க்ருஷ்ணபக்ஷம் ஷஷ்ட்டிதிதியில் பாலவேடு என்ற ஊரில் திருநாட்டிற்கு எழுந்தருளினார்.

வித்யாம்போதி பராங்குசாக்யமுநிராடங்க்ரித்வயீஸம்ச்ருதம்
த்ரைய்யந்தாம்ருத வர்ஷிணம் தநுப்ருதாம் த்ராணைய ஜாதோதயம்
க்ஷோண்யாம் க்யாதஸமஸ்த தந்த்ரகுசல வ்யாக்யாத்ருதாசாலிநம்
ஸ்ரீநாராயணயோகிவர்யமநிசம் காருண்யபூர்ணம் பஜே ॥

23. வீரராகவ யதீந்த்ர மஹாதேசிகன்

திருவெள்ளியங்குடி திவ்யதேசத்தில் ஆனிமீ உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் அவதரித்து பஹுதான்ய வருஷம் ஆடி மாதம் (கி.பி. 1758 பிப்ரவரி மீ) ஆஸ்த்தாநத்திற்கு எழுந்தருளி ஸ்வபாநு வருஷம் தைமீ சுக்ல தசமியில் ஸ்ரீரங்க பட்டணம் திவ்யதேசத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினார்.

வீரராகவ வேதாந்த நாராயணபதாச்ரயம் |
ஸ்ரீவீரராகவமுநிம் ஸம்ச்ரயே ச்ரிதவத்ஸலம் ॥

24. பராங்குச ராமாநுஜ மஹாதேசிகன்:

கல்யாணபுரம் சக்ரவர்த்தி வம்சத்தில் சித்திரை மாதம் புனர்வஸு நக்ஷத்திரத்தில் அவதரித்து ஸ்வபாநு வருஷம் தைமீ (1764 பிப்ரவரி மீ) ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளி 12ஞு 1மீ காலம் ஆஸ்தாந நிர்வாஹம் செய்து கொக்கராயன் பேட்டையில் திருநாட்டிற்கு எழுந்தருளினார். (மன்மத வருஷம் மாசி மாதம் கிருஷ்ண பக்ஷத்ருதியயை) இவர் திருவடிகளில் கத்தவால் ஸமஸ்தான அரசன் ஸோமபூபாலன் ஆச்ரயித்தான்.

ஸ்ரீவீரராகவமுநிச்ருதி மௌளிஸூரி ஸ்ரீமத் பதாம்புஜஸமாச்ரயலப்த்தஸத்வம் |
ஸ்ரீவீரராகவமுநீந்த்ர க்ருபாவலம்பம் ஸ்ரீமத் பராகுச யதீந்த்ரமுநிம் பஜாம: ॥

25. ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகன்.

இந்த ஸ்வாமி இளநகர் கதாதரபுரம் பூ வத்ஸாங்கம் வம்சத்தில் ஆடி மாதம் ஸ்வாதியில் அவதரித்து மன்மத வருஷம் பங்குனி மீ (கி.பி. 1776 மார்ச்சு மாதம்) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி 1. ஸச்சரித்ர ரத்னவளீ. 2. ந்ருஸிம்மஹஸ்தவம். 3. ஸ்ரீந்ருஸிம் மங்களா சாஸநம் முதலானவைகளை செய்தருளி ப்ரஜோத்பத்தி வருஷம் கார்த்திகை மாதம் பௌர்ணமியில் ந்ருஸிம்ஹ புரத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினார். இவர் ஆஸ்தான நிர்வாஹ காலம் 35 வருஷம் 8 மாதம்.

ஸௌரபுரம் வெங்கடாசார் என்று ப்ரஸித்தராய் எழுந்தருளி இருந்த வித்வான் இந்த ஸ்வாமியிடம் ஸ்ரீ பாஷ்ய வாக்யார்தத்தில் பராஜிதராய் தன் கைகளால் தன் பக்கத்தில் உள்ள ஜய கண்டயை அழகிய சிங்கர் பல்லக்கில் கட்டிவிட்டுப் போந்தார்.
தஞ்சாவூர் சரபோஜி மகாராஜா ஸ்ரீ ந்ருஸிம்மனை ஆராதித்தது பகுத்ரவயம் ஸமர்ப்பித்தான் இவ்வழகிய சிங்கர் காலம் முதல் ப்ருந்தாவநங்கள் கட்டப்பட்டு ப்ரதிஷ்டை செய்யப்பட்டு ஆராதநங்களும் நடத்தப் பட்டு வருகிறது.

ஸ்ரீவாஸவீரரகுவர்யபராங்குசாதி ராமாநுஜார்யமுனிபிர்குருஸார்வபௌமை: |
ஸம்ப்ரேக்ஷிதம் கருணயா பரிபூர்ணபோதம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதிசேகரமாச்ரயாம: ||

26. ரங்கநாத யதீந்த்ர மஹாதேசிகன்.

இந்த ஸ்வாமி இளைநகர்கதாதபுரம் ஸ்ரீவத்ஸாங்கம் வம்சத்தில் ஆடி மாதம் பூர நக்ஷத்திரத்தில் அவதரித்து ப்ரஜோத்பத்தி வருஷம் கார்த்திகை மாதம் (கி.பி. 21–11-1811) திவ்யாஸ்தாநத்திற்கு எழுந்தருளி—1. ஆந்ஹிகம் முதலான க்ரந்த நிர்மாணம் செய்தருளி ஸர்வதாரி வருஷம் மார்கழி மாதம் சுக்ல சதுர்தசி ந்ருஸிம்ம புரத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினர். இவர் ஆஸ்தாந நிர்வாஹக காலம் 17 வருஷம் 1 மாதம்.

ஸ்ரீவீரராகவயதீந்த்ர பராங்குசாதி ராமாநுஜார்யகமலாநிதியோகிவர்யை: |
ஸம்ப்ரேக்ஷிதம் கருணயா பரிபூர்ணபோதம் ஸ்ரீரங்கநாதயதிசேகரமாச்ரயாம: ||

27. வீரராகவ வேதாந்த யதீந்த்ர மஹாதேசிகன்.

கதாதரபுரம் ஸ்ரீவத்ஸாங்கவம்சத்தில் வைகாசி மாதம் அவிட்ட நக்ஷத்திரத்தில் அவதரித்து ஸர்வதாரி வருஷம் மார்கழி மாதம் 29உ (10—1—1829) ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளி—1. வைகுண்ட விஜயசம்பு. 2. சண்டமாருதவ்யாக்யா. 3. தாத்பர்ய ரத்நாவளீ. 4. ப்ரும்மசப்தவாதார்த்தம். 5. தர்க்கத்தில் விசேஷவாதம். 6. வ்யாகரணத்தில் வ்ருத்தி சூத்தரம். 7. மஹா பாஷ்யவ்யாக்யா ச்லோகம். 8. ஸங்க்ரம நிர்ணயம். 9. ஜயந்தீ நிர்ணயம். 10. ச்ரவணத்வாதசீ நிர்ணயம். 11. நதீ ரஜோதோஷ நிர்ணயம். 12. ஸ்த்ரீஸம்ஸ்காரக்ரம விஷய வ்யாக்யான ச்லோகம். 13. தசவாரதீர்க்க காயத்ரீஜப நிர்ணய ச்லோகம். 14. மூலமந்த்ரஜப நிரூபணம். 15. ந்யாஸோல்லாஸம். 16. க்ருபாஸாகரஸ்தவம். 17. யதி விஷயே சுதர்சனஹோமாபாவ நிர்ணயம். 18. க்ஷீர நதீஸ்த்வம். 19. நந்தாதீபஸ்தவம், 20. விஸௌகேச்வரஸ்தவம். 21. காவேரிஸங்கம வைபவம். 22. தேவரஜஸ்தவம். 23. லக்ஷ்மி ந்ருஸிம்ஹஸ்தவம். 24. ந்ருஸிம்ம மங்களம். 25. ஸ்ரீவண்சடாரிகத்யம். 26. ஸ்ரீ வீரராகவஸ்தவம். 27. கடிஸூத்திர நிர்ணயம். 28. ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகம். என்கிற க்ரந்தங்களை செய்து 2 வருஷம் 7 மாதம் ஆஸ்தான நிர்வாஹம் செய்து கத்தவாலில் திருநாட்டிற்கு எழுந்தருளினர். 26 பட்டம் ஸ்வாமியின் திருக்குமாரர் இவர்.

ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதிசேகரலப்தபோதம் ஸ்ரீரங்கநாதயதிதுர்யபதாப்ஜப்ருங்கம் |
ஸ்ரீவீரராகவமுனிச்ருதிமௌளிஸூரிம் ஸ்ரீநாதபக்திபரிதாசயமாச்ரயாம: ||

28. ஸ்ரீ ரங்கநாத சடகோபயதீந்த்ர மஹாதேசிகன்.

திருக்குறுங்குடி நடாதூர் ஸ்ரீவத்ஸாங்கம் வானமாமலாசார் ஸ்வாமி என்கிற திரு நாமத்துடன். ஆவணி மாதம் மூல நக்ஷத்திரத்தில் அவதரித்து விஜய வருஷம் ஆனி மாதம் (7—7—1883) ஆஸ்த்தானத்திற்கு எழுந்தருளி துர்முகி வருஷம் மார்கழி மாதம் க்ருஷ்ண ஸப்தமி அன்று மதுராந்தகத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினர். ஆஸ்தாந நிர்வாஹகாலம் 3 வருஷம் 5 மாதம் ஒரு ஸமயத்தில் கர்வங் கொண்ட ஒரு தனவான் அநேகத்ரவ்யங்களை கொண்டு வந்து ஸ்ரீ அழகியசிங்கர்க்கு ஸமர்பிக்க அழகிய சிங்கரும் அத்ரவ்யத்தை மாதுளம் பழ முத்துடன் கலந்து நிவேதனம் செய்து கோஷ்டிக்கு விநியோகம் செய்தார். அதை கண்ட தனிகன் மமதை குறைந்து உதாரனுனன்.

ஸ்ரீவாஸரங்கபதிவீரரகூத்வஹாதி வேதாந்தஸம்யமிவரைர் குருஸார்வபௌமை:
ஸப்ரேக்ஷிதம் கருணயா பரிபூர்ணபோதம் ஸ்ரீரங்கநாதசடகோபமுனிம் பஜாம: ||

29. பராங்குச ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன்.

இந்த ஸ்வாமி சித்திரை மாதம் சித்திரா நக்ஷத்திரத்தில் லாலா பேட்டை என்றும் அக்ரஹாரத்தில் அவதரித்து துர்முகி வருஷம் கார்த்திகை மாதம் (17-11-1886) ஆஸ்தானத் திற்கு எழுந்தருளி. ஆஸ்த்தான நிர்வாஹம் 1 வருஷம் 1 மாதம் நிர்வஹித்து ஹேவிளம்பி வருஷம் மார்கழி மாதம் க்ருஷ்ண சதுர்த்தி அன்று திருப்பாற் கடலில் திருநாட்டுக்கு எழுந் தருளினர். இவர் அருளிய க்ரந்தம் ஸுப்ரபாதம்.

வித்யாம்போதிபராங்குசாக்யயதிராட் ஸ்ரீவாஸரங்காதிப
ஸ்ரீமத்வீரரகூத்வஹச்ருதி சிரோயோகீச்வரைரந்வஹம் |
ரங்காதீசசடாரிஸம்யமிவரை: சாலோகிதம் ஸாதரம்
வித்யாவாரிநிதிம் பராங்குச யதீந்த்ராக்யம் முநீந்த்ரம் பஜே ||

30. ஸ்ரீ ஸ்ரீநிவாஸ வேதாந்த யதீந்த்ர மஹாதேசிகன்.

இளநகர் கதாதரபுரம் ஸ்ரீவத்ஸாங்க வம்சத்தில் சக்ரவர்த்தியாசாரியார் என்கிற திரு நாமத்துடன் மார்கழி விசாகத்தில் அவதரித்து துர்முகி வருஷம் பங்குனி மாதம் (15-3-1837) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி 1. ந்ருஸிம்ம மங்களா சாஸநம். 2. ந்ருஸிம்ம மங்களம். 3. ஸ்ரீரங்கநாதன் மங்களம். 4. ஸ்ரீநிவாஸன் மங்களம். 5. கீதாசார்யன் மங்களம். 6. லக்ஷ்மிநரஸிம்ம ஸுப்ரபாதம். 7. ரங்கநாத ஸுப்ரபாதம். 8. ஸ்ரீநிவாஸ ஸுப்ரபாதம். 9. சார்ங்கபாணி மங்களம். 10. லக்ஷ்மிநரஸிம்ஹ ப்ரபத்தி. என்கிற க்ரந்தங்களை செய்து சுபக்ருது வருஷம் புரட்டாசி மாதம் க்ருஷ்ண சதுர்த்தியில் நரஸிம்ஹ புரத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினர். ஆஸ்தான நிர்வாஹ காலம் 5 வருஷம் 6 மாதம்.

ஸ்ரீ வாஸரங்கபதிவீரரகூத்வஹாதி வேதாந்ததேசிகபராங்குச லக்ஷ்மணார்யை:-
ஸம்ப்ரேக்ஷிதம் கருணயா பரிபூர்ணபோதம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸநிகமாந்தகுரும் பஜாம:

31. ஸ்ரீமந்நாராயணயதீந்த்ர மஹாதேசிகன்.

கார்திகை மாதம் மக நக்ஷத்ரத்தில் ஆதிரங்கம் விஞ்சமூர் வம்சத்தில் அவதரித்து சுபகிருது வருஷம் கார்த்திகை மாதம் (7-12-1842) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளினர்.

செய்தருளின க்ரந்தங்கள்—1-ந்ருஸிம்ம மங்களாசாஸநம். 2. ஸாங்கப்ரபத்திநிஷ்டை. இந்த ஸ்வாமி 4 வருஷம் 4 மாதம் ஆஸ்தாந நிர்வாஹம் செய்து பராபவ வருஷம் பங்குனி மாதம் சுக்ல சதுர்தசி அன்று தியாகராஜபுரத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினர்.

ஸ்ரீரங்கநாதயதிவர்யக்ருபாத்தபோதம் ஸ்ரீவாஸவேதசிகரார்யதயாவலம்பம் ||
வைராக்யபக்திமுகஸத்குணஸாகரம் ஸ்ரீநாராயணச்ருதிசிரோகுருமாச்ரயாம: ||

32. வீரராகவ யதீந்த்ர மஹாதேசிகன்.

சித்திரை மாதம் பூரட்டாதி நக்ஷத்திரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்து பராபவ வருஷம் புரட்டாசி மாதம் 21 தேதி (5-10-1853) ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளி 6 வருஷ காலம் ஆஸ்தாந நிர்வாஹம் செய்து ஸம்பிரதாயப்ரவசளம் செய்து வந்தார்.

ஸ்ரீவாஸரங்கபதிவீரரகூத்வஹாதி வேதாந்தமாநிலயவேதசிரோயதீந்த்ரை: |
ஸம்ப்ரேக்ஷிதம் கருணயா பரிபூர்ணபோதம் ஸ்ரீவீரராகவயதீந்த்த்ரகுரும் பஜாம: ||

33. ஸ்ரீசடகோப யதீந்த்ர மஹாதேசிகன்.

இந்த ஸ்வாமி பரந்தூர் என்னும் அக்ரஹாரத்தில் புரட்டாசி மாதம் விசாக நக்ஷத்திரத்தில் வங்கீபுரம் வம்சத்தில் வேதாந்தாசார்ய ஸ்வாமி என்கிற திருநாமத்துடன் அவதரித்து ப்ரமாதீச வருஷம் ஆவணி மாதம் (12-9-1853) அன்று ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளி ஸத்ஸம்பிரதாய முக்தாவளீ என்கிற க்ரந்தத்தை செய்தருளி 26 வருஷம் ஆஸ்த்தாந நிர்வாஹம் செய்து ப்ரமாதி வருஷம் ஆவணி மாதம் 27 தேதி க்ருஷ்ண தசமி (10-9-1879) அன்று திருவள்ளூரில் திருநாட்டிற்கு எழுந்தருளினர். இவரை தேசிக தர்சந ஸ்தாபனத்திலும் புத்தி சாதுர்யத்திலும் ஸமாதிகதரித்ரர் என்று சொன்னால் ஸ்தோத்ரமாகாது. தேசிக தர்சநத்தை பலவிதமாக ஸ்தாபித்தார். அன்யாக்ராந்தமாய் போயிருந்த ஸ்த்தாவரஸொத்துக்களை ஸ்வாதீனப்படுத்தின மஹான். தேசிகபக்தாக்ரேஸரர். இவர் தேசிக ஸம்பிரதாயத்திற்கு செய்தருளிய அதிமானுஷ செயல்களுக்கு எல்லையே இல்லை என்று சொல்லலாம்.

ஸ்ரீரங்கநாதசடகோபயதீந்த்ரபாத பங்கேருஹப்ரவணசித்த முதாரபோதம் |
ஸ்ரீவீரராகவயதீந்த்ரக்ருபாவலம்பம் ஸ்ரீமச்சடாரியதிவர்யகுரும் பஜாம: ||

34. சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன்.

ஸ்ரீமுக வருஷம் கார்த்திகை மாதம் உத்திராட நக்ஷத்திரத்தில் அத்திபட்டு ஸ்ரீக்ராமத்தில் மாடபூசி வம்சத்தில் அவதரித்து ப்ரமாதி வருஷம் ஆவணி மாதம் (12-9-1879) ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளி—1. ந்ருஸிம்ம ஷஷ்டி பாதவர்ணநம். 2. ஸ்ரீமததிகரண

ஸாராவளி வ்யாக்யாநமான அதிகரண கல்பதரு. 3. ஸாமாந்ய விசேஷாதிந்யாய ஸங்க்ரஹம் 4. ந்யாஸவிம்சதி வ்யாக்யாநம். 5. கவிஹ்ருதய ரஞ்சனீ. 6. ஐகசாஸ்த்ர்யஸமர்த்தனம். 7. தேவராஜஸஹஸ்ரகணி தண்டகம். 8. ஆனந்த்ய நிர்ணயம். 9. ப்ரம்ஹஸூத்ரார்த்த மஞ்சரி. 10. மணிப்ரவாள வ்யாக்யா கீதா. 11. வீக்ஷரண்ய மாஹாத்மியம் மணிப்ரவாள வ்யாக்யா. 12. ஸாரதீபிகா. 13. வேதகிரி வர்ணநம் துரககதி. 14. ஸாரதீபிகா ஹ்ருதயம். 15. ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்மன் அடைக்கலப் பத்து. இவைகளை செய்தருளி 3 வருஷம் 1 மாதம் ஆஸ்த்தான நிர்வாஹம் செய்தருளி சித்ரபானு வருஷம் புரட்டாசி மாதம் க்ருஷ்ண தசமியில் திருவள்ளூரில் திருநாட்டிற்கு எழுந்தருளினர்.

ஸ்ரீமத்வீரரகூத்வஹச்ருதிசிரோரங்கேசகார்யாத்மஜ
ஸ்ரீவாஸச்ருதிமௌளியோகிசடஜித்யோகீசவீக்ஷாஸ்பதம் |
விக்யாதம் சமதீதமாதிஸ"குணைராட்யம் விபஸ் சித்தமம்
வந்தே ஸ்ரீ சடகோபலக்ஷ்மணமுநிம் வைராக்யவாராகரம் ||

35. ஸ்ரீரங்கநாத யதீந்த்ர மஹாதேசிகன்.

இந்த ஸ்வாமி வைகாசி மாதம் திருக்கேட்டையில் களத்தூர் அக்ரஹாரத்தில் பாரத்வாஜ கோத்திரத்தில் கோயில் சப்தம் வங்கீபுரம் வம்சத்தில் நரஸிம்ஹ்ராகவாசாரியர் ஸ்வாமி என்கிற திருநாமத்துடன் சித்ரபானு வருஷம் புரட்டாசி மாதம் (3-10-1882) ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளி 5 வருஷம் 10 மாதம் ஆஸ்தாந நிர்வாஹம் செய்து அத்யுதாரராய் ஸம்பிரதாய ப்ரவசனம் செய்து 33 பட்டம் அழகியசிங்கரிடத்தில் ப்ரேஷ மந்த்ரோபதேசம் பெற்று ஸர்வதாரி வருஷம் ஆடி மாதம் 28ந்தேதி சுக்ல சதுர்த்தியில் திருவள்ளூரில் திருநாட்டிற்கு எழுந்தருளினர்.

ஸ்ரீமச்ச்ரீவீரரக்வீட்ச்ருதிமகுடகுருத்தம்ஸபா தாப்ஜப்ருங்கம்
ஸ்ரீ மச்ச்ரீரங்கபூப்ருச்சடமதனகுரோர் லப்தவேதாந்தயுக்மம் |
ஸ்ரீமந்நாராயணத்யச்ருதிசிகரசடாராதிராமாநுஜார்ய
ப்ரேக்ஷாபாத்ரம் பஜாமோ குருவரநககம்ரங்கநாதம் யதீந்த்ரம்: ||

36. ஸ்ரீ நிவாஸ யதீந்த்ர மஹாதேசிகன்.

இந்த ஸ்வாமி பரந்தூர் அக்ரஹாரத்தில் வங்கீபுரம் வம்சத்தில் ரங்காசாரியர் என்கிற பூர்வாச்ரம நாமத்துடன் ஆடி மாதம் புஷ்ய நக்ஷத்திரத்தில் அவதரித்து ஸர்வதாரி வருஷம் ஆடி மாதம் (13-8-1888) ஆஸ்தானத்திற்கு எழுத்தருளி 10 வருஷம் 4. மாத காலம் ஆஸ்த்தான நிர்வாஹம் செய்து விளம்பி வருஷம் மார்கழி மாதம் 14ந்தேதி (27-12-1898) பாதூரில் திருநாட்டிற்கு எழுந்தருளினர்.

ஸ்ரீ நாராயணவேதமௌளியதிராட்பாதாரவிந்தாச்ரயம்
க்யாத ஸ்ரீசடகோபதேசிகமணேர்லப்தாகமாந்தத்வயம் |
ஸ்ரீமத் ரங்கதுரீணயோகிசரணந்யஸ்தாத்மரக்ஷாபரம்
ஸேவே ஸ்ரீநிதியோகிவர்யமநகம் நிர்பாதபோதோதயம் ||

37. ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி பிள்ளைபாக்கம் என்னும் அக்ரஹாரத்தில் இளையவில்லி கௌசிக கோத்திரத்தில் க்ரோதி வருஷம் மாசி மாதம் புஷ்ய நக்ஷத்திரத்தில் (1845) மார்ச் மாதம் கோபாலாசார்யர் என்கிற திருநாமத்துடனும் சப்த தந்த்ர வாசஸ்பதி என்கிற பிருதுடன் அவதரித்து விளம்பி வருஷம் தை மாதம் (31 - 1 - 1899) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி ஆதேசமணி முதலான 16 க்ரந்தங்களைச் செய்தருளி 11 மாதம் ஆஸ்த்தான நிர்வாஹம் செய்து நரஸிம்ஹபுரத்தில் விகாரி வருஷம் மார்கழி மாதம் பூர்ணிமை தினம் திருநாட்டிற்கு எழுந்தருளினர். ஸந்யாஸி நியமத்தில் மிகவும் நெறியாக எழுந்தருளி இருந்த மஹான்.

அஸ்த்யத்ரைகோ விசேஷோ புத இதி சடஜில்லக்ஷ்மணுப்யாம் முனிப்பாம்
ஏகீபூயோதிதாப்யாமிவ நிருபதிகம் ப்ரேக்ஷிதம் ஸத்குருப்யாம் |
வேதாந்தத்வந்த்வமந்த்ரத்ரயவிவ் ருதிமுகே சிக்ஷிதம் க்ஷாந்திமுக்யை
ராட்யம் ஸ்ரீவீரரக்வீட் சடமதனகுரும் ஸம்யமீந்த்ரம் நமாமி||

38. ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி இளநகர் கதாதரபுரம் ஸ்ரீவத்ஸாங்கம் வம்சத்தில் ஸித்தார்த்தி வருஷம் தை மாதம் திருவாதிரை நக்ஷத்திரத்தில் சக்ரவர்த்தி வெங்கடாசார்ய ஸ்வாமி என்கிற திருநாமத்தோடு திருக்குடந்தையில் திருவவதாரம் செய்து (1860 ஜனவரி) விச்வாவஸு வருஷம் ஆடி மாதம் பூர்ணிமை அன்று (17 - 7 - 1905) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி 3 வருஷம் 10 மாதம் ஆஸ்தான நிர்வாஹம் செய்து ஸௌம்ய வருஷம் சித்திரை மாதம் கிருஷ்ண அஷ்டமி அன்று ந்ருஸிம்ஹபுரத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினர்.

ஸ்ரீமச்சடாரிசட ஜித்யதி துர்யவீர
ரக்வீட்சடாரியதிசேகர தேசிகேந்த்ரை: |
ஸம்ப்ரேக்ஷிதம் கருணயா பரிபூர்ண போதம்
ஸ்ரீஸ்ரீநிவாஸ சடகோபமுனிம் பஜாம:||

39. ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹாதேசிகன்

ராஜமன்னார் கோயில் உருப்புட்டூர் வம்சத்தில் வைகாசி மாதம் பரணி நக்ஷத்திரத்தில் அவதரித்து வ்யாகரணம் ரங்காசாரியார் என்கிற திருநாமத்துடன் விளங்கி ஸௌம்ய வருஷம் வைகாசி மாதம் சுக்லஸப்தமி அன்று மன்னார்கோயிலில் திருநாட்டிற்கு எழுந்தருளினர். இவர் ஆஸ்தான நிர்வாஹ காலம் 6 வருஷம்.

ஸ்ரீவீரராகவயதீந்த்ரபதாப்ஜப்ருங்கம்
ஸ்ரீமச்சடாரி யதிவர்ய க்ருபாத்தபோதம் |
ஸ்ரீஸ்ரீநிவாஸ சடஜித்யதி துர்யவீக்ஷா
பாத்ரம் பராங்குச யதீந்த்ரகுரும் பஜாம:||

40. ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமி காரைகுறிச்சி அக்ரஹாரத்தில் வங்கீபுர வம்சத்தில் விரோதி வருஷம் மார்கழி மாதம் (1851 டிசம்பர்) அவதரித்து ப்ரமாதீச வருஷம் சித்திரை மாதம் (17-4-1913) ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி, (1) பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகை, (2) ஸத்ஸம்பிரதாய ப்ரகாசிகை, (3) ஸ்ரீபாஷ்யதூஷண பரிஹாரம், என்கிற க்ரந்தங்களைச் செய்தருளி 9 வருஷம் 9 மாதம் ஆஸ்தான நிர்வாஹம் செய்து துந்துபி வருஷம் தை மாதம் கிருஷ்ணத்ரயோதசியில் துவரிமான் அக்ரஹாரத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினர்.

ஸ்ரீமச்சடாரியதி சேகரலப்தபோதம்
ஸ்ரீரங்கநாத யதிவர்யக்ருபைகபாத்ரம் |
ஸ்ரீமத் பராங்குச யதீந்த்ர தயாவலம்பம்
ஸ்ரீரங்கநாத சடகோப முனிம் பஜாம:॥

41. ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ம சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

காருகுரிச்சி என்னும் அக்ரஹாரத்தில் வாதூல கோத்ரத்தில் கோபாலராமபத்ராசார்ய ஸ்வாமி என்கிற திருநாமத்துடன் ஆனந்த வருஷம் மார்கழி மாதம் பூரட்டாதி (1854 டிசம்பர்) நக்ஷத்திரத்தில் அவதரித்து (27-1-1923) துந்துபி வருஷம் தை மாதம் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி (1) லக்ஷ்மீ ந்ருஸிம்ஹத்யான ஸோபானம், (2) வேதபாதாதீசஸ்தவம், (3) ஸ்ரீமஹாலக்ஷ்மிகத்யம் முதலானவைகளை ஸாதித்தருளி ஸம்பிரதாய ஸ்தாபனம் செய்து கொண்டு எழுந்தருளி இருந்தார்.

ஸ்ரீமச்சடாரி சடகோபயதீந்த்ரரங்கி
கார்யாத்மஜாதமுனிபிர் குருஸார்வபௌமை: |
ஸம்ப்ரேக்ஷிதம் கருணயா பரிபூர்ணபோதம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப முனிம் பஜாம:॥

42. ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

இம்மஹான் யக்ஞவேதி என்று சொல்லப்படும் (இஞ்சிமேடு) அக்ரஹாரத்தில் (சடகோப ராமானுஜ யதீந்த்ர மஹாதேசிகாவதாரத்தால் பரமபாவனமாயுள்ள இந்த ஸ்தலத்தில்) பாரத்வாஜ கோத்திரத்தில் ஆதிவராஹாசார்ய ஸ்வாமிக்கு, ரங்கநாதன் என்கிற திருநாமத்துடன் பஹுதான்ய வருஷம் தை மாதம் உத்திரட்டாதி (21-1-1879) யில் அவதரித்து, ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகனால் "தேசிக தர்சன ஸ்தாபகோzஸௌஸ்யாத்" என்று நன்கு கடாக்ஷிக்கப்பட்டவராவர். திருக்குடந்தை திருப்பதி, மைசூர், காசி முதலான இடங்களில் உள்ள வித்வான்களிடம் தர்க்கசாஸ்திரத்தை அதிகரித்து, யக்ஞவராஹனின் திஷ்ண்ய ஸ்தானமான ஸ்ரீமுஷ்ணத்தில் எழுந்தருளி இருந்த ஸ்வர்ணம் ஸ்ரீ க்ருஷ்ண தேசிகரிடம் ஸர்வஸித்தாந்த க்ரந்தங்களையும் முறைப்படி ஸேவித்து உக்திநிஷ்டாப்ரகாரமாக பரஸமர்ப்பணத்தைச் செய்தும், காருகுருச்சி ஸ்ரீ அழகியசிங்கர் ஆஸ்தான காலத்திலே

ஆஸ்தான வித்வானுக ஸேவை ஸாதித்தும், ஸ்ரீபெரும்பூதூர் ஆஸூரி ராமாநுஜாசார்ய ஸ்வாமி முதலான வித்வான்களோடு வாக்யார்த்தங்கள் செய்தும், சுக்ல வருஷம் சித்திரை மாதம் (1929) ஆச்ரம ஸ்வீகாரம் செய்துகொண்டு, கொஞ்ச நாள் இரண்டு அழகிய சிங்கர்களுமாய் ஸம்பிரதாய ப்ரவசனம் செய்துவந்தும், ஒரு ஸமயம் த்வைத ஸந்யாஸியுடன் வாதம் செய்து, நம் தர்சனத்தை ஸ்தாபித்து விஷு வருஷம் ஐப்பசி மாதம் (24-10-1942) வெள்ளிக்கிழமை அன்று ஆஸ்தானபீடாரோஹணம் செய்து ஸ்ரீரங்கத்திலிருந்து ஹைதராபாத் வரை திருநாராயணபுரம் முதல் திருக்கடல் மல்லை வரையில் திக்விஜயம் செய்து ஆஸ்தான நிர்வாஹம் 24 வருஷம் 1 மாதம் செய்து ராமாநுஜ தர்சனத்தை பலவிதமாக ஸ்தாபித்தார்.

இவர் அருளிச் செய்த க்ரந்தங்கள்: (1) ஸ்ரீரஹஸ்யத்ரயஸார வ்யாக்யா ஸாரபோதினீ, (2) கீதார்த்த ஸங்க்ரஹ வ்யாக்யா, (3) விசிஷ்டாத்வைத வேதாந்த கோச: (4) க்ருத்திகாதீப கால நிர்ணய:, (5) உபாகர்ம காலநிர்ணயாதய:, (6) ந்யாஸ நிஷ்டாமீமாம்ஸா, (7) உக்திநிஷ்டாபரணம், (8) உக்திநிஷ்டாபரஞ்ஜோத்யோதம்.

இம்மஹான் செய்தருளிய கைங்கரியங்களில் ஸாரதமமானவைகள்: (1) வேத பாடசாலை, (2) ப்ரபந்த பாடசாலை, (3) ஸம்ஸ்கிருத காலேஜ், (4) ந்ருஸிம்ஹப்ரியா பத்திரிகை, (5) மாலோல வித்வத் ஸதஸ்.

குறிப்பு: இவ்வழகியசிங்கர் வேதபாடசாலையில் அத்யயனம் செய்தவர்கள் பலர் இப்போது கனபாடிகளாய் வேதரக்ஷணம் செய்து வருகிறார்கள்.

திவ்ய ப்ரபந்தங்களை ஸேவிப்பதில் ஆழ்வார்களைப்போல் அதிகம்பீரமாக ஸேவிக்கும்படியான முறையில் இருக்கும்படி சிக்ஷை பெற்ற யுவாக்கள் 30 அல்லது 40-க்குக் குறையில்லை. இவ்வழகியசிங்கர் கலாசாலையில் சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்ற சிரோமணி பிருது வாங்கின வித்வான்கள் பலர். அவர்கள் அநேகமாய் இவ்வழகியசிங்கர் ஸந்நிதியிலே 50 பேர்களுக்கு ஏககாலத்தில் ஔபாஸனவைச்வதேவத்துடன் இருந்து காலக்ஷேபம் செய்தார்கள். இந்த காலக்ஷேப கோஷ்டியின் வைகரி இதுவரையில் இப்படி யாருக்கும் ஏககாலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை.

எவ்வளவு ஸங்கடம் ஏற்பட்டாலும் அநுஷ்டானங்களை மிகவும் பூர்ணமாயும் முக்கியமாயும் செய்யும் உத்தமர். சாஸ்த்திரவச்யதையில் இம்மாதிரியான மடாதிபதிகளைக் காண்பது மிகவும் அரிது.

இவ்வழகியசிங்கர் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு ஆராதனம் செய்யும் வைகரியும், அர்சாவதாரங்களை மங்களாசாஸனம் செய்யும் ப்ரகாரமும், உபசாரம் செய்யும் ப்ரகாரமும் பார்த்துக்கொண்டே யிருக்கலாம். அர்ச்சாவதார மங்களாசாஸனக்ரமத்தின் அழகுகொண்ட மஹான்களில் நம் அழகியசிங்கர் முதல்வர் என்று மஹாப்ரஸித்தம். வித்வான்களை தெய்வமாகக் கொண்டாடும் மஹான். இவர் நந்தன வருஷம் மாசி மாதம் 18-ந் தேதி (1-3-1953)

திருநாட்டிற்கு எழுந்தருளினுர். இவர் பிருந்தாவனம் திருவள்ளூரில் தென்குளக்கரையில் ஸ்வாசார்யரான களத்தூர் அழகியசிங்கர் திருவடிவாரத்தில் அமைந்துள்ளது.

ஶ்ரீரங்கேசயதீந்துநா கருணயா ஸௌ ஸ்யாதிதி ப்ரேக்ஷிதம்
க்யாதஶ்ரீநரஸிம்ஹகாரிஜமுநீட் பாதாம்புஜேந்திந்திரம் |
தாந்திக்ஷாந்திதயாதிபி: சுபகுணைர்பாந்தம் புதாக்ரேஸரம்
ஶ்ரீமத்ரங்கசடாரி யோகிந்ருபதிம் ச்ரேயோநிதிம் ஸம்ச்ரயே||

43. வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்

இவ்வாசாரியன் ப்லவ வருஷம் கார்த்திகை மாதம் பூராட நக்ஷத்திரத்தில் பருத்திப் பட்டு என்கிற அக்ரஹாரத்தில் திருவேங்கடாசாரியர் ஸ்வாமிக்கு லக்ஷ்மீந்ருஸிம்மஹா சார்யர் என்கிற திருநாமத்துடன் அவதரித்து, ஶ்ரீ ஶ்ரீரங்க சடகோபன் நியமனத்தால் விக்ருதி வருஷம் தை மாதம் 27உ வெள்ளிக்கிழமை (9-2-1951) ஆச்ரம ஸ்வீகாரம் செய்து கொண்டு, ஆளவந்தார், எம்பெருமானுர் இரண்டு மஹான்களின் சேர்க்கையை ஸேவிக்க முடியாத குறை தீர ஶ்ரீரங்க சடகோபனுடன் ஶ்ரீ வீரராகவ சடகோபனும் சேர்ந்து எழுந் தருளியிருந்து காலக்ஷேபம் ஸாதித்து வந்தார். பிறகு நந்தன வருஷம் மாசி மாதம் வெள் ளிக்கிழமை (13-3-53) சுபதினத்தில் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி 5 வருஷம் 10 மாதம் ஆஸ்தான நிர்வாஹம் செய்து, திருவள்ளூரிலிருந்து புறப்பட்டு, ஆஸேதுஹிமாசலம், பாரத தேசம் முழுவதும் திக்விஜயம் செய்து ராமானுஜ தர்சனமான தேசிக ஸம்பிரதாயத்தை எல்லா இடங்களிலும் வைதிக முறையில் ஸ்தாபித்தார். இஞ்சிமேடு அழகியசிங்கர் போலவே இவ்வழகியசிங்கரும் சிகாவான்களுக்குத்தான் பஞ்சஸம்ஸ்காரம் முதலானவைகள் செய்வது என்கிற அஸிதாராவ்ரதத்தைக் கொண்டவர். இம்மாதிரி யாரும் இதுவரையில் இருந்த தாகத் தெரியவில்லை.

இவ்வழகியசிங்கர் பல ஊர்களில் பாஷாந்தரம் கலந்த ஸம்ஸ்கிருத ஸ்கூல்களை ஆரம் பித்து ஸம்ஸ்கிருதம் வாசித்த சிலராவது தமிழ் நாட்டில் ஜீவிக்க வழி தந்து ஸம்ஸ்கிருதத்தை அடியோடு மறவாதபடி செய்த மஹான்.

ஶ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்மன் ஐச்வர்யத்தை சிக்கனமாக சிலவு செய்து நிரவதிகமாகச் சேர்த்து வைத்தவர். எம்பெருமான் கைங்கரியத்தை அந்தந்த காலத்தில் கால விளம்ப மின்றி நடத்துவதில் வெகு ஸமர்த்தர் இவ்வாசார்யன். ஹேவிளம்பி வருஷம் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமை 9உ (24-11-57) அன்று நைமிசாரண்யத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினுர்.

ஶ்ரீமச்ச்ரீரங்கப்ருத்வீச்வரசடரிபுணா ஸம்யமீந்த்ரேண த்ருஷ்டம்
ந்யஸ்தாத்மானம் ந்ருஸிம்ஹே நரஹரிசடஜித் யோகிநேது: ப்ரஸாதாத் |
ப்ராஜ்ஞஶ்ரீரங்ககாரி ப்ரபவயதிபதே: ப்ராப்தலக்ஷ்மீந்ருஸிம்ஹா
ஸ்தானம் ஸேவே யதீந்த்ரம் ஸகலகுணநிதிம் வீரரக்வீட்சடாரிம்||

44. ஸ்ரீவண் சடகோப ஸ்ரீவேதாந்த தேசிக யதீந்த்ர மஹாதேசிகன்

மன்மத வருஷம் ஆவணி மாதம் ஹஸ்த நக்ஷத்திரத்தில் (1895 ஆகஸ்டு) ஸ்ரீ ராஜ கோபாலன் என்கிற திருநாமத்துடன் அவதரித்தார்.

இம்மஹாதேசிகன் ஹேவிளம்பி வருஷம் கார்த்திகை மாதம் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளி ஸங்கட நிலைமையிலிருந்து எம்பெருமானை இத்தேசவாஸிகளும் ஸேவிக்கும்படிச் செய்த புண்ய புருஷன். நாஸ்த்திகர்களுக்கு பதில் சொல்லுவதில் இவ்வழகியசிங்கர் ஸமாதிகதரித்ரரே. ஔதார்யத்தில் இம்மஹான் அத:க்ருத கர்ணன். ஆயிரக்கணக்கான வித்வான்கள் ஸதஸுக்கு எழுந்தருளவேண்டு மென்கிற 42 பட்டம் அழகியசிங்கரின் மனோரதம் இவ்வழகியசிங்கரால் பூர்த்தி செய்யப்பட்டது. ஸதஸ் நடத்துவதிலும் வாக்யார்த் தங்கள் சொல்வதிலும் பரமோத்ஸாஹம். கஷ்டப்படும் எந்த ப்ராணிகளையும் பார்த்து ஸஹிக்கமாட்டாத தயாமூர்த்தி. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நதிக்குப் போய் பல மந்த்ரா க்ஷதை இல்லாது வந்தவனை இவ்வழகியசிங்கர் காலத்தில் யாரும் பார்த்ததில்லை. இவ் வழகியசிங்கருக்கு ஸௌலப்யம் மிகமிக அதிகம்.

இவர் அருளிச்செய்த க்ரந்தங்கள் :

1. சாரீரகாதிகரண க்ரமபோதினீ (ச்லோக ரூபம்.)
2. அதிகரண ஸூத்ர ஸங்க்யா விஷய போதினீ (ச்லோக ரூபம்.)
3. ப்ரும்ஹ ஸூத்ரார்த்த பத்யமாலிகா. 545 ச்லோக ரூபம்.
4. ஸதுபதேசம்—மணிப்ரவாள ரூபம்.
5. பஞ்சாமிருத ஸ்தோத்திரம்.
6. த்வாதசநாம ஸ்தோத்திரம்.
7. கராவலம்ப ஸ்தோத்திரம்.
8. 42 பட்டம் அழகியசிங்கர் மங்களம் முதலியன.

ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ரத்ருஷ்டம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடஜித் கருணைகபாத்ரம் |
ஸ்ரீரங்கவீரரகுராட் சடகோப ஹ்ருத்யம்
வேதாந்த தேசிகயதீந்த்ர மஹம் பரபத்யே ||
ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவேதாந்ததேசிக
யதீந்த்ர மஹாதேசிகாய நம: ||

ஸ்ரீ

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ கேதாண்டபட்டி ஸ்வாமி

ஸ்ரீ ரங்கராமாநுஜமஹாதேசிகன்

ஸ்ரீ நல்லான் என்கிற ஸ்வாமியினிடம் ஸ்ரீ கீதாபாஷ்ய காலக்ஷேபம். அப்பொழுது ஆசார்யனுடைய ஸ்வப்னத்தில் எம்பெருமான் நியமித்ததாவது.—ஸ்ரீ பரமபரி வழுத்தூர் வேதாந்த ராமாநுஜஸ்வாமியின் ப்ரதான சிஷ்யரான பரமபரி. ஆண்டிகாட்டு ஸ்வாமி மூலமாக ஸத்ஸம் பிரதாயம் செழிக்க வேண்டுமென்று நாம் ஸங்கல்பித்திருப்பதால் இந்த சக்ரவர்த்தி மூலம் ஸம்ப்ரதாய வ்ருத்தி விசேஷமாக வேண்டியிருப்பதால் அவரிடம் இவர் போம்படி நியமிக்கவேணும் என்று. இதைக்கண்டவுடன் ஆச்சர்யப்பட்டு சிஷ்யனை அழைத்து ஸ்ரீ நல்லான் ஸ்வாமி நியமிக்க அந்த நியமனத்திற்காக ஸ்வாமி ஸ்ரீரங்கம் எழுந்தருள ஸ்ரீ ஆண்டிகாட்டுஸ்வாமியும் பகவன் நியமனமென்று ஸ்ர்வவேதாந்தார்த்தங்களையும் மிக்க வாத்ஸல்யத்துடன் அருள, அதனல் அற்புத க்ஞானசக்திகளைப் பெற்று, வேதாந்தப்ர வசனம் செய்தருளினபடி. ஒரு ப்ரம்ஹ ரக்ஷஸ்ஸு ஸ்ரீ ஸ்வாமியின் அனுக்கஹம் பெற்று, மோக்ஷ மடைந்தது. அப்போது ஏற்பட்ட பாதுகை இன்னும் ஓரிடத்தில் இருக்கின்றது.

இவர் அருளியக்ரந்தங்கள்

(1) அதிகரண ஸங்கதிமாலை, 2, ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸார ஸங்க்ரஹம், திவ்யப்ரபந்த உரையின் ஸங்க்ரஹம் என்றுற் போன்ற க்ரந்தங்கள் பல. பெருமாள் கோயிலில் திருப்புட்குழிஸ்வாமி என்ற சதுச்சாஸ்த்ர கல்பதருவின் திருமடியில் சாய்ந்து திருநாட்டுக் கெழுந்தருளியபடி உபநிஷத் பாஷ்யகாரரின் உயர்ந்த அவதாரம்.

இவ்வாசார்ய ஸார்வ பௌமன் பூர்வாச்ரமத்தில். லக்ஷ்மீ புரத்தைச்சேர்ந்தவர். விபவ ஐப்பிசி மூல நக்ஷத்திரத்தில். திருமலை நல்லான் சக்ரவர்த்தி திருவம்சத்தில் கேதாண்டபட்டியில் ஸ்ரீநிவாஸ சக்ரவர்த்தியாசார்யருக்கு திருக்குமாரராய் அவதரித்து க்ரஹஸ்தாச்ரமத்திலேயே கூரத்தாழ்வானைப்போல் பரமவிரக்த்ராய் தமக்கிருந்த அமோகமான ஐச்வர்யம் யாவற்றையும் தமையனுருக்கு கொடுத்துவிட்டு தாம் உஞ்சவ் ருத்தி செய்துகொண்டு அஷ்டாக்ஷராதி மந்திரஜபபரராய் எருந்தருளி இருந்து, வங்கீபுரம் ஸ்வாமி ஸந்நிதியில் ஸகலார்த்தங்களையும் க்ரஹித்து ஜ்ஞாநவைராக் யாநுஷ்டாநசே வழியாய் எழுந்தருளி இருக்கும்போது, திருக்குடந்தை ஆராவமுதனை ஒருநாள் மங்களா சாஸனம் செய்ய எழுந்தருளி ஸ்ரீ ஸூக்திகளை அநுஸந்திக்கொண்டு ஆபீடாந்மௌளிபர் யந்தம் மங்களாசாஸனம் செய்துகொண்டு பகவதநுபவம் பண்ணும் ஸமயம் நாவல்பாக்கம் அண்ணயதாததேசிகனும் மங்களாசாஸனம் செய்ய அவ்விடத்திற்கு எழுந்தருள இரண்டு திருநாமங்களும் சேர்ந்து எம்பெருமானை அஸபவித்து, அநுபவபரிவாஹமாய் பகவத் குணங்களை பரிமாரிக்கொண்டு இருக்கும்போது மூலமாய் திருவஹீந்திர புரத்தில் மலைமேல் எழுந்தருளி இருக்கும் ஹயக்ரீவனுக்கு ஸந்நதி கைங்கரியம், பெருமாள் கோவிலில் தூப்புல் தேசிகன் ஸந்நதி முதலான அநேக கைங்கரியங்களை செய்வித்து ஜகத்ப்ரஸித்தராய் எழுந் தருளி இருந்தார்.

தனியன்

ஸ்ரீரங்கலக்ஷ்மணமுநி ஸ்வக்ருத ப்ரபந்த
கூடார்த்த போதனக்ருதே ஸமபூத் க்ருதாத்மா
வேதாந்த லக்ஷ்மண முநீந்த்ர பதாப்ஜப்ருங்கம்
ஸ்ரீரங்கலக்ஷ்மண முநிம் தமஹம் ப்ரபத்யே.

நாவல்பாக்கம்
தே. ஆராவமுததாததாஸன்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜ கேத்யாதி

தேன்கனிக்கோட்டை நாராயணஸ்வாமி

அதிபால்யம் முதல்கொண்டு விரக்தராய் எழுந்தருளியிருந்த இந்த ஸ்வாமி பூர்வத்தில் தென்னுசாரிய ஸம்ப்ரதாயஸத்ர். லக்ஷ்மீபுரதில் காவ்ய நாடகங்களை வாசித்து வரும்போது அதிவிலஷணராய் ஆசாரியகம் செய்துவந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜ கேதியாதி ஸ்ரீமத் கேதாண்டபட்டி ஸ்வாமி ஸன்னிதியில் பஞ்சாஸ்ம்ஸகாரம், உபாயானுஷ்டானம், கிரந்த காலக்ஷேபம், காஷாயக்ரஹணம், முதலிய ஸகலான்வயமும் பெற்று அதிவிரக்தராய் தீர்த்தயாத்ரையைச் செய்துக்கொண்டெழுந்தவுளியாயிற்று. கேதாண்டபட்டிஸ்வாமி எழுந்தருளியிருக்கும்போதே தம்மிடம் உபயானுஷ்தானம் செய்துக்கொள்ள வருவோரை இந்தஸ்வாமியிடம் அனுப்புவது வழக்கம். அனுஷ்டானவைராகியம் அனிதர ஸாதாரணம். பூர்வாச்ரமத்தில் அந்தநாளில் லக்ஷக்கணக்கான சொத்தும் பூஸ்திதியுமிருந்தும் எல்லாவற்றையும் ஸஹோதரர்களுக்குக்கொடுத்துவிட்டு அதிவிலஷ்ணவைராக்ய சீலராய் அந்த்யாச்ரமத்தில் எழுந்தருளியிருக்கும்போதும், கேவலம் ப்ரஸாதத்தை மட்டுமே வ்யஞ்ஜனம் ஏதுமில்லாம் தினமும் மாதுகர காலத்தில் ஸ்வீகரித்து இதையும் ஜலத்தில் அலசிவிட்டு திருத்துழாயும் அலசிய ப்ரஸாதமுமே உட்கொண்டு எழுந்தருளியாயிருந்தது ப்ரஸித்தம். 'நாராயணு!' என்கிற திருநாமத்தை வெகுதூரம் கேட்கும் படிஅடிக்கடி உச்சரித்து வந்தபடியால் தமது திருநாமமான 'வரதராமாநுஜமஹாதேசிகன்' என்பதும் உலகினருக்கு மறந்து 'டெங்கணிக்கோட்டை நாராயணஸ்வாமி' என்றே ப்ரஸித்தி யடைந்தவர். இந்தஸ்வாமியின் விரக்தியைக்கண்டருளிய பல மஹான்கள் அன்னுளில் இந்தஸ்வாமி ஸம்பந்தம் எப்படியாவது வேண்டும் என்று விரும்பி இவரிடம் அன்வயம் பெற்றனர். ப்ராக்ஜ்ஞுமணியும், பரமைசாந்தி ஸார்வபௌமரும் அபரபாஷ்யகாரருமாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் பரமஹம் ஸேத்யாதி ஆத்மகூர். ஸ்ரீஅபிநவரங்கநாத ப்ரம்ஹ தந்திரபரகால மஹாதேசிகன் இந்தஸ்வாமியிடம் உபயானுஷ்டானம் செய்துக்கொண்ட பாக்யவான்களில் ஒருவர். அந்த நாளில் ஒருலௌகிகமஹாப்பிரபு ஸகலவரிசைகளோடும் இந்த மஹானிடம் ஆச்ரயிக்க வந்து தண்டம் ஸமர்பிக்க, இந்தஸ்வாமி அவரை "உமக்கு ஸந்தியாவந்தனுதிகள்கூட தெரியவில்லையே? உமக்கு எப்படி உபயானுஷ்டானுதிகளைச் செய்வது?" என்று திருப்பி அனுப்ப, அந்தலௌகிகனும் ஸஹ்ருதயராய் தமது பெரிய அந்தஸ்தையும் பாராமல் புனருபனயனுதி ஸம்ஸ்காரங்களைச் செய்து ஸேது யாத்திரையும் செய்து முறைப்படி ஸந்தியாவந்தனுதிகளைச் செய்துக்கொண்டுவந்து இந்தஸ்வாமி திருவடி வாரத்தில் ஆச்ரயித்து உஜ்ஜீவித்தார் என்பது வெகு ப்ரஸித்தம், மாரண்டஹள்ளி யில் இருந்த ஒரு லௌகிகப்ரபு இந்த ஸ்வாமியிடம் ஆச்ரயிக்கும் முன்பு ப்ரபத்தியைப் பற்றி அதிசங்கைபட, இந்த ஸ்வாமி ப்ரபத்தியைப் பணயம் வைத்து அந்த ஊர் குளக்கரை யிலிருந்த வேப்ப மரத்தை அரச மரமாக மாற்றியருள இந்த ஸ்வாமியின் மஹிமையை உணர்ந்து அவர் அபராதக்ஷமா பணம் செய்து திருவடியை யாச்ரயித்து கடைத்தேறிய வரலாறு மேற்கு தேசத்தில் இன்றளவும் ஆபாலகோபாலம் பிரஸித்தம் சமதமானுஷ்டான வைராக்கியாதி சேவதியான இந்த ஸ்வாமி வெகு நாள் எழுந்தருளியிருந்து ஸ்ரீரங்கத்தில் திருநாடலங்கரித்தார்.

சேட்டலூர். வ. ஸ்ரீவத்ஸாங்காசாரியன்.

ஸ்ரீ பரம ஹம்ஸேத்யாதி திருப்பதி ஸ்வாமி

ஸ்ரீவேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்

திருப்தி பெரிய திருமலை நம்பி வம்சத்தில் அவதாரம். பாலியத்திலேயே விசேஷக் ஞானஸம்பத்துடன் விளங்கி ஸ்ரீ கேதாண்டபட்டி ஸ்வாமி திருவடிகளையாச்ரயித்து தர்க்கம் முதலிய சாஸ்த்ரங்களில் பாண்டிதியத்தைக் கண்டு ஆசார்யன் விசேஷ கடாக்ஷம் செய்தருளும்படி எழுந்தருளியிருந்து வடிக்கட்டின ஆசாரத்தை ஆபத்திலும் விடாமல் பல ஸதஸ்களிலே க்யாதி பெற்று புராணம், திவ்யப்ரபந்தமெல்லாம் இசையுடன் எல்லோருக்கும் ரஞ்ஜகமாக அருளிச் செய்வதுடன் ஸ்ரீதேசிக கிரந்தங்கள் எல்லாம் முகஸ்தமாக்கி தம் குல தெய்வமான திருவேங்கடமுடையானின் தியானத்திலே ஆழ்ந்திருந்து திருக்குடந்தை வலையப்பேட்டை பரமஹம்ஸ பரிவ்ராஜக நாவல்பாக்கம் ஸ்வாமி ஸன்னிதியில் ஸன்யாஸாச்ரம ஸ்வீகாரம் செய்துகொண்டு எங்கும் ஸஞ்சரித்து சிஷ்யர்களுக்குள் தலைமை வகிக்கும் ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமிக்கு விசேஷானுக்ரஹம் செய்தருளி வார்த்தகத்தில் ராக்ஷஸ வருஷம் கார்த்திகை மாதம் திருக்கார்த்திகையில் திருநாட்டுக்கெழுந்தருளினபடி. ஸ்ரீ ஸ்வாமியின் பூர்வாச்ரமத்திருநாமம் கோபாலாசார்யர் என்பது.

ஸ்ரீ :

ஸ்ரீமத் பரம ஹம்ஸேத்யாதிகருடபுரம் ஸ்வாமி என்னும்

ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்

மஹான்களுக்குச் சிறந்தவுதாஹரணமாக விளங்கிய இம்மஹாசார்யார் பூர்வாச்ரமத்திலும் மோக்ஷாச்ரமத்திலும் வாசியின்றி பரம வைராக்யநிதியாய் உலகம் போற்றுமுத்தமராய் விளங்கியவர்.

ஸ்ரீமதுராந்தகத்திற்கு ஸமீபத்திலுள்ள கருடபுரம் என்கிற அக்ரஹாரத்திலே திருமலை ஈச்சம்பாடி ஈசாண்டான் திருவம்சத்திலே அவதரித்து பால்யம் முதல் பரமஸாத்விகராய் யதாகாலம் வைதீக ஸம்ஸ்காரங்களைப்பெற்று திருப்பதி மஹாமஹோபாத்யாய ஸ்ரீராமாநுஜதர் சநவிஜயத்வஜ-கபிஸ்தலம் ஸ்வாமிடம் நவீநந்யாய சாஸ்த்ரத்தையதிகரித்து. சின்னஸ்வாமி என்று ஸுப்ரஸித்மான திருவஹிந்திரபுரம் ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகன் பக்கலிலே கிரந்த சதுஷ்டய காலக்ஷேபம் பரஸமர்பணம் ஆகியவற்றை பூர்த்தி செய்து ஸ்ரீமதுராந்தகம் முதலியவற்றில் ஸாமாந்ய விசேஷ சாஸ்திரங்களை ப்ரவசநம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தவர்.

பிறகு யதாசாஸ்த்ரம் ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்து திருவஹீந்திரபுரம் ஸ்ரீரங்கம் ஸ்ரீகாஞ்சீ முதலிய திவ்ய தேசங்களில் ப்ரவசநம் செய்து கொண்டு மங்களாசாஸநபரராய் வைராக்ய நிதியாய் எழுந்தருளியிருந்தபடி.

பாகவதர் பக்கல் குணக்ரஹணம் தவிர்த்து மனதாலும் தோஷத்தை நினைப்பவரன்று ஆத்மகுணம் ம்ருதுபாஷணம். ப்ரவசநவை லக்ஷண்யம் ஆழ்ந்த சாஸ்த்ரஜ்ஞாநம் முதலிய குணங்கள் ஸ்வாமியினுல் தரம்பெற்றனவென்னலாம்.

குலம் சீலம் ஜ்ஞானம் வைராக்யம் அநுஷ்ட்டாநம் எல்லாம் குடிகொண்டிருந்த மஹா தேசிகன் நம்ஸ்வாமி.

அம்மஹாசார்யன் பக்கலிலே உபயவேதாந்த காலக்ஷேபம் செய்து பரஸமர்ப்பணம் செய்து தந்யர்களான மஹான்கள் பலருண்டு.

ஸ்வாமி அடியார்களில் அடியேனுமொருவனுக அந்வயம் பெற்று தந்யனுயிருப்பன்.

தி. ஈ. வீரராகவாசார்யர்
ஸ்ரீமதுராந்தகம்

ஸ்ரீமத் பரமஹம் ஸேத்யாதி

ரங்கராமாநுஜ மஹாதேசிகன்

(கோழியாலம் ஸ்வாமி)

ஸ்ரீமதுராந்தகத்திற்கு அருகில் கோழியாலம் என்ற அக்ரஹாரத்தில் விஷ ுவுஸ பங்குனி மீ அனுஷ நக்ஷத்ரத்தில் அவதாரம். பூர்வாச்ரமத்தில் '' ராகவாசாரியார் '' என்று திருநாமம். வங்கீபுரத்து ஆச்சி, வங்கீபுரத்து நம்பி வம்சம். திருத்தகப்பனர் திருநாமம். ஸ்ரீவெங்கடவரதாசாரியார். உரிய காலத்தில் தகப்பனரிடம் காயத்ரீக்ரஹணமும், பஞ்ச ஸம்ஸ்காரமும். ஸ்ரீகாஞ்சியில் இளங்காடு ரங்காசாரியரிடம் தர்க்கமும், பெருங்கட்டூர். கண்டாவதாராசாரியரிடம் வியாகரணமும் க்ரஹித்தருளியாயிற்று. லோகப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்த திருப்பதி ஸ்வாமி என்கிற ஸ்ரீவேதாந்தராமானுஜ மஹாதேசிகனிடம் உபயவேதாந்தமும் பூர்ணமாய் க்ரஹித்தாயிற்று. திருவேங்கடமுடையான் திருவடி வாரத்தில் அந்தஸ்வாமியால் பரன்யாஸம் செய்தருளப்பெற்று பூர்வாச்ரமத்திலேயே வேதாந்தப்ரவசனம் செய்துகொண்டு 37வது திருநக்ஷத்ரத்திலேயே ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீமத்

பரமஹம் ஸேதியாதி பௌண்டரீகபுரம் ஸ்வாமி ஸன்னதியில்ஸன்னியாஸாச்ரமம் ஸ்வீகரிதது 45 சாதுர்மாஸ்யங்கள் எழுந்தருளியிருந்தபடி. வேதாந்த சாஸ்த்ரத்தில் உயர்ந்த கிரந்தங்கள் ஐந்தும், ஆசாரசிக்ஷைக்காகக் க்ரந்தங்களும், ஆங்காங்கு யாத்ரையின் போது மங்களாசாஸன சுலோகங்களும் பலவும் ஸ்வாமி அருளிச்செய்தபடி. ஸ்ரீஸ்வாமி திருவடியில் ஆச்ரயித்த திக்கஜங்களான வித்வரன்கள் பலர். ''பரபகு நிராக்ருதி:'' ''பேதஸாம்ராஜ்யம்'' ''உபயுக்த ஸங்கரஹம்:'' ''உக்தி நிஷ்டாபரித்ராணம்:'' ''ஆநந்த மயாதிகரணபார்த்த பங்கம் ''பாடசோதனம்:'' முதலியன ஸ்ரீ ஸ்வாமியின் ப்ரபலமான கிரந்தங்கள் அச்சாகியுள்ளன பையம்பாடி சேட்டலூர். ஸ்ரீவத்ஸாங்காசாரியர், கூத்தப்பாக்கம். வீரராகவாசாரியர், கூத்தப்பாக்கம் நீலமேகாசாரியர் கோ. சடகோபாசாரியர் முதலியவர்களும் அடியேனும் பூர்வாச்ரமத்திலேயே இந்த ஸ்வாமியினிடம் ஆச்ரயித்தவர்கள். ஸ்ரீமதுபயவே. அபினவ பட்டபாண ராயம்பேட்டை கிருஷ்ணமாசாரிய ஸ்வாமியும் சில கிரந்தங்களை இந்த ஸ்வாமியினிடம் அதிகரித்துள்ளார். ஸ்ரீ உ. வே. கூத்தாண்டகுப்பம் ரங்கராமானுஜ சக்ரவர்த்தி, ஸ்ரீ. உ. வே. கோழியாலம் ரங்கநாதாசாரிய ஸ்வாமி முதலானோரும் இவ்விடத்தில் ஸகலான்வயங்களும் பெற்று விளங்கி வருபவர்கள். இந்த ஸ்வாமியின் ஆத்மகுணங்களும், விரக்தியும் சிஷ்யசிக்ஷண பரிபாடியும் கிரந்த காலக்ஷேபஸமயங்களில் சோதன சக்தியும், வ்யாக்யான ப்ரகாரங்களும் நேரில் அனுபவித்தவர்களுக்கே விளங்கும் ஒரு ஸமயம் ஸ்ரீமதுபயவே. கபிஸ்தலம் தேசிகாசாரிய ஸ்வாமி தாமருளிச் செய்து பாதி அச்சிட்டு வருகிறதான வ்யாஸ ஸித்தாந்த மார்த்தாண்டத்தை ப்ரஸங்காத் ஸ்ரீ ஸ்வாமியிடம் விண்ணப்பித்து இதிலுள்ள சைலியை கடாக்ஷித்து திருவுள்ளத்தில் பட்டதை ஸாதித்தருளவேண்டும் என்று விண்ணப்பிக்க—ஸ்ரீ ஸ்வாமியும் அதில் சில பரிஷ்காரங்களும் அருளிச் செய்ய, அதைக் கண்ட அந்த ஸ்வாமி அச்சாகவேண்டிய மீதி புஸ்தகத்தின் மாத்ருகையையும் ஸ்வாமி ஸன்னதியில் ஸமர்பித்து பரிஷ்கரித்து, அச்சிட்டவற்றிலும் பரிசிஷ்டமாக சில பரிஷ்காரங்களை ஸஹ்ருதயராய் திருவுள்ளம் பற்றியாயிற்று.

அண்ணாமலை விச்வ வித்யாலயத்தில் முதல் முதலாக அச்சிட்ட 'நியாயகுலிசத்தை' ஸ்ரீ ஸ்வாமி சோதித்து கொடுத்ததிலிருந்தும், 'ஸித்தித்ரயத்தை அடியேன் ஒரு சிறு உரையுடன் அச்சிட்டபோது சோதித்ததிலுமிருந்து ஸ்ரீ ஸ்வாமியின் கிரந்த சோதன சக்தியை இவ்வளவு என்று அளவிட முடியாது. அடியேன் நேரில் அனுபவித்தேன், உடையவர், தேசிகன் நாளைய சூழ்நிலையிலேயே ஸ்ரீ ஸ்வாமி எழுந்தருளியிருக்கும் படியாயிருந்தது. ஒரு ஸமயம் ஏதோ ஒரு ஸமாசாரத்தை போனில் தெரிவித்து விட்டு வந்தோம். போன் என்றால் என்ன? என்று கேட்க அதை விண்ணப்பித்தோம். இது என்ன ஆச்சரியம் இங்கு பேசியது இப்படியே அங்கு கேட்குமா? என்று சிறு குழந்தையைப் போல் அருளியாயிற்று. ஸ்ரீமத் ஸ்வாமியின் விரக்தியைப் பற்றி சொல்லவே தேவையில்லை ''இது என்ன கோழியாலம் ஸ்வாமி ஸன்னிதியா என்ன? என்று விரக்திக்கு இன்றளவும் ஒரு பழமொழி போல் வழங்கி வருவதே இதற்கு சான்று.

உததமூர் தி. வீரராகவாச்சாரியர் ஸ்வாமி

ஸ்ரீமதித்யாதி...தண்ட்ரி (பட்டப்பா)

ஸ்ரீநிவாஸதாதாசார்ய மஹாதேசிகன்...

நிறையொன்றுமில்லாத அடியேனுக்கு இந்த மஹநீயச்ரேஷ்டரான ஸ்வாமியை மாதாமஹனுகை வடைந்த பாக்யத்தினல் இவர் ப்ரபாவத்தைப் பற்றி யதாசக்தி விஞா பித்துக்கொள்ள ப்ராப்தமாகிறது "நகரேஷு காஞ்சீ" என்று கொண்டாடப்படும் புண்ய பூமியில் "ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்வலனை பேரருளாளனின் திருவடிவாரத்தில் தோன்றி அவனுடைய கைங்கர்யத்தையே நித்யஸ்ரீ யாகக் கொண்ட பக்த கோடிகளின் திவ்ய சரிதங்களும் குன்றிலிட்ட விளக்காக ப்ரகாசிக்கின்றன. ஸ்வாமி தேசிகனின் பரம பாவனமான திவ்ய சரித்திரத்தை ஸ்மரிக்கும் இந்த ஏழாம் நூற்ருண்டு பூர்த்தி நன்னுளில் அந்த ஸ்வாமி தேசிகனின் பிறப்பட்ட ஸஹ்ருதய மணிகளின் திவ்ய ப்ரபாவங்களும் ஜாஜ் வல்யமாகப் ப்ரகாசப்படுத்த வேண்டியது நம் முக்ய கர்த்தவ்யமேயாகும்.

அந்த ரீதியில் ஸ்ரீமான் பட்டப்பா ஸ்வாமி யின் பெருமைக்கடலின் திவிலைகளைத் தெரிந்தவரையில் எழுதலாகிறது. ஸ்வாமியை நேரில் ஸேவித்து அவருடைய விசேஷ கடாக்ஷத்திற்குப் பாத்திரமான பல மஹான்கள் அத்யாபி எழுந்தருளியிருப்ப தால் கேள்வி ஞானத்தாலேயே அடியேன் உதாஹரிக்கும் விஷயத்தில் குறைகளிருப் பின் க்ஷமிக்க ப்ரார்த்திக்கிறேன். வரதன் ஸன்னிதியில் வேதாத்யயன சீலராய் தர்ம கர்த்ரு பதவியை வகித்துவந்த ஸ்ரீமதித்யாதி ......தண்ட்ரி வேங்கட வரததாதாசார்ய ஸ்வாமிக்கு நான்கு புத்ரர்களில் ஜ்யேஷ்ட ராக சுமார் கி. பி. 1860ல் ஸ்ரீமான் பட்டப்பா ஸ்வாமி பெருமாள் கோவிலில் அவதரித்தார். வைதிக முறைப்படி உபநயந பஞ்சஸம்ஸ்கா ராதிகள் யதாகாலம் நடந்து வேதாத்யயன மும் அதிசீக்கிரத்திலேயே நிறைவேறியது. ஸ்வாமி தேசிகனுக்கொப்பாகவே ஸ்ரீ பட்டப்பா ஸ்வாமியும் ஏக ஸந்தக்ராஹியாய் வேதபாரங்கதர். வேதபாராயண கோஷ் டிக்கு ஸ்வாமி ஆஜானுபாஹுவாய் எழுந் தருளும்போது மற்ற ஸ்வாமிகள் அதிகுதூ ஹலத்துடன் ஸ்வாமியின் திருக்கரங்களை அஹமஹமிகயாகப்பற்றும் காட்சியை நேரில் பார்த்தவர்கள் இது 70 வருஷத்திற்குமுன் செய்தியாயினும் நேற்று நடந்ததாக எண்ணு வதாகத் தெரிவித்துள்ளார்கள்.

அபரதேசிகன் என்று குலாவப்படும் "வித் யாசுத்த விசுத்த ஸஜ்ஜனசிரஸ் ஸிம்ஹாஸ னாத்யாஸித: பாயாத் பண்டிதமண்டலீ பரி ப்ருட: ஸ்ரீக்ருஷ்ண தாதார்யராட்" என்று தன்னுல் கொண்டாடப்பட்டவருமான ஸ்ரீமத் திருப்புட்குழியப்பா ஸ்வாமியின் திருவடித் தாமரைகளில் ஆச்ரயித்து "ஸ்ரீசைலான்வய ஸிந்து மௌக்திகமணி ஸ்ரீக்ருஷ்ண தாதா க்ரணீ: ஸௌரீசாநபதாப்ஜதல்லஜ ரஜ: பாதேந பூதாக்ருதி:" என்று தாமேயுதா ஹரிக்கும் கணக்கில் ஸகல சாஸ்த்ரார்த்தங் களையும் கசடற கற்றறிந்தார். திருப்புட்குழி ஸ்வாமி கி. பி. 1889 வருஷத்தில் பரமபத மெய்தின பின் அந்த ஸ்வாமியின் ப்ரதம சிஷ் யரான ஸ்ரீமான் பட்டப்பா ஸ்வாமி "தீப இவ ப்ரதீபாத்" என்கிறபடி தன் ஆசார்யனுக்கு அபிமதமான கைங்கர்யங்களை முன்நின்று நடத்தலானுர். பட்டப்பா ஸ்வாமி தேவாதி ராஜனின் கைங்கர்யஸ்ரீயையே ப்ரதானமாக பரிக்ரஹித்து "யத்ஸேவாரஸ லாபலோப விவசா: மோக்ஷம் த்ருணீ குர்வதே |" என்று தானே ஸாதித்த ப்ரகாரம் மிகவும் ஈடுபட்டு தர்மகர்த்ரு வேதபாராயண மந்த்ர புஷ்பாதி கைங்கர்யங்களை மிகவுகந்து செய் தார்.

நான்கு சாஸ்திரங்களையும் ஸச்சிஷ்யர் களுக்கு உபதேசித்து உய்வித்தார். வித்வத்

வரிஷ்டர்களான ஸ்ரீமான் வில்லியம்பாக்கம் ஸ்வாமி, அய்யா க்ருஷ்ண தாதாசார்ய ஸ்வாமி, இளங்காடு ரங்காசார்ய ஸ்வாமி முதலான மஹான்கள் பட்டப்பா ஸ்வாமி யிடத்தில் ஸந்தேஹாதிகளை நிவர்த்தித்துக் கொள்வார்கள் எனக் கேட்டிருக்கிறேன். பட்டப்பா ஸ்வாமியின் வைதிக லௌகிக மேதா விலாஸத்தை நேரில் கண்டனுபவித்த அய்யா ரகுநாத் தாதாசார்ய ஸ்வாமி கண்களில் ஜலம் ததும்ப உதாஹரிக்கும் ப்ரகரணங்கள் பல. மஹாக்ஞாதாவான கோஷ்டீபுரம் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமியும் அவர் திருத்தம்பியாரும், பட்டப்பா ஸ்வாமியின் சாஸ்த்ர காலக்ஷேப கோஷ்டியில் ஈடுபட்டவர்கள். ஸ்வாமியின் ரசஜ்ஞஸாமர்த்யத்தை அவர் அனுக்ரஹித்த ஹ்ருத்யார்த்ததீபிகா என்றும் ஸ்வாமி தேசிகனின் ஸுபாஷிதநீவிவ்யாக்யானம் நிபுணதரம் நிரூபிக்கும். மிகவும் கஷ்டப்பட்டே ஸாமான்யார்த்தங்களை க்ரஹிக்கக்கூடியதான ஸ்வாமி தேசிகனின் இந்த சாடுச்லோக காவ்யத்தில் ஒவ்வொரு ச்லோகத்திற்கும் பல அபூர்வார்த்த விசேஷங்களை பலப்ரமாணோபந்யாஸத்துடன் ஒரு ச்லோகத்திற்கு 20 அர்த்த விசேஷங்கள் காட்டப்பட்டுள்ளதை கடாக்ஷிக்கும் பண்டித பரிச்ரமக்ஞ மஹநீயர்கள் ''நாஸிகாக்ரே அங்குலிம் நிக்ஷிபந்தி''. இந்த விபுல வ்யாக்யானம் இன்சுவையே வடிவெடுத்ததாம். இதில் ஸ்வாமி செய்யும் அலங்கார விசாரம் ''வித்யாவதாம் முதம் தத்யாத் அத்யா வித்யாமபித்யத'' என்று தானே ஸாதித்த கணக்கில் அமைந்தது.

ஸ்வாமி தேசிகனின் ந்யாய ஸித்தாஞ்ஜனத்திற்கு ரத்னபேடிகா வ்யாக்யானம் பண்ணித்தன் ஆசார்யன் ஸ்ரீமத் திருபுட்குழி ஸ்வாமியின் உள்ளம் களிக்கும் வகையில் அந்த க்ரந்தங்களைப் பட்டப்பா ஸ்வாமி அச்சிட்டார். அதற்கு இவர் ஸாதித்த அதிப்ரளடபூமிகையைக் கண்ணுறும் மஹான்கள் ஸ்வாமி தேசிகனின் காம்பீர்யம் திருபுட்குழி ஸ்வாமியின் மேதாவிலாஸம் ஸம்ஸ்க்ருத பாஷையின் மாதுர்யம் எல்லாம் ஒருங்கே திரண்ட மஹாவ்யாஸமோ இது என்று கொண்டாடி நின்றனர்.

ஞாநாநுஷ்டான நிதியான பட்டப்பா ஸ்வாமி கர்மாநுஷ்டான நிஷ்கர்ஷங்கள் பலவும் நிர்வஹித்துள்ளார். ஆத்யோபாகர்ம என்னும் நூலின் சில பாகங்கள் ஸ்வாமியிலேயே முன்பு அச்சிடப்பட்டன. மேறு கொண்டு பாகங்கள் அச்சிடப்படவிருக்கின்றன. மேலும் ஸ்வாமியால் அருளிச்செய்யப்பட்டவை அனேக க்ரந்தங்கள் உள்ளனவெனினும் விரிவுக்கஞ்சி உதாஹரிக்கவில்லை இவ்வாறு 45 திருநக்ஷத்திரத்திரமே பூர்த்தியாகாத இந்த விநயமே உருவெடுத்த மஹா ஸ்வாமி ''ஸ்ரீசைலவம்ச கலசோததி பூர்ண சந்த்ரராக எழுந்தருளியிருந்து ஸ்ரீ வைஷ்ணவ உலகத்தின் அபாக்யவசத்தால் 1905ம் வருஷத்தில் பரமபதம் எய்தினர். இந்த ஸ்வாமிக்கு அத்விதீயரான திருக் குமாரரும் திருக்குமாரத்தியும் இருந்தனர். ஆத்மகுண பூர்த்தியுடையவரான (தண்டரி வேங்கடவரதாசார்யரென்கிற) திருக்குமாரர் வேதாத்யயனபரராய் தேவாதிராஜன் ஸன்னிதி தர்மகர்த்தாவாக பலவாண்டுகள் பட்டப்பா ஸ்வாமி குமாரர் என்றே வ்யவஹரிக்கப்பட்டு எழுந்தருளியிருந்தார். இதே விதமாகவே பட்டப்பா ஸ்வாமியின் தௌஹித்ரர்களான அடியோங்களும் பட்டப்பா ஸ்வாமி குமாரர் மருமான்கள் என்றே விசேஷித்து வ்யவஹரிக்கப்பட்டு வருகிறோம்.

எம். எஸ். வரதாசார்ய ஸ்வாமி

ஸ்ரீமதித்யாதி

ஸ்ரீ (ஐயா) கிருஷ்ண தாதாசாரிய ஸ்வாமி, (காஞ்சி)

(1873 — 1953)

காஞ்சிமா நகரில் தேவப் பெருமாள் ஸன்னிதி வீதியில் வசித்து வந்த மஹான் இவர். பால்யத்தில் திருப்புட்குழி ஸ்வாமி என்று ப்ரஸித்தரான ஸ்ரீ கிருஷ்ணதாதாசாரிய ஸ்வாமியின் அருள் நோக்குக்கு இலக்காகி பிறகு அவர் சிஷ்யராயும் விலக்ஷன ஆசார அனுஷ்டான சீலராயும் விளங்கிய வில்லியம்பாக்கம் கோபாலதாத தேசிக ஸ்வாமியினிடத்தில் ஸகல சாஸ்திரங்களையும் பயின்ருர். தேவப் பெருமாளையும் தூப்புல் தேசிகனையும் தவிர தேவுமற்றறியேன் என்று அத்யவஸித்திருந்த மஹா புருஷர் ஐயாஸ்வாமி. தூப்புல் தேசிகனுக்கு நினைத்து நினைத்து பல திருவாபரணங்களை செய்து வைத்தது இந்த ஸ்வாமியின் அருந்தொண்டே. பல சிஷ்யர்களுக்கு அத்யாத்ம சாஸ்திரங்களைக் காலக்ஷேபமாக ஸாதித்து வந்த இந்த ஸ்வாமி பகவத் விஷயத்திலும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் அதிமாத்ரம் வியாமோஹிதர். வெகு உத்ஸாஹத்தோடு அவைகளை காலக்ஷேபமாக ஸாதிக்கிற வழக்கம். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸார பங்க்திகள் முழுவதும் ஆதியோடு அந்தம் முகஸ்த்தம். ஸ்ரீ கோசம் பாராமலே அப்பங்க்திகளை அழகாக ஸாதிப்பது வியப்பைத் தரும்படி இருக்கும். பிள்ளை லோகாசாரியருடைய ஸ்ரீ வசன பூஷணம், முமுக்ஷுப்படி முதலிய கிரந்தங்களில் நல்ல பரிசயம். அவர் கிரந்தங்களிலுள்ள எந்த பங்க்தியை திரு உள்ளத்தில் கொண்டு ஸ்வாமி தேசிகன் பங்க்திகள் அவதரித்துள்ளன என்று காட்டுவது வழக்கம்.

ஸ்ரீ ஐயா ஸ்வாமி (ஐயாத்து ஸ்வாமி) பல நூல்களை இயற்றியுள்ளார். பெரும்பாலும் அவை ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த கிரந்தங்களுக்கு வியாக்கியான வடிவில் அமைந்தவை. அடைக்கலப்பத்து வியாக்கியானம் ஸம்ப்ரதாய பரிசுத்தி வ்யாக்யானம் ஆகியவை அச்சாகியுள்ளன. ஸ்ரீவரத ராஜ பஞ்சாசத் ஸ்தோத்திரத்துக்கு விபுலமான வியாக்கியானம் ஸாதித்திருக்கிறபடி, தேவப் பெருமாளிடத்திலும் தேசிகனிடத்திலும் ஸ்வாமிக்குள்ள ஆதரம் பங்க்தி தோறும் வெளியாகும். ஆனால் பரமத பங்கத்துக்கு ஸ்வாமி அருளிச் செய்துள்ள வியாக்கியானம் சாலச் சிறந்த பெருமையுடையது. அதை மஹாமஹோபாத்யாய கொடவாசல் நரஸிம்மாச்சாரியர் ஸ்வாமி வெகுவாக வாசித்துப் பாராட்டியது பலருக்குத் தெரியும்.

ஸ்ரீ ஐயாஸ்வாமியின் அர்ச்சானுபவம் வெகு உயர்ந்தது. பல திவ்ய தேசங்களை ஆசையோடும் ஆதரவோடும் மங்களாசாஸனம் செய்தருளினதுண்டு. நாகை அழகியாரை ஸேவித்து நின்றபோது (என்ன— தேவப்பெருமாளை விட்டு விட வேண்டி வருமோ என்ற அளவில் அவ்வாபிருப்யத்தில் மோஹித்துப் போனதாக ஸ்வாமியே ஸாதித்துக் கேட்டிருக்கிறேன். அவ்வளவு அர்ச்சா ராஸிக்யம்.

அத்யாத்ம க்ரந்த நிர்மாணம் அநேகேஷாம் ச போதனம், அர்ச்சாவதார ஸேவா ச என்று சொல்லப்பட்ட மூன்று வாழ்க்கைகளின் முக்கியப் பிரயோசனங்கள் மூன்றும் கை வந்த ஆசார்ய சிரேஷ்டர் ஐயா ஸ்வாமி.

D. ராமஸ்வாமி அய்யங்கார்.

தேசிக தர்சநம் காட்டிய

ஸ்ரீமதித்யாதி...

ஸௌமிய நாராயணுசாரியார் ஸ்வாமி

(திருக்கோட்டியூர் ஸ்வாமி)

திருக்கோட்டியூர் ஸ்வாமி என்றும் கோஷ்டீபுரம் ஸ்வாமி என்றும் பிரஸித்தராக எழுந்தருளியிருந்த ஆசார்ய சிரேஷ்டரான ஸ்ரீஸௌம்யநாராயணுசார்ய ஸ்வாமியை நம் நாட்டில் அறியாதவர்கள் இல்லை என்றே சொல்லலாம். அவருடைய ஞானம் அநுஷ்டானம் ப்ரவசநம், எல்லாவற்றுக்கும் மேலாக ஆத்ம குணங்கள் இவற்றைக் கண்டு எல்லோருக்கும் அவரிடம் பக்தியும், ப்ரீதியும் இருந்தது. அவரை 'ஸௌம்ய மூர்த்தி' என்றும் சொல்வார்கள்.

''என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணுவே'' என்று அருளிச்செய்த திருப்பாணுழ்வாருடைய திருநக்ஷத்ரமான கார்த்திகை மாதத்து ரோஹிணியில் ஸ்வாமி திருக்கோட்டியூரில் அவதரித்தார். பால்யத்திலேயே தர்க்கம், வியாகரணம் முதலான ஸாமான்ய சாஸ்த்ரங்களைத் தகுந்த வித்வான்களிடம் வாசித்து, பிதாவிடம் இதிஹாஸ புராணங்களைக் கேட்டுணர்ந்து, பிதாமஹரான ஸ்ரீஸுந்தரார்ய தேசிகனிடம் அத்யாத்ம க்கிரந்தங்களை அப்யஸித்தார். பதினறு வயதிலேயே ஸ்வாமியின் மேதையைக் கண்டு, ஆசார்யரான பிதாமஹர், 'இவர் தேசிகதர்சனமுகந்த ஆசிரியர், இவரால் ஜகத்துக்கு மிகுந்த உபகாரம் ஏற்படும் என்று நிச்சயித்து, தாமும் கூட இருந்து தம் சிஷ்யர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதிக்கும்படி செய்து, பிரவசநத்தில் பூர்ண யோக்யதை உண்டாகும்படி அநுக்ரஹித்தார். அன்று முதல் ஸ்வாமி திருநாட்டுக்கு எழுந்தருளும் வரையில் அநத்யயந தினங்கள் தவிர மற்ற நாட்களில் காலக்ஷேபம் ஸாதிக்காமலிருந்த நாளே இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பிரதி தினமும் காலை வேளைகளில் ஸ்ரீபாஷ்யம், கீதா பாஷ்யம், பகவத் விஷயம்—திருவாருயிரப்படி, ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரம் ஆகிய கிரந்த சதுஷ்டயங்களில் ஏதாவதொன்றின் பிரவசநமும், பிற்பகலில் ஒரு புராணத்தின் பாராயணமும், ஸாயங்காலங்களில் சுருத ப்ரகாசிகை, ஈடு—36000 படி, சில்லரை ரஹஸ்யங்கள் முதலான கிரந்தங்களில் ஒன்றின் காலக்ஷேபமும், பிறகு ஸ்ரீரங்க நாதன் முதலான எம்பெருமான்களின் மங்களாசாஸனமும், ராத்திரி ஸ்ரீமத் ராமாயணம் பாகவதம் முதலியவற்றின் பிரவசனமும் நடந்து கொண்டே இருக்கும். இவ்வாறு தம் நித்ய நைமித்திக கர்மங்களின் அநுஷ்டான காலம் போக மற்ற காலம் எல்லாவற்றையும் பிரவசநத்திலேயே கழித்து வந்தார். ஸ்ரீ தேசிகனுடைய ஸ்தோத்ரங்களிலும் ஸ்வாமிக்கு ஸ்ரீபாஷ்யத்தில் இருந்தது போலவே கௌரவமும் ஆதரவும் இருந்தது. வேதாந்தம் என்கிற ஸம்ஸ்க்ருத உபநிஷத், திவ்யப்பிரபந்தம் என்கிற த்ரமிடோபநிஷத், உபய வேதாந்தமும் நம் ஸம்பிரதாயத்துக்கு இரண்டு கண்கள் போன்றவை. அவைகளுக்குள் ஏற்றத்தாழ்வைக் கல்பிப்பது பிரமாண விருத்தம் என்று அடிக்கடி ஸாதிப்பது வழக்கம். உபய வேதாந்தங்களிலும் பரிபூர்ண ஜ்ஞானம் இருந்ததற்கு மேல் ஸ்ரீதேசிகனுடைய ரஹஸ்ய கிரந்தங்களில் திருக்கோட்டியூர் ஸ்வாமிக்கு அஸாதாரண்மான ஆழ்ந்த பரிசயம் இருந்தது. தம் நித்ய வாழ்க்கையிலோ அல்லது உபந்யாஸங்களிலோ அல்லது காலக்ஷேபங்களிலோ பிறர் மனம் புண்படும்படி வார்த்தையே வராது. வாக்யார்த்த ஸமயங்களில் கூட பிரதி பக்ஷிகளும் ஸந்தோஷப்படும்படியே பேசுவது வழக்கம், சாஸ்த்ர விருத்தமான அம்சமாயிருந்தால், பிறருடைய அப்ரீதிக்குக் காரணமாக இருக்குமோ என்று யோசிக்காது சாஸ்த்ரீயமான வழியை எடுத்துக் காட்டத் தயங்கமாட்டார். அது போலவே சாஸ்த்ர மூலமல்லாத ஸங்கேதங்கள் ஸம்ப்ரதாயத்தில் புகுந்திருந்தால்,

அவற்றை விலக்கி சாஸ்த்ரம் சொன்ன முறையில் தாம் அனுஷ்டிக்கப் பயப்படமாட்டார்.

இவ்வளவு ஜ்ஞானமும் அனுஷ்டானமும் ஆசாரமும் இருந்தாலும் குழந்தை போல் ஸௌலப்யமும் கல்மஷமற்ற ஸ்வபாவமுமுடையவர் கோஷ்டீபுரம் ஸ்வாமி. பெரியவர் சிறியவர் எல்லோருடனும் கௌரவத்தோடும் அன்புடனும் பழகுவர். "ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்துப் பிரவர்த்திப்பித்தல்" என்று தேசிகன் அருளிச் செய்தபடி ஸ்ரீ பாஷ்யாதி வேதாந்தக் கிரந்தங்களைப் பிரவசனம் செய்வதில் எவ்வளவு ருசியும் சிரத்தையும் இருக்குமோ அதே போலப் பிரீதியுடன் ரகுவம்சம் வாசிக்க வந்த சிறுவனுக்கும் பாடம் சொல்லிக் கொடுப்பர். இந்தப் பிரவசநத்தால் பரக்கும் புகழ்வரும் பைம்பொருள் வாய்த்திடும் அறமுளது என்று இயம்பாது அது பகவத் கைங்கர்யம் என்று ஸ்வயம் ப்ரயோஜனமாகவே செய்து வந்தார் என்பது அடியோங்கள் நேரில் அனுபவித்த விஷயம்.

திருக்கோட்டியூர் ஸ்வாமிக்கு சுருதி ஸ்மிருதி, இதிஹாஸ புராணங்கள், ஆழ்வார்களுடைய அருளிச் செயல்கள், பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகள் எல்லாவற்றிலும் பூர்ணமான ஜ்ஞானமும் ஆழ்ந்த அனுபவமும் இருந்தபடியால், உபந்யாஸங்களில் பகவத் குணங்களைச் சொல்ல ஆரம்பித்தால் சுலோகங்களும் பாசுரங்களும் நான் முன்னே நான் முன்னே என்று முந்திக் கொண்டு வந்து இடம் பெற்று கேட்பவர்களையும் ஆநந்தானுபவத்தில் அமிழச் செய்யும்.

ஸ்வாமி ஸ்ரீதேசிகனுடைய ரஹஸ்ய க்ரந்தங்களில் கோஷ்டீபுரம் ஸ்வாமிக்கு இருந்த ஞானம் நிகரற்றது. அவற்றில் சொல்லிய படியே தம் வாழ்க்கையை வகுத்து நடத்தி வந்தார். இப்பவும் கூட ரஹஸ்யத்ரய ஸாரத்தை ஸேவித்தால்,—முக்கியமாக ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம் முதலிய சில அதிகாரங்களை ஸேவித்தால்—அங்கே சொல்லியிருக்கும் குணங்களெல்லாம் ஸ்வாமியிடம் நிகழ்ந்தன என்பதை உணரும் போது, கோஷ்டீபுரம் ஸ்வாமி அந்தக் கிரந்தத்தைப் பின் பிற்றி நடந்தாரா அல்லது அவர் அநுஷ்டானத்தை முன்கூட்டியே அறிந்து ஸ்ரீதேசிகன் தம் கிரந்தத்தில் அருளிச் செய்தாரா என்று நினைக்கும்படி யிருக்கும். ஸ்வாமி ஒரு ஆதர்ச மஹாபுருஷர், பாகவதோத்தமர் என்று தேசிகதர்சனம், திருக்கோட்டியூர் ஸ்வாமியை நமக்குக் காட்டிக் கொடுக்கிறது. அது போலவே நம் அனுபவத்திலும் அநுஷ்டானத்திலும் கொண்டு வந்து நாம் உஜ்ஜீவிப்பதற்கு உயர்ந்த ஸாதனம் தேசிக தர்சனம் என்று கோஷ்டீபுரம் ஸ்வாமி தம் உபதேசத்தாலும் அநுஷ்டானத்தாலும் தேசிகதர்சனத்தை நமக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறார். இது அவர் நமக்கும் தர்சனத்துக்கும் செய்த பேருபகாரம்.

இனி ஸ்ரீ தேசிகனுடைய ரஹஸ்ய க்ரந்தங்களை ஸேவிக்கும் போது அவை ஸௌம்ய மூர்த்தியான திருக்கோட்டியூர் ஸ்வாமியை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றன என்பதற்கு உதாரணமாக இரண்டொரு ஸ்ரீஸூக்திகளைக் கொடுப்பதுடன் இதை முடித்துக் கொள்ளுகிறேன்.

"பாகவதரில் ஸம்யக்ஜ்ஞாநாதிகர் ஸ்த்கார யோக்யரில் ப்ரதாநர் (59). நிர்வேதாதிகர் ஸல்லாப யோக்யரில் ப்ரதாநர் (60). வைராக்யாதிகர் ஸஹவாஸ யோக்யரில் ப்ரதாநர் (61). அபராத பீருக்களாய் அவதாரங்கள் போலவே ஸ்வமாஹாத்ம்யத்தை மறைத்து வர்த்திக்கு மவர்கள் பீதியோக்யரில் ப்ரதாநர்"(63).

—ப்ரதாந சதகம் (59-63).

ஸந்தோஷார்த்தம்......ப்ரபந்ந :

(ப்ரபத்தியை அனுஷ்டித்தவன் சரீர வாழ்க்கை மோக்ஷ வாழ்க்கை இரண்டிலும் தனக்குப் பாரம் நீங்கிவிட்டது என்பதை உணர்ந்தவனாய், இச்சரீரம் அழியும் வரையில் குற்றமற்ற இனிய வாழ்க்கையைக் கைக்கொண்டு, தன் மகிழ்ச்சிக்காக வேதாந்த க்ரந்தங்களைப் பெரியோர்களுடன் அடிக்கடி ஆராய்கிறான்; செவிக்கினிய செஞ்சொற்களான ஆழ்வார்களின் அருளிச் செயல்களை எப்போதும் கேட்பவர்கள் கிடைத்தால் சொல்லுகிறான், சொல்கிறவர்கள் கிடைத்தால் தான் கேட்கிறான்.)

ஆஸ்திக்யவான்......சாச்வதீம் ந :

(ஆஸ்திக்ய முள்ளவனும், கூர்மையான புத்தியுள்ளவனும், அஸூயை யற்றவனும், நல்ல ஸம்ப்ரதாயத்தால் தூய மனமுடையவனும், நல்லதையே விரும்புகிறவனும், மூடக்கட்டுப் பாட்டுக்கு அஞ்சாதவனும், அற்ப பலன்களில் பற்றற்றவனுமுள்ள ஒருவன் நம்முடைய நித்யமான நல்வழியைப் பின்பற்றப் போகிறான்.

ஏ. ஸ்ரீநிவாஸராகவாச்சாரியார்ஸ்வாமி M.A.

ஸ்ரீமதித்யாதி சதுர்வேத. சதக்ரது.

நரஸிம்ஹ தாதயார்ய மஹாதேசிகன்

(நாவல்பாக்கம் ஸ்வாமி)

இம்மஹான், ஞானுனுஷ்டானங்களை குல தனமாக உடைய 'சதுர்வேத சதக்ரது' குமார தாதயார்ய வம்சத்தில் ஸ்ரீ வெங்கட ரங்காசார்ய ஸ்வாமிக்கு குமாரராக அவதரித் தவர். இவருக்கு, 'நாவல்பாக்கம் ஸ்வாமி' என்று ப்ரசித்தி. 'வித்வான் நரசிம்மாசார்ய ஸ்வாமி' என்று வ்யவஹாரம். பரம்பரையாக வித்வான்கள் இவர் முன்னோர்கள்.

வித்யாப்யாஸம் : தம் மாதுலர் புரிசை, நடாதூர் ஸ்ரீ ரங்காசார் ஸ்வாமியினிடம் இவ ருக்கு வேதாப்யாஸம். மைசூர் ஸம்ஸ்கிருத கலாசாலையின் அத்யக்ஷர் கஸ்தூரி ரங்காசார் ஸ்வாமியிடம் தர்க்க சாஸ்த்ரப் பயிற்சி. திருவிசநல்லூர் ராமசுப்பா சாஸ்த்ரிகளிடம் மீமாம்ஸாக்ரஹணம், ஸ்ரீ பரமஹம்ஸேத் யாதி நாவல்பாக்கம் வேதாந்த ராமானுஜ மஹா தேசிகனிடம் வேதாந்த சாஸ்த்ரோப தேசம்.

உத்தமத்தில் தேர்ச்சி : தர்க்க சாஸ்த்ரம் பயின்றது ஏழு வருஷம். ஒவ்வொரு பரீக்ஷை யிலும் தவருமல் உத்தமத்திலேயே தேர்ச்சி. இதை ஸஹிக்காத வித்வான் ஒருவர் வேண்டுமென்றே ஓர் பரீக்ஷையில் நம்பரைக் குறைத்துப் போட்டு மத்யமத்தில் தேறும்படி செய்தார். தர்க்காசார்யரான கஸ்தூரி ரங்கா சார்யருக்கு இது தெரிந்தது. இதில் ஏதோ சூது நடந்திருக்க வேண்டுமென்று எண்ணி ஞர். அரண்மனைக்கு எழுதினர். மறுபடியும் இம்மஹானுக்கு மட்டும் பரீக்ஷை வைக்கச் செய்தார். த்ரிமதஸ்தர்களைக் கொண்டு தனித்தனியாக நம்பர் (மார்க்கு) போடவும் வைத்தார். எல்லாவற்றிலும் உத்தமோத்த மத்திலேயே நம்பர் வந்திருந்தது. இதைக் கண்ட எல்லோரும் வியந்தனர். கடைசி பரீக்ஷைக்குப் பிறகு 'தர்க்க வித்வா'னென்று பிருதமளிக்கப்பட்டது. ஜோடு சால்வை முதலானது ராஜ ஸம்மானமாக வழங்கப் பட்டது. இது போலவே பல சமஸ்தானங் களில் பரீக்ஷை கொடுத்துத் தேரினர்.

வாதத்தில் வெற்றி : பல ஸதஸ்ஸுகளில் வாதம் புரிந்தார். மன்னார்குடி ஸதஸ்ஸில் உத்தரதேசத்து தர்க்க வித்வானொருவர் சபை முடியுந்தருணத்தில் வந்து, 'என்னோடு வாதம் புரியுந் திறமையுள்ளவர் வாதிக்கலா' மென்று வம்புக்கிழுத்தார். அதற்குச் சற்று முன்புதான் இச்சுவாமி ஸம்பாவனை பெற்று தம்மூருக்குத் திரும்பும் உத்தேசத்தில் ஹரித்ரா நதி சமீபத்தில் சென்று கொண் டிருந்தார். ஸதஸ்ஸிலுள்ள பலப்ராசீன ப்ரசித்த பண்டிதர்களும் ஒரே அபிப்ராயமாக 'நாவல்பாக்கத்துப் பிள்ளையாண்டான்தான் இவனை அடக்க முடியும்' என்று நிச்சயித்து, இவரை அழைத்துவரச் செய்தனர். வாதம் செய்யவும் தூண்டினர். அதற்கிணங்கி வாதம் புரிந்தார் ஸ்வாமி. வாதி சொன்ன திற்குமேல் மூன்று ஆக்ஷேபங்களை நிறுத்தி ஞர். வெற்றியையுங் கண்டார். இது போலவே கொச்சி ராஜாவை கேள்வியி லேயே மடக்கி வெற்றி வாகையும் சூடினர் இச் சுவாமி.

அனுஷ்டானம் : ஸந்த்யோபாஸனத்தை காலத்தில் செய்வதில் மிகவும் பிடிவாத முள்ளவர். சில சமயங்களில் 'ஸந்த்யா காலத்தில் தூங்கிவிடப்போகிறோமே' என்று அஞ்சி, கண்விழித்த சமயம் பின்மாலை 3 மணியாகயிருந்தாலும் அப்பொழுதே குளத் திற்கு நீராட்டத்துக்காக எழுந்தருளுவது முண்டு. அனுஷ்டானத்திற்காக அங்கு சந்த்யா காலத்தை ப்ரதீக்ஷித்துக்கொண் டிருக்க நேரும்.

வைராக்யம் : உபகரிப்பாரிருந்தும் தேவைக்குமேல் ப்ரதிக்ரஹிப்பது இல்லை.

சாஸ்த்ரீய ரீதியில் விருத்தியை நடத்தும் விரதங் கொண்டார் ஸ்வாமி. சக்தி உள்ள வளவும் உஞ்ச விருத்தியை விரதமாகக் கொண்டிருந்தார். அசக்தி வந்த பிறகும் தமக்கு உகந்த இடத்தில்தான் ப்ரதிக்ரஹித்து வந்தார். மற்ற இடத்தில் ஸ்வர்ணத்தையும் த்ருணீகரிப்பவர். கிருகஸ்தரா யி ரு ந் து ம் துறவி போன்று ப்ரகாசித்தவர்.

ஆடம்பரமற்ற வாழ்க்கை : படாடோ பத்தை அடியோடு வெறுத்தவர். இதற்குச் சான்று — பெரிய விருத்தத்தில் அமைந்த தனியனை வெறுத்து சின்ன விருத்தத்தில் (அனுஷ்டுப்பில்) அமைந்த தனியனை அங்கீ கரித்ததுவொன்றே அமையும். பரஸமர்ப்ப ஞனுஷ்டானத்திற்காக ஸந்நிதிக்கு எழுந் தருளுங் காலத்தில்கூட, தமக்கு ஓர் மஹத் வம் தோ ன் று ம் ப டி சிஷ்யபரிஜனங்கள் சூழ்ந்து வருவதை கண்டிப்புடன் நிரா கரிப்பவர்.

அர்ச்சையிலீடுபாடு : பேரருளாளனிட மதிக ஈடுபாடு. 'மற்றொரு தெய்வந்தொழா ளவனையல்லால்' என்ற ரீதியில் இருந்த தென்றால் மிகையாகாது. அதன்பலனாக — தம் கிருஹத்தில் தமக்கு ஆராத்யனாக பேரரு ளாளனையே ஸ்ரீ தேவி, பூதேவிகளுடன் ஏற எழுந்தருளப்பண்ணி அர்ச்சையில் ஆரா தித்து வந்தார்.

பகவத் ஸந்நிதியில் தீவட்டி கைங்கர் யம்: நவராத்திரி முதலான உத்ஸவங்களில் வெளித் திருமுற்றத்தில் திவ்ய தம்பதிகள் பற்றி உலாவும் சமயம், கண்ணீர் மல்க ஆனந்த பரிதராய் தீவட்டி பிடிக்குங் கைங் கர்யத்தையே தாமேற்றுக் கொண்டு போர உகந்துவந்தார் ஸ்வாமி. இதனால் பகவத் கைங்கர்யத்தில் ஏற்றத் தாழ்வு கிடையாது என்பதை அனுஷ்டித்துக் காட்டினபடி.

ஆசார்ய ஸேவையின் ப்ராதான்யம் : நவராத்திரி உத்ஸவமும் தேசிகனுத்ஸவமும் சேர்ந்துவரும் சமயத்தில் பெருமாள் கைங் கர்யத்தைப் புறக்கணித்து இருவேளையிலும் தேசிகன் கைங்கர்யத்தி லீடுபட்டிருப்பார் ஸ்வாமி. தேசிகன் சாற்று மறையன்று பெருமாளும் தேசிகனும் மலையிலிருந்து கீழிறங்கும்போதும், சந்நிதிப்ரதக்ஷிணத்தில் எழுந்தருளும்போதும் பெருமாளைவிட்டு தேசி கனுக்கே பரிஜனமாய் நின்று திருவால வட்டம் சமர்ப்பிப்பது போன்ற கைங்கர்யங் களைச் செய்து உகந்து வந்தார்.

அதிதி பூஜையில் பரிவு: அதிதி கிடைத்து விட்டால் தீர்த்தபானமாவது பண்ணாமல் போக விடுவதில்லை. 'ந கஞ்சன வஸதௌ ப்ரத்யாசக்ஷீத 'அக்னிரி வ ஜ்வலன் அதிதி ரப் யாகச்சதி' என்பது போன்ற பிரமாணங் களைக் காட்டி ஆதித்யத்தை ஸ்வீகரிக்கச் செய்வார் ஸ்வாமி.

அ த் ய ய ன ம் பண்ணினவர்களிடம் விசேஷாபிமானம் : வேத ஸம்பன்னர்களைக் கண்டால் கட்டுக்கடங்கா மகிழ்ச்சி. ஏதேனும் ஸ்வல்பமாவது ஸ்வீகரிக்கச் செய்தாலல்லது ஸ்வரூபந்தரியார். 'யம் யம் க்ரது மதீதே தேந தேநாஸ்யேஷ்டம் பவதி' (யாகத்தை போதிக்கும் வேத பாகத்தை அத்யயனம் பண்ணின மாத்ரத்தாலேயே யாக பலனுண் டாகிறது) என்பவை போன்ற வேத வாக் யங்களை உதாஹரித்து கேட்போரை பரவச மடையச் செய்வது இயல்பாக அமைந்திருந் தது இவரிடம்.

மனம்நோக நினைக்கார்: பாகவதர்களின் மனம் புண்பட நினையார். புத்திக்குப் போக்குவீடாக சம்ப்ரதாய விஷயமாய் தாம் எழுதின சிறு நூலை, தாமே கொண்டுபோய் குளத்தில் தீர்த்தத்தில் சேர்த்துவிட்ட நிகழ்ச் சியே இதற்குச் சான்று.

சிறந்த குணங்கள் : தன் கார்யத்தைத் தானே செய்வது. மனதில் நல்லதென்று, சரியென்று தோன்றியதை தைரியமாயுரைப் பதுபோன்ற சிறந்த குணங்கள் நிரம்பியுள் ளவர் ஸ்வாமி.

ஸஞ்சாரம் : கடலாடி மலையேறி கங்கா ஸ்நானம் பண்ணிவர்.

உபதேசம் : ''காலத்தில் முழுகித்துதி. கர்மங்களைச் செய். பாகவதரை வெறுக்

காதே. தினமும் பூரஷ்யாதியை வாசித்துவா. அன்னத்தை எறியாதே. தளிகை சரியில்லை என்று அன்னத்தை நிந்திக்காதே. அந்நத்தை திரஸ்கரிக்காதே. பஹுமானித்துவா. பக்வமான அன்னத்தையே பகவானுக்கு நிவேதனம் செய். தளிகை ஆகாத அன்னம் ருத்ரனுக்குச் சேரும். காந்தல் நிருருதி தேவதைக்கு. ஆகையால் பக்வமானதையே சமர்ப்பி. எப்போதும் த்வயத்தை அனுசந்தித்து உஜ்ஜீவியுங்கோள்" என்று உபதேசித்து வந்தார்.

உபகாரம் : ஸமாச்ரயணம், பரஸமர்ப்பணம், சாஸ்த்ர, வேத, வேதாந்தப் ப்ரவசனங்கள் இவர் செய்த உபகாரங்கள்.

தனிச் சிறப்பு : ப்ரமுகர்களும் வித்வான்களுமாக பல சிஷ்யர்கள் ஸ்வாமிக்கு. சில வித்வான்கள் புதுக்கோட்டை ஸமஸ்தானம் முதலியதில் பரீக்ஷை அதிகாரிகளாக இருந்து வந்திருக்கிறார்கள். ஆசார்யகம் வஹிக்கிறார்கள். இப் பெருமைகளும் ஸ்வாமிக்கிருக்கும் தனிச் சிறப்பு.

ஸ்வாமி ஸ்ரீ பாஷ்யத்தில் ஆங்காங்கு அத்புதமான விஷயங்களை விமர்சித்துப் பல வாதங்களை அருளிச் செய்திருக்கிறார்.

அவையாவன :

1. பராப்யுபகத பஹுவர்த்தவிசார :
2. ஸ்வமதாரோபித தோஷோத்தார :
3. கதிபயாதிகரணார்த்த விசார :
4. (க்வசித் க்வசித்) பாஷ்யவ்யாக்யாநம்.
5. கதிபய ச்ருத்யர்த்த விசார :
6. ஸத்வித்யா வ்யாக்யா
7. ஆனந்தவல்லீ வ்யாக்யா
8. கடசதுர்த்தவல்லீ வ்யாக்யா
9. ப்ராசீந பாஷ்ய பாட நிர்வாஹ :
10. நிஷ்ட்டா ஸ்வரூபாதி நிருபணம்
11. கதிபயப்ரமேய ஸ்வரூப நிருபணம்
12. அதிகரண ஸாராவளீ தத்வ்யாக்யாபராமர்ச :

முதலியன.

ஸ்ரீ பாஷ்யத்தில் ஒரு அதிகரணத்தை ஸேவித்தால் அனேக க்ருச்ர பலமுண்டு என்று அடிக்கடி ஸாதிப்பது வழக்கம். இங்ஙனே பல. [கூத்தப்பாக்கம் கிருஷ்ணமாச்சாரியர்]

ஸ்ரீவீரராகவாசார்ய ஸ்வாமிஜீ மஹாராஜ்.

உத்தராகோபில ஜாலரியாமடம் ரிஷிகேசம்.

ஸுரபுரம் வித்வான்களின் வரலாறு :--

பழைய நைஜாம் ஸமஸ்தானத்தில் **கிருஷ்ணநதிக்கும்,** பீமா நதிக்குமிடையில் (குத்தி முதல் குல்பர்கா வரையிலும்) ஒரு சிற்றரசு ஏறத்தாழ A.D. 1700 வருஷம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலும் ஆண்டது. இந்த அரச வம்சத்திற்கு பாமி நாயகர்கள் தலைவர்கள். புக்கபட்டணம் என்கிற ஊரில் சடமர்ஷண கோத்ரத்தில் அவதரித்த **வேங்கடாசாரியர்** என்கிற மஹானை தமது தலைநகரான **ஸுரபுரத்தில்** எழுந்தருளியிருக்கும்படியாக மேற்படி வேந்தன் வேண்ட, அதன்படிக்கு இந்த ஸ்வாமியும் அங்கு எழுந்தருளி அனேக சிஷ்யர்களுக்கு ஸகல சாஸ்த்ரங்களையும் ப்ரவசனம் செய்துக் கொண்டு வந்தார். இந்த ஸ்வாமியின் குமாரர் **அண்ணயாசாரியர்** I. என்பவர். இவர் குமாரர்: **நரஸிம்ஹாசாரியர்** இவர் குமாரர் **ஸ்ரீநிவாஸதாதாசாரியர்** I. இவர் திருக்குமாரர் **வேங்கடாசாரியர்** II. என்கிற மஹான். இந்த ஸ்வாமி பல ஸ்ரீகோசங்கள் அருளிச் செய்திருக்கிறார். இவற்றுள் சில—**1. ஆனந்ததாரதம்ய கண்டனம் (2) ஜகன்மித்யாத்வ கண்டனம் (3) வேதாந்த தேசிகதண்டகம் (4) வேதாந்த தேசிகாஷ்டோத்தர சதநாமஸ்தோத்ரம் (5) ஸித்தாந்த ரத்னவளீ** (இந்த ஸ்ரீ கோசத்தில் ஸ்ரீ பாஞ்சராத்ர சாஸ்திரங்களின் ப்ரமாண்யமும், திருவாழி திருச்சங்குகளை பிராம்ஹணர்கள் யாவரும் தரிக்க வேண்டும் என்பதுபற்றியும், மற்றும் ஸம்ப்ரதாயத்திற்குத் தேவைபான ஸகல விசேஷார்த்தங்களையும் நிரூபித்திருக்கிறார்.) **(6) ஸித்தாந்த வைஜயந்தி** முதலியன.

இந்த ஸ்வாமியின் குமாரர் **அண்ணயாசாரியர்** II. என்பவர். இவர் கௌண்டின்ய ஸ்ரீநிவாஸாசாரியருடையவும் தமது தந்தையாருடையவும் சிஷ்யர். இவரருளிய கிரந்தங்கள் வருமாறு:—

(1) ஆசார்யவிம்சதி : (2) ஆனந்ததாரதம்ய கண்டனம் (3) தத்வகுணதர்ச: (4) வ்யாவஹாரிக ஸத்யத்வ கண்டன ஸார: (5) ரஸோதாரபாண: (6) ஸ்ரீநிவாஸ ஸ்துதி: (7) ந்ருஸிம்ஹவிம்சதி: முதலியன.

இந்த ஸ்வாமியின் குமாரர் **ஸ்ரீநிவாஸாசாரியார்** II இவர். **அபினவநிகமாந்த மஹா தேசிகன்''** என்கிற விருது உடையவர். ஸுரபுரம் ஸ்வாமிகளில் மிகவும் பிரஸித்தியாயிருந்தவர். **தொண்ணூற்றாறு** கிரந்தங்கள் அருளிச் செய்து நமது ஸித்தாந்தத்தை போஷித்தவர். இவர் மேற் கூறிய கௌண்டின்ய ஸ்ரீநிவாஸ தீக்ஷிதருடைய சிஷ்யர். தமது தமையனாராகிய அண்ணயாசார்யரிடம் (ஸுரபுரம் குடும்பத்தில் தகப்பனார், தமையன், குமாரர் எல்லோருக்குமே அனேகமாக **அண்ணயாசாரியர்** என்பது செல்லப் பெயராகவும், மாறி மாறியும் வருகிறது) ஸகல சாஸ்த்ரங்களையும் பாடம் கேட்டதுடன் தமது தமையனாரைப் பற்றி தமது புஸ்தகங்களில் வெகு மதிப்புடன் அடிக்கடி கூறியதுடன், சில முக்யமான சாஸ்த்ரார்த்த விஷயங்களில் **அஸ்மத் அக்ரஜ சரணஸ்து** என்பதாக தமது தமையனாரின் திருவுள்ளத்தையும் ஸாதிப்பது வழக்கம். இவர் அருளிச் செய்த கிரந்தங்கள் வருமாறு:

(1) தத்வமார்த்தாண்ட: இது ஸ்ரீ பாஷ்யத்தின் கண்டனமாக **சந்திரிகை** என்பதான மத்வக்ரந்தம் ஒன்று ஏற்பட, அதற்கு கண்டனமாக ஏற்பட்டது. ஷை சந்திரிகை என்கிற கிரந்தம் இரண்டே அத்தியாயத்திற்கு ஏற்பட்டபடியால் இதுவும் இரண்டாவது அத்யாயத்துடனிருக்கிறது. விசதமாய் ஸ்ரீ பாஷ்யச்ருதப்ரகாசிகார்த்தங்களை இடையிடையே விளக்கிக் கொண்டு, ஸர்வஸுலபமான, ஆனால் மிகவும் கம்பீரமான—வாக்யசைலியுடன் பரமதங்களை கண்டிப்பதுடன், நம் ஸித்தாந்தத்திற்கு உபயுக்தமான அனேக யுக்திகளை நிரூபணம் செய்து வெகு அழகாய் அமைந்த கிரந்தமிது. இவருக்கு ஸகல சாஸ்த்ரங்களும் எப்படி லாகவமாய் ஆயாஸமின்றிவிளங்கா நின்றன

என்பது இந்த புஸ்தகத்தை ஸேவித்தவர் களுக்கே விளங்கும். மைஸூர் ஸ்ரீ பரகால மடத்தில் இதை அச்சிட்டுள்ளார்கள்.

(2) **நயத்யுமணி :** இது சாங்கராதிகளான இதரமத நிராஸபூர்வகமாய் நம் ஸித்தாந்தானு குணமாய் ஸ்ரீ பாஷ்யாதிகளுக்கு உரையே போல அமைந்த சாரீரக சாஸ்த்ரவிசார க்ரந்தம், அடிக்கடி தத்வமார்த்தாண்டம் முதலிய கிரந்தங்களில் விஸ்தரஸ்து நயத்யுமணௌ என்று எடுத்தாளப்பட்டிருக்கிறது. இது அவசியம் அச்சிட வேண்டிய அரிய பொக்கிஷம்.

(3) ஷெ நயத்யுமணிக்கு வியாக்யனமாக இவரே அருளிச் செய்த **நயத்யுமணிதீபிகா.** (இங்குஒரு விஷயம் கவனிக்கவும். ஸ்ரீ தேசிகனுக்கு கொஞ்சம் முன் காலத்தில் எழுந்தருளியிருந்த **மேகநாதாரிஸூரி** என்கிற ஆத்ரேயர் (ஸோமயாஜியாண்டான் வம்சத்தைச் சேர்ந்தவர்) எழுதி ஸமீபத்தில் சென்னை ஓரியண்டல் லைப்ரரியில் வெளியிட்ட **நயத்யுமணி** என்கிற வாத புஸ்தகம் வேறு இதுவேறு. இதே போல் ஷெ மேகநாதாரிஸூரியின் நயத்யுமணிக்கு ச்லேஷ யமகசக்ரவர்த்தியும் ஸர்வசாஸ்த்ர பாரத்ருச்வாவுமாகிய அரசாணி பாலை கவிவித்வன் மணி **வெங்கடாசாரியர்** ஸ்வாமி அருளிச் செய்த வியாக்யானமாகிய **நயத்யுமணி தீபிகா** வேறு. இந்த ஸூரபுரம் ஸ்வாமியின் **நயத்யுமணி தீபிகை** வேறு. பெயர் ஒற்றுமையைத் தவிர விஷயமும் கர்த்தாக்களும் வேருனவர்கள்.

(4) **ஓங்காரதர்பணம் :** இதில் ப்ரம்ஹ ஸூத்ரத்தில் ஒவ்வொரு ஸூத்ரத்திாரம்பத்திலும் முடிவிலும் பிரணவத்தையனுஸந்தித்து வருபவர்களின் மதத்தை பிரமாணங்களுடன் பரிசீலனம் செய்து ஸித்தாந்தம் செய்தருளியுள்ளார்.

(5) **ஸித்தாந்த சிந்தாமணி :** பரப்ரம்ஹத்திற்கு நிமித்த காரணத்வமே உள்ளது. உபாதானகாரணமாக பிரம்ஹம் உலகிற்கு ஆகமுடியாது என்கிற நையாயிக—மத்வாதிகளின் மதத்தை பரிசீலித்து ஸித்தாந்தப்படிக்கு உபாதானத்வத்தை ஸமர்த்தனம் செய்தருளியிருக்கிருர். இது ஏறத்தாழ 60 வருஷங்களுக்கு முன் காஞ்சீபுரத்தில் ஸ்ரீ ஸூதர்சன முத்ராசாலையில் அச்சிடப்பட்டது.

(6) ஸித்தாந்த சிந்தாமணிக்கு இவரே **ப்ரபா** என்கிற உரை எழுதியிருக்கிருர். இது அச்சில் வரவில்லை.

(7) **ஸங்கதிரத்னதீபிகா :** திருவரங்கத்தில் உள்துரைக் கைங்கர்யம் செய்து வந்த ஸ்ரீஸேனேச்வராசாரியர் என்கிற பூர்வாசாரியர் அருளிச் செய்த **ந்யாயகலாபஸங்ரஹம்** என்பதைப் போலும், சடமர்ஷண கோத்ரஜாதராகிய **ஸ்ரீவிஷ்ணுசித்தாசார்யர்** (விவரணகாரர்) அருளிச் செய்த **ஸங்கதி மாலா** என்கிற ஸ்ரீகோசத்தைப் போலும் ஸ்ரீபாஷ்யத்தில் ஒவ்வொரு அதிகரணத்திலும் ஸங்கதியை உபபாதனம் செய்து, இதரர்கள் கூறும் ஸங்கதிகளை பரிசீலனம் செய்து ஸாராஸார விவேசனம் பண்ணியருளுகிருர், இதில். இதுவே **ஸங்கதிரத்னதீபம்** என்றும் வழங்கப் பெறும்.

( ) உபஸம்ஹாரவிஜயம் உபக்ரமபராக்ரமம் என்கிற இதரர்களின் இரண்டு நூல்களுக்கு மறுப்பாக வந்து நமது ஸித்தாந்தத்தைக் கூறுவது **உபஸம்ஹாரவிஜய நிராகரணம்** என்கிற பிரகரண புஸ்தகம். இதில் இந்த ஸ்வாமியின் மீமாம்ஸாபரிசயம் வியக்கத்தக்கபடியுள்ளது.

(9) **க்ஞானரத்னப்ரகாசிகா.** இதில் **வேதனம் உபாஸனம் ஸ்யாத்** என்கிற வாக்கியத்திற்கு வியாக்யானமும், கேவல வாக்யார்த்தக்ஞானம் மோக்ஷஸாதனமாகாது என்பதும், பக்தி ரூபாபன்னக்ஞானமும், பிரபத்தியுமே மோக்ஷஸாதனம் என்பதும் பரக்க விளக்கப் பட்டிருக்கிறது.

(10) **ஹரிகுணதர்பணம்:** விவர்தாத்வைதிகளின் நிர்குணப்ரம்ஹ வாதத்தை மறுத்து எம்பெருமானுக்குள்ள கல்யாண குணங்களை வேதங்களை கொண்டு நிரூபணம் பண்ணி, "ஸத்யம், க்ஞானம் அனந்தம் ப்ரம்ஹ"

ஏன்கிற வாக்யத்திற்கு **ஸ்ரீ ஆளவந்தாரின் ஸித்தித்ரயத்தை** அடியொற்றி விரிவான வியாக்யானமும் இதில் செய்துள்ளார்.

ஸாம்யதர்பணம்: இதில் ''நிரஞ்ஜன: பரமம் ஸாம்யம் உபைதி'' என்கிற வேத வாக்கியத்திற்கு விரிவான உரையிட்டருளி ஏகதேசிகளின் (மாத்வர்கள்) ஆனந்ததார தம்யத்தை நிரஸித்திருக்கிறார்.

(12) **ஸாரதர்பணம்:** அவயவாதிரிக்தமாக அவயவி என்பதைக் கொள்ளும் நையாயிகர் களை மறுத்து ஆரம்பணாதிகரண ஸித்தாந் தத்தை பலபடியாக போஷித்துள்ளார் இதில்.

(13) **அருணாதிகரண மஞ்சரி:** அல்லது **அருணாதிகரண ஸரணிவிவரணி:** இதில் நடாதூர் அம்மாள் தமது **தத்வஸாரத்தில்,** ஸ்ரீ பாஷ்யகாரரால் அருணாதிகரண விஷயத் தை சோதித்தளித்தபடி நிரூபணம் செய்ததே போல—அவரை அடியொற்றி இதில் குரு—பட்ட மதங்களை பரக்க நிரஸித்து **வாத நக்ஷத்திரமாலையை** கடாக்ஷித்துக் கொண்டு அருணாதிகரண விசாரம் செய்து ஸித்தாந்த நிரூபணம் செய்திருக்கிறார். மீமாம்ஸகர்கள் அவசியம் படிக்கவேண்டும். அருமையான புஸ்தகம். மைஸூர் ஸ்ரீ பரகால மடத்தில் அச்சிட்டுள்ளார்கள்.

இவைதவிர: — (14) **ஆனந்ததாரதம்ய கண்டனம்,** (15) **ஓங்காரார்த்தவாத:** (16) **நயமணிகலிகா** (17) **ஜிக்ஞாஸா தர்பண:** (18) **ணத்வதர்பண:** (19) **ப்ரண வதர்பண:** (20) **ப்ரதான ப்ரதிதந்த்ர தர்பண:** (21) **புச்சப்ரம்ஹவாத நிராஸ:** (22) **பேத தர்பண:** (23) **விரோத நிரோத:** இதில் சிறிது பாகம் மைஸூர் ஸ்ரீ பரகால மடத்தில் அச்சிடப் பட்டிருக்கிறது. இதற்கே **ஸ்ரீ பாஷ்ய பாதுகா** என்கிற பெயரும் உண்டு. (24) **கையடவ்யாக்யானம் மஹாபாஷ்ய** வியாக்யானமான கையட ரியற்றிய **ப்ரதீபத்திற்கு** இது உரை. **விஸ்த ரஸ்து கையடவ்யாக்யானே அஸ்மாபி: க்ருத:** என்பதாக **ஸித்தாந்த சிந்தாமணி யில்** (பக்கம் 62) இவர் இதை எடுத்திருக் கிறார். **சப்தகௌஸ்துபம்** முதலான **பட்டோஜிதீக்ஷிதரின்** புஸ்தகங்களுக்கு கண்டனம் இது என்பதாய் (இது எடுத்துள்ள ஸ்சலியிலிருந்து) ஏற்படுகிறது.(25) **விரோத வரூதினீப்ரமாதினீ** (26) **ஷஷ்ட்யர்த்த நிர்ணய:** (27) **தத்தரத்னப்ரகாசிகா** (28) **நீதிசதகம்:** (29) **ஸுபாஷிதானி** முதலியன. இவர் அருளிச் செய்த புஸ்தகங் கள் அடையாறு லைப்ரரியிலிருப்பதாய் ஸ்ரீ உ.வே. வெங்கடாத்ரியகரம் கிருஷ்ணமா சாரியார் ஸ்வாமி தமது உரையுடன் கூடிய ஷை ஸூரபுரம் வித்வானில் ஒருவராகிய **புச்சி. வெங்கடாச்சாரியர்** அருளிச் செய்த **வேதாந்தகாரிகாவளி** என்கிற புஸ்தகத்தின் முன்னுரையில் ஷை புஸ்தகங்களின் எண் களுடன் குறிப்பிட்டுள்ளார். மைஸூர் லைப்ரரி புஸ்தகஸூசியில் இன்னும் பல ஸ்ரீ கோசங்கள் இவர் அருளிச் செய்ததாய் காட்டப் பெற்றுள்ளன. ஆயினும் அவைகள் அடியேனது பார்வைக்கு வரவில்லையாகவே அவற்றைப் பற்றி இங்கு விளக்கவில்லை. இங்கு குறித்தனவற்றுள் இன்னும் சில அச்சில் (தெலுங்கு எழுத்தில்) உள்ளன.

இவருக்கு அடுத்தபடியாக இவர் பேரரா கிய **வேங்கடாசார்யர்** III குறிப்பிடத் தக்கவர். இந்த ஸ்வாமியிக்கு **அய்யா கிரீடி வெங்கடாசார்யர்** என்றே பிரசித்தியுண்டு. இவரருளிய ஸ்ரீ கோசங்கள்:—

1. **அலங்கார கௌஸ்துபம்** (இது விரி வான அலங்கார சாஸ்த்ரவிசார கிரந்தம். மிகப் பெரிய வித்வானும் மைஸூர் பரகால மடத்தில் ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந் தவரும், **லக்ஷ்மீஸஹஸ்ரத்திற்கு ரத்ன ப்ரகாசிகை** என்கிற விரிவான உரையை யும், **அலங்காரமணிஹாரம்** முதலிய ப்ரௌட க்ரந்தங்களை யருளிச் செய்தவரும் **கவிகண்டபேருண்டம்** என்கிற சிறப்புத் திருநாமமுடையவருமாகிய **ஸ்ரீ க்ருஷ்ண ப்ரம்ஹதந்த்ரபரகால மஹாதேசிகன்** தமது **(ஹம்ஸஸந்தேசவியாக்யானமான) ரஸா ஸ்வாதினீயில்** அடிக்கடி இந்த அலங்கார கௌஸ்துபத்தைக் கையாண்டுள்ளார். இது ஆலங்காரிகர்கள் யாவரும் படித்துப் பய னடைய வேண்டிய அரிய புஸ்தகம்.

2. க்ருஷ்ணபாவசதகம்.

3. கஜஸூத்ரவாதார்த்த: (ஸ்ரீ உ. வே. மஹா மஹோபாத்யாய ஆர். வி. க்ருஷ்ணமாசாரியரால் இது திருக்குடந்தையில் அச்சிடப் பெற்றது.) ''ணேரணௌ—'' என்கிற அஷ்டாத்யாயி ஸூத்ரத்தின் க்ரோடபத்ரமிது, ''ணேரணௌ ஸூத்ரவாக்யார்த்தம் பகவான் வேத்தி பாணினி:'' என்று சொல்வது வழக்கம். அவ்வளவு கடினமிந்த ஸூத்ரம். இது பூர்வபக்ஷம்—ஸித்தாந்தம் என்பதாய் இரு பாகங்களைக் கொண்டது. வையாகரணர்களுக்கு மிகவும் ருசிக்கும்படியான கிரந்தம்.

4. ப்ராமாண்யவாத கண்டனம். கதாதரபட்டாசாரியார் என்கிற நவத்வீபதார்கிகர் எழுதிய ப்ராமாண்யவாதத்திற்கு மறுப்பு இது. நையாயிக ரஞ்சகமானது.

5. ச்ருங்காரதரங்கிணி முதலியன. இவற்றால் இவர் பல சாஸ்த்ரங்களில் வல்லுனர் என்பதுடன், பல சாஸ்த்ரங்களிலும் ஸ்ரீகோசமருளிச் செய்தவர் என்பதும் கவனிக்கத்தக்கது.

அடுத்தபடியாக புச்சி. வெங்கடாசாரியார் என்பவரைக் கூறவேண்டும். இவர் 1. விஷ்ணு ஸப்தவிபக்தி ஸ்தோத்ரம். 2. வேதாந்தகாரிகாவளி முதலிய கிரந்தங்களை யருளிச் செய்துள்ளார். இதில் வேதாந்தகாரிகாவளியில் பத்து ப்ரகரணங்கள். ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜனாதிகளைப் போல் நம் ஸித்தாந்த ப்ரமேயங்களை அனுஷ்டுப் சுலோகத்தில் சுருக்கமாய் இதில் வெளியிட்டிருக்கிறார். இதற்கு ஸ்ரீ. உ. வே. வெங்கடாத்ரியகரம் V. கிருஷ்ணமாசாரிய ஸ்வாமீ ஸம்ஸ்க்ருதத்திலும் ஆங்கிலத்திலும் உரையெழுதி வெளியிட்டிருக்கிறார். ஸம்ஸ்கிருதத்தில் பரிசயமில்லாதவர்கள் கூட நம் ஸித்தாந்தத்தை இந்த புஸ்தகத்தின் மூலம் ஸுலபமாய் அறிந்துக் கொள்ள முடியும்.

நம் ஸம்ப்ரதாயத்திற்கு ஸுரபுரத்தாரும், பரவஸ்து குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், பாலதன்வி குடும்பத்தினரும், மற்றும் பல குடும்பங்களும் ''குடியடியாரிவர் கோவிந்தன் தமர்க்கென்று'' என்கிறபடியே பிதா புத்ரக்ரமத்தில் ஒவ்வொருவரும் ப்ரௌடமான பல புஸ்தகங்களை யருளியிருக்கிறார்கள். இவற்றில் பல இன்னும் அச்சேறி வெளிவரவில்லை. ஊக்கமுடையவர்கள்—குறிப்பாக ஷை குடும்பங்களைச் சேர்ந்த தனிகர்கள் இவற்றில் முடிந்த வரையிலும் (முக்கியமானவைகளையாவது) அச்சிட்டு வெளியிடுவது நலம். மேடையேறி ஏதோ உசிதமாய் உபன்யாஸம் ஸாதிப்பதும். அதைக் கேட்டு தனிகர்களும் ஆனந்தப்பட்டு விடுவதினால் மட்டும் நமது ஸித்தாந்தம் ஸ்தாபிதமாகியும் விளங்கியும் விடாது. மூலவரில்லாமல் உத்ஸவர் வெளிவருவது எப்படியில்லையோ—அவ்விதமே சிறந்த சாஸ்த்ர பாண்டித்யமுள்ள ஒரு சிலராவது விளங்கினால்தான் மேடைப் பண்டிதர்களும் உபன்யாஸங்களைக் குறைவற நடத்த முடியும். இதை மனதில் வைத்துக் கொண்டு இனிமேலாவது நம் ஸித்தாந்தத்திலூற்றமுள்ளவர்கள் முக்கியமான சாஸ்த்ர புஸ்தகங்களை வெளியிட்டு நம் முன்னோருக்கும், ஸித்தாந்தத்திற்கும் சாச்வதமான தொண்டு செய்தருள எம்பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

வா. ஸ்ரீவத்ஸாங்காசாரியர் ஸ்வாமி.

ஸ்ரீமதித்யாதி...கோடி கன்னிகாதானம் அக்நிஹோத்ரம்

ஸ்ரீநிவாஸதாதாசார்யர் ஸ்வாமி

(பட்டு ஸ்வாமிகள், திருக்குடந்தை)

''தாத'' என்றபதம் திருமலை திருவேங்கடமுடையான் தனது பரம பக்த ச்ரேஷ்டரான ஸ்ரீ பெரிய திருமலை நம்பியை பார்த்து, ஒரு ஸமயம் ''தாத'' என்று கூப்பிட்டதிலிருந்து ஏற்பட்ட அருள்வாக்கு. இந்த தாதாசாரியார் எனப்படும் ஆசார்ய புருஷ வம்சம் ஸ்ரீ சுமார் 1000 வருஷ காலமாக ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை பரப்புவதற்க்கும் பாதுகாப்பதற்கும் அளவிளா பங்கு கொண்டது. ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் முக்ய ஆசார்யர்களான ஸ்ரீமன் நாதமுனிகள் ஸ்ரீமன்யாமுன முனிகள் இந்த வம்சத்தில் அவதரித்தவர்கள். வம்ச பரம்பரையில் கோடிகன்னிகாதானம், ஸ்ரீ தாத தேசிகன், திருவவதாரம்.

ஸ்ரீ தாத தேசிகள் கர்னுடக தேசத்தரசர்களுக்கு ராஜகுரு. விஜயநகரஸாம்ராஜ்ய அரசரின் உதவியால் குளம் வெட்டுதல் அக்ரஹார ப்ரதிஷ்டை, கோவில் திருப்பணி இன்னும் பல தர்ம காரியங்களுக்கு தனது சிஷ்யகோடிகளாலும் அரசர்களாலும் ''துலாபாரம் செய்யும் த்ரவ்யத்தை அர்பணம் செய்து கொண்டு வந்தார். ஸ்ரீ காஞ்சீ ஸமீபமுள்ள ''அய்யங்கார் குளம்'' எனப்படும் ஒரு புஷ்கரணி முக்ய சின்னம். ஸ்ரீ காஞ்சி க்ஷேத்ரத்தில் வரதராஜர் கோவிலுள்ள துலாபார மண்டபத்தையும் ஸ்ரீ தாத தேசிகரையும் தர்ம பத்னியையும் இன்றும் ஸ்ரீ காஞ்சி க்ஷேத்ரத்தில் ஸேவித்து வருகிறோம்.

இப்படி இந்த தாதாசாரியார் வம்சத்தில் ப்ரஸித்த ஆசாரிய புருஷர்கள் ஸந்ததியில் ஸுப்ரஸித்த்ரான ஸ்ரீ உ. ப. வே. பட்டு ஸ்வாமிகள் திருவவதாரம். பால்யத்திலேயே வேதாத்யயனம், சாஸ்திரங்கள் ஸம்பிரதாய கிரந்தங்களான ஸ்ரீ பாஷ்யம், ரஹஸ்யத்ரய ஸாரம், திவ்யபிரபந்தம் இவற்றை காலக்ஷேபம் செய்து ஸ்ரீ வேதாந்த தேசிகள் ஸித்தாந்தப்படி, எளிய வாழ்க்கை, வைராக்யம், ஆசாரம், அனுஷ்டானம் இவைகளோடு கூட ஸுமார் 30 ஸம்வத்ஸரம் வேதங்களில் உத்கோஷித்த பிரகாரம், அக்னிஹோத்ரத்தை பிரதி தினம் ஸாயம் பிராத: அனுஷ்டித்து ஸ்ரீமத் வேத மார்கத்தை பிரதிஷ்டாபனம் செய்தும், ஸ்ரீமத் பகவத் ராமானுஜ, ஸித்தாந்தையும் ஸ்ரீ நிகமாந்த தேசிகனின் திவ்யஸுக்திகளை பரப்புவதற்கும் பல இடங்களுக்கு எழுந்தருளி பிரசாரம் செய்தும், கால க்ஷேபங்கள் மூலம் உபதேசம் செய்தும், ஸ்ரீஸ்வாமியின் திருமாளிகையில் அனவரதம் ஸ்ரீஸ்வாமியை ஆச்சிரத்தவர்களுக்கும், மற்றவர்களுக்கும் காலக்ஷேபம் ஸாதிப்பது ஒரு அழகு. அபிகமன ஆராதனமானபிறகு ஸ்ரீபாஷ்ய காலக்ஷேப கோஷ்டி, மாத்யான்னிக ஸ்நானமான பிறகு திருவாராதனம், உபயவேதாந்தகிரந்தங்கள் காலக்ஷேப கோஷ்டிக்கு உபசேதம். ஸாயம் அக்னிஹோத்ரமானவுடன் திருக்குடந்தை ஸ்ரீகோமளவல்லிநாயிகா ஸமேத ஸ்ரீமதபர்யாப்தாமிருதனை ஸேவித்து காவ்ய நாடகங்கள், சாஸ்திரம், பாடம் சொல்லி ஒரு ஸ்தாபனமாக சுமார் அரை நூற்றுண்டுக்குமேல் ஆசார்யஸ்தானம் வஹித்து. 1952ஜுன் மாதத்தில் திருநாட்டுக்கு எழுந்தருளியாயிற்று.

ஆசர்ய நிஷ்டையின் தத்வத்தை விளக்கி ''ஆசார்ய நிஷ்டை தத்வ நிர்ணயம்'' என்கிர கிரந்தமும், (திருக்குடந்தை) ''கோமளவல்லி சதகம்'' என்கிற கிரந்தமும் ஸ்வாமி ஸாதித்தவை.

ஸ்ரீவாஸதாதமகிவர்யக்ருபாத்த மந்த்ரம்
தாதேzக்நிஹோத்ரநிரதாத்மநி ஸுந்தரார்யே ।
ந்யஸ்தாத்மபாரமமலம் பரிபூர்ணபோதம்
ஸ்ரீவாஸதாதகுருவர்யமஹம் ப்ரபத்யே ॥

சித்திரை மீ உத்திராடம்

அக்நிஹோத்ரம்

தாததேசிக தாதாசார் ஸ்வாமி

(திருக்குடந்தை)

ஸ்ரீ.உப.வே. பட்டுஸ்வாமிகளுக்குப் பிறகு ஸ்ரீ அக்நிஹோத்ரம் தாததேசிக தாதாசாரி யார்ஸ்வாமி ஆசார்யபீடம் வஹித்தாயிற்று. ஸ்ரீஸ்வாமி பால்யத்திலேயே வம்சபரம் பரைப்படி வேதாத்யயனம், வேதலக்ஷணம் கற்று, மீமாம்ஸை, ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரய ஸாரம் இன்னும் பல ஸம்ப்ரதாய கிரந்தங்களை ஸ்ரீ பட்டுஸ்வாமிகளிடம் கால க்ஷேபங்களைச் செய்து, வேதபாஷ்யம், கல்ப ஸூத்ரங்கள் இவைகளில் அஸாதாரணமான பாண்டித்யத்தைப் பெற்று திருவிதாங்கூர், புதுக்கோட்டை, மைசூர் முதலிய முன் னுள் ராஜாக்கள் நடத்திவந்த பண்டித ஸபையில் முதல் ஸம்மானம் அளிக்கப்பட்டு மெச்சி கவுரவிக்கப்பட்டார். ஆசாரம், அனுஷ்டானம், வைராக்யம், வைலக்ஷண் யம் இந்த ஸ்வாமிக்கு ஒரு விசேஷணம்.

கர்மானுஷ்டானத்தில் யாக்ஞ்யவல்க்யாதி ரிஷிகளைப்போல் நெறி தவறியதில்லை. ஸ்ரீமத் ராமானுஜ ஸித்தாந்தத்தையும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகர் ஸம்பிரதாயத்தையும் அநேக ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயஸ்தர்களுக்கு காலக்ஷேபங்கள் உபதேசங்கள், உபன்யா ஸங்கள் மூலம் பிரசாரம் செய்தும் தேசிக தர்சனத்தின் பரந்த நோக்கத்தையும் அதன் உட்கருத்துகளையும் திராக்ஷாபாகமாக மனதில் தெளிவுபட ஸாதிப்பது ஒரு சிறப்பு. மேலும் ஸ்வாமிக்கு வேதங்களில் ஆங் காங்கு உத்கோஷிக்கும் வேத வாக்யங்களே ஸ்ரீபாஷ்யகார, ஸ்ரீ நிகமாந்த மஹாதேசி கனுல் திருவாய் மலர்ந்தருளியாயிற்று, என்று ஐககண்ட்யம் செய்து கருத்து வேற்றுமை கிடையாது என தெளிவுற ஸாதிப்பது வழக்கம்.

நமது தேசிகதர்சன தீபம் ஸ்ரீ வி. வி. முத் தண்ணுவுக்கு இந்த ஸ்வாமியினிடம் விசேஷ பக்தியும் அன்பும் அதிகம். ஸ்ரீ வி.வி.ஸவாமி அடிக்கடி ஸ்ரீ தாததேசிக தாதாசாரியார் ஸ்வாமியை ''வேதமூர்த்தி'' என்று வெகு சிலாக்யமாக கொண்டாடுவது நம் ஸம்பிரத யாஸ்தர்கள் மனதில் இன்றும் இருக்கும். திருக்குடந்தையில் பலகாலமாக நடந்து வரு கிற ''விசிஷ்டாத்வைத ஸபையில்'' சுமார் 50 ஸம்வத்ஸரங்கள் ஸ்ரீதாததேசிக தாதாசாரி யார் ஸதஸ்யராக இருந்து பலவாக்யார்த்தங் களில் கலந்துகொண்டும் உபன்யாஸங்கள் மூலமாகவும் விசிஷ்டாத்வைத வேதாந்தத் தைப் பரப்பி வந்தார். ஸ்ரீஸ்வாமிதிருமாளிகை யில் காலையில் ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரம், கால க்ஷேபங்கள் ஸாதிப்பதும் போதகாசாரியராகவும், மற்ற சமயங்களில் வேத பாஷ்யம், வேத லக்ஷணம், சிரௌதம், மீமாம்ஸா கல்ப சூத்ரங்களையும் ஸ்ரீஸ்வாமி களிடம் நம்ம ஸம்பரதாயஸ்தர்களும் இதர் வேதாந்திகளும் கற்பதைப் பார்த்தால் ஸ்வாமி திருமாளிகை ஒரு ''குருகுலம்'' என்று சொல்வது மிகப் பொருத்தம். ஸ்ரீமத் ராமானுஜ ஸித்தாந்தத்தையும், ஸ்ரீ நிகமாந்த் மஹாதேசிகன் அருளிச் செய்த கிரந்தங்கள் இவைகளை ஸ்ரீ ஸ்வாமிகளிடம் காலக்ஷேபங் கள் செய்த பல தனவந்தர்களும், பண்டிதர் களும், சிஷ்ய கோடிகளும் ஆங்காங்கு பல பாகங்களில் இருக்கின்றனர்.

வம்ச பாரம்பர்யப்படி, பட்டுஸ்வாமிகளுக் குப் பிறகு ஆசார்ய ஸ்தானத்தை வகித்து சிஷ்ய கோடிகளுக்கு ஸமாச்ரயணம் மந்திரோபதேசம், ப்ரபத்தி முதலியவைகளை செய்து வந்தார்.

ஸ்ரீ ஸ்வாமிகளால் எழுதப்பட்டுள்ள கிரந்தங்கள். ''ஸூத்ரானுகுண்யஸித்தி விமர்சனம்''. இந்த நூல் லலிதமான முறையில் அத்வைத ஸித்தாந்தத்திற்கு ''ப்ரும்ம சூத்ரம்'' பொருந்தாது என்று நிரூபிக்கிறது. ''த்ரவிடாத்ரேய தர்சனம்'' என்ற க்ரந்தம் அத்வைதிகள் த்ரவிட பாஷ்யகாரரைப் பற்றியும் வ்ருத்திகாரர்களைப் பற்றியும் சொல்லும் வாதங்களைக் கண்டித்து பகவத் ராமானுஜ ஸித்தாந்தத்தை ஸ்தாபிப்பது. ''வேத நவனீதம்'' என்ற நூல் விசிஷ்டாத்வைத வேதாந்தம் தான் வேதத்தின் அடிப்படையான தத்வம் என்று நிரூபிக்கிறது.

ஸ்ரீ ஸ்வாமிகள் சென்னை, மைசூர் சர்வ கலாசாலைகளில் விசிஷ்டாத்வைத வேதாந்தத்திற்கு பரீக்ஷாதிகாரியாகவும், பல இடங்களில் நடத்தப்பட்ட விசிஷ்டாத்வைத ஸதஸுகளில் ஸதஸ்யராகவும் பணியாற்றி இருக்கிறார். ஸ்வாமியின் பாண்டித்யத்தைப் பாராட்டி ''ச்ருதி ஸ்மிருதி மீமாம்ஸா கல்ப ஸூத்ர விசாரத'', ''வேத பாஷ்ய ப்ரவீண'' என்ற விருதுகளால் மைசூர், திருவிதாங்கூர்களில் பாராட்டினார்கள்.

வேதங்கள், வேதபாஷ்யங்கள், விசிஷ்டாத்வைத வேதாந்தம், மீமாஸ்ஸா, கல்பஸூத்ரங்கள் இவைகளில் ஸ்வாமிக்கு உள்ள அபார பாண்டித்யத்தை மெச்சி நமது பாரத ராஷ்டிரபதியால் 1962-ல் கவுரவிக்கப் பட்டார்.

ஸ்வாமிகள் 60-ஸம்வத்ஸரங்களுக்கு மேல் வேதத்திற்கும், ஸ்ரீ பகவத் ராமானுஜ ஸித்தாந்தத்திற்கும் தேசிக தர்சனத்திற்கும் பாடுபட்டு ஸ்வாமியின் 84-வது திருநக்ஷத்திரத்தில் திருநாட்டை அலங்கரித்தாயிற்று.

இந்த ஸ்வாமியின் தனியன் :—

ஸ்ரீ சைல வம்ச கலசோததி பூர்ணசந்த்ரம்
ஸ்ரீ வாஸதாத மகிவர்ய க்ருபாத்த போதம்
தம் ஸுந்ரார்யதநயம் ததுபாத்த மந்ரம்
ஸ்ரீ வேங்கடேச குருவர்யமஹம் ப்ரபத்யே.

[மாசி - அனுஷம்]

ஸ்ரீமதித்யாதி அக்னி ஹோத்ரம்

கோபால தேசிகதாதாச்சார்யர் ஸ்வாமி

திருக்குடந்தை

தேசிக சம்பிரதாய பிரசாரத்தில் வாழ்நாளை முழுவதும் ஸ்வாமி அர்ப்பணம் பண்ணினவர். ப்ராதாவான பட்டு ஸ்வாமியிடம் சம்ப்ரதாய கிரந்தங்களை காலக்ஷேபம் பண்ணினுர். ஸ்ரீ வைஷ்ணவ் சித்தாந்த ஸபையின் பிரதி வருஷம் நடந்த ஸபைகளில் விசேஷ பங்கெடுத்துக் கொண்டிருக்கிருர். ஸ்பர்ச தோஷ நிருபணம், யக்ஞசம்ரக்ஷணி பிஷ்டபசு கண்டனம், இது முதலான பல கிரந்தங்களை எழுதியிருக்கிருர். ஆர்ய தர்ம மென்ற பத்திரிகையின் ஆசிரியராக இருபது வருஷம் ஸேவை செய்து தர்ம பிரசாரம் செய்திருக்கிருர். சீர் திருத்தவாதிகள் ஸ்ரீ ராமாநுஜரைப் பற்றி சொல்லிய துர்வாதங்களைக் கண்டித்து பல நூல்கள் எழுதியிருக்கிருர். யக்ஞஸ்ம்ரக்ஷணி என்ற நூல் வேதாந்த தேசிகன் வைதிகமான யக்ஞங்களில் எப்படி ஈடுபட்டிருக்கிருர் என்று தெரிவிக்கிறது.

வராஹகுளம் ரெங்கஸாமி அய்யங்கார் லௌகிக பிரமுகர்) இவர் தேசிக ஸம்பிரதாய பக்தர்களில் தலை சிறந்து விளங்கியவர். சம்பிரதாய பிரசாரத்துக்கே உடல், பொருள் ஆவி இவைகளை அர்ப்பணம் பண்ணினவர். திருக்குடந்தையில் ஆருவமுதன் ஸன்னிதியில் அநேக வருஷங்கள் டிரஸ்டியாக இருந்து பகவத் கைங்கர்யம் செய்து சித்திரைத் தேரை நிர்மாணம் செய்தவர். விசிஷ்டாத்வைத மத, ராமாநுஜ சித்தாந்த ஸபை என்று ஒரு ஸபையை ஆரம்பித்தார். அது இன்று வரை நடைபெறுகிறது.

தென்னிந்தியாவில் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய கிரந்தங்களை பிரசாரம் செய்ய இந்த ஸபை பயன்பட்டு வருகிறது. சம்பிரதாய கிரந்தங்களில் பரீக்ஷை வாக்யார்த்தம் உபந்யாஸம் இவை இங்கு நடைபெறுகின்றன. இந்த ஸபை எழுபத்தி மூன்று வருஷமாக விடாமல் நடந்து வருகிறது. இந்த ஸபையை நடத்த அந்த ஸ்வாமி சொத்துக்களையும் ஏற்படுத்தி யிருக்கிருர். இந்த ஸபை ஒன்று தான் தேசிக ஸம்பிரதாயத் திற்கே கைங்கர்யம் செய்து வரும் புராதனமான ஸபை. இந்த ஸபையில் பரீக்ஷை கொடுத்தால் தான் பழங் காலத்தில் தேசிக சம்பிரதாய வித்வான்களாக அங்கீகாரம் பண்ணப்படுவார்கள். காஞ்சிபுரம் நாவல் பாக்கம் மதுராந்தகம், திருவஹீந்திரபுரம், போன்ற வட ஜில்லாக்களிலும், தென் ஜில்லாக்களிலும் விளங்கி வந்த மஹான்கள் இந்த ஸபையில் பரீக்ஷை கொடுத்து பரீக்ஷாதிகாரிகளாகவும் ஆசார்யர்களுமாகி தேசிக சம்பிரதாயத்து சிம்மங்களாக விளங்கினர். அம்மா சத்ரம் சேஷாச்சாரிய ஸ்வாமி. குரிச்சி ரெங்காச்சார் ஸ்வாமி சித்தண்ணு சுந்தர தாதாசார் ஸ்வாமி முதலிய மஹா வித்வான்கள் இந்த ஸபையில் கலந்து கொண்டிருக்கிருர்கள். ஸ்ரீ அழகிய சிங்கர், புத்தங்கோட்டம் ஸ்வாமி, தில்லியம்பூர் சக்கரவர்த்தியாச்சார், வெங்கடாச்சார் கோஷ்டீபுரம் ஸ்வாமி பிராதாக்கள் உப்பிலியப்பன் சன்னிதி வங்கீபுரம் கிருஷ்ணமாச்சார் ஸ்வாமி விண்ணுத்தங்கரை சீமாச்சார் ஸ்வாமி, போன்ற எல்லா வித்வான்களும் இந்த ஸபையில் சம்பந்தப்பட்டவர்களே. பத்தொன்பதாம் நூற்ருண்டிலும் இருபதாம் நூற்ருண்டிலும் தேசிக ஸம்பிரதாயத்தை பிரசாரம் செய்ய இந்த ஸபை ஒன்றே இருந்து வந்தது. ஸ்ரீ தேசிகனுடைய ஸ்ரீ ஸூக்திகளில் பரீக்ஷை வாக்யார்த்தம் இந்த ஸபையில் பிரதானமாய் இருந்து வந்தன. அந்த காலத்தில் திருக்குடந்தை தேசிக சம்பிரதாய பிரசாரத்துக்கு நடு நாயகமாக இருந்து வந்தது.

தேசிக சம்பிரதாய பிரசாரத்தால் திருக்குடந்தை இந்த காலத்தில் செய்து வந்த உதவியை யாரும் மறக்க முடியாது. குறிப்பாக பாட்ராச்சார் தெருவில் எழுந்தருளியிருந்த தாதாச்சார்யர் ஸ்வாமி சக்ரபாணி பாட்ராச்சார் முதலிய ஸ்வாமிகள் தேசிகனுடைய ஸ்தோத்ரபாட கிரந்தங்களுக்கு தமிழில் உரை எழுதி அநேக வால்யூம்களில் வெளியிட்டார்கள்.

V. K. ராமானுஜாச்சாரியார் ஸ்வாமி தேசிக சம்பிரதாய பிரசாரத்துக்காக பட்ட பரிச்ரமத்தை அளவிட்டு சொல்ல முடியாது. சர்வீஸிலிருந்து ரிடையரான பிறகு ஸ்ரீ பாஷ்யத்தையும் ரஹஸ்யத்ரயசாரத்தையும் தேரழுந்தூர் ஆண்டவனிடத்தில் காலக்ஷேபம் செய்து ஸ்ரீ பாஷ்யத்தை இங்கிலீஷில் மொழி பெயர்த்திருக்கிறார். ஸ்ரீமத் ரகஸிய த்ரய சாரத்தின் தமிழ் சுருக்கமொன்று எழுதியிருக்கிறார். யதீந்த்ரமததீபிகைக்கு தமிழில் எழுதியுள்ள விஸ்தாரமான வியாக்யானம் தேசிக சித்தாந்தங்களுக்கு நிதி போல் விளங்குகிறது. சிற்றூர் சைவி பாட்ராச்சா சுவாமி பல வருஷங்கள் கூடயிருந்து இந்த ஸ்வாமியுடன் காரியங்கள் செய்து வந்தார்.

அதுமட்டுமல்லாமல் தேசிக ஸ்தோத்ர பாடங்களை தனியாக அச்சிட்டு வெளியிட்டார்.

குடவாசல் வித்யா ரத்னாகர நரசிம்மாச்சார் ஸ்வாமி விசிஷ்டாத்வைத ஸபையில் பல வருஷங்கள் பரீக்ஷாதிகாரியாக இருந்தார்.

ஸ்ரீமதுபயவே...மஹா மஹோபாத்யாய...ஏடுரெம்மடி திருமலை
லக்ஷ்மீ குமார கோடி கந்யகாதானம்

க்ருஷ்ண தாததேசிகன்

(திருப்புட்குழி ஸ்வாமி)

இந்த ஸ்வாமி ஸ்ரீமந் நாதமுனிகள் திருவம்சத்தில் 21வது தலைமுறையில் அவதரித்து, ஜகதாசார்யரான ஸ்ரீஉபய பஞ்சமதபஞ்ஜன தாத தேசிகன் ஸ்வீகார குமாரராகவும் உள்ள-உபய. லக்ஷ்மீ குமார தாத தேசிகன் திருவம்சத்தில் திருப்புட்குழி எம்பெருமான் கைங்கர்ய பரம்பரையில் ஸ்ரீவேங்கடதேசிகன் குமாரராக ஸ்வபானு ஸம்வத்ஸரம் ஐப்பசி மாதம் ஆச்லேஷா நக்ஷத்திரத்தில் அரசாணிபாலை அஸ்தோகாத்வரிஸ்வாமி திருமாளிகையில் அவதாரம்.

யதாகாலத்தில் தம் பிதாவினிடத்தில் ப்ரம்ஹோபதேசம் யஜுர்வேதாத்யயனம். ஆழ்வார் அருளிச் செயல்கள் அனைத்தும் பெற்றார். தம் பெரிய தகப்பனரான கோபால தாததேசிகனிடம் பஞ்சஸம்ஸ்காரமும் ஸ்ரீமத் ராமாயண உபதேசமும் ஸ்ரீராமஷடக்ஷரமந்த்ரோபதேசமும் பெற்றார். பிறகு வெங்கடாசார்யர் ஸ்வாமியினிடம் ந்யாய சாஸ்திரமும், ஜடபுலூர் சிங்காரச்சாரியரிடம் வியாகரண சாஸ்திரமும், தம் பெரிய தகப்பனரிடம் மீமாம்ஸாசாஸ்த்ரமும் அப்யஸித்தார். அரசாணிபாலை ஸ்ரீஸ்வாமி குமாரத்தியை பெருந்தேவி அம்மங்காரை பாணிக்ரஹணம் பண்ணிக் கொண்டார். பிறகு உபய ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனிடத்தில் உபயவேதாந்த காலக்ஷேபமும் இருபது திருநக்ஷத்திரத்திற்குள் பூர்த்தி செய்து ஸ்ரீ பேரருளாளன் விஷ்வக்ஸேன கைங்கர்யத்தையும் அங்கீகரித்தார். பிறகு ப்ரதிஸம்வத்ஸ்ரம் ஸ்ரீ பெரும்பூதூர் எம்பெருமானர் ஸந்நிதியிலும், திருப்புட்குழி எம்பெருமான் ஸந்நிதியிலும் ஆழ்வார் கோஷ்டியிலும், வேதபாராயணம் கோஷ்டியிலும் துரந்தரராக ஏள்ளியும், அங்கே ஸந்நிதிகளில் கைசிகபுராணம் முதலிய கைங்கர்யங்களைச் செய்து கொண்டும் ப்ரதிதினமும் பேரருளாளன் பெருந்தேவித் தாயாரை மங்களாசாஸனம் செய்து கொண்டும் அனேக சிஷ்யவர்கங்களுக்கு உபயவேதாந்த காலக்ஷேபப்ரவசனம் செய்து கொண்டும் ஸ்ரீ பேரருளாளனின் ஸந்நிதி வீதியில் பூர்விகாள் திருமாளிகையில் ஏள்ளியிருந்து மத்தியானம் ராத்திரி காலங்களில் தர்கம், வ்யாகரணம், மீமாம்ஸை முதலான ஸாமாந்ய சாஸ்திர ப்ரவசனமும் செய்து கொண்டும் ஸதா வித்யாப்ரவசனம் போலவே தர்க்க வேதாந்த மீமாம்ஸா க்ரந்த நிர்மாணங்களும் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார்.

பிறகு ஸ்ரீ தூப்புல் வேதாந்த தேசிகனுக்கும் தீபப்ரகாச எம்பெருமானுக்கும் வார்ஷிக விசேஷ உத்ஸவங்களும் ஸந்நிதி ஜீர்ணோத்தாரணமும் செய்து வைத்தார். ஸ்ரீ தூப்புல் வேதாந்த தேசிகனுக்கு ஸ்ரீ பேரருளாளன் ஸந்நிதியில் மங்களாசாஸனமும் வெகு விமர்சையாக செய்வித்தருளினர்.

ஸ்ரீ ஸ்வாமி அருளிச்செய்த க்ரந்தங்கள்

வ்யாகரண விஷயம் : (1) ணத்வ சந்த்ரிகை, (2) பரமுக சபேடிகா.

மீமாம்ஸாவிஷயம் : பாட்டஸங்க்ரஹ டிப்பணீ.

வேதாந்தம்: (1) ரத்நபேடிகா, (2)ப்ரம்ஹ சப்தார்த்த விசார : (3) ஸந்ந்யாய பரிசுத்தி, (4) வித்வஜ்ஜநவிநோதிநீ,

ஸம்ப்ரதாயம் : துரர்த்த தூரீகரணம்.

ந்யாய க்ரந்தங்கள் : ப்ரதிபந்தகத்வ விசார :, குவலயோல்லாஸ : சதகோடி கண்டணக்ரந்த :, சதகோடி முண்டன க்ரந்த : —முதலியன

—வில்லியம்பாக்கம் ஸம்பத்குமார தாதாசாரியர் ஸ்வாமி, காஞ்சி.

ஸ்ரீமதுபயவே...

கோபாலதாத தேசிகன்

(வில்லியம்பாக்கம் ஸ்வாமி)

இந்த ஸ்வாமி ஏடூர் எம்மடி, லக்ஷ்மீ குமார கோடி கன்யகாதானம் லக்ஷ்மீ குமார தாத தேசிகன் திருவம்சத்தில் திருப்புட்குழி எம்பெருமான் கைங்கர்ய பரம்பரையில் ஸ்ரீநிவாஸதாத தேசிகனுக்கு குமாரராக, வில்லியம்பாக்கம் என்கிற அக்ரஹாரத்தில் திருமலை நல்லான் சக்ரவர்த்தி ஸ்ரீ ஸ்வாமி (மாதாமஹன்) திருமாளிகையில் ஆனந்த ஸம்வத்ஸரம் தை மாதம் விசாக நக்ஷத்திரத்தில் அவதரித்தார்.

இந்த ஸ்வாமிக்கு வில்லியம்பாக்கம் ஸ்வாமி என்று ப்ரஸித்த வ்யவஹாரம். ஏழாவது திரு நக்ஷத்திரத்தில் பிதாவினிடத்தில் ப்ரம்ஹோபதேசம். பெருமாள் கோயிலில் ஸ்ரீரங்கராஜ வீதியில் க்ருஹ நிர்மாணம் பண்ணிக் கொண்டு பத்து திருநக்ஷத்திரத்திலேயே எள்ளி நித்யவாஸம் செய்தருளினார். ஸ்ரீமதுபயவே, ஸ்ரீமத் கிருஷ்ணதாத தேசிகனிடம் பஞ்சஸம்ஸ்காரம் பண்ணிக் கொண்டு ஸாமான்ய சாஸ்திரமும் உபய வேதாந்த காலக்ஷேபமும் செய்தருளினார். ஸ்ரீரங்கராஜ வீதியில் உள்ள திருட்புட்குழி ஸ்வாமி ஆச்ரமத்தில் உள்ள ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியில் அனேக சிஷ்யவர்கங்களுக்கு உபய வேதாந்த ப்ரவசனம் செய்து கொண்டும், பஞ்ச கால பராயணராய் ப்ரதி தினமும் காலையில் பேரருளாளன் பெருந்தேவித் தாயாருக்கு மங்களாசாஸன காலத்தில் பால் அமுது செய்வித்துக் கொண்டும், விரக்தாக் ரேஸரராய் ஆசார்யாபிமதமான பேரருளாளன் திருவடிகளையே தாரக போஷக போக்யங்களாக அத்யவஸித்து நித்யவாஸம் செய்தருளினார். இந்த ஸ்வாமி ஸாதித்த க்ரந்தங்கள் :-

உபாகர்ம தர்பணம்,
ஸங்க்ரம த்வாதசீ நிர்ணயம்,
ஸங்க்ராந்தி நிர்ணயம்,
மித்யாதீதப்ராயஸ்சித்தநிர்ணயம்
புத்ரஜனனசௌசப்ராபல்ய விதி :
உபராகே கர்தவ்ய விதி :

—முதலியன.

ஸ்ரீமதுபயவே கரூர்.

ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமி

கரூர் ஸ்வாமி என்றே பிரஸித்தியடைந்துள்ள இந்த மஹான் சுமார் 150 வருஷங்களுக்கு முன்பாக கரூருக்கு அருகிலுள்ள நெரூரில் எழுந்தருளியிருந்தவர். ஸ்ரீமத் திருவரங்கம் ஆண்டான் (ஸோமயாசியாண்டான்?) வம்சத்தைச் சேர்ந்தவர். நமது ஸித்தாந்தத்திற்கு இந்த ஸ்வாமி செய்தருளிய கைங்கரியம் சொல்லிலடங்காது ஸகல சாஸ்த்திரங்களிலும் குறைவறபாண்டித்யமும் பெற்று கிரந்தங்களை அருளிச் செய்யும் திறன் பெற்றிருந்த பெரிய மஹான். கூடவே நீள் செல்வமும் பெற்று அதைக் கொண்டு தினமும் பாகவத ததீயாராதனமும் இந்த ஸ்வாமி செய்து வந்ததாய் பெரியோர் பணிப்பர். இந்த மஹான் அக்காலை ஸ்ரீசததூஷணிக்கு ஒரு அத்வைதிவித்வான் சில வாதங்களில் கண்டனம் செய்ய அதற்கு மறுப்பு மொழியும் வியாஜமாய் ஸ்ரீசததூஷணிக்கு விரிவான வ்யாக்யானம் செய்தருளியிருக்கிறார். இதன் பெயர் ஸஹஸ்ரகிரணீ தூஷணம் என்றால் தளம் என்று பொருளுமுண்டு. சததூஷணி என்றால் நூறு தளங்களைக் கொண்ட சதபத்ரம்-அதாவது தாமரை. ஆதவனுக்கே மலரும் தாமரையைப் போல் இந்த ஸஹஸ்ர கிரணி மூலமாகவே இந்த சததூஷணியும் பொருள் விளங்கும் என்பது இதை முழுவதும் ஸேவித்தவர்களுக்கு விளங்கும்.

2. **வரதராஜபஞ்சாசத் பாஷ்யம்:** இது ஸ்ரீதேசிகனின் திருவுள்ளமுகக்கும் படியாய் ஸ்ரீவரதராஜ பஞ்சாசத்திற்கு ஸ்ரீஸ்தோத்ர ரத்ன பாஷ்யங்களைப் போல் விரிவான வ்யாக்யானம். ஸர்வ ஸமஞ்ஜஸமாக ஒரு விஷயத்தையும் விடாமல் சர்ச்சை செய்து விஸ்தாரமாய் அருளிச் செய்த உரை இது. இதன் மூலம் அனேக அபூர்வார்த்தங்கள் நாம் அறியலாம்.

3. **த்ரய்யந்த சிந்தாமணி:** (இது இன்னம் அச்சில் வரவில்லை).

4. **ணத்வதத்துவ பரித்ராணம்:** (இதுவும் அச்சேறவில்லை.)

5. **ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திற்கு** ஸாராஸ்வாதினீயைப் பின் பற்றி ஸர்வ விசாரபஹுளமான கூலங்கஷமான விஸ்தார வ்யாக்யனம். இதன் பெயர் **ஸாரஸுதா** என்பது. இது அவசியம் அச்சிடவேண்டிய அரிய பொக்கிஷம்.

6. **கடவல்லீ விவரணம்:** கடோபனிஷத்திற்கு விஸ்தாரமான வ்யாக்யானம் இதுவும் அச்சிடப் பெறவில்லை.

ஸ்ரீவரதராஜ பஞ்சாசத் வ்யாக்யானம் ஒன்றைத் தவிர மீதி எல்லாம் அச்சேறவில்லை. இந்த ஸ்வாமி மஹாவ்யாகரணர். வியாகரணத்திலும் **காசிகா விவரண பஞ்சிகாவிற்கு** விரிவான உரை எழுதியுள்ளதாய் தெரிகிறது. தனிப்பட தாமே பல திவ்யதேசத்தெம்பெருமான்களின் மேல் தமிழிலும், வடமொழியிலும் ஸ்தோத்ரங்களைச் செய்திருப்பதாயும் பெரியோர் சொல்லக் கேட்டதுண்டு. ஸ்ரீதேசிகனின் பாதுகா ஸஹஸ்ரத்திற்கும் இந்த ஸ்வாமி ஒரு விரிவான உரை மணிப்ரவாளத்தில் (தமிழும் ஸம்ஸ்கிருதமும் கலந்த நடையில்) வரைந்திருப்பதாய் கூறுகின்றனர். மிக ஸமீபகாலத்தில் எழுந்தருளியிருந்தபடியால் இந்த ஸ்வாமியின் வம்சஸ்தர்களையண்டி கேட்டு ஷெ ஸ்ரீ கோசங்களை ஒரு படிமமெடுத்து வைத்தாவது ரக்ஷித்தல் இந்த மஹானுக்கும் ஸ்ரீதேசிக தர்சனத்திற்கும் செய்யக் கூடிய கைங்கரியமாகும்.

—சேட்டலூர் வா. **ஸ்ரீவத்ஸாங்காசாரியர்**

அன்பில் வி. கோபாலாசாரியார் ஸ்வாமி

விச்வ விக்யாத வைதுஷ்ய : க்ருதீ குணகணார்ணவ :
காவ்யாபிக்ஞ : கீர்த்தி மூர்த்தி: கோபாலார்யோ விராஜதே.

லௌகிகத்தில் மிகச் சிறந்த பதவியிலிருந்து விசேஷ ப்ரஸித்தி அடைந்திருந்த போதிலும், வைதிக பண்டித கோஷ்டியிலும் முன்னணியில் நின்று மிகவுயர்ந்த பண்டிதோத்தமர்களும் விஸ்மய பரவசராய் சிர : கம்பம் பண்ணும்படியான அபூர்வ விசேஷார்த்தங்களை வர்ஷிக்கைக் கீடான ஸர்வதோ முகமான பாண்டித்யத்தைப் பெற்று விளங்கி வந்த ஸ்ரீ உ-வே. ஏ. வி. கோபாலாசாரியர் ஸ்வாமியை அறியாதாரில்லை என்பது திண்ணம்.

நம் ஸ்வாமி தேசிகனுடைய ஸ்தோத்ரங்களில் அனேகமாக எல்லா ஸ்தோத்ரங்களுக்கும், யாதவாப்யுதயம் முதலிய காவியங்களுக்கும், ஸங்கல்ப ஸூர்யோதயம் எனும் த்ருச்ய காவ்யத்திற்கும், ஹம்ஸ ஸந்தேசம் எனும் ஸந்தேச காவ்யம், காளிதாஸனுடைய மேக ஸந்தேசம் எனும் ஸந்தேச காவ்யம்- ஆக இவ்விரண்டிற்குமுள்ள விசேஷத்தை எடுத்துக் காட்டும்படியான ஸந்தேச த்வய ஸாராஸ்வாதிநீ எனும் கிரந்தத்தையும், காளிதாஸனுடைய ச்ராவ்ய காவியங்களுக்கும், விக்ரமோர்வசீயம் எனும் த்ருச்ய காவ்யத்திற்கும்; க்லிஷ்டகதி யன்றியிலேயே வேதாந்தபரமான வ்யாக்யானத்தையும் செய்தருளிய பெருமை இந்த ஸ்வாமிக்கே அஸாதாரணமாக அமைந்த பெருமை என்பதில் ஐயமில்லை.

கோபால விம்சதி என்னும் ஸ்தோத்திரத்திற்கு விம்சதிலக்ஷணி என்று சொல்லக் கூடிய பூர்வோத்தர மீமாம்ஸைகளில் அடங்கிய இருபது அத்யாயங்களின் அர்த்த விசேஷ பரமாக வ்யாக்யானமிட்டிருக்கும் அழகைக் காணும் பொழுது 'மீமாம்ஸாரத்னம்'' என்ற பிருது இந்த ஸ்வாமியை அடைந்தே அந்வர்த்தமாயிற்று என்று உறுதியாகச் சொல்லுவர்கள் பெரியோர்கள். இது தவிற விசிஷ்டாத்வைத கண்டந ரூபமாகவுள்ள ஸூத்ராநுகுண்யஸித்தி, அத்வைத பூமிகா, வேதாந்த ரக்ஷாமணி, முதலிய அத்வைத க்ரந்தங்களுக்கு ஸமாதாந ரூபமாக அந்தந்த விமர்சம் என்னும் பெயரில் செய்தருளிய ஸூத்ரானுகுண்ய ஸித்தி விமர்சம், அத்வைத பூமிகா விமர்சம், வேதாந்த ரக்ஷாமணி விமர்சம், முதலிய க்ரந்தங்களைப் பார்த்து பரமானந்தமடையாத பண்டித உலகமில்லை என்றே சொல்லலாம்.

ஒரு ஸமயம் காஞ்சீ வைசாகோத்ஸவத்தில் பாராயண கோஷ்டியின் பின்புறமாக எழுந்தருளிக் கொண்டிருந்த ஸ்ரீ உ வே. கோஷ்டீபுரம் ஸ்வாமி இந்த ஸ்வாமியினுடைய பல பாகங்கள் கொண்ட வேதாந்த ரக்ஷாமணி விமர்ச க்ரந்தத்தின் முதல் பாகத்தை கடாக்ஷித்துக் கொண்டெழுந்தருளும்படி இருந்தது. இது என்ன ஸ்ரீகோசம் என்று ஒரு ஸ்வாமி வினவ, அதற்கு அந்த ஸ்வாமி விஸ்மயபரவசராய் ''என்னே இந்த ஸ்வாமியினுடைய பாண்டித்யம்!, என்னே வேதாந்த வைதுஷ்யம்! அத்வைத மதங்களைக் கண்டிக்கும் வைகரீ அன்யாத்ருசம். அவர்களுடைய வார்த்தைகளைக் கொண்டே அவர்களைக் கண்டிக்கும் அழகே அழகு! என்றிவ்வாறுக பதில் சாதிக்கும்படியிருந்ததை அடியேன் நேரில் அனுபவித்தேன்.

ஈசாவாஸ்யோபநிஷத்துக்கும், ஸத் வித்யா ச்ருதிக்கும் மற்றும் சில வேதாந்த பாகங்களுக்கும் இந்த ஸ்வாமி செய்தருளிய வ்யாக்யானங்களை ஸேவிக்கும் போதும்,

மதத்ரய பண்டிதர்களும் ஆச்சர்யத்தில் இழியும்படியாக வே தா ந் தா ர் த் தங்களை வர்ஷிக்கும் திறமையைப் பார்த்து இப்பொழுதும் மதத்ரய ஸாராஸ்வாதீ என்றும் பிருதமும் ஸபலமாயிற்று என்றே பெரியோர்கள் பணிப்பர். ஸ்ரீ ராமாயணம், ஸ்ரீ பாகவதம் முதலிய க்ரந்தங்களுக்கும், ஸஹஸ்ர நாமாத்யாயத்திற்கும் மற்றும் பல பல க்ரந்தங்களுக்கும் இந்த ஸ்வாமி ஆங்கிலத்திலும், ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் செய்தருளிய வ்யாக்யானங்களை ஸேவித்துப் பண்டித பாமர விபாகமற எல்லோரும் ஆ ன ந் த பரவசராகிருர்கள் என்பது ப்ரஸித்தம்.

இந்த ஸ்வாமி அருளிய உபய வேதாந்த ஐககண்ட்யம் திருப்பாவை வ்யாக்யானம் முதலிய த மி ழ் கிரந்தங்களை ஸேவிக்கும் போது ஸ்ரீ-உ வே, என்று குறிப்பது மிக அழகாக இந்த ஸ்வாமிக்கு அமையும் என்பதும் ஸத்யம். இவ்வளவு விசேஷ பாண்டித்யம் இருந்த போ தி லு ம் ''பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்ட்டாஸேத்'' என்ற ரீதியில் இந்த ஸ்வாமியினிடத்தில் ஆத்ம குண ஸம்பூர்த்தி இருந்ததை நினைக்கும் போது ''குணைர் தாஸ்ய முபாகத:'' என்றபடி இந்த ஸ்வாமியினிடத்தில் ஈடு படாதாரில்லை என்றே சொல்லலாம்.

கவிதையிலும் இந்த ஸ் வா மி க் கு ள் ள ராஸிக்யம் மிக அழகு என்பதற்கு ஒரே ஒரு சான்றை மட்டும் விண்ணப்பிக்கிறேன். நம் ஸ்வாமி தேசிகனுடைய இந்த ஏழாவது நூற்றுண்டு விழாவில் ஒவ்வொருவர் மனதிலும் நிச்சயமாகத் தோன்றக் கூடியவரும், கோழியாலம் நம் ஸ்வாமியால் குலபதி என்றே அழைக்கப் பெற்றவருமான வி-வி. ஸ்வாமி ஒரு ஸமயம் பண்டித கோஷ்டியுடன் இருந்த பொழுது ''வீ-வீ. நாம்நா விரஸிக விபு : பாஸதே ஸ்ரீநிவஸே :'' என்று கூறி இந்த ஸமஸ்யையை பூர்த்தி பண்ண வேணும் என்று ஸபையிலுள்ளோர்களை வேண்டும் போது மற்றவர்கள் ஒன்றும் தோன்ருமலிருக்க இந்த நம் ஏ. வி- ஸ்வாமி-

வித்வல்லோகே ரஸிகவர
இத் யாஸமந்தாத் ப்ரஸித்த :
நைச்யோத்ரேகாத் ரஸ விதுரதாம்
ஆத்ம நோக்ராஹயிஷ்யந்
ஹ்ரஸ்வம் தீர்க்கம் விபரிணமயந்
வ்ருத்த பாதஞ்ச விந்தந்
வீ வீ நாம்நா விரஸிக விபு :
பாஸதே ஸ்ரீநிவாஸ : என்று

ஸமஸ்யா பூரணம் பண்ணி யருளினுர். இந்த வ்ருத்தாந்தத்தை ஏ-வி. ஸ்வாமியிடமே கேட்டறிந்தேன். சுருங்கச் சொல்லில் அவதார விசேஷமான இத்தகைய சிறப்பு வாய்ந்த ஏ-வி. ஸ்வாமியைப் பெற்றது நம் ஸம்ப்ரதாயத்தின் பாக்யமே என்று சொல்ல வேணும்.

இந்த ஸ்வாமி பெரிய மடாதிபதிகளைப் போலே வருடா வருடம் ஓர் வித்வத் ஸதஸ் நடத்தி வந்ததும், தமக்குப் பின்னும் அது நடந்து வர ஏற்பாடு செய்திருப்பதும், பிது : சதகுணம் புத்ர : என்னும் ரீதியில் குணத்தில் இவரை விஞ்சி நிற்கும் இவருடைய குமாரரான ஸ்ரீ உ.வே. ஜி. ஸுந்தராசார்ய ஸ்வாமி அதைத் தொடர்ந்து நடத்தி வருவதும் ஆஸ்திக உலகம் அறிந்ததேயாகும்.

இஷு க்ஷயாத் என்ற ரீதியிலே விரிவுக்கஞ்சி நிறுத்திக் கொள்கிறேன்.

இத்தம் கோபால ஸூரீந்த்ர
க்ருபாஹஸ்தாவலம்பந :
கோலியாலம் ரங்கநாத தாஸோ
விக்ஞாபயத்யஸௌ.

கோழியாலம்
ரங்கநாதாச்சாரியர் ஸ்வாமி.

ஸ்ரீமதித்யாதி

லக்ஷ்மீநரஸிம்மாச்சாரியார் ஸ்வாமி (கூத்தப்பாக்கம்)

இந்த ஸ்வாமி நல்லான் சக்ரவர்த்தி குலத்தில் திலகமாய் திகழ்ந்தவர். லக்ஷ்மீ நரஸிம்மாசார்யர் என்று இவர் திருநாமம் நரஸிம்மாசார்யர் என்றும் சொல்வதுண்டு. 'கூத்தப் பாக்கம் மாமா' என்று ப்ரசித்தி, 'மந்த்ரமஹோததி' என்றும் வ்யவஹார முண்டு. செஞ்சியிலிருந்து இவர் பிதாமஹன் (பாட்டனார்) லக்ஷ்மிநரஸிம்மாசார்யர் ஸச்சூத்ரர்களுடைய ப்ரார்த்தனையின் பேரில் கூத்தப்பாக்கமெழுந்தருளினர். இவர்களுடைய கூடஸ்தர்—லக்ஷ்மீநரஸிம்மா சார்யர் என்கிற சித்தய்யாசார் ஸ்வாமி. இவர் செஞ்சி ராஜகுரு வரதாசார்ய ஸ்வாமி குமாரரான செஞ்சி ராஜகுரு, ஆதிபீடம், திருமலை நல்லான் சக்ரவர்த்தி, இம்மடி, ஸத்ரயாகம் சேஷாத்ரியாசார்ய ஸ்வாமியின் பௌத்ரர். ஷை சித்தய்யாசார் ஸ்வாமி சிறந்த வித்வான். சில அக்ரஹாரங்களை ப்ரதிஷ்டை செய்வித்தவர். அவ்வக்ரஹாரங்களுள் வட ஆர்காடு ஜில்லாவைச் சேர்ந்த 'எசனூர்' கிராமமும் ஒன்று. இன்னும் அங்கு ஸ்மார்த்த வைஷ்ணவ பிராம்மணர்களெல்லோரும் விவாஹாதிகளில் ஷை சித்தய்யாசார்ய ஸ்வாமி ஸம்பாவனை செய்து வருவது கண் கூடு. சித்தய்யாசார்யர் ஸ்வாமி பூதமொன்றை அடக்கிப் பணிகொண்டதும் ப்ரசித்தம். நிற்க இந்த லக்ஷ்மிநரஸிம்மாசார்யர் ஸ்வாமி மாதா அலர்மேல் மங்கையர். ஷை லக்ஷ்மிநரஸிம்மா சார்யருக்கு, வேதம், காவ்யம், நாடகம், தர்க்கம், வ்யாகரணம் வித்யாப்யாஸமும், பஞ்ச ஸம்ஸ்காரம், பரசமர்ப்பணம், மந்த்ரோபதேசங்கள் இவையாவனவும் தம் பிதாவினிடம். வேதாந்த காலக்ஷேபம் ஸ்ரீ நாவல் பாக்கம் அண்ணயார்ய மஹாதேசிகனிடம். அண்ணயார்ய ஸ்வாமியின் பரிபூர்ணக்ருபா பாத்ரம். காரணம்-க்ருஹீதக் ராஹியாயிருந்தமை. சிறிதளவும் விஸ்ம்ருதியே கிடையாது. இந்த ஸ்வாமி தர்ம சாஸ்த்ரத்திலும் நிபுணர். 1. தத்ர தத்ர ப்ரகாசிகை (ஸ்ரீ பாஷ்யத்தில் சிற்சில இடங்களின் விவரணரூபம்). 2. வைபவப்ரகாசிகை. (ஸ்ரீ அண்ணயார்ய மஹாதேசிகனின் சரித்திரத்தை மணிப்ரவாள நடையில் கூறும் கிரந்தம்). இவை போன்றவை இவரியற்றிய நூல்கள். சரியாகக் காப்பாற்றப்படாமையால் ஷை 2 கிரந்தங்கள் தான் தற்போது காணப்படுகின்றன. முன்னோர்கள் போலவே இவரும் கிராமாதிபத்யத்தை நிர்வஹித்து வந்தார். சிங்கவரம் ரங்கநாதப் பெருமாள் சந்நிதி நிர்வாகம் தீர்த்தம், மரியாதைகளையும் வைத்துக் கொண்டிருந்தார். இந்த ஸ்வாமியிடம் பஞ்சஸம்ஸ்காரம், பரசமர்ப்பணம் ஸாஹித்ய சாஸ்த்ராப்யாஸம், வேதாந்த காலக்ஷேபமும் செய்து கொண்டார்கள். ஸ்வாமியின் திருக்குமாரர் ஸ்ரீனிவாஸராகவா சார்யர் ஸ்வாமிக்கு இந்த ஸ்வாமியிடமே ஸர்வக்ரஹணமும். இதுபோலவே தான் ஸ்வாமியின் திருத் தம்பி குமாரரான சக்ரவர்த்தியாசார்ய ஸ்வாமியும் ஸ்வாமியிடமே ஸர்வார்த்தக்ரஹணம் பெற்றார். இவர் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரபங்க்திகளை மனப்பாடங்களாக்கி அனுஸந்தித்து வருவதைக் கண்ணுற்ற ஸ்ரீகோழியாலம் ஸ்வாமி, கோஷ்டீபுரம் ஸ்வாமி ப்ரப்ருதிகள் அத்யாச்சரியமடைந்தனராம்.

இந்த லக்ஷ்மிநரஸிம்மாசார்ய ஸ்வாமியின் ஸஹாயத்தால் வேதாந்தங்களை த்ருடீகரணம் பண்ணிக் கொள்வதற்காக 6 மாத காலம் கூத்தப் பாக்கம் கிராமத்தில் நாவல் பாக்கம் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் ஆச்ரம ஸ்வீகாரம் ஆனவுடன் எழுந்தருளியிருந்த தாயும், பிறகே வலையபேட்டைக்கு எழுந்தருளினதாகவும் பெரியோர் உரைப்பர். இந்த லக்ஷ்மிநரஸிம்மாசார்யர் ஸ்வாமி தேசிகார்ச்சையை தம் திருமாளிகையில் ஆராதித்து வந்ததும் குறிப்பிடத்தக்கது.

[கூத்தப்பாக்கம் கிருஷ்ணமாச்சாரியர்]

ஸ்ரீ உ. வே. கூத்தப்பாக்கம் - மஹாவித்வான்

நீலமேகாசாரிய ஸ்வாமி - (காசி)

இந்த மஹான் 1901-ம் வருஷம் கோடிப் பாக்கத்தில் ஸ்ரீ உ. வே. தேசிகாசாரியரின் த்விதீய குமாரராய் அவதரித்தார். திருவையாறு கலாசாலையில் வியாகரண சாஸ்த்ரத்தில் தேர்வு பெற்றுர். க்ஞான வைராகியானுஷ்டான சேவதியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸேதியாதி ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமி ஸன்னதியில் உபய வேதாந் க்ரந்த காலக்ஷேபங்களைச் செய்து அந்த ஸ்வாமியின் திருவடி வாரத்தில் உபயானுஷ்டானமும் செய்தருளினுர். ரீவா ராஜ குரு குலம் புஷ்கரம் ஸம்ஸ்கிருத கலாசாலை, ஷோலாப்பூர், திருப்பதி ஸ்ரீ வெங்கடேச்வரா வித்யாலயம், வாராணஸீ ராமானுஜ வித்யாலயம், பிருந்தாவனம் முதலிய விடங்களில் வேதாந்த வ்யாகரணுதி சாஸ்த்ரங்களை ப்ரவசனம் செய்துக் கொண்டு எழுந்தருளியிருந்தார். கூடைசியாக 1956 முதல் வாராணஸீ ஸம்ஸ்க்ருத விச்வ வித்யாலயத்தில் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ராத்யாபகராய் 10 வருஷ காலம் எழுந்தளியிருந்து 1965-ம் வருஷம் திருநாடலங்கரித்தார்.

இந்த ஸ்வாமி நமது ஸித்தாந்தத்திற்கு க்ரந்த ரூபமாய் செய்தருளிய உபகராமாவது: 1. ஹிந்தியில் ஸ்ரீ நியாய ஸித்தாஞ்ஜனத்திற்கு விரிவான வியாக்யானம் (அச்சிடப் பட்டுள்ளது) 2. நியாய விம்சதி வியாக்யானம் (ஹிந்தியில்; அச்சிடப்பட்டுள்ளது) 3. நியாஸ திலக வியாக்யானம் 4. யதிராஜ ஸப்ததி: 5. பரமபத ஸோபானம், (ஸம்ஸ்கிருதானுவாதமும், ஹிந்தி உரையும்) 6. குருபரம் பராப்ரபாவம், 7. வேதாந்தகாரிகாவளி, 8. அஷ்டசுலோகி ஆகிய இம் மூன்றையும் ஹிந்தியில் உரையுடன் வெளியிட்டருளினுர். 9. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம், 10. ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரம் (ஸம்ஸ்கிருதானுவாதத்துடன் இப்பொழுது ஸ்ரீ உ. வே. உத்தமூர் வீரராகவாசாரிய ஸ்வாமியால் பிரகாசப் படுத்தப்பட்டது) 11. கீதார்த்தஸங்க்ரஹம் முதலியன. இன்னும் பல இந்த ஸ்வாமியினது ஹிந்தி உரையுடன் வடதேசத்தில் பிரகாசப் படுத்தியுள்ளார்கள். இவற்றையெல்லாம் விட அனேக ஸஞ்சிகைகளுக்கு தமிழ், ஸம்ஸ்கிருதம், ஹிந்தி முதலிய பாஷைகளில் ஸாரமான பல வியாஸங்களை அப்பப்போது எழுதியிருக்கிருர். சுருக்கமாய் கூறுகிற விடத்தில்—வடதேசத்தில் ஸமீப காலத்தில் நமது ஸித்தாந்தத்தைப் பரப்பி ப்ரசாரம் செய்த மஹான்களில் இந்த ஸ்வாமி குறிப் பிடத்தக்கவர் என்பது பிரஸித்தமானது.

—சேட்டலூர் ஸ்ரீவத்ஸாங்காசாரியர்

ஸ்ரீ:

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான

ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகன்

(பெரியாண்டவன்)

ஸ்ரீமத் பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யரான

நாராயண யதீந்த்ர மஹாதேசிகன்

இவருடைய அவதாரஸ்தலம் வேளியநல்லூர். இம்மஹான் நைஷ்ட்டிக ப்ரம்மசாரியாகவே எழுந்தருளியிருந்தார். ஸ்ரீமத் பரமபரி, பெரியாண்டவனிடம் நேராக காஷாயம் ஸ்வீகரித்துக்கொண்டார். ஆத்மபர ஸமர்ப்பணமும் அவ்விடத்திலே யாயிற்று.

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்

[பௌண்டரீகபுரம் ஸ்வாமி என்றும், பெரிய ஸ்வாமி என்றும் ப்ரஸித்தியுடன் எழுந்தருளியிருந்தார்.]

இந்த ஸ்வாமியின் அவதாரஸ்தலம் பௌண்டரீகபுரம் என்ற ஸ்ரீக்ராமம். இது ஒப்பிலியப்பன் ஸந்நிதியான திருவிண்ணகருக்கு அருகில் கிழக்கில் ஒரு மைலில் உள்ளது. இந்த ஸ்வாமி சிறுபிராயத்திலேயே தர்க்க தேவதை புகழ் பெற்று விளங்கிய குறிச்சி ரங்காசார்யர் ஸ்வாமியினிடம் தர்க்கம் முதலிய ஸாமாந்ய சாஸ்திரங்கள் பயின்று நான்கு சாஸ்திரங்களிலும் ஒப்புயர்வற்ற மஹாவித்வானாக விளங்கினர்.

பிறகு வேதாந்த சாஸ்திரத்தை பரமஹம்ஸேத்யாதி நாராயண யதீந்த்ர மஹாதேசிகனிடம் காலக்ஷேபம் செய்தருளினர். நாராயண யதீந்த்ர மஹாதேசிகனின் க்ஞான வைராக்யானுஷ்டானங்களில் ஈடுபட்டு, அவ்விடத்திலேயே வேதாந்த காலக்ஷேபத்தையும் ஆத்ம ஸமர்ப்பணத்தையும் செய்தார். பிறகு மைசூர் முதலிய தேசங்களில் ஸஞ்சாரம் செய்து அத்தேசங்களையும் பரிசுத்தம் செய்தார். "பாத தூளி படுதலால் இவ்வுலகம் பாக்கியம் செய்ததே" என்று போற்றக்கூடிய பெருமை இந்த ஸ்வாமியின் திருவடிகளுக்குண்டு.

பிறகு இந்த ஸ்வாமி ரங்கநாதன் ஸந்நிதி என்றும், பூலோக வைகுண்டம் என்றும் போற்றக்கூடிய ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் "அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகம் ஆஸ்வ" என்ற ஸ்ரீபாஷ்யகாரரின் சரணாகதிகத்யத்தை அனுஸரித்து நித்யவாஸம் பண்ணியருளினர். அவ்வமயம் ஸ்ரீ ஏ. வி. கோபாலாச்சாரியார் ஸ்வாமி போன்ற மஹாப்ராக்ஞர்கள் வேதாந்த காலக்ஷேபம் செய்தனர். பிறகு இம்மஹானின் அனுக்ரஹத்தினால் ஏ. வி. கோபாலாச்சரியர் ஸ்வாமி வேதாந்த க்ரந்தங்கள் பல இயற்றும்படி பெருமையை அடைந்தார்.

க்ருத க்ருத்யாதிகாரத்தில் "ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல்" என்ற ஸ்வாமி தேசிகனின் பொன்மொழியைப் பூரணமான பொருள் உள்ளதாகச் செய்தவர் இம்மஹான். இதனால் க்ஞான வைராக்யாநுஷ்ட்டான சேவதி என்றும் புகழினாலுண்டாகிய பொருந்திய பொருளுடன் கூடிய திருநாமத்தை அடைந்தார்.

இம்மஹானிடம் காலக்ஷேபம் செய்த மஹான்களுள் ஒருவர் இம்மஹானுக்குப் பின் இந்த ஸ்தானத்தை அலங்கரித்தவர் ஸ்ரீ ரங்கநாத மஹாதேசிகன்.

ஸ்ரீ ரங்கநாத மஹாதேசிகன்

இம்மஹானின் அவதாரஸ்தலம் ராஜமன்னார் கோயில் என்று கூறப்படும் ஸ்ரீ ராஜகோபாலன் கோயில் கொண்டிருக்கும் சம்பகாரண்ய க்ஷேத்ரம்.

இந்த க்ஷேத்ரம் தஞ்சை ஜில்லாவில் உள்ளது. இந்த ஹரித்ரா நதியின் வடகரையில் இந்த ஸ்வாமி அவதரித்த திருமாளிகை இருக்கிறது. இந்த ஸ்வாமி ஸ்ரீ பாஷ்ய ஸிம்ஹாஸநாதிபதி, நடாதூர் அம்மாள் வம்சம். சிறு பிராயத்தில் பூரணமாக வேதாத்யயனம் செய்து, பிறகு வ்யாகரண சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்று, சேர நாட்டைச் சேர்ந்த பட்டாம்பி என்ற ஊரில் ஸம்ஸ்கிருத கலாசாலையில் ஆசாரியராக எழுந்தருளியிருந்தார். பிறகு ஓய்வு பெற்று ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்களில் நல்ல தேர்ச்சி பெற்று, ஸ்ரீ ரங்க க்ஷேத்திரத்தில் காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டிருந்தார்.

இந்த ஸ்வாமிக்குப் பிறகு இந்த ஆசார்ய பீடத்தை அலங்கரித்துக்கொண்டு க்ஞான வைராக்யானுஷ்ட்டானங்களால் பௌண்டரீகபுரம் ஸ்வாமிக்கு ஈடாக விளங்குவர் விண்ணுற்றங்கரை ஆண்டவன்.

ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ர மஹாதேசிகன்

இந்த ஸ்வாமியின் அவதாரஸ்தலம் கல்யாணபுரம் என்கிற ஸ்ரீ க்ராமம். இந்த ஸ்ரீ க்ராமம் கண்டியூர் என்கிற ஹரசாபஹர க்ஷேத்திரத்திற்கு முக்கால் மைலில் வடகிழக்கில் உள்ளது.

பங்குனி அனுஷத்திலே ஸ்வாமியின் அவதாரம், ஸ்ரீ ஸ்வாமி ஸாமவேதி. ஸ்ரீ ஸ்வாமி சிறுவயதில் உபநயன காலத்தில் தனது தகப்பனுராகிய வரதாசாரியார் என்கிற மஹானுல் உபநயனம் செய்விக்கப் பெற்று, ஸாம வேதத்தைப் பூரணமாக அத்யயனம் செய்து பிறகு அந்த ஸ்வாமியினிடமிருந்தே திருவிலச்சினை அடைந்து மந்த்ரோப தேசமும் பெற்று, சிறு பிராயத்திலிருந்தே ஸதாசார ஸம்பன்னராய் எழுந்தருளி இருந்தார். பிறகு தகுந்த வயதில் பெரிய ஸ்வாமி என்று சொல்லப்படும் பௌண்டரீகபுரம் ஸ்வாமியிடம் ஆத்ம ஸமர்ப்பணம் செய்து, க்ரந்த காலக்ஷேபங்களும் செய்து அந்த ஸ்வாமியின் பரிபூர்ண க்ருபைக்குப் பாத்திரராக விளங்கினுர். ஸ்ரீவே. நாவல்பாக்கம் நரஸிம்மாச்சாரியார் ஸ்வாமி, ஸ்ரீ பரமபரி, கோழியாலம் ஸ்வாமி ஆகிய பாகவதோத்தமர்களுக்குப் பணிவிடை செய்து அம்மஹான்களின் பரிபூர்ணுனுக்ரஹத்திற்குப் பாத்திரமானவர் நம் ஸ்வாமி. பூர்வாச்ரமத்தில் ஐச்வர்யவானுக இருந்தும் ''எனது ஆசாரியன் பௌண்டரீகபுரம் ஸ்வாமி இருந்த இடமே எனக்கும் இடம் என்றும், அவர் ஆராதித்த எம்பெருமானை ஆராதிப்பதே தனது முதல் கடமை என்றும், பரதன் ராமனுடைய பாதுகைகளை அரியாஸனத்தில் ஆராதிப்பதையே தனது பரம நோக்கமாகக் கொண்டது போல் நம் ஸ்வாமியும் ஐச்வர்யாதிகளைப் பொருள்படுத்தாமல் ஸ்ரீ பௌண்டரீகபுரம் ஸ்வாமியின் பாதுகாராதனத்தையே பரம ப்ரயோஜனமாக எண்ணி காஷாயாடையுடன் அந்த ஆச்ரமத்தை அலங்கரித்து, ஆச்ரமத்தை அழகாக நிர்மாணம் செய்து, ஸ்ரீ பௌண்டரீகபுரம் ஸ்வாமியின் திருநக்ஷத்திரம் முதலிய கைங்கர்யங்களை மஹோத்ஸவமாகக் கொண்டாடும் முறை ஆசார்ய பக்திக்கோர் ஆதர்சமாகும்.

ஸ்ரீ விண்ணுற்றங்கரை யாண்டவன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனின் ஜீவாத்ம பரமாத்ம தத்வோபதேசக்ரமம் இந்த ஸ்வாமியினிடம் சரணுகதி பண்ணிக்கும்படி பாக்யம் பெற்ற மாந்தர்களுக்கே அனுபவிக்கக் கூடிய அரிய பொருள். தனது உபதேசத்தை விலைச் சாந்தாக்காமல் நறுமணச் சாந்தாக்கித் தகுந்த காலத்தில் உபதேசிக்கும் மேன்மை இந்த மஹானிடம் காணலாம். ஆத்ம ஸமர்பணம் பண்ணிக் கொள்ளும் பாக்யம் அடைந்த மன்னுர்குடி அரித்ரா நதி வடக்கு வீதி ரங்காச்சாரியார் போன்ற மஹான்கள் போற்றக் கூடியவர்.

[—வடுவூர். ரங்கநாதாச்சாரியார்.

ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகன்.

இவ்வாசார்யன் ராஜமன்னுர்ஸ்வாமி ஸந்நிதிக்கு கீழ்பாகத்தில் விளக்குடியில் ஈயுண்ணி பாரத்வாஜ கோத்திரத்தில் அவதரித்து ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் வேதாந்தராமாநுஜ மஹா தேசிகன் ஸந்நிதியில் ஸர்வார்த்தமும் க்ரஹித்து அவரிடமே ஸ்ந்யாஸாசிரமத்தையும் ஸ்வீகரித்து மிகவும் க்ஞானவைராக்யநிஷ்டராய் ஸ்ரீரங்கத்தில் கொள்ளடக்கரையில் நாணலால் நிர்மிதகுடீரத்தில் எழுந்தளியிருந்துகொண்டு ஸ்ரீநிவாஸமஹாதேசின் (ஆண்டவன்) முதலான பல வித்வான்களுக்கு காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு எழுந் தருளி இருந்தார். இந்த ஸ்வாமியை திருத்துரைப்பூண்டி ஆண்டவன் என்றும் வ்யவ ஹரிப்பதுண்டு.

ஸ்ரீமத்கோபாலஸூரேர் நிர்வதிகருணவாப்த ஸத்ஸம்ப்ரதாயம்,
ஸ்ரீமத்வேதாந்தராமாநுஜ யதிந்ருபதிமதம் ஸர்வதஸ் ஸ்தாபயித்வா |
யஸ்மிந் ஸத்ஸம்ப்ரதாயம் ஸகலமுபதி சந்நம்சதோzநுப்ரவிஷ்ட:,
ஸ்ரீமச் ஸ்ரீவாஸராமாநுஜமுநி மநகம் தம் ப்ஜே தேசீகேந்த்ரம் ||

ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்.

(பெரியாண்டவன்)

பெருமாள்கோவில் சாண்டில்ய கோத்ரத்தில் ஸாமசாகையில் பகல்தீவட்டி க்ருஷ்ண மாசாரியர் என்கிற மஹநீயருக்கு திருக்குமாரராய் கலி 4900க்குமேல் ரௌத்ரி கும்ப சுக்ல த்ரயோ தசியில் புஷ்ய நக்ஷத்திரத்தில் அவதரித்து காஞ்சீபுரம் திருமலைலக்ஷ்மீ குமாரதாத தேசிகன் திருவம்சத்தைச் சேர்ந்த சாமா பெரியப்பன் ஸ்வாமியிடம் பஞ்சஸம்ஸ்காரங்களைச் செய்துகொண்டு பால்யம்முதல் அதிவிரக்தராய் எழுந்தருளியிருந்து பால்யத்திலேயே ஸ்ரீரங்கம் வேதாந்த ராமானுஜஸ்வாமி ஸந்நிதிக்கு எழுந்தருளி தண்டன் ஸமர்ப்பித்துநிற்க ஸ்வாமியினுடைய தேஜஸ்ஸையும் க்ஞானவிநய வைராக்யாதிகளையும் கடாக்ஷித்து போர உகந்து இந்தமுகமாய் விசேஷமாக ஸம்பிரதாய மபிவ்ருத்த மாகுமென்று திருவுள்ளம்பற்றி தாம் ஸ்வாமிக்கு ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் பரஸமர்ப்பணம் பண்ணிவைத்து தம்முடைய சிஷ்யரான ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகனிடத்தில் ஸ்வாமியை ஒப்புவித்து நாம் அசக்த் ரானபடியால் நீர் இந்த அதிகாரி விஷயத்தில் விசேஷாநுக்ரஹத்துடன் ஸம்பிரதாய ப்ரசவசநம் பண்ணவேண்டுமென்று நியமித்து ஸ்வாமியையும் குளிர கடாக்ஷித்து விசே ஷித்து நம் திருக்குடந்தை தேசிகன் ஸம்பிரதாயத்தை ப்ரவசநம் பண்ணக் கடவீர் என்று நியமிக்க ஸ்வாமியும் தந்யோஸ்மி யென்று அநுக்ரஹத்தை சிரஸாவஹித்து அந்த நியப்படி ஸ்ரீநிவாஸராமாநுஜ ஸ்வாமி ஸந்நிதியில் யச்வதர்தங்களையும் க்ரஹித்து துரீயாச்ரமத்தை வஹித்து வெகுகாலம் கேவலத போநிஷ்டராய் ஸ்ரீமதஷ்டாக்ஷர ஜபபராய் யெழுந்தருளி இருந்து பிறகு எம்பெருமானர் முதலானவர்கள் போல் அநேக பரமைகாந்திகளுக்கு ஸம்ப்ர

தாய ப்ரவர்த்தனம் செய்து திருக்குடந்தை தேசிகனால் நிர்ணயிக்கப்பட்ட ஜயந்தி யாத்யநுஷ்டாநங்களை விசேஷமாக அபிவிருத்தி செய்து ஜகத்தில் ஆசார்ய பக்தியை வேகமாய் பரவச் செய்து அதனாலே ஆண்டவன் என்று ஸகலஜநங்களும் கொண்டாடும்படி ஸ்ரீரங்கத்தில் ப்ரவசனம் செய்து ஸ்ரீரங்கநாதன் திருவஹீந்திரபுரத்தில் ஸ்ரீதேசிகன் பெருமாள் கோயில் தூப்புல் தேசிகன் முதலான திவ்யதேசங்களில் அநேககைங்கரியங்களை செய்தருளி 54 சாதுர்மாஸ்யம் எழுந்தருளி இருந்தார். ஸ்வாமியின் திருவடிகளில் அநேகம் திருநாமங்கள் க்ருஹஸ்தர்களாயும் ஸந்யாஸிகளாயும் எழுந்தருளியிருந்து அநேகதிவ்ய தேசங்களில் இப்பவும் ப்சவசநம் செய்து வருகிறார்கள்.

பெரியாண்டவன். ஸுபானுவருஷம் தைமீ கிருஷ்ணத்ரயோதசியில் திருநாட்டை அலங்கரித்தார். இவருடைய ப்ருந்தாவனம் ஸ்ரீரங்கத்தில் உள்ளது.

இந்த ஆண்டவனுடைய சரித்திரத்தில் நடந்த விருத்தங்களையும் விவிதாச்சார்ய சேஷ்டிதங்களையும் ஸ்வபாவங்களையும் முன்னோர் பலர் ஆசைகொண்டு வடமொழியிலும் தென்மொழிகளிலும் எழுதியுள்ளார்.

ஸ்ரீரங்கேசபதே ஸமர்ப்பிதபரம் ச்ருத்யந்தராமானுஜ
ஸ்ரீயோகீந்த்ரகுரூத்தமேந யமிந: ச்ருத்யந்தவித்யாத்மந: |
ப்ராப்தச்ருத்யவதம்ஸயுக்மஹ்ருதயம் ஸ்ரீவாஸராமாநுஜாத்
ஸ்ரீ ஸ்ரீவாஸ முநீந்த்ர தேசிகமணிம் ச்ரேயோ நிதிம் ஸம்ச்ர

பாதுகாஸேவகராமாநுஜ தேசிகன்

(சின்னாண்டவன்)

இம்மஹாநுபாவர் வேளியநல்லூரில் சடமர்ஷண கோத்திரத்தில் திருமலைசங்கபுரம் ஸ்ரீகிருஷ்ணதாதாசாரியார் ஸ்வாமியின் திருக்குமாரராய் ஸ்ரீநிவாஸராகவதாதாசார்யர் என்கிற திருநாமத்துடன் ஸர்வதாரிவருஷம் கார்த்திகைமீ மகநக்ஷத்திரத்தில் அவதரித்தருளினார். பின்பு தம் திருத்தகப்பனாரிடம் உபநயநம் பஞ்சஸம்ஸ்காராதிகளை அடைந்து பின்பு மைசூர் ஸம்ஸ்தான வித்வான் ராமாசாஸ்த்திரிகளிடம் தர்கசாஸ்த்திரத்தை அப்யஸித்து ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனிடம் ஸகல வேதாந்தார்த்தங்களையும் பகவத் விஷயார்த்தங்களையும் கிரஹித்து அவரிடமே துரீயாச்ரமத்தைப்பெற்று மஹாவைராக்யநிதியாய் எழுந்தருளி இருந்து (1) ஆந்ஹிகார்த்த ப்ரகாசிகா (2) ஜயந்தீநிர்ணயம் (3) உக்த்யாசார்யநிஷ்டா விசாரம் (4) ஸத்பதரக்ஷை (5) ஜந்மாஷ்டமி நிர்ணயம் (6) தத்க்ரதுந்யாய விசாரம் (7) ஆசார்யஸம்பாவனாக்ரமம் (8) யதிகர்மஸமுச்யம் (9) ஆசௌசஸங்கிரஹம் முதலிய கிரந்தங்களை அனுக்ரஹித்தருளி முனித்ரயஸம்பிரதாயாஸாதாரணமான ஜயந்த்யநுஷ்டாநம் முதலானவைகளை விசேஷமாக ப்ரவர்த்திப்பித்துக்கொண்டு ஸம்பிரதாஸ்தாபநம் செய்துக்கொண்டு எழுந்தருளி இருந்தார்.

இந்த மஹான் ஸ்ரீரங்கத்தில் விஜயவருஷம் தைமீ சுக்லஸப்தமி திதியில் திருநாட்டிற்கு எழுந்தருளினர்.

ஸ்ரீமந்நாதமுநீந்த்ர யாமுநமுநி ஸ்ரீஸம்யமீந்த்ராத்மந:
ஸ்ரீ ஸ்ரீவாஸ முநீந்த்ர தேசிகமணே: ப்ராப்தாகமாந்தத்வயம் |
ஸ்ரீரங்கேசபதே ததர்ப்பிதபரம் ஸ்ரீபாதுகாஸேவக
ஸ்ரீராமாநுஜ யோகிநம் குருவரம் வந்தே தயாஸாகரம் ||

வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்

(நம்மாண்டவன்)

இவ்வாசார்யவள்ளல் தேரழுந்தூர் என்கிற திவ்யதேசத்தில் ப்ரஜோத்பத்திவருஷம் ஆவணிமாதம் பூரட்டாதித் திருநக்ஷத்திரத்தில் ஈயுண்ணி ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமியின் திருக்குமாரராய் அவதரித்தார்.

பிதாவினுல் கர்ப்பாஷ்டமத்தில் உபநயனுதிகள் செய்துவைக்கப்பட்டவராய் பெரியாண்டவன் ஸந்நிதியில் பஞ்சஸம்ஸ்காரங்களையும் பெற்று விளக்கொடி கிராமத்தில் தர்க்கவித்வானுன வேதாந்தாச்சாரியார் ஸ்வாமியிடம் தர்க்கம் முதலான ஸாமாந்ய சாஸ்த்திரங்களையும் க்ரஹித்து மஹாவாவதூகராய் வரதாச்சாரியார்ஸ்வாமி என்று பரம ப்ரஸித்தராய் எழுந்தருளி இருந்தார்.

ஸ்ரீமத் சின்னுண்டவன் திருவடியிலே ஆச்ரயித்து ஸ்வரூபகிரந்த சதுஷ்டய காலக்ஷேபம் செய்து க்ஞாநவைராக்யநிதியாய் எழுந்தருளிஇருந்து திருக்குடந்தை ஆண்டவன் (காடந்தேத்திஸ்வாமி) ஸந்நிதியில் மோக்ஷாச்ரமம் பெற்று பலதிவ்யதேசங்களை மங்களாசாஸநம் செய்து ஆங்காங்கு தனக்கே அஸாதாரணமான மதுரவாக்கினுல் தேசிகன் ஸூக்திகளான பாதுகாஸஹஸ்ரம் முதலான க்ரந்தங்களில் உள்ள ஸூக்ஷ்மார்த்தங்களையும் ஸம்பிரதாயார்த்தங்களையும் ஸாதித்துக்கொண்டு அர்சாவதாரத்திலே அளவுகடந்த ப்ரேமையோடும் ஸ்ரீதேசிகன் விஷயத்தில் அசஞ்சலமான ப்ரதிபத்தியோடும் ஸ்ரீ தூப்புல் தேசிகன் முதலான அர்ச்சாதிருமனிகளுக்கு அத்யத்புதமாய் அபூதபூர்வமாய் இருக்கும்படியான மஹோத்ஸவத்தை நடத்தியும் பலவிதமாக தேசிகன் ஸம்ப்ரதாயத்தை ஸ்தாபித்தார்.

இந்த ஸ்வாமி 24 சாதுர்மாஸ்யம் எழுந்தருளி இருந்து ப்ரஜோபத்திவருஷம் ஆடி விக்ருஷ்ணபஞ்மிதிதியில் பெருமாள்கோயில் நித்யவிபூதிக்கு எழுந்தருளினர்.

ஸ்ரீமச் ச்ரீவாஸ யோகீச்வரபத விநதம் லப்த வேதாந்தயுக்மம்
ஸ்ரீபாதூஸேவி ராமாநுஜ முநிதிலகாத் தத்பதந்யஸ்த பாரம்
ஸ்ரீமச் ச்ரீவாஸ ராமாவரஜமுநிமணேர் லப்த மோக்ஷாச்ரமம் தம்
ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜயதி ந்ருபதிம் ஸம்ச்ரயே க்ஞானவார்த்திம்

ஸ்ரீநிவாஸமஹாதேசிகன்

(ஆக்கூர் எங்களாண்டவன்)

பெருமாள் கோவிலுக்கு ஸமீபமான ஆக்கூர் என்றும் அக்ரஹாரத்தில் விக்ரம வருஷம் புரட்டாசி மாதம் உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில். ஸ்ரீநிவாஸாசார்யருக்கு திருக் குமாரராய் அவதரித்தார். இம்மஹானை இவருடைய காலத்தில் ப்ரும்மோபதேசம் செய்து வைத்தார். இவருடைய மாதுலரான திருமலை சதுர்வேத சதக்ரது நாவல் பாக்கம் வேதவ்யாஸ ஸ்ரீநிவாஸதாதாசாரியார் (மணியம்) ஸ்வாமியிடம் பஞ்சஸம்ஸ்காரம் முதலான வைகளைப் பெற்றார். காஞ்சீபுரத்தில் எழுந்தருளி இருந்த மஹாவித்வான் குன்னப்பாக்கம் ஸ்ரீநிவாஸாசாரியரிடம் ஸகலஸாமாந்ய சாஸ்த்திரங்களையும் வாசித்து ஸகலகலாவல்லப ரானார். சோளஸிம்மபுரம் முதலான திவ்யதேசித்தில் எழுந்தருளி இருந்து பலதடவைகள் ஸ்ரீமத் ராமாயணப்ரவசனம் செய்தார்.

திக்விஜயம் செய்து காஞ்சீபுரம் எழுந்தருளிய நம்மாண்டவன் ஸந்நிதியில் ஸ்வரூப ஸூக்திகள் எல்லாவற்றையும் ஸேவித்து புதுக்கோட்டை முதலான ராஜஸதஸ்களுக்குச் சென்று உத்தமோத்தமானஸம்பாவனைபெற்று நம்மாண்டவன் முதலான பல மஹான்களின் நியமனத்தின் பேரில் பரமஹம்ஸேத்யாதியாய் எழுந்தருளி இருந்த நாராயண யதீச்வர ரிடத்தில் ஆச்ரம ஸ்வீகாரம் பெற்று பெரியாண்டவன் திருநாமத்தை பூண்டு ஞாநவைராக்ய சேவதியாய் ஸம்பிரதாய ஸ்தாபன கல்யாண குணங்களாலும் இவை எல்லாவற்றையும் மகுடீகரிக்கிரி பவ்யசீலத்தாலும் இவைகள் எல்லாவற்றோடும் பிரகாசிக்கிற கிரந்த காலக்ஷேப நைபுண்யத்தைக் கண்டு வியந்து ஸர்வஜநங்களும் அஸ்மத் ஸ்வாமி என்று போற்றும்படி எழுந்தருளி இருந்து பல திவ்ய தேசங்களுக்குச் சென்று எம்பெருமான்களை மங்களாசாஸநம் செய்துகொண்டு விய வருஷம் பங்குனி மாதம் கிருஷ்ண பக்ஷத்வாதசி யன்று ஸ்ரீரங்கத்தில் திருநாட்டிற்கு எழுந்தருளினார்.

ஸ்ரீமத் வேதாந்தராமாநுஜ யதி ந்ருபதேர் லப்த வேதாந்தயுக்மம்.
ஸ்ரீமத்தேவாதிநேது : சரணஸரஸிஜே தேந தத்தாத்மபாரம் !
ஸ்ரீமத் ஸ்ரீவாஸ யோகீச்வர மஹிதமஹாஸம்ப்ரதாயைகநிஷ்டம்.
வந்தே ஸ்ரீவாஸ யோகீச்வர குருமநகம் வத்ஸலம் பவ்யசீலம்!!

ஸ்ரீரங்கநாதமஹாதேசிகன் (தெம்பரை)

இவ்வாசார்ய வள்ளல் ராஜமன்னார் கோவில்பக்கம் தென்பிரை என்கிற அக்ரஹாரத்தில் வங்கீபுரம் சேஷாத்ரியாசாரியார் ஸ்வாமியின் திருக்குமாரராய் ஸாமசாகையில் விய வருஷம் ஆவணி மீ ரேவதி நக்ஷத்திரத்தில் அவதரித்தார். பின்பு சாஸ்திரோக்தமாக ஸகாலங்களில் உபநயநம் பஞ்சஸம்ஸ்காரம் முதலிய ஸம்ஸ்காரங்களை தமது பிதாவிடமே பெற்று மன்னார்குடி வ்யாகரண மஹாவித்வான் ரங்காசாரியார் ஸ்வாமியிடம் வ்யாகரண சாஸ்த்திரத்தையும். விளக்குடியில் எழுந்தருளியிருந்த தர்க ஸிம்மம் ஸ்ரீநிவாஸாசார் ஸ்வாமி யிடம் தர்க்கசாஸ்த்திரத்தையும். மஹாமஹோபாத்யாய பிரம்ம ஸ்ரீ. சின்னஸ்வாமி சாஸ்த்திரி

களிடமும் மீமாம்ஸா சாஸ்த்திரத்தையும் அப்யஸித்து தேற்ச்சி பெற்ருர். பின்பு நம்மாண்டவன் க்ருபா கடாக்ஷத்தால் வஹூர் சக்ரவர்த்தி திருமகனிடம் பரஸமர்பணம் செய்து அத்திருவடிவாரத்திலேயே க்ரந்த சதுஷ்டயத்தை ஸேவித்து மஹாவிரக்தாக்ரேஸரராய் எழுந்தருளி இருந்து நம்மாண்டவன் ஸந்நிதியில் ஆச்ரமஸ்வீகாரமும் ஸ்ரீரங்கத்திலேயே எழுந்தருளி இருந்து அநேகம் வித்வான்களுக்கு காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டும் ஸ்ரீரங்கநாதனை மங்களாசாஸநம் செய்துகொண்டு எழுந்தருளி இருந்தார்.

ஸ்ரீமத் வேதவதம்ஸ லக்ஷ்மணமுநே: ப்ராப்தாகமாந்த த்வயம்,
தேந ஸ்ரீரகுபுங்குவாங்க்ரியுகளே ந்யஸ்தாத்ம ரக்ஷாபரம்!
ஸ்ரீமத் ஸ்ரீநிதி யோகிவர்ய கருணா லப்தாப்ஜ சக்ராங்கநம்,
வந்தே சாந்தி விரக்தி பூர்ணமநகம் ஸ்ரீரங்கநாதம் குரும்!!

வேதாந்தராமாநுஜ மஹாதேசிகன்

இந்த மஹநீயர் பராபவ வருஷம் (1907) பங்குனி மீ புஷ்ய நக்ஷத்திரத்தில் பரமச்ரோத்ரியராய் அத்யயந மஹாநிதியாய் எழுந்தருளி இருந்த பத்மநாபாசாரியார் ஸ்வாமிக்கு திருக்குடந்தையில் குமாரராய் அவதரித்து யதா காலத்தில் ஜாதகர்மநாமகரணம், உபநயநம் பஞ்சஸம்ஸ்காரம் முதலானவைகளை பெற்று அத்யயநம் செய்தும் நாலாயிர திவ்யப்ரபந்தங்களையும் ஓதி ஆராவமுதன் ஸந்நதியில் அத்யாபக கைங்கரியத்தில் அந்வயித்து வந்தார். பிறகு ந்யாயசிரோமணி பரீக்ஷையில்தேரி அச்சமயம் திருக்குடந்தைக்கு எழுந்தருளி இருந்த தேரழுந்தூர் ஆண்டவன் ஏள்ளி இருக்கும்போது அந்த ஸ்வாமி ஸந்நதியில் ரஹஸ்யத்ரய ஸாரம் பகவத் விஷயம் – கீதாபாஷ்யம் இவைகளை அதிகரித்தார். ஸ்ரீ ஆக்கூர் ஆண்டவன் ஸந்நிதியில் ஸ்ரீபாஷ்யம் அதிகரணஸாராவளீ. சததூஷணீ முதலிய கிரந்தங்களை அதிகரித்து ஸ்ரீ ஆராவமுதன் திருவடிகளில் ஆசார்யனுல் ஆத்மஸமர்ப்பணம் பண்ணிக்கொண்டார். புதுக்கோட்டை திருவாங்கூர் முதலான ஸம்ஸ்தாநங்களுக்குப்போய் பரீக்ஷை கொடுத்து பஹுமானங்கள்பெற்று திருக்குடந்தையில் பராங்குச பக்தஸபை என்று ஒரு ஸபை ஏற்படுத்தி தனது ஆப்தரான இளயவில்லிஸ்ரீநிவாஸா சார்யஸ்வாமியின் உபந்யாஸத்தையும் நடத்தி வந்தார். பிறகு சென்னைக்கு எழுந்தருளி திருவல்லிக்கேணி முதலான இடங்களில் தேரழந்தூர் ஆண்டவன்போல் அதிமதுரமும் அதிஸரளமுமான திவ்யவாக்குகளால் பல உபந்யாஸங்களையும் ரஹஸ்யாதிக்ரந்தங்களையும் ஸாதித்துக்கொண்டு எழுந்தருளி இருந்த ஸமயத்தில் தெம்பரை ஆண்டவன் நியமனத்தின்பேரில் ஆச்ரமஸ்வீகாரம் பெற்று, லோகாநுக்ரஹார்த்தம் சோபகிருது வருஷம் வைகாசி மாதம் 6வ திக்விஜயத்துக்கு சிஷ்யர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள் புடைசூழ எழுந்தருளி ஆயிற்று. பல்லாயிரக்கணக்காக மஹான்கள் ஸ்வாமியினிடம் ஆச்ரயித்து உஜ்ஜிவிக்கிருர்கள். ஸ்ரீ ஆண்டவன், பாதுகா என்கிற பத்திரிகை நடத்தி அதன் மூலமாகவும் விசேஷ ஸம்பிரதாயப்ரவசனம் செய்து ஸ்வாமி தேசிகன் ஸம்பிரதாயத்தை பலவிதமாக ரக்ஷணம் பண்ணிக்கொண்டு எழுந்தருளி இருக்கிருர்.

ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ முநிகருணா லப்த தேர்ந்தயுக்மம்
ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ யோகீச்வர குருபதயோரார்ப்பித ஸ்வாத்மபாரம்!
ஸ்ரீமத் ஸ்ரீரங்கநாதாஹ்வய முநிக்ருபயா ப்ராப்த மோக்ஷாச்ரமம் தம்
ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ முநிமபரம் ஸம்ச்ரயே தேசிகேந்த்ரம்!!

கபிஸ்தலம் தேசிகாசாரியார் ஸ்வாமி

இந்த ஸ்வாமி கபிஸ்தலம் என்கிற திவ்ய தேசத்தைச் சேர்ந்த மஹான். இவர் திருப்பதி திவ்யதேசத்தில் கௌசிக கோத்திரத்திதில் கோபாலாசார்யஸ்வாமிக்கு திருக்கு மாரராய் அவதரித்து லாடபுரம் கோபாலார்ய மஹாதேசிகனிடத்திலும் கேதாண்ட பட்டிஸ்வாமியிடமும் வேதாந்தக்ரந்தங்களை ஸேவித்தும் புரிசை திருப்பதி ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியிடம், தர்கசாஸ்திரத்தையும் க்ரஹித்து மதத்ரயரத்நதீபமாய் குன்றிலிட்ட விளக் காய் எழுந்தருளி இருந்தார். இவருடைய க்ஞாநவிகாஸத்தையும் மேதாவிலாஸத்தையும் பார்த்த அக்காலத்திலுள்ள பாச்சாத்யஸர்கார் மஹாமஹோபாத்யாய என்கிற பிருதை அவ ருக்கு கொடுத்தார்கள். அக்காலத்தில் திருப்பதிதேவஸ்தான நிர்வாஹகர்களான–மஹந்து ப்ர யாக தாஸ் என்கிறமடாதிபதியின் ப்ரார்த்தனையால் ஸ்ரீஸ்வாமி திருப்பதி கலாசாலையின் ப்ரா தான உபாத்யாயராய் எழுந்தருளி இருந்தார். அந்தஸமயத்தில் காஞ்சீபுரம் ப்ரதிவாதிபயங் கரம்காதி அநந்தாசார்ய ஸ்வாமி ஜகத்குரு என்கிறபிருதத்துடன் காசிக்குச்சொல்ல அங்குள் பண்டிதோத்தமர்கள் அதை ஆக்ஷேபம் செய்து வேதாந்தத்தில் வாக்யார்த்தம் சொல்லி ஜயித்தாலல்லது அந்த ஜகத்குரு பிருதைநீங்கள் வைத்துக்கொள்ளலாகாது என்றார்கள் அந்த ஸங்கடநிலையில் அனந்தாசார்ய ஸ்வாமி மஹந்துமூலம் கடிதம் எழுதி ஸ்வாமியயை காசிக்கு வரவழைத்து வாக்யார்தம் சொல்லச்சொல்லி வாக்யார்த்தத்தில் வாதிகளைவென்றார். அவர்களும் ஜகத்குருபிருதை நீங்கள் வைத்துக்கொண்டால் அந்வர்த்தமாய் இருக்கு மென்று சொல்லி இந்த மஹாவித்வானுக்கு யானையின் பேரில் காசிவீதியில் ஊர்வலமும் நடத்தி கொடுத்து கௌரவித்தார்கள்.

பிறகு ஸ்வாமியை பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளப்பண்ணி நாவல்பக்கம் ஸ்வாமி திருக்கோட்டியூர்ஸ்வாமி முதலான பண்டிதோத்தமர்களும் A. V. கோபாலாசார் V.V. ஸ்ரீநிவாஸாசார்யர் S. வரதாசார் முதலான லௌகிகப்ரபுக்களுமாய் சேர்ந்து இந்த ஸ்வா மிக்கு ராமநுஜஸித்தாந்த விஜயத்வஜம் என்கிற பிருதை சாத்தி யானையின் பேரில் கச்சி மாநகரில் ஊர்வலம் நடத்தி கௌரவித்தார்கள், இம்மஹானிடம் வாசித்தவர்கள் நூற்றுக் கணக்காக உள்ளார்கள். இவர் அருளியக்ரந்தங்கள் (1) வ்யாஸஸித்தாந்த மார்த்தாண்டம் (2) அதிகரணரத்னமாலா (3) கார்யாதிகரணஉச்வாஸம் புரிசை ரங்காசார் எழுதிய கார் யாதிகரணவாததிற்கு கண்டநரூபம் நியாயஸித்தாந்த பூமிகா, சதகோடிகண்டனம், புருஷ ஸூக்தபர்ஷ்யம், ஸித்தாந்தத்த்ரயஸங்கிரஹம். இவர் கரஹஸ்தாச்ரமத்திலேயே இருந்து கொண்டு ஸம்பிரதாயப்ரவசனம் செய்துவந்தார்.

நாவல் பாக்கம்

தே. ஆராவமுததாததாஸன்

"ராமானுஜ தயாபாத்ரம்"

தனியன் வ்யாக்யானம்-பகவத் விஷயம் :

இச்லோகத்தால் நிகமாந்த தேசிகனுடைய ஸர்வாசார்ய கடாக்ஷ விஷய பூதத்வத்தையும் விலக்ஷணமான திவ்ய கல்யாண குணாகரத்வத்தையும் இவ்வளவுக்கும் ஹேதுவான திவ்யாவதார வைபவத்தையும் இவ்வளவுக்கும் ப்ரயோஜனங்களான குத்ருஷ்டி நிரஸன பூர்வகமாக உபயவேதாந்தஸ்தாபகத்வ ப்ரவர்த்கத்வாதி குணங்களையு மனுஸந்தித்து நின்றெனதாவியை ஈர்க்கின்ற சீலமே நினைதொறும் சொல்லும்தொறும் நெஞ்சிடிந்துகும் என்கிறபடியே ஓடை குலைப்பட்டு ப்ரீதி புரஸ்க்ருத:, பக்த்யா ஸம்ப்ரேரித:; க்ஞானம்ருதாப்தி பரிவாஹ சுபை : வசோபி : என்றும் சொல்லுகிற கணக்கிலே—இவர்தம் திருவுள்ளத்தில் தேசிகன் திறத்திலுண்டான பக்தி பரீவாஹமானது பலவாய்த் தலைகளாலும் பாய்ந்து இவர் வாய்க்கரையாகிற மதகுமோழையாலே சொன்மாலை கற்றேன், இராமாயணமென்றும் பக்தி வெள்ளம் என்கிறபடியே, சரமச்லோகம் போலே இச்லோக ரூபமாய் ப்ரவர்த்திக்க, ஏக ஸ்வாது ந புஞ்ஜீயாத், தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன் என்கிற ந்யாயத்தாலே மற்றுமுள்ள தொண்டர்களுக்கும் உத்தேச்யமாம்படி கேவலம் மானஸிகமாகாதே வாசிகமாகவும் "சரணம் ப்ரபத்யே" என்று—வேதபுருஷன் உத்தம புருஷனாய் ஏகவசனமாகச் சொன்னதோபாதியும் "சரணம் வ்ரஜ" என்று மத்யம புருஷனாக அர்ஜுனனைக் குறித்துச் சொன்னதோபாதியும், அனுஸந்தாதாவான தான்—'வந்தே' என்று நமநம் பண்ணச் செய்தேயும் தம்மோபாதி இவ்விஷயத்தில் இழிந்தவர்களுக்கும் இச்லோகத்தைக் கொண்டு சரணம் புகலாம்படியும் ஸர்வோப ஜீவ்யமாகும்படியும், இச்லோகத்தை வாயாறச் சொல்லி சரணம் புகுகிறார்.

ராமானுஜ தயாபாத்ரம்

(**ராமானுஜ தயாபாத்ரம்**) இத்தால் ஸாக்ஷாத் ஆசார்யனுடைய அனுக்ரஹ விஷயத்வம் முன்னிலையாகத் தோற்றச் செய்தேயும் 'க்ருத்வா மர்த்யமயீம் தனும்' 'அனுப்ரவிச்ய குருதே', 'மதம்சா ஏவ ஜாயந்தே', 'தானேயா னென்பானுகி' 'என்னுவினில் வந்துபுகுந்து' என்றும் சொல்லுகிறபடியே ப்ரதம குருக்களான ஸர்வலோக தம்பதிகள் மத்யம குருக்களான உடையவர் ப்ரப்ருதிகள் தாம் தாம்—இவர் ரூபேண அவதரித்தும், விசேஷ ஞான சக்த்யாதிகளை இடுவித்தும்—இத்தால் தங்கள் தங்கள் ஸ்வரூப ரூப குண விபூத்யாதி விலோபகர பாஹ்யாந்தர குத்ருஷ்டிகளை ஏதத் ரூபேண நிரஸித்தும், ஸ்வரூபாதிகளுடைய ஸ்தாபன ப்ரகாரத்தைக் கண்டு, ப்ரஹ்மோபதேச காலத்தில் தனக்கு ஸ்வம்மாய் தானிட்டு வைத்த கவாதிகளை தன் புத்ரன் தனக்கு உபகாரமாகவிட அதைக் கண்டு களிக்கும் பிதாவோபாதியும் ஸ்வபுஷ்டரான ப்ருத்யர்கள் ஸ்வதத்தங்களான அஸ்த்ர சஸ்த்ரங்களைக் கொண்டு எதிரியை வென்று தமக்கொரு வெற்றியைக் காட்டினால் அவர்களைத் தனக்கு அதிசயத்தை யிட்டதாக ஸந்தோஷிக்கும் குணவானான ராஜாவைப் போலவும், இவர்களுமுகந்து, 'நத்யஸ் ஸ்யந்தமானாஸ் ஸமுத்ரே' என்பதுபோல இவ்விஷயத்தில் மற்றொரு கைமாறில்லாததாய் தோற்றி தங்கள் பஹுவித க்ருபா பரீவாஹத்திற்கும் தங்கள் ஒற்றுமை

தோற்ற அஹமஹமிகயா இவரையொரு முக்ய பாத்ரமாக்கினபடி தோற்றுகிறது. அதெங்ஙனே என்னில், காரணபூதமான பரப்ரஹ்மம் தனக்கு சேஷமான ப்ரக்ருதி ஸம்பந்த விசேஷத்தாலே தன்னுடைய ஆக்ஞானுக்ஞாபங்காதிகளைப் பண்ணி ஏற்கனவே தன்னை இல்லை செய்து மறுக்கிற ஜீவாத்மாக்களைக் கண்டு 'ஸ ஏகாகீ ந ரமேத', 'ஜாத நிர்வேதா', என்று தாம் நிர்வேதாதி சரண்யகுணத்தை யுடையவனுய்க் கொண்டு 'வ்யஸனேஷு மனுஷ்யாணும் ப்ருசம் பவதி து:கித:' என்று சொல்லுகிறபடியே இவர்களுடையதுக்க நிராசிகீர்ஷை பண்ண வேண்டி ஸர்வசக்தனை தானும் இவர்களிடத்திலே ஒரு அவசர விசேஷத்தைப் பார்த்துக் கொண்டு நிற்க ஸார்வ பௌமனை ராஜா ஸர்வ சக்தனுய் இருக்கச் செய்தேயும் தன்னுடைய படைகளாலேபோல 'ஸாடோப தர்க்கச்சடா சஸ்த்ரா சஸ்த்ரி விஹார ஸம்ப்ருத ரணஸ்வாதே வாதேஷு ந: | கோவா சக்ஷுருதஞ்சயேத், பரேஷாம் கர்ணே ஸ ஏஷ கவிதார்க்கிக ஸிம்ஹநாத: ||' என்றும் சாக்கியர், சைனர்கள், சார்வாகர், சாங்கியர், சைவர் மற்றும்-வாக்கியம் முப்பதினுல் வகைசெய்து வியாகரித்தோம், காக்கைக்காரென்னலத்தல் காட்டினேமே, களக் கருத்தை கண்ணிரண்டை யழித்தோம், புத்தர் மாட்டுடன் பூட்டுவமே, புணராத பரமதப் போர் பூரித்தோமேஎன்றும், சததூஷணீ, ந்யாயஸித்தாஞ்ஜந, ந்யாயபரிசுத்தி, தத்வமுக்தா கலாபாதிகரண ஸாராவல்யாதி ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களாலேயும்—பரமத பங்க, தத்ரஹஸ்ய, ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸார திராவிட மணிப்ரவாளாதி க்ரந்த முகங்கள் தன்னுலும், பாஹ்யாந்தர குத்ருஷ்டிகள் பஹுவிதமாக அழிந்தபடியைக் கண்டு தாமே யுகந்தருளிச் செய்தபடியே இவர் தம்மாலே எதிரிகள் ஜிதராயும் வசவர்த்திகளாயும் தன்னுடைய ஆக்ஞானுக்ஞானபரராய் லோகந் திருந்தினபடியைக் கண்டு முன்புள்ள அரமணந் தீர்ந்து தேவோ நாம—ஸஹஸ்ரவான் ஸ்ரீ ராம ராம, நாமமாயிரமேற்ற நின்ற, ஆயிர நாமஞ் சொல்லி, என்னுமிந்த ஸஹஸ்ரநாமங்கள் தன்னிலும் தன்னுடைய ஆத்மாராமத்வம் தோற்றும்படியும் நித்ய சூரிகள் ஓலக்கத்திற்கும் தான் அபிராமனுயிருக்கும்படியும், இந்த ராம சப்த வாச்யனுய் தானுனபடியை 'கதஞ்சித் உபகாரேண' என்றபடியே அவர் தமக்கிட்டதாக 'ஆஸ்தே' என்று என்னுமுளனுயிருக்கிற பரமவ்யோமநிலையனுய் ப்ரதமாசார்யனை ராமனுடைய தயாவிஷயத்வம் சூசுப்பிக்கப்படுகிறது. 'ரமந்தே அஸ்மின் ஸூரய' இத்யாதிகளாலே யதா க்ரமம் வ்யுத்பத்தி கண்டுகொள்வது. ஸதா பச்யந்தி ஸூரய: 'யத்வை பச்யந்தி ஸூரய:' 'ரஸம் ஹ்யேவாயம் லப்த்வானந்தீ பவதி' 'ஏஷஹ்யேவாநந்த யாதி' என்றிறே நித்ய ஸூரிகள்படி.

அதவா ராமா ச ராமஸ்ச-ராமௌ என்று ஏகசேஷனுக்கி எம்பெருமான் தனக்கும் 'ச்ரத்தயா தேவோ தேவத்வமச்னுதே' 'ஆனீதவாதம் ஸ்வதயா ததேகம்' 'ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அஸிதேக்ஷணும்' 'அஸிதகேசாந்தாம் சதபத்ர நிபேக்ஷணும்' 'ஈஷ துன்னம்ய பாஸ்யாமி' 'லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்ய ரூபயா | ரக்ஷக: ஸர்வஸித்தாந்தே வேதாந்தேஷு ச கீயதே ||'', 'அஸ்யேசானு' 'ஈச்வரீம் ஸர்வ பூதானும்' 'நித்யைவைஷா ஜகன்மாதா' 'ஸம்ஸாரார்ணவ தாரிணீம்' 'விமுக்தி பலதாயினீ' 'யஸ்யாவீக்ஷ்ய முகம்' 'அங்கீகாரிபிராலோகை: ஸார்த்தயந்த்யை' 'யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம' 'த்வயைதத் விஷ்ணுனுசாம்ப ஜகத் வ்யாப்தம் சராசரம்' 'காடோபகூடாநிதே' 'நீயும் திருமகளும் நின்ருயால்' 'ஒண்டொடியாள் திருமகளும்

நீயுமே நிலா நிற்ப' 'திருமாலன்றி யின்மை கண்டு' 'பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே, திருமகளால் அருள்பெற்று' இத்யாதி ச்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ புராண ஸஹிதங்களான நம்மாழ்வார், மற்றும் ஸர்வாழ்வார்களுடைய ஸூக்தி பரம்பரைகளாலும் ப்ரகாசிதமாய் ஸ்வரூப ரூப குணவிபூதி விபுத்வோபாயத்வோபேயத்வாதி குணங்கள் தன்னுலே 'யுவத்வாதௌ துல்யே' இத்யாதி ச்லோகத்தின்படியே, பும்ஸ்த்வ ஸ்த்ரீத்வ ஸுலபங்களாய், தம் மிலிச்சாமாத்ர நியதங்களான குணங்களைத் தவிர ஸர்வ ப்ரகாரத்தாலும் ஸத்ருசியாயும், விலக்ஷணையாயும் 'அல்லி மலர் மகள் போகமயக்குளாகி', 'பத்தர் பித்தர் பனிமலர்மேல் பாவைக்கு' இத்யாதிகள்படியே அவன் தன்னையும் பிச்சேற்ற வல்லவளாய் அவன் தனக்கும் அபிராமையான ராமையாயும் 'காந்தஸ்தே' என்கிறபடியே அவன் தனக்குமபிராமனுன வைகுண்டநாதனையும் 'பாஸ்கரேண ப்ரபா யதா' 'ஸ்வயா தீப்த்யா ரத்னம்' 'அநபாயினீ' என்னுமித்யாதிகள்படியே குணகுணிகளையும் பிரிக்கமாட்டாதபடியாய், பிரிக்கில் ராவணன் பட்டபாடு படுவதாயும் வருமென்றும், பிரித்துச் சொல்லில் பூர்வம் ராமாவதாரத்தில் ராவணனுல் வந்த விபாகம் நம்மாலேயே வருமோவென்று நெருப்பென்ன வாய் கூசுமதுபோல் தானும் பிரித்துச் சொல்லுவதற்கஞ்சி 'ஐக்யம்' என்பதுபோல 'மாம்' என்கிற சப்தத்திலே அடக்கிச் சொன்ன கீதாசார்யனை கண்ணனுடைய திருஉள்ளத்தை யடியொத்தின நந்தேசிகனுடைய 'ஸாரதிகிராமந்தே' புண்ணியனுர் புகழனைத்தும், தூதனுமா நாதனுமா மென்னைப்பற்றி என்றும் ஸூக்திகளை யாராய்ந்தும் ஒரு சப்தத்திலே இருவரையும் கூட்டுகிருர். 'ராமாபிராமேரித சித்ததோஷ:' இத்யாதி ஸாதாரண ஸ்த்ரீ பும்ஸ விஷய ராமசப்த ப்ரயோகம் ப்ரதான ஸ்த்ரீ புருஷர்களைக் காட்டவுமாம்.

அதவா,—ராம சப்தம் விசேஷ வாசியாய் பரசுராமாழ்வானைக் காட்டுகிறது. இத்தால் நாம் ஔபாதிக பித்ரு விரோதிகளை நிரஸித்தும் ஔபாதிக மாதாவை மதித்தும், நிருபாதிக மாதா பித்ராதிகள் மணம் புணர்ந்து வரச்செய்தே விரோதித்து எதிரிட்டோமென்று அகம் தவித்துக்கொண்டு நிற்க இவரிப்படி நிருபாதிக மாதா பிதாக்களுடைய சேர்த்திக்குமொரு குத்ருஷ்டிகளாலும் சிதைவு வாராதபடி ஸ்தாபிக்க அவதரித்தபடி கண்டு தம்முடைய க்ருபைக்கு விஷயமாக்கினபடியைக் காட்டுகிறது. ஆழ்வாரும் 'படியாலரசுகளைக் கட்டபாழியானை ஒரு கூர் மழுவால் போக்கிய தேவனை' என்ருறிரே.

அதவா—சக்ரவர்த்தி திருமகனைக் காட்டுகிறது. இத்தால் தங்களுடைய சேர்த்திக்கு அக்காலத்தில் ராவணுதிகளினுல் பிரிவு வந்ததுபோல் இக்காலத்தில் பாஹ்யாந்தர குத்ருஷ்டிகளாலே ஒரு படியும் நலிவு வாராதபடி பண்ணினபடியாலும் 'ஸக்ருதேவ ப்ரபன்னுய' 'பவேயம் சரணம் ஹி வ:' இத்யாதி தங்களிருவர்களுடைய விரோதி நிவ்ருத்தி பூர்வகோபாயோபேய ஸ்வபாவாதிகளை அஞ்சுருவியாணி என்னும்படி இட்ட படைகற்படையாக்கினபடியாலே தம்முடைய க்ருபா விஷயமாக்கினபடியைக் காட்டுகிறது.

அதவா—நம்பி மூத்தபிரானைக் காட்டுகிறது. இத்தால் ஸர்வலோக தம்பதிகளில் ருக்மிணிப் பிராட்டியைப் பிரிக்க நினைத்த சிசுபாலாதிகள் திறத்தில் தாம் பிற்பட்டு உதவாதபடியைக் கண்டு அத்யந்தம் அவஸந்நராயிருக்க இவர் அச்சேர்த்திக்குப் பிரிவு தேடுமவர்

களிடத்தில் 'வயமேவ நான்யே' என்கிறபடியே பிரிவுடனே ஸ்ரீ வானர முதலிகளைப் போலே நிரசிக்க முற்பட விழிந்தபடியைக் கண்டு தன்னுடைய தயாபரிவாஹத்திற்கு இவரை பாஜனமாக்கினபடி சொல்லுகிறது.

நான்கு பக்ஷங்களிலும் 'அனுஜதயாபாத்ரம்' என்னுமிடத்தில் 'பஸ்ச்சாத் ஸம்பாவி தோரனு' என்கிற கோசப்ரக்ரியையிலே 'அனு' சப்தம் 'பின்' என்கிற அர்த்தத்தைக் காட்டி தேசிகன் அவதரித்த பின்பு என்ருய்—இவர் திறத்தில் பரிவரான சக்ரவர்த்யாதி மாதா பிதாக்களென்ன, வசிஷ்ட கர்காதி மஹரிஷிகள் என்ன, ஆழ்வாருடைய அவதாரங் களில் நிருபாதிக மாதா பிதாக்களான ச்ரிய:பதி என்ன—பட்டர் போல்வாருடைய அவதாரத்திற்குப் பின்பு, அழகிய மணவாளன் ஸ்ரீரங்கநாச்சியாரென்ன இவர்கள் பஹு விதமான ரக்ஷணே செய்து தங்களுடைய ஸர்வதயா விஷயமாகச் செய்தருளினதோபாதி இவரையும் தங்கள் ஸர்வதயா விஷயமாக்கினபடி சொல்லுகிறது.

அதவா— 'அனு' சப்தம் ஸம்பாவனையிலேயாய் தாங்கள் சத்ரு விஜயாதிகளைப் பண்ணி நின்ற காலத்தில் ப்ரஹ்மாதிகளும் இங்குள்ளவர்களும் 'பவான் நாராயணோ தேவ:' இத்யாதிகளிலே கொண்டபடி வரதான ரூபேண தங்களை தயா விஷயமாக்கினதோ-பாதி கவிதார்க்கிக ஸிம்ஹநாதத்தைப் பண்ணி, வேதாந்த பாகத்தில் சததூஷண்யாதி களாலே பாஹ்ய குத்ருஷ்டிகளையும் சதுச்லோகி ஸ்தோத்ர கத்ய பாஷ்ப ரூபமான ரஹஸ்ய ரக்ஷை என்ன, ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாராதிகளில் ஸித்தோபாய ஸாத்யோபாய சோதனுதி காரங்களென்ன, த்வயாதிகார, சரமச்லோகாதி காரங்களென்ன, பின்புண்டான விரோதி பரிஹாராதி க்ரந்தங்கள் என்ன இத்யாதிகளாலே ஆந்தர குத்ருஷ்டிகளையும் நிரஸித்து அவர் களால் ஒரு குறையும் வராதபடி திருநாரணனென்னும் தெய்வமும், சித்து மசித்துமென்று இத்யாதி ஸூக்திகளினுலே "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:" என்கிறபடியே ஜகத்காரண வஸ்துவை லக்ஷ்மிஸம்பன்னமாக்கித் தாம் கைங்கர்ய லக்ஷ்மி ஸம்பந்நர் என்னும்படி வெற்றி கொண்டு நிற்கிற தசையிலே தங்களுடைய ஸம்பாவனையினுலே உண்டாயிருக்கிற தயாவிஷயத்வத்தைக் காட்டுகிறடி. இத்தால் 'வ்யாப்ய நாராயண ஸ்தித:' என்றும் 'பஹூநி மே வ்யதீதானி ஜன்மாநி:' என்றும் 'பரித்ராணுய ஸாதூனும் ஸம்பவாமி யுகே யுகே' என்றும் 'எதிர் சூழல் புக்கு' என்றும் 'உயிரளிப்பான் என்னென்ன யோனியுமாய் பிறந்தாய்' என்றும் 'ஸர்வகத்வாதனந்தஸ்ய' என்றும் ரக்ஷ்ய பூதனுன ப்ரஹ்லாதாழ் வானையே பாசுரமிடும்படி ஹிரண்யகசிபு போல்வாராலே நலிவுவாராதபடி தனக்கு ஆத்ம பூதனுன அவனை நோக்கினுனென்கிற வ்ருத்தாந்தத்தோபாதி நிரஸநார்த்தம் குமதி மத்யஸ் திதரான நம் தேசிகனையும் ப்ரதமாசார்யனுன ச்ரிய:பதி பலபடியாலும் இவருடைய ரக்ஷணர்த்தம் க்ருபா பரீவாஹத்தைப் பண்ணி நோக்கினபடி காட்டுகிறது. இவ்விடத்தில் இன்னும் பஹுவிதமான யோஜனைகள் யதோசிதம் கண்டு கொள்வது.

அதவா 'ராமானுஜஸ்த்வாதிசேஷே' என்கிறபடியே ராமானுஜ வென்றது திருவனந் தாழ்வானுக்கு யோகரூடமான ஸம்க்ஞா விசேஷமாய் தன்னுடைய பரமவ்யோம நிலயனுன தசையிலும் அநந்தரம் ப்ரக்ருதியிலே அவதரித்தபோது இளைய பெருமாள், நம்பி மூத்த

பிரான் இவர்களான தசையிலும் அநந்தரம் யதிசேகரனுய் அவதரித்த தசையிலும் செய்ய வொண்ணுதபடியால் விசேஷ கைங்கர்ய பூதமான பிற்பாடரான ஸர்வ குமதிகண நிரஸனத்தைப் பண்ணினபடியைக் கண்டு இதற்குப் பரிசாக தம்முடைய க்ருபையை இவர் திறத்தில் வைத்தபடி காட்டுகிறது.

அங்ஙனன்றிக்கே ராமானுஜ சப்தத்தை யௌகிகமாக்கி ராம சப்தத்தாலே நம்பி மூத்தபிரானைச் சொல்லி அனுஜ சப்தத்தாலே இவருக்குப் பிறகு அவதரித்தவரான கண்ண ணைக் காட்டி அவருடைய தயா விஷயத்வத்தைச் சொல்லுகிறது. அது எங்ஙனே என் னில், கண்ணனுடைய ஸர்வஸ்வமான சரம ச்லோகத்தை கீதார்த்த ஸங்க்ரஹாதிகளாலே ப்ரகாசிப்பித்தும், ரஹஸ்யத்ரயார்த்த விவரண க்ரமத்திலே சரமச்லோகாதிகாரத்தில் 'ய உபநிஷதாமந்தே ஸத்பாதேயம் கிமபிவிததே ஸாரதி: ஸர்வநேதா' ஒண்டொடியாள் திருமகளும் தானுமாகி-தேர்பாகனுகி நின்ற தண்டுளவ மலர்மார்பன் தானே சொன்ன தனித் தருமம்' இத்யாதிகளிலே வெளியிட்டபடியைக் கண்டு தம்முடைய க்ருபாதிசயத்திற்கு விஷயமாக்கினபடி சொல்லுகிறது.

அதவா—ராம சப்தத்தாலே 'ஆத்மா ராம' 'பூர்வஜ' என்கிறபடியே ப்ரதமாசார்ய னை ச்ரீய: பதியைக்காட்டி 'அனுஜ' சப்தத்தாலே 'கமப்யாத்யம் இத்யாதி அவரோஹண ச்லோக குருபரம்பரையில் பிராட்டி -ஸேனை முதலியார் - ஆழ்வார் - ஸ்ரீமன் நாதமுனிகள்— உய்யக் கொண்டார் அளவும் காட்டி, பூர்வாசாரியர்களுடைய அனுக்ரஹத்தைப் பெற்று ஆழ்வார் கோடியிலும், ஆசார்ய கோடியிலும் ப்ரதான பூதரான நம்மாழ்வாருடைய 'தொண்டர்க்கமுதமாய்' 'அறுவர் தம் பிறவியஞ்சிறை'யென்று ஸம்ஸார பேஷஜமாய், பாலோடமுதன்னவாயிரம் என்று செவிக்கினிய செஞ்சொல்லாய் முக்யோபாயமான ப்ரபத்தி சாஸ்த்ரைக ப்ரகாசகமான திவ்ய ப்ரபந்தார்த்தத்தை பஹுமுகமாக நிலை நிறுத்தினபடியாலும் தச்சிஷ்யரான நாதயாமுநாதி ப்ரபாவ ப்ரகாசனத்தினுலும் அவர்களுடைய கடாக்ஷபாத்ர ரானமை தோற்றுகிறது. இப்பக்ஷத்தில் ராம சப்தத்தாலே ஸ்ரீ ராமமிச்ரரைச் சொல்லி அவரை ஆசார்ய கோடியிலே பின்புண்டானவராக உடைத்தாயிருக்கிற பூர்விகர் களென்று விக்ரஹம்.

அதவா — ஸ்ரீ ராமமிச்ரருடைய ஸம்பாவனையாலே உண்டாயிருக்கிற க்ருபா பாஜனத்வத்தைச் சொல்லவுமாம்.

அதவா—ராமானுஜ சப்தத்தாலே ஆசார்ய கோடியிலே அவருக்குப் பின்புண்டான பெரிய முதலியார் தொடங்கி பெரிய நம்பியளவாக ஆசார்ய வர்கத்தைக் காட்டி அவர் களுடைய கடாக்ஷ விஷயத்வத்தைச் சொல்லுகிறது. அதெங்ஙனேயென்னில்: 'யதீந்த் ர்ரம்சோதவா என்று அவரே இவரென்று சிஷ்ட சிகாமணிகள் கொண்டாடலாம்படி அவர் தம்முடைய ஸித்தாந்தத்தை ஸ்ரீபாஷ்யாதி ப்ரவசன முகத்தாலே விலக்ஷணமாக ப்ரவர்த்திப் பித்தும் அவர் தம்முடைய யக்குத்தாய் சரணுகதி சாஸ்த்ரார்த்தமான ஆருயிரப்படியே இவ் விலக்ஷணமான ஸம்ப்ரதாயத்திற்கு 'தர்மக்ஞ ஸமய: ப்ரமாணம் வேதாஸ்ச' என்கிறபடியே சாஸ்த்ர சிஷ்டாசார ஸம்மதமென்று காட்டியும் இதற்கு உபப்ருஹ்மணமான பஹுவித

மணிப்ரவாள வ்யாக்யானங்களையும் பகுவித காதைகளையுமருளிச் செய்தும் இவர் தம்முடைய ஸித்தாந்த நிர்த்தாரண ஸ்வபாவத்தை 'பரப்ரஹ்மண: கரக்ரஹ விசக்ஷணோ ஜயதி லக்ஷ்மணோயம் முநி:' 'கா சங்கா சங்கராதே: பஜதி யதிபதௌ பத்ர வேதீம் த்ரிவேதீம் என்று காட்டியும் 'யதீச்வர ஸரஸ்வதீ ஸுரபிதாசயானாம்' இத்யாதியாலே தம் ஸம்பந்தி விஷயத்திலும் தம்முடைய ப்ராவண்யாதிசயத்தைக் காட்டியும் 'சிந்தியோமினித்தீவினையே' என்று தம்முடைய நிர்பர ஸ்வபாவத்தைச் சொல்லியும், இன்னும் பஹுவிதமான ஸூக்தி களாலே உடையவருடைய திரு உள்ளம் குளிரும்படியாக்கி தத்கடாக்ஷ விசேஷத்தைத் தாம் சிந்தாமல் கொண்டபடி அர்த்தமாகிறது.

அதவா—ராமானுஜ சப்தத்தாலே ராமானுஜ அப்புள்ளார் முகமாய் 'இதி எதிராஜ மானஸ எதிவரனுர் மடப்பள்ள வந்த மணம்' என்னும் இத்தியாதியாலும் உடையவருடைய கடாக்ஷபரீவாஹமாக வந்து ஸர்வார்த்தங்களும் நிறம்பின ஸ்ரீவாதி ஹம்ஸாம்புத ராமானுஜ அப்புள்ளாரான ஸாக்ஷாதாசார்ய பரிபூர்ண கடாக்ஷ விஷயத்வத்தைச் சொல்லுகிறது. அதைக் கணிசித்திறே 'ராமானுஜார்யாதாத்ரேயான் மாதுலாத்: ஸகலா: கலா:' அவாப, 'ஆத்ரேய ராமானுஜ தேசிகேந்த்ராதவாப்ய வேதாந்த யுகம்', 'வேதாந்தஸூரி நிஹிதோபய வேத:மௌளி', 'வேதாந்தாசார்யவர்யே க்ருத ஸகல ரஹஸ் தத்வ சாஸ்த்ராதி தானம்'' 'வேதாந்தார்த்த ப்ரதாயினே,' 'வேதாந்தோதயந ஸம்ப்ரதாய ஸுதாம்', 'வெள்ளைப் பரி முகர் தேசிகராய்' 'யோ மாஹானஸிகோ மஹான் யதி பதே:' கிடாம்பி அப்புள்ளார் கிளிப் பிள்ளையைப் பழக்கி வைத்தாற்போல் பழக்கி வைத்த' 'கரக்கும் கருத்துடை தேசிகர்' என்னும் இத்யாதி பஹு ஸம்ஸ்க்ருத த்ராவிட ஸூக்திகளாகவே தாமும் பிறர்களும் கொண் டாடி ஸ்வாசார்யனை அப்புள்ளாருடைய திரு உள்ளத்தை தத்ஸம்ப்ரதாயம் ஒருவராலும் குலையாதபடி அவிச்சின்னமாய் ப்ரவர்த்திப்பித்தபடியாலே உகப்பித்து அவருடைய கடாக்ஷ ஸர்வஸ்வத்தையும் பெற்றபடி சொல்லிற்றாயிற்று. ஆக ப்ரதமாசார்யனை ஸ்ரீய: பதி தொடங்கி ஸாக்ஷாதாசார்யனை அப்புள்ளாரளவுமுண்டான ஸர்வாசார்யர்களுடையவும் க்ருபா பரிவாஹங்களுக்கு ஒரு மஹோததியாய் நின்றபடி சொல்லிற்றாயிற்று.

ஞான வைராக்ய பூஷணம்

என்று கீழ்ச் சொன்ன ஆசார்ய கடாக்ஷ விசேஷத்தாலே 'மயர்வற மதிநல மருளினன்' என்னும் ஆழ்வாரைப் போல ஸ்வதஸ் ஸித்தமான விலக்ஷண ஞான வைராக்யாதி குணாலங் காரத்வத்தைக் காட்டுகிறது. இங்கு ஞான வைராக்யங்களையே பூஷணமாக உடையவ ரென்றாய் 'விவேக நிர்வேத விரக்தி' இத்யாதியிலே அருளிச் செய்வதாகையால் 'ஆசார்ய வான் புருஷோ வேத' என்கிறபடியேயும் 'வேதம் வல்லார்களைக் கொண்டு' என்று சொல்லு கிறபடியேயும் தனக்கு ஸ்வதஸ்ஸித்தமான ஞானகுண வைபவ மிருக்கச் செய்தேயும் ஸத் ஸம்ப்ரதாய ஸித்தமாய் ஸதாசார்ய கடாக்ஷத்தால் வருகிற அர்த்த பஞ்சக ஞான ரூபமாகிற பகவத் விஷய ஞானத்தைச் சொல்லுகிறது. இத்தைக் கணிசித்திறே 'பரிப்ரச்னேன ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே...ஞானின:'' என்று ஸர்வஞ்ஞன் கீதாசார்யன் பிறர்க்குமுப தேசித்து தானும் ஸாந்தீபன்யாதி திறத்தில் ஞானாதிகளைத் தேடினது. 'ஞான வைராக்ய

ராசயே' என்றிது கணையிறே பூர்வாசார்யர்களும் பூஷணமாயிட்டு வைப்பது. நம் தேசிக ரும் பரமபதஸோபான ரஹஸ்யத்திலே சொல்லியும் அனுஷ்டித்தும் காட்டி விசேஷ தர்ம ஸம்ஸ்தானம் பண்ணிற்று. இதை கணிகித்திறே 'அறிவுடனே நந்தரிவாரருள் செய்ய வமைந் தனர்' என்றது.

இப்பக்ஷத்தில் 'வைராக்யமாவது'—ஏதத் வ்யதிரிக்தமாய் வருகிற ஞானுதிகளிலுண் டான அருசியைச் சொல்லி ஆக இரண்டு குணங்களாலேயும் மற்ற அனுஷ்ட்டானுதி குணங் களையுமுபலக்ஷித்து இத்யாதி குணங்களையே கழற்ற வொண்ணுத ஆத்ம பூஷணமாக உடை யவரென்கிறது.

அதவா— 'தத்ஞானமஞானமதோந்யதுக்தம்' வித்யான்யா சில்ப நைபுணம்' 'ஒண்டாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்குமுணர்வு' என்றித்யாதிப்படியே பகவத் விஷய ஞானமே ஞானமென்றும் இதரம் அஞானத்தோடொக்குமென்று இத்தால் ப்ராப்த மாய் ப்ரதிபுத்தா ந ஸேவந்தே', 'ஆத்ரியந்தே ந ஸந்த:' என்று இவ்விஷயத்திற்குப் புறம் பான ப்ரஹ்ம சிதிகண்டாதி பத வைராக்யத்தைச் சொல்லவுமாம்.

அதவா—புத்தர் மாட்டுடன் பூட்டுவமே 'அலத்தல் காட்டுவோமே' 'பரமதப் போர் பூரித்தோமே' என்றும் தாம் அருளிச் செய்தபடியே தமக்கு மூலப்ரமாணங்களான 'யதா சக்தி நிக்ருஹ்ணீயாத் தேவதா குருநிந்தகான்' 'தலையறுப்பதே கருமம் கண்டாய்'என்னும் பூர்விகர்கள் பாசுரத்தின்படியே இதற்குப் புரம்பானவர்களை நிச்சேஷ வித்வம்ஸநம் பண்ணு வதே முக்ய கைங்கர்யமென்கிற ஞானத்தைச் சொல்லி—வைராக்ய பதத்தாலே அவர்கள் திறத்தில் அனுகம்பாதி ரூபமான நசையற்றபடி சொல்லுகிறது.

அங்ஙனன்றிக்கே 'ஞானனந்த மயஸ்த்வாத்மா 'சேஷோஹி பரமாத்மன:' 'அஸ்யா மமச சேஷம்ஹி விபூதி:' உபயாதிஷ்டானம் சைகம் சேஷித்வம்' 'ஜகந்நிதானமத்வந்த்வம் த்வந்த்வம் வந்தாமஹே' இத்யாதிப்படியே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் பிறிவற்ற இம்மிதுனமே ஸர்வோத்தேச்யமென்கிற ஞானத்தையும் இதடியாக இந்த மிது னத்தை ஏகதேசத்தில் பிறிக்கிற ஸம்சய விபர்யயாதிக்ரஸ்தரான சில மந்தமதிகளுடைய ஸித் தாந்தத்திலுண்டான வைத்ருஷ்ண்யத்தையும் காட்டுகிறது.

அன்றியே 'சேஷி தம்பதிதயாதீக்ஷாமுதீக்ஷாமஹே' உம்பர் போக முகந்துதரும் திரு மாலை யுகந்த நாமே 'ஆழியானில் வைகும் மனமே நீ மகிழாதே இருப்பதென் கொல்' என்கிற ஞானத்தைச் சொல்லி, அத்தால் 'ஸிலம் கிமனலம் பவேத்' இத்யாதியின்படியே அவன் தன்னிலும் புருஷார்த்தத்தை அபேக்ஷியாத நைராச்யத்தைச் சொல்லுகிறது.

அதவா-'பெறுவதெல்லாம் இங்கே நாம் பெற்று வாழ்வென்கிறபடியே விக்னபூயிஷ்ட மான இந்த லோகத்திலே நிரந்தரமாக பகவத்பாகவத ஆசார்ய கைங்கர்யத்தை பெறக்கட வோம் என்கிற ஞாநத்தைச் சொல்லி இதடியாக 'வைகுண்ட வாஸேபி நமேபிலாஷ:' என்று

லோகாந்தர காலாந்தர தேசாந்தரங்களிலே நிஷ்ப்ரத்யூகமாக வருகிற அனுபவத்திலுமுண்டான வைராக்யத்தைச் சொல்லுகிறது.

அன்றியே—'ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாம் அந்யாம் ந மன்யாமஹே' 'குருரேவ பரம் ப்ரம்ஹ' தஸ்மாத் குருதரோ குரு :' என்கிறபடியே ஆசார்யனே முக்ய தேவதை என்கிற ஞானம், இதடியாக 'குரு வந்தன பூர்வகம்' குருக்கள் குழாங்கள் குரைகழற்கீழ்' இத்யாதிகளுக்கு வேறு பாடாய் வருகிற பகவத் விஷயத்திலுண்டான வைராக்யமும் சொல்லிற்றுகிறது. இத்யாதி குணங்களை 'அடியேனுள்ளான் உடலுள்ளான்' என்கிறபடியே பகவத்பாகவதாசார்ய கைங்கர்யமே நிரூபகமாயிருக்கிற தமக்கு பூஷணமாக உடைத்தானமை ப்ரகாசிக்கிறது.

ஸ்ரீமத் வேங்கட நாதார்யம்

கீழ்ச் சொன்ன குணவிசேஷங்களுக்கு 'குணுணுமாகரோ மஹான்' என்கிறபடியே விளையும் பூமியென்னும்படியான அவதார வைபவம் சொல்லுகிறது. முகப்பிலே தோற்றியிருக்கிற ஸ்ரீமத் சப்தம் 'நித்யயோகேதிசாயனே' என்கிறபடியே நித்ய ஸம்பந்தத்திலேயாய் 'வேங்கடேசாவதாரோயம்' என்கிற க்ரமத்திலே பூர்வ ஸ்வபாவத்தில் அலர்மேல் மங்கையாய் நின்று இவ்வவதாரத்தில் 'மனுஷயத்வேச மானுஷீ' என்கிறபடியே குத்ருஷ்டி நிரசனோபயுக்தையான ஆத்மவித்யா ரூபையாயும், பக்தி பரம்பராரூபையாயும் பிராட்டி நிற்கிறபடி சொல்லிற்றுயிற்று. ''வேதாந்த தேசிகத்வ ப்ரதாயினே' ஸூக்தி பரம்பராரூபையும் என்று இவர் தமக்கு திருவேங்கடமுடையான் வேதாந்த தேசிகத்வ பட்டாபிஷேகம் பண்ணின தசையிலும் இவர் குத்ரிஷ்டிகளை நிரஸித்தபின்பு கவிதார்கிக ஸிம்ஹம் என்று அருகேயுள்ளார் ஜயகோஷணையிட்ட தசையிலும் அவர்களிருவருங்களித்து பூர்வம் நாம் பண்ணின ஸித்தாந்த பட்டாபிஷேகம் ஸப்ரயோஜனமாய்த்தென்று 'வேதாந்த தேசிகன்' என்றும் 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர' என்றும் அவர்கள் தமிக்கிட்ட பிரஸித்த திருநாமம் பெற்ற போதுமுண்டான ஜயஸ்ரீயை சொல்லிற்றுகவுமாம்.

வேங்கட நாதார்யம்

இவர் தமக்கு பித்ராதிகளிட்ட திருநாமமும்-அதவா-திருவேங்கட முடையானே இவ்விபவம் கொண்ட படியாலே அவனுடைய அப்ராக்ருதாவதார மென்றும் யோஜிக்கவும். பூர்வ கல்பத்தில் திருநாமவைபவமே ஆச்ரிதருடைய ஸர்வதோஷ நிவ்ருத்தியையும் பண்ணி ரக்ஷகத்வாதிகளையும் செலுத்தி 'அத்ர பரத்ரசாபி' என்கிறபடியே ஸர்வதேசத்திலும் 'உகத்வார்யேதி' என்கிறபடியே ஸர்வஸ்ப்ருஹணீயமாய் கொண்டாடத் தக்கதாய் இருக்கிறபடியைக் காட்டுகிறது. உத்தரகல்பத்தில் 'ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே' 'கடுவினையுரிரு

வினையும் கடியும் வெற்பு என்று சொல்லுகிறபடியே பி,ஸித்தமாய் உன்னதமான மணப்பாட்டைப் பெற்று அத்தாலே தாம் 'தெய்வவடமலை என்கிறபடியே அதிஷ்டாத்ருபூதனுய் நாயகனுய் நின்று அத்திருமலை மஹிமையாலும் தன் பெருமையாலும் இந்த குத்ரிஷ்டிகளையும் திருத்தி உஜ்ஜீவிக்க வேண்டுமென்று அர்ச்சையாய் நின்றவிடத்தில் ஆச்ரயணத்துக் குறுப்பான ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணங்களையே தாங்கள் சேராமைக்கு ஹேதுவாகவும் பண்ணி எளிவரவு சொல்லுகைக்கு ஹேதுவாகவும் பண்ணி உதஸீனராயும் சத்ருபூதராயும் நின்ற சேதனங்களைத் திருத்துகைக்கு பூர்வோக்தமான குணவிசேஷங்களையும் கொண்டு ஸ்ரீமத் லவங்கடநாத தேசிகரூபேண ஸர்வ பூஜ்யத்வாதி குணங்களையும் ப்ரகாசிப்பித்துக் கொண்டு ஆசார்ய ரூபராம் அவதரித்து நின்றபடி சொல்லுகிறது. இப்படி தன்திறத்திலும் ஸர்வப்ரகாரத்தாலும் ஸபலமாய் நின்றபடியை அனுஸந்தித்து வாயறத் திருநாமத்தைச் சொல்லுகிறாராகவுமாம்.

இவ்வளவு உபகாரத்தை அனுஸந்தித்த விவர் 'நங்கட் பாசம் வைத்த பரம் சுடர் சோதிக்கே' என்கிறபடியே தன் திறத்திலும் ஸ்வாமியினுடைய க்ருபா பரிவாஹம் பெரிய கிண்ணகமெடுக்க இவர் தமக்கு இவ்விஷயத்தில் பூர்வமுண்டான இழவே மேலிட்டுத் தோற்றி தம்முடைய துரபிமானுதிகளினுலும் இவர் விஷயத்தில் தமக்கு ப்ராவண்யத்தாலும் தம்மை 'அஸன்னேவ' என்கிறபடியே அஸத்ஸமமாகக்கருதி 'ந நமேயம்' என்பாரைப் போலே எண்ணியும் தமக்கு வாசகமான 'அஹம்' சப்தத்தை அங்குரிப்பியாதபடி அனுதபித்து நிற்க கிஞ்சித் வியாஜத்தையிட்டு இந்த க்ருபாபரிவாஹம் கமர் பிளந்த பூமியிலே ஒரு பாட்டம் மழைபோல கிட்டிக்கொண்டு நிற்க, அத்தாலே 'உள்ளம் புகுந்து குளிர்ந்து என்கிறபடியே ஒருபடி தாபத்ரயாதிகள் சமித்துக் குளிர்ந்து 'அஹம்' என்கிற அர்த்தம் 'வந்தே' என்கிற உத்தம புருஷனின் அங்குரித்தது என்னும் படியாய் தோற்ற அந்த 'அஹம்' சப்த வாச்யரான தாம் அந்த பரிவாஹத்திற்கு எதிரிடமாட்டாதே வேரற்ற மரம் போல தம் தலையை வணங்கி 'வந்தே' என்று பலகாலம் சொல்லவேண்டியும்—'வேதாந்த தேசிகம்' என்றனுஸந்தித்த பின்பு க்ரியாபதத்தை இடவேண்டியுமிருக்க அதுவுமாகாதபடி 'இட்டகாலிட்டகைகளாயிருக்கும்' என்றபடியே போரவித்தராய் ஈடுபட்டு 'எத்திறம்' என்ன வாழ்வாரைப் போலே மிகவும் மோஹித்தும் 'உக்த்வார்யேதி ஸக்ருத்தீன : புனர் நோவாச கிஞ்சன' என்கிறபடியேயும் இதற்கு கைம்மாறு இனி யொன்றுமில்லை என்று அவசராய் திருவடியின் கீழே விழுகிறார்.

இதில் வர்த்தமானத்தாலே இதற்கு மேற்பட . வேறொரு தேஹயாத்ரை இல்லை என்னுமிடம் தோற்றுகிறது. அநந்தரம் ந ம் தேசிகருடைய பாக்ய விஷேத்தாலும் இவருடைய அனுஸந்தானமான இத்தனியனை ப்ரபந்தானுஸந்தான காலத்திலே அனுஸந்திக்குமவர்களுடைய அத்ருஷ்ட விசேஷத்தாலும், பூர்வம் சக்ரவர்த்தி திருமகனுடைய பாக்ய விசேஷத்தாலே ஸ்ரீபரதாழ்வான் மோகம் தீர்ந்து பாதுகா புரஸ்ஸரமாக ராஜ்ய நிர்வஹண ஸமர்த்தரானதோபாதியும்—ஆழ்வாருடைய செவிக்கினிய செஞ்சொல்லாய் தொண்டர்க்கமுதமுமான பாசுர பரம்பரைகளைக் கேழ்க்க விரும்பி யிருக்கிற ச்ரிய:பதி ததீயர்களுடைய பாக்ய விசேஷத்தாலே ஆழ்வார் மோஹம் தீர்ந்து ப்ரபந்தத்தை தலைக்கட்டலாம் படியான

தோபாதியும்—இவரும் தம்முடைய பக்தி பாரவச்யத்தாலுண்டான மோகம் அரையாறுபட்டு கீழ்ச் சொன்ன உபகார விசேஷங்கள் தமக்கு எந்த முகத்தாலே யிவரிடும்படியாய்த் தென்ருராய், வேதாந்தார்த்த பிரதர்சனத்தாலே யென்றறுதி யிட்டு வேதாந்த தேசிக மென்று ச்லோக பூர்த்தி செய்தருளுகிருர்.

இங்கு வேதாந்த பதம் உபய வேதாந்த ஸாதாரண வாசகமாயிருக்கச் செய்தேயும் தமக்கு வேதாந்த யுக்ம வழியாய் வந்திருக்கச் செய்தேயும் ப்ருக்ருதத்தில் இச்லோக ப்ரவர்த்தகரான ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஜீயர் நமக்கு நிகமாந்த தேசிகன் அவ்யாஜ க்ருபா விசிஷ்டராய்க் கொண்டு ஸ்ரீய:பதி தொடங்கி ஆழ்வார் முகமாக பரம்பராகதமாய் உடையவ ராலே ஷட்ஸஹஸ்ர க்ரந்த வ்யாக்யான ரூபேண புள்ளானையிட்டு ப்ரவர்த்திக்கப்பட்ட விலக்ஷணோபாய பூத ப்ரவர்த்தி சாஸ்த்ர ப்ரதிபாதகமான இத்திராவிட வேதாந்தார்த்தங்களை 'வேதத்தின் உட்பொருள் நிற்கப்பாடி' என்கிறபடியே தம்முடைய திருஉள்ளத்தில் தங்கி ப்ரவர்த்திக்கும்படி தமக்கனுக்ரஹித்த க்ருபா பரிவாஹத்திலீடுபட்டு அந்த க்ருதக்ஞதை யாலே இப் ப்ரபந்த விசேஷம் அனுஸந்திக்கும் போதெல்லாம் ஆத்யந்தங்களிலே இப்படி பரமோபகாரனை ஆசார்ய குணானுஸந்தாநம் தமக்கும் இப்பின் புள்ளார்க்கும் அவச்யாபே க்ஷிதமென்று தத் விஷயமாக இப்பாசுரத்தை வெளியிட்டதாக பூர்விக குருபரம்பரா க்ரந்த விசேஷங்களிலும் ப்ரபந்த நிர்வாஹாதி க்ரந்தங்களிலும் ப்ரஸித்தமாகையாலும் அப்படியே சிஷ்டானுஷ்டானமும் கண்டு வருகிருேமா கையாலும்—வேதாந்த தேசிகமென்று த்ராவிட வேதாந்தார்த்த ப்ரதர்சகத்வத்தை விசேஷ ரூபேண இட்டு ஏவம் ரூப குண விசிஷ்டரான 'ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே' என்றன்வயிக்கவுமாம்—அன்றியே க்ரமத்திலே யாகவுமாம்.

இங்கு இந்த வேதாந்தார்த்தத்தை ப்ரபந்த ரூபேண ப்ரகாசிப்பித்தபடி எங்ஙனே என்னில்—ப்ரபதனஸுலப: ஸ்ரீமான் ஸர்வோசிதாயாம் உபனிஷதி மிஷத்யேஷ காதா சதைர் ந: ஷட்பிஸ்வாம் பஞ்சமாத்யைரனிதர கதிதா மாசசக்ஷே முநீந்த்ர:, அவிகலசரண்ய ஸித்திமிஹ, ஷஷ்டே முனிரசரணோயாதி சரணம், முஹுர் தேவம் லக்ஷ்ம்யா ஸஹித மிஹ பேஜே முனிவர: ஸதாமித்தம் ஸாரம் த்ரவிட நிகமஸ்யாந்வகதயத், உபநிஷன்முனே: புண்ய ச்லோகாதஜநி பரபக்தே: பரிணதி:, பக்தி ச்ருங்கார வ்ருத்யா பரிணமதி முனேர் பாவ பந்த ப்ரதிம்ந யோகாத் ப்ராகுத்தரா வஸ்திதிரிஹவிரஹோ தேசிகா ஸ்தத்ர தூதா: சடகோபனருளினலே, செய்ய தமிழ் மாலைகள், த்ரமிடோபனிஷத் ஒரு பத்தும் பற்றுக உணர்ந்துரைத்தோம், தீயினிற்றுசாகும், முமுக்ஷுக்களுக்கு பகவத் சித்தரஞ்ஜனத்தில் ஆழ்வாரருளிச்செயலே ப்ரதான தமமென்னும் இத்யாதி ஸூக்தி சத ஸஹஸ்ரங்களினலே தமக்குபகரித்த படியைக் காட்டுகிறது.

இதில் சில உதாஹரண விசேஷங்களை அவதாரிகை முதலான விடங்களில் கண்டு கொள்வது. ஆக இப்படி கீழ் ப்ரதம அவதாரிகை தொடங்கி இவ்வளவாலே ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராண முக்யார்த்த ப்ரதர்சகரான பராங்குச பரகால யதிவர ஸ்ரீவாதி

ஹ்ம்ஸாம்புத ராமானுஜ நிகமாந்த தேசிகாதிகளுடைய ப்ரமாண ரூபையான இஸ்ஸூக்தி பரம்பரைகள் இந்த ஸம்ப்ரதாயத்துக்கு வந்தபடியையும் ஸ்வாமியினுலே அவிச்சின்னமாகப் ப்ரவர்த்திக்கப்பட்டு வருகிறபடியையும், கோயிலில் திருவரங்கன் திருமுற்றத்தில் பெரிய பிராட்டியாரோடு கூடின பெரிய பெருமாள் சேர்த்தியிலே ஈடுபட்டு தேசிகனும் அங்குள்ள பாகவதர்களு மெழுந்தருளியிருக்க—இப்ப்ரபந்த விஷயத்தில் உடையவருடைய ஸம்ப்ரதாய கதமான ஆருயிரப்படியின் அர்த்த ப்ரகாசகமாக பஹு ப்ரபந்த நிர்மாணத்தாலும் இந்த பகவத் விஷயார்த்த பரம்பரா அவிச்சின்னஸ்தாபநாதிகளினுலும் திவ்ய தேசங்கள் தொடங்கி க்ருஹாராதன பர்யந்தம் இயல் கேட்டருளும்படி முன் போலே தழைப்பித்தபடியாலும் இவர் விஷயமான இத்தனியனை ப்ரபந்தானுஸந்தான காலத்தில் க்ருதக்ஞுதா பரிவாஹ ரூபமாக அனுஸந்திக்கும்படி திருஉள்ளம் பற்றவேணு மென்றச் சேர்த்தியிலே பாகவதர்கள் ப்ரார்த்திக்க பெரிய பெருமாளும் பிராட்டியாரும் அப்படியே யாகக் கடவதென்று நியமித்த படியையும் ஆராய்ந்தால் விலக்ஷணமான ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டர்களான பாகவதர்களுக்கு இயலினுடைய ஆத்யந்தங்களிலே இத்தனியன் அவச்யானு ஸந்தேயமாகக் கடவது. இதற்குப் புறம்பாய் வரும் தடைகள் அப்ரமாணமாகையாலும் அஸம்ப்ரதாயமாகையாலும் இச்ச்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்கு கூடஸ்தாளான ஆழ்வார் எம்பெருமானுர் நிகமாந்த தேசிகாதிகளுடைய ஸூக்த்யர்த்தங்களுக்கும் அனுஷ்டானத்திற்கும் விருத்தமாகையாலும் இதில் விசேஷ ப்ரவர்த்தகரான உடையவருடைய நியமன விருத்த ரூபமான க்ரந்தான்வய பரம்பரா ஸம்பந்தத்தாலும் சிஷ்ட பரிக்ராஹ்யங்கள் என்னுமிடம் தடஸ்தர்களான ப்ராமாணிகர்கள் கண்டு கொள்ளலாம்.

ஏழாட்காலம் பழிப்பிலோம்

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான்
திருமலை, சங்கபுரம், ஈகை
வேதாந்த தேசிக தாதாச்சாரியர் ஸ்வாமி
வியாகரண சிரோமணி,
திருவள்ளூர்

ஸ்ரீ:

1. ஸ்ரீ தேசிகாவதார காரணம்

ஸ்ரீ ஹயாஸ்ய சடாராதி நாதயாமுந லக்ஷ்மணா: |
யத்ஸூக்தித்யம்ருத த்ருப்த்தாஸ்தம் வந்தே வேதாந்த் தேசிகம் ||
ஸ்வாமி தேசிகன் அவதரித்த காரணத்தை
''வேதே ஸஞ்ஜாத கேதே முனிஜந வசநே ப்ராப்த்தநித்யாவமாநே
ஸங்கீர்ணே ஸர்வவர்ணே ஸதிததநுகுணே நிஷ்ப்ரமாணே புராணே |
மாயாவாதே ஸமோதே கலிகலுஷவசாத் சூந்யவாதேவிவாதே
தர்மத்ராணாய யோபூத் ஸஜயதி பகவான் விஷ்ணுகண்டாவதார: ||''

என்று ஸங்கரஹித்தார்கள். (டிண்டிமகவியின் ச்லோகம்)

ஸ்ரீ பாஷ்யகாரர் ''கலியும் கெடும் கண்டுகொள்மின்'' என்னும்படி ஸித்தாந்த ஸ்த்தாபனம் செய்திருந்த காலத்தில், கலிபுருஷன் வந்து தன்னை இவ்வுலகில் வாழவிடாமல் செய்த உம்முடைய மதத்தை ஸமயம் பார்த்து கலக்கப்போகிறேன் என்று சொல்லி உடைய வரும் பெரிய பெருமாள் திருவடிகளில் என்னுடைய மதம் அழியாமல் இருக்கவேணும் என்று சரணம் புகுந்தார். இது விஷயத்தை வடுகைநம்பிகள் யதிராஜ வைபவத்தில் ''ஸர்வத்ர...கடாக்ஷை:'' என்று ஸங்க்ரஹித்தார். பிறகு அப்படியே கலி புருஷன் மதத்தைக் கலக்கியபோது ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அவதரித்து தர்மஸ்த்தாபநம் செய்தார்.

2. அவதார வருஷம்

ஸ்ரீ தேசிகன் கலியுகாதி 4371 விபவவருஷத்தில் புரட்டாசி திருவோணத்தில் அவதரித்தார். ஸ்ரீ வைஷ்ணவர்கள் பராங்குசாவதாராதி என்று வ்யவஹரிப்பர்கள். கலியுகாரம்பம் பஹுதான்ய வருஷத்தில் என்றும் ப்ரமாதி வருஷத்தில் என்றும் உலகில் அபிப்பிராயபேதம்

உண்டானபடியால் அதை அநுஸரித்து ஸ்ரீதேசிகன் அவதரித்தது விபவ வருஷத்தில்என்றும் சுக்ல வருஷத்தில் என்றும் சிலர் சொல்லுகின்றனர். நம்மாழ்வார் சரித்ரத்தில் 6000 படியில் பகுதான்ய என்றும் ப்ரமாதி என்றும் இருப்பதைப்போல் இங்கு கண்டுகொள்வது.

''கேளீ யோக்யே சகே து விபவாப்தே'' என்று ஆசார்ய சரிதத்திலும் ''விபவாப்த்த ஸமுத்பன்ன'' என்று அஷ்டோத்திர சதத்திலும் ''யோவர்ஷே விபவே'' என்று ஆசார்ய த்வாத்ரிம்சத்திலும் இருக்கிறபடியால் விபவ வருஷமே தேசிகன் திருவவதார வருஷமென்று பெரியோர்களின் முடிவு.

3. கண்டாவதார விஷயம்

ஸ்ரீ தேசிகன் மங்களத்தில் ''வேங்கடேசாவதாரோயம் த்தகண்டாம்சோதவா பவேத் | யதீந்த்ராம்சோ தவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம் ||'' என்று இருக்கிற படியால் கண்டாவதாரர்தான் என்று எப்படி சொல்லக்கூடும்! தேசிகனும் ஸங்கல்ப ஸூர் யோதயத்தில் ''உத்ப்ரேக்ஷ்யதே...கண்டாஹரேஸ் ஸமஜநிஷ்ட யதாத்மநேதி'' என்றார். உத்ப்ரேக்ஷை என்பது இல்லாததைச் சொல்லுதல், இருட்டைப் புகை என்று சொல்வது போல். ஆகையால் கண்டாவதாரம் தேசிகன் இல்லை என்பதே தேறுகிறது என்று சிலரின் ஆக்ஷேபம்—இது. விஷயத்தில் பூர்வர்களின் ஸ்ரீஸூக்திகள் ப்ரமாணம்—வடுக நம்பிகள். உடையவரை ''சேஷாம்சக:'' என்று எதிராஜ வைபவத்தில் சொல்லி உடையவர் மங்களத்தில் ''சேஷோ வா ஸைந்யநாதோ வா ஸ்ரீ பதிர்வேதி ஸாத்விகை: விதர்க்யாய'' என்றார் இவ்விடத்தில் விதர்கம் என்று சொல்வதால் உத்ப்ரேக்ஷை என்பது ஏற்படுகிறது. இதனால் உடையவரின் அவதாரம். இம்மூன்றிலும் ஒன்றும் இல்லை என்று ஏற்படும். இதேபோல் யதீந்த்ர ப்ரவணப்ரபாவத்தில் மணவாள மாமுனிகளை சேஷாவதாரமாகவும் ''அநந்த சாயிந: அவதாரேஷு அந்யதமம் வித்தி ஸௌம்ய வரம் முனிம்'' என்று பகவதவதார மாகவும் சொல்லியிருக்கிறது.

ப்ரதிவாதி பயங்கரம் அண்ணனின் சரிதமாய் காதி ஸ்வாமியால் செய்யப்பட்ட ஆசார்யசர்யாம்ருதத்தில் ''கரிசைலநாத: அவாதரத்'' கூரேசவரோ வா அவததார பூய: உத்ப்ரேக்ஷ்யமாணு புவிபாலமேநம் என்றார். ஆகையால் இங்கு உத்ப்ரேக்ஷை என்று சொன்னபடியாலும் யதீந்தர ப்ரவணப்ரபாவத்தில் இரண்டாகச் சொல்லி இருப்பதாலும் மாமுனிகள் இந்த அவதாரம்தான் என்று நிச்சயித்துச் சொல்லமுடியாது. காரண விசேஷங்களைக் கொண்டு ஒவ்வொரு அவதாரமாகச் சொல்லுவதுண்டு. ஸ்ரீ தேசிகன் விஷயத்தில் கண்டாப்ரதான ஸ்வப்ந விஷயத்தாலும் இன்னும் அநேக காரணங்களைக் கொண்டு வித்வான்கள் கண்டாவதாரமென்று சொன்னபடியால் கண்டாவதாரம் என்பதற்கே உபபத்தி உள்ளது. ஆகையால் பூர்வாசாரிய, மத்தியஸ்த்த, அபியுக்த வாக்யங்களைப்போல் இங்கும் கண்டுகொள்வது.

4. வாழித் திருநாமம்

மணியின் திருவவதாரமான தேசிகனை மணி தேசிகனுகத் திகழ்ந்தது என்று சொல்ல வேண்டியிருக்க திருமலைமால் திருமணியாய் சிறக்க வந்தவென்று எப்படிக் கூறலாம். சிறப்பித்துக் கூறவேண்டிய இடத்தில் இப்படிச் சொல்வதுதான் பொருத்தம். லக்ஷ்மீ ஸீதையாகவும், விஷ்ணு ராமனுகவும் அவதரித்தவிடத்தில் ''ஸீதா லக்ஷ்மீ: பவான் விஷ்ணு:'' என்கிற ஸ்ரீமத் ராமாயண ச்லோகத்தை இங்கே அநுஸந்திப்பது.

5. வேதே ஸஞ்ஜாதகேதே

சிலர் ஏகமேவாத்விதீயம் என்கிற ச்ருதியை முக்யமாகக் கொண்டார்கள். சிலர் போக்தா போக்யம் இத்யாதிபேத ச்ருதிகளை முக்யமாகக் கொண்டார்கள். ய:ப்ருதிவ்யாம் திஷ்டன் இத்யாதி கடக ச்ருதிகளை கௌணமாக்கிவிட்டார்கள். இப்படியே ருக் யஜுஸ் ஸாமகதமான புருஷ ஸூக்த்தத்திற்கும் பவித்ரம் தேவிததம் இத்யாதி ஸகல வேதபடிதமான மந்திரங்களுக்கும் வேறு அர்த்தங்களைச் சொல்லுகிருர்கள்.

இது விஷயத்தை ஸ்ரீ தேசிகன் ''அத்வைதம் க்வசிதர்பிதம் க்வசிதிஹ த்வைதம் மயா ஸாதிதம் த்வைதாத்வைத ஸமாஹ்ருதி: துஸ்தா வ்யவஸ்தாபிதா'' என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸங்க்ரஹித்தார். ஸர்வார்த்த ஸித்தி சததூஷணீ முதலான க்ரந்தங்களால் பேதாபேத கடக ச்ருதிகளின் அர்த்தத்தை நிஷ்கர்ஷித்தார். ''மிதோபேதம் த்வேஷ்வபிலபதி பேதச்ருதிரஸள விசிஷ்டைக்யாத் ஐக்யச்ருதி ரபிச ஸார்த்தாபகவதி | இமாவர்த்தௌ கோப்தும் நிகில ஜகதந்தர்யமயிதா நிரீசோ லக்ஷ்மீச: ச்ருதிசரபராபி: ப்ரணிததே'' என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸங்கரஹித்தார்.

இம்மாதிரி சரணம் பவித்ரம் இத்யாதி இடங்களிலும் ஸுதர்சனபரமாக அர்த்தம் செய்ததை ஸச்சரித்ர ரக்ஷையில் காணலாம். இப்படி ஸம்ஸ்கிருத வேதத்தின் துயரத்தைத் தீர்த்து தமிழ் வேதத்திற்கு ஏற்பட்ட துயரத்தையும் தீர்ப்பதற்காக நிகமபரிமளம் த்வாத்ரிம்சத் ரஹஸ்யங்களை அருளிச் செய்தார். நிகம பரிமளம்லுப்த்தமானுலும் அதன் ஸங்க்ரஹமான த்ரமிடோபநிஷத்ஸாரம் தாத்பர்ய ரத்னுவளி முதலானதுகளில் அதன் கண்டனங்கள் ஸ்பஷ்டமாகக் காண்கின்றன.

ஆழ்வாரை ஸம்ஸாரி என்று திருவாராயிரப்படிக்குப் பின்புள்ள வ்யாக்யாதாக்கள் சொன்னுர்கள்.

ஆழ்வார் அவதார புருஷர் என்பதையும் சில ஹேத்வாபாஸங்களை காட்டி கண்டனம் செய்தார்கள். இதனுல் திவ்யப்ரபந்தத்திற்கு வக்த்ரு வைலக்ஷண்யம் தொலைக்கப்பட்டது.

ஸ்ரீ தேசிகன் ''அபோஹ்ய ஸ்வம்பாவம் ஹரிசரண ஸந்தாறரு கலிகாம் அவிக்ஷித் யோகீ ய:'' என்பதனுல் ஆழ்வார் அவதார புருஷர் என்பதை ஸ்தாபித்து வக்த்ரு வைலக்ஷண்யத்தை நிலை நிறுத்தினுர்.

அப்படியே தமிழ் ம்லேச்ச பாஷை என்றும், ம்லேச்சர் பிதற்றும் தமிழ் என்றும். ம்லேச்ச ஜாதிகளிலே அப்பாஷைகளிலே கேட்டுப் போடுவதுண்டு என்றும் இப்படிச் சொல்லி ப்ரபந்தத்திற்கு ஆச்ரய வைலக்ஷண்யத்தை குலைத்தார்கள்.

இதற்கு கண்டனமாக தாத்பர்ய ரத்நாவளியில் ''பாஷாகீ: திப்ரசஸ்தா...ஸாசாகஸ்த்ய ப்ரஸூதாத்விதிபரிஜக்ருஹே'' என்று தமிழ் பாஷைக்கு ஆர்ஷத்வத்தைச் சொல்லி ஆச்ரய வைலக்ஷண்யத்தை ஸ்த்தாபித்தார்.

ப்ரதிபாத்யார்த்த விரோதத்தையும் ''வெரிதே அருள் செய்வர் செய்வார்கட்கு'' இத்யாதி ஸ்தலங்களில் சமிப்பித்தார். வெரிதே அருள் செய்வர் என்பதை மாத்திரம் எடுத்துக் கொண்டு நிர்ஹேதுகமாக க்ருபை செய்வர் என்ருர்கள். மேலேயுள்ள செய்வார் களுக்கு என்பதை மறந்தார்கள். ஸ்ரீ தேசிகன் ''அஜாயமாநோ பஹுதா விஜாயதே இத்யாதி ஸ்தலங்களில் அகர்மவச்ய ''இச்சாக்ருஹீத அபிமதோரு தேஹ'' என்று நிர்வஹித் தாப்போல் வ்யாஜத்தை முன்னிட்டு அருள் செய்வன் என்று நிர்வஹித்தார்.

இவ்விதமே ''குருகா நீளா'' என்கிற இடத்தில் சிரகாலஸ்த்தாயியே தவிர கைவல்யம் நித்யமல்லவென்று ''மன்றுறில்'' என்பதனுல் மோக்ஷம் தான் நித்யமென்றும் ஸித்தாந்தம் செய்தார். அநுஷ்டான விஷயத்திலும் பிறர் சொன்ன அர்த்தங்களை கண்டித்து தத் வார்த்தத்தை அருளிச் செய்தார். நாச்சியார் திருமொழி வ்யாக்யாநத்தில் ஆண்டாள் காம தேவரூப தேவதாந்தரபஜநம் பண்ணினதாக எழுதினுர்கள்.

ஸ்ரீ தேசிகன் நாராயணனே நமக்கே பறைதருவான் உனக்கே நாமாட் செய்வோம் என்று முன் ப்ரபந்தத்தில் கூறியவள் பிறகு தேவதாந்தரபஜநம் பண்ணினுள் என்பது பொருந்தாது. நாச்சியார் க்ருஷ்ணனை பெறுகைக்கு பண்ணின காமதேவார்ச்சனம் ச்ருங்காரஸமாதி அநுகுண க்ருஷ்ணரூபாந்தர விஷயம் என்ருர். இவைகளை எல்லாம் ஸேவித்த அண்ணன் ''ஸரோ பூத வேதாள.........அவிச்சின்ன ஸத்ஸம்பிரதாயார்த்த வேதீ குரு: வேங்கடேச: என்று அருளிச்செய்தார்.

6. திருமண் விஷயம்

இவ்விதமே ஹரே: பாதாக்ருதிம்......ஊர்த்வபுண்ட்ரம் தாரயதி...ஸ பரஸ்ய ப்ரியோ புவதி. இத்யாதிச்ருதிகளால் ஹரிபாதாகாரமே முக்யமானது என்று ஸ்த்தாபித்தார்,

மத்ஸ்யாகாரம் என்ருல் எப்படி ஒரு மத்ஸ்யத்தின் ஆகாரத்தை எழுதுகிருர்களோ அவ்விதமே பாதாக்ருதி என்ருலும் ஒரு பாதத்தின் ஆகாரத்தைக் கொள்ளவேணும். அதன் நடுவில் ''சது:சக்ரம் நமஸ்யாமி'' இத்யாதியால் சொல்லப்பட்டபடி பகவானை த்யானம் செய்ய வேண்டும். விரல்கள் சங்கு சக்ர ரேகைகள் முதலானதுகளை அங்கு த்யானிக்க ப்ரமாணம் கிடையாது. நெற்றி முதலிய இடங்களை சொல்லும்போது த்ரிவிக்கரமனுக்கும் ஹ்ருஷீகேச னுக்கும் தோள்களையும் கழுத்துகளையும் ஸ்த்தானங்களாக சொல்லி இருக்கிறது.

இது எங்ஙனே கூடும் என்ருல் இது ஊர்த்வபுண்ட்ர ப்ரகரணமாகையயாலே ''ஊர்த்வதாச்ரயண ஸூசித சக்த்தி'' ஊர்த்வ புண்ட்ரதிலகம் என்று கூரத்தாழ்வான் அருளிச் செய்தபடியே கழுத்திலேதான் மேல் நோக்கி இடமுடியுமாகையால் ஸ்ரீ தேசிகன் பன்னிரு நாமத்தில் வலக்கழுத்தையும் இடக்கழுத்தையும் ஸ்த்தானமாக நிர்த்தேசித்தார். ஸ்ரீ பாஷ்யத்தில், உபஸம்ஹரிக்க முடியாத குணங்களை விட்டுவிட வேண்டுமென்றும் ஸம்ப்ருத்யதிகரணத்தில் அருளிச் செய்தார். அதைப் போல் தோள்களில் இடுவதை விடவேண்டியதுதான்.

ஆனுல் தோள்களிலிருந்து ஆரம்பித்து கழுத்தில் இடுகிறபடியால், தோள்களில் கொஞ்ச ஸம்பந்தத்தைக் கொண்டு ப்ரமாணங்களுக்கு உபபத்தி சொல்லலாம். பூர்வாசார் யர்களும்-''வங்கண் பறவையுள் பாகன்'' என்கிற இடத்தில் பெரிய திருவடிகளின் முதுகின் மேல் என்றும் ''கருடவாஹன்னுநிற்க'' என்ற விடத்தில் பெரிய திருவடி கழுத் தில் என்றும் ''பிள்ளைக் கடாகின்ற, என்கிற இடத்தில் பெரிய திருவடி திருத் தோள்களிலே என்றும் அருளிச் செய்தார்கள். ஒரே ஸமயத்தில் மூன்று இடங்களிலும் ஏகதேச மாத்திரத் தைக் கொண்டு அங்கு இருப்பதாகச் சொல்லுகிருப் போலும் ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயாதி வாக்யாநுகுணமாக கழுத்துகளே ஸ்த்தனம் என்று பன்னிருநாமப் பாட்டால் தேசிகன் ஸித்தாந்தம் செய்தார்.

7. ஜாதி விஷயம்

முனிஜநவசநே ப்ராப்த்த நித்யாவமானே

ந சூத்ரா பகவத் பக்தா: விப்ரா: இத்யாதி பக்தகுண ப்ரசம்ஸாபரமான வாக்யங் களைக் கொண்டு ஜாதி ஆகமாபாயியே என்று சிலர் அதிவாதம் செய்கிருர்கள். அவை யாவன– க்ஷத்ரியனை விச்வாமித்ரன் ப்ராம்மணுன்-மர்யாதாநாம் கர்த்தா காரயிதாவான பெருமாள் ஜடாயுவுக்கு பரம்மமேதஸம்ஸ்காரம் செய்தார். சூத்ர ஸ்த்ரீஜாதரான விதுரருக்கு யுதிஷ்டிரர் ஸம்ஸ்கார விசேஷம் செய்தார். வைதிகோத்தமரான உடையவர் சதுர்த்தவர்ண ஸ்த்தரான திருக்கச்சி நம்பியை அநுவர்த்தித்தார். சதுர்த்தவர்ணஸ்த்த ரான மாறநேர் நம்பிக்கு பெரிய நம்பி ஸம்ஸ்காரம் செய்தார். நம்பிள்ளை சதுர்த்தவர்ண

ஸ்த்தரான ஏருதிருவுடையார் தாஸர் திருக்கையால் ஸ்பர்சம் செய்வித்த அன்னத்தை ஸ்வீகரித்தார். இது முதலானவைகளால் ஜாதி ஆகமாபாயியே என்றுர்கள். அதற்கு அனு குணமாக சாஸ்த்ரார்த்தத்தையும் சொன்னுர்கள். இது விஷயங்களை பார்த்த தேசிகன்—

கேசித் தத்ததுப்ாக்யாந தாத்பர்யக்ரஹணக்ஷமா : |
கலிகோலாஹல க்ரீடாம் வர்த்தயந்தி ரமாபதே: ||
வைஷ்ணவத்வேந மாந்யத்வம் ஸமாநம் முநிஸம்மதம் |
ஜாத்யாதி த்வம்ஸத: ஸாம்யம் முக்திகாலே பவிஷ்யதி ||

இத்யாதியால் கலிகோலாஹலசமநம் செய்தார்.

வர்ணுச்ரமாசாரவதா...நாந்ய: தத்தோஷகாரணம் என்கிறபடியே

''ப்ரபன்னனுக்குப் ப்ராம்மண்யாதி விசிஷ்ட சரீரம் விடுமளவும் அவ்வோ ஜாத்யாதி களுக்கீடான பகவதாஜ்ஞாநுபாலநம் கர்தவ்யம் என்கிருர்.

8. விச்வாமித்ர விஷயம்

மதங்கன் என்கிற சண்டாளன் ப்ராம்மண்யத்திற்கு ஆசைப்பட்டு தவம் செய்யும்போது இந்திரன் ''ப்ராஹ்மண்யம் துர்லபம் தாத ப்ரார்த்தயாநோ விநங்க்ஷ்யஸி'' என்றுன். அவனும் தவத்திலிருந்து மீண்டு விட்டான். விச்வாமித்ரன் எப்படி ப்ராம்மணனுன் என்று கேட்டதற்கு பீஷ்மர் சருவ்யத்தியாஸத்தால் ப்ராம்மண்யம் ஏற்பட்டது என்றுர்.

விதுரருக்கு பண்ணின ஸம்ஸ்காரம் அமந்த்ரகமானது. இதை தூஷ்ணீமாதல் என்றுர் தேசிகன்.

ஜடாயு ஸம்ஸ்கார விஷயத்தில் பித்ருஸூக்தம் ஜஜாப என்று இருப்பதால் வ்யக்தி விசேஷ நியதமாதல் என்றுர். ஒரு விஷயத்தை வேறு இடத்தில் ஸஞ்சாரம் செய்யக்கூடாது அப்படி செய்தால் த்ரௌபதிக்கு பஞ்சபத்நீத்வத்தை போல் மற்றவர்களுக்கும் ஏற்பட்டால் உலகமர்யாதை அழிந்து விடுமென்றுர். ராமாயண வ்யாக்யாதாவான கோவிந்த ராஜர் ''இதம் ச த்ரௌபதீ விவாஹாதிவத் ஐதிஹாஸிக விலக்ஷண வ்யக்தி விசேஷநியதமிதி நாதிப்ரஸங்காவகாச:'' என்றுர்.

ரஹஸ்யத்ரயஸாரம் ஸேவித்தவராகையாலே தேசிக ஸித்தாந்தத்தையே முக்யமாக கொண்டார். அவர் ரஹஸ்யத்ரயஸாரத்தை ''ஸா காசீதி ந சாகசீதி என்று அபி யுக்தோக்தியாக வ்யாக்யானத்தில் எழுதினுர்.

மாறநேர்நம்பி விஷயம்- மாறநேர் நம்பியை திருப்பள்ளி படுத்தியதாக எழுதியது கல்பிதம். அனுகமனம் செய்து ஸ்நாநம் செய்யவில்லை என்று தான் பெரிய திருமொழி வ்யாக் யானத்தில் ''கண்சோர'' பதிக அவதாரிகையில் உள்ளது. உடையவர் பெரிய நம்பி யிடம் சென்று ''ஜீயர் மரியாதை கிடைக்க காரியம் செய்ய வேண்டாவோ'' என்று கேட்ட போது சிறிது குறைய ஆசரித்ததாக பதில் அருளிச் செய்ததாக உள்ளது. பூர்ணமாக ஏன் செய்யக் கூடாது. ஜாதி விநாசவாதிகளுக்கு ப்ரதிகூலமே.

9. உடையவர் அனுஷ்ட்டான விஷயம்

உடையவர் திருக்கச்சி நம்பியை அனுவர்த்தித்த க்ரமத்தால் வர்ணாச்ரமவிபரீதோப சாரம் செய்யலாம் என்றதும் அஸங்கதம். உடையவர் திருக்கச்சி நம்பியயை ப்ரணமம் செய்யத் துடங்கியபோது நம்பிகள் ப்ரணமம் செய்வதை தடுத்துவிட்டார் என்று.

'' நோ யுக்தம் த்விஜவர லௌகிக க்ரமஸ்ய |
இத்யுக்த்வா ப்ரணதிபரம் ஸ தம் ந்யரௌத்ஸீத் ''

என்று எதிராஜ வைபவத்தில் உள்ளது. இதுவும் ஜாதி வ்யவஸ்த்தையை த்ருடீகரணம் செய்கிறது. நம்பிள்ளை சதுர்த்தவர்ணஸ்தரான ஏருதிருவுடையார் கை ஸ்பர்சத்தால் பரி சுத்தமான அன்னத்தை அமுது செய்தார் என்றால் அப்படியே ததீயர்கள் யாராயினும் அவர் கையால் ஸ்பர்சித்து புஜிக்கலாம். திருமழிசை ஆழ்வாரும் கிருஷ்ணநாம் வ்ரீஹீணாம் இத்யாதியை உச்சரிக்காமல் கருப்பு நெல்லை நகத்தால் உரித்து காண்பித்தார். ஸம்ப்ரதி பன்ன ஆழ்வார் ஆசார்யர்கள் உக்த்தி அனுஷ்டாநங்களால் ஜாதி அவிநாசியே என்பதே இங்கு விவக்ஷிதம். சததூஷணியில் தாத்காலிக ஸப்ரச வர்ஜநேபி ஸ்த்ரீ தர்மிண்யாம் ஆத்ம ஜநந்யாமிவ மாநஸிக வாசநிக ஸம்பாவநா ஸாமர்த்ய வைபவேந புராண இதிஹாஸ பகவத் வாக்ய சத நிர்ணீதத்வேந சாஸ்த்ராநுவர்த்திநாம் அவஜ்ஞாப்ரஸங்க அபாவாத் என்று அருளிச் செய்தார்.

10. த்ருஷ்டாந்த விஷயம்

இங்கு தேசிகன் ஆழ்வார் விஷயத்தில் '' ஸ்த்ரீ தர்மிண்யாம் ஆத்ம ஜநந்யாமிவ '' என்று ஹீந த்ருஷ்டாந்தத்தை காட்டினர் இது அபசார ஹேது என்று சிலர் சொல்லு கிறார்கள். பகவதுபாதானத்ரவ்யத்தை பரீக்ஷிப்பது மாத்ருயோனி பரீக்ஷையோடு ஒக்கும் என்பதைஇவர்கள் உபசார ஹேதுவாகக் கொண்டதால் போலும்.

ஸ்ரீ தேசிகன் தன்னை உடையவர் சிஷ்யர்களுடைய ஸ்ரீ ஸூக்திகளோடு கூட வஸிக்க புத்தியை உடையவன் என்று தத்வமுக்தாகலாபத்தில் ''யதிபதிசாத்ர ஹஸ்தாக்ர

ந்ருத்யந்நாராசந்யாஸரேகாஸஹசரிதமதி :'' என்றார். முன்பு திருமங்கை மன்னன் ஸ்ரீரங்கநாத கைங்கரியத்திற்காக ஸ்வர்ண பௌத்த விக்ரஹத்தை அபஹரித்தபோது அரசன் புத்த ரூபியான பகவத் விக்ரஹத்தை அபஹரிக்கலாமோ என்றான். அதற்கு ஆழ்வார் வேதபாஹ்ய மத ப்ரவசநம் பண்ணும் பகவான் அநுபாஸ்யன். ரஜஸ்வலாஸ்த்ரீ தாயாரானா லும் பிள்ளைகளுக்கு அநுபாஸ்யை ஆவாள் என்றார். இது விஷயத்தை உடையவர் சிஷ்யர் கருடவாஹந பண்டிதர் திவ்விய ஸூரிசரிதத்தில் ''ச்ருதி மார்க பாஹ்ய ஸமயேஷு வஸந் அநுபாஸ்யதாம் ஹரிருபைதி புதை: ஜநநீஸூதைரிவ ரஜ: ப்ரஸவே '' என்றார். இப்படி உடையவர் சிஷ்யர் எழுதியதை பார்த்து பகவான் விஷயத்தில் போல் ஆழ்வார் விஷயத்தில் உபயோகித்தார்.

11. ப்ரபந்தஸார விஷயம்

இயற்பா வ்யாக்யாநாரம்பத்தில் ஆழ்வார்களை ''இவர்கள்தான் அவதரித்து ஓரோர் தேசவிசேஷங்களிலேயாகிலும் காலப் பழைமையாலே இன்னவிடமென்று நிச்ச யிக்கப்போகாது'' என்றார் பெரியவாச்சான்பிள்ளை. ''கைதை சேர்பூம் பொழில் சூழ் கச்சிநகர் வந்துதித்த'' இத்யாதி பூர்வாசாரிய பாசுர மிருக்க தேச காலாதிகள் நிச்சயிக்கப் போகாது என்று அஸங்கதமாகையாலே ஸ்ரீ தேசிகன் தேசகாலாதிகளை தெரிவிக்க ப்ரபந்த ஸாரத்தை அருளிச் செய்தார்.

ப்ரபந்தஸாரம் என்று சொல்லுவது இலக்கண விருத்தம். பிரபந்த என்று இலக்கணப் படி சொல்லவேணும் என்பர் சிலர். அதற்கு ஸமாதாநம். தனை சீர்வண்ணம், சீறும் தளையும் இத்யாதி ஸூத்திர காரிகைகளின்படி இகரத்தை கழித்து ப்ரபந்தம் என்றே சொல்ல வேண்டும்.

நாளூர் திங்கள் என்று சொல்லக் கூடாது திங்கள் நாளூர் அல்லது ஊர் திங்கள்நாள் என்று சொல்லுகிறார். போஜ சம்புவில் ராமாவதார ச்லோகத்தில் நவம்யாம் திதள மேஷம் கதே பூஷணி என்று இருக்கிறது. மணவாளமாமுனி அவதார ச்லோகத்தில் ''ஜைவே வாரே சதுர்த்யாம் ஸமஜநிச திதள சுக்ல பக்ஷே ஸுகர்மா. இங்கு வாரத்தை முன்னடியும் பிறகு திதி பக்ஷங்களை சொன்ன முரண்பாடு உண்டு. ''சுக்லேபக்ஷே சதுர்த்யாம் ஸமஜநி ச திதள ஜீவவாரே ஸுகர்மா என்று தாங்கள் முதலில் திருத்திக் கொண்டு பிறகு மற்றவரை பற்றி பேசலாம்.

அமுதர் பாடல் என்று ஒரு பாட்டிலும் எதிராசர் தம்மோடு என்று ஒரு பாட்டிலும் நூற்றந்தாதி கர்தாவை சொன்னது அஸங்கதம் என்கிறார்கள் இதற்கு பதில்—

நூற்றந்தாதி தனியனின் ''அமுதோங்கும் கலித்துறை'' என்று இருக்கிறது. நம் பிள்ளை சிஷ்யர் செய்த ''ஊழிதோறும் இத்யாதி பாசுரத்தில் குலமுனிவன் கூறிய நூல்''

என்று இருக்கிறது. இங்கு குலமுனிவன் என்பவர் உடையவர் என்று பிள்ளை லோகம்சீயர் வ்யாக்யானித்துள்ளார். இந்த பாசுரங்கள் தேசிகன் காலத்திற்கு முற்பட்டவைகள் ஆகை யால் அதைப் போல் ப்ரபந்த ஸாரத்திலும் கண்டு கொள்வது

ரஹஸ்யங்களிலுள்ள ஆத்யந்த பாசுரங்களை ஒன்று சேர்த்து தேசிக ப்ரபந்தம் என்று பெயர் இட்டார்கள் என்று சிலர் சொல்லுகிறுர்கள். அதற்கு ஸமாதானம்-தனிச்லோகியில் உள்ள ச்லோகங்களை ஒன்று சேர்த்து ராமாயண மென்று பெயர் இட்டார்கள் என்பதோடு ஒக்கும். அடைக்கலப்பத்து முதலானவைகள் எந்த ரஹஸ்யத்தின் பாசுரங்கள் என்ற கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும்.

12. ப்ரணாம விஷயம்

ப்ரணாமம் பண்ணும் போது ஒரு தடவை ஸேவிக்க வேணுமா ? பலதடவை ஸேவிக்க வேண்டுமா ? என்பதை பற்றி தேசிகன் ஸ்ரீ பாஞ்ச ராத்திர ரக்ஷையில் ப்ரதக்ஷிணப்ரணாமாந் ஸ்ச யுக்மான் குர்யாத் நைகத்ரிஸப்த குர்வீத இதி விஷமப்ரதிஷேதாத்'' என்றதனுல் பல தடவை ஸேவிக்க வேண்டுமென்று ஸித்தாந்தம். ஆனுல் ஸக்ருத்தே அக்நே நம:, ஏக: க்ருஷ்ண நமஸ்கார: இத்யாதிகளுக்கு அர்த்தம் என்னவென்றுல்--பல கணக்குகள் எண்ணும் போது முதல் ஒன்று என்று தான் எண்ண வேண்டுமாகையால் ஸக்ருத்து என்று தொடங்கி த்விஸ்தே நம: இத்யாதி சொல்லுகிறது. ஆகையால் ஒருதரம் ப்ரணாமத்திற்கு இந்த வேத வாக்யம் ப்ரமாணமாகாது.

ஏக: கிருஷ்ண நமஸ்கார: என்கிற இடத்தில் க்ருஷ்ண ப்ரம்ம ருத்ராதி நமஸ்காரங் களில் க்ருஷ்ண நமஸ்காரம் ஒன்றுதான் பலத்தைக் கொடுக்கும். இதற்கு முன் ச்லோகத்தில் ''கர்மண்யவிபலாஸைகா யாகோவிந்தாச்ரயா என்று இருக்கிறது. கோவிந்தாச்ரயமான கிரியையில் ஒன்றுதான் பலம் என்றுல் அவரைபற்றிச் செய்யும் ஷோடசோபசாரங்களில் மற்றவை பயனற்றதாகி விடும். வைச்வாநரேஷ்டிந்யாயத்தை இங்கே ஸ்மரிப்பது.

ஏகோபி க்ருஷ்ணே ஸுக்ருத ப்ரணாம: இத்யாதி ஸ்தலங்களிலும் கண்டு கொள்வது. சாஸ்த்திரத்தில் சொல்லியபடி யுக்மமாக செய்வது தான் ஸுக்ருத ப்ரணாமம் என்பது. ''ப்ரணம்யோத்தாயோத்தாய புந: புந: ப்ரணம்ய'' என்கிற வாக்கியத்திற்கு ஸ்ரீ வைஷ்ணவ ஸமயாசாரநிஷ்கர்ஷத்தில் நித்ய முக்த்தருடைய அத்யந்த பக்தி யுக்த்த ஸதாசாரம் என்றுர். உடையவர் நித்ய ஸூரியாகையாலே முன் வாஸநையால் அருளிச் செய்தார் என்றுர். நித்ய ஸூரிகள் செய்வது நமக்கு அநுபாதேயமானுல் அவர்கள் விஷ்ணு ஸேவை செய்வது நமக்கு அநுபாதேயமாகிவிடும். தேவதாந்தர பஜநம் செய்யவேண்டிவரும். ஆனுல் ஸ்ரீ தேசிகன் நமோ நமோ என்ற ச்லோக வ்யாக்யாநத்தில் பௌந: புன்யமலங்க்ருதி: என்றபடியால் ஒருதரம் ஸேவிப்பது தான் சாஸ்த்திரஸம்மதம் என்று ஏற்படுகிறது என்கிறுர்.

சிலர் நம: என்றுலே பல தடவை ஸேவிக்க வேணுமென்று அவரே அருளிச் செய்து விட்ட படியால் நம: நம: என்று சொன்னதற்கு கதி சொல்லவேண்டி அலங்க்ருதி: என்றுர்.

கோவிந்தராஜரும் பரத்வாஜம் புந: புந: என்ற விடத்தில் ஏகப்ரதக்ஷிண ஏகஹஸ்த ப்ரணுமயோரிவ ஏகப்ரணாமஸ்யாபி நிஷத்தத்வாத் புந: புந: இத்யஸ்ய...ப்ரணுமே ந்வயேந நகஸ்சித் விரோத: என்றுர் ஆகையால் இரண்டு தடவை ஸேவிப்பதுதான் தேசிகனுடைய ஸித்தாந்தம்.

13. வ்யாப்தி விஷயம்

" அந்தர் பஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்த்தித:" என்று சொல்லப்பட்ட வ்யாப்த்தி ஸம்பவத் விஷயத்திலே ஆகவேண்டும். ஜீவனுக்கு அந்த: ப்ரதேசம் கிடையாது. காலாதிகளுக்கு பஹி: ப்ரதேசம் கிடையாது. இவன் இல்லாத இடமில்லை என்றுதான் தேசிக ஸித்தாந்தம். ஸர்வ வ்யாப்த்தி பங்கம் வாராமைக்கு ஜீவனுக்கு அந்த: ப்ரதேசம் கல்பித்தால் ககந குஸுமம வ்ருத்தித்வம் பகவானுக்கு இல்லை என்பதைக் கொண்டு ககந குஸுமம் ஒன்று கல்பிக்க வேண்டும் என்று ஸ்ரீ தேசிகன் குமாரர் பரமதபங்கத்தில் பரிஹ ஸித்தார்.

கூரத்தாழ்வானும் " வ்யோமாம்போஜமியத்தயா கலு விதன் ப்ராந்தோயமித்யுச் யதே" என்று பரிஹஸித்தார். அதைப்போல் இங்கும் கண்டுகொள்வது. தேசிகனும் பரமத பங்கத்தில், "ஈச்வரன் ஸர்வவ்யாப்தன் என்கிற ச்ருதிக்கு ஸம்பவத் விஷயத்திலே தாத்பர்யம் இல்லாதபோது தனது தர்மபூதக்ஞானத்திற்கு வெளிவ்யாப்தனுகை வேணு மென்றுர். "நாராயணமணீயாம்ஸம் அசேஷாணும் அணீயஸாம்" என்பதற்கு ப்ரதி காதாநர்ஹத்வம் அர்த்தம் அனுப்ரமாணமன்று என்றும் பஹிர்வ்யாப்தியில் விபுக்களான காலாதிகளுக்கு பஹிர்வ்யாப்த்தி சொல்ல வேண்டா என்றுர்.

14. லக்ஷ்மீ விஷயம்

"ஜ்ஞாநாநந்தாத்யநந்த்த ஸாம்யாத் ஜகஜ்ஜநகத்வ சரண்யத்வ ப்ராப்யத்வாதி ஸாம் யாச்ச ஸாம்யகிராம் நிர்வாஹோ வ்யக்த:" என்று ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் அருளிச் செய்தார்.

ஜகத் காரணம்

"ஜகந்நிதான மத்த்வந்த்வம்" என்று பட்டர் ஸித்தாந்தம் போல் தேசிகனுடைய ஸித்தாந்தம்.

விபுத்வ விஷயம்

பகவானுக்குப் போல் லக்ஷ்மிக்கும் விபுத்வமுண்டு. பரமதபங்கத்தில் பகவானுக்கு அநந்தபதத்தாலே த்ரிவித பரிச்சேதங்களைக் கழிக்குமிடத்தில் இத்யாதி வாக்யத்தால் ஸங்க்ரஹித்தார்.

அதாவது ''யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம்'' என்றதால் தேசபரிச்சேதமும், ''ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீ:'' என்பதனுல் காலபரிச்சேதமும் ஜகத்ஸர்வம் சரீரம்தே என்பதனுல் வஸ்து பரிச்சேதமும் கழிக்கவேணுமென்று ப்ரதிபாதிக்கப்பட்டது.

உபாயத்வம்

அதோ நந்யபராநேக ச்ருதி ஸ்மருத்யநுஸாரத: |
பத்நீவிசிஷ்ட ஏவைக: ப்ரபத்வ்ய இஹோதித: ||

என்றார் தேசிகன். த்வயத்தில் பூர்வ வாக்யத்தில் சொல்லுகிற உபாயவரணத்தின்போது ஸ்ரீமத் என்று இருக்கிறபடியால் ''ஸம்ஸாரார்ணவதாரிணீம்'' ப்ரபத்யேந்நியத: ச்ரீயம் என்பதனுல் உபாயபாவம் ஸித்திக்கிறது.

ஈச்வரத்வம்

''ஈச்வரீம் ஸர்வபூதாநாம்'' என்பதனுல் ஈச்வரத்வம் ஸித்திக்கிறது. சிலர் முக்த ப்ராப்யத்வத்தை ஒப்புக்கொண்டு ஜீவகோடியில் சேர்ந்தவள் என்கிறார்கள். இது ச்ரீபாஷ்ய விருத்தம். த்யுப்வாத்யதிகரணத்தில் ''முக்தோ பஸ்ருப்ய வ்யபதேசாச்ச'' என்கிற இடத்தில் முக்தனுல் அடையப்படுபவன் ஜீவனன்று என்று ஸித்தாந்தம் செய்தார். அதற்கு மாறுனது ''ஞாலத்தூடே'' என்கிற இடத்தில் ஈட்டில் அகாரம் மிதுனவாசகம் என்றார். அதனுலும் ஈச்வரத்வம் ஸித்திக்கிறது. ந்யாய ஸித்தாஞ்ஜநவ்யாக்யாதா ஜீவாந்தரபாவ பக்ஷே து ந தோஷ: என்பதனுல் ஜீவகோடி வாதியின் மதத்தால் தோஷமற்றது என்றால் நிர்குணச்ருதிக்கு குணவிசேஷாபாவவாதிநாம் மதே ச்ருத்யர்த்த ஸங்கோச கரணரூப: தோஷ: குணஸாமாந்யாபாவவாதிநாம் அத்வைதிநாம் மதே ந தோஷ: என்றால் விசிஷ்டாத்வைதிகளுக்கு வரும் குறை ஒன்றுமில்லை. ய: ஸர்வஜ்ஞ: இத்யாதி ச்ருதிகளின் அர்த்தத்தைக் கேட்கும்போது குணஸாமாந்யாபாவவாதிகள் வெட்கத்தால் தலைகுனிகிறப்போலே ஈஸ்வரீம் ஸர்வபூதானும் என்கிற வாக்யத்தைக் கேட்கிற ஜீவகோடிவாதிகள் வெட்கத்தால் தலைகுனிய ப்ராப்தம்.

கடகத்வம்

ஸ்ரீ தேசிகன் ''மோக்ஷப்ரதே பகவதி ஏஷா கடகத்யாதிஷ்டதீதி ஸர்வ ஸம்மதம்'' என்றதனுல் உபாயத்வம் சொல்லுபவர்க்கு ஒரு குறையும் இல்லை. யக்ஞோபவீததாரணம்

ஸர்வ வைதிக ஸம்மதம் என்ருல் ஊர்த்வபுண்ட்ரதாரணம் து ந ஸர்வஸம்மதம் என்ருல் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு வரும் குறை ஒன்றுமில்லை.

பஞ்சபக்ஷ விஷயம்

ஆனுல் ஸ்ரீ தேசிகன் பஞ்சஸ்வேதேஷு பக்ஷேஷு கஸ்சிதேக: ப்ரமாணவான் என்று சதுச்லோகீ பாஷ்யத்தில் ஒரு முடிவும் செய்யவில்லையே என்று சிலர் கலங்குவதுண்டு. வாக்யாந்வயாதிகரணத்தில் அவஸ்த்திதே ரிதிகாசக்ருத்ஸ்ந: என்கிற இடத்தில் பூர்வோத்தரங்களில் உடையவர் ப்ரதிபாதித்ததைக் கொண்டு காசக்ருத்ஸ்னருடைய மதமே உடையவருடைய மதமாகக் கொள்ளுகிருப் போலே இங்கும் ஐந்தாவது பக்ஷம் தேசிகனுடைய பக்ஷமாகக் கொள்ளவேண்டியது. அதுதான் ''யஸ்யாஸ்தேமஹிமாநம்'' இத்யாதி ஆளவந்தார் ஸ்ரீஸூக்திக்கு அநுகுணமானது. ஒருவனுக்கு இரண்டு குமாரர் இருந்தால் முதல்வன் ஜாரன் சோரன் சிறியவன் ஸத்யஸந்தன் என்பதனுல் யோக்யன் இன்னுர் என்பது சொல்லாமலே விளங்குகிருப்போலே உபபாதனத்தினுலேயே ஐந்தாவது பக்ஷம் தான் தேசிகனுடைய பக்ஷம் என்பது முடிவு.

15. சரணுகதி விஷயம்

பக்த்யா பரமயாவாபி இத்யாதிகளைக் கொண்டு ''ப்ரபந்நாதந்யேஷாம் ந திசதி முகுந்தோ நிஜபதம்' 'ப்ரபத்திக்கல்லது சரண்யன் பரமபுருஷார்த்தம் கொடுக்க இறங்கான்' என்ருர் ஸ்ரீ தேசிகன்.

சிலர் உடையவர் பண்ணின ப்ரபத்தியே நமக்கும், தனித்து வேண்டா என்பர். அவர்களுக்கு பதில்: 'ஸ திசது பகவான் அசேஷ பும்ஸாம்' என்று பராசரர் பண்ணி இருக்க அகலகில்லேன் இத்யாதியால் ஆழ்வார் ஏன் மறுபடியும் பண்ணினுர் ! ஆழ்வார் நமக்காகப் பண்ணின ப்ரபத்தியை 'அடிக்கீழமர்ந்து' என்கிற இடத்தில் ஈட்டில் 'ஆழ்வார் பண்ணின ப்ரபத்தியே நமக்கும் எல்லாம் தனித்து வேண்டா' என்றிருக்கிறது. ஆழ்வார் பண்ணியிருக்க உடையவர் ஏன் நமக்கு மறுபடி பண்ணினுர். உடையவருக்கு ஆழ்வார் பண்ணின ப்ரபத்தி தெரியாதா? இங்கு ஆழ்வாரிடத்தில் ஆசார்யத்வ பூர்த்தியில்லை யென்று முமுக்ஷுப்படி வ்யாக்யானத்தில் எம்பார் அரும்பதத்தில் உள்ளது சோசனீயம்.

'உடையவர் அபிமான பூதர்களான நமக்கு ப்ரபத்தி எதற்கு? உடையவர் பண்ணினதாக' 'ச்ருத்வா வரம் ததனுபந்த மதாவலிப்தே என்ற தேசிகன் நித்யம் ப்ரஸீத, வேங்கடேச்வரகவே: ஸ்வேநார்பிதோயம் பர: என்று ஏன் ப்ரார்த்தித்தார்? முமுக்ஷுப்படியில் 'பாசுரம் கேட்டவாறே திருவுள்ளமுகக்கும் என்று இருக்கிறது. இதுகளை எல்லாம் பராமர்சித்தால் பூர்வாசார்யர்கள் நம்மிடத்தில் க்ருபையால் பகவானிடத்தில் ப்ரார்த்தித்தார்கள். பிற்காலத்தில் ஜனித்த நமக்கு மறுபடி செய்துகொள்ள வேணும், பூர்வாசார்ய வாக்யத்தை ஸ்மரித்து,

இவனுடையவன் நான் என்றும் நமக்கு அருளவேணும் என்று ஆசார்யோபதிஷ்ட மந்த்ரத்தைக் கொண்டு, நாமோ, நமக்காக ஆசாரியனோ ப்ரார்த்திக்க வேணும். ஸமாச்ரயண காலத்தில் உபதேசம் பெறுவது சரீர ஸம்ஸ்காரார்த்தமே, மோக்ஷார்த்தமன்று. இது விஷயத்தை தனித்வயத்தில் 'பட்டர் தாம் எம்பார் பாடே ரஹஸ்யம் கேட்டார். மறுபடி ப்ரபத்திக்காக த்வயோபதேசம் பெற்றார் என்றிருக்கிறது. ஈட்டிலும் ஆழ்வார் பாசுரத்தைச் சொல்லி நாம் பலத்தில் அன்வயிக்க வேணும் என்றிருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு வ்யக்தியும் தனக்காகப் பண்ணிக்கொள்ளவேண்டும் என்று ஏற்பட்டது. ஆனால் சிலர் பரதனுக்குப் பலிக்கவில்லை. ஆகையால் சரணாகதிக்கு பல நியதியில்லை என்று பெரிய திருமொழி ஏழை ஏதலன் பதிக வ்யாக்யானத்திலும், ஸ்ரீவசன பூஷணத்திலும் ப்ரதிபாதித்தார்கள். அதற்கு ஸ்ரீ தேசிகன் 'முற்பாடரான ரிஷிகள் பண்ணின சரணாகதிக்குப் பலம் பூர்த்தியானவுடன் பரதனுடைய ப்ரபத்தியை ஸபலமாக்கினார். பரதனுக்கும் ராமன் ஸத்யஸந்தன் என்று தெரியும். ஆகையால் திரும்பி எதிர்பார்த்திருந்தார் என்றார். கோவிந்த ராஜீயத்தில் பரதன் சரணாகதி விஷயத்தில் ஸ்ரீ தேசிக ஸித்தாந்தத்தையே ப்ரமாணமாகக் கொண்டார். நசைச்சத்பிதுராதேசாத் என்ற இடத்தில் பலவத் ப்ரதிபந்தகாந் நைச்சத், சகாராத் ததவஸாநே ஐச்சத் இத்யர்த்த:. ஸர்வதா ப்ரபத்தே: வைபல்யம் அனுசிதம் என்றார். பித்ருவாக்ய பரிபாலனம் உடனே திரும்புவதற்கு ப்ரதிபந்தகம், பரிபாலனம் முடிந்தவுடன் பரத சரணாகதியை ஸபலமாக்கினார் என்பதுதான் இவர்களுடைய ஸித்தாந்தம். ஆகையால் பரமதபங்கத்தில் ஸ்ரீ தேசிகன் "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய இத்தாலேயாதல், ஏக சப்தத்தாலேயாதல் ப்ரபத்தியை அத்யந்தானுபயுக்தமாக்க நினைப்பார்கள் பக்ஷங்கள் எல்லாம் அதிவாத ஸாம்ராஜ்யமாம் இத்தனை என்றார்.

16. நிகமனம்

இப்படி ச்ருதி ஸ்ம்ருத்யாத்யனுகுணமாகவும் பூர்வாபரவிரோதமும் பரஸ்பரவிரோதமும் இல்லாத சுத்தஸத்ஸம்ப்ரதாயக்ரமத்தை ஸங்க்ரஹித்தனம் என்று ஸ்ரீ தேசிகன் அனுக்ரஹித்தபடியே நம் முன்னோர்களும் நாமும் ஆழ்வார் கேசவன் தமர் கீழ்மேலமரர் எழு பிறப்பும் என்று அனுக்ரஹித்தபடியே தேசிகன் தமர் கீழ்மேல் எழு பிறப்பும் மாசதிரிது பெற்று வாழ்வு வாய்க்கின்றபடியைக் கண்டு களிக்க வேண்டும். சதாயு: புருஷ: என்று வேதமும் வேதநூல் பிராயம் நூறு என்று ஆழ்வாரும் ஆயுர்வர்ஷசதம் ந்ருணாம் பரிமிதம் என்று மஹாகவியும் சொன்னபடியே ஏழு புருஷாயஸ்ஸு இன்று பூர்த்தியாகிறபடியால் ததீயர்களான நாம் இன்று ஏழாட்காலம் பழிப்பில்லாமையை அன்வர்த்தமாக அனுஸந்தித்துப் பல்லாண்டு பாடவேண்டும்.

வேதாந்த தேசிக குரோ: அவதார மஹோத்ஸவே
பூர்ணே ஸப்த சதே வர்ஷே க்ருதிரேஷா ப்ரகாசிதா.

—

ஸ்ரீமதித்யாதி கோபால தேசிகாசார்யர் ஸ்வாமி
(வில்விம்பாக்கம் ஸ்வாமி)
தை - விசாகம்



ஸ்ரீமதித்யாதி...நரஸிம்ஹ தாதயார்ய மஹாதேசிகன்
வைகாசி – ரோஹிணி

வேதாந்த லக்ஷ்மண முநே: ப்ராப்த வேதாந்தஸம்பதே
ஸ்ரீமதே சதுராம்நாய ந்ருஸிம்ஹ குரவே நம:

ச்லேஷயுமக சக்ரவர்த்தி—அரசாணிப் பாலை, அஸ்தோகாத்வரி,
கவி வித்வன்மணி, கடாம்பு.

ஸ்ரீ வேங்கடாத்வரி ஸ்வாமி

இந்த மஹான் அஸ்தோகாத்வரி—காஞ்சி கடாம்பு கவிவித்வன்மணியாகிய ஸ்ரீ ரகுநாத தீக்ஷிதரின் குமாரர். காஞ்சீபுரம் ஏடூரிம்மடி கோடி கன்யகாதானம் தாதாசார்ய ஸ்வாமியின் மருமானுவார். தமது திருத்தகப்பனுரைப் போலவே சிறந்த கவியாகத் திகழ்ந்தவர். நமது ஸித்தாந்தத்திற்கு நூற்றுக்கணக்கான கிரந்தங்களை யருளிச்செய்து ஸேவை செய்த மஹான். ஸ்ரீ தேசிகனின் ஆசாரியரான கடாம்பு—அப்புள்ளாரின் நேர் வம்சஸ்தர். ''ச்வாஸம் போனுலும் என் ப்ராஸம் போகாது'' என்று இவர் கூறியதாய் ஒரு பழமொழி உண்டு. ஸகல சாஸ்திரங்களிலும் வல்லுனர். ஒவ்வொரு சாஸ்திரத்திலும் சிறந்த புஸ்தகங்களை எழுதியுள்ளார். இவற்றில் கிடைத்தவை பற்றிய சுருக்கமான விளக்கம் வருமாறு :—

காவ்யங்களில் **1. விச்வகுணுதர்சசம்பூ:**

இதில் உலகிலுள்ள நல்லோர் தீயோருடைய குணங்களைச் சுவைபடச் சித்தரித்து —விச்வாவஸு, க்ருசானு என்பதாய் இரு கந்தர்வர்கள் உலகைச் சுற்றிய வகையில் கண்டறிந்தபடி கூறும் சம்பூக்ரந்தம். இதற்கு இதுவரை ஏழு பேர் உரை செய்திருக்கின்றனர். பல முறை அச்சாகியுள்ளது.

2. வரதாப்யுதயசம்பூ: அல்லது ஹஸ்திகிரிசம்பூ :

இது **உத்யான பத்ரிகையிலும்,** மற்றும் தனியாகவும் அச்சிடப்பட்டுள்ளது. பெருமாள் கோயிலில் தேவர்பிரான் அயமேத வேள்வியில் ஆவிர்பாவமாகியதை பிரம்மாண்ட புராணத்தையடியொற்றி ஸ்ரீ ஹஸ்திகிரி மாஹாத்ம்யத்தில் தூப்புற் குலமணியருளிச்செய்தபடியே தாமும் ஒரு சம்பூ வடிவாய் அருளிச் செய்துள்ளார். ஸரஸ்வதீ நதியாகப் பெருக்கெடுத்து ஓடும் கட்டம் படித்து சுவையறிய முடிந்தவர்களுக்குத் தான் பெருமை விளங்கும்.

3. ஸ்ரீநிவாஸ விலாஸசம்பூ அல்லது பத்மாவதீபரிணயசம்பூ :

இதில் திருவேங்கடமுடையான் திருவிளையாடல்களைக் கவிநயம் மிக சிலேடையாய் அருளிச் செய்திருக்குமழகு எழுதியறிதற்பாலது. படித்தால் மட்டுமறியலாம்.

4. உத்தரசம்பூ :

ஸ்ரீமத் ராமாயணத்தை சம்பூ வடிவாக போஜ மஹாராஜன் எழுதினுர். ஆனுல் அதில் ஸுந்தர காண்டம் வரையிலுமே அவனுல் (ஏது காரணம் பற்றியோ) வரைய முடிந்தது. யுத்த காண்டத்தைப் பிறகு எழுதி **லக்ஷ்மணஸூரி** என்கிற மஹாவித்வான் பூர்த்திசெய்தார். அவரால் விடப்பட்ட உத்தரகாண்டக் கதையை இதில் வடித்துள்ளார். **போஜசம்பூ**—லக்ஷ்மணஸூரியின் யுத்தகாண்ட பாகம், இவரது **உத்தரசம்பூ** இம்மூன்றையும் சேர்த்து வைத்துக்கொண்டு பார்த்தால் இவரது கவிதாப்ரௌடிமை விளங்கும். நான் சொன்னுல் விரோதம் விரோதம், ஆயினும் சொல்வேன் கேண்மின்! இந்த உத்தரசம்பூவுடன் உரைபோட (மீதி இருவரின் கிரந்தமும்) காணுது என்பதே ஸாரம். இதை சக்ஷுஷ்மான்கள் நிர்மத்ஸரராய் ஆலோடனம் செய்தால் விளங்கும்.

5. லக்ஷ்மீ ஸஹஸ்ரம் :

ஸ்ரீ தேசிகனையடியொற்றி பாதுகா ஸஹஸ்ரம் போல் திருச்சானூர் தாயாரின் பேரில் ஆயிரம் சுலோகங்கள் கொண்ட **பத்யா** என்னும் காவ்ய வகையைச் சேர்ந்த மஹா

காவ்யமிது. ஆழ்வான் தாயாரின்மேல் பதிகம் பாடினார். ஸ்ரீ தேசிகன் சதகம் (தயா சதகம்) பாடினார். இவர் ஸஹஸ்ரம் பாடினார். அந்த நாளில் லக்ஷ்மீ ஸஹஸ்ரம் வாசித்தால் தான் பண்டிதனைக் கணக்கிடுவதுண்டு. இதுவரை இதற்கு இரண்டு வியாக்யானங்கள் அச்சாகியுள்ளன. மஹான்கள் தமது க்ஞானத்தை பரீக்ஷை செய்துகொள்ள லக்ஷ்மீ ஸஹஸ்ரத்திற்கு உரை வரைவதுண்டு. ப்ராக்ஞ மணியும், பரமைகாந்தி ஸார்வபௌமரும் ஸ்ரீபரகாலாஸ்தானத்தில் எழுந்தருளியிருந்தவருமாகிய ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ கிருஷ்ணப்ரம்ஹதந்த்ர பரகால மஹாதேசிகன் இந்த லக்ஷ்மீ ஸஹஸ்ரத்திற்கு ரத்னப்ரகாசிகை என்கிற விரிவான ஒரு பாஷ்யம் செய்துள்ளார். மஹா ஆலங்காரிகரான இந்த ஸ்வாமி லக்ஷ்மீ ஸஹஸ்ரத்தில் ஒவ்வொரு சுலோகத்திலும், பதம்பதமாக ஸ்வாரஸ்யத்துடன் ரஸானுபவம் செய்து வரைந்த உரை அச்சில் வராதது பெருங்குறையாகும். மேலும் பலர் இதற்கு உரை எழுதியிருக்கின்றனர்.

6. ச்ரவணானந்தம் :

இது திருப்பதி, காஞ்சி, ஸ்ரீரங்கம், அழகர் கோயில், ஆழ்வார்திருநகரி, திருவெள்ளரை, திருக்குடந்தை (ஸ்ரீ ராமனைப் பற்றிய நூறு சுலோகமும்) முதலிய திவ்யதேசத்து எம்பெருமான்களைப் பற்றிய ஸ்தோத்ரம். ஒவ்வொரு எம்பெருமானைப் பற்றியும் அவ்விடத்திய ஸ்தல புராண மஹிமைகளோடு சிலேடையாய் கருத்துச் செறிவுடன் ஸ்தோத்ரம் இதிலுள்ளது. இதையே விஷ்ணு ஸஹஸ்ரம் என்பர். இதில் திருப்பதி எம்பெருமானைப் பற்றிய பாகம் மட்டும் (ஸ்ரீ வேங்கடேச்வர காவ்ய கலாபத்தில்) அச்சாகியுள்ளது. தேவப் பெருமாளைப்பற்றிய பாகமும் வெளிவந்திருக்கிறது.

7. யாதவராகவீயம் :

யமக காவ்யமான இது ஒரே ஸமயத்தில் ஸ்ரீ கிருஷ்ண சரித்ரம், ஸ்ரீ ராம சரித்ரம் இரண்டையும் கூறும் சித்ரகாவ்ய வகையைச் சேர்ந்ததாகும்.

இதற்கு இந்த ஸ்வாமியே ஒரு உரை வடமொழியில் எழுதியுள்ளார். இது ஸமீபத்தில் பல நல்ல பணிகளை ஸம்ப்ரதாயத்திற்கும், உலகத்திற்கும் செய்துவரும் சென்னை விட்டில் ப்ளவர் கம்பெனியாரால் அச்சிடப்பட்டுள்ளது.

8. ப்ரத்யும்னானந்தம் :

இது ஒரு நாடகம். எம்பெருமானின் கிருஷ்ணாவதாரத்தில் குமாரரான ப்ரதியும்னனுக்கு விவாஹம் நடந்தேறிய வைபவத்தை ஸ்ரீ ஹரிவம்சம் முதலிய கிரந்தங்களிலுள்ளபடி விரிவாகக் கூறும் நாடகமிது.

9. காஞ்சீபாணம்:

யதோக்தகாரி எம்பெருமானைப் பற்றிய பாணம் என்ற வகையைச்சேர்ந்த ரூபகமிது. காஞ்சி யதோக்தகாரி (சொன்ன வண்ணம் செய்த எம்பிரான்) ஸன்னிதியில் மடப்பள்ளி ஆச்சான் காலம் தொட்டு இந்த வம்சஸ்தர்களுக்கு ஸகல நிர்வாஹமும் இருந்து வந்தது. இவரும் அந்த கைங்கரியம் செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இனி ஸ்தோத்ரங்கள்:

10. ஆசார்ய பஞ்சாசத்

ஸ்வாமி தேசிகனைப் பற்றி 50 சுலோகங்களில் பக்தியும், ஸ்ரீ தேசிகனுடைய பெருமையும், அவர் க்ரந்தங்களின் சிறப்பும் விளங்கும் படியான அரிய ஸ்தோத்ரமிது. இது நம் ஸம்ப்ரதாயத்திலுள்ள யாவருக்கும் இன்றளவும் கண்ட பாடமாகியுள்ள ஒரு ஸ்துதி என்பதனால் இதனையியற்றிய இந்த மஹானிடம் நம் ஆசாரியர்களின் கௌரவம் எத்தகையது என்பது விளங்கும்.

11. ஸ்ரீகாமாஸிகா நரஸிம்ஹஸ்தோத்ரம் :

இதுவும் ஸ்ரீ தேசிகனது காமாஸிகாஷ்டகத்தையடியொற்றி 12 சுலோகங்களில் உள்ள ஒரு சிறந்த ஸ்தோத்திரம். அச்சாகியுள்ளது.

12. ஸுபாஷித கௌஸ்துபம்: இதுவும் அச்சாகியுள்ளது.

இனி மீமாம்ஸா க்ரந்தங்கள்:

13. விதித்ரய பரித்ராணம்:

விதிரஸாயனம் என்கிற அப்பயதீக்ஷிதரின் கிரந்தத்தில் விதித்ரயலக்ஷணங்களை அவர் கண்டித்துள்ளார். அதற்கு மறுப்பாக இது வந்தது. திருப்பதி ஸ்ரீவெங்கடேச்வர ஓரியண்டல் லைப்ரரியில் அச்சிட்டுள்ளார்கள்.

14. மீமாம்ஸா மகரந்தம்:

பாட்டதீபிகை என்கிற கண்டதேவரின் கிரந்தத்திற்கு கண்டனமாம் இது. இன்னும் அச்சாகவில்லை. சென்னை ஓரியண்டல் லைப்ரரியில் இருக்கிறது.

15. நியாயபத்மம்:

இதுவும் மீமாம்ஸாசாஸ்திரத்தில் ஸ்வதந்த்ர கிரந்தம். இதுவும் அச்சாகவில்லை.

இனி நியாய சாஸ்திரம்:—

16. மணிஸார கண்டனம்:

பதினான்காம் நூற்றாண்டில் வடநாட்டில் கங்கேசோபாத்யாயர் என்பவர் கௌதமரின் நியாய சாஸ்ரத்தையும் கணாதரின் வைசேஷிக சாஸ்த்ரத்தையும் கலந்து முதல் முதலாக **தத்துவ சிந்தாமணி** என்கிற கிரந்தத்தை எழுதினார். இதுவே **மணி** என்பதாய் தார்கிக கோஷ்டியில் வழங்கப் பெறும். இதற்கு உரையாக ஒரு வடநாட்டவர் **மணி ஸாரம்** என்கிற கிரந்தம் எழுத அதற்கு மறுப்பாக இது வந்துள்ளது. இதுவும் அச்சிட வேண்டிய அரிய புஸ்தகம்.

17. வ்யுத்பித்ஸு போதம்:

கதாதர பட்டாசாரியரின் வ்யுத்பத்திவாதத்தையும், ஜகதீச தர்காலங்காரரின் சப்தசக்தி ப்ரகாசிகையும் பின் பற்றி வேதாந்திகளான நமது ஸித்தாந்தத்தில் சாப்தபோதம் எப்படிச் சொல்வது என்பதை ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் நியாய பரிசுத்தியையும் மற்றும் பல கிரந்தங்களையும் தழுவி எழுதப்பட்ட ஸ்வதந்த்ர கிரந்தம். இதுவும் அச்சிற்கு காலத்தை எதிர் பார்த்து வரும் கிரந்தம்.

இனி வியாகரண சாஸ்திரம்:—

18. மஹாபாஷ்யஸ்பூர்த்தி:

இது கையடத்தைப் போல் மஹாபாஷ்யத்துக்கு ஸாக்ஷாத் வ்யாக்யானம். இது அச்சிட சிலரால் இப்போதுதான் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது.

19. யங்லுங்ந்த ப்ரகாசிகை

யங்லுக் என்பதை வேதத்தில் தான் பிரயோகம் செய்யவேண்டும் என்பதாய் சில வையாகரணர்களின் மதம். லோகத்திலும் பிரயோகம் செய்யலாம் என்பது சில மஹான்களின் மதம். இதில் இரண்டாவது மதத்தை யாச்ரயித்து வரையப் பட்ட க்ரோடபத்ரமிது.

இனி ஸித்தாந்த புஸ்தகங்கள்:—

20. நயத்யுமணிதீபிகா:

ஸ்வாமி தேசிகனுக்கு ஸமீபகாலத்தில்மேல் நாட்டிலிருந்த ஸ்ரீ மேகநாதாரிஸூரி என்கிற மஹான் நமது ஸித்தாந்தத்திற்கு போஷகமாய் அருளிச் செய்த பல சிறந்த ஸ்ரீ கோசங்களில் **நயத்யுமணி** என்பதும் ஒன்று. இது ஸமீபகாலத்தில் சென்னை ஓரியண்டல் லைப்ரரியில் அச்சிடப் பெற்றது. இதற்கு உரையாக இந்த ஸ்ரீகோசம் இவரால் அருளிச் செய்யப்பட்டது என்பர். மேலும்ஷெ நயத்யுமணியில் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் திருவுள்ளத்திற்கு மாறான கருத்துக்களுள்ளன. அவற்றை இவர் இதில் ஸப்ரமாணம் ஸமர்த்தித்து விரோதமில்லாமல் நிர்வாஹம் செய்துள்ளதாகவும் பெரியோர் பணிப்பர்.

21. ஸ்ரீ விபுத்வ ஸமர்த்தனம்:

பிராட்டிக்கு வைபவத்தை ஸ்ரீ லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் பரக்க (ஸ்தோத்ரவ்யாஜமாய்)

பேசிய இவர், ஏகதேசிகளின் ஆக்ஷேபத் திற்குத் தகுந்த முறையில் ஸமாதானம் கூறி இதில் நிலை நிறுத்தியுள்ளார். இதுவும் அச்சிற்கு வரவில்லை.

22. யதிப்ரதி வந்தன கண்டனம்:

சிறு வயதினராயினும் ஸன்னியாஸிகள் பெரியவர்களாலும் வணங்கப் பெறவேண்டும் என்பதே நமது ஸம்ப்ரதாயத்திலுள்ள பெரியோரின் ஆசாரம். ஏகதேசிகள் இதன்மேல் குறை கூற அதற்கு விரிவாக மறுப்பு இதில் அருளிச் செய்துள்ளார். இதுவுமச்சிலில்லை. மற்றும் சிறியனவும் பெரியனவுமான அனேக கிரந்தங்களை இவர் அருளிச் செய்துள்ளார். ஸர்வார்த்த ஸித்திக்கும் இவர் உரை எழுதியுள்ளதாய் பெரியோர் பணிப்பர். மேலும் ஸேச்வர மீமாம்ஸைக்கும் இவர் உரை எழுதியதாய் குரு பரம்பரையில் காணப்படுகிறது. இவ்விதமாய் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனுக்குப் பிறகு நம் ஸம்பிரதாயத்தில் பரதம நிரஸன பூர்வகமாய் ஸகல சாஸ்திரங்களிலும் சிறந்த கிரந்தம் அருளிச் செய்த மஹான்களில் அக்ரகண்யராய் எழுந்தருளியிருந்தார் இவர் என்பது விளங்கும். பதினெட்டு அக்ரஹாரங்களை பிரதிஷ்டை செய்து ஸ்ரீ வைஷ்ணவர்களை குடியமர்த்திய மஹான் இவர். சிறந்த யாகயக்ஞாதிகளைச் செய்தருளிய மஹனீயர்களின் வம்சமிது. வடநாட்டில் டெல்லி முதலான விடங்களில் சென்று வித்வத் கோஷ்டிகளில் கலந்து கொண்டு வாதங்கள் பல புரிந்து விருதுகளைப் பெற்றவராவர். இவர் ஒரு ஸமயம் டெல்லியிலிருக்கும் போது அருளிச் செய்த ஒரு சுலோகம் மிகவும் பிரபலமானது. அது வருமாறு:—

> ''டில்லீச்வரோ வா ஜகதீச்வரோ வா
> மனோரதான் பூரயிதும் ஸமர்த்த: |
> அன்யேனகேனபி ந்ருபேண தத்தம்
> சாகாய வா ஸ்யாத் லவணாய
> வாஸ்யா'' ||

என்று. இவர் அவதரித்த அரசாணிப் பாலை ஊரிலுள்ள செய்யாற்றிலிருந்து வரும் கல்யாணகுல்யா என்கிற கால்வாயைப் பற்றியும் கூட தமது விச்வகுணாதர்ச சம்பூவில் வருணித்துள்ளார். காஞ்சீ பரிஸராக்ரஹாரங்களில்—அதிலும் குறிப்பாய் மஹான்கள் அவதரித்த அக்ரஹாரங்களில் இவருக்கு அவ்வளவு ஈடுபாடு. காலத்தின் கொடுமையினால் இதே கல்யாணகுல்யையில் இவரது சிறந்த பல புஸ்தகங்களைப் பெருமை தெரியாமல் பிற்காலத்தவர் எறிந்தது நமது ஸம்பிரதாயத்திற்கு மிகப் பெரிய நஷ்டமாகும். மீதியுள்ள சிறந்த கிரந்தங்களை யாவது அச்சிட்டு வெளியிடவேண்டியது நம் முக்கிய கடமையாகும்.

சுருக்கி எழுதியவர்:
சேட்டலூர் வா. ஸ்ரீவத்ஸாங்காசாரியர்.

ஸ்ரீ உ. வே. லக்ஷ்மீபுரம்

ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி

இந்த மஹான் மைஸூர் ஸமஸ்தானத்தில் தானாதிகாரியாக எழுந்தருளியிருந்து அனேக விதமான ஸத் க்ரந்தங்களைச்செய்தருளியவர். கேதாண்டபட்டியில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமதுபய வேதாந்த வித்வான் **விரக்தி ராகவாசார்ய** ஸ்வாமி திருவடிவாரத்தில் பரஸமர்பணம் செய்து, தன் வம்சஸ்தரான ஸ்ரீமத்ஸதாரியர் என்பவரிடம் காவிய நாடகங்களை அப்யஸித்து, மைஸூரில் எழுந்தருளியிருந்த தர்கஸிம்ஹம்-பண்டித ரத்னம். கஸ்தூரி. **ரங்காசாரிய** ஸ்வாமியிடம் ஸகல சாஸ்த்ரங்களையும் பாடம் கேட்டவர். திருமலை நல்லான் சக்ரவர்த்தி வம்சத்தைச் சேர்ந்தவர். மஹாமீமாம்ஸகர். இவரது **தர்சனோதயம்** என்கிற புஸ்தகத்திற்கு இவருடைய சிஷ்யரும், அன்னாளில் ஆந்த்ர பல்கலைக் கழகத்தில் தத்துவப் பேராசிரியராயுமிருந்த டாக்டர். ஸர்வபள்ளி. **ராதா க்ருஷ்ணன்** அவர்கள் முகவுரை எழுதியிருக்கிறார். ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரங்களில் இந்த ஸ்வாமிக்கு அதிகபரிசயமுண்டு. இவர் அருளிச் செய்த ஸ்ரீகோசங்கள் வருமாறு:—

1. **ச்லோகவார்திக பூஷணம்.**

2. **ஸ்ரீபாஷ்ய பூஷணம்.** இதில் ஸ்ரீபாஷ்யத்தில் சது:ஸூத்ரிவரையிலும் விபுலமான வியாக்யானம் செய்தருளியிருப்பதுடன் மஹாஸித்தாந்தத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் ஸாதித்துள்ள ஸித்தாந்தங்கள் யாவும் ஸர்வதார்சனிகர்களும் அனுதியாய் ஒத்துக் கொண்டவையே என்பது உட்பட அனேக விஷயங்களை ஸப்ரமாணம் நிரூபித்திருக்கிறார்.

3. **நயஸங்கதிமாலிகா.** இதில் ஸ்ரீ ஸேனேச்வராசாரியருடைய ந்யாயகலாபஸங்க்ரஹத்தைப் போல் ச்லோக ரூபமாக ஒவ்வொரு அதிகரணத்திற்குமான ஸங்கதியை தெளிவாக ஸாதித்திருக்கிறார்.

4. **ஆகமஸார:** இதில் ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷாதி க்ரந்தங்களை நயனம் பண்ணி எழுதியதுடன் சைவ ஆகமங்களும், ஸ்ரீவைஷ்ணவாகமங்களும் தோன்றிய நிலையிலிருந்து இன்று வரையிலுமுள்ள ஆகம புஸ்தகங்களைக் கொண்டு ஆகமங்களின் மூலமாய் ஏற்பட்ட ஸித்தாந்தார்த்தங்களைத் தெளிவாக நிரூபணம் பண்ணியிருக்கிறார். ஆகமநூல் கற்போர் இதை அவசியம் படிக்க வேண்டியதுடன் இதிலிருந்து அனேக அபூர்வார்த்தங்களைத் தெரிந்துக் கொள்ளலாம்.

5. **தர்சனோதய:** இதில் நமது ஸித்தாந்தத்திலுள்ள அனேக விஷயங்களை நிரூபணம் செய்ததுடன், ஸேச்வரமீமாம்ஸாப்யுபகம விஷயமான சர்ச்சைகளையும் செய்துள்ளார். இதுவும் நமது ஸித்தாந்திகள் அவச்யம் வாசிக்கவேண்டிய அரியகோசம்.

6. **மானமேய ரஹஸ்யவவிரணம்.** மீமாம்ஸாவிசாரபஹுளமான இந்த கிரந்தம் அச்சில் தென்படவில்லை. தர்சனோதயத்தில் அடிக்கடி உதாஹரிக்கப்பட்டது. இன்னும் பல ஸ்ரீகோசங்கள் இவர் அருளிச் செய்துள்ளார் என்பது இவரது நூல்களைப் படித்தவர்களுக்கு புலப்படும். **ஸ்ரீக்ருஷ்ணப் ரம்ஹதந்த்ரபரகால ஸ்வாமி** அருளிச் செய்துள்ள **அலங்கார மணிஹாரத்திற்கு** இந்த ஸ்வாமி அருளிச் செய்த முகவுரை ஒரு சிறந்த ஆராய்ச்சி நூலைப் போன்றதாகும். இந்த நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்த சிறந்த வித்வான்களில் இந்த மஹான் அக்ரகண்யர்.

சுருக்கி எழுதியவர் பையம்பாடி சேட்டலூர்,

ஸ்ரீவத்ஸாங்காசாரியர்.

* * *

ஸ்ரீமதுபயவே வித்வான் விரக்தசிகாமணி சேட்டலூர்

ஸ்ரீவத்ஸாங்காசார்ய ஸ்வாமி

இந்த மஹான் ஸ்ரீவகுளாரணிய க்ஷேத்திரத்திற்கு ஸமீபத்திலுள்ள பையம்பாடி என்னும் சிஷ்டாக்ரஹாரத்தில் ஸ்ரீ உ.வே. விஜயராகவாசார்யருக்கு த்விதீய குமாரராய் அவதரித்தருளினார். காவிய நாடகாதிகளை திருத்தகப்பனாரிடம் அப்யஸித்த பிறகு மதுராந்தகத்தில் ஸ்ரீ உ. வே. ஸ்வச்சந்தம். ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியிடம் தர்க பாடங்களைக் கேட்டு மஹீசூரபுரம் முதலிய விடங்களுக்கு நடந்தே எழுந்தருளி வித்வத் பரீக்ஷைகள் பல கொடுத்து ப்ரக்யாதியுடன் எழுந்தருளியிருந்தார். ஸ்ரீ மத் பரமஹம்ஸபரிவ்ராஜகேத்யாதி ஸ்ரீ தேன்கனிக் கோட்டை நாராயணஸ்வாமி (வரத ராமானுஜ மஹாதேசிகன்) திருவடிவாரத்தில் உபாயானுஷ்டானம் செய்தருளினார். தமக்கு தீர்க பந்துவாயும் ப்ராஜ்ஞ்ஞ சிகாமணியுமான ஸ்ரீமதுபயவே. கோழியாலம் ராகவாசாரியர் ஸ்வாமியிடம் (இந்த ஸ்வாமியே பிறகு ஸன்யாஸாச்ரமம் திருவுள்ளம் பற்றி ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகன் என்பதாக ப்ரக்யாதியுடன் நாற்பது வருஷகாலம் அந்த்யாச்ரமியாய் எழுந்தருளியிருந்து ஸமீபத்தில் திருநாடெய்தியவர்.) உபயவேதாந்த க்ரந்த காலக்ஷேபங்களை முதல் முதலில் செய்து அந்த ஸ்வாமியின் ப்ரதம சிஷ்யரானார். இந்த ஸ்வாமி ஸாதித்துள்ள கிரந்தங்கள் வருமாறு:—

1. **ஸ்ரீராமாயண ஸாரம் அல்லது ஆர்யா ராமாயணம்.** இதில் ஸ்ரீமத்ராமாயணத்தை யனுஸரித்து ஆயிரம் சுலோகங்கள் (முழுவதும் ஆர்யாவ்ருத்தம்) ஸ்ரீராம கதையை அனுஸந்தானம் செய்துள்ளார். மிகவும் ரஸமான ச்லோகங்கள். வச்யவாக். நமது ஸித்தாந்தார்த்தங்களை தேனினுமினிய சொற்களால் கவியாக வடித்துள்ளார் இதில்.

2. **ஸ்ரீரகுவீரசதகம்.** ஸ்ரீமதுராந்தகத்தெம்பெருமான் விஷயமான நூறு சுலோகங்களைக் கொண்டது.

3. **ஸ்ரீவரத ராமானுஜ பஞ்சாசத்.** தமது ஆசாரியரான தேன்கனிக் கோட்டை ஸ்ரீ நாராயண ஸ்வாமி, தேவப் பெருமாள், (ஸ்ரீ காஞ்சீ வரதன்) எம்பெருமானார் இம்மூவரையும் இந்த ஐம்பது சுலோகத்தில் சிலேடையாக ஸ்தோத்ரம் செய்துள்ளார்.

4. மந்த்ரஸால கட்ட ஸ்வாமி செய்தருளிய ஆஹ்னிகத்திற்கு வ்யாக்யானம். மற்றும் சில. அதிவிரக்தரான இந்த மஹான் வெகு சீக்கிரத்தில் (38 வது திரு நக்ஷத்திரத்தில்) திருநாடு அலங்கரித்தார். இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் எழுந்தருளியிருந்த மஹான்களில் இவர் அக்ரகண்யர், திருவையாற்றில் அந்த நாளில் ஸம்ஸ்கிருத கலாசாலையில் பிரின்ஸ்பாலாக இருந்த ஸ்ரீ உ.வே. வேதாந்தாசாரியர் ஸ்வாமி இவரை திருவையாற்று கலாசாலையில் தர்க பாடம் சொல்லிக் கொடுக்க மும்முறை நேரில் வந்து வற்புறுத்தியும் அதையங்கீகரிக்காமல்—எழுந்தருளியிருந்தார் என்பது வெகுப்ரஸித்தம்.

சுருக்கி எழுதியவர் :
சேட்டலூர் ஸ்ரீவத்ஸாங்காசாரியர்.

ஸ்ரீமதுபயவே, தேசிகதர்சன விஜயத்வஜம் டத்தங்கோட்டம்,

ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி

தக்ஷிண துவாரகையென்று ஸுப்ரஸித்த மான ராஜமன்னார் ஸந்நிதியின் தக்ஷிண பார்ச்வத்தில் பகவத்தியாநபரர்களால் அலங் கரிக்கப்பட்ட நாகை கிராமத்தில் தமது மாதுலக்ரஹத்தில் ஒரு ப்ரமாதி ஸூ தைமீ ஹஸ்த நன்னாளில் வாதூல வம்சத்தில், நமது ஸ்வாமி அவதரித்து, பால்யத்திலே யதா க்ரமம் வித்யைகளை அப்யஸித்து, அப்பொழுது ஸ்ரீ அஹோபில மடத்தில் மூர்த்தாபிஷிக் தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகனிடம் பஞ்ச ஸம்ஸ்காராதிகளைப் பெற்று, ஸகல சாஸ்திரங்களிலும் விசேஷ பாண்டியத்தை அடைய விரும்பினவராய், சதுச்சாஸ்த்ர வேத கல்பதரு சேஷாச்சாரியார் ஸ்வாமி யிடம் தர்க்கமும் வ்யாகரணமும் 38ம் பட்டம் திருக்குடந்தை அழகிய சிங்கர் ஸந்நிதியில் மீமாம்ஸா சாஸ்திரமும், ஸ்ரீமுஷ்ணத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஸ்வர்ணம் க்ருஷ்ண மாசார்ய ஸ்வாமி திருவடியில் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்த சதுஷ்டயமும் சததூஷணி முதலிய வாதக்ரந்தங்களையும் அதிகரித்து, அந்த ஸ்வாமி ஸந்நிதியிலேயே உபாயாநுஷ் டானத்தைச் செய்து, ஆத்மலாபத்தைப் பெற்று ஸந்துஷ்டராய், ஸ்திரப்ரதிஷ்டிந க்ஞாந முடையவராய், பல வித்வத் ஸதஸ் ஸுக்களில் அந்வயித்து ப்ரதான வித்வானு கவும், அத்யக்ஷராகவும் ஸம்மானிக்கப் பட்டார்.

ஸ்ரீஸ்வாமியின் அஸாதாரண வைதுஷ்யத் தையும். அதிதுரூஹமான விஷயங்களை அதிஸுலபமான ஸரணியில் உபபாதநம் செய்யக் கூடிய வாக்மித்வத்தையும், உபந் யாஸ சைலியையும், ஸ்பிருஹணீயமான ஆத்மகுண பரிபூர்த்தியையும் கண்டு, அத்யந்த ஸந்துஷ்டரான 42-ம் பட்டத்தை அலங்கரித்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், ஸந்நிதி யின் ஆஸ்தான வித்வானுகவும், மாலோல வித்வத் ஸதஸ்ஸின் ப்ரதான பரீக்ஷகராகவும் ஸ்வாமியை நியமித்தார்.

ஸ்வதர்மாநுஷ்டாநத்தில் அதிக சிரத்தை யுடன் ப்ரகாசித்த நமது ஸ்வாமி, தர்ம சாஸ்திரங்களை நன்கு பரிசீலனை செய்து அப்ரதிஹதமான நிர்ணயத்தைப் பெற்று ஸூக்ஷ்மமான விஷயங்களை ஸுலபமாய் அறியும்படி க்ரந்த முகமாயும் உபகரித்தார், ஸ்ரீ ஸ்வாமிக்கு ஸம்ஸாரிகளுக்கு ஸம்பாவ்ய மான பல அஸஹ்யமான க்லேசங்கள் ஏற்பட்ட போதிலும், "கஸ்யதே கஸ்ய வா வயம:" ஸங்கம: பாந்த ஸங்கம: ஸஹஜம் ஹி துக்கம் என்கிற வழியிலே, கலக்கமற்று எம்பெருமானுக்கே வழுவிலா அடிமை செய்யவேண்டி 'ரங்காஸ்தாநே ரஸிக மஹிதே ரஞ்ஜிதா சேஷசித்தே' என்கிறபடி நாற்பது ஸம்வத்ஸரங்கள் அவர் ஸ்ரீரங்கத் திலேயே எழுந்தருளியிருந்து பல சிஷ்ய வர்கங்களுக்கு வேதாந்த வித்யயை தெளிய உபந்யஸித்தும், அவ்வப்போது பல திவ்ய க்ஷேத்திரங்களுக்குச் சென்று விசிஷ் டாத்வைத ஸித்தாந்தத்தைப் பற்றிய பற்பல ஸாரதமமான விஷயங்களைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தும் 'வேதாந்த கல்பதரு தேசி கதர்சந விஜயத்வஜர்' முதலிய விருதுகளை யும் பெற்றார். ஸ்ரீவேதாந்த தீபிகை, ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவின் வாயிலாகவும் ஸம்ப்ரதாய ஸம்பந்தமான அநேக விஷய தானங்களைச் செய்தும், ந்யாஸநிர்ணயம், ப்ரணுமநிஷ்கர்ஷம், ஸ்த்ரீ தர்மம் ஆராதனக் ரமம், பரிகர விஜய வ்யாக்யாநம், ஜிதந்தே ஸ்தோத்ர வ்யாக்யாநம் முதலிய பல க்ரந்தங் களை அருளியும் உபசரித்தார்.

ஸர்வதோ முகமான த்ஞாந முடையவராய் சரீர பதநம் வரையில் சாரீரக ப்ரவசனவ் ரதத்தை மேற் கொண்டு ஸத் சிஷ்யர்களுக்கு காலக்ஷேபம் ஸாதித்தருளி, 'அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்ஸ்வ' என்கிறபடி ஸ்ரீரங்க

நாதன் திருவடிவாரத்தில் நித்யவாஸ ரஸிக ராய் முக்ததுல்யராய் எழுந்தருளியிருந்து, ஜய ஸம்வத்ஸரம் தைமாஸம் க்ருஷ்ணபக்ஷ ப்ரதமையில் நித்ய விபூதியை அலங்கரித் தார்.

சதுச் சாஸ்த்ரகல்பதரு

திருக்குடந்தை அம்மாசத்திரம்

சேஷாசார்யர் ஸ்வாமி

இம்மஹான் திருக்குடந்தையில் ஸதாசார ஸம்பத்துடன் கூடிய ஒரு ஸ்ரீ வைஷ்ணவ திருவம்சத்தில் அவதரித்து, பால்யத்தில் பித்ரு வியோகம் நேரவே, குடந்தைக்கு ஸமீபத்திலுள்ள வலயப்பேட்டை ஸ்ரீ கிராமத்தில் அங்கு எழுந்தருளியிருந்த ஸ்ரீ நாவல் பாக்கம் ஸ்வாமியை ஆச்ரயித்து ப்ராசீன ஜன்மவாஸனையின் பலத்தால் போலும் ஸகல வித்தைகளையும் அதிகரித்து, "ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம்" என்பதற்கு அநுகுணமாக ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த விஷயங்களை நன்கு பரவச்செய்ய ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவ வித்யாசாலையை ஸ்ரீ வராஹப்பெருமாள் திருவடிவாரத்தில் நிர்மாணித்து, அதில் பல வித்வான்களுடன் தாமும் வித்யா ப்ரதானம் செய்துவந்த விஷயம் யாவரும் அறிந்ததே. இந்த வித்யாசாலையில் அப்யஸித்து ஸ்ரீ ஸ்வாமியின் அநுக்ரஹத்திற்கு பாத்திரமானவர்களில் பலர், இப்பொழுது வித்வத் ரத்னங்களாக விளங்குகின்றனர்.

நான்கு சாஸ்திரங்களில் நைபுண்யமும், ஸர்வதோமுகமான ஞானமும், வைதிக ஆசாரமும், மஹத்தான ஆஸ்திக்யமும், ஸௌலப்யமும், வைதீக ஸ்ரீயை அபிவிருத்தி செய்வதில் சிறந்த ச்ரத்தையும் கூடிய, இம்மஹான் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்திற்கு ஆபரணபூதராய், பல வித்வத் ஸதஸ்ஸுகளில் அத்யக்ஷராகவும் எழுந்தருளியிருந்து ஐம்பது ஆண்டுகள் இவ்விபூதியை அலங்கரித்து மறைந்தார். ஸ்வாமியுடன் ஒருசில க்ரந்தங்களை ஸேவித்த வ்யக்திகளில் ஸ்ரீ இஞ்சிமேடு ஸ்வாமியும் புத்தங்கோட்டம் ஸ்வாமியும் ப்ரதானமான வித்வத் வரேணியர்கள்.

*

வாத்ஸ்ய சக்ரவர்த்தி

வீரராகவ மஹாதேசிகன்

திருக்கடல் மல்லைக்கு ஸமீபத்திலுள்ள கொத்திமங்கலம் அக்ரஹாரத்தில் திருமலை நல்லான் சக்ரவர்த்தி வம்சத்தில் மாமா ராகவாசாரியார் ஸ்வாமிக்கு திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவன் அனுக்ரஹத்தால் வாத்ஸ்ய சக்ரவர்த்தி ஸ்வாமி குமாரராக அவதரித் தார்.

பஞ்சஸம்ஸ்காரத்தைத் தன் பிதாவினிடத்திலேயே பெற்றவர். நான்கு சாஸ்த்ரங்களையும் ப்ரகரண, வாத க்ரந்தங்களுடன் வேதாந்த சாஸ்திரத்தையும் ஸ்ரீ தேசிகனுடைய ஒவ்வொரு க்ரந்தத்தையும் ஆசார்ய முகத்தால் க்ரஹிக்க வேண்டும் என்ற தீவிர அபிநிவேசத்தால் நாவல் பாக்கம் ஸ்ரீமதண்ணயார்ய மஹாதேசிகனிடம் அதிகரித்தார். ஸ்ரீமதண்ணயார்ய மஹாதேசிகன் இந்த ஸ்வாமிக்கு பிதுஸ்ஸோதரீ புத்ரர். இந்த ஸ்வாமி கொத்திமங்கலத்திலேயே ப்ரவசநம் பண்ணிக் கொண்டிருந்தார். வேதாத்யயனத்தையும் ஸ்ரீ தேசிக க்ரந்தப்ரவசனத்தையும் முக்யமாகக் கொண்டவர். பூர்வாசாரியர்களுடைய க்ரந்தங்களைப் பட்டோலையில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டிருந்தார். இவர் எழுதிய க்ரந்தங்கள்.

1. வசந பூஷண மீமாம்ஸா கண்டனம்.
2. க்ருத்திகா தீபாராதன ஸ்ரீஜயந்தீ நிர்ணயம் போன்ற தர்ம சாஸ்திர க்ரந்தங்கள்

* *

வாத்ஸ்ய சக்கரவர்த்தி

கோபாலார்ய மஹாதேசிகன்

திருக்கடல் மல்லைக்கு ஸமீபத்திலுள்ள கொத்தி மங்கலம் அக்ரஹாரத்தில் திருமலை நல்லான் சக்ரவர்த்தி வம்சத்தில் ஸ்ரீவீரராகவ

மஹாதேசிகனுக்கு குமாரராக அவதரித்தவர் இந்த ஸ்வாமி.

பிதாவினிடத்தில் பஞ்ச ஸம்ஸ்காரம், சாஸ்திராப்யாஸம், க்ரந்த சதுஷ்டய கால க்ஷேபம் ஆகியவற்றை அதிகரித்தார். ஸ்ரீமதண்ணயார்ய மஹாதேசிகனிடத்தில் பரஸமர்பணம் செய்தவர்.

இவரிடத்தில் பலபேர் வேதாத்யயனமும் வேதாந்த காலக்ஷேபமும் செய்திருக்கிறார்கள். ஸ்வச்சந்தம் வித்வான் சீமாசாரியர் ஸ்வாமி, உழப்பாக்கம் வித்வான் ராமானுஜாசாரியர் ஸ்வாமி போன்றவர்கள் இந்த ஸ்வாமியிடம் வேதாந்த கால க்ஷேபம் செய்தவர்கள். இந்த ஸ்வாமி ''வேதவியாஸர்'' என்று மஹான்களால் கொண்டாடப்பட்டவர்.

* *

வாத்ஸ்ய சக்ரவர்த்தி

வீரராகவாசாரியர் ஸ்வாமி

திருக்கடல் மல்லைக்கு ஸமீபத்திலுள்ள கொத்தி மங்கலம் அக்ரஹாரத்தில் அவதரித்தவர். தன்னுடைய பித்ருவ்யரான கோபாலார்ய மஹாதேசிகனிடம் வேதாத்யயனத்தையும் வேதாந்தார்த்தங்களையும் க்ரஹித்தவர். ஊரிலேயே ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்து கொண்டிருந்தவர். ஸ்வாமி பிரதி தினமும் ஸ்வாமி தேசிகன் ஸ்தோத்ரங்களைப் பூரணமாக பாராயணம் பண்ணுமல் அமுது செய்வது கிடையாது என்பது உலகம் அறிந்ததாம். அவ்வாறே ஸ்வாமியின் ஸ்ரீ ஸூக்திகளை பிரதி தினமும் ஓலையில் கொஞ்சமாவது எழுதாமல் இருப்பதில்லை. இத்தகைய இந்த ஸ்வாமியின் விரதம் வியக்கத் தக்கதாயிருந்தது.

உழப்பாக்கம் வித்வான்

ராமாநுஜாசார்யர் ஸ்வாமி

இந்த ஸ்வாமி அழகர் திருமலை மாடபூஷி வம்சத்தில் நைத்ருவ காச்யப கோத்ரத்தில் அவதரித்தவர். பூர்வத்தில் தென்னுசார்ய ஸம்ப்ரதாயஸ்தராக இருந்து அதிலுள்ள குறைகளைத் தெரிந்து கொண்டு ஆசார்ய கடாக்ஷத்தால் ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயத்தை அவலம்பித்து கொத்திமங்கலம் வாத்ஸ்ய ஸ்ரீ கோபாலார்ய மஹாதேசிகனிடம் வேதாந்தார்த்தங்களை க்ரஹித்தவர். தென்னுசார்ய ஸம்ப்ரதாயத்திலுள்ள குறைகளை கண்டித்து ''வித்வந் மநோரஞ்சனம்'' முதலான க்ரந்தங்களை அருளிச் செய்தார். [இந்த ஸ்வாமி தேசிக ஸம்ப்ரதாயஸ்தராக மாறியதற்காக அபசாரப்பட்டவர்கள் காராகிருஹ ப்ரவேசத்தையும் அடைந்திருக்கிறார்கள்.]

* * *

ராகவபாட்டராசார்ய ஸ்வாமி

சதக்ரது குமார தாததேசிகன் திருவம்சத்தில் சடமர்ஷண கோத்ரத்தில் விஜயராகவ பாட்டராசாரியார் ஸ்வாமிக்கு குமாரராய் திருக்குடந்தை திவ்ய தேசத்தில் அவதரித்தார். இவர் நான்கு சாஸ்த்திரத்திலும் மஹா வித்வான். நாவல்பாக்கம் அண்ணயார்ய மஹாதேசிகன் ஸந்நிதியில் வேதாந்த சாஸ்த்ரம் முதலானவைகளை ஸேவித்தவர். அரசாணி பாலை வெங்கடாத்வரியின் பல க்ரந்தங்களுக்கு வ்யாக்யாநம் செய்தவர். அவைகளில் லக்ஷ்மீஸஹஸ்ரவ்யாக்யாநம் வெகு அத்புதம். இவர் அருளிச்செய்த க்ரந்தங்கள் ஸ்ரீ வேதாந்ததேசிக ஸ்தோத்ரங்களின் வ்யாக்யானம்,

மஹர்ஷி எஸ். வாஸுதேவாசார்யர் ஸ்வாமி

ஸ்ரீ சம்பகாரண்ய க்ஷேத்திரமான ஸ்ரீ ராஜ மன்னுர் ஸந்நிதிக்கு அடுத்த, வாஸுதேவ பராயணர்களால் அலங்கரிக்கப்பட்ட, நாகை கிராமத்தில் ஸுமார் 100 ஸம்வத்ஸரங் களுக்கு முன், அபிஜாத வம்சத்தில் (8—10—1870) அவதரித்து, ஆசார்யச்ரேஷ் டராய், வேத ஸம்பந்நராய் விளங்கிய, தமது பிதாமஹரான ஸ்ரீ வேங்கட க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியிடம், பஞ்ச ஸம்ஸ்காராதி ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் அதிகரித்தும், தாம் அதிகரித்ததை காலக்ஷேப முகமாகவும், உபந்யாஸ பரம்பரையாலும், க்ரந்த ரூப மாயும், நன்கு உபகரித்தும், பாஷாந்திரத் திலும் நைபுண்யத்தைப் பெற்று, லௌகிகத் தில் பாச்சாத்யார்கள் ப்ரமிக்கும்படி வெஸ்லி கல்லூரியில் உபதலைவராய் நாற்பது ஆண்டு கள் உத்தியோகத்திலிருந்தும், பல ஸம்வத் ஸரங்கள் மைலாப்பூர் ஸ்ரீ தேசிகன் திரு வடிவாரத்திலும், பின்பு மாம்பலம் ஸ்ரீ கோதண்டராமன் திருவடி நிழலிலும் எழுந் தருளியிருந்து (15 - 7 – 49ல்) நித்ய விபூ தியை அலங்கரித்த அந்த மஹாத்மா, நமது மஹர்ஷி ஸ்வாமி.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தைப் பரவச் செய்வதில் ததேகபரராய், 25 ஆண்டுகள் ஸ்ரீ வேதாந்த தீபிகையின் பத்ராதிபராயும் பின்னர், ஸ்ரீ அஹோபில மடத்தில் மூர்த்தா பிஷிக்தராய் எழுந்தருளியிருந்த 42-ம் பட் டம் ஸ்ரீ இஞ்சிமேடு அழகியசிங்கர் நியமநத் தின் பேரில், மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத கலா சாலைக்கு மானேஜராகவும், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் ஸம்பாதகராயும் இருந்து இவை களைத் திறம்பட நடத்திய மஹானுவர்.

மைலாப்பூர் ஸ்ரீ தேசிகர் ஸந்நிதியின் தர்ம கர்த்தாவாய் எழுந்தருளியிருந்த காலத்தில், இப்பொழுது சிறந்து விளங்கும். ஸ்ரீ வேங்க டேச அக்ரஹாரமும், அலர்மேல் மங்கா அக்ரஹாரமும் ஸ்ரீ ஸ்வாமியின் முயற்சியால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டன.

நைஸர்க்கிகமாகவே வித்யாபிவிருத்தியில் ஈடுபட்ட நமது ஸ்வாமி, நாற்பது ஸம்வத் ஸரங்கள் ஸ்ரீ ராமக்ருஷ்ண மிஷன் மாணவர் இல்லத்தின் பொக்கிஷதாராக விருந்ததும், மாம்பலத்தில் பால - பாலிகைகளுக்காக வித்யாசாலைகள் நிறுவியதும், தாம் ஸம்பந் தப்பட்டவை யாவையும் சிறப்பிக்கச் செய் யும் இயல்புடைய நமது ஸ்வாமியின் ப்ரபா வத்தால், இப்பாடசாலைகள் பல கிளைகளுடன் வளர்ந்து திகழ்கின்றதும் யாவரும் அறிந் ததே.

இதில் பாலிகா பாடசாலையில் ஸ்ரீ வேணு கோபாலன் ஸந்நிதியை ஏற்படுத்தி ப்ரதி ஸம்வத்ஸரம் நவராத்திரியில் ஸ்ரீ பாகவத ஸப்தாஹ பாராயண, ப்ரவசன மஹோத் ஸவத்தையும் நடத்தி வந்தார்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்திற்கும், நமது தேசிக தர்சநத்திற்கும் குன்றின் மேலிட்ட விளக்காய் விளங்கிய நமது ஸ்வாமிக்கு விரோதிஹூ வைகாசிமீ ஹஸ்த நன்னுளில், மைலாப்பூர் நமது உபய வேங்கடநாதர்க ளின் ஸந்நிதியில், ஸ்வாமியின் ஸுஹ்ருத்தம ரான தேசிக தர்சந தீபம், ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியின் ப்ரயத்நத் தால் 'மஹர்ஷி' என்ற பூதார்த்த பிருது அளிக்கப்பட்டது. 'குர்வந்நேவேஹ கர் மாணி ஜிஜீவிஷேத் சதம் ஸமா:' என்கிற் படி, தமது ஜீவிய காலம் முழுவதும் 'அத் யாத்ம க்ரந்த நிர்மாணம் அந்யேஷாம்ச அவபோதநம்' என்கிற க்ரமத்தில், ஸம்பிர தாய அபிவ்ருத்திக்காக, வேதார்த்த ஸங்க்ர ஹத்திற்கு விசிதமாகவும் தெளிவாகவும் வ்யாக்யாநித்தும், ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம் ஸ்ரீ வைகுண்டஸ்தவம், புருஷஸூக்தம், ஈச, கேந, கட, ப்ரச்ந, முண்டக உபநிஷத்துக் களுக்கு லலிதமாந வ்யாக்யாநமும், அவ்வப் போது கம்பீரமான சைலியில் உள்ளத்தைக் கவரும் அநர்க்கமான விஷயதானங்களும் செய்த மஹோபகாரம் வாசாமகோசரம்.

ஜ்ஞாநாநுஷ்ட்டாந வைராக்ய ஸம்பந்ந ராய், சமதமாதிஅநந்த கல்யாண குணகண பரிபூர்ணராய், 'ந சலதி நிஜ வர்ண தர்ம தோய:' என்கிறபடி, வைதிக ஸார்வபௌம ராய், ஸர்வபூத ஸுஹ்ருத்தமராய் எழுந் தருளியிருந்த நமது ஸ்வாமி புராணப்ரஸித் தர்களான மஹர்ஷிகளின் பரம்பரையைச் சேர்ந்தவரென்பது ஸுநிச்சிதம்.

என். ஸ்ரீநிவாஸாசார்யர்.

ஸ்ரீமதித்யாதி. தேசிகதர்சன விஜயத்வஜம், மஹாமஹோபாத்யாய, பகவத் விஷயம்

சேட்லூர் நரஸிம்ஹாச்சாரியார் ஸ்வாமி.

நம் ஆசார்யர்களில் ஜ்ஞாநம், ஆபிஜாத்யம், திவ்யதேச வாஸம் என்னப்படும் லக்ஷணங்கள் பலருக்குக் கிட்டியிருந்து, அவர்களில் ஒருவராயிருப்பவர் இந்த ஸ்வாமி.

இவர் திருவஹீந்திரபுரத்தில் ப்ரஸித்த பண்டிதராயிருந்தவராயும், ஸ்ரீமத்ரங்கராமானுஜ மஹாதேசிகன் என்னும் ஸ்வாமியின் சிஷ்யருமான திருவாழி ரங்கஸ்வாமி ஐயங்கார் தம்முடைய புத்திரியை அந்த ஊரிலே ப்ரஸித்தமான சேட்டலூர் ராமாநுஜாசார்யர் என்பவருக்குக் கன்யகாதானம் செய்து கொடுத்தார். இவர்களுடைய திருக்குமாரர் தான் இந்த ஸ்வாமி. இவர் விபவஹு ஐப்பசிமீ மூல நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் இவருடைய ப்ராசார்யனை கேதாண்டிப்பட்டி ஸ்வாமியினுடைய ஷஷ்ட்யப்த பூர்த்தியன்று ஜனித்தார்.

தன்னுடைய திருத்தகப்பனாரிடம் ஸாமாந்ய சாஸ்திரங்களையும், ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ ராமாநுஜமஹா தேசிகன் என்று ப்ரஸித்தராய் கேதாண்டிப்பட்டி ஸ்வாமி சிஷ்யராய் விளங்கியவரை ஆச்ரயித்து வேதாந்த வித்யைகளை க்ரஹித்தவர். இவருடையமாதாமஹர் ஆட்யராயிருந்தபடியினால் ராஜீய பாஷையில் அந்வயிக்காமல் தமிழ் ஸம்ஸ்க்ருதம் இரண்டு பாஷைகளையுமே அப்யஸித்தார். இவர் தம் தோழன்மார்களுக்குப் பாடம் சொல்லும்படியான விசேஷ மஹிமையைப் பெற்றிருந்தார்.

ஒரு ஸமயத்தில் பால்யத்தில் – வேதாந்த வித்யையில் இறங்காத காலத்தில், ஸ்வாமி ஸந்நிதிக்குப் போயிருந்தபொழுது அங்குஇள வித்வான் 'அதீதி' என்கிற சுலோகத்திற்குச் சொல்வாயா என்று கேட்க, ஸ்வாமியும் தைர்யமாக, நல்ல ஸ்வரத்தில் சுலோகத்தைச்சொல்லி, பதங்களைப் பிரித்து, அந்வயம் சொல்லி, விக்ரஹம், அர்த்தம், தாத்பர்யார்த்தம் இவற்றை நன்கு நிரூபித்தார். அப்பொழுது விரோதாபாஸாலங்கார விஷயமாய்ச் சொல்லிய அம்சத்தை அந்தப் பண்டிதர் ஆக்ஷேபிக்க, ஸ்வாமியும் தயங்காமல், சற்று இரும்இதோ வருகிறேன்' என்று சொல்லி விட்டுத்தம்முடைய க்ரஹத்திற்கு வந்து, தாம் படித்த வ்யாக்யான புஸ்தகத்தை எடுத்து வந்து, ப்ரகரணத்தில் தாம் நிரூபித்தருளியதே ஸரி என்று நிரூபித்தாராம், இவருடைய ஜ்நானத்தின் உத்கர்ஷத்தைப் பார்த்து அந்த ஆசார்யன் இவருக்கு அன்று எல்லோருக்கும் முன்பு தீர்த்தப்ரஸாதத்தையும், ஸ்ரீபாத தீர்த்தத்தையும், வழங்கினர். இந்த அனுக்ரஹம்தான் ஸ்ரீ தேசிகனுக்கு அம்மாள் அநுக்ரஹம்போல் பின்னால் விசேஷ மஹிமை பெறும்படி செய்தது.

ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகன் என்கிற ஸ்வாமி இவருக்கும் கிட்டின பந்துவாயிருந்தபோதிலும் கோதாண்டிப் பட்டி ஸ்வாமியின் நியமனத்தினால் அவரிடமே வேதாந்த காலக்ஷேமம், செய்வதற்காக அந்த ஸ்வாமி எழுந்தருளியிருந்த ஸ்ரீரங்கம் சென்று க்ரந்தசதுஷ்டயங்களையும் அதிகரித்தார். அந்த ஸ்வாமி திருவஹீந்திரபுரதில் ஸ்ரீ தேசிகனை மங்களாசாஸநம் செய்வதற்காகச் சில மாதங்கள் எழுந்தருளி இருக்கும் பொழுது, அங்கு உபக்ரமிக்கப்பட்ட கீதா பாஷ்யத்தில் அந்வயிக்கச் சென்றபொழுது, 'உனக்கு இப்பொழுது இது வேண்டாம்' என்று ஸ்வாமி அனுப்பிவிட்டார். இருவரும் மிகவும் வருத்தத்துடன் க்ரஹத்திற்குத் திரும்பி வந்து தம்முடைய மாதாமஹரிடம் கூறி வருத்தப்பட்டார். அவர் இவரைத் தேற்றி, மத்யாஹ்னத்தில் இவரைஅழைத்துக் கொண்டுபோய் ஸ்வாமியிடம் விண்ணப்பம் செய்ய, ஸ்வாமி மந்த ஸ்மிதம் செய்துவிட்டு, 'உனக்கு மற்றவர்களைப்போல கீதா பாஷ்யம் மாத்திரம் பற்றாது. கீதா பாஷ்யதாத்பர்ய

சந்திரிகையுடன் உனக்கு பிற்பகலில் தனியாகக் காலக்ஷேபம் சொல்லுகிறேன்' என்று அநுக்ரஹித்தரர்.

சுருக்கமாக எழுதவேண்டியிருப்பதினால் வித்யாப்யாஸாதிகளை விஸ்தரிக்கவில்லை. இவருடைய சில அம்சங்கள் மட்டும் குறிப்பிடப்படுகின்றன. இவருக்கு திவ்ய ப்ரபந்தத்திலும் ஸ்ரீதேசிகனிடத்திலும் உள்ள பக்தி அபரிமிதமானது. அப்படிப்பட்டவர் இக்காலத்தில் இருந்ததில்லை என்று சொல்லலாம். சென்னையில் ஸுமார் 30 வருஷம் எழுந்தருளியிருந்து பல பேட்டைகளில் பலவித கால க்ஷேபங்களை ஸாதித்து ஸ்ரீதேசிகனுடைய பெருமையை சென்னையில் நிலை நிறுத்திய பாக்யம் இவருடையதே. இந்த அபாரபக்தியில் ஈடுபட்ட ஸ்ரீ. உ.ப. வண்பாக்கய் வேங்கடம் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் இவரை ஸ்ரீ தேசிகப் பித்தர் என்றார். இவருக்கு ஸங்கீதஜ்ஞானம் விசேஷமாக உண்டு. ராமாயணகாலக்ஷேபங்களில் சுலோகத்தைக் கேட்டு ஸங்கீத வித்வான்கள் ஈடுபட்டதுண்டு. ஸ்ரீதேசிகனுடைய சரித்திரத்தை ஹரிகதாகாலக்ஷேப ரீதியில் சென்னையில் போலீஸ் ராகவாசார்யர் தெருவில் வி.வி. ஸ்ரீயின் திரு மாளிகையிலும், மைலாப்பூர் ஸ்ரீதேசிகன் ஸந்நிதியிலும், சிந்தாதிரிப் பேட்டையிலும் உபந்யஸித்துள்ளார். இவரிடத்தில் ஒரு ஆச்சர்யமான குணம், காலக்ஷேபம் சொல்லுவதற்கு த்ரவ்யத்தை அபேக்ஷிப்பதில்லை. எவருக்கு ஆசையிருக்கிறதோ அவர்கள் பரம ஏழையாயிருந்தாலும் அவர்களுக்குக் காலக்ஷேபம் ஸாதித்து வந்தார்.

ஸ்ரீ பாஷ்யத்தை இவரிடம் அதிகரித்தவர்கள் எல்லாம் ஆங்கில பாஷையிலும் ஸம்ஸ்க்ருதத்தில் நல்ல வ்யுத்பத்தியுடையவர்கள். இவருடைய கீதாபாஷ்யதாத்பர்ய சந்த்ரிகை காலக்ஷேபம் மிகவும் அத்யத்புதமாயிருக்கும். பகவத் விஷய காலக்ஷேபமோவர்ணிக்க நிலமல்லாதது. ஒரு ஸமயம் கிங் அண்டு கம்பெனி ராமாநுஜம் செட்டியார் என்பவர் இவருடைய காலக்ஷேபத்தைக் கேட்டு அதில் ஈடுபட்டு நடுக்காலக்ஷேபத்தில் போகிறோம் என்று, கூட கவனிக்காமல் வீட்டுக்குப்போய் பெரிய தட்டில் வெற்றிலை பாக்கு புஷ்பம், ஸம்பாவனை இவைகளுடன் பகவத் விஷயவ்யாக்யானமான ஐந்து ஸம்புடங்களையும் கொண்டு வந்து ஸமர்ப்பித்து, இதுவரையில் பகவத் விஷயம் எங்கள் ஆசார்யர்களுக்கு அஸாதாரணம் என்றிருந்தேன். ஸ்வாமியின் காலக்ஷேபத்தைக் கேட்டு, ஸ்வாமியைப்போல் ஸாதிப்பவர்கள் வேறு ஒருவரும் இல்லை என்கிற முடிவிற்கு வந்து விட்டேன்' என்று ஈடுபட்டார். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸார காலக்ஷேபத்தைப் பற்றி வர்ணிக்கமுடியாது. வருஷத்திற்கு இருமுறையாவது காலக்ஷேபம் நடக்கும். இதில் ஏற்றம் என்ன என்றால் ஸம்ஸ்க்ருதத்தில் ஜ்ஞாநம் இல்லாதவர்களுக்கும் புரியும்படி ஸாதித்தருளுவார். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்திற்கு இவர் அருளிச் செய்த வ்யாக்யானம் எல்லோராலும் கொண்டாடப்பட்டதாயிருக்கும். ஸ்ரீ கீதாபாஷ்யதாத்பர்யசந்த்ரிகையை ஸம்ஸ்க்ருதத்தில் சோதித்து ஆநந்தாபிரஸ்ஸில் வெளியிடச் செய்தது இவரே. இவற்றைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்ட பெருமையும் இவருடையதேயாகும்.

வாதித்ரயகண்டனம், சததூஷணீ, ஸ்தோத்ரபாஷ்யம், கத்யபாஷ்யம், நித்யம், முதலியவைகளுக்குத் தமிழ் அர்த்தம் எழுதி ப்ரசுரித்தவரும் இவரே. உபயவேதாந்த ஐககண்ட்யம் என்கிற இவருடைய வெளியீடு அந்யாத்ருசமானது. மன்னார்குடியில் நடந்த ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் அத்யக்ஷராய் 'ஸத்ஸம்ப்ரதாய விவேகம் என்று அச்சிடப்பட்டிருக்கும் உபந்யாஸம் உபயகலை யாருக்கும் உள்ள பேதங்களை எடுத்துக் காட்டி, அவை மூலப் ப்ரமாணமற்றது என்று நன்றாக நிரூபித்துள்ளார்.

இவருடைய ஜ்ஞானத்தின் விசேஷத்தைக் கேட்டறிந்த ராஜாங்காதிகாரிகள் இவருக்கு மஹாமஹோபாத்யாயர் என்கிற விருதை வழங்கினார்கள்.

ஸர்வஸுலபராய் இருந்தபோதிலும் தத்த்வார்த்த நிருபணத்தில் சற்றும் தயக்கம்

காட்டமாட்டார். ஒரு ஸமயம் திருவஹீந்திர புரத்தில் ஸ்ரீதேசிகனுக்கு சாத்துப்படியாகிக் கொண்டிருக்கும் காலத்தில் அங்கு ஸேவைக்கு எருந்தருளியிருந்த தேரெழுந்தூர் ஆண்டவன், பௌண்டரீகபுரம் ஸ்வாமி தில்லை ஸ்தாநாம் ஸ்வாமி என்னும் மூன்றுயதிகள் திரைக்கு முன் உட்கார்ந்து கொண்டு வேதாந்த விசாரம் செய்து வந்தார்கள். அப்பொழுது ஒரு அமங்கலி இவர்களை சேவித்து விட்டுச் சென்றதைப் பார்த்து, அருகில் உபய வேதாந்தங்களையும் காலக்ஷேபம் செய்த ஒரு வித்துவான்' அடியேனுக்கு ஒரு ஸந்தேஹம். இப்பொழுது ஸேவித்துப்போன ஸ்த்ரீக்கும், க்ரந்த காலக்ஷேபம் செய்து விசேஷ ஜ்ஞாநாம் ஸம்பாதித்திருக்கும் அடியேனுக்கும் ஒரே மோக்ஷமா' என்று கேட்டார். யதிகளில் ஒருவர் பதில் சொல்ல ஆரம்பித்ததை இவர் தடுத்து, ஸ்வாமிந்! உமக்கு ஏன் இந்த வீண் வ்யவஹாரம். பக்தியின் ஆதிக்யத்தினுலும் ஆசார்யனுடைய அனுக்ரஹத்தினுலுமே அந்த அம்மாள் நிச்சயம் மோக்ஷம் போகப்போகிருள். உமக்கு இந்த விஷயத்தில் ஸந்தேஹம் ஏற்பட்டுவிட்டபடியினுல் உமக்கு மோக்ஷம் கிட்டாது. நீர்போய் இனியாவது நல்ல ஜ்ஞாநத்தை ஸம்பாதித்துக் கொள்ளும் என்று பதில் கூறியதும் அங்கிருந்த எல்லோரும் கரகோஷம் செய்து ஆநந்தப்படும்படி இருந்தது.

திவ்ய ப்ரபந்தத்தில் இவருக்குள்ள அபிமானம் மிகவும் உத்கர்ஷமானது. தம்முடைய தேஹஸ்திதி எப்படி இருந்தாலும் கைங்கர்யத்தை நிறுத்தமாட்டார்.

இவருடைய நிஷ்க்ருஷ்டமான ஜ்ஞாநம் இவர் இவருடைய சிஷ்யருக்கு ஒரு ஸமயம் சொல்லிய புத்திமதியினுல் காட்டப்பட்டது, அது.

'உமக்கு சக்தி இருந்தால் பெருமாளுக்கும் ஆசார்யர்களுக்கும் கைங்கர்யம் செய்யும், இல்லாவிட்டால் பெருமாளுக்குச் செய்வதை நிறுத்திக்கொண்டு ஸ்ரீதேசிகன் விஷயத்தில் அதைச் செய்யும் என்பதே.

தேசிகன் ஸம்ப்ரதாய ப்ரவசனத்தைக் காலக்ஷேபமாகவும் க்ரந்தருபமாகவும் செய்தருளியதோபாதி இவரும் ஸர்வலோகஹிதமாய் இருக்கும்படி ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திகளில் ப்ரதானமானவற்றிற்கெல்லாம் தமிழ்மொழி பெயர்ப்போ வ்யாக்யானமோ அருளிச் செய்திருக்கிருர்.

ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயத்தை ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ தேசிகனுடைய காலத்தில் நடித்துக் காட்டினுர்கள் என்று சொல்வதுண்டு. அதை இந்த இருபதாவது நூற்ருண்டில் தம்முடைய சிஷ்யர்களைக் கொண்டு தாம்கூட இருந்து சென்னையில் இருதரமும் திருவயிந்தையில் ஒரு தரம் நடத்திக் காட்டிய பெருமையும் இவருடையதே. திருப்பதி ஸம்ஸ்க்ருத கலாசாலையில் விசிஷ்டாத்வைத அத்யக்ஷராள் பதவியை வஹித்தவர்.

'தேவுமற்றறியேன் குருகூர் நம்பி' என்று மதுரகவிகள் அநுஷ்டித்தைப்போல,

'தேவு மற்றறியேன் உன்னையன்றி தூப்புல் தேவே என்று அநுஷ்ட்டித்தவர் இவரே, ஸ்ரீதேசிகனுடைய அர்ச்சாவதார உத்ஸவத்தை திருவயிந்திரபுரத்தில் முதல் முதல் ஸ்தாபித்த பெருமை இந்த ஸ்வாமியினுடையதே இவர் வெளியிட்டருளிய க்ரந்தங்கள் 64.

ஸ்ரீதேசிகனுடைய அவதார வருஷமான சென்ற விபவ வருஷத்தில் ஸ்ரீதேசிகனுடைய

உத்ஸவத்தை மிகவும் ப்ரபலமாக நடத்திய வர் இவரே, அந்த ஸமயம் ஸ்ரீதேசிகன் ஸந்நிதியிலும் திருமாளிகையிலும் காந்த விளக்கைப்போட்டு அநுபவிப்பதற்கு ஏற்பாடு செய்தவர் இவரே. அக்காலத்தில் அந்தப் பக்கத்தில் காந்த விளக்குகள் கிடையாது. பெரியடை நாமோவின் உதவினுல் இதைச் செய்யும்படி தூண்டியவர் இவரே.

ஸ்ரீதேசிகன் ப்ரஹ்மோத்ஸவத்தில் பரமபத நாதன் சாத்துப்படியில் ஸேவை ஸாதிக்கும் உத்ஸவம் இந்த ஸ்வாமி நடத்தியது. சிஷ்யரான கொளத்தூர் ராகவாசார்யர் என்பவர் அது சாச்வதமாய் நடப்பதற்கு மூலதனம் வைத்து நடத்துகிருர்.

ஒரு ஸமயம் பரகால ஸ்வாமியின் ஆஹ்வானத்திற்கு இணங்கிமைஸூர் சென்றிருந்த பொழுது தமக்காக ஒன்றும் கேட்காமல் ஸ்ரீதேசிகன் சாற்றுமுறையன்று ஸ்ரீஹயக்ரீவன் ஸந்நிதியில் லட்டுத் தளிகை பண்ணும் படிக்கு ஏற்பாடு செய்தவர் இவரே.

ஸ்வாமியின் திருவடியான
கோ. ஸ்ரீநிவாஸாச்சாரியார்

ஸ்ரீ ஒப்பிலியப்பன் ஸந்நிதி-ஸ்ரீ உப வித்வான் வங்கீபுரம்

நவநீதம் கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி

இந்த ஸ்வாமி பரம்பரையாய் வைதிகமான திருவம்சத்தில் அவதரித்து இளமையிலேயே தர்க்கம் மீமாம்ஸா சாஸ்த்ரங்களை அப்யஸித்துத் தேர்ந்தவர். இந்தச் சாஸ்த்ரங்களை அப்யஸிக்கும்போது, இந்த ஸ்வாமிக்கு ஸதீர்த்யராக எழுந்தருளியிருந்தவர் ஜகத் ப்ரஸித்தரான சதுச்சாஸ்த்ர கல்பதரு மஹா வித்வான், அம்மாசத்திரம் ஸ்ரீ உப. சேஷாசார்யார் ஸ்வாமி. திருவஹீந்திரபுரம் ஸ்ரீமத்-ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகன் என்னும் ஸ்ரீ. சின்ன ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயித்து உபயவேதாந்தங்களையும் அதைச் சார்ந்த க்ரந்தங்களையும் பன்முறை அதிகரித்து விசேஷ ஞானத்தை ஸம்பாதித்துக் கொண்டார். வேதாந்த சாஸ்த்ரந்தில் ஸ்வாமிக்கு ஸதீர்த்யராயிருந்தவர்கள் பரமஹம்ஸேத்யாதி கருடபுரம் ஸ்ரீமத்ஸ்வாமி, சேட்டலூர் பகவத் விஷயம் ஸ்ரீமத்-ஸ்வாமி முதலிய மஹான்கள், நவநீதம், ஸ்ரீ ஸ்வாமி பால்யம் முதலே வழுவாத அநுஷ்டானத்தால் பலருடைய கௌரவத்துக்குப் பாத்ரமாய் விளங்கினுர். அச்சுக்கே வராத பல வேதாந்தக்ரந்தங்களை ப்ரகாசநம் செய்து உலகுக்கு மஹோபகாரம் செய்தருளினுர். திருவிண்ணகரப்பனுக்கு இடைவிடாத கைங்கர்யத்துடன் சிஷ்யர்களுக்கு வேதாந்த ப்ரவசநம் செய்து கொண்டு சாந்தமே வடிவெடுத்தவராய் ப்ரகாசித்தார். ஞான வைராக்யங்களைப் பூரணமாகப் பெற்று, கர்மாநுஷ்டானங்களிலும் திருவிண்ணகரப்பனுடைய கைங்கர்யத்திலும் உறுதியுடையராய், கடுமையான ஆஹாரநியமம் ப்ரயாண நியமம் முதலிய வற்றைக் கடைப்பிடித்துத் தம் வாழ்நாள் முழுதும் இல்லறத்துறவியாய்த் திருவிண்ணகரிலேயே எழுந்தருளியிருந்த நவநீதம்—ஸ்ரீமத் ஸ்வாமி 75 திருநக்ஷத்ரங்கள் இந்த விபூதியில் எழுந்தருளியிருந்து, திருநாட்டிக் கெழுந்தருளினுர்.

திருமாலின் மணி ஒலி

ராமாயண கலாமணி
S. V. ராமஸ்வாமி ஐயங்கார்.
சென்னை–6;

வேங்கடமா மலைமணியே வேதாந்தத்தை
விரித்துரைக்க வேண்டியொரு கவிஞனாகி,
பாங்குடனே கலைகளெல்லாம் பயிலா தோர்ந்து,
பலர் வணங்கும் வேதாந்தாசிரியனாகி,
ஓங்கு புகழ் யதிராசன் உள்ள மெல்லாம்
உலகறியச் செய்து; பல உரைகளாக்கி,
ஈங்கு நமை வாழ்விக்க வந்த தென்றால்,
இவன் புலமைக் கீடுண்டோ?
இணைதானுண்டோ?

''மூன்றிலொருமூன் றெ''ன்றே எட்டெழுத்தை
முறையாக்கி ''மூவிரண்டாய்'' துவயம் காட்டி
சான்று! அவன் சொல்! நமைக்காக்கும் திண்ண
மென்று
சரணடையும் மந்திரமாம் சரமசுலோகம்
ஆன்ற சிறு ரகசியங்கள் பதினெட் டோதி
அதன் மேலும் பனிரெண் டருளிச் செய்து,
மூன்றுளது தத்துவங்கள், உலகம் ஆன்மா,
முதலியவைக்குத் திருமாலே மூல மென்றான்.

வேதாந்தம் பேசுகின்றான், போரடிக்கும்
வேண்டாமிக் கவிஞனென எண்ண வேண்டாம்
நாதாந்த விளக்கமொடு, தாளம், பாவம்,
நாட்டியமும் நாடகமும் எழுதுகின்றான்!

ஓதாத நல்லறிஞர் பாலும் அன்பின்
ஒளிதிகழும் 'சங்கல்ப உதயந்தானே'
தீதாகு காமமொடு வெகுளிக் கூட்டம்
திரண் டோட நாடகமும் தீட்டுகின்ருன்.

பாதுகையின் சிறப்பதனைப் பத்துநூருய்ப்
பண் கொஞ்சும் வடமொழியில் பாவாய்ச் செய்து
சாதனைக்குத் தோத்திரங்கள் பலவுஞ் செய்து;
சந்தமிகு தமிழ் மறையின் விளக்கங்கூறி
நீதி மொழி "பந்து" "கழல்" "ஊசல்" "ஏசல்"
நிறை தமிழில் "அம்மானை" நவமணிப்பா:
ஏது கணக்கிவன் மொழிந்த ஏட்டுக் கெல்லாம்,
எடுத்தோத வல்லவர்கள் இமையோதாமே.

பரிமுகத்து இறையருளே பயக்கப் பெற்று,
பலகலைகள் அதனாலே தெளியக் கற்று!
மறை வீழ்த்தி வாதிடுவோர் மருளப் பேசி,
'மாதவனே புகல் நமக் கென்ற'ருளி ஆசி,
நிறை இறையின் தயையருளே, நிற்க நூறு
நீள் கவிதை செய்துளத்தே நிலைக்குமாறு
வருக விதார்க்கிக சிங்கம் என்றே வாழ்ந்து,
வான் வழிக்கோர் ஏணி தந்தும் வாழ்வித்தானே!

மதத்ரய ஸாராஸ்வாதி... நிகரில்லாத மேதாநிதி-ரஸவாதி!
A. V. கோபாலாசாரியர் ஸ்வாமி, திருச்சி:



ஆர்யாஸப்தசதீ என்ற அத்புத க்ரந்தத்தை
அதிபால்யத்தில் எழுதிய
கோபாலாசாரியார் ஸ்வாமி (புதுக்கோட்டை)



அக்நிஹோத்ரம், ஸ்ரீநிவாஸ தாதாசாரியர் ஸ்வாமி
திருக்குடந்தை

அக்நிஹோத்ரம் — தாத தேசிகதாதாசாரியர்
ஸ்வாமி
திருக்குடந்தை

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ தேசிகாஷ்டோத்தரசத ஸ்தோத்ரம்

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி

ஸாங்க்ய ஸௌகத சார்வாக சங்கராதி தமோநுதம்
த்ரய்யந்த தேசிகம் வந்தே வேங்கடேசாஹ்வயம் மஹ:

ஸ்ரீமத் வேங்கட நாதஸ்ய நாம்நாமஷ்டோத்தரம் சதம்
ஸங்க்ருஹ்ய தத் ப்ரஸாதாய வக்ஷ்யே ஸர்வார்த்த ஸித்திதம்

1. கண்டாவதார:

திருமலைமால் திருமணியாய் அவதரித்தவர் ஸ்வாமி. ஸ்வாமியின் தாயாருக்குத் திருவேங்கடமுடையான் மணியைக் கனவில் அளித்ததால் கண்டாம்சம் என்று அறியப்படுகிறது. இந்த ரஹஸ்யத்தை தானும், தன் முன்னோரும், தமரும் அனுஸந்தித்தனர். பிரமன் ஆராதித்த மணியின் அவதாரம் என்று தன்னைச் சொல்வர்.

2. அனந்தார்ய தநய:

அனந்த ஸூரி என்பவரின் திருக்குமாரர். வாஸுதேவன் சக்கரவர்த்தித் திருமகன் முதலிய சொற்கள் போலாம். திருவேங்கடமுடையானுக்கு அனந்தன்-ஆதிசேஷன் மலையாயமைந்ததுபோல், ஸ்வாமிக்கும் தகப்பனாராக அமைந்தார் - என்று ஆதர்சம் காட்டும். அனந்த நித்யஸூரிகளும் ஒரு உருவத்தை அடைய அவதரித்தவர்.

3. வேங்கடாதிப:

வேங்கடேசன் என்று நாம ஸம்ஸ்காரத்தைப் பெற்றவர். வெற்றியடைய வேங்கடேசனே என அவதரித்தவர். பாபங்களைக் கண்ட

மாத்திரத்தினுலேயே போக்கும் பெருமை இருவருக்கும் உள்ளதே. வேங்கடேசாவதாரர் என்பதை முன்னும் பின்னும் பலர் அழகாக அறிந்துப் பேசியுள்ளனர்.

4. ஸ்ரீமல்லக்ஷ்மண யோக்யம்ச:

க்ஞான பக்தி வைராக்யாதி ஸ்ரீயை உடைய எம்பெருமானுரின் அம்சமாக அவதரித்தவர் ஸ்வாமி. சரணுகதி விஷயமாக ஸ்பஷ்டமாக ஸாதித்தருள எம்பெருமானுரே அவதரித்தார் என்று ஆதர்சம்.

5. வரதாசார்ய வீக்ஷித:

நடாதூர் அம்மாளின் கடாக்ஷத்தைப் பெற்றவர். ப்ரதிஷ்ட் டாபித வேதாந்த : என்று ஆசாஸிக்கப் பெற்றவர் ஸ்வாமி.

6. ராமாநுஜார்ய ஸந்த்ருஷ்ட:

ராமாநுசனே ஸ்வாமிக்கு நேராக ஆசார்யனுக ஆக, ஆசைப் பட்டு ஆத்ரேய ராமாநுஜனுக அவதரித்தார். அவராலேயே நன்ருகக் கடாக்ஷிக்கப்பட்டார். ''ஸம்யக்த்ருஷ்டே ந'' என்று ஸாராவளி.

7. ஸௌபர்ண மநுசிந்தக:

ஸ்ரீமத் கருட மத்திரத்தை அப்புள்ளாரிடம் (வேதாத்மாவான - கருத்மானுடைய ஸ்வரூபமான தனது மாதுலரிடம்) பெற்று, அயிந்தை யில் கருடநதி தீரத்தில் உள்ள ஔஷதாத்ரியில் ஜபம் செய்து வருபவர்.

8. தார்க்ஷ்ய தத்தவர:

கருடனுல் அளிக்கப்பட்ட உயர்ந்ததான வரத்தைப் பெற்றவர். இவர் ஹயக்ரீவ மந்த்ரத்தை உபதேசித்தார். இதுவே வரம்.

9. சுத்த:

உள்ளம் உரை செயல் உள்ள இம் மூன்றும் பெற்று, வெவ் வேறு பலன்களைக் கோலாத நிலையை அடைந்து தூய்மை பெற்றவர்.

10. ப்ரஸாதிதஹயாநந:

ஹயக்ரீவனை மகிழ்வித்து - ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தை அருளிச் செய்தார்.

ஹயக்ரீவஸ்தோத்திரத்தை அனுஸந்தானம் பண்ணி, அபூர்வ மான வைபவத்தை யெல்லாம் விளக்கியபடியால் ஹயக்ரீவனை மகிழ் வித்தவர் ஸ்வாமி.

11: அதீத ஸாங்கஸகலச்ருதி:

தனது மாதுலரான கிடாம்பியாச்சான் என்ற அப்புள்ளாரிடம் அங்கங்களோடு ஸகல வேதங்களையும் ஓதியுணர்ந்தவர் ஸ்வாமி.

12. ஸ்ம்ருதிவித்:

மனு, வ்யாஸர், பராசரர், தக்ஷர், சாண்டில்யர் முதலிய முனிவர் களின் ஸ்ம்ருதிகளை யெல்லாம் அறிந்தவர். விரோதங்கள் தோன்று மிடங்களிலும், பாஞ்சராத்ரம் முதலிய ஆகமங்களோடு விரோத மில் லாமல் நிர்ணயம் செய்ய வல்லவர்.

13. அக்ரணீ:

முன்பு செய்ய வேண்டிய அபிகமனுதிகளை நன்கு உணர்த்தி நாமும் அவற்றைக் கடைப்பிடிக்கும்படியாகச் செய்பவர்.

14. இதிஹாஸபுராணக்ஞ:

ஸ்ரீமத்ராமாயணம், பாரதம் முதலிய இதிஹாஸங்களையும், ஸ்ரீவிஷ்ணு புராணம் முதலான 18 புராணங்களையும் நன்ருக அறிந்தவர்.

15. ஸுகவி:

யாதவாப்யுதயம் முதலான சிறந்த பெரிய காவியங்களைச் செய்த படியால் கவியாகின்ருர். அதில் ஈடு இணை யில்லாதவராதலால் இத் திருநாமம். மதுரகவி சடகோபனை யல்லால் மற்ற எதையும் உரைக் காத மதுரகவியாழ்வார் போல் இவர் என்பது ஆதர்சம்.

16. தர்கதத்வவித்:

தர்கம் என்பது வேதத்தின் பொருளை ஸ்த்திரமாக உணர்த்த வந்த சாஸ்த்ரப்ரஸ்த்தானம். இதன் தத்வத்தை நன்ருக அறிந்தவர். ஸத்தர்க நிர்வாஹத்தை ந்யாய பரிசுத்தி முதலிய நூல்களில் காண்க.

17. பாஷ்யகார:

இவர் பாஷ்யகாரர். பூர்வமீமாம்ஸையில் நிரீச்வரவாதம் ப்ரஸங்கிக்க, ஸேச்வரமீம்ஸை என்ற நூலை, அருளிச் செய்து, தர்ம மீமாம்ஸா ஸூத்ரங்களுக்கு இங்ஙனே யன்ருே பாஷ்யம் பண்ணவேண்டும் என்று நிரூபித்தவர். (இது ஆதர்ச நிர்வாஹம்)

18. பயஹர:

மீமாம்ஸையில் ஏற்பட்ட பயத்தை மீமாம்ஸாபாதுகா என்ற க்ரந்தத்தை ஸாதித்தருளிப் போக்கி யருளினுர்.

19. ஸுதாசீ:

பாராசர்ய வசஸ்ஸுதையான ப்ரம்ஹ ஸூத்ரத்தின் அம்ருத ரஸத்தை உண்டு களிப்பவர். பிபந்து என்ற நியமனத்தை உண்மை யாக்கினவர்.

20. துக்த்தராசிக்ருத்:

பாராசர்ய வசஸ்ஸுதையை ஸ்ரீபாஷ்ய ரூபத்தில் தினமும் பானம் பண்ணி அதன் பயனுக தானும் அதிகரணஸாராவளி என்ற ஒரு திருப்பாற்கடலையே ஏற்படுத்தியவர்.

21. ப்ரதாந ப்ரதிதந்த்ரக்ஞ:

நமக்கும் எப்பெருமானுக்கும் உள்ள ஸம்பந்தம் சரீரம் - ஆத்மா என்ற அடிப்படையில் உள்ளது. கடக ச்ருதியால் காட்டப்பட்டது. பிற மதத்தினரால் அறியப்படாதது. இதை நன்ருக அறிந்தவர் ஸ்வாமி.

22. தேவதாபாரமார்த்யவித்:

பரதேவதை நாராயணன் தான்என்பதைத் தானும் அறிந்து பிறரையும் அறிவித்தவர் ஸ்வாமி.

23. ச்ருதவித்ய:

இருபது வயதுக்குள்ளே ஸகல விதமான வித்யைகளையும் கேட்டு அறிந்தவர்.

24. ச்ராவயிதா:

அத்யாத்ம ஸம்ப்ரதாய ரஸங்களை அழகாக காலக்ஷேப கோஷ்டிகளில் எடுத்துரைத்து அனைவரும் கேட்டு மகிழும்படிச் செய்தவர். 30 முறை பாஷ்யத்தைக் கேட்கச் செய்தவர் என்பதையும் காண்க.

25. ச்ருதபால:

ஆபத்தான காலத்தில் ச்ருத ப்ரகாசிகையை காப்பாற்றிக் கொடுத்தவர். (ஆதர்சம்)

26. ச்ருதப்ரத:

ச்ருதப்ரகாசிகை, ச்ருதப்ரதீபிகை என்ற ஸ்ரீஸூக்திகளை ஸத் சிஷ்யர்களுக்கு உபதேசிப்பவர்.

27. ச்ரித:

ரஹஸ்யார்த்தங்கள் எல்லாம் ஸ்வாமியிடம்தான் கேட்க வேண்டும் என்ற நிலையிருந்தபடியால் பலராலும் ஆச்ரயிக்கப்பட்டவர்.

28. பாண்டித்யதாதா.

ஆசார்யாளிடமும் பகவானிடமும் உள்ள பக்தியின் மிகுதியால் கேட்பதினாலும், மனனம் செய்வதாலும் ஏற்படும் க்ஞானம் பாண்டித்யம். இத்தகைய ப்ரம்ஹக் ஞானத்தை அளிப்பவர் ஸ்வாமி.

29. க்ருதக்ருத்ய:

அவதாரத்தின் ரஹஸ்யமான ரஹஸ்யத்ரய ஸாரத்தை அனுக்ர ஹித்த படியால் செய்ய வேண்டியதைக் குறையில்லாமல் செய்துவிட்ட பூரண நிலையை யுடையவர்.

30. க்ருதீ:

செய்ய வேண்டிய சகல விதமான கார்யங்களையும் செய்து விட்டபடியால் இவர் க்ருதீ - பரமோபகாரம் பண்ணினவர்.

31. ஸுதீ:

கலக்க இயலாததும், பிற மதங்களைக் கண்டு அவற்றுள் உள்ளதுமான குறைகளைக் கூறும் கூர்மையான க்ஞான விகாஸத்தை யுடையவர்.

32. நிரஸ்தஸாங்க்ய:

ஸாங்கிய மதத்தை (கபில மதத்தை நிராகரித்தவர்.)

33. ப்ரத்யுக்தயோக:

ஹிரண்யகர்ப்பர் என்பவர் யோகத்தை ப்ரவர்த்தனம் பண்ணி னார். இதுவும் ப்ரம மூலமானதால் இம்மதம்-(யோக மதக் கொள்கை) தவறு என்பதைக் காட்டியவர்.

34. காணாதபஞ்ஜந:

பரமாணுக்களை உபாதான காரணம் என்றும், பகவானை நிமித்த காரணம் என்றும், அநுமானத்தினால் ஈச்வரனை அறிய முடியும் என்றும், மோக்ஷம் கல் போன்றது என்றும் சொல்லும் (தத்வத்தைக் காணாது சொல்லும்) காணாத முனிவரின் மதத்தைக் கண்டித்தவர்.

35. அசிச்சைதந்யவாதக்ந:

அசித்தான வஸ்துவுக்கே சைதந்யம் உண்டு என்றும் சரீரநாசம் தான் மோக்ஷம் என்றும் சொல்லுகிற சார்வாகனுடைய வாதத்தை அழித்தவர்.

36. க்ஷணிகாணுமதார்தந:

க்ஷணிகமான அணுக்கள் ஒன்ருகச் சேருகின்றன. அவையே ஜகத் என்று சொல்பவனுன வைபாஷிகனுடைய மதம் தவறு என்றும், ஸௌத்ராந்திகனுடைய மதமும் தவறு என்றும் கூறியவர்.

37. ஸாகாரதீ நிராகர்தா:

க்ஞானமானது வஸ்துக்களாகவே இருக்கும் அதைக் காட்டிலும் அது வேறுபட்டதில்லை என்று சொன்ன யோகாசாரனுடைய மதத்தையும் மாய்த்தவர்.

38. சூந்யவாததமோநுத:

எல்லாம் சூன்யம் என்ற மாத்யமிகன் சொன்ன வாதத்தை தொலைத்தவர். எல்லாம் சூன்யம் என்று அறிய வேண்டிய புலனும் சூன்யமாகி விட்டால் இது எப்படி அறியப்பட்டதாகும்.

39. குத்ருஷ்ட்யுரகபக்ஷீச:

தம் வாயாலே தாமே அழிந்து போகக்கூடியவையான பாம்பே போல் இருக்கும் மாயாவாதிகளுக்கு கருடனைப்போல் விளங்குபவர்.

40. ஸப்தபங்கீவிலோபந:

ஜைனருடைய மதத்தை இருக்கின்ற இடம் தெரியாமல் அழித்தவர் ஸ்வாமி.

41. பேதாபேதமதச்சேத்தா:

பாஸ்கரருடைய மதத்தை அறுத்துத் தள்ளியவர், பேதாபேதம் அவருடைய மதம். ஜீவனுக்கும் பிரமத்துக்கும் பேதமுமுண்டு அபேதமுமுண்டு என்பது அவரது மதம். ஆனந்த தீர்த்தருடைய மதமாகவுமாம்.

42. தூத யாதவ கல்பந:

ஸந்மாத்ரமான ப்ரம்ஹமே போக்தா போக்யம். நியந்தாவாக மாறுகிறது என்பது யாதவருடைய மதம், ப்ரம்ஹத்துக்கு விகாரம்

சொன்னால் நிர்விகாரம் சொன்னது பொருந்தாது என்றுரைத்து அவருடைய மதத்தை முறியடித்தவர்.

43. அநீச வாததம்போளி:

ஈச்வரன் தனியாக ஒருவன் இல்லை என்று சொல்லும் மீமாம்ஸகர்களுக்கு வஜ்ராயுதமாக விளங்கியவர்.

44. பாஷண்ட மத கண்டந:

காபாலிகா காளாமுக, சைவ பாசுபத மதங்களைக் கண்டித்தவர்.

45. ஸம்ரக்ஷிதாகம:

பாஞ்சராத்ர ஆகமங்களை யெல்லாம் காப்பாற்றியவர்.

46. சங்க்க சக்ரதாரண ரக்ஷிதா:

சங்கசக்ராதிகளை தரித்துக் கொள்ளும் அவசியத்தை ஸ்ரீஸச்சரித்ரரக்ஷை முதலிய க்ரந்தங்களைக் கொண்டு நிரூபித்துக் காத்தவர்.

47. ஊர்த்வ புண்ட்ராங்கந த்ராதா:

திருமண்காப்பு இடவேண்டியதின் அவசியத்தையும், ப்ரகாரத்தையும், அதன் பெருமையையும் பலவகையான ப்ரமாணங்களோடு ஸ்தாபித்தவர்.

48. சுத்தஸ்த்வமயாக்ருதி:

ரஜோகுணம் தமோகுணம் கலக்காத அப்ராக்ருதமான திவ்ய திருமேனியை யுடையவர்.

49. யத்யாசார ப்ரதிஷ்டாதா:

யதிகளின் ஆசாரத்தை வ்யவஸ்தை பண்ணி அதை அருளிச்செய்தவர்.

50. ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரதீ:

ஸகலவிதமான சாஸ்திரங்களிலும் ஸ்வதந்த்ரமான நிகர் ஒன்றில்லாத க்ஞானவிகாஸத்தை யுடையவர். சைவாக மதந்திரங்களிலும்

ஸ்வாமிக்கு, தூஷிக்கவோ நிலை நிறுத்தவோ தனித்த திறமை யுண்டு என்றார் அப்பய்யதீக்ஷிதர். வடிவழகு மறவாதார் பிறவாதார், அஸ்ப் ருஷ்ட சிந்தாபதம் என்று அனுஸந்திப்பர்.

51. அவதார ரஹஸ்யக்ஞ:

அவதார ரஹஸ்யத்தை அறிந்தவர். அவதார ரஹஸ்யத்தை அறிந்தவர்களுக்கு மறுபிறவி யில்லை என்பதையும் காட்டியவர்.

52. அர்ச்சாஸௌந்தர்ய ஸக்ததீ:

அர்ச்சாவதாரத்தின் அழகில் ஈடுபாடுடையவர். வடி வழகு மறவா தார் பிறவாதார் என்பர் அஸ்ப்ருஷ்ட சிந்தாபதம் என்று அனுஸந் திப்பர். வைகுந்தவாஸமும் இதுக்கு இணையாகாது என்பர்.

53. அர்த்தபஞ்சகதத்வக்ஞ:

ப்ரம்ஹத்தின் ஸ்வரூபம், ஜீவனின் ஸ்வரூபம், ப்ராப்த்யுபாயம், ப்ராப்திக்குத் தடை, பலம், ஆகிய அர்த்த பஞ்சகத்தின் தத்வத்தை யுணர்ந்தவர்.

54. தத்வத்ரய விசேஷவித்:

சித் அசித், ஈச்வரன் என்ற மூன்று தததுவஙகளின விசேஷத்தை அறிந்தவர்.

55. பக்தியோக விரோதிக்ந:

பக்தியோகம் ஸ்வரூபத்துக்கு விருத்தம் என்றும ஆதமாவை அழித்துவிடும் என்றும் சொன்ன மதங்களைக் கண்டித்தவர்.

56. பக்திமான்

பக்தியுடையவர். அனேக ஸ்ரீஸூக்திகளில் ஸ்வாமி வாக்கினு லேயே அறியக்கூடும். எம்பெருமானும் பரமபக்தி வேண்டும் என்று

வேண்டியதால் ஸ்வாமியும் பக்தி யுடையவர். "வேங்கடேசே ந பக்த்யா" என்றவாறு.

57. பகவத்ப்ரிய:

பகவானுக்கு ப்ரியமானவர். மத்பக்த: மம ப்ரிய: என்று அவன் கீதையில் சொன்னான். அதற்கு ஏகலக்ஷ்யமானவர்.

58. க்ஞாதைகஸார:

ஸாரம் ஒன்றையே அறிபவர். அதனால்தான் ஸ்வாமியினிடம் பல ஸாரங்கள் ஏற்பட்டன.

59. த்வயவித்

த்வயம் என்ற மந்த்ரரத்னத்தை எல்லா மந்திரங்களிலும் சிறந்ததாகவும் ஸதாநுஸந்தேயமாகவும் இதைக் காட்டிலும் க்ஷேமத்துக்கு வேறு அமையாது என்றும் அறிந்தவர்.

60. விபக்தாதிக்ருதித்ரய:

சரணாகதிக்கு அதிகாரிகள் மூன்று வகையாவர் என்பதை விபாகம் செய்து நிரூபித்தவர்.

61. சதுச்லோக்யர்த்த ஸாரக்ஞ:

ஆளவந்தாரருளிச் செய்த சதுச்லோகியின் ஸாரமான ஸ்ரீவிபுத் வாதி விஷயங்களின் ஸாரத்தை அறிந்தவர்.

62. ஸம்யக்ஞாதாங்கபஞ்சக:

அநுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்யவர்ஜனம், விச்வாஸம், கோப்த்ருத்வவரணம், கார்ப்பண்யம் ஆகிய ஐந்து ப்ரபத்தி அங்கங்களை அறிந்தவர்.

63. ஷடங்கயோக நிர்ணேதா

ஆறு அங்கங்கள் இப்ரபத்திக்கு உண்டு என்பதையும் நிர்ணயித்தவர் ஸ்வாமி.

64. ஸப்ததந்துக்ருதுத்தம்:

யாகம் செய்தவர்களில் ஸர்வோத்தமர் ஸ்வாமி. ப்ரபத்தி இங்கு யாகம் என்பதால் கூறப்பட்டதாம்.

65. அஷ்டாக்ஷரைகநிரத:

வ்யாபக மந்த்ரமான அஷ்டாக்ஷரத்தையே எப்பொழுதும் ஜபிப்பவர்.

66. நவமைகரஸாச்ரய:

ஒன்பதாவதும் முக்யமானதுமான ரஸத்தை ஆச்ரயித்தவர். பரம சாந்தர் என்றபடி.

67. தசதாத்பர்ய விக்ஞாதா

திருவஷ்டாக்ஷரத்தில் பத்துவிதமான தாத்பரியங்களை அழகாக அறிந்தவர்.

68. சதக்ருத்

அநேக நூறுகளைப் பண்ணிய பெருமையுடையவர். தயாசதகம், அச்யுதசதகம், ப்ரதான சதகம் ஆகியவற்றைச் செய்தவர்.

69. ஸஹஸ்ரவித்

திருவாய்மொழியாயிரத்தை அறிந்தவர். ஸேவாயோக்ய, என்றாரம்பித்து திருவாய்மொழி திவ்ய நாம ஸஹஸ்ரத்தை ஸமர்ப்பித்தவர்.

70. ஸ்த்தூல லக்ஷ:

அளவிட முடியாத ஸ்ரீஸூக்திகளை அளித்தவர்.

71. அநேகநாநாகோடிக்ஞாநநிவர்தக:

பலவகையான ப்ரமங்களை யெல்லாம் போக்கினவர்.

72. தர்ம சங்கு :

வர்ணாச்ரமதர்மங்களை ஸ்தாபித்தவர். ஜாதி விஷயமான நிஷ்கர்ஷத்தைச் செய்தருளினவர்.

73. ஸாதுப்ருந்த வந்திதாங்க்ரிஸரோருஹ :

ப்ரம்ஹவித்துக்கள் சூழ்ந்தேத்தும் தாமரை போன்ற திருவடியுடையவர்.

74. பத்மாக்ஷாநந்தஜநக :

செந்தாமரை மலர் போன்ற கண்களையுடைய எம்பெருமானுக்கு ஆனந்தத்தை யுண்டு பண்ணுபவர்.

75. அநந்த குணாகர :

எல்லையில்லாக் கல்யாண குணங்களுக்கெல்லாம் கடல் போன்றவர்.

அனந்தனான எம்பெருமானுக்கே ஏற்றதான ஸகல கல்யாண குணங்களையும் தம்மில் கொண்டவர்.

76: த்யாக சப்தார்த்தவித்

சரமச்லோகத்தில் உள்ள த்யாக சப்தத்தின் பொருளை உள்ளவாறு அறிந்தவர்.

77. தர்மவேதீ

எம்பெருமானையே தர்மமாக அறிந்து அறிவித்தவர்.

78. விதி விசேஷவித்

சரணம் வ்ரஜ-என்ற விடத்தில் ப்ரபத்தி அனுஷ்டிக்க வேண்டும் என்று விதிக்கப்படவில்லை என்றும், ஆதலால் நாமும் ப்ரபத்தியை அனுஷ்டிக்க வேண்டியதில்லை என்றும் சொன்னார்கள். இது ப்ரபத்தி விதிபரம்தான் என்று நிரூபித்தவர் ஸ்வாமி.

79. உத்தமச்லோக பாவக்ஞ :

உத்தமச்லோகனை எம்பெருமானுடைய திருவுள்ளம் உத்தம மான சரிதம் உடையவர்க்கே புலனாகும். எம்பெருமான் திருவுள் ளத்தை அறிந்தவர் ஸ்வாமியே.

80. பஞ்சகால பராயண:

ஐந்து காலங்களிலும் அபிகமநாதி விசேஷ விதிகளை ஸ்வாமி நியமித்துத் தாமும் அவ்வாறே அனுஷ்டித்து வருபவர்.

81. ஸுரஸேவ்ய:

தேவர்களால் ஸேவிக்கப்பட்டவர் ஸ்வாமி, அப்ரதிபுத்தர்கள் இந்திரன் முதலியோரை ஸேவிப்பர். இந்த்ராதிகளோ ப்ரதிபுத்தர்களை ஸேவிப்பர்.

82. பூர்ணமநா:

பரிபூர்ண ப்ரம்ஹாநுபவத்தை இங்கேயே பெற்று நீதா: ஸுகம் வாஸரா: என்ற நிறைவை உடையவர்.

83. ஸுரேந்த்ரப்ரதிரூபக:

நித்ய ஸூரிகளான அனந்த கருட விஷ்வக்ஸேனாதிகளை மூதலிப்பவர்.

84. கவிதார்க்கிக பஞ்சாஸ்ய:

கவிகளுக்குள்ளும், தார்க்கிகர்களுக்குள்ளும் சிங்கமாய் விளங்கு பவர்.

85. நிகமாந்சலதேசிக:

ரங்கநாதனால் நிகமாந்ததேசிகன் என்று அழைக்கப்பட்டவர்.

86. வைத்ய:

ராகாதி தோஷங்களைப் போக்குகின்ற படியால் வைத்யர். வைத்யர் வைஷ்ணவர் என்பது ஆதர்சம். நின்ற நோய்கள் தவிர்த் தனனே-பிள்ளையந்தாதி.

87. முநீந்த்ர.

எட்டு வகையான பக்தியை யுடையவர்களில் தலை சிறந்து விளங்குபவர். சடகோப நாத யாமுந ராமாநுஜ முநிகளின் திரளில் இந்திரன் போன்று விளங்குபவர்.

88. ஸர்வக்ஞ:

எம்பெருமான் ஆழ்வார் மூலமாக நமக்கு அளித்த உபகாரங்கள் அனைத்தையும் அறிபவர். தத்வமுக்தாகலாபத்தை நிரூபித்து ஸர்வக்ஞர்.

89. உபகர்த்தா:

உபகார ஸங்க்ரஹம் முதலான க்ரந்தங்களை அருளிச்செய்து பரமோபகாரம் பண்ணினவர்.

90. உபகாரவித்:

உபகாரம் எது என்பதை நன்ருக அறிந்தவர்.

91. ஸத்ஸம்ப்ரதாயஸ்த்திரதீ:

யதிவரனாரின் மடைப்பள்ளி ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்து பெருமையுடன் விளங்குபவர். தாமே ந்யாஸவிம்சதியில் கூறின குணங்களை உடையவர்.

கலக்க மில்லாத க்ஞான விகாஸத்தை உடையவர். த்வச்சேஷத்வே ஸ்திரதியம் என்பதை கவனிக்க.

92. அநக:

க்யாதி லாபம் பூஜை ஆகிய எத்தகைய குற்றமும் இல்லாதவர். விதிவத்ஸேவா விமல மநஸா என்றதை நினைக்க.

93. ஸத்யவாக்:

அத்புதமான திருவாக்கையுடையவர். சோபதே ஸத்யவாதீ என்று அறிக.

94. ஸாதுவ்ருத்தி:

நாதமுனிகள் தொடக்கமாக வந்த ஸதாசாரத்தைக் கடைபிடித்து நடந்தவர். உஞ்ச்சவ்ருத்தியைக் கைக் கொண்டவர், யதீய சரிதம் என்று நிதர்சனமாக நின்றவர்.

95. முக்தடம்ப:

அஸூயை முதலிய தீய குணங்கள் இல்லாதவர். நாம் பெரியோமல்லோம்...நன்றும் தீதும் நமக்கு உரைப்பார் என்று நாடுவோமே.... என்பதை நினைக்க.

96. ஜிதாக்ஷ:

புலன்களை வென்றவர்.

97. தீர்க்க பந்துமாந்

பெரியதொரு திருவம்சத்தில் அவதரித்தவர்.

98. தயாளு:

இரக்கம் கொண்டு பிறருக்கு உபதேசம் செய்து அனந்தமான ப்ரபந்தங்களை அருளிச் செய்தவர். தயையின் பெருமைகளைக் காட்டின தயாளு.

99. சாஸிதா

தவறுகள் ஏற்படும் பொழுது அதைப் போக்கி அருள்பவர்.

100. ஸர்வஹிதாசரண தத்பர:

அனைவர்க்கும் இதத்தைச் செய்வதிலேயே கண்ணும் கருத்தும் உடையவர்.

101. மஹா குரு:

இத்தனை ஆசார்ய லக்ஷணங்கள் எல்லாம் குடி புகுந்தபடியால் மஹாசார்யன். ஆசார்யர்களுக்கெல்லாம் ஆசாரியன்.

102. ஸ்வர்ண வர்ண:

அழகான பத்தாறு மாற்றுத் தங்கம் போன்ற திருமேனிநிறமுடையவர்.

103. ஸுபாஹு:

அழகான நீண்ட இலச்சினைகள் விளங்கும் திருக்கரங்களையுடையவர். ஆயிரக்கணக்கான நூல்களை எழுதித் தந்ததையும்

நினைக்க. ந சோபார்த்தெள என்று ஒரு கணமும் நினைக்காதபடி, ஸ்ரீகோச வ்யாக்யா முத்திரைகளுடன் விளங்கும் திருக்கரங்களை உடையவர்.

104. புண்டரீக த்ருக்

செந்தாமரையை யொத்த திருக்கண்களையுடையவர். பகவததாரத்வஸூசகமாம்,

105. பவித்ரபாணி:

அழகான பவித்ரம் சாத்திய திருக்கரத்தையுடையவர்.

106. வ்யாக்யா முத்ராங்கிதகராம்புஜ:

வ்யாக்யா முத்திரையுடன் ஸேவை ஸாதிப்பவர்.

ஹயக்ரீவனுக்கு வ்யாக்யா முத்ரை எம்பெருமானுருக்கும் வ்யாக்யா முத்ரை, உந்நித்ர பத்ம ஸுபகாம் உபதேச முத்ராம் என்றுரிறே. இருவர்களையும் உபாஸித்தும் அவர் தம் தாதாத்மியம் பெற்ற ஸ்வாமிக்கும் அதுவேயாம்.

107. ஸவ்ய பாணி தலந்யஸ்த திவ்ய புஸ்தகபூஷண:

இடது கையில் திவ்யமான ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோசத்தை வைத்துக் கொண்டு ஸேவை ஸாதிப்பவர். அயிந்தையில் ஸ்வாமியினுல் அமைத்து அருளப்பெற்ற அர்ச்சா திருமேனியில் உள்ள ஸ்ரீகோசத்தில் ஓம் அதாதோ ப்ரம்ஹ ஜிக்ஞாஸா என்றிருப்பதை இன்றும் ஸேவிக்கலாம். திவ்யபுஸ்தகம் ஸ்ரீபாஷ்யம்.

108. பரசீர்ஷந்யஸ்த வாமபாதாப்ஜ கடகோஜ்வல:

பிறருடையதலையில் வைக்கப்பட்ட இடதி காலில் வீரகடகத்தையுடையவராய் விளங்குபவர். ஸ்ரீ பாஷ்யகாரருடைய தர்சனத்தைக் காத்து, தனிச் செங்கோல் செலுத்துமவர் தேசிகன். வேங்கடேசோத்தைக் பிஷிக்த: என்று அவரே சொன்னுர்.

இதீதம் தேசிகேந்த்ரஸ்ய நாம்நாமஷ்டோத்தரம் சதம்
ஸங்கீர்த்தயேத் அநுதினம் ஸர்வபாபபநுத்தயே.
படந் நாமசதம் பக்த்யா ச்ருத்வா குருமுகாம்புஜாத்
ப்ரஸாதாத் தேசிகேந்த்ரஸ்ய புக்தி முக்தீ ஸமச்நுதே
ஏகைகமபி தந்நாம கீர்த்தயந் ஸக்ருதுத்தமம்
ஸர்வாந் காமாந் அவாப்நோதி கிமுதாஷ்டோத்தரம் சதம்.

ஸ்ரீமதுபயவே

சித்தண்ணு சுந்தரதாதாச்சாரியார் ஸ்வாமி

திருக்குடந்தை

திருக்குடந்தை அய்யங்கார் தெருவு தாதாச்சாரியார் திருவம்சத்தைச்சேர்ந்த இந்த ஸ்வாமி ந்யாயவேதாந்த சாஸ்திரங்களில் பரிபூரணபாண்டித்யத்தோடு விளங்கிவந்தார். ஸ்ரீவைஷ்ணவஸம்பிரதாய க்ரந்தங்களில் ஸ்வாமிக்கு விசிஷ்டமான வைதுஷ்யம் இருந்து வந்தது. ஐம்பது ஸம்வத்ஸரங்களுக்குமேல் க்ரந்தசதுஷ்டயங்களையும் காலக்ஷேபமாக சாதித்துக்கொண்டு பட்டுஸ்வாமிகளை அனுக்ரஹித்துவந்தார்.

வாஜபேயம் வீரராகவதாதாச்சாரியார் ஸ்வாமி தர்கவாசஸ்பதி லக்ஷ்மீகுமாரம் அனந்தாச்சாரியர், பட்டுஸ்வாமிமுதலியோர் இந்த ஸ்வாமியினிடம் காலக்ஷேபம் பண்ணின வர்கள். ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஸ்வாமிதிருவடியைச் சேர்ந்தவர்கள் மிகவும் அதிகம்!! செடியைப் பிடுங்கினுலும் சித்தண்ணு சிஷ்யர்கள்'' என்பதொரு பழமொழி நிலவி வந்தது என்ருல் ஸ்வாமியின் வைபவத்தை சொல்லவும் இயலுமோ!

காஞ்சி மஹாவித்வான். ஸத்தர்கவாசஸ்பதி பட்டண்ணுஸ்வாமி இந்த ஸ்வாமியின் அத்யந்தம் மித்ரர். பஞ்சகாலப்ரக்ரியாபராயணராய் 85 திருநக்ஷத்திரங்கள் விலக்ஷணமாக எழுந்தருளியிருந்தார். அந்த ஸ்வாமியினுடைய பேரன் இப்பொழுது அந்த ஸ்தானத்தை அலங்கரித்து வருகிருர். அஸ்மத் ஸம்பிரதாயத்தில் இன்றும் ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள் இருக்கின்றனர்.

ஸ்வாமி திருமாளிகையில் எப்பொழுதும் 50 அபிக்ஞர்கள் இருந்தவண்ணமே இருப்பர். ஸ்வாமிக்கு திவ்யப்ரபந்தத்தில் விசேஷமான ஊற்றம் உண்டு.

கீணீர்குன்றம்

ஸ்ரீநிவாஸவரதாச்சாரியார் ஸ்வாமி

இந்த ஸ்வாமி கீழ்நீர்க்குன்றம் என்கிற ச்ரோத்திரியாக்ர ஹரத்தில் அநந்ததேசிகன் திருவம்சத்தில் விஜயராகவாச்சாரியார் ஸ்வாமியின் திருக்குமாரராய் பவவருஷம் ஆவணிமீ ஸ்வாதிநக்ஷத்திரத்தில் அவதரித்தார்.

யதாகாலத்தில் திருத்தகப்ஞரால் உபநயநம் பஞ்சஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்டு அத்யயநம் அவ்விடத்திலேயே ஓதினுர். பிறகு பெங்களூர் கலாசாலையில் வ்யாகரணம் அலங்காரம் முதலானவைகளை வாசித்தார். பிறகு பிதாவிடம் க்ரந்தசதுஷ்டயங்களையும் ஸேவித்து ஆத்மரக்ஷாபரஸமர்ப்பணத்தையும் செய்துகொண்டு பெங்களூர் கலாசாலையில் வ்யாகரணுத்யாபகராய் எழுந்தருளி இருந்து பலபேர்களுக்கு வ்யாகரணசாஸ்த்திரத்தை ப்ரவசனம் செய்தார். இதரகாலங்களில் வேதாந்தகாலக்ஷேபம்சொல்லி பலபலளகிக

நீயர்களை ஸத்ஸம்பிரதாயஸ்தர்களாக்கி மகிழ்ந்தார். இந்த ஸ்வாமிக்கு தேசிகன் அருளிச் செய்த சில்லரை ரஹஸ்யங்களையும் பாதுகாஸஹஸ்ரத்தையும் புஸ்தகநிரபேக்ஷமாய் வைத்துக்கொண்ட மஹான். பல ஸ்த்ரீபுமான்களுக்கு சில்லரைரஹஸ்யங்களை மூலப்பாடம் செய்துவைத்து இருக்கிறார். இந்த ஸ்வாமி செய்யத்தங்கரையில் உள்ள கீழ்னீர்குன்றத்தில் எழுந்தருளிஇருந்து உதயோபஸ்தாநாதிகளையும் ஔபாநஸநவச்வதேவத் ஏகாந்தவாஸ நிரதராய் அம்மாள் முதலாகபல ஆசார்யர்கள் ஆராதித்த தேவாதிராஜனை ஆராதித்துக் கொண்டு சிஷ்யர்களுக்கு பஞ்சஸம்ஸ்காரம் முதலான ஸம்பிரதாய கார்யங்களை செய்து கொண்டு எழுந்தருளி இருந்தார். ஸம்பிரதாயார்த்ததை சமத்காரமாய் ஸாதிப்பதில் அதி நிபுணர். ரஹஸ்யத்ரயஸாபரம்பரை இவர்களுக்குத் தனியாக (மற்றவர்கள் பரம்பரைபோல்) அல்லாமல்) இருப்பதாகச்சொல்லுகிறார்கள். ஸம்பிரதாய வ்ருத்தம் என்று இவரைச் சொல்வ துண்டு, இந்த ஸ்வாமி பல ஸ்ரீகோசங்களை எடிட் பண்ணியிருக்கிறார். இவர் அருளிய க்ரந்தம் யதிராஜஸப்ததிவ்யாக்யா—(தமிழ்) (கன்னடம்) அஷ்டாத்யாயிடிப்பணி.

நாவல்பாக்கம் அண்ணயார்யமஹாதேசிகன்

பெருமாள்கோவிலென்கிற காஞ்சிபுரத்திற்கு ஸமீபத்திலுள்ள நாவல்பாக்கம் என்கிற ச்ரோத்தியாக்ர ஹாரத்தில் ஸாதாரணவருஷம் ஆடிமாதம் ம்ருகசீர்ஷநக்ஷத்திரத்தில் சதக்ரது ஐய்யா குமாரதாததேசிகன் திருவம்சத்தில் சடமர்ஷண கோத்திரத்தில் யக்ஞந்ருஸிம் மயஜ் வாவின் பௌத்தரராய் பண்டிதஸ்ரீநிவாஸதாதாசார்யஸ்வாமியின் திருக்குமாரராய் அவ தரித்து ஸாங்கவேதாத்யயனத்தை தன் பிதாமஹரதிகளிடம் ஓதி ந்ருஸிம்ம சாஸ்திரி (தர்க ஸக்கிரஹாதிவ்யாக்யாதா)களிடம் ந்யாயசாஸ்ராதிகளை அதிகரித்து திருமலைநல்லான் சக்கரவர்த்தி நவீநம் சிரோமணி வெங்கடாச்சார்யஸ்வாமியிடம் ஹயக்ரீவமந்தரோபதேசம் பெற்று திருக்கடல்மல்லை திவ்யதேசத்தில் புண்டரீகபுஷ்கரிணியின் கரையில் அலவணவ்ரத் துடன் 45 தினங்கள் ஹயக்ரீவகல்போக்தமுறையாக ஜபஹோம தர்பணங்களுடன் புரச் சர்யை அநுஷ்டித்து ஸ்ரீலக்ஷ்மீஹயக்ரீவ நித்யாராதானத்துடன் ஸ்ரீமத் வேதாந்தக்ரந்தங்களை யும் ஸம்பிர தாயக்ரந்தங்களை காலக்ஷேபம்பண்ணி ஸ்ரீரங்கம் ஸ்வாமியால் ஸ்ரீரங்கநாதன ஸந்நிதியில் ஸமர்பிதபரராய் அநேகம் பண்டிதோத்தமர்களுக்கு ஸாமாந்யசாஸ்திரங்களை ப்ரவசனம் செய்துகொண்டு எழுந்தருளி இருக்க ஸ்ரீரங்கம் ஸ்வாமியான வேதாந்தராமாநுஜ மஹாதேசிகன் அண்ணயார்யஸ்வாமியின் ஸாத்வீகத்தை யும் ஸ்ரீஹயக்ரீவப்ரஸாத்தாலே உண்டான க்ஞானவைராக்யாநுஷ்டானங்களையும் நாவிஜித்ய புர: நிவர்ததே என்னும்படி வாக்யார்த்தவ்யவஹாரத்தையும் கடாக்ஷித்து திரு வுள்ளமுகந்து ஸ்வாமி தேசிகனைப்போல் ஹயக்ரீவாராதனத்துடனும் நித்யததீயாராதனத் துடனும் நம்ராமாநுஜதர்சநத்தையும் ஸ்வாமிதேசிகன் ஸம்பிரதாயத்தையும் ப்ரவசநாதி களால் அபிவிருத்தி பண்ணும்படி நியமித்து இப்படி ஸ்வாமிமுகமாய் ஹஹயவதனன்

விசேஷ ஸம்பிரதாய ப்ரவசநம் கண்டருள வேண்டியதற்காக ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் ''ஸத்ஸர்த்தியும் சம்யுக்தாம்நித்யம் யர்சேத்அநந்ய:'' என்கிறபடியே அநுக்ரஹிக்க —அண்ணயார்யமஹாதேசிகனும் நியமநத்தை சிரஸாவஹித்து ஸ்ரீநிகமாந்த மஹா தேசிகனைப்போல் க்ரஹஸ்தாச்ரசரத்திலேயே ஹயக்ரீவ ஆராதனத்துடன் ஸந்யாஸாச்ரமி களுக்கும் க்ரஹஸ்தர்களுக்கும் ஸ்ரீபாஷ்யச்ருதப்ரகாசிகாஸர்வார்த்தஸித்தி சததூஷிஸி பகவத்விஷயம் முதலான க்ரந்தகாலக்ஷேபம் சாதித்துக்கொண்டும், மத்யாந்நகாலத்தில் ஸாமாந்யசாஸ்த்ரப்ரவசநமும் செய்தருளி தோகோஜ்ஜீவநம் செய்துவந்தார். ஆங்காங்கு திவ்யதேசங்களிலே நடக்கும் எம்பெருமான் மஹோத்ஸவத்திற்கும் விடாத எழுந்தருளுவதும் உத்ஸவகாலங்களில் கைங்கரியகாலம்போக மீதிகாலங்களில் வேதாந்தவிசாரம் செய்வதும் வழக்கம்-திருவஹிந்திரபுரத்தில் பலகால் எழுந்தருளிஇருந்து தேசிகனமங்களாசாஸநம் செய்துவந்தார். ப்ரதிஸம்வத்ஸரமும் தேசிகன் கண்டருளும் ப்ரம்மோத்ஸவம் தவராமல் ஸேவிப்பது வழக்கம். ஒரு ப்ரம்மோத்ஸவத்தில் ஸ்வாமிதேசிகன் பாகவதமுகமாய் தனக்கு திருத்தேர் செய்துவைக்கும்படி நியமனமாயிற்று. அப்படியே திருத்தேர் கைங்கர்யத்தையும் ஸ்ரீமதுராந்தகத்தில் ராமனுக்கு திருத்தேர் கைங்கர்யத்தையும் சிரஸ்தார்ரங்காச்சாரியாரைக் கொண்டு நித்யாராதனத்திற்கு சாச்வதமான ஏற்பாட்டையும் காஞ்சீபுரம்-ஸ்ரீரங்கம் முதலான திருப்பதிகளிலும் சிஷ்யர்களைக்கொண்டு பலகைங்கரியங்களையும் செய்துவைத்து உகந்தார். ஸ்வாமி சரமதசையில் தத்தனூர் என்றும் கிராமத்தில் ஆபத்ஸந்யாஸ செய்துகொண்டு மூன்றுதினம் எழுந்தருளி இருந்தார்-இவர் அருளிச்செய்த க்ரந்தம் (1) ப்ரம்மசப்தார்த்த விசார:- (வ) தத்ரதத்த்ரப்காசிகா

வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்

வலயப்பேட்டை ஸ்வாமி என்று ஸுப்ரஸித்தராய் எழுந்தருளிஇருந்த இவ்வாச்சார் யன்—தாரணவருஷம் மார்கழிமாதம் ஸ்வாதி நக்ஷத்திரத்தில் நாவல்பாக்கம் என்கிற அக்ரஹாரத்தில் சதக்ரது குமாரதாததேசிகனின் திருவம்சத்தில் சடமர்ஷணகோத்ரத்தில்— ராமாநுஜதாதாசார்யர் என்கிற மஹானுக்குத்திருக்குமாரராய் திருமலைதாதாச்சாரியர் என்கிற திருநாமத்துடன் அவதரித்து அய்யா கவிஸார்வ பௌமர் வெங்கடாசார்யஸ்வாமி ஸந்நிதி யிலே ஸாமாந்யசாஸ்த்ராதிகளையும், ஸ்ரீமதண்ணயதாததேசிகன் ஸந்நதியில் வேதாந்த ரஹஸ்ய பகவத் விஷயாதி ஸம்பிரதாய க்ரந்தங்களையும் ஸேவித்து, பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீகேதாண்டபட்டி ஸ்வாமி ஸந்நதியில் துரீயாச்ரமத்தை ஸ்வீகரித்து திருக்குடந்தை முதலான திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருந்து அநேகம் சிஷ்டாக்ரேஸராளுக்கு க்ரந்த சதுஷ்டயங்களையும் ச்ருதப்ரகாசிகை முதலான க்ரந்தங்களையும் விசேஷித்து சததூஷணீ ஸர்வார்த்தஸித்தி முதலான தேசிக ஸ்ரீஸூக்திகளையும் ஸாதித்துக்கொண்டு ஸம்பிரதாய ப்ரவசனம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார்.

இவர் அருளிய க்ரந்தங்கள்:

(1) தத்க்ரதுந்யாயவிசார, (2) பகவத்தியானஸோபானவ்யாக்யா, (3) சிரார்த்த யுக்மகண்டநம்.

ஸ்ரீநிவாஸ தாதாசார்ய:

வலயபேட்டை என்னும் திவ்யஸ்தலத்தில் எழுந்தருளி இருந்தவர். இவ்வாசார்யன் நாவல்பாக்கம் அக்ரஹாரத்தில் ஆங்கீரஸவருஷம் ஐப்பசி மாதம் உத்திரட்டாதி நக்ஷத்திரத்தில் ராமானுஜதாதாசார்யர்ஸ்வாமிக்கு திருக்குமாரராய் அவதரித்து, ஐய்யா நரசிம்ம தாததேசிகன் (சின்னஸ்வாமி) ஸந்நதியில் ஸாமாந்ய சாஸ்திரங்களையும் ஸம்பத்குமார தாதாசார்ஸ்வாமியிடம் அத்யயநத்தையும் அதிகரித்து வேதாந்த ராமாநுஜஸம்யமிஸந்நதியில் வேதாந்த க்ரந்தங்களையும் ஸ்ரீ தேசிகஸம்பிரதாயார்த்தங்களையும் ஸேவித்து பரம ஆசாராநுஷ்டாதிகளுடன் வஸிஷ்டதுல்யச் ரைஷ்ட்யத்துடன் அதிதேஜஸ் பாய்லபரூயாவிவண்யாதி ஸகலகுணநிதியாய் D. T. தாதாசார்ய முதலிய பரமைகாந்திகளுக்கு காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டும், அமுதன் திருமேனி அழகிலே ஈடுபட்டு ப்ரதிதினம் மங்களாசாஸனம் செய்தும் கோமளவல்லித்தாயார் திருமுன்பே ஸகலபோகங்களுடன் எழுந்தருளி இருக்கும் தம் குலகூடஸ்தரான சதக்ரது ஐயா குமாரதாததேசிகன் அர்சாமூர்த்தியையும் ஸேவித்து மகிழும் வைகரி அத்யாச்சர்யம். இம்மஹான் திருக்குடந்தை தேசிக ஸம்பிரதாயாபிவர்த்திநீ ஸபாவின் தலைவராக எழுந்தருளி இருந்து ஸ்வாமி தேசிகன் அருளிய எல்லா ஸ்தோத்திர பாடங்களை பல வ்யாக்யாநத்துடன் முதல்முதலில் வெளியிட்ட மஹான், மற்றும் ஸ்ரீ வைஷ்ணவாநுஷ்டான க்ரந்தங்களையும் முத்ரணம் செய்துவைத்து உபகரித்தார்.

இவர் அருளிய க்ரந்தங்கள் :

(1) நமஸ்கார பூர்வபக்ஷ நிராகரணம் (ஸகக்ருத்ப்ரணுமநிராகரணரூபம்), (2) பிஷ்டபசு கண்டநம்.

அய்யா வெங்கடாசார்ய ஸ்வாமி

இம்மஹான் தன்கூடஸ்தரான அய்யா சதக்ரதுகுமாரதாததேசிகனைப்போல் ரோஹிணீ நக்ஷத்திரத்திலே அவதரித்து ஸாங்காத்யயநத்தை தன் பெரியோர்களிடம் செய்து, ச்வசுரரான வெங்கடாசார் ஸ்வாமியிடமும், அண்ணயதாத தேசிகனிடமும் தர்க்க சாஸ்திரத்தை வாசித்தார். பிறகு அண்ணயதாத தேசிகனிடம் ப்ரகரணுதி வாதாந்தமான சாஸ்த்ரத்ரயத்தையும் ரஹஸ்ய பகவத் விஷயாதி ஸம்பிரதாயார்த்தங்களையும் ஸேவித்து, ஸகல வித்யாவாசஸ்பதியாய் விளங்கினர்.

இந்த ஸ்வாமி ஆரணியில் இருந்த ஜாகீர் ஸமஸ்தாநத்தில் ப்ரதான ஆஸ்தாநத் தலைவராய் எழுந்தருளி இருந்தார். இவர் வ்யாகரண சாஸ்த்திரத்தில் தத்வபோதிநீ முதலான அநேக சாஸ்திர கிரந்தங்களையும் ஹயக்ரீவ நக்ஷத்திரமாலிகா, வைசாகோத்ஸவ வர்ணன கண்ட காவ்யம் முதலான காவ்யங்களையும் செய்தருளி, அபரதேசிகனாய் விளங்கினர். இவருடைய க்ரந்தங்கள் தத்காலம் தஞ்சாவூர் ஸரஸ்வதீ பாண்டாகாரத்தில் உள்ளது. இந்த ஸ்வாமி கவனம் செய்து அந்தாதி சொல்லும் ஆசுகவி நாவல்பாக்கம் அண்ணயாசார்ய ஸ்வாமியின் ஸம்பிரதாயத்திலுள்ள ஸமாச்ரயண தனியனின் ஸங்கிரஹத்தை இவர் தான் செய்தருளினர்.

அய்யா நரஸிம்ஹ தாததேசிகன்

இவர் ச்ரோத்திரியம் நாவல்பாக்கத்தில் ரக்தாக்ஷி வருஷம் கார்த்திகை மாதம் பூர்வ பல்குனி நக்ஷத்திரத்தில் கவிஸார்வபௌம சதுஸ்தந்த்ர பாராவார பரீண அய்யா வெங்கடா சார்ய ஸ்வாமிக்கு குமாரராய் அவதரித்து, அண்ணயதாத தேசிகன் திருக்குமாரரான அப்பாஸ்வாமி என்று ப்ரஸித்தரான வரததாத தேசிகனிடம் பஞ்சஸம்ஸ்காரத்தைப் பெற்று வேதாந்தராமாநுஜ ஸ்வாமியிடம் ஸகல வேதாந்த க்ரந்தங்களையும் அதிகரித்து, வலயப் பேட்டை ஸ்வாமி ஸந்நதியில் துரீயாச்ரம ஸ்வீகாரம் பெற்று, யதிதர்மத்தை ஸாக்ஷாத் ஸ்வாமிபோல் முக்யமாக அநுஷ்டித்துக் காட்டிய தபஸ்வீ. இவர் அஷ்டாவதானம் செய்வ தில் பெரும் நிபுணர். அதனுல் அஷ்டாவதானம் ஸ்வாமி என்றுகூட வ்யவகாரம் செய்வ துண்டு இவரை. இவர் அருளிய க்ரந்தம் யக்ஞோபவிதமீமாம்ஸா.

முத்தண்ணு ஸ்ரீநிவாஸ தாததேசிகன்

நாவல்பாக்கம் ச்ரோத்ரியாக்ராஹாரத்தில் சதக்ரது ஸ்ரீ குமாரதாத தேசிகன் திருவம்சத் தில் சடமர்ஷண கோத்திரத்தில் மன்மத வருஷம் புரட்டாசி மாதம் அச்வினி நக்ஷத்திரத்தில் அண்ணயதாத தேசிகனின் ஜ்யேஷ்ட ப்ராதாவான தேசிகாசார்யருக்குஜ்யேஷ்ட குமாரனுய் அவதரித்து தனக்கு பித்ருவ்யரான ஸ்ரீமதண்ணயதாத தேசிகனிடம் ஸ்ரீபாஷ்ய, கீதாபாஷ்ய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் முதலான ரஹஸ்ய க்ரந்தங்களையும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ரங்க நாத யதிசேகரரிடம் பகவத் விஷயத்தையும் ஸேவித்து பல பேர்களுக்கு பஞ்சஸம்ஸ்காரம் காலக்ஷேபம் ப்ரஸாதித்துக்கொண்டு தேசிக பக்திபரிதராய் ஸ்ரீரங்கம் முதலான திவ்ய தேசங்களில் ஸம்பிரதாய ப்ரவசனம் செய்துகொண்டு பகவன் நாமோச்சாரண தத்பரராய் எழுந்தருளியிருந்தார். இவர் பல லௌகிக ப்ரபுக்களை தேசிக ஸம்பிரதாயத்திலே அசஞ்சல ப்ரதிபத்திபத்யுள்ளவராகச் செய்து ஸ்ரீ தேசிக ஸம்பிரதாயத்தை ஸ்தாபித்தார்.

ஸங்கல்ப ஸூர்யோதய நாடகத்தில் ஸம்பிரதாயார்த்தங்களை சொல்லுபவர் என்று மஹாவித்வான்களும் இவரிடம் வந்து ஸேவித்து ஸம்பிரதாயார்த்தத்தை க்ரஹிப்பதுண்டு. இவர் எப்போதும் நாராயண நாமோச்சாரணம் செய்வதால், இவரை நாராயணஸ்வாமி என்று வ்யபதேசிப்பதுண்டு.

தனியன்

ஸ்ரீமத் சதுச்ருதி சதக்ரது திவ்யவம்ச முக்தா
பலம் மஹிதமாத்ம குணைருதாரம் |
தத்தாத்ருகாண்ணயகுரோ: சரணு ப்ஜஹம்ஸம்
ஸ்ரீவாஸதாத குருவர்ய மஹம் ப்ரபத்யே ||

நாவல்பாக்கம் தாதாசார்ய தேசிகன்

இந்த ஸ்வாமி ச்ரோத்ரியம் நாவல்பாக்கம் என்கிற ச்ரோத்ரியாக்ரஹாரத்தில் விரோதி க்ருத்வருஷம் ஆவணி மாதம் பூரட்டாதி நக்ஷத்திரத்தில் ஸ்ரீ ராஜகுரு சதுர்வேத சதக்ரது ஸ்ரீ குமாரதாத தேசிகனின் திருவம்சத்தில் சமர்ஷண கோத்திரத்தில் ஸ்ரீமதண்ண

யாயர்ய மஹாதேசிகனின் ஜ்யேஷ்டப்ராதாவான தேசிகாசார்ய ஸ்வாமி (ஸம்புட காயத்ரீ கண்டனம் முதலான க்ரந்தகர்த்தா)யின் நான்காவது திருக்குமாரராய் அவதரித்து, பிதாவினிடம் ப்ரம்மோபதேசம் பெற்று, பிதாவினிடம் பஞ்சஸம்ஸ்காரமும் பித்ருவ்யரான ஸ்ரீமதண்ணயதாததேசிகனிடம் ஆத்மரக்ஷாபரஸமர்ப்பணத்தையும் செய்து, ஜ்யேஷ்ட ப்ராதாவான ஸ்ரீநிவாஸதாததேசிகனிடம் க்ரந்த சதுஷ்டயத்தையும், மாப்பிள்ளை விஜயராகவாசார் ஸ்வாமியிடம் சிந்தனையும் செய்து, வாதக்ரந்தங்களையும் ப்ரகரணுதி ஸம்பிரதாய க்ரந்தங்களையும் ஸேவித்து, பதரிகாச்ரமம் ஹரித்வாரம் 2 வருஷம் எழுந்தருளியிருந்து 16 லக்ஷம் அஷ்டாக்ஷர ஜபத்தையும் செய்து, ஸதாயோகபரராய் எழுந்தருளியிருந்தார்.

இந்த மஹான் தசோபநிஷத்துகளையும், அதிகரண ஸாராவளீ, தத்வமுத்தாகலாபம் இவைகளை வாசோவிதேயமாய்ச் செய்த மஹான். எப்போதும் ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்தியைக் அநுசந்தித்து உள்ளம் பூரிக்கும் உத்தமன். அபர வயதாயிருந்தும்கூட பெரியோர்களிடம் சாஸ்த்திரார்த்தத்திற்கு ஸக்ருதாவர்த்தி உபதேசம் பெற்று, ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்தியைக் கரதாமலகமாய்ச் செய்து ஸ்ரீநிவாஸன் ஸந்நதியில் நித்யமாய் அநுஸந்தித்து உகந்தவர்.

இந்த ஸ்வாமியிடம் நாவல்பாக்கம் நரஸிம்மதாத தேசிகன். ச்ருதப்ரகாசிகை, பாவப்ரகாசிகை வேதாந்த ப்ரகரணங்கள் சததூஷணீ முதலான க்ரந்தங்களையும் வைச்வதேவத்தையும் பெற்ருர். உபநிஷத்துகளை எல்லாம் அத்யயந முறைப்படி இந்த ஸ்வாமியிடம் நரஸிம்ம தாதாசார் ஸ்வாமி 42 பட்டம் இஞ்சிமேடு அயுகியசிங்கர் இருவர்களும் அத்யயநப் செய்து தசோபநிஷத்துகளை வாசோவிதேயமாகக் கொண்டார்கள். அபிநவகதாதரரென்று சொல்லக்கூடியவரான ஸ்வாமி ஆராவமுததாதாசார் ஸ்வாமி (சதுர்தசலக்ஷணீ முதலான க்ரோடபத்ரப்ரணேதா) இந்தஸ்வாமியிடம் க்ரந்தசதுஷ்டயத்தையும் ஸேவித்தார். மஹா வித்வான் அய்யாஸ்வாமி (தேவனுதாசார்ஸ்வாமி) மாதா வழியில் பந்துவாயுமுள்ள இந்த மஹாநிடம், ஆந்நிகம் ராமாயணம் முதலானவைகளை ஸேவித்து. இம்மாஹாநின் பரம க்ருபயை பால்யத்திலிருந்தே பெற்றவர். ப்ருஹ்ம்மவர்ச்ஸாலும் ஸௌம்யமானதிருமேனியாலும் பார்பவரை நமநம் பண்ணும்படியாக அமைந்த திருமேனி பரமாத்மனியோக்த: என்கிற ரீதியில் எழுந்தருளிஇருந்து ஏகாந்த வாஸசீலராய் யோக சீலராய் அர்சாவதார எம்பெருமானிடம் கட்டுக்கடங்காத பக்தியும். அர்சாவதாரங்களைக்கொண்டு மங்களா சாஸநம் செய்யும் அழகு இந்தஸ்வாமியிடம் அந்யாத்ருச மென்பார்கள். இந்தஸ்வாமியின் திருக்குமாரர்களாக வரததேசிககதாதாசாரியார்ஸ்வாமி அக்னிஹோத்திரம் நாராயண தாதாசாரியார்ஸ்வாமி இருவரும் மஹாபண்டிதராய் இந்தஸ்வாமியிடம் காலக்ஷேபம் முதலானவைகளை பெற்ருர்கள். இந்தஸ்வாமி க்ரஹஸ்தாசிரமத்திலேயே ஸம்பிரதாய ப்ரவசநம் செய்து கொண்டு, ஹயக்ரீவ ஆராதனத்துடன் எழுந்தருளி இருந்தார்.

தனியன்

ஸ்ரீமத்ச்சதக்ரது குலார் ணவபூர்ணசந்த்ரம்
ஸ்ரீஸ்ரீநிவாஸகுருவர்ய க்ருபாத்த போதம்
தத்தாத்ருசாண்யகுரோ: கருனணக பாத்ரம்
ஸ்ரீதாதயார்யமநகம் சரணம் ப்ரமத்யே !!

ஆராவமுததாதசாரியார் ஸ்வாமி

இந்த ஸ்வாமி நாவல்பாக்கத்தில் கரவருஷம் ஐப்பசி திருமூலத்தில் சடமர்ஷணகோத்திரத்தில் ஸ்வாமி பௌத்ரரான ஸ்வாமிதாததேசிகாச்சாரியார் ஸ்வாமிக்கு திருக்குமரராய் அவதரித்து ஸ்ரீநரஸிம்மதாததேசிகனிடம் ஸாமார்யசாஸ்த்திரத்திரங்களையும் ஸ்ரீதாதாசார் ஸ்வாமியிடம் காலக்ஷேபத்தையும் செய்து வேதாந்த ராமாநுஜஸ்வாமியிடம் பரஸமர்ப்பணத்தையும் ஸ்வபிதாவினிடம் ஸமாச்ரயனத்தையும்பெற்று, தர்க்ககிரந்து தங்களுக்கு க்ரோடபத்திரத்தையும் செய்து அபரகதாதரன்போலும் அதிபாலயத்திலே மேதாவிலாஸத்தால் பல மஹான்களின் போற்றுதலையும்பெற்று, பலவிதத்திலும் பராசாபட்டரைப்போல் எழுந்தருளி இருந்தார்—

இவர் தனியன்

ஸ்ரீசை லாண்ணய பெயத்ரதாதயகுரோ : ஸம்ப்ரா
ப்த்தமந்த்ரோத்தமம் ஸ்ரீமத் வேத வதம்ஸலக்ஷ்மண
முநௌந்யஸ்தாத்தரக்ஷாபரம்ம ஸ்ரீதாதாரோய
குருத்தமாததிகத த்ரய்யந்தபோதம் புதம்
வந்தேஸத்ருணரத்ரு வாரிதிமர்யாப்தாம்ருதாக்யம் குரும் !!

ஸ்ரீ

அழகுசெய்யூர் சண்டமாருதம் ஸ்வாமி

இந்த ஸ்வாமி ஸ்ரீவத்ஸ கோத்தரத்தில் ஹஸ்த்தி கிரிநாதமுடும்பை வம்சத்தில் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிக்கு திருக்குமாரராய் ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி என்கிற திருநாமத்துடன் கிரஹஸ்தாச்ரமத்தில். அழிசூர் கிராமத்தில் அநேகம் வித்வான்களுக்கு காலேக்ஷேபம் ஸாதித்துக் கொண்டு பஞ்ச காலபராயணராய் எழுந்தருளி இருந்தார் அந்த காலத்தில் வாக்யார்த்தத்திற்கு வந்த மாயாவாதியை நொடிப்பொழுதில் ஜெயித்து விட்டார். சண்டமாருத ஸஹிதமாக சததூஷணியில் இவர் சொல்லும் திரமைகளை பார்த்து ஆச்சர்யமடைந்த அக்காலத்து அழகிய சிங்கர் சண்டமாருதம் என்கிற பிருதையும் திருவாராதனத்திலுள்ள திருவாழி திருசெங்கையும் இந்த ஸ்வாமிக்கு ப்ரசாதித்து ஸம்பிரதாய ப்ரவசநம் செய்யவேண்டுமென்று நியமிக்க ஸ்வாமியும் அழகிய சிங்கர் நியமனத்தை சிரஸாவஹித்து. தன் கிராமத்திலேயே ஸம்பிரதாய ப்ரவசநம் செய்து ப்ரஸித்தராய் எழுந்தருளி இருந்தார்.

இவர் அருளி செய்த க்ரந்தம்.—1. ராமாநுஜ ஸித்தாந்த ஸங்கரஹம் முதலானவைகள்.

ஸ்ரீ

அழகு செய்யூர் விஜய ராகவாசாரியர் ஸ்வாமி

இந்த மஹான் அழிசூரில் வத்ஸகோத்திரத்தில் ஹஸ்தி கிரிநாதமுடும்பை வம்சத்தில் சடகோபாசார்ய ஸ்வாமியின் திருக்குமாரராய் நாவல்பாக்கம் அண்ணுயார்ய மகாதேசி கனின் தௌஹித்ராய் அவதரித்து ஸகலசாஸ்த்திரங்களேயும் வேதாந்த க்ரந்தங்களேயும் சண்டமாருதம் ஸ்வாமி திருவடிகளிலே ஸேவித்து திருவனந்தபுரத்தில் விசாக ராஜாவின் ஆஸ்த்தாந வித்வானுக வெகுகாலம். எழுந்தருளி இருந்து பல க்ரந்தங்களே செய்தருளினுர் சண்டமாருதம் ஸ்வாமியின் ஸமீபஜ்ஜாதியானபடியால் இந்த ஸ்வாமியயையும் சடண் மாருதம் விஜயராகவாசாரியார் என்று வ்யபதேசிப்பதுண்டு. இந்த ஸ்வாமியிடம் சில ஸமயங்களில் புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி வ்யாகரண சாஸ்த்திரந்தில் ஸந்தேஹ நிவர்த் திக்காக எழுந்தருளுவது வழக்கமென பெரியோர் சொல்லுவதுண்டு. இவர் அருளிச் செய்த க்ரந்தங்கள். 1. ஸ்தேம சப்தவிசாரம். 2. ஆதேசசப்தார்த விசாரம். 3. கையட வ்யாகயா. 4. ரஹஸ்ய ரத்நாவளீ ஹ்ருதயம் (ஸம்ஸ்கிருதீகரணம்) (மலயாடை பாஷா வ்யாக்யாநத்துடன்). 5. ஸாதநசதுஷ்டயநிராஸ: 6. ஜந்தீநிர்ணயம் ச்ரவணத்வாதசீ நிர்ணயம்.

இந்த ஸ்வாமியின் திருத்தம்பியார் பரிமள ரங்காசாரியார் ஸ்வாமி திருத்தமயனுரைப் போல் சதுச் சாஸ்திரத்திலும் மஹாவித்வான். யமகசித்ரப்பந்தாதி கவனத்தில் அதிநுபணர். இவருடைய க்ரந்தம் பாகவதசம்பூ முதலியவை.

அழிசூர் திருமலாசார்ய ஸ்வாமி

இந்த ஸ்வாமி. ஸ்ரீவத்ஸ கோத்திரத்தில் வீரராகவ ஸ்வாமியின் திருக்குமாரராய். அவதரித்து சண்டமாருதம் ஸ்வாமியின் திருவடிகளிலே ஸமஸ்தார்த்தங்களேயும் ஸேவித்து உதயோப ஸ்தாநபரராய் மந்தர சாஸ்த்திரத்திலே அதிமேதாவியாய். ஸ்ரீ அத்துபட்டு அழகிய சிங்கர் ஆஸ்தாந காலத்தில் ஆஸ்தான வித்வாநாய் எழுந்தருளி இருந்து எல்லா மந்திரங்களின் பீஜாக்ஷரங்களின் விசாரத்துடனும் அங்கந்யாஸகரந்யாஸங்கள் த்யாநம் முதலானவை கருடன் விசாரூபமான மந்த்ரரத்நாகரம் என்னும் ஸர்வருக்கும் அத்யாவச்சிய மான க்ரந்த ரத்நத்தை செய்து பரம சாந்தராய் ஏகாந்த வாஸியாய் க்ராமத்திலேயே எழுந் தருளி இருந்தார்.

ஸ்ரீ. உ. வே. கோழியாலம்

ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமி

இந்த ஸ்வாமி மதுராந்தகத்திற்கு அருகிலுள்ள கோழியாலம் என்னும் அக்ரஹாரத்தில் பாரத்வாஜ கோத்ரத்தில் ஸ்ரீ வேங்கடவரதாசாரிய ஸ்வாமிக்கும் இரண்டாவது குமாரராய் அவதரித்தருளினர். தமது திருத்தகப்பனரிடமும், மருத்வான்பாடி முத்தண்ணு ஸ்வாமியிடமும் ஸமக்ரமாய் வேதாத்யயனம் செய்து காவ்யநாடகாதிகளையும் அதிகரித்து தமது தமையனரும், பின்னுளில் ஸன்னியஸ்தராய் 'ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமி' என்றும் பிரஸித்தராய் எழுந்தருளியிருந்தவருமான 'ராகவாசாரிய ஸ்வாமியிடம்' உபய வேதாந்த கிரந்த காலக்ஷேபம் செய்தருளினர். அனுஸ்ரவவேதோக்தி பவித்ர வக்த்ரரும், ஆசாரயுக்தாத் மகுணோப பன்னரும், அனவரத க்ரந்த பரிசீலனரதரும், தேவப் பெருமாளிடம் அசஞ்சலமான பக்தியுடைய இந்த ஸ்வாமி கச்சியருளாளருக்கு ச்சுவரார்ன ஸ்ரீரங்க நாராயணாசாரியரின் (வங்கீ புரத்து நம்பிகள், வங்கீ புரத்து ஆச்சி) நேர்வழி வந்தவர்.

இந்த ஸ்வாமி அருளிச் செய்த கிரந்தங்கள் வருமாறு :—

1. 'ஸ்வரூபாத்யஷ்ட கஸ்தூரி:' 2. 'க்ருஷ்ண மங்கள மாலிக:' 3. 'லக்ஷ்மீ ஸ்துதி:' 4. ராமானுஜஸ்தோத்ரம்:' (இராமானுஜ நூற்றந்தாதியின் ஸம்ஸ்கிருதப் படுத்தியது) 5. ஸ்ரீதேசிக ஸ்தோத்திரம்:' (பிள்ளையந்தாதியின் ஸம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு) 6. ஸ்ரீ வேதாந்த தேசிக ஸ்தோத்திரம்:' (ராமானுஜ தயாபாத்ர பத்யாயாக்ஷர மாலிகா ஸ்தோத்ரம்) 7. 'ஸன்மதகாரிகாவளி:' தத்துவ முக்தாகலாபத்தைப் போல் நமது ஸித்தாந்தார்த்தங்களை சுலோக ரூபமாய் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் கிரந்தம்: 8. 'சாரீரக காரிகாவளி:' ஸ்ரீபாஷ்யார்த்தங்களைச் சுருக்கி ஒவ்வொரு அதிகரணர்த்தத்தையும் விளங்க வைக்கும் சிறந்த கிரந்தம். ஸ்ரீமதுயவே. கபிஸ்தலம் ஸ்ரீ தேசிகாசாரியர் 'சாரீரகாதி கரணரத்மாலிகா:' என்பதில் ஒவ்வொரு சுலோகத்தின் முடிவிலும் திருவேங்கடமுடை யானைப்பற்றி விளித்திருப்பதைப் போல் இதில் தமது குலதனமாகியதேவர் பிரானை (காஞ்சி வரதனை) ஸ்தோத்ரமாகச் செய்துள்ளார் என்பது இதிலுள்ள விசேஷம். 9. 'அதிகரண காரிகாவளி:' 10. அதிகரணர்த்த ஸங்க்ரஹம்:' இவையிரண்டும் முன்போலவே சுருக்கியும், விவரமாயும் அருளிச் செய்யப் பட்டவை. 11. 'ஆசாரியகக்யம்:' 12. ஆசாரிய மங்களம்:' 13. 'அஷ்டோத்த்ரம்:' 14. புஷ்பாஞ்ஜலி:' இந்த நான்கும் பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதி ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி 'ஸ்ரீரங்க ராமானுஜ மஹாதேசிகனைப் பற்றிய ஸ்தோத்ரங்கள். மற்றும் பல. 'ஸ்ரீ பாஷ்யம், ச்ருதப்ரசாசிகை, பாவப்ரகாசிகை' முதலியன இந்த ஸ்வாமிக்கு வாசோவிதேயமாய் வரும் ஆழ்வானின் பஞ்சஸ்தவம், பட்டரின் ஸ்தோத்ரங்கள், பாதுகா ஸகஸ்ரம் உட்பட ஸகல தேசிக ஸ்தோத்ரங்களும், பன்புள்ளாரின் ஸகல ஸ்தோத்ரங்களுா கண்டபாடம், பரமசாந்த ஸ்வாபமுடன் தேவப் பெருமாளின் வைசாகோத்ஸவாதி காலங்களில் வேதபாராயணம் செய்துக் கொண்டு இந்த ஸ்வாமி எழுந்தருளுவதை ஸமீபகாலம் வரையில் ஸேவித்தவர்கள் பலர். தர்ம சாஸ்திரங்களிலும் ஸ்வாமி நிருபகராய் எழுந்தருளியிருந்தது எல்லோருமறிந்ததே. ஆஜான சுத்தராய், ப்ரதிக்ரஹபராங்முகராய் எழுந்தருளியிருந்த பழைய நாளைய மஹான்களின் வரிசையில் இந்த ஸ்வாமி ப்ரதம கண்ணியராவார்.

திருமலை ஸ்ரீனிவாஸதாதாசாரியார்

இந்த ஸ்வாமி பெருமாள் கோவிலில் சடமர்ஷண கோத்திரத்தில் நாதமுனி, யாமுன முனி, திருமலைநம்பி, திருக்குருகைபிரான் பிள்ளான் இவர்கள் அவதரித்த திருவம்சத்தில் புண்டரீகாக்ஷருக்கு திருக்குமாரராய் அவதரித்து பால்யத்திலேயே இவர் தேசிகனிடம் ரக்ஷார்த்தமான திருவிலச்சினைகளைப் பெற்றவர். ஸ்ரீ தேசிகனிடம் ஸர்வசாஸ்திரத்தையும் ஸரஹஸ்யமாக வேதாந்தங்களையும் ஸேவித்தார். புண்டரீகாக்ஷர் தனக்கு பிள்ளான் மூலம் எழுந்தருளிய லக்ஷ்மீஹயக்ரீவனை ஸ்ரீ தேசிகனிடம் எழுந்தருளிப் பண்ணிக் கொடுத்தும் தன் குமாரனையும் அவரிடம் ஸர்வார்த்தமும் ஸேவிக்கும்படி நியமித்தருளினர். இம் மஹான் தேவராஜன் ஸந்நிதியில் ஸ்ரீகார்யதுரந்தரராய் எழுந்தருளியிருக்கும்போது, ப்ரம்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமிக்கு தேவாதிராஜன் ஆஸ்தான ஸேவையில் இப்பிருது (ப்ரும்ம தந்த்ர ஸ்வதந்த்ரஸ்ரீயர்) கொடுக்கப்பட்டது.

இவர் அப்புள்ளாரின் தௌஹித்ரன். இவர் அருளிய க்ரந்தம் ப்ரபந்த நிர்வாஹம்.

இவர் தனியன்

ஸ்ரீசைல பத்மநேத்ரார்ய பதாம்போஜை கதாரகம் |
த்ரய்யந்தார்யதயாபாத்ரம் ஸ்ரீநிவாஸகுரும்பஜே ||

ஸ்ரீ :

அய்யா குமார தாததேசிகன்

இவ்வாசாரியன் விஷ்ணுவ்ருத்தகணம் என்று சொல்லப்படும் சடமர்ஷண கோத்திரத்தில் இப்பாரத தேசத்தில் மிக்க ப்ரஸித்தர்களாய் விளங்கியவர்களும், மஹாசுசிகளும், குணபுருஷத்வஸ்த்திவித்துகளுமாயும், இயற்கையாகவே ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளில் ஏகாந்த மனஸ்ஸை உடையவர்களுமான நாதயாமுன ஸ்ரீசைல பூரண குருகாதிசாதீகளான பரமதேசிகர்களின் ஔரஸ வம்சத்தில் ஸ்ரீநிவாஸ தாதாசார்ய ஸ்வாமியின் பௌத்ரனுகவும், வெங்கட தேசிகனுக்கு திருக்குமாரராக வைகாசி ரோஹிணியில் அவதரித்தார். தன் பிதாவினிடமே ஸமாச்ரயணம் கிரந்த காலக்ஷேபம் முதலான ஸகல சாஸ்த்திரங்களையும் ரஹஸ்யார்த்தங்களையும் விசேஷித்து, 4 வேதங்களையும் அதிகரித்து அதிபால்யத்திலேயே ஆசார்யத்வம் பண்ணத் தொடங்கிவிட்டார். நாவல்பாக்கத்தில் எழுந்தருளியிருந்து யஜ்ஞா ராதனத்தால் ஸ்ரீநிவாஸனை ஆராதித்து வந்தார்.

ஒருதினம் மத்தியானத்திற்கு தடாகத்திற்கு எழுந்தருளும்போது நடுங்குன்றத்தி லிருந்து ஒருவன் தடாகத்திலே வந்து படுத்துத் தூங்கிக்கொண்டு இருக்கும்போது, ஸர்ப்ப மானது அவன் முகத்துக்குமேல் பட்டுக்கொண்டிருந்த வெய்யிலைத் தன்னுடைய படத்தால் மறைத்துக்கொண்டு அவன் முகத்தில் வெய்யில் படாமல் தடுத்துவந்ததை ஸ்வாமி பார்த்து ஆச்சரியப்பட்டு, இவன் உத்தம புருஷனுக இருக்கவேணும் என்று எண்ணி எழுப்பி விசாரித்து, அவனைத் தன்னிடமே இருக்கும்படி நியமித்து, அவன் ஆசாராதிகளையும் வைஷ்ணவாசாரத்திலுள்ள பற்றுதலையும் பார்த்து பல தடவை பரீக்ஷை செய்து, அவன் ப்ரார்த்தனைக்கு இணங்கி, ஸமாச்ரயணத்தை செய்து உகந்தார்.

பிறகு கொஞ்ச காலம் ஸ்வாமியிடம் தன் ஜாத்யனுகுணமாக சில நல்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு ஆசார்ய ப்ரதிபத்தியுடன் அங்கே வசித்துவந்தான். சில காலம் சென்ற

பிறகு ஸ்வாமியின் நியமனத்தின்பேரில் திவ்யதேசங்களை ஸேவிக்கப் புறப்பட்டான். ஸ்வாமியும் குளிர கடாக்ஷித்து அனுப்பினர். நேரே தஞ்சமாமணிக் கோயிலை வணங்கி நிற்க, தனக்கு தூரபந்துக்களான தஞ்சை நாயக்க மன்னர்களைப் பார்க்க எண்ணம் கொண்டு அவர்களைப் பார்க்க, அந்த ஸமயம் ஆஸ்தானத்தில் அனந்தரவாரிசு இல்லாமல்போய் இந்த நாயகனை அபிமான புத்திரனுக வைத்துக்கொண்டு அரசாங்கத்திற்கு வேண்டியதையெல்லாம் அவனுக்குச் சொல்லிக் கொடுத்து, தன் காலத்திற்குப் பின் நாயகனை அரசனுக இருக்கவேண்டிய நியமனுதிகளைச் செய்து போனுர்கள்.

நடுங்குன்றத்திலிருந்து வந்தவருக்கு ஸ்வாமி ரகுநாத நாயகன் என்கிற பேரை ஸ்வாமி சூட்டினுர். ரகுநாத நாயகன் இவருக்கு முந்தி இருந்த அச்சுத நாயகனுக்குப் பின் ஆஸ்தானத்தை ஏற்றவுடன் ஸகல அரசாங்க மரியாதையுடன் குமாரதாத தேசிகனை எழுந்தருளப் பண்ணி, நீலமேகனின் திருவடிவாரமான வெண்ணுத்தங்கரையில் ஸ்வாமியை எழுந்தருளச் செய்தான். ஸ்வாமியும் மஹாராஜாவின் உபகாரத்தால் அக்னிஷ்டோமாதிகள் தொடங்கி ஸர்வதோமுகாந்தமான மஹாயக்ஞங்களை பலாபிஸந்திரஹிதராய் நீலமேகனின் திருவாராதனமாகவே அநுஷ்டித்தார்.

அரசனும் தஞ்சை அரசாங்கத்தைச் சேர்ந்த எல்லா வைஷ்ணவாலயங்களில் அக்ர தீர்த்தம், புராணபடனம் அருளிச்செயல், வேதபாராயணுதிகளை ஏற்றுக்கொண்டு பகவன் முகோல்லாஸத்திற்காக அக்கைங்கரியங்களைச் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். ஸ்ரீரகுநாத நாயக மன்னனும் நீதி வழுவாமல் ஆண்டுவந்த ஸமயத்தில் ஸ்ரீ ஸ்வாமி அரசனுக்கு குருவாகவும் ஆஸ்தான வித்வானுகவும் இருந்துவந்தார். நாயக அரசனின் ஆஸ்தானத்தில் தேசிக ஸித்தாந்தமான ப்ரபத்தியைப்பற்றி மதாந்தரஸ்தர்களுடன் ஒரு ஸமயம் விவாதம் ஏற்பட, இரண்டு மூன்று நாள் வாக்யார்த்தம் சொல்லி ப்ரபத்தி மார்க்கத்தை ஸ்தாபித்தார். அந்த ஸதஸில் இருந்த மஹான்கள் அப்போது ஸ்வாமிக்கு வேதாந்தாசார்ய ஸித்தாந்த விஜயத்வஜம் என்கிற பிருதைக் கொடுத்தார்கள். இந்த பிருது தனியனில் சேர்க்கப்பட்டு அநுஸந்தித்துக்கொண்டும் வருகிறுர்கள்.

இந்த ஸ்வாமியைப்பற்றிய விவரம் வெகுவாய் தஞ்சை சரஸ்வதி மஹால் லைப்ரரியில் உள்ளது. இவ்வரசன் ஸ்வாமியின் காலத்திற்குப் பிறகு தன் ஆதீனத்திலுள்ள கும்பகோணம் சாரங்கபாணி கோயிலில் தாயார் ஸந்நதிக்கு முன்பு அர்ச்சாரூபியாக எழுந்தருளப் பண்ணி, நித்யாராதனமும் நடக்கும்படிச் செய்து போந்தான்.

இவர் புண்டரீகபுரம் முதலான அக்ரஹாரங்களையும், சோழ தேசத்தில் பல ஆலயங்களையும், பல எம்பெருமான்களுக்குத் திருவாபரணங்களையும் ஸமர்ப்பித்து, அர்சாதிருமேனியில் வெகு ஈடுபாடுடன் எழுந்தருளியிருந்தார். இவர் காஞ்சியில் வரதராஜனுக்குத் திலகம் ஸமர்ப்பித்து இருக்கிறுர். (ஸர்வதோ முகத்தில் ஸ்வாமிக்கு மோதரமாக அரசன் கொடுத்த நீலநாயகத்தை தேவார்ஹமென்று எம்பெருமானுக்குச் சாத்திவிட்டதாக பெரியோர்கள் பணிப்பர்.)

இவர் அருளிய க்ரந்தங்கள் :

1. பாரிஜாதாபஹரண நாடகம்.
2. நிக்ஷேபரக்ஷாவ்யாக்யா (வாத ப்ரதிவாத ரூபம்).
3. ஸ்ரீபாஷ்ய வ்யாக்யா—விசிஷ்டாத்வைதஸரணீ.
4. பஞ்சகால ப்ரதீபிகா.
5. உஷாநிருத்த சரிதம்.
6. ராமாயண கதாஸாரம்.
7. ஸூத்ரகல்ப பாஷ்யம்.
8. வ்யாகரண தீபிகா.

9. கணுதபரிபாடீ.
10. கபிலதந்த்ரஸாரம்.
11. அபயப்ரதானஸார வ்யாக்யா முதலானவைகள்.

இவரைப்பற்றி நீலகண்ட தீக்ஷிதர் தன் க்ரந்தத்தில் ஷட்தர்சிநீப்ரவிணு: குமார தாததேசிகா: என்று உதாஹரித்துள்ளார். ஆகையால் A. D. 16 to 17 என்று ஊஹிக்கப் படுகிறது.

இவ்வாசாரியன் க்ரஹஸ்தாச்ரமத்திலேயே எழுந்தருளியிருந்து சத்ரசாமாராதி பரிவாரங்களுடன் திவ்யதேச யாத்திரை செய்து, மாயிகளிடமிருந்தும் ஏகதேசிகளிடமிருந் தும் நம் ஸம்பிரதாயத்தை ரக்ஷித்து வந்தார். இவர் ஸுதர்சன அநுக்ரஹத்தால் ஜ்ஞானைச் வர்யத்தைப் பெற்ற மஹான்.

இவர் தனியன்

குமாரதாதயாசார்யம் ஸதாசாரபரம் ஸதா |
வேதாந்தாசார்ய ஸித்தாந்த விஜயத்வஜ மாச்ரயே ||

நாவல் பாக்கம் அக்னிஹோத்ரம்

ஸ்ரீ நாராயண தாதாசாரியார் ஸ்வாமி

ப்ராயச்சித்தார்த்தம் அநுஸ்மரணீயர்களான மஹான்களில் இம்மஹான் முதல்வராய் விளங்குபவர் என்று பலர்சொல்லுவதுண்டு. பரஸௌலப்யமூர்த்தி. ஸ்வாமியின்திருமேனியை ஸேவிக்கும்போதே தாந்திக்ஷாந்தியாதி ஆத்ம குணங்கள் நமக்கு ஞாபகம் நம்மையும் அறியாமலேயே நம் கண்முன் தோன்றிவிடும்.

இந்தஸ்வாமி நாவல்பாக்கம் என்று ப்ரஸித்த ச்ரோத்ரியாக்ரஹாரத்தில் சதக்ரது ஸ்ரீ அய்யாகுமாரதாததேசிகனின் திருவம்சத்தில் நாவல்பாக்கம் அண்ணயதாததேசிகன் திருத்தமயனூர் ஸ்ரீ தேசிகாசாரியஸ்வாமியின் ஸந்ததியில் நீலமேகதாததேசிகன் த்விதீய குமாரராய் விக்ருதி வருஷம் ஆடி மாதம் மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் சிறிய பிதாமஹரான ஸ்ரீமதண்ணயதாததேசிகன் திருவவதார தினத்தில் அவதரித்தார். நாவல்பக்கத்திலேயே தங்கள் பெரியோர்களிடம் அத்யயனங்களை செய்து திருப்பதி கலாசாலையில் கபிஸ்த்தலம் தேசிகாசாரிய ஸ்வாமியிடம் அலங்காரக்ரந்தங்களையும் வ்யாகரணசாஸ்திரத்தை ஸ்ரீ முஷ்ணம் சுப்ராயாசாரியார் ஸேதுமாதவாசார் என்று ப்ரஸித்தத்வைதாசாரியர் களிடமும் வாசித்தார். பிறகு தன் பெரிய பிதாவான ஸ்ரீநிவாஸதாததேசிகனிடம் ஸமாச் ரயணம் பண்ணிக்கொண்டு ராமாயணாதிகளையும் அதிகரித்தார்.

தன்மாமனாரின் ஸ்ரீ கிராமமான கோத்திமங்கலத்திலே தகப்பனாரான தாததேசிகனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போய் க்ரந்த சதுஷ்டயத்தையும் ஸேவித்தார். பின்பு ஸ்ரீ நரசிம்ம தாததேசிகள் திருவடிவாரத்திலே ஸகல வேதாந்தக்ரந்தங்களையும் ஸேவித்து, பூர்வமீமாம்ஸையை பரிபூர்ணமாக அதிகரித்து மைசூர் அரசாங்கத்தில் பரீக்ஷகொடுத்து அவர்களால் உத்தமோத்தமமாக கௌரவிக்கப்பட்டார். ஸ்ரீ நரஸிம்ம தாததேசிகன் நியமனத்தின் பேரில் மீமாம்ஸையை வாசித்தது மட்டும் மல்லாமல் அதைக்ரியா பர்யவஸாயியாக பண்ணவேண்டுமென்று திருவுள்ளம் கொண்டு தங்கள் பெரியோர்களான, யக்ஞந்ருஸிம்ஹனைப்போல் அக்னி ஆதானம் செய்து, திருக்குடந்தை ஸ்ரீ தாததேசிகா சாரியார் ஸ்வாமியின் க்ருபையால் ஆதானம் செய்து. 2-வது ஸம்வத்ஸரத்தில். தாததேசிகா சாரியார்ஸ்வாமியயை முன்னிட்டுக்கொண்டு, தன் தமயனாரான வரததேசிக தாதாசார்ய

ஸ்வாமியின் அநுக்கிரஹத்தால் அக்னிஷ்டோமம் என்கிற ஸோமயாகத்தை பகவன் முகோல்லாஸமாக அநுஷ்டித்தார். இந்தஸ்வாமி ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்திகளிலும் கல்பங்கள் தர்ம சாஸ்த்திரங்கள் நாடக மஹாகாவ்யாதிகளிலும் அதிஸூக்ஷ்மதரமான ஸம்பிரதாயார்த்தத்தை எப்போதும் புஸ்தகநிரபேக்ஷமாய் முகஸ்தமாகவே அருளிச் செய்யும் ஸ்ம்ருதிசீலர். இம்மாஹானை பற்றி இப்போது எழுந்தருளி இருக்கும் அழகிய சிங்கர் நடமாடும் ஸரஸ்வதீ பாண்டாகாரம் என்று ஒருஸமயம் அருளிச் செய்யும்படி இருந்தது இந்தஸ்வாமிக்கு அர்ச்சையிலும். ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளிலும் பெரும் ஈடுபாடு. இந்தஸ்வாமி. வேதம்-ச்ரௌதம் இவைகளையும் ஆழ்வார் ஸ்ரீ ஸூக்திகளையும். ஆசார்ய ஸூக்திகளையும் ஐககண்டியம் செய்து உபந்யஸிக்கும் அழகு வேறு எங்கும் காணுத ஒரு அத்புதம். இந்த ஸ்வாமி யக்ஞவரா ஹனின் ஆராதனமா அக்னிஹோத்திரத்தைச் செய்துகொண்டு நாவல்பாக்கத்திலேயே ஸம்பிரதாயப்ரவசனம் செய்துகொண்டு எழுந்தருளி இருக்கிருர்.

தனியன்

ஸ்ரீமத் ஸ்ரீ சைலவம்ச்யாதநககுண நிதே : நீலமேகாக்யஸூரே :
தாதாத்ஸ்வீயாத் அவாப்த்ச்ருதிசிகரயுகம் ஸாங்கவிக்ஞாநபூர்ணம்
ஸ்ரீவாஸாத் தாதஸூரே : நிஜப்ருதஸஹ ஜாதாப்தமந்தரப்ரதானம்
ஸ்ரீமந்நாராயணுர்யம் சதமககுலஜம் பாவயே யாயஜூகம்!!

அய்யா தேவநாத தாதாசார்யஸ்வாமி -

நாவல்பாக்கம் அக்ரஹாரத்தில் குமாரதாத தேசிகன்வம்சத்தில் சடமர்ஷணகோத்ரத்தில் அய்யா-கவிஸார்வபௌம வெங்கடாசார்ய ஸ்வாமிக்குபௌத்ரராய்-அய்யா நரஸிம்ம தாததேசிகனின் திருக்குமாரராய் துர்முகிவருஷம் ஆடிமாதம் திருவாதிரை திருநாளில் அவதரித்து தங்கள் பெரியோரிடமே வேதாத்யயனத்தையும் பண்ணி ஸ்வாமி, ஆராவமுத தாதாசார்ய ஸ்வாமியிடம் தர்கசாஸ்திரம் பூராவும் அதிகரித்து ஸ்ரீநரஸிம்மதாததேசிகன் ஸந்நிதியில் பூர்வோத்தர மீமாம்ஸாதிகளை வாதக்ரந்தங்களுடன் அதிகரித்து மைசூர் ராஜ ஸதஸில் பரீக்ஷை கொடுத்து உத்தமோத்தமமான ஸம்பாவனைகளைப் பெற்றவர்—

இம்மஹான் பல ஸதஸ்களில் வாய்க்யார்த்தம் செய்து பல மஹான்களின் அனுக்ரஹத்தை பெற்றவர். ''நாவிஜித்ய புனர்நிவர்ததே என்கிற ஸங்கல்பம் கொண்டு அதை நடத்திக்காட்டிய மஹான். எந்த க்ரந்த்தங்களையும் யாரா இருந்தாலும் அதிஸூலபமாய் க்ரஹிக்கும்படி போதனம்செய்யும் சைலி வேறு இடத்தில் காண முடியாத பெருமை இவருக்கு உண்டு. புதுக்கோட்டை திருக்குடந்தை முதலான ஸதஸ்களில் பரீக்ஷாதிகாரியாகவும் எழுந்தருளி இருந்தார். சதுஸ்தந்த்ர பாராவார பாரீண கவிஸார்வ பௌம ஸ்ரீவெங்கடா சார்ய ஸ்வாயியான பிதாமஹாரிடம் ஆத்மரக்ஷாஸமர்பணம் செய்துகொண்டவர். வெங்கடா சார்ய ஸ்வாமியின் க்ரந்தங்கள் தஞ்சாவூர் லைப்ரரியில் முத்ரணமாயுள்ளது. இவர் திருவடிகளிலே ஆச்ரிதர்கள் பலர். இம்மஹான் நாவல் பாக்கத்திலேயே ஸம்பிரதாய ப்ரவசனம் செய்துகொண்டு இருக்கிருர். இவர் அருளிய க்ரந்தங்கள்.

(1) ஸூத்ரானுகுண்யஸித்தி நிர்ணயம்
(2) ப்ராசீனபாடபரித்ராணம்
(3) குஸுமாஞ்சலிவ்யாக்யா
(4) புஞ்சலக்ஷணீவ்யாக்யா
(5) சதபூஷணீ கண்டனம்
(6) த்ரவிடாத்ரேயதர்சன கண்டனம். முதலியன

திருவரங்கம் திருமலை தாதாசார்யஸ்வாமி

காஞ்சீபுரத்தில் கோடிகன்யகாதானம் லக்ஷ்மீகுமாரதாததேசிகள் திருவம்சத்தில் தேசிகாசார்ய ஸ்வாமிக்கு திருக்குமாரராய் திருவவதரித்து திருவையாறு மஹாராஜா கலா சாலையில் மீமாம்ஸா முதலான ஸாமாந்ய சாஸ்த்திரங்களை சின்னஸ்வாமி சாஸ்த்ரிகளிடம் அப்யஸித்து வலயபேட்டையில் எழுந்தருளி இருந்த நாவல்பாக்கம் ஸ்ரீநிவாஸதாத தேசிகன் திருவடிவாரத்தில் உபாயானுஷ்டானத்துடன் க்ரந்தசதுஷ்டயத்தையும் ஸேவித்து, வாத க்ரந்தங்களையும் கூடவே ஸேவித்து கொஞ்சகாலம் திருவையாறு கலாசாலையில் மீமாம்ஸா சாஸ்திரத்திற்கு ப்ரதானுத்யாபகராகவும் திருப்பதி ஸம்ஸ்க்ருத கலாசாலையில் ப்ரதானுத்யா பகராகவும் வெகுகாலம் எழுந்தருளி இருந்து அநேகர்களுக்கு ஸாமாந்ய சாஸ்த்திரங் களையும் வேதாந்தார்த்தங்களையும் அனுக்ரஹித்துக் கொண்டும், ப்ருந்தாவனத்திலே கொஞ்ச காலம் ராமாநுஜதர்சனப்ரவசனபரராக எழுந்தருளி இருந்தார். பாரதஸர்காரால் கௌரவ பிருதுகள் அளிக்கபெற்றும் திருப்பதி திவ்யதேசத்தில் பாரதீய ஸம்ஸ்கிருத வித்யாபீடத்தில் எழுந்தருளி இருக்கிறார். இந்தஸ்வாமியின் ஸம்ஸ்கிருத உபந்யாஸமும் ஸம்ஸ்கிருதக்ரந்த ரசனையும் லலிதஸுந்தர மநோஹரமாய் இருப்பது ஸுப்ரஸித்தம்—ஸம்ஸ்கிருத பாஷாக்ஞாந மில்லாதவர்கள்கூட ஸ்வாமி அருளிச் செய்யும் ஸம்ஸ்கிருத உபந்யாஸத்தைகேட்டு ரஸிக் கிறார்கள். அப்படிப்பட்டதோர் லலிதவாக்கு. ஸ்வாமி எப்போதும் வித்யார்த்திகளின் பக்ஷத்திலேயே இருந்து அவர்களை உத்ஸாகப்படுத்தி மேன்மேலும் வித்யாப்யாஸத்திலே ஊக்கமூட்டி அவர்களுடன் சேர்ந்து எல்லாகாரியங்களிலும் பங்குகொண்டும் ஸுலபமூர்த்தி அதேபோல் ஸதஸ்களிலும் ஸ்வாமி பரீக்ஷகராய் இருந்தாலும் பரீக்ஷை கொடுப்பவர்களுக்கு தான் உபகாரமாய் இருந்து ப்ரோத்ஸாஹப்படுத்தி ஸதஸ்ஸுகளில் அடிக்கடி பரீக்ஷை கொடுக்கும்படி ஆசைகாட்டி வித்யாபிவிருத்தி செய்யும் மஹான். இந்த ஸ்வாமி ஸதஸ்ஸில் எழுந்தருளி இருக்கும்போது பரீக்ஷை கொடுப்பவன் கேட்டதற்க்கு பதில் கூறத்தெரியாமல் விழித்து மனக்லேசத்துடன் போகிறான் என்பது இதுவரையில் பார்த்ததில்லை. கேட்டது மில்லை. இம்மாதிரி ஸ்வாமிகள் இருப்பதால்தான் தத்காலரீதிக்கு இரண்டொரு ஸ்வாமி களாவது ஸேவை ஸாதிக்கிறார்கள். இவர் கிரந்தங்கள்:—

(1) விசிஷ்டாத்வைதஸித்தி. (2) ஸம்ப்ரதாயப்ரதீபம். (3) கீதார்த்ததீபம். (4) கடோபநிஷத்டிப்பணி. (5) ஸஜ்ஜநாராதனம். (6) மீமாம்ஸாப்யுதயம். (7) ரூபகபரிசுத்தி:— (8) பாதுகாஸஹஸ்ரவ்யாக்யா. (தமிழ்) (9) அர்த்தஸங்க்ரஹவ்யாக்யா. (10) மீமாம்ஸாபரிபாஷாவ்யாக்யா— சரீரஸித்தி-பாமஹாலங்கார ஸூத்ரவ்ருத்தி உத்யான பத்ரிகா விசிஷ்டாத்வைத கோசம் முதலியன.

தனியன்

ஸ்ரீசைலவம்சயச்ரிதபாரிஜாதம்
ஸ்ரீவாஸதாதார்யக்ருபைகபாத்ரம்
தத்வம்சஜம் பண்டிதராஜ மார்யம்
ஸ்ரீசைல தாதர்யமஹம் பஜாமி''

அபிநவதேசிக உத்தமூர்

தி. வீரராகவாச்சாரியர் ஸ்வாமி

இந்த ஸ்வாமி தை மாதம் ஸ்வாதீ நக்ஷத்ரத்தில் பையம்பாடியில் அவதரித்தார். காவிய நாடகங்களைத் தமது திருத் தகப்பனாராகிய ஸ்ரீ உ. வே. சக்ரவர்த்யாசாரியரிடம் வாசித்த பிறகு மதுராந்தகத்தில் ஸ்ரீமதுபயவே ஸ்வச்சந்தம். ஸ்ரீநிவாஸாசாரியரிடம் தர்க்க பாடங் கேட்டார். பிறகு திருவையாறு கலாசாலையில் சேர்ந்து நியாய மீமாம்ஸா சிரோமணியில் தேறி சிறிது காலம் அங்கு விமர்சகராய் எழுந்தருளியிருந்தார். பிறகு ஸ்ரீமதுபயவே கபிஸ்தலம் தேசிகாசாரிய ஸ்வாமியின் அழைப்பின் பேரில் திருப்பதி ஸ்ரீ வெங்கடேச்வர ஸம்ஸ்ருத கலாசாலையில் நியாயமீமாம்ஸா ப்ராத்யாபகராய் எழுந்தருளியிருந்தார். இதனிடையில் தமது தீர்க்கபந்துவான, ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமி ஸன்னிதியில் உபயவேதாந்த கிரந்தகாலக்ஷேபங்களைச் செய்தருளி அந்த ஸ்வாமியின் திருவடி வாரத்தில் உபாயானுஷ்டானம் செய்தருளினர். பிறகு திருப்பதி கலாசாலையின் முதல்வராக பலகாலமிருந்து பல வித்வத்ரத்னங்களை பாரத தேசம் முழுவதற்குமாக அளித்துதவியருளினர். இன்று நியாய சாஸ்திரத்தில் பிரபலமாய் விளங்கும் பண்டிதர்கள் யாவரும் ஸாக்ஷாத் ஆகவோ பரம்பரையாகவோ இந்த ஸ்வாமியினிடம் பாடம் கேட்டவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஸ்வாமி வித்யார்த்தி தசையிலேயே நியாய சாஸ்த்ரத்தில் உத்க்ரந்தமான நியாயகுஸுமாஞ்ஜலிக்கு விரிவான ஒரு உரையை இட்டருளினர். இதற்கு ''குஸுமாஞ்ஜலி விஸ்தரம்'' என்பதாகப் பெயர். இந்த உரையில் மேன்மையைக் கடாக்ஷித்தருளிய ஸ்ரீமதுபயவே. மஹா வித்வான் ஸ்ரீபெரும்பூதூர் ஆஸூரி ராமானுஜாசார்ய ஸ்வாமி **''தேவாம்சமில்லாதவரால் இந்த உரை எழுதியிருக்க முடியாது.''** என்று ஸாதித்தாயிற்று. மேலும் இவர் அருளிச் செய்த கிரந்தங்கள் வருமாறு:—

(1) ''நியாய பாஷ்ய ப்ரதீபம்'' அச்சாகவில்லை. (2) ''வைசேஷிக ரஸாயனம்'' (இருமுறை அச்சாகியுள்ளது. (3) ''அவயவ க்ரோட பத்ரம்'' (4) ''நியாய பரிசுத்தி வியாக்யானம்'' ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் அருளிச் செய்த நியாயபரிசுத்திக்கு உரை (5) ''கிருஷ்ணம் பட்டீய க்ரோடபத்ரம்'' (6) ''தர்கஸங்க்ரஹ வ்யாக்யானம்'' முதலியன.

(7) ''ஸ்ரீவேங்கடேச கல்யாண சரிதம்'' (காவியம்) (8) ''ஸ்ரீவேங்கடேச ஸ்தோத்ரம்'' (9) ''பத்மாவதீ ஸ்தோத்ரம்'' (10) ''ஸ்ரீஜானகீ சதகம்'' முதலிய ஸ்தோத்ரங்கள். (11) ''பரமார்த்தப்ரகாசிகை'' (12) ''பரமார்த்த பூஷணம்'' (13) ''நயத்யுமணி பூமிகை உரை'' (14) ஸ்ரீஆழ்வார்களின் நாலாயிரம் பாசுரங்களுக்கும் ''ப்ரபந்த ரக்ஷை'' என்கிற உரை. (15) உபநிஷத் பாஷ்யங்கள் யாவற்றிற்கும் உரையாகிய ''பரிஷ்காரம்'' (16) ''வேதாந்த புஷ்பாஞ்ஜலி'' என்கிற உபநிஷதர்த்த ஸங்கிரஹமான (ஸ்ரக்தராவ்ருத்தத்தில்) விரிவான ஸ்தோத்ரம் (17) ''உபநிஷத் ஸாரம்'' (18) ''வேதாந்த கரிகாவளி'' (19) ''வசன ஹ்ருத்ய விமர்சம்'' (20) ஈசாவாஸ்யோபநிஷதாசாரிய பாஷ்ய தாத்பரியம்'' (21) ''நியாய ப்ரகாசவ்யாக்யானம்'' (23) ''ப்ரபன்ன பாரிஜாத வ்யாக்யானம்'' (23) நிக்ஷேப ரக்ஷைக்கு வியாக்யானம்'' (24) ''யாதவாப்யுதய டிப்பணம்'' (24)''தமிழ் மொழி பெயர்ப்பு'' ''வைகானஸ விஜயம்'' (25) (26) ''ஸர்வார்தஸித்தி டிப்பணம்'' (27) வேதாந்த தீபத்தின் மொழிபெயர்பு'' (28) ஸ்ரீஸஹஸ்ர நாம நிர்வசனத்தின் விளக்க உரை'' (29) ''சரணாகதி கத்ய விவரணம்'' (30) ''நியாஸாதிகார ஸர்வஸ்வம்'' (31) ஸ்ரீச்ருதப்ரகாசிகா டிப்பணம்'' (32) ஸ்ரீபாஷ்யவ்யாக்யானம் தர்பணம்'' முதலியன.

இன்னும் இது தவிர ஸ்ரீபாவப்ரகாசிகை முதலிய ஸகல பூர்வாசாரிய கிரந்தங்களையும் முத்ரணம் செய்து பரிஷ்கரித்து உலகத்தாருக்கு அருளியுள்ளார். ''ஸ்ரீஸித்தித்ர வியாக்யானம்'' அதிபால்யத்தில் அருளிச் செய்தது முதலியனவும் இங்கு நினைவுறத்தக்கது. இன்னும் பல கிரந்தங்கள் அருளிச் செய்திருக்கிறார். அவை அச்சுக்கு வரவில்லை. அநேகமாய் எல்லா பூர்வாசாரிய கிரந்தங்களுக்கும் ''ஸங்க்ஷிப்தம் விஸ்த்ருதம்வா'' என்கிற கணக்கில் டிப்பணம் முதலியன அருளிச் செய்துள்ளார். தற்போது ஸ்ரீஸ்வாமி தேசிகனது ஸகல க்ரந்தங்களுக்கும் உரை அருளிச் செய்துகொண்டு அதிவிலக்ஷணராய் சென்னை மாம்பலம் நாதமுனி வீதியில் நாதோபக்ஞமான நமது ஸித்தாந்தத்தை ப்ரவசனம் செய்துக்கொண்டு எழுந்தருளியிருக்கும் இந்த ஸ்வாமி வெகு நாட்கள் எழுந்தருளியிருந்து நமது தேசிக தர்சனத்துக்கு இன்னும் இதோ அதிகமான சாஸ்த்ரீய கைங்கர்யங்களைச் செய்து கொண்டிருக்க வேண்டி பேரருளாளன் பெருந்தேவித் தாயாரை ப்ரார்த்திக்கிறோம்.

சேட்டலூர். ஸ்ரீவத்ஸாங்காசாரியார்

ஸ்ரீமதித்யாதி - ஈச்சம்பாடி மதுராந்தகம்

வீரராகவாசாரியார் ஸ்வாமி

எம்பெருமானாருக்குத் தாபநீயோபநிடதம் ந்ருஸிம்ஹ மந்த்ர மிவற்றை உபதேசித்து, ஆசார்ய பதம் பெற்ற ஈசாண்டானும் அவர் திருக்குமாரர்களான ஈச்சம்பாடி யாச்சான், ஈச்சம்பாடி ஜீயரும், ப்ரம்ஹதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் முதலிய ஆசார்யர்களும் அவதாரம் செய்துள்ள ஸிம்ஹாஸநாதிபதி வம்சத்திலே, வாஸிஷ்ட்ட கௌண்டிந்ய கோத்திரத்திலே, ஏழாட்காலும் பழிப்பிலோம் என்று புகழப்படும் திருமலை, ஈச்சம்பாடி திருவம்சத்திலே, ச்ரோத்ரிய குலத்திலே விகாரி வருஷம் மாசி மாதம் அவிட்ட நக்ஷத்திரத்தில் ஸ்வாமி அவதரித்தார்.

ஸ்ரீமதுராந்தகத்தில் குலக்ரமாகதமான ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் ஸந்நிதி அக்ர தீர்த்தம் முதலிய கைங்கர்யத்தில் ஈடுபட்டவர்கள் பெரியோர். ஆதலால் வேதாத்யயனம், திவ்யப்ரபந்தாத்யயனம் சாஸ்த்ராப்யாஸம் ஆகியவற்றில் விசேஷ அபிருசியை அடைந்து தேர்ச்சியையும் பெற்றார். ஸ்வாமிக்கு உள்ளூரிலேயே அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. ஸ்வச்சந்தம் ஸ்வாமி யென்று ப்ரஸித்த நையாயிக ஸ்வாமியினிடம் க்ரோடபத்ரங்களுடன் ப்ராமாண்ய வாதம் வரை அதிகரித்தார்.

புதுக்கோட்டை, திருவனந்தபுரம் முதலிய இடங்களில் உள்ள சபைகளில் முதல் பர்வாவிலேயே தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

ஸ்ரீமத் கருடபுரம் ஸ்வாமி என்னும் மஹாசார்யர் ஸகாசத்தில் உபயவேதாந்த க்ரந்த காலக்ஷேபத்துடன் பரஸமர்ப்பணத்தையும் அனுஷ்டித்தருளினார். திருவையாறு ஸம்ஸ்க்ருத காலேஜில் ந்யாயப்ரதாநாத்யாபக பதத்திலிருந்து ப்ரவசனம் செய்துவந்தார். தற்காலம் ஸ்ரீரங்கத்தில் உபயவேதாந்தக்ரந்த காலக்ஷேபம் நடைபெற்று வருகிறது.

ஸ்வாமிக்கு குணக்ருதமான பிருதங்கள் பல. ந்யாய விசிஷ்டாத்வைத சிரோமணி - தர்கரத்னம் (அயோத்யா ஸபா), ந்யாயவேதாந்த கேஸரீ திருப்பதி ஸபா), தேசிக தர்சன ரத்னாகரம் (மதுரை ஸபா).

ஸ்வாமி ஸாதித்த க்ரந்தங்கள் :

(1) ந்யாய பரிசுத்தி விவரணம், (2) வ்யாக்யாத்ரய பரித்ராணம், (3) கீதா வ்யாக்யானம், (4) ஜிதந்தா வ்யாக்யானம், (5) ஸம்ப்ரதாய ஸுதா, (6) ரக்ஷா விமர்சம், (7) பூர்வாசார்ய தர்சனம், (8) திருமடல் விவரணம், (9) ஆயிரம் பக்கங்களில் இரு மொழிகளிலும் வ்யாஸங்கள், (10) கவிதாரூபமாயும் ஸம்ப்ரதாய விஷயங்கள் (அச்சில் வரவில்லை) முதலியன.

ஸ்வாமியின் திவ்யப்ரபந்த பகவத் விஷய ரஸானுபவமும் ஸதஸ்ஸுகளில் கலந்து கொண்டு விஷயங்களை நிரூபணம் பண்ணி சாதிப்பதும் அலாதியானது.



ஸ்ரீஉ.வே. மதுராந்தகம் வீரராகவாச்சாரியர் ஸ்வாமி



மஹாவித்வான் அபிநவ தேசிக
உத்தமூர் தி. வீரராகவாச்சாரியார் ஸ்வாமி.

பக்தி பூஷணம் திண்டுக்கல்

ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி

ஸம்பிரதாயப்பற்றும் திவ்வியதேச ஊற்றமும், அர்ச்சானுபவப்பெருக்கமும் ஸம்பிரதாய ராஸிக்யமும் உருவெடுத்ததோ என்று நேற்றும் இன்றும் உள்ளவர்களால் எற்றைக்குமாகப் போற்றப்படுமவர் இந்தஸ்வாமி. அருளாளன் பால் மாளாத காதல் கொண்ட மாபெரும் சம்பிர தாய்நிதி. ஸ்ரீமதுபயவே, ஐயா ஸ்வாமி என்றழைக்கப்பட்ட கிருஷ்ணதாதாசாரியர் ஸ்வாமி யின் அருளுக்குத் தனிஇலக்காய்த் திகழ்ந்து அல்லும் பகலும் அருளிச்செயல் அமுதக் கடலில் மூழ்கி ஆசாரிய ஸார்வ பௌமனன தேசிகனின் ஸ்ரீ ஸூக்தி பரிமளத்தை அனைவரும் அனுபவிக்கும்படி செய்து தனிப்பெரும் புலமையைப்பெற்று மஹான்கள் எல்லாம் வியந்து ரஸித்துப் போற்றியுகக்கும் வகையைத் தம்மில் கொண்டவர். ஸ்ரீ வி. வியின் வாரிசு என்ருல் மிகையாகாது. இந்த ஸ்வாமியினுல் அகக்கண் திறக்கப்பெற்றவர் பல்லாயிரவர். ஸ்வாமி எழுதிய முன்னுரைகள் எண்ணிலடங்கா. ஸ்வாமியினுடைய திருச்சின்னமாலை வ்யாக்யானம், தனிப்புலமையைக் காட்டித்தரும். தயாசதகம் பாதுகாஸஹஸ்ரம்-கோதா ஸ்துதி முதலிய நூல்களுக்கு ஆங்கிலத்தில் உரை விளக்கம் அளித்து வருவது தனிச் சிறப்புடையது.

இன்று சம்பிரதாயத்தைச் சேர்ந்த லௌகிகவைதிக உபயகோஷ்டியிலும் ஊக்கத்தை அளித்துவரும் ஒரு நிதி என்ருல் இதில் எழுத்தும் பிழையில்லை.

ஆங்காங்கு தேசிகன் உத்ஸவத்தை ஊக்குவிக்கும் ஓர் உயர்த்த தேசிக விபூதி என்ருல் மிகையாகாது.

ஸேவா - ஸ்ரீநிவாஸராகவாச்சாரியார் ஸ்வாமி

இவர் சில தேசிக க்ரந்தங்களை ஆஸ்திகர்களின் உதவிகொண்டு வெளி யிட்டு வந்தார். மத்தியக் குழுவினருக்குப் பலவகையிலும் இந்நூற்ருண்டு விழாவில் கலந்து கொண்டு தொண்டு செய்து வருகிருர்.

ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் (புதுக்கோட்டை)

A. ஸ்ரீநிவாஸராகவாச்சாரியார் ஸ்வாமி M.A.

திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணுசாரியர் ஸ்வாமியினுடைய திருவடிகளில் பணிந்து அந்த ஸ்வாமியினுடைய பரிபூர்ண கிருபைக்குப் பாத்திரரான சருக்கை கிராமத்தைச் சேர்ந்த இந்த ஸ்வாமி புதுக்கோட்டையில் பல ஆண்டுகள் ஆசிரியராக இருந்துவந்தபடியால் **"புதுக்கோட்டை ஸ்ரீநிவாஸராகவன்"** என்றே இந்தஸ்வாமியை பலரும் அறிவார்கள்.

ஸ்வாமி தேசிகனுடைய சில்லரை ரகஸ்யங்களில் அதிமாத்திரம் பரிசயம் செய்து 30 ஆண்டுகட்கு முன்பே அம்ருதாஸ்வாதிநி ரகஸ்யங்களையும் ஸ்ரீ ஹஸ்திகிரி மகாத்மியம் பரமபத சோபானம், ஆகியவைகளையும் நல்ல முறையில் பதிப்பித்தார். ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா என்னும் மாதப்பத்திரிகை சில வருடங்கள் ஹிந்தி பாஷையில் வெளிவந்தபோது அம்ருதாஸ்வாதிநி ரகஸ்யங்களை ஹிந்தியில் மொழி பெயர்த்து அதில் வெளியிட்டார். இப்பொழுது ஸ்ரீரங்கநாத பாதுகா பத்திரிகையில் அந்த ரகஸ்யங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வருகிறுர். ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் சென்ற இரண்டு ஆண்டுகளாக விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை சுருக்கமாகவும், தெளிவாகவும் ஆங்கிலத்தில் தந்து பலபேருக்கு உபகாரம் செய்து வருகிறுர். சம்ஸ்கிருதம், தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் இந்த நான்கு பாஷைகளிலும் வல்லுநர் இந்த ஸ்வாமி. சென்ற பல ஆண்டுகளாக ஆங்கிலம் படித்து உத்தியோகத்தில் இருந்துவருபவர்களுக்கும், பிறருக்கும் காலக்ஷேபம் சாதித்துக்கொண்டு நம் சித்தாந்தத்திற்கு பேருதவி புரிந்து வருகிறுர்.

இந்த ஸ்வாமியின் இதரப் பிரசுரங்கள் பின் வருபவை :—

(1) நஞ்ஜீயர் அருளிச்செய்த ஸ்ரீஸூக்தபாஷ்யம்
அத்துடன் ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஸ்தோத்ரங்கள் ஆங்கில உரையுடன்.

(2) நியாய கலாப ஸங்க்ரஹம்

(3) ஸ்ரீ கபிஸ்தலம்ஸ்வாமி அருளிய அதிகரணரத்னமாலா

ஒப்பிலியப்பன் ஸந்நிதி ஸ்ரீ. உ.ப. வித்வான்

வங்கீபுரம் - நவநீதம்

ஸ்ரீராமதேசிகாசார்யர் ஸ்வாமி

ஸ்ரீ வைஷ்ணவ வைதிக லௌகிக ஸமூஹத்தில் இந்த ஸ்வாமியை அறியாதவர் இருக்கமாட்டார் என்னலாம். ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயத்துக்கு இந்த ஸ்வாமி செய்துவரும் கைங்கர்யங்கள் அளவிட முடியாதவை. நவநீதம் ஸ்ரீஸ்வாமி என்று ஜகத் விக்யாதராய் எழுந்தருளியிருந்த மஹா வித்வானுக்கு ஜ்யேஷ்ட புத்ரராய் அவதரித்த இந்த ஸ்வாமி, பால்யத்திலேயே தர்க்க சிரோமணி, தமிழ் வித்வான் பரீக்ஷைகளில் தேறித் தம் திருத்தகப்பனர் திருவடிகளிலேயே ஆச்ரயித்து உபயவேதாந்தங்களையும் காலக்ஷேபம் செய்து மிகுந்த ஞானத்தைப் பெற்றவர். தமிழிலும் விசேஷமான தேர்ச்சி பெற்றவரா தலின் வேதாந்த க்ரந்தங்களை எளிய தமிழில் விவரித்து ப்ரகாசம் செய்து எல்லோரும் அநுபவிக்கும்படி மஹோபகாரம் செய்து வருபவர். சிஷ்யர்களுக்கு ஸம்ப்ரதாய க்ரந்த ப்ரவசநம் செய்வதிலும் ஸித்தாந்த க்ரந்தங்களைத் தமிழில் விவரித்து ப்ரகாசநம் செய்வதிலும், திருவிண்ணகரப்பன் கைங்கர்யத்திலுமே தம் வாழ்நாளைச் செலவிட்டு வருபவர். இந்த ஸ்வாமி, ஸ்ரீதேசிக ப்ரபந்தத்துக்கு ஸுலபமான வ்யாக்யானம், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்துக்குத் தமிழில் விவரணம், ஸ்ரீ தேசிக ஸ்தோத்ரங்களுக்கு அத்புதமான தமிழ் வ்யாக்யானம், ஸ்ரீஹம்ஸ ஸந்தேசத்துக்கு ரஸமான தமிழ் உரை முதலிய க்ரந்தங்களை எழுதி வெளியிட்டு உலகத்துக்குப் பேருதவி செய்தவர். இந்த ஸ்வாமியின் ஞானத்திலும் ஸௌலப்யத்திலும் ப்ரவசந சக்தியிலும் ஈடுபட்டுப் பலர் ஆச்ரயிக்கிறார்கள். த்ரைவர்ணிகரல்லாத பாகவதர்களும் இந்த ஸ்வாமியிடம் ஈடுபட்டு ஆச்ரயித்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆசார அநுஷ்டானதிகளிலும் தம் திருத்தகப்பனரும் பரமாசார்யருமான ஸ்ரீநவநீதம் ஸ்வாமியைப் பின்பற்றி நடந்து கொண்டு, ஸம்ப்ரதாயத்துக்குப் பலவகையிலும் தொண்டு செய்து கொண்டு விளங்குகின்றார்.

வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீராம தேசீகாச்சாரியார்
ஸ்வாமி அல்லும் பகலும் தேசிக
ஸ்ரீ ஸூக்திப்ரசாரப்பரசுரபரர்
ஒப்பிலியப்பன் ஸந்நிதி



வித்வான். ஆத்மகூர் தீக்ஷாச்சார்ய ஸ்வாமி
மைசூர்

ஸ்ரீ தேசிக நூல்கள்

ஸ்வாமி ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் சிறந்த வைபவ முள்ளதோர் விபவ ஸம்வத்ஸரத்திலே அவதரித்தார். எம்பெருமான், பிராட்டி, எம்பெருமானுர் ஆகியோரின் வைபவத்தை நிலை நிறுத்திய வைபவம் இவருக்கே அஸாதாரணமாக ஆயிற்று.

ஸ்வாமியின் வைபவத்தை இன்று நாம் அறிய அமைந்தவை ஸ்வாமி ஸாதித்தருளிய க்ரந்தங்களே யாம். அவை ஒன்று இரண்டு என்றில்லாமல் நூருகவும் நூற்றுக்கணக்கிலும் தோன்றியவை. அவற்றின் பெருமைகளை அறிந்த பெரியோர் ஓரொன்றுதானே யமையாதோ! என்று வியந்துப் போந்தனர்.

ஸ்வாமியின் நூல்களின் சீர்மையை அறிய எத்தகைய ஆழ்ந்த புலமை வேண்டும் என்பதை புல்வர் குழாமன்றே துணிந்துரைக்க வல்லது. தேசிகன், இயற்றிய நூல்கள் பல நிலைகளில் பல பாஷைகளில் உள்ளன. நூல்கள் அனைத்தும் கிடைப்பதில்லை. நம்மனோர் கிடைத்தவற்றைக் குறைவறக் காத்தனர்.

அந்நூல்களில் சொலப்படும் ஸாராம்சங்கள் சுருக்கமாக இவ் வெளியீட்டில் அனைவர்க்கும் விளங்கும் பாணியில் வரையப்படுகின்றன.

ஒரு நூல், **ஒரு ச்லோகம்** ஒரு வாக்கியம், ஒரு பதம் ஏன் ஒரு எழுத்தும் தன்னிடம் கொண்டுள்ள பெருமையைக் காட்டித் தந்தாலன்றி நம் மதிகொண்டு எங்ஙனே அறிய இயலும்! ஆயினும் பல்வேறு நிலையில் பல்வேறு மொழிகளில் போதித்த அத்தனை நூல்களின் ஸாராம்சங்கள் வரையப்படுகின்றன.

இங்ஙனே தேசிகனைப் பற்றிய நூல்களும் எண்ணற்றவை. அவற்றுள் கிடைத்தவைகட்கு மட்டும் சிறு குறிப்பு அல்லது சாரங்கள் இம் முறையே குறிக்கப் பெறுகின்றன, இதுவுமோர் தொண்டாமே: வாசகர்களுக்கு மேன்மேலும் அந் நூல்களைப் படிக்க ஏதுவும் ஆகுமே!

தேசிகனின் க்ரந்தங்கள் தோன்றின க்ரமம் ஒன்று. ஆனல் நாம் இங்கு குறிக்கும் முறை வேறொன்று. எவை முந்தியவை எவை பிந்தியவை என்பதை ஸ்ரீமது பயவே, மஹா மஹோபாத்யாய, அயிந்தை சேட்லூர், நரஸிம்ஹாச்சாரியார் தக்க ஆதாரங்களுடன் காட்டித் தந்துள்ளார். மற்றும் பலரும் ஆங்காங்கு எடுத்துரைத்துள்ளனர்.

இங்கு தொகுதிவாரியாக நூல்களைப் பகுத்துக் கொண்டு அவற்றின் ஸாரங்களைச் சொல்லுவோம். இதுவே இப்பகுதியின் முன்னுரையாம்.

1. ஹயக்ரீவ ஸ்தோத்ரம்

ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த ஸ்தோத்ரங்களில் பல காரணங்களைக் கொண்டு முதன் முதலாக இந்த ஸ்தோத்திரம் அநுஸந்திக்கப்படுகிறது. ஸ்வாமி அயிந்தையில் ஔஷதாத்ரியில் வேத ஸ்வரூபனான கருடனை ஸாக்ஷாத்கரித்து, அவர் தன்னால் உபதேசிக்கப் பெற்ற ஹயக்ரீவ மந்திரத்தை ஆவ்ருத்தி செய்து, அதனால் ஹயக்ரீவனையும் ஸாக்ஷாத்கரித்து, அவருடைய அநுக்ரஹத்தினால் பெருகிய ஆச்சரியமான சக்தியை அடைந்து விளங்குகிறார் என்பதுஸ்வாமியின் சரிதம்.

ஸ்வாமி, வேதத்தைக் காக்க பரிமுகமாய் வந்த பரமனிடம் மாளாத அன்பு கொண்டு ஆங்காங்கும், தனியாகும் அநுஸந்திக்கப் பெற்ற ச்லோகங்கள் வியப்பையளிப்பவை. அவற்றுள் இந்த ஸ்தோத்திரம் 33 ச்லோகங்கள் அடங்கியது. பல ச்ருதியான ச்லோகத்தைத் தனித்து வைத்தால் முப்பத்திரண்டு ச்லோகங்கள் ஆம். ஸர்வ வித்யைகளுக்கும் ஆதாரமானவர் என்று கூறும் இடத்தில் 32 விதமான ப்ரம்ஹ வித்யைகளைக் குறிப்பதெற்கென ச்லோகங்களின் எண்ணிக்கை இருக்கக் கூடும். எண்ணிக்கைகளில் தனித்த பொருள் உண்டு.

க்ஞானத்தை அடைவிப்பவனாதலால் க்ஞான சப்தத்தைக் கொண்டே இத்துதி ஆரம்பமாகிறது. உபாஸ்மஹே என்பதில் யதிவரனார் முதலாக தமக்கு ஹயக்ரீவ உபாஸனம் கிடைத்தமையைக் காட்டுகிறது.

இந்த ச்லோகங்களில் அழகான பற்பல ஸித்தாந்தங்களை ஸ்வாமி உபதேசிக்கின்றார். வேதோபதேசம் பண்ணினவனுக்குத் திருமேனியமைந்த பெருமையைக் காட்டுகின்றார். நீலமேக ச்யாமளனும் ஸ்ப்படிகநிறம் பெற்ற பெருமையைக் கூறுவதும் உற்று நோக்கத் தக்கது. அவனுடைய கனைப்பின் பெருமை, அவன் திருமேனி ஸந்த்யையாகின்றது என்பது போன்றவை உற்று நோக்கி மகிழத் தக்கவை.

நமக்கெல்லாம் பரிமுகனின் உருவத்தைக் கண்முன்னே நிறுத்த் த்யான ச்லோகம் அமைத்த அழகே அழகு. முற்றும் சேவிக்கப் பெரு விடினும், முதல் ச்லோகத்தையும் 32-வது ச்லோகத்தையுமாவது சேவித்தல் நன்ரும்.

சது தூஷணியிலும் ஹயக்ரீவன் விஷயமான ச்லோகங்கள் இடம் பெற்றன. அவற்றையும் சேர்த்து சில பெரியோர் அனுஸந்திப்ப துண்டு. ஸ்வாமி இந்த ஸ்தோத்திரத்தைப் **படியுங்கோள்** என்று நியமிக்கிருர்.

ஐந்தாவது ச்லோகத்தில் சரணுகதி செய்து, அதனுல் வசீக்ருதனுன பரிமுகனே முன்னிலையில் விளித்துப் பேசுகிருர். தக்ஷிணு மூர்த்தி, ஸரஸ்வதி, வ்யாஸர் முதலியோர் ஹயக்ரீவனிடமிருந்து பெற்ற சிறு சிறு திறமை கொண்டு விளங்குகின்றனர் என்பது குறிப்பில் கொள்ளத்தக்கது. ஹயக்ரீவனே த்யானம் செய்பவர்களுக்கு வாக்கு கள் தாம் முன்னே தாம் முன்னே யென்று முந்திப் பணி செய்யும் என்பதும், அமுதத்தைப் பொழியும் ஸ்ரஸ்வதியை (வாக்கை) பரிமுக னின் கடாக்ஷங்கள் செய்விக்கின்றன என்பதும், கவனிக்க வேண்டி யவை. அப்பரிமுகனுக்கு பரிந்து ஸ்வாமி தான் சிங்கமாயிருந்தும், தனது நாவின் நுனிப் பாகத்தைச் சிங்காதனமாக ஸமர்ப்பிப்பது என்னே! ஸமாஜங்களில் தான் பொலிவு பெறவேண்டும் என வேண்டு வதையும் நினைக்க.

இதற்குப் பல முன்னோர்கள் வ்யாக்யானம் செய்திருக்கின்றனர். இந்த ஸ்தோத்திரத்தால் அடையும் பயன் வாக்கு - அர்த்தம் இவை களின் ஸித்தி, கவிதைநயம், பக்தியின் ப்ரகர்ஷம். ஸித்தாந்தநுணுக் கம் ஸ்வாமி செய்யும் பரிஷ்காரம் - முதலியவை விரிவில் காண்க.

ஸ்தோத்திரப்பகுதி

2. கருட பஞ்சாசத்

அப்புள்ளாரிடம் (ஸாக்ஷாத் கருடாம்சர்) கருட மந்திரத்தை ஸ்வாமி பெற்ருர். அதை அயிந்தையில் ஆவ்ருத்தி செய்தார். அதனுல் கருத்மானே ஸாக்ஷாத்கரித்தார். வேதாத்மாவான கருடனின் பெருமையை இந்த ஸ்தோத்திரத்தில் விளக்கியருளுகிருர்.

இந்த ஸ்தோத்திரத்தில் ஐந்து வர்ணகங்கள் உள்ளன. ஒவ்வொன்றையும் வர்ணிப்பது என்பது நாவீறு உடையவனுக்கே இயலாததாம்.

(1) பரவ்யூஹ வர்ணகம்

முதல் ச்லோகத்தில் கருடமந்த்ரஸ்வரூபம் எத்தகையது என்பதும், 2-ல் காருத்மதீ ப்ரம்ஹவித்யா ப்ராசீ என்பதும், 3-ல் கருத்மான் திருமேனி எவ்விதம் வேதஸ்வரூபமாயுள்ளது என்பதும், 4-ல் யச்சப்த ப்ரயோக ஸ்வாரஸ்யமும், 5-ல் எண்ணிக்கையின் அமைப்பு, 6-ல் உபநிஷத்தில் கூறப்பட்டமை, 7-ல் ஆபத்தில் காப்பாற்ற வேண்டுதல், 8-ல் எதிரில் தோன்ற வேண்டுதல் என்பன கூறப்பட்டதாம்.

(2) அம்ருதாஹரண வர்ணகம்

இதில் 17 ச்லோகங்கள். ஆஹர்த்தாரம் ஸுதாயா: என்றாரம்பித்து அம்ருதாஹரண கோலாஹலத்தைக் கண் முன்னே காட்டும் ச்லோகங்கள். கருத்மானுடைய அவதாரம் தொடக்கமாக அமுதம் கொண்டு வரும் வரையில் உள்ள வ்ருத்தாந்தம் காவியமாகவும் ஸ்தோத்ரமாகவும் சாஸ்திரமாகவும் நிரூபிக்கப்பட்டிருப்பதின் அழகு எங்குமே காண இயலாது. இவ்வர்ணகம் ஒன்று கொண்டே கவிதார்கிக சிங்கமெனவமையும்.

(3) நாகதமந வர்ணகம்

இதில் பத்து ச்லோகங்கள். பாம்புகளை அடக்கிய பெருமை பேசப்படுகிறது. பாம்புகளை மட்டுமில்லாமல் புலவர்களின்-கவிகளின் கொட்டத்தையும் அடக்கும் ச்லோகங்கள். 30-33 ச்லோகங்கள் வியப்பை அளிப்பவை. கலயது குசலம் ந: என்றும் ஸ்வாமி ப்ரார்த்திக்கிறார். இம்மாதிரி பதப்ரயோகம் மெய் சிலிர்க்கச் செய்யும்.

(4) பரிஷ்கார வர்ணகம்

இதில் பத்து ச்லோகங்கள். கருடனுடைய திருமேனியில் ஆபரணமாக ஸர்பங்கள் அமைந்தன என்று நிரூபிக்கிறார். இதில் எத்தனை வகையான பாம்புகள் உண்டோ அத்தனை நாமங்களையும் சாதிக்கின்றார். நமது கர்ம பந்தங்களனைத்தையும் போக்கடிக்கட்டும் என்கிறார்.

(5) அத்புத வர்ணகம்

இதில் ஏழு ச்லோகங்கள். இதில் ஸ்ரீமத் ராமாயண ப்ரஸங்கத்தையும் க்ருஷ்ணவதார ப்ரஸங்கத்தையும் நிரூபித்தருளுகிறார்.

இவ்வாறு ''விநதா நந்தனனை மகிழ்விப்பதற்காக ஐம்பத்தியொரு ச்லோகத்தை விண்ணப்பித்தேன். அவனைத் துதிக்கும்படி அவனே நியமித்தான்'' என்றும் கூறுகிறார். இதை இயற்றியது கவிதார்கிக சிங்கம் என்றும் கூறுகிறார். இதை ஸேவிப்பவர்க்கு விஷ நோய்கள், பேய் முதலியதால் உண்டான தோஷங்கள் தொலைவது திண்ணம் என்றும் கூறி கருடனைப் போல் மஹாபலிஷ்டர்களாகவும் மஹா தேஜஸ்விகளாகவும், மஹா ஸாஹஸம் உள்ளவர்களாகவும் ஆவர் என்றால் மீதியைப் பற்றி நீங்கள் சிந்திப்பானேன் என்றும் ஸ்வாமியே ஸாதிப்பது வியக்கச் செய்கின்றது. இந்த ஸ்தோத்திரத்தில் எண்ணிக்கையைத் தாமே சாதித்ததில் உள்ள ரஹஸ்யத்தைக் கேட்டு அறிக.

ஸ்தோத்திரப்பகுதி

3. அச்யுத சதகம்

அயிந்தையில் அமர்ந்த நாதனுக்கு ஸமர்ப்பித்த ஸ்தோத்திரம். இது ப்ராக்ருத பாஷையில் அமைந்தது. 101 ச்லோகங்கள் கம்பீரமான சைலியில் அருளிச் செய்யப்படுகின்றன. நாயகியாக தேசிகன் ஈடு பட்டதால் பெண்களுக்குரியதான ப்ராக்ருத பாஷையில் இந்த ஸ்தோத்திரம் அமைந்தது. ஸ்வாமியின் திருவுள்ளத்தை அறிய யாரே வல்லார்!

ஸம்ஸ்க்ருதம் அறிந்தவர்கள் அனைவர்க்கும் ப்ராக்ருதம் பூரணமாகத் தெரியும் என்பதற்கில்லை. ப்ராக்ருதம் தெரிந்தவர்களுக்கு ஸம்ஸ்க்ருதம் தெரிந்தேயாகவேண்டும் என்பதுமில்லை. இரண்டிலும் திறமை யென்பதே தனிப் பெருமையாகும். ஸ்வாமி ப்ராக்ருத பாஷையில் நமது ஸித்தாந்தார்த்தங்களை விளக்கத் திருவுள்ளங் கொண்டார். அச்யுத சதகமாக அத்திருவுள்ளம் மலர்ந்தது.

ணமஹ-(நமத) என்று தொடங்கும் இது ஸமக்க குணம். (ஸமக்ர குணம்) என்பதோடு இணைந்து ஒரு வாக்கியமாகிறது. அச்சுதன் ஸமக்ர குணங்களையுடையவன், அவ்வாறே அச்சுத சதகமும் ஆம். இங்கு அச்சுத சதகத்தில் அமைந்த குணங்களின் புஷ்டி யாது என்பதை அறிய வேண்டும். தொடக்கத்தில் மலினம் பாஷிதம், என்றும், பாலிசா மம ஸ்துதி: என்றும் பேசினர். உடனே ஆசார்யர்களின் ஜிஹ்வையாகிற ஸிம்ஹா ஸனத்தில் வீற்றிருந்து எமது பேதமையை அழிக்கின்றாய் என்கிறார். அதற்கு மேல் ஸ்ரீபாஷ்ய ஸித்தமான ப்ரமேயங்களனைத்தையும் தேசிகனால் அருளிச் செய்யப்பட்டன. ஸ்ரீ பாஷ்யத்தில் சிரபரிசயம் பண்ணினவர்கள் அல்லது ஸ்ரீபாஷ்ய ப்ரமேயத்தை அறிய ஆவல் உள்ளவர்கள் ஸேவித்தால் இதன் பெருமை விளங்கும்.

நாயிகா பாவத்துக்கேற்ப ரஹசியமாக நாதனோடு பேசும் முறையும் நிகரற்றது. நீ உன் திருவுள்ளத்தில் எனக்கென்று செய்ய நினைத்துள்ளதை செய் (80) என்று கேட்பது மிகவும் அழகு. அவதார விஹார ஸஹசரத்வ தந்யம் என்றவிடத்தும் நாயிகையின் நிலையைக் காணலாம். இறுதியாக **பவிஷ்யத் யௌவநவதூரம் வர இவ மாம் லபஸ்வ** என்று சாதிப்பது பொன்னே போன்றது.

சாரீரக சாத்திர ப்ரமேயங்களை அறிய இதனிலும் இந்த ப்ரக்ருதி மண்டலத்தில் வேறு ஒன்று கிடைக்கப் போமோ!

"நீ தான் ஸர்வலோக சரண்யன். உனக்கு நிகரானவர்களோ, அதிக பெருமையுடையவர்களோ இல்லை. இவ்வாறு அறிவதொன்று தானே க்ஞாநஸாரம்" என்றும் காட்டியருளுகிறார். உபநிஷத்தில் உள்ள சொற்களும், ஸூத்திரங்களில் உள்ள சொற்களும் அவ்வவ்வாறே கையாளப்படுவது மிகவும் அழகு. "கௌட வைதர்ப்ப பாஞ்சால மாலாகாராம் ஸரஸ்வதீம். யஸ்ய நித்யம் ப்ரசம்ஸந்தி" என்று தேசிகன் ஸாதித்ததை நினைந்து இந்த அச்சுத சதகத்தை மனத்தினுள் நிறுத்திக் கொள்வது பெரும் பேறும்.

இங்கு பல இடங்களில், பாலபாவம் பேசப்படுகிறது. ஆனால் கடைசியில் இருக்கும் ச்லோகத்தினால் இது பிறகு அயிந்தையில் அனுஸந்திக்கப்பட்டது என்று ஸ்ரீ உபவே, சேட்லூர் ஸ்வாமி திருவுள்ளங் கொண்டுள்ளார். பல ரஸங்கள் வியாக்யானங்களில் கண்டு கொள்வது.

4. தேவநாயக பஞ்சாசத்

தேவநாதன் விஷயமாக அமைந்த 53 ச்லோகங்கள் கொண்டது. இவ்வெம்பெருமானிடம் தேசிகனுக்கு ஏற்பட்ட காதலை அளவிட்டுச் சொல்ல இயலாது. தேசிகனின் யௌவனப் பெருமையை இதன் மூலமாக ஒரு வகையில் அறியலாம். நாயிகாபாவத்தில் எம்பெருமானை அனுபவிக்கவேண்டும் என்ற தனித்துறை ஆழ்வார்கள் பால் கண்டது. அதைப் பின்பற்றினுர் ஸ்வாமி. அதன் சிகரத்தை அடைந்தார்.

இது தோத்திர க்ரந்தம் ஆயினும் இது சாத்திரம். அனேக நிஷ்கர்ஷங்களை தேசிகன் தனித்ததொரு பாணியால் சாதிக்கும் அழகிற்கு எல்லை இல்லை. தேவநாதன் துதிக்கப்பட வேண்டியவன். அவன் திருநாமத்துக்கு முதல் ச்லோகம் விளக்கம் தருகின்றது. இரண்டாவது ச்லோகத்துக்கு நிகரான ச்லோகமே கிடையாது. பூர்வாம்... அந்தராம்...அக்ராம் என்று பகுத்து அடைமொழி அளித்திருக்கும் பாங்கு தான் என்னே!

கலியனுரை குடி கொண்ட கருத்துடையவர் தேசிகன் என்று கருத்தறிவோரால் கொண்டாடப் பட்டார். இதை விளக்கும் ப்ரகரணங்கள் எண்ணிலடங்கா. எம்பெருமானுக்கு தாஸ ஸத்யன் என்று திருநாமம். கலியன் இத்திருநாமத்தை வ்யஸ்த ப்ரயோகத்தில் அடியவர்க்கு மெய்யன் என்றுர். ஸ்வாமியும் வ்யஸ்தமாகவே திருநாமத்தை அமைக்கிறுர். தாஸேஷு ஸத்ய இதி தாரய நாமதேயம். இப்படி வ்யஸ்த ப்ரயோகத்தின் அழகை அனுபவிக்கவேண்டும். திருநாமம் ஸமஸ்தமாயிருந்து விளக்கம் வ்யாஸத்தில் இருப்பது இயற்கை.

இங்கு அத்புதமான சில வார்த்தைகள் மனதை உறுக்குமவை. (1) அந்தர்வதீம் கிரம், (2) த்வதபிதாநம் அவந்த்யய த்வம் (3) த்வத் பக்தி பூஷித தியாம் இஹ தேவபாவம், (4) லக்ஷ்மீ: ஸ்த்திரா ஸுரபதே புவதோ லலாடே, (5) பிம்பாதரம் ஸ்ப்ருசதி ராகவதீ மதிர் மே, (6) மாந்யம் பதம் பவது மௌளிவிபூஷணம் ந: (7) த்ரிதசநாயக கிம் கரீய: என்பன.

நாயிகை எவ்வாறு நாயகனின் அங்கப்ரத்யங்க ஸௌஷ்டவத்தில் இளகிப் பேரானந்தம் எய்துவளோ அந்த நிலையை ஒவ்வொரு ச்லோகமும் சொல்லும். கோபஸ்த்ரீகள் பாடிய கீதையில் வேதாந்தமும் கலந்தது. இதில் வேதாந்தமே அர்த்தஸமாதியில் வடிக்கட்டி காட்டப் பட்டுள்ளது. மகிழ்ச்சியின் மிகுதியால் ஜயகோஷம் செய்கிறார். நாயிகாபாவத்தில் தார்கிகத்வம் ரஸபோஷகமாகாது என்பதனால் கவியென்றே கூறுகின்றார். கவி ஸத்யவாதியானன் என்பதில் அனேக சமத்காரங்கள். எம்பெருமான் ஸத்யனானால் அவனைச் சொல்பவன் ஸத்யவாதி தானே!!

தெய்வநாயகனது வடிவழகில் சொக்கி, அமிழ்ந்து, அநுபவித்த அனுபவம் பிறரையும் அன்றோ பெண்ணுடையுடுத்தப் பண்ணும். ச்ருங்கார காவ்யமாய், வேதாந்த சாத்திரமாய் திவ்வியமான தோத்திரமாய், அபூர்வரஸங்களை அள்ளி வீசும் திவ்யப்ரபந்த நீரருவியாய். ஸ்ரீராமாயணச்சுவையாய் உபநிஷதுத்யானமாய் அமைந்தது இந்த தோத்திரம்.

இத்துதி செய்ததற்கு உலகமெல்லாம் ஸ்வாமியைத் துதிக்கத் தொடங்கின. சோபதே என்று தலைக்கட்டுவது மிகவும் அழகு.

ஸ்தோத்திர பகுதி

5. தேஹளீசஸ்துதி

நடு நாட்டுத் திருப்பதிகளில் ஒன்றானதும், கோபபுரம் என்றழைக்கப்பட்டதும் திவ்ய ப்ரபந்தாவதாரப்ரதம தலமுமாகிய திருக்கோவலூரில் எழுந்தருளியுள்ள ஆயனார் விஷயமாக அவதரித்தது இந்த தோத்திரம். இதில் 27 ச்லோகங்கள் அடங்கியுள்ளன. இங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஆயனாராயினும் அவன் ஓங்கி உலகளந்த உத்தமனான த்ரிவிக்ரமனே!

இவன் விஷத்தில் பாடப்பட்ட இந்த தோத்திரம் பாடப்படும் எம்பெருமான் தன்மையை அடைந்தது போலும், எம்பெருமான் த்ரிவிக்ரமன். அன்று மஹாபலியின் யக்ஞவாடத்தில் த்ரிவிக்ரமனது ஒருவகை. இன்று இந்த கோபபுரத்தில் எழுந்தருளியிருப்பது. மற்றொரு தனிவகை, அங்கு வேண்டி மண்ணளந்தான். இங்கு வேண்டாமலேயே தோன்றி மண்ணுலகை அளந்து கொண்டான், த்ரீணி பதா

விசக்ரமே விஷ்ணு: கோபா அதாப்ய: என்பதிஞல் கோபபுரமும் விவக்ஷிதம் போலும்!

இந்த ஸ்தோத்திரத்தின் தனியழகை என்ன என்று சொல்ல முடியும்! இந்த ஸ்தோத்திரத்தில் ஒவ்வொரு எழுத்தும் தனி நிறத்தது என்பதனை ஸ்வாமி தாமே காட்டிக் கொடுக்கிருர். இந்த நூல் பாடப் பட்டது என்று சொல்லுமிடத்து கீதையை நினைவுறுத்தும் பாணியில் கீதா என்கிருர். கீதமாகிற திவ்யப்ரபந்தத்தை முதலில் ப்ரவர்த்திப்பித்த பெருமாளன்ரே! இப்பெருமானை ஸேவிக்கின்ற பொழுதே ச்லோகம் தானுகவே தோன்றுகிறது என்கிருர்.

மூன்று என்பதில் உள்ள ரஸமும் அலாதியானது. மூன்று திருவந்தாதிகள் மூன்று ஆறுகளாகப் பாய்ந்தன என்பது உற்று நோக்கத்தக்கது. இந்த ஸ்தோத்திரத்தில் ச்லோகங்களின் எண்ணிக் கையிலும் ஒரு ரஸம் உண்டு. மூன்றை மூன்ருல் பெருக்கிஞல் ஒன்பது. அதை மூன்ருல் பெருக்கிஞல் இருபத்தியேழு. இது தான் முடிவு ச்லோகம். இந்த ஸ்தோத்திரத்தின் பெருமையை அனுஸந்திப் பது 28-வது ச்லோகம். இது அழகான பல ச்ருதியோடு விளங்கு கிறது. இது தேசிகரின் தத்துவத்தையும் அழகாகக் காட்டுகிறது.

தேஹளீசஸ்துதி நமக்கு ஸகலவிதமான பலன்களையும் கொடுக் கட்டும் என்கிருர். எம்பெருமான் செய்வதை அவன் துதியே செய்யும் போலும். ஆழியெழச் சங்கும் வில்லுமெழ என்பது போல் ச்லோகம் க்ரமத்திலும் விச்வரூபத்தை அடைந்திருக்கும். கரும்பினை என்றனர், கரும்பின் சாற்றை என்றனர். ஸ்வாமி, கரும்பின் சாற்றில் ஆன கற்கண்டு என்கிருர். அதிலும் ஒருவகையான மூன்ருவது விக்ரமம். ப்ரார்த்தனைக் கிணங்கியோ அவஸரத்திலோ, கைகளில் திவ்யாயுதங் கள் மாறியிருப்பதை அழகுபடுத்திப் பேசுகிருர்.

இதில் அத்புதமான சில வாக்கியங்களை நினைக்கவேணும். சுசய: கவீந்த்ரா:, நூநம் ஸமாச்ரயதி நூதநசர்கராத்வம், க்ரீடாதயா வ்யதிகரேண கருதார்த்தய த்வம், மம ஹிதம் ததுபாததீதா:, வாசம் விநாபி வதஸீவ மயி ப்ரஸாதம், அநவம ஸௌக்தை: ஆதிபக்தை:, இயம விதிதவர்ணு முதலியன.

விக்ரம்ய என்ற முதல் பதமே பெருமாளை அறிவிக்கும் என்பன போன்ற அனந்த ரஸங்கள் விரிவில் அனுபவிக்க வேண்டியவை.

6. வரதராஜ பஞ்சாசத்

ஸ்வாமி ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த ஸ்தோத்ர க்ரந்தங்களில் ஈடு இணையில்லாமல் விளங்குவது வரதராஜ பஞ்சாசத் என்ற இந்த ஸ்தோத்ர ரத்னம்.

அருளாளன் தான் எனினும் தனக்கு நிகராக மாட்டான் அதுவே போல் இந்த ஸ்தோத்ரம் தனக்குத் தானும் நிகரில்லாததோர் நிதியாக அமைந்துள்ளது.

ரங்கத்திலே ரஸிகர்கள் தேவை! அருளாளர் கச்சியில் புலவர்கள் தேவை! வம்மின் புலவீர் என்ற எடுத்த எடுப்பிலேயே அழைப்பு விடுத்ததை நோக்க வேண்டும்.

ஆனால் புலமை கொண்டும்—மற்றைய தனது பலத்தைக் கொண்டும் காணவோ கூறவோ இயலாத தனிப்பெருமை பெருமாளுக்கும் இப்பஞ்சாசத்துக்கும் அமைந்தது.

சாஸ்திரமா! காவியமா! அனுபவப் பெருக்கமா; அருளிச் செயல் சுனையா! அருளின் சுடரா! என்ன என்று இந்த நன்னூலை நவிலுவது! தன்னால் வரிக்கப்படாதவர்க்குத் தனது திருமேனிப் பொலிவை எம்பெருமான் எப்படி காட்டுவதில்லையோ அப்படியே இத்தோத்திரம் அருள் செய்தாலன்றி இதன் ஆழ்பொருளை அனுபவிக்க எங்ஙனே இயலும்! **தர்சயந்து ப்ரஸாதேந ஸ்வம் பாவம்** என்று ப்ரார்த்தித்த முறையிலே இப்பஞ்சாசத்தைத் தஞ்ச மடைந்தாலன்றித் தன் தனிப் பொருளை இது விளக்கத்தான் செய்யுமோ! எளிமையும்-காம்பீர்யமும் எம்பெருமானுக்குப் போலே யன்றோ இதில் அமைந்துள்ளது!

இந்த க்ரந்தம் எத்தகையது என்பதை நம் போலியர் எங்ஙனே அறிய இயலும்! இது ச்ருதி ஸுபகம் என்று தானே ஸாதிக்கின்றார். காதுக்கினியதாக மட்டு மில்லாமல் வேதத்தின் பாக்யமாக அமைந்தது என்கிறார். வேங்கடேசன் என்பவன் இதை இயற்றினால், க்யாதிக்கோ லாபத்துக்கோ பூஜைக்கோ அல்ல! பக்தியின் மிகுதியே இதற்கு

காரணம். கவி என்று சொல்லிக் கொள்ளவும் பின் வாங்குவர் போலும். தனது ரஹஸ்யம் அவனுக்குச் சொல்லித்தானு தெரியப் போகிறது!

இதை அங்கீகரித்தால் மலையில் ஸ்த்திரமாக இருக்கும் கல்ப வ்ருக்ஷத்திலிருந்து எல்லா விதமான பழங்களையும் பெறலாம் என்கிறுர். கேட்டதைக் கொடுக்கும் கல்ப வ்ருக்ஷம். வரதராஜ பஞ்சாசத்தை சொன்னேன் என்று சொன்னுல், என்ன வரம் தர என்று தானே நவின்று எதை வேண்டுமானுலும் எடுத்துக் கொள்ளலாம் என்றும் கூறி, தன்னைத்தாழ விட்டுக் கொண்டு நிற்கும். இது தலைக்கட்டு ச்லோகத்தின் இதயம்.

நிற்க. இது சாஸ்த்ரம் - இது ஒன்றை நன்ருக அறிந்து விட்டால் ஸகல சாஸ்த்ரமும் கைவந்ததாகும். இதில் பரம்—வ்யூஹம் - விபவம்-அந்தர்யாமி, அர்ச்சை என்ற ஐந்து ரூபங்களையும் அடைவே ஸமந்வயப்படுத்தி நிருபிக்கின்ருர். ஸ்ரீவைகுண்டத்தில் விளங்கும் ஸ்ரீபாஞ்சராத்ரப்ரஸித்தமான வ்யூஹ பேதத்தையும்—சாதுராத்ம்யத்தையும் காட்டுகிருர்.

முதல் ஆறு ச்லோகங்களை உபோத்காத பேடிகையாக அமைத்து ஏழாவது ச்லோகத்தில் சாஸ்த்ர யோநித்வாதிகரண ஸித்தமான ந்யாயத்தாலே சாஸ்த்ரைக ஸமதிகம்யமானது சக்ஷுர் விஷயமானதே என்று வியந்து பேசுகின்ருர். சிவாதிகள் எல்லாம் சட்டை போன்றவர்களே யன்றி அவர்களுக்கு தனித்த ஸத்தை கிடையாது என்பதையும் காட்டுகின்ருர். ப்ரம்ஹேதி என்ற ச்லோகத்தில் ஸர்வ காரணமும் அவன்தான் ஸர்வ சப்தங்களும் அவனைத்தான் சொல்கின்றன என்றும் சொல்கின்ருர். ***சாகாகதத்ரிதசப்ருந்த*** சகுந்தகாநாம் என்று அழகிய நிஷ்கர்ஷத்தைச் செய்தருள்கின்ருர். சாகை என்பது வேத பாகத்தைக் குறிக்கும். வேத வ்ருக்ஷத்தின் கிளைகளில் தங்கிய பறவைகள் தேவதைகள் என்று சாற்றுகின்ருர். தனது தேஹத்தை ஆத்மா என்று எண்ணுவதுதான் தவறு. உனது ஆத்மா-- உனது திருமேனி இரண்டும் ஒன்றுதானு, என்று தேஹாத்ம தத்வப் பொலிவைப் பேசுகின்ருர். மேகத்தின் நடுவில் மின்னல்--இது இயற்கை, அம்மின்னலின் நடுவில் மேகம்போல் விளங்குகின்ருய் என்று கூறி மின்னல் அசைந்தாலும் அசையாத மேகம் என்றும் கூறுகின்ருர். ஸ்வர்காதி போகங்களும் தங்கச் சங்கிலிக் கட்டு என்றும்

அறுதி யிடுகின்றார். நம்மிடமும் அஞ்ஜலி என்ற ப்ரத்யஸ்த்ரம் இருக்கிறது ஏன் அஞ்ச வேண்டும் என்றும் கூறுகின்றார். முன் தசையில் மட்டுமின்றி பின் தசையிலும் அபங்குர ஸேது என்கிறார். உனது அடியார்கள் அனைவரும் ஒன்று பட்டால் இந்த ஸம்ஸாரமே மோக்ஷ நிலமாகுமே என்று ஆசைப்படுகின்றார். வரதனுக்கு அழகானதொரு ஸுப்ரபாதமும் பாடுகின்றார். ஆனை பரிதேரின் மேல் அழகனாய் வரும் அழகை ஸேவிக்க விழைகின்றார். வைகுந்தத்திலும் விருப்பமில்லாமையை இனிது உரைக்கின்றார். மேலும் இந்த தேவதை எனது மனதில் ஸந்நிதி பண்ணட்டும் என்றும் த்யான ச்லோகம் அமைத்துத் தலைக்கட்டுகின்றார்.

இது நிற்க, பேரருளாளன் பெருமையை ஸ்வாமி எடுத்துக் காட்டியிருப்பதை வெகுவாக மான்மியத்திலும் மற்றும் பல நூல்களிலும் காண்கிறோம். ஸ்வாமி காலத்திற்கு முன்பு, பெருமாள் கோஷ்டியிலும், ஆழ்வார்களுடைய கோஷ்டியிலும், ப்ரபந்த நிஷ்கர்ஷங்களிலும், அவதார காரியங்களிலும் ஒரு நிறைவு இல்லாத ஒரு நிலை இருந்து வந்தது. ஸ்வாமியின் அவதாரத்தினால் அவை யனைத்தும் பூர்த்தியாயிற்று. இந்த அடிப்படையில் ஒரு சில விஷயங்கள்:-

ஆதியுகத்து அயன் கண்ட அருளாளன் கரி கிரிமேல் வீற்றிருந்து அனைத்தும் காக்கும் தன்மையன். ஆழ்வார்கள் உண்மையில் இவனது வடிவழகில் ஆழ்ந்து அதிகம் பேச முடியாமல் மோஹித்துத் தாம் சென்ற இடங்களில் அவ்வப்பொழுது நினைத்து ஸாத்மிக்க ஸாத்மிக்கப் பெருமை பெற்றனர்.

மனங்கவர்ந்த வீசனாய், அமரர்களதிபதியாய், அருளாளனாய் விளங்கியவன் ஆழ்வார்களுக்குப் பெரியதோர் மோஹத்தை யுண்டு பண்ணினான்.

இரண்டாவது ச்லோகத்தில் இதின் ஸ்வாரஸ்யத்தை ஸ்வாமி அனுபவிக்கின்றார். பொதுவாக முஹ்யந்தி என்பது நம்மாழ்வாருடைய நிலையைக் குறிக்கும். ஆறுமாத காலங்கள் மோஹித்திருந்தார் என்றும் சொல்வதுண்டு. ரஜோ குணம் தமோ குணம் சிறிதும் கலக்காத ஆழ்வாருக்கு மோஹம் எங்ஙனே! அது தேவப் பெருமாளின் திவ்ய மங்கள விக்ரஹப் பொலிவினால் உண்டாகியதே.

நின்றவாறும் பிறந்தவாறும் என்ற இடத்தில் ஸ்வாமி பகவத் விஷய **காலக்ஷேபம்** ஸாதிக்கின்ற பொழுது தேவப்பெருமாள் விஷயமாக நிர்வஹித்தாகும் என்று கடிகாசதம் அம்மாள் காலக்ஷேப கோஷ்டியில் வெண்ணெய் கூத்தஜீயர் ஸாதிக்கும்படியாயிருக்கும் என்று சாதிப்பதை பகவத் விஷயத்தில் காண்க.

ஸ்தோத்திரப் பகுதி

7. தயாசதகம்

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் திருமலைமேல் எந்தையாம் திருவேங்கடவன் விஷயமாகப் பாடியது இத்தயாசதகம். இங்கு திருவேங்கட முடையான் என்று பேசினுல் தன்னிடத்தும் அன்வயித்துப் பேசியதாகிவிடும் என்று கருதி அவ்வெம்பெருமானின் கல்யாண குணங்களைப் பெருமை படுத்தும் தயை என்ற குணத்தின் துதியாக அமைத்தருளுகிருர்.

பத்துப்பதிங்களாகப் பிரிக்கவேண்டும். ஒவ்வொரு பதிகத்துக்கும் ஒரு வ்ருத்தம். படியின் ஏற்றம்போல் அதிக எழுத்துக்கள் கொண்ட வ்ருத்தங்கள் படிப்படியாகக் காட்டப்படுகின்றன. இது வடமொழியில் அமைந்ததொரு திருவாய்மொழி என்ருல் மிகையாது.

முதல் பத்தில் எம்பெருமான் மோக்ஷப்ரதன் என்றும், இரண்டில், ஸர்வக்ஞத்வாதி குணயோகம் என்றும், மூன்றில் விரோதி நிரஸனப்ரகாரம் என்றும், நான்கில் அடைவிப்பவன் என்றும், ஐந்தில் அடையப்படுபவன் என்றும், ஆறில் ப்ரபத்தியே உபாயம் என்றும், ஏழில் ஸௌசீல் யாதிகுணங்களின் பெருமை என்றும், எட்டில் எட்டாத நிலையான பரத்வம் என்றும் ஒன்பதில் விச்வோபகாரமானது அவதார பரம்பரை என்றும், பத்தில் பலத்தைக் கூறுவது என்றும், கூறி பிறகு விஷய வக்த்ருபலவைலக்ஷண்யத்தையும் கூறித் தலைக் கட்டப்படுகிறது என்று பெரியோர் ஒரு க்ரமத்தை பணிப்பர்.

இதில் ஒவ்வொரு ச்லோகமும் ஒரு தனிப் பொலிவுடையது. தயாநிதி என்று எம்பெருமானைக் காட்டித் தந்த தயாவாரிநிதி என்று போற்றப்பட்டார் ஸ்வாமி.

இங்கு அழகான சாஸ்த்ர நிஷ்கர்ஷமும், அத்புதமான வசன வ்யக்திகளும் காணக்கிடக்கின்றன. பகவச்சப்தம் பெருமானின் பெருமையைக் காத்தது. இவ்வாறுகுணங்களும் பரத்வத்தை ரூபிப் பவை. இவற்ருல் பெருமாள் பெருமை பெற இயலாது என்பதையும் ஸௌலப்யம் என்பது ஒன்று உண்டாயின் எல்லாம் பரிமளிக்கும் என்பதையும் காட்டுகிருர். தோஷா பவேயுரேதே யதி நாம தயே த்வயா விநா பூதா:, அஹமஸ்மி அபராத சக்ரவர்த்தீ, முதலியன உற்று நோக்கத்தக்கவை.

நூறு ச்லோகங்கள் யாடவந்தவர் 108 ச்லோகங்கள் பாடுகிருர். ஆனால் அழகான ஸங்கதியோடு முக்தானுபூதிம் இஹ தாஸ்யதி மே முகுந்த: என்று முடிக்கின்ருர். பிறகு அமையும் ச்லோர்கங்கள் ஒவ்வொன்றும் முத்து என்னலாம், பத்மாபதே: ப்ரஹஸநோசிதம், விஞுவிசேஷமிவ, விவத குசல நீவீ, ஸ்துதிரியம் அநவத்யா என்ற வகையில் காட்டித் தரும் அழகே அழகு !

தயையைப் பாடுவதற்கு வேங்கடேச்வரனே கவியாக வந்தான் என்று பொருள் படும்படி அமைத்ததை என்ன என்று சொல்வது ! நிஷாதாநாம் நேதா என்ற ச்லோகத்தில். காட்டப்படும் சமத்காரம் மிகவும் போக்யமானது. ஏழுத்ருஷ்டாந்தங்கள். ராமாயணத்தில் மூன்று, ஸ்ரீக்ருஷ்ண சரிதையில் நான்கு என்று விபாகம் செய்து ஏழு மலையானை வழிபடுவது சாலப் பொருத்தம். இதில் அடங்கியுள்ளரஸங் கள் எண்ணிலடங்கா !

ஸ்தோத்திரப் பகுதி

8. சரணுகதி தீபிகை

ஸ்வாமியின் அவதாரத்திஞல் மிகவும் புனிதமானதும், நம்மாழ் வாரும் கலியனும் வியந்து வழிபட்டதான திவ்ய தேசமானதும், தூப்புல் எனத் தூயதான திருநாமத்தோடு விளங்குவதும், லீலா விபூதி யில் எம்பெருமானுடைய விஹாரத்திற்கு பூங்காவாக அமைந்ததும் ஸம்ஸாரதாபத்திஞல் பீடிக்கப்பட்டவர்க்கு குளிர்ச்சியை யளிப்பதுமான திவ்ய தேசத்தில் விளக்கொளி என்ற திரு நாமத்துடன் தேசிக ஸம்பத் தாக எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் விஷயமாக அருளிச்செய்த ப்ரபந்தம் இது.

சரணாகதி வித்யைக்குப் பிறப்பிடமான ஸ்வாமி தனது பிறப் பிடத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை சரணாகதியை விளக்கும் பெருமாள் எனக்கூறி சரணாகதி தீபிகை என்ற இந்த ப்ரபத்தி சாஸ்திர மான ஸ்தோத்திரத்தை அருளிச்செய்கிறார்.

இந்த ஸ்தோத்திரத்தில் ஒவ்வொரு ச்லோகமும் தனிப் பாங்குடன் அமைந்ததாம். கவிதை நயம், சாஸ்திர நிர்ணயம், சமத்கா ரம் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று விஞ்சியதாயிருக்கும். ஓரொன்று தானே அமையாதோ என அமைந்தது இந்த ஸ்தோத்திரம். பெரியோர் கள் நியமிக்க, உலகில் உள்ள இருளைப் போக்க, வேங்கடேசன் திவ்வியமான இந்த ஸ்துதியைச் செய்து வைத்தான் என்று சாதிப்பதை என்னென்று சொல்வது!

உலகில் உள்ள இருளனைத்தையும் போக்கும் என்கிறார். ஸத்துக்கள் நியமித்ததாகவும் கூறுகிறார். சரணாகதி தீபிகை என்று தானே நாமகரணம் செய்கிறார்.

முதல் ச்லோகத்தில் மஹாநஸ ஸம்ப்ரதாயத்தை இங்கு ப்ரத்யக்ஷமாகக் காணுங்கோள் என்று கூறியது தீபிகையின் வெளிச்சம் கொண்டு என்று அமைவதை நினைக்க. அதற்கேற்ப விபச்யமானம் முதலான சொற்களையும் நோக்கவேண்டும். இந்த எம்பெருமான் அத்விதீயர்-இவருக்கு நிகரே கிடையாது என்கிறார். இவருடைய (ஸ்வாமியின்) அவதாரத்தைப் பெற்றதால் தானே அவ்வேற்றம்!

ச்லோகங்களில் உள்ள ரஸம் வாசாம் அகோசரம் வரும். ஒரு சில எண்கள் உள்ள ச்லோகங்களை ரஸிக்க. 15, 19, 25, 30, 35, 43, 47, 50, 52.

இவற்றில் தேசிகன் பல நுணுக்கங்களை வெகு அழகாக நிர்வஹித்தருளுகிறார்.

ஸ்தோத்திரப் பகுதி

9. ந்யாஸதிலகம்

ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த ஸ்தோத்ரக்ரந்தங்களில் ந்யாஸதிலகம் திலகம் போன்றது. சரணாகதி வித்யை தோன்றிய கடல்

என்று ஸ்வாமியைப் பலரும் பலகாலும் புகழ்ந்துப் போந்தனர். சரணுகதி விஷயமில்லாத ஒரு ஸூக்தியும் இல்லை.

இந்த ந்யாஸ திலகம் என்ற ஸ்தோத்திரம் சரணுகதி சாஸ்திர மாகவும், சரணுகதியைத் தளமாகக் கொண்ட அனுபவ காவியமாகவும் திகழ்கின்றது. 32 ப்ரம்ஹ வித்யைகளும் சரணுகதி வித்யைக்கு நிகராகாது என்பதைக் காட்டவே 32 ச்லோகங்கள் என்றும், சாஸ்த்ர ரீதியான நிஷ்கர்ஷம், என்றவகையிலும் ஒன்றுக்கொன்று விஞ்சிய பெருமையைத்தரும்.

ந்யாஸம் என்பதே ஜீவனுக்குத் திலகமாகும். ந்யாஸதிலகம் என்ற இந்த ப்ரபந்தம் ந்யாஸத்தை விளக்கவந்த ஸூக்திகளுக்கு இட்ட திலகமாகவும் அமையும். திலகம் மங்கலாக இருக்கக் கூடாதே- அதனுல் தான் ஸ்புரத்வர்ணம் என்று பேசினுர். எழுத்து-நிறம் இரண்டுமே வர்ணம்.

ஸேவாஸம்பதம் என்பதும் - ***ஸேவாம் திசதி*** என்பதும் ஸ்வாமி உகந்த சொற்களாம். ஸேவா சப்தம் ஜீவன் செய்யும் கைங் கர்யத்தையும், ரங்கன் அளிக்கும் ஸேவையையும் குறிக்கும் பாங் குடையது.

சரணுகதி சாஸ்த்ர நிஷ்கர்ஷம் பண்ணும் இடத்தில் தனக்கு சரணுகதி ஸம்ப்ரதாயம் கிடைத்த பெருமைய்ய துர்மோசோத்பட என்ற ச்லோகத்தில் ஸாதிக்கின்ருர்.

குருப்ய: என்ற ச்லோகம் ஆரம்பித்துத்தான் ஸகல வைதிக கர்மங்களும் செய்யப்படுகின்றன. இதுவே இதற்கு முதல் ச்லோகம். ப்ரபத்தியில் பௌன: புன்யத்தை மறுப்பதை தான் அபயஹஸ்தம் காண்பிக்கிறதே யொழிய ப்ரணுமாதிகளில் இல்லை என்பதை அழகாகக் காட்டுகின்ருர்.

ப்ருந்தாநி ய: ஸ்வவசயன் என்ற ச்லோகத்தில் அத்புதமான தொரு ஸாங்க்ரஹிணீ என்ற இஷ்டியைப் பண்ணுகிருனே என்று கூறுவது வேதலோக சமத்கார சிகரமாம்.

32 ச்லோக ரத்னங்களால் அமைந்தது இந்த ந்யாஸதிலகம். இதில் கடைசி ச்லோகத்தில் திலகம் இட்டுக் கொண்டால் அது யஜமான வசீகரணம் செய்யும் என்ற வைதிக ப்ரக்ரியையும் காட்டுவது அழகு.

10. வேகாஸேது ஸ்தோத்ரம்

(யதோக்தகாரி ஸ்தோத்ரம்)

ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த தோத்திரக்ரந்தங்களில் யதோக்தகாரி ஸ்தோத்திரம் என்ற இது ஒப்பற்றது. இதற்கு வேகாஸேது தோத்திரம் என்ற திருநாமமும் வழக்கத்தில் உள்ளது.

கார்மேனியருளாளர் கச்சியில் பல எம்பெருமான்கள் எழுந்தருளி யிருக்கின்றனர். பலர் ஆழ்வார்களால் பாடப் பெற்ற பெருமையை யடைந்து விளங்குகின்றனர்.

முதலாழ்வாரைத் தனது பொய்கையில் தோன்றச் செய்த பெருமையும், ஆதியுகத்தில் அருளாளனுக்கும் முதலானன் என்ற பெருமையும், **தான் சொன்ன - வண்ணம் செய்த பெருமாள் - தமர் சொன்ன வண்ணம் செய்த பெருமாள்** என்ற புகழும் பெற்று விளங்குகின்றார் இந்த யதோக்தகாரிப் பெருமாள்.

கணிகண்ணன் போகின்றான் - என்றால் போவதும், போக் கொழிந்தான் என்றால்-போக்கற்று அப்படியே படுக்கையோடு நிற்பது மான பாங்கினைப் புகழாமல் எங்ஙனே இருப்பது!

ஸ்வயம் வ்யக்தம், ஸேதுரபங்குர:, வேகவதீ மத்யலக்ஷித:, விஷ்ணுஸேது, மஹாபுஜங்க:, ச்ரித ஜநபர தந்த்ரம், ஆதேசகாரி, காஞ்சீபாக்யம், என்ற அடைவில் சொற்களில் அமைந்திருக்கும் பொருள்களை அனுபவிக்க வேண்டும்.

உபாயமும் பலமுமாக எழுந்தருளி யிருப்பதாலும் அது ஒன்றே என்று தேரியதாலும் இந்த தோத்திரத்தில் தேவாதிராஜனும் இடம் பெற்றார் போலும்!

யதோக்தகாரி, எம்பெருமான் முன்பும் பின்பும் எப்படி யிருப் பினும் திருவேங்கடமுடையானை தான் அருளிச்செய்த இந்த தோத்திரத்தை படிப்பவர்க்குத் திண்ணம் சொன்ன வண்ணம் செய்த பெருமாளாவான் என்று ஸாதிக்கின்றார்.

விடுகை நிரூபிக்கும் பாங்கு, காஞ்சீபாக்யம் என்று சொன்ன தின் விரிவுகளை யெல்லாம் விரிவுரைகளில் காண்க. காஞ்சீபாக்யம் என்ற இந்த ச்லோகம் யதோக்தகாரியின் த்யான ச்லோகம் - நமது புண்யங்களின் பலமாக எம்பெருமான் திருவணையாக எழுந்தருளியிருக் கிறான் என்று தலைக் கட்டுகின்றார்.

ஸ்தோத்திரப் பகுதி

11. அஷ்டபுஜாஷ்டகம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த தோத்திரங்களில் அஷ்டபுஜாஷ்டகம் என்பது மிகவும் சிறந்தது. இதன் சிறப்பை ஸ்வாமியே ஸாதிக்கின்றார்.--

இது வழிச்சாப்பாடாகவும், ரஸாயனமாகவும் அமையும் என் கிறார். ரஸாயனம் என்ற சொல் ரஸமானது. ரஸமான எம்பெருமானை அடைவிப்பது என்பது இதன் பொருள்.

ஆதலால் இது ஸ்ரீமத்தாக இருக்கிறது. இவ்வாறு ஸ்ரீமத் என்று ஸாதித்ததை விவேசந ஸ்ரீயையுடை ஒவ்வொரு ஸ்ரீமானும் சிந்திக்க வேண்டும்.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ரஹஸ்யத்தை அறிய இது ஒன்றே போதுமானது. இதில் என்ன இல்லை! உருவத்தால் மட்டுமே சிறியது,

தூப்புல் துரந்தரனின் பரிஸரத்தில் ஸ்வாமியின் மங்களாசாஸ னத்திற்கு என்றும் இலக்காகும் பெருமாள் இவ்வஷ்டபுஜன்.

பெருமாளும் அஷ்டபுஜர், பெருமாள் எழுந்தருளியிருக்கும் இடமும் அஷ்டபுஜம், எண்டோளீசன் என்பது இதன் தமிழ். தொட்ட படை யென்பது இதற்கு மூலமாம்.

கலியன் பாடிய வீறுடையவர் இந்த எம்பெருமான். இந்த எம் பெருமானைக் கண்டு வியக்கின்றார். கலியன்-இவரார் கொல் என்றுப் பேச, அட்ட புயகரத்தேன்-என்று இவ்வெம்பெருமானும் விடை பாரிப்பராம்.

எட்டு திருக்கைகளையுடையவன் என்று திருநாமம். புயம் கரம் இரண்டும் ஒன்று போலே தோன்றும் புயத்தைச் செய்து கொண்டவன். என்று பொருள் கொள்ள வேண்டும். எட்டு கைகளுக்கும் எட்டும்படி எட்டு ச்லோகங்களை ஸமர்ப்பித்துள்ளேன். இதை த்வரையாலாயினும் ஆதரத்தாலாயினும் ஏற்றுக் கொள்வானாக என்பதும் உற்று நோக்கத் தக்கது.

கஜேந்த்ர வ்ருத்தாந்தம் அந்தாதியில் கூறப்பட்டதை யனுசரித்தாம். ஒரு சில ச்லோகங்கள் என்றும் தெவிட்டாதவை. பயம் குத: ஸ்யாத் த்வயி ஸாநுகம்பே, ரக்ஷா குத: ஸ்யாத் த்வயி ஜாதரோஷே, த்வயி ப்ரவ்ருத்தே மம கிம் ப்ரயாஸை: த்வய்யப்ரவ்ருத்தே மம கிம் ப்ரயாஸை: என்பன.

சரணாகதர்களை ரக்ஷிப்பதில் உள்ள வேகம் எனது ஸ்ரீஸூக்தியாகிற இந்த தோத்திரத்தை ஏற்றுக் கொள்வதில் வேண்டும் என்பர். திருவஷ்டாக்ஷர க்ரமத்திலும் பொருள் அமைவதை ரஸிகர்கள் கண்டு களிக்க.

ஸ்தோத்திரப் பகுதி

12. காமாஸிகாஷ்டகம்

ஸ்வாமி ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த தோத்திரங்களில் காமாஸிகாஷ்டகம் என்பது கச்சியில் எழுந்தருளியிருக்கும் வேளுக் கையாளரி எனப்புகழப் பெற்ற எம்பெருமானைச் சேர்ந்தது.

ஒன்பது ச்லோகங்கள் கொண்ட இந்த தோத்திரம் அபூர்வமான ரஸங்களைப் பெற்று விளங்குகின்றது. சமத்கார ரஸாநுபவங்களை ஆங்காங்கே காண்கின்றோம்.

அத்புத கேஸரீ, முக்கண்ணப்பன், கேளிநரசிம்ஹன், யோக நரஸிம்ஹன், கபடகேஸரீ முதலானவகையில் பேசும் பாங்கு உற்று நோக்கத்தக்கது.

காமாஸிகா கேஸரியானதால், ச்ருதிகளாகிற பெண்களுக்கு உயர்ந்தவனாகவும், வேகவதியாகிற பெண்ணுக்கு ஸமர்த்தனாகவும் இருந்து வருகிறான் என்று கூறுகிறார்.

க்ர்மாஸிகாகேஸரி தானே காமங்களைப் பூர்த்தி செய்ய வல்லவன். ஆகையினால் சரணாகதிபோல் ஒரு முறை இந்த ஸ்தோத்திரத்தை சொன்னால் அவர் விரும்பும் பலன்களை யளிப்பான் என்றும் காட்டு கின்றார்.

நீ ஒன்றை ஆச்ரயித்திருக்கிறாய், நானும் ஒருவரை யாச்ரயித் தவனை ஆச்ரயித்துள்ளேன் என்றும் சாதிக்கின்றார். நரஸிம்ஹகர்ப்ப மான இவ்வுலகு போலவே இந்த ஸ்தோத்திரம் ரஸகர்ப்பமானது.

தாபங்கள் மூன்று. அவற்றைத் தொலைப்பதற்காக எம்பெருமான் கண்களும் மூன்று. பிறருக்கு உள்ள மூன்றாவது கண் தாபத்தை உண்டு பண்ணும் என்பது ரஸம். வைகுண்ட்ட கண்டீரவன் என்ற திருநாமமெடுத்த இந்த எம்பெருமானுக்கு வேகவதியின் கரையில் விசேஷமான வ்யாமோஹம், வைகுண்டத்தையும் நினைக்கமாட்டார் என்கிறார். (இவ்வெம்பெருமான் தான் கவிதார்க்கிக சிங்கமாகி வைகுண்டவாஸேபி நமேபிலாஷ: என்று பாடினான் போலும்!.

கேளிநரசிங்கம்,யோகசிக்ஷணம், க்ருபாகபடகேஸரீ என்பதும், காமாஸிகா நரஹரி: விதநோது காமாந் என்பதும் பரமபோக்ய மானவை. ச்ருதீநாம் என்று தொடங்கி காமாந் என்று முடிப்பதும்- விதநோது என்பதும் மிகவும் ரஸம்.

ஸ்தோத்திரப் பகுதி

13. பரமார்த்தஸ்துதி

ஸ்வாமிதேசிகனால் அருளிச் செய்யப்பட்ட அத்புதமான ஸ்தோத்திரம் பரமார்த்த ஸ்துதி. திருப்புட்குழி என்ற திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் விஜயராகவன் விஷயமாக ஸாதிக் கப்பட்டது.

அனேக பரம-உயர்ந்த அர்த்தங்களைக் கொண்டதால் இது பர-மார்த்தஸ்துதி என்று பெயரிடப் பெற்றது. ஸீதைப் பிராட்டியின் பெரு மையைச் சொல்லும் ராமாயணம் என்ற பொருளும் பரமார்த்த சப்தத் தில் அமைந்துள்ளது. சரணாகதி வித்யையை ராமாயணம் போல் இதுவும் கூறும். இதை ஸ்வாமியே ரமணீயா என்று பெருமிதத்துடன் ஸாதிக்கின்றார்.

இந்த ஸ்துதி ஸ்ரீமத் என்று ஆரம்பிக்கிறது. க்ருத்ர ஸரஸ் தீர பாரிஜாதம் என்பது அவதாரரஹஸ்யத்தைக் குறிக்கும். ஜடாயுவும் பிதாவுக்கு ஸகாவானபடியால் பித்ரு கோஷ்டியில் சேரலாம். தசரதனுக்கும் இல்லாத ஸ்ரீமத்வம் ஜடாயுவுக்கு உண்டு போலும். குருபி: என்ற இரண்டாவது ச்லோகம் பாலகாண்ட முக்கிய சம்பவங்களைக் குறிக்கும். வந்தி பாவம் குலக்ரமத்தில் வந்தது போலும். மூன்றுவது ச்லோகத்தில் ஸீதாகல்யாண ப்ரஸங்கம் செய்யப்படுகிறது. நான்காவது ச்லோகம் ஆரண்ய காண்ட கதையைக் கூறும். கரதூஷண வதங்களையும் குறிப்பிடும். ஐந்தாவது ச்லோகம் ஸீதாபஹரண வ்ருத்தாந்தத்தை நினைவுறுத்தும். 6வது ச்லோகத்தில் விபீஷண சரணுகதி, ஏழாவது ச்லோகத்தில் அதன் விளக்கம், எட்டாவது ச்லோகம் எம்பெருமானுடைய மஹத்தானதொரு வ்ரதத்தைக் காண்பிக்கும். 9வது ச்லோகம் பெருமாளின் பட்டாபிஷேக வ்ருத்தாந்தத்தைக் குறிக்கும்.

சில சொற்களில் அமைந்த ரஸங்களை விரிவில் காணவேண்டும். துங்கை: அதுங்கை: ப்ரணதை: க்ருஹ்யதே பலம், ப்ரணவே பார்த்த ரதேச பாவயந்த: அவநம் ச்ரயதாம் அஹீநம் ஆத்யம். முதலியன.

இந்த பரமார்த்த ஸ்துதியின் பல ச்ருதி ரமணீயமானது. பிரமமாவின் சந்தத்திற்கும், பெருமாளின் ப்ரஸாதத்திற்கும் எத்தனையோ வாசியுண்டு. விமலாசய சப்தம் வால்மீகியைக் காட்டிலும் வைலக்ஷண்யத்தைக் காண்பிக்கும். ச்ரோதவ்யம் அநஸூயயா என்பது அநஸூயுபிராதரேண பாவ்யா என்று பேசப்பட்டது.

மற்றும் இதில் அடங்கியிருக்கும் அபூர்வமான அர்த்தங்களை யாரே அறிய வல்லார்!

ஸமரபுங்கவ ஸம்ஸ்துதிம் அத்புதாம் என்றனர். இது ஒரு ராமாயண ஸங்கிரஹமாம்.

ஸ்தோத்திரப் பகுதி

14. தசாவதார ஸ்தோத்ரம்

இந்த தோத்திரத்தின் பெருமையை தாமே ஸாதிக்கின்றது உற்று நோக்கத்தக்கது. தான் வித்யையின் கடல் என்றும் அதி

லிருந்து ஜகன் மங்களமான அமுதம் போல் தோன்றியது இந்த துதி என்றும் பேசுகின்றார். ஹயக்ரீவஸ்தோத்திரத்தை வாக்கும் பொருளும் அடையப் படியுங்கோள் என்றார். ஆனால் இதில் சொல்ல நினைத் தாலே பஹுமுகமான வாக்கு வரும் என்று சாதிக்கின்றார்.

அவதாரங்கள் பத்து என்பது ஒரு காரணத்தை முன்னிட்டே யாம். அது என்ன என்பதை விளக்குவது இந்த ஸ்தோத்ரம். அஷ்டா க்ஷரத்தின் எழுத்தின் எண்ணிக்கையில் அமைந்தது என்பதை உற்று நோக்கவேண்டும். அகார உகாரமகாரங்களின் சேர்த்தியான ப்ரணவம் மூன்று அவதாரமானது. அடைவே நா-ரா-ய-ணா-ய- என்ற ஐந்து அவதாரங்கள் அதன் பின்னே நம: என்பது க்ருஷ்ணாவதாரத்துக்குச் சேர்ந்ததாம்.

அபிநவ தசாவதாரமான ஆழ்வார்களின் எண்ணிக்கையைக் காண்பிக்க 13 ச்லோகங்கள்.

ஒவ்வொரு அவதாரத்திலும் பிராட்டியின் சேர்த்தி முதலியவை உற்று நோக்க வேண்டியவை.

தேவோ ந: சுப மாதநோது என்று ஆரம்பிக்கும் இது த்ருச்ய காவ்யமாகவும் ஆகின்றது. பத்து ச்லோகங்களில் பத்து திரைகள் உடைய நாடகம் இது என்பதை ஸ்வாமி சுட்டிக் காண்பிக்கிறார். சில ரஸங்கள் (1) அகாரார்த்தமான அவநம், (2) உகாரார்த்தமான பிராட்டி யின் அவதார யோக விஹாரங்கள், (3) மகாரத்தின் பொருள் ஜீவோத் தாரணம், (4) நா என்பதன் பொருள், வைகுண்ட்ட கண்டீரவன், ஆயுதங்களுக்கு ஓய்வளித்தல்-முதலியன, (5) விலக்ஷண ரக்ஷண ப்ரகாரம், (6) ஆப்ரம்ஹ கீடம்-அப்ரம்ஹண்ய நிராகரணம். சென்று சென்று தலையறுத்ததால் யகாரார்த்தம், (7) ணகாரார்த்தம் பரத்வ ஸௌலப்யங்கள், (8) யகாரார்த்தம் பலராம வ்ருத்தாந்தம், (9) நம: சப்தத்தின் பொருள், (10) காளியமர்தந ரஸம், (11) கலி கதா காலுஷ்ய கூலங்கஷத்வம், (12) ஸர்வாவதார ஸங்க்ரஹம், (13) ஜகன் மங்களம் என்ற முறையில் திருவஷ்டாக்ஷர வைபவமாக அனுஸந் தித்ததை நினைக்க.

நவக்ரஹசாந்தி செய்வது பரமை காந்திகளுக்கு ஏற்றதல்ல. இந்த ஸ்தோத்திரத்தை அனுஸந்தானம் பண்ணினால் போதும்.

ஒவ்வொரு க்ரஹ பீடைக்கும் ஒவ்வொரு ச்லோகம் பரிஹார மந்த்ரமாக அமையும்.

இதில் கடைசி ச்லோகத்தில் தேசிகன் பெருமை விளங்குவதை யும், பலச்ருதி அமைந்ததையும் கண்டு களிக்கலாம்.

ஸ்தோத்திரப் பகுதி

15. ரகுவீர கத்யம்

இதற்கு மஹாவீர வைபவம் என்று தேசிகன் சாதித்த திருநாமம் வீரர்களுக்கெல்லாம் வீரனை ராவணன் தம் மந்யே ராகவம் வீரம்'' என்றான், ஆதலால் ராமன் மஹாவீரன். அவனுடைய வைபவத்தை உரைப்பதால் இதற்கு இவ்வாறு திருநாமம்.

ராமாயணம் முழுதும் கத்ய காவியமாக அருளிச் செய்யப்பட்டது. ராமாயணத்தில் தெளியாத விஷயங்களை வ்யக்தமாகச் சொல்லும் (கத்யம்) இதில் தெளியலாம்.

ப்ரஜை ராஜாவுக்கு என்றும் ப்ரார்த்திக்க வேண்டியது ஜயம் ஆதலால் ஜயகோஷம் பண்ணுகிறார். மனித பாவனையையே ஏறிட்ட தால் ஜய கோஷம். நம: ஜய என்று முக்தரும் சொல்வதால் ஜய ஜய என்ற ஆரம்பம்.

கவிகதக ஸிம்ஹகதிதம் என்றார். அது எவ்வாறு அமைந் துள்ளது என்பதைத் தாமே சாதிக்கின்றார். கடோர ஸுகுமார கும்ப கம்பீரம் என்கிறார். இது ஸம்ஸாரம் என்ற பெரியதொரு நோய்க்கு மருந்து என்கிறார்.

இதைப் படியுங்கோள் என்று ஆசையோடு ஆதேசமும் செய் கின்றார். ஸங்கிரஹமாக ராமாயணத்தைப் பாராயணம் செய்ய இதனி லும் சிறந்த தெய்வீக கத்ய காவ்யம் வேறு உளதோ'

உலகமெலாம் விரும்பிப் படித்து-ப்பாடி, மகிழும் பெருமை இந்த ப்ரபந்தத்திற்கு உள்ளது.

ஜயத்யாச்ரித என்ற ச்லோகம் பூரணமான இந்த ராமாயணத் தின் ஸங்கிரஹமாயிருக்கும். மற்றும் பல ரஸங்கள் ஆங்காங்கே கண்டு கொள்வது.

16. கோபால விம்சதி

இருபத்தியொரு ச்லோகங்கள் அடங்கிய ஸ்ரீ பாகவதம் இந்த ஸ்தோத்திரம். கிருஷ்ணுவதாரத்தில் ப்ருந்தாவனத்திலும் கோகுலத்திலும் நடந்த சரிதங்களே சாதிக்கப்படுவதால் இது கோபால விம்சதியாயிற்று.

இதில் அடங்கியிருக்கும் பொருள் எவ்வளவு என்று யாராலும் சொல்ல இயலாது. ப்ருந்தாவனத்தே கண்டோமே என்று கண்டமையைப் பேசி தனது திரு மொழியைத் தலைக்கட்டினுள் ஆண்டாள். அங்கு தொடங்குகிருர் தேசிகன். ப்ருந்தாவனசரம் என்பதை முதலில் கூறினுர்.

வந்தே என்று துடங்கி யௌவதப்ரியம் என்று இணைத்தால் பொருள் ஏற்படும் அழகையும் கவனிக்க வேண்டும்.

ஆங்காங்கு-காண்பிக்கும் ரஸங்கள் அளவிலடங்கா. நாதஸ்ய நந்தபவநே நவநீதநாட்யம் என்ற ஒரு ச்லோகத்திற்கு ஈடான ச்லோகமும் இருக்க முடியுமோ !

இங்கு நாதமுனிகளின் நினைவும் ஸ்வாமிக்கு. நந்த பவனம்-ஆனந்த நிலய விமானம். நவநீத நாட்யம் என்ற சொல்லில் எத்தனை விதமாக ஸமாஸம் பண்ணினுலும் ரஸபுஷ்டியை நினைத்தால் ரஸிகனுக்கு வேறு என்ன வேண்டும். தத்வ நவநீதம்-ரஹஸ்ய நவநீதம் என்ற இரண்டு ரஹஸ்யங்களிலும் உள்ள முடிவு ச்லோகங்களை ஸேவித்து இதோடு இணைத்துப் பார்த்தால்தானே இதன் பெருமை விளங்கும். நாட்டிற்கு தாளம் மட்டுமே முக்யம்-ஸத்ஸம்ப்ரதாயம்-தயிர் முதலியன.

வஸுதேவவதூஸ்தநந்தயம், யமுநாஸாக்ஷிக யௌவனம், அதராஹித சாருவம்ச நாளா:, கிதவ: கோபி கௌமாரஹாரீ, கரகமலயோ: அஞ்சலிம் யாசமாந: என்ற ச்லோக பாகங்களை அனுபவிக்க வேணும்.

தனக்கும் மனது வேறு எங்கும் செல்லவில்லை என்கிருர். மய்யேவ மந ஆதத்ஸ்வ என்று சொன்னவன் ஆயிற்றே! இந்த ஸ்தோத்திரத்தைப் படிப்பவன் திவ்யவேணு ரஸிகனை ஸாக்ஷாத்கரிப்பவன் என்று தலைக்கட்டுவது மிக மிக அழகு.

17. பகவத் த்யாந ஸோபாநம்

அரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை அடைய பக்தி மிக முக்யம். அந்த பக்தியை அடைய இந்த ஸோபானம் படிக் கட்டு மிகவும் முக்யம்.

த்யானம் என்று சொன்னதால் யோக சாஸ்த்ரத்தை எவ்வாறு இதில் கையாண்டிருப்பர் என்பதும், அதனுடைய பர்வாக்களின் பெருமை யாது என்பதும், அவ்வெம்பெருமான் ஸித்தோபாயமாக அமைந்தது போலவே, அவன் திருமேனியும் ஸாத்யோபாய புஷ்டியை எவ்வாறு செய்து வைக்கிறது என்பதையும் இங்கு அழகாக அனுபவிக் கலாம்.

அந்தர்ஜ்யோதி: திவ்யம் சக்ஷு: த்ருச்யதே என்பது முதல் ச்லோகம் திவ்ய சக்ஷுஸ்ஸாலேயன்றோ திவ்ய சக்ஷுஸ்ஸான எம் பெருமானை ஸேவிக்க இயலும். பார்ப்பதும் பார்க்கப்படுவதும் கண் என் பதில் ரஸம்.

திவ்யதர்சனம், பாதாம்போஜ ப்ரதிபலனம், ஜங்க்காதர்சனம், ஊருயுக்ம நிர்வேசம், ஸம்ப்ரீணனம், ஸந்தாபசமனம், த்ருப்தாநுபவம் ஸ்வாகத, உதாரநேத்ர காடயோகம், சேதஸ்த்திதி என்று தனித்தனி யாக அனுஸந்தித்து, அனைத்தையும் ஒரு ச்லோகத்தில் காட்டி, மத்யே ரங்கம் மம ச ஹ்ருதயே வர்த்ததே என்று அழகாக தலைக்கட்டப் படுகிறது.

தேசிகன் பெருமையைக் காட்டுவது கடைசி ச்லோகம். ரஸிகர் கள் நிறைந்தது ரங்கம். ரங்கத்திலே அமைக்கப்பட்டது இந்த த்யாந ஸோபாநம் என்பதையும் நினைக்க.

விமலமநஸா என்று தான் சாதிப்பது தனது அனகத்வத்தைக் காண்பிக்கும். த்யானத்திற்கு முதல்படியாக வேண்டுவது மனதின் தூய்மையே. இந்த ஸ்தோத்திரத்தை சொன்னாலேயே திடமான பக்தி ஏற்படும் என்கிறார்.

இதையும் அஸூயையில்லாமல் பக்தியுடன் ஸேவிக்க வேண்டுமே! பல வ்யாக்யான ரஸங்கள் விரிவில்.

18. ஸ்ரீஸ்துதி

ஸ்ரீஸ்துதி என்ற இந்த ஸ்தோத்ரம் ஒப்பற்றது. பிராட்டியை 25 ச்லோகங்களால் துதிக்கின்றார். துதியாக மட்டுமில்லாமல் நிஷ்கர்ஷம் செய்ய வல்ல சாஸ்திரமாக இது அமைந்துள்ளது.

இதற்கு முன்னால் பல பெரியோர் பிராட்டி விஷயமாகத் துதிகளை இயற்றியுள்ளனர். அவற்றுள் இருக்கும் ஒருமைப் பாட்டையும்காட்டி, ஏற்படும் கலக்கங்களை அறவே அகற்றியும் திவ்யமாக அமைக்கப்பட்ட தனி நூலாகும்.

காவியரஸம் அதிகமா, சாஸ்திர நிர்ணயம் அதிகமா என்றால் எது அதிகம் என்பதை வரையறுத்துச் சொல்ல இயலாது. மாநாதீத என்றாரம்பித்த இது மாநாதீத வைபவத்தோடு விளங்குகிறது.

அழகான வாக்கியங்கள்:-ஸகல புவந ச்லாகநீயோ பவேயம், ஸேவாபேக்ஷா, பவதீபாதலாக்ஷாரஸாங்கம், ப்ரம்ஹேசாத்யா தததி யுவயோரக்ஷ சாரப்ரசாரம், தம்பதீ தைவதம் நः, வாஞ்சிதாநாம் வஸூநாம், ஸ்மேர வக்த்ரா விபாஸி, ஸகல புவந ப்ரார்த்தநா காமதேனு:, என்பன.

பிராட்டியை கஜலக்ஷ்மியாக ஸேவிப்பது வழக்கும். பிராட்டிக்கு யானைகள் அபிஷேகம் செய்கின்றன. இதை இந்த நூலில் பதின்மூன்றாவது ச்லோகத்தில் மத்திய மணியாய் அமைக்கிறார்.

குருபக்தியின் மிகுதியால் இது தானே உண்டாகியது என்றார். கலியில் இருக்கும் கலுஷமெல்லாம் போக இது ஒன்றே யமையும் என்றார். இதைப் படிப்பவர்கள் ஸார்வபௌமர்களாகத் திகழ்வர் என்றும் கூறினார். கனகதாரா ஸ்தோத்திரம் என்று இது அழைக்கப்படுகிறது. பிரம்ஹசாரிக்கு விவாஹத்திற்காக **யோகாரம்ப** என்ற ச்லோகத்தை அனுஸந்தித்துப் பணத்தை வர்ஷிக்கும்படி செய்தது உலக மறிந்தது.

இதில் அடங்கிய சாஸ்திரார்த்தம் ஸ்ரீ தத்வ நிர்ணயம். ஸ்வரூபம் ரூபம் குணம் விபவம் ஐச்வர்யம் என்பது ஐந்து விஷயங்கள். இவற்றை இங்கு நிரூபிக்கிறார். 4-வது ச்லோகம் தொடங்கி பத்தாவது

ச்லோகம் வரை ஸ்வரூபம், 11-வது ச்லோகம் முதல் 14 ச்லோகம் வரை ரூபம், 15-வது ச்லோகம் முதல் 19-வது ச்லோகம் வரை ஔதார்யம், 20 முதல் 24 வரை தனது விருப்பம் 25-வது ச்லோகத்தில் பல ச்ருதி என்பது ஸங்கதியாம். விபவைச்வர்யங்கள் இதனுலேயே ஸித்தங்களாகும்.

19. "பூஸ்துதி"

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் அருளிச்செய்த ஸ்தோத்ரங்களில் பூஸ்துதி என்னும் இந்த ஸ்தோத்திரம் மிகவும் அழகாக அமைந்தது. ஒரு காரண விசேஷத்தைக் கொண்டு 33 ச்லோகங்கள் அருளிச் செய்யப்பட்டுள்ளன. ஆராயும் சீருடையவர்கள் ஆராய்ந்தறிக.

முப்பத்தி மூன்றுவது ச்லோகம் பல ச்ருதியாக அமையும். அஸ்ய ஈசாநா ஜகதோ விஷ்ணுபத்நீ, என்ற மந்த்ர கண்டத்தை அமைத்து, நிரூபணம் பண்ணுவது அழகு. யம் காமம் காமயதே தமேதேநாப்நோதி என்பன போன்ற வாக்யங்களும் அவ்வாறே அமைக்கப்படுகின்றன.

தயா சதகத்தில் திருமாமகள், மண்மகள், நப்பின்னை ஆகியோர்க்கு ஒவ்வொரு ச்லோகம் அநுஸந்தானம் பண்ணினர். மூன்று தேவியர்க்கும் தனி ப்ரபந்தங்கள் அருளிச்செய்ய நினைத்து அவ்வாறே மூன்று ஸ்துதிகளை அளிக்கின்றார். நப்பின்னையின் தன்மையை கோதையிடம் காண்பர் போலும்!

முப்பது பாடினவளுக்கு 29 ச்லோகங்களும், 32 கேட்டவளுக்கு ஒரு முப்பத்து மூன்று ச்லோகங்களும், 25-வது தத்துவமான ஜீவர்களை வாழ்விப்பவளுக்கு 25 ச்லோகங்களும் அமைந்துள்ளன.

மூன்று ஸ்தோத்ரங்களிலும் உள்ள ஒற்றுமை வேற்றுமை நயங்களை என்னே சொல்வது! பக்தியினுல் இம்மூன்றுத் துதிகளும் வரையப்பட்டன. மூன்றுத் துதிகளிலும் வேங்கடேசன் என்ற திருநாமம் இடம் பெற்றுள்ளதை உற்று நோக்க வேண்டும்.

பூஸூக்த வராஹ புராணங்களை அடிப்படியாகக் கொண்டு அனுபவிக்கப் புகுந்தால் இதன் ரஸத்தை ஒருவாறு அறிய இயலும். அபிஷேகம் வாத்ய விசேஷங்கள் முதலியவற்றை நிரூபணம் பண்ணும் கவியின் நயம் தான் என்னே!

விச்வம்பரை என்பது பூமிப்பிராட்டியின் திருநாமம். இத்திருநாமத்தில் பல ரஸங்கள் உள்ளன. விச்வமும் தான், விச்வத்தை பரிப்பவளும் தான். விச்வனை எம்பெருமானால் பரிக்கப்படுபவள் அல்லது அவனை அர்ச்சாதிஸமாதிகளில் பரிப்பவள் என்பதால் இவ்வாறு திருநாமம் அமைந்தது. ஆறு விசேஷணங்கள் ஷாட்குண்ய ஸம்பத்தியைச் சொல்லும். கல்பலதையாக நிரூபணம் பிராட்டியார் யாவருக்குமேயாம். எம்பெருமான் ஸ்வேச்சையாக வராஹ வடிவெடுத்தால் தானும் அப்படியேயாம். காமதேனுவாயிருப்பது பசுவின் உருவில் பூமி எம்பெருமானை அடைவதைக் குறித்திடும். பிராட்டியை அகில புவந ப்ரார்த்தநா காமதேனு: என்று முடிவில் நிரூபித்து இங்கு முதலிலேயே காட்டும் ரஸத்தை அனுபவிக்கவேண்டும். விச்வஸ்ய என்பதற்கு மஹா விச்வாஸம் கொண்டு என்றும் கொள்க. ஆகிஞ்சின்யம். அனன்ய கதித்வங்கள் இடம் பெற்றன.

20. கோதாஸ்துதி

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த கோதாஸ்துதியின் பெருமையை அறிய யாரே வல்லார்! இது கோதைப் பிராட்டியின் ஸ்துதியாக அமைந்து. கோ-தை-வாக்கை யளிக்கின்ற துதியாகவும் விளங்குகிறது. இத்துதியின் அமைப்பு ஸ்வாமியையே பரவசப்படுத்தியது. அதன் பயனாக ஸ்வாமியே இறுதி ச்லோகத்தில் பஹுகுணங்கள் அமையப்பெற்றதால் இது பஹுரமணீயமாக இருக்கின்றது என்று அறுதியிட்டார்.

இது ஸ்தோத்ரமாக இருந்தாலும் இது அழகானதொரு கல்யாண காவியமாகும். கோதைப் பிராட்டியின் அவதாரம், பால்யம், விவாஹம்-அதற்குத்தக்க அனுபவங்கள். இத்தனை ரஸங்களையும் இங்கு காணலாம்.

நிரூபணங்களின் அழகு மற்றைய ஸ்தோத்ரங்களை விஞ்சியிருக்கும். இவ்வாண்டாளை தூய திருமகள் என்றார் ப்ரபந்தசாரத்தில். இங்கு பூமியின் அம்சம் அத்தனையும் பெற்றாள் என்பர். ஸாக்ஷாத் க்ஷமாம் என்கிறார். தாயின் குணம் தானே பெண்ணுக்கு என்பர் போலும்! இவ்வாறு திருமகளாகவும் நிலமகளாகவும் இருக்கும் இவளே பின்னையின் பெருமையையும் அடைவாள் போலும்.

இச் சீர்த்தியை இம் மூவர் விஷயமாக அமைந்த ஸ்தோத்திரங்களில் காணலாம்.'' அநந்யசரண: த்வாம் சரண்யாம் ப்ரபத்யே, (ஸ்ரீஸ்துதி) விச்வம்பராம் அசரண: சரணம் ப்ரபத்யே, (பூஸ்துதி) கோதாமநந்ய சரண: சரணம் ப்ரபத்யே இவ்வடைவில் ஒவ்வொரு ச்லோகத்தையும் கண்டு கொள்ளவேண்டும். ப்ரணய விஷயமாகப் பேசும்பொழுது, நிஷ்ப்ரத்யூஹ ப்ரணயகடிதம், (ஸ்ரீஸ்துதி), ப்ரணயாநுபந்தாத்–பூஸ்துதி, ப்ரணயாநுரோதாத் கோதாஸ்துதி. இவைகளின் அமைப்பையும் காணலாம். தௌர்கத்ய துர்விஷ விநாச ஸுதாநதீம் த்வாம் என்பதை பூஸ்துதியிலும் கோதாஸ்துதியிலும் காணலாம். இவ்வகையில் பலரஸங்களைக் கொண்டது இத்த கோதாஸ்துதி.

நந்தன வனத்தில் தோன்றிய கல்பவல்லி என்பதும், மௌனமாக இருத்தலைத் தொலைக்கும் தன்மையை இயற்கையாகவே உனது குணங்கள் பெற்றன என்பதும், ப்ரசன்னமாயும் மதுரமாயும் உள்ள வாக்கை சம்விதானம் பண்ணவே கவிகளுக்கு வாக்குகள் உதிக்கின்றன என்பதும், வீணையின் ஓசையை யொத்த வாக்குகள் ஆண்டாளுடையவை என்பதும், ஆறாக நின்ற ஆண்டாளை ஆறு ஆறுகளாக அனுபவிப்பது என்பதும், செவியைப் புவியின் புற்றாக முனி நிரூபணம் பண்ணி, அதிலிருந்து உண்டானவருடைய வாக்கே இனிமையானால் திருவாக்கிலிருந்து தோன்றியவை தேனிலும் இனியவை யன்றோ என்பதும், உனது பெற்றோரெல்லாம் உன்னைக் கண்டு உன்னைப்போல் ஆக நினைத்து, மனதை ச்ருங்காரமயமாக்கிக் கொள்கின்றனர் என்பதும், நீ பிராட்டியின் உடன் பிறந்தவள் என்பதும், உனது தந்தை பிறருக்குக்கிட்டாத பெரிய என்ற பெயரை அடைந்தார் என்பதும், தென் திசையே உனது அவதாரத்தினால் உத்தரமாக ஆகிவிட்டது என்பதும், கங்கை முதலிய நதிகள் எல்லாம் உனது திருநாமத்தைக் கொண்டபடியால் கோதாவரியில் ஸ்நானம்செய்து தமது பாபங்களைப் போக்கிக் கொள்கின்றன என்பதும், தோழிகள் எல்லாம் பரிஹாஸமாகப் பேசுவது உனது தத்வத்தை நன்றே காண்பிக்கும் என்பதும் வைஜயந்தி என்று திருநாமம் பெற்று வெற்றியுடன் வீற்றிருந்த

மாலையும் நீ சாத்திக் கொடுத்த மாலையைப் பெற்ற பிறகு வண்டுக்களி ஞல் புறக்கணிக்கப்பட்டு விட்டது என்பதும், அவையே அழகான மயில் தோகையில் ஆன குடையென அமைந்து விட்டன என்பதும், நீ சூடிக்கொடுத்த மாலை முகுந்தனுடைய கிரீடத்தை அடைந்து விளங்குகிறது என்பதும், கல்யாண விருந்தில் வண்டுகள் சூடிக் கொடுத்த மாலையிலிருந்த மதுவை பானம் பண்ணிப் பாடிக் கொண் டிருப்பது ஸ்வயம்வர மங்களவாத்யமாக அமைந்தது என்பதும், மும் மணம் பெற்ற போதிலும் உனது மாலையை சிரஸிஞல் தரித்து தனிப் பட்டதோர் மணத்தைப் பெறுகிருன் அரங்கன் என்பதும், நீ ஆசைப் பட்டது போல், அவனும் உனது மேலாடையைத் தனது தலையில் தரித்துக் கண்டவர் களிக்கும்படி ஸேவை ஸாதிக்கின்ருன் என்பதும், ஸர்வகந்தனுன போதிலும் உன்ஞலேயே தனிப்பட்ட ஆமோதத்தை அடைகிருன் என்பதும், உனது பார்வைகள் கரு நெய்தல் மாலையாக அமைந்து விட்டன என்பதும், மாலை மாற்றம் அழகினைப் பேசும் போது, குறைவு, அதிகம் சமம் என்ற வாதங்கள் தோன்றுகின்றன என்பதும் நீ அருகில் சேர்ந்தபடியால் எம்பெருமான் திருமேனி மயிலின் கழுத்தின் நிறத்தைப் பெற்று அடைந்தவர்க்கு மங்களங் களைச் செய்கின்றது என்பதும், மனு முதலிய மன்னர்கள் யாவரும் உன்னை ஆராதித்தே சாச்வதமான ராஜ்யத்தை அடைந்தனர் என் பதும், நீ அருகில் இருப்பதால் தான் எம்பெருமான் எம் பக்கல் முகம் காட்டும் என்பதும், உனது புருவநெறிப்பு எம்பெருமான் ஸ்வாதந்த்ர் யத்தைப் போக்கி அவனுக்கு போகத்தையும் அளிக்கும் என்பதும், நீயே அமுத நதியாக விளங்குகிருய் என்பதும், தவறு செய்திடினும், தாயே போல் நீ காக்கின்ருய் என்பதும், என்றும் மனதில் கோதை விளங்கவேண்டும் என்பதும். இக் கோதா ஸ்தியில் அடைவாகப் பேசப்பட்டுள்ளன.

ஆருவது ச்லோகத்திற்கு நிகர் உண்டோ!

21. ஸுதர்சநாஷ்டகம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த ஸ்தோத் திரங்களில் திவ்யாயுதமான ஸுதர்சனுழ்வான் விஷயமான ஸ்தோத் திரம் இது.

எம்பெருமானைப் போலே எம்பெருமானைச் சேர்ந்த யாவருமே துதிக்கப்பட வேண்டியவர்கள். ஆதலால் ஸ்வாமி ஸுதர்சனுஷ்டகத்தை அருளிச்செய்தார். வ்யாதி-பயம், குழப்பம், திகிலடைந்த நிலை ஆகிய நிலைகளில் இதை அனுஸந்தானம் பண்ணினால் இன்றியமையாத மன நிம்மதியை அடைந்து அவர்கள் நினைத்த காரியத்தை அடைவர்.

சததூஷணியில் அடிக்கடி ஸ்வாமி ஹயக்ரீவனை த்யானித்து வழிபடுவார். பிற ஸகல மதங்களையும் ஜெயிக்க முற்பட்ட காலத்தில் திருவாழி யாழ்வானையே வழிபடுவதைக் காண்கிறோம். திருவாழி யாழ்வான் விஷயமாக இரண்டு பாசுரங்கள் முதலிலும் முடிவிலும் பரமத பங்கத்தில் இடம் பெற்றுள்ளன.

நமக்கும் பூவின்மிசை யன்பனுக்கும் வெற்றியைத் தரும் ஆழியாழ்வானுக்கு வெற்றிப்பா தானே நாம் பாட முடியும்!

அஹிர்புத்னியன் ஸுதர்சனுழ்வானிடம் ஈடுபட்டு ஸகல விதமான ஆராதன ப்ரகாரங்களையும் ஸம்ஹிதையில் பேசியிருக்கிறன்.

அறுகோணத்தில் திவ்யாயுதங்களோடு எழுந்தருளி யிருக்கிறன். இதில் ஏழாவது ச்லோகம் மந்த்ரரூபம் என்பர். இதைப் பாராயணம் செய்பவர்க்கு எத்தகைய பயமும் ஏற்படாது, வெற்றியும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

22. ந்யாஸதசகம்

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனால் அருளிச்செய்யப்பட்ட சரணுகதி சாஸ்த்ர ஸ்தோத்ரங்களில் ந்யாஸதசகம் என்ற இந்த க்ரந்தம் நெடுவரையின் உச்சிமேல் நிற்பதாம். இந்த ஸ்தோத்ரத்திற்கு நிகர் இதுவேயாம்.

பூர்ண சரணாகதி வித்யையை உலகுக்கு அளித்தவர் ஸ்வாமி தேசிகனே. ப்ரபதந கலா ஜந்ம ஜலதி: என்று வேங்கடாத்வரி இவரைக் காட்டித் தந்தார். இந்த ஜவத்தை ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திகள் வாயிலாக அநுபவிக்கும் பேறு நம்முடையதாம்.

சரணாகதியை விளக்க அமைந்த ஸ்தோத்திரங்களில் மூன்றும் ஒவ்வொரு திருஷ்டியில் பெரியவை, சரணாகதி தீபம் தூப்புலில் தோன்றியதால் சரணாகதி தீபிகை தீபப்ரகாசன் விஷயமாயிற்று போலும். எம்பெருமானார் சரணாகதி அநுஷ்டானம் பண்ணியது பெரிய பெருமாளிடம் ஆதலால் ந்யாஸதிலகம் அங்கு அவதரித்ததாம். தான் சரணாகதி அநுஷ்டித்த படியால் ந்யாஸ விம்சதி தேவப்பெருமாள் விஷயமாக அநுஸந்திக்கப் பெற்றதாம்.

ஸ்வாமியின் க்ரந்தங்கள் யாவுமே சரணாகதி ஸௌரபத்தோடு விளங்குபவை, ஆனால் ஒவ்வொன்றும் தன்னேற்றம் பெற்றிருக்கும். தேவப்பெருமாளிடம் அநுஸந்தித்த ஸ்தோத்ர சரணாகதி சாஸ்த்ரங்கள் மூன்றில் ந்யாஸதசகம் அடைக்கப்பத்து என்பவை மிக மிக ஸரளமானவை.

ந்யாஸதசகம் அநுஷ்டான காலத்தில் அர்த்தத்தை ஸ்மரிக்கச் செய்வதால் சரணாகதி மந்த்ரம் என்ற நிலையையும் அடைகிறது. சரணாகதி லகூபாயமானது போல் சிறிய அநுஷ்டுப்பில் அமைந்து சிறிய சிறிய சொற்களாக நின்று பெருமையோடு விளங்கும் இதில் இல்லாத ரஸமோ, ரஹஸ்யமோ சாஸ்த்ரமோ, காவ்யரஸமோ, வேறு எங்கு காணப்பெறும்!

முதல் ச்லோகம் தேவப்பெருமாள் அருளிப் பாடிட்டதாகவும் இரண்டாவது ச்லோகம் முதல் ஸ்வாமி அநுசந்தித்ததாகவும் கொண்டாலும் நிறைவு அதிகம். அரங்கத்தில் எம்பெருமானாருக்குப் போலே இங்கு ஸ்வாமிக்காம்.

அஹம் என்று தொடங்கி நிர்ப்பர: என்று முடிவது மிகவும் ரஸம். ஆங்காங்கு சில ரஸங்கள் காட்டப்பட்டுள்ளன.

23. ஷோடசாயுத ஸ்தோத்ரம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் அருளிச்செய்த ஸ்தோத்ரங்களில் திவ்யாயுதங்களின் வைபவத்தை விளக்கும் பாணி யில் அமைந்தது இந்த ஸ்தோத்ரம்.

எம்பெருமான் திருமேனியை அடைந்த ஆயுதங்கள் திவ்யா யுதங்கள் என்று அழைக்கப்பட்டு நிறம் பெற்றன. அவற்றுள் ஸுதர் சனாழ்வான் ஆயுதங்களுக் கெல்லாம் அரசன் என்ற பொலிவுடன் விளங்குவார்.

எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடவந்த பெரியாழ்வார் ''வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு'' என்று இவருக்கு மங்களாசாஸனம் செய்தருளினார்.

எம்பெருமானைப் போலே எம்பெருமானைச் சேர்ந்தவர் நமக்கு உபாஸ்ய கோடியில் சேருவர். லோகாநுக்ரஹத்திற்காக இருக்கும் அவர்களை ஸ்தோத்ரம் பண்ணுவது ஸ்வரூபமே.

இங்கு எழுந்தருளியிருக்கும் சக்கரத்தாழ்வான் பதினாறு திருக் கரங்களையுடையவர். ஒவ்வொரு கரத்திலும் ஒவ்வொரு ஆயுதம் விளங்குகிறது. ஒவ்வொன்றின் தன்மை பெருமைகளை அறிய இந்த ஸ்தோத்ரம் பெரிதும் பயன்படும்.

எம்பெருமானுடைய திருக்கரத்தில் வீற்றிருப்பதால் ஸகல ஸௌபாக்யங்களையும் பெற்று, தானும் பதினாறு கரங்கள் கொண்டு பதினாறு திவ்யாயுதங்களை ஏந்தி நிற்கின்றார்.

இந்த ஸ்தோத்ரம் திருப்புட்குழியில் பயங்கரமான வியாதி பரவின பொழுது பரிஹாரம் காண இயலாத அவ்வூர் வாஸிகள் ஸ்வாமியினிடம் விண்ணப்பம் பண்ண, ஸ்வாமியும் இந்த ஸ்துதியை அருளிச்செய்து அநுக்ரஹ ரூபமாக அளித்தார். இதைப் பாராயணம் செய்த பிறகு அவ்வூரில் வ்யாதிபயம் நிவ்ருத்தி ஆயிற்று என்றும் பெரியோர் கூறுவர்.

இதில் காணப் பெறும் அபூர்வமான ரஸங்கள்.

(1) சக்கரத்தை யுடையவனும் சக்ர ரூபத்திலேயே உள்ளான்.

(2) சக்ராயுதத்திலிருந்து தான் ஸகலாயுதங்களும் தோன்றின.

(3) சக்ரத்தாழ்வான் கையிலும் பாஞ்சஜந்யம் என்ற சங்கம் விளங்குகிறது.

(4) எம்பெருமான் தான் வஜ்ரமாக இருப்பதாகச் சொன்னது இந்திரன் கையில் உள்ள வஜ்ரத்தைக் குறிக்காது. இது ததீசி முனிவரின் அஸ்த்தியாலானதன்று.

(5) விச்வக்ஷேத்ர க்ருஷீவலன் எம்பெருமான்.

(6) சூலாயுதம் சிவனுக்குத்தான் என்பதில்லை.

(7) இதை ஸத்துக்கள் பாராயணம் செய்தால் ச்ரேயஸ்ஸை

அடையலாம்.—என்பன போன்றவை.

''அஸ்த்ர க்ராமம் க்ருஹாண'' என்றார் விச்வாமித்ரர். சக்கரவர்த்தித் திருமகனும் ''மாநஸா மேபவிஷ்யத்வம்'' என்று விடை பாரித்தார். திருவாழியாழ்வானே அவ்வாறின்றி பதினாறு ஆயுதங்களையும் தானே சுமந்து ஷோடசவர்ண ஸுவர்ணம் என்னலாம்படி நிறம் பெற்று விளங்குகின்றார்.

யத்கரோஷி என்ற வகையில் எம்பெருமான் நியமிக்க நாமும் யத்கரோமி என்று மாற்றி அனுஸந்தானம் பண்ணவேண்டும் என்று ஸ்வாமியே ஸாதிப்பது போல் பிறருக்கு அநுக்ரஹ ரூபமாக அருளிச் செய்யப்பட்ட இந்த ஸ்தோத்ரத்தை ஸ்வாநுஸந்தாநமாக மாற்றி அநுஸந்திப்பது முறை.

''உங்களைக் காப்பாற்றட்டும்'' என்ற முறையில் பேசப்படுவதால் நாம் ஸேவிக்கின்ற பொழுது உங்களைக் காப்பாற்றட்டும் என்பதும் பொருந்தாதாதலின், இதை மாற்றி நம்மைக் காப்பாற்றட்டும் என்று அநுஸந்திக்க வேண்டும்- **வ:** என்று வந்த இடமெல்லாம் **ந:** என்று மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும். பவதாம் என்று (5-17) வரும் இடங்களில் ***அஸ்மாகம்*** என்று படிக்க வேண்டும்.

24. கருடதண்டகம்

இந்த ஸ்தோத்திரம் ஸ்வாமியினிடம் ஸர்பஜீவி வாதத்திற்கு வந்த பொழுது அவனை ஜெயித்த ப்ரகரணத்தில் அவனை உஜ்ஜீவிக்கப் பண்ண அருளிச் செய்ததாயிருக்கும். இது காஞ்சீபுரத்தில் அனுஸந்திக்கப் பட்டது என்பர்.

கருடனை துதிக்கும் பொழுதும் வேதாந்த புஷ்கலமான அர்த்தத்தைக் காண்பிப்பது மிகவும் அழகு ச்ருதிஸிந்து ஸுதோத்பாத மந்தராய என்கிறார். அகில வேத நீடாதிரூடம், ஸங்கர்ஷணாத்மந், ந கஸ்சித் ஸமஸ்தே நமஸ்தே: புநஸ்தே என்பது தாமே விளங்கும்.

கருத்மதே என்று முதல் ச்லோகத்தில் முடித்து கருடம் என்று உடனே ஆரம்பிக்கப் படுகிறது. நீராஜிதம் என்று முடித்து ஜய என்று ஆரம்பிக்கப் படுகிறது நம: என்று முடித்து நம: என்றே ஆரம்பிக்கப் படுகிறது. மே என்று முடித்து மநு: என்றாரம்பம். இதில் உள்ள ரஸத்தை அனுபவிக்க.

அறுபத்தி மூன்று கணங்களையுடைய சரணங்கள் கொண்டது. இது ப்ரதிபாதிக்கப்படும் கருடனைப் போலவே, எதிரிகளின் கூட்டத்தை முறியடிக்கும்.

வேங்கடேசன் என்ற வேதாந்தி எழுதியது என்கிறார். கவி எழுதினான் என்றால் தனது திறமையைக் காண்பிக்க என்று நினைக்கலாம். ஆனால் கருடனுடைய த்ருப்தியே உத்தேச்யமானாலும், பாரமைகாந்த்ய நிலைக்கேற்ப கருடத்வஜனின் ப்ரீதி-மகிழ்ச்சிக்கே, இது பாடப்பட்டது என்கிறார்.

இதில் பலச்ருதி விசித்திரமானது எந்த எந்த ஸித்தியை யார் யார் அபேக்ஷித்தாலும் அதையெல்லாம் கொடுக்கும் பெருமையுண்டு என்கிறார்.

தான் வேண்டும் அழகு:-அத்யாத்ம வித்தையை அனுக்ரஹிக்க வேணும் என்கிறார். தத்வத்தில் ஸ்திரமான தெளிவு ஏற்படவேண்டுமென்று வேண்டுகிறார். பக்தி வளரும்படிச் செய்ய வேண்டுமென்றும் கூறித் தாமே கருட தண்டகம் என்றும் நாமகரணம் செய்தருளுகிறார். (வேதஸ்வரூபீ என்பதைக் காட்ட-கிர-உடச் என்ற அனுசாஸனத்தை நினைக்க வேண்டும்).

25. ந்யாஸ விம்சதி

இந்த ந்யாஸ சாஸ்திர ப்ரமேய நிஷ்கர்ஷக்ரந்தம் திருப்பதியில் அனுஸந்தித்ததாக இருக்கும். காஞ்சியில் கடைசி ச்லோகத்தைச் சேர்த்து அனுஸந்திக்கும் பழக்கம் இருந்து வருகிறது.

விம்சதி லக்ஷணி என்று சொல்லப்படும் பூர்வோத்தர மீமாம்ஸை களினுல் தெளியவேண்டியது, நிறம் பெறச் செய்வதுமான பெருமை இதற்கு உண்டு.

ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே என்று தொடங்கி தேசிக லக்ஷணம் கூறப்படுவதும், இரண்டாவது ச்லோகத்தில் ஆசார்ய: உபாஸ்ய: என்பதும் ஸத்புத்தி: என்று தொடங்கி சிஷ்ய லக்ஷணம் கூறப்படுவதும், சிஷ்யன் ஆசார்யனிடம் க்ரஹிக்க வேண்டிய விஷயம் இத்தகையது என்பதும், மற்றும் பல விஷயங்களும் அழகாக நிரூபிக்கப் படுகின்றன.

பதினெட்டாவது ச்லோகம், சரணுகதி செய்பவன் அனுஸந்திக்க வேண்டிய முறையைக் காண்பிக்கும். விம்சத்யா வ்யவ்ருணுத ஸூதியாம் ச்ரேயஸே வேங்கடேச: என்று நிறைவைக் காண்பிக்கின்ருர். இருபதாவது ச்லோகம் முடிவு ச்லோகம் அதில் கடைசிபதம் ப்ரபந்ந: என்பது.

இது வேதாந்தாசாரியனுல் சொல்லப் பட்டது என்ருர். தோன்றியவாறெல்லாம் சொல்லிவிடவில்லை, இதற்கு முன்பிருந்த மஹான்களின் ஸம்வாதம் இருக்கிறது என்பதையும் காட்டுகின்ருர்.

இந்த க்ரந்தத்திற்குத் தானே வ்யாக்யானம் பண்ணி விடுகிறேன் என்ருர். ஆனுல் இதில் திங்மாத்திரம் தான் காட்டப்பட்டிருக்கிறது என்றும் சாதிக்கின்ருர்.

இந்த க்ரந்தத்தில் உள்ள ஒரு ச்லோகம் பிற சம்பிரதாயத்தில் கையாளப்பட்டு பலராலும் பல மொழிகளிலும் வ்யாக்யானம் செய்யப் பட்டு வருகிறது.

26. அபீதிஸ்தவம்

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த திவ்ய ஸ்தோத்ரங்களில் அபீதிஸ்தவம் அத்புதமானது.

இந்த ஸ்தோத்ரம் அரங்கத்தில் சாந்தியை ப்ரார்திப்பதாய் அமைந்தது. ஓரொன்றுதானே யமையாதோ என்பதை இதில் உள்ள ஒவ்வொரு ச்லோகமும் மூதலிக்கும்.

இவ்வபீதிஸ்தவத்தின் அனுஸந்தானத்தின் பலமாக அரங்க நகரப்பன் முன்போலவே சாந்தானந்த மஹாவிபுதிகளையும் பெற்று இனியனாய் இன்றைக்கும் ஸேவை தந்தருள்கின்றான்.

தத்வஹித புருஷார்த்த நிர்ணய ப்ரகாரமும், உபநிஷத் வாக்கியங் களை நினைவுறுத்தும் சொற்களை அமைக்கும் சிறப்பும், வராஹ சரம ச்லோகத்தைக், காட்டும் பொலிவும். பய நிதானத்தைக் காட்டும் அழகும் உனது அனுபவவிச்சேதம் ஏற்படலாகாது என்று கூறும் மனப்பான்மையும், சரணாகதர்களின் ப்ரணயம் முறிந்தால் எம்பெரு மானுக்குத் திருவுள்ளம் பயமுறும் என்று கூறுவதும், ஸ்ரீரங்கஸ்ரீ வளர வேண்டும் என்று ஆசாஸிக்கும் அழகும், உனது திவ்யாயுதங்களை உறங்கவிடாமல் செய்து நீயே ரங்கத்தைக் காப்பாற்றிக் கொள் என்று சாதிக்கும் முறையும், பரஸ்பரம் ஹிதத்தை நாடும் பாகவதர்களின் குழாத்தின் நடுவே தனக்கு வாஸம் வேண்டும் அதுவே அவன் அளிக்கும் அபயமாகும் என்று சாதிப்பதும் பொன்னே போன்றவை.

சரணாகதப் ப்ரணய பங்கபீதோ பவான், பரஸ்பர ஹிதைஷிணாம் பரிஸரேஷு மாம் வர்த்தய என்ற ரீதியில் அமைந்த வாக்கியங்களின் அழகு தனித்ததாம்.

ஆங்காங்கு வேத சப்தங்களையும் புராண ச்லோக பாகங்களையும் இணைத்துக் கவிபாடும் இயல்பு ஸ்வாமியினுடையது. மருத் தரணி பாவக த்ரிதசநாத காலாதய: என்ற இடத்தில் பீஷாஸ்மாத் வாத: பவதே என்ற அடைவைக் காட்டுவது அழகு. ஸ்த்திதே மநஸி விக்ரஹே என்ற ச்லோகத்தில் வராஹ சரம ச்லோக சப்தங்களைக் காண்க.

ரமாதயித என்று ஆரம்பிக்கும் சுலோகத்தில் பத்து திருநாமங்கள் படிக்கப்பட்டன. இரண்டெழுத்துடைய பேர் 4. மூன்றெழுத்துடைய பேர் ஒன்று; நான்கெழுத்துடைய பேர் 3, ஐந்தெழுத்துடைய பேர் 1, ஆறெழுத்துடைய பேர் 1, என்பதையும் கவனிக்க வேண்டும்.

எத்தகைய பயமிருந்தாலும் இதை ஸேவித்தால் ஸகலவிதமான பயமும் நீங்கிவிடும்.-இதைப் படியுங்கோள் என்றும் ஸ்வாமி ஸாதிப்பதும் அழகு.

27. யதிராஜ ஸப்ததி

எம்பெருமானுர் விஷயமாக அவதரித்த ஸ்தோத்திர க்ரந்தங்களில் தலை சிறத்து விளங்குவது. எம்பெருமான் தொடக்கமாக ஆரம்பித்து குருபரம்பரையை அனுபவிக்கிருர்.

முதல் பத்து ச்லோகங்கள் இதற்கு உபோத்காதமாகவும் அமைகின்றது. 11-வது ச்லோகத்தில் ஸ்வபாவோக்தியாகப் பேச ஆரம்பித்து ஸ்ரீபாஷ்யகாரரின் ஸித்தாந்தத்தையும், அதனுல் பிற மதங்களின் கண்டனத்தையும் காட்டுவது அழகு.

க்ரய விக்ரயார்ஹதசயா ஸ்மிந்ததே, என்பதனுல் எந்தமை விற்கவும் பெறுவார்களே என்பதைக் காண்பிக்கின்ருர், அவதார ரஹஸ்யத்தைப் பேசப் புகுத்தவாறே, மூன்று விதமான நிரூபணங்களைப் பண்ணியருளிகின்ருர். விஷ்வக்ஸேனரே எம்பெருமானுர் என்றும், வேதத்தைக் காக்கவந்த எம்பெருமானே எம்பெருமானுர் என்றும், வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே: என்று காண்பிக்கின்ருர்.

பாஷ்யகாரரின் வ்யாக்யா முத்திரையில் ஸ்வாமிக்கு தனித்தொரு ஈடுபாடு. பரிமுகனுக்கும் பாஷியகாரருக்கும் தேசிகனுக்கும் ஒரே முத்திரை! இதை ஊன்றி கவனிக்கவும்.

இந்த ஸ்தோத்திரத்தில் தேசிகாவதாரம் காண்பிக்கப்படுகிறது. எழுபத்திநாலு ஸிம்மாசனுதிபதிகள் என்பதைக் காண்பிக்க 74 ச்லோகங்கள்! 71-வது ச்லோகம் முதல் நான்கு ச்லோகங்கள் வீறுடன் விளங்குபவை.

ராமானுஜ ஸம்பிரதாயத்தில் தேசிகன் ஒருவருக்கே பட்டாபிஷேகம், என்று அவரே சாதிப்பதை நினைக்க வேண்டாமோ! யதிராஜ ஸப்ததி அனைவர்க்கும் மதியைக் கொடுக்கட்டும் என்கிறார். அதில் தம்மையும் சேர்த்துக் கொண்டது என்னே!

16, 22, 25, 28, 29, 32, 38, 41, 45, 52, 62, 63, 64, 68, 70, என்ற எண்களையுடைய ச்லோகங்களை புன: புன: சேவிக்க வேண்டும்.

பம்பாஸரஸில் இளைய பெருமாள் பெருமாளை ரக்ஷித்தது போலவே அர்ச்சையில் எம்பெருமானார் எம்பெருமானைக் கைதூக்கி விட்டார் என்பன போன்ற நிரூபணங்களின் அழகு தான் என்னே!

28. வைராக்ய பஞ்சகம்

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் அருளிச்செய்த ஸ்தோத்ரங்களில் ஐந்து ரத்னங்கள் போன்ற ச்லோகங்களைக் கொண்டது இந்த ஸ்தோத்ரம்.

வைராக்கியத்தை ப்ரதான விஷயமாகக் கொண்டதால் இதற்கு இவ்வாறு திருநாமம் சூட்டப் பெற்றது. தேவம் ஸேவிதுமேவ நிஸ்சிநுமஹே என்பதால் இது ஸ்தோத்ரம் என்று கூற எவ்வித குறையுமில்லை.

வித்யாரண்யரைத் திருத்தியருள அவதரித்த ச்லோகங்களின் தொகுப்பே இந்த ஸ்தோத்ரம். இந்த ஐந்துடன் ஒன்றுன ஆறு ச்லோகங்களை ஸேவித்து வித்யாரண்யர் ஸ்வாமியினுடைய அவதார ரஹஸ்யத்தை உணர்ந்துப் பூரித்துப் போனுன் என்பதை வைபவ ப்ராசிகை காட்டும்.

வித்யாரண்யோவிவிதம் வேங்கடஸூரேர் விசோத்யவைராக்யம்
யம் விஷ்ணோ ரவதாரம் மேநே ஸவே தமாகமாந்தகுரும்

என்ற ச்லோகத்தின் வாயிலாக அறியலாம். இதை ஸாக்ஷாத் விஷ்ணுவின் அவதாரமே ஸ்வாமி என்பதை வித்யாரண்யரன்றே நமக்குக் காட்டித் தருகின்றார்!

அழகான சைலி. ஒவ்வொரு ச்லோகமும் ஒரு தனிநூல் என்று சொன்னாலும் தகும்.

வைராக்ய சதகமும் ஸஹஸ்ரமும் இதற்கு ஈடு ஆமோ! ஒரு ச்லோகத்தில் ஒரு சொல் அமைத்தால் அது அந்த ச்லோகத்திலுள்ள பிற சொற்களோடு சேர்ந்து மிகமிக அழகான கருத்துகளை வெளிக் காட்டும். ஒன்றே புகலென்று என்ற பாசுரத்தில் **திருவருளால்** என்ற சொல்போல், இந்த ச்லோகத்தில் ஏவ என்ற சொல் அழகாக அமைக் கப்பட்டது. பிற சொற்களோடு இணைத்துப் பொருள் கொள்க.

க்ஞான வைராக்ய பூஷணம் என்ற ஸ்வாமியின் ஸ்வரூப ரூப ரூபகுண விபூதிகளை நன்கு அறிய இது ஒன்று போதுமே!

தனது வாக்கு எத்தகையது என்பதைக் காட்டும் அழகு அலாதி யானது. எங்கள் வார்த்தையுள் யதிவரனார் மடைப்பள்ளி வந்த மணம் மன்னியது என்றார். இங்கு மலர்நத மல்லிப்பூவின் மணம் கமழும் வாக்கு தன்னுடையது என்கிறார். இந்த மணத்தை அனு பவிக்கும் பேறு வேண்டினாலும் கிட்டுமோ! தநம் தநம் என்று சொல் லித் துறவியும் ஜபம் செய்து வரும் நிலையைப் பரிஹசித்து தநம் தநம் என்று ஓயாது காதில் விழும்படியாக நான்காவது ச்லோகத்தை அமைக்கின்றார். பைதாமஹமான வஸ்து தனமாக எற்றைக்கு முள்ளது என்று தலைக்கட்டுகின்றார்.

29. பாதுகா ஸஹஸ்ரம்

ரங்கநாதனின் பாதுகை விஷயமாக ஒரே இரவில் எம்பெரு மானாலும் செய்ய இயலாத ஸ்தோத்திரத்தைச் செய்தது என்னே! ஸர்வக்ஞனாயிருந்தாலும் ஒரு யாமத்தில் இத்தகைய நூலைச் செய்ய இயலாது. இவ்வகையான ஸாஹஸத்தைத்தான் காட்டிக் கொடுக்கவே தேசிகனாக எம்பெருமான் தோன்றினான் போலும்!

தேசிகன் எழுதுகின்றார். எம்பெருமானும் பிராட்டியும் தூக்க மில்லாமல் ச்லோகங்களை எண்ணிக் கொண்டு உட்கார்ந்திருக் கின்றனர் என்றால் இதன் பெருமையை என்ன வென்று சொல்ல இயலும்! பாதுகைகளைப் பற்றி ஆயிரம். இதுவும் ஒரே இரவில்!

இதில் 32 பத்ததிகள். இந்த பத்ததியில் அனேக ரசப் பொலிவுகள். பாதுகையை வ்யாஜமாக வைத்துக் கொண்டு ஆழ்வாருடைய ஸ்தோத்திரம்.

நிஸ்சேஷம் அம்பரதலம் என்று சாதிப்பது எம்பெருமானுக்கல்ல. ஆயின் இப் பாதுகா ஸஹஸ்ரத்திற்கு. இது அவ்விதமே எழுத்துக்கெழுத்துப் பொருந்துமாம்.

ப்ரஸ்தாவம், ஸமாக்யை, ப்ரபாவம், ஸமர்பணம் அதிகாரம், அபிஷேகம், புறப்பாடு, வந்திபாடம், ச்ருங்காரம், ஸஞ்சாரம், புஷ்பம், பராகம், நாதம். ரத்னஸாமான்யம், பஹுரத்னம், பத்மராகம், முத்து, மரகதம், இந்திர நீலம், பிம்ப ப்ரதிபிம்பம், காஞ்சனம், சேஷஸமாதி, த்வந்த்வம், ஸந்நிவேசம், யந்த்ரிகை, ரேகை, ஸுபாஷிதம், ப்ரகீர்ணம் சித்ரம், நிர்வேதம் பலம் என்றவை பத்ததியில் க்ரமமாகக் கையாளப்பட்டன.

ஸ்வாமி கண்டையின் அம்சமாதலால், நாதபத்ததியில் 100 ச்லோகங்கள் அமைத்தார் போலும். இந்த நாதபத்ததிக்கு நிகரான ஸம்ஸ்க்ருத வாங்மயம் காண்பதரிது. பத்யாரம்பாந் கணயஸி பரம் பாதுகே ஸ்வைர்நிநாதை.! முதலியன தவப்பயனுல் படித்து அனுபவிக்க வேண்டியவை.

[இந்த அழகிய பாதுகா ஸஹஸ்ரத்திற்கு அதியத்புதமான தமிழாக்கத்தை ஸ்ரீ வே. கேசவய்யங்கார் ஸ்வாமி செய்திருக்கிருர். அந்த ஸ்வாமியும் இந்த வகையில் தேசிகன் தனியுருவாய் விளங்குகின்ருர்.]

30. த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்னுவளி

இந்த க்ரந்தம் த்ரமிடோபநிஷத் என்று அழைக்கப்பட்ட திருவாய் மொழியின் ஸாரங்களை ரத்தினக் கோர்வையாக்கி அருளிச் செய்ததாயிருக்கும்.

இது அழகு, குணங்கள் நிறைந்தது, ரங்கநாதனை மகிழ்விப்பது, வேதாந்தாசாரிய ஸ்ரீயை யுடைய மஹான்களால் பஹுமானிக்கப்பட்ட

ஸர்வர்ஞுனை வேங்கடேசனுல் எடுத்துத் தொகுக்கப்பட்டது என்று இறுதி ச்லோகத்தில் சாதிக்கும் பாங்கு கொண்டு இதனைக் காண வேணும்.

130 ச்லோகங்கள் கொண்டது. முக்கியமாக திவ்யப்ரபந்தத்தின் பெருமையை தமிழை அறிய கில்லாதவர்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இது இயற்றப்பட்டது. தமிழின் பெருமையை வடமொழியில் அழகாகக் காட்டிக் கொடுக்கின்றுர்.

சில வாக்யங்களைக் காண்க :

ஸர: ஸாரஸ்வதாநாம், விபுதை: அர்த்தித:, பாஷாகீதி: ப்ரசஸ்தா, தேசிகாஸ்தத்ர தூதா:, ஸம்ஹிதா ஸார்வ பௌமீ, தத்குணுந் உத்க்ருணீம:, அகில பயோத்தாரணீ தாரணீயா என்பவை வாக்ய ரத்னங்கள்.

ஒவ்வொரு சதகத்திலும் கடைசியில் நிஷ்கர்ஷத்தை சாதிக்கும் தன்மை அலாதியானது, 1. மாதவம் ஸேவநீயம், 2, அதிபோக்யம் த்விதீயே, 3. ஸுபகதநும் ப்ராஹ நாதம் த்ருதீயே, 4. தேவதாஸார்வ பௌமம். 5. ச்ரேயஸாம் ஏகஹேதும், 6. ப்ராஹ ஷஷ்ட்டே சரண்யம், 7. ஸப்த மே நிஷ்டசோரம், 8. அஷ்டமே ஸ்வேஷவச்யம், 9. ப்ராஹ க்ருஷ்ணம்...ஸுமித்ரம் 10. மோக்ஷதம் முக்த போக்யம் என்பர்.

நம்மாழ்வாரின் நான்கு ஸ்ரீஸூக்திகளுக்கும் அழகான தாத்பர்யத்தை அருளிச் செய்கிறுர். ஸம்ஸாரம் ஸஹிக்க முடியாதது என்பதை திருவிருத்தமும், திருவாசிரியத்தில் ஸ்வரூபாதிகமும், திருவந்தாதியில் பகவதனுபவத்தில் தீவிரமான ஆசையையும், திருவாய்மொழியில் யதேஷ்டமாக பகவதனுபவத்தையும் பெற்று முக்தியடைந்தார் என்பர்.

ஹேதுமத்பி: விநிஸ்சிதை: என்றனர். அவ்வாறே ஒவ்வொரு காரணங்களாக ஆயிரம் காரணங்களைக் கொண்டு எம்பெருமான் பெருமை பேசப்படுகிறது என்பது ரஸம்.

31. த்ரமிடோபநிஷத்ஸாரம்

திருவாய் மொழியின் ஸாரம் இங்கு அழகாக நிரூபிக்கப்படுகிறது. ஸாரத்தைச் சொல்லவே வந்த அவதாரமானதால் மணிப்ரவாளத்தில் பல ஸாரங்களைச் சொன்ன ஸ்வாமி ஸம்க்ருதத்தில் தமிழில் உள்ள ஸாரத்தை எடுத்துக் காட்டுகின்றார்.

உபநிஷத் என்றும் சொல்வதெல்லாம் ஸங்கேதமோ பிடிவாதமோ அல்ல என்றும், அவற்றின் பெருமை மற்றைய நூல்களுக்கு இருக்கவில்லை என்றும் ஆணித்தரமாகக் காட்டிக் கொடுக்கின்றார். இவ்வண்ணம் இவ்வாழ்வாரது ஸ்ரீஸூக்திகளுக்கு ரக்ஷை கட்டினவர்களே கிடையாது. அஸூயை யில்லாமல் சேவித்துப் பெருமையடைய வேண்டும்.

ஸாரக்ராஹிகள் ஸாரத்தை க்ரஹிக்க வேணும் (1) ஸேவா யோக்ய: (2) அதிபோக்யன்: (3) சுபஸுபகதநு: (4) ஸர்வபோக்யாதிசாயீ, (5) ச்ரேயஸ் தத்ஹேது தாதா, (6) ப்ரபதநஸுலப: (7) அநிஷ்ட வித்வம்ஸ சீல:, (8) பக்தச் சந்தானுவர்த்தீ, (9) நிருபதிகஸுஹ்ருத், (10) ஸத்பதவ்யாம் ஸஹாய: என்பவை இத்திருவாய் மொழியில் காரணங்களுடன் பத்து பத்துகளிலும் நிரூபிக்கப்பட்டவை என்கிறது எவ்வளவு பெருமைப்பட வேண்டியது.

ப்ரதம சதகே வீக்ஷ்ய வரதம் என்ற இடத்தில் தேவப்பெருமாளை என்று வ்யாக்யானம் செய்வர். ஸ்வாமிக்கும் அங்கு அலாதியான ஈடுபாடு என்பதை மறுக்க வொண்ணாது.

வித்யைகள் எல்லாம் தாம் பெருமை பெற ஸ்வாமியை வந்தடைந்தன. அத்தகைய வேங்கடபதி இவ்வாறு ஸாரத்தை எடுத்துரைத்தான் என்று பெருமையோடு பேசுவது போக்யமானது.

பங்கோருபரி யதி கங்கா நிபததி என்று நைச்யானுஸந்தானம் பண்ணுவது ஆச்சர்யமானது.

அக்ஷரத்துக்கு அக்ஷரம் அனுபவிக்க வேண்டிய பெரிய திவ்ய ப்ரபந்த ஸாரம் இது.

ஹம்ஸ ஸந்தேசம்

கவிதார்கிக சிங்கமான ஸ்வாமி காரண விசேஷங்களைக் கொண்டு அருளிச்செய்த ப்ரபந்தங்கள் பல. அவற்றுள் காந்தாஸம்மித வசனம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது காவ்ய வைகரீ.

இவ்வைகரியைப் பின்பற்றி ரஸிக ஜன ஸௌபாக்யமாக எழுதிய காவ்ய நாடகங்களில் ஸந்தேச காவ்ய வகையைச் சேர்ந்தது ஹம்ஸ ஸந்தேசம் என்ற இந்த அகண்ட காவ்யரஸமான கண்ட காவ்யம்.

ஒரு பொழுதும் திருமகளை விடாத நாதன் விபவத்தில் ஒரு சில காலம் பிராட்டியை விட்டுப் பிரிந்திருக்க நேர்ந்தது. அத்தருணத்தில் ந ஜீவேயம் க்ஷணமபி என்ற பெருமாள் ஒரு வ்ருத்தாந்தத்தை அனுஸந்தானம் பண்ணி தூது விட்டுப் பொழுதைக் கழிக்கின்றது இங்கு விஷயமாம். காளிதாஸன் முதலிய கவிகளும் இம்மாதிரி காவியத்தை இயற்றி யிருக்கிறார்கள். காளிதாஸன் கொண்டாடப்பட்டான். காளிதாஸன் காட்டிய முதல் ச்லோகத்தையே மனதிற் கொண்டு பகவத் விஷய மொன்றை யன்றி வேறொன்றினை யறியாத ஸ்வாமி.

அபரீக்ஷிதனை ராமன் அனுப்பமாட்டார் என்ற திருவாக்கினையும் கருத்தில் கொண்டு ஹம்ஸத்தைத் தூது விடுவதாக அமைத்து இந்த ஸந்தேச காவ்ய ரத்னத்தை இயற்றியருளினார்.

இதன் பெருமையை சொல்ல எங்ஙனே இயலும்! 60-50 என்கிற கணக்குடன் 110 ச்லோகங்களை அருளினார்.

வம்சே ஜாத: என்று ஆரம்பித்து நிஸ்சிதார்த்த: என்ற வரையில் திவ்ய சரித்திரத்தை சுருக்கி அத்புதமான வகையில் கம்பீரமான பாணியில் காளிதாஸாதி மஹாகவிகளையும் திருத்திப் பணி கொள்கிறார்.

காந்தாச்லேஷாத் அதிக ஸுபக: காமிநாம் தூதலாப:, என்று மிவ் வகையில் அழகான ச்லோக வாக்யங்கள் வியப்பை யளிக்கும்.

அழகான மார்கங்களைச் சொல்லும் வியாஜத்தினால் திவ்ய தேசங்களை நிரூபணம் பண்ணி அங்கு தனது ஈடுபாடு எத்தகையது என்பதையும் காண்பித்துக் கொண்டு, அழகான சில ஸித்தாந்தங்களையும் செய்தருளுகிறார்.

அபிமான புஷ்டியாக சில ரஸங்கள் ஆங்காங்கு காணக் கிடைக்கின்றன. திவ்யம் குர்வந் த்ரமிட விஷயம் த்ருச்யதே ஹஸ்தி சைல: என்று பேசுகிறார். 47-வது ச்லோகத்தில் ஒரு அழகான ஸித்தாந்தத்தைக் காட்டுகின்றார். சப்தாயந்தே ந கலு கவய: ஸந்நிதௌ துர்ஜநாநாம் என்கிறார். மற்ற ஸந்தேசங்களில் இருக்கும் ரஸத்தையும் இதில் இருக்கும் ரஸத்தையும் கலந்து நோக்கினால் தான் இதன் பெருமை விளங்கும்.

முதல் ச்லோகத்தில் தேவ: ஸ்ரீமாந் என்றார். கடைசியில் ராம: ஸ்ரீமான் என்று சாதிக்கின்றார். வித்யாசில்ப ப்ரகுணமதி என்று தனது நிலையைக் காட்டுகிறார். சிந்தித்து சிந்தித்து எழுதியது சிந்தையில் இறுத்தினால்தான் இதன் பொருள் விளங்கும் என்பதையும் நினைக்க.

இது ஸந்தேச ரத்னம் என்றார். ஸீதைக்கும் ராமனுக்கும் இது உதவியாயிருந்தது என்றும் கூறுகிறார். இது த்ருச்ய காவ்யம் என்பதனையும் காட்டித் தருகின்றார்.

இதன் ஆழ்ந்த ரஸகனமான பொருளை அறிய வல்லார் யாரே!

ஸுபாஷித நீவி

ஸர்வக்ஞஸிம்ஹ பூபாலனுக்கு உபதேசரூபமாக அருளிச் செய்த ஸர்வோத்தம ஸுபாஷித காவ்யம். ச்ரோதாவான அதிகாரிக்கு ஸர்வக்ஞஸிம்ஹ பூபாலன் என்று பெயர். வக்தாவான ஸ்வாமி ஸர்வ தந்த்ர ஸ்வதந்திரன். இடையில் இதனை அனுபவிக்கப் பிறந்த ஸர்வக்ஞர்களுக்குத் தான் இது விளங்கும்.

144 ச்லோகங்கள். பன்னிரண்டின் பெருக்கல் எண்ணிக்கை. 12 பத்ததிகள்-ஒவ்வொரு பத்ததியிலும் 12 ச்லோகங்கள். இவ்வாறு திட்டமிட்டதற்கே கவிலோகம் வாய் புதைத்து நிற்கும்.

ஸ்ரீபாஷ்யஸாரம்-அனந்த சாஸ்திர நிஷ்கர்ஷம், அத்புதமான அர்த்தாந்தரந்யாஸ ச்லேஷரூபகாதி அலங்கார சமத்காரங்கள்.

உலகில் இதுவரை ஏற்பட்டிருக்கும் அனந்தமான பாஷைகளில் ஏற்பட்ட ஸாஹித்யங்களில் இதுக்கு நிகரானதொரு ஸாஹித்யம் ஏற்பட்டதில்லை. இது ஸங்கேதமான வார்த்தையல்ல-பக்தியினால் சொல்லப்படும் வார்த்தையுமல்ல-காரணம் என்ன என்பதை அறிய வேண்டும்.

உலகில் கவிபாடுவது போற்றப்பட்டது. அதனிலும் கருத்துக்களை மறைத்து வைத்துப் பாடுவது என்பது. ஒரு சில கருத்துக்களை ச்லேடையாகச் சொல்லி பலர் பலருடைய புகழினுக்குப் பாத்திரமானார்கள். ஸ்வாமியின் இந்த நூலைக் கண்டபின் மற்ற நூலில் நசைதான் ஏற்படுமோ!

ஒரு ச்லோகம் என்றால் முப்பத்திரண்டு எழுக்துத்கள். இதற்கு தனித்தனியே 20 வகையான பொருள்கள், அதிசயோக்தியல்ல. ஸ்ரீ உ. வே. பட்டப்பா ஸ்வாமி என்ற மஹான் கண்ணைத் திறந்து கொடுத்திருக்கிறார். இவ்வாறு கஷ்டப்பட்டு பல ஆண்டுகள் முயற்சி செய்து ஒரு சில ச்லோகங்களை இயற்றி விடலாம். அவ்வாறு செய்தவரும் இல்லையே!

இந்த நீவியில் இருபது அர்த்தம், பதினைந்து அர்த்தம் என்ற வகையில் பொதிந்த ச்லோகங்கள் தான் எத்தனை! தேசிகன் எம்மதத்தவராயினும், எவ்வகுப்பைச் சேர்ந்தவராயினும் உலகம் இந்த ஒரு நூலையாவது கண்டு பெருமையை அறிந்து தேசிகனுக்குத் தலை வணங்கு மேல் அன்றே இதன் பொருள் விளங்கியதாம்.

நல்லவர்களைப் பற்றிய பத்ததியே அதிகம் ஏழு. தீயவர்களைப் பாடிய பத்ததி ஐந்து. அவர்களைப் பற்றி பேசி சமயத்தை வீணாக்குவது திருவுள்ளமில்லை போலும், முதலில் நல்லவர்களைப் பேசி பிறகு தீயவர்களைப் பேசுவதிலும் நன்மையில்லை என்பதும் இத்திட்டத்தால் ஒருவாறு காட்டப்பட்டதாகலாம்.

இதைப்பற்றி ஸ்வாமியே மஹநீயவர்ண வ்ருத்தகுணா என்று சாதிக்கின்றார். பாவுக ஸங்க்யை என்பதனால் 144 என்பதையும் காட்டுகின்றார். ஏகயாபி கலயா விசுத்தயா என்ற அழகான ச்லோகம் இதில் சிகரமான ச்லோகம். இதன் ஆழ் பொருள்களை அத்ருஷ்டவான்கள் அடைவர் போலும்.

யாதவாப்யுதயம்

மஹாகவிகள் ஒரு சிலர். அவர்கள் பெரிய காவியத்தை இயற்றியதால் அவ்வாறு அழைக்கப்பட்டனர்

இம்மஹாகவி கோஷ்டியில் முதல் ஸ்தானத்தை வஹிரிப்பவர் வான்மீகி. பிறகு பாரவி மாகன், காளிதாஸன் என்பவர்கள் இந்த தொகுதியில் மிகவும் ப்ரஸித்தியடைந்து விளங்கினர்.

மஹாகவிகள் என்ருல் இவர்களது கோஷ்டியில் தானே ஸ்வாமியை நிறுத்தவேண்டியிருக்கிறது! எம்பெருமான் தானே தன்னை கோஷ்டியில் ஒருவனுக நிறுத்திக்கொண்டு, எந்த கவிகளோடும் இவரை நிறுத்தலாகாது என்பதை ஸத்யமாக்கிவைத்தான்.

இனி இந்த அகாதமான காவ்யரத்ன ஸாகரத்தில் உற்ற சில ரத்தினங்களைக் காணவேண்டும். முயற்சி பெரிது தேவை. ஆனல் அது அரிது !.

இந்த நூலுக்கு வ்யாக்யானம் பண்ணப்புகுந்தார் அப்பய்ய தீக்ஷிதர். அரசனும் இதற்கு வ்யாக்யானம் செய்தால்தான் புலமைக்குச் சான்று என்று சாற்றினன். அவ்விண்ணமே செய்தார் அப்பய்ய தீக்ஷிதர். அவர் கூறியது - ஒவ்வொரு பதத்திலும் அடங்கியிருக்கும் கருத்துகளை சிந்தனை சக்தியுள்ளவர்கள் சிந்திக்கவேண்டும். தோற்றத்தில் எளிதாகத் தோன்றினலும் இதன் ஆழத்தை அறிய யாம் எம்மாத்திரம் என்ருர். மற்றும் ஸர்கம் முடியும் பொழுது ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர சப்தத்திற்கு வ்யாக்யானம் செய்தார். அப்பொழுது அவர் சைவம் தெரிய வேண்டுமானல் தேசிகனிடம்தான் கற்றுத் தெரிய வேண்டும் என்ருர். சைவத்தை மறுப்பதும் அவரால்தான் இயலும் என்றும் கூறிப்போந்தார்.

நிற்க, ஸ்வாமி தாமே க்ஷேமதம் காவ்யரத்னம் என்று இதன் பெருமையைக் காட்டித்தந்தார். ஒவ்வொருச்லோகமும் ஆயிரம் ச்லோகத்தின் பெருமையைப் பெறும் என்ருல் மிகையாகாது அழகான வர்ணனம், சித்ர கல்பனம், வ்ருத்த வ்யவஸ்தை-முதலியன தனி நிறத்துடன் விளங்குபவை. 24 ஸர்கங்கள் 2543 ச் லோகங்கள் கொண்டது இது. தன்னிகரில்லாத உத்தமமான ஸித்தாந்த கருத்தை

விளக்கும் ச்லோகங்கள். தத்துவமாகவும் இருக்கவேண்டும், ஸம்பிர தாய போஷகமாகவும் இருக்கவேண்டும் இந்த தத்வத்தை சிக்ஷிக்கும் மஹா காவ்யம் இது என்றால் மிகையாகாது. முன் சென்ற மஹாகவி முதல் ச்லோகத்தில் வந்தே என்ற பதத்தை உபயோகித்தான். ஸ்வாமி அதை முதல் பதமாகவே அமைத்தார். ரஸங்கள் பல.

ஸங்கல்ப ஸூர்யோதம்

ஸம்ஸார நாட்யரஸிகன் எம்பெருமான். இவ்வுலகமெல்லாம் அவனது லீலையே. இங்கு அவன் பத்துவிதமாக பூமிகையை வகுத்துக் கொண்டு விளையாடுகிறான். நாட்டியத்தில் மோஹம் இக்கலியில் உண்டு. ஆமாம். அந்த வழியில் சென்று தான் வாத்ஸல்யத்தினால் உலகைத்திருத்தவேண்டும். இது முன்னோர் சென்றவழி.

ஸ்வாமி இதற்கு முன் சென்ற துறைகளை சரியல்ல என்று திரு வுள்ளங்கொண்டார். சிக்ஷிப்பதற்காகவும் இந்த நாடகத்தை அவதரிப் பிக்கிறார்.

இந்த நாடகத்தின் சிறப்பை ஸ்வாமியினாலும் சொல்ல இயலாது என்றும் தோன்றுகிறது. அனேக தத்துவங்களை அறிவிக்கிறார். பாத்திரங்களின் அமைப்பு, ரஸத்தின் தேர்வு,முதலியன மெய் சிலர்க்கச் செய்யும்.

இதில் ஸ்வாமியினுடைய அவதார ரஹஸ்யத்தை அறிய முடிகிறது, ஸ்வாமியின் ஸர்வபாஷா பாண்டித்யமும் தெள்ளென விளங்குகிறது, கவிப்ரசம்ஸையில் தன்னுடைய அவதார ரஹஸ்யத்தை தாமே பேசினார். தான் கருணையினால் இதை எழுதியதாக கருணையினால் சாதிக்கின்றார். நாதப்ரீதியே முக்யம் என்றார். அவனே பேசினான் என்றும் தலைக்கட்டப் போகிறார். ஒவ்வொரு ப்ரகரணமும் மெய் சிலிர்க்கச் செய்யும் தனித்திறமை பெற்றதாம். பத்து அவதாரங்கள் பத்து அங்கங்கள். எத்தனை பத்துகளை இதனுள் ஸ்வாமி அடக்கியிருக்கிறாரோ! ரகுவீரகத்யத்தை அனுஸந்தானம் பண்ணி நாடக ரஸிகர்களை தலையசைத்து ஆனந்த ஆரவாரம் செய்யவைக்கிறார். வக்தா ச்ரோதா வசந விஷய: ப்ரீயதாம் வாஸுதேவ: என்று அழகாக தலைக்கட்டு கிறார். இந்த நாடகம் ஒன்றுக்கு நிகரும் உண்டோ என்று பெருமிதத்துடன் உலகம் முழுதும் பேசும் காலம் வருமா!!

———

பரமதபங்கம்

திருவயிந்தையில் அருளிச் செய்த ப்ரபந்தம் இது. இந்த ரஹஸ்யம் ஸர்வக்ஞர் களுக்கே நிலமாகும். இதில் 24 அதிகாரங்கள் உள்ளன. முதல் 4 அதிகாரங்களில் தத்வம் நிரூபிக்கப்படுகிறது. மற்றைய 15 அதிகாரங்களில் பாஹ்ய மதங்கள் என்று சொல்லப்பட்ட பதினன்கு மதங்களில் காணும் குறைகளைக் கூறுகின்ருர். ஒரு அதிகாரத்தில் பாஞ்சராத்திர விஷயமான ஸந்தேகங்களைப் போக்குகிருர். மற்றைய மூன்று அதிகாரங்களில் மூன்று விஷயங்கள் கூறப்படுகின்றன.

ஒவ்வொரு மதத்தையும் அழகாக நிரஸித்துவிட்டுப் பிறகு வரப்போகும் மதங்களுக்கு பரிஹாரம் யாது என்று கேட்டுக் கொண்டுநிகமனத்தில் சாதிக்கின்ருர் :

"இப்படி லோகாயதிக மாத்யமிக...யோகாசார ஸௌத்ராந்திக வைபாஷிக மாயா வாதி ஜைனபாஸ்கரீய யாதவப்ரகாசீய வையாகரண வைசேஷிக நையாயிக கௌமாரில ப்ரபாகர காபில ஹைரண்யகர்ப்ப பாசுபத ரூப பரித்ருச்யமாந பரமதங்களை ப்ரதிக்ஷேபித் தாலும் தேச காலாந்தரங்களிலே அஸ்மதவிதித ஸித்தாந்தங்கள் உண்டாகக் கூடுமென்றும் அதிசங்கைக்கு பரிஹாரமென் என்னில்...நிரஸ்தமான பாகம் தத்தோத்தரம். ஸித்தாந்த துல்யமான பாகம் தூஷிக்க வேண்டுவதில்லையாகையாலே...என்று சாதிக்கின்ருர். கார்த்த யுகக் கதி கண்டோம் கரை கண்டோமே என்றும், கத்தி மயக்கும் கதகரை நாம் கடிகின் றனமே" என்பன போன்ற வாக்கியங்களை அனுபவிக்க.

விரோத பரிஹாரம்

இதில் நான்கு அதிகாரங்கள் உள்ளன. இது திருவயிந்தையில் அருளிச் செய்ததா யிருக்கும். திருமந்திரார்த்த விஷயமாய் 80 பரிஹாரங்களும், த்வயார்த்த விஷயமாய் 10 பரிஹாரங்களும், சரமச்லோகார்த்த விஷயமாய் 10 பரிஹாரங்களும், பொதுவில் 9 பரிஹா ரங்களும் செய்யப்பட்டுள்ளன.

சில வாக்கியங்கள் : "கலியுகத்திலும் நல்வழி நடப்பாருகை பெறில் க்ருதயுக புருஷர் களோடு ஒப்பார்கள் என்றிறே சாஸ்த்ர தாத்பர்யம்." ஹிதைஷியான ஆசார்யன் சிஷ்யனை ஸர்வாவஸ்தையிலும் யதாசாஸ்த்ரம் திருத்த விரகு பார்க்குமாபோலே, சாஸ்த்ரவச்யனை சிஷ்யனும் ஆசார்யனை ஸர்வாவஸ்தையிலும் ஏகாந்த போதனங்களாலும் பகவத் ப்ரபத்யாதி களாலும் திருத்துகையும் சாஸ்த்ரீயமான ஆசார்ய கைங்கர்யம் என்பன போன்ற வாக்கியங் களைக் காண்க.

இது திங்மாத்திரமாகக் காட்டப்பட்டது என்கிருர். ஸாடம்பரை : கிம் பரை: என்று முடித்தார். மெய்யருள் பெற்ற நல்லோர் அடைய அறிந்துரைக்க அடியோமும் அறிந்தனமே என்று தலைக்கட்டினர்.

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம்

அவதாரத்தின் ஏகலக்ஷ்யமாக அவதரித்தது இது. முப்பத்திரண்டு அதிகாரங்கள் கொண்டது. இதில் இல்லாதது எங்கும் இல்லையே! இதன் சிறப்பினைப் பேசும்பொழுது ஸ்வாமி தாமே, சரண்யதம்பதி விதாம் ஸம்மத : ஸமக்ருஹ்யத என்றார். பிறரும், அவிக்ஞாதம் விஜாநதாம் விக்ஞாதம் அவிஜாநதாம் ரஹஸ்யத்ரய ஸாராக்யம் பரம் ப்ரம்ஹாஸ்துமே ஹ்ருதி என்றனர். வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகால் அடியோம் உள்ளத்தெழுதியதே இந்த ரஹஸ்யத்ரயஸாரம் என்பர் ஸ்வாமி. கிளியைப் பழக்குவித்த பாசுரங்கள் என்றும் சாதிப்பர்.

அர்த்தானுசாஸனபாகம், ஸ்திரீகரணபாகம், பதவாக்ய யோஜாநாபாகம், ஸம்ப்ரதாயப்ரக்ரியாபாகம் என்ற சாரீரகமீமாம்ஸையில் போல் நான்கு பாகங்களையுடையது.

திருவுடன் வந்த செழுமணியென்றாரம்பித்து, முப்பத்திரண்டிவை முத்தமிழ் சேர்ந்த மொழித்திருவே, என்று ஒரு ஸம்ஹிதையைக் காட்டுகிறார். திருமொழி என்னாமல் மொழித்திரு என்பதில் உள்ள ரஸங்களை அனுபவிக்கவேணும். ஸாஹி ஸ்ரீரம்ருதா ஸதாம் என்பர் போலும்!

எட்டுமிரண்டும் அறியாத வெம்மைவிவை அறிவித்து எட்டவொண்ணாதவிடம் தரும் எங்கண் மாதவனார்——கலங்கா நிலை பெற்றனமே என்றார்.

முப்பத்திரண்டு படிகள். முப்பத்திரண்டதிகாரங்கள். சிஷ்யக்ருத்யாதிகாரத்தை யாவது சேவித்தல் நலம். ஆஸ்திக்யவான் என்றச்லோகத்தில் உள்ள நிலை வேண்டும்!

இதில் உள்ள மற்றைய பொருள்களை விரிவுரையில் காண்க———.

ஸேச்வர மீமாம்ஸா

பூர்வ மீமாம்ஸையில் வரும் சில ஸந்தேகங்களை நிவர்த்தி பண்ணி இரண்டு மீமாம்ஸைகளும் ஒரே சாஸ்திரம் என்பதையும் நிரூபணம் பண்ணி, பூர்வ மீமாம்ஸா ஸூத்திரங்களுக்கு அழகாக விரோத ப்ரஸங்கம் வாராமல் வ்யாக்யானம் செய்யும் அபர மீமாம்ஸா பாஷ்யகாரராகி ஸ்வாமி திவ்யமான நீதிகளைக் கையாண்டு அருளிச் செய்கின்றார்.

நிர்மத்ஸரா நிசமயந்து என்கிறார். ஜகதந்தராத்மா துரகவதந: கடயதி என்று அருளிச் செய்கிறார். 20 அத்யாயங்களும் ஒரே சாஸ்திரம் என்று மஹான்கள் சொன்னதை மீற எந்த வழியும் இல்லை ஆதலால், அவ்வாறே ஸூத்ரங்களுக்கு தன்னுடைய அதிவிலக்ஷணமான பாணியில் வியக்கும் வகையில் பாஷ்யம் அருளுகின்றார்.

84 ஸூத்ரங்களுக்கு மந்த்ராதிகரணம் வரை ஸ்வாமி பாஷ்யம் கிடைக்கின்றது. ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான ஸ்வாமியின் ஸ்ரீ ஸூக்திகளின் ஆழத்தை அறிய யாரே வல்லார்!

மீமாம்ஸா பாதுகா

மீமாம்ஸை என்பது விசாரத்தைக் குறிக்கும். வேதார்த்தங்களை விசாரித்தால் அவை மீமாம்ஸா சப்தத்தினுல் சொல்லப்படுகின்றன. இவை பூர்வ மீமாம்ஸை உத்தர மீமாம்ஸை என்று இரண்டு வகையாயிருக்கும்.

இரண்டு மீமாம்ஸைகளும் ஒன்றில் முக்கிய நோக்கமுடையவை என்பது நமது ஸித்தாந்தம். ஆனுல் ஒரு சில இடங்களில் பாதங்கள் தோன்றக்கூடும். அவற்றிற்கெல் லாம் பரிகாரம் செய்து இந்த க்ரந்தம் அவதரிக்கிறது.

இதில் 173 சுலோகங்கள் உள்ளன. அதிகம்பீரமான சைலி. கேவலம் சப்தரூப மானதே ப்ரம்ஹம் என்பதில்லை என்றதை முதலில் மங்கள ச்லோகத்தில் ஸப்தலோகீ க்ருஹஸ்த: என்ருர். கர்ம ப்ரம்ஹாவமர்சப்ரபவபஹு பலம் சாஸ்த்ரம் என்ருர். பஹு மஹாவம்சஜாதா மஹாந்த: என்றும்:—

ஸ்ரீமத் ராமானுஜோக்தாம் ஸ்ம்ருதி மநுஸரதாம் ஐக சாஸ்த்ராதி ஸித்தே:...திங்மாத்ரம் ஏதத்...சேஷம்...ஸம்ரக்ஷணீயம் நாதஜுஷ்ட ச்ருதியுவதி சிரோ பூஷணம் பாஷணம் ந: அக்ஷோத்யா தர்கலோஷ்டை:-ம்ருத்நதீ கண்டகௌகம் அக்ஷதா ரக்ஷதாம் ந:என்று தலைக் கட்டுகிருர். இதற்கு ஸ்வாமி திருக்குமாரர் பரித்ராணம் என்று வ்யாக்யானம் செய்துள்ளார்.

ந்யாய பரிசுத்தி

ந்யாய சாஸ்திரம் வேதவிருத்தமாகத் தோன்றுகின்றதே என்ருல் அவற்றில் உள்ள குண தோஷங்களை எடுத்துக் காட்டி அவற்றிற்கு சோதனம் செய்து ஸமீசீநந்யாயம் எது என்பதை ஸ்தாபித்தருளுகிருர்.

இதில் ஐந்து அத்யாயங்கள் உள்ளன. இதில் கௌதம பக்ஷத்தை ஸ்வீகிகப்பதா வேண்டாமா என்று கேட்டுக் கொண்டு முதல் ஆன்ஹிகத்தில் இரண்டு பக்ஷங்களையும் ஸயுக்திகமாக ஸ்வாமி ஸாதிக்கின்ருர்.

ஸ்வாமி தாமே அவர்களுக்குப் பதில் சொல்லும் முறையில் தாமே 49 ஸூத்திரங்களை நிர்மாணம் பண்ணி யருளினுர். தான் ஸூத்ரகாரராக ஏன் ஆகமுடியாது என்று கேட்டருளு கிருர்.

இவ்வாறு அக்ஷபாதமதத்தைத் தான் காமக்ரோதாதிகளாலே கண்டிக்கவில்லை என் பதையும், பகவந்நாத முநிபிர்ந்யாயதத்வ ஸமாஹ்வயா அவதீர்யா க்ஷபாதாதி ந்யபந்தி ந்யாய பத்ததி: என்றும் சாதிக்கின்ருர்.

ஐந்தாவது அத்யாயத்தில் ஸங்கிரகமாக ப்ரமேயத்தை நிஷ்கர்ஷிக்கிருர். வேங்கடேச விதுஷா பர்யசோதி ஸரணி: என்கிருர். அசக்யநின்ஹவகுண க்ரந்தோ நிபந்தோ மம என்றும் சாதிக்கின்ருர்.

இவ்வாறு ஐந்து அத்யாயங்கள் பத்து ஆன்ஹிகங்கள் என்ற கணக்கில் ந்யாய பரிசுத்தி விசிஷ்டாத்வைத ப்ரகரண க்ரந்தமாக அருளிச் செய்யப்பட்டதாம்.

ந்யாய ஸித்தாஞ்ஜனம்

ஸதஸத் பூமிகா பேதை: தத்தத் ஸித்தாந்த நாடகை: உபப்லுதஸ்ய ... சுத்யர்த்தோயம் உபக்ரம: என்று தான் ந்யாய பரிசுத்தியில் கடைசி அத்யாயத்தில் சுருக்கமாகச் சொன்ன ப்ரமேயங்களை விஸ்தாரமாகச் சொல்லுகிறோம் என்று ஆரம்பிக்கப்படும் விசிஷ்டாத்வைத ப்ரகரண க்ரந்தமாம்.

இதில் ஜடத்ரவ்ய பரிச்சேதம், ஜீவபரிச்சேதம், ஈச்வர பரிச்சேதம்' நித்யவிபூதி பரிச்சேதம், புத்தி பரிச்சேதம், அத்ரவ்ய பரிச்சேதம் என்று ஆறு பரிச்சேதங்தள் உள்ளன.

அஞ்ஜனமானதால் அளந்து அளந்து அளித்ததாயிருக்கும் ஆதலால் பரிச்சேதம் என்று அத்யாயங்களின் தலைப்பு!

ரத்னபேடிகை முதலான வ்யாக்யானங்கள் கொண்டு பல தெளியலாம்.

தத்வமுக்தாகலாபம்

இது ஐந்து ஸரங்களையுடையது. இம்மாதிரி க்ரந்தம் எந்த தர்சனத்திற்கும் இது வரை அமைந்ததில்லை. தத்வமுக்தா கலாபம் ஆனதால் லக்ஷ்மீ நேத்ரோத் பல ஸ்ரீ.... காலிமா ஸம்பதோகாந் விதரது என்று ப்ரார்த்தித்துக் கொண்டு ஆரம்பிக்கிறார்.

இதை மனதில் கெட்டிப் படுத்தி வைத்துக் கொள்ளவேண்டும். ஜயம் நிச்சயம் என்று சாதிக்கின்றார். ஐந்து ஸரங்களிலும் 500 ச்லோகங்கள். ஒவ்வொரு அக்ஷரமும் நூற்றுக் கணக்கான பக்கங்கள் வ்யாக்யான மிடத்தக்க பெருமையைப் பெற்றது இது மத்ய ஸரம் நாயக ஸரமாயிற்று. அங்கு 8வது ச்லோகத்தில் தஸ்யைவ ஸ்ரீ பதித்வம் விசதமபிததே உத்தரத்ராநுவாகே என்று புருஷ ஸூக்தத்தில் ஸ்ரீ பதித்வம் விசதமாக உத்தரானு வாகத்தில் கூறப்பட்டுளது என்கிறார். இங்கு விசத சப்தத்தில் ஒரு வைசத்யம் தேவை. பூர்வாநுவாகம் அவிசதமாகச் சொல்லிற்று என்றால் ரஸம் அதிகம். ஸஹஸ்ர சீர்ஷ சப்தத்திற்கு ச்ரிய: பதி என்று பொருள் என்று அஹிர்புத்னியன் தனது ஸம்ஹிதையில் சொன்னான் என்பதையும் நோக்கவேண்டும்.

ஸர்வ ஸித்திக்காக தத்வ முக்தா கலாபத்தைப் படியுங்கோள் என்கிறார். அக்ஷுத்ரா சார்ய சிக்ஷாசதகுணிதமதி என்று தன்னைக் காட்டித்தருகிறார். அகில தம: கர்சனம் தர்சனம் ந: என்று முழங்குகின்றார். ஜயதி பஹுகுணா பங்க்திரங்மத்குரூணாம்: என்கிறார். ஸர்வக்ஞத்வம் தத்வ முக்தா கலாபே என்றனர்!

ஸர்வார்த்த ஸித்தி

தத்வ முக்தா கலாபத்திற்குத் தானே அருளிச் செய்த வ்யாக்யான ரத்தினமாகும். முதல் ஸித்தி ஜயம். ஜயதி என்று வ்யாக்யானம் ஆரம்பமாகிறது. உண்மையில் தேசிகன் அவதரிக்கவில்லையானால் எம்பெருமானுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்குமா என்று அனைவரும் எண்ணுவதுண்டு.

நாதிவ்யாஸ வ்யதிகரவதீ நாதிஸங்கோசகேதா,

வ்ருத்திஸ்ஸேயம் விசதருசிரா கல்ப்யதே ஸ்மாபிரேவ என்றாரம்பிக்கிறார். ரத்தினங்களானால் சாணைப்பிடித்தால் சிதறும். முத்துக்களுக்கு அந்த நிலையில்லை யாதலால் முக்தா கலாபம் என்று சாதிக்கின்றார்.

494வது ச்லோகத்தில் வ்யாக்யானம்:—ப்ரபந்த்ரு வைலக்ஷண்யம். ஸம்ப்ராதவைலக்ஷண்யம் விஷய வைலக்ஷண்யம். ச தாவதாஹ **இத்தமிதி**. ஸ்ரீ வேங்கடேச இதி வக்தருவைலக்ஷண்யம், ...இவ்வாறுஉரைப்பது ப்ரபந்தத்தை அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்கே என்றும் கூறினார். இதமேவ தர்சனம் அகிலதம: கர்சநம் என்று தலைக் கட்டினார்.

தாத்பர்ய சந்த்ரிகை

பாஷ்யகாரர் அருளிச் செய்த கீதாபாஷ்யத்தின் அக்ஷரங்கள் வ்யாக்யானம் பண்ணப்படுகின்றன:—உபநிஷதம் உதாராம் உத்வமன் பாண்டவார்த்தம்-என்று இதை உதாரமான உபநிஷத்து என்று காட்டித்தருகிறார்.

இதற்கு நிகரான வ்யாக்யானம் இது வரை எந்த கிரந்தத்திற்கும் வந்தது இல்லை என்றால் மிகையாகாது. வ்யாக்யானத்தில் ஆங்காங்கு அழகாக ஸமந்வயப்படுத்துகிறார். பர்யாப்தம்-பலம் என்ற இடத்தில் ஸ்வாமியின் வ்யாக்யானம் ஒன்றே போதுமே!

''ஸர்வஜந படித பாடஸ்வரஸல ப்த்தார்த்தஸ்ய நிர்தோஷத்வாத் பாடபேதாதி பக்ஷா: பரிக்ஷீணா:, பாடபேத—வ்யவஹிதாந்வய—வாக்யபேத—அப்ரஸித்தார்த்த கல்பநாதீநாமேவ ச ப்ரபல தூஷணத்வாத்.....அதோ யதா பாஷ்யமேவார்த்த: என்று நிரூபிக்கின்றார்.—

முடிவில் அபிச ஆதித: ப்ரப்ருதி ஸம்ம்ருசாம: என்று தொடங்கி பதினெட்டு அத்யாயங்களில் சொல்லப் பட்டதை ஸங்க்ரஹித்து, சரம ச்லோகே வக்தவ்யம் ஸூக்தம் அஸ்மாபி: என்று தலைக் கட்டினார்.

எவம் அத்யேஷ்வபி பூதேஷு பவிஷ்யத்ஸு ச ஸ்ரீமத்கீதாபாஷ்யேஷு பகவத்யாமுநாசார்ய பாஷ்யகார மதாநுஸாரேண திங்மோஹ: ப்ரசமயிதவ்ய: க்ஷுத்ரஸ்கலிதேஷு அதூரயோஜநா விப்ரக்ருஷ்ட யோஜனா பேதேஷு உதாஸிதவ்யம். இதி. அலம் அதிப்ரஸங்கேந என்றார்.

''முடிவில் அழகான ஸமந்வயத்தைக் காட்டித் தருகிறார். பிசாச ரந்திதேவ, குப்த, சங்கர, யாதவப்ரகாச, பாஸ்கர நாராயணார்ய யக்ஞ ஸ்வாமி ப்ரப்ருதிபி: ஸ்வம் ஸ்வம் மதமாஸ்திதை: ப்ரச்சதை: பாஷ்ய க்ருத்பி: அஸ்மத் ஸித்தாந்த தீர்த்த கரைஸ்ச பகவத்யாமுநாசார்ய பாஷ்யகாராதிபி: அவிகீத பரிக்ருஹீதோய மத்ர ஸாரதரார்த்த:—பகவானேவ தத்வம் அநந்யசரணர் யதாதிகாரம் ததாச்ரயணம் பரமதர்ம: இதி என்று இந்த வ்யாக்யானத்தின் காம்பீர்யத்தை அறிய வல்லார் யாரே! அத்யாயை: என்று தொடங்கி கீதா: என்ற கடைசி ச்லோகத்தை ஸேவித்து அத்யாய தலைப்புகள் அளிக்கலாம்!

கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை

கீதா பாஷ்யம் கீதார்த்த ஸங்கிரஹத்தை ஆதாரமாகக் கொண்டு அவதரித்தது. கீதார்த்த ஸங்க்ரஹம் ஆளவந்தாரால் அருளிச் செய்யப்பட்டது. கீதா ஸங்கிரஹத்தை யதாபாஷ்யத்தை ரக்ஷிக்கிறேன் என்று ப்ரதிக்ஞை செய்யப்பட்டது. 32 ச்லோகங்களுக்கும் பாஷ்ய பங்க்திகளின் ஸமந்வயப்படுத்தினர். வ்யாசஷ்ட பாஷ்யாக்ஷரை: என்றார். பாஷ்யகாரும் ஒரு இடத்தில் ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே என்றார். அவர் வழி ஸ்வாமியும் அப்படியே செய்தார். 32 ச்லோகங்களின் எண்ணிக்கை இங்கு தான் ஆரம்பமாயிருக்கலாம் போலும்!

வ்யாக்யான க்ரந்தங்கள்

சதுச்ச்லோகீ பாஷ்யம்

ஆளவந்தார் அருளிச் செய்த சதுச்லோகீ என்ற திருநாமமுடைய லக்ஷ்மீ ஸ்தோத்திரத்திற்கு பாஷ்யம் இயற்றியவர் ஸ்வாமி. ச்ரியம் தத்ஸத்ரீசீம் ததுபஸதந த்ராஸசமநீம் என்றார். கவிதத மகிர்யாமுநமுநி: என்றும் பேசினர். சாரீரக சாஸ்திரத்தின் நாலு அத்யாயங்களில் உள்ள அர்த்தத்தை 4 ச்லோகங்களால் விளக்கி யருளுகிறார். பிராட்டியின் வைபவம் (விபுத்வம்) கைமுதிகந்யாய ஸித்தம் என்கிறார். பல ரஸங்களை பாக்யவான்கள் அனுபவிக்க.

ஸ்தோத்ர ரத்ன பாஷ்யம்

ரஹஸ்ய ரக்ஷையென்று நாமகரணம் செய்யப்பட்டவைகளில் ஸ்தோத்ர ரத்னபாஷ்யமும் ஒன்றாகும். ஸ்வகமிதி ஹரித்தம் யாமுநஸ்தோத்ரவ்ருத்யா என்று தாமே சாதிக்கின்றார்.—த்ராவிடவேதாந்த தாத்பர்யம் நிரூபிக்கப்படுகிறது என்பர்.

தத்வ டீகை

இது ஸ்ரீ பாஷ்யத்திற்கு ஸ்வாமியின் வ்யாக்யானம். ஸாரவேதிகள் இதை ஏற்க வேண்டும் என்கிறார். குலத்தைச் சேர்ந்த வேதாந்தாசார்ய ஸூரிணு என்பதை ரஸிக்க) அஷ்டாவிம்சே ஜயத்வஜபட்டிகா என்று. 28வது ஸ்ரீ பாஷ்ய ப்ரவசன ஸமயத்தில் இது எழுதப்பட்டது என்கிறார்.

அகிலேத்யாதி பாஷ்யஸ்ய தசார்த்தான் அபிதத்மஹே என்ற கம்பீரமான எடுப்பு, அநவத்யமிதம்பத்யம் பாஷ்ய லக்ஷிதம் என்கிறார். இதன் காம்பீர்யத்தை என்ன என்று சொல்லமுடியும்!

அதிகரண ஸாராவளி

சாரீரக சாஸ்த்ரத்தின் நான்கு அத்யாயங்களின் ஸகல பாத அதிகரணங்களின் ஸாரங்களைத் தொடுக்கும் வ்யாக்யான க்ரந்தமாகும்.

ஸ்வஸ்தி என்றாரம்பிப்பது சாஸன முறையில் எழுதவேண்டியதைக் காண்பிப்பதாம். வேதாந்தாசார்ய ஸம்க்ஞா முதலில் வந்துவிட்டது. அதை ஸத்யமாக்கிக் கொள்ளுகிறேன் என்று ஸ்வாமி சாதிப்பதை நோக்கவேண்டும்.

ஸஹஜபஹுகுண: ஸ்ரக்தரா துக்தராசி: என்றார். ரங்கநாதன் தன்னை சங்காக வைத்துக் கொண்டு ஊதினான். அது அதிகரணஸாராவளியாயிற்று என்பர். வ்யாஸருக்கு வேதாசார்யாரென்ற பெயரே என்கிறார். ஹயக்ரீவனே இவ்வாறு உரைக்கின்றான் என்கிறார்.

ப்ரம்ஹணி ஸ்ரீநிவாஸே என்று பாஷ்யகாரர் மங்களத்தில் பாடியதை முதல் அத்யாயத்தின் இரண்டாவது பாதத்தில் வைச்வாநர பதவிஷய:—ச்ருதி நிகரசிரஸ் சேகர: ஸ்ரீநிவாஸ: என்று அமைத்தருளுகிறார். ஆங்காங்கு இருக்கும் அபூர்வரஸங்களை அனுபவிக்க.

சத தூஷணி

பேச் சொன்றுக்குச் சத தூஷணியைப் பேசிய நாள் என்று கொண்டாடப்படும் ஸ்வாமி ஸாதித்த சத தூஷணியில் 66 வாதங்கள் கிடைக்கின்றன.

ஹய்க்ரீவனை ப்ரார்த்தித்தார். ப்ரச்சந்ந பௌத்தவிஜயே பரிதோ யதத்வம், என்றார், வாதப்போரில் வேத மார்க்கத்தைப் பழிப்பவர்களை எதிர்த்துப் போரிட இதுவே கூர்மையான சரச்ரேணி என்கிறார்.

சதம் என்பதற்கு நூறு என்பது பொருளல்ல-நூற்றுக் கணக்கில் என்று பொருளாம்-அனந்தமான தோஷங்கள் பிற மதங்களில் இருக்கின்றன என்பதைக் காட்டுகின்றார்.

வாதாரம்பங்களில் சில ச்லோக ரத்தினங்களை அமைக்கிறார். அதிகமாக ஹயக்ரீவன் இடத்தைப் பெற்று விட்டார்.—5-வது வாதாரம்பத்தில் ப்ரஸீதது ஸமே தேவ: ப்ரதமாஞ்ஜலிகிங்கிர: என்கிறார். 32ல் நிரவதி மஹிமாநம் தேவம் ஆராதயாம: என்கிறார். 34ல் தனஞ்ஜய ஸாரதியைச் சரண் அடைகிறார். 37ல் தத்வந்தே பரமாநந்தம் இந்திராமந்திரம் மஹ: என்கிறார் 66ல் முநிர்ஜயதி லக்ஷ்மண என்கிறார்:—

ஸ்ரீ பாஞ்சராத்ர ரக்ஷை

இதில் மூன்று அதிகாரங்கள் உள்ளன. ஸித்தாந்த ஸ்தாபணம் என்பது முதல் அதிகாரம். நித்யானுஷ்டான ஸ்தாபநம் என்பது இரண்டாவது அதிகாரம். நித்ய வ்யாக்யானம் என்பது மூன்ருவது அதிகாரம்.

முதல் அதிகாரத்தில் பாஞ்ராத்ரத்தில் உள்ள நான்கு ஸித்தாந்தங்களில் ஸாங்கர்யம் (கலப்பு) கூடாது என்றும், கலந்தால் ப்ராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டுமென்றும் சாதித்து, இரண்டாவது அதிகாரத்தில் எம்பெருமானுரினுலே நித்யத்தில் ஸங்கிரஹிக்கப் பட்டதே ஏற்கத் தக்கது என்பதைக் கூறி, மூன்றில் நித்யக்ரந்தத்திற்கு வ்யாக்யானமும் செய்யப்படுகிறது.

நிக்ஷேப ரக்ஷை

சரணுகதியைப் பற்றி ஆக்ஷேபித்த ஆக்ஷேபங்களை ப்ரமாண பூர்வகமாக நிரஸித்து சரணுகதி மார்கத்தை ஸ்தாபிக்க அருளிச் செய்ததாயிருக்கும்:—அதிகாண தர்பணத்தில் இதை விளக்கிச் சொன்னேம் என்பதைக் கவனிக்க வேண்டும்.

ரஹஸ்ய ரக்ஷை

இதில் நான்கு அதிகாரங்கள் உள்ளன. முதல் அதிகாரத்தில் சரணுகதி கத்யம், இரண்டாவது அதிகாரத்தில் ஸ்ரீரங்க ஸ்ரீவைகுண்ட கத்யங்கள், மூன்ருவது அதிகாரத்தில் ஸ்ரீ சதுச்லோகி, நாலாவது அதிகாரத்தில் ஸ்தோத்ர ரத்னபாஷ்யம் முதலியவை நிரூபிக்கப் படுகின்றன, உபதேசத்தினுலேயே ஏற்பட வேண்டியதால் ரஹஸ்ய ரக்ஷை என்பதாம். சரணுகதி ரூபமான உபாயத்தை முக்யமாகக் கொண்டதால் இவ்வாறு திருநாமம் ஆம்.

ஸச்சரித்ர ரக்ஷை

இதில் மூன்று அதிகாரங்கள். முதல் அதிகாரத்தில் ஸுதர்சன பாஞ்ச ஜன்ய தாரணம், இரண்டாவது அதிகாரத்தில் ஊர்த்த்வ புண்ட்ரதாரணம், மூன்ருவது அதிகாரத்தில் பகவந்நிவேதித உபயோகம் என்பன போன்ற விஷயங்கள் நிருபிக்கப்படுகின்றன இது திருக்கோயிலூரில் அருளிச் செய்யப்பட்டது. என்பதை தேஹளீசன் விஷயமாகவும் அமைந்த மங்கள ச்லோகங்கள் இருக்கின்றன. மூன்று அதிகாரங்கள் என்பது த்ரிவிக்ரமத்வத்தைக் காண்பிக்கவாம்.

அம்ருதரஞ்சனி

ஸ்வாமி ஸ்ரீமந் நிகமாந்த தேசிகன் அருளிச் செய்த 17 ரஹஸ்யங்களில் இறுதியில் அனுஸந்திக்கப்படும் பாசுரங்கள் அம்ருதரஞ்ஜனி என்ற தலைப்புடன் தேசிகப்ரபந்தத்தில் முதல் பிரபந்தமாக அனுஸந்திக்கப்பட்டு வருகிறது. அம்ருதம் போல் மகிழ்விப்பது என்று இதற்குப் பொருள். அம்ருதத்வத்தை அடைய அமையும் என்றும் பொருந்தும். 39 பாசுரங்கள் இத்தேசிகத்தமிழ் மாலையில் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு பாசுரத்தின் சீர்த்தியை எங்ஙனே கூற இயலும்! திருப்பாற்கடலான ஸ்வாமியினிடத்தில் இப்ரபந்தங்களை வளர்த்த ஆராவமுதாழ்வானை மகிழ்விக்கும் என்று பொருள் கொண்டாலும் பொருத்தமே. மருந்தும் அமுதமுமாகின்றது என்பதை விளக்கும் 38 வது பாசுரம் இருமுறை அனுஸந்திப்பது திருநாமத்தை விளக்கும்போலும்

உவமானங்கள் மலிந்து பெருங்காவியமாகவும், ஆழ் பொருளை விளக்குவதால் பெருஞ் சாத்திரமாகவும், எண்களைக் கொண்டே மந்திரங்களை மறைத்துச் சொல்வதால் சீரிய மறையாகவும். த்வயம் முதலிய மந்திரத்தை அடைவே கூறுவதால் மொழி பெயர்ப்புநூலாகவும், சிற்சில வழிகளைச் சுருங்க உபதேசிப்பதால் ஸூத்திர நூலாகவும், இங்கும் அருளைப் பேசி முடிப்பதால் அருளிச் செயலாகவும், குணங்களைப் பேசுவதால் துதி நூலாகவும் அமைந்தது இந்த ப்ரபந்தம்.

ஆசாரிய சப்தங்களைக் கையாளுமிடங்களில் தேசிக சப்தத்தைக் கையாள்வதும் தனிச்சிறப்பினை அளிக்கும்.

நாராயணன் பரன் நாம் அவனுக்கு நிலையடியோம் நன்றேவருவது எல்லாம் நமக்குப் பரம் ஒன்றிலதே, வருநாள் பழுதற்று வாழும் வகையதில் மன்னுவமே என்பவை பொன்னே போன்றவை. இவ்வாறு அமையும் ஸ்வாமி ஸ்ரீஸூக்தியின் பெருமைகளை யாரே அறிவார்!

அதிகார ஸங்கிரஹம்

ஸ்வாமி ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த ரஹஸ்யங்களில் சிரோ பூஷணமாய் ஸ்வாமியின் அவதார ரஹஸ்ய லக்ஷியமாய் விளங்குவது ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம். ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரம் போன்ற க்ரந்தம் இதற்கு முன்னும் பின்னும் இல்லை. இது மஹான்களின் துணிபு.

இதில் ஒவ்வொரு அதிகாரத்திலும் கூறப்படும் அர்த்தங்களை ஸ்வாமி தாமே அவ்வோ அதிகார முடிவில் சுருக்கமாகப் பாசுரமிட்டு ஸாதித்தருளுகிருர். இப்பாசுரங்களின் தொகுப்பே தனிநூலாக அதிகார ஸங்கிரஹம் என்ற திருநாமத்தோடு தொண்டு தொட்டு

அனுஸந்திக்கப்பட்டு வருகிறது. முன்னும் பின்னுமாக சில பாசுரத் தொடர்களும் இடையில் அந்தாதித் தொடையில் முப்பத்திரண்டு பாசுரங்களுமாகச் சேர்ந்து ஐம்பத்தாறு பாசுரங்கள் கொண்டுள்ளது. ''முத்தமிழ் சேர்ந்த மொழித்திரு'' என்பதை உற்று நோக்கின், நமது ஸித்தாந்தத்தை நிலைநாட்ட வந்த தேசிகத் திருமொழி என்று தேருகின்றது. ருக், ஸாமம், யஜுஸ், ஆகிய மூன்று திருவும் ஒன்ருக அமைந்து மொழித்திருவாம். ''ஸா ஹி ஸ்ரீரம்ருதா ஸதாம்'' என்பர் போலும்.

அம்ருதாஸ்வாதிநி

ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த திவ்யமான ப்ரபந்தம் இந்த அம்ருதாஸ்வாதிநி என்பது. இதில் முப்பத்தேழு பாசுரங்கள் உள்ளன. ஒன்பது ரஹஸ்யங்களில் ஸ்வாமியினுல் அனுஸந்திக்கப்பட்ட பாசுரங்கள் தனிப் பெருமையோடு தனிப்ரபந்தமாகவும் திகழ்கின்றது.

அமுதசசுவையை இநநூலல காணகுருமை. வேதாந்த தேசிகஸம்ப்ரதாய ஸுதை இது. இதை ஆஸ்வாதனம் பண்ணும் பெருமை பெற்றவர் தேவரிலும் சீரியரே.

பல மூல க்ரந்தங்களை அடியொத்தி இவ்வொன்பது ரஹஸ்யங்களும் தோன்றின. இவ்வொன்பது ரஹஸ்யங்களினுடையவும் ஸாரமாக இப்ரபந்தம் அமைந்தது பெரும்பேரும்.

அம்ருதாஸ்வாதிநியில் பெரிய பெருமான், வராஹநயினர், தேவப்பெருமாள், சரண்யத்வம் தோற்றும் ராமன், ஆகிய எம்பெருமான்கள் இடம் பெற்றனர்.

1வது பாட்டில் ஞாலம் புகழும் தேசிகர் என்பதும், 5வது பாட்டில் தயையையும் விலங்காக வர்ணிப்பதும், 6ல், ஓங்கி நின்ருேம் என்றதும், 7ல் துவய மந்திரச் சொற்களைத் தமிழ்ப்படுத்தியதும், 9ல் துவயத்தை அனு ஸந்தானம் பண்ணிக் கொண்டு இங்கேயே இரு என்ற சொன்னவன் ரங்கநாதனுனபடியால் ரங்கநாதனைப் பாடுவதும், 10 கண் புதையல் விளையாட்டைக் கழிக்கின்ருன் என்பதும், 13ல் துவயத்தை நான்கு என்ற எண்ணிக்கை கொண்டு சித்தரித்துக் காட்டுவதும், 14ல் சுரக்கும் சுரபிகள் போல் சொரிகின்றனர் சொல்லமுதே என்பதும் அழகாக காட்டப்பட்டன. இவை ஸாரஸாரத்தில் அனுஸந்திக்கப்படும்.

15வது பாசுரம் தொடங்கி 19 வரை அபயப்ரதான ஸாரப்பாசுரங்களாகும். அவற்றில் ஒருக்காலே என்ற பாசுரம் ஸக்ருதேவ என்ற ராமாயணச்லோகத்தின் மொழி பெயர்ப்பாம். 20 பாசுரம் முதல் 23 வரை ரஹஸ்யசிகாமணி பாசுரங்களாம். 24 அஞ்சலி வைபவம்,

25 முதல் 27 வரை ப்ரதான சதகம், 28–30 உபகார ஸங்க்ரஹம் 31, ஸாரஸங்க்ரஹம், 33 வரை விரோதபரிஹாரம், பிறகு முனிவாஹனபோகம் என்ற வகையில் அமைந்தவை மற்றதை வீரிவில் காண்க.

பரமபதஸோபாநம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் அருளிச் செய்த ரஹஸ்ய திவ்ய ப்ரபந்தங்களில் பரம போக்யமானது.

இப்பரமபத ஸோபாநத்தின் ரஸத்தையும் காம்பீர்யத்தையும் அழகையும் அமைப்பையும் என்னே சொல்வது !

பரமபதஸோபாநம் என்ற திவ்யமான ரஹஸ்யக்ரந்தத்தின் முதலிலும் முடிவிலும் அநுஸந்திக்கப்பட்ட பாசுரங்கள் ஒன்ருகத் தொகுக்கப்பட்டு தனித்ததொரு திவ்ய தேசிகப்ரபந்தமாகத் திகழ்கின்றது இந்த ஸோபாநம்.

மடைப்பள்ளி வந்த மணம் எங்கள் வார்த்தையுள் மன்னியது, திருமகளார் பிரியாத தேவன் திண்ணம் தேருதார் திண்படியில் ஏருதாரே!

பல கற்ற மெய்யடியார் இக்கடும் பவத்தே, நந்திருமால் நிலைகண்டார் நாகமெல்லாம் நரகென்று நற்பதமே நாடுவாரே, பெருமான் எண்ணம் எண்ணுதார் எட்டிரண்டும் எண்ணுதாரே, வானேறும் வழி கண்டோம் மகிழ்ந்திட்டோமே. பாவளரும் தமிழ்ப் பல்லாண்டிசையுடன் பாடுவமே. மேதிநியில் இருக்கின்ரும் விதியினுலே என்பன போன்ற குருமணியின் வாக்ய மணிகள் என்னே !

பரமபதம் என்பது உயர்ந்த திவ்யமான ஸ்தானம். அதற்கு எவ்வகையிலும் மேலான தொரு இடம் இல்லாததால் அத்திருநாமம். திருநாடு என்றும், மாவீடு என்றும் பரம பதம் என்றும் கூறப்படும். இதை அடைய வழிகள் பல நூல்களில் பல வகையில் கூறப்பட்டிருக்கும். ஆனுல் அதை அடைய படிகளக அமைந்தவை யாவை என்பதனை ஸம்பிரதாய முறையில் கேட்டு–கண்டு இந்நூலில் ஸ்வாமி அழகாக வெளியிடுகின்ருர்.

படிகள் அதிகமானுல் அனைவரும் ஏற இயலாது ஆதலின் ஒன்பது படிகள் அமைத்துக் கூறுகின்ருர். ஒவ்வொரு படியும் தனிச் சிறப்புடையது. விவேகம், நிர்வேதம், விரக்தி, பீதி, ப்ரஸாதம், உத்க்ரமணம், அர்ச்சிராதி, ப்ரக்ருத்யதிக்ராந்தி, பரப்ராப்தி என்று படிகளின் வரிசைகளை அமைக்கின்ருர்.

பரமத பங்கம்

பிறமதங்களின் தௌர்பல்யத்தை அறிந்தாலன்றி தனது மதத்தின் பெருமையை அறிந்ததாகாது. பிற மதங்களில் குறைகள் இருக்கின்றன. அவை யாவை என்பதனை இன் னூலின் வாயிலாக அறியலாம்.

முதல் பாசுரமும் இறுதிப் பாசுரமும் திருவாழியாழ்வானை துதிப்பதாக அமைந்துள்ளது. இங்கு கூறப்படும் சில வார்த்தைகள் உள்ளத்தை உருக்குபவை. ''பழ மறையந்தி நடைக் கிடைச் சுவர் பரமதம்...''. கத்தி மயக்கும் கதகரை நாம் கடிகின்றோமே, தேசிகர் வாசகமே ஓலைப்புறத்தெழுதுகின்றோம் உள்ளே எழுதுமினே, சிறியார் வழிகள் அழிப்பதும் தீங்கு கழிப்பதற்கே, நெடுமாலை நாமடைந்து நிலை பெற்றோமே, சில கற்றுச் சித்தாந்த மறிய கில்லா சிறுவரினி மயங்காமற் சேமித்தோமே. கார்த்தயுகக்கதி கண்டோம் மகிழ்ந் திட்டோமே' முன்னுள் புணராத பரமதப்போர் பூரித்தோமே—என்பன போன்ற வசனங்களை நினைக்க.

பரமதபங்கம் என்பதொரு தனிரஹஸ்யம் ஸ்வர்மியினால் சாதிக்கப்பட்டுள்ளது. அதில் இருபத்தி நான்கு அத்யாயங்கள் உள்ளன.

ஒவ்வொரு அத்யாயத்தின் முடிவிலும் அனுஸந்திக்கப்பட்ட பாசுரங்களின் தொகுப்பே இப்பரமத பங்க தமிழ் பிரபந்தமாம். சேர்ந்து இருப்பது மட்டுமின்றி தனித்துத் தொகுத்தாலே ஒரு தனிப் பிரபந்தமாகும் பெருமை தேசிகன் ஸ்ரீஸூக்திகளுக்கு இன்றியமை யாதது.

ரஹஸ்யம் ஸகல கலா பாரங்கதர்களுக்கல்லது அறியலாகாது ஆகாது. மற்றவை விரிவுரையில்

மெய்வரத மான்மியம்

தமிழில் ஒப்பற்றதான தலபுராணமாயமைந்தது இது. செந்தமிகு தமிழ் மறையின் சிறப்பை அறிய இது ஒன்றே போதுமானது.

வாழி யென்று வாழ்த்துடன் நாடகப் பாணியில் இது ஆரம்பமாகிறது. வம்மின் புலவீர் என்று அழைப்பதும்-எவ்வண்ணம் பேசுவீர் ஈதென்ன புராங்கே என்று தொடங்கு வதும் மிகவும் ரஸம்.

நன்றே வருவதெல்லாம், அம்புலி வேண்டிய பாலனைப்போல அழுதனனே, மதிட்கச் சிநகர் கண்டு மகிழ்ந்திட்டானே, பகலோன் பகல் விளக்காகப் பரஞ்சுடர் தோன்றியதே, அருளாளர் தாமெனினும் தமக்கொவ்வாரே, மெய்விரத நன்னிலத்து மேன்மையேத்தி வேதாந்த வாசிரியன் விளங்கினனே! என்ற வகையில் அமைந்த வாக்யங்கள் பொன்னே போன்றவை.

ஒன்றே புகல் என்ற பாசுரத்தில் திருவருளால் என்ற பாகத்தை எந்த பகுதியுடன் சேர்த்து அனுபவித்தாலும் மிகவும் போக்யமான பொருள்கள் கிடைக்கின்றன. 12 வது பாசுரத்தின் பெருமையைக் காண்போம்.

புராணத்தில் எம்பெருமான் எழுந்தருளினன் என்பதைக் காட்ட உபாகத: என்ற சொல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அப்படியே வந்தார் வந்தார் என்று காட்டித் தருகிறார்.

அருள் வரதர் நின்ற பெருமையைப் பேசும் பாசுரம் பொன்னனது. சித்தசித்தென என்ற பாசுரம் பூர்ண ஸ்ரீபாஷ்யத்தின் ஸங்க்ரஹமாகும்.

வேதாந்த வாசிரியன் வேதாந்த வாசிரியனக விளங்கியது இவ்வத்திகிரிமான்மியத்தைப் பாடியதால் என்று பேசுவது என்னே கண்டு! என்பது முடிவு. காணும் காவியம் போலும்!

அடைக்கலப்பத்து

ஸ்வாமி தேசிகன் பேரருளாளன் திருவடிகளில் சரண் அடைந்ததைப் பேசும் இப் பத்துப் பாசுரங்களும் ஒன்று சேர்ந்து அடைகலப் பத்து என்றழைக்கப்படும்.

எளிய நடையில் சரணகதி விஷயத்தை விளக்கும் சிறிய சீரிய ப்ரபந்தம் இது. ஓரெர்ன்றுதானே அமையும் என அமைந்தது. அடைந்தேன், புகுந்தேன், அமிழ்ந்தேன் ஆகிய சொற்களால் சரணகதி அனுஷ்டித்ததைக் காண்பித்து, சீலமல்லது அறியேன், அருளாளர் வாசகங்கள் மறவேன் என்றும் பேசி, இவை யெல்லாம் நற்குண வுரைகள் (தோத்திரங்கள்) என்று கூறித் தலைக்கட்டப்படுகிறது. ஸம்ஸ்கிருதத்தில் அருளிய ந்யாஸதசகம் சிறிது வேறுபாட்டோடு அமைந்து விளங்கும். இவை பத்தும் கோதில என்பது உற்று நோக்கத்தக்கது.

அர்த்த பஞ்சகம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த அர்த்த பஞ்சகம் என்ற இந்த நூல் எளிய தமிழில் ஸித்தாந்தத்தை விளக்கும் சாஸ்திர நூலாகும். ஐந்து பொருள் களை அறிந்தால் வேத மனைத்தும் அறிந்தவர்க் கொப்பாவர் என்று ஸ்வாமி தாமே ஸாதித் தார். (1) பகவானுடைய ஸ்வரூபரூபாதிகள், (2) ஜீவாத்மாவின் ஸ்வரூபம் முதலியன, (3) மோக்ஷாபேயம், (4) பலத்தின் ஸ்வரூபம், (5) இதை யடையமுடியாமல் செய்யும் ப்ரதி பந்தகம் ஆகியவற்றை விளக்கமாக இந்த நூலில் சாதிக்கின்றார். ஒவ்வொரு பொருளையும் விளக்க இரண்டு இரண்டு பாசுரங்கள் அமைந்துள்ளன.

இந்த ஸ்ரீஸூக்தியைப்பற்றி ஸ்வாமி தாமே ''பண்டுரைத்தார் படியுரைத்த வியன் கலைகள் ஈரைந்தும் வேதியர்கட் கினியனவே'' என்று சாதிப்பது எவ்வளவு பொருத்தம் என்பதைச் சுவைத்து மகிழ வேண்டும். இது ஸகல சாத்திரங்களின் ஸாரதமமான அர்த்தம் என்பதைப் பலகாலும் பல இடங்களிலும் ஸ்வாமி ஸாதித்தருளுகிறார். அத்திகிரிக்கு அடை மொழியும், அருளாளனுக்கு அளிக்கும் அடை மொழியும் போன்னே போன்றவை. அமலனுதிப்பிரான் அமைவைப் பெற்றதும், அகலகிலேன் என்பதை அருளாளன்பாலமைத் துப் பாடப்பெற்றதுமான பல ரஸங்களை ரஸிக்கலாம்,

———

ஸ்ரீ வைஷ்ணவ தினசரி

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த தமிழ் பிரபந்தங்களில் ஸ்ரீவைஷ்ணவதினசரி என்பது ஒன்று. இது ஸ்ரீ வைஷ்ணவர்களின் தர்ம சாஸ்திரம் என்றால் மிகையாகாது. ஸ்ரீவைஷ்ணவன் தினந்தோறும் செய்யவேண்டிய கடமைகள் என்ன என் பதை வெகு அழகாக இந்நூலில் சாதிக்கின்றார். பிற பெரிய பெரிய நூல்களில் தெளியாத பொருள்களை இதனால் எளிதில் தெளியப் பெறலாம்.

அபிகமனம், உபாதானம், இஜ்யை, ஸ்வாத்யாயம், யோகம் என்று காரியங்களை முக்கியமாகக்கொண்டு ஒரு நாளை ஐந்து கூறாகப் பிரித்து அதில் செய்ய வேண்டியதை ஸாதிக்கின்றார். ஒவ்வொரு விஷயத்தையும் இரண்டு இரண்டு பாசுரங்கள் வாயிலாக நிரூபிக் கின்றார். தமிழின் இனிமையையும் பொருளின் பொலிவையும் என்னென்று கூற இயலும். இது கலிவிருத்தத்தில் பாடப் பெற்று கலியில் நடந்து கொள்ளும் விருத்தத்தை (நடத்தையை)க் காட்டும். இதன் பாங்கு தனிச்சீருடையது. உட்பொருட் பொலிவு முதலியவற்றை விரிவுரையிற் காண்க.

திருச்சின்னமாலை

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த அழகான ப்ரபந்தங்களில் திருச்சின்ன மாலை போன்ற பெருமையுடைய பெரிய புத்தகமும் உண்டோ !

இத்திருச்சின்னமாலையின் சிறப்பினைக் காட்ட மூன்று தனியன்கள் அமைந்துள்ளன. வேதாந்தாசாரியனே இன்ன படியென்றுரைத்தான்-(இவனையல்லால் இதுவேறு யாருக்குப் புலனாகும்) என்பதும், ''வேங்கடேச குருவின் வாசகமே எங்களுக்கு வாழ்வு'' என்பதும், மால்வரதர் திருச்சின்ன வோசையினிமையுண்டோ மற்றைத்தேவருக்கே இதன் பெருமையை ஒருவாறு அறிய அமையும்.

ஆனால் இதின் ரஸங்களையும், காம்பீர்யத்தையும் அனுபவிக்க எழுத்துக்குத் திறமை யில்லை என்பதைத் தான் உறுதியாகக் கூறமுடியும்.

இந்த ப்ரபந்தத்தின் பெருமையை எவ்வாறு கூறுவது! ஈக்ஷிதியில் தொடக்கமான ஈகாரம் இதற்கு முதலெழுத்து. வந்தார் வந்தார் என்று எண்பத்தியொருமுறை பேசுவது வியக்கச் செய்கின்றது. இத்தனைப் பாசுரம் அமைத்ததற்கு ஒரு பொருத்தமும், ஒரு நாள் இத்தனை திருச்சின்னம் பரிமாறப்படும் என்றதோர் நிலையும் இருக்குமோ என்றும் தோன்று கிறது.

பெருமாள் எங்கே எங்கே என்று கேட்பதும், திருச்சின்ன ஓசையைக்கேட்டு இங்கே வந்தார் இங்கே வந்தார் என்று சொல்வதுமான சூழ்நிலையை கச்சியிலன்றோ காண முடியும் !

திருச்சின்னம் என்பதற்கு அடையாளம் என்று பொருள். எம்பெருமானுக்கு அடை யாளம் (அறிவிப்பது) திருமந்த்ரம் த்வயம், சரமச்லோகம் என்பதை ரூபணம்பண்ணி நிருபிக் கும் அழகு அலாதியானது.

சிறுவர்கள் இதை அனுகரணம் செய்யும் பொழுது, தும்மாய் ஊதுவது என்று சொல் வது வழக்கம். இம்மாதிரியே ஸ்வாமியும் வந்தார் என்ற சொல்லை பொலிவுடன் பொருத்தி அமைப்பதும் உற்று நோக்கத் தக்கது.

நிற்பார் என்று வந்த பாசுர அடிகளைமட்டும் உற்று நோக்கினால் ஒரு அழகான பொருள் விளங்கும். நின்ற திருக்கோலத்தின் சீர்த்தியைக் காண்கிறோம். திருவுரையாய்த் தாம் பொருளாய் நிற்பார் என்பதும், அனைத்துக்கும் அதிபதியாய் நிற்பார் என்பதும், நாம் வணங்கத் தாமிணங்கா நிற்பார் என்பதும், உலகுடம்பாய்த் தாமுயிராய் நின்றார் தருமமெலாந்தாமாகி நிற்பார் என்பதும் உற்று நோக்கத் தக்கது.

அளவில்லா அருளாழிப் பெருமாள் வந்தார், அருளாளப் பெருமாள், கண் கொடுக்கும் பெருமாள், வரந்தரும் தெய்வப் பெருமாள் என்ற வகையில் பேசுவதையும் உற்று நோக்க வேண்டும்.

திவ்ய ப்ரபந்த கோஷ்டிக்குத்தடை ஏற்பட ஸ்வாமி வாதம் செய்து வாதிகளை விரட்டிவிட, தேவப்பெருமாளும் தடையின்றி எழுந்தருளினர். அப்பொழுது ஸ்வாமி விஜயஸ்ரீயை வெளியிடும் திருச்சின்னம் பரிமாற இவ்வாறு அனுஸந்தானம் பண்ணினர் என்பது ஸம்ப்ரதாயம்.

தாமே என்பது ஒவ்வொரு வரியுடனும் சேர்த்து அனுஸந்திக்கப்படவேண்டியதாம். அவ்வாறு சொல்வதில் கணக்கில் அடங்காத சுவைகள் தோன்றுமே.

உபமேயம் உபமானம் என்பது நியதமானது. தாய் தந்தையர்களைப் பார்த்து தாய் தந்தையர் போல் உள்ளனர் என்று சொல்வது சரியல்ல—ரஸமுமில்லை. சொல்லும் பொருளும் போலே என்றான் ஒரு கவி. சொல்லாகவும் பொருளாகவும் இருப்பவரைப் பார்த்து போலே என்பது ரஸமாகாதே! ஆதலால் ஸ்வாமி திரு—உரை, தான் பொருள் என்று அவ்வாறே கூறுவர்.

கச்சிதனிற் கண் கொடுக்கும் பெருமாள் என்பதன் ரஸத்தையும் கவனிக்க வேண்டும். யுத்த பூமியில் கண்ணை அளித்தான் கண்ணன். அந்த திவ்யமான கண்ணைக் கொண்டு பார்த்தன் பார்த்தான். பயந்தான் பயன். இதுவேயாயிற்று. தேனைவளுபேண என்றான். கண்ணைக் கொடுத்தவன் கண்ணன். பார்க்கப்பட்டவனும் கண்ணன். ஆனால் இடத்தினால் நிலை தடுமாறியது. அக்குறை தீர கச்சிதனில் கண் கொடுத்தான். அவனைக் காண்கிறோம். நிரந்தரம் ஸேவிக்கும் வாய்ப்பினைப் பெற்றோம் என்பதையும் காட்டுகிறார்.

அரங்கத்தில் கண்ணாகவே எழுந்தருளியிருக்கின்றான் எம்பெருமான், கச்சியிலே கண்ணைக் கொடுக்கிறான் என்பதின் ரஸத்தை உற்றுநோக்க வேண்டும்.

யாதவப்ரகாசரிடமிருந்து எம்பெருமானாரைப் பிரிக்கத் திருவுள்ளங்கொண்டு புண்டரீகாக்ஷ ச்ருதியைக் காட்டினான். கண்ணனின் கண்ணீர் எம்பெருமானாரின் கண்ணீராகிப் பார்வையை மறைத்து நல்ல தர்சனத்தை அளிக்க அவர் மூலமாக தரிசனம் கிடைத்தது. யதிக்ஷமாப்ருத் த்ருஷ்டம் மதம் என்ற நிலை ஏற்பட்டது. இதை உற்று நோக்கி அறிக. கண்கொடுக்கும் பெருமாள் கச்சிதனில் வந்தார் என்றும் கொள்க.

> வண்மை யுடைவரம் தருவார்,
> வானேற வழிதந்தார், தமக்கேயாயெமைக் கொள்வார்,
> திருமேனிச் செல்வர், எல்லார்க்கும் கதியானார்,
> அஞ்சின நீ என்னையடை என்றார்
> பரமெனது நீ புலம்பேல் என்றார்
> பஞ்சவரைப் பலவகையும் காத்தார்

என்ற அழகான இச்சொற்கள் நெஞ்சினை உருக்குமவை :—

அருளாழிப் பெருமாளின் அருள்வடிவான ஆரண தேசிகன் அருளின்றி அவர்தம் ஸ்ரீஸூக்தியின் ஆழ்பொருளை யாரே அறியவல்லார்!

பன்னிரு நாமம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் அருளிச் செய்த ப்ரபந்தங்களில் பன்னிரு நாமம் என்பது தேவப் பெருமாள் விஷயமாக அவதரித்தது. பன்னிரண்டு நாமங்களின் பெருமைகள் இதில் பேசப்படுகின்றன.

பன்னிரண்டு திருமண் காப்புகளிலும் எம்பெருமானின் திருமேனியை த்யானிக்க வேண்டும். ப்ரம்ஹபுரமான இந்த சரீரத்தில் பன்னிரண்டு இடங்களில் எம்பெருமானை த்யானிப்பது முறை. இந்த ஜீவாத்மாவைக் காக்க எம்பெருமான் பன்னிரண்டு உருவங்களுடன் எழுந்தருளியிருப்பான் என்பது எவ்வளவு அழகு! திருமண்காப்பு என்று சொல்லுகிறோம். இதையும் நாம் சரியான உருவம் நிலைகளை உணர்ந்து அவ்வோ இடங்களில் இட்டு, அதையும் காப்பாற்றி நம்மையும் காத்துக்கொள்ள வேணும்.

வ்யாஸாதிகள் சொன்னது ஒருபுறமிருக்க, நம்மாழ்வாரும், பெரியாழ்வாரும் இப்பன்னிரு நாமப் பெருமைகளைப் பாடிப் போந்தனர். ஸ்வாமி அதனிலும் சீரிய பாணியில் பன்னிருநாம உருவில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் பாங்கினை விளக்குகின்றார். திருமண்ணிற்கு, ரூபமொருபுறமிருக்க, எம்பெருமான் நாமங்கள் சாத்தப்பட்டதாலேயே நாமம் என்ற வழக்கு ஏற்பட்டுள்ளது!

அழகான ஸ்தோத்ரமாக அமைத்து, அரும்பொருளை விளக்கி ஒவ்வொரு பாசுரந்தோறும் தேவப் பெருமாள் பெருமையை பேசி, இது திருவத்தியூரரைச் சேர்ப்பவர்க்கே தித்திக்கும் என்று தலைக்கட்டுகிறார். பன்னிரு நாமம் முத்திக்கு மூலம் என்பது மிகவும் அழகு. இரண்டு தனியன்கள் அமைந்தது இதன் சிறப்பினை மேலும் கூறும்.

திருமந்திரச்சுருக்கு

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த தமிழ் ப்ரபந்தங்களில் திருமந்திரச் சுருக்கு என்பது ஒன்று. ஸர்வஸாரமானதும் மிகவும் ஸங்கிரஹமானதுமான திருமந்திரத்தின் பொருளைத் தெள்ளிய நடையில் ஸ்வாமி சுருக்கமாக ஸாதிக்கின்றார். ஒவ்வோர் எழுத்திலும் அமைந்துள்ள பொருள்களை விளக்கும் முறை தனிச்சீருடையது.

திருமந்திரத்தின் அர்த்தத்தை உபதேசிக்கும் பாணியில் இந்த கிரந்தத்தை அமைத்திருக்கிறார். திருத்திப் பணி கொள்ளும் பாங்கினை இந்த க்ரந்தத்தில் காணலாம். தொண்டரடிப் பொடிகளின் திருமாலைத்துறை நன்கு விளங்கும். காண்மின், வாழ்மின், எழுமின், உய்மின், உணர்மின், மாற்றுவீர், நணுகுவீர், பணிமின், வேற்றுமை மேவுவீர்

ஆகிய உபதேச மொழிகள், திருமந்திரத்தின் பொருளை உலகுக்கு எடுத்துரைப்பதில் ஸ்வாமியின் ஆர்வம் எத்தகையது என்பதைக் காண அமையும்.

இது நான் மறையோர் காக்கும் மாநிதியாகும். இதைப் பூரணமாக அறிந்தவர்கள் நினைத்தவாறெல்லாம் சொல்லமாட்டார்கள். இதைச் சாதாரணமாக நினைத்துச் சொல்ல முற்பட்டால் அவர்களுக்கு இதன் பெருமை தெரியாது என்பது தேரும் என்று இறுதியில் சாதிப்பது நோக்கத்தக்கது. மற்றும் பல ரஸங்கள் ஆங்காங்கு குறிக்கப்படுகின்றன.

த்வயச்சுருக்கு

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த தமிழ் ப்ரபந்தங்களில் பரம போக்யமானது இந்த துவயச்சுருக்கு.

இதில் த்வயம் என்ற சரணகதி ப்ரயோக மந்திரத்தின் பெருமையையும், அதில் அடங்கி இருக்கும் அபூர்வமான ஸித்தாந்தங்களையும் ஸ்வாமி ஸாதிக்கின்றார்.

பிராட்டிக்கு எம்பெருமான் உபதேசித்தது த்வயம் என்பதை முதல் பாசுரம் காட்டுகின்றது. இதற்கு வேதகம் என்று பெயரிடுகிறார். இதனுடைய பொருளை ஸ்வாமியின் த்வயச்சுருக்கு விளக்குவதுபோல் வேறு வேதம் தான் இருக்குமோ !

ஆறு அர்த்தங்களை அழகாகக்காட்டுகிறார். ஒரு பாசுரத்தாலே ஸகல விதமான கலக்கங்களும் தலை சாய்ந்து போமே !

தான் சொன்ன இப்பொருள்கள் பத்தும் தொலையாத நிதியாகக் கொள்ள வேண்டியவை என்று அருளிச் செய்கின்றார்.

உள்ளத்தை உருக்கும் சொற்களின் அமைப்பு கொண்டது இப்ரபந்தம். களைகளை அறுத்துவிட்டனம். இப்பத்துப் பொருளும் நிதியே போல் பாவிக்கப்படவேண்டியவை. என்று தலைக்கட்டுகிறார்.

திருவுடனே திகழ்வரர் செறிந்தார் எங்கள் சிந்தையுள்ளே, நாறு துழாய் முடியான் நமக்குச் சரண்யனனே, திருமகளார் பிரியாத் திருமாலன்றி நற்சரணே, சேர்க்குந் திருமகள் களையற வெண்ணினமே என்ற பாசுரப்பகுதிகளை அனுபவிக்க வேண்டும்.

சரமச்லோகச் சுருக்கு

கண்ணன் அருளிய கீதையின் இறுதியில் உபதேசித்தச்லோகம் சரமச்லோகம் என்று அழைக்கப்படும். ஜீவனுக்கு இதைக் காட்டிலும் கல்யாணப்ரதமான ச்லோகமே இருக்க முடியாது.

இச்சரமச்லோகத்தின் கருத்தினை பத்துப்பாசுரங்களால் பாடித்தருகிறார்.

சரமச்லோகத்தின் அர்த்தத்தை பதங்களின் வரிசையிலேயே ஒவ்வொரு பாசுரமிட்டு தனக்கேயுரியதான சைலியால் விளக்குகின்றார். அக்ஷரத்துக்கு அக்ஷரம் அமைந்த ரஸங்கள் எண்ணிலடங்கா.

பதினோராவது பாசுரத்தில் மாசுச: என்ற சொல்லின் பொருளை விளக்கியது அபூர்வமாயமைந்தது.

கீதார்த்த ஸங்க்ரஹம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த் தமிழ் பிரபந்தங்களில் கீதார்த்த ஸங்கிரஹம் என்பது ஒன்று. இதில் பகவத்கீதையில் 18 அத்யாயங்களிலும் சொல்லப்படும் விஷயங்கள் சுருக்கமாகக் கூறப்படுகின்றன. ஆளவந்தார். அருளிச் செய்த கீதார்த்த ஸங்கிரஹத்தை யொட்டியே எம்பெருமானுர் கீதாபாஷ்யத்தைம் பணித் தருளினுர். ஸ்வாமியும் கீதார்த்த ஸங்கிரஹத்திற்கு ரக்ஷை என்ற அழகான வியாக்யானத்தை வடமொழியில் சாதித்து, எம்பெருமானுர் எந்த எந்த வகையில் ஸங்கிரஹத்தைப் பின்பற்றுகிறார் என்பதைக் காட்டியுள்ளார். அதோடு நிற்காமல் அந்த கீதார்த்த ஸங்கிரஹத்தைத் தமிழ் படுத்திக் கொடுக்கத் திருவுள்ளங்கொண்டு 21 பாசுரங்களால் பாடிக் கொடுக்கின்றார். வடமொழியில் பாடிய கீதை தென்மொழியில் தேன்பொழியும் பாங்குடன் விளங்குவது வியப்படையச் செய்யும்.

தமிழ் நடையும், ஒவ்வொரு எழுத்திலும் பொதிந்து கிடக்கும் சுவையும், அர்ச்சுனனுக்கும் பெருமாளுக்கும் அளிக்கும் அடைமொழிகளும் வியக்கச் செய்வனவாம். ''கீதையின் வன்பொருளைக் கோதற்ற நான்மறைமௌலியின் ஆசிரியன் குறித்தான் என்றதை ஸேவித்த பிறகு நம்வாக்குக்கு நிலமேது!

மும்மணிக்கோவை

ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்த ப்ரபந்தங்களில் மும்மணிக்கோவை ஜீவரத்னம் போன்றது.

மூன்று பதிகங்கள் கொண்ட மும்மணிக்கோவையில் ஒரு பத்துப் பாட்டுக்களே கிடைக்கின்றன. அந்தாதித் தொடையில் அமைந்து தனிப்பட்ட அழகுடன் பொலியும் பிரபந்தம் இது.

ஸ்வாமி அருளில் துடங்கி இரு ப்ரபந்தங்களைப் பணித்துள்ளார். அவற்றுள் ஒன்று ப்ரபந்தஸாரம், மற்றொன்று இம் மும்மணிக்கோவை. இதில் அருளெனும் திருவை ஸேவிக்கின்றோம்.

தமிழுக்கோர் அணிகலமாய், தமிழ் மறைகளுக்கோர் மணிவிளக்காய் விளங்கும் இப்ரபந்தம்.

மெய்யன்பால் மையல் கொண்டு மறைமுடித் தேசிகன் இம்மணிக் கோவையை அணிவிக்கின்றார். நாயிகாபாவத்தை விளங்கும் பாங்கு அலாதியானது.

1-4-8 என்ற எண்ணுள்ள பாசுரமணிகளுக்கு விலை கூற வானும் ஈடாகுமோ!

பாடப்படுபவன் ஒரு நாயகமணி. பாடுவது ஒரு கவிமணி பெருமை பெறுவது ஜீவமணி. இவ்வகையில் மும்மணிகளின் கோர்வையையும் காணப் பெறுவோம்.

கட்டளைக் கலித்துறை, அகவல் வெண்பா என்ற வகையில் மூவகைப் பாக்களாகி அமைந்தது ஆதலின் இதற்கு இத்திருநாமம் என்பர்.

தானும், தோழியும். செவிலித்தாயும் ஈடுபடும் பாணியில் அமைந்ததால் இது மும்மணிக் கோவையாம். தமிழ்த் துறை வல்லுநர் இதில் ஆழ்ந்து பல மணிகளை எடுத்து அளிப்பரேல் உலகம் நிறம் பெறுமே.

நவமணிமாலை

அயிந்தைமாநகரில் அமைந்திருக்கும் தெய்வநாயகன் விஷயமாகப் பாடியது இந்த திவ்யமான ப்ரபந்தம். இது நவரத்னமாலை-நவமணிமாலை என்ற பெயர்களால் அழைக்கப் படும். ஸ்வாமி தாமே சூட்டியருளிய திருநாமம் நவமணிமாலை என்பது.

ஒன்பது விதமான விருத்தங்களால் பாடப்பட்டு தெய்வநாயகனுக்கு ஸமர்பிக்கப் படுகிறது. ஒவ்வொரு விருத்தமும் ரத்தினம் போன்றது. ஸ்வாமியின் ஸ்ரீஸூக்தியாதலின்

நவரத்தினங்கள் பெயர், பயன், குணம் முதலியன ஒவ்வோர் பாசுரத்தில் பணிக்கப் பட்டுள்ளன. எந்த ரத்தினம் எந்த பாசுரத்தில் அமைந்துள்ளது என்பதை ஆராய்ந்து அறிய வேண்டும்.

பராங்குச பரகாலாதிகள் நாயிகாபாவத்தில் நின்றதுபோல் தேசிகனும் தன்னை நாயகி யாக பாவித்து தெய்வநாயகனிடம் ஈடுபடுவது தனிச் சிறப்புடையது. ஆதலால் தான் நவநவமான மணிமாலையைச் சமைத்து சாத்தி மகிழ்கிறார். ஒன்பது மணிகள் அமைந்த மாலை என்பதுமட்டுமின்றி ஒன்பது வகையான ப்ரபந்தங்களையும் தெய்வநாயகனுக்கு சமர்ப்பிக் கின்றார்.

திருவடிகளின் பெருமை, தசாவதாரப் பெருமை, வினை தவிர்க்கும் பாங்கும் மாசிக் கடலாடி மகிழ்ந்து வருதல், எந்த நாளிலும் தெய்வநாயகன் நினைவை வேண்டுதல், வடி வழகை மறவாதார் எய்தும் பயன், யமவாதனையினின்றும் தன்னைக் காக்கவேண்டுதல், அபயமளிக்கவேண்டுதல், அடைக்கலம் கொள்ள வேண்டுதல், தான் பெற்ற பயனைக் கூறுதல், என்ற பொருள்களின் சேர்த்தியை இந் நவமணி மாலையில் பாசுரங்களின் அடை வில் காணப்பெறுவோம்.

நின் வடிவழகு மறவாதார் பிறவாதாரே; அஞ்சல் அஞ்சல் அஞ்சல் என்றளிக்க வேண்டும் அச்சுதா; முகுந்தனருள் தந்த பயன் பெற்றேன் யானே, என்ற திருவாக்குகள் எற்றைக்கும் தித்திக்குமே; பலரஸங்களைப் பொழிந்து, பக்தி வெள்ளத்தில் மிதக்கச் செய் பவை இப்பாசுரங்கள்.

ப்ரபந்த சாரம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த திவ்ய ப்ரபந்தங்களில் குன்றின் மேலிட்ட விளக்காக அமைந்தது இந்த ப்ரபந்தஸாரம்.

ப்ரபந்த ஸாரம் போன்றதொரு ப்ரபந்தம் இதுவரை வேறு காணப்பெறவில்லை. ஸாரஸ் ஸாரஸ்வதாநாம் என்று ஸ்வாமி திருவாய்மொழியைப் பற்றிப் பேசினார். இது ஸாரஸ்வத ஸாரமான திவ்ய ப்ரபந்தங்களின் ஸாரம் என்பதை ரஸிகர்கள் ஆராய்ச்சியாளர் கள் உற்று நோக்கவேண்டும். சந்த மிகு தமிழ் மறையோன் என்று தன்னைப் பெருமையோடு பேசிக் கொள்வார். த்ராவிட உபநிஷத்துக்கள் என்றும் சாற்றுவார். ஆழ்வார்கள் எல்லாம் எம்பெருமானின் அபிநவமான தசாவதாரம் என்றும் பேசுவார்.

ஆழ்வார்கள் எம்பெருமானை அனுபவித்தனர். இவர்கள் எல்லாம் கண்டவாகள் கண்டு அனுபவித்தவாறே நமக்கும் எடுத்துரைத்தனர். இவ்வாறு செய்வது அருளின் செய லாகும். ஆதலாலன்றோ ப்ரபந்தங்கள் என்றழைக்கப்பட்டன.

ஆழ்வார்களை ஸம்போதிப்பதிலும் தனிப்பட்ட அழகைக் காண்கிறோம். புனிதா, காவலனே; தேவே! பரனே! மாரு! மதுரகவியே! பெருமானே! மாதே! தொண்டரடிப் பொடியே! பெருமானே! இறையவனே! என்ற இவைகளையும் இவற்றில் அடங்கியுள்ள சுவையையும் அனுபவிக்கவேண்டும்.

நாலாயிரம் அடியோங்கள் வாழ்வே என்பதும் இவை நாலாயிரமும் எங்கள் வாழ்வே என்பதும் சேமமதாம் திருமாறன் கருணையாலே என்பதும் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்படவேண்டியவை.

ஆஹார நியமம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த ஸர்வலோகோபகாரகமான ப்ரபந்தங்களில் இது அளவில்லாத பெருமையை யுடையது.

இந்த ப்ரபந்தத்தில் எந்த எந்த ஆஹாரத்தை உட்கொள்ளவேண்டும், எவற்றைக் உட்கொள்ளக் கூடாது என்பதை வெகு அழகாக நிரூபித்துக் காட்டுகின்றார். ஆஹார சுத்தௌ ஸத்வசுத்தி: என்றதாலும் எம்பெருமாள் ஆஹாராஸ் ஸாத்விகப்ரியா: என்றதாலும் அவரவர்களின் எண்ணங்களும் அவரவர் ஆஹாரத்தின் பரிணாமமாக அமைகின்ற படியாலும், ஆஹார நியதியுள்ளவன் இந்த லோகத்திலேயே லௌகிகமான ஸுகத்தை அடைவதைக் காண்பதாலும், ஆஹாரத்தைப் பற்றி மூல நூல்களில் ஆங்கு ஆங்கு சிதறியபடி கூறியிருப்பதாலும், அனைவரும் எளிதில் தெரிந்து அடையவேண்டிய ஸாத்விகமான பலன்களை அடையத் திருவுள்ளங் கொண்டு இதை ஸ்வாமி அருளிச் செய்தார்.

முக்கியமாக உபயோகப்படும் விஷயத்தில் அழகான நிலையை எடுத்துரைத்து சிரியதோர் தமிழில் தர்ம சாஸ்த்ரம் அல்லது ஸ்ம்ருதி என்றவகையில் பணித்தபாங்கை எங்ஙனே சொல்ல இயலும்.

இந்த ப்ரபந்தத்தை ஆகாரத்திரு என்று தொடங்கி இருவகைகளையும் காட்டித் தேவப் பெருமாளிடம் ஸமர்பிக்கின்றார். ஆயினும், இடை இடையே ப்ரபந்தவைலக்ஷண்யத்தைக் காட்டும் அழகு சொல்லுக்கு அடங்காதது. 5-வது பாசுரத்தில் கார்மேனியருளாளர் கடகத்தாரே கண்டுரைத்தார், என்பதும், 8-வது பாசுரத்தில் திருவேங்கடத்து மாறன் (மால்-தன்) திருவாணை கடவாதார் தின்னார்தாமே என்பதும்; 10-வது பாசுரத்தில் ஒளியரங்கனடி பணிவார் உகவார் தாமே-என்பதும், கோயில் திருமலை பெருமாள் கோயில் என்ற திருப்பதிகளிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸதாசாரம் இது என்பதைக் காட்டியருள்வார். இந்த அழகை என்ன என்று சொல்வது!

ஸம்ப்ரதாய பரிசுத்தி

ஸ்வாமி ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் அருளிச் செய்த ரஹஸ்யங்களில் ஸம்ப்ர-தாய பரிசுத்தி என்பது தனிச் சிறப்புடையது. நம்ஸம்பிரதாயம் பரம பவித்ரம் என்பது ஏந்த காரணங்களால் என்புதை விளக்கும் பாங்கில் அமைந்தது.

அபூர்வமான சில வாக்யங்களை ஸேவித்தால் இன்றுள்ள பல வகையான கலக்கங்களையும் தவிர்க்க இயலும். ஓரொன்று தானே யமையாதோ என்பதை ஒவ்வொரு வாக்கியமும் மூதலிக்கும்.

ஸம்ப்ரதாயம் என்பது என்ன என்பதையும், ஏந்த விஷயத்தினால் ஸம்பிரதாயத்திற்குப் பெருமை என்பதையும் சாதிக்கின்றார்.

ஒரு சில வாக்கியங்கள் இங்கே அளிக்கப்படுகின்றன.

(1) ஸத்ஸம்ப்ரதாய ரஹிதமான சாஸ்ரத்தால் அர்த்த நிர்ணயம் துஷ்கரம்; ஸுகரம் தானாகிலும் உபயுக்தமாகாது.

(2) ஸர்வலோக ஹிதமான அத்யாத்ம சாஸ்த்ர ஸம்ரதாயத்திற்கு ப்ரதமப்ரவர்த்தகன் ஸர்வேச்வரன்.

(3) வேதாந்த ஸம்பிரதாயத்திற்கு இந்த யுகாரம்பத்திலே ப்ரம்ஹநந்த்யாதிகளுக்குப் பிறகு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார்.

(4) ஸ்ரீபாஷ்யகாரருடைய சிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் ஒன்றிலும் அர்த்த விரோதமில்லை—முதலியன.

இந்த ஸ்ரீஸூக்தியை ச்ரத்தையுடன் ஸேவிக்க வேண்டும் என்று தாமே சாதிக்கிறார்.

தத்வ பதவி

ஸங்க்ரஹமாகச் சொல்லவேண்டிய நிலைகளில் ஸ்வாமி மிகவும் சுருக்கமாகச் சொல்லும் தனிப் பெருமையையுடையவர். ஒரு ச்லோகத்தினாலே ஒரு பெரிய சாஸ்த்ரத்தைச் சொல்வது மிகவும் அழகாயிருக்கும்.

ஆசாரியன் அருளால் பரம்-அவரம் என்ற தத்வங்களின் க்ஞானம் பிறந்து நாராயணனையே பரன் என்று தீர்மானித்து அவனைச் சரண் அடைந்தால் மோக்ஷத்தைத்

அடைய முடியும். பரதத்வம் என்பது யாது? அவரதத்வம் என்பது யாது? சேதனர்கள் எத்தனைவகை? அசேதனம் எத்தனை வகைப்படும்! என்பவை போன்ற விஷயங்கள் விளக்கப்படுகின்றன. ஸம்பிரதாயத்தை ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணினுல் ஓரொன்றுதானே யமையாதோ என்ற மொழிக்கிணங்க இது வொன்றே அமையும்.

இந்த ரஹஸ்யத்தின் கருத்தை விளக்கும் ஒரு சிறிய பாசுரம். இது குறளாம். பெரிய பெரிய சாஸ்திரங்களிலேயே தெளிய வேண்டிய விஷயங்களை இச்சிறு ரஹஸ்யம் அழகாகக் கூறுகின்றது.

ரஹஸ்யபதவி

ரஹஸ்யங்களின் விவரணம் இதில் செய்யப்படுகிறது. மூன்று அதிகாரங்கள். அவற்றுள் திருமந்திரம் த்வயம், சரமச்லோகம் ஆகியவற்றின் விளக்கம் அளிக்கப்படுகிறது. முதல் அதிகாரத்தில் - திருமந்த்ரம் ஸர்வஸங்க்ரஹம், நமஸ்ஸுக்குச் சரணுகதியிலே தாத்பர்யம், நாராயண சப்தம் ஸர்வாதரத்வாதி விசிஷ்டனுன ச்ரியப்பதியைச் சொல்லுகிறது என்ற சாதிக்கிருர்.

இரண்டில்-தத்வஹித புருஷார்த்தங்களை விசதீகரிக்கிறது த்வயம், ஸ்ரீமானுன நாராயணன் திருவடிகளில் களையற்ற நித்ய கைங்கர்யம் பெறுகைக்கு ஸ்ரீமானுன நாராயணன் திருவடிகளிரண்டையும் சரணமாகப் பற்றுகிறேன் என்று இதில் திரண்ட பொருள் என்று சாதிக்கிருர். மூன்றில்...விதி முகத்தாலே உபப்ரும்ஹணம் பண்ணுகிறது சரம ச்லோகம் த்வயத்தில் பூர்வோத்தரகண்டங்களுக்கு இதில் பூர்வோத்தரார்த்தங்கள் சேர்த்தியாகின்றன என்றும் சாதிக்கிருர்.

இது வேங்கடேசன் காட்டிய வழி என்ருர்.

ஸ்ரீரங்கம், காஞ்சீ, திருமலை ஆகிய மூன்று தேசங்களை முக்கியமாகக் கொண்ட இடங்களில் திருவாராதனம் கல்பங்கள் கல்பங்களாக நடைபெற வேண்டும் என்று ப்ரார்த்தித்து தலைக்கட்டினுர்.

இதன் இறுதியில் உள்ள தமிழ்க்குறள் வெண்பாவிற்கு நிகரான குறளே கிடையாது. பிறசமயத்தைச் சேர்ந்தவர்களும் இதற்கு விளக்கம் தர முயற்சி செய்து பெருமை பெற்றனர். எண்களை மட்டும் சொன்னதால் பெரியதொரு ரஹஸ்யமாயிற்று. சைவத்திற்கும் ஏற்றவாறு இதன் கருத்துகளை ராமலிங்க அடிகள் விளக்கியுள்ளார். எனின் இதன் பெருமை எத்தகையது என்பதனைச் சொல்லவும் வேணுமோ!

தத்வ நவநீதம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த அம்ருதரஞ்சனி ரஹஸ்யங்களில் நாலாவது ரஹஸ்யம் இந்த தத்வநவநீதம். தத்வங்களை அழகாக விளக்கும் நூல் இது. வெண்ணெய் போல் விரும்பிப் பெறவேண்டியதாதலின் இதற்கு இத்திருநாமம்: ஓரொன்று தானே யமையாதோ என்பதை மூதலிக்கும் பாங்குடையது இது என்றால் மிகை யாகாது.

தத்துவங்கள் மூன்று. சித்து, அசித்து ஈச்வரன் என்பவை இவை. இந்த மூன்று தத்துவத்தையும் முக்தியை விரும்புவோர் அவசியம் அறிய வேண்டும் என்று உபநிஷத்துகளில் கூறப்படுகிறது. இவை போக்தா, போக்யம் ப்ரேரிதா என்ற சொற்களாலும் சொல்லப்படுகின்றன. போக்தா-ஜீவன், போக்யம்-ஜடம், ப்ரேரிதா ஈச்வரன் என்பதை அழகாக ஸ்வாமி இந்த ரஹஸ்யத்தில் விளக்கி யருளுகிறார்.

எம்பெருமான் திருக்கையில் வீற்றிருக்கும் சங்கத்தின் நாதம்போல் எமது ஆசாரியர்கள் இதை உபதேசித்துள்ளனர் என்பதும், ஸத்ஸம்பிரதாயமாகிற தயிரைக் கடைந்து திருவேங்கடமுடையான் எடுத்துக் கொடுத்த வெண்ணெய். இது வெண்ணெய்க்காக கூத்தாடின பெருமானுக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணும் என்பதும், எம்பெருமான் திருவடியை யாச்ரயித்தவர்க்கு நிகர் ஒன்றுமேயில்லை என்பதும் மிகவும் போக்கியமானவை. கடைசியாக ஹஸ்திகிரியின் ஸம்ருத்தியை வரதனுயிருக்கும் நீர் செய்துவைக்கவேண்டும் என்பதும் அடங்காத ஆனந்தத்தைத் தருவனவாம்.

இந்த ரஹஸ்யத்தை ஸேவித்தால் மூன்றின் விவரணம் எவ்வாறுள்ளது என்பதனை அறியலாம்.

ஸத்ஸம்பிரதாயமே தயிர் என்கிறார். அதை ஜாக்கிரதையாகக் கடைந்து வெங்கடேசன் வெண்ணெயை எடுத்தான் என்கிறார். இந்த வெண்ணெய் ஒன்றுதான் நவநீத நாட்டியம் பண்ணின ப்ரபுவுக்கு உகப்பாயிருக்கும் என்று அருளிச் செய்கிறார்.

[இந்த ஸ்ரீ ஸூக்தியிலே வெண்ணெய் கூத்தஜீயர் என்ற ஸ்வாமியின் சிஷ்யரின் வ்யாமோஹத்தையும் காண்பிப்பதாயிருக்கும் !]

கோபாலவிம்சதியை இத்துடன் இணைத்துப் பார்ப்பது ரஸிகக்ருத்யம்.

ரஹஸ்ய நவநீதம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் அருளிச் செய்த ரஹஸ்ய க்ரந்தங்களில் ரஹஸ்ய நவநீதம் என்பது ஐந்தாவது ரஹஸ்யமாக கணக்கிடப்பட்டுள்ளது. நவநீதம் என்ற சொல்லுக்கு வெண்ணெய் என்பது பொருள். இங்கு ரஹஸ்யங்கள் வெண்ணெய்போல் எடுத்து அளிக்கப்படுகிறது என்பதால் இதற்கு இது திருநாமமாக அமைந்தது

நவநீதமாக இருக்குமிது ஒன்பது விஷயங்களை விளக்கும். திருமந்திரத்தில் தெளிவாகச் சொன்னவை துவயத்தில் தெளிவாகச் சொன்னவை, சரமச்லோகத்தில் தெளிவாகச் சொன்னவை என்கிற கணக்கிலே மும்மூன்று பொருள்கள் உணர்த்தப்படுகின்றன. ஸ்வரூப, பர, பல ஸமர்ப்பணங்களும், உபாய, புருஷார்த்த, விரோத நிவ்ருத்தி விசேஷங்களும், அதிகாரி, சரண்ய, கருதக்ருத்யர்களுடைய க்ருத்யங்களும் அடைவே விளக்கப்படுகின்றன. கடைசியில் ''ப்ரபத்தியத்யாயாதிகள் எல்லாம் இதுக்கு விஸ்தரம்'' என்று சாதிப்பது உற்று நோக்கத் தக்கது. நவநீதம் போன்றது இது. இதை நித்யமாக ரஸித்து அனுபவிக்க வேண்டும் என்று இறுதியில் பணிப்பது சாலப் பொருத்தம்.

கடைசியாக, இந்த வெண்ணெய் திரட்டிக் கொடுத்த சிறப்பு திருவேங்கடமுடையானைச் சேர்ந்ததல்லவோ! அவனையே இந்த ரஹஸ்ய நாயகனாக அனுஸந்தித்து, திருவேங்கடத்தில் என்றும் பிராட்டி நித்யவாஸம் செய்ய வேண்டும். இதுவும் ஸ்ரீநிவாஸனுடைலேயே ஆகவேண்டும் என்றும் தலைக்கட்டுகிறார்.

ஆசார்யர்களை அடைந்து ரஹஸ்யங்களை அறிவது என்பது முக்யம். அவ்வாறே தான் அதிகரித்ததாகவும் அதைத்தான் புதியபாணியில் ஒன்பதுவிதமாகச் சொல்லியதை நித்யமாக ஸேவித்து மகிழ வேண்டும் என்று உரைக்கின்றார்.

தத்வமாத்ருகை

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த ரஹஸ்யங்களில் அம்ருதரஞ்சனி ரஹஸ்யமாக அமைந்தது இத் தத்வ மாத்ருகை.

தத்துவம் ஹிதம் புருஷார்த்தம் என்று அறியப்பட வேண்டியவை மூன்று. அவற்றுள் தத்துவத்தை விளக்க வந்த மாத்ருகையாக மூலக்ரந்தமாக அமைந்தது. இந்த ஒரொன்று தானே அமையாதோ, என்று நாம் ரஹஸ்யம், அனுஸந்திப்பது ஒவ்வொரு ஸ்ரீஸூக்தியை ஸேவித்து உள்ளடங்காத மகிழ்ச்சியால்.

ஒரு ஸ்ரீஸூக்தியில் சொல்லப்படும் விஷயம் அங்கு பூரணப் பொலிவுடன் பிறநூல்களின் துணையை நாடாது விளங்கும் பாங்கைப் பெற்றது என்பதற்கு பெரும் சான்றாக அமைந்தது இந்த மாத்ருகை.

ஐம்பது தத்வ ஸூத்திரங்கள் பணிக்கப்படுகின்றன. ஸம்ஸ்கிருதத்தில் பல பஞ்சாசத்துக்கள் பாடியதுபோல் ரஹஸ்யத்திலும் தத்வ பஞ்சாசத்தாக விளங்குவது இது.

இந்த ஒரு ஸ்ரீஸூக்தியை ஒருவன் நன்றாக அறிந்து விடுவானாகில் அவனை வெல்ல வல்லவன் இருக்க முடியுமோ!

ஐம்பத்தியொன்ருவது ஸூத்திரத்தில் தத்வ மாத்ருகையை சேவிப்பதின் பயனைப் பேசுகிருர். மூன்று பாசுரங்களும் இரண்டு ச்லோகங்களும் இதன் சுருக்கத்தையும் பெருமையையும் அறிய அமைகின்றன.

சிறு குழந்தைகட்கும் எளிதில் விளங்கும், நிதியைப் போல் வேங்கடேசனிடம் தோன்றியது இது என்றும், கையில் விளங்கும் முத்துபோல் தத்துவத்தை விளக்கட்டும் என்றும்., இது கர்ணம்ருதமாக அமைந்தது இதைக்கேட்டு அனைவரும் மகிழ வேண்டு என்றும், சாதிக்கும் பாங்கினை என்னென்று கூற இயலும்.

திருவஷ்டாக்ஷரத்தின் தாத்பர்ய மறிந்தவர்கள் எட்டு ஆத்ம குணங்களையும் பூரணமாகப் பெற்று உய்யும் வகையன்றி ஒன்றினை உகக்கமாட்டார்கள். என்கிருர். திருநாரயணன் என்று பேசியதால் திருநாராயணபுரத்தெ பெருமான் பொருளாகலாம் போலும்!

ரஹஸ்ய மாத்ருகை

அப்படி நின்ற அமலன்படியெல்லாம் இப்படி எம் முள்ளத்தெழுதினுர். என்ருரம்பிக்கின்றது இம் மாத்ருகை.

திருமந்த்ரம் த்வயம் சரமச்லோகம் ஆகியவற்றின் பொருள்கள் மாத்ருகைகளாக அமைக்கப்படுகின்றன.

''இப்படி திருமந்த்ரத்தில் ஸர்வ வேதங்களுக்கும் விதையான முதல் பதத்திலே முளைத்து, இரண்டாம் பதத்திலே வளர்ந்து மூன்றும் பதத்திலே பல பர்யந்தமான ஸம்யக்ஞானத்தையுடையவனுக்கு அனுஷ்டேயமான ஸாங்கபரஸமர்பணத்தை விசதமாக ப்ரகாசிப்பிக்கிற த்வயத்தில்......என்றும்; ''இம்மந்த்ரங்கள் இரண்டிலும் தோற்றுகிற அனுஷ்டானத்திற்கு விதாயகமான சரமச்லோகத்தில்'' என்றும், ''இப்படி திருமந்த்ராதிகளில் சிக்ஷிக்குமர்த்தமே மோக்ஷ சாஸ்திரங்களில் முதல் நடுவறுதியாக முகம் மாறிக்கோக்கிற வர்ண ஸ்வரூபங்களுக்கெல்லாம் மாத்ருகை'' என்று முடிக்கின்ருர்.

இது மிகவும் ரஸாவஹமானது என்கிருர். இது விசுத்த ஆசார்யனைப் பெற்றப் பெரும் பாக்கிய சாலியான தேசிகனுல் அரங்கத்தில் எழுதப்பட்டது என்று தானே சாதிக்கின்ருர். மாத்ருகை என்பதால் எழுதப்பட்டது என்று பத்ராதி சாஸசனங்களில் எழுதுவது போல் அமைத்தருளியது எவ்வளவு அழகானது என்பதை நினைத்து மகிழப்ராப்தம்.

செம் பொற் கழலிணை என்ற சொல் திருப்பாவை பதினேழாம் பாசுரத்தில் உள்ளதை அறிவுறுத்தும்—இன்பத் தொகையான இவ்வைம்பத்தியொன்றும் அமுதமாக இருக்கும் என்றும் தலைக்கட்டுகிருர். எங்கும் கிடக்கும் ஆழ்பொருளை அறிவார் யாரே! சமத்கார கர்ப்பமான பல சாஸ்த்ரார்த்தங்களையன்ரே காண்கிருேம்.

தத்வஸந்தேசம்

ஒருவன் பிரார்த்திக்க அவனுக்கு உபதேசித்தருளிய ஸந்தேச சாஸ்திரம் இந்த ரஹஸ்யம். தத்வம் தெளிய ஆசை கொண்டபடியால் தத்வத்தை விளக்கியருளியாயிற்று இந்த ரஹஸ்யத்தில்.

மாதவாத்மஜனுக்கு ஸ்வாமி தாமே பணிந்தருளினுர். ஸ்வாதீநத்ரிவித-என்றுரம்பிக்கும் பகுதிக்கு வ்யாக்யானமாக இந்த ரஹஸ்யம் அவதரித்துள்ளது. அனேக விஷயங்களை வாராத வகையில் ஆணித்தரமாக அருளிச் செய்கின்றுர்—உபதேசாத் ஹரிம் புத்வா என்று சொல்வது இத்தகைய உபதேசத்தைக் குறிக்கும் என்றுல் மிகையல்ல.

த்ரிவித சேதநா சேதனங்கள் என்பது இனிது விளக்கப்படுகிறது. ஸத்வஸ்த்தாந் நிப்ருதம் ப்ரஸாதய என்று தொடங்கி ஐந்து வகையான அற்புத உபதேசத்தைப் பண்ணியாகிறது.

ப்ரமாணமாக—ஆளவந்தாரும் ஸ்ரீ பாஷ்யகாரரும் அருளிச் செய்தார்கள் என்றும். . . ச்லோகத்தாலே ஆழ்வார் அருளிச் செய்தார் என்றும் காட்டியருளினுர்.

பரமபதம் என்பது எத்தகையது என்பதை விளக்கும் பொழுது'' தமஸ்ஸுக்கு அனந்தரமாய் அக்ஷரம் என்று ஓதப்பட்ட த்ரிகுண பரிணும விசேஷமே பரமபதமென்றும், சொல்லுகிற பேதாபேத வாதிகளுக்கு ப்ரமாணுபாவமும் ப்ரமாண விரோதமும் கண்டு கொள்வது'' என்றும் அருளிச் செய்கிறுர். எவ்வகைய கலக்கமும் வரலாகாது என்பதற் கன்றோ இவ்வாறு ஸந்தேஹத்தை அருளிச் செய்வது?

ரஹஸ்ய ஸந்தேசம்

அஹமாத்மா ந தேஹோஸ்மி என்று ஆரம்பிக்கும் இந்த ஸந்தேசம். பல சிஷ்யர் களின் ஹிதத்தை அபேக்ஷித்து அருளியதாயிருக்கும்-ஸ்வபர ஹிதபரம் என்றுதானே தேசிக லக்ஷணத்தை வகுத்தார் ஸ்வாமி.

இது ரஹஸ்ய ஸாரார்த்தம் சுருக்கமாகத் தெளிவிக்கப்படுகிறது என்கிறுர். அஹமாத்மா என்ற ச்லோகம் ரஹஸ்யத்ரயத்தின் விளக்கம் என்று ஸாதிக்கின்றுர். கடைசியில் ந்யஸ்த பரனுக்கும் இது ஸ்வபரஸந்தோஷார்த்தமாக நித்யம் அனுஸந்தேயம் என்று கூறப்படுகிறது.

சீலம் கவர்ந்திடும் தேசிகர் தேசின் பெருமையைப் பேசி துரிதங்கள் மாய்ந்த வகை யையும் விளக்கி, கோலங்கழித்திட கூறிய காலம் குறித்து நிற்கின்றேம் என்றும் உரைத்து, மேல் இங்கு நாம் பிறவோம், வேலை வண்ணனை மேவுதுமே என்றும் தலைக்கட்டியருளுகிறுர்.

இதற்கு முன் ரஹஸ்யத்தைக் கேட்ட அதிகாரி ஒருவன் இந்த ரஹஸ்யத்திற்கு அதிகாரிகள் பலர் என்பது சிஷ்யாணும் ஹிதம் என்பதனுல் காட்டப்படுகிறது.

ரஹஸ்ய ஸந்தேச விவரணம்

இது முன் கூறிய ரஹஸ்ய ஸந்தேசம் என்ற ரஹஸ்யத்திற்கு விவரணம் என்பதை திருநாமமே குறிக்கின்றது. அவஸர ப்ரதீக்ஷை பண்ணும் சிலர் விபரீதார்த்தம் பண்ணப் புகுந்தால் என் செய்வது என்பது இரக்கமடியாகத் தெளிவிக்கத் தோன்றியதன் திருவுள்ளம் போலும்.

விவரணம் என்பது மூலத்தைக் காட்டிலும் சிறியது. இப்படியொரு விவரணம் இது வரை வந்திருக்க முடியாது. சீலம் கவர்ந்திடும் தேசிகர் என்ற பகுதிக்கு விவரணம் அளிக்கும் அழகை என்ன என்று சொல்ல முடியும்!

விஷய விசேஷம்-பத்நீ ஸம்பந்தகுண விக்ரஹவிசிஷ்டனான ஸர்வேச்வரன். ஸ்வரூப விசேஷம்-பரந்யாஸம். பரிகரவிசேஷம்—ஆநுகூல்யாதி ஸங்கல்ப பஞ்சகம்-பல விசேஷம்-கைங்கர்ய பர்யந்தமான பரிபூர்ண ப்ரம்ஹானுபவம். என்று விளக்கம் தரப் படுகிறது.

தேசிகர் என்றது-ஆச்ரிதரை வழியில்லா வழி போகாதபடி விலக்கி நல் வழி காட்டு கைக்கு நிலவர் என்றபடி என்று விளக்கப்பட்டது.

தூலங்களன்ன துரிதங்கள் மாய்ந்தன என்பதை விளங்கும் போது-போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினிற்றூசாகும் என்னும் உபநிஷத்துச் சொன்னபடியே...என்று காட்டப்படுகிறது. ஸ்வாமிக்கு திருப்பாவை என்று சொல்வதைக் காட்டிலும் அதை உபநிஷத்து என்று காட்டுவதில் உள்ள பெருமைதான் என்னே! முன் ரஹஸ்ய சேஷமானத் தால் தனிப் பாசுரம் இல்லை போலும்!

தத்வ ரத்நாவளி

ஸ்வாமி ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த அம்ருதரஞ்சனீ ரஹஸ்யங் களில் பதினோராவது ரஹஸ்யம் இத் தத்வரத்நாவளி. தத்வங்களை விளக்கும் முப்பது ரத்தினங்கள் போன்ற ஸூத்திரங்கள் கொண்டதால் இதற்கு இத்திருநாமம். தத்துவங்கள் மூன்று. ஜீவன் ஜடம் ஈச்வரன் என்று இதைப் பேசுவர். ஒவ்வொரு தத்துவத்தையும் பத்து வாக்யங்களால் (ஸூத்திரங்களால்) தெளிவாக விளக்குவது இதன் தனிப் பெருமையாகும். சிரமப்பட்டு பெரிய பெரிய நூல்களைக் கற்று அதனால் அறியப்படவேண்டியவை இவை.

இந்த ரஹஸ்யத்தைப் பற்றி ஸ்வாமி தாமே அருளிச் செய்வதை நோக்கினால இந்த ஒவ்வொரு ரத்தினத்தையும் மதிப்பிட முடியாது என்று தெளியலாம்.

''ஏதேனும் ஒன்றையும் எல்லா ப்ரகாரத்தாலும் தெளிகை ஸர்வக்ஞனுக்கல்லது கூடா மையாலே உபயுக்தமமான இவ்வளவு தெளிந்தாலும் உபாயபல ஸித்தியுண்டாம்'' என்றும், பரமார்த்தங்கள் நிறைந்து மிகப் பெரியது இது என்றும், ஸத்துக்கள் இந்த ரத்னுவளியைத் தரித்தாலும் இருளெல்லாம் அகலும் என்றும் ஸ்வாமி ஸாதிப்பதைக் காட்டிலும் நாம் என்ன சொல்லக்கூடும்.

இதில் பெருந்தகைத் தேசின் என்று காட்டியருளுகிருர். நாராயணன் பரன் நாம் அவனுக்கு நிலையடியோம் என்று தெளிவிக்கின்ருர்.

அளவில் சிறியது ஆனுல் இதில் அடங்கி இருக்கும் அர்த்தங்களைப் பார்க்கின்ற பொழுது இதனிலும் பெரியது ஒன்றில்லை என்கிருர்.

இந்த ரத்னுவளியை ஸத்துக்கள் தரிக்கவேண்டும். எல்லா இருளையும் போக்கும் தனிப் பெருமை இதற்குண்டு என்று தெளிவுறுத்திய ரஹஸ்யம் இதுவேயாம்.

விலையுயர்ந்த ரத்னங்களால் தொடுக்கப்பட்ட மாலையானுல் அது ஆகாரத்தில் சிறிய தாகத் தானே இருக்கும்! ஆகாரத்தினுல் பெரியது பெரியதல்லவே!

தத்வ ரத்னுவளி ப்ரதிபாத்ய ஸங்க்ரஹம்.

தத்வ ரத்னுவளியில் சொல்லப் பட்டிருக்கும் விஷயங்கள் யாவை என்பதைச் சுருக்க மாகச் சொல்லும் ரஹஸ்ய க்ரந்தம்.

சில அழகான வாக்கியங்கள்:—''முதல் கவியாலும் முடிவில் கவியாலும் ஆசார்யன் பண்ணின க்ருஷி பலித்த படியைச் சொல்லுகிறது'' என்பதும்:—''ஒவ்வோர் குழி முதலாக எட்டுக் குழி முதலாக எட்டுக் குழி விளைந்த படியைச் சொல்லுகிறது. என்பதும் அழகான ஸூசனம் ஜீவன் விஷயமாக முதல் பத்து வாக்கியங்கள் அசேதன விஷயமாகப் பிறகு பத்து வாக்கியங்கள் பரதத்துவ விஷயமான பத்து வாக்கியங்கள் இவ்வாக்கியங்களில் விளக்கப் படும் கருத்துக்களைக் காண்பிக்கிறது.

கடைசியாக ''நிகமன வாக்கியத்தில் இவ்வளவு தெளிவு கொண்டும் ஈடேறலாம் என்று சேதனரைத் தேற்றுகிறது. மேல் அனுஷ்டுப்பில் இதன் சிறுமையை கண்டு இகழாதே சீர்மையைக் கண்டு சிந்தாமல் கொள்ளச் சொல்கிறது'' என்று விவரணம் செய்த அழகை என்னே சொல்வது!

ரஹஸ்ய ரத்நாவளி

மணியும் பவழமும் சேர்த்துக் கோத்தது போல ஸமஸ்கிருதம் தமிழ் ஆகிய இரண்டு மொழிச் சொற்களும் கலந்த நடையில் அமைந்து இது ரஹஸ்யமும் ஆகின்றது. ரத்னங்கள் ரஹஸ்யமாகப் பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டியவை. இங்கு ரஹஸ்யங்கள் ரத்தினங்கள் போல் கோக்கப் படுகின்றன. ரத்தினச் சுருக்கம் என்பது இதுதான் போலும். அழகான தேசிகதர்சன ஸூத்திரங்கள் இவை முப்பதும். இது ரம்யமானது என்றும் சிறிய தாயினும் சீரியது என்றும், இந்த ரத்ன ஹாரத்தை ஜாக்கிரதையாக ஸத்துக்கள் காப்பாற்றி வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், இது ஸ்ரீ வைஷ்ணவன் கடமையென்றும், பிராட்டியுடன் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருமார்பில் தரிக்கப்படுகிறது என்றும் ஸ்வாமி இறுதி சுலோகத்தில் ஸாதிக்கின்றார். மேலும் இது ஸாத்விகர்களுக்கு மிகவும் ஹ்ருதயங்கமமாக இருக்கும் என்று ஸாதிப்பது உற்று நோக்கத்தக்கது.

ஒன்றே புகல் என்று ஆரம்பமாகும் பாசுரம் ஒரு ரத்தினப் பாசுரமாம். இதில் திருவருளால் காணக் கிடைக்கும் ரஸங்கள் பல.

ஸூத்திரமாகச் சொல்வதில் பெருமை உண்டு, வடமொழியில் பல ஸூத்திரங்கள் உள்ளன. தென்மொழியிலும் வேதாந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தேசிகதர்சனத்தை விளக்க வந்த ஸூத்திரங்கள் இவை என்றால் மிகையாகாது.

மண்டிக் கிடக்கும் அழகை என் சொல்வது! திருவருளால் நன்றே வருவதெல்லாம், திருவருளால் நமக்குப் பரம் ஒன்றிலதே என்பதையும் நோக்கவேணும்.

சிறு பயனிற்படியாத தகவோர் என்றாரம்பித்து நிரூபிக்கும் பாங்கு அலாதியானது. மனமே! நீமகிழாதே இருப்பது என் கொல்!! என வியந்து கூறுவதும் விழிப்பைத் தருகின்றது.

இறுதியில் ஸ்வாமி சில கட்டளைகளை இடுகின்றார்.

இது ரஹஸ்ய ரத்நாவளியானதால் ஜாக்கிரதையாகக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் சிறியது என்று எண்ணலாகாது. இதைக் காட்டிலும் விலையுயர்ந்தது ஒன்றில்லை என்று கூறுகிறார்.

இது அழகானது-லக்ஷ்மியுடன் விளங்கும் எம்பெருமானுக்கு மிகவும் பிடித்தது என்கிறார்.

ரஹஸ்யரத்நாவளீஹ்ருதயம்

தானருளிச் செய்த முப்பது ஸூத்திரங்களுக்குத் தானே வ்யாக்யானம் செய்தருளு கிறார். தத்வம் ஹிதம் புருஷார்த்தம் ஆகியவற்றுள் கலக்கங்களை சமிப்பக்க, தாமே இந்த ரஹஸ்யரத்நாவளீஹ்ருதயத்தைச் சொல்லுவதாக, ஆரம்ப ச்லோகம் அமைந்தது. ஸூசயாம:- காண்பிக்கின்றோம் என்று பன்மைப் பேச்சில் பல ரஸம் உண்டு.

பாஷ்யாதிகளிலே காணப்படும் ப்ரக்ரியை இம்மணி ப்ரவாள பாஷ்யத்தில் காண் கிறோம். இதில் அடங்கியுள்ள விஷயம் அனந்தமாயும் கம்பீரமாயுமிருக்கும், ஒரு சில வார்த்தைகளின் விளக்கம் மயிர் சிலிர்க்கச் செய்கிறது.

கடைசி ச்லோகத்தின் விவரணம் அலாதியானது. ''அபாத்ரத்தில் ஸமர்பித்தால் மாணிக்கங்கொண்டு குரங்கெறிவுற்று இது ரக்ஷையுண்டாகாதென்றபடி'' என்றும், ரம்யாம் என்பதை விளக்கும்பொழுது ஸ்வபாவ ஸௌபாக்யத்தாலும் ப்ரமாணச் சேர்த்தி யாலும் ஆபாலபண்டிதமநவரதஸேவ்யமாயிருக்குமதென்றபடி'' என்பதும் குறிப்பில் கொள்ளவேண்டியவை.

வ்யாக்யானத்தின் இறுதியில் மீமாம்ஸாபாதுகையில் சாதித்த அழகான ச்லோகத்தை அமைக்கின்றார். ச்ருதியுவதிசிரோ பூஷணம் பாஷணம் ந: என்பதை நோக்க.

முடிவில் மூன்று பாசுரங்களுடன் முடிக்கின்றார். தனி மறையின் கருத்தை வாக்கியம் முப்பதினால் வகை செய்து வ்யாகரித்தோம், உத்தமன் தன்னை உணர்ந்து உரைத்தோம், தேசிகன்றேவன் கருத்து என்பதை உற்று கவனித்து ரஸிக்கவும்.

தத்வத்ரய சுளகம்

இதில் மூன்று அதிகாரங்கள். முதலில் ஜடம் - ஜீவன் - ஈச்வரன் என்ற வகையில் தத்துவங்களைக் குறித்து நிரூபணம் பண்ணப்படுகிறது.

முதலில் ப்ரக்ருத்யாத்மப்ரமாதிகள் கழியும்படி தத்வத்ரயத்தை விவேகிக்கவேண்டும் என்கிறார். அநாத்மதத்வம் என்ற வகையில் ஜட விஷயம் ஸாதிக்கப்பட்டது, ந்யாய ஸித்தாஞ்சனம் முதலியதுகளில் தெளியாத விஷயங்களையும் இங்கு தெளியலாம்! ''எங்கள் தேசிகர் உரைத்தார்'' என்று நம் தேசிகர் உரைக்கின்றார். பிறகு சீவரென்று ஓதச் சிறந்த னரே என்று விரிவாகவும் சுருக்கமாகவும் ஜீவனைப்பற்றி பேசினார். பிறகு பரமாத்ம நிரூப ணம், இதனால் தெளியாத வஸ்து ஒன்று இருக்க முடியாது. பரம் வ்யூஹம் விபவம் ஹார்தம் அர்ச்சை என்ற நிலைகளை விளக்குவது விசித்திரமானது, இதை யெல்லாம் சேவித்தால் ஓரொன்றுதானே அமையாதோ! என்று சொன்னது எவ்வளவு பொருத்தம் என்பதை அறியலாம்.

கடைசியாக... இத்தெளிவோடே பரஸமர்பணுதிகள் பண்ணிஞல் அனுசயிக்க வேண்டா. இத்தெளிவன்றிக்கேபண்ணிஞலும் இத்தனை யடியராஞர்க்கு இரங்கும் நம்ம ரங்கனுய பரம காருணிகன்காலக்கழிவற க்ஞானக்கைதர இத்தெளிவோடே தலைக்கட்டும்'' என்று இந்த ரஹஸ்யத்தைத் தலைக்கட்டுகிருர்.

முடிவில் மூன்று பாசுரங்களும், இரண்டு ச்லோகங்களும் அமைந்தன. அவற்றுள் முக்கியமாக ஸ்வாமி கூறுவது :—பக்ஷபாதம் என்கிற தோஷமில்லாமல் இதை சேவியுங் கோள் என்பதே. தத்வமாகிற பார்க்கடலிலிருந்து வேங்கடேசனுகிய நான் அமுதத்தைக் கொண்டு வருவதுபோல் கொண்டு கொடுத்தேன். ஸாவதானமாக ஸாதுக்கள் ஒரு முறையாவது ஆசமனம் பண்ணிஞல் மறுபடி அவர்களுக்கு மாத்ருஸ்தன்யபான ப்ரஸக்தியே இல்லாமல் போய்விடும் என்று அழகாகத் தலைக்கட்டிஞர்.

ரஹஸ்யத்ரயசுளகம்

இது ரஹஸ்யத்ரயத்தைப் பற்றியதாம். ஸதாசார்யகடாக்ஷமுடையஞன சரணுகதனுக்கு ரஹஸ்யத்ரயார்த்தம் நித்ய யோகம் என்று தொடங்கியது. ஊன்தந்து என்ற லோகோத்தரமான பாசுரத்துடன் மூலமந்த்ராதிகாரமும், ஸ்ரீமத் சப்தத்தை விளக்கும்படி திருமாலடியிணை என்று பாசுரத்தால் துவயத்தைக்கூறியும், த்வயத்தில் உள்ள சொற்களின் அடைவையே ஏற்று விளக்கியருளுகிருர்.

''திருமந்திரத்திலே பிறந்து துவயத்திலே வளர்ந்து த்வயைக நிஷ்ட்டராவீர் என்ற பூர்வர்கள் பாசுரத்தின்படியே'' என்று தொடங்கி, சேர்க்கும் திருமகள் என்ற பரசுரத்தாலும் தலைக்கட்டி வருநாள் பழுதற்று வாழும் வகையதில் மன்னுவமே என்று துவயாதிகாரத்தை முடித்தருளிஞர்.

''மற்ருேர் பற்றின்றி'' என்று ஆரம்பித்து சரம ச்லோகத்தை விளக்கம் செய்தருளிஞர். கடைசியில் பிறகு மூன்று பாசுரங்களால் இதனை அழகாகத் தலைக்கட்டுகிருர். இது தான் ஸார ஸங்க்ஷேபம். இது மிகவும் அழகானது என்கிருர். தான் பெரிய கொடையாளியானது இந்த ரஹஸ்யத்தைச் செய்ததாலே என்று வதாந்ய : என்ற அடைமொழியால் உணர்த்துகின்ருர்.

இந்த மூன்றும் சேர்ந்து ஸார ஸங்க்ஷேபம் போலும் !

பரமபத ஸோபாநம்

பரமபதத்திற்குப் படிகள் ஒன்பது என்பதனை ஸ்வாமி வகுத்துக் கொடுக்கின்றார். இதில் முதல்படி விவேகம்.

அடற்புள்ளரசிலும்...எதிவரனார் மடைப்பள்ளி வந்த மணம் எங்கள் வார்த்தையுள் மன்னியதே என்று. இது நூதனமாக கல்பித்ததல்ல என்பதையும் உணர்த்தியருளுகிறார். திருமகளார் பிரியாத தேவன் திண்ணம் தேராதார் திண்படியில் ஏறாதாரே என்கிறார். அடுத்தது நிர்வேதம். தேன்பட்ட விடம்போலே தித்திப்பதால் உலகில் வைராக்ய பூர்வகமாக நிர்வேதம் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

இதற்கடுத்தது விரக்தி. பல கற்ற மெய்யடியார் படியார் இக்கடும்பவத்தே என்கிறார். நளநஹுஷாதித்ருஷ்டாந்தங்கள் மூலமாக இதை உணர்த்துகின்றார். இங்கு கர்ப்பவாஸ வர்ணனையை நினைத்தால் வைராக்யம் தானேயுண்டாவது ஸத்யம். பாசுரத்தில் தார்வேந்தர் வையமாண்டார் மாண்டார் என்று பரிஹஸித்தும் பேசுகிறார். நம் திருமால் நிலை கண்டார் நாகமெல்லாம் நரகென்று நற்பதமே நாடுவாரே என்று தலைக்கட்டி யருளுகின்றார். அடுத்தது பீதி. வந்தனபோல் வருவனவும் அனந்தமாகி என்று ஸாதிக்கின்றார்.

ப்ரஸாதனம், உதக்ரமணம், அர்ச்சிராதி—திவ்யதேச ப்ராப்தி பராப்தி என்று வரிசைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொன்றிலும் சுவை ததும்புகின்றன. எம்பெருமான் எண்ணம் எண்ணுதார் எட்டிரண்டும் எண்ணுதாரே என்கிறார். உத்க்ரமண பர்வத்தில் வாய்க்கட்டுண்டு "திருப்பாற்கடலிலே மூழ்கினவனைப் போலே" வீணாகாமல் புறப்படும் உரையை விஸ்தரித்தார். ஏழில் அர்ச்சிராதிக்ரமத்தை ஸாதிக்கின்றார். தேவதைகள் எல்லாம் வழி நடத்தும் ப்ரகாரத்தை ஸாதித்தருளினார். வானேறும் வழி கண்டோம் மகிழ்ந்திட்டோமே என்று தலைக்கட்டினார். பிறகு திவ்யதேச ப்ராப்தி என்பது அழகானதொரு படி. கரை கண்டோர் கதியெல்லாம் கதித்திட்டோமே என்று தலைக்கட்டினார். அடுத்தது அழகானதொரு ஒன்பதாவது படி. இது படியாகவும் ஆகிறது, அமரும் இடமாகவும் ஆகிறது. அங்கு தமிழ்ப் பல்லாண்டிசையுடன் பாடுவமே என்றார். இத்தகைய தமிழன்பு மற்ற யாரிடத்தும் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை.

இதை ஸ்வாப சித்திரம் என்கிறார். பராப்தி பர்வாவை அடைந்தால் மேதினியினில் இருப்பது விதியினாலேதானேயாம். முக்தாத்மாவிற்கு விடுதலையை வர்ணிக்கும் பாசுரம் அத்புதமானது.

ரஹஸ்யசிகாமணி

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த ரஹஸ்ய க்ரந்தங்களில் சிரோபூஷணமாகத் தரிக்கும் பாங்குடையது இந்த ரஹஸ்ய சிகாமணி.

இந்த ரஹஸ்யத்தின் காம்பீர்யத்தை என்ன என்று கூறுவது ! வராஹ புராணத்தின் ஏற்றமும், வராஹாவதாரத்தின் சிரைஷ்ட்யமும் நிரூபிக்கப்படும் அழகு சொல்லுக்கு நில மாகாதது. ஸாத்விகர்களுக்கு இது மிகவும் போக்யமாக இருக்கும் என்று ஸ்வாமி தாமே ஸாதிக்கின்றார்.

வராஹ நயினார் அருளிச் செய்த இரண்டு சரமச்லோகங்களின் பெருமைகளை அக்ஷரம் அக்ஷரமாக அனுபவிக்கப் பண்ணும் பெருமை பெற்றது இந்த ஆசார்ய சிகாமணி இயற்றிய ரஹஸ்ய சிகாமணி.

எம்பெருமானருள் பெற்று மருள் செற்றோமே என்பதும், இரண்டுரையாத ஏனம் உரைத்த உரை இரண்டும் என்பதும், இந்த அவதாரத்திற்கு மானமில்லாதாப் போலே உபமானமும் இல்லை என்பதும் மிகவும் ரஸமானவை.

வராஹசரமச்லோகச் சொற்களைக் கொண்டே இறுதி ச்லோகம் ஸாதிப்பதும் சிகரமா யமைந்தது.

அஞ்சலி வைபவம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த ரஹஸ்யங்களில் அஞ்சலி வைபவம் மிகுந்த வைபவத்தோடு விளங்குவது.

அஞ்சலியின் பெருமையைப் பலர் பலவகையாகப் பேசினும் ஸ்வாமி இந்த ரஹஸ்யத்தில் மிகவும் அழகாக நிர்த்தாரணம் செய்தருளுகிறார்.

ஆளவந்தாரருளிச்செய்த ஒரு ச்லோகத்தின் வ்யாக்யானமாக அமைந்தது இந்த ரஹஸ்யம்.

அஞ்சலிபரத்தின் பெருமையை முதலில் முதலிகளான ஆளவந்தார் பேசினார், பட்டர் பேசினார், இதை யடியொத்தி ஸ்வாமியும் பேசுகிறார்.

தமிழும் வடமொழியும் இந்தத் திருநாமத்தில் இரு தசையாக அமைவது உற்று நோக்கத்தக்கது. அஞ்சலி என்பது ஜீவனுடைய தசை. இந்த அஞ்சல் என்பது எம்பெருமானுடைய தசை. இந்த அஞ்சலியை அவன் யாசிக்கவும் முற்பட்டான்.

இவ்வஞ்சலி வைபவத்தின் வைபவத்தை நினைத்தால் அஞ்சலி பண்ணுவதன்றி வேறு என்ன செய்ய இயலும் !

ப்ரதான சதகம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்களில் பலவகையிலும் ப்ரதானமானது ப்ரதான சதகம் என்பது. நூறு விஷயங்களை ஸ்வாமி க்ருபையினால் அருளிச் செய்வது வியந்து மகிழ்ந்து போற்றக்கூடியது. "நூறு ச்லோகங்கள் அறிவானானால் அவன் பெரிய பண்டிதன்" என்று ஒரு பழமொழி உண்டு. மற்றைய எந்த நூறை எடுத்துக்கொண்டாலும் அப்புலமையை அது அளிக்குமா என்பது ஸந்தேகமே. ஸ்வாமியின் இந்த ப்ரதான சதகம் ஒன்றை ஸேவித்து மனத்திருத்தினால் திண்ணம் பெரிய புலவனாவான்.

ஸ்வாமி அழகாக நூறு ஸூத்திரங்கள் ஸாதித்துப் பிறகு "ஸகல சாஸ்திரங்களாலும் அறியப்படவேண்டிய நூறு விஷயங்களை அறிய ப்ரதான சதகம் இருக்கின்றபொழுது அப்ரதானமான சாஸ்திரங்களைக் கண்டு ஏனோ அவற்றை நாடி ஓடுகின்றாய்" என்று ஸாதிப்பது அத்யாச்சரியமானது. உண்மையில் ஸ்ரீ தேசிகதர்சனம் என்ன என்பதை அறிய வேண்டுமானால் அவர்கட்கு இதில் இல்லாதது ஒன்றுமே இல்லை என்பது உறுதி. "எண்ணிய நல் வார்த்தைகள்" என்பதும், ஆறுகளில் கங்கை, ஏழு கடல்களில் பாற்கடல், சங்குகளில் பாஞ்சசன்னியம், மாலைகளில் துவளமாலை என்பவை எவ்வாறு சிறந்தவையோ அவ்வாறே இந்த நல்வார்த்தைகள் என்றும் ஸாதிப்பது முக்யமாக மனத்தில் தேக்கிக் கொள்ளப்பட வேண்டியது. சில ஸூத்திரங்களின் அமைப்பு ஸேவிப்பவர்களை வியப்புறச் செய்யும்.

உபகார ஸங்கிரஹம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த ரஹஸ்யங்களில் அம்ருதாஸ்வாதிநீ ரஹஸ்யங்களில் ஒப்பற்றதாய் விளங்குவது இந்த உபகார ஸங்க்ரஹம்.

எம்பெருமான் பண்ணும் உபகார பரம்பரைகளை மூன்று அதிகாரத்தில் நிரூபிக்கும் உபகாரத்தை என்ன என்று கூற இயலும்!

முதலில் தந்தையென நின்ற தனித் திருமால் தாளில் தலை வைத்தோம் சடகோபனருளினாலே என்று துடங்கி அழியாத அருளாழிப் பெருமாள் செய்யும் அந்தமிலா உதவியெல்லாமளப்பார் ஆரே; என்றும் தலைக்கட்டுவது மட்டுமின்றி, "எம்பெருமான் உபகாரம் செய்தவன் என்ற இந்த ரஹஸ்யத்தை என்னைக் கொண்டு உலகுக்கு வெளிப்படுத்தியதும், எம்பெருமான் செய்த சீரிய மஹோபகாரம் என்றும் பெருமிதத்துடன் கூறுவதும் திருவுள்ளப் பாங்கினைக் காட்டும் தனித்தன்மையது.

அவன் செய்த உபகாரங்கள் நமது புத்தியால் மட்டுமன்றி, "ஈச்வர புத்தியாலும் எண்ணில்லையாயிறே யிருப்பது" என்பதும், இறுதியில் நம்மாழ்வார் திருவிருத்த முதற் பாட்டின் விஸ்தாரமே, "மேலருளிச் செய்யுமதெல்லாம் இதின் விஸ்தாரம் ஆகிறது" என்பதும் மனத்திலே கொள்ளப்பட வேண்டியவை.

ஸாரஸங்க்ரஹம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த ரஹஸ்ய க்ரந்தங்களில் ஸாரஸங்க்ரஹம் திருநாமத்துக்கு ஏற்ற பொலிவுடன் விளங்குகிறது.

ஸ்வாமி தாமே இதன் கீர்த்தியைக் கண்டு பூரித்து ஸரஸோயம் ஸாரஸங்க்ரஹோ ஜயதி என்று பணித்தருளினர். முடிவு ச்லோகம் பூரிப்பின் மிகுதியால் வந்ததால் அதில் ஒரு ஸாரம் அடங்கியிருக்கிறது. கவிதார்கிக கேஸரியானவன் கவியாயிருப்பதில் மிக்க ஆதரம் கொள்வான் போலும் கவிதார்கிககேஸரிணு வேங்கடநாதேந விரசித: கவிநா...... என்பதை நோக்க வேண்டும்!

அழகான நிஷ்கர்ஷங்கள். ஸேவிக்க ஸேவிக்க இதன் பெருமையை அனுபவிக்க வேண்டுமேயன்றி எங்ஙனே சொற்களால் சொல்வது!

பூர்ணத்வப்ரகாரத்தையும், பத்து விதமான விவேகம் அதன் பலம், முதலியவற்றை ஸதாசார்யன். எம்பெருமான் ஸச்சிஷ்யன் ஆகியோருடைய கடமையையும் உணர்த்துகின்றார்.

அழகிலும் அழகான சில வாக்யங்கள்: "நாராயண ரஸாயனத்தாலே ஜராமரணாதி கழிந்து அனந்தமான ஆராவமுதக் கடலிலே அனுபவியாத அம்சம் இல்லாதபடி அகஸ்த்ய பாஷையாலே அந்யோந்யம் போக்தவ்யரான இருவரும் நிற்கிற நிலையைக் கண்டு ஸூரிகளோடொக்க கைங்கர்யைகரதியாம்",

"பாகவதரல்லாத மாதாபித்ரு ப்ரப்ருதிகளை விட்டுத்தான் கண்ணும் காலுமுடையனாய் நல்வழி நடக்க ருசியுண்டானல் க்ஞாதாவான தேசிகன் வழி காட்ட, நடக்குமவன் வழியல்லா வழியில் போகாதே, வழியடிப்பார் கையில் அகப்படாதே ஸூக்தியாம்."

இது பூர்ணத்வப்ரகாரம், இது விவேக பலம், இது ஸர்வஸங்க்ரஹம், இது ப்ரமாண ப்ரமேயஸங்க்ரஹம், இது க்ஞாநாதி நிஷ்கர்ஷம் என்றிவ்வகையில் சாதிக்கும் பாங்கு என்னே!

முநிவாஹநபோகம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகார்ந்த மஹாதேசிகன் அருளிச் செய்த ரஹஸ்ய க்ரந்தங்களில் முநிவாஹனபோகம் என்பது மிகவும் போக்யமானது.

ஸாரதமமான திவ்ய ஸூக்திகளுக்கு வ்யாக்யானமாக அமைந்த இதன் பெருமையை அரிய ஆரே வல்லார்! ஸ்வாமியின் இவ்வகையான வ்யாக்யான சைலி மற்றைய ஸ்வாமி மணிப்ரவாள நடையிலும் சீரியது.

ஸம்ஸ்க்ருத மறையான ஈசாவாஸ்யத்துக்கு ஸ்வாமி பாஷ்யம் பணித்தது போலவே இப்பாவளரும் தமிழ் மறைக்கும் பாஷ்யம் என்ற வகையில் இது அமைந்தமாம். இதன் இறுதிப் பாசுரத்தில் வேதாந்தவாரியன் என்றியம்ப நின்றோம் என்பர்.

இவ்வியாக்யானத்தின் திருநாமமமைந்த பாங்கும், இடை இடையே எடுத்துக் காட்டும் உபமானங்களின் பொலிவும், ''அக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே'' என்ற மொழிக் கிணங்க அமைந்த ரஸப்பெருக்கமும், மிகவும் போக்யமானவை.

பக்தியினுல் இயற்றப்பட்டது என்றும், வைராக்யமுள்ளவர்க்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கும் என்பதும் கவியின் நெஞ்சத்தை கவிதானே அறிய இயலும் என்று தன்னை கவி யென்று கூறிக்கொள்வதும், ஸமயக் வ்யாசஷ்ட நன்ருக விளக்கினுன் என்று கூறுவதும். ஸர்த்விகர்களுடைய ப்ரீதியே பரமபலம் என்பதும், இது முக்தர்களின் ஐச்வர்யத்துக்கு நிகரானது என்று பாவிப்பதும் மிக மிகப் பொருத்தமானவை.

நிகம பரிமளம் என்ற ஸ்வாமியின் வ்யாக்யானம் பெற்றிருந்தால் திருவாய் மொழிக்கு ஏற்பட்டிருக்கும், யோகம் போகம் மேலும் எத்தகையதா யிருக்கும் என்று ஊகித்து அறிய இது நமக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையப் பெற்றதாம்.

ஓரொன்றுதானே அமையாதோ என்ற வாசகம் எவ்வளவு அழகாகப் பொருந்து கின்றது என்பதை இப்போகம் ஒன்றே காட்டும். வைலக்ஷண்யத்தைக் காட்டுவதும், காஷ்ட்டாப்ராப்த குணப்ரகர்ஷங்களைத் தொடுத்து நிருபிப்பதும் தனிநிறம் பெற்றதாம்.

ஸ்வாமிக்கு திருப்பாணாழ்வாரிடம் தனிப்பட்ட ஈடுபாடு உண்டு, பாண் பெருமாள் என்றும், நம்பாணநாதன் என்றும், நம் பாணன் என்றும் கூறுவது மட்டுமின்றி வேதியர் தாம் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம் விதையாகும் இது என்று பூரிப்புடன் பேசுவதும் மிகவும் உற்று நோக்கவாம்.

ஸாரஸாரம்

ஸாரத்தையே எடுத்துரைப்பது ஸ்வாமியின் கொள்கை. ஸகல வேதங்களின் ஸார மாகத் தேறியவை ரஹஸ்யங்கள் என்றழைக்கப்பட்டன. அவை மூன்றும் அவற்றுள் அடங்கியிருக்கும் ஸாரத்தை ஸ்வாமி இதில் சாதிக்கின்ருர்.

மூலமந்திரம் என்பது அஷ்டாக்ஷரம் அடைந்த பெயர். அனைத்துக்கும் வேராகும் என்று திருவுள்ளங் கொண்டு மூலம் கிளையென்ற வகையில் பாசுரத்தை அமைத்து இப்ரபந் தத்தை ஆரம்பிக்கின்ருர். அவ்விடத்தில் ஞாலம் புகழும் நந்தேசிகர் என்பதையும் ஸார மாகக் காட்டுகின்ருர்.

முதலில் மூலமந்த்ரம், பிறகு இரண்டாவது ஸ்தானத்தில் துவயம், மூன்றுவதாகவும் முடிவாகவும் அனுஸந்திக்க வேண்டியதால் சரமச்லோகம் என்றபடி க்ரமம் அமைந்ததையும் ஸூக்ஷ்மமாக விளக்குகின்றூர். பெருவிலங்காம் அருள் தன்னுல் — திருமாலை உகந்தோம் நாமே என்றும் உறவை இசைந்து இறையில்லா—என்று தொடங்கி மூலமந்திராதிகார நிஷ்கர்ஷத்தைச் செய்தருளினுர்.

துவயாதிகாரத்தில் தொடக்கத்தில் திருமகளோடு ஒருகாலும் பிரியாநாதன் திண் கழலே சேதுவெனச் சேர்கின்றேன் என்றுர். துவயத்தை அனுபாதம் செய்தார். வினை விடுத்து அழலாற நிழலாற அளிக்கின்றுனே என்று துவயாதிகாரத்தை முடித்தருளுகிறுர், ஒண்டொடியாள் திருமகளும் என்று தொடங்கி சரம ச்லோகத்தை விவரணம் பண்ணி குறையாதுயில்லாது கோவிந்தா என வழைத்து, உத்தமனுர் உத்தமநல்லுரை நாலெட்டும் உணர்ந்தவர் தாம் உகந்து எம்மை உணர்வித்தாரே என்றும் கூறி சுரக்கும் சுரபிகள் போல் சொரிகின்றனர் சொல்லமுதே என்று இந்த ரஹஸ்ய க்ரந்தத்தைக் தலைக்கட்டினுர்.

இது வேங்கடேசனுல் இயற்றபட்டது. மிகவும் பாவனை யாகின்ற தாமரை மலர் நிறைந்த பெருந் தடாகத்தில் எழும் வாஸனை போன்றது. என்றும் அழிவில்லாதது, ஸஹ்ருதயர்கள் சிரஸா வஹிக்கக் கூடியது என்று கூறி இதை அனைவரும் ஆராய்ந்து பெருமைகளை அறிக என்றும் கூறி தலைக் கட்டினுர்.

இது அரங்கத்தில் இயற்றியதாயிருக்கும். சாச்வதமான ரங்கலக்ஷ்மியை வளர்த்துப் பெருமையடைவாய் என்று ரங்கனுக்கும் அவனுடைய உத்ஸவங்களுக்கும் மங்களா—சாஸனம் செய்தருளுகிறுர்.

அபயப்ரதான ஸாரம்

அபயப்ரதானத்தை ஸாரமாகவுடையது என்று பொருள் கொண்டால் ராமாயணம்தேரும். ராமாயணத்தின் ஸாரத்தை விளக்க வந்த ஸ்வாமியாதலால் அபயப்ரதானத்தை என்று ஸாரமாகவுடைய ராமாயணத்தை ஸாரமாக மணிப்ரவாள நடையில் அருளிச் செய்கிறுர்.

ஆரம்பத்தில் ஜயதி என்பது மங்களச்லோகம். மனுஷ்யபாவனை பண்ணினவனுக்கு ஜயாசம்ஸனம் முக்கியம். இந்த ஒரு ச்லோகமே ராமாயணத்தின் பூரணமான பொருளை விளக்கும். அபயப்ரதானத்திற்கு ஹேது சரணுகதி. இது ஒரு முறை செய்தால் போதும் என்று ரங்கநாதன் காட்டுவதே முதல் அபயப்ரதானம் என்பதனை இரண்டாம் ச்லோகத்திலுல் காட்டினுர். நமஸ்தஸ்மை என்றுரம்பிக்கும் ச்லோகம் ஸ்ரீமத் ராமாயணம் த்வய விவரணம் என்பதைக் காண்பிக்கும் என்பதனை முதலில் நம: என்ற சொல்லையிட்டே காட்டுகின்றுர்.

ஸக்ருதேவ ப்ரந்நாய என்ற ச்லோகத்தை ஒருக்காலே என்று அப்படியே அனுவாதம் செய்கிறுர்.

ப்ரபந்தாவதாரம், பரதத்வ நிர்ணயம், சரணுகதி தாத்பர்ய நிர்ணயம், ப்ரகரண தாத்பர்ய நிர்ணயம், சரண்ய சீல ப்ரகாசனம் சரண்ய வைபவ ப்ரகாசம், பரமதர்ம நிர்ணயம்,

சரண்யவ்ரத விசேஷ ப்ரகாசம், சரண்ய சரணுகத ஸங்கம லாபம். ப்ராப்திப்கார ப்ரபஞ்ச னம், என்ற முறையில் பத்து அதிகாரங்கள் அமையப்பெற்றது இது.

குருப்ரஸாதமே இவ்வகையில் அபயப்ரதான ஸாரமாக வந்தது என்று தலைக் கட்டி ஞர். இதைக் காட்டிலும் ஸ்ரீமத் ராமாயணத்திற்கு மற்றுமொரு வ்யாக்யானமோ விவர ணமோ வேறு இல்லை.

தீநோ த்ருப்யது வா என்ற ச்லோகத்தின் மூலம் சரணுகதியின் ப்ரபாவத்தை விச்வா மித்ராதிகளைக் காண்பித்து—விச்வாமித்ர கோத்ர ஸமுத்பவரான திரு மணியாழ்வாஞனை ஸ்வாமி கண்டாபதம் என்று அருளிச் செய்கிருர்.

ஹஸ்திகிரி மாஹாத்மியம்

ஸ்வாமி ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த க்ரந்தங்களில் ரஹஸ்ய நாடக.காவ்ய- வேதாந்த, பரபந்தங்களாக அமைந்தது இவ்வத்திகிரிமான்மியம்.

இதன் அமைப்பையும் சிறப்பையும் அனுபவிக்கவோ எடுத்துரைக்கவோ அருளாளர் அருள் வடிவான தேசிகனின் தனித்தகவை யடைந்தாரன்றி யாரே வல்லார் !

அரங்கத்தில் தனக்கு அரங்கநாதன் அளித்த விருதைப் பலவகையில் பெருமை யுடையதாகச் செய்து, அரங்கத்துக் கேற்ற ஸங்கல்பஸூரியோதயத்தையும் ஸமர்பித்து, செந்தமிழும் வடமொழியும் கலந்ததொரு ரங்கத்தைச் சமைத்து அதில் மெய்விரத நன்னி லத்து மேன்மையை நடித்துக் காட்ட வகை செய்து இப்பொழுதே தனக்கு கிடைத்த வேதாந்த வாசிரியப்பேர் விளங்கியது என்று கூறி ரஸிக ஸர்வமௌமனுக ஸ்வாமி விளங்கு கிருர்.

கூர்மதிகளையும் புலவர்களையும் அழைத்து எவ்வண்ணம் பேசுவது எனவியந்து, அழகான பாணியில், அன்பையும் அந்தணரையும் அருளையும் அருளாரையும் வாழ்த்தித் தனிப் பொலிவுடன் தலைக்கட்டுகிருர்.

மாநார்ஹம் என்று முதலிலும், த்ரிலோக மஹநீயம் என்று இறுதியிலும் சாதிப்பதின் பாங்குதான் என்னே !

சொற்களின் தொகுப்பு—ஸ்வாமியின் பிற நூல்கள் அனைத்தையும் விஞ்சியதாயிருக் கும். அருள்வரதர் நின்ற பெருமையைப் பேசுமிடத்து தனிப் பொலிவைக் காண்கிறோம்.

ஷோடசவர்ண ஸுவர்ணமென்னலான பதினுறு அடிகள் கொண்ட பாசுரம் பணித்த பெருமையே பெருமை. எம்பெருமானுர் பாஷ்யகாரராகி ப்ரம்ஹணி ஸ்ரீநிவாஸே என்று தனது பாஷ்யத்தை திருவேங்கடவன் பால் ஸமர்பித்ததை, தமிழ் நாட்டையே திவ்ய தேசமாக்கின பாங்குடைய அத்திகிரியருளாளனுக்கு ஒரு தமிழ்ப் பாசுரத்தால் ஸமர்ப்பிக்கத் திருவுள்ளங்கொண்டு பதினுறு பாதங்களின் ஸாரத்தையும் அடைவே சாதித்தருளுகிருர். அதிகரணஸாராவளியிலும் அரங்கனக்கு ஸ்ரஷ்டா தேஹீ என்ற ஒரு ச்லோகத்தை இதே பாணியில் ஸமர்ப்பித்துள்ளார்.

ஈசாவாஸ்ய பாஷ்யம்

ஸ்வாமி பாஷ்யகாரர் என்ருல் மிகையாகாது. முதல் உபநிஷத்திற்கு பாஷ்யம் பண்ணிஞர் ஸ்வாமி. அர்த்த பஞ்சகத்தைப் ப்ரதிபாதிப்பதே இதன் குறிக்கோள் என்ருர். இதுவே எல்லா உபநிஷத்துக்களும் என்றும் காட்டிஞர். முதல் மந்திரத்தில் சொன்ன வைராக்ய நிலையை முக்யமாகக் கொண்டார். முதல் நிதர்சனமாக விளங்குகின்ருர். இதில் ஆரம்பத்திலும் முடிவிலும் ஹயக்ரீவ மங்கள ச்லோகம் உள்ளது.

இவ்வகையில் ஸ்வாமி உபநிஷத்பாஷ்யகாரராகிருர்.

ந்யாஸவிம்சதி வ்யாக்யானம்

தான் அருளிச் செய்த மூலத்திற்கு தானே வ்யாக்யானம் செய்யும் பெருமையை ஸ்வாமியினிடம் பார்க்கிருேம். ஸத்துக்கள் வேண்டினதால் அல்லது ஒரு எண்ணம் தோன்றியதால் ப்ரபத்தி சாஸ்திரமாக இது அமைந்து விட்டபடியால், ப்ரத்யக்ஷத்தையும் அபலபிக்கும் ஆசுர ப்ரக்ருதிகள் கலியில் ஏற்படுவது ஸஹஜமாகையால் திங்மாத்திரமாக இதை எழுதுகிறேன் என்று சாதிப்பது உற்று நோக்கத்தக்கது. கடைசியில் அயமத்ர முமுக்ஷோழ அனுசாஸநீய ஸங்க்ரஹ:—என்ருரம்பித்து ஸுகம் வர்தேத என்று தலைக்கட்டுகிருர்.

வாதித்ரய கண்டனம்

சங்கர பாஸ்கர யாதவ மதங்களைப் பரக்கப் பேசி கண்டிப்பதாயமைந்தது இது.

இங்கு ஒரு இடத்தில் பேசுகிருர் ஸபாகம்ப வசநப்ரயுக்த பஸாபங்க வசனவத் அபஹாஸ்யம் என்கிருர்.

இது அச்சிடப்பட்டுள்ளது.

1. ஹரிதின திலகம்.

இதில் 17 ச்லோகங்கள் உள்ளன. ஏகாதசி நிர்ணயம், முதலான அனுஷ்டாேைப யோகியான விஷயங்கள் இருப்பதாலும், ஸ்வாமி சரித்திரத்தில் ஒரு சமயம் ஏகாதசி விஷயத்தில் ஸந்நிதியில் சில சம்பவங்கள் நடந்தபடியாலும் இது இருக்கலாம்,

2. ஆராதன காரிகை.

இரண்டு ச்லோகங்கள் திருநாராயண புரத்தில் அனுஸந்திக்கப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

3. யக்ஞாபவீதப்ரதிஷ்டை.

9 ச்லோகங்கள் கொண்டது. நவதந்துக்கள் இருப்பதால் 9 ச்லோகங்கள். இது ஸ்வாமிக்கே உரியதான ஸங்க்யா ரஹஸ்யமாம்.

4. பூகோள நிர்ணயம்—தத்வ்யாக்யா.

இது ஸ்வாமியின் ஸ்ரீ ஸூக்தியா என்று ஸந்தேகிக்கப்படுகிறது.

ஸ்வாமியின் க்ரந்தங்கள்-இன்று கிடைக்காதவை

1. அதிகரண தர்பணம்.

அதிகரண ஸ்ாராவளியின் வ்யாக்யானம், இது ஸ்வாமியினுலும் ஸாதிக்கப்பட்டது திருக்குடந்தை தேசிகன் ஸஹஸ்ரநாமத்தில் இதை ஸாதிக்கின்ருர்.

2. நிகமபரிமளம்.

திருவாருயிரப்படி வியாக்யானமாக 74 ஆயிரப் படியாய் அமைந்த மணிப்ரவாள பகவத் விஷயமாகும். வைபவ ப்ரகாசிகையில் இதற்கு உல்லேகம் உள்ளது. நிகமபரிமள சப்தத்தில் ஸ்வாமிற்கு விசேஷமான ஊற்றம் இருப்பதை பாதுகா ஸஹஸ்ர ப்ரயோகத்தால் காணலாம். இது கிடைக்கவில்லை.

3. தத்வ சிகாமணி.

ரஹஸ்ய சிகாமணிக்கு முன் இப்படியொரு க்ரந்தம் இருக்கவேண்டும் என்று ஊகிக்கப் படுகிறது. ஸ்ரீ தேசிக கதியத்தில் எடுக்கப்பட்டிருக்கிறது.

4. மதுர கவிஹ்ருதயம்.

கண்ணிநுண் சிறுத்தாம் பின் வ்யாக்யானம். ''மதுரகவி ஹ்ருதயத்தில் நம் தேசி கனும் அருளிச் செய்தார்'' என்று கண்ணிநுண் சிறுத்தாம்பு தனியன் வ்யாக்யானத்தில் வாத்ஸ்யாஹோபிலாசார்யர் குறிப்பிட்டுள்ளது இதற்குச் சான்று.

5. சகார ஸமர்த்தநம்.

இது சத தூஷணியில் ஒரு சகாரம் அதிகம் என்று சொன்ன வித்யாரண்யருக்கு இதன் ஆவச்யகத்வத்தை சொல்வதாக அமைந்தது. இதில் 500 ச்லோகங்கள் இருந்தன என்று வேதாந்த தேசிக சரித்திரம், கூறும்.

6. சில்பார்த்த ஸாரம்.

இவ்வாறு ஸ்வாமி ஸாதித்திருப்பதாக குரு பரம்பரையில் உள்ளது. சில்பி ராஜனை ஸ்வாமி ஜெயித்ததும் இதை வலியுறுத்தும்.

7. ஸமஸ்யா ஸஹஸ்ரீ.

ஸ்தோத்ர பாஷ்யத்தின் கடைசியில் ஸ்வாமி ஸாதித்ததை நினைத்தால் ஒரு க்ரந்தம் ஸ்வாமி ஸாதித்ததாகத் தோன்றுகிறது.

8. ஸாரதீபம்:—இதுவும் இப்பொழுது கிடைக்கவில்லை.

9. வேதார்த்த ஸங்க்ரஹ வ்யாக்யானம்,

ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸ்ரீ ஸூக்திகள் அனைத்துக்கும் வ்யாக்யானம் பண்ணியிருப்பது போல் இதற்கும் பண்ணியிருக்கவேண்டும். பெரிய திருமுடியடைவில் ஆதாரம் உள்ளது. ''ஸ்ரீமத் வேங்கடநாதார்யை: வேதார்த்த ஸங்க்ரஹவ்யாக்யாநே'' என்றுள்ளது.

10. ஸ்தேயா விரோதம்.

பரமதபங்க ஸ்ரீ ஸூக்தியாலும், திருக்குடந்தை தேசிகன் அருளிச் செய்த ஸஹஸ்ர நாமத்தில் இப்படியும் ஒரு நாமம் இருப்பதால் இது உறுதி செய்யப்படுகிறது.

11. பந்துப்பா. 12. கழற்பா, 13. அம்மானைப்பா, 14. ஊசல்பா, 15. ஏசற்பா, முதலியன லுப்தங்கள்.

[ரஹஸ்ய நிஷ்கர்ஷம் என்பது இப்பொழுது இந்த மலரில் அச்சாகிறது. தசதீபக நிகண்டு என்பதும் அச்சாகின்றது. ப்ராக்ருதவ்யாகரணம் என்பதை மைசூர் பரகால மடத்தில் அச்சிடுகின்றனர். குருரத்னவளி என்பதும் அச்சாகியுள்ளது.]

Names and addresses of Vazhinamam Writers

1.	Mrs. Janaki Gopalan, Quarter No. 332, Type D-2, Sector-D, Piplani, Bhopal.	—	one Lac
2.	Mrs. Vijaya Lakshmi Krishnasami No. 336 Quarter D-2 Sector D Piplani, Bhopal.	—	one Lac
3.	A Bakta from Udumalpet	—	880
4.	Mrs Jayam Ramaswami Mylapore	—	500
5.	Child R. Ambuja Do	—	500
6.	B. N. Desikacharlu 40/7888 Alub Rd, Karnool	—	108
7.	P. S. Bashyam, Karnool	—	1001
8.	Kumari Padma Karnool	—	1950
9.	S. B. Ramakrishna Goods clerk, Karnool	—	108
10.	Y. V. Manjula Devi, Karnool	—	110
11.	Srinivasa Dasan. Prakas Nargar, Karnool	—	1036
12.	Alaivattam Tirumalai Prakas nagar, Do	—	1008
13.	Y. C. Narasimha Dasa, Karnool	—	2805
14.	C. V. Srinivasa Iyengar V. S. V. Koil St., Mylapore	—	1000
15.	S. Makuteswaran Sakti Illam Mari amman Koil St, Tanjore	—	1008
16.	A. Bakta.	—	102
17.	Mrs Vaidhehi W/o V. Srivatsankam,	—	720
18.	A. Bakta (Including 'Sri Ramajayam') 3200 and Vazhi Naman	—	2058
		Total	21,4894

ஸ்ரீ:

ஸ்ரீ தேசிக தர்சன சபை

5, கிருஷ்ணப்ப நாய்க்கன் அக்கிரகாரம்,
சென்னை - 1.

பத்தாயிரம் வரை "ஸ்ரீ வேதாந்த தேசிகரே இன்னுமொரு நூற்றாண்டு இரும் என்று எழுதியவர்கள் பெயரும், விலாஸமும்:

1. P. S. ஸ்ரீமதி, 40, கி. நா. அக்கிரகாரம், சென்னை-1.
2. P. கல்யாணி, 19, ஜெயலக்ஷ்மி காலனி, ஷெனாய் நகர்.
3. V. ரங்கனாதன், 28, நம்மாழ்வார் தெருவு, சென்னை-1.
4. M. V. செல்லம்மாள், 2/224, தங்கசாலை தெருவு, சென்னை-1.
5. M. K. கௌஸல்யா, 2. கொண்டலய்யர் தெருவு, சென்னை-1.
6. S. R. உஷா, 7, வெங்கட்ராமய்யர் தெருவு, சென்னை-1.
7. M. V. முரளிதரன், 2/224, தங்கசாலை தெருவு, சென்னை-1.
8. R. சுசீலா, 28, நம்மாழ்வார் தெருவு, சென்னை-1.
9. S. ரகுநாதன், 26, கி. நா. அக்கிரகாரம், சென்னை 1.
10. M. S. வசுமதி, 2, கொண்டலய்யர் தெருவு, சென்னை-1.
11. M. K. உஷா, 2, கொண்டலய்யர் தெருவு, சென்னை-1.
12. A. K. நாராயணன், 231, வால்டாக்ஸ் ரோடு, சென்னை-3.
13. S. சம்பத், தண்ணீர் தொட்டி தெருவு, சென்னை-1.
14. M. S. நிர்மலா, 2, கொண்டலய்யர் தெருவு, சென்னை-1.
15. M. S. ராமய்யங்கார், 2/30, அயலூர் முத்தையா முதலி தெருவு, சென்னை-1.
16. P. V. சாரங்கபாணி, 2, கொண்டலய்யர் தெருவு, சென்னை-1.
17. கனகவல்லி, 28, நம்மாழ்வார் தெருவு, சேன்னை-1.
18. சுந்திரவல்லி தேவராஜன், 17, கி. நா. அக்கிரகாரம், சென்னை-1.
19. W. R. சுசீலா, 52/2, வன்னியர் தெருவு, கோடம்பாக்கம், சென்னை-24.
20. P. வரதாச்சாரி, 28, வைத்யநாத முதலி தெருவு, சென்னை-1.
21. R. ரங்காச்சாரி, 12, சீனு அய்யர் தெரு, சென்னை-1.
22. S. சந்தான கோபாலன், 7, புஜங்க ராவ் தெருவு, சைதாப்பேட்டை, சென்னை-15.
23. B. பானு, 10, ஆடம் தெருவு, மைலாப்பூர், சென்னை-4.
24. T. S. பரிமளா, 2, கொண்டலய்யர் தெருவு, சென்னை-1.
25. ருக்குமணி, 28, நம்மாழ்வார் தெருவு, சென்னை-1.
26. M. V. கல்யாணி, 224, தங்கசாலை தெருவு, சென்னை-1.
27. B. வசந்தா, 10, ஆடம் சாகிப் தெருவு, மைலாப்பூர், சென்னை-4.
28. M. K. பத்மா, 2, கொண்டலய்யர் தெருவு, சென்னை-1.
29. R. ரஞ்சனி, 28, நம்மாழ்வார் தெருவு, சென்னை-1.
30. P. C. வரதராஜன், 2-30, ஆயலூர் முத்தைய முதலி தெருவு, சென்னை-1.
31. P. V. ரங்கமணி, 2-30, ஆயலூர் முத்தைய முதலி தெருவு, சென்னை-1.
32. K. நரசிம்மன், 1-2, கி. நா. அக்கிரகாரம், சென்னை-1.
33. மரகதம், 28, நம்மாழ்வார் தெருவு, சென்னை-1.

34. M. L. N. ஜெயலக்ஷ்மி, 2-19, கி. நா. அக்கிரகாரம், சென்னை-1.
35. M. சேஷாத்திரி, 2-19, ,,
36. A. N. ராஜகோபாலன், 14, ,,
37. A. N. ராஜராஜேஸ்வரி, 14, ,,
38. A. N. பார்த்தசாரதி, 14, ,,
39. A. N. லக்ஷ்மி, 14, ,,
40. P. K. லீலா, 25, ,,
41. P. K. பத்மா, 25, ,,
42. P. K. கோவிந்தன், 25, ,,
43. R. சந்திரா, 50, ,,
44. M. ருக்குமணி, 5, அவதானம் பாப்பையர் தெருவு, சென்னை-1.
45. A. M. ஜெயலக்ஷ்மி, 5, கி. நா. அக்கிரகாரம், சென்னை-1.
46. A. M. முரளீதரன், 5, ,,
47. A. M. புஷ்பவல்லி தேசிகன், 5, ,,
48. S. C. பத்மாவதி, 2, வண்ணுர சந்து, சென்னை-1.
49. P. D. நரசிம்மன், 11, வெங்கட்ருயர் தெரு, சென்னை-3.
50. C. R. பார்த்தசாரதி, 5, பத்ரைய கார்டன் தெரு, சென்னை-3.
51. H. விஜயலக்ஷ்மி, 14, நாராயண முதலி லேன், சென்னை-3.
52. T. S. சந்த்ரிகா, 19-1, உஸ்மான் ரோடு, தி. நகர்.
53. S. சரோஜா, 4, வெங்கட்ருயர் தெருவு, சென்னை-3.
54. ராமபிரசாத், 11, வெங்கட்ருயர் தெருவு, சென்னை-3.
55. T. N. பிரபா, 6, வெங்கட்ருயர் தெருவு, சென்னை-3.
56. S. அருணு, 4-5, பொன்னப்பன் லேன், சென்னை-3.
57. S. ஜெயந்தி, 4, வெங்கட்ருயர் தெருவு, சென்னை-5.
58. N. சேஷர்த்திரி, 4, வெங்கட்ருயர் தெருவு, சென்னை-3.
59. T. S. மாலதி, 1-46, ஜெ. மு. முதலி தெருவு, சென்னை-1,
60. T. S. சாவித்திரி, 4-5, பொன்னப்பன் லேன், சென்னை-3
61. உஷா, 1-46, ஜெ. மு. முதலி தெருவு, சென்னை-1.
62. R. ரேவதி, 4, வெங்கட்ராயர் தெருவு, சென்னை-3.
63. R. சாந்தா, 4, ,,
64. P. பெருந்தேவி, 3, ,,
65. S. விஜயலக்ஷ்மி, 2, வைகுண்ட வாத்தியார் தெருவு, சென்னை-3.
66. S. பிரேமாவதி, 2, வைகுண்ட வாத்தியார் தெருவு, சென்னை-3.
67. K. T. கமலா, 16, இருளப்பன் தெருவு, சென்னை-3.
68. T. K. சேஷாத்திரி, 1-46, ஜெ. மு. முதலி தெருவு, சென்னை-1.
69. V. ஆருவமுதன், 5, பத்ரைய கார்டன் தெருவு, சென்னை-3.
70. P. S. சௌந்திரராஜன், நங்கநல்லூர்.
71. M. B. கீதா (கோபாலசாமி), செங்கல்பட்டு.
72. C. பத்மா, 149, சைனு பஜார் ரோடு, சென்னை.
73. S. இந்திரா, 16, கிருஷ்ணுபுரம்.
74. S. ரேவதி, 28, கோட்ஸ் ரோடு, மாம்பலம்.
75. ஸ்ரீமதி, 18-A-99, அம்மன் கோயில் தெருவு, சென்னை-3.
76. T. S. ஜெயஸ்ரீ, 19-1, உஸ்மான் ரோடு, தி. நகர்.
77. P. S. பிரமீளா, 18-A-99, அம்மன் கோயில் தெருவு, சென்னை-3.

78. V. இந்திரா, 5, பத்ரைய கார்டன் தெருவு, சென்னை-3.
79. T. பிரேமா, 4, வெங்கட்ருயர் தெருவு, சென்னை-3.
80. S. சுகுமார், 4, ,,
81. S. வாசுதேவன், 4, ,,
82. R. வரதாச்சாரி, 10, ,,
83. P. C. கீதா, 16, இருளப்பன் தெரு, சென்னை-1.
84. P. C. ஜெயந்தி, 16, இருளப்பன் தெரு, சென்னை-1.
85. T. S. ஜெயலக்ஷ்மி, 12, வெங்கட்ருயர் தெருவு, சென்னை-3.
86. T. மாலதி, 4, வெங்கட்ருயர் தெருவு, சென்னை-3.
87. P. C. பார்த்தசாரதி, 16, இருளப்பன் தெருவு, சென்னை-3,
88. P. C. பத்மினி, 16, இருளப்பன் தெருவு, சென்னை-1.
89. V. வேணுகோபாலன், 5, பத்ரைய கார்டன் தெருவு, சென்னை-3.
90. M. இந்திரா, 19-1, பொன்னப்பன் லேன், சென்னை-3.
91. S. அலமேலு, 4-5, ,,
92. T. S. சாவித்திரி, 4-5, ,,
93. S. சித்திரா, 5, பத்ரைய கார்டன் தெருவு, சென்னை-3.
94. S. சந்திரா, 5, ,,
95. S. மாலினி, 4-5, பொன்னப்பன் லேன், சென்னை-3.
96. K. P. விஜயலக்ஷ்மி, 77, ஆதியப்ப நாய்க்கன் தெருவு, சென்னை-3.
97. K. P. கீதா, 77, ,,
98. T. P. பத்மாவதி, 77, ,,
99. S. சந்தானகிருஷ்ணய்யங்கார், ஜெ. மு. முதலி தெருவு, சென்னை-1.
100. B. T. வஸந்தா, 5, பத்ரைய கார்டன் தெரு, சென்னை-3.
101. R. சரஸ்வதி, 8, ஐயா முதலி தெருவு, சென்னை-1.
102. R. சாவித்திரி, 8, ,,
103. S. பூமா, 7, ,,
104. N. லக்ஷ்மி, 8, ,,
105. T. N. சாந்தி, 6, தண்ணீர் தொட்டித் தெருவு, சென்னை-1.
106. A. M. விஜயலக்ஷ்மி, 10-B, ராஜு நாய்க்கன் தெருவு, மேற்கு மாம்பலம் சென்னை-33
107. P. கிருஷ்ணமாச்சாரி, 50, ஆதியப்ப நாய்க்கன் தெருவு, சென்னை-1.
108. P. K. ரங்கநாதன், 50, ,,
109. K. புஷ்பா, 17, பொன்னப்பன் லேன், சென்னை-3.
110. K. C. சீதா, 51, ஆதியப்ப நாய்க்கன் தெருவு, சென்னை-1.
111. G. சுந்திரராஜன், 19-1, பொன்னப்பன் லேன், சென்னை-3.
112. சூடாமணி பட்டாபிராமன், 22, ஜெ. மு. முதலி தெருவு, சென்னை-1.
113. P. R. பட்டம்மாள், 7, இருளப்பன் தெருவு, சென்னை-1.
114. K. வனஜா, 10, வெங்கட்ருயர் லேன், சென்னை-3.
115. K. S. தங்கம்மாள், 10, ,,
116. K. கமலா, 10, ,,
117. T. R. நரசிம்மன், 2-1, வெங்கட்ருயர் தெருவு, சென்னை-3.
118. P. K. ருக்குமணி, 7, ஐயா முதலி தெருவு, சென்னை-1.
119. P. K. சாவித்திரி, 7, ,,
120. R. காயத்திரி, 8, ,,

121. T. S. மாதவன், 55, ஆதியப்ப நாய்க்கன் தெருவு, சென்னை-1.
122. L. C. ஜனகவல்லி, 22-A, வெங்கய்யர் தெருவு, சென்னை-1.
123. S. நாராயணன், 4-5, பொன்னம்மன் லேன், சென்னை 3-.
124. T. சேஷாத்திரி அய்யங்கார், 2-8, தம்பு செட்டித் தெருவு, சென்னை-1.
125. K. ராஜலக்ஷ்மி, 16, இருளப்பன் தெருவு, சென்னை-1.
126. P. N. ஜானகி, 19-1, பொன்னப்பன் லேன், சென்னை.
127. P. N. கீதா, 19-1, ,,
128. M. K. பெருந்தேவி (கம்பராஜபுரம்), 4, வெங்கட்ரூயர் தெருவு, சென்னை-3.
129. K. ஜானகி, 103, பவழக்காரத் தெருவு, சென்னை-1.
130. P. K. கிருஷ்ணசாமி, 28, தாதா முத்தையப்பன் தெருவு, சென்னை-1.
131. S. ரகுநாதன், 5, பத்ரைய கார்டன் தெருவு, சென்னை-3.
132. S. கீதா, அம்பத்தூர்.
133. ரேவதி, 29-B, செட்டித் தெருவு, காஞ்சீபுரம்.
134. R. ருக்குமணி, 27, இருளப்பன் தெருவு, சென்னை-1.
135. S. உஷா, 4, வெங்கட்ரூயர் தெருவு, சென்னை-1.
136. P. R. கீதா, 1-46, ஜெ. மு. முதலி தெரு, சென்னை-1.
137. P. R. கௌஸல்யா, 1-46, ,,
138. K. T. முரளி, 10-A, நைனியப்ப நாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை.
139. K. R. சக்கிரவர்த்தி, 4, வெங்கட்ரூயர் தெருவு, சென்னை-3.
140. P. G. சரஸ்வதி, 2, உமாபதி தெருவு, மாம்பலம்.
141. T. N ஆனந்தி, 3, தண்ணீர் தொட்டி தெருவு, சென்னை-1.
142. K. விஜயலக்ஷ்மி, 77, ஆதியப்ப நாய்க்கன் தெருவு, சென்னை-1.
143. M. S. அமிர்தவல்லி, 8, த்ருமலை பிள்ளை தெருவு, உத்திரமேரூர்.
144. ஸ்ரீதரன், 30, கி. நா. குளத்து தெருவு, சென்னை-1.
145. K. ரஞ்சனி, 37, தேரடி தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை-5.
146. S. S. மணி, 17, வெங்கட்ரூயர் தெருவு, சென்னை-1.
147. சம்பத்குமார், 2, ,,
148. S. பிரேமா, 37, தேரடித் தெருவு, திருவல்லிக்கேணி.
149. ஹேமாம்புஜவல்லி, ,,
150. S. சரோஜா, 55, ஆதியப்ப நாய்க்கன் தெருவு, சென்னை-1.
151. A. N. சௌந்தரி, 11, வெங்கட்ரூயர் தெருவு, சென்னை-3.
125, T. N. ஸ்ரீதர், 16, கருணீகர் தெருவு, ஆதம்பாக்கம்.
153. Mrs. Choodomany, 10, வேதவிநாயகர் கோயில் தெரு, சென்னை-1.

மா. தேசிகாசாரி,	**தேவராஜன்.**	**எம். எல். நரசிம்பன்,**
காரியதரிசி	உபதலைவர்	பொக்கிஷதார்

தேசிகரத்ன தீபம்

V. V. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி

ஏழாவது நூற்ருண்டில் ஸம்ப்ரதாய ஒளியாய் விளங்கியவர்.

ஸ்ரீமான் (வன்பாக்கம் வேங்கடம்)

V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி

(1870–1954)

